Koviloor Digital Library

ஏழாம் பகுதி



தெய்வத்தின் குரல்

A/L5195

வானதி பதிப்பகம்

ம.செ-

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-6

தெய்வத்தின் குரல்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீச்வர
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசாரிய ஸ்வாமிகளின் அருள்வாக்குகள்

ஏழாம் பகுதி

தொகுப்பாசிரியர் : ரா. கணபதி

KOVILOOR ANDAVAR ★ LIBRARY, KOVILOOR ★
5175

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி. நகர், சென்னை-17.

Koviloor Digital Library

முதற் பதிப்பு : மே, 2000
இரண்டாம் பதிப்பு : ஜனவரி, 2001

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ.210.00

- TITLE : DEIVATTHIN KURAL PART - VII
- COMPILER : Ra. GANAPATHI
- SUBJECT : TEACHINGS OF SRI KANCHI MAHASWAMIGAL
- LANGUAGE : TAMIL
- EDITION : SECOND EDITION, JANUARY, 2001
- NO. OF PAGES : xxxii + 1064 = 1096
- PUBLISED BY : VANATHI PATHIPPAKAM 13, DEENADAYALU STREET, T. NAGAR, CHENNAI - 600 017
- PRICE : Rs.210.00

Laser Typeset at : LKM Computer Printers, Chennai - 17

Printed at : Ragavendra Agencies ., Chennai - 5 ☎ 8548891, 8588471

Koviloor Digital Library

4-b



Koviloor Digital Library

Koviloor Digital Library

4-6

தெய்வத்தின் குரல்

A. No. 5195
R65

Koviloor Digital Library

Koviloor Digital Library

பதிப்புரை

மக்கள் ஆவலோடு எதிர்பார்த்த தெய்வத்தின் குரல் ஏழாவது பகுதி மகான்களின் அருளினால் இப்பொழுது வெளிவருகிறது.

பரமாச்சாரியாரின் அருளுரைகள் பரந்து விரிந்த பெருங்கடல். அதில் உட்புகுந்து முத்துக்கள் எடுப்ப தென்பது சாமானியச் செயல் அல்ல; அந்த அரிய பெரிய செயலை தொகுப்பாசிரியர் திரு. ரா. கணபதி அவர்கள் தமக்கே உரிய தனி ஆற்றலில் மணிமுத்துக்களைத் தேடி எடுத்து அருள் மாலையாக்கித் தந்துள்ளார். எடுத்த காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற உயரிய நோக்கோடு இந்நூலைத் தொகுத்தளித்துள்ளார். இது வாசகர்களின் வேண்டுதலினாலும் காஞ்சிமாமுனிவரின் நல்லருட் கருணையினாலும்தான் நிறைவேறியுள்ளதாகக் கருதுகிறேன்.

இந்நூல் ஆன்மிக உலகிற்குக் கிடைத்த அருட்செல்வம். மக்களை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் அறிவொளி. இந்த அருளமுதத்தை வானதி பதிப்பகத்தில் வெளியிடும் பாக்கியத்தை அருளிய கருணைக் கடல் காஞ்சிமாமுனிவர் மகா பெரியவர்களை நினைந்து போற்றி இந்நூலைப் பதிப்பித்துள்ளேன்.

ஏழிசையாய் இசைப்பயனாய் சப்த ஸ்வரங்கள் ஒலிப்பதுபோல் ஏழாவது பகுதி எழுந்து வருகிறது. இந்நூலுடன் 'தெய்வத்தின் குரல்' தொகுதிகள் நிறைவுறுகின்றன.

Koviloor Digital Library

இந்நூல் வெளிவர அருளாசி வழங்கியவர்களை சொல்லியே ஆகவேண்டும். அவர்கள்தாம் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும், ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும். அவர்களின் அருளாசியை வானதிக்கு வழங்கிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்களைப் போற்றி வணங்குகிறேன்.

தொகுப்பாசிரியர் திரு. ரா. கணபதி அவர்களுக்கு வானதி நன்றி செலுத்துவதோடு மட்டுமல்லாது அவருடைய சகல நலத்துக்கும் பிரார்த்திக்கிறது.

நூலின் முகப்போவியத்தை அழகு ததும்ப வரைந்து கொடுத்த ஓவியர் திரு. மணியம் செல்வன் அவர்களுக்கும், காஞ்சி மாமுனிவரின் போட்டோவைத் தந்த திரு. கண்ணன் அவர்களுக்கும், இந்நூலை ஒப்பு நோக்கி பிழை திருத்தம் செய்து உதவிய திரு. ஸ்ரீதரன் அவர்களுக்கும் அச்சக நண்பர்களுக்கும் நன்றி.

மக்களுக்கு அறிவைத் தூண்டி அவர்களுக்கு பிரகாசத்தையும் அறிவுநலத்தையும் ஆன்ம பலத்தையும் உண்டுபண்ணக்கூடிய மாபெரும் நூல் தெய்வத்தின் குரல். இது காஞ்சி மாமுனிவரின் அருட்பிரசாதம். இதன் ஏழு பகுதிகளையும் படிக்கும் வாய்ப்புக்கிடைத்தவர்கள் மகா பாக்கியசாலிகள்.

பண்ணிய புண்ணியம் பயிரில் தெரியும் என்பார்கள். அதைப்போல அடியேன் செய்த புண்ணியத்தால் பரமாச்சாரியாரின் அருளுரைகளை ஆர்வமுடன் பதிப்பித்துள்ளேன். பக்தி சிரத்தை பதிப்பில் விளங்கும். உயர் பெருமை வாய்ந்த இவ்வரிய நூலை ஏற்றருளுங்கள்.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

Koviloor Digital Library

முன்னுரை

‘தெய்வத்தின் குர’லின் முந்தைய பகுதி வெளிவந்து ஏழாண்டுகளுக்குப் பிறகு, குரல் கொடுத்த தெய்வம் ஸ்தூலமான அவதார சரீரத்தை உதிர்த்து ஆறாண்டு களுக்குப் பிறகு இப்பகுதி வருகிறது.

ஆறாம் பகுதி வெளியான நாளிலிருந்தே அடுத்த பகுதி எப்போது வெளியாகும் என்று பலர் விசாரிக்கத் தொடங்கி விட்டனர். இவ்வாறு இதனை ஆவலுடன் எதிர்பார்த்தவர்களில் பெரும் மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரிய மூன்று பெரியோர்களைக் குறிப்பிட வேண்டும். குரல் கொடுத்த தெய்வத்தின் பீட வாரிசுகளான பூஜ்யஸ்ரீ ஜகத்குரு ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளும் பூஜ்யஸ்ரீ இளைய ஸ்வாமிகள் சங்கர விஜயேந்திர ஸரஸ்வதிகளும் அவர்களில் இருவர். திருவண்ணாமலையில் அருளாட்சி புரியும் பூஜ்யஸ்ரீ யோகி ராம்ஸூரத் குமார் ஸ்வாமிகள் மற்றொருவர். அவர்களது அருளாசி பலத்தால்தான் நூல் இப்போதேனும் வெளிவந்திருக்கிறது. அம் மும்மூர்த்தி களுக்கும் சிரம் தாழ்த்தி நமஸ்கரித்து இதனை ஸமர்ப்பிக்கிறேன்.

கால தாமதம் நீண்டு கொண்டே போகப் போக, வாசகர்களின் விசாரணை என்பதும் துளைத்தெடுக்கும் அளவுக்கு முற்றியது. இதில் என்னைவிடப் பன்மடங்கு சிரமத்துக்கு ஆளானது வானதி பதிப்பகத்தார்தான். சிரமம் ஒரு புறமிருந்தாலும் இது வாசகப் பெருமக்களுக்கு நமது ஆசாரியப் பெருமானின் அருள் மொழிகளைப் பருகுவதில் எத்தனை பேரார்வம் உள்ளது என்பதைக் காட்டியது.

Koviloor Digital Library

வாசகர்கள் அடுத்த பகுதி குறித்து அப்படி விசாரிக்கத் தேவையிராது என்று இப்போதே தெரிவித்து விடுகிறேன். ஏனெனில் இத் 'தெய்வத்தின் குரல்' மஹா யஜ்ஞம் இவ்வேழாம் பகுதியுடன் மங்கள நிறைவை எய்துகிறது. ஸப்த காண்டத்துடன் ஸ்ரீமத் ராமாயணம் பூர்த்தியானதுபோல, நாம் கண் முன் கண்ட ஸத்ய-தர்ம ராமனான ஸ்ரீசரணரின் அருளுரைத் தொகுப்புக்கள் ஏழு பகுதிகளுடன் பூர்த்தியாகின்றன.

தெய்வ சங்கற்பம் எதுவாயினும் மனமாரவே ஏற்றுக் கொள்ளவேண்டுமாதலால் கிடைத்த மட்டும் லாபம் என்று வாசக அன்பர்கள் மனநிறைவு எய்த ஸ்ரீசரணர் அருள்வாராக!

என்னைப் பொறுத்த மட்டில், ஸநாதன தர்மத்தின் தனிப் பெரும் வடிவான ஸ்ரீசரணரின் அறிவுரை-அறவுரையை ஏழாயிரம் பக்கங்களுக்கும் மேல் எழுத்தாக்கும் மஹா பெரும் திருப்பணிக்கு, எவ்விதத் தகுதியுமற்ற சிறியேனாகிய என்னை அவரது தனிப்பெரும் கருணை கருவியாக்கிக் கொண்டதை என்னதான் சொல்லி வாழ்த்துவது என்று பூரண மன நிறைவே கொள்கிறேன்.

இந் நூலை — ஏழு பகுதிகளையுமே — வெளியிடுவதில் வானதி பதிப்பகத்தார் — குறிப்பாக, அதன் அதிபரும் என்னுடைய உள்ளார்ந்த அன்புக்குரியவருமான திரு திருநாவுக்கரசு அவர்கள் — காட்டி வந்துள்ள ஈடுபாடானது பக்தி, சிரத்தை, ஆர்வம் ஆகியவற்றுக்கு இலக்கியமாகும். அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி. என் நன்றி மட்டுந்தானா? உலகம் முழுதும் அவர்களுக்கு மானஸிகமாக நன்றி விழா கொண்டாடும்.

பல ஐயங்களை உடனுக்குடன் தெள்ளத் தெளியத் தீர்த்துப் பேருதவி புரிந்த மஹா வித்வான் பிரம்மஸ்ரீ எஸ்.வி. ராதாகிருஷ்ண சாஸ்திரிகளுக்கு நமஸ்கார பூர்வமான நன்றி.

Koviloor Digital Library

நூலின் 'ப்ரூஃப்'களைச் சோதித்துச் சரி பார்க்கும் பெரும் பொறுப்பை எனக்கு ஒரு தம்பியாக உதவும் ஸ்ரீ T. ஸ்ரீதரன் மீது சுமத்தினேன். அவர் அதைச் சுமையாகவே கருதாமல் மிக்க சிரத்தையுடன் பரம திருப்திகரமான முறையில் நிறைவேற்றியிருக்கிறார். அவருக்கு அகம் கனிந்த நன்றி.

எழுதியதை நல்வடிவமான புத்தகமாக்கியிருப்பதில் LKM கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸைச் சேர்ந்த பேரன்புக்குரிய ஸ்ரீ கார்த்திகேயன் - அவரது சகாக்கள் ஆகியோரின் பணி மகத்தானது. அவர்களுக்கு என் ஆழ்ந்த நன்றி.

வாசகர்களை ஈர்ப்பதில் ஒரு நூலின் அட்டைப் படத்திற்கு உள்ள ஆற்றல் அலாதியானது. இந்நூலுக்கு அந்த ஈர்ப்பை ஊட்டியிருப்பவர் ஓவியச் செல்வரான மணியம் செல்வன். முன்னட்டையில் வண்ணத்தில் மிளிரும் ஸ்ரீசரணரின் சித்திரத்துக்கு ஆதாரமான Black - and - white நிழற்படத்தை எடுத்தவர் ஃபோட்டோ கண்ணன்.* அவ்விருவருக்கும் என் இதயபூர்வமான நன்றி.

நூல் உருவாவதில் மற்றும் பல விதங்களில் உதவி செய்துள்ள பெருமக்கள் அனைவருக்கும் பணிவன்புடன் நன்றி.

---

* பின்னட்டை: நூலுள் ஓர் உரை 'ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே'. அதில் வேல் முருகப் பெருமான் குறமகள்—ஸுரமகளான வள்ளி—தேவசேனை ஸமேதராக, 'நாக பந்த மயூரம்' என்று திருப்புகழ் கூறும் வண்ணம் நாகம் சுற்றிய காலுடன் விளங்கும் மயிலின் மீது அமர்ந்திருப்பதை ஸ்ரீசரணர் குறிப்பிட்டிருக்கிறார். அக்கோலத்தைக் கண்கவர், உளம் கவர் ஓவியமாக வழங்கியிருக்கிறார் ம.செ.

Koviloor Digital Library

நூலுக்கு உதவியவர்கள், இதைப் படிக்கும் வாசகர்கள் ஆகிய யாவருக்கும் — வையகம் முழுவதற்குமே — என்றும் அமரமாக இலகும் திருவருளின் பிறப்பிடமான ஸ்ரீ மஹா பெரியவர்களின் வற்றாத கிருபை தாரையைப் பிரார்த்திக்கிறேன்.

சென்னை ரா. கணபதி
19–5–2000
(ஸ்ரீ மஹா பெரியவர்கள் ஜயந்திப் பெருநாள்)

Koviloor Digital Library

பொருளடக்கம்

பக்கம்

மங்களாரம்பம்

விநாயகரும் தமிழும் 3
இவரும் தமிழ்த் தெய்வமே! 3
இன்றைய 'பாலிடிக்ஸ்': பிரிவினை மயம்! 4
இம்மைக்குப் பேருபகாரம் 8
மறுமைக்கு மஹா உபகாரம்: திருத்தலங்கள் 9
வைஷ்ணவரின் 'கோயில்': விநாயகர் அருள் விளையாடல் 10
தெற்கு நோக்கும் தெய்வம் மூன்று:
சைவ—வைணவ ஸமரஸம் 16
விநாயகர் லீலையின் மெய்ம்மையும் பொருத்தமும் 20
பாரத தேசத்தின் தனித்தன்மை 24
விதிமுறை வழிபாடும், அன்பு வழிபாடும் 26
கலாசார வளர்ச்சி கணேசராலேயே 30
அதிகபக்ஷ ஆலயம் கொண்டவர் 31
விநாயகரும் தமிழ் மொழியும் 32
வாக்கு—மனங்களுக்கு அருள்:
தர்மத்திலிருந்து மோக்ஷம் வரை 34
ஔவை கயிலை சேர்ந்தது : சுந்தரர் சரிதத் தொடர்பு . 36
நால்வருக்கும் விநாயகர் அருள் 41
சம்பந்தருடன் சம்பந்தம் 42
அப்பர் ஸ்வாமிகளுடன் 44

Koviloor Digital Library

ஸம்ஸ்கிருத விரோதம் 45
திருவள்ளுவரின் உதாஹரணம் 47
ஸம்ஸ்க்ருதம் தமிழ் வேரோடேயே சேர்ந்தது 48
தேவார கர்த்தர் இருவருக்கு அருள் 52
தேவாரத்தில் விநாயகர் 53
சுந்தரருக்கு அருள் 58
விநாயகரும் மாணிக்கவாசகரும் 63
'திருமுறை' கிடைக்கச் செய்தவர் 67
அருள்மொழியும் இரு அருண்மொழிகளும் 75

குரு

குரு–சிஷ்ய உறவு 79
'குரு' இலக்கணச் செய்யுட்கள் 79
'க': ஸித்தியளிப்பது 81
ஸம்ஸ்கிருத 'ர'வும் தமிழ் 'ர'–'ற'க்களும் 83
'ர': பாபத்தைப் பொசுக்குவது 87
'உ': திருமாலின் வடிவம் 88
'அவ்யக்தம்' என்பது என்ன ? 89
'விஷ்ணு', 'வாஸுதேவ' பத விளக்கம் 89
குருவின் தன்மையால் சீடன் பெறும் பயன் 92
அத்வைதமும் அநுக்ரஹ *பா*வமும் 93
குருவாகத் திருமால் 95
பிதா – குரு 96

Koviloor Digital Library

குருவுக்கும் தந்தைத்தன்மை உண்டு 97
பிற மதங்களிலும் பிதா–குரு 101
பித்ருவம்சமே குருவம்சமாகவும் 106
தாய் வழியில் ரிஷிகளின் பெயர்கள்;
ஆசார்யாள் காட்டும் அன்னை மகிமை 107
பெண்டிரும் பிரம்மவித்தையும் 109
பெண்களின் பாண்டித்யம்: அக்கால–இக்கால மாறுபாடு . 113
பெண்டிருக்கு ஆசார்யாள் தரும் உயர்வு 117
அன்னையும் குருவாக: ஆசார்யாளின் ஆமோதிப்பு 118
அன்னையின் வழியில் கண்ணனையே! 120
ஸத்யகாம ஜாபாலர் 122
மாதா–பிதாவுக்கும் மேல் குரு 123
மூளை வளர்ச்சியும் இதய வளர்ச்சியும் 125
நிகழ்கால இழிநிலை 128
தற்கால ஆசிரியர்மார்களுக்கு 130
மதச்சார்பற்ற பாடங்கள் 138
குரு; ஆசார்ய 141
அத்யக்ஷகர்; அத்யாபகர் 143
குரு லக்ஷணங்கள் சிஷ்யனுக்கும் ஏற்படும் 145
'ஆசார்ய' பதச் சிறப்பு 146
உபாத்தியாயர் 148
வழிகாட்டும் 'தேசிகர்' 150
உபநிஷத்தில் 'வழிகாட்டி' குரு 150
ஒரே குருவா? பல குருமாரும் உண்டா? 154

Koviloor Digital Library

மஹான்களுக்கும் பல குருமார் 158

பதிவிரதமும், குருவிரதமும் 161

வேதத்தில் 'வழிகாட்டி' குரு 179

குருவை 'க்ஷேத்ரஜ்ஞ'னாக 182

குரு: முடிவான லக்ஷ்யத்திற்கும் இடைநிலைகளுக்கும் . . 188

குரு அறிந்த அனைத்தும் சீடனுக்கு 190

ஆசார்யாள் விதிக்கும் ஆசாரியக் கடமை 192

ஸத்குருவும் – ஸச்சிஷ்யனும் 193

குருவின் முழுச் 'சொத்து'ம் சீடனுக்கு 194

குரு–சிஷ்யர் பற்றி மேலும் படிப்பினைகள் 199

'சிஷ்ய' விளக்கம் 201

குருவின் விநயம் 203

ஸர்வமும் உபதேசிப்பதற்குச் சான்று 206

வேதசிரஸுக்கே சிரஸான உபதேசம் 209

விநயத்தோடு நில்லாமல் உண்மையைத் தெரிவிப்பது . . 210

ஈடு செய்ய முடியாதது குரு உபதேசம் 212

வழிவழி வரும் உபதேசம் 214

"மரபு மீறுபவன் மூடன்" – ஆசார்யாள் 215

குரு பரம்பரையிடம் ஆசார்யாளின் பக்தி 216

தெரியாததை ஒருபோதும் சொல்லாதவர் 219

குருவின் யோக்கியதையைப் பார்ப்பதும்,
சரணாகதி செய்வதும் 222

குருவும் சீடராகும் உயர்பண்பு 224

Koviloor Digital Library

அரைகுறை: கர்வம்
முழுமை: விநயம் 228
'புரோஹிதர்' 233
சுதந்திர இந்தியாவில் கலாசாரக் குழிபறிப்பு 236
வித்யாகுருவும் தீக்ஷாகுருவும் 237
குருவின் 'பயங்கர'ப் பொறுப்பு! 238
புரோஹிதரும், குருவும் 240
சீடன் முயற்சியும், குருவின் அருளும் 243
சீடனைத் தம் நிலைக்கே உயர்த்தும் குரு 251
சீடனின் யோக்யதையும் குருவின் கருணையும் 254
உபநிஷத்தும் சங்கரரும் காட்டும் போலிகள் 257
வேதப் பிரமாணம்; பிற மதங்கள் 263
ச்ரத்தை: வேதத்திடமும் குருவிடமும் 266
சரணாகதி 267
வேத–சாஸ்திரங்கள் குருமுகமாகவே;
அம்பாளின் விசித்ர 'ப்ளான்'! 268
பொதுவான எளிய வழிபாடும் துதி பாராயணமும்:
குருமுகம் என்ற கட்டாயமில்லை 274
பொதுஜனப் பெரும் ஸமுதாயம்: ப்ரத்யேக குரு
இல்லாவிடினும், பொதுவான குரு தேவை 282
விநயமும் ச்ரத்தையும் 286
பரிப்ரச்னம் எப்படி விநயமாகும்? 287
ஆசார்யாள் காட்டும் சிரத்தையின் சிறப்பு 289
சிரத்தையிலிருந்து சரணாகதி 291
இரு வித சரணாகதிகளும் குரு சிஷ்ய உறவும் 291

Koviloor Digital Library

அரசு

அரசும் மதமும் 299

தொகுப்பாசிரியரின் முகவுரை 299

தர்ம சக்கரம்; பகவானின் அருட்சூசகம் 310

உண்மையான 'ஸெக்யூலரிஸம்' 311

மக்களின் உள்ள உயர்வில் அரசின் பொறுப்பு 312

மத விஷயத்தில் அரசின் பங்குக்குள்ள வரம்பு 314

மதக் கொள்கைகளுக்கு முரணான சட்டங்கள் கூடாது . 315

மதக் கொள்கையை மீறினால்
அதிலும் சமநீதி காட்டவேண்டும் 315

அரசின் எல்லைக்கு அப்பாற்பட்ட துறை 316

எல்லா மதங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட
சுதந்திரம் பெற்ற தனியமைப்பு 316

மதத் தலைவர்கள் அரசியலில் ஈடுபடலாகாது 318

அரசு புரிய வேண்டிய மத போஷணை;
அதனால் அரசு பெறும் லாபம் 320

அரசு போஷணை: ஹிந்து மதமும் பிற மதங்களும் . . . 322

ஹிந்து மதத்தின் நிறுவன அமைப்பு:
பண பலமும் ஆள் பலமும் இல்லாதது 323

மன்னர்களும் மக்களும் செய்த மதபோஷணை 324

பிற மதத்தினர் ஆட்சியில் ஹிந்து மத போஷணையின் நலிவு 325

சுதந்திரப் போராட்டம் செய்யத் தவறிய விஷயம்;
ஹிந்து மதம் கண்ட பாதிப்பு 325

அனைத்து மத மக்களும் சகோதரச் சமூகமாக 327

Koviloor Digital Library

இந்தியாவில் சிறுபான்மை—பெரும்பான்மையினரின் விசித்திர நிலைமை 328

அரசு ஆதரவு தரவேண்டிய இனங்கள் 330

மத விஷயங்களில் மக்கள் ஆதரவே மூலதனம் 330

மதச் சுதந்திர உரிமையும் மதமாற்றமும் 331

பிரசாரமும் துஷ்பிரசாரமும் 332

தவறான உபாயங்களுக்குத் தடை, தண்டனை 333

ஹிந்து மதமும் மதமாற்றமும்; முதல் மாற்றத்தைச் சரி செய்யும் மறுமாற்றம் . . . 339

மதத் தொடர்பில்லாத உபாயங்கள்; கடும் தண்டனை விதித்தல் வேண்டும் 342

மதமாற்றம் இருக்கும்வரை தாய் மதத்திற்கு மாற்ற அநுமதி 349

இந்தியாவின் உயிர்நிலையே மதமும் ஆன்மிகமும்தான் . 350

இந்தியாவில் மத உணர்வின் நலிவு: ஆயிரம் ஆண்டு வரலாறு 'காட்டுவது 351

மேல் நாட்டினரின் மறைமுக சாமர்த்தியமும் இரு 'புரட்சி'களும் 352

நம் முன் நிற்கும் பெரிய கேள்விக்குறி 355

அவநம்பிக்கைச் சூழ்நிலை; காந்தியம் மேவாததன் விளைவு 356

'அரசு மதம்' 357

கல்வித் திட்டத்தில் மாற்றம்; மத போதனைக்கு முக்கியத்துவம் 359

அரசியல் சுதந்திரம் போல் ஆன்மிய சுதந்திரத்திற்காகவும் மக்களே போராட வேண்டும் 360

Koviloor Digital Library

சிறுபான்மைச் சமூகத்தினரும் தேசப் பற்றுக் கொள்ளச் செய்வது பெரும்பான்மையினரின் அன்புக் கடமையாகும் 362

தேசக் கொடியில் தர்ம சக்கரம் இடம் பெற்றதன் உட்காரணம் 363

தேசிய இலக்ஷிய வாசகமாக வேதவாக்கு 365

தர்ம சக்கரமா? ஆலைத் தொழில் சக்கரமா? 366

கீதை காட்டும் தர்ம சக்கரம் 367

தர்ம சக்கரம் சுழலும் தொடர்பாதை; தியாகமே அதன் ஸாரம் 368

நாடு, தனி மனிதர் இரண்டின் சுதந்திரத்திற்காகவும் பிரார்த்தனை, வாழ்த்து 371

ஸமூஹம்

மூட்டை தூக்கி 377

உள்ளத்தைக் குளிப்பாட்டுங்கள்! 380

உடல் தூய்மை 380

உடைத் தூய்மை 381

உள்ளத் தூய்மை 381

பொய்யும் பயமும் 382

பொறாமை 383

படிப்பில் போட்டி 384

விளையாட்டு 384

சிநேகிதம், சகோதரத்துவம் 385

முன்–பின் பிறவிகள்; கர்வம் முதலான அழுக்குகள் . . . 385

அழுக்கு நீக்கிகள் 387

Koviloor Digital Library

அழுக்கு நீக்கிக்கான நீர் பிரார்த்தனையே 387
இறைவனின் அன்பும் தர்ம ஒழுங்குப்பாடும் 388
நல்ல பிள்ளைகளாவதற்கு வேண்டுக! 389
அம்மை அப்பன் 390
உலகக் குடும்பத்தின் அம்மாவும் அப்பாவும் 390
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் 392
மனமும் அறிவும் தெளிய 393
சிறு வயதிலேயே ஸ்வாமியிடம் பிடிப்பு 393
பிறருக்கு உபகாரமாக 394
கெட்ட குணங்கள் தாக்காமலிருக்க 395
வேளைதோறும் ஐந்து நிமிஷம் வேண்டுதல் 396
அரோஹரா 396
வாலிப மாணவர்களுக்கு 398
உணர்ச்சி வெள்ளமும் கட்டுப்பாட்டு அணையும் 398
பக்தி அவசியம் 399
நன்னெறி வளர 400
அரசியல் வேண்டவே வேண்டாம் 401
படிப்பு பாதிக்காமல் ஸேவை 404
சினிமா, போதைப் பொருட்கள், பத்திரிகைகள், ஸ்போர்ட்ஸ் 405
பழங்காலக் கல்விக்கூடங்கள் 409
கட்டுப்பாடு தேவை 410
பெரியவர்களின் பங்கு 411
சுயக்கட்டுப்பாடே பெரிய சாகஸம் 412

Koviloor Digital Library

புதுவிதமான மாணவர் யூனியன் 414
கல்வியும் பணிவும் 414
நல்லதை விருத்தி செய்து கெட்டதைக் குறைக்க வேண்டும் 415
கோ ஸம்ரக்ஷணம் (பசு பராமரிப்பு) 419
தாயாக விளங்கும் பசு 419
கோமாதாவும் பூமாதாவும் 420
ஸ்ரீமாதாவும் கோமாதாவும் 422
லௌகிகச் சிறப்பும் வைதிகச் சிறப்பும் 423
பசும்பால்: முழு உணவு, ஸத்வ அபிவிருத்தி 424
விச்வப்ரேமைக்கு இருப்பிடம் 426
கோவின் மலமும் பரிசுத்தம்! 427
போபால் உதாரணம் 429
பஞ்சகவ்யம் 430
வைத்தியத்திலும் வாத்தியத்திலும் 433
பசுவை வதைப்பது தாயைக் கொல்வது போன்றது 434
கோ ச்ருங்கமும் விசேஷமே 435
நெய்யபிஷேகம் 436
திருநீறு 437
பால*லா*பிஷேகம் அல்ல; பால*ல*பிஷேகம் 438
பசு இன்றேல் வேள்வி இல்லை 440
பசு காத்தலே பாரினைக் காத்தல் 442
ஸாந்நித்ய விசேஷம் 444
ஸகல தேவதைகளும் கோவுக்குள் அடக்கம் 444

Koviloor Digital Library

கோமாதாவும் லக்ஷ்மியும் 445
'பசுவுக்கு ஒரு வாயுறை' 446
மன்னிக்க முடியாத குற்றம் 447
அரசாங்கத்தின் கடமையும் மக்களின் கடமையும் 448
கோவின் வயிற்றை நிரப்ப சுலப வழி 449
காப்பு விடுதிகள் 452
பசு சேவையில் மக்கள் ஒரு குடும்பமாகச் சேர்வது . . . 453
பேணுவது புண்யம்; புறக்கணிப்பது பாபம் 454
முற்காலத்தில் நடந்த பசு பராமரிப்பு 455
தேசியச் செல்வம் 457
காபியில் பாலை வீண் செய்ய வேண்டாம் 458
நெய்த்தீபம் 459
பசு வதைத் தடைச் சட்டம் 461

பண்பாடு

நாடகக்கலை – அன்றும் இன்றும் 467
இறைவனின் நாடகமும் மனிதரின் நாடகமும் 467
நாடகக் கலையின் தனி விசேஷம் 468
நாடகமும் உணர்ச்சிகளும் 470
கதாநாயகன் 473
மங்களமான முடிவே 473
நவ ரஸம்; சாந்தம் 475
சாந்த நிலையை அடையவே கலைகள் உதவ வேண்டும் 480
மதாசாரியர்களும் நாடகங்களும் 482

Koviloor Digital Library

இன்றைய இழிநிலை 486

ஸ்வயம்வரத்தில் அத்வைதமும் காஞ்சி ஸ்ரீ மடமும் . 491

நள–தமயந்தியரின் பெருமை 491

ஸ்வயம்வரம் 495

தாய்களின் தியாகம் 496

ஸ்வயம்வரத்தில் அத்வைதம் 499

ஸரஸ்வதியின் சாதுரியம் 504

இலக்கியம் தர்மம் கூறும் முறை 505

நளன் கதையில் காஞ்சிமடத்து ஸ்வாமி 506

சிவபாதசேகரன் 510

இறைவன் திருவடியை முடியில் கொண்டவன் 510

பெருமை இறைவனுக்கே 512

தக்ஷிண மேரு விடங்கர்: ஆடவல்லான் 514

ராஜராஜனின் பெருமைகளும், தலையான பெருமையும் . 515

வெள்ளைக்காரர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி 518

சாஸ்திரப்பிரகாரமே கலை வளர்ப்பு 520

சாந்திக் கூத்து; கதகளிக்கு மூலம் 522

பலவிதக் கூத்துகள் 524

ஒரே கல்லில் மூன்று மாங்காய் 528

கலை மூலம் கடவுள் 529

தமிழ்த் தாத்தாக்களும் தமிழ்ப் பாட்டிகளும் காஞ்சி ஸ்ரீ மடமும் 530

ஐயர்களில் ஓர் உ.வே 530

ஓடி ஓடி ஜன்மப்பணி செய்த இருவர் 531

Koviloor Digital Library

ஆத்திசூடி 533
தமிழ் வித்வான்களும் ஸ்ரீமடமும் 535
உ.வே.சா. செய்த பணி 537
தஞ்சைவாணன் கோவை 538
ஸ்ரீ மடத்தின் ஸாக்ஷி 541
திருச்சித்ரகூடம் எது? 542
தில்லை விளாகம்; ராம விக்ரஹச் சிறப்பு 544
ஆலயங்கள் எடுத்தவர்கள் 548
மடத்துக்கு உறவுக்காரர்கள் 549
கம்பனும் ஸ்ரீ மடமும் 550
காமாக்ஷி தொடர்புள்ள பாட்டி 553
அறிவுக்கும் அடைக்கும் தாழ் இல்லை! 555
பல ஜனகர்கள் 555
கேசித்வஜர் 557
அத்வைத ஞானிகளும் நடைமுறை உலகும் 558
காண்டிக்யர் 561
கதை உருவாகிறது! 562
ப்ராயச்சித்தம்: பகவந் நாமமும் வைதிக தர்மமும் 564
சத்ருவிடம் பரிஹாரம் கேட்டல்! 565
இந்தியப் பண்பாடு 570
குரு தக்ஷிணை 570
காண்டிக்யர் கேட்ட தக்ஷிணை! 573
பரம சத்ருக்கள் குரு–சிஷ்யரானது 578

Koviloor Digital Library

கதையின் படிப்பினைகள் 579
"ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே !" 581
முகவுரை 581
ஸங்கீதமும் ஸாஹித்யமும் 583
இடங்களின் பெயர்களில் ராகங்கள் 586
தேவாரப் பண்கள் 588
'ஒன்ஸ் மோர்!' 590
'ஸுப்ரஹ்மண்யர்' என்றால் வைதிக தெய்வம் 591
தீக்ஷிதரும் முருகனும் 593
முருகனின் அழகும் அருளும் 596
பாடலின் சில சிறப்பம்சங்கள் 599
எல்லோருக்கும் பொதுவான ஸ்வாமி 601
பாத தாமரை 602
முருகன்–சக்தி–ஸர்ப்பம் 603
தெய்வங்களிடம் முரண்பாடுகளும் ஒன்றுசேர்தல் 605
முருக–ஆதிசேஷர்கள் 607
தேவர்கள் தொழும் தேவதேவன் 608
இரு விதத்திலும் திருமாலின் மருமகன் 609
சைவ–வைஷ்ணவ ஒற்றுமை 610
உச்சநிலையில் உள்ளவர் 611
ஸாஹித்ய அழகு 611
அருள் புரிவதில் தலை சிறந்தவர் 612
பேரஸுரரை வதைத்த வீர பௌருஷம் 613

Koviloor Digital Library

குரு என்ற தனிப் பெருமை 615

வீரர்கள் தொழும் ஞானி! 617

இதய குகையில் இலகும் குரு,
அஞ்ஞான இருள் நீக்கும் ஸூரியன் 618

காயத்ரி உருவில் முருகனைக் காட்டும் பாடல் 619

வள்ளி மணாளன் 620

சக்தி வேலன் 621

தீரர்: மீண்டும் காயத்ரி 622

ப்ரம்மாவால் தொழப்பட்டவர், ஈசனுக்கு உபதேசித்தவர் . 623

எல்லா உலகுகளையும் ஆண்டு அநுபவிப்பவர் 624

இம்மை – மறுமை இரண்டும் அருள்பவர் 625

முடிவுரை: இசைக் கலைஞர்களுக்கு அறிவுரை 627

(முழுப்பாடல் . . . . 628)

தூக்கக்காரனும் ஆட்டக்காரனும் பாட்டுக்காரர்களும் 629

இரண்டு ராஜாக்கள்: ஸர்வலோக ராஜாவின்
இரண்டு வேஷங்கள் 629

தூக்கத்திலேயே உலகை நடத்துவது 631

பாண்டுரங்கன் 632

வேற்றுமையில் ஒற்றுமை 634

தூங்குபவரின் உள்ளேயே ஸபை; விச்வாகார நடனம் . . 636

இரு ஸபைகளும் மௌன அகண்டமே! 639

கனவும், விளையாட்டும் 640

சிவ–விஷ்ணு அபேதம் 642

தநுர்மாஸம், மார்கழி 643

Koviloor Digital Library

கிறிஸ்துவும் சிவ–விஷ்ணுக்களும் 646
இரு நிந்தாஸ்துதிப் பாடல்கள் 650
அருணாசலக் கவிராயரும் 'ராம நாடக'மும் 650
ஸங்கீதத்தில் பாஷை–ஜாதிச் சண்டை 653
ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றம் 655
கவிராயரின் ஸ்ரீரங்கநாதப் பாடல் 657
பின் இரு சரணங்கள் 667
பாபவிநாச முதலியாரும் கவிராயரும் 668
முதலியாரின் நடராஜர் பாடல் 670
ஸ்வாதீனம் காட்டும் ஆனந்த பக்தி 681

சான்றோர்

ஒரு ரிஷியின் தியாகம் 685
ஏரண்டகர் : பெயர்க்காரணம் 685
காவேரி தடம் மாறியது 687
நதிகளும் கலாசாரமும் 690
காவேரி தொடர்புள்ள மூன்று ரிஷிகள்;
மூன்றாமவர் ஏரண்டகர் 691
நடுவிலே வந்த ஆபத்து 693
மஹரிஷி கண்ட உபாயம் 695
நல்லதைச் சொல்லி ஆபத்து! 698
கீதை, பைபிள், குறள் போதனை;
ஏரண்டகரின் உத்தம உதாரணம் 701
'பெரும் பள்ள'மும் 'திருவலம்புர'மும் 704

Koviloor Digital Library

ஈசனின் அருள் லீலை 705
திருவலஞ்சுழி பிள்ளையார் 706
கன்னடியன் கால்வாய் 709
கர்ம வியாதியும் காயத்ரி சக்தியும் 709
தானம் பெற்றதற்குப் பச்சாத்தாபம் 712
உண்மைக் கதை 714
அகஸ்த்யர் அளித்த தீர்வு 717
தாஸியின் உத்தம சிந்தை 721
குருக்கள் மோசடியும் ஈசன் தந்த தண்டனையும் 723
பெயருக்கு ஆசைப்படாதவன் 727
'மிளகுப் பிள்ளையார்' 728
படிப்பினை : ஒருமைப்பாடு 730
மதத்தைக் காத்த மாதரசியர் 732
ஞானமார்க்கம் காட்டிய இரு ராணிகள் 732
தேசத்தையே ரக்ஷித்த பெண்டுகள் 734
திலகவதியாரும் திருநாவுக்கரசரும் 735
மங்கையர்க்கரசியாரும் திருஞானசம்பந்தரும் 744
ஆர்யாம்பாள்–ஸரஸவாணியும் ஆதிசங்கரரும் 753
ஹொய்சள ராஜகுமாரியும் ராமாநுஜரும் 755
சிங்கள ராஜகுமாரியும் மாணிக்கவாசகரும் 755
புத்தரின் சிற்றன்னையும் புத்தரும் 757
மதத்தைக் காத்த மற்ற மாதரசியர் 759
இன்றைய பெண்டிர் செய்ய வேண்டியது 759

Koviloor Digital Library

தெய்வ விஷயம்

தெய்வ ஸாக்ஷி	765
வேதாந்தத்தில் 'ஸாக்ஷி'	765
வியவஹாரத்தில் ஸாக்ஷி	769
ராமபிரானும் அக்னி ஸாக்ஷியும்	775
ஈசனே ஸாக்ஷியாக	782
ஸாக்ஷி கணபதி	783
"ஸாக்ஷி கோபால்"	791
'ஸாக்ஷிநாயகேச்வரர்'	801
'ஸாக்ஷிநாதேச்வரர்'	804
முடிவுரை: திருவொற்றியூர்	812
கங்கா ஸ்நானமும் காவேரி ஸ்நானமும்	814
முன்னுரை	814
நரகாஸுரனும் அவன் ஊரும்	818
கண்ணனிடம் முறையீடு	821
நரகாஸுர வதம்; ஸத்யபாமாவின் பங்கு	823
பூமாதேவியின் பிரார்த்தனை	827
கீதை : தீபாவளியின் தம்பி	832
ஏன் கங்கா ஸ்நானம்?	835
பகவானுக்கும் தோஷம்	836
ஈசன் சொன்ன பிராயச்சித்தம்	838
காவேரி துலா கட்டம்	841
தீபாவளியில் காவேரி ஸ்நானம்	842

Koviloor Digital Library

ஸதாசிவம் 844
ஆதி குரு 844
அஷ்ட நாமங்கள்; மஹாதேவன் 846
மஹாலிங்கம்; மஹேச்வரன் 848
ஐந்தொழில் 850
சிவனுக்கு மட்டுமே 'ஸதா' அடைமொழி 852
ஆர்ய–திராவிட 'ஆராய்ச்சி'! 854
ரிக்வேதத்திலேயே 'சங்கரர்'! 861
நல்லதும் அவனே, கெட்டதும் அவனே 862
'ரேஸ் தியரி' தவறானது 864
எப்போதும் உக்ரனே எப்போதும் ஸௌம்யனும் 865
ருத்ரனும் உள்ளுக்குள்ளே சிவன்தான்! 867
வேதம் சொல்லும் 'ஸதாசிவோம்' 870
சிவனும் சிவமும் 872
'ம்'மில் முடியும் பெயர்கள் 874
முருகன் பெயர்கள் 876
'உள்முகத் தெய்வமணி' 878
'ஸத்'தும் 'சித்'தும் சேர்ந்த 'ஆனந்த'மே ஸுப்ரஹ்மண்யம் 881
ஸத்யம், சிவம், ஸுந்தரம் 883

நமஸ்காரத் தத்வம்

நமோ நம: 889
தமக்கு இல்லாத பாக்யம் 889
துறவி குறித்து ஆசார்யாளின் விதி 889

Koviloor Digital Library

ஆசார்யாளும் நாராயண நாமமும் 890

நமஸ்காரம் யாவும் நாராயணனுக்கே! 899

உண்மையான ஸ்மரணம் 901

நிஜ ஸந்நியாஸியும் நமஸ்காரமும் 902

மடாதிபதி ஸந்நியாஸியும் நமஸ்காரமும் 904

ஆசீர்வாத சக்தி 907

ஆசிச் சக்தியின் மூலம் நாராயணனே! 908

அஞ்சலிக் கை, ஆசி அபிநயமாக 909

தம் பிரார்த்தனையும் அடியார் நம்பிக்கையும் 910

உயர் ஸ்தானம்; ஆயின் கூலி வேலை! 911

நமஸ்கரிப்பவனே பாக்யசாலி 916

துறவி நமஸ்கரிப்பது 917

தண்டனிடுவதன் தத்வார்த்தம் 918

துறவியின் தண்டம் 921

நேரில் தெரியும் நபருக்கு நமஸ்கரிப்பதிலேயே
விநயத்தின் முழுமை 922

நேரேயுள்ள பெரியோரிடமே அதிக மரியாதை 924

தமது துரதிருஷ்டம் 927

நமஸ்கார பாக்யத்தைப் பயன் செய்துகொள்க! 929

பணிவுப் பண்பு வளர 929

மனிதனின் அக–புற–உயர்வு–வீழ்ச்சிகள் 930

தலைக் கனம் குறையத் தலையால் வணங்குவது 932

குப்புற விழுவது ஏன்? 932

அருள்மழை சேரும் 'தாழ்நிலை' 934

Koviloor Digital Library

ஸாஷ்டாங்க நமஸ்காரம் 935

பஞ்சாங்க நமஸ்காரம்: தாய்மையின் பெருமை 943

வணக்கம் 944

புருஷர்களும் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யலாம் 944

அகில தேசாபிமானமும் பிரதேசப் பித்தும் 946

தமிழ் அர்ச்சனை 948

வீரமும் வணக்கமும் 956

OBEDIENCE; சுச்ரூஷை 965

ப்ரணிபாதம், ப்ரணாமம் 967

அபிவாதனம் 969

தெய்வத்தின் நாமத்திற்கு முன்பும்! 983

துறவிக்கு அபிவாதனம் கூடாது 984

அஞ்ஜலி (கும்பிடு), கைகுலுக்கல் 986

இரு புனிதக் கைப்பிடித்தல்கள் 994

கைப்பிடியும் தண்டமும்; பெண்கள் விஷயம் 997

ஆண்–பெண் வித்யாஸப் பண்பாடு 999

அஞ்ஜலி வகைகள் 1001

பிரதக்ஷிணம் 1005

அண்ட கோளங்கள் சுற்றி வருவதும்
நாம் ப்ரதக்ஷிணம் செய்வதும் 1013

ப்ரதக்ஷிணத்திற்குப் பின் செய்யும் நமஸ்காரம் 1020

அறிவு கடந்த சாஸ்திர விதி 1022

விநயத்தின் சிறப்பு 1023

நமஸ்காரத்திற்கு உரியவர்கள்; வயது வரம்பு விஷயம் . . 1024

Koviloor Digital Library

ஒற்றை 'நம:' இல்லை 1026
ஜன்ம விமோசனமே அளிப்பது 1028
நமஸ்காரம் தனக்குத்தானே பயன் 1033
மனஸ்காரம் 1034
தற்கால நிலைமையில் அவசியமானது;
பொருளாதாரத்திற்கு அருளாதாரத்தால் வரம்பு . . 1034
விதி விலக்கு 1036
அந்தகாரம் நீக்கும் நமஸ்காரம் 1037
தாம் இவ்விஷயம் சொல்வதன் விசேஷம் 1038

மங்களாரத்தி

ஞானி ஹநுமாரும் அவரது ஞான குருவும் 1041

Koviloor Digital Library

மங்களாரம்பம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

விநாயகரும் தமிழும்

இவரும் தமிழ்த் தெய்வமே!

தெய்வம் என்று ஒன்று இருந்தால் அது லோகம் பூராவுக்குந்தான். ஆனாலும் அதை 'நம்முது' (நம்முடையது) என்று விசேஷமாகப் பிரித்து வைத்து ப்ரியம் காட்டி உறவு கொண்டாடணும் என்று பக்த மனஸுக்குத் தோன்றுகிற துண்டு. ஒவ்வொரு தெய்வத்திடம் இப்படி ஒவ்வொரு ஜனஸமூஹத்திற்கு ஒரு அலாதி பந்துத்வம் இருப்பதில், தமிழ் மக்களுக்கு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி என்றால் தனியான ஒரு ப்ரியம். முருகன், முருகன் என்று சொல்லி, தமிழ்த் தெய்வம் என்று அவரை இந்த நாட்டுக்கே, பாஷைக்கே உரித்தானவராக முத்ரை குத்தி வைத்துக் கொண்டாடுகிறோம்.

எனக்கென்னவோ அவரை மட்டும் அப்படிச் சொல்லாமல் அவருடைய அண்ணாக்காரரையும் தமிழ்த் தெய்வம் என்று சொல்லணும் என்று (இருக்கிறது)! இளையவரைத் தமிழ்த் தெய்வம் என்று குறிப்பாகச் சொல்ல எவ்வளவு காரணமுண்டோ அவ்வளவு — ஒரு வேளை, அதைவிடக்கூட ஜாஸ்தியாகவே — அண்ணாக் காரரையும் சொல்வதற்கு இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அதனால் — அந்த அண்ணா-தம்பிகளைப் பிரிக்கவே படாது; சேர்த்துச் சேர்த்தே சொல்லணும், நினைக்கணும், பூஜை பண்ணணும் என்பதாலேயும் — பிள்ளையார், ஸுப்ரஹ்மண்யர் இரண்டு பேரையுமே தமிழ்த் தெய்வங்கள் என்று வைத்துவிட வேண்டுமென்று தோன்றுகிறது. அப்படி ஒரு 'ரெஸொல்யூஷன்' கொண்டு

Koviloor Digital Library

வரப் போகிறேன்! [அது] 'பாஸ்' ஆகணுமே! அதனால், புஷ்டியான காரணம் நிறையக் காட்டுகிறேன். 'யுனானிம'ஸாகவே 'பாஸ்' பண்ணிவிடுவீர்கள்!

இன்றைய 'பாலிடிக்ஸ்': பிரிவினை மயம்!

விளையாட்டுக்குச் சொன்னேன். வெள்ளைக்காரன் இருந்த மட்டும் அவனோடு சண்டை போடணும் என்கிறதில்........ 'ஸாத்விகப் போர்', 'அஹிம்ஸா யுத்தம்' என்று சொல்கிறார்கள்; வாஸ்தவத்தில் காந்தியும், அவருடைய கொள்கைகளில் மனஸாரப் பிடிமானம் வைத்திருந்த ஒரு சின்ன மைனாரிடியும் தவிர, மற்ற பெருவாரியான ஜனங்கள் அஸல் போரில் இருக்கிற சிரமம், தியாகம் எதுவும் அநுபவிக்காமல், ஆனாலும் உள்ளுக்குள்ளே அஸல் போர் செய்கிறவர்களுக்குக் குறைச்சலில்லாத த்வேஷத்தோடுதான் இருந்து வந்தார்கள். ஆகையினாலே நான் 'சண்டை' என்று சொன்னது தப்பில்லை. அப்படி, வெள்ளைக்காரனோடு சண்டை போடுகிறதில் ஆஸேது ஹிமாசலம் அத்தனை ஜனங்களும் ஒற்றுமையாக இருந்தோமே தவிர, அவன் என்னிக்குப் புறப்பட மூட்டை கட்ட ஆரம்பித்தானோ அன்னியிலிருந்தே, நமக்குள்ளேயே ஒற்றுமை போய், இத்தனைதான் பிரிவு என்று கணக்குப் போட முடியாமல் தினுஸு தினுஸாக வகுப்புவாதம், மதவாதம், கட்சிகள் வாதம், மாகாண [மாநில] வாதம்...... மாகாணம் என்ன, தாலுகாவுக்குத் தாலுகா, பக்கத்துப் பக்கத்து ஊர், தெரு, வீடு வரை ஒவ்வொருவரும் ஒருத்தரையொருத்தர் ஏசிக்கொண்டு, பரஸ்பரம் போட்டி போட்டுக்கொண்டு, அவரவரும் தனக்கு ஸ்பெஷல் ரைட் கொண்டாடிக் கொண்டு வாதம், த்வேஷம் என்றெல்லாம் வீணாய்ப் போய்க் கொண்டிருக்கிறோம். ஜனங்களுக்கு

Koviloor Digital Library

ஸத்குணங்களை — ஒருத்தருக்கொருத்தர் விட்டுக் கொடுத்து அநுஸரித்துப் போவது, கட்டுப்பாடு, தியாகம், ப்ரேமை, உழைப்பு மனப்பான்மை, எல்லாவற்றுக்கும் மேலே மொத்தமாக இந்த ஒரே பாரத தேசத்தை வைத்துப் பார்க்கிற உண்மையான தேசபக்தி முதலான ஒழுக்கங்களை — திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லி, தேசத்துடைய ஒட்டுமொத்த க்ஷேமத்திற்காக அத்தனை பேரும் ஒற்றுமையாகப் பாடுபடணும் என்ற உணர்ச்சியை உண்டாக்க வேண்டும் என்ற அபிப்ராயம் காந்தியும் அவருக்குக் கீழேயே பயிரானவர்களும் இருந்த தலை முறைக்குப் பிற்பாடு வந்த தலைவர்கள் என்கப்பட்டவர் களுக்கு அநேகமாக அஸ்தமித்துப் போய்விட்டதாகத் தெரிகிறது!

வயஸு வந்தவர்களுக்கெல்லாம் வோட்டு என்று பண்ணினாலும் பண்ணினார்கள்; அதிலிருந்து ஸமுதாயத்தின் பல ஸெக்ஷன்களில் ஒவ்வொன்றிலும் ஒரு மெஜாரிடியைத் தாங்களே புதுசாக ஸ்ருஷ்டித்தாவது உண்டாக்கி, 'உங்கள் உரிமைக்காகப் போராடுகிறோம்' என்று சொல்லிக் கொண்டு அவர்களையும் அந்தந்த ஸெக்ஷன் மைனாரிடிகளையும் பரஸ்பர விரோதிகளாக்கு வதுதான் வோட்டுப் பிடிக்க ப்ரம்மாஸ்திரம் என்று ஆக்கிக் கொண்டே இன்றைக்குப் பெரும்பாலும் 'பாலிடிக்ஸ்' நடக்கிறது! மொத்தத்தில் இந்த தேசத்தின் உசந்த ஸமுதாயம், மேலெழ வெளியிலே பார்க்கிறதற்கு மட்டும் ஒருமைப்பாட்டு கோஷம் என்ற ஒரு 'ஷோ'வோடு, உள்ளுக்குள்ளே பிரிந்து, பிரிந்து, பிரிந்து வீணாய்ப் போய்க் கொண்டிருக்கிறது. ரொம்பவும் துக்கமும் வெட்கமும் படும்படியான ஸ்திதி: பொது எதிரி ஒருத்தன்கிட்டே விரோதத்தில்தான் நமக்கு ஒன்று சேரத் தெரிந்ததே தவிர நமக்குள்ளே பரஸ்பர ப்ரேமையில் ஒன்று சேரத் தெரியவில்லை!

Koviloor Digital Library

அப்போது வெளிப்பார்வைக்காவது ஸாத்விகமாகச் சண்டை நடந்த மாதிரி இல்லாமல், இப்போது வெளியிலேயும் அஸுர யுத்தமாகவே நடந்து, யதுகுலம் மாதிரி நம்மை நாமே நிர்மூலம் பண்ணிக் கொள்வதில்தான் இது போய் முடியுமோ என்று பயப்படுகிற ஸ்திதி ஏற்பட்டிருக்கிறது.

இந்த அபாயத்தை இப்போதுள்ள அநேகக் கட்சிகளுடைய, வர்க்கங்களுடைய தலைமை ஸ்தானத்திலிருப்பவர்கள் தெரிந்துகொண்ட ப்ரக்ஞையே இல்லாமல் போய்க்கொண்டிருப்பதுதான் ரொம்பவும் விசாரம் தருவதாக இருக்கிறது. தர்மம் என்று ஒன்று இருக்கிறது........ ஜனங்களுக்கு இருக்க வேண்டிய அநேக நல்லொழுக்கங்கள் சொன்னேனே, அவை எல்லாமும் அதோடு இன்னும் பலவும் சேர்ந்துதான் தர்மம், தர்மம் என்கிறது; இந்த பாரத தேச கலாசாரத்திற்கு லோகத்திலேயே வேறே எந்தப் பெரிய 'ஸிவிலிஸேஷ'னுக்கும் இல்லாத தீர்க்காயுஸைக் கொடுத்து யுகாந்தரங்களாக ரக்ஷித்துக் கொண்டு வந்திருக்கிறது அந்த தர்ம சக்திதான். அப்படி ஒன்று இருக்கிறது என்று தப்பித் தவறியாவது தற்காலத்தில் தலைவர்கள் என்று இருக்கிறவர்கள் தங்கள் தங்கள் கட்சிக்காரர்களுக்குச் சொல்கிறார்களா என்று தெரியவில்லை! எலெக்ஷனில் ஜயிப்பது ஒன்றைத் தவிர வேறே ஒரு லக்ஷ்யத்தையும் கட்சிக்காரர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை என்ற துர்தசை ஏற்பட்டிருக்கிறது! ஜயிப்பதுதான் குறி என்கிறபோது hook or crook, எதுவானாலும் ஸரி என்று அதர்மத்திற்கும் கட்சிக்காரர்களைத் தூண்டிக்கொடுக்கிற வரைக்கும் போய்விடுகிறது. இந்த நிலவரத்திலே முக்யமாக அப்போது வெள்ளைக்காரன் ஒரு தினுஸில் divide and rule தந்திரம் பண்ணினானென்றால், இப்போது தலைவர்கள் என்கப்பட்டவர்களும் ஸமுதாயத்தை அநேக மெஜாரிடி–

Koviloor Digital Library

மைனாரிடிகளாக divide பண்ணி, மெஜாரிட்டியைத் திருப்தி பண்ணுவதற்காக தர்மாதர்மத்தைப் பற்றி அவ்வளவாகக் கவலைப் படாமல் எதுவேண்டுமானாலும் பண்ணி எலெக்ஷன் வெற்றிக்கே பாடுபடுவதாகத்தான் பொதுப்படையாகப் பார்க்கிறபோது தெரிகிறது.

இப்படித் தற்காலத்தில் அவரவரும் ஸ்பெஷல் ரைட் கேட்டுக்கொண்டு ஏகமாகப் பிரிவுகள் ஏற்பட்டிருப்பது போதாதென்று நான் வேறே பிள்ளையாரிடம் தமிழ் மக்களுக்கு ஸ்பெஷல் ரைட் என்று ஒரு பிரிவை உண்டாக்கி இன்னொரு சண்டை மூட்டிவிட்டால் ஸமஸ்த ஜனங்களுக்குமான அந்தப் பிள்ளையார் என்னைச் சும்மா விடமாட்டார்!

வாஸ்தவத்தில் பிள்ளையாரும் ஸரி, ஸுப்ரஹ்மண்ய ரும் ஸரி இந்த தேசம் பூராவுக்கும் ஸ்வாமிகள்தான். அதை ப்ரூவ் பண்ணவும் நிறைய எவிடென்ஸ் உண்டு.

முக்யமாக இரண்டு வாதம் — அறிஞர்கள், ஆராய்ச்சி யாளர்கள் 'உண்மையை டிஸ்கவர் பண்ணிச் சொல்கிறோமாக்கும்' என்று சொல்லிக்கொண்டு தங்களை அறியாமலே, ஏற்கெனவே குறுகின மனப்பான்மைகளில் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறவர்களை இன்னும் தங்கள் பங்குக்கு வேறே மூட்டிக் கொடுத்திருக்கிற இரண்டு வாதம். ஒன்று, 'பிள்ளையார் நரஸிம்ஹ வர்மப் பல்லவ ராஜாவின் காலத்தில்தான் அவருடைய ஸேநாதிபதி பரஞ்ஜோதி — பிற்காலத்தில் சிறுத்தொண்ட நாயனார் ஆனவர்; அவரால் சாளுக்ய தேச ராஜதானியான வாதாபியிலிருந்து தமிழ் நாட்டுக்குப் புதுசாக அறிமுகம் பண்ணப்பட்டவர். அதற்கு முந்தி அவருடைய வழிபாடு இங்கே கிடையாது. அதாவது அவர் தமிழ்த் தெய்வம் இல்லவே இல்லை; அசலார்' என்பது. இன்னொரு வாதம், 'முருகன் தமிழ் நாட்டுக்குத்தான் ஆதியிலிருந்து ஸ்வாமி.

Koviloor Digital Library

இங்கேயிருந்துதான் வடக்கே அவரை இரவல் வாங்கிக் கொண்டு, ஏதோ தங்கள் ஸ்வாமியே மாதிரி புராணம், மந்த்ரம், ஆகமம் எல்லாம் எழுதி வைத்துக்கொண்டு கதை பண்ணுகிறார்கள்' என்பது. இரண்டுமே தப்பு என்று 'ப்ரூவ்' பண்ண நிறையச் சான்றுகள் இருக்கின்றன. இப்போது அந்த விஷயம் வேண்டாம்.*

ஆக, நான் வேறு இப்ப இல்லாததை இருக்கிறதாகச் சொல்லி பேத உணர்ச்சியை மூட்டிக்கொடுக்கப்படாது.

இது ஒரு பக்கம். ஆனால், இன்னொரு பக்கத்தில், பிள்ளையார் இந்தத் தமிழ் நாட்டுக்கு எத்தனை தினுஸில் விசேஷ அநுக்ரஹம் பண்ணி நம் தமிழ் ஜனங்களுடைய இம்மை, மறுமை இரண்டுக்கும் 'டாப்' ஆன உபகாரியா யிருக்கிறார் என்பதை நினைத்துப் பார்த்து நமஸ்காரம் பண்ணா விட்டால் நமக்கு நன்றி மறந்த பெரிய தோஷம் ஏற்பட்டுவிடும் என்றும் தோன்றுகிறதே! ஆனதாலே, முத்ரை கித்ரை குத்திப் புதுசாக இன்னொரு சண்டை கிளப்பாமல், நன்றியோடு நமஸ்காரம் பண்ணுவதற்காகவே யதார்த்தத்தைச் சொல்கிறேன்.

இம்மைக்குப் பேருபகாரம்

இம்மை என்று எடுத்துக் கொண்டால் இந்தத் தமிழ் தேசத்துடைய இயற்கை வளத்துக்கு முதல் காரணமா யிருப்பது காவேரிதான். அந்தக் காவேரி இங்கே வரக் காரணம் யார்? பிள்ளையார்தானே? அவர் காக்கா ரூபத்தில் கொடகுக்குப் போய் அகஸ்தியருடைய

* பிள்ளையார் வாதாபியிலிருந்து 'இறக்குமதியானவ'ரல்லர் என்பதற்கான காரணங்கள் 'தெய்வத்தின் குரல்' ஆறாம் பகுதியிலுள்ள 'மங்களாரம்பம்' என்ற உரையிலும், முருகன் வடநாட்டுக்கும் தெய்வமே என்பதை விளக்கும் சான்றுகள் முதற்பகுதியில் அவரைப் பற்றித் தொடராக வரும் பல உரைகளில் விரவியும் கூறப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

கமண்டலுவைக் கவிழ்த்துவிட்டதில்தானே காவேரி உண்டாயிற்று? அவருடைய ஸம்பந்தத்தால் இம்மைக்குப் பயிர்-பச்சையும் உயிருக்கு ஜீவாதாரமான தீர்த்தமும் நமக்குத் தாயாராகக் காவேரி தருகிறாள்.

மறுமைக்கு மஹா உபகாரம் : திருத்தலங்கள்

இம்மைக்கான இவற்றைத் தருவதோடு மட்டும் நிற்காமல் காவேரி மறுமைக்கும் பரமோபகாரம் பண்ணி யிருக்கிறாள். எப்படியென்றால் River Valley Civilization என்கிறபடி ஒரு பெரிய நதியை ஒட்டிய கரைகளில்தான் கஷ்டமில்லாமல் வயிற்றுக்கானது கிடைத்துவிடுவதால் ஜனங்கள் விச்ராந்தியாக உசந்த சிந்தனைகளில் ஈடுபட்டு ஒரு பெரிய நாகரிகத்தை உண்டாக்க நிரம்ப வசதி ஏற்பட்டிருக்கிறது. அப்படி நம்முடைய கலாசாரம் உன்னதமாக ரூபமாவதற்குக் காவேரியே உபகாரம் பண்ணியிருக்கிறாள். காவேரி என்றால் முடிவாக அவளைப் பாயவிட்ட விக்நேச்வரர்தான்.

இந்த தேசத்தினுடைய ஆத்மிக பாரம்பர்ய விசேஷத்தினால் இங்கே ஒரு கலாசாரம் உண்டாகிற தென்றால் அது ஏதோ கண்ணுக்கு, காதுக்கு மாத்திரம் சில்பம், சித்ரம், நாட்டியம், கானம் என்று முடிந்து போகாமல் இவற்றின் வழியாக ஆத்மாவை உசத்திக் கடைத் தேற்றுவதாகவே இருக்கும். இங்கேதான் காவேரி — [சிரித்து] via காவேரி, விக்நேச்வரர் — நம்முடைய மறுமைக்கும் பரமோபகாரம் பண்ணுவது. நம்முடைய சில்பம், சித்ரம், ஆடல், பாடல் முதலான எல்லாக் கலைகளும், ஸயன்ஸ்களுங்கூடத்தான், அர்ப்பணமாயிருப்பது கோவிலில்தானே? அப்படிப்பட்ட கோவில்கள் தமிழ் நாட்டிலுள்ளது போல வேறே ஒரு நாட்டிலும் இல்லை. தமிழ் நாட்டிலும் மிகப் பெருவாரியான கோவில்கள்

Koviloor Digital Library

காவேரியின் கரையைத் தொட்டுக் கொண்டிருக்கும் பிரதேசத்தில்தான். குறிப்பாக, சோணாடு என்கிற சோழ நாட்டில்தான்.

அப்பர், ஸம்பந்தர், ஸுந்தரர் ஆகிய மூவர் தேவாரம் பாடிய க்ஷேத்ரங்களைப் 'பாடல் பெற்ற ஸ்தலங்கள்' என்பார்கள். அப்படி மொத்தம் 274. அதில் கிட்டத்தட்ட முக்கால்வாசி, 190 ஸ்தலங்கள், சோழ நாட்டின் காவேரிக்கு வடக்கு, தெற்குக் கரைகளில் இருக்கிறவைதான்! ஆழ்வார்கள் பெருமாள் மேல் திவ்யப்ரபந்தம் பாடின க்ஷேத்ரங்களை 'திவ்ய தேசம்' என்பார்கள். அப்படி 108. அதில் சைவ க்ஷேத்ரங்கள் அளவுக்குச் சோழநாட்டில் இல்லாவிட்டாலும், அந்தக் காலத்தில் சோழ நாடு, பாண்டி நாடு, மலை நாடு — அதுதான் மலையாளம் என்கிற சேரநாடு —, தொண்டை நாடு, நடு நாடு, வடநாடு என்று பிரித்திருந்ததில் மற்ற எந்த நாட்டையும் விட மிக அதிகமாக சோணாட்டிலேயே இருக்கின்றன. 108-ல் நாற்பது திவ்யதேசம் காவேரி வடகரை, தென்கரைகளில். அடுத்தாற் போல் வரும் தொண்டைநாட்டில் அதில் ஏறக்குறையப் பாதியான இருபத்திரண்டுதான்.

வைஷ்ணவரின் 'கோயில்' : விநாயகர் அருள் விளையாடல்

சைவ க்ஷேத்ரங்கள் அளவுக்குக் காவேரிக் கரையில் வைஷ்ணவ க்ஷேத்ரங்கள் இல்லாவிட்டாலும், சைவத்துக்கும் இல்லாத ஒரு சிகரமான பெருமையை வைஷ்ணவ ஸம்பந்தப்படுத்தியே பிள்ளையார் காவேரிக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். என்னவென்றால்: சைவர்கள் தங்கள் க்ஷேத்ரங்களுக்குள் முதலிடம் கொடுத்துக் 'கோயில்' என்றே குறிப்பிடுவது சிதம்பரம். அது காவேரிக் கரையில் இல்லை. வைஷ்ணவர்கள் இதே மாதிரி

Koviloor Digital Library

'கோயில்' என்று முதல் ஸ்தானம் தந்து சொல்கிறது ஸ்ரீரங்கம். அதுதான் காவேரிக்கே ஜீவ மத்யமான ஸ்தானத்தில் இருக்கிறது. 'உபய காவேரி' என்பதாக இரு பக்கமும் காவேரி நதி சூழ, 'காவேரி ரங்கன்' என்றே கியாதி பெற்றிருக்கிற பெருமாள் அங்கே பள்ளி கொண்டிருக்கிறார்.

அந்த ரங்கராஜா எப்படி அங்கே வந்தார்? விக்நேச்வரர் பண்ணிய லீலையால்தான்!

இக்ஷ்வாகு வம்சத்தினர் வழிவழியாகப் பூஜித்து வந்த ஸ்ரீரங்கநாத விக்ரஹத்தை ராமசந்திர மூர்த்தி விபீஷணருக்குக் கொடுத்துவிட்டார். அது அவருடைய நன்றி பாராட்டும் பெரிய மனஸுக்கும் தியாகத்துக்கும் ஒரு பெரிய 'ப்ரூஃப்'. அயோத்தியில் நடந்த ஸ்ரீராம பட்டாபிஷேகத்தில் எல்லா வானரர்களும் ராக்ஷஸர்களும் கலந்து கொண்டுவிட்டு அப்புறம் தங்கள் தங்கள் ஊருக்குப் புறப்பட்டார்கள். அப்போது ராமர் அவர்கள் தனக்குச் செய்த ஸஹாயத்தை நன்றியோடு நினைத்து, அவர்களுக்குப் பொன்னையும் பொருளையும் வாரிவிட்டு வெகுமதிகள் கொடுத்தார். இவருக்குக் கைங்கர்யம் செய்ய அவர்களுக்குக் கொடுத்து வைத்திருந்ததே பெரிய வெகுமதி, பாக்கியம் எல்லாம். ஆனால் அவருடைய உசந்த குணம் அவர்களிடம் நன்றி பாராட்டி வெகுமதிகள் கொடுத்தார். இவரால்தான் ஸுக்ரீவனும், விபீஷணனும் ராஜாக்களாக ஆனதே. ஆனால் அவர்களுக்குத் தாம் நன்றிக்கடன் பட்டிருப்ப தாகவே ஸ்வாமி நினைத்து, ராஜாராமரானவுடன் பெரிசாகப் பரிசுகள் தந்தார். முக்யமாக நவரத்னாபரணங்கள், பீதாம்பராதிகள் தந்தார்.

விபீஷணருக்கு மட்டும் அது போதாது, அதற்கு மேல் ரொம்ப உசந்த ஒன்று தரணும் என்று எண்ணினார். ஏனென்றால் அண்ணாவைத் தியாகம் செய்துவிட்டு ராமரே ஸர்வமும் என்று அவர் காலில் வந்து விழுந்தவர்

Koviloor Digital Library

விபீஷணர். சரணாகதருக்கு உதாரணமாக அவரையே சொல்வது. விபீஷணருக்கும் ஸுக்ரீவனுக்கும் ஒரு பெரிய வித்தியாஸம் சொல்கிறதுண்டு: பெண்டாட்டியையும் கிஷ்கிந்தா ராஜ்யத்தையும் தனக்குப் பெற்றுக்கணும் என்றே ஸுக்ரீவன் ராமரிடம் வந்து விழுந்தது; விபீஷணர்தான் கார்யார்த்தமாக இல்லாமல் நிஜமான சரணாகதி செய்தது என்பார்கள். அதோடு, ராமசந்த்ரமூர்த்தி தன்னுடைய சரணாகத ரக்ஷணத்தை ப்ரகடனப் படுத்திக்கொண்டு ஸத்யப் பிரதிக்ஞையாகவே ஸகலருக்கும் வாக்குக் கொடுக்கும்படியான வாக்கியத்தைச் சொல்ல வைத்தவரும் விபீஷணரே. அவர் நிஜமான சரணாகதராக வந்திருந்த போதிலும் ராமரைச் சுற்றியிருந்தவர்கள் — ஹநுமார் ஒருத்தரைத் தவிர ஸுக்ரீவன், அங்கதன் முதலானவர்கள் — அவரை ஸந்தேஹித்துப் பேசினார்கள். அதனாலேயே, நல்ல பக்திமானை ஸந்தேஹிக்கிறார்களே என்பதில் ராமருக்கு உண்டான உணர்ச்சி வேகத்திலே அவர் பெரிசாக ஸத்யப் பிரதிக்ஞை பண்ணிவிட்டார்: " 'நான் உன்னைச் சேர்ந்தவன்' என்று ஒருத்தன் ஒரே ஒரு தரம் சொல்லி என்னை யாசித்துவிட்டாலும் போதும், அவனுக்கு லோகத்தில் எது ஒன்றாலும் பயம், அதாவது கஷ்டம் ஏற்படாதபடி அபயம் தந்து ரக்ஷிப்பேன். இதுவே என் ஜீவித விரதம்" என்று ஒரு ஆவேசத்தில் சொல்லிவிட்டார்:

> "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே |
> அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத்–வ்ரதம் மம ||"*

அப்பேர்ப்பட்ட பக்திமானுக்கு ரொம்பப் பெரிசாக ஒன்றைத் தரவேண்டும் என்று ராமர் இப்போது பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்ட ஸமயத்தில்

---

* வால்மீகி ராமாயணம், யுத்தகாண்டம், 18.33-4

Koviloor Digital Library

நினைத்தார். பரமத் தியாகியான அவராலேதான் அப்படிப் பண்ண முடியும் என்கிற மாதிரி, என்ன செய்தாரென்றால் இக்ஷ்வாகு வம்ச குலதனமாக, குலதேவதையாக, வழிவழியாகப் பூஜை பண்ணிக்கொண்டு வந்திருந்த ரங்கராஜா விக்ரஹத்தையே ப்ரணவாகாரமான விமானத்தோடுகூட விபீஷணருக்குக் கொடுத்துவிட்டார். கொடுத்து, லங்கைக்குத் திரும்ப அனுப்பிவிட்டார்.

விக்ரஹத்தோடு புறப்பட்ட விபீஷணர் அயோத்தியி லிருந்து தெற்காக ரொம்ப தூரம், அயோத்தியிலிருந்து பார்க்கிறபோது ஏறக்குறைய தேசத்தின் தெற்கோரத்தில் இருக்கிற உபயகாவேரிக்கு வந்துவிட்டார்.

அதுவரை சும்மாப் பார்த்துக்கொண்டிருந்த விக்நேச்வரர்தான் சட்டென்று அப்போது, "இந்த பாரத தேசத்தை, தமிழ் தேசத்தை, ரமணீயமான இந்தக் காவேரித் தீவை விட்டுப் பெருமாள் போகவாவது?" என்று நினைத்தார். மாய விளையாட்டெல்லாம் பண்ணி, ரங்கநாதர் அந்த இடத்திலேயே அசைத்தெடுக்க முடியாதபடி ப்ரதிஷ்டை ஆகும்படிச் செய்துவிட்டார். என்ன செய்தாரென்றால்...

"விமான-விக்ரஹங்களை பூமியில் எங்கேயும் வைக்கப்படாது. எங்கே கீழே வைத்தாலும் அங்கேயே அது நிலையாக ப்ரதிஷ்டை ஆகிவிடும். அதனால் நேரே லங்காபுரிக்கே அதைக் கொண்டு போய் அங்கேதான் கீழே வைக்கணும்" என்று ராமர் சொல்லியனுப்பியிருந்தார்.

விக்நேச்வரர் என்ன பண்ணினார் என்றால், காவேரி அலை புரட்டிக்கொண்டு போகிற அழகைப் பார்த்ததும் விபீஷணருக்கு அதிலே ஸ்நானம் பண்ணணும் என்று ஆசை தோன்றும்படிப் பண்ணினார். தாமும் ஒரு ப்ரஹ்மசாரிப் பையனாக அங்கே போய் நின்று

Koviloor Digital Library

கொண்டார். ஸாதுப் பிள்ளை, சமர்த்துப் பிள்ளை என்று தோன்றும்படியான ரூபத்தோடு நின்றுகொண்டார்.

"அப்பா, கொழந்தே! நான் ஸ்நானம் பண்ணிட்டு வர வரையிலே இதை நீ பூமியிலே வெச்சுடாம, கையிலேயே வெச்சுக்கறயா?" என்று விபீஷணர் கேட்டார்.

"அப்படியே பண்றேன். ஆனாலும் எனக்குக் கை கனத்துப் போனா என்ன பண்றது? மூணு தரம் ஒங்களைக் கூப்பிடறேன். அப்டியும் நீங்க வல்லேன்னா கீழே வெச்சுப் புடுவேன்" என்று விக்நேச்வரர் சொன்னார்.

"ஆனா ஸரி'' என்று விபீஷணரும் ஒப்புக் கொண்டார்.

விக்நேச்வரர் என்ன பண்ணினார் என்றால், விபீஷணர் பிரவாஹம் கண்ட உத்ஸாஹத்தில் காவேரிக்குள் ரொம்ப தூரம் நீச்சலடித்துப் போய்விட்ட ஸமயம் பார்த்து, சட் சட் என்று அவரை மூன்று தரம் கூப்பிட்டார்.

அவர் அதற்குள் வரமுடியவில்லை.

"நான் சொன்னபடி கூப்டுட்டேன். நீங்க சொன்னபடி வரல்லை. கனம் தாங்காம இதோ பூமியிலே வெச்சுட்டேன்" என்று சொல்லிக்கொண்டு உபய காவேரி மத்தியிலிருந்த திட்டில் விக்ரஹத்தை வைத்துவிட்டார்.

விக்ரஹம் அங்கேயே அப்படியே ஆழமாக ப்ரதிஷ்டை ஆகிவிட்டது.

கதையைப் பார்த்தால் அதுவரை நல்ல பலிஷ்ட பாலர் ஒருத்தர் கையிலே தாங்கிக் கொள்கிற அளவுக்கே — [சிரித்து] portable size என்கிறார்களே, அப்படித்தான் — விக்ரஹமும் அதற்கான விமானமும் சேர்ந்தே இருந்திருக்கணும் என்று ஆகிறது. இக்ஷ்வாகு வம்ச ராஜாக்கள் தாங்களே பண்ணுகிற தங்களது அகத்துப்

Koviloor Digital Library

பூஜையில் வைத்துக்கொண்டிருந்தார்கள் என்றால், அப்படித்தானே [சிறிய அளவினதாக] இருந்திருக்கணும்?

இப்போது காவேரிக் கரையில் வைத்தபின்தான், பெருமாளும் க்ஷீரஸாகரமாயில்லாவிட்டாலும் மஹா நதியாக இருக்கிற இடத்தில் ஸந்தோஷப்பட்டுக்கொண்டு பெரும் ஆளாகவே நன்றாக நீள நெடுக ஆக்ருதி எடுத்துக் கொண்டிருக்கணும். அதே மாதிரி விமானமும் பெரிசான ஆலய ஸந்நிதியாக ஆகியிருக்கணும்.

வேக வேகமாக ஸ்நானம் முடித்து ஓடிவந்த விபீஷணருக்கு ஒரே ஏமாற்றமும் கோபமுமாக வந்தது. 'கீழே வைக்கப்படாது என்று 'கன்டிஷ'னாயிற்றே, இந்தப் பிள்ளை வைத்து விட்டதே! என்ன ஆயிருக்குமோ?' என்று விசாரப்பட்டுக்கொண்டு விக்ரஹத்தை பூமியிலிருந்து எடுக்கப் போனார். ஆனால் அவர் எத்தனை பிரயத்னம் செய்தும் விக்ரஹம் அசைந்தே கொடுக்காமல் பூமியிலே நன்றாகப் பதிந்துவிட்டிருந்தது. விபீஷணருக்கு ப்ரஹ்மசாரிப் பிள்ளை மேல் கோபம் கோபமாக வந்தது.

அவரைக் குட்டுவதற்காகக் கையை மடக்கிக் கொண்டு வந்தார். பிள்ளையார் ஓட்டமாக ஓட, "விட்டேனா பார்!" என்று விபீஷணரும் துரத்தினார். மலைக் கோட்டை உச்சிக்குப் போய்விட்ட பிள்ளையார் தாமே மனஸ் இரங்கி விபீஷணருக்குப் பிடிபட்டார். பகவானாக நமக்குப் பிடிபட்டால்தான் உண்டே தவிர, நாமாக ஸொந்த பலத்தால் அவரைப் பிடித்துவிட முடியுமா என்ன? யசோதைகூடப் பாடாகப் படுத்தின பாலக்ருஷ்ணமூர்த்தியை உரலில் கட்டிப்போடப் போய், எத்தனை கயிறும் போதாமல் வேர்த்து விருவிருத்துத் திணறினபோது, பகவானேதான் மனஸ் இரங்கி கயிற்றைப் போதும்படியாக்கி அவள் தன்னை உரலோடு சேர்த்துக் கட்டிப் போடும்படிப் பண்ணினான் என்றுதானே பாகவதத்தில் இருக்கிறது?

Koviloor Digital Library

பிள்ளையார் விபீஷணருக்குப் பிடிபட்டு அவர் தன்னுடைய சிரஸில் குட்டுவதற்கும் பரம கருணையோடு காட்டிக்கொண்டிருந்தார். எல்லோரையும் எவர் குட்டுப் போட்டுக் கொள்ள வைக்கிறாரோ, அவரே அப்போது தனக்குக் குட்டு வாங்கிக்கொண்டார்!

அந்த க்ஷணமே பிரம்மசாரி ரூபம் மாறி விக்நேச்வர மூர்த்தியாக தர்சனமும் கொடுத்தார்.

அந்த தர்சனத்திலேயே விபீஷணருடைய ஏமாற்றம், துக்கம், கோபம் எல்லாம் பாதிவாசி சமனமாகிவிட்டது. பாக்கிப் பாதியும் சமனமாகும்படியாக விக்நேச்வரர் அவரிடம், "பெருமாளை நான் லங்கைக்குப் போக விடவில்லையே என்று வருத்தப்படாதே. இங்கே இருந்த படியே அவர் லங்கையைப் பார்த்து அநுக்ரஹம் பண்ணும் படியாகத்தான் அவரை நான் வைத்திருக்கிறேன். தெற்குப் பார்க்கப் பெருமாளை ப்ரதிஷ்டை செய்கிற வழக்கமே இல்லாவிட்டாலும் நான் இங்கே அப்படித்தான் வைத்திருக்கிறேன்" என்றார்.

தெற்கு நோக்கும் தெய்வம் மூன்று : சைவ–வைணவ ஸமரஸம்

விக்நேச்வரரின் அப்பாவான பரமேச்வரன்தான் தக்ஷிணாமூர்த்தியாகவும், நடராஜாவாகவும் இருக்கிறபோது தெற்குப் பார்க்க இருப்பவர். இப்போது அவர் (விக்நேச்வரர்) மாமாவையும் அதே மாதிரி தெற்கே பார்க்க வைத்துவிட்டார். லோகமே தெரியாமல் அடித்த சிலையாக த்யானத்திலே உட்கார்ந்திருக்கிறவர் தக்ஷிணாமூர்த்தி. ஸர்வ லோக வியாபாரத்தையும் ஆனந்தக்கூத்தாக்கி அமர்க்களமாக ஆடுகிறவர் நடராஜர். சயன மூர்த்தியாக நித்ரை பண்ணிக்கொண்டிருக்கும் பெருமாளோ நித்ரை என்ற பேரில் தக்ஷிணாமூர்த்தி இருக்கிற அதே ஸமாதி

Koviloor Digital Library

ஸ்திதியில் இருக்கிறவர்தான். பின்னே ஏன் இதை ஸமாதி என்காமல் நித்ரை என்கிறார்களென்றால்.... அவர் மஹா மாயாவித்தனம் — நமக்குப் புரியாத இந்திர ஜாலம் எல்லாம் — பண்ணுகிறவரோல்லியோ? அதனால் ஸமாதியில் பாட்டுக்கு ஒரு பக்கம் இருந்துகொண்டே, இன்னொரு பக்கம் நாம் எப்படி நித்ரையின் போது ஸ்வப்னம் கண்டு அந்த ஸ்வப்னத்தில் நாம் ஒருத்தரே நம் ஒருவருடைய நினைப்பாலேயே மநுஷ்யர்கள், இடங்கள், ஸம்பவங்கள் எல்லாவற்றையும் கல்பிக்கிறோஃமோ [கற்பனை செய்கிறோமோ] அந்த மாதிரித் தன் ஒருத்தருடைய கல்பனா ஸ்ருஷ்டியாகவே இத்தனை ஜீவ-ஜகத் ஸ்ருஷ்டியையும் பண்ணுவார். அதனால் இதை அவருடைய ஸ்வப்னம் என்று வைத்தது. ஸ்வப்னம் வரவேணுமானால் தூங்கினால்தானே முடியும்? அதனால் அவருடைய ஸமாதியை நித்ரை என்கிறது. இப்படிச் சொல்ல இன்னொரு கூடுதல் காரணம், அவர் பொது வழக்கப்படி நேரே நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு ஸமாதியில் போகாமல், தம்முடைய மாயாவித்தனத்தை இதிலும் விடாமல், நன்றாக நீள நெடுகச் சயனித்துக் கொண்டு இருப்பதாகும். ஆனாலும் இந்த நித்ரை நம்முடைய நித்ரை போன்றதில்லை என்று தெரிவிப்பதாக அதை 'யோக நித்ரை' என்று ஒரு சிறப்பு அடைமொழி போட்டுச் சொல்வது. நாமெல்லாம் அறிவு மழுங்கித் தூங்குகிறாற்போலில்லாமல் நல்ல அறிவு விழிப்போடேயே அவர் தூக்கத்தில் லோக ஸ்ருஷ்டியாதிகளைக் கல்பனை பண்ணுவதால் தமிழிலே அழகாக 'அறிதுயில்' என்பது. அரி செய்வது அறிதுயில்!

'அப்பாவின் ஸமாதி மூர்த்தம், ஜகத்வியாபார மூர்த்தம் இரண்டும் தெற்குப் பார்க்க இருக்கிற போது, மாமா இரண்டையும் சேர்த்துப் பண்ணிக் கொண்டிருக்கிற பள்ளிகொண்ட மூர்த்தியும் அப்படி இருக்கவேண்டாமா?'

Koviloor Digital Library

என்று விக்நேச்வரர் நினைத்துக்கொண்டிருந்தார் போல இருக்கிறது. இப்போது விபீஷணாழ்வாரிடமிருந்து அப்படிப்பட்ட மூர்த்தியைப் பறிமுதல் பண்ணினபோது..... [சிரித்து] வெளிதேசத்துக்குக் கொண்டுபோகக் கூடாது என்று கஸ்டம்ஸ் அதிகாரி சரக்கைக் கைப்பற்றுகிற மாதிரிப் பண்ணினபோது, அந்தப் பரம பக்தருக்கு அநுக்ரஹமும் தடைப்படக் கூடாது என்ற பரம கருணை விக்நேச்வரருக்கு உண்டாகி, அவருடைய ஊரைப் பார்க்க விக்ரஹத்தை ப்ரதிஷ்டை பண்ணிவிடலாமென்று நினைத்து, அதே ஸமயம் அப்பா மாதிரியே மாமாவுக்கும் தெற்குப் பார்க்க மூர்த்தி உண்டாக்கித் தன்னுடைய ஆசையையும் தீர்த்துக்கொண்டார் என்று தோன்றுகிறது.

அவருடைய ஹஸ்த விசேஷமும், ஈச்வரனுக்கு எப்படியோ அப்படியே பெருமாளுக்கும் என்ற ஸமரஸமான மனோ விசேஷமும், இரண்டும் சேர்ந்து அப்படி அவர் ப்ரதிஷ்டித்த ரங்கராஜாவே மற்ற அத்தனை க்ஷேத்ரத்துப் பெருமாள்களுக்கும் ராஜாவாக அக்ர ஸ்தானம் [முதலிடம்] பெற்றுவிட்டார்! அந்த ராஜாவின் ஆஸ்தானமான க்ஷேத்ரம் ஸ்ரீரங்கம் என்றும், திருவரங்கம் என்றும் பேர் பெற்றது.

நான் மாற்றிச் சொல்லிவிட்டேன்: 'ரங்கராஜா' இருக்கிறதால் அந்த இடம் 'ரங்கம்' என்பது ஸரியில்லை. அந்த இடத்துக்கு 'ரங்கம்' என்ற பேர் இருப்பதால்தான் அங்கே ராஜாவாக இருக்கிறவருக்கு 'ரங்கராஜா' என்று பேர் ஏற்பட்டது. இக்ஷ்வாகு வம்ச ராஜாக்கள் — ராமர் வரை இருந்தவர்கள் — ஆராதித்துக் கொண்டிருந்தபோது அவருக்கு நாராயணன், விஷ்ணு என்று பொதுப் பெயரோ, அல்லது ஆதிசேஷ ஸர்ப்பத்தின் மேல் சயனித்துக் கொண்டிருப்பதால் சேஷசாயி, அனந்த சாயி என்கிறமாதிரி ஒரு பெயரோதான் இருந்திருக்கும். உபய காவேரி மத்தியில் விக்நேச்வரர் அவருக்கு ரங்கமாக ஒரு ஸ்தானத்தை

Koviloor Digital Library

ஏற்படுத்திய இப்போதுதான் அவர் ரங்கராஜா என்ற பெயரைப் பெற்றிருக்கவேண்டும்.

அதென்ன 'ரங்கம்'?

ரங்கம் — தமிழில் 'அரங்கம்' — என்றால் நாட்டிய-நாடகங்கள் நடக்கும் மேடை; அதைப் பார்க்க ஜனங்கள் கூடியிருக்கும் ஹாலையும் சேர்த்து, என்றும் சொல்லலாம். அதாவது 'ஸ்டேஜ்' மாத்திரம் என்றும் சொல்லலாம்; 'தியேட்டர்' முழுவதும் என்றும் சொல்லலாம். லோக நாடகத்தை ஸ்வப்ன கல்பனையாகப் பண்ணும் மஹா பெரிய நாடகக்காரன் ரங்கத்தில்தானே அந்த நாடகம் நடத்தணும்? இதே கார்யத்தைப் பரமேச்வரனாக இருந்து கொண்டு நாட்டியமாக அவன் பண்ணும் சிதம்பரத்தில் அவனுடைய ஸந்நிதிக்கு 'ஸபை' என்று பெயர். 'சித்ஸபை' என்பார்கள். ஜனங்களுக்குத் தெரிந்த பெயர் 'கனக ஸபை'. இந்த இடத்தில் 'ஸபை' என்பதற்கு, 'ரங்க'த்துக்கு என்ன அர்த்தமோ அதே அர்த்தந்தான். அதாவது நாட்டிய-நாடக சாலை என்றே அர்த்தம். இப்போதுங்கூட ஸங்கீதக் கச்சேரி, டான்ஸ் கச்சேரி நடத்துகிற ஸங்கங்களெல்லாம் 'ஸபா', 'ஸபா' என்றுதானே பேர் போட்டுக்கொள்கின்றன? [சிரித்து] 'ஸபா'வில் ஒருத்தர் முதல் தடவையாக டான்ஸ் கச்சேரி பண்ணுவதை 'அரங்கேற்றம்' என்கிறார்கள். இங்கே சித்ஸபை, ஸ்ரீரங்கம் இரண்டும் ஜாடையடிக்கின்றன.

நடைமுறையிலுள்ள வழக்கத்தை அநுஸரித்து நாட்டியம் என்றால் டான்ஸ், நாடகம் என்றால் ட்ராமா என்ற அர்த்தத்தில் நாட்ய-நாடக சாலை என்று நடுவே சொன்னேன். ஆனால் 'நாட்ய சாஸ்த்ரம்' என்கிற பரதரின் பெரிய ப்ரமாணப் புஸ்தகத்தில் 'நாட்டியம்' என்பது முக்யமாக இப்போது நாம் 'நாடகம்' என்று சொல்வதைத் தான் குறிக்கிறது. அதிலேயே டான்ஸைப் பற்றியும் வருகிறது. அது மட்டுமில்லாமல் ஸங்கீதம் பற்றியும்

Koviloor Digital Library

வருகிறது. 'நட' என்ற வேர்ச் சொல்லிலிருந்துதான் நாடகம், நாட்யம், நடனம் — தமிழில் 'நடப்பது' — எல்லாமே வந்திருக்கிறது. அது அசைவை, motion–ஐக் குறிக்கிற தாது [வேர்ச் சொல்].......

டான்ஸ் பண்ணும் தகப்பனாருக்குக் கோவிலாக ஒரு நாட்டிய-நாடக சாலை 'ஸபை' என்றே இருக்கிறதென்றால், ஸ்வப்னமாகவே ட்ராமா பண்ணும் மாமாவுக்கும் அப்படி ஒன்று இருக்கணும் என்று தீர்மானித்த விக்நேச்வரர், தத்வத்தில் ஒன்றேயானாலும், பெயரில் வித்யாஸம் இருந்தால்தான் அழகு என்று தாம் ப்ரதிஷ்டித்த மூர்த்தியின் ஸந்நிதிக்கு 'ரங்கம்' என்று பெயர் வைத்தார்.

விநாயகர் லீலையின் மெய்ம்மையும் பொருத்தமும்

ஸ்ரீரங்கத்தைப் பற்றி ஸ்தல புராணத்தில் எப்படி இருக்கிறதோ; ஞாபகமில்லை. ஆதியிலிருந்தே அந்த மூர்த்திக்கு ரங்கராஜப் பேர் உண்டு என்றும், அவர் இருக்கும் விமானத்துக்கு ஸ்ரீரங்கம் என்று பேர் உண்டு என்றும் இருக்கிறதோ என்னவோ? வைஷ்ணவர்களுடைய ஸ்தல புராணமானதால் விக்நேச்வரர் ஸமாசாரம் அதில் இல்லை என்று மட்டும் ஞாபகம் இருக்கிறது. ராமர் காலத்திலே இருந்த சோழ ராஜா .... தர்மவர்மா என்று அவனுக்குப் பேர்; ஸ்ரீரங்கம் மூலஸ்தானத்தைச் சுற்றியுள்ள ப்ராகாரத்துக்கு 'தர்மவர்மன் சுற்று' என்றே பேர்; அந்த ராஜா, ரொம்ப காலமாகவே இந்த இக்ஷ்வாகு வம்ச குல தேவதை தன்னுடைய ராஜ்யத்தில் எழுந்தருளணும் என்று தபஸ் இருந்ததால், விபீஷணர் கொண்டுவந்த விக்ரஹம் இங்கே அவர் சிரம பரிஹாரத்திற்காக இறக்கிவைத்தபோது இந்த இடத்திலேயே நிலைக் குத்திட்டுவிட்டது என்றுதான் அதில் சொல்லி அதோடு விட்டிருக்கிறது என்று ஞாபகம்.

Koviloor Digital Library

ஆனால் லோகத்தில் பிரஸித்தமாயிருப்பது விக்நேச்வரரின் லீலையால் விக்ரஹம் ப்ரதிஷ்டை ஆனதாகத்தான். நம்முடைய மதத்தில் இரண்டு பெரிய பிரிவுகளாக இருக்கும் சைவ-வைஷ்ணவங்களை. ஸமரஸப் படுத்துவதாக இந்தக் கதை இருப்பதால் மனஸுக்கு ஹிதமாயிருக்கிறது. மேலே கதை போயிருக்கிற போக்கு அதற்கு இருக்கும் ஸத்யத்வத்தையும் காட்டுவதாக இருக்கிறது.

கதை எப்படிப் போனதாகப் பார்த்தோம்? பிள்ளையார் ஓடு ஓடு என்று ஓடி மலைக்கோட்டை உச்சிக்குப் போனார், விபீஷணர் துரத்து துரத்து என்று துரத்திக்கொண்டே போய் சிரஸிலே குட்டினார் என்று [பார்த்தோம்]. அதற்கேற்க, உச்சிப் பிள்ளையார் பிம்பத்தின் சிரஸில் இன்றைக்கும் குட்டுப் பட்டதில் உண்டான வடு இருக்கிறது. பிள்ளையார் மலை உச்சியில் இருப்பதே அபூர்வம். விபீஷணரிடம் அகப்படாமலிருக்கத்தான் அவர் மலை ஏறி வந்து அங்கே அப்படியே ஸ்திரவாஸம் கொண்டுவிட்டார் என்பது பொருத்தமாக இருக்கிறது.

இதிலேயே பெரிய யோக சாஸ்திர தத்வார்த்தமும் இருக்கிறது. அடி மூலாதாரத்தையும் உச்சி ஸஹஸ்ராரத்தை யும் சேர்த்து வைக்கிற தத்வம். அந்த விஸ்தாரம் இப்போது வேண்டாம்.

ஸ்ரீரங்கநாதருக்கு விக்நேச்வர ஸம்பந்தம் இருப்பதில் இன்னொரு பொருத்தமும் உண்டு. அகஸ்தியர் கமண்டலுவுக்குள் அடைத்து வைத்திருந்த காவேரியை வெளியிலே ஆறாகப் பிரவஹிக்கப் பண்ணினவரே விக்நேச்வரர்தான். காக்காய் ரூபத்திலே போய்க் கமண்டலுவைக் கவிழ்த்து ஓடவிட்டார் என்று கதை. காக்காயை அகஸ்த்யர் துரத்திக்கொண்டு போனார். அப்போது காக்காய் பிரம்மசாரியாக மாறிற்று. விபீஷணர்

Koviloor Digital Library

கதையிலும் பிரம்மசாரியாக அவர் ஆனதைப் பார்க்கிறோம்! இப்போது விபீஷணர் அவரைக் குட்டப் போனார் என்று பார்த்தோம். பூர்வத்திலும் அவரைக் குட்டத்தான் அகஸ்தியர் கையை முஷ்டியாக மடக்கிக் கொண்டு துரத்தினார். இப்போது குட்டுப்பட்ட அப்புறம் ஸ்வய ரூபம் காட்டிய விக்நேச்வரர் அப்போது குட்டுப் படுகிறதற்கு முந்தியே மஹர்ஷிக்கு திவ்ய ரூபத்தில் தர்சனம் கொடுத்துவிட்டார். "ஐயோ! உன்னையா குட்டப் போனேன்? இந்த அபசாரத்துக்காக என்னையேதான் குட்டிக்கணும்" என்று அகஸ்தியர் இரண்டு கையாலும் இரண்டு பொட்டிலும் குட்டிக்கொண்டார். அவருக்கு நிரம்ப அநுக்ரஹம் செய்த பிள்ளையார் அப்போதுதான் அவர் குட்டிக் கொண்டதை தம்முடைய வழிபாட்டிலேயே ஒரு முக்யமான அம்சமாகப் பண்ணி ஸகல ஜனங்களும் அப்படிப் பண்ணனும் என்று வைத்தார் என்று ஒரு கதை.

இந்த இரண்டு கதைகளிலும் இருக்கிற ஒற்றுமை, ஒன்றை மற்றது 'காம்ப்ளிமென்ட்' பண்ணுவது ஆகியவற்றுக்குச் சிகரமாக, மஹாவிஷ்ணு, காவேரி, விக்நேச்வரர் மூவரையும் ஸம்பந்தப்படுத்துவதாக ஒன்று வருகிறது. ஆதியில் விக்நேச்வரர் கமண்டலுவைக் கவிழ்த்துக் காவேரியாக ஓட வைத்தது எங்கே என்றால் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஸஹ்யாத்ரி என்று இருக்கிற இடத்தில் ஒரு நெல்லி மரத்தின் அடியிலிருந்துதான். நெல்லி மரத்தடிதான் காவேரிக்கு உத்பத்தி [உற்பத்தி] ஸ்தானம். அந்த நெல்லி மரம் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுதான். பெருமாள்தான் அப்படி விருக்ஷரூபத்தில் நின்றார். விஷ்ணு மாயையின் ஒரு அம்சமே லோபாமுத்ரை என்ற ஸ்த்ரீயாகி, அந்த லோபாமுத்ரை அகஸ்த்யருக்குப் பத்னியாகி அப்புறம் அவருடைய கமண்டலு தீர்த்தமாக ஆனது.

அவள் காவேரியாக பகவானின் பாதத்திலிருந்து பிரவஹித்தபோது அவர் அவளிடம் பரமப் பிரியத்துடன்,

Koviloor Digital Library

"கங்கையும் என்னுடைய பாத தீர்த்தத்திலிருந்துதான் பெருக்கெடுத்து ஓடினாள். அவளைக் காட்டிலும் நீ எனக்கு ப்ரியம். ஆகையினாலே, அவளுக்கு என் பாத ஸ்பரிசம் மாத்திரம் கிடைத்ததென்றால் உனக்கோ என் ஸர்வாங்க ஸ்பர்சமும் கிடைக்க அநுக்ரஹிக்கிறேன். இப்போது மரத்தடி வேரிலிருந்து புறப்பட்ட உனக்கு என் பாத ஸ்பர்சம் கிடைத்திருக்கிறது. அப்புறம் நீ மஹாநதியாக ஓடி வரும்போது இரண்டாகப் பிரிந்து அப்புறம் ஒன்று சேர்கிற தீவில் இரண்டு ஹஸ்தத்தாலும் என்னை அப்படியே முழுசாக இரண்டு பக்கமும் அணைத்துக் கொள்வாய்" என்றார்*.

அவர் அன்றைக்கு அப்படி வரம் தருவதற்குப் 'பிள்ளையார் சுழி' போட்டவர் அவருடைய பாத ரூபமான நெல்லி மரவேரில் கமண்டலுவைக் கொட்டிக் கவிழ்த்த பிள்ளையார்தான். ஆகையினாலே அவரேதான் உபய காவேரியாக இரட்டைப் பெருக்காகி அவள் ஓடிய இடத்தில், அவள் இரண்டு ஹஸ்தத்தாலும் ஆலிங்கனம் செய்து கொள்ளும்படியாக ராமர் விபீஷணனுக்குக் கொடுத்த ஜீவ சைதன்யமுள்ள பெருமாள் விக்ரஹத்தை ஸ்தாபித்தார் என்பது, [சிரித்து] புலவர்கள் பாஷையில், 'சாலப் பொருத்தம்'தானே?

இன்னொரு பொருத்தம் — சைவத்தையும் வைஷ்ணவத்தையும் ஸம எடை கட்டுவதான பொருத்தம் — சொல்கிறேன். ராவண ஸம்ஹாரத்திற்கு அப்புறம் விபீஷணர் ராமரிடமிருந்து அவருடைய மூல ரூபமான ரங்கநாதருடைய விக்ரஹத்தைப் பெற்றுக் கொண்டாரென்றால், அந்த ராவணனும் கைலாஸத்தில் பரமசிவனிடமிருந்து அவருடைய ஸ்வரூபமேயான ஆத்ம லிங்கத்தைப் பெற்றுக்கொண்டவன்தான். அதை அவன்

* 'துலா காவேரி மாஹாத்மிய'த்தில் இவ் வரலாறு உள்ளது.

Koviloor Digital Library

லங்கைக்கு எடுத்துக்கொண்டு போகும்போது நம் கதை மாதிரியே அதை பூமியில் வைக்கப்படாது என்று ஸ்வாமி ஆஜ்ஞை பண்ணியிருந்தார். அப்போதும் பிள்ளையார்தான் இதே மாதிரிக் குறும்பு பண்ணிக் கைலாஸ லிங்கம் இந்த பாரத தேசத்தைவிட்டுப் போகாமல் ரக்ஷித்துக் கொடுத்தார். அந்த லிங்கம் பிரதிஷ்டையான இடம்தான் கோகர்ணம். கோவாவுக்குக் கீழே கர்நாடகத்தில் மேற்கு ஸமுத்ரக் கரையில் இருக்கும் மஹாக்ஷேத்ரம். த்வாரகை மாதிரி, ராமேச்வரம் மாதிரி அது ஒரு தீவு. அங்கே ஸ்வாமிக்கு மஹாபலேச்வரர் என்று பெயர். பிள்ளையார் பூமியில் வைத்து லிங்கம் நன்றாக ப்ரதிஷ்டை ஆனவிட்டு ராவணன் தன்னுடைய பலம் முழுதையும் — 'ராக்ஷஸ பலம்' என்றே சொல்லும் அத்தனை பலத்தையும் — காட்டி அதைப் பெயர்த்தெடுக்கப் பார்த்தும் முடியவில்லை. ராவண பலத்தையும் அசக்தி ஆக்கினதாலேயே ஸ்வாமிக்கு மஹாபலேச்வரர் என்று பெயர். அண்ணன்காரன் சிவ லிங்கத்தைக் கொண்டு போகவிடாமல் பண்ணியவர், தம்பி மஹாவிஷ்ணு விக்ரஹத்தைக் கொண்டு போகமட்டும் விட்டிருப்பாரா? அதனால் நம்முடைய கதை ஸத்தியமானதுதான் என்று ஆகிறது.

பாரத தேசத்தின் தனித்தன்மை

அது ஸரி, பாரத தேசத்தை விட்டு தெய்வ பிம்பங்கள் போகப்படாது என்று பிள்ளையார் ஏன் நினைத்தார், அது ஸரிதானா, நியாயந்தானா என்றால் —

ஒரு மரத்துக்கு ஜலம் விடுவதென்றால் கிளையிலா விடுவார்கள்? பூ, காய் மேலா விடுவார்கள்? வேரிலேதானே விடுவார்கள்? வேரிலே விட்டாலே கிளை, இலை, பூ, காய் எல்லாவற்றும் ஜலம் போய்விடுகிறதோ இல்லியோ? அப்படித்தான் தெய்வ ஸம்பந்தமான விஷயங்களுக்

Koviloor Digital Library

R65

கெல்லாம் லோகம் என்கிற இந்தப் பெரிய விருக்ஷத்திற்கு இந்த பாரத தேசமே வேராக இருக்கிறது. இலைமேல், பூ, காய் மேலும் கொஞ்சம் ஜலம் தெளித்தால் அதுகளும் அதனால் கொஞ்சம் பச்சென்று ஆனாலும், வேரில் விட்டால்தான் அந்த இலை, பூ முதலானதும் உள்ளே ஸத்துப் பெறுகிறது. அந்த மாதிரி வெளி தேசங்களில் செய்யும் பூஜாதிகளாலும் அந்த தேசங்களுக்குக் கொஞ்சம் நன்மை உண்டாகுமானாலும், இந்த பாரத தேசத்தில் செய்கிறதால்தான் அந்த தேசங்களுக்கும் உள்ளூரப் புஷ்டியான பலன் கிடைக்கும்.

லோக ஸ்ருஷ்டியில் பகவான் ஒவ்வொரு தேசத்தில் தான் நல்ல க்ளைமேட், ஒவ்வொன்றில்தான் நல்ல பயிர் பச்சை, ஒவ்வொன்றில்தான் வைரம், தங்கம், இன்னும் விலை உயர்ந்த தாதுப் பண்டங்கள் என்று வைத்திருக் கிறானோ இல்லியோ? சில தேசங்களை ஒரே குளிர் என்றும் இன்னும் சிலதை ஒரே கொளுத்தல் என்றும் வைத்திருக்கிறான். நில வளம், நீர் வளம், தாது வளம் இல்லாமல் அநேக தேசங்களை வைத்திருக்கிறான். வளமுள்ள தேசங்கள் வளமில்லாத தேசங்களுக்கு ஏற்றுமதி பண்ணி உதவும்படி வைத்திருக்கிறான். அப்படி தெய்வ ஸம்பந்தமான விஷயங்களுக்கு இந்த [பாரத] தேசந்தான், ஒரு பவர் ஹவுஸ் ஊர் பூராவுக்கும் லைட் கொடுக்கிற மாதிரி லோகம் பூராவுக்கும் தெய்விகத்தை ஸப்ளை செய்யவேண்டுமென்று வைத்திருக்கிறான். மநுஷ்ய தேஹத்தில் ஹ்ருதயம் என்று முக்யமான அங்கமாக ஒன்றை வைத்து அதுதான் தேஹம் பூராவுக்கும் ரத்தத்தை ஸப்ளை செய்து ரக்ஷிக்கும்படியாக அவன் வைத்திருக்கிற மாதிரியே இந்த விச்வ விராட் ஸ்வரூபத்தில் ஸகல தேசங்களுக்கும் தெய்வ ஸம்பந்தமான, தர்ம ஸம்பந்தமான, ஆத்ம ஸம்பந்தமான ஜீவ சக்தியை ஸப்ளை செய்து ரக்ஷிக்கிற ஹ்ருதயமாக நம்முடைய தேசத்தை வைத்திருக்கிறான்.

Koviloor Digital Library

இப்படிச் சொன்னதால் மற்ற தேசங்களில் உபாஸனையே நடக்கவேண்டாம் என்று சொன்னதாக ஆகாது. தனித் தனியாக ஒவ்வொரு அங்கத்தையும் ரக்ஷிப்பதற்காக அந்தந்த அங்கங்கள் மேலேயே மருந்து போட்டுக் கொள்ளவும் செய்கிறோமல்லவா? ஒரு செடி, மரம் என்று எடுத்துக்கொண்டாலும் வேரில்தான் ஜலம் விடுகிறோமென்றாலும் பூச்சி, பொட்டு அரிக்காமலிருப் பதற்காக இலை, காய் முதலானவற்றின் மேலேயும் மருந்து தெளிக்கிறோமல்லவா? அந்த மாதிரி அந்தந்த தேசத்திலும் தெய்வாநுக்ரஹ சக்திக்கு ஹானி ஏற்படாமலிருப்பதற்கு அங்கங்கேயும் வழிபாடு-உபாஸனை நடக்க வேண்டியது தான். இருந்தாலும் எந்த அங்கத்திற்கு ஹானி வந்தாலும் ஹ்ருதயம் பழுதாகாமல் அதற்கு ரத்த ஸப்ளை செய்தால் தான் வியாதி நிவாரணமாகிற மாதிரி நம்முடைய நாட்டில் விதிவத்தாக வழிபாடுகள் நடந்தால்தான் நமக்கு மாத்திர மில்லாமல் ஸர்வ தேசங்களுக்கும் க்ஷேமமுண்டாக முடியும்.

விதிமுறை வழிபாடும், அன்பு வழிபாடும்

இன்னொரு விஷயம். வைதேய பக்தி, ராக பக்தி என்று இரண்டு உண்டு. விதிவத்தாக, அதாவது விதிப்படி ஒரு சாஸ்திர வழியிலே உபாஸனை செய்வது வைதேய பக்தி. இப்படி வழிபாட்டு க்ரமம் என்று இல்லாமல் ப்ரேமையோடு நம் அன்பில் எப்படியெல்லாம் பகவானிடம் ப்ரார்த்திக்கவும், உறவு கொண்டாடவும் தோன்றுகிறதோ அப்படியெல்லாம் பக்தி பண்ணுவது ராக பக்தி. [அதை] அநுராக பக்தி என்றும் சொல்வார்கள். தற்காலத்தில் எந்த விதிமுறைக்கும் கட்டுப்படக்கூடாது என்ற மனப்பான்மை பரவியிருப்பதால் எல்லாரும் தங்களுக்கு ராக பக்தி இருக்கிறதாகவும் அதனால் விதி ப்ரகாரம் ஒன்றும் பண்ணத் தேவையில்லை என்றும்

Koviloor Digital Library

நினைப்பதாக ஏற்பட்டிருக்கிறது. வாஸ்தவத்தில் நமக்கு அப்படியெல்லாம் ஒன்றும் சுத்த ப்ரேமை பகவானிடம் பொங்கிக்கொண்டு வந்துவிடவில்லை. அது மட்டும் வந்திருந்தால் நாம் இருக்கிற தினுஸே வேறேயாக இருக்கும். பரித்யாகத்தில் [எல்லா உறவுகளையும் முற்றிலும் தியாகம் செய்வதில்] ஏற்படும் சரணாகத பாவம், ஈச்வரனிடம் வைக்கிற ப்ரேமையின் ப்ரதிபலிப்பாக ஸகல ஜீவ ஜந்துக்களிடம் ப்ரியம் என்று உத்தமமான சீலங்களோடு இருப்போம்.....

வைதேய பக்தியுங்கூட வறட்டு வறட்டு என்று புஸ்தகப்படி ஒரு மெகானிக் தன் ஷாப்பில் காரியம் பண்ணுகிற மாதிரி இல்லாமல் ப்ரேம பாவத்துடனேயே பண்ண வேண்டும் என்றுதான் சாஸ்திரம். விதிப்படி ஒழுகுவதே 'வைதேயம்' என்றேனோல்லியோ? அந்த விதிகளில் அடிப்படையாக ப்ரேமை வேண்டும் என்பதும் ஒன்று. பூஜாரம்பத்தில் [பூஜையின் ஆரம்பத்தில்] ஆத்ம பூஜை என்று ஒன்று செய்துவிட்டு அப்புறந்தான் வெளியிலிருக்கிற ப்ரதிமைக்குப் பூஜை செய்யவேண்டும். அந்த ஆத்ம பூஜையில், 'பூஜை செய்கிற தன்னுடைய தேஹமே பகவான் இருக்கிற தேவாலயம்; பூஜை செய்கிற ஜீவனான தானே பூஜிக்கப்படும் தேவனான பகவான். முந்தைய பூஜையில் அர்ச்சனை செய்த புஷ்பம் முதலான நிர்மால்யத்தை எடுத்துப்போட்டு இந்தப் புதுப் பூஜை ஆரம்பிக்கிற மாதிரி, ஜீவனும் தேவனும் வேறே வேறே என்று நினைக்கிற அஞ்ஞானத்தைத் தள்ளிப் போட்டுவிட்டு 'அவனே நான்' என்ற 'ஸோ(அ)ஹம்' பாவனையுடன் பூஜிக்கணும்' என்று விதி செய்திருக்கிறது:

தேஹோ தேவாலய: ப்ரோக்தோ ஜீவோ தேவ: ஸநாதந: |
த்யஜேத்–அஜ்ஞான நிர்மால்யம் ஸோ(அ)ஹம் பாவேந
பூஜயேத் ||

Koviloor Digital Library

இப்படி, அவனே நாம் என்றால் அவனிடம் எத்தனை அத்யந்த ப்ரேமை — அநுராகம் என்பது — இருக்க வேண்டும்? அத்யந்த பந்து என்று நாம் பல பேரிடம் ப்ரியமாக உறவுகொண்டாடினாலும் அதற்கெல்லாம் மேலே அத்யந்தமாக இருப்பது நமக்கு நாமேதானே?

ஆனால் இப்படி அந்த ச்லோகத்தைச் சொல்கிற ஸ்வல்ப நேரத்திற்கு வேண்டுமானால் நமக்கு அவனிடம் 'நானே அவன்' என்பதிலிருக்கிற அதி ப்ரேமை — அநுராக பக்தி — கொஞ்சம் ஏற்படலாமே தவிர அதையே ஸதாவும் maintain பண்ணுவது [நீட்டித்துக் காப்பது] முடியவில்லை. தற்காலத்தில் அந்த மாதிரி எல்லாரும் இருப்பதாக, அல்லது ஸுலபத்தில் இருந்துவிட முடியும் என்பதாகப் பேசுவது வெறும் புரளிதான்; விதிக்குக் கட்டுப்படாத அடங்காமைக்கு ராக பக்தி என்று பொய்யாகப் பேர் தருவதுதான்.

ஒப்புக் கொள்கிறேன்; அடி நாஸ்திகர் தவிர மற்ற ஜனங்கள் ஸகலருக்கும் பகவானிடம் ஸ்வல்பமாவது ஒரு ப்ரியம், ப்ரேமை இல்லாமல் போய்விடவில்லை. அந்த ப்ரியத்திற்கு effect இல்லாமலும் போய்விடவில்லை. இப்படி எல்லா தேசங்களிலும் இருக்கிறவர்களின் ராக பக்தி நல்லது பண்ணிக் கொண்டுதான் இருக்கும். ஆனால் அந்த நல்லதும் ஸ்வல்பமாகத்தான் இருக்கும். ஸ்வல்பமாக முதல் போட்டால் வருவாயும் ஸ்வல்பமாகத்தானே இருக்கும்?

விதி போட்டுக் கொடுத்துள்ள க்ரமமான வழிபாட்டிலே அந்த விதிகள், அதன்படி விதிக்கப்பட்ட மந்த்ர-ஸ்தோத்ராதிகள், உபசாராதிச் சடங்குகள், மடி-ஆசாரம் ஆகியனவே, நமக்கு ப்ரேமை இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு கணிசமான அளவுக்கு நல்லது பண்ணிவிடும். போகப் போக இந்த விதி முறைகளே நம்

Koviloor Digital Library

ஹ்ருதயத்தில் ஈச்வர ப்ரேமையை வளர்த்தும் கொடுத்து விடும்.

ஆனபடியால் பெரிய அளவில் நல்லது — லோக க்ஷேமம், ஆத்ம க்ஷேமம் — உண்டாக வேண்டுமானால் அடிப்படையான ப்ரேம பாவத்தோடு வைதேய பக்தியை விருத்தி செய்து கொள்வதுதான் தற்போது நாம் இருக்கப்பட்ட நிலைக்கு ஏற்றது. ஸ்வாமியோ கொஞ்சம் பேருக்குத்தான் விதி பார்த்துப் பண்ணமுடியாதபடி அந்தராத்மாவிலிருந்து அநுராகம் பீறிட்டுக் கொண்டுவந்து, பக்திப் பித்து, பக்தி போதை என்கிறார்களே, அப்படிப் பரமாத்மாவுடன் கலந்திருக்கும் மனப்பான்மையைக் கொடுத்து விளையாடுகிறார்! மற்றவர்கள் விதி ப்ரகாரம் வந்துள்ள ஸ்தோத்ர-மந்த்ராதிகள், சடங்குகள் ஆகியவற்றுக்கு அவற்றுக்கென்றே உள்ள தெய்விக சக்தியைக் கொண்டுதான் நம்முடைய ஸ்வல்ப அநுராகத்தால் கிடைக்கக்கூடிய ஸ்வல்ப அநுக்ரஹத்தை பலப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆக, 'பேஸிக்' ஆகக் கொஞ்சம் பக்தி பாவத்துடன் அநுஸரிக்கிற வைதேய பக்திதான் பெரும்பாலாருக்கு ஆனது.

இந்த வைதேய பக்தியில் ஒவ்வொரு தேசத்திலும் ஆங்காங்கு இருக்கிற மதத்தை அநுஸரித்து விதிகள் அமைத்திருக்கிற வழிபாட்டு க்ரமங்கள் இருக்கின்றன. அவற்றுக்கெல்லாமும் தெய்வாநுக்ரஹத்தைப் பெற்றுத் தருகிற சக்தி இல்லாமல் போகவில்லை. இருந்தாலும் வேத மந்த்ரங்களுக்கும், அவற்றைத் தழுவி ஆகம வழிபாட்டு க்ரமத்தில் வருகிற மந்த்ரங்கள், ஸ்தோத்ரங்கள், நாமாவளிகள், உபசார க்ரியைகள் ஆகியவற்றுக்கும் இந்த சக்தி விசேஷமாக இருக்கும்படி பகவான் வைத்திருக் கிறான். அதோடு இந்த பாரத தேசத்து மண்ணில்தான்

Koviloor Digital Library

அந்த சக்தி பூர்ணமாகப் பலன் தரும்படியும் வைத்திருக்கிறான். ஏனென்று கேட்டால் என்ன சொல்வது? ஏன் ஸ்விட்ஜர்லாண்டில் இத்தனை நல்ல க்ளைமேட்டை வைத்துவிட்டு ஸஹாராவில் பொசுக்கி எடுக்கிறான் என்றால் என்ன சொல்வது? ஒன்றும் சொல்லத் தெரியாவிட்டாலும் யதார்த்தத்தை ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்?

மந்த்ர வீர்யமானது முழுப் பலனையும் தருவது நம்முடைய தேசத்தில்தான் — கர்ம பூமி எனப்படும் இந்த பாரத தேசத்தில்தான். இங்கே கர்மா என்றால் மந்த்ரங்கள் ப்ரயோகமாகிற சாஸ்த்ர கர்மா என்றே அர்த்தம். அப்படிப்பட்ட இந்தக் கர்ம பூமியில் அந்த ஆத்மலிங்கமோ, ரங்கராஜ அர்ச்சையோ [விக்ரஹமோ] இருந்தால்தான் லங்கை உள்பட எல்லா தேசங்களுக்கும் அதிக க்ஷேமம் என்பதால்தான் விக்நேச்வரர் இப்படிச் செய்தது, தமது விகடமான ஸ்வபாவத்தால் வேடிக்கை, கோபம், அடி-தடி — குட்டுகிறது வேறே என்ன? — பரம அநுக்ரஹம் என்று எல்லாம் கலந்த நாடகமாக இதைச் செய்தார்.

இப்படி உபயகாவேரி மத்தியில் அவர் ப்ரஸாதித்த அந்த க்ஷேத்ரம் விஷ்ணு ஸ்தலங்களில் ப்ரதானமாகவும், காவேரி தீரத்திலுள்ள அத்தனை சோணாட்டு சிவ-விஷ்ணு ஆலயங்களுக்கும் மத்யமணி மாதிரியும் சிறப்புப் பெற்றுவிட்டது.....

கலாசார வளர்ச்சி கணேசராலேயே

தேவார ஸ்தலங்களைப் பற்றியும், திவ்ய ப்ரபந்த ஸ்தலங்களைப் பற்றியும் காவேரி ஸம்பந்தமாகச் சொன்னேன். இது தவிர, மூவர் பாடலோ, ஆழ்வார் பாடலோ இல்லாமல் காவேரி தீர ஊர்களில் எழும்பியிருக்கிற கோவில்களோ ஆயிரம் பதினாயிரம் என்று போகும். இம்மாதிரி, 'தெய்வத் தமிழ் நாடு'

Koviloor Digital Library

என்கிறபடி இதைக் கோவில் மயமாக்கி, பக்திக்கு த்ராவிடம்தான் தாய்நாடு என்று பாகவதாதி புராணங்களும் ஸ்தோத்ரிக்கும்படியான பெருமை ஏற்பட்டிருக்கிறதென்றால், அதற்கு ஒரு முக்யமான காரணம் இந்த நாட்டுக்குக் காவேரியை அநுக்ரஹித்த விக்நேச்வரர்தான்.

தெய்வத்தைத் தொட்டுக் கொண்டே மற்ற fine arts [ஸங்கீதம், நாட்டியம், சித்ரம்], plastic arts [சில்பம்], 'லிட்ரேசர்' [இலக்கியம்] எல்லாமும் அந்தப் பிராந்தியத்தில் விசேஷமாக உண்டாகி லோகத்திலேயே பெருமைப் படும்படியான நம்முடைய கலாசாரம் உருவாகியிருப்பது முடிவாக அவரால்தான்.

இப்படி ஒரு பெரிய உபகாரம் பண்ணியிருப்பவர் பிள்ளையார்.

அதிகபக்ஷ ஆலயம் கொண்டவர்

தமிழ்நாட்டுக்கு நிறையக் கோவில்களை அநுக்ரஹித்திருக்கிற அவருக்கே இந்தத் தமிழ் நாடும் ஏகப்பட்ட கோவில்கள் கட்டி வைத்திருக்கிறது. இங்கே வேறே எந்த ஸ்வாமிக்கும் இல்லாத அளவுக்குப் பிள்ளையாருக்குத்தான் மூலைக்கு மூலை கோவில்! தமிழ் நாட்டில் இருக்கிற அளவுக்கு இந்த பாரத தேசத்தில் பாக்கி அத்தனை மாகாணங்களிலுள்ள பிள்ளையார் கோவில் களைக் கூட்டினாலும் கணக்கு வராது! பிள்ளையாரையே முழுமுதற் தெய்வமாகக் கொண்ட காணபத்யத்துக்கு மஹாராஷ்டிரந்தான் ராஜதானி என்று சொல்வது. ஆனால் கோவில் கணக்குப் பார்த்தால் அதுவும் தமிழ் நாட்டுக்கு ரொம்பவும் பின்தங்கி எங்கேயோதான் நிற்கும்! முதலில் அவருக்கு 'நம்மவர்' என்று முத்ரை குத்தி ஆரம்பித்தேனே, அதுவே முக்யமாக இதை நினைத்துத்தான். ஆனால் உசந்த

Koviloor Digital Library

கலாசாரத்தைக் கொடுத்தவர் என்று சொல்லிவிட்டு, ‘நாங்க-நீங்க’ என்று பிரித்து பெருமை, உரிமை கொண்டாடிக் கொண்டு முத்ரை போடுவதே முரணாக இருக்கிறதாக இப்போது ‘ஞானம்’ பிறந்திருக்கிறது!

விநாயகரும் தமிழ் மொழியும்

கலாசாரத்தில் பாஷை முக்யம். அதை வைத்துத்தானே ஸமய ஸம்பந்தமான நூல்கள், அறிவை வளர்த்துக் கொடுக்கும் நூல்கள், மனஸுக்கு ரஞ்ஜகமான மற்ற கதை, கவிதை, காவ்யம், எல்லாம்? அப்படியிருக்கப் பட்ட தமிழ் பாஷைக்கு விக்நேச்வரர் ரொம்ப முக்யம். எது ஒன்று எழுத ஆரம்பித்தாலும், கடைக்கு ஸாமான் லிஸ்ட் எழுதினால்கூட ஸரி, முதலில் என்ன பண்ணுகிறோம்? ‘பிள்ளையார் சுழி’ என்றுதானே போடுகிறோம்? எடுத்துக்கொண்ட கார்யம் சுழித்துப் போகாமல் ரக்ஷித்துக் கொடுப்பதற்காக முதலில் பிள்ளையார் சுழி! ‘பிள்ளையார் சுழி’ என்ற அர்த்தத்தில் ஸம்ஸ்கிருதம் உள்பட இந்த தேச பாஷைகளில் வேறே எதிலும் இப்படி மங்களாரம்ப ஸிம்பலாக ஒன்று இல்லை. இது தமிழ் மொழியின் பாக்யம். ‘பாத்யதை’ என்று சொல்லி சண்டை கிளப்பாமல் ‘பாக்யம்’ என்று சொல்லி நமஸ்காரம் பண்ணுவோம்.

முத்தமிழை அவர் ஆதியிலேயே மேரு மலையில் எழுதியிருக்கிறாரென்று ஒரு அபூர்வமான தகவல் அருணகிரிநாதர் கொடுத்திருக்கிறார். திருப்புகழ் பாராயணம் ஆரம்பிக்கும்போது பாடும் ‘கைத்தல நிறைகனி’ பாட்டில்

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே

என்று ஒரே ‘மு’ மயமாக மோனை வைத்துப் பாடியிருக்கிறார். எவ்வளவோ தேடியும், விஷயம் தெரிந்த

Koviloor Digital Library

புலவர்களைக் கேட்டுங்கூட 'அல்யூஷன்' [பாடல் குறிக்கும் பூர்வ கதை] அகப்படவில்லை*. ஆகக்கூடி, வ்யாஸருக்காக பாரதம் எழுதுவதற்கு முந்தியே, 'முற்பட' என்று பாட்டில் வ்ருகிறதற்கேற்க, பிள்ளையார் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் நூல்களை எழுதினதாக ஏற்படுகிறது.

படிக்க ஆரம்பித்தவுடனே நாம் கற்றுக் கொள்வது ஒளவைப் பாட்டி உபதேசங்களைத்தான். அந்தப் பாட்டி யாரென்றால் பிள்ளையாரின் பரம பக்தைதான். வாக்கு உண்டாகிறதற்கே பிள்ளையார் பாதத்தைத்தான் பிடித்தாகணும் என்று அவள் கற்றுக் கொடுத்து நாம் குழந்தையாயிருக்கும்போதே பாடம் பண்ணுகிறோம்: '**வாக்குண்டாம்**': வாக்கு உண்டாகும். வாக்கு மட்டுந்தானா? சும்மாவுக்காக வாக்கு-பேச்சு அழகாக ஜோடித்து விட்டால் போதுமா? நல்ல மனஸைப் பெற்று அந்த மனஸிலிருக்கிற நல்ல எண்ணங்கள், கருத்துகள் வாக்கில் வந்தால்தானே நமக்கும் புண்யம், பிறத்தியாருக்கும் உபகாரம்? அந்த நல்ல மனஸு, இன்னும் வாழ்க்கை ஸௌக்யமாக அமைவதற்குத் தேவையான லக்ஷ்மி கடாக்ஷம் எல்லாமே ஒரே குறியாக — 'தப்பாமல்' என்று போட்டிருக்கிறாள்; அவள்தான் போட்டாளோ, அதுவேதான் விழுந்ததோ? ஒரே குறியாக — அவர் பாதத்தைப் புஷ்பார்ச்சனை பண்ணிப் பிடித்துவிட்டவர்களுக்குக் கிடைத்துவிடும் என்று அந்தப் பாட்டி நமக்குப் பாடிக் கொடுத்திருக்கிறாள்.

வாக்குண்டாம், நல்ல மனம் உண்டாம், மாமலராள்
நோக்குண்டாம், மேனி நுடங்காது பூக்கொண்டு

* ஸ்ரீசரணர்கள் பணித்ததன் பேரில் திருமுருக கிருபாநந்த வாரியார் அவர்களைக் கேட்க, ஆதியில் அகஸ்தியர் முத்தமிழ் நூல்கள் இயற்றியவுடன் அவற்றை ஓத, விநாயகர் மேரு மலையில் தமது தந்தத்தால் பொறித்து வைத்ததாகவும், இவ் வரலாறு புராணங்கள் எதிலும் இடம் பெறாமல் கர்ண பரம்பரைக் கதையாகவே வந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

Koviloor Digital Library

துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

'மேனி நுடங்காது' என்றால் 'சரீரத்தைக் கஷ்டப் படுத்திக் கொள்ளாமல்' என்று அர்த்தம். 'பிள்ளையாரை உபாஸிக்கிறதற்குப் பெரிசாக ஒன்றும் ஹடயோகம், பட்டினி உபவாஸமெல்லாம் வேண்டாம். உடம்பை சிரமப் படுத்திக் கொள்ளாமல் நாலு பூவைப் பறித்துப் போட்டுவிட்டாலே போதும்' என்கிறாள். 'துப்பார் திருமேனி' என்றால் பவளம் மாதிரிச் செக்கச் செவேலென்று அவர் சரீரம் இருப்பதாக அர்த்தம். **'பவளம் போல் மேனி'** என்று அப்பர் ஸ்வாமிகள் நடராஜாவைச் சொன்னாற்போலவே அந்த அப்பனுடைய பிள்ளையும் இருக்கிறார்! ஆனால் 'தாயைப் போலப் பிள்ளை' என்றுதானே வசனம் என்றால் அந்தத் தாயாரும் நம்முடைய காமாக்ஷியாயிருக்கிறபோது செக்கச் செவேல் தான்!

வாக்கு–மனங்களுக்கு அருள்:
தர்மத்திலிருந்து மோக்ஷம் வரை

ஜீவராசிகளை லக்ஷக்கணக்கான இனமாக ஸ்ருஷ்டித் திருக்கிற ஈச்வரன் இந்த மநுஷ்ய ஜாதிக்கு மாத்திரம் கொடுத்திருக்கிறது வாக்கு. அந்த வாக்கை உண்டாக்குகிறவர் விக்நேச்வரர் என்றே தமிழ்ப் பாட்டி தமிழ்க் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறாள். **'வாக்குண்டாம்'** என்று அவள் ஆரம்பித்ததே அந்த நூலுக்குப் பெயராகிவிட்டது! புலவர்கள் மட்டும் அதை **'மூதுரை'** என்கிறார்கள்.

வாக்கு மாதிரியே, நல்ல மனஸு, கெட்ட மனஸு என்று பிரிக்க முடியாமல், 'இன்ஸ்டிங்க்டி'ன் மேலேயே, ஏதோ ஒரு உள்ளுணர்ச்சி, ஒவ்வொரு இயற்கை வேகங்கள்,

Koviloor Digital Library

இவற்றின் மேலேயே பாக்கி அத்தனை ப்ராணி வர்க்கமும் ஜீவித்துக் கொண்டிருக்க, இந்த மநுஷ்ய ஜாதிக்கு மாத்திரமே நல்லது, கெட்டது என்று பாகுபடுத்திக் கொள்ள சக்தியும், அதிலே ஏதோ ஒன்றில் போகிற ஸ்வதந்திரமும் படைத்த மனஸை ஈச்வரன் கொடுத்திருக் கிறார். இதில் மனஸு நல்லதிலேயே போகும்படியாக, **'நல்ல மனம் உண்டாம்'** என்னும்படியாக அநுக்ரஹிக்கிறவர் விக்நேச்வரர்தான் என்று குழந்தைப் பிராயத்திலேயே தமிழ் மக்களுக்கு ஒளவைப் பாட்டி காட்டிக் கொடுத்திருக்கிறாள்.

நல்லதாக நம்முடைய மனஸ் உருவாகி, அது நல்ல வாக்காகவே பேசணுமானால் அதற்கு மனோ வாக்குகள் போக வேண்டிய நல்ல வழியைத் தெரிவிக்க வேணும். அந்த நல்ல வழிக்குத்தான் தர்ம மார்க்கம் என்று பெயர். அந்த மார்க்கத்திற்கு route map போட்டுக் கொடுப்பதாக **'நல்வழி'** என்றும் ஒரு உபதேச நூல் அந்தப் பாட்டி கொடுத்திருக் கிறாள். அதிலேயும் ஆரம்பத்தில் விக்நேச்வரரைத்தான் ப்ரார்த்திக்கிறாள். அதுதான் **'பாலும் தெளிதேனும்'** [பாடல்]. "நான் ஒனக்கு நாலு வஸ்து தரேன். பதிலுக்கு எனக்கு நீ மூணு குடுத்தா போறும். பால், தேன், பாகு, பருப்பு நாலையும் கலந்து ஒனக்கு நான் தரேன். நீ, நான் நல்ல வழியை எடுத்துச் சொல்றதுக்கு உபாயமாக இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ்-ங்கிற மூணு குடுத்தா போறும்"னு வேடிக்கையாகப் பாடியிருக்கிறாள். குழந்தை ஸ்வாமியோல்லியோ? அதனாலே, வேடிக்கையாகக் கணக்குக் காட்டி ஏமாற்றி விடலாம் என்று!

இங்கே அவள் பிள்ளையாரிடம் முத்தமிழ் யாசிக்கிற தற்கு, அவர் மேரு மலையில் முத்தமிழ் எழுதி வைத்தாரென்று அருணகிரிநாதர் சொல்வது ஒத்துப் போகிறது. ஆகையினால் அந்தக் கதை 'ஆதென்டிக்'தான் என்று நிச்சயமாகிறது. 'நல்வழி' என்பதைத்தான் 'ஸத்கதி'

Koviloor Digital Library

என்கிறது. நல்வழியில் போய் லோக வாழ்க்கையை நல்லபடியாக வாழ்கிறதோடு ஸத்கதி முடியவில்லை. வாழ்க்கை போதும் என்று ஆகிறபோது "சற்கதி பெற வேணும்" என்று மஹான்கள் பிரார்த்தித்திருக்கிறார்களே, அந்த 'சற்கதி' என்பதுதான் முடிவான ஸத்கதி — மோக்ஷ மார்க்கம்.

தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்பதில் தர்ம மார்க்கத்தில் ஆரம்பிப்பது முடிவாக மோக்ஷ மார்க்கத்தில் பூர்த்தியாகணும். அந்த நல்வழியில் ஔவையாரைத் தூக்கிக் கொண்டு போய் கைலாஸத்தில் பார்வதி-பரமேச்வரா ளிடம் சேர்ப்பித்ததும் பிள்ளையார்தான்.

ஔவை கயிலை சேர்ந்தது : ஸுந்தரர் சரிதத் தொடர்பு

ஸுந்தரமூர்த்தி நாயனார் கதையோடு சேர்த்து அப்படிச் சொல்கிறது. என்ன கதையென்றால்:

மலையாள தேசத்தை ஆண்டு கொண்டிருந்த சேர ராஜா ...... சேரமான் பெருமாள் என்றேதான் அவருக்குப் பெயர் சொல்வது. திருமாக்கோதையார் என்பதே அவருடைய இயற்பெயர். அவர் ஸுந்தரமூர்த்திக்கு ரொம்பவும் ஆப்தம். அவருடைய தலைநகர் திருவஞ்சைக்களம். அங்கே அவரோடு தங்கியிருந்த ஸுந்தரமூர்த்தி ஒரு நாள் சேரமான் பெருமாள் ஸ்நானத்திற்குப் போயிருந்தபோது தாம் மட்டும் கோவிலுக்குப் போனார். ஸ்வாமி தர்சனம் பண்ணின வுடன் ஒரேயடியாக விரக்தி வந்து, **"வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன்"** என்று கதறிப் பதிகம் பாடினார். இந்த பூலோகத்திலே அவர் கடைசியாகப் பாடின **"தலைக்குத் தலை மாலை அணிந்ததென்னே ?"**

Koviloor Digital Library

என்ற பதிகத்தில் அப்படிச் சொல்லி முறையிட்டிருக்கிறார்... "பூலோகத்திலே பாடின" என்று சொல்வானேனென்றால், அதற்கப்புறம் அவர் கைலாஸத்திற்குப் போகிறபோது ஆகாச வீதியிலிருந்தும் ஒரு பதிகம், **"தான் எனை முன் படைத்தான்"** என்று ஆரம்பித்துப் பாடினார்...

அதற்கு முந்தித்தான் ரொம்ப விரக்தியாக அவர் பாடினது. இங்கே அவர் பாட, அங்கே கைலாஸத்தில் ஸ்வாமி அதைக் கேட்டு மனஸ் இரங்கினார். பிரம்மாதி தேவர்களைப் பார்த்து, "ஸுந்தரம் என்கிட்டே திரும்பணும்னு துடிச்சுண்டிருக்கான். நீங்கள்ளாம் ஐராவதத்தோட — அதுதான் இந்திரனுடைய பட்டத்து யானை; பாற்கடலைக் கடைந்தபோது உண்டானது; நாலு தந்தத்தோடே வெள்ளை வேளேரென்று இருக்கும்; அதனுடன் — அஞ்சைக்களம் போய் ஸுந்தரத்தை அதுமேலே ஏத்தி, மரியாதை பண்ணி சட்னு அழைச்சுண்டு வாங்கோ!" என்றார்.

மெய்யடியார்கள் என்கிற நிஜ பக்தர்களுக்கு ஸ்வாமி ப்ரம்மாதி தேவர்களும் மரியாதை தரும்படியான ஸ்தானம் தருகிறார்!

அவர்களும் அப்படியே போய் ஸுந்தரமூர்த்தியை ஐராவதத்து மேலே ஏற்றி அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

ஸ்நானம் முடித்து வந்த சேரமான், ஆகாச வீதியில் அவர்கள் போவதைப் பார்த்து, 'என்னடாது! அத்தனை ஆப்தமாயிருந்தவர் ஒரு வார்த்தை சொல்லாமப் பொறப்பட்டுட்டாரே!' என்று தவித்துக் கொண்டு குதிரை மேலே ஏறிக் கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்தார். கொஞ்ச தூரம் போனதும் அவர்களைப் பிடித்துவிட்டார்.

போகிற வழியிலே கீழே பூமியிலே ஔவையார் பிள்ளையார் பூஜையில் உட்கார்ந்திருப்பதை ஸுந்தர

Koviloor Digital Library

மூர்த்தியும் சேரமானும் பார்த்தார்கள். "நீயும் எங்களோட கைலாஸத்துக்குக் கிளம்பேன்" என்றார்கள்.

"எடுத்துண்ட பூஜையை மொதல்ல முடிச்சாகணும். அப்பறந்தான் மத்த எல்லாம்; கைலாஸமானாலும் ஸரி!" என்று அவள் ஸஹஜமாகச் சொல்லி அவர்களை அனுப்பி விட்டு, பூஜையை நிதானமாக விதிவத்தாகப் பண்ணி முடித்தாள்.

பிள்ளையாரிடம் ராக பக்தி அப்படியே நிரம்பிய உபாஸகியான ஒளவை இப்படி வைதேய பக்திக்கு மதிப்புக் கொடுத்துச் சொன்னதை கவனிக்கணும்.

வேடிக்கை பார்க்கணுமென்று நினைத்த பிள்ளையார் அன்றைக்கு அவள் நிவேதனம் பண்ணியிருந்த 'நாலும் கலந்த' நைவேத்யத்தை ரொம்ப ரொம்ப நிதானமாகச் சாப்பிட்டு ஏகமாக 'டிலே' பண்ணினார்.

அதற்காக அவள் ஒன்றும் கலங்கிவிடவில்லை. ஏனென்றால் மனங் கலங்காத யோக ஸமாதியை அவளுக்கு எப்பவுமே உள்ளூர அந்த விக்நேச்வரரே அநுக்ரஹித் திருந்தார்!

நின்று நிதானமாகச் சாப்பிட்ட அப்புறம் பிள்ளையார், "ஒனக்குக் கைலாஸத்துக்குத்தானே போகணும்? போறதுக்கு முன்னாடி நீ ஒண்ணு பண்ணணும். ஒலகத்துல இருந்த மட்டும் ஒலகத்துக் கொழந்தைகளுக்காக நெறய்ய பாடிக் குடுத்தே! அதுவே எனக்கு ப்ரீதிதான். இருந்தாலும் தெய்வக் கொழந்தையான என்னைப் பத்தியே ஒரு முழுப்பாட்டும் நீ பாடிக் குடுக்கணும். அப்புறந்தான் கைலாஸ ப்ராப்திக்கு ஆனதைப் பண்ணுவேன்" என்றார்.

அதற்கு ஒளவைப் பாட்டி, "எனக்கு நீ இருக்கிற எடமே கைலாஸந்தான். ஆனாலும் நீ எனக்கு லோக வாழ்க்கை போறும்னு நெனச்சுக் கைலாஸத்துல சேக்க

Koviloor Digital Library

நெனப்பியானா அதுவும் ஸரி. நீ எப்படிப் பண்ணினாலும் ஸரி. ஒன்னைப் பாடணும்னியே, பேஷாப் பாடறேன். ஆனா கைலாஸம் போறதுக்காகவோ, வேறே எதுக்காகவோ பாடலை, ஒன்னைப் பாடறதே மோக்ஷானந்தம்-கிறதுக் காகவே பாடறேன்'' என்று சொல்லிவிட்டு, உள்ளூர அவளுக்கு ஸதா காலமும் அவர் அநுக்ரஹத்தால் ஏற்பட்டிருந்த யோக ஸித்தியுடைய மஹிமை லோகத்துக்கெல்லாம் தெரிகிறமாதிரி அவரைப் பற்றி ஒரு ஸ்தோத்ரம் பாடினாள். அதுதான் **'விநாயகர் அகவல்'**.

பாடி முடித்ததும் பிள்ளையார் அவளை அப்படியே தும்பிக்கை நுனியாலே வளைத்துப் பிடித்துத் தூக்கி அந்தத் தும்பிக்கையை அப்படியே நீட்டி, நீட்டி, ஒரே நீட்டாகக் கைலாஸம் வரைக்கும் நீட்டி நேரே ஈச்வர ஸந்நிதானத்திலேயே சேர்த்து விட்டார்!

அவள் அங்கே போனதற்கு அப்புறந்தான் ஸுந்தர மூர்த்தி ஸ்வாமிகளும் சேரமான் பெருமாள் நாயனாரும் வந்து சேர்ந்தார்கள். தடியை ஊன்றிக் கொண்டு நடக்கிற தொண்டு கிழவி எப்படியடா நமக்கு முன்னாடி வந்திருக்கிறாளென்று அவர்களுக்கு ஒரே ஆச்சர்யமாகி விட்டது. ஸுந்தரர் தெய்விகமான யானை மேலே வந்ததால் அதிவேகமாக வந்தார். சேரமான் பெருமாளோ பஞ்சாக்ஷரத்தைக் குதிரை காதிலே சொன்னதால் அவருக்கிருந்த மந்த்ர ஸித்தியினாலே அந்தக் குதிரை யானைக்கும் முன்னாலே 'பைலட் கார்' மாதிரிப் போயிற்று! ராஜா இப்படிப் பைலட்டாகப் புறப்பட்டு ஆகாச மார்க்கமாகப் போகிறதைப் பார்த்த அவருடைய 'பைலட்'கள் — அவர்களெல்லாம் குதிரை வீரர்கள் — யஜமான விச்வாஸத்தில், அவரைப் பிரிந்து தாங்கள் உயிர் வாழ்வதா என்று அத்தனை பேரும் தங்களைத் தாங்களே உடைவாளினால் ஹத்தி பண்ணிக் கொண்டு விட்டார்கள். அந்த த்யாக சக்தியினாலே அவர்களுக்கு 'வீர யாக்கை'

Koviloor Digital Library

கிடைத்ததாகச் சொல்லியிருக்கிறது[1]. அதாவது, தர்ம யுத்தம் செய்து செத்துப் போகிற சுத்த வீரர்களுக்குக் கிடைக்கிற திவ்ய சரீரம் கிடைத்ததாம். அந்த சரீரத்தோடு அவர்கள் அப்படியே ஆகாசத்தில் எழும்பித் தங்கள் ராஜாவுக்கும் முன்னாடி அவரைப் பைலட் பண்ணிக் கொண்டு கைலாஸத்திற்குப் போனார்கள்.

ஸ்வாமியை விட்டுப் பிரிந்திருக்க முடியாத ஸுந்தரர் யானை மேல்; அவரை விட்டுப் பிரிந்திருக்க முடியாத சேரமான் அவ்ருக்கு முந்தி, குதிரை மேல்; சேரமானை விட்டுப் பிரிந்திருக்க முடியாத சேவகர்கள் அவருக்கும் முந்தி, ஸூக்ஷ்ம சரீரத்தில்! இந்த எல்லாருக்கும் முந்தி குடுகுடு பாட்டி நர சரீரத்திலேயே! ஸுந்தரரும் சேரமானுங் கூட அப்படி (நரசரீரத்திலேயே) போனவர்கள் தான்.

அவளை அங்கே பார்த்து ஆச்சரியப்பட்ட அந்த இரண்டு பேரும், "என்னமா எங்களுக்கு முன்னாடி வந்தே?" என்று கேட்டார்கள்.

பாட்டி சொன்னாள்: "என்னமாவா? நன்னாக் கேட்டேள்! ஸாக்ஷாத் பராசக்தியோட தலைப் பிள்ளை ஒருத்தன் இருக்கானே, மதுரமொழி உமைபாலன், அவன் சரணாரவிந்தமே த்யானமாக இருப்பவர்களுக்கு எந்த ரத, கஜ, துரக, பதாதியும் காத தூரம் பின்தங்கித்தான் வரணும்!" என்று பாட்டாகவே சொன்னாள். ஸரியாக ஞாபகமில்லை. "குதிரையும் காதம், கிழவியும் காதம் குல மன்னனே!" என்று முடியும்[2]. ஸ்வாமிக்கே தோழராக

1. பெரிய புராணம், வெள்ளானைச் சருக்கம், 37
2. மதுரமொழி நல்உமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினைய வல்லார்க்(கு) அரிதோ? முகில்போல் முழங்கி
அதிர வருகின்ற யானையும் தேரும் அதன் பின்சென்ற
குதிரையும் காதம், கிழவியும் காதம், குல மன்னனே!

Koviloor Digital Library

இருந்து அவரையும் ஏவி வேலை வாங்கின ஸுந்தர மூர்த்தியிடம் அப்படிச் சொல்வது மரியாதையாகாது என்பதால் சேரமான் பெருமாளைப் பார்த்துக் 'குல மன்னனே!' என்று பாடினாள்.

நால்வருக்கும் விநாயகர் அருள்

அந்த ஸுந்தரமூர்த்திக்கும் பிள்ளையார் அநேக அநுக்ரஹங்கள் பண்ணியிருக்கிறார். அவருக்கு மாத்திரம் இல்லை; 'நால்வர்' என்று சிறப்பித்துச் சொல்கிற அப்பர், ஸம்பந்தர், ஸுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நாலு மஹாபெரியவர்களுக்குமே ஒவ்வொரு ஸமயத்தில் விக்நேச்வரர் அருள் புரிந்திருக்கிறார்...

இங்கே ஒரு புலவர் வந்து விக்நேச்வரரைப் பற்றி ஒரு பழைய தமிழ்த் துதி பாடினார். "மூத்த நாயனார் திருவிரட்டை (திரு இரட்டை) மணி மாலை" என்று அதற்குப் பெயர். அதிலே ஒரு இடத்திலே, பிள்ளையாருக்கு ஒற்றைத் தந்தம், இரட்டைக் காது, மூன்று கண் என்று வருகிறது — **'ஒரு கோடு, இரு செவி, முக்கண்'** என்று*. பாடியவர் நல்ல புலவர் ஆனதினால், " 'ஒண்ணு, ரெண்டு, மூணு' என்கிறதோடே முடிக்காமல், நாலாவதாக 'நால்வாய்' என்றும் சேர்த்திருக்கலாம்" என்றார்.

நால்வாய் என்றால், "பிள்ளையாருக்கு ஏது நாலு வாய்?" என்று தோன்றும். இங்கே 'நால்' என்பது எண்ணிக்கை இல்லை. 'நாலுதல்' என்றால் 'தொங்குவது' என்று அர்த்தம். யானை வாயைப் பார்த்தீர்களானால் தெரியும். அது தொளதொள என்று தொங்குகிறாற் போலத்தான் இருக்கும். அதனால் யானைக்கு நால்வாய் என்று ஒரு பேர். பிள்ளையார் யானைதானே?

* பாடல், 18

Koviloor Digital Library

'நால்வாய்' என்று அவர் சொன்னதும் எனக்கு நாலு பேருடைய வாய் நினைவு வந்தது. யார் அந்த நாலு பேர் என்றால் நமக்கு சிவ பக்தியையும் தமிழையும் ஒரு சேர வளர்த்துக் கொடுத்திருக்கிற நால்வர்தான். தேவார திருவாசகங்களைக் கொண்டு தமிழால் சிவ பக்தியையும், சிவ பக்தியால் தமிழையும் வளர்த்துத் தந்தது அவர்களுடைய வாய்தானே? அந்த நால் வாயை நினைத்துக் கொண்டேன். அப்புறம் அந்த நால்வாய்க்கும் இந்த நால்வாய்க்கும் இருக்கிற ஸம்பந்தங்களை ஞாபகப்படுத்திக் கொண்டு பார்த்தேன். அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்லலாம் என்று [நினைக்கிறேன்].

சம்பந்தருடன் சம்பந்தம்

ஸம்பந்தத்தைச் சொன்னேன்; ஸம்பந்தரோடேயே ஆரம்பிக்கிறேன். அவர் குமாரஸ்வாமி அவதாரம். அண்ணாக்காரரையும் அவரையும் பிரிக்கவே படாது என்றும் சொன்னேனோல்லியோ? அதோடு திருமுறை களிலேயே நூல்களை வரிசைப்படுத்தும்போது ஸம்பந்தரில் தான் ஆரம்பித்து, அப்புறம் அப்பர், அப்புறம் ஸுந்தரர் என்று போயிருக்கிறது.

தேரழுந்தூர் என்று கேள்விப்பட்டிருக்கலாம். தமிழில் கவிச் சக்கரவர்த்தி என்கிற கம்பன் பிறந்த ஊர். 'அழுந்தை மறையோர்' என்று பாட்டுக்குப் பாட்டு அங்கே விசேஷமாக வைதிகாசாரத்தை வளர்த்து வந்த பிராம்மணர்களை ஞானஸம்பந்தர் தம்முடைய பதிகம் நெடுகப் போற்றியிருக்கிறார். அங்கே ஸ்வாமிக்கு வேதபுரீச்வரர் என்றே பேராயிருப்பதால் ஊருக்கே வேதபுரி என்று இன்னொரு பேர் இருந்திருக்கணும். அந்த வேதபுரியில்தான் தமிழின் சக்கரவர்த்திக் கவி பிறந்திருக்கிறார்! அங்கே ஞானஸம்பந்த விநாயகர் என்றே ஒரு பிள்ளையார் இருக்கிறார்.

Koviloor Digital Library

ஸம்பந்தரின் பாடல் பெற்ற அந்த ஸ்தலம் வைஷ்ணவர்களின் திவ்ய தேசத்திலும் ஒன்று. ஆமருவியப்பன் என்றும் கோஸகர் என்றும் ப்ரக்யாதி வாய்ந்த பெருமாள் அந்த ஊரில் கோவில் கொண்டிருக்கிறார்.

ஸம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள் அந்த ஊருக்குப் போனபோது இரண்டு பக்கங்களில் இரண்டு கோபுரங்கள் தெரிந்தது. ஒன்று ஈச்வரன் கோவில். இன்னொன்று பெருமாள் கோவில். அனன்யமான பக்தியை — அதாவது, ஒரு தெய்வத்திடம் மட்டுமே மனஸைப் பூர்ணமாக அர்ப்பணித்துச் செய்கிற பக்தியை — ஈச்வரனிடமே வைக்க வேண்டுமென்றுதான் அவருக்கு அதிகாரம். சிவ பக்தியை வளர்த்துக் கொடுக்கவே அதிகார புருஷராக அவதாரம் செய்திருந்தவர் அவர். அதனால் கண்ணுக்குத் தெரிந்த இரண்டு கோவிலில் எது சிவாலயம் என்று தெரியாமல் அவர் கொஞ்சம் குழம்பினார். அப்போது இந்தப் பிள்ளையார்தான் அவருக்குக் கோவிலை அடையாளம் காட்டினார். அதனால் 'வழிகாட்டி விநாயகர்' என்றும் அவருக்கு ஒரு பெயர் ஏற்பட்டிருக்கிறது.

ரொம்பவும் ஸந்தோஷத்துடன் சிவாலயம் சென்று பதிகம் பாடின ஸம்பந்தர் ஸ்வாமியிடம், "எனக்கு வழிகாட்டியது பிள்ளையார்தான் என்று என்றென்றைக்கும் லோகம் நினைவு வைத்துக் கொள்ளும்படியாக அவருக்கு என் பெயரையே சூட்ட வேணும். அதோடு, நீங்கள் ஆர்த்ரா [ஆருத்ரா] தர்சனமும் அந்த ஸந்நிதியில்தான் மண்டகப்படி நடத்திக் கொள்ள வேண்டும்" என்று வரம் கேட்டு வாங்கிக்கொண்டார்.

அதனால்தான் அங்கே அந்தப் பிள்ளையாருக்கு 'ஆளுடைய பிள்ளையார்' என்றே சொல்லப்படும் ஞானஸம்பந்தரின் பேர். அந்த ஊர் சிவன் கோவில்

Koviloor Digital Library

நடராஜாவுக்குத் திருவாதிரையின் போது இன்றைக்கும் அங்கேதான் ஆர்த்ரா தர்சன வைபவம் நடத்தப்படுகிறது.

அப்பர் ஸ்வாமிகளுடன்

ஸம்பந்தரை விக்நேச்வரருடன் ஸம்பந்தப்படுத்தும் இன்னும் இரண்டு ஸம்பவங்களில் அப்பர் ஸ்வாமிகளும் ஸம்பந்தப்பட்டிருக்கிறார்.

அந்த இரண்டு தேவாரகர்த்தாக்களும் ஸம காலத்தவர்கள். ஸம்பந்தருக்கு அப்பர் 'ஸீனியர் கான்டெம்பரரி'. இரண்டு பேருக்கும் பரஸ்பரம் அபார ப்ரியமும் மரியாதையும். சேர்ந்து சேர்ந்தே அநேக க்ஷேத்ரங்களுக்குப் போயிருக்கிறார்கள். அந்த ஊர்களில் இருந்த ஜனங்களுக்கு அப்படியொரு பெரிய பாக்யம், சிவ பக்தியிலேயே ஊறிப் பழுத்த பழம் அப்பர், பிஞ்சிலேயே பழுத்த ஸம்பந்தமூர்த்திகள் இரண்டு பேரையும் சேர்த்து தர்சிக்கும்படியாக!

அந்த மாதிரி அவர்கள் திருவீழிமிழலை என்ற மஹாக்ஷேத்ரத்திற்குச் சேர்ந்து போனார்கள். அவர்கள் வந்ததில் ஊராருக்கு ரொம்பவும் ஸந்தோஷந்தான். ஆனாலும் அந்த ஸந்தோஷத்தைக் கொஞ்சம் பங்கப்படுத்து வதாக அப்போது அங்கே கடுமையான பஞ்சம் ஏற்பட்டிருந்தது.

தன–தான்யம் என்கிறது [வழக்கம்]. தான்யத்திற்கு இந்த மாதிரிப் பஞ்சம் வந்தாலும், தனஸம்ருத்தி [செல்வச் செழிப்பு] இருந்தால் வெளியூர்களிலிருந்து தான்யங்கள் கொள்முதல் செய்து கொண்டு ஸமாளித்து விடலாமோன்னோ? அதனால், ஜனங்களின் கஷ்டத்தைப் பார்த்து மனஸுருகிய அந்த இரண்டு பேரும் ஈச்வரனிடம் பொன் கேட்டுப் பிரார்த்தித்தார்கள். பொன்னாசையைத்

Koviloor Digital Library

தள்ளின இரண்டு பேரும் லோகோபகாரத்திற்காக அப்படிக் கேட்டுக் கொண்டார்கள். ஸ்வாமியும் இரண்டு பலிபீடங்களில் அவர்களுக்குப் பொன் வைத்தார். 'படிக்காசு' என்ற நாணய ரூபத்தில் பொன்னை வைத்தார்.

ஸம்ஸ்கிருத விரோதம்

ஒரு ஊரிலே ஏழைகள் 'பஞ்சம்; பணம் வேணும்' என்று சீஃப் மினிஸ்டருக்கு, முதன் மந்திரி என்கிறார்களே அவருக்கு........ இல்லை, இப்போது அதை முதலமைச்சர் என்று ஆக்கியிருக்கிறார்கள். எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது! ஸம்ஸ்கிருதத்தை அடித்துத் துரத்தி விட்டால் அதுவே தமிழ் வளர்ச்சி என்பதாக இப்போது ஒரு 'நல்ல' கொள்கை நடைமுறைக்கு வந்திருக்கிறது! அடித்துத் துரத்தும் தலைவர்களில் ஆரம்பித்து இப்படித் தனித் தமிழ் முழக்கம் செய்பவர்களில் எத்தனை பேருக்குத் தமிழிலக்கியத்தில் — தெய்வஸம்பந்தமான இலக்கியம் கூடாது என்றே வைத்து விட்டாலும், 'ஸெக்யூலர் லிட்ரேசரா'கவே வைக்கப்பட்ட தமிழிலக்கியத்தில் திருக்குறள், திருக்குறள் என்கிறார்களே, அதில்கூடப் பரிசயம் இருக்கிறது என்று பார்த்தால், ஒரு பெர்ஸென்ட், இரண்டு பெர்ஸென்ட் தேறுமா என்பதே ஸந்தேஹம் என்று தெரிகிறது. ஆனாலும் ஸம்ஸ்கிருதத்தை அடித்துத் துரத்த வேண்டும் என்று மட்டும் அநேகமாக நூறு பெர்ஸன்ட்காரர்களும் முஸ்தீபாக இருக்கிறார்கள்! அந்த ஸம்ஸ்கிருதம் என்னமோ இவர்கள் அடித்துத் துரத்தினதாக நினைக்கிற இடங்களிலும் இவர்களுக்கே தெரியாமல் வந்து பூந்து [புகுந்து] கொள்கிறது! 'அமைச்சர்' ஸமாசாரம் இப்படித்தான். 'மந்திரி [என்ற சொல்] ஸம்ஸ்க்ருதம். அது கூடாது' என்று 'அமைச்ச'ராக்கினால் அந்த 'அமைச்ச'ரும் 'அமாத்யர்' என்ற ஸம்ஸ்கிருத வார்த்தையின் திரிபுதான்!

Koviloor Digital Library

'த்த', 'த்ய' என்பவை தமிழில் 'ச்ச' என்று மாறும். 'தகரத்துக்குச் சகரம் போலி' என்று புலவர்கள் விதியே காட்டுவார்கள். மைத்துனன் – மச்சினன்; பித்தன் – பிச்சன் இத்யாதி பார்க்கிறோம். பேச்சு வழக்கிலே, 'வைத்து', 'புளித்து' என்ற மாதிரி உள்ள வார்த்தைகளையெல்லாமே, 'வெச்சு', 'புளிச்சு' என்றெல்லாந்தானே சொல்கிறோம்? அந்த ரீதியில்தான் சப்தங்கள் மாறி மாறி ஸம்ஸ்க்ருத அமாத்யரே தமிழில் முதலில் அமாத்தராகி அப்புறம் அமைச்சரானது!

ஸமீபத்தில் 'மனிதநேயம்' என்று ஒரு வார்த்தை உலாத்துகிறதாகப் பார்க்கிறேன். நல்ல வார்த்தைதான். காதுக்குக் கேட்கவும் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனாலும் 'மனிதாபிமானம்' என்று இத்தனை நாளாகச் சொல்லி வந்ததில் 'அபிமானம்' என்ற ஸம்ஸ்கிருத வார்த்தை இருப்பது பிடிக்காமல்தான் இப்படி மாற்றியிருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கும் போது பரிஹாஸமாகத்தான் இருக்கிறது! ஏனென்றால், 'நேயம்' என்பதும் ஸம்ஸ்கிருத 'ஸ்நேஹ'த்தின் திரிபுதான்! ஸம்ஸ்கிருதம் என்பது இலக்கண சுத்தமான பாஷை. அதையே பேச்சுக் கொச்சையாக இருக்கும்போது ப்ராக்ருதம் என்பார்கள். அந்த ப்ராக்ருத பாஷையில்தான் ஸம்ஸ்கிருதத்தில் உள்ள நாடகங்களில் ஸ்த்ரீகள், படிப்பில்லாதவர்கள் ஆகியவர்கள் ஸம்பாஷிப்பார்கள். அதிலே 'ஸ்நேஹம்' என்பது 'நேயம்' என்றுதான் வரும். அது போகட்டும்; 'மனிதநேயம்' என்கிறதிலும் முதலில் மனித என்று வைத்துக் கொண்டிருக்கிறார்களே, அதுவும் ஸம்ஸ்கிருத 'மநுஷ்ய'வின் திரிபுதானே? இதே மாதிரிதான் 'நீதிபதி' என்பதிலும் 'நீதி' என்ற ஸம்ஸ்கிருத வார்த்தையை அப்படியே வைத்துக் கொண்டு, 'பதி' மட்டுந்தான் ஸம்ஸ்கிருதம் என்று நினைத்து விரட்டிவிட்டு 'நீதியரசர்' என்று போடுவதாகத் தெரிகிறது. இந்த 'அரச' என்பதும், இன்னும் 'அரைய', 'இராய'

Koviloor Digital Library

என்கிறதெல்லாமுங்கூட 'ராஜ' என்ற ஸம்ஸ்கிருத வார்த்தையின் திரிபுகள்தான். 'மன்னன்', 'கோ' என்கிறவை தான் 'ராஜா'வுக்கான சுத்தத் தமிழ் வார்த்தைகள்... ஒருத்தருக்கும் ஒரு ப்ரயோஜனமுமில்லாமல் இப்படி யெல்லாம் வெறும் த்வேஷத்தில் செய்கிற கார்யங்கள் கடைசியில் பித்துக்குளித்தனமாகத்தான் முடிகின்றன!...

திருவள்ளுவரின் உதாஹரணம்

தமிழை வளர்த்துக் கொடுத்தவர்களில் திருவள்ளுவரை மிஞ்சி ஒருத்தருண்டா? அவர் முதல் குறளையே எப்படிப் பாடிக்கொடுத்திருக்கிறார்?

அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

என்றுதானே பாடியிருக்கிறார்? அதிலேயே ஆதி, பகவன், உலகு என்று மூன்று ஸம்ஸ்க்ருத வார்த்தைகளைப் போட்டிருக்கிறார். 'உலகு' என்பது 'லோகம்' என்கிற ஸம்ஸ்க்ருதப் பதத்திலிருந்தே வந்தது. 'லோகம்' என்றால் நம்மால் நமக்கு வெளியிலே 'பார்க்கப்படுவது'. இங்கிலீஷ் 'லுக்'கும் அந்த தாதுவிலிருந்து வந்ததுதான். பார்க்கிற இந்த்ரியமான கண்ணுக்கு 'லோசனம்' என்று பேர் இருப்பதும் இந்த தாதுவின் அடியாகத்தான். 'லோகம்' - 'பார்க்கப்படுவது' என்கிற அதே அடிப்படையில் தமிழ்ப் பேராகவே உலகத்துக்கு உள்ள வார்த்தை 'பார்'. 'வையம்', 'வையகம்' என்பதும் லோகத்துக்கு ஒரிஜினலான தமிழ்ப் பெயர். 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்பதற்குப் பதில் 'பழங் கடவுள் முதற்றே வையம்' என்று திருவள்ளுவர் தாராளமாகப் பாடியிருக்கலாம். 'மீட்ட'ரும் ஸரியாகவே இருந்திருக்கும். அப்படியிருந்தும், விசால மனஸ் படைத்த அந்தப் பெரியவர் பாஷா வித்யாஸங்களைப் பார்த்துக் கொண்டிருக்காமல் தம்முடைய நூலை ஆரம்பிக்கிற

Koviloor Digital Library

கடவுள் வாழ்த்தின் முதல் குறளிலேயே மூன்று ஸம்ஸ்க்ருத வார்த்தைகளைப் போட்டிருக்கிறார். அவருடைய பெயரை எப்போதும் முழக்கிக் கொண்டிருக்கிற தமிழ் அன்பர்கள், தங்களுடைய அன்பு, தாங்கள் பெரிதாகச் சொல்லிக் கொள்கிற பகுத்தறிவோடு சேர்ந்திருக்க வேண்டுமானால் அவர் காட்டும் வழிப்படிதான் போகவேண்டும். திருவள்ளுவர் வாழ்த்துகிற அந்தக் கடவுள் — ஆதி பகவன் — தான் இந்த மனப்பான்மையை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

ஸம்ஸ்க்ருதம் தமிழ் வேரோடேயே சேர்ந்தது

ஆதி நூலான தொல்காப்பியத்திலிருந்தே 'வட சொல்' என்று புலவர்கள் சொல்கிற ஸம்ஸ்க்ருத வார்த்தைகளைக் கலந்து கொள்வதற்குத் தமிழ்ப் பெரியோர்கள் தயங்கவே யில்லை. தொல்காப்பியம் என்பதில் 'காப்பியம்' என்பதே காவ்யம் – காவியம் என்கிற ஸம்ஸ்க்ருத வார்த்தையிலிருந்து வந்ததுதான். காப்யர் என்று வேத ரிஷி ஒருத்தருக்கும் பேர் இருந்திருக்கிறது! 'கவி,' 'கவிதை' என்கிறதெல்லாமும் ஸம்ஸ்க்ருத மூலத்திலிருந்து வந்ததுதான். 'இலக்கணம்', 'இலக்கியம்' என்ற இரண்டுமேகூட லக்ஷணம்-இலட்சணம், லக்ஷ்யம்-இலட்சியம் என்ற ஸம்ஸ்க்ருத மூலத்திலிருந்தே வந்தவைதான். சிலப்பதிகாரத்தில் 'அதிகாரம்' என்பது ஸம்ஸ்க்ருதம்தான். 'படலம்', 'சருக்கம்' (ஸர்கம்) என்கிற மாதிரி உள்ள ஸெக்ஷன் பேர்களெல்லாம் ஸம்ஸ்க்ருதந் தான். 'மூலம்-உரை' என்பதில் 'மூலம்' என்பது ஸம்ஸ்க்ருதந் தான். இப்படிக் கணக்கு வழக்கில்லாமல் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆத்ம ஸம்பந்தமாக எடுத்துக் கொண்டாலோ கேட்கவே வேண்டாம்! யோகம், ஜபம், தபஸ், — 'தவம்' என்கிறது 'தபஸ்'லிருந்து வந்ததுதான் — மந்த்ரம், தந்த்ரம்,

Koviloor Digital Library

யந்த்ரம், ஆகமம், புராணம் போன்ற எத்தனையோ ஸம்ஸ்க்ருத வார்த்தைகளுக்குத் தமிழில் வார்த்தையே இல்லை. ஏனில்லை என்றால், நம்முடைய ஆதி காலத் தமிழ்ப் பெரியோர்களிலிருந்து ஆரம்பித்து எல்லோரும், 'அதுதான் தமிழோடு வேரிலேயே, வேரோடு வேராகச் சேருவதாக உள்ள ஸம்ஸ்க்ருதத்தில் வார்த்தைகள் இருக்கின்றனவே! அவை நமக்கும் ஸொந்தம்தானே? அவற்றிலிருந்து எடுத்துக் கொண்டால் போயிற்று!' என்று கொஞ்சங்கூட கல்மஷம் இல்லாமல் நினைத்து அப்படியே பண்ணியதால்தான் புதிதாகத் தமிழ் வார்த்தைகள் உற்பத்தி பண்ணவில்லை. ஸம்ஸ்க்ருத வார்த்தைகளையே 'genius of the language' — 'ஒரு மொழியின் தனிப் பண்பு' — என்கிறதற்கேற்பத் தமிழிலே கொஞ்சம் மாற்றி ரூபம் பண்ணி — 'லக்ஷ்யம்' என்பதை 'இலக்கியம்' என்று ஆக்கின மாதிரிப் பண்ணி — தமிழிலே சேர்த்துக் கொண்டார்கள்.

வேடிக்கையாக, வேடிக்கையிலேயே வருத்தமும் தருவதாக ஒன்று கேள்விப்பட்டேன். அரசியலில் முக்யமா யிருக்கிற ஒருத்தருக்குத் தங்கள் கட்சியில் எவரோ 'விக்ஞாபனம்' என்று எழுதி விட்டதைப் பார்த்து ஒரே கோபம் வந்துவிட்டதாம். 'விண்ணப்பம்' என்று மாற்றிப் போடச் சொன்னாராம். ஆனால் இதுவும் முன்னே 'ஸ்நேஹம்' - 'நேயம்' சொன்னேனே அந்த மாதிரி ஒன்று தான்! ஸம்ஸ்க்ருத 'விஜ்ஞாபன'மே ப்ராக்ருதத்தில் 'விண்ணாபணம்' என்று வரும்; 'விண்ணாபம்' என்றும் வரும். அதுதான் தமிழ் 'விண்ணப்பம்'. 'விஞ்ஞான'த்தைத் தமிழில் 'விண்ணாணம்' என்பதும் ப்ராக்ருதத்தைத் தழுவித்தான். எதற்குச் சொல்ல வந்தேன் என்றால், தமிழ் பாஷைக்கேயான தனி genius-ஏ ஸம்ஸ்க்ருதத்தின் பேச்சு மொழியான ப்ராக்ருதத்தின் genius-ஓடு நகமும் சதையும் மாதிரிச் சேர்ந்துதானிருக்கின்றது என்று காட்டுவதற்குத் தான்!

Koviloor Digital Library

எத்தனைதான் யத்தனம் பண்ணினாலும் அந்த ஸம்ஸ்க்ருத வேரைப் பிடுங்கமுடியாது. முன்னேயே சொன்னாற்போல, நாம் தமிழ் என்றே நினைத்துக் கொண்டிருக்கிற பல வார்த்தைகளே ஸம்ஸ்க்ருதந்தான்! ஒரு பெரிய அறிவாளி பேசியிருந்தார்: 'வடமொழி சவப் பெட்டியில் ஆணி அறைவோம்' என்று ஒரு தனித் தமிழன்பர் சொல்லியிருந்தார். அதைக் குறிப்பிட்டுத்தான் அந்த அறிவாளி பேசியது. அவர் என்ன சொன்னா ரென்றால், "அந்த ஸம்ஸ்க்ருத த்வேஷக்காரர்கள் சொன்னதிலேயே மூன்று ஸம்ஸ்க்ருத வார்த்தைகள் இருக்கிறது. ஒன்று, 'சவம்'. இரண்டாவதாக, 'பெட்டி' என்பதும் 'பேடம்', 'பேடகம்' என்பதன் தமிழ்தான். மூன்றாவ்தாக, 'ஆணி'. வேதத்திலேயே உள்ள வார்த்தை 'ஆணி'. 'சவ'த்துக்கும் 'பெட்டி'க்கும் வேறே மூலமான தமிழ் வார்த்தைகளும் உண்டு. ஆனால் 'ஆணி'க்கு தமிழ் வார்த்தையே இல்லை" என்றார்.

'ஆணி' மாதிரி ஸகல ஜனங்களும் சொல்வதாக உள்ள ஏகப்பட்ட வார்த்தைகள் ஸம்ஸ்க்ருதமாக இருக்கின்றன. 'தச்சன்', 'கருமான்' என்கிறோமே, அவை 'தக்ஷன்', 'கர்மாரன்'தான். வேதத்திலேயே இருக்கிற ஸ்ரீருத்ரத்தில், ஈச்வரனே தக்ஷர்களாகவும், கர்மாரகர்களாகவும் இருக்கிறா னென்று வருகிறது.

இயற்கையாகவே ரொம்பவும் ஸம்ருத்தியுடன் — புஷ்டியாக நிறைந்த வளர்ச்சியுடன், வளத்துடன் தமிழுக்கென்றே லோகம் கொண்டாடுகிற மாதிரி ஏராளமான வார்த்தைகள், vocabulary உண்டாகத்தான் செய்தது. அப்படியிருந்தும் செயற்கையாகப் புது வார்த்தை உற்பத்தி பண்ணவேண்டாமென்றே அநேக இடங்களில், 'ஸம்ஸ்க்ருதமும் நமக்கு இயற்கைதான், 'second nature' என்கிறார்களே, அப்படித்தான்! நம் வேரிலேயே பிரிக்க

Koviloor Digital Library

முடியாமல் நமதாக ஒன்றிப்போயிருக்கிற அந்த பாஷையிலிருப்பதையே நாமும் வைத்துக்கொள்வோம்' என்று நம் முன்னோர்கள் அபிப்ராயப்பட்டு அப்படியே செய்திருக்கிறார்கள்.

அப்படி வேராக இருப்பதைத்தான் இப்போது வேறாக நமக்கு வேறுபட்டது, வேண்டாதது என்று நினைத்துப் பிடுங்கிப் போடப் பார்க்கிறார்கள். வேரைப் பிடுங்கினால் என்ன ஆகும்? வேருக்கு 'மூலம்' என்று பேர். மூலத்தைக் கெடுத்தால் நிர்மூலமாக அல்லவா ஆகிவிடும்? அப்படிப்பட்ட உத்பாதத்தைத்தான் தமிழ் பாஷைக்கு ஏற்படுத்தப் பார்க்கிறார்கள்.

எல்லாரும் நல்லவர்கள்தான். ஏதோ தெரியாத்தனம், யாரோ இரண்டொருத்தர் தப்பாக நினைத்து, தங்களுக்கு இருக்கிற வசீகரத்தால் மற்றவர்களையும் தப்பில் இழுத்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் தமிழன்பர்கள், தமிழடியார்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களே அந்த பாஷையின் வேரில் வெட்டுப் போடுவதும், தமிழ் மரபு, தமிழ் மரபு என்கிறவர்களே அந்த மரபை உண்டு பண்ணி, வளர்த்துக் கொடுத்தவர்களின் அபிப்ராயத்துக்கு நேர் மாறாகப் பண்ணுவதாகவும் நடந்து வருகிறது.

நாம் பதிலுக்குக் கோபப்பட்டு ப்ரயோஜனமில்லை. சாந்தமாக எடுத்துக்காட்டிப் புரிய வைக்கவேண்டும். எல்லோருக்கும் நல்லறிவு உண்டாவதற்கு வாக்தேவியைப் பிரார்த்தித்துக் கொள்ளவேண்டும். வேதவ்யாஸர் என்றே பேருள்ளவர் பண்ணின மஹாபாரதம், நம்முடைய முத்தமிழ் இரண்டையும் ஒரே மாதிரி மலையிலே எழுதி வைத்த விக்நேச்வரரிடமும், நமக்கு இரண்டு கண் மாதிரி உள்ள இந்த இரண்டு பாஷைகளை வைத்துச் சண்டை-சாடி உண்டாகாமலிருக்க பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

இனம் என்றும் பாஷை என்றும் பிரிந்து போகாமல் நாம் அத்தனை பேரும் ஒரே பார்வதி-பரமேச்வரர்களின் குழந்தைகளாக, பிள்ளையாருக்குத் தம்பி-தங்கைகளாக ஒன்று சேர வேண்டும். அவரையே பிரார்த்தித்துக் கொள்ளுவோம்....

தேவார கர்த்தர் இருவருக்கு அருள்

'முதலமைச்சர்' என்கிற வார்த்தை பற்றிய வாதம் ஒரு த்ருஷ்டாந்தத்திற்காக ஆரம்பித்தேன். ஒரு ஊரில் பஞ்சம் என்று முதலமைச்சருக்கு ஊரார் பெடிஷன் கொடுத்தால், அவர் கஷ்ட நிவாரணத்துக்காகப் பணம் grant பண்ணுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அவரேயா பணத்தை எடுத்துக் கொண்டு போய் விநியோகம் செய்கிறார்? ஒரு ஸ்பெஷல் ஆபீஸர் போட்டு அவர் மூலந்தானே செய்கிறார்? அப்படி, திருவீழிமிழலையில் பஞ்சம் என்று அப்பர், ஸம்பந்தர் பெடிஷன் கொடுத்து ஈச்வரன் படிக்காசு கொடுத்த போது அதற்கு ஸ்பெஷல் ஆபீஸராகப் பிள்ளையாரையே போட்டு அவர்களுக்கு விநியோகிக்கச் செய்தார். அப்பா ஸொத்தை மூத்த பிள்ளையும் அருள் மனஸோடு அவர்களுக்குக் கொடுத்தார். இரண்டு பீடங்களில் மேலண்டையில் படிக்காசு வைத்ததற்குப் பக்கத்திலேயே 'படிக்காசுப் பிள்ளையார்' என்று பேர் வைத்துக் கொண்டு அவர் உட்கார்ந்திருக்கிறார்!

இன்னொரு ஸம்பவம். லால்குடிக்குக் கிட்டே அன்பில் என்று ஒரு ஊர். தேவாரத்தில் அதை அன்பில் ஆலந்துறை என்று சொல்லியிருக்கிறது. அப்பரும் ஸம்பந்தரும் அந்த க்ஷேத்ரத்திற்குக் கிளம்பினார்கள். வழியிலே கொள்ளிடம் குறுக்கிட்டது. ஒரே வெள்ளம்! பரிசலா, படகா ஒன்றுமே போக முடியாத வெள்ளம்!

Koviloor Digital Library

இப்படி ஆச்சே என்று அவர்கள் அக்கரையில் நின்று கொண்டே ஸ்வாமியிடம் முறையிட்டார்கள். அப்போது ஸ்வாமி கேட்டுக் கொள்கிறதற்கு முன்னாடி அங்கேயிருந்த பிள்ளையார்தான், "வெள்ளச் சத்தத்தோட யாரோ ப்ரலாபிக்கிற குரலும் கேக்கறாப்பல இருக்கே!" என்று காதை அந்தப் பக்கம் கொஞ்சம் சாய்த்து உன்னிப்பாகக் கேட்டார். 'செவி சாய்க்கிறது' என்பதை நிஜமாகவே பண்ணினார்! மஹா பக்தர்களான அப்பர்-ஸுந்தரர்களின் குரல் என்று தெரிந்து கொண்டார். உடனே அப்பாவுக்கு 'ரிலே', 'ரெகமன்டேஷன்' எல்லாம் பண்ணினார். அப்பாவும் உடனே வெள்ளம் வடியும்படிப் பண்ணி அவர்களைக் கோவிலுக்கு வரவழைத்துக் கொண்டார். அன்பிலாலந்துறையில் 'செவிசாய்த்த விநாயகர்' என்றே அந்தப் பிள்ளையார் விக்ரஹ ரூபத்தில் அழகாகக் காதைச் சாய்த்துக் கொண்டு இருக்கிறார்.

தேவாரத்தில் விநாயகர்

விக்நேச்வரரைப் பற்றி வருகிற இரண்டு தேவாரக் குறிப்புகளை விஷயம் தெரிந்தவர்கள் விசேஷித்துச் சொல்வார்கள். ஒன்று அப்பர் வாக்கு. மற்றது ஸம்பந்தருடையது.

சமணனாயிருந்த பல்லவ ராஜா தன் மாதிரியே சமணராயிருந்து விட்டு அப்புறம் சைவராகி விட்ட அப்பர் ஸ்வாமிகளைப் பல விதத்தில் ஹிம்ஸைப்படுத்திக் காளவாயில் போட்டான்; கல்லைக் கட்டி ஸமுத்திரத்திலே போட்டான்; அப்புறம் அதெல்லாம் பலிக்கவில்லை என்பதைப் பார்த்துத் தானும் அவரை நமஸ்காரம் பண்ணி வைதிக மதத்திற்குத் திரும்பி விட்டான் என்று கதை கேட்டிருப்பீர்கள். அதிலே காளவாய்க்கும் கல்லைக் கட்டிப் போட்டதற்கும் நடுப்பற [நடுவில்] விஷம் கொடுத்ததாகவும்,

Koviloor Digital Library

அவர் மேலே மதயானையை ஏவி விட்டதாகவும் இருக்கிறது. அப்படி மதயானையை ஏவினபோது அவர் பாட்டுக்குக் கொஞ்சங்கூட பயப்படாமல், "அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை" என்று பதிகம் பாடிக் கொண்டு தீரமாக நின்றார்*. மத்தகஜம் வேகமாக வருகிறபோது கஜஸம்ஹார மூர்த்தியான ஸ்வாமியை, 'வேழம் உரித்த நிலை' என்று ஸ்துதித்துக் கொண்டு நின்றார்! கஜானனரைப் பற்றியும் அந்தப் பதிகத்தில்தான் சிறப்பித்துச் சொல்லியிருக்கிறார்!

"பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறு."

"அந்தக் களிறு எந்த ஈச்வரனின் பரிவாரத்தில் இருக்கிறதோ, அந்த ஈச்வரனின் "தமர் நாம்", அதாவது, "தம்மவர் நாம்", அதாவது ஈச்வரனே, "இவர்கள் என்னுடைய மநுஷர்கள்" என்று சொல்லிக் கொள்ளும் படியான அடியார் நாங்கள்! ஆகவே நாங்கள் ராஜா ஏவி விட்டிருக்கிற இந்த மதக் களிறானாலும் ஸரி, வேறே என்ன உத்பாதமானாலும் ஸரி, அஞ்சுவது யாதொன்றுமில்லை!" என்று பாடினார்.

மதயானை அவரைப் பிரதக்ஷிண நமஸ்காரம் பண்ணிவிட்டு ஏவினவனையே தாக்குவதற்குப் பாய்ந்தது. அவன் ஓட்டம் பிடித்தான்.

"கணபதி என்னும் களிறு" பற்றி அவர் என்ன சொல்லியிருக்கிறாரென்றால்: நம்மில் ஒவ்வொருத்தரும் நூறாயிரம் ஆசைகளை வைத்துக் கொண்டு, ஒன்று பூர்த்தியானால் இன்னொன்று என்று ஸதா பரபரக்கிற, படபடக்கிற சஞ்சல மனஸுக்காரராளாக இருக்கிறோம். இதைத்தான் "பல பல காமத்தராகிப் பதைத்தெழுவார் மனம்" என்றார். ஸாதாரணமாகச் சொல்வது,

* 'சுண்ணவெண் சந்தனச் சாந்தும்' எனத் தொடங்குவது.

Koviloor Digital Library

ஆசாபூர்த்திக்கு ஏற்படும் இடையூற்றை அகற்றி அது நிறைவேற அநுக்ரஹிக்கிறவரே விக்நேச்வரர் என்பது. ஆனால் அப்பர் ஸ்வாமிகளோ அப்படிச் சொல்லாமல் ரொம்ப 'ஹை லெவ'லுக்குக் கொண்டு போய் விடுகிறார். நல்ல விஷயஜ்ஞரான புலவர்கள் எப்படி அர்த்தம் பண்ணுவார்களோ, எனக்குத் தோன்றுகிற அர்த்தம் இப்படித்தான். என்னவென்றால்: ஆசைப் பூர்த்தி என்று போனால் அதற்கு முடிவேயிருக்காது. ஒன்று பூர்த்தியாச்சென்றால் இன்னொன்று என்று அது போய்க் கொண்டேதான் இருக்கும். முடிவிலே அத்தனை ஆசைகளும் ஸம்ஸார பந்தத்தை மேலும் மேலும் இறுக்குகிறவைதான். கணபதி இதற்குத்தான் அநுக்ரஹிக்கிறாரென்றால் அதொன்றும் சிறப்பில்லை என்று அப்பர் நினைத்திருக்கிறார். அவர் அபிப்ராயத்தில் — 'அநுபவத்தில்' என்று சொல்லணும் — கணபதி என்ன பண்ணுகிறார்? ஆசைகளினால் ஸதா பதறிக் கொண்டிருக்கும் நம் மனஸில் பிள்ளையார் 'கலமலக்கிட்டுத் திரிகிறா'ராம். அப்படியென்றால் ஒரே கலக்காகக் கலக்கிக் கொண்டு உத்ஸாஹமாகச் சுற்றுகிறார் என்று அர்த்தம். ஏற்கெனவே ஆசைகளால் பதைத்துக் கலங்கிப் போயிருக்கிற மனஸை அவர் எதிர்த்திசையில் போட்டுக் கலக்குகிறார். கலக்கல், அதற்கு எதிர்க்கலக்கல், revolution-ம் அதற்கு எதிரான counter-revolution-ம் என்றால் என்ன ஆகும்? முதலாவதை இரண்டாவது சமனம் பண்ணி, கலக்கம் எல்லாம் அடங்கி equilibrium என்கிற ஸமநிலையான பரம சாந்த நிலை உண்டாகும். மனஸ் அப்படி சாந்தமாக அடங்கி விட்டால் அதுதான் மோக்ஷம். ஒரு களிறு — ஆண் யானை — எத்தனை சக்தியோடு ஒரு சுழலுக்குள்ளே நுழைந்து கலக்கு கலக்கு என்று கலக்கி விளையாடி கம்பீரமாக ஸஞ்சாரம் பண்ணுமோ, அப்படி நம்முடைய ஆசைச் சுழல்மயமான

Koviloor Digital Library

மனஸுக்குள்ளே பரமக்ருபையோடு விக்நேச்வரர் புகுந்து எதிர்ச் சுழலாகச் சுழற்றிக் கொண்டு வெற்றிநடை போட்டுத் திரிகிறாராம்! இது அப்பர் சொல்வது.

ஸம்பந்தமூர்த்தி என்ன சொல்லியிருக்கிறாரென்றால்: விக்நேச்வரர் பல வேறு ஸந்தர்ப்பங்களில் பல வேறு அவஸரங்களாக [கோலங்களாக] அவதரித்திருக்கிறார். அவற்றிலே ஒன்றில், பிடி என்கிற பெண் யானையாக அம்பாள் ஒரு ரூபம் கொண்டிருந்தாள். அந்தக் காலத்தில், ஸ்வாமி [சிவபெருமான்] தன்னுடைய அடியார்களுடைய இடர்களைத் தானே கடிந்து போக்கிவிடாமல் அதற்கென்றே 'ஆதரைஸ்' ஆன ஒரு விக்ன நிவாரண மூர்த்தியைத் தன்னுடைய பிள்ளையாகப் பெற்று, அந்தப் பிள்ளை மூலம் நடத்தணும் என்று லீலையாக ஒரு ஸங்கல்பம் பண்ணினார். உடனே அவர் ஆண் யானையாகி, பிடியாயிருந்த அம்பாளோடு அப்படி ஒரு புத்ரோத்பத்தி பண்ணினார். இந்த விருத்தாந்தத்தைத்தான் ஸம்பந்தர், வலிவலம் என்று திருவாரூர்கிட்டே மூவரும் பாடின க்ஷேத்ரம் இருக்கிறது, அங்கே பாடின தம்முடைய பதிகத்தில் சொல்லியிருக்கிறார்.

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே.

வலிவலத்தில் தானதர்ம வள்ளல்களாக 'மிகு கொடை வடிவினர்' இருப்பதை ஸம்பந்தமூர்த்தி பார்த்தார். உடனே அவருக்குப் பரமேச்வரன் லோகம் பூராவுக்குமாக அளித்திருக்கிற பெரிய கொடை ஒன்றைச் சொல்லத் தோன்றிற்று. என்ன கொடை என்றால், அடியார் இடர் கடியவே அவர் கணபதியை வரவழைத்தாரே, அதுதான்!

Koviloor Digital Library

'தனதடி வழிபடும் அவரிடர் கடி கணபதி வர அருளி'னாரே, அதுதான்!

விக்நேச்வரருக்குப் பல நாமாக்கள் இருந்தாலும் அப்பர் பாடல், ஸம்பந்தர் பாடல் இரண்டிலும் கணபதி என்ற நாமாவே வருகிறது. பிள்ளையார் மந்த்ரங்களில் முக்யமானவற்றிலும் அந்தப் பேர்தான் இருக்கிறது. பிள்ளையார் மதத்தின் பெயரும் 'காணபத்யம்' என்று அந்தப் பேரை வைத்தே இருக்கிறது.

ஸுந்தரமூர்த்தி ஸ்வாமி இந்த இரண்டு பேரைப் போலப் பிள்ளையாரைப் புகழ்ந்து பாடவில்லை. பரமேச்வரனையே ரொம்பவும் நிந்தா ஸ்துதி செய்த 'வன்றொண்டர்' அல்லவா அவர்? பிள்ளையாரையும் அப்படித்தான் இறக்கியிருக்கிறார்! ஒரு இடத்தில் "கணபதியேல் வயிறுதாரி" என்று[1]. இன்னோரிடத்தில், கணக்கு வழக்கில்லாமல் தின்று கொண்டு தொப்பையை வளர்க்கிறதைத் தவிர வேறே ஒன்றும் தெரியாத கணபதி என்ற அர்த்தத்திலே 'எண்ணிலியுண் பெருவயிறன் கணபதி, ஒன்றறியான்' என்று சொல்கிறார்.[2] இங்கேயும் இரண்டு இடத்திலேயும் கணபதி நாமாதான். இரண்டிலுமே பெருந்தீனிக்காரர் என்று அவருக்கு வசவு!

இப்படி அவர் சொன்னார் என்றுதான் பிள்ளையார், "பெருந்தீனிக்காரன்னுதானே சொன்னே? அப்படியே இருக்கட்டும். ஒளவை படைக்கற பெருந்தீனி முழுசையும் ஸாவகாசமா மொக்கி[வி]ட்டும், ஒனக்கு முந்தி அவ கைலாஸத்துல சேரும்படிப் பண்றேனா, இல்லியா, பார்!" என்று கடைசியில் பண்ணிக்காட்டினார் போலிருக்கிறது!

ஆனாலும் அவர் ஸுந்தரருக்கு நிறைய அநுக்ரஹங்களும் பண்ணித்தான் இருக்கிறார்.

1. "நெய்யும் பாலும்" எனும் பதிகம்
2. "பத்தூர்புக்கு" எனும் பதிகம்

Koviloor Digital Library

சுந்தரருக்கு அருள்

அப்பர்-ஸம்பந்தர்களுக்கு அன்பிலில் ஏற்பட்டாற் போல ஸுந்தரரும் திருவையாற்றுக்குப் போனபோது காவேரியில் பெரிய வெள்ளமாக வந்து அவரைத் தடுத்தது. அவர் எதிர்க்கரையிலேயே நின்று கொண்டு, "ஐயாறுடைய அடிகளே! ஓலம் ஓலம்!" என்று கதறினார். இங்கேயும் அப்பாவுக்கு முந்தித் திருவையாற்றுப் பிள்ளையார்தான் பக்தர் கஷ்டத்தைத் தெரிந்து கொண்டு அவருடைய ஓலத்தை அப்பாவுக்குத் தாமே 'ரிலே' பண்ணினார். அதனாலே அவருக்கு 'ஓலமிட்ட விநாயகர்' என்றே பெயர். தோழர் – 'தம்பிரான் தோழர்' என்று ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளைச் சொல்வார்கள் – அந்தத் தோழர் ஓலமிட்டு, அதை ஜ்யேஷ்ட புத்ரனும் 'ஸெகன்ட்' பண்ணின தத்க்ஷணமே ஸ்வாமி வெள்ளத்தை வடிய வைத்தார்.

ஃப்ரன்ட் என்கிற முறையிலே ஸுந்தரர் ஸ்வாமிகிட்டே எதை வேணாலும் கேட்பார். பரவை நாச்சியார் என்று அவருக்கு ப்ரியமானவள். அவள் ஸுந்தரமூர்த்திகளின் ஊரான திருவாரூர் கோவிலில் நாட்யம் பண்ணுகிறவர்களில் பரம பக்தையான ஒரு உத்தமி. ரொம்பவும் தானதர்மிஷ்டை. அவள் வாரிக் கொடுக்கிறதற்காக ஸுந்தரர் அப்பப்போ "பொன்னு தா", "நெல்லு தா" என்றெல்லாம் ஸ்வாமியிடம் நச்சரித்துப் பெற்றுக் கொள்வார். அப்படி, 'திருமுதுகுன்றம்' என்று தேவாரத்தில் சொல்லியிருக்கும் விருத்தாசலத்திலேயும் அவர் பொன் கேட்டு, ஸ்வாமியும் பன்னிரண்டாயிரம் பொன் கொடுத்தார். ஸுந்தரர் அதோடு விடாமல், "கொடுத்தது மட்டும் போறாது. இதைக் காபந்து பண்ணி எடுத்துண்டு நான் ஊர் ஊராப் போய்த் திருவாரூர் சேருகிறது கஷ்டம். ஆனதாலே இதை நீயே எப்படியாவது அங்கே சேத்துடு" என்றார்.

Koviloor Digital Library

ஸ்வாமியும் "ஸரி" என்றார். ஆனால் கொஞ்சம் லீலை பண்ணவும் நினைத்து, "இந்தப் பொன்னை இங்கே ஓடற மணிமுத்தாற்றிலே போட்டுடு. அப்பறம் ஊர் ஊரா என்னைப் பாடிண்டு திருவாரூருக்குப் போய் அங்கே கமலாலயத்திலே — அதுதான் அங்கே உள்ள பிரஸித்தி பெற்ற திருக்குளம் — ஈசான்ய [வடகிழக்கு] மூலையிலேருந்து கலெக்ட் பண்ணிக்கோ" என்றார்.

"அப்படியே!" என்று மணிமுத்தாற்றிலே பொன் மூட்டையைப் போடப் போன ஸுந்தரருக்கு ஒரு ஸந்தேஹம் வந்தது. "நாம படுத்தியெடுக்கறோம் என்கிறதாலே ஸ்வாமி ஏதாவது கொனஷ்டை பண்ணி வெக்கப் போறார்! இங்கே உசந்த மாற்றுத் தங்கமாக் குடுத்துட்டு கமலாலயத்திலே எடுக்கறப்போ மாற்று கொறைச்சுடப்போறார்" என்று நினைத்தார். மாற்று என்பது காரட் மாதிரி. 24 காரட், 14 காரட் என்கிறோமே அப்படி. 24-ஐயே 14-ஆக ஸ்வாமி பண்ணி விடப் போகிறாரே என்று ஸுந்தரர் நினைத்தார். இரண்டு இடத்திலேயும் உரைத்து மாற்றுப் பார்த்துக் கொள்வதுதான் நல்லது என்று நினைத்தார்.

உடனே அவருக்கு ஸஹாயம் செய்வதற்காகப் பிள்ளையார் அவர் பக்கத்தில் வந்து நின்றார். பொன்னை உரைத்துப் பார்த்து, பத்தரை மாற்று — 24 காரட் — என்று 'ஸர்டிஃபை' பண்ணினார். விருத்தாசலம் கோவிலில் அறுபத்து மூவருக்குப் பக்கத்தில் 'மாற்றுரைத்த பிள்ளையார்' என்றே அவர் இருக்கிறார், அறுபத்து மூவரையும் சொல்லித் திருத்தொண்டத்தொகை பாடியவர் ஸுந்தரர்தானே?

அந்தப் பொன்னில், பின்னாடி 'கம்பேர்' பண்ணுவதற்காக ஸாம்பிளாக 'மச்சம்' என்று ஒரு துணுக்கை ஸுந்தரர் வெட்டியெடுத்துக் கொண்டு

Koviloor Digital Library

மூட்டையை அப்படியே மணிமுத்தாற்றில் போட்டு விட்டார்.

அப்புறம் க்ஷேத்ரம் க்ஷேத்ரமாகப் பாடிக்கொண்டே போய்த் திருவாரூரை அடைந்தார். பரவை நாச்சியாரைக் கமலாலயத்தின் ஈசான்யத்தில் படித்துறையில் நிறுத்தி விட்டுக் குளத்துக்குள் இறங்கினார், பொன்னை எடுப்பதற்காக!

இவர் நினைக்காத ஒரு கொனஷ்டையை ஸ்வாமி பண்ணினார். ஏதோ மாற்றுதான் குறைந்தது என்றில்லாமல் முதலுக்கே மோசமாக ஸ்வாமி விளையாடினார். இவர் தேடு தேடு என்று தேடியும் பொன் மூட்டையே அகப்படவில்லை!

பரவையானால், "எங்கேயோ ஆத்துலே போட்டுட்டு இங்கே கொளத்துலே தேடறீரே ஸ்வாமி!" என்று பரிஹாஸம் பண்ணினாள். அவள் சொன்னது பிற்பாடு வசனமே ஆகிவிட்டது!

ஸுந்தரருக்கு எரிச்சல் பொத்துக்கொண்டு வந்தது. உணர்ச்சி ஜாஸ்தியானால் அவருக்குப் பாட வந்துவிடும். ஆனால் வழக்கம் போல் நிந்தாஸ்துதி பண்ணினால், இந்தத் தடவை ஸ்வாமி காது கொடுக்காமலிருந்து, ஒரு பொம்மனாட்டிக்கு முன்னே தாம் இன்னும் அவமானப் படப் போகிறோமே என்பதால் ரொம்பவும் தைன்யமாகவே குழைந்து வேண்டிக் கொண்டு பதிகம் பாடினார். பொன் ஸமாசாரமானதால் "**பொன் செய்த மேனியினீர்!**" என்றே ஆரம்பித்துப் பாடினார். [பிறிதொரு சமயத்தில்] "**பொன்னார் மேனியனே!**" பாடினதும் ஸுந்தரர்தான்.

ஸ்வாமி இவருடைய பாட்டைப் பெறணுமென்றே தான் சோதித்தது! இவர் பாடினவுடனே பொன் அகப்படும்படிப் பண்ணிவிட்டார்!

Koviloor Digital Library

இங்கேயும் பிள்ளையார்தான் வந்து மாற்றுப் பார்த்தார். அதனால் திருவாரூரிலும் ஒரு மாற்றுரைத்த விநாயகர் உண்டு.

ஸுந்தரர் நினைத்த கொனஷ்டையையும் ஸ்வாமி இப்போது பண்ணியிருந்தார்! மச்சத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மாற்று குறைந்திருந்தது! 14 காரட்!

பாட்டு ப்ரியரை ஸுந்தரர் மறுபடி ஸ்துதித்தார். ஸ்வாமியும் பதினாலை இருபத்து நாலாகவே மாற்றிக் கொடுத்தார்.

அப்புறம் ஒரு ஸமயம் ஸுந்தரமூர்த்தி, சேரமான் பெருமாளுடைய ஊருக்குப் போய் அரண்மனையில் தங்கி விட்டுப் புறப்பட்டார். ராஜாவான சேரமான் அவருக்கு ராஜோபசாரம் பண்ணி வழியனுப்பும்போது மூட்டை மூட்டையாக — 'பொதி' என்று சொல்வது; அப்படி — நிறையப் பொதி பொன்னும் பொருளும் கொடுத்தனுப்பி னார். ராஜஸேவகர்கள் அவற்றைத் தூக்கிக் கொண்டு வர, ஸுந்தரர் கொங்கு நாட்டு வழியாகத் திருவாரூர் திரும்பிக் கொண்டிருந்தார்.

திருப்பூருக்குக் கிட்டே திருமுருகன்பூண்டி என்ற க்ஷேத்ரம். அங்கே காட்டு வழியில் ஸுந்தரர் ஆள்களோடு போய்க் கொண்டிருந்தார். அந்த ஊர் ஸ்வாமி பார்த்தார். 'வழக்கமாக நம்மிடம் அதைத் தா, இதைத் தா என்று நச்சரித்தபோது ஒரு க்ஷேத்ரம் விடாமல் நம்மிடம் வந்து பாடியவன், இப்போது நம்மை லக்ஷ்யமே பண்ணாமல் அல்லவா பெரிய ராஜஸம்பாவனையுடன் போகிறான்? நாம் ஏதாவது கொடுத்தால், 'நீயே அதைத் திருவாரூரில் சேரு' என்கிறவன், ராஜஸேவகர்கள்தான் நிஜமான துணை என்ற தைரியத்தில்தானே இப்போது காட்டிலே இத்தனை பொதியுடன் போகிறான்?' என்று நினைத்தார். கொஞ்சம் சோதனை லீலை செய்வதற்கு முடிவு பண்ணினார்.

Koviloor Digital Library

பூதகணங்களை வேடர்களாக ஆக்கி ஸுந்தரர் கோஷ்டியை எதிர்த்து வழிப்பறி செய்ய வைத்தார். உயிருக்கு ஹானி செய்யாமல் அந்த கணங்கள் பொருளை மட்டும் பிடுங்கிக் கொண்டு ஸ்வாமியிடம் வந்து பொதியைக் கொடுத்துவிட்டன.

எல்லாம் பறி கொடுத்துவிட்டு ஸுந்தரர் என்ன செய்வது என்று தெரியாமல் நின்று கொண்டிருந்தார்.

அப்போது அந்த ஊர்ப் பிள்ளையாருக்குத்தான் கருணை பெருகிற்று. ஊருக்குப் பேர் திருமுருகன்பூண்டி. அந்த முருகன் **"வைதாரையும் வாழ வைப்பான்"** என்கிறார்கள். ஆனால் அந்த ஊரிலோ அவனுடைய அண்ணாக்காரர்தான் தன்னை 'வயிறுதாரி' என்று ஸுந்தரர் வைததையும் நினைக்காமல் அவரை வாழவைக்க நினைத்தார்!

அதனால் கோவிலை விட்டே கொஞ்ச தூரம் ஓடி வந்தார். சற்று தூரத்தில் ஸுந்தரரைப் பார்த்தவுடனேயே ஒரே கூவலாகக் கூவி அவரைக் கூப்பிட்டார். "இங்கே கோவிலில் இருக்கிற என் அப்பாதான் கணங்களை அனுப்பி வழிப்பறி செய்தது. அதிலே கணபதியான எனக்குப் பங்கு இல்லை. நீ கோவிலுக்கு வந்து அவரைப் பாடு. நீ பாடி விட்டால் அவர் மனஸு குளிர்ந்து, தான் பண்ணினதை அப்படியே மாற்றி விடுவார்" என்று தகவல் கொடுத்து உபாயமும் சொல்லிக் கொடுத்தார். ஸுந்தரமூர்த்தியைக் கூவிக் கூவிக் கூப்பிட்ட அந்தப் பிள்ளையார் 'கூப்பிடு பிள்ளையார்' என்ற பெயரில் திருமுருகன்பூண்டியிலிருந்து அவிநாசிக்குப் போகிற வழியில் இருக்கிறார்.

அவருக்கு ரொம்பவும் நன்றி சொல்லி விட்டு, அவர் பரம கருணையோடு வழிகாட்ட ஸுந்தரர் கோவிலுக்குப் போனார். 'நிந்தாஸ்துதி பண்ணி இன்னும் கஷ்டம் ஏற்பட இடம் கொடுக்க வேண்டாம். ஸ்வாமியேதான் கொள்ளை

Koviloor Digital Library

நடத்தினது என்பதுகூட நமக்குத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டாம். துஷ்ட வேடர்கள் நிறைந்த இந்த ஊரில் நீ இருக்கலாமா என்று ஸ்வாமியிடம் அங்கலாய்த்துக் கொள்கிற ரீதியிலேயே பாடலாம்' என்று ஸுந்தரர் நினைத்தார். 'இங்கே ஏன் ஸ்வாமி, நீ வாஸம் பண்ணணும்?' என்று அர்த்தம் கொடுக்கும்படியாக ஒவ்வொரு பாடலும் **"எத்துக்(கு) இங்(கு) இருந்தீர், எம்பிரானே ?"** என்று முடித்துப் பதிகம் பாடினார்*.

ஸ்வாமியும் தாம்தான் அந்த வழிப்பறியை 'அரேஞ்ஜ்' பண்ணினது என்று காட்டிக் கொள்ளாமல், அந்த வேடர்களுக்கே மனஸ் மாறிவிட்ட மாதிரிக் காட்டி, கணங்களை மறுபடி வேடர்களாக்கி அவர்கள் பொதியை எல்லாம் ஸந்நிதியிலேயே ஸுந்தரருக்கு முன்னாடி கொண்டு வந்து போட்டுவிடும்படிப் பண்ணினார்.

பக்தர்களும் பகவானும் விளையாடிக் கொள்கிறதற்கு எல்லையே இல்லை!

விநாயகரும் மாணிக்கவாசகரும்

தேவாரம் பாடிய மூவரைப் பற்றி விக்நேச்வர ஸம்பந்தமாக இவ்வளவு! ஆனால் மாணிக்கவாசகர் அவருடைய திருவாசகத்திலே பிள்ளையாரைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. இருந்தாலும் அவருடைய வாழ்க்கையிலே இவர் நெருக்கமாக ஸம்பந்தப் பட்டிருக்கிறார். ரொம்பப் பேருக்குத் தெரியாத கதை சொல்கிறேன்.

பழங்காலத்திலே பாண்டிய நாட்டிலேயிருந்து சோழ தேசம் போகிறதற்கு ஆவுடையார்கோவில் வழியாகத்தான் நல்ல சாலை இருந்தது. மாணிக்கவாசகர் காலத்தில்

* "கொடுகு வெஞ்சிலை" எனத் தொடங்குவது.

Koviloor Digital Library

ஆவுடையார்கோவிலுக்கு திருப்பெருந்துறை என்று பெயர். அங்கே வழிப்போக்கர்கள் தங்குவதற்கு ஒரு சத்திரம் இருந்தது. அதற்குப் பக்கத்தில் வானம் பார்க்க, அதாவது கூரையில்லாமல், ஒரு பிள்ளையார் உட்கார்ந்திருப்பார். வெயிலில் வந்த யாத்ரிகர்கள் ஒரு கூரையின் கீழ் 'ரெஸ்ட்' பண்ணிக் கொள்ளும் சத்திரத்துக்குப் பக்கத்திலேயே இப்படி அத்தனை வெயிலையும் தன் மேலே வாங்கிக் கொள்கிற ஒரு பிள்ளையார்! இன்னும் சில இடங்களிலும் இப்படி உண்டு. அங்கேயெல்லாம் 'வெயில் **உகந்த** பிள்ளையார்' என்று அவருக்குப் பேர் சொல்வார்கள். இங்கேயோ 'வெயில் **காத்த** பிள்ளையார்' என்று பேர். என்ன வித்யாஸமென்றால் மற்ற இடங்களில் ஜனங்கள் அநுபவிக்கிற வெயில் கஷ்டத்தை நாமும் அவர்களோடு சேர்ந்து அநுபவிப்போமே என்று 'ஸிம்பதி'யிலே அவராக வெயிலை ப்ரியப்பட்டு உகந்து ஏற்றுக் கொள்கிறார். இங்கேயோ அதற்கு மேலே ஒரு படி போய், சத்திரத்தில் தங்கினவர்கள் அப்புறம் யாத்திரை தொடரும்போது வெயிலால் கஷ்டப்படாமல் அந்த வெயிலை அவர்களுக்கு மாகச் சேர்த்து vicarious suffering என்கிறார்களே, அப்படித் தாமே வாங்கிக் கொண்டு, அவர்களை உஷ்ணத்திலிருந்து காப்பாற்றுகிறார். அதனால் 'வெயில் **காத்த** பிள்ளையார்' என்று பெயர் பெற்றிருக்கிறார்.

பாண்டிய ராஜாவுக்காகக் குதிரை வாங்கப் போன மந்திரி திருவாதவூரர் அப்புறம் மாணிக்கவாசகர் என்ற மஹானான கதை தெரிந்திருக்கும். அவர் குதிரை வாங்கப் போகிற வழியில் அந்தத் திருப்பெருந்துறைச் சத்திரத்தில் தான் ராத் தங்கினார். அப்போது அவருடைய ஸ்வப்பனத்திலே வெயில் காத்த பிள்ளையார் தோன்றினார். வெயிலா, suffering–ஆ எதுவும் தெரியாத பரப்ரஹ்மமே தாம் என்று வாதவூரருக்குத் தெரிவிக்க

Koviloor Digital Library

நினைத்து, தான் ஒருத்தரே ப்ரஹ்ம-விஷ்ணு-ருத்ரர் ஆகிய மூன்று ரூபமுமாக மாறி அவருக்குக் காட்சி கொடுத்தார். கொடுத்த அப்புறம், "இந்த ஊரிலே பரப்ரஹ்மத்துக்குக் கோவில் கட்டு. அரூபமாகவும் நிர்குணமாகவும் இருக்கிற தத்வத்துக்கு எப்படிக் கோவில் கட்டுவது என்று கேட்காதே. அதற்கு நேரடியாகக் கோவில் கட்ட முடியாதுதான். ஆனாலும் அப்படி ஒரு தத்வம் உண்டு என்று ஸகல ஜனங்களுக்கும் துளியாவது நினைப்பு வர வேண்டு மல்லவா? அதற்காகத்தான் அதை 'ஸிம்பாலிக்'காக [உருவகமாக]ப் புரிந்து கொள்ளும்படி ஒரு கோவில் கட்டச் சொல்கிறேன்.

"ப்ரஹ்மம் அருவம். நாம் பார்க்கிற மூர்த்திகளுக்குள் சிவலிங்கம் தவிர பாக்கி எல்லாம் உருவம். சிவலிங்கத்துக்கு அவயவங்கள் கொண்ட உருவமும் இல்லை; அது அருவமுமில்லாமல் ஒரு நீள உருண்டையாயிருக்கிறது. அதனால் அருவுருவம் என்று அதற்குப் பேர். சிவலிங்கத்துக்குப் பீடம் இருக்கிறதே, ஆவுடையார் என்று, அதுவே ப்ரஹ்ம-விஷ்ணு-ருத்ர ஸ்வரூபம். அதற்கு மேலே சிவம் என்கிற அருவ ப்ரஹ்மம் இருப்பதை ஸிம்பாலிக்காகக் காட்டத்தான் லிங்கம் வைத்தது.

"ஆனால் உருவ தத்வத்திலேயே ருசியுள்ள ஜனங்கள் அதை மறந்துவிட்டு லிங்கத்தையும் ஒரு உருவ மூர்த்திதான் என்று நினைக்கிறார்கள். பொது ஜனங்கள் உள்ள ஸ்திதியில் அப்படி நினைப்பதுதான் இயற்கை. அதனால் மற்ற கோவில்களிலெல்லாம் அப்படியே இருந்து விட்டுப் போகட்டும். ஆனாலும், இத்தனாம் பெரிய தேசத்தில் ஒரு இடத்திலாவது வேதத்தின் பரம தாத்பர்யமான பரப்ரஹ்மத்தை, அருவப் பரம்பொருளை, அழுத்தமாக ஞாபகப்படுத்த ஒரு ஆலயம் வேண்டாமா? உருவம் என்பதிலிருந்து அருவுருவம் என்கிற வரையில் கொண்டு

Koviloor Digital Library

விட்டிருக்கிற ஈச்வரனுக்குத்தான் அதற்கும் அடுத்த ஸ்டேஜான அருவமாக வைத்தும் கோவில் கட்டினால் பொருத்தமாயிருக்கும்; ஜனங்களின் மனோபாவத்துக்கும் அதுவே ஸரியாய் வரும்.

"ஆனபடியால் நீ இங்கே ஆவுடையாரை மட்டும் மூலஸ்தானத்தில் வைத்து, அதற்கு மேல் லிங்கம் ப்ரதிஷ்டை பண்ணாமல் காலியாகவே விட்டுக் கோவில் கட்டு. காலி என்பதால் சூன்யமில்லை, அதுதான் நம் இத்தனை ஜீவாத்மாக்களுக்கும் மூலம் என்று ஜனங்களுக்குப் புரிவிப்பதாக அதற்கு ஆத்மநாதஸ்வாமி என்று பெயர் வை.

"நான் சொன்னேனே என்று இப்பவே காரியத்தில் இறங்காதே! இங்கே ஒரு குருந்த மரத்தின் கீழே என் தகப்பனார் குரு ஸ்வரூபத்தில் வந்து ஆத்மாவை நீ அநுபவத்தில் தெரிந்து கொள்ளும்படியாக — அதாவது, நம்முடைய ஆத்மா பரப்ரஹ்மமே என்பதை நீ அநுபவமாக அறியும்படி — உபதேசிப்பார். அதற்கப்புறமே ஆலய நிர்மாணம் பண்ணு" என்று சொல்லி விட்டுப் பிள்ளையார் மறைந்து விட்டார்.

இப்படி ஒரு ஆனை சொன்னதன் மேல்தான் குதிரைக்கான பணத்தில் மாட்டுக்குக் கோவில் எழும்பிற்று! ஆவுடையார் என்பது மாடுதான்; பரமேச்வரனின் ரிஷபம்! ஆ-மாடு; உடையார் என்றால் ஸ்வாமி. கோவில் கல்வெட்டுக்களில் பார்த்தால் 'ஸ்வாமி' என்பதற்குத் தமிழ் வார்த்தையாக 'உடையார்' என்றே போட்டிருக்கும்: ராஜராஜீச்சுரமுடையார், திருநாகேச்சுரமுடையார் என்கிற மாதிரி. மற்ற மாடுகளுக்கெல்லாம் தலைமையில் அவற்றுக்கு ஸ்வாமியாக உள்ள ரிஷபந்தான் ஆவுடையார். மற்ற ஊர்களில் அந்த ரிஷபத்தின் மேலே லிங்க ரூபத்தில் பரமேச்வரன். ஜீவாத்மாக்களான அத்தனை பசுக்களுக்கும்

Koviloor Digital Library

உடையாரான பசுபதி மாட்டு ஜாதிப் பசுபதியான ஆவுடையார் மேலே உட்கார்ந்திருப்பார்.

பிள்ளையார் சொன்னபடியே அப்புறம் ப்ராம்மண குருவாக ஈச்வரன் வர, அவரிடம் வாதவூரர் உபதேசம் பெற்றுக் கொண்டு, ஆவுடையாரை மட்டும் வைத்துக் கோவில் கட்டினார். ஞானாநுபூதி பெற்றவுடனேயே அவருக்கு மணி மணியாகத் திருவாசகம் பாட வந்ததால் மாணிக்கவாசகர் என்ற புதுப் பெயரும் உண்டாகி விட்டது.

அரூப ஸ்வாமி! ஆவுடையார் மட்டுமே மூல ஸ்தானத்தில் இருந்ததால் ஜனங்கள் அந்தத் திருப் பெருந்துறைக்கும் 'ஆவுடையார் கோவில்' என்று புதுப் பெயர் வைத்துவிட்டார்கள்.

அம்பாளும் அங்கே அரூபந்தான். இவர் ஆத்மநாதர் என்றால் அவள் யோகாம்பிகை.

இப்படி அவர்களை அரூபமாக விட்டதற்கு வட்டியும் முதலுமாக மாணிக்கவாசகர் என்ன பண்ணினாரென்றால் கோவில் கட்டச் சொன்ன பிள்ளையாருக்கே அங்கே மூன்று மூர்த்திகள் சேர்ந்தாற்போல் வைத்து விட்டார். அவர் இவருக்கு மும்மூர்த்திகளாக மூன்று ரூபத்தில் தரிசனம் தந்ததால் இவரும் அவருக்கு மூன்று மூர்த்தி வைத்து விட்டார் — மும்மூர்த்திகளும் அவரே என்று காட்டுவதாக.

இரட்டைப் பிள்ளையார் பல ஊரில் உண்டு. ஆவுடையார் கோவிலில் மட்டும் மூன்று பிள்ளையார்!

'திருமுறை' கிடைக்கச் செய்தவர்

தேவார கர்த்தா, திருவாசக கர்த்தா கதைகள் சொன்னேன். அந்தத் தேவாரப் பதிகங்கள் அத்தனையும் நமக்குக் கிடைக்கும்படிப் பண்ணியதும் பிள்ளையார்தான்!

Koviloor Digital Library

அபயகுல சேகரன் என்று சைவ நூல்கள் சொல்லும் ராஜராஜ சோழனுடைய காலத்தில் அங்கங்கே யாரோ சிலர்தான் ஒன்றிரண்டு தேவாரப் பதிகங்கள் தெரிந்து ஓதிக் கொண்டிருந்தார்கள். சிவ பக்தியில் ஊறி, சிவபாதசேகரன் என்றே பெயர் வைத்துக் கொண்டிருந்த ராஜராஜனுக்கு எப்படியாவது எல்லாத் தேவாரங்களையும் கண்டுபிடித்து ப்ரகாசப் படுத்த வேண்டுமென்று ஒரே துடிப்பாக இருந்தது. 'எப்படியாவது' என்றால் நடைமுறையில் எப்படி? அதுதான் தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

அப்போது அவனுக்கு ஒரு நல்ல சேதி வந்தது. "சிதம்பரத்துக்குக் கிட்டே திருநாரையூர் என்ற ஊரில் நம்பியாண்டார் நம்பி என்று ஒரு மஹான் இருக்கிறார். அவருக்குப் பிள்ளையார் ப்ரத்யக்ஷம். அவர் ஆதி சைவர். அதாவது குருக்கள் ஜாதி. அவருடைய பால்யத்தில் தகப்பனார் ஒருநாள் வெளியூர் போனபோது, தான் பூஜை பண்ணும் பிள்ளையாருக்கு இவரைப் பூஜை பண்ணச் சொன்னாராம். இவரும் அப்படியே பண்ணிப் பிள்ளையாருக்கு நைவேத்யம் பண்ணினாராம். சிறு பிராயமானதால், பிள்ளையார் நிஜமாகவே நைவேத்யத்தைச் சாப்பிடுவார் என்று நினைத்தார். அவர் அப்படிப் பண்ணாததால் ஒரே அழுகையாய் அழுது, கல்லிலே தலையை மோதிக் கொண்டு ப்ராணனை விட்டுவிடப் பார்த்தார். உடனே பிள்ளையார் ப்ரஸன்னமாகி அவர் ஆசைப்பட்டாற்போலவே அத்தனை நைவேத்யத்தையும் சாப்பிட்டாராம்!

"இதற்குள் பள்ளிக்கூட வேளை தப்பி விட்டதால் நம்பி மறுபடி அழ ஆரம்பித்தாராம். உடனே பிள்ளையாரே அவருக்கு வித்யாப்யாஸம் பண்ணி ஆத்ம வித்யை உள்பட எல்லாக் கல்வியிலும் தேர்ச்சி பெறச் செய்து விட்டாராம். அந்தப் பெரியவர் பிள்ளையாரோடு ஸஹஜமாகப்

Koviloor Digital Library

பேசுகிறாராம். அவரைக் கேட்டால் தேவார ஸமாசாரம் தெரியலாம்'' என்று ராஜராஜ சோழனுக்குச் சேதி சொன்னார்கள்.

“அப்படியா?” என்று அவன் உடனே நம்பியுடைய பிள்ளையாருக்காக ஏகப்பட்ட நைவேத்யங்கள் ஸித்தம் செய்து கொண்டு அவரிடம் ஓடினான்.

சொல்ல மறந்துவிட்டேன் — அந்த விநாயக மூர்த்திக்குப் ‘பொல்லாப் பிள்ளையார்’ என்று பெயர்; ‘பொல்லா’ என்றால் ‘துஷ்ட’ என்று அர்த்தமில்லை. அவர் துஷ்ட ஸ்வாமியே இல்லை; இஷ்ட ஸ்வாமிதான்! பின்னே என்ன அர்த்தம் என்றால்: பொள்ளுதல், பொல்லுதல், பொளிதல் என்றெல்லாம் சொன்னால் ‘செதுக்குவது’ என்று அர்த்தம். சிற்பி எவனும் செதுக்காமல் ஸ்வயம்-பூ என்று தானாகவே உண்டாகிற விக்ரஹங்களுக்குப் பொல்லா மூர்த்திகள் என்று பேர். அப்படித்தான் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரும்.

ராஜராஜசோழன் ஸமர்ப்பித்த நைவேத்யங்களை நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாருக்குப் படைத்தார். பிள்ளையார் வாஸ்தவமாகவே தும்பிச்சுக் கையை நீட்டி அதெல்லாவற்றையும் போஜனம் பண்ணினார்! ராஜாவுக்கு ஒரே சந்தோஷமாகிவிட்டது. நம்பியாண்டார் நம்பியிடம், “உங்களுடைய இந்த ப்ரத்யக்ஷ தெய்வத்தைக் கேட்டு மூவர் தேவாரங்கள் முழுக்கவும் எங்கே கிடைக்கும் என்று தெரிந்து கொண்டு சொல்ல வேணும். இன்னொரு ஆசை; இப்ப கிடைத்துள்ள தேவாரத்தில் ‘திருத்தொண்டத் தொகை’ என்று 63 நாயன்மார் பேர்களைத் தெரிவிப்பதாக ஸுந்தரர் பாடல் இருக்கிறதோல்லியோ? அந்த மஹாநுபாவர்களின் திவ்ய சரித்ரங்களையும் பிள்ளையார் வெளியிட்டாரானால் லோக மங்களமாக எல்லாருக்கும் ப்ரசாரம் பண்ணலாம். அநுக்ரஹிக்கணும்” என்று ப்ரார்த்தித்துக் கொண்டான்.

Koviloor Digital Library

இவன் சொன்னதை அவர் பிள்ளையாரிடம் சொல்லி, ''அநுக்ரஹிக்கணும்'' என்று வேண்டிக் கொண்டார்.

இந்தத் தமிழ்த் தேசத்துக்கு, பக்த லோகத்துக்கே, பரமோபகாரமாகப் பிள்ளையாரும் அந்த இரண்டு விஷயங்களையும் தெரிவித்தார். "சிதம்பரத்திலே நடராஜா ஸந்நிதானமான கனகஸபைக்கு மேலண்டையிலே ஒரு அறை இருக்கிறது. அதிலேதான் மூவரும் தங்களுடைய தேவாரச் சுவடிகளை வைத்திருக்கிறார்கள். கதவில் அவர்களே இலச்சினை வைத்திருக்கிறார்கள். (லாஞ்சனை என்ற ஸம்ஸ்க்ருத வார்த்தையைத் தமிழில் இப்படிச் சொல்வது. அதுதான் அதிகாரப்பூர்வமான அடையாளம்; முத்திரை முதலானது.) அப்படி அந்தச் சிதம்பர மேலண்டை அறையில் தேவார மூவரே அதிகார பூர்வ அடையாளமாகத் தங்களுடைய கையை அழுத்திய இலச்சினைகளை வைத்து மூடியிருக்கிறார்கள். அங்கே போய்க் கதவைத் திறந்து சுவடிகளை எடுத்துக்கோ'' என்றார்.

அறுபத்து மூவர் சரித்ரங்களையும் சொன்னார். 'நம்பிக்கு தும்பி சொன்னார்' என்பார்கள். தும்பி என்றால் யானை. அதன் கைதான் தும்பிக்கை. ஸாக்ஷாத் கணபதியே சரித்ரம் சொன்ன பெரிய பெருமை நம்முடைய நாயன்மார்களுக்கு இருக்கிறது! அவர் சொன்னதை நம்பி பிற்பாடு 'திருத்தொண்டர் திருவந்தாதி' என்ற நூலாகப் பாடினார். திருத்தொண்டத் தொகையும், இந்தத் திருவந்தாதியுந்தான் பின்னாளிலே சேக்கிழார் விஸ்தாரமாகச் செய்த 'பெரிய புராண'த்துக்கு ஆதார நூல்கள். அதிருக்கட்டும்.

தேவாரக் கதை என்ன ஆச்சு என்றால், நம்பி சொன்னபடியே ராஜராஜ சோழன் சிதம்பரத்துக்கு ஆசை ஆசையாக ஓடினான்,

Koviloor Digital Library

ஆனால் அங்கேயுள்ள நிர்வாஹஸ்தர்களான தீக்ஷிதர்களோ, மூவர் கதவை மூடி ஸீல் வைத்தார்களே தவிர அதை எப்போது திறக்கணும் என்று ஏதொன்றும் சொன்னதாகத் தெரியாததாலே, இப்போது தாங்கள் எப்படி அதைத் திறக்கப் பெர்மிஷன் தருவது என்று கேட்டார்கள். "அந்த மூவரே திரும்பி வந்தாலொழிய நாங்களாக அப்படிச் செய்ய 'அதாரிடி' இல்லையே!" என்று கை விரித்து விட்டார்கள்!

சோழ ராஜாவுக்குச் சொரேலென்றாகி விட்டது. ஆனால் ஒரு நிமிஷந்தான்! சட்டென்று அவனுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று. அவன் மஹாவீரனும், பக்திமானும் மட்டுமில்லை; புத்திமானும்.

என்ன யுக்தி என்றால்:

ஆலய விக்ரஹங்கள் என்கிறவை வெறும் பொம்மை இல்லை; சின்னமோ, ஸிம்பலோகூட இல்லை; அவை ப்ராண ப்ரதிஷ்டை ஆனவையாதலால் ப்ராணனுள்ள, உயிருள்ள மூர்த்திகளே என்பதுதான் ஆஸ்திகக் கொள்கை. மநுஷ ரூபத்தில் தெய்வம் வந்தால் அவதாரம் என்கிறாற்போல விக்ரஹங்களையும் 'அர்ச்சாவதாரம்' என்றே சொல்வது வழக்கு; முக்யமாக வைஷ்ணவ ஸித்தாந்தத்திலே. அர்ச்சா என்றால் விக்ரஹம்.

இதை வைத்தே ராஜராஜ சோழன் யுக்தி பண்ணினான். என்ன யுக்தி என்றால், மூவர் விக்ரஹங்களுக்கு விமரிசையாகப் புறப்பாடு செய்வித்து அந்தக் கனகஸபா மேலண்டை அறை வாசலில் கொண்டு வந்து நிறுத்தினான். தீக்ஷிதர்களிடம், "முத்ரை வைத்தவர்களே வந்துவிட்டார்கள். கதவைத் திறக்கணும்" என்று கேட்டுக்கொண்டான்.

எந்த மனஸையும் தொட்டுவிடும்படி இருந்தது, அவனுடைய பக்தியும், தேவார ஸொத்தை இந்தத் தமிழ் தேசத்துக்கு மீட்டுத் தருகிறதிலிருந்த ஆர்வமும்.

Koviloor Digital Library

தீக்ஷிதர்கள் மனஸ் உருகிக் கதவைத் திறந்தார்கள்.

உள்ளே போய்ப் பார்த்தால்! 'ஐயோ, இத்தனை ப்ரயாஸைப் பட்டும் கடைசியில் மலையைக் கெல்லி எலியைப் பிடித்தாற்போல, சுவடிகளையெல்லாம் ஒரேயடியாகச் செல்லு மூடிப் போயிருக்கிறதே!' என்று எல்லாரும் வருத்தப்படும்படிச் சுவடிக் கட்டெல்லாம் செல்லரித்து மூடிக் கிடந்தது. மொத்தம் மூவர் பாடின லக்ஷத்து சொச்சம் பதிகங்களிலே எண்ணூறுக்கும் குறைச்சலானவைதான் அரிபடாமல் தப்பித்திருந்தன.

எல்லாரும் சோகாக்ராந்தர்களாக இருக்கும்போது அசரீரி கேட்டது. "மலையைக் கெல்லி எலி இல்லை; இந்த எலியே வரப்போகிற காலங்களில் பிறக்கப் போகிறவர் களுக்கு யானைக்கு மேலே! அது பொதுவிலே அவஸர யுகமாயிருக்கும். அந்த அவஸரத்திலும் சினிமா, கிரிக்கெட், தண்டப்பேச்சு, பாலிடிக்ஸ், பத்திரிகை என்றால் மட்டும் மணிக் கணக்காக பொழுது இருக்குமே தவிர, இதற்கெல்லாம் சேர்த்து வைத்து மற்ற விஷயங்களில் ஒரே பறப்பாக இருக்கும். அதிலேயும் ஆத்ம ஸம்பந்தமான விஷயமென்றால் கேட்கவே வேண்டாம்! லக்ஷம் பதிகம் என்றால் யாரும் கிட்டேயே போகமாட்டார்கள்! அதனால்தான் திவ்ய ஸங்கல்பத்தினால் இப்படி ஆச்சு. அது மாத்திரமில்லாமல் இந்த 796 பதிகங்களே ஒரு ஜீவனைக் கடைத்தேற்றவும் போதும்" என்று அசரீரி சொல்லிற்று. அது சுருக்கமாக 'ஹின்ட்' பண்ணினதில் என் சரக்கும் சேர்த்துச் சொன்னேன்!

தெய்வ ஸங்கல்பம் என்றவுடன் எல்லாரும் ஸந்தோஷமாக ஏற்றுக் கொண்டார்கள்.

வரப்போகிற காலத்தைப் பற்றி அசரீரி ஒரு மாதிரி 'ஹின்ட்' பண்ணி விட்டதால், அதன் நல்லதற்கு இன்னுங்கூட அநுகூலமாக ஒரு ஏற்பாடு பண்ணினால் நன்றாயிருக்குமே என்று சோழ ராஜா நினைத்தான்.

Koviloor Digital Library

'வருங்காலத்திலே தேசம், லோகம் எப்படி வேணா போகட்டும். நாம 'ஐடியாலஜி'ன்னு ஏதோ ஒண்ணை ஜோடிச்சு வெச்சுண்டு, அதையே வீம்பாப் பிடிச்சுண்டு தற்போதைக்குக் கார்யமாக்கிட்டா போறும்; அதிலே நமக்கு மட்டும் பிற்காலத்துக்காகவும் மூட்டை கட்டிண்டா போறும்' என்று குடியரசுகள் நடக்கும் தற்காலத்தில், பூர்வ கால முடியரசர்கள் எப்படி இருந்திருக்கிறார்களென்று பார்த்தால் ஆச்சர்யமாயிருக்கிறது!

எண்ணூறு பதிகங்களையுங்கூட ஒருமொத்தமாகப் பார்த்தால் எதிர்கால ஜனங்கள் ஜாஸ்தி என்று தள்ளி விடுவார்களோ என்று ராஜா பயந்து, அதையும் பல பாகங்களாக க்ளாஸிஃபை பண்ணச் சொல்லி நம்பியாண்டார் நம்பியைக் கேட்டுக் கொண்டான்.

அவரும் அப்படியே தேவாரப் பதிகங்களையும், இன்னும் அப்போது தெரிந்திருந்த மற்ற சைவப் பெரியார்களுடைய பாடல்களையும் 'திருமுறைகள்' என்ற பேரில் பதினொன்றாகப் பகுத்துக் கொடுத்தார். ஸம்பந்தர் தேவாரம் முதல் மூன்று திருமுறை. அப்பருடையது அடுத்த மூன்று. ஏழாந் திருமுறையாக ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் பாடல்கள். மாணிக்கவாசகரின் திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாந்திருமுறை. திருமாளிகைத் தேவர், சேந்தனார், கண்டராதித்தர் என்று ராஜ ராஜனுடைய மூதாதையாயிருந்து பக்திப் பாக்கள் பாடியவர், இன்னும் வேணாட்டடிகள், சேதிராயர் முதலான* மொத்தம் ஒன்பது அடியார்களுடைய திருவிசைப்பாக்கள் என்கிற பாடல் வகைகளை ஒன்பதாம் திருமுறையாக வைத்தார். சேந்தனாரின் ப்ரஸித்தி பெற்ற 'திருப்பல்லாண்டு'ம் இந்தத் திருமுறையைச் சேர்ந்ததுதான். திருமூலர் 'திருமந்திரம்' பத்தாம் திருமுறை.

* கருவூர்த் தேவர், நம்பிகாடவ நம்பி, திருவாலியமுதர், புருடோத்தம நம்பி ஆகியோர்.

Koviloor Digital Library

கடைசியாகப் பதினோராம் திருமுறையில்தான் நம்பியாண்டார் நம்பி தாமே பொல்லாப் பிள்ளையார் மேல் பாடியிருந்த 'இரட்டை மணி மாலை'யைச் சேர்த்தார். அதோடு முன்னே 'ஒரு கோடு, இரு செவி, முக்கண்' என்று வருவதாக 'மூத்த நாயனார் இரட்டை மணி மாலை' என்று ஒன்று சொன்னேனே – அதைப் பண்ணினது கபிலதேவர் – அது, அதிராவடிகளுடைய 'மூத்த பிள்ளையார் மும்மணிக் கோவை', ஆக, மொத்தம் மூன்று விநாயகத் துதிகளை ஒன்று சேர்த்தார். இரட்டை மணி, மும்மணி என்றெல்லாம் ஏன் பெயர் என்றால் அவற்றில் எல்லாப் பாடல்களும் ஒரே சந்தத்தில் இருக்காது. இரட்டை மணி மாலையில் இரண்டு விதமான சந்தங்களுள்ள பாக்கள் மாறி மாறி வரும். 'மும்மணி'யில் மூன்று விதமான சந்தங்களில் அமைந்த பாடல்கள் வரும். பரமேச்வரனின் புத்ர சிகாமணிக்குத் தினுஸு தினுஸாக மணிமாலைகள்!

இது தவிர அந்த (பதினோராம்) திருமுறையில் நக்கீரருடைய 'திருமுருகாற்றுப்படை' .... அண்ணா-தம்பிகளைப் பிரிக்கப்படாது என்ற நியாயப்படி, விநாயகத் துதிகள் உள்ள திருமுறையிலேயே முருகன் துதியும்!.... திருமுருகாற்றுப்படை பாடிய அந்த நக்கீரருடைய இதர நூல்கள்; சோழர்களில் கண்டராதித்தர் மாதிரிப் பல்லவர்களில் ஐயடிகள் காடவர்கோன் என்று ஒரு பெரிய சிவபக்தர், அறுபத்து மூவரிலேயே ஒருவர், அவர் பண்ணின 'திருவெண்பா'; காரைக்காலம்மையார்; சேர ராஜாவும் அறுபத்து மூவரில் ஒருத்தரும் ஸுந்தரர் ஸகாவுமான சேரமான் பெருமாள்; எல்லோருக்கும் தெரிந்த பட்டினத்தார்; கல்லாடனார் முதலான* பன்னிரண்டு அடியார்களின் பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

---

* திருவாலவாயுடையார், பரண தேவர், இளம்பெருமானடிகள் ஆகியோர்.

Koviloor Digital Library

அருள்மொழியும் இரு அருண்மொழிகளும்

பன்னிரண்டு அடியார்களுடன் நம்பியாண்டார் நம்பி முடித்தாரென்றால், அவர் வகுத்த திருமுறைகளும் பிற்பாடு பதினொன்றோடு இன்னொன்று கூட்டிக் கொண்டு பன்னிரண்டாகப் பூர்த்தியாயிற்று. ராஜராஜ சோழனுக்குப் பின்ஸந்ததியான அநபாய சோழனின் காலத்தில் அறுபத்து மூவர் சரித்திரத்தை, hagiography literature-ல் [மஹான்கள் சரித இலக்கியத்தில்] 'லோகத்திலேயே இதற்கு ஸமானமில்லை' என்று எல்லோரும் கொண்டாடும் படியாகத் 'திருத்தொண்டர் புராணம்' என்று சேக்கிழார் — அநபாய சோழ மஹாராஜாவின் பிரதம மந்திரியா யிருந்தவர் — பாடிக் கொடுத்தார். 'பெரிய புராணம்' என்று அதைத்தான் சொல்கிறோம். அதுவே பன்னிரண்டாம் திருமுறை.

அந்த அநபாயன்தான் இரண்டாவது குலோத்துங்கன் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

ஒரு பொருத்தம் என்னவென்றால் பதினோரு திருமுறைகளை வகுக்கச் செய்த ராஜராஜ சோழனுக்கு அப்பா அம்மா வைத்த பேர் — இயற்பெயர் — அருண்மொழி என்பது; பன்னிரண்டாம் திருமுறை பாடின சேக்கிழாரின் இயற்பெயரும் அருண்மொழிதான். தமிழ் மக்களை வாழ வைக்கும் அருள் மொழிகளையெல்லாம் ஒரு அருண்மொழி கண்டுபிடித்துக் கொடுத்தான். இன்னொரு அருண்மொழி அந்த அருள் மொழி அருளியவர்களின் சரித்ரங்களைப் படைத்துக் கொடுத்திருக்கிறார்.

இதற்கெல்லாம் அருளியவர் விக்நேச்வரர். தமிழ் மக்களுக்கு இஹம்-பரம் இரண்டும் கிடைப்பதற்கு அவர் செய்திருக்கிற உபகாரம் வேறு யாரும் செய்யவில்லை.

Koviloor Digital Library

Koviloor Digital Library

குரு

Koviloor Digital Library

Koviloor Digital Library

குரு–சிஷ்ய உறவு[1]

குரு என்பவர் எப்படி இருக்க வேண்டும், சிஷ்யன் எப்படி இருக்க வேண்டும் என்று நம்முடைய பெரியவர்கள் — உபநிஷத்துக்களைக் கொடுத்திருக்கிற ரிஷிகளிலிருந்து ஆரம்பித்துப் பல பெரியவர்கள் — சொல்லியிருக்கிறார்கள். அதில் கொஞ்சம் சொல்லலாமென்று [உத்தேசம்][2].

'குரு' இலக்கணச் செய்யுட்கள்

குரு, ஆசார்யர், தேசிகர், உபாத்யாயர், அத்யக்ஷகர், புரோஹிதர் என்றிப்படி நமக்கு அறிவைத் தருகிறவருக்குப் பல பேர் சொல்கிறோம். வெறுமே அறிவைத் தராமல் நல்லறிவைத் தருகிறவராக அவர் இருக்க வேண்டும் என்பதே ஆதிகாலம் தொட்டு நம் மரபு வலியுறுத்தி வந்திருக்கிற விஷயம். அதாவது அறிவை வளர்த்துக் கொடுக்கும்போதே, கெட்டதற்கு அந்த அறிவு ப்ரயோஜனப்படாமல் தர்ம வழியிலேயே போய் நல்லதைச் செய்யும்படி ரூபம் பண்ணித் தருகிறவரே குரு, இன்னும் ஆசார்யர், அத்யக்ஷகர், உபாத்யாயர், புரோஹிதர், தேசிகர் எல்லாம். இந்த எல்லாப் பெயர்களையும் நாம் ஒரே அர்த்தத்தில் உபயோகப்படுத்துகிறோம். ஆனால் இவற்றில் ஒன்றுக்கொன்று வித்யாஸம் சொல்லிப் பாகுபடுத்தியும்

---

1. 'தெய்வத்தின் குரல்' முற்பகுதிகளில் 'குரு' என்ற பிரிவிலுள்ள உரைகளிலும் இப்பொருள் பற்றிய விவரங்கள் விரவி வரும்.

2. அந்தக் 'கொஞ்சம்' நிறையவாகவே விரிந்தது. அதில் சில விஷயங்கள் முற்பகுதிகளில் வந்துவிட்டதால் எஞ்சியதும், இதில் வரும் விஷயங்கள் தொடர்பாகவே பிற சந்தர்ப்பங்களில் ஸ்ரீசரணர் கூறியவற்றில் பல சேர்த்தும் இங்கு தரப்படுகிறது.

Koviloor Digital Library

தனித் தனி லக்ஷணம், 'டெஃபனிஷன்' சொல்லியிருக்கிறது. அடிப்படையில் இந்த எல்லாருடைய கார்யமும் சிஷ்யரை நல்ல வழியில் போகச் செய்வதே என்றாலும் அதைச் செய்வதில் உள்ள வித்யாஸமான முறைகளை வைத்து வெவ்வேறாக டெஃபனிஷன் கொடுத்திருக்கிறது.

இன்னொரு தினுஸாகவும் சொல்லலாம். அதாவது, நல்வழிப்படுத்துகிற அந்த ஒரே பெரியவரின் ஒவ்வொரு விதமான கார்யத்தை — ஒவ்வொரு 'ஆஸ்பெக்'டை — வைத்து ஒவ்வொரு பெயரைக் கொடுத்து அதற்கான டெஃபனிஷன்கள் கொடுத்திருக்கிறது என்று சொல்லலாம்.

'குரு' என்பதற்கு 'இருட்டைப் போக்கடிக்கிறவர்' என்று அர்த்தம் செய்திருப்பது ஸாதாரணமாக ஓரளவு வித்வான்களாக உள்ள எல்லாருக்கும் தெரிந்ததே.

கு–காரஸ்–த்வந்தகார: ஸ்யாத் ரு–காரஸ்–தந்நிவர்தக: |
அந்தகார–நிரோதித்வாத் குருரித்யுச்யதே புதை: ||

என்று ச்லோக ரூபத்தில் டெஃபனிஷன் இருக்கிறது. " 'கு' என்பது அந்தகாரம். 'ரு' என்பது அதை நிவர்த்தி செய்வது. அந்தகாரத்தை நிவர்த்தி செய்வதாலேயே அப்படிச் செய்கிறவர் குரு என்று புத்திமான்களால் சொல்லப்படுகிறார்" என்று அர்த்தம். அந்தகாரம் என்பது அஞ்ஞான இருட்டுத்தான். அந்தகார நிவர்த்தி என்பது ஞான ஜ்யோதிஸ்ஸான ப்ரம்மத்தை அநுபவிப்பதுதான். 'ஹை லெவ'லில் ப்ரஹ்ம வித்யையையே கல்வியாகச் சொன்னால் அந்த அர்த்தம். ஸாதாரணமாக எல்லாரும் பெறுகிற கல்வி என்கிறபோது, அநேக ஸமாசாரங்களில். ஸயன்ஸ், ஆர்ட் என்கிறவற்றில், அறிவின்மை என்ற இருட்டிலுள்ளவருக்கு அந்தத் துறையில் அறிவொளியைத் தருபவர் குரு என்று அர்த்தம்.

இன்னொரு டெஃபனிஷனும் இருக்கிறது — அபூர்வமாகச் சில பேருக்கு மட்டுமே தெரிந்தது:

Koviloor Digital Library

ககார: ஸித்தித: ப்ரோக்தோ ரேப: பாபஸ்ய ஹாரக: |
உகாரோ விஷ்ணுரவ்யக்தஸ்–த்ரிதயாத்மா குரு: ஸ்ம்ருத: ||

'குரு' என்ற வார்த்தையில் முதலில் 'க'காரமும் 'உ' காரமும் சேர்ந்து 'கு'; அப்புறம் 'ர'வும் 'உ'வும் சேர்ந்து 'ரு'. இப்படி க, உ, ர, உ என்ற நாலு சப்தங்களாக அந்த வார்த்தையைப் பிரித்து, 'க'வுக்கு இன்ன தாத்பர்யம், 'ர'வுக்கு இன்ன, 'உ'வுக்கு இன்ன என்று ச்லோகத்தில் விளக்கம் கொடுத்திருக்கிறது.

க, ர, உ ஆகிய மூன்றுக்கும் என்ன அர்த்தமோ அதுவே ரூபமாக அமைந்தவர்தான் குரு என்று முடித்திருக்கிறது: **த்ரிதயாத்மா குரு: ஸ்ம்ருத:** 'அம் மூன்றும் ஒன்றுபட்டதாக 'குரு' என்ற வார்த்தை நினைக்கப்படுகிறது.'

'க' : ஸித்தியளிப்பது

'க' என்பது ஸித்தி தருவது. ஸித்தி என்றால் லக்ஷ்யத்தை ஸ்திரமாக ஸாதித்துக் கொள்வது. எந்த வித்யையைக் கற்றுக் கொண்டாலும் அதன் லக்ஷ்யத்தைப் பிடித்து, எந்நாளும் நழுவாமல் தக்க வைத்துக் கொள்வது ஸித்தி.

அக்ஷரங்களுக்கு அந்தர்கதமாக [உள்ளூர] அநேக சக்திகள் உண்டு. அதை வைத்துத்தான் மந்த்ரங்கள் என்ற அக்ஷரக் கோர்வை [கோவை]கள் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வாறு இருப்பதில் **க**(ga) என்ற சப்தத்திற்கே ஸித்தி தருகிற சக்தி இருப்பதாக ச்லோகம் சொல்கிறது: **'ககார: ஸித்தித: ப்ரோக்த:'**.

அப்படிச் சொன்னதால் குரு முறைப்படிச் சொல்லிக் கொடுக்காவிட்டாலும், சிஷ்யன் முறைப்படிக் கற்றுக் கொள்ளாவிட்டாலுங்கூட, அவருக்குச் சொல்லிக் கொடுப்பதில் ஸித்தியும் இவனுக்கும் கற்றுக்கொள்வதில்

Koviloor Digital Library

ஸித்தியும் கிடைத்துவிடும் என்று அர்த்தமாகாது. எப்போதும் யதாவிதியான புருஷ யத்தனம் இருக்க வேண்டும் — நாம் செய்ய வேண்டியதை நன்முயற்சியோடு உரிய முறையில் செய்தேயாக வேண்டும். அப்படிச் செய்தும் அநேக ஸமயங்களில் ப்ரதிபந்தகங்கள் [இடையூறுகள்] ஏற்பட்டு ஸித்தி கிடைக்காமல் தோல்வி ஏற்படுகிற தல்லவா? அப்படி நேராமலிருப்பதற்கு தெய்வாநுகூலம் வேண்டும். அந்த தெய்வாநுகூலத்தை உண்டாக்கித் தரும் பல உபாயங்களில் சப்த சக்தியும் ஒன்று. அதைத்தான் 'க'காரம் செய்கிறது — **ககார: ஸித்தித: ப்ரோக்த:** — 'ககாரம் ஸித்தி தருவது என்று சொல்லப்படுகிறது'......

'க' (ga)-காரத்திற்கு ரொம்பவும் உத்கர்ஷம் [உயர்வு] உண்டு. புனர்ஜன்மா இல்லாமல் பண்ணிக் கொள்வதற்கு, அதாவது மோக்ஷம் அடைவதற்கு க(ga)-வில் ஆரம்பிக்கும் நாலு பேரை ஹ்ருதயத்திலே ஸ்மரித்தால் போதும். என்ன அந்த நாலு?

கீதா கங்கா ச காயத்ரீ கோவிந்தேதி ஹ்ருதி ஸ்திதே |*

கீதை, கங்கை, காயத்ரீ, கோவிந்தன் என்று 'க'காரத்தில் ஆரம்பிக்கிற நாலு பேர்கள்தான். வடக்கத்திக் காரர்களிடம், கார்த்தாலே எழுந்தவுடனே இந்த நாலு பேரைச் சொல்கிற வழக்கம் இருக்கிறது. இங்கே பிறவிப் பயன் என்ற ஜீவித ஸித்தியாகிய பிறவாமையைத் தருகிற நாலே 'க'வில் ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கிறது. நான் சொன்ன குரு லக்ஷண ச்லோகத்தில் பொதுவாக, ககாரம் ஸித்தி ப்ரதம் என்று இருக்கிறது: **ககார: ஸித்தித: ப்ரோக்த:.**

ரேப: பாபஸ்ய ஹாரக: " 'ர' என்ற அக்ஷர சப்தம் பாபத்தைப் போக்குவது."

* பின்பாதி : 'சதுர்–ககார–ஸம்யுக்தே புனர்–ஜன்ம ந வித்யதே.

Koviloor Digital Library

ஸம்ஸ்கிருத 'ர'வும் தமிழ் 'ர'–'ற'க்களும்

அ-காரம், இ-காரம், க-காரம் என்று சொல்கிறாற் போல ர-காரம் என்று சொல்லக்கூடாது; 'ரேபம்' என்றே அந்த எழுத்துக்கு மட்டும் தனிப் பெயர் கொடுத்திருக்கிறது. ம்ருதுவான சப்தமாக இல்லாமல் கொஞ்சம் முரட்டு சப்தமாக இருப்பது ரேபம் என்று விளக்கம் கொடுத்திருக் கிறது.

இதிலிருந்து Linguistics-ல், Semantics-ல், அதாவது பாஷா சாஸ்திரத்தில் ஒரு பெரிய விஷயம் அகப்படுகிறது. [என்னவெனில்:] தமிழில் இடையினம் என்பதைச் சேர்ந்ததாக 'ர' என்று ஒரு ம்ருது சப்தமான எழுத்தும், வல்லினத்தைச் சேர்ந்ததாக 'ற' என்று ஒரு முரட்டுச் சப்த எழுத்தும் இருக்கின்றன. பேச்சு வழக்கில் 'சின்ன ர', 'பெரிய ர' என்கிறோம். 'தமிழிலும், தமிழைப் போல் த்ராவிட பாஷைகளிலேயே இன்னொன்றான தெலுங்கிலுந்தான் வல்லின 'ற' உண்டு; ஸம்ஸ்க்ருதத்தில் கிடையாது' என்று பொதுவாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். பாஷா சாஸ்த்ரஜ்ஞர்கள் [மொழியியல் வல்லுநர்கள்] கூட அப்படிச் சொல்வதாகப் பார்க்கிறேன். வாஸ்தவத்திலோ ஸம்ஸ்க்ருத ர-சப்தம் தமிழில் உள்ள இடையின 'ர'வுக்கும் வல்லின 'ற'வுக்கும் மத்தியிலே உள்ள சப்தமே ஆகும்; வார்த்தையாரம்பத்தில் வருகிறபோது இடையினம் மாதிரியும் மத்தியில் வருகிறபோது வல்லினம் மாதிரியும் அது த்வனிக்கும்.

தமிழில் இடையின ர, வல்லின ற இரண்டுமே வார்த்தையின் ஆரம்ப எழுத்தாக வராது.

ர-ரா-ரி-ரீ... ரௌ வரை எந்த எழுத்துமே வார்த்தை யாரம்பத்தில் வராது. 'ற'விலும் இதேபோல்தான். 'வல்லின 'ற' விஷயம் ஸரிதான். ஆனால் இடையின 'ர'வில்

Koviloor Digital Library

ஆரம்பிப்பதாக அநேக வார்த்தைகள் இருக்கிறதே!' என்று நினைக்கலாம். வாஸ்தவத்தில் அந்த வார்த்தைகள் எல்லாமே ஸம்ஸ்க்ருதம் முதலான பிற பாஷைகளிலிருந்து எடுத்துக் கொண்டதாகத்தான் இருக்கும். முறைப்படி அவற்றைத் தமிழில் எழுதும்போது 'ர'வுக்கு முந்தி, வார்த்தை யாரம்பமாக இ, உ, அ-இப்படி ஒரு எழுத்தைச் சேர்த்துத்தான் எழுதுவார்கள். இரகசியம், இராமன், இலக்குவன், இராவணன், உலோஹம்,..... 'உலகம்' என்கிறது கூட 'லோகம்'தான்....., உரோமம், உருசி, அரங்கன், அரம்பை என்றிப்படித்தான் எழுதுவார்கள்.

ரஸ்தா, ரஜா, ரயில், ரிக்ஷா, ரோஜ்கார், ரோட் இத்யாதி வார்த்தைகள் அந்நிய பாஷைகள்தான்.

தெலுங்கிலே, ஸம்ஸ்க்ருதத்திலிருந்து கடன் வாங்காமல், தெலுங்கு வார்த்தையாகவே 'ர'வில் ஆரம்பிக்கிறதாக வார்த்தைகள் இருக்கின்றன.

ய, ர, ல, வ, ழ, ள என்ற ஆறு இடையின சப்தங்களில் 'வ' ஒன்றைத் தவிர பாக்கி ஐந்திலுமே அகாரத்திலிருந்து ஔகாரம் வரை அதாவது, ய, யா, யி, யீ... யௌ வரை; ல, லா, லி, லீ... லௌ வரை, இப்படியே ர, ழ, ள-விலும் — எந்த சப்தமும் தமிழ் வார்த்தைகளின் ஆரம்பத்தில் வராது... 'யா' மட்டும் கொஞ்சம் விதிவிலக்கு மாதிரி. 'ஆர்' என்பதை 'யார்' என்கிறது. 'நான்' என்பதை 'யான்' என்கிறது. யாக்கை, யாத்தல், தமிழ் தேசத்தின் சிறப்பு வாத்யமான யாழ், யானை — இதை ஆனை என்பதும் உண்டு — இப்படிச் சிலது.

தமிழறிஞர்கள் இயக்கர் [யக்ஷர்], இயமானன் [யஜமானன்], இயமன், உயுத்தம் என்றுதான் யகாரத்தில் வார்த்தை ஆரம்பிக்காமல் எழுதுவார்கள்.

Koviloor Digital Library

உருத்திரன், உருத்திராக்கம் [ருத்ராக்ஷம்] என்றெல்லாமும் பார்க்கிறோம். ரொம்பவும் வழக்கிலுள்ள 'உருவம்' என்பது ஸம்ஸ்கிருத 'ரூபம்'தான்!

க-ச-ட-த-ப-ற என்ற ஆறு வல்லின எழுத்துக்களில் ட (ta, da), ற இரண்டிலும் தமிழ் வார்த்தை எதுவும் ஆரம்பிக்காது. 'ட'வில் தற்போது வழங்குகிற தமிழ் வார்த்தைகள் பிற பாஷை இரவல்தான்.

ங-ஞ-ண-ந-ம-ன என்ற ஆறு மெல்லின எழுத்துக்களில் ங,ண,ன என்ற மூன்றிலும் வார்த்தை ஆரம்பிக்காது.

'ந-ன இரண்டும் ஒரே சப்தமாகத்தானே இருக்கு? எதற்கு இப்படி இரண்டு எழுத்து?' என்று ரொம்பப் பேருக்குத் தெரியவில்லை. வாஸ்தவத்தில் அவை வித்யாஸமான சப்தங்கள்தான். 'ந' என்கிறபோது நாக்கு நுனி பல்லும் மேலண்ணமும் சேர்கிற இடத்துக்குக் கிட்டே பல், அண்ணம் இரண்டையும் தொடணும். 'ன' என்கிறபோது நாக்கு நுனி இன்னும் வளைந்து அண்ணத்தின் உள்பக்கமாக மட்டும் தொடணும். 'அந்த' என்று சொல்லிப் பாருங்கள். அப்போது 'ந்'-னில் நாக்கு எங்கே தொடுகிறதோ அங்கேதான் 'ந' வரிசை பூராவிலும் தொடணும். 'அவன்' என்கிறபோது 'ன்'-னில் நாக்கு தொடுகிற இடத்திலேயே 'ன' வரிசை பூரா தொடணும். இது தமிழுக்கே உரியதான சப்தம்.... 'ந' பல்லை நாக்கு தொடுகிற dental; 'ண' அண்ணத்தைத் தொடுகிற cerebral. தமிழில் மட்டுமே உள்ள 'ன'வும் cerebral மாதிரிதான். 'ந'வுக்கும் 'ண'வுக்கும் நடுவிலுள்ள இடத்தைத் தொட்டால் உண்டாகும் சப்தம்.

இடையின வல்லின 'ர'க்கள் தமிழில் வார்த்தை யாரம்பமாக வராது என்று சொல்லிக் கொண்டிருந்தேன். இரண்டுமே வார்த்தை மத்தியில், [சிரித்து] அதாவது இடையில் 'இடை'யினமாகத்தான் வரும்!

Koviloor Digital Library

ஸம்ஸ்க்ருத 'ர' பொதுவாக நம்முடைய இடையின-வல்லின 'ர'க்களுக்கு இடைப்பட்ட சப்தம் எனலாம். அதிலும் வார்த்தையாரம்பத்தில் கொஞ்சம் ம்ருது — இடையினம் மாதிரி த்வனிக்கும்; [வார்த்தை] மத்தியில் வரும் போது ஜாஸ்தி வல்லின சப்தமாக இருக்கும்.

இங்க்லீஷ் Christ-ஐ 'கிறிஸ்து' என்று வல்லின 'றி' போட்டுச் சொல்கிற மாதிரியேதான் 'க்ருஷ்ண' என்பதையும் [வல்லினமாகச்] சொல்லவேண்டும் என்று கூட ஒரு அபிப்ராயம் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இங்கிலீஷில் பார்த்தால், world, girl போன்ற வார்த்தைகளில் 'r' ஸைலன்ட் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் இன்னும் பெரும்பாலான வார்த்தை களிலும் வெள்ளைக்காரர்கள் r-ஐ ஒரே மழுப்பாக மழுப்பிக் கொண்டுதான் போவார்கள். ஆனாலும் Christ என்பது மாதிரி 'ர'வைத் தெளிவாக உச்சரிக்கிறபோது நம்முடைய வல்லினம் மாதிரியே சொல்வதால்தான் நாம் 'கிறிஸ்து' என்பது. ஸம்ஸ்க்ருதத்திலும் கிட்டத்தட்ட அப்படித்தான்.

அதாவது, 'ர'காரம் என்காமல் 'ரேபம்' என்று சொல்லும் அக்ஷரம் ஒரு ஸம்ஸ்க்ருத வார்த்தையாரம்பத் தில் வருகிறபோது ம்ருது பண்ணி நம்முடைய இடையினம் மாதிரி சொல்லவேண்டும்; வார்த்தையின் நடுவில் அது வரும்போது வல்லினம் தொனிக்கும்படிச் சொல்ல வேண்டும். இதைத் தெரிந்து கொண்டு சில பேர் 'நாறாயணஸ்வாமி', 'நடறாஜன்' என்று கையெழுத்துப் போட்டுக்கூடப் பார்த்திருக்கிறேன்! இப்படி இரட்டை வித சப்தங்களாக 'ர' மட்டும் இருப்பதால்தான், அது மட்டுமே peculiar-ஆக இப்படி இருப்பதால்தான், மற்ற எழுத்துக்களை அகாரம், தகாரம், நகாரம் என்கிறது போல

Koviloor Digital Library

அதை 'காரம்' சேர்த்துச் சொல்லாமல் 'ரேபம்' என்பது. [சிரித்து] அந்த சப்தத்தின் ஒரு ரூபத்திலேயே காரமும் — முரட்டுத்தனமும் — சேரும்போது பேரில் வேறே 'கார'த்தைச் சேர்த்து [ரகாரம் என்று சொல்லி] ஒரே உறைப்பாக்கிவிட வேண்டாமென்று போலிருக்கிறது!

'ர' : பாபத்தைப் பொசுக்குவது

குரு என்பவர் சிஷ்யனுக்கு ஸித்தி தருகிறார் என்பதை 'க' காட்டுகிறது. அவனுடைய பாபத்தை அவர் போக்குகிறார் என்பதை 'ர' காட்டுகிறது. அக்னியை மூட்டி பஸ்மீகரம் பண்ணுகிறாற்போல இவனுடைய பாபத்தை அவர் பஸ்மமாக்கிவிடுகிறார். 'ரம்' என்பதுதான் அக்னி பீஜம்.

ஒரு ககாரமும், ஒரு ரேபமும், இரண்டு உகாரமும் சேர்ந்து உருவாகியுள்ள 'குரு' என்ற வார்த்தையில் 'க'வுக்கும் 'ர'வுக்கும் விளக்கம் கொடுத்தாயிற்று: க-ஸித்தி தருவது; ர-பாப ஹரணம்; பாபத்தை அக்னியாக பஸ்மம் பண்ணுவது.

பஞ்ச பூதங்களில் ஒவ்வொன்றின் சக்தியையும் உள்ளே அடக்கி வைத்துக் கொண்டிருப்பதாக ஐந்து அக்ஷரங்கள் — பீஜாக்ஷரங்கள் என்று! பீஜம் [என்றால்] விதை என்று தெரிந்திருக்கும். ஒரு சின்னூண்டு பீஜம் எப்படி ஒரு மஹா வ்ருக்ஷத்தை உள்ளே அடக்கிக் கொண்டிருக்கிறதோ அப்படி தெய்விகமான சக்திகளை அடக்கிக் கொண்டிருக்கும் அக்ஷரங்களே பீஜாக்ஷரம் என்கிறவை. அப்படிப் பஞ்ச மஹாபூதங்களுக்கு ஒவ்வொன்று உண்டு. ப்ருத்விக்கு 'லம்'. அப்புக்கு 'வம்'. தேயுவுக்கு 'ரம்' — தேயு என்கிற தேஜஸ் அக்னிதான். வாயுவுக்கு 'யம்'. ஆகாசத்திற்கு 'ஹம்'.

Koviloor Digital Library

ரேபம் அக்னி தத்வம். அக்னி ஒரு வஸ்துவை பஸ்மீகரம் பண்ணுகிற மாதிரி ரேபம் பாபத்தைப் பொசுக்கி விடும். தாரக நாமம் என்று கொண்டாடப்படுகிற ராம நாமா அந்த ரேபத்தில்தான் ஆரம்பிக்கிறது.

'உ' : திருமாலின் வடிவம்

['குரு' என்பதிலுள்ள ஒலிகளில்] 'உ' பாக்கி. முதலெழுத்தான 'கு', கடைசி எழுத்தான 'ரு' இரண்டிலும் 'உ' சேர்ந்திருக்கிறதால் அதற்கு விசேஷம் இருக்கவேண்டும். அதற்கு என்ன அர்த்தம், விளக்கம் சொல்லியிருக்கிறது?

உகாரோ விஷ்ணுரவ்யக்த:

உகாரம் விஷ்ணு ஸ்வரூபம்.

ப்ரணவம் த்ரிமூர்த்தி ஸ்வரூபம். அது அ-உ-ம் என்ற மூன்று எழுத்தால் ஆனது. அ+உ =ஓ. 'ஓ'வுக்கு அப்புறம் 'ம்' — மகாரம். இந்த மூன்று எழுத்துக்கள் முறையே ப்ரம்ம, விஷ்ணு, ருத்ரர்களைக் குறிப்பவை. அதாவது அ என்பது ப்ரம்மா; உ-விஷ்ணு. அதுதான் நமக்கு விஷயம்; ம-ருத்ரன். 'ம்' என்பதை நீட்டி முடிப்பதில் இன்னும் இரண்டு ஸூக்ஷ்ம சப்தங்கள். அவற்றுக்கு சப்தம் என்ற பேரே சொல்வதில்லை; வேறே இரண்டு பேர்கள். அவை [முறையே] மஹேச்வரன், மாயை என்றெல்லாம் சொல்கிற மாயா சக்தியையும், அந்த சக்தியும் போய் ஒடுங்கி விடுகிற ஸதாசிவம் என்ற பரம ஸத்யத்தையும் குறிக்கிறவை. அது இருக்கட்டும்.... கு-ரு என்று இரட்டித்து வருகிற உகாரம் விஷ்ணு ஸ்வரூபம்.

உகாரோ விஷ்ணுரவ்யக்த: — 'விஷ்ணு: அவ்யக்த:' 'உகாரமென்பது அவ்யக்தமாக இருக்கப்பட்ட விஷ்ணு ஸ்வரூபம்'.

Koviloor Digital Library

'அவ்யக்தம்' என்பது என்ன?

'வ்யக்தம்' என்றால் 'வெளிப்பட இருப்பது'. 'அவ்யக்தம்'-வெளிப்படாதது. ப்ரம்மத்திலிருந்து வெளிப்பட்டு அதன் manifestation–ஆக இருக்கப்பட்ட ப்ரபஞ்சம் வ்யக்தமானது. இந்த வ்யக்தம் எதிலிருந்து வந்ததோ அந்த ஆதார ஸத்யம், ப்ரஹ்மம் என்பது, வெளிப்படத் தெரியவில்லை. அதற்குள்ளிருந்துதான் இந்த நானா ப்ரபஞ்சமும் வெளிப்பட்டது. அதோடு, ப்ரபஞ்சத்திற்கு உள்ளேயும், அதிலிருக்கிற ஒவ்வொரு பதார்த்தத்திற்கு உள்ளேயும் அந்த ப்ரஹ்மமே நிறைந்து இருக்கிறது. 'உள்ளே இருக்கு' என்றாலே வெளியில் தெரியவில்லை என்றுதானே அர்த்தம்? அதாவது வ்யக்தமாக இல்லை என்றுதானே அர்த்தம்? வ்யக்தமாக இல்லாததே அவ்யக்தம். அதாவது ப்ரஹ்மந்தான் அது.

ஸாங்கிய சாஸ்திரத்தை அநுஸரித்தே ப்ரஹ்மவித்யா சாஸ்திரம் அர்த்தம் பண்ணும்போது, அவ்யக்தம் என்பதை ப்ரஹ்மமாகச் சொல்லாது. வ்யக்தமான ப்ரபஞ்சத்துக்கு மூலச் சரக்காக, வெளிப்படாமலிருக்கிற மூல மாயை என்றே சொல்லும். ஆனால் அத்தனை டெக்னிகலாக இங்கே அர்த்தம் பண்ணுவது பொருந்தாது. வ்யக்தம்–தெரிகிற லோகம்; அவ்யக்தம்–தெரியாத பரமாத்மா என்பதுதான் பொதுவான அர்த்தம். அதுதான் இங்கே பொருந்துவது.

'விஷ்ணு', 'வாஸுதேவ' பத விளக்கம்

உகாரம் விஷ்ணு என்று சொன்ன மூச்சோடேயே அந்த விஷ்ணுவை அவ்யக்தம், அதாவது, ஸாக்ஷாத் பரப்ரஹ்மம் என்று சொல்லியிருக்கிறது: **உகாரோ விஷ்ணுரவ்யக்த:.**

Koviloor Digital Library

ருத்ரன், அப்புறம் மஹேச்வர-ஸதாசிவர்கள் என்று நான் சொன்னேனே, அந்த எல்லோரையும் அடக்கிக் கொண்டிருக்கும் ப்ரஹ்மமாக விஷ்ணுவையே இங்கே காட்டிக் கொடுத்திருக்கிறது. முதலில் அகாரமாக வந்த ப்ரம்மாவும் அவருக்குள் அடக்கம்தான். இவருக்குப் பிள்ளைதான் அவர் என்பது எல்லாருக்கும் தெரிந்தது தானே?

த்ரிமூர்த்திகளில் மஹா விஷ்ணு, பரமேச்வரன் ஆகிய இரண்டு பேரையுமே பரப்ரஹ்ம ஸ்வரூபமாகச் சொல்கிற வழக்கு தொன்றுதொட்டு இருந்திருக்கிறது. வழக்கிலே இப்படி இருக்கக் காரணம், சொந்த அநுபவத்திலே அநேக மஹான்கள் அப்படி ஸாக்ஷாத்தாகக் கண்டு கொண்டது தான்; தாங்கள் கண்டு கொண்டதை அவர்கள் மந்த்ரமாகவும், ஸ்தோத்ரமாகவும், உபதேச வசனமாகவும் லோகத்துக்குச் சொன்னதுதான்.

'விஷ்ணு' என்பதற்கு நேர் அர்த்தம் — அந்த அக்ஷரங்களை தாது பிரித்துச் சொல்கிற root meaning — 'ஸர்வ வியாபகமாக இருக்கிற தன்மையன்' என்பது. விஷ்ணு என்பதற்கு 'வ்யாபன சீலமுள்ள, அதாவது எங்கேயும் வியாபிக்கிற தன்மைகொண்ட ப்ரஹ்மம், பரமாத்மா, வாஸுதேவன் எனப்படுகிறவன்' என்று ஆசார்யாள் பாஷ்யம் பண்ணியிருக்கிறார்.[1] வாஸுதேவன் என்று ஏன் குறிப்பிட்டுச் சொன்னாரென்றால் அந்தப் பெயரும் ஸர்வ வ்யாபகத்தைச் சொல்வதுதான். [விஷ்ணு] ஸஹஸ்ர நாமத்தில் வாஸுதேவ நாமாவுக்கு ஆசார்யாள் பாஷ்யம் பண்ணும்போது இதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.[2] 'வாஸு' என்பதற்கு 'வஸதி, வாஸயதி,

1. கடோபநிஷத் 1.3.9.
2. ஸஹஸ்ரநாமத்தில் மூன்று இடங்களில் இந்த நாமம் வருவதில் 332–வது நாமமாக வருமிடத்தில்.

Koviloor Digital Library

ஆச்சாதயதி ஸர்வம்' என்று அர்த்தம் கொடுத்துத் தெளிவுபடுத்தியிருக்கிறார். ஸகல வஸ்துக்களிலும் ஸ்வாமி வஸிப்பது 'வஸதி'. ஸகல வஸ்துக்களும் அவருக்குள் வஸிக்குமாறு, அதாவது நிலை பெறும்படி, இருப்பதால் 'வாஸயதி'. இப்படிச் சொன்னால் ஸர்வ வ்யாபகம் என்றுதானே ஆகிறது? ஆனாலும் அந்த வ்யாபகமான பரப்ரஹ்மம் நமக்குத் தெரியாது, வெளிப்படாத அவ்யக்தமாக இருக்கிறது. அதைத்தான் 'ஸர்வம் ஆச்சாதயதி' என்கிறார். 'ஆச்சாதயதி' என்றால் மூடி மறைப்பது. மாயையினால் உண்மைத் தத்வத்தை மூடி மறைப்பது. மறைவாக இருப்பது அவ்யக்தந்தானே?

வேத மரபில் வராத எதையும் ஸொந்தமாகச் சொல்லாத விநயசீலர் நம் ஆசார்யாள். 'தாமாகச் சொன்னதாக இருக்கக்கூடாது, இதுவே ஸத் ஸம்பிர தாயத்தில் வந்துள்ள கருத்து' என்று காட்டுவதற்காக அவர் எல்லா இடத்திலும் பூர்வ சாஸ்திரங்களை மேற்கோள் காட்டுவார். அப்படி இங்கே மஹாபாரதத்திலிருந்தும் விஷ்ணு புராணத்திலிருந்தும் காட்டியிருக்கிறார்.

ஸர்வ வியாபகம் என்கிறபோதே, 'நமக்குத் தெரிவது, அதாவது வெளிப்படத் தெரிவது — வ்யக்தமாக இருப்பது — அந்த ஸர்வந்தான்; அந்த ஸர்வத்தையும் வ்யாபித்திருக் கிற வஸ்து நமக்கு வெளியாகாத அவ்யக்தமாக இருக்கிறது' என்பது தொக்கி நிற்கிறது. யோஜித்துப் பார்த்தால் புரியும். ஒரு வஸ்து குறிப்பிட்ட ஒன்றாக இருக்கிறது என்கிறபோது தான் அது வெளிப்படத் தெரிவது — அந்த ஒன்றாக. அப்படி இல்லாமல் ஸர்வத்திலேயும் வியாபித்திருக்கிறது என்றால் அப்போது அந்த ஸர்வம்தான் வெளிப்படத் தெரிகிற வ்யக்தமாக இருக்கும்; அத்தனையையும் வ்யாபித்திருப்பது அவ்யக்தமாகவே இருக்கும். ஒரு டம்ளர் ஜலம் பூராவிலும் சர்க்கரை கரைந்து வியாபித்திருக்கும் போது அது அவ்யக்தமாகத்தானே இருக்கிறது?

Koviloor Digital Library

அந்த அவ்யக்தமான மறை பொருளே — இரண்டு விதத்தில் மறைபொருள்! மறைந்திருப்பதால் மறைபொருள்; மறையாகிற வேதத்தின் உட்பொருளாக இருப்பதாலும் மறைபொருள்! அப்படிப்பட்ட மறைபொருள்தான் — விஷ்ணு. அந்த விஷ்ணுவின் அக்ஷர ஸ்வரூபமே உ. **உகாரோ விஷ்ணுரவ்யக்த:.**

ஸித்தி தருகிற க, பாபத்தைப் போக்கிப் பரிசுத்தப் படுத்துகிற ர ஆகிய இரண்டோடும், விஷ்ணுவாகவும் அவ்யக்தமாகவும், விஷ்ணுவான அவ்யக்தமாகவும் உள்ள உ சேர்ந்து 'குரு' என்ற வார்த்தை உண்டாகியிருக்கிறது — இப்படி ச்லோகம் சொல்கிறது.

'விஷ்ணுவாக' என்கிறதற்கு 'ஸர்வ வ்யாபகமாக' என்று அர்த்தம் பண்ணும்போது 'ஸர்வம்' என்ற இந்த நானாப்ரபஞ்சம் இருக்கிறது; இதில் அந்தர்யாமியாக அவன் வியாபித்திருக்கிறான் என்று ஆகிறது. இதில் விசிஷ்டாத்வைதம் வந்து விடுகிறது. அந்த விஷ்ணுவை 'அவ்யக்தம்' என்கிறபோது நிர்குண ப்ரஹ்மம் என்றே ஆகும். அது அத்வைதம். உபதேசம் த்வைத அநுபவத்தி லேயே இருக்கிற நமக்குத்தான் என்பதால் த்வைதமும் வந்து விடுகிறது!

குருவின் தன்மையால் சீடன் பெறும் பயன்

குரு நமக்கு லக்ஷ்ய ஸித்தியைத் தருபவர், பாபத்தைப் போக்கிப் பரிசுத்தி செய்கிறவர் என்பதோடு ஸர்வ வியாபகர், ஸர்வமும் அடிபட்டுப் போன நிர்குண அவ்யக்தம் என்று ச்லோகம் டிஃபைன் செய்திருக்கிறது.

"ஸரி, நமக்கு ஸித்தி வேண்டும். [குரு என்பவர்] அதைத் தருகிறார் என்றது ஸரி. பாபம் போனாலொழிய ஸித்தி கிடைக்காதாகையால் அதைப் போக்குபவர் என்றதும் ஸரி. இந்த இரண்டும் நமக்கு ப்ரயோஜனமாவது.

Koviloor Digital Library

ஆனால் அவர் ஸர்வ வ்யாபகர், அதற்கும் மேலே அவ்யக்த வஸ்து என்பதால் நமக்கு என்ன ப்ரயோஜனம்?"

அவர் அப்படி இருக்கிறாரென்று சொன்னாலே அதுதான் நமக்கும் ப்ரயோஜனம்!

'அதெப்படி?'

எப்படியென்றால், புழுவை ஒரு குளவி கொட்டிக் கொட்டி தன் ரூபமாகவே பண்ணிவிடுகிறமாதிரி சிஷ்யர்களைத் தன்னுடைய நிலைக்கே உசத்திவிடத்தான் குரு இருக்கிறார். ஆனபடியால் அவர் இப்படி இப்படி இருக்கிறார் என்று அவரைப் பற்றி லக்ஷணம் சொன்னால், நாமும் அவர் மாதிரியே அந்த லக்ஷணங்களைப் பெறுகிற பெரிய ப்ரயோஜனத்தை அவர் அநுக்ரஹிக்கிறாரென்றே அர்த்தம். அவருடைய ஸ்வரூப லக்ஷணத்தைச் சொன்னாலே நமக்கும் அது ஸித்திக்கிறது என்று ஏற்பட்டு விடுவதால் நமக்கான பெரிய ப்ரயோஜனமும் அதில் வந்து விடுகிறது. 'ஸித்தி ப்ரதம்' என்றுதானே ச்லோகம் ஆரம்பித்தது? அந்த ஸித்தி இதுதான்.

அத்வைதமும் அநுக்ரஹ பாவமும்

அத்விதீயமாக இருக்கும் அவ்யக்த ஸித்தியும் அந்த நிலையிலுள்ள பரஹ்மவித்யா குருவின் அநுக்ரஹத்தால் சிஷ்யருக்குக் கிடைக்கும். அதுதான் உச்சாணியான லக்ஷ்ய ஸித்தி. ஸர்வமும் அடிபட்டுப்போன முடிவான நிலை.

அப்படியென்றால் ஸர்வத்திலும் வியாபிக்கிற விஷ்ணு நிலையை ஏன் சொல்ல வேண்டும்?

இங்கேதான் கருணை, ப்ரேமை என்பது வருகிறது. ஸர்வமும் அடிபட்டுப் போன அத்விதீய ஸ்திதி அடைந்த ஒரு மஹான் அப்படியே தம் பாட்டுக்கு ஸமாதியில் இருந்து கொண்டிருக்காமல் குரு வேஷம் போட்டுக் கொண்டு

Koviloor Digital Library

உபதேசிக்கிறார் என்றால் 'ஸர்வ'த்துக்கு இறங்கி வந்து விட்டாரென்றுதான் அர்த்தம். எதனால் இறங்கினார் என்றால் ப்ரேமையினாலே, கருணையினாலே! தான் பெற்ற இன்பம் வையகமும் பெறணும் என்ற கருணை யினால்தான் இறங்கி வந்து உபதேசிக்கிறார்.

இறங்கத்தான் செய்கிறாரா என்றால் அப்படியும் சொல்ல முடியாது. மனோநாசம் பூர்ணமாகப் பண்ணி ப்ரஹ்மாநுபவம் பெற்றுவிட்ட ஒருவர் அப்புறம் அந்த நிலையிலிருந்து இறங்குவது என்பதே இல்லை.

ஆனாலும், ஏன்-எப்படி என்று தெரியாது; இதுவரை யாரும் அதை விளக்கிச் சொல்லவும் இல்லை — ஸர்வம் அடிபட்டுப் போன நிலைக்குப் போனவர்கள், அந்த நிலையில் இருந்துகொண்டே, நிலை குலையாமலே ஸர்வத்தையும் பார்த்துப் பரம கருணைகொண்டு அதை நல்வழிப்படுத்தணும் என்று நினைத்து குரு வேஷம் போட்டுக்கொண்டு உபதேசித்திருப்பதை நிறையப் பார்க்கிறோம். ஆசார்யாள், சுகாசார்யாள் உள்படப் பல ப்ரம்ம நிஷ்டர்கள் அப்படித்தான் இருந்திருக்கிறார்கள். ஏன், எப்படி என்றால் தெரியாது! அம்பாள் கார்யம்!

கொட்டிக் கொட்டிக் குளவியாக்குகிறதில் ஸத்குருவானவர் ஸத்தான சிஷ்யனுக்கு அத்வைத ஸித்தி தருவதோடு த்வைத லோகத்தில் இருக்கிற பெருவாரி ஜனங்களை லோக ரீதியான வாழ்க்கையிலே தர்மமாக நடக்கப் பண்ணி நல்வழிப்படுத்தவும் செய்கிறார்.

மறுபடி சொல்கிறேன்: குரு லோக ஸம்பந்தப் பட்டிருப்பதால் அவருக்கு அஸலே த்வைத த்ருஷ்டி வந்து விட்டதாகாது. அத்வைதமான ஒன்றையே த்வைத ப்ரபஞ்சத்திற்குள்ளேயும் கண்டு கொள்கிற த்ருஷ்டியோடு தான் குரு கார்யலோகத்தில் இறங்கியிருக்கிற மாதிரி இருப்பது. வாஸ்தவத்தில் இறங்கவில்லை; இறங்கின மாதிரி

Koviloor Digital Library

நமக்குத் தோன்றுகிற நிலை. இது நம்முடைய தோற்றந்தான். அவருடைய உள்ளநுபவத்தில் இறக்கம்-ஏற்றம் எதுவும் கிடையாது. [ப்ரபஞ்சம் என்கின்ற] த்வைதத்தை அஸலே [ப்ரஹ்மத்தினின்று வேறாகப் பிரிந்த] த்வைதமாகப் பார்க்காமல் அதிலும் அத்வைத ப்ரஹ்மமே ஊடுருவி இருப்பதை — வியாபித்திருப்பதை — அதாவது ப்ரஹ்மமே விஷ்ணுவாக எல்லாவற்றிலும் நிறைந்திருப்பதை அநுபவ பூர்வமாகக் கண்டுகொண்டே அவர் குரு வேஷம் போட்டுக் கொண்டு உபதேசிப்பது. அந்தக் கருணையில் ஒரு பெரிய ஆனந்தம் உண்டு. த்வைத ஆனந்தமும் அத்வைத ஆனந்தமும் 'இப்படி' என்று சொல்ல முடியாமல் கலந்த ஆனந்தம்! அத்வைத அஸ்திவாரத்திலேயே எழும்பின ஆனந்தம். அதாவது உச்ச லக்ஷ்யம் நழுவாமலே உண்டான ஒரு வர்ணனாதீதமான ஆனந்தம்!

இதுவும் அவரால் சிஷ்யர்களுக்கு அநுக்ரஹிக்கப் படுகிறது. சிஷ்யரும் குருவாக ஆகி லோகோபகாரமாக உபதேசம் பண்ணும்படி அவர் செய்வதில் இப்படி உள்ளே அத்வைத சாந்தம், வெளியிலே த்வைதம் மாதிரி லோகத்திற்குத் தெரிகிற அநுக்ரஹ க்ருத்யம் என்று ஆகிறது. அப்படித்தான் மஹாவிஷ்ணு லோக பரிபாலனம் பண்ணுவது. இது [குரு செய்வது] சிஷ்யலோக பரிபாலனம்!

குருவாகத் திருமால்

'நாராயணம், பத்மபுவம்' என்று ஆரம்பித்தே நாம் [ஸ்ரீ சங்கர பகவத் பாதர்களைப் பின்பற்றும் ஸ்மார்த்தர்கள்] ப்ரஹ்ம வித்யா ஸம்ப்ரதாயத்திற்கு குரு பரம்பரை சொல்வதால் இங்கே அந்த முதல் குருவான விஷ்ணுவைக் குறிப்பிட்டுச் சொல்வது ரொம்பவும் பொருத்தமாயிருக் கிறது. ஸஹஸ்ர நாமத்தில் அவருக்கு 'குரு' என்றும் 'குரு-தமன்' என்றும் நாமாக்கள் கொடுத்திருக்கிறது.

Koviloor Digital Library

குரு-தமன் என்றால் ஏனைய குருமார்களைவிடச்ரேஷ்டமான உத்தம குரு என்று அர்த்தம். இங்கே [குரு என்பதற்கு] ஆசார்யாள் பாஷ்யம் பண்ணும்போது மஹாவிஷ்ணு ஸர்வ வித்யைகளையும் உபதேசிப்பதால் குருவாகிறார் என்று சொல்லி, அதோடு இன்னொரு அர்த்தமாக ஸர்வ ஜீவர்களையும் பிறப்பிப்பவர் என்பதாலும் அவர் குரு என்று சொல்லியிருக்கிறார்.

இதிலிருந்து பிறப்பைத் தரும் பிதாவை குரு என்று சொல்வதுண்டு என்று புரிந்து கொள்ளலாம். ஸம்ஸ்க்ருத 'லிட்ரேச'ரில் பரிசயமுள்ளவர்களுக்கு நன்றாகத் தெரிந்த விஷயம் — அப்பாவுக்கு குருப் பட்டம் உண்டு என்பது.

பிதா - குரு

'மாதா-பிதா-குரு-தெய்வம்' என்பது எல்லோருக்கும் தெரிந்த பொது வசனம். இதில் மாதா-பிதா இரண்டு பேருமே குருவின் கார்யமான நல்வழிப்படுத்தலையும் செய்பவர்கள்தான். ரொம்பக் குழந்தையாக இருக்கும் போது அம்மா பரம ஹிதமாகக் கொஞ்சம் கொஞ்சம் நல்லதைச் சொல்லிக் கொடுப்பாள். அப்புறம் கொஞ்சம் விவரம் தெரிகிற வயஸிலிருந்து எட்டு வயஸில் உபநயனம் பண்ணி குரு என்றே இருப்பவரிடம் குருகுலவாஸம் பண்ணுவதற்காகக் குழந்தையை ஒப்படைக்கிற வரையில் அப்பா, அம்மாவை விடக் கொஞ்சம் கண்டிப்புக் காட்டி, 'இப்படியிப்படி இருக்கணும்; பண்ணணும்' என்று அநேக நல்ல விஷயங்கள் சொல்லிக் கொடுப்பார். அதனால் அவருக்கே குரு பெயர் ஏற்பட்டிருக்கிறது......

'குரு' என்றால், அக்ஷரம் அக்ஷரமாகப் பிரிக்காமல் நேராக ஒரே வார்த்தையாக அர்த்தம் பண்ணும்போது 'பெரியவர்' என்றே அர்த்தம். அகத்திற்குப் பெரியவர் — head of the family — அப்பாதானே? அதனால் அவர் குரு.

Koviloor Digital Library

குருவுக்கும் தந்தைத்தன்மை உண்டு

அப்பா குரு என்றால் குருவும் அப்பாதான்!

'நீதி சாஸ்த்ர'த்தில் ஐந்து பேரை அப்பாவாகச் சொல்லியிருக்கிறது. யாரார் என்றால்:

ஜநீதா சோபநீதா ச யச்ச வித்யாம் ப்ரயச்சதி |
அந்நதாதா பயத்ராதா பஞ்சைதே பிதர: ஸ்ம்ருதா: ||

'ஜநீதா'-பிறப்பைக் கொடுக்கும், எல்லோருக்கும் தெரிந்த, அப்பா; **'உபநீதா'**–பூணூல் போட்டு வைக்கிறவர் யாரோ அவர். பல பேருக்கு அப்பா இல்லாமல் வேறொருத்தர் பூணூல் போடும்படி ஆகிறதோல்லியோ? அப்பா இருக்கும்போதே இரண்டு பிள்ளைகளுக்கு ஒரே முஹூர்த்தத்தில் ப்ரஹ்மோபதேசம் செய்தால் அப்போது ஒரு பிள்ளைக்கு அப்பாவும், மற்றவனுக்கு சித்தப்பா, பெரியப்பா மாதிரி ஒருத்தருந்தானே பூணூல் போட்டு வைக்கிறார்? அப்படிப்பட்ட யாராயிருந்தாலும் அவரும் ஒரு அப்பா. நல்ல காயத்ரி அநுஷ்டானம் உள்ளவர்தான் ஒரு குழந்தைக்கு ப்ரஹ்மோபதேசம் செய்யவேண்டுமென்று சாஸ்திரம். முன்னாளில் அப்படி இல்லாத ஒரு ஜனக பிதா காயத்ரியில் ஸித்தி கண்டவர்களைக் கொண்டே தன்னுடைய பிள்ளைக்கு உபதேசம் செய்வித்தார். அப்படிப்பட்ட அந்த குரு அந்தப் பிள்ளைக்குப் பிதாவாகி விடுகிறார். **'யச்ச வித்யாம் ப்ரயச்சதி'** — இதுதான் நம்முடைய விஷயம். எவன் வித்யை கற்பிக்கிறானோ, அதாவது எவன் குருவாயிருக்கிறானோ, அவன் ஒரு அப்பா. **'அன்னதாதா'** — ஒருத்தன் சாதம் போட்டு ரக்ஷித்தானானால் சாப்பிடுகிறவனுக்கு அவன் ஒரு அப்பா. **'பயத்ராதா'**-பயத்திலிருந்து காப்பாற்றுபவனும் அப்பா. இப்படி அஞ்சு பேர். ஆனால் ப்ரஸித்தியாயிருப்பது, பெற்ற தகப்பனுக்கு அடுத்தபடியாக குருவுக்கும் பிதாஸ்தானம் என்பதுதான்.....

Koviloor Digital Library

அந்த அப்பா ஜன்மாவைக் கொடுக்கிறாரென்றால், இந்த அப்பா ஜன்மாவை அழிக்கிறார்! 'ஜன்மாவைக் கொடுக்கிறவரைத்தானே அப்படிச் சொல்லலாம்? இவரை எப்படிச் சொல்லலாம்?' என்றால், ஒரு ஜீவனை பூத ப்ரபஞ்சத்தில் நேர் அப்பா ஜன்மிக்கச் செய்கிற மாதிரி இவர் ஆத்ம ப்ரபஞ்சத்தில் ஜன்மிக்கச் செய்கிறாரே! அவர் physical life-ஐக் கொடுக்கிற மாதிரி இவர் spiritual life-ஐக் கொடுக்கிறாரே! அப்போ 'அப்பா' சொல்லலாந்தானே?

வைதிக அநுஷ்டான வழியில் உபநயன பூர்வமாக பாரமார்த்திகத்தில் போக ஆரம்பிக்கிறவர்களுக்கு 'த்விஜன்மர்' — தமிழில் 'இருபிறப்பாளர்' — என்றே பேர் இருக்கிறது. ஆதி காலத்தில் அப்படி உபநயனம் செய்வித்து, இரண்டாவது பிறப்பைத் தந்து, அதாவது பிதாவாக ஆகி, அப்புறம் தன்னுடன் சிஷ்யனை குருகுலவாஸத்தில் வைத்துக் கொண்டு பயிர் பண்ணினவர் குருவே. 'குருகுல வாஸம்' என்று அவரோடு வஸிப்பதைச் சொன்னதாலேயே அது தெரிகிறதே! உபநயனமானவுடன் இரண்டாம் பிறப்பு, த்விதீய ஜன்மா.

பக்ஷிக்கும் த்விஜன்மா என்று பேர். முட்டையாக இருப்பது ஒரு ஜன்மா. தாயார்ப் பெட்டை அதை அடைகாத்து, ஓட்டைப் பிளக்கப் பண்ணினவுடன் பூர்ணமான பக்ஷியாக வெளியிலே வருவது இரண்டாவது ஜன்மா. ஒரு ஜீவனை அநுக்ரஹத்தாலே அடைகாத்து, அவனுடைய ஆணவ ஓடு பிளந்து பரமாத்மாவிடம் அவன் பறந்து போகும்படியாகப் பூர்ண ரூபம் தருகிறவரே குரு.

இங்க்லீஷில் மாணவனை pupil என்கிறதில்கூட அவர்களுக்குத் தெரியாமலே இந்த த்விஜன்ம தத்வார்த்தம் இருக்கிறது. Pupa என்றால் ஒரு பூச்சி பூச்சியாகிறதற்கு முந்தி இருக்கிற கூட்டுப் புழு ஸ்டேஜ். [சிரித்து] த்விஜன்மாவுக்குப் பதில் சதுர்ஜன்மாவாக பூச்சிக்கு இருக்கிறது! முட்டை,

Koviloor Digital Library

அப்புறம் முழு ரூப ப்ராணி என்று 'இரு பிறப்பு' மட்டுமில்லாமல் முட்டை, அப்புறம் புழு, அதற்கப்புறம் அந்தப் புழு தன்னைச் சுற்றித் தன்னிடமிருந்தே நூலைக் கக்கிக் கூடு கட்டிக் கொண்டு அதற்குள்ளே செயலற்றுக் கிடக்கிற ஸ்டேஜ் — அதற்குத்தான் pupa என்று பெயர் — அப்புறம் கூட்டைப் பிளந்து கொண்டு பறந்து வருகிற முழுப்பூச்சி என்று 'நாலு பிறப்பு'! Pupa-வும் முட்டை மாதிரிதான் இருக்கும். Pupil என்கிற வார்த்தை அதிலிருந்தே வந்திருக்கிறது.

குளவி புழுவைக் கொட்டிக் கொட்டித் தன் மாதிரியே குளவி ஆக்குகிற காரியம்தான் குரு செய்வது என்றும் சொல்வதுண்டு. அப்படிச் சொல்கிறபோது புழுவிலிருந்து பூச்சி பிறப்பதாக இரண்டாம், நாலாம் ஸ்டேஜ்களை முடிச்சுப் போட்டுச் சொல்கிறோம்.

இந்த நம்முடைய வைதிக ஸம்ப்ரதாய அபிப்ராயங்களே மேல் நாட்டிலும் ஆதி காலத்தில் இருந்து, பிற்பாடு அவர்கள் வேறே வழியிலே போனபோதும் அதோடு ஒரு மாதிரி கலந்து போயிருப்பதால்தான் pupa-pupil என்று வந்திருக்கிறது. ஆனால் பிற்காலத்தில் அவர்களுக்கு அந்தத் தாத்பர்யம் மறந்து போய்விட்டது — அவர்களுடைய அநுஷ்டானத்தில் நம்முடைய குரு-சிஷ்ய பத்ததி மாதிரித் தொடர்ந்து வராததால்! இப்போது நாமும் எல்லாம் மறந்துவிட்டுத்தான் மேல் நாட்டு நாகரிகமே வாழ்க்கை என்று அவர்களைப் பின்பற்றிக்கொண்டு போய்க் கொண்டிருக்கிறோம்!....

அப்பா-அம்மா தருவது உடம்பை முக்யமாக வைத்த முதல் ஜன்மா. உபநயனத்தில் குரு உபதேசத்தால் ஏற்படுவது உயிரை முக்யமாக வைத்த இரண்டாம் ஜன்மா. அந்த ஜன்மாவில் முன்னேறி முன்னேறி முன்னேறி

Koviloor Digital Library

முடிவாகத்தான் பூத ப்ரபஞ்ச ஜன்மாவை அழித்தே போட்டு ஆத்மாவாக, பரமாத்மாவாக ஆகிறது.

உபநயனம் பண்ணி வேத வித்யை உபதேசிக்கிற குரு அந்த முடிவு ஸ்தானம் வரை அழைத்துப் போகிறவரில்லை. கர்மாவாலே சித்த சுத்தியும், பக்தியாலே சித்த ஐகாக்ர்யமும் [ஒருமைப்பாடும்] ஏற்படுத்துகிற அளவுக்கே அவர் வழிகாட்டுவது. அவை அழுத்தமாக ஏற்பட்டு, த்ருடமாக நின்று நிலைப்பதற்கு வாழ்க்கையிலே நன்றாக அடிபட்டு, கர்மா எல்லாம் கழிந்து, அந்த ஜீவன் தேவ-ரிஷி -பித்ருக்களுக்கும் ஜீவ ப்ரபஞ்சத்துக்கும் பட்டிருக்கிற கடனெல்லாமும் தீர்ந்தாகியிருக்கவேண்டும். இதற்கு அவரவர் ஸம்ஸ்காரத்தைப் பொறுத்து கொஞ்ச காலமோ, நிறையக் காலமோ தேவையாயிருக்கும். அபூர்வமான ஏதோ சில பேருக்கு வேண்டுமானால் ப்ரஹ்மசர்ய ஆச்ரமத்திலிருந்தே, அல்லது அதுவுங்கூட இல்லாமலே, அல்லது பூர்த்தியாகாமலே பரமாத்மாவாக ஆகிவிடுகிற ப்ரஹ்ம ஞானம் ஸித்திக்க முடியும். மற்றவர்கள் உபநயனமானவுடன் குருகுலத்தில் ஆரம்பிக்கிற ப்ரஹ்மசர்யாச்ரமம் பூர்த்தியானபின் அநேக வருஷம் க்ருஹஸ்தாச்ரமத்திலிருந்து, அடிபட்டே, கர்மா கடனெல்லாம் தீர்ந்து சித்த சுத்தி, ஐகாக்ர்யங்களை நன்றாக ஸம்பாதித்துக் கொண்டு, ப்ரஹ்மமாக ஆகிற வித்யாப்யாஸத்திற்குப் போகமுடியும். அப்படி சித்தம் சுத்தியாகி, சிதறாமல் ஒன்றையே சிந்திக்கிற ஐகாக்ர்யம் ஸித்திக்கிற ஸமயத்தில் அந்தச் சித்தம் பரமாத்மாவையே ஒரே குறியாகப் பற்றிக் கொள்ளும்படி செய்ய இன்னொரு குரு வருவார்; ஸந்நியாஸம் தந்து உபதேசம் பண்ணுவார். அந்த உபதேச மஹிமையாலே — அந்த குருவினுடைய அநுக்ரஹ சக்தியும் உபதேச வாக்கியத்தில் பாய்ந்திருக்கிற மஹிமையாலே — சிஷ்யன் அவர் சொன்ன பாரமார்த்திக வாழ்க்கையில் முன்னேறி முன்னேறி

Koviloor Digital Library

முடிவாகத்தான் ஜன்மா இல்லாமல் பண்ணிக்கொள்வது. அந்த இடத்தில் சிஷ்யன் பரப்ரஹ்மமாகவே ஜன்மித்து விடுகிறான்.

பிற மதங்களிலும் பிதா–குரு

'பிதா', 'பித்ரு' என்பதிலிருந்துதான் 'father'. ஓரளவுக்கு நம்முடைய குரு ஸ்தானத்தில் வைக்கக் கூடிய வெள்ளைக்காரர்களுடைய மதகுருமார்களை — 'மதகுரு' என்னும்போது 'குரு' என்றே வந்துவிடுகிறது! அப்படிப் பட்டவர்களை — அவர்களும் Father என்றே சொல்கிறார்கள். நாம் 'பாதிரி' என்கிறோம். பேட்ரே (Padre) என்ற வார்த்தையிலிருந்து வந்தது அது. 'பேட்ரே' என்பது போர்ச்சுகீஸிய பாஷை. அதற்கும் 'அப்பா' என்றுதான் அர்த்தம். இங்க்லீஷ்காரர்களுக்கும், ஃப்ரெஞ்சுக்காரர்களுக் கும் முன்னாடியே போர்ச்சுகீஸியர்கள் இந்தியாவுக்கு வந்து அடி–தடி கொள்ளை எல்லாம் நடத்தி ஊரைப் பிடித்திருக்கிறார்கள். சர்ச்சுகளும் கட்டி மதமாற்றம் செய்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் பாஷையில் மதகுருவுக்குச் சொன்ன 'பேட்ரே'யை வைத்துத் தமிழ் 'பாதிரி' உண்டாயிற்று. Father, Padre எதுவானாலும் மூலம் ஸம்ஸ்க்ருத 'பித்ரு'தான்! ஐரோப்பிய மொழிகளுக்குள் ஒன்றுக்கொன்று வார்த்தைகள் திரிந்து வரும். மெட்றாஸில் ஸெய்ன்ட் தாமஸ் மவுண்ட் இருக்கிறது; ஸாந்தோம் என்னும் இடம் இருக்கிறது. இங்க்லீஷில் 'ஸெய்ன்ட் தாமஸ்' என்கிறதேதான் போர்ச்சுகீஸில் 'ஸான் தோம்'. ஃப்ரெஞ்சுக்காரர்களை Frank என்பது. அது நாளா வட்டத்தில் எல்லா ஐரோப்பியர்களையும் குறிப்பதாக நம் தேசத்தில் ஆகிவிட்டது. வட இந்தியாவில் ஃபீரங்கி என்றும் நம் பக்கத்தில் பறங்கி என்றும் ஆயிற்று. அதனால்தான் ஸெய்ன்ட் தாமஸ் மவுன்டைப் பறங்கிமலை என்று

Koviloor Digital Library

சொல்வதாயிற்று. சிதம்பரத்திற்குப் பக்கத்தில் ஸமுத்ரக் கரையோரத்தில் பறங்கிப்பேட்டை இருக்கிறது. அதை Porto Novo என்கிறார்கள். அப்படியென்றால் புதிதான துறைமுகம் என்று போர்ச்சுகீஸில் அர்த்தம். அந்த தேசத்துக்காரர்கள் அங்கே புதுசாகத் துறைமுகம் கட்டிக் கொண்டு ஸெட்டில் ஆனபோது அப்படிப் பேர் வைத்தார்கள்.......

குருவைப் பிதா என்கிற மாதிரியே Father, Padre.

ஆனால் இந்த [நம்] நாட்டில் பிறந்த ஜைன-பௌத்த மதங்களைத் தவிர மற்ற எந்த மதத்திலும் நம்முடைய குரு-சிஷ்ய ஸம்பந்தம் — குரு-சிஷ்யர்களுடைய அத்யந்த பாந்தவ்யம் — மாதிரி இருப்பதாகச் சொல்வதற்கில்லை. உபதேசம் என்று குரு சிஷ்யனுக்குப் பண்ணி ஸம்ப்ரதாய பூர்வமாக வந்திருக்கிற தம்முடைய மந்த்ர சக்தியை அவனுக்குள்ளே செலுத்துவது, அவன் வாழ்க்கைக்கே தாம் ஜவாப் ஏற்றுக்கொண்டு அவனை மோக்ஷம் வரையில் கொண்டு நிறுத்துவது; அதே மாதிரி சிஷ்யனும் குருவே கதி என்று சரணாகதி பண்ணி, அவரையே தெய்வமாக நினைத்து ஸகல கைங்கர்யமும் செய்வது என்று மற்ற மதங்களில் தற்போது பிரபலமாக இருக்கிற பிரிவுகளில் பார்க்க முடியவில்லை. துருக்க [இஸ்லாமிய] மதத்தைச் சேர்ந்தவர்களில் மூர்ஷித் என்பவரை குரு ஸ்தானத்திலும் மூரித் என்பவரை சிஷ்ய ஸ்தானத்திலும் சொல்லலா மென்று அந்த மதஸ்தரொருவர் சொன்னார். ஆனால் அது அவர்கள் ஸமுதாயத்திலே நம் தேசத்தில் மாதிரி வியாபகமாக இல்லை என்றும் சொன்னார்.....

வெளி லோகத்தில் அப்பா-பிள்ளை பாந்தவ்யம் மாதிரி உள்லோகத்தில் குரு-சிஷ்யர் என்று ஏற்பட்ட பெருமை நம்முடைய வைதிக கலாசாரத்திற்கே விசேஷமாக உரியது. ஓரளவுக்கு நம்முடைய குரு

Koviloor Digital Library

ஸ்தானத்திற்கு ஸமதையாக வரும் மதபோதகரை, மஹானை மற்ற ஸம்பிரதாயங்களிலும் தகப்பனாராகச் சொல்கிறார்கள் என்று சொல்ல வந்தேன். துருக்கர்கள் அப்படிப்பட்டவரை 'பாபா' என்கிறார்கள்; அவர்களுடைய நீண்டகால இன்ஃப்ளூயென்ஸால் வட தேசத்தில் ஹிந்துக்களும் அநேக 'பாபா'க்களைச் சொல்கிறார்கள். அதற்கும் 'அப்பா' என்றுதான் அர்த்தம்.

ஜூக்கள் — அதாவது யூதர்கள் — ராபி (rabbi) என்கிறார்கள். அது 'rabh' என்ற ரூட்டிலிருந்து வந்த வார்த்தை என்றும், 'ரப்ஹ்' என்றால் பெரிசு, பெருமை பொருந்தியது என்றும் சொல்கிறார்கள். ஸம்ஸ்க்ருத 'ப்ருஹ்'-'ப்ரஹ்'தான் 'ரப்ஹ்' ஆகியிருப்பது, ப்ரஹ்மம் என்று ஸாக்ஷாத் பரமாத்மாவைச் சொல்கிறதும் அதுவே எல்லாவற்றிலும் 'பெரியது' என்பதால்தான். பெரியதிலும் பெரியது, ஸகலத்தையும் தனக்குள்ளே அடக்கிக் கொண்டுள்ள மஹா பெரியது அதுதானே? அந்தப் பெரியதைச் சொல்கிற, நமக்கு உபதேசிக்கிற வேதத்திற்கும் 'ப்ரஹ்ம' என்று பேர் உண்டு. 'குரு' என்னும் வார்த்தைக்கும் 'பெரியவர்' என்றுதான் அர்த்தம். அதனால் யூதர்கள் தங்களுடைய சாஸ்த்ர விதிகளைச் சொல்லும் டால்முடை [Talmud–ஐ] உபதேசிப்பவரை 'ராபி' என்பதும் அடிப்படையில் லோகம் பூராவிலும் வைதிக கலாசார எண்ணப்போக்கு இருந்திருப்பதையே காட்டுகிறது.

ப்ரச்னோபநிஷத் என்று இருக்கிறது. அதன் முடிவிலே உபதேசகரான ரிஷியிடம் உபதேசம் பெற்ற சிஷ்யர்கள், "எங்களை அவித்யையின் [அஞ்ஞானத்தின்] அக்கரைக்கு கடத்துவித்ததால் தாங்களே எங்களுடைய பிதா" என்று சொல்லி நமஸ்கரித்ததாக வருகிறது. ஸரியாகச் சொன்னால் **"த்வம் ஹி ந: பிதா"** என்று மூலத்தில் வருகிறதற்கு "நீங்க-ன்னா [நீங்களன்றோ?] எங்க அப்பா?" என்று

Koviloor Digital Library

அர்த்தம். 'அப்பா என்று நடைமுறையில் சொல்கிறவர் நிஜத்தில் அப்படியில்லை. நீங்கள்தான் நிஜ அப்பா' என்று உள்ளர்த்தம். ஏனென்றால் அந்த அப்பா சாகிற ஜன்மா வைத்தான் கொடுத்தார். அப்படிப் பல ஜன்மாக்களில் பல அப்பாக்கள் இருந்திருக்கிறார்கள். அதனால் அவர்களை எப்படி நிஜ அப்பா என்பது? இவர்தான் சாகாத ஜன்மாவை, அம்ருதமாக [அ-ம்ருதம்: மரணமில்லாதது] உள்ள ஆத்மாவாகிற சாச்வத ஜன்மாவை ஒருத்தரேயாக அளிப்பவர். அவர்கள் [பல பிறவிகளில் வாய்த்த பிதாக்கள்] சாகிற ஜன்மாவைத் தந்தால் இவரோ ஜன்மாவையே சாக வைத்து விடுகிறார்! சாச்வத பதம் கொடுக்கிறார். இங்கே ஆசார்யாள் பாஷ்யத்திலே, "ஸமுத்ரத்தின் அக்கரைக்குப் படகோட்டிக் கொண்டு போகிறதுபோல, ஜன்மம்-ஜரா [மூப்பு]-மரண-ரோக-துக்கம் முதலான முதலைகள் நிறைந்திருக்கும் அஜ்ஞான ஸம்ஸார ஸாகரத்திலிருந்து ஞானம் என்ற படகால் புனர்ஜன்மாவிலிருந்து பரிபூர்ண விடுதலை பெறுவதான மோக்ஷத்திற்கு குரு கடத்து விப்பதால், மற்ற பிதாக்களைவிட இவருக்கே பித்ருத்வம் சொல்வது ரொம்பவும் பொருத்தம். லோக வ்யவஹாரத்தில் ஜன்மா தரும் பிதாவுக்குத்தான் பூஜிக்கத்தக்க சிரேஷ்டர் களில் முதலிடம் தருவது. அப்படியென்றால் பரிபூர்ணமான அபய நிலையைத் தருகிற குருவை என்ன தான் சொல்லக்கூடாது?" என்கிறார். அபயநிலை என்றால் அத்வைத ஸ்திதிதான். 'பயம்' என்றால் த்வைதம். அதைப் பற்றிச் சொல்ல நிறைய இருக்கிறது. இப்போது வேண்டாம்... எல்லோருக்கும் தெரிந்தது, 'பவபயம்'. பவம் என்றால் ஸம்ஸாரம் — இஹலோக வாழ்க்கைத் தொடர். அது த்வைதம். அதோடு 'பயத்தைச் சேர்த்தே 'பவபயம்', 'பவபயம்' என்கிறது. அப்போது அபயம் அத்வைதந்தானே? அதையே அடைவிப்பவர், அநுக்ரஹிக்கிறவர் குரு என்றால் அவர் மஹிமையை என்ன சொல்வது?

Koviloor Digital Library

பிதா, குரு என்ற வார்த்தைகளை ஒரே ஆஸாமிக்குச் சொல்வதுண்டு என்று காட்டவந்தேன். பிதாவை குரு என்று சொல்வதே லோக வ்யவஹாரம். [அதற்கு] வித்யாஸமாக குருவை, "நீதான் நிஜ அப்பா!" என்று சிஷ்யர்கள் — அந்த சிஷ்யர்கள் ஒவ்வொருத்தருமே குரு ஸ்தானம் வஹித்த பெரியவர்கள்; அப்படிப்பட்டவர்கள் — சொல்லியிருப்பதாக உபநிஷத்திலிருந்து காட்டினேன்.

கம்பர் மாதிரியான பெரியவர்கள் வைதிக-ஔபநிஷத ஸம்பிரதாயத்தையே பின்பற்றி, அந்த வேத-உபநிஷத அபிப்ராயங்களை ஸமயம் வாய்க்கிற இடத்தி லெல்லாம் தங்களுடைய தமிழ் நூல்களில் எடுத்துச் சொன்னவர்கள். பிறப்பித்த அப்பா பேருக்குத்தான் அப்பா, நிஜ அப்பாவாகப் பிள்ளையை நல்ல ரூபப்படுத்தி வளர்க்கிறது ஆசார்யன்தான் என்று நாம் பார்த்துக் கொண்டிருந்த அபிப்ராயத்தைக் கம்பர் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி ஸம்பந்தப்படுத்தியே சொல்லியிருக்கிறார். தநுஸை நாணேற்றுவதற்காக யுவராவாக இருந்த ராமரை ஜனகருடைய ராஜ ஸதஸுக்கு அழைத்துக்கொண்டு போன விச்வாமித்ரர் ஜனகருக்கு ராமரை அறிமுகப்படுத்து கிறார். அப்போது அவருடைய ஸூர்யவம்சப் பெருமையில் ஆரம்பிக்கிறார். அந்த வம்சத்தை ஆரம்பித்து வைத்த ஸூர்யனிலிருந்து மநு, ப்ருது, இக்ஷ்வாகு, ககுத்ஸன், மாந்தாதா, சிபி, பகீரதன், ரகு என்று எல்லாப் பூர்விகர்களின் பெருமையை பற்றிச் சொல்லி, தசரதனின் பெருமையில் முடித்து, அந்தத் தசரதன் புத்ரகாமேஷ்டி பண்ணிப் பிறந்த பிள்ளையாக்கும் ராமர் என்று சொல்கிறார். அந்த இடத்தில்தான் நாம் இதுவரை பார்த்துக்கொண்டிருந்த விஷயத்திற்கு வருகிறார். "ராமாதி நாலு ஸஹோதரர்களும் தசரதனுக்குப் பிள்ளை என்கிறது பெயரளவில்தான் — '**புதல்வர் எனும் பெயரே காண்!**';

Koviloor Digital Library

ஆனால் அவர்களை வளர்த்தது, அதாவது ரூபம் பண்ணினது வஸிஷ்டர்தான் — **'உபநயன விதி முடித்து, மறை ஓதுவித்து வளர்த்தோன் வசிட்டன் காண் !'** என்று அவர் சொன்னதாகக் கம்பர் பாடியிருக்கிறார்.*

பித்ருவம்சமே குருவம்சமாகவும்

சாகிற ஜன்மாவைத் தரும் அப்பாவே சாகாமையில் ஜன்மிக்கச் செய்கிற குருவாகவும் ஆகி — [சிரித்து] 'கொஞ்சம்' அப்பா, 'முழு' அப்பா இரண்டும் ஆகி — இருப்பதையும் ஆதியிலிருந்து நிறையப் பார்க்கிறோம். இப்படித் தொடர் சங்கிலியாகப் போய் அப்பா-பிள்ளை வம்சாவளியே குரு-சிஷ்ய வம்சாவளியாக இருந்திருப்பதும் உண்டு. [ஸ்மார்த்தர்களான] நம்முடைய ப்ரஹ்மவித்யா குரு பரம்பரையே அப்படித்தான் முதல் அஞ்சு, ஆறு பேர் வரை போகிறது. இந்த ஸம்ப்ரதாயத்தில் முதல் குரு நாராயணன். அவர் நேர் குருவாக இருந்து அவரிடம் உபதேசம் பெற்று [இச் சம்பிரதாயத்தில்] அடுத்த குரு ஆனவர் யாரென்றால், அவருடைய பிள்ளையான ப்ரஹ்மாதான். அந்த ப்ரஹ்மாவை குருவாகக் கொண்டு அவருக்கு அடுத்து குரு ஸ்தானம் வஹிக்கிறவர் வஸிஷ்டர். அவர் ப்ரஹ்ம புத்ரர்தான். அவருக்கு அடுத்தவர் வஸிஷ்டருடைய புத்ரரான சக்தி. அடுத்தவர் சக்தி மஹர்ஷியின் புத்ரரான பராசரர். பராசரருக்கு அப்புறம் அவருடைய புத்ரரான வ்யாஸாசார்யாள், பௌத்ரரான சுகாசார்யாள் என்று அதுவரை அப்பா-பிள்ளைகளே குரு-சிஷ்யர்களாக அமைந்துதான் நம் குரு பரம்பரை உருவாகியிருக்கிறது. நைஷ்டிக ப்ரஹ்மசாரியான

* கம்ப ராமாயணம், பால காண்டம், குல முறை கிளத்து படலம், 'திறையோடும்' எனும் பாடல். மூலச் சொற்களில் சிறு மாறுதலுடன் ஸ்ரீசரணர் பகர்ந்துள்ளார்.

Koviloor Digital Library

சுகாசார்யாளிலிருந்துதான் மாறுதல். அவர் ஸந்நியாஸியான கௌடபாதருக்கு குருவாகி உபதேசித்ததிலிருந்து கௌடபாதருக்கு அப்புறம் கோவிந்த பகவத்பாதர், நம்முடைய ஆசார்யாள், அவருடைய ஸந்நியாஸ சிஷ்யர்கள், அவர்களுடைய பரிபாலனத்தில் வந்த மடாலய அதிபதிகளின் பரம்பரை என்பதாக, குருவும் ஸந்நியாஸி, சிஷ்யரும் ஸந்நியாஸி என்றாயிற்று.

ஜெனரலாகவே ரிஷி வம்சங்கள் முழுவதும் வெறும் அப்பா–பிள்ளை வம்சம் மட்டுமில்லை; அந்த அப்பா–பிள்ளைகளே குரு–சிஷ்யர்களாகவும் இருந்த வித்யா ஸம்ப்ரதாய பரம்பரைகளுந்தான்.

தாய் வழியில் ரிஷிகளின் பெயர்கள்; ஆசார்யாள் காட்டும் அன்னை மகிமை

ரொம்ப வித்யாஸமாக ஒரு இடத்தில் பார்க்கிறோம். எந்த இடத்திலென்றால், தசோபநிஷத்துக்கள் என்று ப்ரஸித்தமாக நம்முடைய வேதாந்த மதத்திற்கே அஸ்திவாரமாக இருக்கப்பட்ட பத்தில் [பத்து உபநிஷத்துக்களில்] முடிவாக வரும் ப்ருஹதாரண்யகத்தில் 'வம்ச ப்ராஹ்மணம்' என்ற முடிவான பாகத்தில்தான். அதிலே அந்த உபநிஷத்தை ஆதியிலிருந்து வழி வழியாக உபதேசித்து ரக்ஷித்துக் கொடுத்திருக்கிற, அதாவது குருமார்களான, அத்தனை ரிஷிகளுக்கும் பேர் சொல்லி அவர்கள் இன்னின்ன வம்சம் என்று லிஸ்ட் கொடுத்திருக்கிறது; வேறே உபதேசம் இல்லை; வம்சாவளி மட்டுந்தான். ஒவ்வொரு ரிஷி பேரையும் சொல்லி, அவர் இன்னார் புத்ரன் என்று சொல்லியிருக்கிறது.

ஒருத்தர் அம்மா–அப்பா இரண்டு பேருக்கும் புத்ரராயிருந்தாலும், லோகம் பூராவிலுமே வழக்கத்தில்

Koviloor Digital Library

அப்பாதான் head of the family-யாகக் கருதப்படுவதற்கேற்க, 'இன்ன அப்பாவுடைய புத்ரர்' என்றுதான் சொல்வதாக இருக்கிறது. பத்திரமோ, அப்ளிகேஷன் ஃபாரமோ எதுவானாலும் இன்றைக்கும் father's name-தான் கேட்கிறார்கள்! இனிஷியலும் அப்படித்தான் போட்டுக் கொள்வதாக இருக்கிறது! இந்த விஷயத்தில் இப்போதும் ஸ்த்ரீ ஸமத்வப் போராட்டக்காரர்கள்கூடப் போராட்டம், agitation ஆரம்பித்ததாகத் தெரியவில்லை! ஒருவேளை இப்போது நானேதான் இதைச் சொல்லி அது வேறு ஒன்று கிளறிக் கொடுக்கிறேனோ, என்னவோ?....

வேதம்-உபநிஷத் ஆகியவற்றில் வரும் ரிஷிகளின் பிதாக்கள் பிதாவாக மட்டுமில்லாமல் குருவாகவும் இருந்திருப்பதால் அவர்களை வைத்தே புத்ரரைச் சொல்வது வழக்கம். நாமுங்கூட அபிவாதனத்தில்* நம்முடைய கோத்ர ப்ரவர்த்தகர்களான [கோத்திரத்தைத் தொடங்கியவர்களான] ரிஷிகளின் — புருஷ ஜாதியே ஆனவர்களின் — பெயர்களைத்தானே அப்பா-பிள்ளை வரிசையில் சொல்கிறோம்? [சிரித்து] 'ஏதோ ஒப்பிக்கிறோம். இது நம்முடைய கோத்ரத்தின் பூர்வ ரிஷிகளின் பெயர்களா?' என்று இப்போதுதான் தெரிந்து கொண்டவர்களும் இருக்கலாம்!....

லோகம் பூரா பரவியுள்ள இந்த வழக்குக்கு வித்யாஸமாக, நான் சொன்ன அந்த இடத்தில் [ப்ருஹதாரண்யக உபநிஷத்தின் முடிவுப் பகுதியில்] லிஸ்ட் ஆரம்பத்திலிருந்து ரொம்ப தூரம் வரை ஒவ்வொரு ரிஷியின் பேரையும் அவர் 'இந்த அம்மாவின் புத்ரர், இந்த அம்மாவின் புத்ரர்' என்பதாகத் தாயார்மார்களின் பேர்களை வைத்தே கொடுத்திருக்கிறது.

---

* நமஸ்கரித்த பின் நமஸ்கரிப்பவர் தம்மை இன்னாரென்னு தெரிவித்துக் கொள்ளும் வாசகம்.

Koviloor Digital Library

'இதென்ன, இப்படிப் பண்ணியிருக்கிறதே!' என்பதற்குப் பதில் ஆசார்யாளின் பாஷ்யத்திலிருந்து தெரிகிறது. என்ன சொல்கிறாரென்றால், "புத்ரன் குணவானாக இருப்பதற்கு ஸ்த்ரீயே — அதாவது அவனுடைய தாயாரே — ப்ரதானமான காரணம் என்பது வெகுவாகப் புகழ்ந்து சொல்லப்படும் விஷயம். ஸ்த்ரீ ஜாதிக்குள்ள அந்த விசேஷத்தினாலேயே புத்ரன் விசேஷம் பெறுவதால்தான் இங்கே ஆசார்ய பரம்பரை இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது" என்கிறார்.

பெண்டிரும் பிரம்மவித்தையும்

இப்படிச் சொன்னதிலிருந்து அவரோ, அவருக்கும் முந்தைய அந்தப் பூர்வ ரிஷிகளோ ஸ்த்ரீகளையும் ப்ரஹ்ம வித்யா குருக்களாகக் கொள்ளலாமென்று அபிப்ராயப் பட்டதாகத் தப்பர்த்தம் செய்துகொண்டு விடக்கூடாது. இந்த இடத்தில் மூலத்திலும் ஸரி, பாஷ்யத்திலும் ஸரி, ஆத்ம சாஸ்த்ர உபதேசம் பற்றி எதுவும் இல்லை. இங்கே சொல்லப்பட்ட ரிஷிகள் இந்தந்த அம்மாமார்களின் பிள்ளைகள் என்று மட்டுமே இருக்கிறதே தவிர, அவர்களிடமிருந்து இவர்கள் எந்த வித்யையிலும் உபதேசம் பெற்றதாக இங்கேயும் இல்லை; உள்ளே எங்கேயும் இல்லை. பாஷ்யத்திலும் புத்ரன் குணவானாவதைப் பற்றித்தான் இருக்கிறதே தவிர வித்யாவானாக, ஞானவானாக இருப்பதைப் பற்றி இல்லை.

உபநிஷத்காலத்தில் அத்யாத்ம சாஸ்த்ர விஷயங்களில் ஆழமாகத் தெரிந்து கொண்ட ஸ்த்ரீகள் வித்வத் ஸிம்ஹங்களாக இருக்கப்பட்ட [ஆடவ] ரிஷிகளிடமும் பெரிதாக வாதம், ஸம்வாதம் [ஸம்பாஷணை] செய்திருப்பதாக அந்த உபநிஷத்துக்களி லிருந்தே நிஸ்ஸந்தேஹமாக [சந்தேகத்திற்கிடமின்றி]த்

Koviloor Digital Library

தெரிவதும் வாஸ்தவம். என்றாலும் அந்த ஸ்த்ரீகளிடமிருந்து யாரும் உபதேச க்ரமத்தில் வித்யா ஸ்வீகரணம் [கல்வி கற்றல்] செய்ததாக ஒரு இடத்திலேயும் காணோம்! அதே மாதிரி, யாஜ்ஞவல்க்யர் ஒருத்தர் தம் பத்னியைப் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக் கொண்டு ஆத்ம விஷயங்களை சொல்வதாக இருக்கிற ஒரு இடம் தவிர* ஸ்த்ரீகள் குருமார்களிடம் உபதேசம் பெற்றதாகவும் விவரம் எதுவுமில்லை. பேச்சுவாக்கிலும், சூழ்நிலைப் பழக்க விசேஷத்தாலும் — 'சூழ்நிலை' என்கிறபோது, வித்வத் ச்ரேஷ்டர்களாகவும், ஞானிகளாகவும் அப்போது இருந்து கொண்டிருந்தவர்களின் ஸாந்நித்ய விசேஷத்தை, 'ரேடியேஷ'னைக் குறிப்பாகச் சொல்ல வேண்டும். அந்த விசேஷத்தாலும் — எல்லாவற்றுக்கும் மேலாக அவர்களுக்காகவே உள்ளுக்குள்ளே ஏற்பட்ட ஆத்யாத்மிக அபிலாஷையினாலும் சில ஸ்த்ரீகளும் ப்ரஹ்மவாதினி களாக ஆனதாகத்தான் தோன்றுகிறதே தவிர, ஸம்ப்ரதாய க்ரமத்தில், அவர்கள் சிஷ்யர்களாகவோ — சிஷ்யை களாகவோ — குருமார்களாகவோ இருந்து கற்றுக் கொண்டதாகவோ, கற்றுக் கொடுத்ததாகவோ அழுத்தமாக 'எவிடென்ஸ்' இல்லை.

இந்த விஷயமாக ரொம்பவும் அதிக பக்ஷமாகத் தெரிவது, வேதோபநிஷதங்கள் முதல் முதலாக லோகத்தில் பிரசாரத்துக்கு வந்த பூர்வ யுகத்திலும், தொடர்ந்து வந்த கலிக்கு முற்பட்ட யுகங்களிலும் சில மந்த்ரங்கள், சில உபாஸனைகள், சில வித்யைகள் ஆகியவற்றை அகத்துப் பெரியவர்களே பெண் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்து அவர்கள் அவற்றை அப்யாஸம் பண்ணிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்கிற அளவுக்குத்தான். அநேகமாக உபநிஷத் மாதிரியும், பிற்கால தர்சனங்கள்

* ப்ருஹதாரண்யகம்; II.4; IV.5

Koviloor Digital Library

மாதிரியும் ஃபிலஸாஃபிகலாக இல்லாத ஆராதனா முறைகளையும், Arts என்கிற கலைகளையும், லௌகிக ஞானத்தைத் தரும் சில வித்யைகளையுந்தான் ஸ்த்ரீ ப்ரஜைகளுக்குக் கற்றுக் கொடுத்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அபூர்வமாகத்தான் வேத மந்த்ரங்கள் சிலதும் பெண்டுகளுக்கு ஒரு சில ஸமூஹங்களில் கற்றுக் கொடுத்திருப்பார்கள் போலத் தெரிகிறது. ரொம்பவும் தீக்ஷ்ண்ய புத்தியோடு ஃபிலஸாஃபிகலாகத் தெரிந்து கொள்ள வேணுமென்று ஒரு ஸ்த்ரீ ப்ரஜை ஆசைப்படும் போது ஃபிலாஸஃபியும் கற்றுக் கொடுத்திருக்க வேண்டு மென்றும் ஊஹிக்கமுடிகிறது. ஆனாலும் எல்லா புருஷ ப்ரஜைகளுக்கும் கம்பல்ஸரியாகவே உபநிஷத், தர்சனங்கள் ஆகியவற்றைச் சொல்லிக் கொடுத்த மாதிரி இல்லாமல், 'எக்ஸெப்ஷனல்' என்று சொல்லும்படியாகச் சின்ன வயஸிலேயே நல்ல புத்திப்ரகாசத்துடன் இருந்த பெண்களுக்கு மட்டுமே இப்படி வேதாந்தமும் இதர தத்வார்த்த ஸப்ஜெக்ட்டுகளும் சொல்லிக் கொடுத்திருக் கிறார்களென்றுதான் தெரிகிறது. ஒரு ரிஷியிடம், ஆசார்யரிடம் குருகுலவாஸம் என்று படித்திருக்கிற பசங்கள் பற்றி வேதத்திலிருந்து ஆரம்பித்து பிற்கால இலக்கியங்கள் வரை பலவற்றில் நிறைய வருகின்றன. அவற்றைப் பார்க்கிறபோது நூற்றுக்கு ஒரு எக்ஸாம்பிளாகத்தான், அகத்துப் பெரியவர்களிடமிருந்து மட்டும் என்றில்லாமல் குருகுலம் வைத்து நடத்திய ஆசார்யனிடமும் பெண்கள் படித்த மாதிரித் தெரிகிறது. அந்த நூற்றுக்கொரு குருகுலத்திலும் புருஷப் பிள்ளைகளாக நூறு வித்யார்த்திகள் படித்தார்களென்றால் பெண் வித்யார்த்திகளாக இரண்டொருத்தர்தான் இருந்திருப் பார்கள் என்றும் ஊஹிக்க முடிகிறது.

முன்னே சொன்ன [ப்ருஹதாரண்யக] உபநிஷத்தி லேயே மாத்ருபூர்வமாக [தாய்வழியில்] வம்சம் சொன்ன அந்த பாகத்திற்குக் கொஞ்சம் முந்தி, இப்படியிப்படியான

Koviloor Digital Library

குணமுள்ள ப்ரஜை பிறப்பதற்குப் பிதா இன்னின்ன அநுஷ்டானம் பண்ணணும் என்று சொல்கிற இடத்தில் பண்டிதையாக ஆகக்கூடிய ஸ்த்ரீ ப்ரஜை [பெண் குழந்தை] பிறக்க வேண்டுமானால் இன்ன விதியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இருக்கிறது.[1] இதிலிருந்து ஆதிகாலத்தில் ஸ்வயமாகவே நல்ல புத்திசாலினியாகப் பிறந்து தத்வ சாஸ்த்ரங்களும் தெரிந்து கொண்டு பண்டிதைகளான பெண்கள் இருந்தது மட்டுமில்லாமல், அப்படி ஒரு பெண் ப்ரஜை தனக்கு உண்டாகணும் என்று ஆசைப்பட்ட பிதாமார்கள் இருந்ததாகவும் தெரிகிறது. ஆனாலும் இங்கே கூட ஆசார்யாள் நமக்கான கலிகால தர்மத்தை மனஸில் வைத்துக் கொண்டே பாஷ்யம் பண்ணியிருக்கிறார். அப்படிப் பண்ணும்போது, 'பண்டிதை' என்பது ப்ரஹ்ம வித்யா சாஸ்திரத்தில் பாண்டித்யம் பெறுவதைக் குறிக்காது என்று அபிப்ராயப்பட்டு, அதற்குக் காரணமாக, "ஏனென்றால் ஸ்த்ரீகளுக்கு வேதத்தில் அதிகாரமில்லாத தால் [வேதம் கற்க உரிமையில்லாததால்]" என்கிறார்.[2] பின்னே 'பண்டிதை' என்று ஏன் சொல்லியிருக்கிறது என்பதற்கு, "க்ருஹ தந்த்ர விஷயத்திலே பாண்டித்யம் பெறுவதாலேயே பண்டிதை" என்று பதில் கொடுத்திருக் கிறார். 'க்ருஹ தந்த்ரம்' என்றால் வீட்டை நல்ல முறையில் நடத்துவது, இல்லறத்தை நல்லறமாக நடத்துவது, [சிரித்து]

1. VI. 4.17
2. ஸ்ரீசரணர் இவ்விஷயமாகக் கூறுவதன் ஸாரம்: சமூகத்தில் ஒவ்வொரு வகுப்பினரும் மொத்த சமூகத்தின் ஒருங்கிணைந்த நல்வாழ்வுக்கான பணிகளில் ஒவ்வொன்றை மட்டுமே மேற்கொண்டு அதற்கே தங்களை அர்ப்பித்துக் கொள்ளவேண்டும் என்ற உன்னதமான சேவை நோக்கிலும், தியாக நோக்கிலுமே ஸநாதன தர்ம விதிகள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் குடும்ப வாழ்வு சீர்பட நடக்க உதவுவதே பெண்டிரின் பொது இயல்புக்கேற்ற ஒரே ஜீவிதப் பணி என்ற கருத்தில்தான் அவர்களுக்கு வேதாப்யாஸத்தில் அதிகாரம் தரவில்லை.

Koviloor Digital Library

'domestic management'! அதை ஸாமர்த்யமாக, திறம்படச் செய்கிற கலையில் தேர்ந்திருப்பதுதான் பெண்களுக்குப் பாண்டித்யம் — இப்படி ஆசார்யாள் அபிப்ராயப்பட்டிருக்கிறார்.

பெண்களின் பாண்டித்யம்: அக்கால-இக்கால மாறுபாடு

பழங்காலத்தில், ஆசார்யாள் புது ஜீவன் ஊட்டி ஸ்தாபித்த வைதிக வாழ்க்கையில் புருஷர்கள் உத்யோகத்துக்குப் போய் ஸம்பாதிக்கவில்லை. க்ருஹத்திலேயே இருந்து கொண்டு விடிவதற்கு முன்னாலிருந்து ஒன்று மாற்றி ஒன்றாக அநுஷ்டானங்கள் செய்வதற்கே அவர்களுக்குப் பொழுது ஸரியாயிருக்கும். ஸம்பாவனை, மான்யம், குரு தக்ஷிணை முதலியவற்றிலிருந்தே அவர்களுடைய எளிய வாழ்க்கைக்குப் போதுமான வருமானம் கிடைத்து வந்தது. புருஷர்கள் இப்படி ஸதாவும் அநுஷ்டானபரர்களாக இருந்ததால் ஸ்த்ரீகளும் ஸதா அவர்கள்கூட இருந்துகொண்டு பல விதங்களில் அந்த அநுஷ்டானாதிகளுக்காக ஸேவை செய்யவே அவர்களுக்கும் பொழுது ஸரியாயிருந்தது. அந்தச் சூழ்நிலையில் அவர்களுக்குப் பாண்டித்யம் அடியோடு அவச்யமில்லாமலும், பாண்டித்யத்தால் அவர்களுக்கு ஒரு ப்ரயோஜனமும் இல்லாமலும் இருந்தது.

ஆனால் நம் காலத்தில் புருஷர்கள் நாள் பூரா்வும் — day–time என்பது பூராவும் — ஆஃபீஸில் வேலை செய்தே ஸம்பாதிக்கவேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டு விட்டது. இதை மாற்றுவதற்கில்லை என்ற அளவுக்கு நிலைமை முற்றி விட்டது.

ஆக, இப்போது புருஷர்களுக்கு ஆபீஸ், அது போக மிஞ்சியுள்ள நேரத்தில் அரட்டை, பொழுதுபோக்கு என்று

Koviloor Digital Library

ஒரு தினுஸாக ஆகிவிட்டது. இதனால் மத ஸம்பந்தமான நம்முடைய ஏராளப் புஸ்தகங்கள் உள்பட ஆத்மாவையோ, புத்தியையோ, மனஸையோ வளர்த்துக் கொடுக்கிற எதையுமே — நல்ல இலக்கியம் உள்பட எதையுமே — அவர்கள் படித்துத் தெரிந்து கொள்ளாமலிருக்கிறார்கள்.

இதைக் கவனிக்கும்போது இதற்கு நிவாரணம் ஆசார்யாள் சொன்னதற்கு ஒரு தினுஸில் மாறுதலாகப் போனால்தான் கிடைக்கும் என்றே தோன்றுகிறது. இப்படி நான் சொல்வதே பொதுவாகப் பார்த்தால் மஹா பாபம்தான், பரம அபசாரமும்தான். அது எனக்குத் தெரியாமலில்லை. அவர் காலம், நம் காலம் என்று சொல்லிக் கொண்டு காலத்தை அநுஸரித்து, என்றைக்கும் சாச்வதமான தர்மத்தை மாற்றுவது துளிக்கூட முறையேயில்லை என்பதும் எனக்கு நன்றாகத் தெரிகிறது.

இருந்தபோதிலும் புருஷர்கள் ஆபீஸ் போய்த் தானாக வேண்டும் என்று ஆனதில் ஸ்த்ரீகள் நிலைமை எப்படி ஆகியிருக்கிறது என்பதைக் கவனிக்கிறபோது, **இன்றைக்கு அவரே இருந்தால் என்ன சொல்லியிருப்பாரென்று** என் அடி மனஸிலிருந்து பிரார்த்தித்துப் பிரார்த்தித்து, யோஜித்து யோஜித்துப் பார்க்கிறபோது தோன்றுகிறதோ அதையே துணிந்து சொல்கிறேன்: இன்றைக்கு Day–time பூராவும் வீட்டிலே இருக்கிற ஸ்த்ரீகளுக்கு யஜ்ஞாதி அநுஷ்டானங்களில் ஸஹாயம் பண்ணுகிற கார்யமில்லை. வீட்டு நிர்வாஹத்தில் அவர்கள் பல கார்யம் செய்ய வேண்டியிருந்தாலும், கார்யம் செய்ததில் களைத்து விச்ராந்தி செய்து கொண்ட பிற்பாடும் அவர்களுக்குப் பொழுது மிச்சம் இருக்கிறது. அது வீணிலோ, வம்பிலோ போகாமலிருக்க வேண்டுமானால் அதற்கு வழிதான் ஆசார்யாள் அன்றைக்குச் சொன்னதற்கு வித்யாஸமான ஒன்றாகத் தெரிகிறது. அதாவது, இன்றைக்கு ஸ்த்ரீகள்தான்

Koviloor Digital Library

தங்களுக்கு மிஞ்சும் பொழுதையெல்லாம் நம்முடைய இதிஹாஸ-புராணங்கள், ஸ்தோத்ரப் புஸ்தகங்கள், அது மட்டுமில்லாமல் உசந்த காவ்யங்கள் ஆகியவற்றை நன்றாகப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படிப் பண்ண முடியும் என்பது.

அவர்களுடைய பொழுது நல்ல விதமாகக் கழிவதற்கு இது வழி என்பது மாத்திரமில்லை. எத்தனையோ யுகத்துக்கு முன்னாலிருந்து ஆரம்பித்து, தொடர்ந்து வந்துள்ள நம்முடைய மஹத்தான கலாசாரத்துக்கு உயிரூட்டுகிற புஸ்தகங்கள் நம் காலத்தில் செத்துப் போய் விட்டன என்ற பெரிய பழி, மஹத்தான களங்கம் நமக்கு ஏற்படாமலிருக்க வேண்டுமானால் இப்படி ஸ்த்ரீகளாவது அவற்றைப் படித்துப் ப்ரயோஜனப்படுத்திக்கொண்டு ரக்ஷித்துக் கொடுப்பதுதான் வழி.

இப்படித் தாங்கள் படித்தறிந்ததன் ஸாராம்சத்தை அவர்கள் புருஷர்மார்களுக்கும் சொல்லி அவர்களுக்கும் நம்முடைய ஸமய கலாசாரத்தில் ஒரு அபிருசியை ஏற்படுத்தவேண்டும். [சிரித்து] தானாகப் படித்துத் தெரிந்து கொள்ள ப்ரியப்படாதவனாக இருந்தாலும், பெண்டாட்டி சொல்கிறாள் என்றால் எவனும் கேட்டுத் தெரிந்து கொள்வான்.

நம்முடைய புராதனமான, புனிதமான இலக்கியச் செல்வம் என்பது நம் காலத்தோடு கொள்ளை போகாமலிருக்க வேண்டுமானால் அதற்கு இப்படி ஸ்த்ரீகள் பண்டிதைகளானால்தான் முடியும் என்று ப்ரத்யக்ஷ வ்யவஹாரத்தில் ஏற்பட்டிருப்பதால்தான் துணிந்து சொன்னேன்.

ஆசார்யாள், பாண்டித்யம் என்கிறதை வேதத்தில் பாண்டித்யம் என்றே கருதி, வேதாத்யயன அதிகாரம் ஸ்த்ரீகளுக்கு இல்லாததால்தான் அவர்கள் பாண்டித்யம்

Koviloor Digital Library

பெறுகிறதற்கில்லை என்று சொன்னார். நானும் இப்போது வேதத்தில் கை வைக்கவில்லை. ஸ்த்ரீகளை வேதங்கள் படிக்கும்படியாகச் சொல்லவில்லை. வேதம் தவிர்த்த இதிஹாஸ-புராண-ஸ்தோத்ர-காவ்யாதிகள்தான் படித்துத் தெரிந்து கொள்ளச் சொல்கிறேன்.

இதை பாபமாகவோ அபசாரமாகவோ நினைக்காமல், இதற்கு ஆசார்யாள் ஆசீர்வாதம் பண்ணுவார் என்ற நம்பிக்கையுடனேயே சொல்கிறேன்.

ஆசார்யாள் பெயரிலுள்ள இந்த மடத்து த்வாராவே [மூலமாகவே] இப்படிப் பெண்கள் படித்துத் தெரிந்து கொள்வதற்கு என்ன விதமெல்லாம் உதவி செய்யலாமோ, இன்ஸென்டிவ் கொடுக்கலாமோ அவ்வளவும் அவருடைய ஆசீர்வாதத்துடனேயே செய்ய வேண்டுமென்று எனக்கு இருக்கிறது.

மொத்தத்தில் விஷயம்: பெண்கள் உத்யோகத்துக்குப் போகாமல் க்ருஹிணிகளாகவே இருந்து கொண்டு க்ருஹ ஸம்ரக்ஷணம் செய்வதே ச்ருதி-ஸ்ம்ருதிகளின் வழிப்படியான ஸ்த்ரீ தர்மம். அதற்கு அநுகூலமாகவே ஆசார்யாள் அவர்களுக்குப் பாண்டித்யம் வேண்டிய தில்லை என்று சொன்னது. இப்போது [நான்] சொல்கிறதும் அவளுடைய க்ருஹிணி தர்மத்துக்கு விரோதமில்லை. அவளை உத்யோகத்துக்குப் போகச் சொல்லவில்லை. உத்யோகத்துக்குப் போகிற புருஷன் கோட்டைவிட்ட கலாசார செல்வத்தை அவளாவது ஸம்ரக்ஷித்து தரட்டும், அவள் வழியாகவே அவனுக்கும் அது கொஞ்சம் போகட்டும் என்றே சொல்கிறேன்.*

* இவ்விஷயமாக இந்நூலிலுள்ள 'மதத்தைக் காத்த மாதரசியர்' என்ற உரையின் கடைசிப் பகுதியான 'இன்றைய பெண்டிர் செய்ய வேண்டியது' என்பதையும் பார்க்கவும்.

Koviloor Digital Library

பெண்டிருக்கு ஆசார்யாள் தரும் உயர்வு

ஸ்த்ரீகளின் ஸ்தானத்தை ஆசார்யாள் குறைத்துச் சொன்னதாக நினைக்கவே கூடாது. ஏனென்றால் ஸம்ப்ரதாய க்ரமத்தில் வேத-வேதாந்தங்கள் படிக்கவும் சொல்லிக் கொடுக்கவும் அவர்களுக்கு அதிகாரமில்லா விட்டாலும், 'informal'-ஆக என்கிறார்களே, அப்படித் தங்கள் குழந்தைகளை நல்வழிப்படுத்துவதில் அம்மாமார் களுக்கு இருந்த சக்தியை ஆசார்யாள் நிரம்பவும் புரிந்து கொண்டு ஆமோதித்துச் சொல்லியிருப்பதும் உண்டு.

இப்படி informal-ஆக அவர்கள் [பெண்டிர்] ப்ரஹ்ம ஞானமேகூட பெறமுடியும் என்றும் ஆசார்யாள் சொல்லியிருப்பதுமுண்டு.

மாண்டூக்யோபநிஷத்தின் தத்வார்த்தத்தை விளக்கி ஆசார்யாளின் குருவுக்கு குருவான கௌடபாதாசார்யாள் 'காரிகை' என்று எழுதியிருக்கிறார். 'Pure Advaita classic' [சற்றும் கலப்படமற்ற அத்வைதத்தையே சொல்லும் தலைசிறந்த இலக்கியம்] என்று அதை ரொம்பப் படிப்பாளிகளும் சொல்கிறார்கள். அதில் ஒரு இடத்தில், "பிறப்பில்லாததும், அது-இது என்ற பேதமில்லாமல் ஸர்வ ஸமமாயிருப்பதுமான ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யம் என்பதில் எந்தச் சில பேர் அசைக்க முடியாத நிச்சய உறுதி உள்ளவர்களோ அவர்களே மஹா பெரிய ஞானத்தைப் பெற்றவராவார்கள். ஆனால் பொதுவாக ஜீவலோகத்திற்கு அது பிடிபடுவதில்லை" என்று ச்லோகம் இருக்கிறது.* இங்கே 'எந்தச் சில பேர் — **யே கேசித்** — என்று வருவதற்கு ஆசார்யாள் பாஷ்யத்தில், **'ஸ்த்ர்யாதயோபி'** — அதாவது 'ஸ்த்ரீ முதலானோர் உள்பட எவரானாலும் எந்தச் சிலருக்கு, ப்ரஹ்மமே ஸத்யம் என்ற நிச்சய உறுதி

* மாண்டூக்யோபநிஷத் – காரிகா 4.95.

Koviloor Digital Library

இருக்கிறதோ' — என்று சொல்லியிருக்கிறார். இதனால் ஸ்த்ரீகளும் ப்ரஹ்ம ஞானம் அடையமுடியும் என்று அவர் அபிப்ராயப்பட்டது தெரிகிறது. அதற்குத் தகுதி பெறாமலே பொதுவாக ஜீவலோகம் இருந்தாலும், அஸாதாரணமான சில பேர், பொம்மனாட்டிகளிலும் அப்படி அஸாதாரணமாக இருக்கிற சில பேர், ப்ரஹ்ம ஞானம் அடைய முடியும் என்று இங்கே சொல்லியிருக்கிறார்.

ப்ரஹ்ம ஞானம் வரைக்குமே பெண்கள் போக முடியும் என்று சொல்லும் ஆசார்யாள் லௌகிகத்திலும் அவர்களுக்கான உசந்த ஸ்தானம் கொடுக்கவே செய்கிறார். குழந்தைகளுக்கு அம்மாவும் ஒரு குருவாக இருப்பதில் மட்டும் இந்த உசத்தி இல்லை. பதிக்கே அவள்தான் உற்ற ஸகா என்று ஆசார்யாள் 'ப்ரச்னோத்தர ரத்ன மாலிகா'வில் சொல்லியிருக்கிறார். "கிருஹஸ்தனுக்கு உற்ற ஸகா யார்?" என்று அதில் ஒரு கேள்வி கேட்டுவிட்டு பதிலாக, "பத்தினி" என்கிறார்:

"க்ருஹமேதினஸ்ய மித்ரம் கிம்?"

"பார்யா."

அன்னையும் குருவாக: ஆசார்யாளின் ஆமோதிப்பு

'நல்வழிப்படுத்துவது' என்பதுதானே குருவின் முக்யமான கார்யம்? அதனால் அம்மாவுக்கும் அப்பா மாதிரியே குரு ஸ்தானம் உண்டு. இதையும் ஆசார்யாள் எடுத்துக்காட்டிச் சொல்லியிருப்பதுண்டு. சித்தே முந்தி தானே பார்த்தோம், பிள்ளை குணவானாக இருப்பதில் அம்மாவுக்கே ப்ராதான்யம் [பிரதானமான ஸ்தானம்] என்று அவர் சொன்னதை? குணவதியான மாதாவின் கர்ப்பத்தில் ரூபமாகி, அவளிடமிருந்து ஆஹாரம்-பானம்

Koviloor Digital Library

பண்ணிக் குழந்தை வளர்வதாலேயே முக்யமாக ஒரு ப்ரஜைக்கு குண ஸம்பத்து ஏற்படுகிறது. இது அவளுக்கே தெரியாமல் அவள் புத்ரனை நல்வழிப்படுத்துவது! அப்புறம் சின்ன வயஸில் அதற்குக் கதை புராணம் சொல்லி, ஸ்தோத்ரங்கள், நீதிப் பாடல்கள் சொல்லிக் கொடுத்து நல்வழிப்படுத்துகிறாள். 'இப்படிப் பண்ணப்பா, இப்படிப் பண்ணாதேப்பா!' என்று அநேகம் சொல்லிக் கொடுக்கிறாள். அவளுடைய நல்ல நடத்தையைப் பார்த்துப் பார்த்தே — அதன் ஸெளக்ஷ்மமான சக்தியாலேயே கூட — பாலப் பிராயத்தில் ஒருத்தன் நல்லவற்றைத் தெரிந்து கொண்டு அந்தப்படி செய்கிறான். **'தாயைப் போலப் பிள்ளை'** என்று வசனமே இருக்கிறது.

இதையெல்லாம் ஆசார்யாள் கவனித்து — ரொம்பவும் 'ஸிம்பதெடிக்'காகவும் கௌரவம் கொடுத்தும் கவனித்துத்தான் — கடோபநிஷத்திலே ஒரு இடத்தில்* ப்ருஹதாரண்யகத்தையும் quote பண்ணிக் காட்டி, வேதம் வகுத்துக் கொடுக்கிற விதிமுறையின்படி குருவைப் போலவே அம்மா-அப்பாவுக்கும் — 'அம்மாவுக்கும்' என்பதைக் கவனிக்க வேண்டும்; மாதா-பிதா-குரு என்று மூன்று பேருக்குமே — 'ப்ரமாண காரணம்' என்ற பெருமை, உரிமை இருப்பதாகக் காட்டியிருக்கிறார். 'ப்ரமாண காரணம்' என்பதற்கு 'அதிகாரபூர்வமான குரு ஸ்தானம்' என்று இங்கே அர்த்தம்.

அதாவது, தாயாருக்கும் குருஸ்தானம் உண்டு.

தாயார்களின் பெயரைச் சொல்லி ப்ருஹதாரண்யகத்தில் ஏராளமான ரிஷிகளைத் தெரிவித்திருக்கிறதென்றால்,

---

* I.1.17. தெய்வத்தின் குரல், ஆறாம் பகுதியில், 'உபதேசகராகிய தேசிகர்' என்ற உரையில் 'அன்னை–தந்தையர் பெருமை' என்ற பிரிவும் பார்க்க.

Koviloor Digital Library

சாந்தோக்யத்திலும் இரண்டு பேரை அந்த மாதிரியே சொல்லியிருக்கிறது.

அன்னையின் வழியில் கண்ணனையே!

அதிலே ஒருத்தர் ஸாக்ஷாத் கிருஷ்ண பரமாத்மா. 'இதுதான் க்ருஷ்ணரைப் பற்றிய earliest reference; அவர் வாஸ்தவமாகவே இருந்த historical personality என்று ரூபிக்கிற reference' என்று படிப்பாளிகள் சொல்கிறார்கள். அது எங்கே வருகிறதென்றால், சாந்தோக்யத்தில் 'புருஷ யஜ்ஞம்' என்பதைப் பற்றிச் சொல்கிற இடத்திலே*. ஒருத்தரை 116 வயசு ஜீவிக்கச் செய்கிற யஞ்ஜம் அது. க்ருஷ்ணர் 120 வயஸுக்கு அதிகமாக ஜீவித்தவர் என்பது கவனிக்கவேண்டிய பாயின்ட். அவர் கோர ஆங்கிரஸ் என்ற ரிஷியிடமிருந்து இந்த உபதேசம் கேட்டுக் கொண்டார்; கேட்டுக் கொண்டதற்கப்புறம் 'தாஹமில்லாதவராக ஆனார்' என்று சொல்லியிருக்கிறது. அதற்கு அர்த்தம், 'இந்த உபதேசம் பெற்றுக்கொண்ட பிறகு அவருக்கு வேறே வித்யை எதுவும் தெரிந்துகொள்ளணும் என்ற ஆசை போய் விட்டது என்பதே' என்று ஆசார்யாள் பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறார். ஆசை ஒரு தீராத தாஹம். 'த்ருஷ்ணா' என்பது [தாஹம், ஆசை என்ற] இரண்டையும் குறிக்கும். புத்தர் ஆசையை 'த்ருஷ்ணா' என்றே சொல்வார். அதை 'தன்ஹா' 'தன்ஹா' என்று [ஸம்ஸ்க்ருதச் சிதைவான பாலி மொழியில்] பௌத்தப் புஸ்தகங்களில் போட்டிருக்கும்.

'பூர்ணாவதாரமான கிருஷ்ணரா ஆயுர்விருத்தி மாதிரியான ஒரு ஐஹிகமான [இகவுலக] விஷயம் தெரிந்து கொண்டு அதிலே இவ்வளவு த்ருப்திப்பட்டார்?' என்று

* 3.17.6

Koviloor Digital Library

நினைக்கப்படாது. இந்த வித்யையில் ஒரு ஜீவன் தன்னுடைய பஞ்சப்ராணன்களையும் வரிசையாக வஸு–ருத்ர–ஆதித்யர்களுக்கு அர்ப்பணம் பண்ணியே அந்த 116–வயஸு கொண்ட வாழ்க்கையின் முதல்–இரண்டாவது–மூன்றாவது பாகங்களைக் கடப்பதாக வருகிறது. அதற்குள்ளே என்னவெல்லாம் ரஹஸ்யமான பாரமார்த்திக தத்வங்களை ஒளித்து வைத்திருக்கிறதோ? '116 வயஸு ஆயுஸ்' என்பதிலேயே என்னென்ன 'மெடஃபிஸிகல்' ரஹஸ்யங்கள் ஒளிந்து கொண்டிருக்குமோ? திருட்டு க்ருஷ்ணர் அந்த ஆத்மார்த்தமான ரஹஸ்ய நவநீதத்தையெல்லாமும் ஸ்வீகரித்துக் கொண்டே த்ருப்திப்பட்டிருப்பாராக இருக்கும்!

அவர் த்ருப்திப்பட்டது இருக்கட்டும். அம்மா பேரில் பிள்ளையைச் சொல்வதிலல்லவா இருந்தோம்? இங்கே க்ருஷ்ணரைப் பற்றிச் சொல்லும்போது 'க்ருஷ்ணாய தேவகீபுத்ராய' என்றே இருக்கிறது! அவர் வஸுதேவர் பிள்ளை என்பதாலேயே பிரஸித்தமான 'வாஸுதேவ' நாமம் பெற்றவர். 116 வயஸு ஆயுஸிலும் முதல் பாகத்தில் வஸுக்கள்தான் ப்ராணாதாரமாக இருப்பது. ஆனாலும் தம்முடைய மாயாவித்தனத்திற்கேற்ப, தேவகீபுத்ரர் என்றே இங்கே தம்மை ரிஷிக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருக்கிறார்! க்ருஷ்ணாவதாரத்தை ஏற்படுத்திய வித்து எதுவோ அதை வஸுதேவர் மனஸிலே தரித்து தேவகியின் மனஸுக்கு அனுப்பி வைத்ததாகத்தான் — பௌதிக கர்ப்பமாக இல்லாமல் மானஸீக ரீதியில் — பாகவதத்தில் சொல்லியிருக்கிறதே தவிர, சரீர ஸம்பந்தத்தால் அவர்களை அப்பா அம்மா என்று சொல்லும்படியாகக் காட்டவில்லை. ஆனாலும் அவர்களில் தேவகி வாஸ்தவமாகவே கர்ப்பவதியாக இருந்துதான் அவரைப் பெற்றிருக்கிறாள். அதனால் அவளுக்குத்தான் ஓரளவுக்காவது மாத்ரு

Koviloor Digital Library

ஸ்தானம் கொடுக்க இடமிருக்கிறது; வஸுதேவருக்கு [பித்ரு ஸ்தானம்] கொடுக்க அந்த அளவுக்குக்கூட ந்யாயமில்லை என்றே பகவான் நினைத்து அப்படிச் சொல்லியிருக்கலாம்.

ஸத்யகாம ஜாபாலர்

அம்மா பேரில் [உபநிஷத்தில்] சொல்லப்பட்ட இன்னொருத்தர்* யாரென்றால், 'ஸத்யகாம ஜாபாலர்' என்கிறவர். அம்மாவோடேயே அவர் இளவயஸில் வஸித்துக் கொண்டிருந்தார். அப்பா, 'போயே'விட்டாரோ, அல்லது எங்கே ஓடிப் போனாரென்று தெரியாமல் வீட்டை விட்டு ஓடிப் போய்விட்டாரோ? தன் வயஸொத்த பிள்ளை களெல்லாம் குருகுலவாஸம் பண்ணிக்கொண்டு ப்ரஹ்ம சர்யம் அநுஷ்டித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த பாலரான அவர், தாமும் அப்படியே பண்ண ஆசைப் பட்டார். அம்மாவிடம் தன் ஆசையைச் சொல்லி, குரு குலத்தில் சேர்த்துக் கொள்ளும்போது அதன் ரிஷி கோத்ரம் கேட்பாராகையால், தன் கோத்ரம் என்னவென்று கேட்டார். "அப்பா, கொழந்தே! பல எடத்துல ஸேவகம் செஞ்சுண்டு, சுச்ருஷை பண்ணிண்டு வாழ்க்கையை நடத்திண்டு போற எனக்கு என்னிக்கோ யௌவனத்துல பொறந்த ஒன் கோத்ரமும் தெரியலை, ஒண்ணும் தெரியலை! ஒண்ணு வேணா பண்ணு. என் பேர் ஜபாலா. நீ என் பிள்ளையானதுனால என் பேரை வெச்சு நீ ஜாபாலன். ஒனக்குப் பேர் 'ஸத்யகாமன்'னு வெச்சிருக்கு. அதனால குருகுல ரிஷி கேக்கறச்சே விஷயத்தை உள்ளபடி சொல்லி உன்னை 'ஸத்யகாம ஜாபாலன்'னு தெரிவிச்சுக்கோ" என்றாள்.

ஸத்யத்தில் பற்றும், ப்ரியமுந்தான் ஸத்யகாமம். அந்த அம்மாள் ஸத்யகாமையாகவே நிஜத்தைச் சொல்லியிருக்

* சாந்தோக்யோபநிஷத், 4.4.

Koviloor Digital Library

கிறாள். புத்ரனிடம் இன்ன கோத்ரம் என்று பொய்யாகச் சொல்லவில்லையோல்லியோ? தாயைப் போலவே பிள்ளையாக அந்தக் குழந்தையும் இருந்தான்.

அவன் ஹாரித்ரும கௌதமர் என்ற ரிஷியிடம் போய் ஸத்யகாமன் என்ற பேருக்கேற்க அம்மா சொன்னதை அப்படியே எழுத்துக்கெழுத்து அவரிடம் ஒப்பித்து, **"ஸத்யகாமோ ஜாபாலோ (அ)ஸ்மி போ:"** ['நான் ஸத்யகாம ஜாபாலன் என்ற பெயருடையவனாக இருக்கிறேன். ஐயனே!'] என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினான்.

உடனே ரிஷி, "உசந்த குலத்தில் பிறக்காதவன் இப்படிப் பேச முடியாது. ஆகையினாலே, உனக்கு உபநயனம் பண்ணிவைக்கிறேன்" என்று சொல்லி அவனை சிஷ்யனாகச் சேர்த்துக் கொண்டார் என்று கதை போகிறது.

அம்மா பேரில் வம்சம் சொல்கிறதும் அபூர்வமாக அங்கங்கே காணப்படுகிறது என்று காட்ட வந்தேன். அதிலேயே சிஷ்யன் எப்படி ஸத்யஸந்தனாக இருக்கணும், மானாபிமானம் விட்டு இருக்கணும், வித்யைக்காக தாஹம் எடுத்தவனாக இருக்கணும் என்பதெல்லாமும் வந்து விட்டன. அப்படிப்பட்ட ஒருவன் உபதேசம் [வேண்டும்] என்று ஆச்ரயிக்கிறபோது, தயங்காமல் அவனுக்கு உபதேசம் கொடுப்பது குரு லக்ஷணம் என்பதும் தெரிகிறது. அப்பா யார், கோத்ரம் என்ன என்று சொல்லத் தெரியாதவன் என்றால் தப்பாக நினைக்கவும் இடமிருக்கோல்லியோ? ஆனாலும் அதை அப்படி நினைக்காமல் அந்த ரிஷி அந்தப் பையனைச் சேர்த்துக் கொண்டார் என்கிறபோது — திருக்குறள்தான் ஞாபகம் வருகிறது: **'சான்றோர்க்குப் பொய்யாவிளக்கே விளக்கு'.**

மாதா–பிதாவுக்கும் மேல் குரு

மாதா-பிதா-குரு-தெய்வம் என்கிற நாலில் மாதா-பிதாக்களையே குரு என்றும், தெய்வம் என்றுங் கூடப்

Koviloor Digital Library

போற்றுகிறோம். ஆனால் மாதாவைப் பிதா என்பதில்லை; பிதாவை மாதா என்பதில்லை. குருவையும் தெய்வத்தையுந் தான் மற்ற மூன்றாகவுமே சொல்வது.

மாத்ரு பாசம், பித்ரு பாசம் ரொம்ப வலுவானது. அந்தப் பாசத்தை காட்டிக் குழந்தையை அன்பு பண்ணி, செல்லம் கொடுத்து வளர்க்கிறபோதேதான், அதோடேயே — இரண்டாம் பக்ஷமாக என்று சொல்லலாமோ என்னமோ? அப்படி 'ஸெகன்டரி'யாக — 'இன்ஃபார்ம'லாகக் கொஞ்சம் 'டீச்'சும் பண்ணுவதோடு பெற்றோர்கள் நல்வழிப்படுத்துவது முடிந்து போகிறது. நல்ல வழியில் வராவிட்டால்கூட, வயிற்றிலே பிறந்தது என்பதால் ப்ரஜையைத் தள்ளிவிடாமல் அந்த இரண்டு பேரும் வளர்ப்பார்கள் — பாசத்தால் பாதி, கடமை என்று நினைத்துப் பாதி இப்படிச் செய்வார்கள். குரு என்றே இருப்பவருக்குத்தான் நல்வழிப்படுத்துவதொன்றே கார்யமாக, முழுக் கடமையாகக் கொடுத்திருக்கிறது. நிறைந்த அன்பு — எல்லை கட்டமுடியாத க்ருபை என்கிற அளவுக்கு அன்பு — அவருக்கு சிஷ்யனிடம் இருக்கிறதென்றாலுங்கூட அதுவும் அவனை நல்வழிப்படுத்துவதிலேயேதான் ஒருமுகப்பட்டிருக்கிறது. சொந்தப் பாசத்தினால் அந்த லக்ஷ்யத்திலிருந்து அவர் திசை திரும்பி விடுவதில்லை. ஆகையினால், மாதா-பிதா-குரு என்ற மூவரில் ஒருவனுக்கு நிஜமான நல்லதை — நல்லதை மாத்திரமே — செய்வது குருதான். 'அம்மா-அப்பா சரணமில்லை; குருதான்!' என்று அதனால்தான், ஆசார்யாள் 'பால போத ஸங்க்ரஹம்' என்கிற அத்வைதத்தின் அரிச்சுவடி மாதிரியான புஸ்தகத்தில் சொன்னது.*

---

* பார்க்க: 'தெய்வத்தின் குரல்' பகுதி–ஆறு; உரை – 'உபதேசகராகிய தேசிகர்'; பிரிவு – 'அன்னை தந்தைக்கும் மேல் ஆசானே!'

Koviloor Digital Library

மூளை வளர்ச்சியும் இதய வளர்ச்சியும்

ஆனால் வித்யா போதகர் என்பதாக எந்த ஒரு வித்தையையும் — Arts, Science எல்லாமே வித்தைகள்தான்; அப்படி எந்த ஒரு வித்தையைச் — சொல்லிக் கொடுக்கிற வருக்கும் குரு என்ற பேர் ஏற்பட்டுவிட்டதால் கேள்வி வருகிறது. என்ன கேள்வி என்றால், " 'நல்வழி' என்பதன் ஸம்பந்தமே இல்லாமல் ஏதோ ஒரு ஸயன்ஸை, ஆர்ட்டைத் தானே இந்த குரு சொல்லிக் கொடுக்கிறார்? இவருக்கு எப்படி உயர்ந்த ஸ்தானம்?" என்ற கேள்வி.

இன்றைக்குத்தான் என்றில்லை. பூர்வகாலத்திலேயே நாஸ்திகத்தைக்கூட சாஸ்த்ரமாகவும், சூதாட்டம்-திருட்டு முதலானதைக்கூட வித்யைகளாகவும் சொல்லி, அவற்றுக்குக்கூட மூலபுருஷர்களும் குருமார்களும் சொல்லியிருக்கிறது! ப்ருஹஸ்பதியையே நாஸ்திக சாஸ்திரமான சார்வாகம் என்பதற்கு மூலபுருஷராகச் சொல்லியிருக்கிறது. திருட்டு சாஸ்திரத்திற்கு — சௌர்யம் (Chauryam) என்று அதற்குப் பேர்; அதற்கு மூல புருஷர் பேர் மூலதேவர் என்று இருக்கிறது. கர்ணீ என்றவளுடைய புத்ரரானதாலே அவருக்கு கர்ணீஸுதர் என்றும் பேர்...

சாஸ்திரம் என்றாலும் வித்யை என்றாலும் ஒன்றேதான். ராஜ சாஸனம் என்கிறோமே, அப்படிச் சாஸனம் என்றே அநேக விதிகளுடன் கட்டளையாகப் பெரியவர்கள் செய்ததெல்லாம் 'சாஸ்திரம்'. அவை ஒவ்வொரு துறையில் அறிவை ஊட்டுகிறபடியால் 'வித்யை'. 'வித்' என்றால் அறிவது.

[மேலே] சொன்னபடி நாஸ்திகம், திருட்டு-புரட்டு உள்பட எதையும் 'வித்யை' என்கிறபோது வித்யை என்பது 'ஏதோ ஒரு துறையில் அறிவு' என்றே ஆகிறது. அது எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அதற்கும் 'ஸிஸ்டமாடிக்'காக

Koviloor Digital Library

ஒரு 'முறை' ஏற்படுத்திச் சொல்லிக் கொடுத்தால் அது வித்யாபோதனையாகிவிடுகிறது. அப்படிப் போதிப்பவர் குரு ஆகிவிடுகிறார்.

ஆனால் இது ஒரு ஜீவனை மூளை என்பதன் எல்லைக்குள் மட்டும் கொண்டு வந்து பின்னப்படுத்தி, குரு என்ற ஸ்தானத்தையும் ரொம்பக் குறைத்துவிடுகிற கார்யந்தான். அறிவு வளர்ச்சி என்ற ஒன்றை மட்டும் கவனித்து, எந்தத் துறையில் அறிவை வழங்குவதும் வித்யா போதனை என்னும்போது ஜீவனுடைய ஹ்ருதயத்தை ஒதுக்கி விட்டதாக ஆகிறது. மூளை–ஹ்ருதயம் இரண்டும் சேர்ந்தே ஜீவன். ஒரு ஜீவன் உண்மையான ஜீவனாக வாழவும், ஜீவனே தேவனாகக்கூட உசரவும் மூளையைவிட ஹ்ருதய அபிவ்ருத்திதான் முக்யமானது. அதனால்தான் மூளைக்கு மாத்திரம் சரக்கு ஏற்றி அதை வ்ருத்தி செய்வதை 'ஜீவனை பின்னப்படுத்துவது' என்றது. ஜீவனை புத்தி சாலியாக மாத்திரமில்லாமல் குணசாலியாகவும் ஆக்க வேண்டியதே நிஜகுருவின் கடமை. அப்படியில்லாமல் புத்திசாலியாய் மட்டுமே பண்ணும்போது குருவின் ஸ்தானத்தை ரொம்பவும் குறைத்து, குறுக்கி, இறக்கி விடுவதாக ஆகிவிடுகிறது.

பகவத் ஸ்ருஷ்டியில் மநுஷ்ய மூளை என்பது ஒரு அத்புதமான கருவியாக இருப்பதைக் கவனித்து — அதை மாத்திரமே கவனித்து — வெறும் அறிவை மட்டுமே சார்ந்து ஒரு ஆர்ட்டாக, ஸயன்ஸாக ஸிஸ்டம் செய்யப்பட்ட எதையும் 'வித்யை' என்று வைத்து விட்டார்கள். அதன் போதகரை 'குரு' என்றும் சொல்லிவிட்டார்கள். ஆனாலும் இதுவே நம் பூர்விகர்களின் பூர்ணமான அபிப்ராயம் என்று நினைத்து விடக்கூடாது.

லோக வாழ்க்கை என்பது நன்றாக நடப்பதற்கு அறிவுத் துறைகள் என்றே — அதாவது ஆத்ம ஸம்பந்த

Koviloor Digital Library

மில்லாமல் இருக்கப்பட்டவையாகவே — இருக்கிறவையும் தேவைப்படத்தான் செய்கிறது. வாழ்க்கைக்கு நேரே ப்ரயோஜனப்படுவதாகத் தெரியாவிட்டாலும் அல்லது மனஸுக்கு ஒரு நிறைவைக் கொடுத்து, அதனால் ஸந்தோஷம் ஏற்படுத்துவதாகவும் அநேகத் துறைகள் இருக்கின்றன — ஸங்கீதம், சில்ப-சித்ரம், சரித்ரம், பாஷா சாஸ்திரம் இப்படி அநேகம். திருட்டும், சூதாட்டமும் மாதிரியில்லாமல், தனிப்பட நல்லது, கெட்டது என்று இல்லாமல் நாம் எப்படி ப்ரயோஜனப்படுத்திக் கொள்கிறோமோ அதனாலேயே நல்லதோ கெட்டதோ விளைவிப்பதாகவுள்ள ஸயன்ஸ் ஸப்ஜெக்ட்கள் தற்போது தினந்தோறும் பெருகி வருகின்றன. இன்றைய வாழ்க்கைக்கு — பௌதிகமாக, மெடீரியலாக த்ருப்தி தருகிற வாழ்க்கை மட்டுமில்லை; அறிவுக்கும் மனஸுக்கும் ஸந்தோஷம் தந்து வாழ்க்கையையே உத்ஸாஹப்படுத்துகிறவற்றையும் சேர்த்தே சொல்கிறேன்; அப்படிப்பட்ட வாழ்க்கைக்கு — இந்த வித்யைகள் எல்லாமே வேண்டித்தான் இருக்கின்றன. நாகரிக ஸமுதாயங்கள் ஏற்பட்ட நாளிலிருந்தே அப்படித் தான் இருந்து வந்திருக்கிறது.

நம் தேசத்தில் இந்த அறிவு வித்யைகளைக் கற்பிக்கிறவர்களும் உத்தம ஹ்ருதயமுள்ள யோக்யர்களாக, நல்ல சீலமுள்ளவர்களாக இருந்து வந்தார்கள். திருட்டு, சூதாட்டம் மாதிரியான கெடுதலான வித்யைகளைக் கற்றுக் கொடுக்கிறவர்களைத் தவிர, மற்ற ஆசாரியர்கள், ஆசிரியர்களெல்லாம் நல்ல morals-ம் அதாவது நன்னெறியும், அத்தனை நெறிக்கும் ஆதாரமான தெய்வபக்தியும் கற்றுக் கொடுக்கவும் செய்தார்கள். அதனால், அவர்களிடம் கற்றுக் கொண்டவர்கள், பக்தி விச்வாஸம் வைக்கவேண்டிய குருமார்களாகவே அவர்களுக்கு ஸ்தானம் கொடுத்தார்கள். அவர்கள் கற்றுக் கொடுக்கும் பல துறைப் பாடத்தால்

Koviloor Digital Library

மூளை வளர்ச்சி பெறுகிறதோடு, பாடமான நீதி போதனை, பக்தி போதனை முதலியவற்றுக்கு ஜீவ சக்தி ஊட்டிய அவர்களுடைய வாழ்க்கை உதாரணத்தாலும், பெர்ஸனல் ரேடியேஷனாலும் ஹ்ருதய வளர்ச்சியும் பெற்றார்கள்.

ஆனாலும் ஆத்ம பரிபக்வம், பூர்ணத்வம் முதலியன இங்கே கிடைப்பதற்கில்லை. அதற்கென்றே ஏற்பட்ட குரு மாரைத்தான் நம்முடைய மரபிலே முக்யமாக குரு, ஆசார்யர், தேசிகர் என்றெல்லாம் சிறப்பித்து வைத்தது.

ஜீவனை தேவனாக்குவதற்கே முக்யத்வம் தந்தவர்கள் நம் முன்னோர்கள். "வேறே எந்த தேசத்திலும், எந்த மதத்திலும், கலாசாரத்திலும் இப்படி 'ஸெக்யூலர்' [உலகியல்] என்று தோன்றுகிற ஸகலத்தையுங்கூட 'ஸ்பிரிசுவலைஸ்' பண்ணி [ஆன்மியமாக்கி]த் தரக் காணோம்" என்று மதாந்தரங்களை [பிறமதங்களை]ச் சேர்ந்த அறிவாளிகளும் சொல்கிறார்கள்.

நிகழ்கால இழிநிலை

இக் காலத்தில் — அதிலும் 'ஸ்வதந்திரம்' என்பதாக ஒன்று வந்திருப்பதாகச் சொல்லப்படும் காலத்திற்குள்தான் — **ஹ்ருதயத்தை அடியோடு புறக்கணித்து விட்டு மூளைக்கு மட்டும் சரக்கு ஏற்றுகிறதே கல்விமுறை** என்றாகிவிட்டது. ஸ்வதந்திரத்திற்கு முந்தி வெள்ளைக்காரர்கள் நடத்தி வந்த கல்வித்திட்டம் நம்முடைய வாழ்முறையைப் பாழ்படுத்தி அவர்களுக்கு அடிமை வர்க்கமாகவே நம்மை ஆக்குகிற உத்தேசத்துடன், ஆனாலும் அப்படித் தெரியாமல் ஏதோ நம்மை ரொம்ப முன்னேற்றிவிடுகிற ஒன்றாக அவர்களால் மிகவும் தந்திரமாக வகுக்கப்பட்டிருந்தது. அவர்கள் ஆட்சி முடிந்து ஸ்வராஜ்யம் வந்தபின் அந்த முறை மாறவேண்டும் என்று ஆசைப்பட்டோம். மாறவும் மாறிற்று. எப்படி

Koviloor Digital Library

யென்றால், முன்னைவிட மோசமான கல்வி முறையாக! இதில் கல்வியும் இல்லை; முறையும் இல்லை. ஏன், நிஜமாகவே மூளைக்காவது சரக்கு ஏற்றுகிறார்களா என்றால் அதுவும் கேள்வியாகத்தானிருக்கிறது! யோக்யதாம்சம் என்பதைப் பின்னுக்குத் தள்ளி ஜாதி, பணபலம், மிரட்டல் என்கிறவற்றை வைத்துக் கல்வி, பட்டம் என்றால் வேறே எப்படி இருக்கும்? லஞ்சத்தை லஞ்சம் என்ற அஸல் ரூபத்திலும், டொனேஷன் என்ற பெயரிலும் கொடுத்து அட்மிஷன் பெறுவது, பாஸ் போடப் பண்ணுவது; மிரட்டி உருட்டியுங்கூடப் பாஸ் போடப் பண்ணுவது; இப்படி மாணவன் பண்ணுவதற்கு வாத்தியார்களும் மானேஜ்மெண்டும் இடம் கொடுத்து, ஸலாம் போடுவது; போதாக்குறைக்கு கவர்மென்டே வேறு பண்ணுகிற பக்ஷபாதம் — எந்த வரம்பில் நின்றால் முறை என்கிறதை யோஜித்துப் பார்க்காமல் வோட்டைப் பற்றியே யோஜனை பண்ணிக்கொண்டு, நாளுக்கு நாள் ஜாஸ்தியாக்கிக் கொண்டிருக்கும் ரிஸர்வேஷன் — என்று ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும்போது இந்த தேசத்தில் தர்ம ந்யாயமான கல்வி முறை நடக்கிறதா, நடக்குமா என்பதே கேள்வியாயிருக்கிறது! 'குரு', 'சிஷ்யர்' என்று ஒவ்வொன்றுக்கும் எத்தனையோ லக்ஷணங்கள் — யோக்யதாம்சங்கள் — கொடுத்து ஏற்பட்டிருக்கும் பெயர்களுக்கும், தற்போது பெருகி வரும் டீச்சர்கள்-ஸ்டூடன்ட்கள் இருக்கிற விதத்திற்கும் எங்கேவுக்கு எங்கேயோவாக இருக்கிறது! நெடுங்காலமாக இருந்து வந்த ஒரு உன்னதமான கலாசாரம் இப்படி ப்ராணாபத்தாக அரிபட்டுக்கொண்டே போய், தேசத்தின் வருங்கால ப்ரஜைகளை நல்லவர்களாக்குவதற்கு எந்த ஏற்பாடுமே இல்லாதபோது, அதை சீர்ப்படுத்த வேண்டும் என்ற ப்ரக்ஞையே அரசாங்கத்திற்கு இருக்கிற தாகத் தெரியாததுதான் எல்லாவற்றையும் விட ரொம்பவும் கவலை தருவதாக இருக்கிறது. ராஜாங்கத்திற்கு —

Koviloor Digital Library

டில்லியில் இருப்பது, ஸ்டேட்களில் இருக்கிறவை எல்லாவற்றுக்குந்தான் — திரும்பின பக்கமெல்லாம் பிரச்னையாயிருக்கிறதென்பதும் வாஸ்தவந்தான். இருந்தாலும் வருங்காலத்திற்கே விதை முதல் கல்விதானே? அதற்கு priority தந்து ஸரிப்பண்ண வேண்டுமோ, வேண்டாமோ? அப்படிக்கில்லாமல், இருக்கிறதும் இன்னும் சீர் கெட்டுப்போகப் பண்ணிக் கொண்டிருக்கிறார்களே என்றுதான் ரொம்பக் கவலையாயிருக்கிறது. உங்களையும் கவலைப்படுத்துவது தவிர இந்தப் பேச்சால் ஏதாவது ப்ரயோஜனம் உண்டா, தெரியவில்லை! தற்கால சாந்தியாகவாவது நம் கவலையைப் போக்கிக்கொள்ள இதுவரை பார்த்த பூர்விகர்கள் கதைக்கேதான் போகணும்....

தற்கால ஆசிரியர்மார்களுக்கு

போகணும் என்கிறேனே தவிர, 'பழங்கதையைப் பேசினால் மட்டும் போதுமா? கண்முன் நடக்கிறதற்கு நமக்குத் தெரிந்த நல்ல வழியைச் சொல்லாமலிருக்கலாமா' என்றும் தோன்றுகிறது. அதனால் இக்கால ஆசிரியர்மார்களுக்கே அப்பீல் செய்து கொண்டு பார்க்கிறேன்.

அவர்கள்தானே தற்காலத்திலும் தங்கள் ஜீவனோபாயமாகவே கல்வியை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள்? வேறே வேலை கிடைக்கவில்லை என்பதனால் இதற்கு வந்ததாக இல்லாமல், வருங்காலப் பிரஜைகளின் அறிவை மேம்படுத்தும் கல்வி என்ற உத்தமமான தொழில் தங்களுக்கு வாய்த்திருப்பதன் அருமையை, அருமை பெருமையை அவர்கள் உணர்ந்து ஆசிரியத் தொழிலை ஒரு ஆராதனையாக ஆற்ற வேண்டும். அதோடு, இவ்வளவு நேரம் சொன்னதுபோல் நிஜமான கல்வி என்பது அறிவை மாத்திரம் அபிவிருத்தி செய்வதோடு நின்றுவிடாமல் ஸத்குண அபிவிருத்திக்கும் வழி செய்யவேண்டும் என்று

Koviloor Digital Library

அவர்கள் உணரவேண்டும். இந்த இரண்டுக்கும் தாங்களே பொறுப்பு என்று மனஸாரப் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும். கல்வித்தரம் குறையாமல் காப்பாற்றுகிற ரக்ஷையாக அவர்களே இருக்கவேண்டும். அந்தத் 'தரம்' பாடத் திட்டத்தோடு முடிந்துவிடும் விஷயமில்லை; வாழ்க்கையில் ஸத்குணமுள்ள ஸத்பிரஜைகளை உண்டாக்க வழி செய்தாலே கல்வியானது நிஜமான தரத்தைப் பெற்றதாகும்.

குருகுலவாஸம் மாதிரி இந்த ஆசிரியர்கள் ஸதா காலமும் மாணவர்களைக் கூட வைத்துக்கொண்டு வாழவில்லை. ஆனால், கூட வைத்துக்கொண்டு வாழும் போதுதான் ஒருவர் தன்னுடைய வாழ்க்கை உதாரணத்தால் மாணவர்களின் குணாபிவிருத்திக்கு வழி காட்ட முடியும் என்றும், பள்ளி நேரம், அதில் பீரியட்கள் என்றும் நடைமுறை இருந்து அப்படி 'டீச்' பண்ணும்போது, அறிவுக்கு மட்டுமேயான வெறும் பாடத்தை மட்டும் சொல்லிக் கொடுப்பதற்கு அதிகமாக குணாபிவிருத்தி விஷயத்தை எடுத்துப் போட்டுக் கொள்ளுவதற்கில்லை என்றும் தீர்மானித்து விடக் கூடாது.

குருவின் கூட்வே வாழும்போது மாணவர் பெறுகிற வாழ்க்கை உதாரணம் ரொம்பவும் கூடுதலானதுதான்; ஆக்ஷேபணையேயில்லை. அதனால், ஸ்கூல் நேரத்தில் மட்டும் மாணவர்கள் பழகும் பல ஆசிரியர்களின் வாழ்க்கையுதாரணம் அவர்களை 'டச்'சே பண்ணாது என்று அர்த்தமில்லை. இளம் உள்ளங்களில், தங்களுடன் கொஞ்சமோ நஞ்சமோ எவ்வளவு பழகுகிறவர்களானாலும் அவர்களின் தரத்தைப் பொறுத்து நல்ல முறையிலோ, கெட்ட முறையிலோ ஒவ்வோர் அளவுக்கு 'இம்ப்ரஷன்' பதிந்து, அந்த 'இன்ஃப்ளுயென்'ஸில் பசங்களும் அதே வழியில் தாங்களும் போகத் தூண்டுதல் பெறுவார்கள்.

Koviloor Digital Library

இக்கால ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுக்கும் போதும் மாணவர்கள் பாடத்தை மாத்திரமின்றி, பாடம் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியரையும்தான் கவனிக்கிறார்கள். பாடம் அவர்கள் மனஸில் பதிகிற மாதிரிதான், அந்த ஆசிரியரின் நடத்தையும் பதிகிறது. பாடத்தைக் கவனிக்காமலும், அது மனஸில் பதியாமலும் போகிற மந்தமான மாணவனும்கூட ஆசிரியரின் நடத்தையை கவனிப்பான்; அது அவன் மனஸில் பதியும். 'அப்படி மாணவர்களுக்குப் பதிவது அவர்களை நற்குண–நல்லொழுக்கங்களில் கொண்டு விடவேண்டும். அந்த ரீதியில் நாம் உத்தமமாக வாழ வேண்டும். இல்லாவிட்டால் நமக்கு ஜீவனோபாயம் தருகிற அந்த மாணவ ஜீவர்களுக்குத் தாங்கள் த்ரோஹம் செய்ததாகிவிடும்' என்கிற அளவுக்கு ஆசிரியர்மார்கள் ஆழமாகக் கருத வேண்டும்.

வாழ்க்கையுதாரணம் என்ற முக்யமான அம்சம் ஒரு பக்கம் இருக்கட்டும். பாடம் போதிப்பது என்றே வருகிற அம்சத்திலும் ஆசிரியர்கள் ஏனோதானோ என்றில்லாமல், அந்தரங்கபூர்வமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பள்ளிக்கூடத்தில் ஏனோதானோ என்று 'டீச்' பண்ணி விட்டு, அதனாலேயே பசங்கள் தங்களிடம் ட்யூஷன் வைத்துக் கொள்ளும்படிச் செய்து, தங்களுடைய ஸம்பாத்தியத்தை விருத்தி செய்துகொள்ள ஒரு ஆசிரியர் எண்ணினாரானால் அதைப் போன்ற தர்ம விருத்தமான [தர்மத்திற்கு விரோதமான] பாபம் இன்னொன்றில்லை. புண்ய வசத்தால் கிடைத்திருக்கும் 'டீச்சிங்' வேலையை இப்படிப் பாபகரமாகப் பண்ணிக்கொள்ளலாமா? அந்த மாதிரி [ரீதியில்] நினைப்பதற்கே அவர்கள் பயப்பட வேண்டும்.

மற்ற தொழில்களுக்குப் போகிறவர்கள் தாங்கள் படித்த படிப்பை உபாயமாகக் கொண்டு அந்தத் தொழிலை

Koviloor Digital Library

ஆற்றுகிறார்கள். அநேக உத்யோகங்களில் இருப்பவர்கள் செய்யும் தொழில்களில் அவர்கள் படித்த படிப்பு நிறையவோ, கொஞ்சமோ 'அப்ளை' ஆகிறது. அதோடு ஸரி. படித்த படிப்பு கொஞ்சங்கூடப் பிரயோஜனமாகாத உத்யோகங்களிலும் பலர் இருக்கிறார்கள். பி.எஸ்ஸி. கெமிஸ்ட்ரி படித்துவிட்டு ஏ.ஜி'ஸ் ஆபிஸில் க்ளார்க் என்றால்? இப்படியெல்லாம் இல்லாமல், படித்த படிப்பு அப்புறம் செய்யும் தொழிலுக்கு உபாயமாயிருக்கிறது என்பதற்கும் மேலே, அந்தப் படிப்பே மூலதனமாக இருப்பது ஆசிரியத் தொழிலில்தான். தாங்கள் மாணவர்களாக இருந்தபோது படித்த படிப்பையே ஆசிரியத் தொழிலில் அப்புறம் அவர்கள் தங்களுடைய மாணவர்களுக்கு டீச் பண்ணுகிறார்கள். அவர்கள் ஒரு பக்கம் கற்றுக் கொடுப்பவர்களாக இருந்துகொண்டே மறு பக்கம் கற்போராகவும், ஏற்கெனவே படித்ததையே திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படித் திரும்பத் திரும்ப அதே பாடங்களை அவர்கள் டீச் பண்ணுவதால், அந்தப் பாடங்களிலே அவர்கள் முழுக் கருத்தும் செலுத்தினால் அவர்களுக்கே பழைய பாடங்களிலிருந்து புதுப் புது விஷயங்கள் தெரிய ஆரம்பிக்கும். முக்யமாக, மேல் படிப்பில் இந்த மாதிரி நடக்கும். இது மேலே மேலே ரெஃபரென்ஸுகள் பார்த்து, பாடங்களுக்கு மெருகேற்றிக் கொள்ள உதவும். புத்திசாலி மாணவர்கள் கேட்கிற கேள்விகளும் இப்படியே ஆசிரியர் 'ஸப்ஜெக்'டை மேலும் ஆழமாகத் துருவிப் பார்த்துத் தெரிந்துகொள்ள உபகாரம் செய்யும். டீச்சர்களை 'மாஸ்டர்' என்று சொல்கிறோமே, அது நிஜமாகவே பொருந்தும்படி அவர்கள் ஸப்ஜெக்டில் 'மாஸ்டரி' பெற்று விடுவார்கள். அப்படிப்பட்டவர்கள்தான் நன்றாக, தெளிவாக டீச் பண்ணி விஷயத்தை மாணவர்களுக்குள்ளே ஆழமாக இறக்க முடியும்.

Koviloor Digital Library

ஒரு கதை சொல்வார்கள். பௌராணிகர் ஒருவர் ராஜாவிடம் போய் பாகவதம் சொல்வதாகச் சொன்னாராம். அதைக் கேட்ட ராஜாவுக்கு அவர் எப்போது ராஜமரியாதைக்கும், ஸம்பாவனைக்கும் ஆசைப்பட்டு வந்திருக்கிறாரோ அப்போதே அவர் பாகவதத்தை புத்தியால்தான் படித்திருக்கிறாரேயன்றி ஹ்ருதயத்தால் படித்து பக்தி-ஞான-வைராக்கியங்களைப் பெறவில்லை என்று புரிந்துவிட்டது. அந்த மாதிரி புஸ்தக விஷயத்தில், உட்கருத்தில் ஊறாதவர் சொல்லிக் கேட்டால் கேட்கிற பேருக்குப் பூர்ணமான ப்ரயோஜனம் கிடைக்காதே என்று பார்த்தான். ஆகையினால், வந்த ப்ராம்மணருக்கு ஏதோ ஒரு ஸம்பாவனையைப் பண்ணி விட்டு, "இன்னொரு தடவை படித்துப் பார்த்து விட்டு வந்து அப்புறம் உபந்யாஸம் பண்ணுங்கள்" என்றான். பௌராணிகருக்கு அவன் ஏன் அப்படிச் சொல்கிறானென்று புரியவில்லை. ஆனாலும் ராஜாக்ஞை என்பதாலும், அதை நிறைவேற்றினால் நிரம்ப கௌரவம், த்ரவ்யம் எல்லாம் கிடைக்குமே என்பதாலும் அவரும் ராஜா சொன்ன மாதிரி திரும்பிப் போய் இன்னொரு தடவை பாகவதத்தை நுணுக்கமாகப் படித்து விட்டு அவனிடம் வந்தார். இப்போதும் முன் மாதிரியே அவன் அவருக்கு ஒரு ஸம்பாவனையைப் பண்ணி, "இன்னொரு தடவை படித்து விட்டு வாரும்" என்று சொன்னான். அவரும் அதேமாதிரிப் பண்ணினார். ராஜா பழைய பல்லவியையே பாடினான். பௌராணிகரும் முன் போலவே அதற்கு அநுபல்லவி பாடினார். இப்படியே அந்த இரண்டு, மூன்று தடவை மட்டுமில்லை; இருபது தடவை ராஜா அவரை மறுபடி படித்து விட்டு வரும்படி அனுப்பி வைத்து அவரும் அப்படியே பண்ணினார்.

இருபத்தோராவது தடவையும் ராஜா தன் பல்லவியைப் பாடினான். ஆனால் இந்தத் தடவை அவர் அதற்கேற்க அநுபல்லவி பாடவில்லை.

Koviloor Digital Library

ரொம்ப நாளாகியும் அவர் வராததால் ராஜா என்ன, ஏது என்று பார்த்து வருவதற்காக அவர் கிருஹத்துக்கு ஆள் அனுப்பினான்.

போன ஆள் திரும்பிவந்து, "இந்தத் தடவை அவர் பாகவதம் பாராயணம் பண்ணியவுடன் அவருக்கு பக்தி-ஞான-வைராக்யங்கள் வந்து விட்டதாம். 'ராஜாவுமாச்சு, ராஜஸதஸுமாச்சு, வீடுமாச்சு, வீட்டு மநுஷ்யாளுமாச்சு' என்று விரக்தியாகச் சொல்லிக் கொண்டு, பகவதநுபவம் பெறவேண்டும் என்ற தாபத்தோடு காட்டுக்குப் போய் விட்டாராம்" என்றான்.

ராஜாவுக்கு த்ருப்தியாயிற்று. 'இப்போது பௌராணிகர் பாகவதத்தின் 'ஸ்பிரிட்'டில் ஊறிவிட்டார். இப்போதே அவருக்கு பாகவதம் சொல்லத் தக்க பக்வம் வந்திருக்கிறது. அப்படிப்பட்டவர் சொல்லிக் கேட்டால் தான் கேட்கிற பேருக்கும் ப்ரயோஜனம் கிடைக்குமாதலால் இப்போது அவரைத் தேடிக்கொண்டு தானே போய் ச்ரவணம் செய்யவேண்டும்' என்று ராஜா தீர்மானித்தான்.

அந்தப்படியே காட்டுக்குப் போனான். தான் தேடித் தேடிப் போன ராஜா தன்னைத் தேடிக் கொண்டு வந்திருப்பதையும் ஒரு பொருட்டாக பௌராணிகர் நினைக்காமல் பகவத் சிந்தனையிலேயேதானிருந்தார். ராஜா அவரை நமஸ்கரித்து பாகவதம் உபதேசம் பண்ணுமாறு ப்ரார்த்தித்தான்.

தன்னை இப்படி பகவத்பரமாகத் திருப்பிவிட்ட உபகாரி அவன்தானே என்பதால் அவரும் நன்றியோடும், அருளோடும் அவன் மனஸிலே நன்றாக இறங்குகிற முறையில் அவனுக்கு பாகவதம் சொன்னார்.

இப்படிக் கதை.

[சிரித்து] அந்தப் பௌராணிகர் தம்முடைய ஸப்ஜெக்டான புராணத்தைப் படித்து அதன் 'ஸ்பிரிட்'

Koviloor Digital Library

என்கிற உட்கருத்திலேயே தோய்ந்தபோது பௌராணிகத் தொழிலையே விட்டுவிட்ட மாதிரி, ஆசிரியர்களும் தங்கள் ஸப்ஜெக்டை ஆழ்ந்து படித்து 'டீச்சிங் ஜாபை'யே விட்டு விட வேண்டும் என்ற அர்த்தத்தில் இந்தக் கதையை நான் சொல்லவில்லை. [மீண்டும் நெடுநேரம் சிரிக்கிறார்.] சொல்கிறவர், சொல்லும் விஷயத்தின் உட்கருத்தைப் புரிந்து கொண்டு சொன்னால்தான் கேட்கிறவரின் மனஸிலும் அது நன்றாகப் புகுந்து பூர்ண ப்ரயோஜனத்தைக் கொடுக்கும் என்று ராஜா நினைத்தானே, அதை ஆசிரியர் களுக்கெல்லாம் 'அன்டர்லைன்' பண்ணிக் காட்டுவதற் காகவே சொன்னேன். பௌராணிகர் ஆழ்ந்து பாராயணம் பண்ணியது பக்தி-ஞானப் புஸ்தகமாயிருந்ததால் அவர் தொழிலை விட்டார். ஆசிரியர்கள் படிக்கிற புஸ்தகங்கள் அப்படியில்லையே! மத போதனையாக 'டீச்' பண்ணுவதாக இருந்தால்கூட அந்த அளவுக்குத் தீவிரமாக சாதாரண நிலையில் இருக்கப்பட்ட நாமெல்லாம் போய்விட மாட்டோம்! படிக்கப் படிக்க புத்தியாலேயே மேலும் மேலும் நன்றாகத் தெரிந்துகொள்வதோடு ஹ்ருதயத்தாலும் ஒரு அளவுக்கு, ஒரு கணிசமான அளவுக்கே தெரிந்துகொண்டு, அப்படித் தெரிந்து கொண்டதைக் கேட்பவருக்குள்ளேயும் நன்றாக இறக்குகிற சக்தியை ஸம்பாதித்துக் கொள்வதோடு நாமெல்லாம் நின்று விடுவோம். அதுவே போதும். அதுவே பெரிசு. அதற்கு மேல் எதிர்பார்ப்பதற்கில்லை.

மொத்தத்தில் விஷயம், பசங்கள் மட்டும்தான் பாடத்தை பக்தி-ச்ரத்தையுடன் படிக்கவேண்டும் என்றில்லை. வாத்தியார்மார்களும், பழைய பாடத்தையே எத்தனை தடவை திரும்பத் திரும்பப் படித்து, சொல்லிக் கொடுத்தாலும் அந்தக் கார்யத்தை பக்தி ச்ரத்தையுடன் செய்து, சொல்கிற விஷயத்தின் உட்கருத்தைத் தாங்களும் நன்றாகப் புரிந்து கொண்டு கேட்கிற மாணவர்களுக்கும்

Koviloor Digital Library

நன்றாகப் புரியப் பண்ணவேண்டும். இதிலே, திரும்பத் திரும்பப் படிப்பதால் வாத்தியார்மார்களே புதிது புதிதாகத் தெரிந்து கொள்வதற்குக் காலேஜ் மாதிரியான மேல்படிப்புக் கட்டத்திலேயே ஜாஸ்தி 'ஸ்கோப்' உண்டு.

இன்னும் ஒரு முக்யமான விஷயம்: ஆசிரியர்கள் தாங்கள் பெற்ற அறிவையெல்லாம் மாணவர்களுக்கும் ஊட்டத்தான் பாடுபட வேண்டும் என்றாலும் அதில் ஒரு ஜாக்ரதை வேண்டும். பசங்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்லி அது அவர்களுக்கு உள்ளே போகும்படிப் பண்ணுகிற கார்யத்தில் ரொம்பவும் பொறுமையும், நிதானமும் வேண்டும். பதட்டமும், அவஸரமும் கூடவே கூடாது. தெரிந்ததையெல்லாம் வதவதவென்று பசங்களின் மூளையிலே திணிக்கப் பார்த்தால் ஒன்றுமே உள்ளே இறங்காமல் எல்லாமே பிதுங்கிக்கொண்டு வெளியில் வழிந்து விடுவதாகத்தான் முடியும்.

இங்கே ஆசிரியர்களெல்லாம் உண்டியின் உதாரணத்தை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். நம் கை நிறைய, பை நிறையக் காசு இருந்தாலும் உண்டியில் அப்படியே கொட்டிவிட முடியுமா? அதிலுள்ள சின்ன த்வாரத்தின் வழியாக ஒவ்வொரு காசாகத்தானே போட வேண்டும்? முதலில் போட்டது சிக்காமல் உள்ளே போய் விட்ட அப்புறம், அதுவாகப் போகாவிட்டால் உண்டியைக் குலுக்கி அதைப் போகப் பண்ணிய அப்புறம்தானே அடுத்த காசைப் போடவேண்டும்? அப்படித்தான், ஒவ்வொரு விஷயத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் ஒவ்வொன்றாக மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களுடைய அறிவுக்குள்ளே செலுத்தவேண்டும். சொன்ன ஒவ்வொரு அம்சமும் சிக்காமல் அவர்களுக்குள்ளே போய் விட்டதா என்பதைக் கேள்வி கேட்டு நிச்சயப்படுத்திக்கொண்டு, அப்புறமே அடுத்த அம்சத்துக்குப் போக வேண்டும். ஒன்று

Koviloor Digital Library

உள்ளே போகவில்லையென்றால் நிதானம் இழக்காமல், கோபப்படாமல், மாறாக அவர்களுக்கு உத்ஸாஹம் ஊட்டுகிற வகையிலே மறுபடியும் தெளிவாக எடுத்துச் சொல்லி உள்ளே போகப் பண்ணவேண்டும். அப்புறம் அடுத்த அம்சம்.

மந்த புத்திப் பசங்களுக்குக் கற்றுக் கொடுப்பது ச்ரமம்தான். ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும் ஆசிரியர் மார்கள் தாங்கள் மேற்கொண்டிருக்கிற இந்தத் தொழில் வித்யாதானம் என்கிற புண்யமான ஸேவை; இதனால்தான் இளம் பிராயத்தினர் உரியபடி மனிதர்களாக உருவாகிறார்கள்; தேசத்தின், லோகத்தின் எதிர்கால க்ஷேமமே இதைத்தான் சார்ந்திருக்கிறது என்பதை 'ரியலைஸ்' பண்ணிவிட்டால் தொழிலில் உள்ள ச்ரமங்களை ச்ரமமாகவே நினைக்க மாட்டார்கள். பொறுமையையும், ப்ரியத்தையும் ஒருபோதும் கைவிடாம லிருப்பார்கள்.

எதிர்காலத்தை உருவாக்கப் போகிறவர்களை உருவாக்குவதில் ஒரு முக்யமான பங்கு ஆசிரியர்களுக்கே இருப்பதால்தான் இதையெல்லாம் சொன்னேன். எதிர் காலம் ஒரு பக்கம் இருக்க, தற்காலத்தில் கல்வித்திட்டம் என்பது அறிவு, குணம் ஆகிய இரண்டிலும் தரமானதாக அமைவதற்கும் அவர்கள்தான் போராட வேண்டும் என்பதில் ஆரம்பித்தேன். பழங்காலத்தில் அப்படிப்பட்ட தரமான கல்வித் திட்டமே நடைமுறையிலிருந்ததைத்தான் முக்யமாகச் சொல்லிக்கொண்டிருந்தேன்.

மதச்சார்பற்ற பாடங்கள்

ஆத்ம ஸம்பந்தம், மத ஸம்பந்தம், தர்ம ஸம்பந்தம் இல்லாத ஸெக்யூலர் ஸப்ஜெக்ட்களை மட்டுமே போதித்த குருமார்கள் பூர்வ காலத்திலும் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் நாஸ்திகம் சொல்லிக் கொடுத்தவர்கள்

Koviloor Digital Library

தேடித் தேடிக் கண்டுபிடிக்கும்படியாகத்தான் எங்கேயோ இரண்டொருத்தர் இருந்தார்கள். சூதாட்டம் சொல்லித் தந்தவர்களும் அப்படித்தான். திருட்டுத்தனம் சொல்லித் தந்த ரொம்ப ரொம்ப ரொம்ப ஸ்வல்பமானவர்களும் யார் கண்ணுக்குமே அகப்படாமல் [சிரித்து] திருட்டுத்தனமாகத் தான் கற்றுக் கொடுத்தார்கள்! மற்ற கௌரவமான ஸெக்யூலர் ஸப்ஜெக்ட்களான கணிதம், ஆயுர்வேதம், பௌதிக-ரஸாயனாதிகள், சில்ப-சித்ர-ந்ருத்ய-கீதாதிகள், தநுர்வேதம் முதலியவற்றை மாத்திரம் சொல்லிக் கொடுத்தவர்களும் பூர்வ காலத்திலிருந்தே இருந்திருக் கிறார்கள். ஆனால் இவர்களெல்லாமுங்கூட, ஸெகண்டரி யாக தர்மாதர்மங்களையும் சொல்லிக் கொடுக்காம லில்லை. அதாவது moral instruction — நன்னெறி போதனை என்பது — இல்லாமல் ஸெக்யூலர் படிப்புங்கூட நடக்கவில்லை. ஏதோ பாடமாகச் சொல்லிக்கொடுத்து அதோடு விடுவது என்றில்லாமல், நிஜ வாழ்க்கையிலேயே மாணவன் நன்னெறியுடன் ஒழுகினாலொழிய அவனுக்குச் சொல்லிக் கொடுப்பதில்லை என்று தள்ளியே இருக்கிறார்கள்.

நிகழ்காலக் கல்வி முறையிலோ, வெள்ளைக்கார ஆட்சியின் போது பேருக்காவது இருந்த 'மாரல் இன்ஸ்ட்ரக்ஷ'னும் நீர்த்துப் போய்விட்டிருக்கிறது. 'மாரல்' என்கிறபோது அதைத் தொட்டுக்கொண்டு தெய்வம், மதம் என்று வந்துவிடப் போகிறதே, தங்களுடைய 'முற்போக்கு' எனப்படுகிற கொள்கையான ஸெக்யூலரிஸம் அதனால் பாதிக்கப்பட்டு ஜனங்கள் எங்கே நல்லபடியாக ரூபமாகிவிடுவார்களோ என்ற பயத்தினால் ஸ்வதந்திர ஸர்க்கார் இப்படிப் பண்ணிவிட்டது! வாத்தியார்களே பசங்களை நன்னெறிக்கு நேரெதிரான அரசியல், அராஜகம், ஸ்த்ரீ விஷயம் ஆகியவற்றில் தூண்டி

Koviloor Digital Library

விடுவதாகவுங்கூட ஓரொரு இடங்களிலிருந்து ரிபோர்ட் வருகிறது.

இந்தத் தமிழ்த் தேசத்தில் அதோடுகூட வெள்ளைக்காரர் காலத்திலும் இருந்து வந்த ஸம்ஸ்க்ருதப் படிப்பைக் குழியை வெட்டிக் குமுறப் புதைக்க எத்தனை உண்டோ அத்தனையும் வேறே பண்ணி, இந்தப் பெரிய தேசத்தின் நாகரிகத்திற்கும், அதுமட்டுமில்லாமல் இப்போது வாய்ப்பேச்சிலே மட்டும் முழக்கிக் கொண்டிருக்கிற ஒருமைப்பாட்டுக்கும் முதுகெலும்பாக இருந்த அத்புதமான ப்பாஷை ஜனங்களுக்குக் கிடைப்பதற் கில்லாமல் பெரிய வஞ்சனை பண்ணியிருக்கிறது.* மத த்வேஷமும், ஒரு ஜாதியிடமுள்ள த்வேஷமுந்தான் இதற்குக் காரணமென்பது பஹிரங்க ரஹஸ்யம். ஆனால் ஸம்ஸ்க்ருதம் மதப் புஸ்தகங்கள் மட்டும் இருக்கிற பாஷையில்லை. மத ஸம்பந்தம் என்று சொல்ல முடியாத அநேக தத்வப் புஸ்தகங்களும் அந்த பாஷையில்தான் இருக்கின்றன. லோகமே கொண்டாடுகிறபடி அறிவுக்கு விருந்தாக அவை இருக்கின்றன. காவ்ய-நாடகாதிகளும் வெளி தேசங்களிலெல்லாம் தர்ஜுமா பண்ணி வைத்துக் கொள்ளும்படியான இலக்கிய அழகுகளோடு யதேஷ்டமாக இருக்கின்றன. அது மாத்திரமில்லை. ஆர்ட், ஸயன்ஸ் என்கிற கலைகள், பல விதமான விஞ்ஞானத் துறைகள் எல்லாவற்றிலும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அநேக ஸூக்ஷ்மங்களைத் தெரிவிக்கிற புஸ்தகங்களும் இருக்கின்றன. ராஜநீதி என்கிற பாலிடிக்ஸ்-ஸ்டேட்க்ராஃப்ட், ஆயுர்வேதம் என்கிற வைத்தியம் என்றிப்படி ஒரு துறை பாக்கியில்லாமல் எல்லாவற்றிலும் உசந்த புஸ்தகங்கள் இருக்கின்றன. அது எப்படி மத பாஷை மட்டுமில்லையோ, அதே மாதிரி குறிப்பிட்ட ஜாதி

* இவ்விஷயமாக இவ்வுரையிலேயே ‘சுதந்திர இந்தியாவில் கலாசாரக் குழிபறிப்பு’ என்ற பிரிவும் பார்க்க.

Koviloor Digital Library

பாஷையுமில்லை. காஷ்மீரிலிருந்து கன்யாகுமரி வரை எல்லா ஜாதிப் படிப்பாளிகளுக்குமே அது பாஷையா யிருந்ததால்தான் இந்தப் பரந்த உபகண்டத்தையே அது அறிவு ரீதியில் ஒற்றுமைப்படுத்தி நிஜமான ஒருமைப் பாட்டை உண்டாக்கிற்று. விவேகாநந்தர் இருந்தார். எங்களைப் போலப் 'பத்தாம் பசலி சாஸ்த்ரக் குடுக்கை' களோடு சேர்க்காமல் புரட்சிக் கருத்தும் முன்னேற்ற மனப்பான்மையும் கொண்ட ஒருவராக அவரை இப்போது புரட்சியாளர்களும் ஸ்தோத்திரிக்கிறார்கள். அவருக்கு புத்தரிடமும் புத்த மதத்திடமும் அபிமானம் உண்டு. அப்படிப்பட்டவரே, இந்த தேசத்தின் உசந்த கல்ச்சருக்கு — கலாசாரத்துக்கு — பெரிய ஹானி எப்போது ஆரம்பித்த தென்றால் பௌத்தர்கள் ஸம்ஸ்க்ருதத்தைத் தள்ளி விட்டுப் பாலி பாஷையிலே தங்கள் புஸ்தகங்களை எழுதிப் பிரசாரம் பண்ணினபோதுதான் என்ற அளவுக்குச் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு மஹா பெரிய குலதனத்தை நம்முடைய தமிழ் ஜனங்களுக்கு இல்லாமல் பண்ணியுள்ள விபரீதத்துக்கு விமோசனம் உண்டா, எப்படி, எப்போது என்பதே என் விசாரமாயிருக்கிறது.....

பழங்காலத்தில் தர்ம போதனை இல்லாமல் படிப்பு மட்டும் என்று இருக்கவேயில்லை. போதித்தவர்கள் அதற்கேற்ற தார்மிக சீலங்களோடு இருந்தார்கள்.

குரு; ஆசார்ய

ஆனாலுங்கூட, ஸெகன்டரியாகவே தர்மத்தைச் சொல்லி, முக்யமாக ஸெக்யூலர் ஸப்ஜெக்ட்டுகளையே ஒருவர் போதித்தார் என்றால் அவருக்கு போதகர்களில் ஸெகன்டரி இடமே தர்மசாஸ்திரத்தில் கொடுத்திருக்கிறது.

'குரு', 'ஆசார்யர்' என்ற வார்த்தைகளுக்குப் பல தினுஸாக லக்ஷணம் சொல்லும்போது, ஆசார்யர் என்பவரைவிட குருவுக்கு ஏற்றம் கொடுத்துச்

Koviloor Digital Library

சொல்வதுண்டு.[1] ஆனால் இன்னொரு அர்த்தத்தில் குருவை விட ஆசார்யருக்கே ஏற்றம் தந்திருக்கிறது. 'மநு ஸ்ம்ருதி'யிலேயே அப்படித்தான் இருக்கிறது.[2] சம்பளத்தை எதிர்பார்க்காமல் வேத-வேதாந்தங்கள் கற்றுக்கொடுப்பவர் 'ஆசார்யர்', சம்பளத்துக்காக வேதவித்யா போதனை தருபவர் 'உபாத்யாயர்' என்று சொல்லிவிட்டு; அப்புறம் இவர், தான் காசு ஸம்பாதிப்பதற்காகச் சொல்லிக் கொடுக்கிறாரென்றால், சிஷ்யன் காசு ஸம்பாதிப்ப தற்காகவே ஸெக்யூலர் ஸப்ஜெக்ட்கள் சொல்லித் தருகிறவரே 'குரு' என்றும் அதில் இருக்கிறது. இந்த டெஃபனிஷன் சிஷ்ட ஸமூஹம் [மேன்மக்கள்] உள்பட லோகத்தால் அப்படியே ஒப்புக் கொள்ளப்பட்டது என்று சொல்ல முடியாது. எல்லாவிதமான போதகர்களுக்கும் 'குரு' என்று பேர் கொடுப்பதாகவும், 'குரு'வை உச்சஸ்தானத்தில் வைத்துக் கொண்டாடுவதாகவும் பஹு காலமாக இருந்து வந்திருக்கிறது. ஆனாலும் டெக்னிகலாகப் பாகுபாடுகள் பண்ணி வார்த்தை போட வேண்டும் என்கிறபோது தர்மம், பக்தி, ஞானம் சொல்லிக் கொடுத்துப் பரலோகத்திற்கு வழிகாட்டுபவரை 'ஆசார்யர்' என்றும், கொஞ்சம் moral instruction-உடன் இஹலோக ஜீவனத்திற்கு வழிகாட்டுபவரை 'குரு' என்றும் சொல்கிற வழக்கும் சில விஷயஜ்ஞர்களிடம் இருந்து வந்திருக்கிறது. பலவிதமான போதகர்களுக்கும் 'குரு' என்ற பொதுப் பெயர் கொடுத்து அப்படிப்பட்ட குருக்களில் பரலோகத் திற்கு வழிகாட்டும் 'ஆசார்ய'னே சிரேஷ்டமானவன் என்பார்கள்: "ஆசார்ய: ச்ரேஷ்டோ குரூணாம்.[3]"

1. மூன்றாம் பகுதியில் 'குரு, ஆசார்யர்' என்ற உரை பார்க்க.
2. இரண்டாம் அத்யாயம் 140–142.
3. கௌதம தர்ம ஸூத்ரம் 1.2.56.

Koviloor Digital Library

'ஆசாரம்' என்பதான, வழிவழியாக வந்துள்ள சாஸ்த்ரீய ஒழுக்கத்திற்கும் 'ஆசார்ய' என்பதற்கும் ஸம்பந்தம் இருப்பது அந்த வார்த்தைகளின் சப்த ஒற்றுமையிலிருந்து எவருக்கும் தெரியும். சாஸ்த்ரீய ஒழுக்கத்தை, இன்னும் அதற்கு மேலே ஆத்மசாஸ்த்ர லக்ஷியமான அநுபவத்தையே தன்னுடைய ஜீவித உதாரணத்தால் லோகத்திற்குக் கண்கூடாகக் காட்டுகிறவனே பூர்ணமான ஆசார்யன்.

அத்யக்ஷகர்; அத்யாபகர்

'கண்கூடு' என்றதும் 'கண்காணிப்பு' என்று நினைப்பு போய், அப்படியே 'அத்யக்ஷகர்' என்பதில் கொண்டு விடுகிறது! அதுவும் டீச்சருக்கு உள்ள அநேகப் பெயர்களில் ஒன்றாக வழங்கிவருவதுதான்! 'அத்யக்ஷகர்', 'அத்யக்ஷர்' என்று இரண்டு தினுஸாயும் சொல்லலாம். பாலன்–பாலகன் என்கிற மாதிரி ஒரு வார்த்தையில் நடுவே 'க' சேர்த்துச் சொல்வதுண்டு.

'அத்யாபகர்' என்பதும் [போதகருக்கான] இன்னொரு பெயர். 'அத்யக்ஷர்', 'அத்யாபகர்' என்ற இரண்டும் 'அத்ய' என்று ஆரம்பித்தாலும் அர்த்தத்தில் ரொம்ப வித்யாஸம். 'அக்ஷி' என்ற 'கண்'ணை வைத்து 'அத்யக்ஷர்', கண்ணுக்கு நேரே இருப்பது 'ப்ரத்யக்ஷம்', எவருடைய கண்ணுக்குக் கீழே, அவர் கண்காணிக்கும்படிக் கார்யம் நடக்கிறதோ அவர் அத்யக்ஷகர். அவர் கண்காணிப்பவர். 'கங்காணி' என்று தொழிலாளிகள் சொல்வது இதிலிருந்து இருக்கலாம். 'ஸூபர்வைஸர்' என்பது அதற்கு நேர் மொழிபெயர்ப்பு. 'ஓவர்ஸீயர்' என்பதுந்தான். சிஷ்யனைக் கண்காணித்து நல்ல வழியில் செலுத்துவதால் வாத்தியாருக்கு அத்யக்ஷகர் என்று பேர்.

Koviloor Digital Library

'அத்யாபகர்' என்றால் 'அத்யயனம்' செய்விக்கிறவர். அத்யயனம் என்றால் பொதுவாகக் கல்வி என்கலாம். குறிப்பாக வேதக் கல்விதான் அது. குறைந்தபக்ஷம், பொதுக் கல்வியாயிருந்தால்கூட வேதமரபு சார்ந்ததாக இருந்தால் 'அத்யயனம்'. 'அயனம்' என்றால் ஒரு நிர்ணயமான பாட்டையில் போவது. வாழ்க்கைப் பாதையில், ஆத்மாவைக் கடைத்தேற்றிக் கொள்கிற பாதையில் சிறப்பாக அழைத்துச் செல்லும் கல்வி 'அத்யயனம்', வேதத்தை வழிதப்பாமல் follow பண்ணி நெட்டுருப் போடுவதால் 'வேத அத்யயனம்' என்கிறோம். இவ்விதமான கல்வியை அளிப்பவர் 'அத்யாபகர்'...

குரு லக்ஷணம் என்று சொல்ல ஆரம்பித்தேன். இன்னின்ன சீலங்கள். கார்யங்கள் உள்ளவரவர் என்று சொல்லியிருக்கலாம். ஆனால் 'குரு'வுக்கு synonymous-ஆக [அதே பொருள் கொடுப்பதாக] அநேகப் பெயர்கள் 'ஆசார்யர்', 'தேசிகர்' என்றெல்லாம் கொடுத்து, இந்தப் பெயர்கள் எப்படி ஏற்பட்டன என்று லக்ஷணம் கொடுத்திருக்கிறதே, இவற்றைச் சொல்லியே அவருடைய சீலங்களையும் கார்யங்களையும் தெரிவிக்க முடிந்த மட்டும் தெரிவிக்கலாமென்று தோன்றி ஏதோ சொல்லிக் கொண்டு போகிறேன்...

குரு லக்ஷண ச்லோகத்தைப் பாதி எக்ஸ்ப்ளெய்ன் பண்ணிக் கொண்டிருக்கும்போதே மற்ற synonymகளும் ஒவ்வொன்றாக வந்து விழுந்து கொண்டிருக்கின்றன! கு-ரு என்ற அக்ஷரங்களைப் பிரித்துப் பிரித்து அர்த்தம் பண்ணும் போது, ' 'உ'காரம் விஷ்ணு, அவருக்கு ஸஹஸ்ரநாமத்தில் குரு என்று பெயருண்டு. அங்கே ஆசார்ய பாஷ்யப்படி, எல்லா ஜீவர்களையும் பிறப்பித்த பிதா என்பதாலும் அவர் குரு என்ற பெயருக்குரியவராகிறார்' — என்றெல்லாம் பார்த்துக் கொண்டு போனபோதே இத்தனை கதையும்

Koviloor Digital Library

வடக்கே அநேகமாகப் பஞ்சாங்கமாகத்தான் பண்ணு கிறார்கள்.

தர்ம சாஸ்திரங்களிலும் அஷ்டாங்கம், பஞ்சாங்கம் என்ற இரண்டு நமஸ்கார வகைகளையும் புருஷர்களுக் கானதாகவே கொடுத்திருக்கிறது. ஸுந்தர மூர்த்தி நாயனாரே அப்படி இரண்டு தினுஸாகவும் பண்ணினார், "எட்டினொடு ஐந்துமாகும் உறுப்பினால் பணிந்து வணங்கினார்" என்று சேக்கிழார் சொல்லியிருக்கிறார்*

எல்லா விதமான கர்மாக்களையும் விதிப்பதாகப் பல ரிஷிகள் எழுதியுள்ள கல்பங்கள் என்ற அநேக சாஸ்த்ர நூல்களில் ஒன்றில் தெய்வங்களையும், தெய்வ ஸமானமான குருமார்-பித்ருக்கள்-மஹான்கள் ஆகியோருக்கு மாத்திரமே ஸாஷ்டாங்க நமஸ்காரம் என்றும், மற்ற எல்லாப் பெரியவர்களுக்குமே பஞ்சாங்கம்தான் என்றுங்கூட இருக்கிறது. ஆனால் மற்ற கல்பங்களில் அப்படியில்லாத தால் அந்த மாதிரித்தான் பண்ணவேண்டுமென்றில்லை. இப்போது வழக்கத்தில் மிகவும் அதிகமாகவும் உள்ளபடியே பண்ணலாம். பஞ்சாங்கமாகப் பண்ணினாலும் தப்பில்லை என்பதற்காகச் சொன்னேன்.

ரொம்பக் குறுகலான இடத்தில் ஒரு மஹான் இருக்கிறார், ஒரு சந்நிதி அங்கே இருக்கிறது என்றால் அப்போது அங்கே உடம்பை முழுசாகக் கீழே போட்டு ஸாஷ்டாங்கம் பண்ணுவது ச்ரமந்தானே? அம்மாதிரி இருக்கும்போது பஞ்சாங்கமாகப் பண்ணலாம்.

வணக்கம், உடம்பை வளைத்துப் பண்ணுவது என்ற அடிப்படையில் தோன்றிய வார்த்தை. இப்போது

* . . . . எட்டினொடு
ஐந்தும் ஆகும் உறுப்பினால்
பீடு நீடு நிலத்தின் மேல் பெருகப்
பணிந்து வணங்கினார். (பெரியபுராணம், 3257)

Koviloor Digital Library

தமிழபிமானத்தில் அந்த வார்த்தையே 'அஃபீஷிய'லாகியிருக்கிறது; ஸர்வ வ்யாபகமாயிருக்கிறது. 'வணக்கம்' ரொம்பவும் அழகான வார்த்தைதான். ஆனால் இந்த வணக்க க்ரியை எதற்கு ரூபகமாக இருக்கிறதோ அந்த வளைந்து கொடுக்கும் ஹ்ருதய பாவத்துக்கு நேர் எதிரான பாஷா த்வேஷத்திலேயேதான் இப்போது இந்த வார்த்தையைக் கொண்டுவந்திருப்பது என்பதைப் பார்க்கும்போது வருத்தமாகத்தான் இருக்கிறது.

அகில தேசாபிமானமும் பிரதேசப் பித்தும்

தமிழ்நாடு தவிர நம்முடைய இந்தியா தேசம் முழுக்க எல்லாப் பகுதிகளிலும் 'நமஸ்தே'தான் சொல்கிறார்கள். 'நமஸ்காரம்' என்பதில் 'நம:' என்பதே வணக்கத்தைத் தெரிவிப்பது. 'நமஸ்காரம்' என்பது 'வணக்கம் புரிவது' என்ற செயலைக் குறிப்பதே. 'நமோ நம:' என்கிறதிலும், சிவ பஞ்சாக்ஷரீ, நாராயண அஷ்டாக்ஷரீ முதலானவற்றிலும் 'காரம்' சேர்க்காமல் 'நம:' மட்டும்தானே சொல்கிறோம்? அதே மாதிரி ஒருத்தரைப் பார்க்கும்போது 'உங்களுக்கு வணக்கம்' என்பதுதான் 'நமஸ்தே'. 'தே' என்றால் 'உங்களுக்கு'. இந்த நமஸ்தேயைத்தான் நம் தேசம் பூராவிலும், தமிழ்நாடு ஒன்று மட்டும் நீங்கலாக, மரியாதை greeting-ஆகச் சொல்கிறார்கள். த்ராவிட ராஜ்யங்களேயான ஆந்திர-கர்நாடக-கேரள ராஜ்யங்களிலும் 'நமஸ்தே'க்குத் தங்கள் தங்கள் தாய் பாஷையான தெலுங்கு-கன்னட-மலையாள பாஷைகளில் வார்த்தை சொல்லாமல் 'நமஸ்தே'-யைத்தான் 'அடாப்ட்' செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழில் 'வணக்கம்' இருக்கிற மாதிரித் தெலுங்கில் 'ம்ரொக்க' என்று வார்த்தை இருக்கிறது. என்றாலும் அவர்கள் ரொம்பவும் அபூர்வமாகத் தான் அந்த வார்த்தையை உபயோகிப்பது. பொதுவாகச்

Koviloor Digital Library

சொல்கிறது ஸம்ஸ்க்ருத 'நமஸ்தே'தான். அதையே 'நமஸ்காரமண்டி' என்று மரியாதையாய் சொல்வார்கள். தமிழ் தேசத்தில் மட்டும் பாஷாத்வேஷம் காரணமாகவே 'ஆல்-இன்டியா கரென்ஸி'யாக உள்ள 'நமஸ்தே', 'நமஸ்கார'ங்களைத் தள்ளிவிட்டு 'வணக்கம்' சொல்வதாக வழக்கம் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கேயும் முன்னே யெல்லாம் பொதுவாகப் பேசும்போதும் எழுதும்போதும் 'நமஸ்காரம்'தான் உபயோகப்படுத்திக் கொண்டிருந் தார்கள். நமஸ்காரம்-நமஸ்தே இரண்டுக்கும் ஒரே base தானே? அப்படித்தான் இங்கேயும் பழக்கம் இருந்தது. அப்புறந்தான் வேண்டுமென்று 'வணக்க'த்தைக் கொண்டு வந்திருப்பது. அது அழகான, அர்த்த புஷ்டியான வார்த்தை தான் என்றாலும் அதைக் கொண்டு வந்திருக்கும் உத்தேசம் நல்லதாக இல்லை. பிரதேசாபிமானம் இருக்க வேண்டியது தான். 'ரீஜனல் கல்ச்சர்' என்பதாக ஒவ்வொரு பிராந்தியத்திலும் விசேஷமாக இருக்கிற கலாசார மரபுகளையும் பேணிக் காப்பாற்றத்தான் வேண்டும். ஆனாலும் ஸர்வதேசியமாக இருந்துகொண்டிருக்கிற விஷயங்களிலும் வேண்டுமென்று தேசியத்தைத் தள்ளிப் பிரதேசத்தைக் கொண்டு வருவது முறை தவறான பிரதேசாபிமானமேயாகும். இதைப் பிரதேச அபிமானம் என்பதை விடப் பிரதேசப் பித்து, மிஞ்சிப் போகிறபோது பிரதேச வெறி என்றே சொல்லவேண்டும்.

ஆனாலும் பிரதேசாபிமானம் என்பதன் பேரில் ஒரு பிராந்தியத்தில் நடப்பதைத் தாங்களும் மதித்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டும்; வோட்டுப் பெட்டியை உத்தேசித்தும் எல்லாப் பிரதேச ஜனங்களையும் 'ப்ளீஸ்' பண்ணவேண்டும் என்பதால் மற்ற ராஜ்யத்துக்காரர்களும் வடக்கத்தித் தலைவர்களும்கூட இங்கே வந்து கூட்டங்களில் பேசுகிறபோது 'வணக்கம்' என்றே சொல்வதாகத் தெரிகிறது. 'வணக்கம்' என்று தப்பாகவாவது சொல்பவர்களும் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன்!

Koviloor Digital Library

வெளியிலே இப்படிச் சொன்னாலும் உள்ளுக்குள்ளே அவர்களுக்கெல்லாம் இதிலே ஒரு வருத்தம், நம்மைப் பற்றி ஒரு குறை இருக்கிறது. என்னிடமே ஒருத்தர் அதைத் தெரிவித்தார். தேசம் பூராவும் ஒரே ரீதியில் போய்க் கொண்டிருக்கும் விஷயங்களில், அந்த mainstream-ல் சேராமல், கொஞ்சம் துண்டித்துக்கொண்டு இந்த மாதிரிச் சின்ன அம்சங்களில் மாறுதலாகப் போவதுங்கூட ஒருமைப்பாட்டுக்குக் கொஞ்சம் ஊனம் செய்கிற மாதிரித்தான் என்று அவர் சொன்னார். 'வணக்கம்' விஷயமாகவும் அவர் உதாரணம் காட்டிச் சொன்னா ரென்றாலும் அவர் முக்யமாகச் சொன்னது தமிழ் அர்ச்சனை பற்றித்தான்.

தமிழ் அர்ச்சனை

அந்த 'டாபிக்'கைத் தொட்டு விட்டதால் சுருக்கமாக முழுக்கவும் சொல்லி முடித்தும் விடுகிறேன்.

அந்த வடக்கத்திக்காரர் என்னிடம் சொன்னது என்னவென்றால்: மற்ற த்ராவிட ராஜ்யங்கள் — மாநிலங்கள் என்று சொல்கிறவை — அவை உள்பட தேசம் பூராவிலும் உள்ள எவருமே தாய்மொழியில் அர்ச்சனை என்று கேட்கவில்லை. இன்றைக்கு இந்த தேசத்தில் எவருமே ஸம்ஸ்க்ருதத்தைத் தாய்மொழியாகக் கொண்டு பேசவில்லைதான். ஆனாலும் நம்முடைய மதத்துக்கு ஆதாரமான புஸ்தகங்கள் எல்லாம் ஸம்ஸ்க்ருதத்திலேயே இருப்பதால் அதையே மத விஷயத்தில் lingua franca என்ற பொது பாஷையாக எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள். பிரதேச ஜனங்களுக்கு மாத்திரமில்லாமல் அகில தேச ஜனங்களுக்குமேயான ஆலயங்களில் சாஸ்த்ரவத்தாக அந்த பாஷையிலேயே அர்ச்சனை உட்பட்ட எல்லா ஆராதனைகளும் செய்து வருகிறார்கள். பல

Koviloor Digital Library

பாஷைக்காரர்கள், பல மரபுக்காரர்கள் இருக்கிற நம் தேசத்தில் எல்லாரும் பொதுவான ஒரு குடும்பம் என்ற ஒருமைப்பாட்டு உணர்ச்சியைப் பெற இது பெரிய ஸஹாயம் செய்கிறது. அதனால் சாஸ்த்ரபூர்வம் என்பது ஒரு பக்கம் இருக்க, நடைமுறையில் தேசிய ஒற்றுமைக்கும் இது போன்ற விஷயங்களை இதுவரை உள்ளபடிக் காப்பாற்ற வேண்டியதாகிறது.

'யாத்ரிகர்கள் தேசம் பூராவிலிருந்துந்தான் ஒவ்வொரு பிரதேசக் கோயில்களுக்கும் வருகிறார்கள். உங்கள் ராமேச்வரத்தையே எடுத்துக்கொண்டால் அங்கே வருகிற ஸேவார்த்திகளில் பாதிப் பேர் வடக்கத்திக்காரர்களாகத் தான் இருப்பார்கள். இப்போதெல்லாம் ஜனங்களுக்கு ஸஞ்சாரத்தில் ஆசை, அதிலும் உல்லாஸ ஸ்தலங்கள் மாதிரியே புண்ய ஸ்தலங்களுக்குப் போவதிலும் ஆசை ஏற்பட்டிருக்கிறது. L.T.C மாதிரி வசதிகள் ஆபீஸிலும் செய்து தருகிறார்கள். க்ஷேத்ராடனம் நடத்தித்தரும் ட்ராவல் ஏஜென்ஸிக்களும் விருத்தியாகிக் கொண்டே யிருக்கின்றன. அதனால் ஜம்மு-காஷ்மீர் வைஷ்ணவி தேவியிலிருந்து தமிழ்நாட்டு கன்யாகுமாரி வரையில் எந்தப் பிரஸித்தமான கோவிலைப் பார்த்தாலும் அங்கே ஒரு குட்டி இந்தியாவே வந்த மாதிரி எல்லாப் பிரதேச ஜனங்களும் வருகிறார்கள். அப்படியிருக்கும்போது அந்தந்தப் பிரதேச பாஷையில் வழிபாடு என்றால், அது எப்படி?' என்று இந்த ரீதியில் அந்த வடக்கத்திக்காரர் அங்கே சொல்லிக்கொண்டு போனார்.

நானும் இந்தத் தமிழ் அர்ச்சனை விஷயத்தில் ரொம்ப நாளாக கவனம் காட்டி, வழிபாடு குறித்தேயான ஆகம சாஸ்த்ரம், பொதுவான தர்ம சாஸ்த்ரம் ஆகியவற்றில் நன்றாகப் பயிற்சி பெற்ற வித்வான்களுடன் கலந்தாலோசித்து ஒரு 'காம்ப்ரமைஸ்' முடிவுக்கு

Koviloor Digital Library

வந்திருப்பதால், அதை அவருக்குச் சொன்னேன். 'பொதுவாக ஆராதனை வழிபாடு என்பது ஸம்ஸ்க்ருதத்தில் தான் இருக்கவேண்டும். வைதிகமாகவும், தாந்த்ரிகமாகவும் — அதாவது ஆகம தந்த்ர சாஸ்த்ரப்படியும் — கோயில்களில் நடக்கிற எல்லா சடங்குகளும் அப்படியேதான் நீடிக்க வேண்டும். உதாரணமாக, ஒரு ஆலயத்தில் ஜீர்ணோத்தாரண - கும்பாபிஷேகம் நடக்கிறதென்றால் அது சாஸ்த்ர ரீதியில் ஸம்ஸ்க்ருத பாஷையை உபயோகித்துச் செய்கிற சடங்குகளால்தான் பண்ணப்பட வேண்டும். இது பொது. ஆனால் வழிபாட்டில் உள்ள ஒவ்வொரு அம்சமாகப் பார்த்துக்கொண்டு போகும்போது சாஸ்த்ரங்களிலேயே ப்ரதேச மொழிக்கும் இடம் தருகிற அம்சங்கள் இருக்கின்றன. பஞ்சோபசாரம் என்று கந்த-புஷ்ப-தூப-தீப-நைவேத்யம் செய்வதில் ஆரம்பித்து, ஷோடசோபசாரம் என்று பதினாறு உபசாரம் செய்வது, சதுஷ்-ஷஷ்டி உபசாரம் என்று அறுபத்துநாலு உபசாரம் செய்கிற வரையில் பூஜையில் பலவித உபசாரங்கள் இருக்கின்றன அல்லவா? அவற்றில், பூஜையின் முடிவு கட்டத்தில் பிரதேச மொழியில் ஸ்தோத்திரங்கள் ஸமர்ப்பிக்கவும், பாட்டுக்கள் பாடவும் — அந்தப் பாட்டோடு நாட்டியங்கூட ஆடவும் — சாஸ்த்ரங்களில் நன்றாகவே, ஸ்பஷ்டமாகவே இடம் கொடுத்திருக்கிறது. நாங்கள் பல சாஸ்த்ரங்களை அலசிப் பார்த்ததிலிருந்து அர்ச்சனை என்ற அம்சத்தையும் இந்த ஸ்தோத்ர பாராயண அம்சத்தோடேயே சேர்த்துக் கொள்வதில் தப்பில்லை, சாஸ்த்ர அபசாரமில்லை என்று ஏற்பட்டது. அதனால், ஸம்ஸ்க்ருதத்தில் அர்ச்சனை பண்ணிவிட்டு, அதற்கப்புறம் பிரதேச பாஷையிலும் அர்ச்சனை பண்ணலாம் என்று 'காம்ப்ரமைஸி'ங்காக முடிவு பண்ணினோம்.

Koviloor Digital Library

'தேசம் பூராவுக்குமாக இருக்கிற ஸம்ஸ்க்ருத அர்ச்சனையில் கை வைக்க வேண்டாம். வெளி ராஜ்யக்காரர்களுக்கும், அவர்கள் மட்டுமின்றி தமிழ் நாட்டிலேயே பெருவாரியாக உள்ள 'இதுவரை இருந்து வந்த நடைமுறையை மாற்றப்படாது' என்று நினைக்கிறவர்களுக்கும் மனோ பாதிப்பு ஏற்படும்படியாக எதுவும் பண்ண வேண்டாம். இப்போது இருப்பதை மாற்றாமல், இதோடு கூடுதலாகத் தமிழ் அர்ச்சனையையும் சேர்த்துக் கொள்ளலாம். இருப்பதில் change இல்லை; இருப்பதற்கு additionதான். ஸம்ஸ்க்ருத அர்ச்சனைக்குப் பதிலாகத் தமிழர்ச்சனை இல்லை; அதோடு கூடத்தான் தமிழர்ச்சனையும். Instead of இல்லை; in addition to தான்!

'இது கோவிலில் நடக்கிற பொது வழிபாடு குறித்து. தனிப்பட்ட ஸேவார்த்திகளுக்கு அவரவர் இஷ்டப்படி ஸம்ஸ்க்ருதத்திலோ, தமிழிலோ எந்த பாஷையில் வேண்டுமானாலும் செய்யலாம்.'

— இப்படி நான் அவருக்குச் சொன்னேன்.

அவர் ஒருமைப்பாடு, 'இன்டக்ரேஷன்' என்று சொன்னதற்கு இந்த ஏற்பாட்டில் ஹானி ஏற்படாததைப் புரிந்துகொண்டு நான் சொன்னதற்கு ஒப்புக்கொண்டு போனார்.

தமிழில் அர்ச்சனைக்காக நாமாவளிகள் — அஷ்டோத்தர [சத]ம் [108], ஸஹஸ்ரம் [1000] — வேண்டுமே! அப்படி இதுவரை மஹான்கள் செய்ததாக எதுவும் இல்லை. அதனால் புதுசாகத்தான் பண்ணியாக வேண்டும்.

ஆனால் கவனமாகக் கேட்டுக்கொண்டு பின்பற்ற வேண்டிய விஷயம் என்னவென்றால்: அர்ச்சனைக்கான தமிழ் நாமாவளிதான் புதிசாய் செய்யணுமேயன்றி, அதில்

Koviloor Digital Library

வருகிற நாமங்கள் பழையதாகத்தான் இருக்க வேண்டும். அதாவது தமிழ்நாட்டின் பழைய மஹான்களின் வாக்கில் வந்த நாமங்களாகவே அவை இருக்கவேண்டும். ஈச்வரானுபவம் பெற்ற அவர்கள் வாக்குக்கே தனியான 'அதாரிடி'யும், 'ஸாங்க்டிடி'யும் உண்டு. அப்படிப்பட்ட நாமாக்களையே பொறுக்கி எடுத்து நூற்றியெட்டு, ஆயிரம் என்று கோக்க வேண்டும். அதாவது புதிசாக செய்வது சொந்தமாகக் கவனம் செய்கிறதல்ல; compilation என்று பழையதையே ஒன்று சேர்த்துத் தொகுத்துத் தருவதாகவே அது இருக்க வேண்டும். அவற்றில் தெய்விக சக்தி, மந்த்ர சக்தி இருக்க வேண்டுமானால் இப்படித்தான் செய்யவேண்டும். அர்ச்சனை நாமங்கள் நமது பூர்வ காலத்திலிருந்த பரம பக்த சிரோமணிகளின் வாக்கிலிருந்து வந்தவையாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவற்றையே அஷ்டோத்தர நாமாவளியாகவும், ஸஹஸ்ரநாமாவளி யாகவும் தொகுக்க வேண்டும்.

சிவ நாமாக்கள் தேவார, திருவாசக, திருமுறை களிலிருந்து பொறுக்கி எடுக்கவேண்டும். விஷ்ணு நாமாக்கள் ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தத்திலிருந்து; அம்பிகை நாமங்கள் அபிராமி பட்டர், குமரகுருபரர் — அவர் மீனாக்ஷியம்மன் மேலே பாடியிருக்கிறார், ராமலிங்க ஸ்வாமிகள் — அவர் திருவொற்றியூர் திரிபுரஸுந்தரி மேல் பாடியிருக்கிறார் — இன்னும் இப்படிப்பட்ட பழுத்த பக்தர்களின் துதிகளிலிருந்து; ஸுப்ரஹ்மண்ய நாமாக்கள் திருப்புகழ், கந்தரநுபூதி போன்ற நூல்களிலிருந்து; விக்நேச்வர நாமாக்கள் ஔவையார், நம்பியாண்டார் நம்பி, கபில தேவ நாயனார், அதிராவடிகள் முதலியவர்களின் நூல்களிலிருந்து — இப்படியாக அநுபவ கனம் வாய்ந்த பெரியோர்களின் நூல்களிலிருந்தே நாமாவளிகள் தயாரிக்க வேண்டும்.

Koviloor Digital Library

ஸம்ஸ்க்ருதத்திலுள்ள அர்ச்சனை நாமாவளிகளில் மிகப் பெரும்பாலானவை அதே நாமாவையே அதே வரிசையில் கோத்துச் சொல்கிற மூலமான ஒரே ஸ்தோத்ர நூலிலிருந்து அப்படியப்படியே எடுத்துக் கொடுத்ததாக இருக்கும். உதாரணமாக விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தில் ஆயிரம் நாமாக்களைச் செய்யுளுருவத்தில் சொல்லியிருக்கிறது. அதிலிருந்து ஒவ்வொரு நாமாவாக அந்த வரிசைப்படியே எடுத்து, ஒவ்வொரு நாமாவுக்கு முன்னாடி ப்ரணவமும் பின்னாடி 'நம:'வும் சேர்த்துத்தான் அர்ச்சனை நாமாவளி என்பது இருக்கிறது. இப்படி மூல நூல் செய்யுளுருவிலான ஒரே ஸ்தோத்ரமாயிருப்பதால் பெரிய ஸௌகர்யம், அதை ஸுலபமாக மனப்பாடம் செய்து விடமுடியும். அப்படி மனப்பாடம் செய்து நன்றாகக் கரைத்துக் குடித்துவிட்டால், அப்புறம் அதிலிருந்து ஒவ்வொரு நாமாவாகப் பிரித்து, 'ஓம்' முதலிலும் 'நம:' முடிவிலும் சேர்த்துச் சொல்வதும் மனப் பாடமாக ஆரம்பித்துவிடும். மனப்பாடமானால், புஸ்தகத்தைப் பார்க்கவேண்டிய அவசியமில்லாமல், மனஸ் ஒருமுகப்பட்டு விருவிருவென்று அர்ச்சனை பண்ணிக் கொண்டு போகலாம்.

இப்போது தமிழில் நாமாவளி என்கிறபோது, ஒவ்வொரு நாமாவளியும் ஒரே துதியில் வருகிற தொடர் நாமங்களாக இருக்காது; பல துதிகளிலிருந்து பொறுக்கி யெடுத்துப் போட்டதாகவே இருக்கும். எனவே மூலமான ஒரே துதியை மனப்பாடம் செய்வதற்கும், அப்புறம் அதிலிருந்து முதலில் 'ஓம்', முடிவில் 'போற்றி' சேர்த்த அர்ச்சனை நாமாவளியையும் ஈஸியாக மனப்பாடம் செய்வதற்கும் இங்கே இடமில்லை. மனப்பாடம் செய்வதற்கு 'ஈஸி'யான செய்யுளுருவம் இல்லாத வெறும் நாமாவளியைக் கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் அப்படி

Koviloor Digital Library

[மனப்பாடம்] பண்ண முடியும். அதனால் பரவாயில்லை என்று வைத்துக்கொள்ள வேண்டியதுதான்...

செய்தவர் இன்னார் என்றே தெரியாமல், ஆனாலும் மனஸை உருக்குவதாகவும் அர்த்த புஷ்டி கொண்டதாகவும் பல துதிகள், உதிரிப் பாடல்கள் தமிழில் இருக்கின்றன. அவற்றிலிருந்தும் அர்ச்சனைக்கு நாமாக்கள் எடுத்துக் கொள்ளலாம். சங்க இலக்கியம், கம்பர்-வில்லிபுத்தூரார், கச்சியப்ப சிவாசார்யார் போன்ற பக்த கவிகளாக இருந்த பெரியவர்களின் நூல்கள் ஆகியவற்றிலிருந்தும் எடுத்துக் கொள்ளலாம். 'Time–tested' என்கிறார்களே, அப்படிப் பல காலமாக ஜீவனோடு இருந்து வருகிற நூல்களாக இருக்க வேண்டும் என்பது முக்கியம்.

ஏற்கெனவே இருக்கிற நூல்களிலிருந்து கிடைக்கும் நாமாக்கள் போதவில்லையென்றால் அப்போது மட்டுமே புதிதாகப் பண்ணிக் கொள்ள வேண்டும். அப்படிப் பண்ணுகிறவை ஸம்ஸ்க்ருத நாமாவளிகளின் மொழி பெயர்ப்பாக இருக்கவேண்டும். இதுவே நம்முடைய ப்ராசீன பத்ததிக்குக் காட்டுகிற மரியாதை.

நாமெல்லாம் ரொம்பச் சின்னவர்கள். நம்முடைய ஸ்வல்ப பக்தியில் நாமாகப் புதுசாய் பண்ணுகிற வாக்குக்கு என்ன ஜீவ சக்தி இருக்கமுடியும்? அதனாலும்தான் old is gold என்பதுபோல் பழைய பொன்மொழிகளின் ஆதாரத்தைக் காட்டச் சொன்னது.

மஹாலக்ஷ்மி, தக்ஷிணாமூர்த்தி, நவக்ரஹங்கள் உள்படப் பல முக்யமான தெய்வங்களுக்கு தமிழ் நூல்களி லிருந்து நாமாவளிகள் தொடுப்பது முடியாமலிருக்கலாம். இது மாதிரி இடங்களிலெல்லாம் ஸம்ஸ்க்ருத நாமாவளிகளை மொழி பெயர்ப்பது என்று வைத்துக் கொண்டு விடலாம்.

Koviloor Digital Library

ஒரு முக்யமான விஷயம். தமிழ் அர்ச்சனைக்கு பாஷை புரிய வேண்டுமென்பதைத்தான் முக்யமான காரணமாகச் சொல்கிறார்கள். பாஷைப் போட்டியிலேயே இந்தப் பிரச்னையைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள் என்றாலும், வெளியில் காரணம் என்று காட்டும்போது 'புரிகிற பாஷையாக இருக்கவேண்டும்' என்கிறதையே காட்டுகிறார்கள். வாஸ்தவத்தில் ஸம்ஸ்க்ருத நாமாவளி களில் பாதி நாமங்கள் எல்லாருக்கும் அர்த்தம் புரிவதாகத் தானிருக்கும். பழந்தமிழ் நூல்களிலிருந்து பொது ஜனப் பழக்கமும், அவர்களுடைய மனப்போக்கு, க்ராஹ்ய சக்தி ஆகியவற்றை நன்றாக அறிந்து கொள்ளும் அநுதாபப் பார்வையும் இல்லாத வெறும் புலவர்கள் புது நாமாவளிகள் தயாரித்தால் அதில் பாதி, அல்லது அதற்கு மேலேயும், அந்தப் புலவர்களுக்கு மட்டுமேதான் புரிகிறவை யாக அமைந்து விடக் கூடும். பாஷைப் போட்டியை விட்டு, அர்த்தம் புரிவது என்பதை மட்டுமே கவனத்தில் கொண்டு பார்க்கிற பக்த ஜனங்கள், 'இதைவிட ஸம்ஸ்க்ருத அர்ச்சனையே தேவலை' என்று நினைக்கும்படி ஆகி விடலாம்!

ஆகவே ஜனங்களுடைய நிலைமையை உணர்ந்து அவர்களோடு ஒட்டிப் போகிற தன்மையுள்ள புலவர்களிடமே இந்தக் காரியத்தைக் கொடுக்கவேண்டும்.

மொழி பெயர்ப்புப் பணியை ஸம்ஸ்க்ருதம், தமிழ் இரண்டிலும் தேர்ச்சி பெற்றவர்களிடம் கொடுக்க வேண்டும்.

ஜீவ சக்தியுள்ள வாக்காகவும் இருக்கவேண்டும்; பொது மக்களுக்குப் புரிவதாகவும் இருக்கவேண்டும் — என்ற இந்த இரண்டு லக்ஷ்யங்களையும் ஸர்வ ஜாக்ரதை யுடன் கருத்தில் கொண்டு, குறுகிய மனப்போக்கை விட்டு, விசால நோக்குடன் செய்யவேண்டிய காரியம்.

Koviloor Digital Library

வழிபாடு என்பது மக்களுக்கு ப்ராணாதாரமான விஷயம். அதிலே வழிபாட்டுக்கு ஸம்பந்தமேயில்லாத பாஷா மோஹம், பாஷா த்வேஷம் முதலியவற்றால் தலையிட்டுப் புராதன பத்ததியையும் குலைத்து, புதுசாகவும் சரிவர ஒன்றை அமைத்துத் தர முடியாமல் கெடுத்தால் ஈச்வரன் க்ஷமிப்பானா? இந்த ஞாபகம் மறக்காமலே, செய்யவேண்டியவற்றைச் செய்யவேண்டும்.

ஸம்பந்தப்பட்டவர்களுக்கு அப்படிப்பட்ட நல்லறிவு பிறப்பதற்கு அந்த ஈச்வரனையே நாமும் பிரார்த்திக்க வேண்டும். நாம் செய்யக்கூடியது, செய்ய வேண்டுவது, அதுதான்......

[நமஸ்கார] 'டாபிக்'குக்குத் திரும்புகிறேன். ஸகல விதமான கோளாறுகள் நீங்குவதற்கும் நமக்கு ஏற்பட்ட ஒரே உபாயம், பலவிதமான கருத்துக்கள் கொண்ட நம் எல்லாருக்கும் பிதாவாக இருக்கப்பட்ட அந்த நாராயணனுக்கு நமஸ்காரம் பண்ணுவதுதான்.

வீரமும் வணக்கமும்

இப்போது எப்படி நடந்தாலும், 'நம்'மை வைத்து 'நமஸ்காரம்' என்றும் 'வணக்கு'வதை வைத்து 'வணக்கம்' என்றும் வார்த்தைகள் தோன்றியிருப்பது, நம்முடைய தேசத்தில் பூர்வகால ஸகல மக்களும் எப்படி வளைந்து கொடுத்து, எங்கே நல்லது தெரிந்தாலும் அதைப் போற்றி வழிபட்டார்கள் என்று காட்டுகிறது.

'Body language' என்று 'உடம்பின் பாஷை'யாக ஒன்று சொல்கிறார்கள். வாய் வார்த்தையால் ஒரு அபிப்ராயத்தைச் சொல்லாமல் உடம்பின் சைகையால் ரொம்பவும் இயற்கையாகத் தெரிவிப்பதே body language. அந்த மாதிரி மனஸிலே இருக்கிற எளிமையான விநய

Koviloor Digital Library

பாவத்தை, மரியாதை உணர்ச்சியைத் தெரிவிக்கவே ஏற்பட்டது இந்த நமஸ்கார க்ரியை. அந்த க்ரியையின் தாத்பர்யத்தை 'நமஸ்காரம்', 'வணக்கம்' என்ற வளைந்து கொடுக்கும் அர்த்தம் தரும் வார்த்தைகள் அழகாகத் தெரிவிக்கின்றன. ஒன்றுமில்லை என்ற அபிப்ராயத்தில் அதைக் கழி மாதிரி ஸாஷ்டாங்கமாகக் கிடத்தும்போதும் மனோபாவம் என்னவோ வளைந்து கொடுத்துப் படிமானமாக இருப்பதுதான்.

பஞ்சாங்கமாகப் பண்ணும்போது வளைந்து கொடுப்பது அழுத்தமாகவே body language-ஆகத் தெரிகிறது.

நமஸ்காரம், வணக்கம் என்ற வார்த்தைகளே நம் ஜனங்களின் பணிவுப் பண்பைக் காட்டுகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தேன்.

வீரம் - சூரம்—அது பாட்டுக்கு ஒரு பக்கம். காட்ட வேண்டிய இடத்தில் அதைக் காட்டினார்கள். அங்கே சத்ருவுக்கு, அக்ரமத்துக்குத் தலைவணங்கவேயில்லை. நேராக நிமிர்ந்து நின்றார்கள். ஆனால் நல்லது, உத்தமமானது என்றால் வணங்கி ஏற்றுக் கொண்டார்கள். **"தலையே! நீ வணங்காய்!"** என்றே அப்பர் ஸ்வாமிகள் பாடிக் கொடுத்திருக்கிறார்*!

வேடிக்கையாக ஒன்று தோன்றுகிறது: வீர-சூரர்களாக இருக்கும்போது நம்முடைய முன்னோர்கள் **வில்லை வளைத்தார்கள்.** விநயசாலிகளாக எங்கே நல்லது இருந்தாலும் அதை எடுத்துக் கொள்ளும்போது **வில்லாக வளைந்தார்கள்**—தாங்களே வில் மாதிரி வளைந்து பணிந்

* 'திரு அங்கமாலை' என்ற பதிகத்தின் தொடக்கம்.

Koviloor Digital Library

தார்கள்! ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்யும்போதும் முதலில் உடம்பை வளைக்கத்தானே வேண்டும்?

நமஸ்கரிப்பதை இங்கிலீஷில் Bowing என்று சொல்கிறார்கள். Bow என்றால் வில்; அது வளைந்து, அதாவது வளைக்கப்பட்டதாக, இருக்கிறது. விறைப்பாக இல்லாமல் நெகிழ்ந்து பணிவாக இருப்பதற்கு அடையாளமாகவே இப்படி உடம்பை வணக்கி மரியாதை பண்ணுவது.

சொல்லிக்கொண்டு போகிறபோதே உள்ளுக்குள்ளே விஷயங்கள் புதுசாகத் தெளிவாகிக் கொண்டு வருகிறதில் ஒன்று தெரிகிறது: 'நமஸ்காரம்' என்றால் நேர் அர்த்தம் 'நமனம்' பண்ணுவது என்றும் 'நமனம்' என்றாலும் வளைப்பதுதான் என்றும் சொன்னேன்.

'நமனம்' என்றால் 'வளைவது' என்பதை வைத்தே 'நமஸ்காரம்' என்ற வார்த்தை ஏற்பட்டதாக இலக்கணப் படிச் சொன்னாலும் தத்வார்த்தமாக இன்னோர் உசந்த அர்த்தமும் சொல்வதுண்டு. முன்னவே சொன்னேன்; மறுபடி சொல்கிறேன்: தனக்கில்லை என்று பகவானுக்கே ஸகலத்தையும் அர்ப்பணம் பண்ணும் சரணாகதியை ஸம்பந்தப்படுத்திச் சொல்கிற அர்த்தம். ஒரு கர்மாநுஷ்டானத்தில் முடிந்த முடிவாக "ந மம" என்று சொல்வது வழக்கம்; விதி. அதற்கு, "என்னுடையதில்லை" என்று அர்த்தம். அதாவது, "இந்த அநுஷ்டான பலன் எனக்கில்லை; உனக்கே!" என்று ஈச்வரார்ப்பணம் பண்ணுவதாக அர்த்தம். இந்த மாதிரி, "சரீரம் என்னுடையதில்லை; உனக்கே ஸமர்ப்பித்தேன்" என்று விழுவதுதானே நமஸ்காரத்தின் பரம தாத்பர்யம்? அப்படி சரீரத்தை "ந மம" பண்ணுவதே 'நம:'; அதை ஒரு க்ரியையாக, கார்யமாகப் பண்ணுவது 'நமஸ்காரம்' என்று தத்வார்த்தம் சொல்வதுண்டு.

Koviloor Digital Library

நேர் அர்த்தம், இலக்கணப்படியான etymological derivation படி, நமஸ்காரம் என்றால் வளைவதுதான். 'பிறத்தியாருக்கு வளைஞ்சு குடுக்கணும், தழைஞ்சு குடுக்கணும்' என்று சொல்கிறதற்கு ஸ்தூல ரூபமாக வளைவதுதான். Bowing-ம் இதையேதான் தெரிவிக்கிறது. லோகம் பூரா ஜனஸமுதாயம் அத்தனைக்கும் ஒரே மாதிரி பாவம், கார்யம், வார்த்தைதான்! நாம் எத்தனைதான் வர்க்க பேதங்கள் கொண்டாடிக் கொண்டு பிரிந்து போனாலும் அடிப்படையில் ஒரே குடும்பந்தான்!

கிறிஸ்துவர்களும் துருக்கர்களும் மண்டி போட்டு மரியாதை செலுத்துகிறார்கள். அப்போது காலை வணக்கு கிறார்கள். Kneel பண்ணுவது என்று அதைச் சொல்வது. முழங்காலை மடிப்பது, வணக்குவது என்றே நேர்ப்பட அர்த்தம் தருகிறதாக genuflexion என்று அதைச் சொல்கிறார்கள்.

இதிலே ஒரு வேடிக்கை. K–N–E–E என்று ஸ்பெல்லிங் பார்த்தால் 'க்னீ' என்று உச்சரிப்பு வரணும். அது 'கணு' என்கிற தமிழ் வார்த்தையுடன் ஸம்பந்தப்பட்டதாகத் தெரிகிறது. Genu என்பதிலோ 'ஜாநு' என்ற ஸம்ஸ்க்ருத வார்த்தை ஸம்பந்தம் நன்றாகவே தெரிகிறது. 'ஜாநு' என்றால் முழங்கால். 'ஆஜாநுபாஹு' என்றால் முழங்கால் வரைக்கும் கை நீண்டிருப்பவன் என்று அர்த்தம். பாஷா சாஸ்த்ரம் தெரிந்தவர்களுக்கு 'ஜ'காரம் 'க'[ka]கார மாவதுண்டு என்று தெரியும். 'ஜ'வும், 'ய'வும் ஒன்றுக்கொன்று மாறுவது ஜாஸ்தி. அபூர்வமாக 'ஜ'–'க' மாறுதலும் உண்டு. 'ka' சப்தம் வலுத்துத்தானே 'ga' ஆனது? அந்த 'ga'வைக் குறிக்கிற G(ஜி) என்கிற எழுத்தே 'ஜ'கர வரிசையைச் சேர்ந்ததாக இருக்கிறது! இதிலிருந்தே ja–ka ஒன்றுக்கொன்று மாறமுடியும் என்று தெரிகிறதோல்லியோ?

Koviloor Digital Library

இதைப் பார்க்கிறபோது 'ஜாநு'தான் 'கணு'ஆகி, ஆனால் அது முழங்காலைக் குறிக்காமல் 'குல்பம்'-anklet என்று சொல்லுகிற அவயவத்தைக் குறிப்பதாக ஆகிவிட்டதோ என்று தோன்றுகிறது. 'ஆஜாநுபாஹு'வின் கை முழம் போடுகிறது போல் ஜாநுவில் முடிவதால் அதற்கு 'முழங்கால்' என்று பெயர் வந்ததோ என்னவோ? அல்லது இடுப்பிலிருந்து பாதம் (foot) வரையில் இரண்டு முழ நீளம் இருப்பதில் நடுப்பாதியில் அந்த பாகம், இடுப்பிலிருந்தும் ஒரு முழம், பாதத்திலிருந்தும் ஒரு முழம் என்றிருப்பதாலும் அப்படிப் பேர் வந்திருக்கலாம். கரும்பு, மூங்கில் முதலானதில் கணு கணுவாக இருக்கிற மாதிரி காலில் இருப்பதே கணு என்று பொதுவில் சொல்வது. நான் சொல்வது ஸரியானால் கால் கணுவை வைத்துத்தான் கரும்பு முதலானதிலும் கணு என்று ஒன்றைச் சொல்வதாக ஆகும்.....

மண்டி போட்டு நமஸ்கரிப்பது இதர மதஸ்தர்கள் வழக்கம். நம்மிடையிலும் அந்த வழக்கமில்லாமலில்லை.

அதோடு துருக்கர்கள் 'ஸலாம்' என்றும் பண்ணு கிறார்கள். கிறிஸ்துவர்களும் கையால் 'ஸல்யூட்' அடிக்கிறார்கள்: ஸலாம், ஸல்யூட் இரண்டும் 'ஸல்' என்றே ஆரம்பிக்கின்றன. எங்கே பார்த்தாலும் இப்படி ஜனப் பிரிவு களுக்கிடையில் ஒற்றுமை இருப்பதைப் பார்த்தால் ஸந்தோஷமாயிருக்கிறது.

இன்னும் ஒற்றுமையைக் காட்டுவதாக நம் மடத்திலேயே 'தீவட்டி ஸலாம்' என்று ஒன்று நித்யம் நடக்கிறது. தீபம் வைக்கிற ஸமயத்தில் ஜகத்துக்கே ஞான தீபமாக வந்த ஆசார்யாளின் பாதுகைகளுக்கு நமஸ்காரம் பண்ணி, மடத்தின் கணக்கு வழக்குகளை அவருக்கு ஸமர்ப்பிப்பதாக வழக்கமிருந்து வருகிறது. அதற்கு 'தீபநமஸ்காரம்' என்பது யதோக்தமான பெயர்.

Koviloor Digital Library

இவர்களெல்லாம் ஸந்நியாஸ குருக்கள். அது தவிர ஸர்வஜ்ஞ விஷ்ணு என்பவரையும் தம்முடைய குருவாகச் சொல்லியிருக்கிறார் — எல்லா மத ஸித்தாந்தங்களையும் நடுநிலையோடு எடுத்துச்சொல்லி அவர் எழுதியிருக்கும் 'ஸர்வ தர்சன ஸங்க்ரஹம்' என்ற 'டைஜஸ்'டில்[1].

தத்தாத்ரேயர் ரொம்பப் பெரியவர். வேதாந்தத்திலும் குரு, ஸ்ரீவித்யா ஸம்ப்ரதாயத்திலும் குரு, யோக ஸித்தர்களுக்கும் குரு என்று இருப்பவர். த்ரிமூர்த்தி ஸ்வரூபமானவர். அவர் தமக்கு இருபத்துநாலு குருக்கள் என்று சொல்வதாக பாகவதத்தில் வருகிறது[2]. ஆனால் அப்படி அவர் மண்ணு, காற்று, ஸமுத்ரம் முதலிய அசேதனங்கள்; சிலந்தி, விட்டில்பூச்சி, குளவி தேனீ முதலிய பூச்சிகள், யானைகள் முதலிய ம்ருகங்கள்; வேடன், தாஸி என்று, நாம் யாரையெல்லாம் குருவாக — சிஷ்யனாகக்கூட — நினைக்கமாட்டாமோ அப்படி இருபத்து நாலு பேருக்கு குருஸ்தானம் கொடுத்துச் சொல்லியிருக்கிறார். அந்த ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு அம்சத்தைத் தாம் படிப்பினையாக எடுத்துக் கொண்டு அதனாலேயே அவர்களை குரு என்று சொல்லுகிறார்.

ஆகக்கூடி, அவர் ஸஹஜமாகத் தமக்கு இப்படி அநேக குருமாரைச் சொல்வதிலிருந்தே அது ஸதாசாரத்தில் இருந்து வந்த வழக்கந்தான் என்று தெரிகிறதல்லவா?

பதிவிரதமும், குருவிரதமும்

"குரு என்றால் அவரிடமே தன்னைப் பூர்ணமாக ஒப்புக்கொடுத்துவிட்டு சரணாகதி என்று கிடக்க

1. 'டைஜஸ்ட்': பல பொருள்கள் பற்றிச் சுருக்கமாகத் தெரிவிக்கும் நூல்.
வேறு பல அத்வைதிப் பெரியார்களுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட குருமார் இருந்தது இவ்வுரையிலேயே பின்னால் வருகிறது.
2. XI.7–9. 'அவதூதர்' என்றே இங்கு கூறப்படுபவர் தத்தாத்ரேயர்தான் என்று ஆன்றோர்கள் முன்–பின் தொடர்புகாட்டி நாட்டியுள்ளனர்.

Koviloor Digital Library

வேண்டாமா? பல பேரிடம் அந்த மாதிரித் தன்னைப் பிய்த்துப் பிய்த்துக் கொடுக்க முடியுமா? சரணாகதியைப் பங்கு போட்டுக் கொடுக்க முடியுமா? ...... சொல்ல ஸங்கோசமாகத் தானிருக்கிறது; ஆனாலும் சொல்கிறேன்.... பல பதிகளிடம் ஒருத்தி பாதிவ்ரத்யத்துடன் [கற்புடன்] இருக்கமுடியும் என்றால் எப்படி? அப்படித்தானே ஒருத்தனுக்கே பல குரு என்பதும்?'' என்றிப்படிக் கேட்பதுண்டு.

ஒரே குரு என்று சரணாகதி பண்ணிவிட்டால் ரொம்ப ரொம்ப ஸரிதான். ஆனால் அப்படிப் பண்ணாததால் பதிவ்ரதத்திற்கு தோஷம் என்கிறாற்போல குருவ்ரதத்திற்கு தோஷம் என்றாகாது. ஒரு ஸ்த்ரீக்கு அப்பா, அம்மா, கூடப் பிறந்தவர்கள், மாமனார், மாமியார், பிறந்தகத்து – புக்ககத்து பந்துக்கள், பரம ப்ரியமான அவளுடைய ஸொந்தக் குழந்தைகள் என்று பல உறவுக்காரர்கள் இருக்கவில்லையா? ஒரு உத்தம ஸ்த்ரீ அந்த எல்லாரிடமும் ப்ரியமாயிருந்துகொண்டு அவர்களுக்குச் செய்யவேண்டியதையெல்லாம் நன்றாகச் செய்வாள். ஆனாலும் பதி என்ற உறவு தனிதானே? அவனிடந்தானே அவள் சரணாகதி என்றே கிடப்பது?

பல உறவுக்காரர்கள் மாதிரி பல குருக்கள். அவர்களிலே பதி மாதிரி முதல் ஸ்தானம் வஹிக்கிறவராக ஒருத்தர் — 'முக்ய குரு' என்று வித்யாரண்யாள் சொன்னவர். அவரொருவரிடந்தான் சரணாகதி என்பது. பிய்த்துப் பிய்த்துப் பல பேரிடம் இல்லை.

மற்ற பந்துக்களிடமும் ப்ரியம் மாதிரி எல்லா குருக்களிடமும் மரியாதை, பக்தியான ப்ரியம். அதனால் மாமனார்-மாமியார் முதலியோருக்கும் ஒரு ஸ்திரீ கீழ்ப் படிகிறதுபோல இவர்களுக்கெல்லாமும் கீழ்ப்படிந்து நடப்பது.

Koviloor Digital Library

கோவிலில் அநேக ஸந்நிதிகளில், ஒவ்வொன்றிலும் ஒரு ஸ்வாமி. அகத்துப் பூஜையிலும் ஆதி சாஸ்த்ரங்கள் சொல்லி, அப்புறம் ஆசார்யாளும் புத்துயிரூட்டிக் கொடுத்த பஞ்சாயதன பூஜையில் ஐந்து ஸ்வாமி. எல்லாவற்றிடமுமே தான் பக்தி என்றாலும் இஷ்ட தெய்வம் என்று ஒன்று, அதனிடமே சரணாகதி என்று இருக்கோல்லியோ? அந்த மாதிரி பல குருமார்களிடம் பக்தி செலுத்திக் கொண்டே முக்ய குருவாக ஒருவரிடம் மட்டும் ஆத்ம ஸமர்ப்பணம்.

ஏன் பல குரு வருகிறார்கள் என்றால், பரலோகத்துக்கு வழி சொல்லித் தரும் வித்யையிலேயே பல கிளைகள் இருக்கின்றன. ஆத்ம சாஸ்த்ரம் என்ற ஒன்றுக் குள்ளேயே உபாஸனை என்ற branch—குள் எத்தனை branch—கள் என்பதற்கு சாந்தோக்யம் ஒன்றைப் பார்த்தால் போதும். இப்படி அநேக கிளை சாஸ்த்ரங்கள், வித்யைகள் இருப்பதில் ஒவ்வொரு குரு ஒவ்வொன்றில் ஸ்பெஷலைஸ் பண்ணியிருப்பார். நமக்கு அகத்து டாக்டர் என்று ஒருத்தர், அவர் சொல்லியே பல ஸ்பெஷலிஸ்ட்களிடமும் போவது என்று இருக்கிறதோ இல்லையோ? அப்படி ஒரு முக்ய குரு, அநேக உபகுருமார்கள்.

க்ளாஸ் வாத்யார் என்றே ஒருத்தர் இருக்கிறார். அவர் இங்க்லீஷோ, கணக்கோ எடுக்கிறார். ஸெகண்ட் லாங்க்வேஜுக்கு வேறே ஒரு வாத்யார், ஹிஸ்டரி, ஜாகரஃபி, ஸயன்ஸ் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருத்தர் என்று வருகிறார்களோல்லியோ! முக்ய குரு — க்ளாஸ் வாத்யார்; உபகுருமார் — வேறே ஸப்ஜெக்ட்கள் எடுக்கிற வாத்யார்கள்.

வேறே விதமாகவும் உண்டு: இங்கே வாய்ப்பாட்டு வித்வானும் பக்கவாத்தியங்களும் மாதிரி முக்ய குருவும், உபகுருக்களும். முக்ய குரு சொல்லிக் கொடுக்கிற ஸப்ஜெக்டே நமக்கு நன்றாக ஏறிப் பூர்ணமாக ஆகும்படி

Koviloor Digital Library

போஷித்துக் கொடுப்பவர்களாக உபகுருமார். பக்க வாத்யக் காரர்களில் ஃபிடில்காரர் அதே ராகம், பாட்டு, தாளத்துக்குத்தான் வாசிக்கிறார். ம்ருதங்கக்காரர் அதே தாளத்துக்குத்தான் வாசிக்கிறார். அது வாய்ப்பாடகர் பாடுவதற்கு இன்னும் சோபை தந்து கான ரஸத்தைப் பூர்த்தி பண்ணி நமக்குள்ளே ஏற்றுகிறது. அப்படி முக்ய குருவின் ஸப்ஜெக்டைப் பண்ணித்தர உபகுருமார்.

உபகுருமார்களின் உபதேசத்தோடு கலந்து கலந்து எடுத்துக் கொள்ளும்படியாகவே முக்ய குருவின் உபதேசம் இருப்பதுண்டு. முக்யமாக சாதத்தை வைத்துக்கொண்டு அதோடு போட்டுக்கொள்ள, தொட்டுக்கொள்ள அநேக வ்யஞ்ஜனங்கள் மாதிரி! [சிரித்து] நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு சாப்பிடும்படியாக எள்ளுமிளகாய்ப் பொடியும் கொத்ஸூம் இருந்தாலும் 'ஸாது' இட்லிதான் 'மெய்ன்' என்கிற மாதிரி ஒரே சாந்தமாக, ஸிம்பிளாக முக்ய குரு மூல தத்வத்தை உபதேசித்து — வாயால் உபதேசம் என்று பண்ணுவதேகூட இங்கே குறைவாக இருக்கலாம், அப்படிப் பண்ணி — நம்முடைய அபக்வ ஸ்திதியில் அது உள்ளே போகாததால் விவரமாக சாஸ்திரங்களிலிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் கேட்டுக்கொண்டு அதோடு இதைக் கலந்தாலே உள்ளே போவதாகவும் உண்டு.

ஒருத்தருக்கு முக்ய குருவாக இருப்பவரே இன்னொருத்தருக்கு உபகுருவாக இருக்கலாம். நமக்கு ஜாகரஃபி வாத்யாராக மாத்திரமே இருப்பவர் வேறே பசங்களுக்கு க்ளாஸ் வாத்யாராக இருக்கலாமோல்லியோ? ஆகையினாலே, ஒருத்தனுடைய முக்ய குருதான் பெரியவர், உபகுரு அவ்வளவுக்கில்லை என்று இருக்கணும் என்றில்லை.

ஆகக்கூடி, குருவிடம் சரணாகதி அவச்யந்தான். பதிவ்ரதாபங்கம் மாதிரி குருவ்ரத பங்கம் ஏற்படாமல்

Koviloor Digital Library

ஆத்மாவை அவரிடமே அபின்னமாக — பிய்த்துப் பிய்த்து இல்லாமல் அபின்னமாக — அர்ப்பணிப்பது என்பது அத்யாவச்யந்தான். ஆனால் அப்படி குரு என்று இருப்பவர் முக்ய குரு என்பவராக இருந்து, வேறே உபகுருமாரும் இருக்கலாம். இருந்தால் தப்பேயில்லை.

சில ஸமயத்தில் என்ன ஆகிறதென்றால் — அபூர்வமாக இப்படி ஆகிறது; ஆனால் நிச்சயமாக ஆகிறது; என்ன ஆகிறதென்றால் — ஒருவரிடம் அவரே ஆத்மரக்ஷகர் என்று பரிபூர்ணமாக நம்பி சரணாகதி செய்து நன்றாக முன்னேறுகிற ஒருவரேகூட, உபகுரு என்று புதிசாக வேறே யாரிடமும் எள்ளளவும் உபதேசம் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாதபோதிலும், உபகுரு என்ற அளவுக்கு மாத்திரமில்லாமல் இந்த முக்ய குருவுக்கு ஸரிஸமானராகவே இன்னொருத்தரை ஆச்ரயிக்கும்படியும் ஆகிறது. இப்படிப்பட்டவர்கள் இரண்டு பேரையும் முக்ய குருவாகவே பூஜித்து, பக்தியில் இரண்டு பேரிடமும் கொஞ்சங்கூட ஏற்றத்தாழ்வில்லாமல் இருந்துகொண்டிருப் பார்கள்.

இங்கே முக்யமான விஷயம், அவர் [இப்படிப்பட்ட சிஷ்யர்] அந்த இரண்டு பேரிடமும் [குருமாரிடமும்] மற்றவரைப் பற்றி ஒளிக்காமல் சொல்லி அவரும் அறிந்தே, ஸம்மதித்தே, ஆசீர்வாதம் பண்ணியேதான் இரட்டை குருக்களாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது.

அப்படி இல்லாவிட்டால் அங்கே குரு வஞ்சனை, குரு த்ரோஹம் வந்துவிடும்.

அப்படியில்லாத கேஸாகத்தான் சொல்கிறேன். இப்படியும் அபூர்வமாக நடக்கின்றன. தன்னிடமே சரணாகதனாக இருக்கிற ஒரு சிஷ்யனிடம் அந்த குருவேகூட இன்னொருத்தரைச் சொல்லி அனுப்பி வைப்பதாகக்கூட உண்டு.

Koviloor Digital Library

ஏதோ அபூர்வமான பூர்வ ஸம்ஸ்காரம் காரணமாகத்தான் இப்படிச் சிலபேருக்கு நடப்பதாக இருக்கவேண்டும்.

"ஸரி, ஆனால் சரணாகதியை எப்படிப் பிச்சுப் பிச்சு இரண்டு பேர்கிட்ட குருவ்ரதம்?"

இது வெளி ஆள் கேட்கிற கேள்வி. ஆனால் ஸம்பந்தப்பட்ட ஆஸாமிக்கு — சிஷ்யனுக்கு — அவனுக்கு மாத்திரமில்லை; மூன்று ஆஸாமிகளுக்கு — அந்த சிஷ்யன், அவனுடைய அந்த ஸம ஸ்தான குருக்கள் இரண்டு பேர் என்ற மூன்று ஆஸாமிகளுக்கும் இந்தக் கேள்வி எழும்புகிறதேயில்லை!

அங்கே அந்த இரண்டு குருக்களுமே சேர்ந்து ஒன்றாக — ஒருத்தராகத்தான் — இருப்பார்கள். அதெல்லாம் அநுபவத்தினாலே தெரியவேண்டிய விஷயம். ஸம்பந்தப்பட்ட ஆஸாமிக்கு அப்படி நன்றாகவே தெரிகிற விஷயம். பிறத்தியாருக்கு 'ஏன், எப்படி?' சொல்லிப் புரியவைக்க முடியாது.

ஈச்வரனும் அம்பாளும் ஒன்றாகவே சேர்ந்து அர்த்த நாரீச்வரர் என்றே ஒரே மூர்த்தியாக இருக்கிறதோ இல்லையோ?

ப்ரஹ்ம-விஷ்ணு-ருத்திரர்கள் மூன்று பேரும் சேர்ந்து த்ரிமூர்த்தி என்றே மூர்த்தி உண்டோ இல்லையோ?

இங்கேயெல்லாம் [இவ்விரு மூர்த்திகளிடம்] பரம பக்தர்களாக சரணாகதி செய்து ஸித்தி கண்ட பெரியவர்கள் இருந்திருக்கிறார்களே! அவர்கள் பிய்த்துப் பிய்த்தா சரணாகதி பண்ணினார்கள்? ஐகாந்திக வ்ரதத்திற்கு [ஒரே ஒருவர் என்று முடிந்த முடிபாகக் கொண்டொழுகும் நெறிக்கு] பங்கமா பண்ணினார்கள்? பண்ணியிருந்தால் அவர்கள் ஸித்தி கண்டே இருக்க முடியாதே!

Koviloor Digital Library

இந்த சிஷ்யர்களிடம் வேறே வேறே குருமார்கள் என்ற இடறலே மனஸில் கொஞ்சங்கூட இருக்காது. ஒரே பதி, அதே பதி வெவ்வேறே 'ட்ரெஸ்'ஸில் இருக்கிற மாதிரி ஒரே பரமாநுக்ரஹம், ஒரே உத்தாரண சக்திதான் வெவ்வேறே மநுஷ்ய–ரூப 'ட்ரெஸ்' போட்டுக் கொண்டிருப்பதாகவே அவர்களுக்குத் தெரியும். ஒரே லக்ஷ்யத்துக்கு மூர்த்தியாக ஒன்றுக்கு மேற்பட்ட பேர்; **Goal** ஒன்றே, அதிலே சேர்ப்பிக்கிற ஆள் வெவ்வேறான ரூபத்திலே என்று தெரியும்.

வேறே வேறே குருக்கள் சொல்வதில் ஒருத்தர் சொல்கிறபடி பண்ணுவது மற்றவர் சொன்னதற்கு விரோதமாக ஆனால் அப்போதுதான் இடறல் வருவது. நாம் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு அப்படி ஆகவே ஆகாது. இரண்டு பேரும் சொல்வது ஒன்றாகவேயோ, ஒன்றையொன்று இட்டு நிரப்பிப் போஷித்துக்கொண்டோ, அல்லது பக்குவ ஸ்திதியில் ஏறுமுகமாக ஒன்றை முடித்து இன்னொன்றுக்குப் போவதாகவோதான் இருக்கும்.

[ஸாதனை] வழியிலும் கொஞ்சங்கூட இடறல் இருக்காது; மனஸிலும் துளிக்கூட இடறல் — உறுத்தல் — இருக்காது. 'வஞ்சனையோ, த்ரோஹமோ, திருட்டுத் தனமோ பண்ணுகிறோமோ?' என்று உறுத்தாது. 'ஃப்ரீ'யாக, ஆனந்தமாக ஒன்றுக்கு மேற்பட்ட குருமாரிடம் போய்க் கொண்டிருப்பான்.

உபநிஷத்துக்களைவிட நமக்கு ப்ரமாணமில்லை. அதிலே இப்போது நாம் பார்த்ததில், க்ராமம் க்ராமமாக வழிகாட்டியவர்களைப் பல குருமார் என்று உபமேயமாக எடுத்துக்கொண்டது மட்டுமில்லை*. உபநிஷத்துக்களிலே

* சாந்தோக்யோபநிஷத்தில் வரும் கந்தார தேசத்தவனைப் பற்றிய உதாரணக் கதையைக் குறிப்பிடுகிறார். அதில் அவனுக்கு வழிகாட்டிய பலர் உபமானம்; அவர்களுக்கு உபமேயம் பல குருமார்.

Koviloor Digital Library

வருகிற ஸாக்ஷாத் பாத்ரங்களில் பல பேரே பல குருமார்களிடம் போனதாகவும் நிறையப் பார்க்கிறோம்!

மேற்படி கந்தார தேச உபமானக்[உவமைக்]கதை எவனுக்கு உபதேசிக்கப்பட்டதோ அந்த ப்ரஹ்மசாரிப் பையன் ச்வேதகேது என்பவனே பல குருக்களிடம் உபதேசம் பெற்றுக் கொண்டவன்தான்!

இங்கே முதலிலே முக்ய குரு, அப்புறம் பல உபகுருமார் என்று இல்லாமல் முதலிலே பல பேரிடம் கற்றுக்கொண்டுவிட்டு அப்புறம் முக்ய குருவிடம் வந்து சேர்வதாக இருக்கிறது. பிதாவான உத்தாலக ஆருணியே தான் அப்படி முக்ய குரு ஆகிறவர். முன்னே நாம் பார்த்த பிதா–குரு 'ஈக்வேஷன்'!

அவன் பல பேரிடம் படித்துவிட்டுப் பிதாவிடம் திரும்பி வருகிறான். அவர் ஆத்ம ஸம்பந்தமாக ஒன்று சொல்லி, அது அவனுக்குத் தெரியுமா என்று கேட்கிறார்.

அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. அப்போது அவன், "என்னுடைய குருமார்களுக்கு — 'பகவந்த:' என்று பஹு வசனத்தில் சொல்கிறான் — இந்த ஸமாசாரம் தெரியாமலிருக்கணும். தெரிஞ்சிருந்தா எனக்குச் சொல்லிக் குடுக்காம இருந்திருக்கமாட்டா" என்று சொல்வதாக உபநிஷத்தில் இருக்கிறது.

இன்னும் அநேக இடங்களிலும் உபநிஷத்துக்களில் இப்படி ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குருமார் இருந்ததைக் காட்டியிருக்கிறது.

அதில் இரண்டில், வேடிக்கையாக, ஆசார்யர் உபதேசிக்காமல் சோதித்தபோது திவ்ய சக்திகள் இரண்டு சிஷ்யர்களுக்கு விசித்ரமாக உபதேசித்ததையும், அப்புறம் அதை அந்த சிஷ்யர்களிடமிருந்தே தெரிந்து கொண்ட

Koviloor Digital Library

ஆசார்யர் தாமும் 'கன்ஃபர்ம்' பண்ணிக் கொடுத்ததையும் கதையாகச் சொல்லியிருக்கிறது.

ஒருத்தன் முன்னே பார்த்த ஸத்யகாம ஜாபாலன்*. குருவின் உத்தரவுப்படி அவன் பாட்டுக்கு அவருடைய பசுக்களை வைத்துக் கொண்டு தனியே போய் இருந்துகொண்டு, அவற்றை மேய்த்து, சினைக்கு விட்டுக் கொண்டு காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தான். அவர் பாடம் சொல்லித் தருகிற பாடாக இல்லை. அவனை அப்படிச் சோதனை பண்ணிக் கொண்டிருந்தார். அவனும் பொறுமையாகவே இருந்தான்.

தன்னிடம் அவர் கொடுத்திருந்த பசு மந்தையை அவன் ஆயிரமாகப் பெருக்கி முடித்த பிற்பாடு குருகுலத்துக்குத் திரும்புகிறான். அதற்கு மேல் பொறுக்க முடியாமல் அந்த மந்தையிலிருந்த ரிஷபம் ஒன்றே அவனுக்கு ஒரு உபதேசம் கொடுத்தது. மறுதினம் அவன் அக்னி உபாஸனை செய்யும்போது அந்த அக்னி ஒரு உபதேசம் கொடுத்தது. அதற்கடுத்த நாள் ஒரு ஹம்ஸமும், முடிவாக நாலாம் நாள் மத்கு (Madgu) என்கிற ஜலத்தில் வஸிக்கும் ஒரு பக்ஷியும் உபதேசங்கள் கொடுத்தன. திவ்யசக்திகள்தான் இப்படியெல்லாம் உபதேசித்து அதையே அப்புறம் குரு — ஹாரித்ருமத கௌதமர் — அங்கீகாரம் பண்ணித் தம் வாயால் உபதேசித்து உறுதிப்படுத்திக் கொடுக்கிறார்.

இதைத் தொடர்ந்தாற்போலவே [சாந்தோக்யத்தில்] வரும் கதையில் இந்த ஸத்யகாம ஜாபாலரே குருவாகி, தம்முடைய சிஷ்யனான உபகோஸலனை இதே மாதிரி சோதிக்கிறார். பன்னிரண்டு வருஷம் அவன் குருகுலவாஸம் செய்தபோதிலும், மற்ற சிஷ்யர்களுக்கு மாத்திரம் அவர் வித்யாப்யாஸம் பண்ணி, பூர்த்தியும் ஆக்கி,

* இனிவரும் கதை சாந்தோக்யம் IV.4 – IV.9

Koviloor Digital Library

அகத்திற்குத் திருப்பி அனுப்பிவைத்துவிட்டு, அவனுக்கு ஒன்றும் செய்யாமலிருந்து விடுகிறார். மனஸொடிந்து போன அவனுக்கு குரு உபாஸிக்கும் மூன்று அக்னிகளுமே உபதேசம் பண்ணி விடுகின்றன. அப்புறம் அவரும் ஸந்தோஷமாக அதற்கு முத்ரை குத்திக் கொடுத்து, ஆனாலும் அக்னிகள் அவன் ஆசைப்பட்ட ப்ரஹ்ம வித்யையில் ஏதோ கொஞ்சந்தான் சொல்லித் தந்தன என்றும், தாம் முழுக்கச் சொல்லித் தருவதாகவும் சொல்லிப் பெரிசாக உபதேசம் ஆரம்பிக்கிறார்.

இதெல்லாம் 'பல குருமார்' என்ற தலைப்பின் கீழ் அஸலே வராது என்று சில பேருக்குத் தோன்றலாம். ஆனால் குரு சோதித்துச் சோதித்துச் சொல்லித் தருவது, அப்போதும் சிஷ்யன் ஸஹித்துக் கொண்டு பணிவிடை பண்ணிக்கொண்டு அவரிடம் பக்திச்ரத்தையுடனேயே இருப்பது, தன்னுடைய வித்யா லக்ஷ்யத்திற்காகவும் தபித்துக் கொண்டிருப்பது – ஆகிய விஷயங்கள் இவற்றிலிருந்து தெரியவருகின்றன. அதனால் நம் 'டாபிக்'குக்கு ஸம்பந்தமானவைதான்.

அஸலே ஸ்தூலமான மநுஷ்ய ரூபத்திலேயுள்ள அநேக குருமாரிடம் ஒருத்தரே உபதேசம் பெறுவதற்கும் உபநிஷத்துக்களில் யதேஷ்டமாக 'எவிடென்ஸ்' இருக்கிறது.

கீதையிலேயும் பகவான் **'உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிந: தத்வ–தர்சிந:'** என்பதாக பஹுவசனத்திலேயே "தத்வத்தை அநுபவித்தறிந்தவர்களான ஞானிகளிடம் போய் நமஸ்காரம் பண்ணி, தொண்டுகள் செய்து, அலசி அலசித் தத்வத்தைக் கேட்டுக் கொள். அவர்கள் உனக்கு ஞானோபதேசம் கொடுப்பார்கள்" என்கிறார்*. கிருஷ்ண

* IV.34 ச்லோகத்தின் முதற்பாதியான "தத்–வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா" என்பதற்கும் சேர்த்து ஸ்ரீசரணர் இங்கு பொருள் கூறியுள்ளார்.

Koviloor Digital Library

பரமாத்மா அர்ஜுனனுக்கு குருவாக இருந்துகொண்டு உபதேசிக்கிறபோதே, இப்படி மற்ற உபகுருக்களும் அவனுக்கு உண்டு என்கிற ரீதியில் பேசியிருக்கிறார்!

அவருக்குமே இப்படிப் பல குருமார் இருந்துதானிருக்கிறார்கள். யதுவம்சக் குலகுரு கர்காசார்யர். அவர்தான் பகவானுக்கு உபநயனம் செய்த குரு. பகவான் வித்யாப்யாஸம் என்று குருகுலவாஸம் யதோக்தமாகப் பண்ணினது ஸாந்தீபனி என்கிற குருவிடம். தேவகீ புத்ரனாக அவர் தம்மைத் தெரிவித்துக் கொண்டு, கோர ஆங்கீரஸ் என்ற ரிஷியிடம் உபதேசம் பெற்றுக் கொண்டதாகவும் நாம் சாந்தோக்யக் கதை பார்த்தோம்.

தத்தாத்ரேயரையும் உதாஹரணம் பார்த்தோம். இருந்தாலும் அவர் அந்த இருபத்து நாலு பேரிடம் உபதேசம் என்று வாஸ்தவத்தில் பெறாமல், தாமே அந்த இருபத்து நாலில் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு படிப்பினை எடுத்துக் கொண்டதோடு ஸரி என்பதால் அவர்களை அவருக்கு குரு என்பது ஔபசாரிகந்தான் [உபசாரத்திற்குச் சொன்னதுதான்] என்று வைக்கவும் ந்யாயமுண்டு.

ஆனாலும் அவர் நம் 'டாபிக்'குக்கே பலம் கொடுப்பதாகவும் நேராக ஒன்று அந்த உபாக்யான முடிவில் சொல்லியிருக்கிறார்:

ந ஹ்யேகஸ்மாத் குரோர்–ஜ்ஞாநம் ஸுஸ்திரம் ஸ்யாத்
ஸுபுஷ்களம் |*

'பூர்ணமாகவும், உறுதியாகவும் ஒரே குருவிடமிருந்து ஞானம் ஸம்பாதிக்க முடியாமல் ஆகலாம்' என்று அர்த்தம். இது அவருடைய ஜெனரல் ஸ்டேட்மென்ட் — எல்லாருக்குமாகச் சொன்னது.

* பாகவதம் 11.9.31.

Koviloor Digital Library

இப்படி ச்லோகத்தின் முன்பாதியில் சொல்லிவிட்டு, பின்பாதியில் நம் வேதாந்த மதத்தின் பரந்த, விசாலமான கோட்பாட்டைச் சொல்கிறார்: **"ப்ரஹ்மைதத் அத்விதீயம் வை கீயதே பஹுதர்ஷிபி:."** "இரண்டாவது அற்றதான அந்த ஒரே ப்ரம்மந்தான் அநேக ரிஷிகளாலும் அநேக விதமாகப் பாடப்படுகிறது, அதாவது உபதேசிக்கப்படுகிறது" என்று அர்த்தம். 'ஒரே ஸத்வஸ்து; அதைத்தான் விப்ரர்கள் பலவிதமாகப் பேசுகிறார்கள்' என்ற ப்ரஸித்தமான வேத வாக்யத்தை அநுஸரித்துச் சொன்ன வாக்யம்.

நமக்கு விஷயம், ஒரே குருவால் ஒருத்தனுக்குப் பூர்ண ஞானம் ஏற்படாமற் போகலாம் என்பது. அப்படிச் சொன்னால் வேறே குருமாரிடமும் போகலாம் என்று தானே அர்த்தம்?

நம்முடைய [அத்வைத] ஸம்ப்ரதாயத்தின் ஆதி ப்ரவர்த்தகர்களிலேயே ஒருத்தர் தத்தாத்ரேயர். காமாக்ஷியம்பாள் கோவிலிலிருக்கும் ஆசார்யாள் ஸந்நிதி விமானத்தில், பூர்வாசார்ய பரம்பரையில் வந்த அத்தனை பேருக்கும் பிம்பங்கள் இருக்கின்றன. அதிலே எல்லாருக்கும் மேலே 'டாப்'பிலே — 'தக்ஷிணாமூர்த்தி'யா என்றால் இல்லை. [நம்முடைய குருபரம்பரா] ச்லோகம் **'நாராயணம், பத்மபுவம்'** என்று ஆரம்பிக்கிறதே, அந்த நாராயணரா என்றால் அவரும் கீழ் வரிசைதான். 'டாப்'பில் இருக்கிறவர் தத்தாத்ரேயர்தான்! அவருடைய வாக்கு என்றால் அதற்கு கனம் ஜாஸ்திதான்.

அதைவிடவுங்கூட.... நமக்கு [சிரித்து] சீஃப் ஜஸ்டிஸ் யார்? ஆசார்யாள்தானே? அவர் வாக்கிலேயே பல குருமாரைக் கொண்ட ஒருவரை ச்லாகித்துச் சொல்கிறா ரென்றால் அதற்கு மேல் நமக்கு ஒன்றும் வேண்டாம் தானே? 'அப்படி ஏதாவது இருக்கா?' என்றால் இருக்கு.

Koviloor Digital Library

ப்ருஹதாரண்யகத்தில் ஒவ்வொரு ஸெக்ஷனுக்கும் 'ப்ராஹ்மணம்' என்று பெயர் கொடுத்திருக்கும். 'வம்ச ப்ராஹ்மணம்' என்று [இவ்வுரை] நடுவே சொன்னது ஞாபகமிருக்கலாம். [சிரித்து] மறந்தும் போயிருக்கலாம்!... அப்படி 'ஷடாசார்ய ப்ராஹ்மணம்' என்றே ஒன்று இருக்கிறது[1], அர்த்தம் புரிகிறதா? 'ஆறு ஆசார்யர்களைப் பற்றிய ப்ராஹ்மணம்' என்று அர்த்தம். ஒருத்தருக்கே அப்படி ஆறு ஆசார்யர்கள். அந்த ஒருத்தர் ஸாமான்யமானவர் இல்லை. ராஜரிஷி, ராஜரிஷி என்றே ஸ்தோத்ரிக்கப்படும் ஜனகர்தான் அவர். ஒரு பெரிய ராஜாவுக்குரிய அத்தனை கார்யங்களும் செய்து கொண்டே உள்ளுக்குள்ளே ஸமாதி நிலையிலிருந்தவர் அவர். கர்மயோகிகளுக்கு 'எக்ஸாம்பி'ளாக க்ருஷ்ண பரமாத்மாவே அவரைத்தான் சொல்லியிருக்கிறார்[2].

ஜித்வர், உதங்கர், பர்க்கு என்றிப்படி ஆறு பேர் — அம்மா பேரில் கோத்ரம் பெற்ற ஸத்யகாம ஜாபாலர் கூட அவர்களில் ஒருத்தர்; இப்படி ஆறு[3] ஆசார்ய புருஷர்களிடம் தாம் பெற்ற உபதேசம் பற்றி அந்த ப்ராஹ்மணத்தில் ஜனகர் யாஜ்ஞவல்க்யரிடம் சொல்கிறார். அப்புறம் இப்போது ஏழாவது ஆசார்யராக யாஜ்ஞவல்க்யரிடமும் உபதேசம் கொடுக்கும்படி ப்ரார்த்திக்கிறார்.

அவர் ஏதோ பண்ணப்படாததைப் பண்ணினதாக யாரும் நினைக்கவில்லை. அவர் பண்ணினதை யாஜ்ஞவல்க்யர் ச்லாகித்ததாகவே ஆசார்யாள் பாஷ்யத்தி லிருந்து தெரிகிறது. இங்கேதான் நம்முடைய Chief Justice–ன் ஜட்ஜ்மென்ட் வருவது!

1. ப்ருஹதாரண்யகோபநிஷத்தின் நாலாம் அத்யாயத்தின் முதற் பிரிவு.
2. கீதை 3.20.
3. மீதமுள்ள இருவர் கர்தபீவிபீதரும், விதக்தரும் ஆவர்.

Koviloor Digital Library

யாஜ்ஞவல்க்யர் ஆரம்பிக்கும்போதே ஜனகரிடம், "எவராவது ஒருத்தர் உனக்குச் சொன்னதை நானும் கேட்டுக்கொள்ளவேண்டும்" அதாவது "அதை எனக்குச் சொல்லு" என்கிறார். "உனக்குச் சொன்னது" என்பது ஏதோ ஊர் அக்கப்போரில்லை. முந்தின மந்திரத்தில்தான் அவர், அணு மாதிரி அத்தனை ஸூக்ஷ்மமான ஆத்ம தத்வம் பற்றி விசாரம் பண்ணுவதற்காகத் தாம் வந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்.......

ராஜா [ஜனகர்] கல்மஷமில்லாமல், ஹாஸ்யமும் த்வனிக்க, அவரை வரவேற்கிறபோது, "பசுவா [கோதானமா]? ஸூக்ஷ்ம தத்வ விசாரமா? எதுக்கு வந்திருக்கேள்?" என்று கேட்டார். அதற்கு அவரும் கல்மஷமில்லாமல், அதே ஹாஸ்யபாவத்திலே, "இரண்டுக்காகவுந்தான்" என்று பதில் சொல்லியிருக்கிறார்*. அதனால் அடுத்த மந்த்ரத்திலேயே "எவராவது உனக்குச் சொன்னது" என்று அவர் சொல்கிறது அத்யாத்ம விஷயந்தான். 'எவராவது ஒருத்தர்' என்பதும் அந்த விஷயமாக ஜனகருக்கு உபதேசித்த உத்தமமான ஞானாசார்யர்களில் 'எவராவது ஒருத்தர்' என்றுதான் அர்த்தம் கொடுக்கும். அந்த ஸந்தர்பத்தில் வேறே விதமாக இருக்கமுடியாது.

இங்கே ஆசார்யாள் ஸ்பஷ்டமாகவே, "நீ அநேக ஆசார்யர்களை ஸேவிக்கிறவனாச்சே! அவாள்ள [அவர்களில்] எவராவது ஒருத்தர் சொன்னதை நானும் கேட்டுக்கறேனே!" என்று ஜனகரிடம் யாஜ்ஞவல்க்யர்

* ஸம்பாவனை பெறுவதிலும் தமக்கு நாட்டமுள்ளது என்று ஒளிக்காமல் கூறும் யாஜ்ஞவல்கியரே, பிற்பாடு அவர் ஜனகருக்கு முழுமையாக உபதேசிக்குமுன்னரே ஜனகர் அளிக்க முற்பட்ட ஸம்பாவனையை ஏற்க மறுக்கிறார். (பார்க்க: இவ்வுரையில் 'குருவின் முழுச்சொத்தும் சீடனுக்கு' என்ற பிரிவின் இறுதிப் பகுதி.)

Koviloor Digital Library

சொன்னதாக பாஷ்யம் பண்ணியிருக்கிறார். "அநேகாசார்ய ஸேவி" [பல ஆசார்யர்களை வழிபடுபவர்] என்று பாராட்டு வார்த்தையாகவே போட்டிருக்கிறார். இதிலிருந்து ஆசார்யாள் அபிப்ராயமும் ஒருத்தன் பல குருமாரை ஆச்ரயிக்கலாம் என்பதாகத் தெரிகிறது. அவர் 'அபிப்ராயம்' என்றால் நமக்கு அது 'ஜட்ஜ்மென்ட்'தான்!

பிற்காலத்தில் நம்முடைய அத்வைத ஸம்ப்ரதாயத்தில் ரொம்பவும் பெரியவர்களாக இருந்தவர்கள், உத்தம க்ரந்தங்கள் உபகரித்தவர்களை எடுத்துக்கொண்டாலும், இப்படிப் பல பேருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குரு இருந்திருப்பதாகத் தெரிகிறது.

வித்யாரண்யாளுடைய முக்ய குரு வித்யா தீர்த்தரைப் பற்றிச் சொன்னேன். சங்கரானந்தர் என்பவரையும் அவர் குருவாக ஸ்துதித்திருப்பதையும் சொன்னேன். இந்த சங்கரானந்தரும் வித்யா தீர்த்தரின் சிஷ்யர்தான். இவருக்கும் வித்யாதீர்த்தர் மாத்திரமில்லாமல் அனந்தாத்மர் என்றும் இன்னொரு குரு இருந்திருக்கிறார் என்று அபிப்ராயமிருக்கிறது.

மதுஸூதன ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்று பரம அத்வைதி. அதே ஸமயம் க்ருஷ்ண பரமாத்மாவிடம் பக்தி உள்ளவர். இரண்டையும் இணைத்துக் கொடுத்த பெரியவர். "ஸ்ரீராம–விச்வேச்வர–மாதவாநதாம்" என்று* அவரே [ஸ்ரீராமர், விச்வேச்வரர், மாதவர் என்ற] தம்முடைய மூன்று குருக்களுக்கும் நமஸ்காரம் தெரிவித்திருக்கிறார்.

ராமதீர்த்தர் என்று நம்முடைய [அத்வைத] ஸம்ப்ரதாயப் பெரியவர்களில் ஒருத்தர். அவருக்கு க்ருஷ்ணதீர்த்தர், ஜகந்நாதாச்ரமி, விச்வவேதர் என்று மூன்று குருமார் இருந்திருப்பதாகத் தெரிகிறது.

---

* உதாரணம் 'அத்வைத ஸித்தி'.

Koviloor Digital Library

இப்போது சொன்ன பெரியவர்களுக்கெல்லாம் முந்தி ஆனந்தபோதர் என்று ஒருவர் இருந்தார். அவருக்கு விமுக்தாத்மர், ஆத்மாவாஸர் என்று இரண்டு குருமார் இருந்ததாகத் தெரிகிறது.

ஒருத்தர் முக்யகுரு — மற்றவர் உபகுரு; ஒருவர் ஆச்ரம குரு — மற்றவர் வித்யாகுரு என்றும் இந்தப் பல குருமாரில் இருந்திருக்கலாம்.

எப்படியானாலும் ஒருத்தருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட குரு இருப்பதில் ஒன்றும் தோஷமில்லை என்று ஆகிறது.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை எடுத்துக் கொண்டாலும் ராமாநுஜருக்கே ஆளவந்தார் முக்யகுரு, பெரிய நம்பி, திருக்கச்சி நம்பி, திருக்கோஷ்டியூர் நம்பி ஆகிய மூன்று பேரும் உபகுருக்கள் என்கிறாற்போலச் சொல்கிறார்கள்.....

எங்கேயோ இருந்து எங்கேயோ வந்துவிட்டேன்! எங்கேயானாலும் குரு-சிஷ்ய ஸமாசாரந்தான். அதிலும் முக்யமான ஒரு ஸமாசாரந்தான் என்ற மட்டில் ஸந்தோஷந்தான்.........

அஞ்ஞானத்தால் கண் கட்டப்பட்டு, மாய ப்ரபஞ்சக் காட்டில் விடப்பட்ட ஜீவாத்மா ஒரு முக்ய குரு. பல உபகுருமாரால் ஞானப்பார்வை பெற்று இந்தக் காட்டிலிருந்து 'வீடு' என்றே சொல்லப்படுகிற பெரிய வீட்டுக்கு [மோக்ஷத்திற்கு]த் திரும்புவதாக, இந்த நாளில் 'உருவகக் கதை' என்கிற மாதிரி உபநிஷத்தே கதை சொல்லியிருப்பதைப் பார்த்தோம்.

அந்தக் கதை யாருக்கு உபதேசிக்கப்பட்டதோ அந்த சிஷ்யனே இப்படிப் பல குருமார் படைத்தவன்தான் என்று சொன்னேன்.

Koviloor Digital Library

உத்தாலகர் என்று ஒரு ரிஷி. அருணர் என்பவரின் பிள்ளையானதால் உத்தாலக 'ஆருணி' என்று அவரைச் சொல்வது. அவர் பிள்ளைக்குப் பேர் ச்வேதகேது. உத்தாலகரே நல்ல வித்வானானாலும், பிறத்தியார் கண்டிப்பிலே படித்தால்தான் வித்யையை நன்றாக உள்ளே ஏற்றிக்கொள்ள ஜாஸ்தி இடமுண்டு என்பதால் அவர் பிள்ளையை வேறே குருகுலத்தில் படித்துவிட்டு வருவதற்காக அனுப்பினார். அவனும் அப்படியே போய் குருகுலத்தில் அநேகப் பெரியவர்களிடம் அநேக வித்யைகள் பன்னிரண்டு வருஷம் படித்துவிட்டுத் திரும்பி வந்தான்.

தன்கிட்டேயே படித்தால் அவன் உருப்படியாய் வரமாட்டானென்றுதான் அப்பா வெளியிலே அனுப்பி வைத்தது. ஆனால் அப்படிப் போயும் அவன், 'தானாக்கும் இத்தனை வருஷம் இத்தனை விஷயம் படிச்சிருக்கோம்!' என்ற மண்டை கனத்தோடேயே திரும்பி வந்தான்.

பொதுவாக ஸகல ஜனங்களுமே விநயமாக இருந்த காலம் அது. அதிலும் சின்ன வயஸுக்காரர்கள், சிஷ்யர்கள் ரொம்பவுமே தழைந்து இருப்பார்கள். ஆனால் எந்தக் காலமானாலும் மநுஷ்ய பலஹீனங்கள் எங்கேயாவது கொஞ்சம் தலை தூக்கிக்கொண்டுதான் இருக்கும் போலிருக்கிறது! படிக்கப் படிக்க மேலும் மேலும் 'தான்' [அஹங்காரம்] என்று நாம் பார்க்கிறதற்கு மறுகோடியாக, படிக்கப் படிக்க மேலும் மேலும் அடக்கம் என்பதையே ஸதாவும் குருமார்கள் சிஷ்யர்களிடம் சொல்லிச் சொல்லி அப்படிப் பழக்கிய அந்த நாளிலும் இந்தப் பையன் ச்வேதகேது அதற்கு வித்யாஸமாக, ரொம்பவும் கர்வியாகியிருக்கிறான்....... 'பையன்' என்றால் அவ்வளவு ஸரியோ? என்னமோ? அவனுடைய பன்னிரண்டாம்

Koviloor Digital Library

வயஸில் அப்பாக்காரரர் வேறே குருமாரிடம் படிக்க அவனை அனுப்பினார்; அவன் பன்னிரண்டு வருஷம் அப்படிப் படித்து இருபத்துநாலு வயஸில் திரும்பி வந்தான் என்று இருக்கிறது[1]. அவனைப் 'பைய'னில் சேர்க்கலாமா?...

அவனுடைய மண்டைக் கனத்தை இறக்கி அவனுக்கு புத்தி கற்பிப்பதற்காகவேதான் பிற்பாடு பிதா அந்த கந்தார தேசக் கதை சொல்லும்போது கதாபாத்ர ஜீவன் இவன் மாதிரியே பலபேரிடம் கேட்டு வழி தெரிந்து கொண்டதாகச் சொல்லியிருப்பார் போலிருக்கிறது. இப்படி ஒருத்தன் தெரிந்துகொண்டால் மாத்திரம் போதாது; அதிலே கர்வம் உண்டாகி வீணாயும் போகலாம் என்றே அந்தக் கதையில் சிஷ்யனுக்கு இருக்கவேண்டிய 'பண்டித'த் தன்மை பற்றியும், 'மேதை' பற்றியும் சொல்லியிருக்கலாம். உபதேசத்தை நன்றாக புத்தியில் நிறுத்திக் கொள்வதே 'மேதை'. புத்தி என்றால் மூளை மட்டுமில்லை; ஜீவனை நல்ல முறையில் பக்குவப்படுத்தும் 'நல்லறிவு' என்பது. பண்டிதத்தன்மை என்றாலும் 'ஸ்காலர்ஷிப்' மட்டுமில்லை. "நிற்க அதற்குத் தக" என்று திருவள்ளுவர் சொன்னாற் போல[2] கற்ற வித்யை தன்னுடைய வாழ்க்கையிலேயே, நடத்தையிலேயே ப்ரகாசிக்கும்படி ஒழுகுவது. கர்வத்துக்கு இடம் கொடுத்தால் இந்த இரண்டும் ஸித்திக்கவே ஸித்திக்காது. மூளையோடு நிற்கிற படிப்பு 'மநுஷன்' என்று ஒருத்தனை ஆக்கிவிடமுடியாது, அதாவது குணசாலியாக்க முடியாது. இதற்கு லாயக்கற்ற மூளையைத் தாழப் படுக்கப்போட்டு விநயமாயிருந்தாலே அப்படி ஆக முடியும்.

---

1. சாந்தோக்யோபநிஷத் 6.1.2
2. கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக. (குறள், 391)

Koviloor Digital Library

பின்னால் நாம் பார்க்கிறதிலிருந்து ச்வேதகேதுவுக்கு உசந்த மூளைத் திறமை இருந்தது தெரிகிறது. அதனால் நேராகக் குத்திக்காட்டிச் சொல்லாமல் மறைமுகமாக 'ஹின்ட்' பண்ணினாலே புரிந்துகொண்டு விடக்கூடியவன். நேரே குத்திக்காட்டினால் கோபம் வரலாம்; 'ஹின்ட்' பண்ணினால்தான் எடுத்துக்கொள்ளத் தோன்றும் என்றே அப்பா அப்படி [உருவகக் கதை] சொல்லி, மறைமுகமாக விட்டிருக்கலாம்.

'குருவே என்னவும் பண்ணிக்கட்டும்' என்று தன்னைப் பூர்ணமாக அவரிடம் ஒப்புக்கொடுத்துவிட்டு சரணாகதி செய்ய எல்லாராலும் முடியாதுதான். முடிந்த மட்டும் அதைப் பண்ணி, சிஷ்யனானவன் தானே ஸ்வய முயற்சியும் நிறையப் பண்ணத்தான் வேண்டும். அதனால் தான் கட்டையவிழ்த்துவிட்ட குருவே முழு வழியும் தானே கூட இருந்து அழைத்துப் போனதாகச் சொல்லாமல், அவன் மட்டுமே போனதாகச் சொல்லியிருக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம். ஆனாலும் அவர் சொல்லிக் கொடுத்த வழியில்தான் போனான் என்பது முக்கியம்.

திசை-வழி-காட்டுகிறவர் 'தேசிகர்' என்ற டெஃபனிஷனுக்கு உபநிஷத்தில், திசை திசையாகத் திரும்பி உதவி கேட்டவனுக்கு வழி சொல்லித் தந்தவனைக் காட்டி, அதுதான் ஆசார்யனின் கார்யம் என்று சொல்லியிருப்பது அழுத்தமான சான்றாக இருக்கிறது.

வேதத்தில் 'வழிகாட்டி' குரு

வேதத்திலும் — அதாவது 'வேதம்' என்றே பாடசாலைகளில் சொல்லிக்கொடுக்கும் ஸம்ஹிதை பாகத்திலும் — இந்த 'ஐடியா' இருக்கிறது. அநேக இடங்களில் இருக்கலாமானாலும், குறிப்பாக என் கவனத்திற்கு வந்த ஒன்றைச் சொல்கிறேன்:

Koviloor Digital Library

பொதுவாக இன்னொன்று [வேதத்திலிருந்து வேறொரு சான்று] சொல்வதுண்டு. 'அஸ்ய வாமஸ்ய' என்ற ஸூக்தம்[1] ப்ரஸித்தமானது. நீளமான ஸூக்தம். ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி, பரமாத்ம தத்வம் முதலானவற்றை அறிவாளிகளுக்கும் அநுபவிகளுக்குமே புரிகிற ஸங்கேத பாஷையில் சொல்லும் ஸூக்தம். 'ஏகம்தான் ஸத்வஸ்து; அதைத்தான் ஞானிகள் பலவகையாக, பல தெய்வமாகச் சொல்கிறார்கள்' என்ற மந்த்ரம், முண்டகோபநிஷத்தில்[2] வருகிற ஜீவாத்ம-பரமாத்ம பக்ஷிகளைப் பற்றிய மந்த்ரம், நாத தத்வம் ஸூக்ஷ்ம தத்வத்திலிருந்து நாலு நிலைகளில் மாறி மாறியே [நாலாவதாக] நாம் வாக்கால் உச்சரிக்கும் சப்தமாகிறது என்ற ப்ரஸித்தமான மந்த்ரம், அம்பாள் ஆவாஹனத்தில் சொல்லும் கௌரீ மந்த்ரம் முதலானதெல்லாம் இந்த ஸூக்தத்தில் வருகிறவைதான்[3].

அதிலே ஆரம்ப மந்த்ரம் ஒன்றில்[4], "நான் ஞானமில்லாதவன். ஞானம் படைத்த ரிஷிகளிடம் உபதேசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்" என்று வருகிறது. குருமுகமாகவே கற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்கு சிஷ்ய வாக்காக வருகிற இதையே ச்ருதி ப்ரமாணமாகச் சொல்வார்கள்.

நான் காட்ட வந்த மேற்கோளில் இன்னும் தெளிவாகவே குரு வழிகாட்டித்தான் சிஷ்யன் தெரிந்து கொள்கிறான் என்று வருகிறது.

அது இந்த்ரனைப் பற்றிய ரிக்வேத ஸூக்தங்களில் ஒன்று. ஏழாவது அஷ்டகத்தில் வருகிறது[5]. கவஷர் [Kavasha] என்ற ரிஷி கொடுத்திருக்கும் ஸூக்தம். அதில்,

1. ரிக். முதல் மண்டலம், 164.
2. 3.1.1.
3. முறையே இந்நாலு மந்த்ரங்கள் : 46, 20, 45, 41.
4. ஆறாவது மந்திரம்.
5. அஷ்டகப் பிரிவினைப்படி 7–7–29. மண்டலப் பிரிவினைப்படி 10.32.

Koviloor Digital Library

" 'அக்ஷேத்ரவித்', அதாவது இடம் தெரியாதவன் 'க்ஷேத்ரவித்'திடம், அதாவது இடம் தெரிந்தவனிடம் கேட்டுக் கொள்கிறான். இடம் தெரிந்தவனால் வழி தெரிவிக்கப்பட்டு, அப்படியே போய்ச் சேர்கிறான்" என்று, 'மறை' என்பதற்கேற்க மறைமுகமாகவே, ஆசார்யனிட மிருந்து சிஷ்யன் ஸாதனா மார்க்கம் தெரிந்து கொள்வதைச் சொல்லியிருக்கிறது*. 'ப்ரஹ்மம் என்ற பரம ஸத்யந்தான் போய்ச் சேரவேண்டிய லக்ஷ்யமான இடம். அந்த இடத்தை அறிந்தவன் குரு. அறியாதவன் சிஷ்யன். இவன் அவரிடம் லக்ஷ்யத்தை அடைகிற ஸாதனா மார்க்கத்தை உபதேச க்ரமமாகக் கேட்டுத் தெரிந்துகொண்டு, அங்கே போய்ச் சேருகிறான்' — இதுதான் மந்த்ர தாத்பர்யம். இதை மறைமுகமாகச் சொல்லியிருக்கிறது.

அப்புறம், 'ரொம்ப முக்யமான விஷயத்தை மறைத்துச் சொல்லப்போய் அதை ஒரேயடியாய் மிஸ் பண்ணிவிடப் போகிறார்களே!' என்று கருணைகொண்டு, வெளிப்படையாகவே, "இதுதான் உபதேசத்தின் 'பத்ர'மான — அதாவது, மங்களமான — மஹிமை" என்றும் தெரிவித்திருக்கிறது. 'உபதேசம்' என்பதற்கு இங்கே வருகிற வார்த்தை 'அநுசாஸனம்' என்பது. [அது] இன்றைக்கு வரை பழக்கத்திலுள்ள வார்த்தை.

பீஷ்மர் சரதல்பத்தில் [அம்புப் படுக்கையில்] இருந்து கொண்டு பாண்டவாளுக்கு உபதேசித்த விஷயங்கள் விஸ்தாரமாக இரண்டு பர்வாக்களாக [பர்வங்கள் என்ற பிரிவுகளாக] பாரதத்தில் இருக்கின்றன. அவற்றில் முதலாவது சாந்தி பர்வா. இரண்டாவதற்கு 'அநுசாஸன பர்வா' என்றே பெயர். அதில்தான் 'விஷ்ணு ஸஹஸ்ரநாமம்' கூட வருகிறது. சட்டம் போடுவது, உத்தரவிடுவது,

* ஏழாவது மந்திரம்

Koviloor Digital Library

அட்வைஸ் பண்ணுவது எல்லாமும் 'அநுசாஸன'த்தில் அடங்கும்.

அப்படி குரு கொடுக்கும் உபதேச அநுசாஸனத்தைப் பரம மங்களமானது — பத்ரம் — என்று வேதமே ஸ்தோத்ரிக்கிறது. 'மங்களம்' என்று நாம் சொல்கிற இடங்களில் வேத-இதிஹாஸ புராணங்கள் 'பத்ரம்' என்றே சொல்லும்.

உபதேசம் மங்களமானது என்பது எதனால் என்றும் [இந்த வேத] மந்திரம் தெரிவிக்கிறது. 'ஸ்ருதி' என்கிற நீரோட்டத்தில் எப்படித் தடையில்லாமல் நேராக ஒரு வழியில் போகிறோமோ அப்படி உத்தம லக்ஷ்யத்தில் சேர்க்கும் நேரான மார்க்கத்தை உபதேசத்தால்தான் ஒருத்தன் தெரிந்து கொள்கிறான். அதனால் அது 'பத்ரம்' என்கிறது.

'நேர்' என்பதற்கு இங்கே உள்ள வார்த்தை '**அஞ்ஜஸம்**' என்பது. அதற்கு 'நேர்' என்பதோடு 'நேர்மை' என்றும் அர்த்தம்; [சிரித்து] straight மட்டுமில்லை; straight–forward–ம்!

குருவை 'க்ஷேத்ரஜ்ஞ'னாக

இடம் தெரிந்தவன்-தெரியாதவன் என்று பார்த்தோமே! [முறையே] குருவும், சிஷ்யனுந்தான் அந்த இரண்டு பேர் — அந்த இரண்டிற்கும் இங்கே '**க்ஷேத்ரவித்**', '**அக்ஷேத்ரவித்**' என்ற வார்த்தைகளைப் போட்டிருக்கிறது...... 'போட்டிருக்கிறது' என்றால் ஸூக்த ரிஷி — கவஷர் — யோஜித்து, பொறுக்கி எடுத்தா போட்டார்? இல்லை. ஒரு flash–ல் அகண்ட ஆகாசத்திலிருந்து அந்த சப்தங்கள் அவருக்கு ப்ரத்யக்ஷமாயிற்று. அதாவது ஈச்வர வாக்கே அப்படி வந்திருக்கிறது, அந்த ரிஷி மூலமாக!

Koviloor Digital Library

க்ஷேத்ரம் என்றால் ஊர். அது ஒரு இடந்தானே? கந்தாரம் என்ற ஊருக்கு வழி சொன்னதாகத்தானே உபநிஷத் கதையிலும் பார்த்தோம்? பயிர் விளையும் வயலையும், பக்திப் பயிர் விளையும் புண்ய ஸ்தலங்களையுமே 'க்ஷேத்ரம்' என்று குறிப்பிட்டுச் சொல்வது. வேதாந்தத்திலேயோ 'க்ஷேத்ரம்' என்றால் நம்முடைய சரீரம். உழவன் உழுது பயிர் பண்ணுவதற்கு வயல் என்கிற க்ஷேத்ரம் களமாயிருக்கிற மாதிரி ஜீவன் கர்ம உழவு பண்ண இந்த சரீரம்.

இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரம் இத்யபிதீயதே |

என்று பகவான் கீதையில் சொல்கிறார்*. அந்த அத்யாயத்திற்குப் பேரே 'க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞ விபாக யோகம்' என்பது. 'க்ஷேத்ரத்திற்கும் க்ஷேத்ரஜ்ஞனுக்கும் உள்ள பாகுபாட்டை அறியும் யோகம்' என்று அதற்கு அர்த்தம்.

"அது யார் 'க்ஷேத்ரஜ்ஞன்'?" என்றால், அவன்தான் இந்த ஜட சரீரத்திற்கு உயிரையும் அறிவையும் கொடுத்துக் கொண்டு இருக்கும் ஆத்மா. 'தான் க்ஷேத்ரம்' என்பதும் ஜடமான சரீரத்திற்குத் தெரியாது. அதை அப்படித் தெரிந்துகொண்டவன்தான் சரீரத்திற்கு உடைமைக் காரனான சரீரி என்ற அந்த க்ஷேத்ரஜ்ஞன்: **'ஏதத் யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:'.**

'தெரிந்துகொள்பவன்' என்கிறவனாக க்ஷேத்ரஜ்ஞன் உள்ளபோது ஸ்வச்சமான தன் நிஜ ஸ்வரூபத்தில் அவன் இல்லை; அதாவது ப்ரஹ்மமாக இருக்கவில்லை. மாயா ஸம்பந்தத்துடன்தான் இருக்கிறான். நிஜ ஸ்வரூபத்தில் அவன் தெரிந்துகொள்ளவேண்டியதாக வேறு விஷயமோ, தெரிந்துகொள்ளும் அறிவுமோகூட இருக்காது. தானாக இருக்கிற, தான் மட்டுமே ஒரே ஸத்யமாக இருக்கிற,

* 13.1. அடுத்த மேற்கோள் இச் சுலோகத்தின் பின் பாதி.

Koviloor Digital Library

அறிவாக இருக்கிற நிலை அது. பொதுவாக லோகத்தில் ஜடம், சேதனம் என்று முறையே அறிவற்றதையும் அறிவுள்ளதையும் சொல்கிற வழக்குப்படி, ஜடமான சரீரத்தை க்ஷேத்ரம் என்றும் அதிலே அறிவோடு — புலனறிவோடுதான்; நிஜ ஸ்வரூபத்தை அநுபவத்தால் அறிகிற மெய்யறிவோடு அல்ல; புலனறிவோடு — இருக்கிற ஜீவனை க்ஷேத்ரஜ்ஞன் என்றும் சொல்வது. அறிவேயில்லாத ஜட சரீரத்திலிருந்து பல படி உசந்த புலனறிவோடு கூடிய க்ஷேத்ரஜ்ஞனையே இன்னும் பல படி உசத்தி வைத்து நிஜ ஸ்வரூப மெய்யறிவான அநுபூதி பெற்ற ஞானியாக வேதாந்த சாஸ்த்ரத்தில் சொல்வது. கிருஷ்ண பரமாத்மாவும் அப்படித்தான் சொல்லியிருக்கிறார். இருந்தாலும் நேர் அர்த்தப்படி பார்த்தால், சரீரமும் தெரியாத ஞானியாயில்லாமல், சரீரத்தைத் தனதென்று தெரிந்து கொள்கிற அஞ்ஞானிதான் க்ஷேத்ரஜ்ஞன். இந்த நிலையில்தான் அம்பாளை [க்ஷேத்ரம்-க்ஷேத்ரஜ்ஞன் இரண்டையும் ரக்ஷிக்கும்] **'க்ஷேத்ர–க்ஷேத்ரஜ்ஞ பாலினீ'** என்று ஸஹஸ்ர நாமத்தில் சொல்லியிருப்பது. ஸ்வ-ஸ்வரூபத்தில் உள்ள க்ஷேத்ரஜ்ஞனுக்குப் பாலனமே வேண்டியதில்லை! அம்பாளுக்கும் ஆத்மாவாக இருக்கிறவனவன்! "அத்தனை க்ஷேத்ரங்களிலும் [சரீரங்களிலும்] க்ஷேத்ரஜ்ஞனாக இருப்பது நானே" — **"க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம் வித்தி ஸர்வ க்ஷேத்ரேஷு"*** என்று கிருஷ்ண பரமாத்மா சொல்கிற போது மாயை கலந்த, கலக்காத ஆகிய இரண்டு ஸ்திதிகளிலுமே என்று அர்த்தம் பண்ணிக் கொள்ள இடம் கொடுத்திருக் கிறார். இரண்டு மட்டுமில்லை; மூன்றுகூட! அசட்டு வேஷம் போட்டுக்கொண்டு நாம் ஒவ்வொருவருமாக அவர் இருப்பது ஒன்று; நம்மையெல்லாம் கட்டி ஆளுகிற ஈச்வரனாக த்வைத ப்ரபஞ்சத்தை நடத்திவைப்பது ஒன்று;

* கீதை 13.2

Koviloor Digital Library

த்வைதக் கலப்பற்ற நிர்குண ப்ரஹ்மமாக இருப்பது ஒன்று. மூன்று விதத்திலும் அவர் நம்முடைய சரீரத்தை மூன்று வித்யாஸமான நிலைகளில் அறிகிற க்ஷேத்ரஜ்ஞராக இருக்கிறார். நிர்குணத்தில் அந்த 'அறிகிறது' என்பது கார்யமில்லை. அது க்ஷேத்ரமே இல்லை என்று கண்டு கொள்ளும் அநுபவம்!

'க்ஷேத்ர-ஜ்ஞன்' என்றால் 'க்ஷேத்ரத்தை அறிந்தவன்'. இது தன் சரீரம் என்று அறிந்திருக்கிறவன் கீழ் நிலையில் இருக்கிறான். 'அப்படியில்லை; இந்த சரீரம் வெறும் மாயா கல்பிதமே தவிர, ப்ரஹ்மஸ்வரூபமான தனக்கு ஸம்பந்தப்பட்டதில்லை' என்று அதைப் பற்றிய — அது பொய்யே என்ற உண்மையை — அநுபவத்தில் அறிந்தவன் மேல் நிலை க்ஷேத்ரஜ்ஞன். அவன்தான் நிஜமான க்ஷேத்ரஜ்ஞன். அதாவது க்ஷேத்ரஜ்ஞன் என்றாலும் ஞானி என்றாலும் ஒன்றே. க்ஷேத்ரம் பொய் என்று அறிந்ததோடு ப்ரஹ்மந்தான் மெய் என்றும் அறிந்தவன் அவன்.

இந்த தத்வச் சிக்கலில் இப்போது ஏன் உங்களை இழுத்துவிட்டிருக்கிறேனென்றால், வழியறிந்தவனை வேத மந்த்ரத்தில் என்னவென்று சொல்லியிருப்பதாகச் சொன்னேன்? 'க்ஷேத்ரவித்' என்றுதானே? 'க்ஷேத்ரவித்' என்றாலும் க்ஷேத்ரஜ்ஞன் என்றுதான் அர்த்தம். 'ஜ்ஞ', 'வித்' என்ற இரண்டும் அறிவதையே குறிப்பிடும்.

'ஜ்ஞ'வை இங்கிலீஷில், jna என்றும் gna என்றும் இரண்டுவிதமாக எழுதுகிறார்கள். G–'ஜீ' என்பதோ J-வுக்கான ஜகார சப்தமாகவே இருக்கிறது! Gnosis என்று க்ரீக்கில் இருப்பதை இங்கிலீஷிலும் எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். அதற்கு ஞானம் என்றே அர்த்தம். ஸ்பெல்லிங் படி 'gno' என்றிருந்தாலும் 'g'–ஐ ஸைலன்டாக்கி, உச்சரிப்பில் 'நோஸிஸ்' என்றே சொல்வார்கள். 'நோ' என்றே, know என்கிற இன்னொரு வார்த்தையும் 'அறிவது'

Koviloor Digital Library

என்பதற்கு இருக்கிறது. அங்கேயும் ஸ்பெல்லிங்கில் முதலெழுத்தை ஸைலன்ட் பண்ணிவிடுகிறார்கள். Gnosis–ன் g–ஏதான் இங்கே k ஆவது. ஸம்ஸ்கிருதத்தில் ga–காரமாகச் சொல்லும் அநேக வார்த்தைகளைத் தமிழில் ka–காரமாக்கி விடுகிறோமோல்லியோ, அப்படி! Gandhari–ஐ Kandhari என்பதாகப் பார்த்தோமே, அப்படி!

ஸம்ஸ்க்ருத 'வித்'திலிருந்துதான் wit. நாம் wit, witty என்றால் தமாஷ் என்று மட்டுமே தெரிந்து கொண்டிருக்கிறோம். வாஸ்தவத்தில் wit–கு முக்யமான மீனிங் 'அறிவு' என்பதுதான். 'Outwit பண்ணுவது' என்கிறபோது அந்த அர்த்தத்தில்தானே சொல்கிறோம்?......

க்ஷேத்ரவித் என்று வேதத்தில் வருவது பகவான் கீதையில் சொல்லும் க்ஷேத்ரஜ்ஞன்தான். இப்படித் தெரிந்து கொள்ளும்போது அந்த மந்த்ரத்திற்கு அர்த்தம், "அஞ்ஞானியான சிஷ்யன் ஞானியான குருவிடம் விமோசனத்திற்கு வழி கேட்டுக் கொண்டு, அந்த வழியில் போகிறான். முடிவாக அந்த வழி கொண்டு விடுகிற பரமஸத்யத்தை நோக்கி அவர் உபதேசித்தபடி முன்னேறிப் போகிறான். இதுதான் உபதேசம் என்ற பரம மங்கள விஷயம். ஒரே போக்கில் நேராக ஓடுகிற பிரவாஹத்திலே எதிர்நீச்சுப் போடும் கஷ்டமில்லாமல் ஸௌக்யமாக மிதந்துகொண்டு பிரயாணம் பண்ணுகிறதுபோல அந்த அஞ்ஞானியும் விமோசனத்திற்கு அழகான, நேரான வழி தெரிந்து கொண்டு போய்ச் சேருகிறான்" என்று ஆகும். [சிரித்து] என் 'பாஷ்ய'மும் கொஞ்சம் சேர்த்துச் சொன்னேன்!

உபநிஷத்திலே காட்டு வழி, அப்புறம் க்ராமம் க்ராமமாகப் போகணும் என்றெல்லாம் கொஞ்சம் பயமுறுத்தலாகச் சொல்லியிருக்கிறது! அது ச்ருத்யந்தம்

Koviloor Digital Library

[ச்ருதி எனும் வேதத்தின் முடிவு. வேதத்தில் முடிவான பாகமே உபநிஷத்]. இது ச்ருதியே [முதற் பாகமான ஸம்ஹிதை]. இதிலே பயமுறுத்தாமல், ஆனந்தமான படகுப் பிரயாணமாகச் சொல்லியிருக்கிறது — வாடர்-கரண்ட் போகிறபடியே ஆனந்தமாக மிதந்து கொண்டு போகிறது; [சிரித்து] downstream boating! விசேஷமாக குரு அநுக்ரஹித்தால் இப்படி! கத்தி முனை என்றே இன்னொரு உபநிஷத்[1] ரொம்பவும் பயமுறுத்திச் சொல்லியுள்ள ஸாதனா க்ரமமானது உல்லாஸப் பயணமாக ஆகிவிடுகிறது! அந்தக் கத்தி முனையையே Razor's Edge என்று தலைப்பாகப் போட்டு நம்முடைய வேதாந்தத்தில் ஈடுபாடுள்ள ஒரு பெரிய வெள்ளைக்கார நாவலிஸ்ட்[2] பெரிசாகக் கதை கூட எழுதி ப்ரஸித்தமாயிருக்கிறது.

காட்டு வழி, கத்தி முனை நடப்போ, ஆற்றிலே ஆனந்தமாக boating–ஓ — எதுவானாலும் வழி சொல்லித் தருகிறவர் குரு.

கத்திமுனையைச் சொன்ன இடத்தில் உபநிஷத், அதற்குப் பூர்வாங்கமாக "வரர்களை நாடிப் போய் அவர்களிடமிருந்து அந்த வழியைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்கிறது. வரான் — 'வரர்களை' என்கிறது. 'வரன்' என்றால் என்ன? 'முனிவரர்', 'ரிஷிவரர்' என்று படிக்கிறோமே, என்ன அர்த்தம்? முனிவரில் சிறந்தவர், ரிஷிகளில் சிறந்தவர், best என்று அர்த்தம். அப்படி best ஆஸாமியாக நாம் சொல்வது பெண்ணுக்குப் பார்க்கிற 'வர'னைத்தான்! நிஜத்தில் எத்தனை பிள்ளை யாண்டான்கள் அப்படி இருப்பார்கள் என்பது கேள்வி! மாப்பிள்ளையாக வரிப்பது, ஒரு க்ஷத்ரியப் பெண்

1. கடோபநிஷத் 1.3.14.
2. ஸமர்ஸெட் மாம் என்ற நாவலாசிரியர்

Koviloor Digital Library

'ஸ்வயம்வரம்' என்று தானே பர்த்தாவை வரிக்கிறது ஆகியவற்றில் வருகிற ஆஸாமியானதாலேயே அவன் வரனாக இருக்கிறான்! வ்ரு-வர் என்ற தாதுவிலிருந்து வரும் வார்த்தையே வரிப்பது. தேர்ந்தெடுப்பது என்று அர்த்தம். அப்படிச் சொன்னால், அநேகம் பேர் இருப்பதில் நம்முடைய choice-ஐ select செய்வது. இருக்கிறதற்குள் best-ஐத்தானே choose பண்ணுவார்கள்? Best-ஐ choicest என்றும் சொல்வதுண்டோன்னோ?

உபநிஷத்தில் 'வரர்' என்று மநுஷ்யர்களிலேயே உத்க்ருஷ்ட நிலைக்குப் போன குருமாரைத்தான் சொல்லியிருக்கிறது. 'உத்க்ருஷ்ட' என்பதையே 'ப்ரக்ருஷ்ட' என்றும் சொல்வதுண்டு. ஆசார்யாள் இங்கே அப்படித் தான் பாஷ்யம் பண்ணி, 'வரர்கள்' என்றால் ப்ரக்ருஷ்டமான ஆசார்யர்கள் என்று சொல்லி, அவர்களை **"தத்–வித:"** என்று குறிப்பிட்டிருக்கிறார். **'தத்'** என்ற பரப்ரஹ்மத்தை, **'வித:'** – அறிந்தவர்கள். [சிரித்து] அப்படிப்பட்ட வரர்களை குருவாக 'வரிக்க' வேண்டும் என்று உபநிஷத் சொல்கிறது. "தாயார் மாதிரிப் பரம கருணையோடு இங்கே உபநிஷத் வழி சொல்கிறது" — **"ச்ருதி: அநுகம்பமாஹ மாத்ருவத்"** — என்று ஆசார்யாளும் தாயாராய்க் கருணையோடு சொல்லியிருக்கிறார். கத்தி முனை என்று ப்ரஹ்ம வித்யையைச் சொல்லியிருக்கிறதே என்று பயப்படவேண்டாம்; தாயாரின் அன்பு மாதிரியான குரு ப்ரஸாதம் அதை மழுக்கி மழமழப்பாக்கி விடும் என்கிற மாதிரி சொல்லியிருக்கிறார்!

குரு : முடிவான லக்ஷ்யத்திற்கும் இடைநிலைகளுக்கும்

கடைசிவரைக்கும் வழி சொல்லித் தருகிற குரு மட்டுமில்லாமல் ஒவ்வொரு ஸ்டேஜுக்கு வழி சொல்லித் தருகிற குருக்களும் ஆதியிலிருந்து இருந்திருக்கிறார்கள்.

Koviloor Digital Library

உபநிஷத்தில் அநேக இடங்களில், ஒவ்வொரு குருமாரிடம் ஓரொரு வித்யைகளை மட்டும் கற்றுக் கொண்டு மற்றதற்கு வேறே குருமார்களிடம் சிஷ்யர்கள் போனது தெரிகிறது.

அந்த வித்யை, இந்த வித்யை என்று பலதுக்குப் போகாமல், [ஆத்ம] ஸாக்ஷாத்காரம் ஒன்றே goal என்று பிடித்துக்கொண்டு அதற்கே நேராக வழி பண்ணும் ஒரு ஸாதனா க்ரமம்தான் வேணும் என்று இருந்த சிஷ்யர்களும் உண்டு. அதே மாதிரி, ஸகல வித்யைகளும் அடங்குகிற அந்த ப்ரஹ்ம வித்யையை நேராகத் தாம் ஒருவரே உபதேசித்த குருமார்களும் உண்டு. நம் ஆசார்யாளே அப்படித்தான். பொது லோகத்திற்கு அவர் கர்மாநுஷ்டானம் சொல்லியிருக்கலாம்; பக்தி-ஸ்தோத்ரம், பூஜை இத்யாதி சொல்லியிருக்கலாம். ஆனால் பக்வி [பக்குவம் பெற்றவர்]களுக்கென்று வேதாந்தமாக பாஷ்யங்கள், ப்ரகரணங்கள் பண்ணினபோது முழுக்க ஸாக்ஷாத்காரத்தையே மத்யமாக வைத்துத்தான் — மத்யம், circumference எல்லாமாகவும் வைத்துத்தான் — உபதேசம் பண்ணினார்.

ஒன்று என்ன கவனிக்கணுமென்றால், தன்னளவில் ப்ரஹ்மஞானியாகவே இருந்த குருமார்களும் சிஷ்யர்களின் பக்வம், அவர்கள் உள்ள ஸ்டேஜ் முதலியதைப் பொருத்து, நேரே ப்ரஹ்ம வித்யை உபதேசிக்காமல், அதற்கு உபாங்கம் மாதிரி, முன்னோடி மாதிரி — subsidiary, preliminary, auxiliary, ancillary என்றெல்லாம் சொல்கிறபடி உள்ள இதர வித்யைகளை உபதேசித்திருப்பதும் உண்டு.

இன்னொன்றும்: ப்ரஹ்மஜ்ஞானிகளான குருமார் களுக்கே அத்தனை வித்யைகளும் தெரிந்திருக்க வேண்டு மென்பதில்லை. அத்தனையும் அடங்கும் அகண்ட ஆதார தத்வம் அவர்களுக்குத் தெரியும் என்பதால் அது

Koviloor Digital Library

ஒன்றொன்றும் தனித்தனியாய்த் தெரிந்துதானிருக்கணும் என்று இல்லை. அப்படி உள்ளபோது ப்ரஹ்ம வித்யை உபதேசிக்கும் அவரை முக்ய குருவாகக் கொண்டு, இதர வித்யைகளை மற்றவர்களிடமிருந்து உபதேசம் பெறுவதும் உண்டு.

குரு அறிந்த அனைத்தும் சீடனுக்கு[1]

ப்ரஹ்ம வித்யைக்கே வழியோ, சிஷ்யனின் பக்குவத்தைப் பொறுத்துப் பிற்காலத்தில் அதில் சேர்ப்ப தற்கு ஸஹாயம் செய்கிற மற்ற வித்யைகளுக்கு வழியோ — எதுவானாலும் ஆதியிலிருந்து நம்முடைய ஸநாதன தர்ம ஸம்பிரதாயத்தில் வந்துள்ள எந்த ஒரு குருவும் தமக்குத் தெரிந்ததை, தாம் அறிந்ததை, அநுபவித்ததைக் கொஞ்சங்கூட மிச்சம், மீதியில்லாமல் சிஷ்யனுக்குக் கொடுத்துவிடுவார். உபநிஷத்துக்களில் நாம் பார்க்கும் குருமார்களிடமெல்லாம் இந்தப் பரம ஔதார்ய [வள்ளல்தன்மை] லக்ஷணத்தைப் பார்க்கிறோம். சிஷ்யன் என்று ஒருத்தன் வந்துவிட்டால், அத்தனையையும் வாரி வழங்கியே ஆகவேண்டும் என்று எத்தனை கடமை யுணர்ச்சியுடன் இருந்திருக்கிறார்கள் என்று ஆச்சர்யமா யிருக்கும். அப்படிப்பட்ட ஒரு குருவாகவே இருந்த ஆசார்யாளோ 'அப்படிப் பண்ணத்தானே அவன் ஏற்பட்டிருக்கிறான்?' என்று அந்த ஆச்சர்யத்தையும் ஸஹஜமாகவே, நடைமுறையாகவே எடுத்துக்கொண்டு சொல்லியிருக்கிறார். முண்டகோபநிஷத் பாஷ்யத்திலே[2] பார்த்தால் தெரியும்.

1. இவ்விஷயமாக 'குருவின் முழுச் 'சொத்து'ம் சீடனுக்கு' என்ற பிரிவிலும் காணலாம்.
2. 1.2.13.

Koviloor Digital Library

அந்த உபநிஷத்தில் முதல் ஸெக்ஷன் முடிகிற இடத்தில், நல்ல வைராக்யமுள்ள உத்தமமான ஜீவனானாலும் ப்ரஹ்மஞானம் பெறுவதற்கு குரு என்று ஒருத்தரிடம் பணிவுடன் போயே ஆகவேண்டும் என்று சொல்லிவிட்டு அப்புறம், முறைப்படி தன்னிடம் வந்த அவனுக்கு குருவும் ப்ரஹ்மவித்யையை உள்ளவாறு பூர்ணமாக உபதேசிப்பார் என்று சொல்லியிருக்கிறது. 'ப்ரஹ்மவித்யையை உள்ளவாறு உபதேசித்தார்' என்று மூலத்தில் இருக்கிறது. முன் தொடர்ச்சி பார்த்தால் 'உபதேசிப்பார்' என்றே பொதுவாக அத்தனை ஆசார்யர்களுக்கும் லக்ஷணமாக அர்த்தம் பண்ணிக்கணும் என்று புரியும். ஆசார்யாளோ, 'உபதேசிக்க **வேண்டும்**' என்றே குருவின் தீர்மானமான கடமையாக, ரூலாக, விதித்து பாஷ்யம் பண்ணியிருக்கிறார் — **'ப்ரோவாச'** என்று மூலத்தில் இருப்பதற்கு **'ப்ரப்ரூயாத்'** என்று அர்த்தம் பண்ணியிருக்கிறார்.

'உள்ளவாறு' உபதேசிப்பது என்றால் என்ன? 'தத்வத்தை எதுவும் குறைக்காமல் பூர்ணமாக உபதேசிப்பது' என்று அர்த்தம். இதை **'யதாவத்'** என்ற சின்ன வார்த்தையால் ஆசார்யாள் தெரிவிக்கிறார். 'முறைப்படி', 'நேர்மையாக', 'விதிவழி' என்று இத்தனை அர்த்தமும் அதற்கு உண்டு. குறைக்கவும் கூடாது; ஸொந்தச் சரக்கு, ஸொந்த அபிப்ராயம் சேர்க்கவும் கூடாது. ஸம்ப்ரதாய பூர்வமாக ப்ரஹ்ம வித்யா சாஸ்த்ரம் எப்படி வந்திருக்கிறதோ அப்படியே பூர்ண ரூபத்தில் ரக்ஷித்துக் கொடுக்க வேண்டும்.

இப்படிச் சொல்கிற இடத்தில்தான் குருவின் கடமையை ஆசார்யாள் எடுத்துச் சொல்லி முடித்திருக்கிறார். 'ஆசார்யஸ்ய நியமம்' என்று அவர் சொல்கிறார். 'நியமம்' என்பதற்கு இங்கே 'கடமை' என்றே

Koviloor Digital Library

அர்த்தம். யதி நியமம், ப்ரஹ்மசாரி நியமம், க்ருஹஸ்த நியமம் என்றெல்லாம் சொல்லும்போது நியமம் என்றால் அவரவருக்கான ரூல், சட்டம் என்று அர்த்தம். அந்தச் சட்டப்படியே பண்ண வேண்டுமென்பதால் அதுவே கடமையாகிறது. ஸந்த்யாவந்தனம் பண்ணுவது ப்ரஹ்ம சாரிக்கான நியமம் என்றால் அதுவே அவன் கடமையுந்தான் என்று ஆகிறதோல்லியோ? கடமை களையே நியமம் என்று சாஸ்த்ரபூர்வமாக வகுத்துக் கொடுத்தார்கள். 'கட்டுப்பாடு' என்பது அதன் நேர் அர்த்தம். ரூல், 'இப்படிப் பண்ணு, இப்படிப் பண்ணாதே' என்று கட்டுப்படுத்துகிறது. கடமையும் அப்படித்தான். 'கடமையிலிருந்து மீறக்கூடாது' என்கிறோம். 'மீறுவது' என்றதால் 'கட்டுக்கு அடங்கி இருக்க வேண்டும்' என்பது தொக்கி நிற்கிறது.

ஆசார்யாள் விதிக்கும் ஆசாரியக் கடமை

ஸரி, ஆசார்யாள் ஒரு ஆசார்யனுக்குச் சொல்லியுள்ள அந்த நியமம் என்ன?

'அதுதான் சொன்னீர்களே, 'யதாவத் வித்யை கற்பிக்கணும்' என்று!' என்று கேட்கலாம். அப்படிக் கற்பிப்பது, பாடம் சொல்லிக்கொடுப்பது உபாயந்தான், means–தான். தற்கால ஆசிரியர்களின் கடமை அப்படித் தான் பாடம் சொல்லிக் கொடுப்பதோடு முடிந்து விடுவதாக அமைந்து விட்டது. ஆனால் அதல்ல நிஜமான ஆசார்யனின் கடமை. கற்றுக்கொண்ட பாடத்தின் ப்ரயோஜனத்தை மாணவன் தன்னுடைய வாழ்க்கையில் ப்ரத்யக்ஷமாகக் காணும்படிச் செய்வதே நிஜ ஆசார்யனின் கடமையாகப் பூர்வ காலங்களில் கருதப்பட்டது. கற்ற வித்யையால் மாணவன் சொந்த வாழ்க்கையில் ப்ரயோஜனம் அடைய வேண்டும். அதுதான் லக்ஷ்யம், end.

Koviloor Digital Library

இப்படி ஒரு குரு யதாவத்தாக ப்ரஹ்ம வித்யை போதிக்கிறாரென்றால் அது சிஷ்யனை ஸம்ஸார ஸாகரத்திலிருந்து கரையேற்றுகிற லக்ஷ்யத்திற்கு உபாயமாகச் செய்யப்படுவதே. அவருடைய லக்ஷ்யம் அவனைக் கரை ஏற்றுவது. அது 'உபேயம்'. அதற்கு வழியான 'உபாயம்' கற்றுக்கொடுப்பது. இந்த உபாயத்தால் சிஷ்யன் லக்ஷ்யத்தை அடைந்தேவிடுமாறு குரு பண்ணுவதைத்தான் அவரது கடமையாக இங்கே ஆசார்யாள் சொல்கிறார்.

ஸத்குருவும் – ஸச்சிஷ்யனும்

ஸத்குரு என்கிறாற்போலவே ஸச்சிஷ்யன் என்றும் உண்டு. ப்ரஹ்மவித்யா உபதேசம் தந்து, உபதேச பலனை சிஷ்யன் அநுபவிக்குமாறும் பண்ணுபவரே ஸத்குரு. அதேபோல நல்ல குணம், குறிப்பாகப் பணிவு, தீக்ஷண்ய புத்தி, 'ஜிஞ்ஜாஸா' என்ற உண்மையான ஞான தாஹம் எல்லாம் உள்ளவனே ஸச்சிஷ்யன். சாஸ்த்ர-ஸம்பிரதாய வழிமுறைப்படியே போகவேண்டும் என்று இருப்பவன் அவன். இங்கே ஆசார்யாள் அப்படிப்பட்ட சிஷ்யனை ஸம்ஸார ஸாகரத்திலிருந்து காப்பாற்றிக் கரைசேர்க்க வேண்டியது ஆசார்யனின் கடமை என்கிறார். 'ந்யாய–ப்ராப்த ஸச்சிஷ்யன்' என்று சொல்கிறார். அப்படியென்றால், எப்படி சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறதோ அந்த முறைப்படி குருவை வந்தடைகிற உத்தம சிஷ்யன். அவனை அவர் 'அவித்யா மஹோததி'யிலிருந்து 'நிஸ்தாரணம்' பண்ண வேண்டியது அவருக்கான 'நியமம்' என்கிறார். 'அவித்யா மஹோததி' என்றால் 'அஞ்ஞானப் பெருங்கடல்'; 'பொய்ம் மாயப் பெருங்கடல்' என்று அப்பர் ஸ்வாமிகள் சொன்னது*. அதையேதான் ஸம்ஸார ஸாகரம் என்பதும். அதிலிருந்து 'நிஸ்தாரணம்' என்றால், பொது அர்த்தம், 'காப்பாற்றுவது'. ஸாகரத்தைச் சொல்லி

* 'திருவாரூர் திருத்தாண்டக'த் தொடக்கம்.

Koviloor Digital Library

யிருப்பதை வைத்து 'அனலைஸ்' பண்ணி அர்த்தம் சொன்னால் 'அக்கரை சேர்ப்பிப்பது', 'கரையேற்றுவது', 'கடைத்தேற்றுவது' என்று அர்த்தம். 'தார' சப்தத்திற்கு அக்கரை சேர்க்கிறதே அர்த்தம். 'நிஸ்தாரம்' — அந்த கார்யத்தைப் பரிபூர்த்தியாக [முற்றிலும் முழுமையாக]ச் செய்வது. அதாவது 'முக்தி அளிப்பது' என்றே அர்த்தம். அந்த மஹா பெரிய அநுக்ரஹத்தை — ஜீவனாகப் பிறப்பெடுத்த ஒருவன் எதற்கு மேலே ஒன்றைப் பெற முடியாதோ அதை அளிக்கிற அநுக்ரஹத்தை — ஆசார்ய நியமமாக ஆசார்யாள் தெரிவித்திருக்கிறார். சிற்றுயிராக வந்த சிஷ்யனைப் பேருயிராகவே ஆக்குகிற பரமாநுக்ரஹக் கடமை!

'கல்வியினூங்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை' என்று கேள்விப்பட்டிருக்கலாம். பொதுவிலே ஜனங்களுக்கு லோக வாழ்க்கையை நல்ல அறிவோடும் ஒழுக்கத்தோடும் வாழ்வதற்கு வழி கற்பித்த முற்காலக் கல்வி பற்றியே இப்படிச் சொன்னது. அறிவை வளர்ப்பதே முக்யமானாலும் பக்தி, ஞானம், கடமை, மற்ற நல்லொழுக்கங்கள் எல்லாமும் நிறையச் சொல்லிக் கொடுக்கும் கல்வி முறை அது. அப்படிப்பட்ட கல்வி இந்த லோக வாழ்க்கையில் சிற்றுயிர் தன்னுடைய சிறுமை நீங்கிப் பெருமைப்படும்படி வாழ ஸஹாயம் செய்ததாலேயே அதைச் 'சிற்றுயிர்க்குற்ற துணை' என்றது. ப்ரஹ்ம வித்யையோ லோக வாழ்க்கையையே ஸமாப்தி பண்ணிச் சிற்றுயிரைப் பேருயிராக ஆக்கிவிடுவது. அதை ஸாதிக்க வழி சொல்லி, முன் நடத்திப்போகிற ஸத்குரு எத்தனை பெரிய துணையாயிருக்கவேண்டும்?

குருவின் முழுச் 'சொத்து'ம் சீடனுக்கு

'யதாவத்' சொல்லிக்கொடுப்பது என்பது பற்றிக் கொஞ்சம் விஸ்தாரம் பண்ணணும். அப்பா முழு

Koviloor Digital Library

ஸொத்தையும் பிள்ளைக்கு எழுதி வைக்கிற மாதிரி ஆசார்யன் தனக்குத் தெரிந்த வித்யை முழுதையும் சிஷ்யனுக்குச் சொல்லிக் கொடுப்பதுதான் இந்த 'யதாவத்'. இரண்டு பிள்ளை இருந்துவிட்டால் அப்பா ஒவ்வொருத் தனுக்கும் முழு ஸொத்து எழுதி வைக்க முடியாது. ஆனால் குருவோ எத்தனை சிஷ்யாள் இருந்தாலும் ஒவ்வொருத் தனுக்கும் பூர்ணமாக வித்யாப்யாஸம் பண்ணுவிக்க முடியும். இது வித்யையின், அறிவின் விசேஷம். எத்தனை பங்கு போட்டாலும் குறையாத ஸ்ரீ அது.

சிஷ்யனிடம் பரம ப்ரேமையும், அவனுக்கு வழிகாட்டணும் என்பதில் முழு ஈடுபாடும், தனக்குத் தெரிந்த வித்யை தன்னோடு போகாமல் நாலு பேரிடம் பிரகாசிக்கவேண்டும் என்பதாக அந்த வித்யையிடமே பக்தி-ப்ரேமைகளும் இருந்தாலொழிய இப்படிப் பூர்ணமாகக் கற்றுக்கொடுக்க முடியாது. இக் காலத்தில் அபூர்வமாகத்தான் அப்படிப் பார்க்க முடிகிறது. அடியோடு இல்லாமல் போய்விடவில்லை என்று இன்றைக்குப் பல துறைகளில் பெரியவர்களாக இருக்கப் பட்டவர்கள் தங்கள் ஆசிரியர்மார்களைப் பற்றிச் சொல்வதிலிருந்து தெரிகிறது, என்னிடம் பல இள வயஸுக்காரர்கள் 'தீஸிஸ்' கொண்டு வந்து கொடுக் கிறார்கள்; அவர்கள் சொல்வதிலிருந்து தற்காலத்திலும் அப்படிப் பூர்ணமாக அநேக ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதாகத் தெரிகிறது. ஆனாலும் நேர்மாறாக, 'கம்ப்ளெய்ன்ட்'களும் கேட்கிறேன்!

ஆனால் உபநிஷத்துக்களைப் பார்த்தால், ஏதோ ரொம்ப ஸ்வல்பமான விலக்குத் தவிர அக் காலத்தில் அத்தனை ஆசார்யர்களுமே தாங்கள் கற்றறிந்த வித்யையைப் பூர்ணமாக சிஷ்யர்களுக்கு உபதேசித்தார்கள் என்று தெரிகிறது.

Koviloor Digital Library

அத்தனை கர்வியாக இருந்த ச்வேதகேதுவே அப்பாக்காரர் கேட்ட ஸமாசாரம் தனக்குத் தெரியவில்லை என்கிறபோது, தன்னுடைய குருமார் அதை உபதேசிக்க வில்லை என்று சொல்லி, கூடவே, "அவாளுக்கும் விஷயம் தெரியாது போலேயிருக்கு, தெரிஞ்சிருந்தா எனக்கு ஏன் சொல்லித்தராம இருந்திருக்கப் போறா?" என்று சொல்கிறான். அதொன்றே போதும். அந்த ஸந்தர்பத்தில், அப்படிப்பட்ட ஒரு பாத்திரம் இப்படி ஒன்று சொன்னது விசேஷம்.

'ப்ரச்நோபநிஷத்'திலிருந்து கொஞ்சம் முன்னே சொன்னேன். அதன் முடிவிலே சிஷ்யர்கள் ஆசார்யரைப் பார்த்து, "அவித்யையின் அக்கரையில் எங்களைச் சேர்த்த நீங்கள்–னா எங்க அப்பா!" என்று வருவதாகச் சொன்னேன்; ஆரம்பத்தை இப்போது சொல்கிறேன்.

ஆறு பேர் சிஷ்யர்களாகப் புறப்படுகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தாங்களே குருஸ்தானம் வஹிக்கும் யோக்யதை பெற்றவர்கள் — ஸுகேசர், ஸத்யகாமர், கார்க்யர், கௌஸல்யர், பார்கவர், கபந்தி என்றிப்படி ஆறு பேர். அவர்களுக்கும் ப்ரஹ்ம வித்யையில் இன்னும் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் இருந்தன. தெரிந்து கொள்ளணும் என்று ஆசைப் பட்டார்கள். அதற்காக ஆறு பேரும் '**பகவந்தர்**' என்று உபநிஷத் சிறப்பித்துச் சொல்லும் மஹர்ஷி பிப்பலாதரை ஆசார்யராக வரித்து, உபஹாரமாக — அதாவது, குரு காணிக்கையாக — ஸமித்தை எடுத்துக் கொண்டு அவரிடம் போனார்கள். ஸமித்து என்றால் வெறும் சுள்ளிதான். ஹோமத்திலே போட உபயோகமாகிற சுள்ளி. 'வெறும்' சுள்ளி என்று நான் சொன்னதையே பெரிய தக்ஷிணையாக அந்தக் கால ரிஷி-குருமார் நினைத்தார்கள். அத்தனை எளிமை! அதிலேயே வஸ்துவைவிட வஸ்துவைத் தருகிறவரின் மனோபாவத்தை மதிக்கத் தெரிந்த பண்பும்!

Koviloor Digital Library

இது யோக்யதையுள்ள சிஷ்யர்களென்றால் தக்ஷிணையைப் பொருட்படுத்தாமல் வித்யை போதிக்கிறதைக் காட்டுகிறது. இதன் தொடர்ச்சியாகவே இன்னொன்றும். அதாவது யோக்யதை போதாதவன் என்றால் அவன் எத்தனை பெரிசான தக்ஷிணை கொடுக்கிறானென்றாலும் அவனை சிஷ்யனாக எடுத்துக் கொள்வதில்லை என்றே அந்த குருமார்கள் இருந்திருக்கிறார்கள். 'ஸமுத்ரம் சூழ்ந்த பூமி பூராவையும் தக்ஷிணையாகத் தரக் கூடியவனாயிருந்தாலும் யோக்யதை போதாதவன் என்றால் அவனுக்கு உபதேசிக்கப்படாது' என்றே மதுவித்யை உபதேசிக்கும் ரிஷி சொல்லியிருக்கிறார்*. ஆசார்யாளும் இதை நினைப்பில் கொண்டு தம்முடைய 'உபதேச ஸாஹஸ்ரீ' ஆரம்பத்தில் 'ஸமுத்ரம் சூழ்ந்த லோகம் பூராவையும், அதிலுள்ள பூர்ணமான செல்வங்களோடு குருவுக்குத் தந்தாலும் அவர் தருகிற உபதேசமோ அதற்கும் பெரிதானது என்று சாஸ்திரம் சொல்கிறது' என்கிறார். இந்த விஷயம் இருக்கட்டும்.

ஸுகேசர் முதலான ஆறு பேர் ஸமித்தை எடுத்துக் கொண்டு பிப்பலாதரிடம் போனார்கள். பெரியவர்களாக இருக்கப்பட்ட ஆறு பேர் தங்களுடைய வித்யா ஞானம் பூர்த்தியாகவில்லை என்று ஒருத்தருக்கொருத்தர் மனஸ்விட்டுச் சொல்லிக் கொண்டு சிஷ்யர்களாகப் புறப்பட்டார்கள் என்பதிலிருந்து அவர்களுடைய விநய மனப்பான்மையும் வித்யா தாஹமும் தெரிகிறது. **'வித்யா–விநய ஸம்பன்ன'** என்று சேர்த்துச் சேர்த்தே நம்முடைய மரபில் சொன்னது நடைமுறையிலேயே நடந்த ஸமாசாரந்தான் என்று தெரிகிறது. அது இருக்கட்டும்.

பிப்பலாதருக்கு ப்ரஹ்மவித்யை பூர்த்தியாகத் தெரியும் என்று இவர்களுக்குத் தெரிந்ததாலேயே அவரிடம்

* சாந்தோக்யோபநிஷத் 3.11.6

Koviloor Digital Library

உபதேசம் பெறுவதற்குப் புறப்பட்டது. அப்போது இவர்கள், அவர் பூர்த்தியாக அறிந்ததைத் தங்களுக்கும் பூர்த்தியாகச் சொல்லிக் கொடுப்பார் என்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டே புறப்பட்டதாக வருகிறது. "தத் என்கிற ப்ரஹ்மத்தைப் பற்றி ஸர்வமும் அவர் நமக்குச் சொல்லுவார்" என்று அவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள்.

அப்படியே அவரிடம் போக, அவர், "இன்னும் ஒரு வருஷம் கட்டுப்பாட்டோடு தபஸ் பண்ணிக்கொண்டு முறைப்படி ச்ரத்தையோடு இங்கே இருங்கோ! அப்புறம் கேட்கவேண்டியதையெல்லாம் உங்கள் இஷ்டம்போல கேட்டுக்கோங்கோ. நீங்கள் கேட்பது எனக்குத் **தெரிஞ்சிருந்தால் தெரிஞ்சமட்டில் முழுக்க — ஸர்வமும் — சொல்லித் தரேன்"** என்கிறார்.

ஒரு குருவானவர் தாம் அறிந்த ஸர்வமும் சிஷ்யனுக்கு போதிக்காமல் விடமாட்டார் என்பதற்கே இதைச் சொல்லவந்தேன்.

ரொம்ப அழுத்தமாக ஒன்று ஞாபகம் வருகிறது. ஜனகருக்கு யாஜ்ஞவல்க்யர் அநேக உபதேசங்கள் கொடுத்துக் கொண்டு போகிறார்*. ஒவ்வொரு உபதேசத்தையும் கேட்டவுடன் ஜனகருக்கு ஸந்தோஷம் பொங்கிக் கொண்டு வருகிறது; 'இதோ ஆயிரம் பசு, ஆனை மாதிரி காளையோடுகூடத் தருகிறேன்" என்கிறார். ஆனால் யாஜ்ஞவல்க்யர், "பூர்த்தியாக உபதேசம் கொடுக்காமல் தக்ஷிணை வாங்கிக் கொள்ளக்கூடாதென்று என் அப்பா தீர்மானம்" என்று பிதாவுக்குப் பெருமை கொடுத்துச் சொல்லி, தேடி வருகிற ஸம்பாவனையை நிராகரிக்கிறார். சிஷ்யன் என்ன தக்ஷிணை தருகிறான் என்பதைவிட தாம் முழுக்கச் சொல்லிக் கொடுக்கணும் என்பதைத்தான் குரு முக்யமாக நினைத்தார் என்று இங்கே தெரிகிறது.

* ப்ருஹதாரண்யகோபநிஷத் – நாலாம் அத்யாயம் – முதற் பிரிவு.

Koviloor Digital Library

குரு–சிஷ்யர் பற்றி மேலும் படிப்பினைகள்

ப்ரச்னோபநிஷத் கதையில், பூராவும் உபதேசிப்பது பற்றிச் சொல்லுமிடத்திலேயே குரு லக்ஷணம், சிஷ்ய லக்ஷணம் குறித்து இன்னும் அநேக விஷயங்களும் வந்து விடுகின்றன.

முதலாவதாக "இன்னும் ஒரு வருஷம் நியமம் காக்கணும்" என்று தம்மிடம் வந்திருக்கும் அந்த ஆறு பேரிடம் ரிஷி சொல்வதால் அவர்கள் ஏற்கெனவே நல்ல அநுஷ்டாதாக்கள் என்று அவருக்குத் தெரியுமென்று தெரிகிறது. இருந்தும் அவர்களை மேலும் ஒரு வருஷம் தபஸூம், சிஷ்யர்களுக்கான இதரக் கட்டுப்பாடுகளும் அநுஷ்டிக்கச் சொல்கிறார். ஏன்? தம் கூடவே வஸித்து அவர்கள் தங்கள் யோக்யதாம்சத்தை 'ப்ரூவ்' பண்ணிக் காட்டவேண்டும்; அது ப்ரத்யக்ஷமாகத் தமக்கு உறுதிப்பட வேண்டும் என்பதற்காக அப்படிச் சொல்லியிருக்கலாம். இங்கே நல்ல யோக்யதை நிரூபணமானவருக்கே உசந்த ஆத்ம தத்வங்களை உபதேசிக்க வேண்டும் என்பதற்குச் சான்று கிடைக்கிறது. இன்னொரு காரணம் என்னவாயிருக்கலாமென்றால், ஏற்கெனவே அநேகம் கற்றுத் தெரிந்து கொண்டவர்களான அவர்களுக்குக் கொஞ்சம் 'தான்' உண்டாகியிருக்க இடமுண்டு. அப்படி இல்லாவிட்டால்தான் புது உபதேசம் உள்ளே இறங்கும், டெஸ்ட் பண்ணி இதைத் தெரிந்துகொள்ளவே, "இன்னும் ஒரு வருஷம் தபஸ் இத்யாதி" என்று சொல்லியிருக்கலாம். குரு என்ன கட்டளையிட்டாலும் கீழ்ப்படிய வேண்டியது சிஷ்யலக்ஷணமானதால் அந்த லக்ஷணம் அவர்களுக்கு இருக்கிறதா என்று பார்ப்பதற்கு இப்படிப் பரீக்ஷை வைத்திருக்கலாம். 'தான்' என்கிறது அவர்களுக்கு உள்ளே கொஞ்சமோ நஞ்சமோ இறங்கியிருந்தாலும் இந்த தபஸ்சர்யம் அதைப் போக்கடித்து சுத்தி பண்ணும் என்பதாலும் இருக்கலாம்.

Koviloor Digital Library

அந்தக் காரணம் அல்லது இந்தக் காரணம் என்றில்லாமல் எல்லாக் காரணத்திற்காகவுமே அப்படிச் சொல்லியிருக்கலாம்.

இதில் சிஷ்ய லக்ஷணங்கள் அநேகம் தெரிந்து விடுகின்றன. "என்கூட முறைப்படி ஒரு வருஷம் இருங்கோ — ஸம்வத்ஸ்யத'' என்று ரிஷி சொல்கிற இடத்தில் 'முறைப்படி' என்பதற்கு ஆசார்யாள் 'ஸம்யக் குரு சுச்ரூஷா பரா:' என்று பாஷ்யம் செய்திருக்கிறார். 'ஸம்யக்' என்றால் ஸரியானது, பூர்ணமாக இருப்பது என்று அர்த்தம். இங்கே அர்த்தம்: பூர்ணமாக, முற்றிலும். 'குரு சுச்ரூஷாபரா:' என்றால் குருவுக்கு சுச்ரூஷை செய்வதே எல்லாவற்றுக்கும் மேலே என்று total dedication–ஓடு இருப்பது. ஒரேயடியாக த்யானம் என்று பிடித்துக் கொண்டு அதிலேயே முழுகிப் போனவர்களை 'த்யானபரர்' என்கிறது போல, சிஷ்யர்களை 'குரு சுச்ரூஷா பரர்'களாக இங்கே ஆசார்யாள் நமக்குத் தெரிவிக்கிறார். அந்த அபிப்ராயத்திற்கு மேலும் கனம் சேர்ப்பதற்காக முதலில் 'ஸம்யக்' வேறு போட்டிருக்கிறார்!

தபஸ், ப்ரஹ்மசர்யம், ச்ரத்தை என்ற மூன்றோடும் இருக்கும்படி அவர்களிடம் ரிஷி சொல்வதால் இந்த மூன்றும் சிஷ்ய லக்ஷணங்கள் என்று தெரிகின்றன. தபஸ் என்றால் சரீர ச்ரமம் முதலியவற்றைப் பாராட்டாமல் ஒரே குறியாக ஒரு லக்ஷ்யத்தில் ஈடுபட்டிருப்பது. ச்ரத்தை என்றால் நம்பிக்கை — சாஸ்த்ரம் சொல்வதும் குரு சொல்வதுமே பரம ஸத்யம், அதுவே நமக்கு நல்லது என்று பாறாங்கல் மாதிரியான த்ருட நம்பிக்கை. 'ஆஸ்திக்ய புத்தி' என்றே ஆசார்யாள் ச்ரத்தைக்கு அர்த்தம் பண்ணுவது வழக்கம்.

இப்படியெல்லாம் குரு சொல்லி ஒருத்தன் ஒழுகு கிறானென்றால் அவனிடம் சிஷ்யனின் ப்ரதமலக்ஷணமான விநயம் — அடக்கம், பணிவு — இருந்தால்தான் முடியும்.

Koviloor Digital Library

'சிஷ்ய' விளக்கம்

சிஷ்யனுக்கு ப்ரதம லக்ஷணம் விநயம் என்றால் அவனுடைய மற்ற லக்ஷணங்கள் என்ன? 'குரு', 'ஆசார்யன்' முதலான வார்த்தைகளுக்கு அர்த்தம் பார்த்தாற்போல் 'சிஷ்யன்' என்பதற்கு அர்த்தம் என்ன? — என்று பார்த்தால் பெரியவர்கள் மூன்று விதமாக டிஃபைன் பண்ணியிருக்கிறார்கள். 'சிக்ஷை' என்றால் 'கற்றுக்கொடுப்பது' என்பது தெரிந்ததுதானே? [சிரித்து] இந்த நாளில் தெரியாமலுமிருக்கலாம்! சிக்ஷை என்றால் 'ட்யூஷன்'. எவன் 'சிக்ஷை' பெறுகிறானோ அவன் 'சிஷ்யன்'. 'சிக்ஷயன்' என்பதே 'சிஷ்யன்' என்றாயிருக்கிறது. 'சிக்ஷ்'தான் வேர்ச்சொல். அதற்குப் படிப்பது, அறிவு ஸம்பாதித்துக்கொள்வது என்று அர்த்தம். அப்படிப் பண்ணுபவன் சிஷ்யன். இது ஒரு அர்த்தம்.

இன்னொன்று: 'சிஷ்' என்ற வேர்ச் சொல்லின் அடியாக 'சேஷம்' என்று வார்த்தை இருக்கிறது. மீந்து போனதை 'சேஷம்' என்கிறோம். 'மிகுந்து' என்பதுதான் 'மீந்து' என்று ஆனது. தமிழில் 'மிக்கார்', 'மிக்கார்' என்று புலவர்கள் சொல்வது எவர்களை? ஸாதாரணமான லோக ஜனங்களின் லெவலில் இல்லாமல் அதிலிருந்து 'மிகுந்து', 'மீந்து', 'சேஷ்'மாகி உயர்ந்த லெவலில் இருக்கிறவர்கள் தானே? 'சேஷர்' என்று அவர்களைச் சொல்லலாம். 'சிஷ்டர்' என்று சொல்கிறோமே, அது இதே வேர்ச் சொல்லை வைத்துத்தான். 'சேஷம்', 'மீந்துபோனது' என்னும்போது ஒரு வஸ்துவுக்கு உயர்வு தெரியா விட்டாலும், அதற்கு முன்னே 'வி' சேர்த்து 'விசேஷம்' என்றால் ரொம்ப உயர்வு, ரொம்பச் சிறப்பு என்றுதானே எடுத்துக்கொள்கிறோம்?

'வி' என்ற முன்னடைக்கு எதிரர்த்தம் தருவது, இருக்கிற அர்த்தத்திற்கு ஏற்றம் கொடுப்பது என்று இரண்டு

Koviloor Digital Library

குணமுண்டு. இங்கே 'சேஷ'த்திற்கு ஏற்றம் கொடுத்தே 'விசேஷம்'.

இப்படி, சிறப்பு இல்லாமல் ஸாதாரணப் பேர்வழி யாயிருந்த ஒருவன் குருவின் சிக்ஷயால் 'சேஷ'னாக, சிஷ்டனாக உருவெடுக்கும்போதே 'சிஷ்யன்' என்று சொல்லப்படுகிறான் — இது இரண்டாவது அர்த்தம்.

'சிக்ஷ' என்று தண்டிப்பதையும் சொல்வது. 'ராஜ தண்டனை' என்பதை 'ராஜ சிக்ஷ' என்பார்கள். ராஜா ரக்ஷ, சிக்ஷ இரண்டும் தரவேண்டும் என்று சாஸ்திரம். அந்த மாதிரி தன்னுடைய இந்த்ரியங்கள் கண்டபடி போகாமல் சிக்ஷித்துக் கொள்கிறவனே 'சிஷ்யன்' என்று மூன்றாவது அர்த்தம்.

இந்த்ரியத்தை அடக்குவது ஒரு [சிஷ்ய] லக்ஷண மென்றால் 'அடக்கமாயிருக்கான்' என்கிறோமே, அப்படி humble–ஆக, 'விநய'மாக இருக்க வேண்டியது அவனுடைய இன்னொரு லக்ஷணம். அதனால்தான் சிஷ்யனுக்கு 'விநீதன்' என்றே இன்னொரு பெயர்.

குருவோடு கூடவே வஸிப்பவன் என்பதால் 'அந்தேவாஸி' என்றும் அவனுக்கு இன்னொரு பெயர். அப்பா, அம்மாவோடு வீட்டிலில்லாமல் குருகுல வாஸத்தில்தானே முற்கால சிஷ்யர்கள் படித்தது? அதனால் அதற்கு முக்யத்வம் தந்து இந்த 'அந்தேவாஸி' என்ற பேர் ஏற்பட்டிருக்கிறது. எனக்குத் தோன்றுவதுண்டு — 'அந்தே' என்பதற்குக் 'கூட', 'உடன்' என்று அர்த்தம் பண்ணுவதை விட 'உள்ளே' என்றே அர்த்தம் பண்ணலாமென்று! குருவின் கூட இவன் வஸிப்பது மட்டுமில்லை; அவருக்கு உள்ளேயே, அவருடைய ஹ்ருதயத்திலேயே இடம் பிடித்து வஸிக்கவேண்டியவன். அதுதான் ஸரியான அந்தேவாஸி....

சிஷ்யனின் ப்ரதம லக்ஷணம் விநயம். அவனுக்கு மட்டுமில்லாமல், அவன் யாரிடம் அதி விநயமாயிருக்

Koviloor Digital Library

கிறானோ அந்த ஆசார்யனுக்குமே விநய ஸம்பத் அவச்யம் என்று நம் பூர்வ சாஸ்த்ரங்கள் காட்டுகின்றன.

குருவின் விநயம்

சிஷ்யன் மாத்திரமில்லை, குருவும் விநய முள்ளவராகத்தான் இருப்பார் என்றும் நாம் ப்ரச்னோபநிஷத்தில் பார்த்ததிலிருந்து தெரிகிறது. "கேளுங்கோ! எனக்குத் **தெரிஞ்சா** தெரிஞ்சது முழுக்க சொல்றேன்" என்று ரிஷி சொல்வதில்தான்! இப்படிச் சொன்னது அவருடைய 'அநுத்ததத்வ'த்தைக் காட்டுகிறது என்று ஆசார்ய பாஷ்யம். 'உத்ததி' என்றால் கர்வம். 'அநுத்ததி' என்றால் கர்வமில்லாத குணம். அதாவது விநயம். அப்படி இருப்பதே 'அநுத்ததத்வம்'.

இங்கே ஆசார்யாள் அழகாகச் சொல்கிறார்: 'பின்னாடி அந்த ஆறு பேர் கேட்ட கேள்விக்கெல்லாம் அவர் ஸரியாக பதில்கள் சொல்லி அவர்களுக்குத் தெளிவு தருவதிலிருந்து அவர் ஆத்மசாஸ்த்ரம் நன்றாகவே தெரிந்தவர் என்றாகிறது. ஆனபடியால் 'தெரிஞ்சா சொல்றேன்' என்று அவர் சொல்வது ஞானக் குறைவினாலோ, விஷயத்தைப் பற்றி அவருக்கே ஸம்சயமிருந்ததாலோ அல்ல. அநுத்ததையால்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார்' என்கிறார்.

சிஷ்யன் என்று ஒருத்தன் இவருக்கு விஷயம் தெரியும் என்ற நம்பிக்கையின் மேலேயே வந்து கேட்கிறபோது குரு ஸ்தானத்திலிருப்பவர் அவனிடமே 'தெரிந்தால் சொல்கிறேன்' என்று சொல்லவேண்டுமானால் அதற்கு எவ்வளவு ஸத்ய சீலமும், அதைவிட விநயமும் இருக்கவேண்டும்?

குருவிடம் சிஷ்யனுக்கு விநயம் என்பதற்கு மறு பக்கமாக இப்படி ஒரு அபூர்வமான விநயத்தை குருவே

Koviloor Digital Library

சிஷ்யன் விஷயமாகக் காட்டுவதை, எந்த குருவும் அப்படிச் செய்யவேண்டும் என்பதற்காகவே உபநிஷத் காட்டியிருக்கிறது.

இதற்கு உச்ச ஸ்தானமாக நான் நினைக்கும் ஒன்று உண்டு:

தைத்திரீயோபநிஷத் ரிஷி — அதாவது குரு — நிறைய ப்ரஹ்மசாரிகள் தன்கிட்ட வந்து சிஷ்யாளாகச் சேரணும், சேரணும் என்று தவித்துக்கொண்டு ப்ரார்த்திக்கிறார்.* அதைப் பார்க்கும்போது ஒரு பையனுடைய வாழ்க்கைக்கே பொறுப்பேற்றுக்கொண்டு அவனை அகத்தோடு வைத்துக் கொண்டு ரக்ஷிக்கும் கஷ்டமான பொறுப்பை எத்தனை இஷ்டத்தோடு அந்தக் கால குருமார்கள் வரவேற்றார்கள் என்று தெரிகிறது. சரிந்து ஆழமாகப் போய்முடிகிற ஒரு பள்ளத்தை நோக்கி எப்படி ஜலமெல்லாம் ஓடி வந்து ஒன்று சேருமோ, மாஸங்கள் எப்படி ஒன்று சேர்ந்து வருஷமாகிறதோ அந்த மாதிரி சிஷ்யர்கள் தன்னிடம் ஒன்று கூடணும் என்று ரொம்பவும் அழகாக அந்த ரிஷி சொல்கிறார். 'குரு கிடைக்கணுமே, கிடைக்கணுமே!' என்று சிஷ்யனுக்கு இருப்பதற்குக் குறைச்சலில்லாமல், சிஷ்யன் கிடைக்கணும் என்று குருவுக்கும் இருந்த ஹ்ருதய தாபம் இங்கே தெரிகிறது! அது இருக்கட்டும். விநயத்துக்கு வருகிறேன்...

இரண்டும் ரொம்ப அழகான, ஆழமான உபமானம். ஜலம் சேராவிட்டால் பள்ளம் ஒன்றுக்கும் ப்ரயோஜனமில்லை. 'பாழுங் கிணறு' என்றே சொல்கிறோமே, அப்படி சிஷ்யர்களைப் பெறாத ஒரு வித்வானுடைய — வித்வானென்று உசந்த அர்த்தத்தில் சொல்கிறேன்; அதாவது, ஆத்ம சாஸ்த்ரம் உள்பட எந்த வித்யையிலும்

* I.4.3.

Koviloor Digital Library

தேர்ந்தவராயுள்ள ஒருத்தருடைய — வாழ்வே பாழ்தான் என்ற அபிப்ராயம் இங்கே வருகிறது. வெறும் பள்ளம் ஆபத்துக்கே ஹேது. உயிரை வாங்கிவிடக்கூடியது! அதுவே ஜலம் நிரம்பினால் பல பேருக்கும் பரமோபகாரம். தன் வாழ்க்கை பாழாகிவிடாமல் அதை ஸமூஹத்துக்குப் பரம ப்ரயோஜனமாக்குவதே சிஷ்யன்தான் என்ற எண்ணத் தோடு குரு இருந்திருக்கிறார் என்று இங்கே தெரிகிறது.

மாஸங்கள் இல்லாவிட்டால் வருஷம் என்றே ஒன்று இல்லைதானே? பள்ளம் என்னும்போது பாழாகவாவது காட்டுவதற்கு ஒன்று இருக்கிறது. ஒரு எல்லைக்குள்ளே இருக்கிற சூன்யத்தை அப்படிக் காட்டுகிறோம். மாஸங்கள் இல்லாவிட்டாலோ வருஷம் என்கிறது முழு சூன்யமேதான்! காட்டவே ஒன்றுமில்லாத பெரிய கோளா! சிஷ்யர்கள் என்பவர்கள் ஒன்றுசேர்ந்துதான் ஆள் என்றே தானொருத்தன் என்ற அளவுக்கு ஆசார்யன் நினைத்திருக்கிறார்! தம் வாழ்க்கை பூரா அவர்களுக்கே என்று த்யாகம் செய்வது போதாதென்று, அவர்களை உயர்த்தி வைத்து, அவர்கள்தான் தம்முடைய வாழ்க்கையையே வாழ்க்கையாக்கித் தருகிறார்கள் என்று நினைக்கிற பாவம்! இவர் அவர்களுக்காக வாழ்க்கையை த்யாகம் செய்கிறார் என்கிறபோது இவர் மேல் ஸ்தானத்திலிருந்து கொண்டு அவர்களுக்கு ஒன்றைக் கொடுக்கிறார்; நல்லது செய்கிறார் என்றாகிறது. அவர்களாலேயே இவருக்கு வாழ்க்கை வாழ்க்கையாவது என்கிறபோதோ அவர்கள்தான் கொடுக்கிறவர்களாக, இவருக்கு நல்லது செய்கிறவர்களாக இருக்கிறார்கள்! இவர் கொடுக்கிறபோது இவருக்கு அவர்களுடைய நமஸ்காரம்; அவர்கள் கொடுக்கிறபோது இவருக்கு அவர்களிடம் நன்றி, அதிலே உள்ளூர விநயம் என்றுதானே இருக்கும்?

Koviloor Digital Library

இப்படி சிஷ்யன் விஷயமாகவே குருவுக்கு விநய மனப்பான்மையும் இருக்கும்படியாக நம்முடைய ஸநாதன தர்மத்தில் அந்த ஸ்தானத்தை வகுத்துத் தந்திருக்கிறது.

நேரே விநயமென்று அவனிடம் இவர் தழைந்திருப்பது இல்லை. அது அஸம்பாவிதம். சிஷ்யனுக்கே கெடுதி பண்ணுவது. மனஸுக்குள்ளே அந்த பாவமும் ஒரு குருவுக்கு இருக்கவேண்டும் என்னும் போதுதான் அதில் ஒரு ரஹஸ்யமான அழகு, delicate refinement — நுண்ணிய பண்பு என்கிறது — ப்ரகாசிக்கிறது.

ஸர்வமும் உபதேசிப்பதற்குச் சான்று

இதெல்லாம் இருக்கட்டும். குரு தனக்குத் தெரிந்த ஸர்வமும் சிஷ்யனுக்கு உபதேசித்து விடுவார்; அதாவது அப்படிச் சொல்லவேண்டியது அவர் கடமை என்று உபநிஷத் காட்டுகிறது என்று பார்த்துக் கொண்டிருந் தோமே, இதை இந்த ஆறு சிஷ்யர்கள் மாதிரியே இன்னொரு சிஷ்யனும் வேறே ஒரு விதத்தில் தெரிவிப்பதாகவும் இன்னொரு உபநிஷத்தில் வருகிறதை முன்னேயே சொன்னேன் — ச்வேதகேது கதையில்தான்.

குருவுக்கே கர்வம் உதவாது, அவர் விநய ஸம்பன்னராக இருக்கணுமென்று இப்போதுதான் பார்த்தோம். சிஷ்யனுக்கோ விநயந்தான், ஒரு பத்னிக்குப் பாதிவ்ரத்யம் [கற்பு நோன்பு] மாதிரி அத்தனை முக்யம். அப்படியிருந்தும் 'வித்யா கர்வம்' என்று ரொம்பக் காலமாகவே சொல்லி வந்திருக்கிறார்களே, அப்படியும் இரண்டொருத்தர் எந்தக் காலத்திலும் இருந்திருக்கிறார்கள். அப்படித்தான் அந்தப் பிள்ளை, ச்வேதகேது, மண்டைக் கனத்தோடு தகப்பனாரிடம் திரும்பி வந்து சேர்ந்தான். பார்த்த மாத்திரத்தில் பிள்ளையாண்டான் 'வித்வத்தில் தனக்கு நிகரில்லை' என்று அஹங்கரித்திருக்கிறானென்று

Koviloor Digital Library

தகப்பனாருக்குத் தெரிந்துவிட்டது. அவனிடம் வயைாக ஒரு கேள்வி அவர் கேட்டார். "எந்த உபதேசம் பெற்றுக்கொண்டால் கேள்விக்கு அப்பாற்பட்டது கேட்கப்பட்டதாகுமோ, எண்ணுவதற்கு இயலாதது எண்ணப்பட்டதாகுமோ, அறிவுக்கு எட்டாதது அறியப் பட்டதாகுமோ அந்த உபதேசம் கேட்டுக் கொண்டாயா?" என்று கேட்டார். ப்ரஹ்மவித்யையின் ஸாரத்தைத் தெரிந்து கொண்டானா என்பதையே இப்படிக் கேட்டார். தெரிந்து கொண்டிருந்தால் அவன் கர்வியாக ஆகியே இருக்க மாட்டான். இது அவனுக்கு உறைக்கணும் என்றே கேட்டார்.

'ப்ரஹ்மவித்யை கற்றுக் கொண்டாயா?' என்று நேராகக் கேட்டிருந்தால், அத்தனை வருஷம் படித்தவன்..... 'ஸகல வேதங்களையும் அத்யயனம் பண்ணினவன்' என்று உபநிஷத் அவனைப் பற்றிச் சொல்லியிருக்கிறது*; அப்படிப் பட்டவன்...... ப்ரஹ்ம தத்வம் பற்றியும் படித்துத்தான் இருந்திருப்பானாகையால், "கற்றுக் கொண்டேன்" என்றே சொல்லியிருப்பான். அப்படிவிடாமல், தான் அதன் ஸாரத்தை அறியவில்லை என்று அவன் 'ரியலைஸ்' பண்ணி கர்வத்தை விடணும் என்றே இப்படி indirect–ஆகக் கேட்டார்.

கர்வியானாலும் அவன் புத்திமான். வித்யையில் ஆசையுள்ளவன். ஆகையினால் 'இப்படியும் ஒரு வித்யையா? கேட்கவும், நினைக்கவும், அறியவும் முடியாததைக் கேட்டு, நினைத்து, அறியும்படிச் செய்யும் வித்யையா? தெரிஞ்சுக்காமப் போனோமே! இப்பவாவது இவர் கிட்டேயிருந்து தெரிஞ்சுக்கணும்' என்று நினைத் தான். அதனால் பொய், கிய் பண்ணாமல், தான் அதைத்

* சாந்தோக்யம் 6.1.2.

Koviloor Digital Library

தெரிந்துகொள்ளவில்லை என்று நிஜத்தைச் சொல்கிறான். ஆனால் அப்போதும் தன் மேல் குற்றம் சேராமல் — தனக்கு யோக்யதை இல்லாததால்தான் அந்த வித்யையை குருமார் சொல்லிக் கொடுக்கவில்லை போலிருக்கு என்று சொல்லாமல் — "அந்த குருமார்களுக்கே அது தெரியாமல் இருந்திருக்கணும். 'நூனம்' — 'நிச்சயம்' அப்படித்தான் இருக்கணும்" என்கிறான்!

இப்படிச் சொல்கிற அவன் வாயிலிருந்தேதான் அக்கால குருமாரின் உத்தம லக்ஷணமும் அப்போது வந்து விடுவதாகப் பார்த்தோம் — "அவர்களுக்குத் **தெரிந்திருந்தால் ஏன் சொல்லிக் கொடுக்காமல் இருக்கவேண்டும்?"** என்கிறானே, அதுதான்!

அவன் அப்படிச் சொன்னானென்றால் அதற்குக் காரணம் ஏற்கெனவே அப்பாக்காரர் அப்படிச் சொல்லி அது அவன் உள்மனஸில் தோய்ந்திருந்ததுதான். இது என்னுடைய ஊஹம். அந்த 'ஏற்கெனவே' கதை என்ன வென்றால், முன்னத்யாயத்திற்கு*ப் போகணும். முதலில் ச்வேதகேதுவுக்கு அப்பாவே கொஞ்சம் கற்றுக் கொடுத்துவிட்டு, அப்புறமே அவனை வேறே பல ஆசார்யர் களிடமும், வித்வத் ஸதஸுகளுக்கும் அனுப்பி வைத்திருக் கிறார் என்று இங்கே தெரியவருகிறது. அப்படி அவன் ப்ரவாஹணர் என்கிற ராஜ ரிஷியின் ஸதஸுக்குப் போகிறான். ராஜரிஷி அவனிடம் 'பித்ருலோக-தேவலோக ஸமாசாரம் தெரியுமா?' என்கிற மாதிரி ஐந்து கேள்விகள் கேட்கிறார். அவனுக்கு அந்த ஐந்து விஷயமும் உபதேசம் ஆகவில்லை. எப்பவுமே அவனுக்கு கர்வம் ஜாஸ்தி. அதனால், தான் எல்லாம் தெரிந்தவன் என்கிற மாதிரி ஒரு 'இம்ப்ரெஷ'னை அவருக்கு [ராஜரிஷிக்கு] உண்டாக்கி

* சாந்தோக்யம் 5.3; ப்ருஹதாரண்யகம் 6.2–லும் இதே விருத்தாந்தம் உண்டு.

Koviloor Digital Library

யிருந்தான். அதனால் இப்போது அவர் கேட்ட ஐந்து கேள்விக்கும் இவனுக்குப் பதில் தெரியவில்லை என்றதும் இவனைக் கொஞ்சம் ஹேளனமாகப் பேசிவிடுகிறார். கர்வியானதால் அவன் மானபங்கப்பட்டுக் கொண்டு, மனஸ் குமுறிக்கொண்டு பிதாவிடம் திரும்பி வந்து, "ஏதோ எல்லாம் கத்துக்குடுத்துட்ட மாதிரி என்னமா என்னை அனுப்பி வெச்சே! ஏன் முழுக்கக் கத்துக் குடுக்கலை?" என்று கோபமாகக் கேட்கிறான். அவர் சாந்தமாகப் பேசி ராஜஸதஸில் நடந்த ஸங்கதிகளைத் தெரிந்து கொள்கிறார். அப்போது, "ராஜா கேட்டது எனக்கு நிஜமாவே தெரியத்தான் தெரியாது. தெரிஞ்சிருந்தா ஒனக்கு ஏன் சொல்லாம இருந்திருக்கப் போறேன்?" என்கிறார்.

அதுதான் அவன் மனஸில் ஊறி, அப்புறமும் அவன் யாராரிடம் போனானோ, அவர்களெல்லாரும் மனஸைத் திறந்து சிஷ்யாளுக்குச் சொல்லித் தருகிறதைப் பார்த்து இன்னும் உறுதிப்பட்டு, அப்புறம் அப்பாவிடமே அவர் சொன்னதையே மற்ற குருமார் விஷயமாகத் திருப்பிச் சொல்லவைத்திருக்கிறது.

வேதசிரஸுக்கே சிரஸான உபதேசம்

அப்புறம் அவன் கர்வம் அடங்கி, அப்பாவையே அந்த உபதேசம் தரும்படிப் பிரார்த்தித்து, அவரும் உபநிஷத்திலேயே உச்சமான மஹாவாக்யத்தை அவனுக்கு உபதேசித்ததாகக் கதை போகிறது.

ப்ரமாணங்களில் உச்சஸ்தானம் — எண்சாண் உடம்புக்கு சிரஸே ப்ரதானம் என்பதுபோல ப்ரதானமான ப்ரமாணமாயிருப்பது — வேதம். அதற்கும் சிரஸ் உபநிஷத்துக்கள்; 'ச்ருதிசிரஸ்' எனப்படுபவை. அவற்றில் வரும் உபதேசங்களிலும் சிரஸாகச் சிலதை மஹாவாக்யம் என்பார்கள். ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றே என்பதைச்

Koviloor Digital Library

சொல்கிற உபநிஷத் வாக்யங்கள் எல்லாவற்றுக்குமே மஹாவாக்யங்கள் என்று பேர் இருந்தாலும், அவற்றிலும் சிரஸாகக் குறிப்பாக வேதத்திற்கு ஒன்றாக நாலை ரொம்ப விசேஷித்துச் சொல்வார்கள். அந்த நாலிலும் சிரஸாகச் சொல்வது, நேராக ஒரு சிஷ்யனிடம் குரு 'நீயே ப்ரஹ்மம்' என்று சொல்கிற மஹாவாக்யம். அது ஸாமவேத மஹாவாக்யம். அப்படி சிரஸுக்குச் சிரஸுக்குச் சிரஸுக்குச் சிரஸுக்குச் சிரஸாக* உள்ள அந்த வாக்யம் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் கதையில் வருகிற பிள்ளைக்குத் தகப்பனார் உபதேசித்ததுதான்!

சொல்ல வந்தது, அந்தப் பிள்ளை தன் குருமார்கள் தங்களுக்குத் தெரிந்த எந்த ஒரு வித்யையையும் தனக்குச் சொல்லித்தராமல் இருந்திருக்க மாட்டார்கள் என்றதைத் தான்.

விநயத்தோடு நில்லாமல் உண்மையைத் தெரிவிப்பது

"தெரிஞ்சா சொல்றேன்" என்று ஒரு குரு தன்னிடம் வந்த ஆறு சிஷ்யாளிடம் விநயத்தோடு சொன்னார் என்றேன். அது 'ப்ரச்னோபநிஷத்' ஆரம்பம். அப்புறம் அவர் அவர்கள் ஒவ்வொருத்தரும் கேட்ட ஒவ்வொரு கேள்விக்கும் ஸம்பூர்த்தியாகப் பதில் சொல்லியிருக்கிறார். இப்படி ஆறு ஸெக்ஷன்கள். ஒவ்வொரு ஸெக்ஷனுக்கும் 'ப்ரச்னம்' என்றே பேர் கொடுத்திருக்கிறது.

'ப்ரச்னம்' என்றால் கேள்வி. Problem என்பதை 'பிரச்னை' என்றே தமிழ்நாட்டில் அரசியல்

* சிரஸ் – வேதம்; அதற்கு சிரஸ் – உபநிஷத்துக்கள்; அவற்றுக்கு சிரஸ் – பல மஹாவாக்கியங்கள்; அவற்றுக்கு சிரஸ் – நாலு மஹா வாக்கியங்கள்; அவற்றுக்கும் சிரஸ் – இங்கு கூறப்படும் மஹாவாக்கியம்.

Koviloor Digital Library

பேச்சாளர்களும், பத்திரிகையாளர்களும் சொல்லி இப்போது பொது ஜனப் புழக்கத்திலேயே அந்த வார்த்தை வந்து விட்டதாகத் தெரிகிறது. 'எப்படிச் சமாளிப்பது?' என்று கேள்விக் குறி போட்டுக் கொண்டு நிற்பதைத்தானே problem என்பது? ஆகையினால் அது 'ப்ரச்னம்'. அதுவே தமிழ் மொழி வழக்கில் 'பிரச்னை' ஆகிறது. ஆனால் 'prasnai' என்று சொல்லாமல் 'பிரச்சனை' ('Prachchanai') என்கிறார்கள்! அதுதான் என்னமோபோல் இருக்கிறது......

இப்படி ஆறு கேள்விக்கும் விளக்கமாகப் பதில் கொடுத்து ஆறாம் ப்ரச்ன முடிவில், உபநிஷத் முடிகிற இடத்தில் ரிஷி-குரு — ஆரம்பத்தில் 'தெரிஞ்சா சொல்றேன்' என்றவர் — அதே 'ஹ்யுமிலிடி'யுடன், "இந்த அளவுக்கே நான் பரப்ரஹ்மத்தைத் தெரிஞ்சுண்டது'' என்று சொல்கிறார்.

ஆனால் 'ஹ்யுமிலிடி'யிலே இவர் அப்படிச் சொல்லப்போக, அந்த சிஷ்யாள் அதுவே நிஜமோ, இன்னும் என்ன தெரிந்து கொள்ளவேண்டுமோ, அதற்காக இன்னும் யார்கிட்டே போகணுமோ என்றெல்லாம் நினைத்துவிடக் கூடாதல்லவா? அந்த மாதிரி அவர்களுக்கு ஸந்தேஹம், சஞ்சலம் வராமலிருப்பதற்காகவும், பெற வேண்டிய உபதேசம் அத்தனையும் பெற்று க்ருதார்த்தராகிவிட்டோம் என்ற நிச்சயம் அவர்களுக்கு ஏற்படுவதற்காகவும் அவர் முடிந்த முடிவாக, "இதுக்கு மேலே ஒண்ணுமில்லை'' என்றும் சொல்கிறார்*.

விநய ஸம்பத் குருவுக்கும் லக்ஷணம் என்றால், அவருடைய முக்யமான கார்யமோ சிஷ்யாளின் குழப்பத்தை — ப்ரச்னையை — தீர்ப்பதுதானே? பகவான்

* ஸ்ரீ சங்கர பாஷ்யத்தை முற்றிலும் அடியொற்றி ஸ்ரீசரணர் கூறியிருக்கிறார்.

Koviloor Digital Library

அர்ஜுனனுக்கு அதைத்தானே பண்ணினார்? 'விஷாத யோகம்' என்றே முதல் அத்யாயமாகப் பேர் கொடுத்திருக்கிற அர்ஜுனனுடைய குழப்பப் படலத்திற்கு[1] முடிவு கட்டத்தானே அப்புறம் பதினேழு அத்யாயம் உபதேசம் பண்ணினார்? அப்படியிருக்கும்போது தம்முடைய விநயத்தினால் தாமே சிஷ்யாளுக்குப் புதுக் குழப்பத்தை உண்டாக்கிவிடக்கூடாதென்றே ப்ரச்நோப நிஷத் முடிவிலே, ரிஷி அழுத்தங்கொடுத்து, "இதுக்கு மேலே எதுவுமில்லை" என்றார்.

அப்போதுதான் அந்த சிஷ்யாள், "எங்களை அவித்யைக்கு அக்கரை சேர்த்த தாங்களே எங்களுடைய பிதா" என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினது[2].

ஈடு செய்ய முடியாதது குரு உபதேசம்

"நமஸ்கரித்தார்கள்" என்று இந்த இடத்தில் இல்லாமல், "அர்ச்சித்தார்கள்" என்றே உபநிஷத்தில் வார்த்தை போட்டிருக்கிறது. தற்போது அர்ச்சனை என்றால் நாமம் நாமமாகச் சொல்லிப் பூப் போடுவது, குங்குமம் போடுவது என்று தெரிந்து கொண்டிருக்கிறோம். அதுவும் ஸரிதான். ஆனால் பூஜையில் ஒரு அங்கமாக உள்ள இந்த ஒன்றுக்கு மாத்திரமில்லாமல் முழுப் பூஜையையுமே — வழிபாடு என்பதையேகூட — 'அர்ச்சித்தல்' என்பது குறிக்கும். இங்கே ஆசார்ய பாஷ்யத்தில், அவர்கள் தங்களுடைய ஆசார்யரின் பாதத்தில் புஷ்பாஞ்ஜலி செலுத்தி, சிரஸால் பாதத்தைத் தொட்டு நமஸ்கரித்ததாக விரித்து அர்த்தம் பண்ணியிருக்கிறார். இன்னுங்கூட அழகாக விரித்து முன்னுரையாக ஒன்று சொல்லியிருக்

1. 'விஷாதம்' – குழப்பம்.
2. 'குருவுக்கும் தந்தைத்தன்மை உண்டு' என்ற பிரிவில் கண்ட விஷயம்.

Koviloor Digital Library

கிறார். என்னவென்றால், குரு உபதேசத்தால் க்ருதார்த்தர்களாகிவிட்ட அவர்கள் — அப்படியென்றால் ஜீவிதத்தின் பரமப்ரயோஜனத்தை அடைந்துவிட்டவர்கள் என்று அர்த்தம்; அப்படி ஆன அவர்கள் — இப்படிப்பட்ட வித்யோபதேசத்துக்கு என்ன ப்ரதி, கைம்மாறு செய்ய முடியுமென்று பார்த்தார்களாம். ஒன்றுமே அகப்படவில்லையாம்.

'ஸமுத்ரம் சூழ்ந்த பூமி பூராவையும் தக்ஷிணை கொடுத்தாலும், யோக்யதை போதாத ஒருத்தனுக்கு உபதேசிக்கப்படாது' என்று சாந்தோக்யோபநிஷத் ரிஷி சொன்னார்[1]. இங்கேயோ யோக்யதை உள்ள சிஷ்யர்களே வித்யோபதேசம் பெற்றுக் கொண்ட பிறகு, 'என்ன தக்ஷிணை கொடுத்தும் குருவுக்குப் பிரதி செய்துவிட முடியாது' என்று நினைத்தார்களாம்! இப்படிச் சொல்லும் ஆசார்யாள் தம்முடைய 'உபதேச ஸாஹஸ்ரீ' ஆரம்பத்திலும்[2] 'ஸமுத்ரம் சூழ்ந்த லோகம் பூராவையும், அதிலுள்ள பூர்ணமான செல்வங்களோடு குருவுக்குத் தந்தாலும் அவர் தருகிற உபதேசமோ அதற்கும் பெரிதானது என்று சாஸ்திரம் சொல்கிறது' என்கிறார்.

'ஸமுத்ரம் சூழ்ந்த பூமி பூராவையும் தக்ஷிணையாகத் தரக்கூடியவனாயிருந்தாலும், யோக்யதை போதாதவன் என்றால் அவனுக்கு உபதேசிக்கப்படாது' என்று [சாந்தோக்யத்தில்] மதுவித்யை உபதேசிக்கும் ரிஷி சொல்லியிருக்கிறார். பணத்துக்காக அறிவை விலை பேசாத குருவின் உசந்த லக்ஷணத்தை அது தெரிவிக்கிறது. அதே 'ஐடியா'வை ஆசார்யாள் 'உபதேச ஸாஹஸ்ரீ'யில் சிஷ்ய லக்ஷணத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறார். இங்கே [ப்ரச்னோபநிஷத் பாஷ்யத்தில்] அந்த மாதிரிதான் சிஷ்யாள்

1. சாந்தோக்யம் 3.11.6
2. முதற்பகுதியில் மூன்றாம் உபதேசம்

Koviloor Digital Library

'குருவுக்கு என்ன ப்ரதி பண்ணினால்தான் போதுமானதாகும்?' என்று கேட்டதாகத் தம்முடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்கிறார். அந்த ஆறு சிஷ்யாள் என்ன ப்ரதியும் செய்ய முடியாது என்று முடிவு பண்ணித்தான் அப்புறம் ஏதாவது [சிரித்து] thanksgiving தெரிவித்தாகணும் என்று புஷ்பாஞ்ஜலியாகக் கை நிறையப் புஷ்பங்கள் எடுத்து அவர் பாதத்தில் போட்டு சிரஸால் நமஸ்கரித்தார்களாம் — ஆசார்யாள் சொல்கிறார்.

மூல வாசகத்தில் அவச்யத்திற்கு அதிகமாகக் கொஞ்சங்கூடக் கூட்டி பாஷ்யம் செய்யாதவர் நம்முடைய ஆசார்யாள். அப்படிப்பட்டவரே மூலத்தில் 'அர்ச்சயந்த' என்று வருகிற ஒரு சின்ன வார்த்தைக்கு இத்தனை நீளமாக விளக்கம் கொடுத்திருக்கிறாரென்பதிலிருந்து அவருக்கு எத்தனை குரு பக்தி இருந்தது; ஜனங்கள் குருமாரிடத்தில் எப்படி மனஸ் ரொம்பி, நன்றி விச்வாஸத்துடன் பக்தி பண்ணணும் என்று சொல்லிக் கொடுப்பதில் அவருக்கு எவ்வளவு ஆர்வம், ச்ரத்தை இருந்தது என்று தெரிகிறது.

அந்த ஆறு சிஷ்யாள் ப்ரத்யக்ஷமாகத் தாங்கள் பார்த்த அந்த ஒரு ரிஷிக்கு நமஸ்காரம் பண்ணும்போதே அவரொருத்தரை மாத்திரம் நினைக்காமல் அத்தனை ரிஷிகளையுமே நினைத்து, "பரம ரிஷிகளுக்கு நமஸ்காரம், பரம ரிஷிகளுக்கு நமஸ்காரம்" என்று சொன்னதாக உபநிஷத் முடிக்கிறது. 'இரண்டு தடவை அப்படிச் சொல்லியிருப்பது மரியாதையைக் காட்டவே' என்று ஆசார்யாள் பாஷ்யம்.

வழிவழி வரும் உபதேசம்

ப்ரத்யக்ஷ குருவைப் பிதா என்றால், அந்தப் பிதா அவருக்கு ஒரு பிதா இல்லாமல் எப்படி உண்டாவார்? அப்படியே அந்தப் பிதாவுக்கும் பிதா, அவருக்கும் பிதா

Koviloor Digital Library

என்று போகுந்தானே? அப்பா இருந்தால் தாத்தா, கொள்ளுத் தாத்தா, எள்ளுத் தாத்தா என்று அப்படியே போய்க்கொண்டுதானே இருக்கிறது? அப்பாவுக்கு ச்ராத்தம் என்றாலும் தாத்தா, கொள்ளுத் தாத்தாவையும் அங்கே கூப்பிடத்தானே செய்கிறோம்? அதேமாதிரி குரு என்ற அப்பாவையும் பரம்பரா க்ரமமாகச் சேர்த்துத்தானே பூஜிக்கணும்? ஆதியிலிருந்து அந்தந்தக் கால சிஷ்யர் களுக்குப் பரமோபகாரம் பண்ணிவந்திருக்கிற குரு பரம்பரையை நாம் மறக்கவே கூடாது. 'பரமரிஷிகள்' என்று [மூலத்தில்] வருவதை ஆசார்யாள் 'ப்ரஹ்மவித்யா ஸம்ப்ரதாய கர்த்தாக்கள்' என்று மரபு வழி வந்த குரு பரம் பரையாகவே அர்த்தம் பண்ணியிருக்கிறார்.

வழி வழி வழியாக ஒரு உபதேசமோ அநுஷ்டானமோ வந்திருக்கணும். அதற்குதான் weight. அதிலே வந்த ஒவ்வொருத்தரின் அநுஷ்டான பலமும், அநுபவ பலமும் சேர்ந்து சேர்ந்து அதுதான் வஜ்ரம் பாய்ந்த மரம் மாதிரி எது ஸத்யமோ, எது ஹிதமோ அதை உறுதிப்பண்ணித் தரும். பல பேர் பல தலைமுறைகளாக வாழ்க்கையிலேயே நடத்திக் காட்டி, பலனடைந்து வெற்றி கண்ட வழியாக ஒன்று இருக்கிறதென்றால் அவர்கள் அத்தனைபேரும் கண்டு கொண்ட லக்ஷ்யம் ஸத்யமாகத்தானே இருக்க முடியும்? Free thinking, சுதந்திர சிந்தனை, அது-இது என்று சொல்லிக் கொண்டு நம் ஒருவருடைய அல்ப புத்தியைக் கொண்டு மாத்திரம் கண்டு கொள்வது எப்படி இத்தனை நிலைப்பட்ட ஸத்யமாயிருக்க முடியும்?

"மரபு மீறுபவன் மூடன்" – ஆசார்யாள்

ஸம்ப்ரதாயத்துக்கு விருத்தமாக [முரணாக] வேறே அபிப்ராயம் சொல்கிறவனை ஆசார்யாள் 'மூர்க்கன்' என்றே சொல்வார். அவர் கருணாலயமாக இருந்தவர்.

Koviloor Digital Library

அவரே இப்படிக் கடுமையாகச் சொன்னாரென்றால், பரம ஸத்யம் என்று அவருக்குத் தெரிந்த ஒன்றை எப்படிச் சொல்லாமலிருக்க முடியும்? ஜனங்களின் நல்லதற்காகவே, அவர்களை நல்ல வழியில் கொண்டு வரணும் என்ற கருணையினாலேயே, 'ஸம்ப்ரதாயத்தை ஒட்டியே போங்கள்! சொந்த முடிவு பண்ணி வீணாகப் போகாதீர்கள்!' என்பதை இப்படிக் கண்டிப்பான வார்த்தை போட்டு உபதேசித்தார். அழகான ஒரு பெரிய மரபு வழிவழியாக வந்திருக்கும்போது, அதை விட்டு விட்டுப் பிடிவாதமாகத் தன்னையே வீண் பண்ணிக் கொள்கிறவன் மூர்க்கனில்லாமல் வேறே என்ன? அதைத்தான் சொன்னார்.

ஸம்ப்ரதாயத்தில் வராத புது அர்த்தத்தை சாஸ்திரங்களில் புகுத்திச் சொல்கிறவனை ஆசார்யாள் 'ஆத்மஹா', அதாவது தன்னையே கொலை பண்ணிக் கொண்டவன், 'மூடன்', மூடனாயிருந்தும் வாயை மூடிக் கொண்டிருக்காமல் ஊருக்கு உபதேசம் பண்ணி மற்றவர் களையும் குழப்புகிறவன் என்றெல்லாம் பலமாகவே கண்டித்து கீதா பாஷ்யத்தில் சொல்லியிருக்கிறார்*. எனவே அவன் அத்தனை சாஸ்திரமும் படித்தறிந்தவனா யிருந்தாலும் அவனை மூர்க்கன் என்றே தள்ளவேண்டும் என்கிறார்.

குரு பரம்பரையிடம் ஆசார்யாளின் பக்தி

ஸம்ப்ரதாயமாக வந்த குரு பரம்பரை என்றால் அதனிடம் அவருக்குச் சொல்லிமுடியாத மரியாதை. மூலத்திற்கு அதிகமாக அவர் பாஷ்யத்தில் போவது ரொம்பவும் அபூர்வம் — முன்னேயே சொன்னேன். ஆனால் அப்படி ஒன்று, நம் 'டாபிக்' விஷயமாக அவர்

* XIII. 2

Koviloor Digital Library

அத்தனை உபநிஷத்திற்கும் பாஷ்யம் எழுதி முடிக்கிறபோது செய்திருக்கிறார்.

'தசோபநிஷத்' என்று பத்து – ஈசாவாஸ்யத்தில் ஆரம்பித்து ப்ருஹதாரண்யகத்தில் முடிவதாக அவர் தேர்ந்தெடுத்து பாஷ்யம் பண்ணியிருக்கிறார். இன்னும் சில உபநிஷத்துக்களுக்கும் அவர் பேரில் பாஷ்யமிருந்தாலும் இந்தப் பத்துதான் ப்ரஸித்தமாகச் சொல்வது. அவற்றில் ஆரம்ப உபநிஷத், அந்த்ய [முடிவான] உபநிஷத் இரண்டுமே சுக்ல யஜுர் வேதத்தைச் சேர்ந்தவையாயிருக்கின்றன. அது இருக்கட்டும்...... அந்த்ய உபநிஷத்தின் அந்த்ய பாகத்திற்கு ஆசார்யாள் வந்துவிடுகிறார். அதில் அத்தனை ரிஷிகளுக்கும் லிஸ்ட் கொடுத்து....... பெரும்பாலும் அம்மா பேரிலேயே ஒவ்வொரு ரிஷியையும் குறிப்பிடுவதாக முன்னேயே சொன்னேன்...... முடிக்குமிடத்தில் அதை மாற்றிப் புருஷ ரிஷிகள் கிரமத்திலேயே பிள்ளை–அப்பா–தாத்தா– அவருக்கு அப்பா என்று மூதாதைகளைச் சொல்லிக்கொண்டே போய் 'ப்ரஜாபதி — ப்ரஹ்மன்' என்று முடித்திருக்கிறது. அந்த ப்ரஹ்மனுக்கு நமஸ்காரம் என்று நமஸ்கார வாசகத்தோடு உபநிஷத் பூர்த்தியாகிறது. தசோபநிஷத்துக்களுக்குமே அதுதான் பூர்த்தி.

இங்கே 'ப்ரஹ்ம' என்றிருப்பதற்கு 'ப்ரஹ்மா' என்கிற ஸ்வாமி என்றும், சப்த ப்ரஹ்மமாகிய வேதம் என்றும் அர்த்தம் எடுத்துக் கொள்ளலாம். வேதத்தையே ஆதி குருவாக personify பண்ணிச் சொன்னதாக எடுத்துக் கொள்ளலாம். பரப்ரஹ்மத்திலிருந்துதானே ஸகலமும் உத்பவித்திருப்பது? அதனால், அந்த 'ப்ரஹ்மம்' என்றும் எடுத்துக்கொள்ளலாம்.

இங்கேதான் ஆசார்யாள் பார்த்தார். "அந்த ஆதி குருவுக்கு மட்டும் நமஸ்காரம் சொல்லி உபநிஷத் உபதேசத்தை முடித்துவிடுவதா? அந்த ஆதியிலிருந்து

Koviloor Digital Library

வந்திருக்கிற தொடர் சங்கிலியான குரு பரம்பரை முழுவதற்கும் இந்தப் பூர்த்தி ஸ்தானத்தில் சேர்த்து [சிரித்து] ஒரு omnibus நமஸ்காரம் பண்ணினால்தானே ஹ்ருதயத்திற்கு நிறைவு ஏற்படும் போலிருக்கு? ஸத்-ஸம்ப்ரதாயத்திற்கு அந்த கௌரவம் தராமல் முடித்து விடலாமா?" என்று அவருக்குத் தோன்றிற்று. அதனால் பாஷ்யத்தின் அந்த்ய வாசகமாக, 'ப்ரஹ்மணே நம:' என்று மூலத்தில் முடிவாயுள்ளதைச் சொன்ன அப்புறம், **"நம: தத்–அநுவர்த்திப்யோ குருப்ய:"** என்றும் சேர்த்துவிட்டே எழுத்தாணியைக் கீழே வைத்தார். அப்படியென்றால் 'ப்ரஹ்மமாகிற வேதத்தை அழகாகப் பின்பற்றிப்போகிற குருமார்களுக்கு — குருபரம்பரைக்கு — நமஸ்காரம்' என்று அர்த்தம். நம்முடைய ப்ரஹ்ம வித்யா குரு பரம்பரைக்கே மத்யமணியாகப் பிரகாசிக்கும் ஆசார்யாள் இப்படி குரு வந்தனம் பண்ணி உபநிஷத் பாஷ்யத்தை முடித்திருக்கிறார்.

தைத்திரீய பாஷ்ய ஆரம்பத்திலே, மங்கள ச்லோகத்தில், ஆசார்யாள், தமக்கு முந்தி உபநிஷத்துகளை வியாக்யானம் பண்ணிக்கொண்டு வந்திருக்கிற அத்தனை பூர்வகால குருக்களுக்கும் நமஸ்காரம் தெரிவித்திருக்கிறார். [அவர்களை] 'நித்யம் நமஸ்கரிக்கிறேன்' என்கிறார். 'பதம்' என்கிற வ்யாகரணம், 'வாக்யம்' என்கிற மீமாம்ஸா சாஸ்த்ரம், 'ப்ரமாணம்' என்ற ந்யாய சாஸ்த்ரம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் உபநிஷத்துக் களுக்கு அர்த்தம் பண்ணினார்கள் என்று அவர்களுடைய வித்வத்தை ச்லாகித்துச் சொல்கிறார்:

யைரிமே குருபி: பூர்வம் பத–வாக்ய–ப்ரமாணத: |
வ்யாக்யாதா: ஸர்வவேதாந்தாஸ்–தாந்–நித்யம்
ப்ரணதோஸ்ம்யஹம் ||

Koviloor Digital Library

நாமெல்லாருமே ப்ரஹ்மவித்யா குரு பரம்பரா வந்தனமாகச் சொல்லக் கூடிய — நித்யமும் சொல்ல வேண்டிய — ச்லோகம்.

தெரியாததை ஒருபோதும் சொல்லாதவர்

தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும், தான் அறிந்ததனைத்தையும் ஒரு குருவானவர் சிஷ்யனுக்கு உபதேசித்துவிடுவார் என்று பார்த்தோம். அதோடு சேர்த்து, ஸாமான்யமான வாத்தியார்மார்கள் பண்ணக்கூடிய இன்னொன்றை அவர் **பண்ண மாட்டார்** என்பதையும் சொல்லவேண்டும். அதாவது தமக்குத் தெரியாத எதையும் தெரிந்த மாதிரி ஜோடித்துச் சொல்லமாட்டார்! ஸாதாரணமாக ஒரு மாணவன் வந்து ஏதோ ஒரு விஷயம் சொல்லித்தரும்படிக் கேட்டால், தெரியாத வாத்தியாருக்குத் தெரியாது என்று சொல்லிக்கொள்ள லஜ்ஜையாக இருக்கலாம். அதனால் அவர் எதையாவது புத்தி ஜாலம், வார்த்தை ஜாலம் பண்ணிச் சொல்லி விடலாம். உபநிஷத் காட்டுகிற குரு இப்படிச் செய்பவரல்ல. சிஷ்யனுக்கு "ஸத்யம் வத" சொல்லித் தருகிற அவர் ஸத்யஸந்தராகவே வாழ்க்கையில் இருப்பார். அதனால், "தெரியாதப்பா! இந்த விஷயம் இன்னாருக்குத் தெரியும். அவர்கிட்டே போ(அ)ப்பா!" என்று அனுப்பி வைப்பார்.

'ப்ரச்னோபநிஷத்' முடிவைச் சொன்னேன். ஆரம்பத்தையும் சொன்னேன். அதில் முடிவு பாகத்தின் ஆரம்பத்தில் இப்போது த்ருஷ்டாந்தம் காட்டுகிறேன்:

கோசல தேசத்து ராஜகுமாரன் ஒருத்தன். ஹிரண்ய நாபன் என்று பேர். அவன் ஸுகேசர் என்ற ரிஷியிடம் கற்றுக் கொள்ள வருகிறான். அந்த ஸுகேசர் யாரென்றால், பிப்பலாத மஹர்ஷியிடம் ஆறு பெரியவர்கள் ஆத்ம வித்யை தெரிந்து கொள்ள வந்தார்கள், ஆளுக்கொரு கேள்வி —

Koviloor Digital Library

ப்ரச்னம் — கேட்டு; அதற்கு. அவர் பதில் சொல்வதுதான் ப்ரச்னோபநிஷத் என்றேனோல்லியோ? அந்த ஆறு பேரில் இந்த ஸுகேசரும் ஒருத்தர். அவர்தான் கடைசியான ஆறாவது கேள்வி கேட்டவர். இதற்கு முற்காலத்தில் இதே கேள்வியை அவரிடமே கேட்கத்தான் கோஸல ராஜகுமாரன் போனது. என்ன கேள்வி என்றால்: ஒரு ஜீவனுக்குப் பதினாறு அம்சங்கள் உண்டு. இவற்றைக் கலைகள் என்பார்கள். சந்திரனுக்குக் கலைகள் இருப்பதாக எல்லாரும் சொல்கிறோம். பிறைச் சந்திரனைச் சந்திரகலை என்கிறோம். அப்படிப் பதினாறு கலைகளோடு கூடினவன் ஜீவன். 'ஷோடச கலா புருஷன்' என்று சொல்வது. அந்த ஸமாசாரமாகவே கோஸல ராஜகுமாரன் ஸுகேசரிடம் கேட்டான். அப்போது அது அவருக்குத் தெரியாது. தெரியாததால்தான் பிற்பாடு பிப்பலாதரிடம் கேள்வி கேட்க வந்தார்.

ஏதாவது பதினாறைக் கல்பித்துச் சொல்லி, தத்வார்த்தம் என்று பொய்ப்பந்தல் போட்டு அந்த ராஜகுமாரனை அவர் அனுப்பியிருக்கலாம். ஒரு ராஜகுமாரனே வந்து கேட்கிறானென்றால் அது ஒரு பெருமை. அதோடு அவன் நிறைய ஸம்பாவனை, ஸௌகர்யங்களும் பண்ணித்தரக் கூடியவன். ஆனால் நம் பூர்வகால குருமார் ரொம்பவும் நேர்மையுள்ளவர்களான படியால் இவர் அவனிடம் தமக்குத் தெரியாது என்று உள்ளதை உள்ளபடிச் சொன்னார்.

அவனுக்கு நம்பிக்கைப்படவில்லை. — உபநிஷத்தில் நேராக அப்படிச் சொல்லியிருக்கவில்லை. ஆனால் ஆசார்யாள் பாஷ்யத்தில் சேர்த்திருக்கிறார். அப்படிச் சேர்த்தால்தான் அப்புறம் வரும் உபநிஷத் வாக்யத்துக்குப் பொருத்தமாக link உண்டாகிறது.

இவர் எங்கேயாவது அறியாதவராக இருப்பாரா என்று ராஜபுத்ரன் ஸந்தேஹப்பட்டான். 'எனக்குத்தான்

Koviloor Digital Library

யோக்யதை போதாதோ என்னவோ? அப்படிக் குற்றம் காட்டாமல் தம்மையே குறைத்துச் சொல்லிக்கொண்டிருக் கிறாரோ?" என்று நினைத்தான். அவரிடமே சொல்லவும் சொன்னான். அதற்கு மேல் அவர் அவனிடம், "எனக்கு மட்டும் விஷயம் தெரிஞ்சிருந்தா உன்னிடம் ஏன் சொல்லாமலிருக்கப் போறேன்?" என்று கேட்கிறார். முன்னே சிஷ்யன் ச்வேதகேது வாயால் நாம் அவனுடைய குருமார்கள் பற்றிக் கேட்ட வாசகமே இங்கே நேராக ஒரு குரு வாயால் வருகிறது!

இப்படிச் சொன்னவிட்டு அவர், தனக்குத் தெரியாததைத் தெரிந்ததாகக் காட்டி போதனை என்று பண்ணுவது எப்பேர்ப்பட்ட பாபம் என்று அவனுக்குச் சொல்கிறார். 'பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காது' என்பதோடு நாம் நிறுத்திக் கொள்கிறோம். உபநிஷத்தோ இங்கே அந்த ரிஷி வாயால் அதைவிட ரொம்ப பயங்கரமாகச் சொல்லியிருக்கிறது. பொய்யாக உபதேசம் என்று ஒன்று செய்கிறவன் ஒரு மரம் வேரோடு காய்ந்து போய் நசித்துவிடுகிற மாதிரி நசித்தே போய்விடுவான் என்று ரிஷி சொல்கிறார். அவன் இஹம், பரம் இரண்டையும் இழந்து நாசமடைவான் என்று இதற்கு அர்த்தம் என்று ஆசார்ய பாஷ்யம்.

இந்த உபாக்யானத்திலிருந்து இரண்டு முடிவுகள் கூறப்படுகின்றன என்று ஆசார்யாள் காட்டுகிறார். ஒன்று: யோக்யதையுள்ளவன், மரியாதை முறைப்படி வந்து கேட்டால், தெரிந்தவன் சொல்லிக் கொடுத்தே ஆகணும் என்பது. இன்னொன்று: தெரியாதவன் ஒருகாலும் தெரிந்ததாகப் பொய் பண்ணிவிடக் கூடாது என்பது. 'ஒருகாலும், ஒரு நிலையிலும்' — 'ஸர்வாஸ்யபி அவஸ்தேஷு' என்று ஆசார்யாள் சொல்லியிருக்கிறார். அப்படி குரு லக்ஷணம், தெரிந்த ஸர்வத்தையும் கற்றுக் கொடுக்கணும்;

Koviloor Digital Library

தெரியாத ஒன்றைக்கூட தெரிந்தமாதிரி கற்றுக்கொடுத்து விடக்கூடாது என்றே உபநிஷத் காட்டும் குருமார்கள் இருந்திருக்கிறார்கள்.

குருஸ்தானத்திலிருந்த அந்தப் பெரியவர் — ஸுகேசர் — அவருடைய விஷயஞானம் போதாமையை நிச்சயப் படுத்தினவுடன் அந்தக் கோஸல ராஜபுத்ரன் வாயை மூடிக்கொண்டு ரதத்தில் ஏறிக்கொண்டு போய்விட்டான். 'வாயை மூடிக்கொண்டு' என்பதற்கு ஆசார்யாள் **'வ்ரீடித:'** என்று காரணம் காட்டியிருக்கிறார். அப்படியென்றால் 'வெட்கமுற்றவனாக' — அந்த வெட்கத்தினால் வாய் பேசாதவனாகி — போய்விட்டான் என்று அர்த்தம்.

இவருக்குத் தெரியவில்லையென்றால் அவன் வெட்கப்படுவானேன்? 'பாவம்! ஒரு பெரியவர். எத்தனையோ தெரிந்தவர். ஏதோ கொஞ்சம் அவருக்குத் தெரியவில்லை. தெரியாததைப் போய் அவரிடம் கேட்டு, அவ்வளவு பெரியவர் தம்முடைய அறியாமையை வாய்விட்டுச் சொல்லிக்கொள்ளும்படிச் செய்து விட்டோமே! இது மரியாதைப் பண்பாகாதே!' என்று வெட்கப்பட்டிருக்கலாம். இவன் கேட்டதில் அவர் ஒன்றும் embarrass ஆகிவிடவில்லை. ஆகாததால்தான் அவரே அப்புறம் பிப்பலாதரிடம் இந்த ஸம்பவத்தை ஸஹஜமாகச் சொல்லி அந்த ஷோடசகலா விஷயம் பற்றிக் கேட்கிறார். ஆனாலும் அவனுக்கு, தான் அவரை அப்படிக் கேட்டிருக்கப்படாது என்று தோன்றி, செய்யப்படாததைச் செய்தோமே என்பதில் வெட்கம் உண்டாயிருக்கலாம்.

குருவின் யோக்கியதையைப் பார்ப்பதும், சரணாகதி செய்வதும்

அல்லது...... ஒரு பெரிய விஷயத்திற்கே இங்கே 'எவிடென்ஸ்' கிடைப்பதாகவும் சொல்லலாம். வழி

Koviloor Digital Library

காட்டுகிறவர் என்றே நினைக்கப்பட்டு ஆச்ரயிக்கப்படும் ஒருவர் வழிகாட்ட முடியாதவர் என்று தெரிந்தபோது, தீர விசாரிக்காமல் இப்படிப்பட்ட ஒருவரிடம் வந்தோமே என்பதில் வெட்கப்பட்டுக் கொண்டே அந்தக் கோஸல ராஜபுத்ரன் அவருடைய திக்குக்கு ஒரு நமஸ்காரம் பண்ணிவிட்டு போனான் என்றும் வைத்துக்கொள்ளலாம். அதாவது குருவின் யோக்யதாம்சங்களை நன்றாக உறுதிப்படுத்தித் தெரிந்து கொண்ட பிறகே அவரை ஆச்ரயித்து உபதேசம் கோர வேண்டும்; அப்படிப் பண்ணாமல் குரு வரணம் பண்ணிவிட்டு ஒருத்தரிடம் வந்து அவரிடம் சரக்கு இல்லை என்று தெரிந்தால் திக்குக்கொரு நமஸ்காரம் பண்ணிவிட்டுக் கிளம்பவேண்டியதுதான் என்று ஆகிறது. கற்றுக்கொள்ள வருகிறவனின் யோக்யதாம்சத்தை குரு நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்துவிட்டே சிஷ்ய ஸ்வீகரணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்பது போலவே, கற்றுக் கொள்ளப் போகிறவனும் அவருடைய யோக்யதையை நன்றாகத் தெரிந்து கொண்ட பிறகே அவரை குருவாக வரிக்க வேண்டும் என்ற பெரிய விஷயம் இங்கே வருகிறது.

'குருவிடம் பூர்ண சரணாகதி சிஷ்யன் பண்ணுவதே முக்யம்; அதுவே அவன் தர்மம், கடமை. அவர் எப்படி இருந்தாலும் இவன் அவரைத் தியாகம் பண்ணப்படாது. பதி எப்படி இருந்தாலும் பத்னி அவனைத் தியாகம் பண்ணாமல் சரணாகதையாக இருக்க வேண்டுமென்பது போலத்தான் இதுவும்' என்றெல்லாம் சொல்லுவதற்கு முரணாக இங்கே இருக்கிறதே என்ற பெரிய கேள்வியும் எழும்புகிறது......

'தேசிகன்' என்ற வார்த்தைக்கு அர்த்தம் சொல்ல ஆரம்பித்தேன். அது ரொம்ப தூரம் எங்கெங்கேயோ போய்விட்டது. 'வழி சொல்கிறவன், திசை காட்டுகிறவன்' என்று பாஷ்யம், பிரஸங்கம் பண்ண ஆரம்பித்தது [சிரித்து]

Koviloor Digital Library

'அதிகப்ரஸங்க'மாக திசை தப்பி, வழியை விட்டு எங்கேயோ போனமாதிரி..... இல்லை, இதெல்லாமும் குரு-சிஷ்யாள் topic–தான். அதில் ஒரு பெரிய கேள்வி: 'கேள்வி கேட்காமல், யோக்யதை பார்க்காமல் [குருவிடம் சிஷ்யனின்] சரணாகதியா? யோக்யதை பார்த்தே [குரு]வரணம்; இல்லை என்று தெரிந்தால் த்யாகம் செய்வதா?

யோக்யதையை நன்றாகத் தெரிந்துகொண்டுதான் குரு என்று ஒருத்தரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அப்புறம் அவரிடமேதான் சரணாகதி என்று இருக்கவேண்டும் — அவர் வேறே மாதிரியெல்லாம் தெரிந்தால்கூட [அவரிடம் சிஷ்யனாகச் சென்றவன்] மனஸ் கொஞ்சங்கூட மாறாமல் அவரிடமேதான், அவரே சரண்யர் [புகலிடமானவர்] என்று இருக்கவேண்டும் — இதுதான் பதில்.

குருவும் சீடராகும் உயர்பண்பு

தேசிகன் என்றால் அவன் வழிகாட்டியாக வேண்டும். ஒரே லக்ஷ்யத்திற்கு அநேக வழி, கிளை வழி, சுற்றுவழி, குறுக்கு வழி, மெய்ன் ரோட், ஒற்றையடிப் பாதை என்று பல இருக்கும். அதில் எல்லாவற்றிலும் அந்த தேசிகன் வழிகாட்ட வேண்டுமென்பதில்லை. ஸர்வஜ்ஞரான நம்முடைய ஆசார்யாள், வித்யாரண்யாள் மாதிரியானவர் களைத் தவிர மற்ற குருமாருக்கு அது ஸாத்யமுமில்லை. அப்போது தெரியாத வழியை ஒருத்தன் வந்து கேட்டுவிட்டால் ஸங்கோசப்படாமல் ஸத்யத்தை சொல்லிவிடணும். அவன் கேட்ட வழியைத் தாமும் தெரிந்து கொள்ளவேண்டும் என்று நினைத்து, குரு ஸ்தானத்திலுள்ள தாமே, தெரிந்த இன்னொருவரிடம் போய் சிஷ்யனாக இருந்து கொண்டு கற்றுக்

Koviloor Digital Library

கொள்வாரானால் இன்னும் விசேஷம். நாம் பார்த்துக்கொண்டிருக்கும் உபநிஷத் ரிஷி அப்படித்தான். ஷோடசகலா புருஷ விஷயமாகத் தாமே பிப்பலாதரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக யதாவிதி அவரிடம் அடக்கமாக வந்தார். "அவன் கேட்ட புருஷன் பற்றியே தங்களை நான் கேட்டுக்கறேன்" என்றார்.

"அவன் கேட்ட நாளாக அந்தக் கேள்வி என் ஹ்ருதயத்திலே முள் தைச்சாப்பல பதிஞ்சு போச்சு" என்று அவர் சொன்னதாக இங்கே ஆசார்யாள் பாஷ்யத்திலே அழகாக மெருகேற்றிச் சொல்லியிருக்கிறார். 'தன்னை நாடி சிஷ்யன் என்று ஒருத்தன் வந்து கேட்கிறதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் குரு என்கிற தாம் இருக்கலாமா?' என்று சிஷ்யனை உத்தேசித்தும்; தன்னையே உத்தேசித்து, 'அந்த விஷயம் தனக்குத் தெரியாமலிருக்கலாமா? தெரியப் பண்ணிக்கணுமே!' என்று தவித்தும் இப்படி [இதயத்தில் முள் தைத்தாற்போல்] feel பண்ணியிருக்கிறார்.

முடிந்த மட்டும் அத்தனை வழியுமே கற்றுக் கொண்டு, அப்புறம் கற்றுக்கொடுக்கிறவனே உச்சியிலுள்ள தேசிகன்.

எல்லாம் தெரிந்தவன் என்று தன்னைப் பற்றி கர்வப்பட்டுக் கொண்டிருந்த சிஷ்யன் ச்வேதகேது அப்புறம் தகப்பனாரிடம் அடக்கமாக ப்ரஹ்மவித்யோபதேசம் பெற்றதைச் சொன்னேன். எல்லாம் தெரிந்தவர் என்று குருமாரிலும், விதிவிலக்காகத் தம்மைப் பற்றி கர்வப்பட்ட ஒருத்தர் கதை சொல்கிறேன்.

அவர் கர்க கோத்ரக்காரரான ஒரு ரிஷி. 'கர்க' என்பதன் அடியாக அந்த கோத்ரக்காரர்களை 'கார்க்யர்' என்பார்கள். இவரையும் உபநிஷத் அப்படித்தான் குறிப்பிடுகிறது. அது கோத்ரப் பெயர். அவருடைய அப்பா பெயர் 'பலாகர்' (Balaaka). அதை வைத்து அவரை 'பாலாகி'

Koviloor Digital Library

என்று கூப்பிடுவது. அவருக்கு 'த்ருப்த' [drupta] பாலாகி என்று உபநிஷத்தில்[1] அடைமொழி போட்டுப் பேர் சொல்லியிருக்கிறது. 'த்ருப்த' என்றால் 'கர்வம் கொண்ட'. 'தர்பம்' என்றால் கர்வம். 'த்ருப்தர்' – கர்வி.

அப்படிப்பட்டவரான அந்த ரிஷி காசிராஜனான அஜாதசத்ருவிடம், "உபதேசம் பண்ணி வைக்கிறேண்டா!" என்று சொல்லிக்கொண்டு போனார். அப்படிச் சொல்லிவிட்டு ஸூர்யன், சந்திரன், பஞ்சபூதங்கள்[2], திக்குகள், ப்ரதிபிம்பம், நிழல் என்றிப்படிப் பத்துப் பன்னிரண்டு[3] சொல்லி அவற்றை ப்ரஹ்மஸ்வரூபமாகச் சொல்கிறார். அவர் சொன்னது 'உபாதி ஸஹிதம்' எனப்படுவதான, அதாவது, மாயா ஸம்பந்தத்தினால் கட்டுப்பட்டதாகத் தோன்றும் ப்ரஹ்மத்தைப் பற்றியது தானேயொழிய, எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல், மாயைக்கு அப்பாற்பட்டு கட்டுப்பாடற்று உள்ள 'உபாதி ரஹித'மான ப்ரஹ்மம் அல்ல. அந்த நிர்குண ப்ரஹ்மத்தின் வேஷமாகவே ஸகலத்தையும் தெரிந்துகொள்வதுதான் நிஜமான ஞானம். அதைச் சொல்லிக் கொடுப்பதுதான் நிஜமான ப்ரஹ்ம வித்யை.

இவர் சொன்ன உபாதி ஸஹித ப்ரஹ்ம ஸமாசாரங்கள் அஜாதசத்ருவுக்கு ஏற்கெனவே தெரிந்தது தான். அதற்கும் மேலே உபாதிரஹித ப்ரஹ்ம வித்யையும் அவருக்குத் தெரியும். அதனால் இவர் ஒவ்வொன்றாகச் சொல்ல ஆரம்பித்தபோது அவர் [அஜாதசத்ரு] இடைமறித்து, "நிறுத்தும்" என்று சொல்லி, தான் எப்படி அந்த

1. பிருஹதாரண்யகம் 2.1.1
2. பிருத்வீ நீங்கலாக மற்ற நான்கு
3. பதினோரு வஸ்துக்களை

Koviloor Digital Library

வஸ்துக்களைப் பற்றித் தத்வார்த்தம் தெரிந்து கொண்டிருந்தாரோ அதைச் சுருக்கமாகத் தெரிவித்தார்.

இப்படி த்ருப்த பாலாகி அநேகம் சொல்லி ஒரு ஜீவனின் ஆத்மாவையும் உபாதி ஸஹித ப்ரஹ்மமாகவே சொல்ல, அதையும் ராஜா உபாதி ரஹிதமாகச் சொன்ன போது — இதொன்றைத் தெரிந்து கொள்ளத்தான் ப்ரஹ்மவித்யை என்று ஒன்று, அதைக் கற்பிக்கிற குரு, கற்றுக்கொள்கிற சிஷ்யன் என்றெல்லாமே பெரிய ஸம்ப்ரதாயம் ஏற்பட்டது; அப்படிப்பட்ட விஷயத்தை அவர் சுருக்கமாகச் சொன்னவுடன் — அந்த த்ருப்தர் மேலே ஒன்றும் சொல்வதற்கில்லாமல் வாயை மூடிக் கொண்டுவிட்டார்.

"நீர் சொல்லவந்ததெல்லாம் சொல்லியாகி விட்டதா?" என்று அஜாதசத்ரு கேட்டார்.

"ஆச்சு" என்றார்.

"இதைக்கொண்டு ஒருத்தன் ப்ரஹ்மஞானம் பெற முடியாது" என்று அவர் சொன்னார்.

அவ்வளவுதான் 'கர்வி' என்றே nickname வாங்கியிருந்தவர் ரூபமே மாறி, பரம விநய ஸம்பன்னராக ஆனார்! "அப்படியானா நான் உன்கிட்ட சிஷ்யனாகிக் கேட்டுக்கறேன்" என்றார்!

உபதேசம் கொடுக்கப் போனவர், "வாங்கிக் கொள்கிறேன்" என்கிறார்! ரிஷி, ப்ராம்மணர், ஒரு ராஜாவிடம், க்ஷத்ரியனிடம் குருவாகப் போய் சிஷ்யனாக மாறுகிறார்!

ச்வேதகேது, பாலாகி இரண்டு பேரும் கர்விகளாக இருந்தபோதிலும் ஸத்வித்யையில் நிஜமான ஆர்வம் கொண்டவர்களாக இருந்ததால், தங்களுக்குத் தெரியாத

Koviloor Digital Library

உசந்த வித்யை ஒன்று இருக்கிறது, அதை எடுத்துச் சொல்லக்கூடிய ஒருத்தர் இருக்கிறார் என்று தெரிந்தபோது கர்வத்தை அப்படியே விட்டு பணிவோடு உபதேசம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த விநயம் அதுவரை ஸம்ப்ரதாய வழியில் அவர்கள் வேறே வித்யைகள் கற்றுக் கொண்டதாலேயே அந்த மரபுச் சக்தி அவர்களுடைய கர்வத்துக்கும் உள்ளே போய்ப் போட்டிருந்த வித்து விளைந்து ஏற்பட்டதுதான். அவர்களுக்கு உபதேசித்த குருமார்களின் ஸொந்த விநயமும், அதோடு அநுக்ரஹமும் சிஷ்யர்களுடைய உள்ளுக்குள்ளே இந்த ஆர்வம், விநயம் இரண்டையும் உண்டாக்கி, [உரிய] ஸமயத்திலே அது வெடித்து முளைவிடப் பண்ணியிருக்கும்.

அரைகுறை: கர்வம்
முழுமை: விநயம்

அரைகுறைப் படிப்பாளிகள்தான் வித்யாகர்வம் கொண்டாடிக் கொள்வது. பூர்ணமாகக் கற்றறிந்தவர்கள் கர்வம் என்னவென்றே தெரியாமல் எளிமையாகவும் பணிவாகவுந்தான் இருப்பார்கள். 'நிறைகுடம் தளும்பாது'. பர்த்ருஹரி ச்லோகம் ஒன்று இருக்கிறது*:

யதா கிஞ்சித்–ஜ்ஞோ(அ)ஹம் த்விப இவ மதாந்த: ஸமபவம்
ததா ஸர்வஜ்ஞோ(அ)ஸ்மீத்யபவத்–அவலிப்தம் மம மந: |
யதா கிஞ்சித்–கிஞ்சித் புதஜந–ஸகாசாதவகதம்
ததா மூர்கோ(அ)ஸ்மீதி ஜ்வர இவ மதோ மே வ்யபகத: ||

தம்மையே வைத்துச் சொல்லிக் கொள்கிறார். "ஏதோ கொஞ்சம் தெரிந்து கொண்டிருந்த காலத்தில் கிஞ்சித்-ஜ்ஞனாக, அதாவது, சிற்றறிவினனாக இருந்த நான்

* 'நீதி சதகம்', 8.

Koviloor Digital Library

மதம் பிடித்த யானை மாதிரி 'நானே ஸர்வஜ்ஞன்' [அனைத்தறிவினன்] என்று கர்வப்பட்டுக் கொண்டிருந் தேன். அப்புறம் நல்ல அறிவாளிகளுடைய ஸத்ஸங்கம் கிடைத்து, கொஞ்சம் கொஞ்சமாக மேலும் மேலும் தெரிந்து கொண்ட பிறகுதான் நான் ஒன்றும் தெரியாத மூர்க்கன் என்ற நல்லறிவு உண்டாச்சு. ஜ்வரமாக என்னைப் பிடித்திருந்த மதமும் — கர்வமும் — போச்சு" என்று சொல்கிறார். ஆசார்யாள் பிரயோகிக்கும் அதே 'மூர்க்க' சப்தம் என்பதைக் கவனிக்கணும்.

அந்த ரிஷி 'த்ருப்த'ராக இருந்த ஜ்வரம் போய், வித்யா கர்வம் போனதோடு குல கர்வமும் போய், 'தாம் ப்ராமணன், ராஜா க்ஷத்ரியன்' என்பதையும் பொருட் படுத்தாமல் அஜாதசத்ருவிடம் உபதேசிக்கும்படிக் கேட்டுக் கொண்டார்.

"இப்படி வழக்கமே இல்லையே!" என்று முதலில் ஸம்ப்ரதாயத்தை மதித்துச் சொன்ன அஜாதசத்ரு அப்புறம் அவருக்கு இருந்த ஆர்வத்தைப் பார்த்து உபதேசம் கொடுக்கிறார்; வாய் வார்த்தையாய் மட்டுமில்லாமல் ஒரு நாடகம் மாதிரியே பண்ணிக் காட்டி!

இந்த ரீதியிலேயே இன்னொரு கதை கூட இருக்கிறது. ப்ரவாஹணர் என்று ராஜரிஷி, அவர்கிட்டே போய் கர்வபங்கப்பட்டுக் கொண்டு ச்வேதகேது அப்பாகிட்டே திரும்பி வந்து குமுறினான் என்று சொன்னேனோல்லியோ? அதைத் தொடர்ந்து அப்பாக்காரர், பிள்ளையாட்டம் [மாதிரி] கோபப்படாமல், 'ராஜாவுக்குத் தெரிந்தது தனக்குத் தெரியவில்லை என்றால் உடனே அவன்கிட்டே ஓடிப்போய் அதைத் தானும் கற்றுக் கொள்வதுதானே செய்யவேண்டியது?' என்று நினைக்கிறார். குருவாக இருந்தவர், பிராம்மண ரிஷி, க்ஷத்ரியனிடம் சிஷ்யனாவதற்கு ரெடியாக இருக்கிறார். பிள்ளையிடம்

Koviloor Digital Library

"ஸரி, நாம அங்கே போய் சிஷ்யாளா இருந்து கத்துப்போம், வா" என்கிறார்.

பிள்ளை, ஸத்வித்யையில் இருந்த ஆர்வத்தினால், தனக்குத் தெரியாத வித்யையைத் தெரிந்தவரிடம் போய்க் கற்றுக் கொள்கிறவன்தான். இருந்தாலும் இளரத்தமா? அதனால் இங்கே தான் யாரிடம் மானபங்கப் பட்டோமோ அவரிடமே போய்க் கற்றுக் கொள்ளவாவது என்கிற ரோஷம் அவனுக்கு வந்துவிட்டது. அப்பாவிடம், "நீயே போய்க்கோ!" என்று சொல்லி, தான் போகாமல் நின்றுவிடுகிறான்.

அப்பாக்காரர் மானாபிமானம் பார்க்காமல் தான்மட்டும் போகிறார்.

பொதுவாகச் சொல்வது என்னவென்றால், 'வித்யார்த்தி' என்று மாணவனுக்குப் பேர் சொல்வதற்குக் காரணம், வித்யையையே அர்த்தமாக, அதாவது கல்வியையே செல்வமாக, நினைத்து, அவன் மேலும் மேலும் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டு அந்தச் சொத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டியவன் என்பதுதான். அதே மாதிரி அவன்தான் 'தர்ப்பம்' என்கிற கர்வகுணம் இல்லாத விநயத்துடன் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்திச் சொல்வது. இதனால் 'விநீதன்' என்றே அவனுக்கு ஒரு பெயர் சொல்வது. ஆனால் இங்கேயோ சிஷ்யப் பிராயத்திலுள்ள ச்வேதகேது ஒரே முறைப்பாகவும், அந்த முறைப்பில் வித்யாக்ரஹணத்தில்கூட அலக்ஷ்யமாக வும் இருக்க, குரு ஸ்தானம் வஹிக்கும் அவனுடைய அப்பாதான் 'விநீத'ராகவும் 'வித்யார்த்தி'யாகவும் இருக்கிறார்!

ப்ரவாஹணரிடம் உத்தாலக ஆருணி போய் தமக்குத் தெரியாத வித்யையில் உபதேசம் தரும்படிக் கேட்கிறார்; பாலாகி விஷயமாக அஜாதசத்ரு [ப்ராம்மணருக்கு

Koviloor Digital Library

க்ஷத்ரியர் உபதேசிக்கலாமா என்று] யோஜித்தமாதிரியே ப்ரவாஹணரும் யோஜிக்கிறார்; அவரை இவர் 'ப்ரெஸ்' பண்ணி உபதேசம் பெற்றுக் கொள்கிறார் — என்பதாக ஒரு குருவுக்கே தன்னைக் குறைத்துக் கொண்டாகிலும் தெரியாத வித்யையை ஸ்வீகரிக்கும் விநயம் இருந்ததை உபநிஷத் தெரிவிக்கிறது.

உத்தாலக ஆருணியுடைய இந்த குணச் சிறப்புக்கு சாந்தோக்யமே இன்னொரு எடுத்துக்காட்டும் கொடுக்கிறது.* **'மஹாச்ரோத்ரியர்'** என்கப்படுகிற, விசேஷமான வேதக் கல்வியில் தேர்ந்த ஐந்து பேர். அவர்கள் ஆத்ம ஸம்பந்தமாக உத்தாலகரிடம் ஒரு விஷயம் தெரிந்து கொள்ளப் போகிறார்கள். அவர்களைப் பார்த்தவுடனேயே அவர், "இவ்வளவு பெரியவாளுக்கே தெரியாத விஷயம்னா அது நமக்கும் தெரிஞ்சுதான் இருக்காது. அதனாலே, எல்லாம் தெரிஞ்ச ராஜா அச்வபதிகிட்டே அவாளை அழைச்சுண்டு போவோம். தெரியாததை அவா மட்டுமில்லாம நாமும் தெரிஞ்சுப்போம்!" என்று எளிமையாக, கபடமில்லாமல் நினைக்கிறார். அப்படியே எல்லாரும் போய், அடக்கத்தோடு, வித்யையிலுள்ள ஆர்வத்தினால் தாங்கள் ப்ராம்மண ச்ரேஷ்டர்களாக இருந்தபோதிலும், க்ஷத்ரியரான அச்வபதியிடம் உபதேசம் கேட்டுக் கொள்கிறார்கள்.

எதற்குச் சொல்லவந்தேன் என்றால்: வழி சொல்லித்தருகிறவர் தாமே முதலில் ஸரியாகத் தெரிந்துகொண்டிருக்கணும். தெரிந்ததாக நினைத்துக் கொண்டு குரு ஸ்தானம் கொண்டாடிக் கொள்கிற ஒருவர், தெரிந்துகொள்ளவில்லை என்று ஏற்படும்போது அதை

* சாந்தோக்யோபநிஷத் 5.11

Koviloor Digital Library

மனஸார ஒப்புக்கொண்டு அப்புறமாவது குருஸ்தானத்திலிருந்து சிஷ்யஸ்தானத்திற்குக் கூச்சப்படாமல் இறங்கி வந்து தெரிந்து கொள்ளணும். "யாரார் வாய்க் கேட்பினும்" என்று திருவள்ளுவர் சொன்னாற் போல, தனக்குக் கீழ்ஸ்தானம் என்று நினைக்கிறவனிடமிருந்தும் தெரியாததை ஸ்வீகரித்துக் கொள்ளணும். குரு என்கிறவன் எந்நாளும், எவர்கிட்டேயும் [எவரிடமும்] சிஷ்யனாகவும் இருக்கத் தெரிந்துகொள்ளணும்*.

வழிகாட்டுகிறவன் முடிந்த மட்டில் எல்லா வழியுமே தெரிந்தவனாகத் தன்னை ஆக்கிக் கொள்ளணும் — ஸதாகால வித்யார்த்தியாக இருக்கணும். அப்படி வழியெல்லாம் வாழ்நாள் பூராவும் தெரிந்து கொண்டு சொல்கிறவனே தேசிகன்.

வழிகண்டவன்தான் வழிகாட்டவும் முடியும். இங்கே, [குரு விஷயத்தில்] கண்டவன் என்பதை, 'தான் சொல்கிற விஷயத்தை அநுபவப் பூர்வமாகக் கண்டு கொண்டவன்' என்று அர்த்தம் பண்ணிக்கணும்.

* இதற்கு ஸ்ரீசரணர்களே தலைசிறந்த உதாரண புருஷர். எவரிடமிருந்தும், எந்த வித்யை – கலை – அறிவியல் குறித்தும் கேட்டுக் கேட்டு நுணுக்கங்கள் தெரிந்துகொள்வதில் அவருக்கு இணை எவருண்டு?

'ஜகத்குரு' என்று தாம் சொல்லப்படுவதை அவர் ஏன் மறுக்காமலிருக்கிறார் என்று மாற்றார் ஒருவர் அவரையே கேட்டார். அப்போது அவர் முகம் கோணாமல், மனம் கோணாமல், "ஸம்ஸ்கிருத இலக்கண விதிகளில் 'பஹுவ்ரீஹி ஸமாஸம்' என்று உள்ளதன்படி 'ஜகத்குரு' என்றால் 'ஜகத் முழுதையும் தனக்கு குருவாகக் கொண்டவன்' என்று பொருள் ஏற்படுகிறது. அதை மனத்தில் கொண்டே 'ஜகத்குரு' என்று எனக்கு இந்தப் பீடத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கிற பட்டத்தை ஆக்ஷேபியாமல் ஏற்றுக் கொண்டிருக்கிறேன்" எனக் கூறினார்.

Koviloor Digital Library

மேல் நாட்டில் சொல்கிறார்கள், 'preacher பிரயோஜனமில்லை; teacherதான் வேண்டும்' என்று! 'ப்ரீச்சர்' என்றால் பிறத்தியாருக்குப் பிரகடனப்படுத்து கிறவர், அப்படிப் பண்ணுவதையே நோக்கமாகக் கொண்டவர் என்றும், 'டீச்சர்' என்றாலே தம்முடைய வாழ்க்கையிலேயே பாடத்தைப் பின்பற்றியொழுகிப் பிறருக்கும் எடுத்துக்காட்டுகிறவர் என்றும் அவர்கள் 'டிஸ்டிங்க்விஷ்' செய்கிறார்கள். 'ப்ரசார' என்ற வார்த்தையை வைத்தே 'preach' ஏற்பட்டது; 'காட்டுவது' என்பதற்கான க்ரீக் வார்த்தையின் அடியாக teach ஏற்பட்டது என்கிறார்கள். 'காட்டுவது' என்றால் 'வழி காட்டுவது'தான்; தாமே ப்ரத்யக்ஷ உதாரணமாக இருந்து 'காட்டுவது'ந்தான்! அப்படி இருக்கும்போது குரு வழிகாட்டியாக மாத்திரமில்லாமல் அவரே வழியாகி விடுகிறார்; வழி கொண்டு போய் முடிவாய் நிறுத்தும் குறிக்கோளும் ஆகிவிடுகிறார். "Way and the goal" என்று பைபிள் சொல்வது!

'தேசிகன்' விஷயமாக இத்தனையும்.

'புரோஹிதர்'

[குருவுக்கு உள்ள அநேகப் பெயர்களில்] 'புரோஹிதர்' பாக்கியிருக்கிறது. அநேக ஸம்ஸ்க்ருத வார்த்தைகளில் ஸம்யுக்தாக்ஷரம் என்ற கூட்டெழுத்துக்கள் வரும். உதாரணமாக 'சுக்லாம்பரதரம்' என்பதில் 'க்லா' என்பது ஒரு மெய்யெழுத்தும் ஒரு உயிர்மெய்யெழுத்தும் ஒன்றாகக் கூடிய எழுத்து. தமிழில் அப்படிப்பட்ட கூட்டெழுத்து களும், basic ஆகக் கூட்டொலிகளுமே கிடையாது. அதனால் 'சுக்லம்' என்பதைத் தமிழில் 'சுக்கிலம்' என்றுதான் எழுதுவார்கள். தமிழில் 'க்' முதலிய

Koviloor Digital Library

மெய்யெழுத்துக்கள் அதே வர்க்கத்தை — இந்த உதாரணத்தில் 'க' என்பதை — சேர்ந்த உயிர்மெய்யுடன் தான் சேரும். அதனால்தான் 'சுக்கில', 'பச்சை', 'மைத்துன', 'அப்பா', 'அம்மா' என்பது மாதிரியான கூட்டொலிகளே தமிழில் உண்டு. 'க்ருஷ்ணர்' என்று ஆரம்பத்திலேயே மெய்யெழுத்து தமிழில் வராதாகையால்தான் அதைக் 'கிருஷ்ண' என்பது. தமிழ்ப் புலவர்கள் 'ஷண'வும் தமிழில் வராது என்பதால் 'கிருட்டிண' என்றே சொல்வார்கள், எழுதுவார்கள். அதே ரீதியில் 'ப்ரோக்ஷணம்' என்பதைத் தமிழில் 'புரோட்சணம்' என்றே எழுதுவார்கள். 'ட்ச' என்று ஸம்ஸ்க்ருத 'க்ஷ' (க்ஷ)வைச் சொல்வதுகூட ஸரியில்லை என்று நினைக்கும் புலவர்கள் 'புரோக்கணம்' என்றே சொல்வார்கள். எதற்கு இந்தப் பேச்சு வந்திருக்கிறது என்றால், 'புரோஹிதர்' என்பதிலும் ஆரம்பம் 'புரோ' தானே? தலைகீழ்ப் பாடமாக இங்கே பல பேர் ஒரு தப்புப் பண்ணுகிறார்கள். என்ன தப்பு என்றால், 'ப்ரோக்ஷணம்' மாதிரிதான் இதுவும் மூலத்தில் 'ப்ரோஹிதர்' என்ற வார்த்தை என்றும் அதையே தமிழ் வழக்கில் 'புரோகிதர்' ஆக்கியிருக்கிறது என்றும் நினைக்கிறார்கள். இலக்கணமாக எழுதுவது மாதிரிப் பேச்சு வழக்கில் பண்ணுவதில்லை யாகையால், பேசும்போது 'ப்ரோஹிதர்' என்றே சொல்கிறார்கள். அது தப்பு. மூலமான ஸம்ஸ்க்ருதத்தி லேயே அது 'புரோஹிதர்'தான்; 'ப்ரோஹிதர்' இல்லை. 'புரா' என்றால் 'முன்னால்'. 'புராணம்' என்றால் முற்காலத்தில் நடந்தது. ,'புரோ–ஹித' என்றால் 'முன்னால் ஹிதம்'. ஒருத்தனுக்கு எது ஹிதமோ அதை முன்கூட்டியே சொல்பவர்தான் புரோஹிதர். 'ஹிதம்' என்றால் நல்லது. அது நல்லதாக இருப்பதோடு மாத்திரமில்லாமல் மனஸுக்கு ஸந்தோஷமாகவும் இருக்கும். ஸாதாரணமாக நமக்கு எதெது நல்லதோ அதெல்லாந்தான் மனஸுக்குப் பிடிக்காததாக இருப்பது! அப்படித்தான் உபநிஷத்தே

Koviloor Digital Library

வித்யாஸப்படுத்தி நல்லதை 'ச்ரேயஸ்' என்றும், மனஸுக்குப் பிடித்ததை, ப்ரியமானதை 'ப்ரேயஸ்' என்றும் சொல்கிறது[1]. நல்லதையே மனஸுக்கும் பிடித்த மாதிரியான முறையில் செய்வதும், சொல்வதுந்தான் ஹிதம்.

ஒரு கட்டி-கிழங்கு வந்து ரொம்பக் கஷ்டப் படுத்துகிறது. மேலே ஸரியான சூட்டிலே ஜலம் விட்டால், ஒத்தடம் கொடுத்தால் கஷ்டம் அப்போதைக்காவது, ஓடிப்போகிறது, "எதம்...மா இருக்கு" என்கிறோம். அந்த 'எதம்' என்பது 'ஹிதம்'தான். பாபம் நம்மை ஸம்ஸாரத்தில் கட்டிப் போட்டுக் கஷ்டப்படுத்துகிறது. இதுவும் ஒரு 'கட்டி'. பாபம் தீரப் புண்யம் பண்ண வேண்டும். அந்தப் புண்யம் ஸாதாரணமாக நமக்கு எரிச்சல் தரும் மருந்தாகவே இருக்கும். அப்படி இல்லாமல் அதையும் ஸௌக்யம் தரும் ஒத்தடமாக்கிக் கொடுப்பவர்தான் நமக்கு ஹிதம் செய்கிற, ஹிதமாக இருக்கும் குரு.

ஸத்யம் நல்லது. ஆனால் அது அநேகமாக மனஸுக்குப் பிடிக்காது. "ஸத்யத்தையும் ஹிதமாகச் சொல்லி, பிடிக்கிறமாதிரி பண்ணு: **ஸத்யம் ப்ரூயாத், ப்ரியம் ப்ரூயாத்**" என்று மநு சொல்கிறார்[2]. திருவள்ளுவரும்

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்

என்கிறார். 'தீமை இலாத', அதாவது ஹிதமாக!

'ஹிதோபதேசம்' என்று ஒரு புஸ்தகம். 'பஞ்சதந்த்ரக் கதைகள்' என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். நீதி உபதேசம் என்றால் ஸாதாரணமாக யாருக்குமே அது ரஞ்ஜகமாக இருக்காது. ஆனால் குழந்தைகளுக்குங்கூட நீதிபோதனை

1. கடோபநிஷத் 1.2.1,2
2. மநுஸ்ம்ருதி 4.138.

Koviloor Digital Library

பிடிக்கும்படியாகக் கதாரூபத்தில் மிருக-பக்ஷிகளைக்கூட பாத்திரங்களாக வைத்து பஹு ஸ்வாரஸ்யமாக விஷ்ணு சர்மா என்கிறவர் ஒரு புஸ்தகம் எழுதினார். அதற்குப் பேர்தான் 'பஞ்சதந்த்ரம்'. ஐந்து முக்யமான 'டாபிக்'குகளாகப் பிரித்து எழுதியதால் அப்படிப் பேர். அது கிறிஸ்து சகாப்த ஆரம்ப நூற்றாண்டுகளில் எழுதியது என்று வெள்ளைக்காரர்களே சொல்கிறார்கள். அதை base பண்ணி, இன்னமுங்கூட நைஸ் பண்ணி பல நீதிக் கதைகளாகச் சிறு வயசு மாணவர்களும் ஆசையாகப் படிக்கிற விதத்தில் நாராயணர் என்ற வங்காளியர் எண்ணூறு வருஷத்திற்கு முன் எழுதினதுதான் 'ஹிதோபதேசம்.' Middle school என்கிற நடுநிலைப் பள்ளிக்கூட கட்டத்தில் ஸம்ஸ்க்ருத மாணவர்களுக்கு 'ஹிதோபதேச'த்திலிருந்து பாடங்களும், ஹைஸ்கூல் வகுப்பு மாணவர்களுக்கு மூல 'பஞ்சதந்த்ர'த்திலிருந்து பாடங்களும் வைப்பதாக முன்னெல்லாம் நடந்து வந்தது.

சுதந்திர இந்தியாவில் கலாசாரக் குழிபறிப்பு

'முன்னெல்லாம்' என்றால் நம்முடைய கலாசாரத்திற்கு நன்றாகக் குழி பறித்த வெள்ளைக்காரர்களின் காலத்தில்! அவர்களுக்கும் மனஸ்ஸாக்ஷி உறுத்தி, அங்கே அங்கே, சில நல்லதும் பண்ணியதில் இப்படியொன்று பாடத்திட்டத்தில் சேர்த்திருந்தார்கள். ஸ்வதந்திரம் என்பதாக நமக்கு வந்து தேச கலாசாரம் விருத்தி செய்யப்படுவதாகச் சொல்லப்படும் தற்காலத்திலோ, அங்கங்கே உள்ள சின்ன மாறுபாடுகளை ஊதிப் பெரிசு பண்ணிப் பிரதேச கலாசாரம் என்று தாங்களாகவே ஸ்ருஷ்டி செய்திருக்கும் ஒரு குறுகின ஏற்பாட்டால், தேசம் முழுதற்குமே ஏற்பட்ட கலாசாரத்தை அமுக்கிப் போட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இதன் நிகர

Koviloor Digital Library

விளைவாக, கலாசாரக் குழிபறிப்பில் நம்மவர்களே வெள்ளைக்காரனைவிட ஆழக் குழிதோண்டி அவனையே நல்லவனாக்கியிருக்கிறார்கள்! கடைசியில் நடைமுறையைப் பார்த்தாலோ இந்தத் தேசம் முழுதற்குமான கலாசாரமோ, இட்டுக் கட்டி உண்டாக்கியுள்ள ப்ரதேச கலாசாரமோ எதுவும் ஜனங்களின் வாழ்முறையில் வராமல் அது வெள்ளைக்கார மோஸ்தரிலேயேதான் முன்னைவிட வேகமாக, ஆழமாக இறங்கிக் கொண்டிருக்கிறது. தேச கலாசாரத்திற்குப் பதில் பிரதேச கலாசாரம் என்பதில் ஒரு அங்கமாக இந்தத் தமிழ்நாட்டில் ஸம்ஸ்க்ருதக் கல்வியின் மென்னியைத் திருகியிருப்பதில் வெள்ளைக்காரன் பண்ணியிருந்த கொஞ்சம் நல்லதும் போய்விட்டது! அவன் கொஞ்சம் பறித்து விட்டிருந்த குழியை இப்போது அகாதமாகவே தோண்டியிருக்கிறது!......

ச்ரேயஸான நீதி போதனையை ப்ரேயஸாகவும் ரஞ்ஜகமாக ஆக்கித் தருவது 'ஹிதோபதேசம்' என்று சொல்ல வந்தேன்.

வித்யாகுருவும் தீக்ஷாகுருவும்

வருங்காலத்திற்கு எது ஹிதமோ அதற்கு முன்கூட்டியே வழிசொல்லித் தருகிறவர்தானே குரு? அதனால் அவர் 'புரோஹிதர்' ஆகிறார். எட்டு வயஸில் ப்ரம்மசாரியாகி குருகுலம் சேர்ந்துவிட்ட சிஷ்யனுக்கு ப்ரம்மசர்ய ஆச்ரமத்தில் அவன் எப்படி ஒழுகவேண்டும் என்று சொல்லிக் கொடுப்பதோடு மாத்திரம் அவர் முடித்து விடுவதில்லை. பிற்பாடு, வாழ்நாள் முழுதற்குமேயான எல்லா விஷயங்களும் உபதேசிக்கிறார். இவரை 'வித்யா குரு' என்பார்கள். எல்லா வித்யைகளும், அதாவது கல்வியின் பல துறைகளையும் போதிக்கிறவர் இவர். ஆனாலும் ஆத்ம வித்யையை மாத்திரம் காரிய ரூபத்தில்

Koviloor Digital Library

உடனே ஏற்று அநுஷ்டிக்கச் செய்கிற அளவுக்கு போதிக்கமாட்டார். அதிலும் அறிவை வளர்த்துக் கொடுத்து, அதன் லக்ஷ்யத்தில் ஒரு பிடிமானத்தையும் உண்டாக்கித் தருவாரானாலும், அதை நடைமுறையில் ஏற்றுச் செய்வதற்கு ஸந்நியாஸப் பக்குவம் அவசியம் என்பதால், முதல் ஆச்ரமத்தில் [ப்ரம்மசரியத்தில்] இருக்கும் சிஷ்யனை அவர் இரண்டாம் ஆச்ரமத்திற்கு [கிருஹஸ்தாச்ரமத்திற்கு]த் தான் அனுப்பி வைப்பார்; நாலாம் ஆச்ரமத்திற்கு [ஸந்நியாஸத்திற்கு] அல்ல. பிற்பாடு அந்த ஆச்ரமம் கொடுத்து ஆத்மவித்யை — ப்ரஹ்ம வித்யா எனப்படுவதை — மட்டுமே போதிப்பவரை 'தீக்ஷா குரு' என்பது. தெய்வங்களைக் குறித்து ஜபிப்பதற்காக இருக்கும் பல விதமான மந்த்ரங்களில் ஒன்றை உபதேசிக்கிறவரையும் தீக்ஷா குரு என்று சொல்வதாக ஏற்பட்டிருக்கிறது.

எந்த குருவானாலும் 'வரு முன் காப்பது' என்றபடி, சிஷ்யாள் தப்புப் பண்ணாதபடி முன்னதாகவே ஜாக்ரதை பண்ணி அவர் உபகரிப்பார். அதனால் 'புரோ'ஹிதர் என்று பேர். 'ஜாக்ரதை பண்ணி' என்னும்போது கொஞ்சம் மிரட்டி, உருட்டி, எச்சரிக்கை பண்ணுவதாக த்வனிக்கலாம். இவர் அப்படி மிரட்டல்-உருட்டல் பக்கம் போகாதவர். பக்வமாக, பதமாகவே சொல்கிற 'ஹிதர்'! ஏற்கெனவே வந்துவிட்ட கட்டிக்கு வைத்யம் பண்ணுவதோடு, இனி மேலும் பாபம் சேர்க்காமலிருக்கவும் preventive medicine [பின்னர் நேரக்கூடிய நோய்க்குத் தடுப்பு மருந்து] கொடுக்கும் புரோ-ஹிதராக குரு இருக்கிறார்.

குருவின் 'பயங்கர'ப் பொறுப்பு!

புரோஹிதருக்கும் குருவுக்கும் வித்யாஸம் காட்டினாற்போலவும் ஒரு சாஸ்த்ர வசனம் இருக்கிறது:

Koviloor Digital Library

ராஜானம் ராஷ்ட்ரஜம் பாபம்; ராஜபாபம் புரோஹிதம் |
பர்த்தாரம் ஸ்த்ரீ–க்ருதம் பாபம்; சிஷ்ய பாபம் குரும்
வ்ரஜேத் ||*

ஸாதாரணமாக நினைப்பது, ராஜா ஜனங்களை ஆட்டிப் படைப்பவன், அவனையும் ஆட்டிப் படைப்பவர் ராஜகுரு, பதி என்கிறவன் பெண்டாட்டியை ஆட்டிப் படைப்பவன், குரு என்பவர் சிஷ்யனை ஆட்டிப் படைக்கிறவர், என்று. ஆனால் நம்முடைய தர்ம சாஸ்திரங்களில் அந்த நாலு பேருக்கும் அவர்கள் யார் யாரை ஆட்டிப் படைப்பதாகத் தோன்றுகிறதோ அந்த நாலு பேரை நல்வழிப்படுத்தியேயாக வேண்டிய பெரிய பொறுப்பைக் கொடுத்திருக்கிறது. ராஜா ப்ரஜைகளை நல் வழிப்படுத்தணும்; ராஜகுரு அந்த ராஜாவையே நல்வழிப் படுத்தணும்; அகமுடையான்மார்கள் பெண்டாட்டிமார் களை நல்வழிப்படுத்தணும்; குரு என்று இருப்பவர் சிஷ்யாளை நல்வழிப்படுத்தணும். இப்படி அவர்கள் கட்டாயப் பொறுப்பு ஏற்க வேண்டும். பயங்கரமான பொறுப்பாகவே கொடுத்திருக்கிறது. என்ன பயங்கரம் என்றால், அப்படி அவர்கள் நல்வழிப்படுத்தத் தவறினால், அந்த ப்ரஜைகளும், ராஜாவும், பெண்டாட்டியும், சிஷ்யர்களும் பண்ணுகிற பாபம் முறையே அந்த ராஜாவையும், ராஜகுருவையும், அகமுடையானையும், குருவையுமே சேரும். இப்படி ஒரு பெரிய பொறுப்பு ஏற்பதால்தான் அந்த நாலு பேருக்கும் அவர்கள் பொறுப்பிலுள்ள நாலுபேரை அடங்கி நடக்கும்படிச் சொல்லியிருப்பது.

* பல அறநூல்களிலிருந்து ச்லோகங்களைத் தொகுத்தளிக்கும் 'நீதி சாஸ்த்ர'த்தில் 60–வது ச்லோகமாக இடம் பெறுவது.

Koviloor Digital Library

புரோஹிதரும், குருவும்

அந்த தர்ம வ்யவஸ்தையை இங்கே சொல்லக் காரணம், [குறிப்பிட்ட] ச்லோகத்தில் 'ராஜாவின் புரோஹிதர்', 'சிஷ்யனின் குரு' என்பதாகப் புரோஹிதரையும் குருவையும் வெவ்வேறு ஆஸாமிகளாகச் சொல்லியிருப்பதுதான்: **ராஜ பாபம் புரோஹிதம், சிஷ்ய பாபம் குரும்.**

அப்படியானால் குரு வேறே, புரோஹிதர் வேறேயா?

குரு என்று இந்த ச்லோகத்தில் சொல்வது – இங்கே மாத்திரம் இல்லை; பொதுவாகவே அநேக இடங்களில் சொல்வது – பால்யத்தில் உபநயனம் ஆனதும் எவரிடம் போய் ஒருத்தன் குருகுலவாஸம் செய்து படிப்பானோ, அவரைத்தான். அவர் க்ருஹஸ்தரே. என்றாலும் ரொம்பப் பூர்வ காலங்களில் அவர் காட்டில் இருந்து கொண்டிருந்தார். நாட்டிலிருந்து சிஷ்யர்கள் அங்கே போய் கூட வாஸம் பண்ணி வித்யாப்யாஸம் செய்தார்கள். அதற்கப்புறம் அவர் காட்டில் இல்லாவிட்டாலும், சிஷ்யர்களாக வந்தவர்களின் வீடுகளோடு ஸம்பந்தப் படாமல் ஒதுங்கித் தனியாக குருகுலம் வைத்துக் கொண்டு பாடம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார். வெளியூரிலிருந்தும் பசங்கள் அவரிடம் வந்து படிப்பார்கள். படிப்பானதும், காட்டு குருகுலம், நாட்டு குருகுலம் எதுவானாலும் அதை விட்டு விட்டு சிஷ்யர்கள் அகத்திற்குப் போய்க் கல்யாணம் கார்த்திகை செய்து கொண்டு க்ருஹஸ்த கர்மாக்களைச் செய்ய ஆரம்பிப்பார்கள். அப்போது அவற்றை அவர்களுக்குச் செய்விக்க வேறே புது குருமார் வேணும்தானே? அப்படி ஏற்பட்ட இரண்டாவது குருவுக்குத்தான், ஜெனரலாக, 'புரோஹிதர்' என்றே தனிப்பெயர் கொடுத்து வைத்தது. பொது ஜனங்களாக உள்ள க்ருஹஸ்தர்கள் பல பேருக்கு

Koviloor Digital Library

ஒருவரே புரோஹிதராக இருப்பார். ஆனால் ராஜாவுக்குத் தனியாக ஒருவர் அப்படி இருப்பார். ராஜாவும் பால்ய தசையில் காட்டிலேயோ, நாட்டிலேயே ஓதுக்குப் புறத்திலேயோ இருந்த குருவிடம் போய்த்தான் வித்யாப்யாஸம் பண்ணித் திரும்பியிருப்பான். ராஜாவான அப்புறமும்கூட அவனுக்குள்ள வஸதியினால் அவரை அவ்வப்போது — அன்றன்றுங்கூட — ரதம் அனுப்பி வரவழைத்து அட்வைஸ் கேட்டுக்கொள்வான். ராமாயணத்தில் வஸிஷ்டரை அயோத்தி ராஜஸதஸில் அடிக்கடிப் பார்க்கிறோமில்லையா? ராஜா அரண்மனை யில் தனக்கென்றே தனியாக வேறே ஒரு புரோஹிதர் வைத்துக் கொள்வதாகவும் நிறையவே இருந்திருக்கிறது.

இப்படி நாட்டிலேயே இருந்துகொண்டு வயஸுக்கு வந்துவிட்ட ராஜாவுக்கு அட்வைஸ் பண்ணுபவரைத்தான் ச்லோகத்தில் 'புரோஹிதர்' என்றும், மற்ற குருமார்களை எல்லாம் குரு என்றும் வித்யாஸப்படுத்திச் சொல்லியிருக் கிறது.

ஆகக்கூடி, புரோஹிதரும் குருதான் — குரு செய்வதான நல்வழி காட்டும் கடமையைச் செய்பவர்தான்; ஆனால் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள், குறிப்பிட்ட கார்யத்திற்காக ஏற்பட்டவர்.

ஒருத்தனுக்கு வருங்கால ஹிதத்தை முன்னதாக எடுத்துச் சொல்பவர் 'புரோஹிதர்' என்று நிர்வசனம் [பத இலக்கணம்]. அப்படிச் சொல்வதையே அவன் மனஸுக்கும் பிடித்தமான முறையில் ஹிதமாகச் சொல்கிறவர் என்றும் சேர்த்துக் கொள்ளலாம். தற்காலத்தில் நாம் வித்யாப்யாஸத்திற்குப் புரோஹிதரிடம் போவதில்லை. இப்போது நமக்குத் தெரிந்த புரோஹிதர் 'பண்ணி வைக்கிற வாத்தியார்'தான். ஆதிநாளில் குருகுலத்தில் படிப்பு முடித்து வந்து, விவாஹம் பண்ணிக்

Koviloor Digital Library

கொண்டவனுக்கும் வேதகர்மாக்கள் — சின்ன இஷ்டிகளிலிருந்து பெரிய யாகங்கள் வரையிலானவை — சொல்லிக் கொடுத்துப் பண்ணிவைப்பதற்கு ஒரு குரு இருக்கத்தான் செய்தார். இப்போது எல்லாம் தேய்ந்து கல்யாணம், அபரகார்யம் [உத்தரக்ரியை], ஆவணியா வட்டம், பூணூல் கல்யாணம் இப்படிச் சிலது பண்ணுவிக்க ஒருத்தரை வைத்துக் கொண்டிருக்கிறோம். இவர்தான் இப்போது கொஞ்சத்தில் கொஞ்சம் நமக்கு குருஸ்தானம். அந்தந்தச் சடங்காவது நாம் 'ஆசார்யமுகமாக'ப் பண்ணுவதற்கு அவர்தான் இருப்பதால் அந்த ஸ்தானம். அவரும் முன்னதாக, 'புரோ', அகத்துக்கு வந்து, எப்போது அப்பா ச்ராத்தம், எப்போது வரலக்ஷ்மி வ்ரதம் என்று சொல்லிவிட்டுப் போகிறார். ஆனால் அது அகத்தைச் சேர்ந்தவர்களுக்கு 'ஹித'மாயிருக்குமா என்பது ஸந்தேஹம்!

ஒரு விஷயத்தில் அநேகப் புரோஹிதர்கள் ரொம்பவும் ஹிதர்களாக இருப்பதாகக் கேள்வி — க்ருஹஸ்தர்கள் எத்தனை அசாஸ்த்ரீயமானதையும் 'சாஸ்த்ரோக்தம்' என்ற பொய் ஜோடனைக்குள்ளே பண்ண ஆசைப்பட்டாலும், அவர்கள் மனஸு௱ப்படியே, இன்னுங்கூட தைரியம் கொடுத்தும், பண்ணிவைப்பது; அவர்கள் இஷ்டப்படி, ஸௌகர்யப்படி கர்மாக்களைக் குறைத்துப்பண்ணுவது; வேளை, காலம் தப்பிப் பண்ணுவது என்பதிலெல்லாம் ரொம்ப ஹிதமாயிருப்பதாகக் கேள்வி!

முன்னாள் புரோஹிதர் எதுதான் நிஜமாகவே ஹிதமோ அதையே கேட்கவும் ஹிதமாகச் சொல்வார். 'சொல்கிறவர்' என்றால் சொல்லி அதோடு விட்டு விடுகிறவரில்லை. தாம் சொன்னபடி [சிஷ்யன்] செய்யும்படியாகவும் தூண்டிவிடுவார். அந்த சக்தி அவருக்கு இருந்தால்தான் 'குரு' என்ற பெரிய பெயர் பொருந்தும்.

Koviloor Digital Library

சீடன் முயற்சியும், குருவின் அருளும்

இப்படிச் சொன்னதால் ஒரு குரு எல்லா சிஷ்யர்களையும் அவர் சொல்கிறபடியே நூறு பெர்ஸென்டும் நடக்கப் பண்ணிவிடுவாரென்று அர்த்தமில்லை. ஒவ்வொரு ஜீவனுக்கும் இருக்கப்பட்ட அந்தஃகரணத்தின் பக்குவ ஸ்திதிக்கும் இங்கே இடம் கொடுக்கத்தான் வேண்டும். சிஷ்யனின் சித்த பக்வம், புத்தி தீக்ஷ்ண்யம் ஆகியவை வித்யா ஸ்வீகரணத்தில் முக்யமான இடம் பெற்றவையாகும். அவற்றோடு விநயம் முக்யமாக வேண்டும். பரம விநயத்தினால் அப்படியே குருவுக்கு சரணாகதி பண்ணுகிறவன் விஷயத்தில்தான், அவன் மந்த புத்திக்காரனாக இருந்தால்கூட குருவின் தூண்டுதலே பூர்ணமாக வேலை செய்து பூர்ண ஞானத்தைக் கொடுப்பது. அதைத் 'தூண்டுதல்' என்று சொல்லி முடித்து விடுவதுகூட ஸரியில்லை. குருவின் க்ருபா சக்தியே, சிஷ்யனுக்கு வேலை வைக்காமல் ஞானத்தை அவனுக்குள் ரொப்பி [நிரப்பி] விடுவதாகவே சொல்லணும். அது விதிவிலக்குத்தான். ஏனையவர்களும் எந்த அளவுக்கு விநயமாகப் படிமானத்துடன் கற்கிறார்களோ அந்த அளவுக்கு குருவின் க்ருபையும் வெவ்வேறு டிகிரிகளில் அவர்களைத் தூண்டிவிடும். அப்படி இல்லாதவர்களை அவர் ஏதோ தாற்காலிகமாகத் தூண்டிவிடலாம். அப்புறம் அவர்களுடைய கீழ்ப்படிதல் போதாத அந்தஃகரணம் விரைத்துக் கொண்டு தன் போக்கிலேயே எழும்பிவிடும். வித்யை ப்ரயோஜனப்படாமல் போகும்.

உபநிஷத்தைப்* பார்த்தாலே தெரியும் — ப்ரஜாபதி அஸுரராஜாவான விரோசனனுக்கும் உபதேசம் பண்ணினார்; தேவராஜாவான இந்த்ரனுக்கும் உபதேசம்

* சாந்தோக்யம் VIII. 7

Koviloor Digital Library

பண்ணினார். ஆனாலும் அஸுர ராஜா விரோசனன் தேஹாத்ம புத்தியுடன் [உடலேதான் ஆத்மா என்ற அறிவுடன்] மட்டும் நின்றுவிட்டான். இந்த்ரன்தான் தேஹாதீதமான நித்ய ஸத்ய நிஜ தத்வமாக ஆத்மாவைத் தெரிந்து கொண்டான். காரணம், குருவுக்கும் அவர் சொல்லித் தருகிற வித்யைக்கும் எந்த அளவுக்கு ஒரு சிஷ்யன் கீழ்ப்படிதலுடன் அந்தஃகரணத்தைத் திறந்து விடுகிறானோ அதைப் பொறுத்தே அவனுக்குள் தத்வம் ஏறும், ஊறும் என்பதுதான்.

சிஷ்யன் எப்படிப்பட்டவன் என்பதும் வித்யா ஸ்வீகரணத்தில் முக்யம். அதுதான் விஷயம் என்ற அளவுக்கு, கொஞ்சம் 'எக்ஸ்ட்ரீ'மாகவே பவபூதி சொல்லி யிருக்கிறார்.

விதரதி குரு: ப்ராஜ்ஞே வித்யாம் யதைவ ததா ஜடே
ந து கலு தயோர்–ஜ்ஞானே சக்திம் கரோத்–யபஹந்தி வா |
பவதி ச தயோர்–பூயான் பேத: பலம் ப்ரதி தத்–யதா
ப்ரபவதி சுசிர்–பிம்ப–க்ராஹே மணிர்–ந ம்ருதாம் சய: ||

என்ன சொல்கிறாரென்றால்: நல்ல புத்திமானான ஒரு மாணவன் இருக்கிறான். 'ப்ராஜ்ஞன்' என்று அவனை ச்லோகத்தில் சொல்லியிருக்கிறது. "ரொம்ப ப்ராஜ்ஞன்–னு எண்ணம்!" என்று நாம்கூடச் சொல்கிறோம்! ப்ராஜ்ஞன் என்றால் புத்திசாலி என்பது மட்டுமில்லை; சித்த பக்வம், அதற்குரிய விநயம் ஆகியவையும் உள்ளவன். அப்படிப்பட்டவனுக்கும் குரு பாடம் சொல்கிறார். 'ஜடம்' என்று ச்லோகத்தில் சொல்லியிருக்கும் மந்த புத்திக்காரனுக்கும் சொல்லித் தருகிறார். கீழ்ப்படிதலிலும் இவன் ஜடம். இப்படி, வித்யாஸமான இரு தினுஸு

Koviloor Digital Library

வித்யார்த்திகளுக்கும் ஒரே மாதிரிதான் வித்யாஸம் பார்க்காமல் பாடம் நடத்துகிறார் குரு. இது ச்லோகத்தின் முதல் பாதம் [நான்கு வரிகளில் முதல் வரி].

அடுத்த பாதத்தில் அவர் சொல்வதைத்தான் 'எக்ஸ்ட்ரீம்' என்று சொன்னேன். **"ந து கலு தயோர் ஜ்ஞாநே சக்திம் கரோதி அபஹந்தி வா"** என்று இங்கே சொல்கிறார். அவர்களுடைய அறிவுக்கு — ஸ்வபாவமாக அவர்களுக்குள்ள அறிவுக்கு — அவர் புதுசாகச் சக்தி ஊட்டவுமில்லை; அந்த அறிவின் சக்தியை அபஹரிக்கவுமில்லை. அதாவது சிஷ்யனின் அறிவுத் திறனை குரு கூட்டவுமில்லை, குறைக்கவுமில்லை.

இப்படி அவர் சொல்வது, ஒரு சிஷ்யனுக்கு வித்யை ஏறுவதும் ஏறாததும் முழுக்க அவனுடைய புத்தியைப் பொறுத்ததே என்ற அபிப்ராயத்தைக் கொடுக்கிறது. இதை 'எக்ஸ்ட்ரீம் வ்யூ' — ஒரு சார்பாகவே சற்று 'அதி'யாகப் பேசுவது — என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. சொன்னவர் ரொம்பப் பெரியவர். ஆத்ம சாஸ்த்ரம், நீதி சாஸ்த்ரம் எல்லாம் நன்றாகத் தெரிந்த மஹாகவி. ஆனாலும் ஒரு கவி தாம் எடுத்துக்கொண்டுள்ள ஒவ்வொரு விஷயத்திற்கும் அந்தந்த ஸமயத்தில் ரொம்ப அழுத்தம் கொடுத்துப் பேசினாலே அது நன்றாக மனஸில் பதியும் என்பதால் எக்ஸ்ட்ரீமாகவும் சிலது சொல்கிறது வழக்கம். அந்த ஸந்தர்பத்தில் அப்படிச் சொன்னால்தான் பளிச்சென்று விஷயம் நிற்கும்.

ப்ரக்ருத ச்லோகம் [தற்போது நாம் எடுத்துக் கொண்டுள்ள ச்லோகம்] 'உத்தர ராம சரிதம்' என்கிற நாடகத்தில் வருகிறது. அதிலே வால்மீகி மஹர்ஷியின் ஆச்ரமத்திலே லவ-குசர்கள் அவரிடம் வித்யாப்யாஸம் செய்கிறபோது அவர்களோடு கூடப் படித்த ஸஹவித்யார்த்தியான ஆத்ரேயி என்ற பெண் சொல்கிற

Koviloor Digital Library

வசனமே இந்த ச்லோகம். "லவ-குசர்கள் பாடத்தை அப்படியே பூர்ணமாக க்ரஹித்துக் கொண்டார்கள். அதற்கான 'ப்ரஜ்ஞா' என்ற நல்லறிவாற்றலும், 'மேதா' என்பதான விஷயத்தை மறக்காமல் ஸ்திரமாகக் காப்பாற்றிக் கொள்கிற சக்தியும் அவர்களுக்கு இருந்தது. அல்ப ப்ரஜ்ஞையும் அல்ப மேதஸுமே உள்ள என்னால் அவர்களோடு தாக்குப் பிடிக்க முடியவில்லை. அதனால் வால்மீகி ஆச்ரமத்தை விட்டு விட்டு அகஸ்த்யரிடம் கல்வி கற்கப் போகிறேன்" என்று அவள் சொல்லிக் கொண்டு போகும்போதே இந்த ச்லோகம் சொல்கிறாள். குரு ஒரே மாதிரி, ஒரே க்ளாஸில், மாணவர்களை ஒன்றாகவே சேர்த்து வைத்துக் கொண்டு போதித்த போதிலும் ப்ராஜ்ஞர்களான லவ-குசாள்தான் பூர்ணமாக க்ரஹித்துக் கொண்டார்கள், தன்னால் முடியவில்லை என்று சொல்லும் அந்த ஸந்தர்ப்பத்தில் லவ-குசாள் பெருமையும் தன்னுடைய சிறுமையும் பளிச்சென்று தெரியும்படி அவளைக் கவி பேசவைக்க வேண்டியிருந்தது. அதனால் குருவான வால்மீகி மஹர்ஷியின் 'பார்ட்' என்ன என்று காட்டாமல் — குருவின் க்ருபைக்கு சிஷ்யனுடைய அறிவைத் தூண்டிக் கொடுக்கும் 'பார்ட்' உண்டு என்பதை இங்கே கொண்டு வராமல் — சிஷ்யர்களின் தரத்தைப் பொறுத்தே வித்யாப்யாஸம் என்ற அபிப்ராயத்திற்கு மாத்திரம் அழுத்தம் தந்து சொன்னால்தான் கவியின் உத்தேசம் பூர்த்தியாகும் என்பதனால் அப்படிச் சொன்னார்.

இப்படி, 'சிஷ்யனின் அறிவை குரு கூட்டவுமில்லை, குறைக்கவுமில்லை' என்று வருவது இரண்டாம் பாதம்.

அடுத்த பாதம்: **பவதி ச தயோர்–பூயாந்–பேத: பலம் ப்ரதி தத் யதா.** [பொருள் விளக்கம்:] குரு எல்லாருக்கும் ஒரே மாதிரி சொல்லிக் கொடுத்தாலும் பலனை, ரிஸல்டை,

Koviloor Digital Library

பார்த்தால் ப்ராஜ்ஞ சிஷ்யனுக்கும் ஜட சிஷ்யனுக்கும் இடையே ரொம்ப வித்யாஸமாக இருக்கிறது. 'பேத பலம்' என்றால் வித்யாஸமான ரிஸல்ட். ப்ராஜ்ஞன் வித்யையை நன்றாக ஸ்வீகரித்துத் தேர்ச்சி பெறுகிறான்; ஜடனோ பழையபடி ஒன்றும் தெரியாத மண்டுவாகவே இருக்கிறான். இதுதான் 'பேத பலம்'. 'ப்ரதி தத் யதா' — 'இது எப்படி இருக்கிறதென்றால்' என்று மூன்றாம் பாதத்தை முடித்துவிட்டு நாலாம் பாதத்தில் ஒரு உவமை கொடுக்கிறார்.

விஷயம் ரஸமான முறையில் மனஸுக்குள் தைப்பதற்குக் கவிகள் கையாள்கிற யுக்தி, உவமை கொடுப்பதுதான். 'உபமா' என்று மூலப் பெயர். அதுவே தமிழில் 'உவமை' என்றாயிற்று. அதில் உபமானம், உபமேயம் என்று இரண்டு அங்கங்கள். எடுத்துக்கொண்ட விஷயம் — உபமேயம். எதை ஒப்புக் காட்டி அது விளக்கப்படுகிறதோ அது உபமானம்.

இங்கே உபமேயம் என்னவென்றால்: குரு என்று ஒருத்தர்; அவருடைய சிஷ்யர்களில் ப்ராஜ்ஞன் என்று ஒருத்தனும் ஜடன் என்று ஒருத்தனும்; அந்த இரண்டு பேரில் முதலில் சொன்னவன் நன்றாகக் கிரஹித்துக் கொள்வதும் மற்றவன் 'மிஸ்' பண்ணிவிடுவதும்.

இத்தனைக்கும் நாலாம் பாதத்தில் உபமானம் கொடுத்திருக்கிறார்:

ப்ரபவதி சுசிர்–பிம்ப–க்ராஹே மணிர்–ந ம்ருதாம் சய:

[பொருள் விளக்கம்:] ஒரு வஸ்து இருக்கிறது. அது பிம்பம். அதன் ரூபத்தைச் சில வஸ்துக்கள் தங்களுக்குள் வாங்கிக் கொண்டு ப்ரதிபலிக்கின்றன. இப்படி ரிஃப்ளெக்ட் ஆன ரூபத்திற்கு ப்ரதிபிம்பம் என்று பெயர். ஸரி, எல்லா வஸ்துக்களும் இப்படி ஒரு பிம்பத்தை ப்ரதிபலிக்

Koviloor Digital Library

கின்றனவா? இல்லை. பளபளப்பான வஸ்துக்கள் மட்டுமே ப்ரதிபலிக்கின்றன. அவற்றிலேயே பளபளப்பின் டிக்ரி வித்யாஸத்தைப் பொறுத்து ப்ரதிபிம்பத்தின் தெளிவான ரூபமும் ஏற்ற இறக்கங்களோடு உண்டாகிறது. எல்லாவற்றையும்விட, நல்ல சுத்தமான கண்ணாடிதான் ஒரு பிம்பத்தை அப்படியே அது இருக்கிற ரூபத்திலேயே ப்ரதிபலிக்கிறது. பவபூதியின் காலத்தில் சுத்த ஸ்படிகம் — பளிங்கு என்பதுதான் — கண்ணாடியாக இருந்தது. அது ஒரு தினுஸு மணிதான். "**தோர்பிர்யுக்தா ஸ்படிகமணி மயீம் அக்ஷமாலாம் ததாநா**" என்று ஸரஸ்வதியின் த்யான ச்லோகத்தில் வருவது தெரிந்திருக்கலாம். ஸ்படிகம் — மணி. சுத்தமான அந்த ஸ்படிகமணியைத்தான் 'சுசிர்-மணி:' என்று சொல்லியிருக்கிறது. 'சுசிர்' என்று முதலில் வந்து, அப்புறம் 'பிம்ப க்ராஹே' என்பது குறுக்கிட்டபின் 'மணி:' என்று வருகிறது. கவிதாரூபம் அழகாக இருப்பதற்காக இப்படிப் பிரித்து, குறுக்கே வேறே வார்த்தையைப் புகுத்திக் 'கம்போஸ்' பண்ணுவார்கள்.

'பிம்ப க்ராஹே' என்றால் 'பிம்பத்தை க்ரஹிப்பதில்' — அதாவது 'பிம்பத்தைத் தனக்குள்ளே வாங்கிக் கொண்டு ரிஃப்ளெக்ட் பண்ணுவதில்'. இப்படிப் 'பண்ணுவதில்' இரண்டு விதமான மீடியம்களுக்கு இடையே உள்ள வித்யாஸத்தைத்தான் உபமானமாகக் கொடுக்க வருகிறார். ஒரு மீடியம் சுசியான மணி. அது பிம்பத்தைத் தத்ரூபம் க்ரஹித்துவிடுகிறது. இன்னொரு மீடியம் களிமண்ணுக் குவியல்; மண்ணாங்கட்டி என்பது. 'ம்ருதாம் சய:' என்று அதைத்தான் ச்லோகாந்தத்தில் [ச்லோகத்தின் முடிவில்] சொல்லியிருக்கிறது. மண்ணாங்கட்டி எந்த பிம்பத்தை யாவது ரிஃப்ளெக்ட் செய்யுமா? செய்யாதோல்லியோ? அதற்கு க்ராஹ்ய சக்தியே [கிரகிக்கும் ஆற்றலே] இல்லை.

Koviloor Digital Library

ஒரே பிம்பந்தான். ஸ்படிக மணிக்கும் ஸரி, மண்ணாங்கட்டிக்கும் ஸரி, ஒரே மாதிரிதான் அந்த பிம்பம் தன்னைக் காட்டிக் கொள்கிறது. ஆனாலும் முன்னால் சொன்னதுதான் அதன் ரூபத்தைத் தனக்குள் வாங்கிக் கொள்கிறது; பிந்தையது அப்படி இல்லை. இப்படி ஒரே பிம்பம் ஏற்படுத்துகிற விளைவுகள் ஒன்றுக்கொன்று வித்யாஸமாக இருக்கின்றன; 'பேத பல'மாக இருக்கிறது.

உபமான-உபமேயங்கள் புரிகிறதோல்லியோ? குரு கொடுக்கும் போதனை என்ற உபமேயத்திற்கு பிம்பம் உபமானம். அதை உள்ளபடி க்ரஹித்துக் கொள்ளும் ப்ராஜ்ஞ சிஷ்யன் என்ற உபமேயத்திற்கு பிம்பத்தைத் தத்ரூபம் க்ரஹித்துக்கொள்ளும் சுத்தமான ஸ்படிகமணி உபமானம். அப்படி க்ரஹிப்பதற்குச் சக்தியில்லாத ஜடன் — உபமேயம். அவனுக்கு உபமானம் — மண்ணாங்கட்டி. 'களிமண் மூளை' என்கிறோமே, அது!

சின்னஞ் சிறிய மணியும் ஒரு பெரிய பிம்பத்தைத் தெளிவாக ப்ரதிபலிக்கிறது. குவியலாகவே மண்ணாங் கட்டியைக் கொட்டினாலும் — 'சய:' என்று வருவதற்குக் குவியல் என்று அர்த்தம்; அது ஒரு சிறிய பிம்பத்தைக்கூட ப்ரதிபலிக்க முடியாது.

'வயஸில் சின்னவர்களான லவ-குசர்கள் வால்மீகி பகவான் சொல்லிக் கொடுத்த பெரிய பெரிய தத்வார்த்தங்களையும், 'மணி' என்பதற்கேற்க சிஷ்ய 'மணி' களாகவே முழுக்க க்ரஹித்துக் கொண்டார்கள். அவர்களைவிடப் பெரியவளான என் மண்ணாங்கட்டிப் புத்தியில் சின்ன விஷயம்கூட பூரவில்லை [புகவில்லை]' என்று, ஒரு பக்கம் அந்த இரண்டு பாலர்கள், மறு பக்கம் தான் என்று சிஷ்யர்களையே வைத்து அவள் பேசியதால்தான் குருவுடைய தூண்டுதல் சக்தி பற்றி ஒன்றும் குறிப்பிடாமல் விட்டது.

Koviloor Digital Library

வாஸ்தவத்தில், சிஷ்யனுடைய ஸ்வய பக்வமும், ஸ்வய ப்ரயத்னமும் ரொம்ப ரொம்ப முக்யந்தான் என்றாலும் குருவும் தாம் கற்பிப்பது சிஷ்யனின் மூளைக்குள் இறங்குவதற்கும், அப்புறம் அந்தஃகரணத்திலேயே இறங்கி அந்தப்படியே அவன் வாழ்க்கையில் அநுஷ்டிப்பதற்கும் கொஞ்சமோ நஞ்சமோ தூண்டிவிட்டு, துணையாகக் கூடேயும் போவார்.

மண்ணாங்கட்டி வேறே ஒரு பிம்பரூபத்தை உள்ளே வாங்கிக் கொண்டு ப்ரதிரூபம் காட்டாதுதான். ஆனாலும்... ஸூர்ய பிம்பம் ஜகஜ்ஜோதியாக ப்ரகாசிக்கிறது. அந்த பிம்பத்தை ஒரு மணி — ஒரு கண்ணாடி — உள்ளே வாங்கிக்கொண்டு ப்ரதிரூபம் காட்டுகிறது. அதோடு மாத்திரமில்லாமல், ஸூர்யனின் ப்ரகாசத்தை வெளியிலேயும் ரிஃப்ளெக்ட் பண்ணுகிறது. அதாவது ரூபத்திற்கு ப்ரதிரூபம், ப்ரகாசத்திற்கு ப்ரதிபலனம் [ப்ரதிபலிப்பு] என்று இரண்டும் கொடுக்கிறது. களிமண் நிச்சயமாக ப்ரதிரூபம் காட்டாது; கண்ணாடி மாதிரி பளீரென்று ப்ரதிபலிக்கவும் செய்யாது. ஆனாலுங்கூட... நாம் ஒரு இருட்டு ரூமில் இருக்கிறோமென்று வைத்துக் கொள்ளுங்கள். எதிரே ஒரு மண் சுவர் வெளிச்சம் பார்க்க இருக்கிறது. அது மண்ணாங்கட்டியின் விஸ்தாரந்தான். அதன்மேலே ஸூர்ய வெளிச்சம் படுகிறது. அப்போது அதற்கும் ஒரு ப்ரகாசம் ஏற்படத்தானே செய்கிறது? அதிலிருந்து நம்முடைய இருட்டு ரூமுக்குக்கூடக் கொஞ்சம் reflected light கிடைக்கத்தானே செய்கிறது? இருட்டிலே வெளிச்சம் கிடைப்பதற்கு இப்படி opaque — அதாவது ஒளி ஊடுருவாத — வஸ்துக்களைக்கூட வெயிலிலோ அல்லது வேறு ஒரு ப்ரகாசத்திலோ குறிப்பிட்ட கோணங்களில் பிடித்தே இருட்டுப் பகுதிக்கு லைட் reflect ஆகும்படிச் செய்வதுண்டுதானே?

Koviloor Digital Library

ஸூர்யன் தன் ரூபத்தையே ஒரு மீடியத்தின் உள்ளே பாய்ச்சுகிறான்; அதுவே வெளியிலே தன் ப்ரகாசத்தைப் பரப்பும்படியாகவும் செய்கிறான். இன்னொரு மீடியத்தின் உள்ளே போகாமல், மேல் பரப்பிலே தன் ப்ரகாசத்தை மட்டும் பரப்பி, அதுவுங்கூட அந்த ப்ரகாசத்தை ஓரளவுக்கு வெளியிலே பரப்பும்படிச் செய்கிறான். அந்த மாதிரி, நல்ல ஞானப்ரகாசமுள்ள குருவானால் என்ன களிமண் மண்டையானாலும் அவனுக்கும் புத்தியில் மேலெழுந்த வாரியாகவாவது கொஞ்சம் அறிவு ப்ரகாசம் — அறிவொளி — ஊட்டி... 'ஊட்டி' என்று உள்ளே போகிற ஒன்றாகச் சொல்ல முடியாதுதான்; 'அறிவொளி பரப்பி' என்று வேண்டுமானால் சொல்லலாம்!... அப்படிப்பண்ணி, அவனால் பிறத்தியாருக்குங்கூட அந்த விஷய அறிவொளி கொஞ்சம் கிடைக்குமாறு செய்துவிடுவார். உத்தம சிஷ்யனாயிருந்தாலோ, மணியின் உள்ளுக்குள்ளேயே பிம்பரூபம் பதிகிறது போல, அவனுடைய அந்தராத்மாவிலேயே தன்னுடைய ஸகல அறிவும், அதோடு குணங்களும், சக்திகளும்கூடப் பதியும்படிப் பண்ணி, அவனால் வெளியிலும் நன்றாகவே ஞானப்ரகாசம் பரவுமாறு செய்வார்.

சீடனைத் தம் நிலைக்கே உயர்த்தும் குரு

மணியின் உள்ளே ப்ரதிபிம்பம்தான், மூலபிம்பமே இல்லை என்று இங்கே முடிந்துவிடுகிறது. உத்தம குரு-உத்தம சிஷ்யர்களைப் பார்த்தாலோ அதற்கும் மேலே ஒரு படி! — மணியே அந்த பிம்பமாக மாறி விட்டால் எப்படியிருக்கும்? அப்படி சிஷ்யனே ஸாக்ஷாத் அந்த குருவுடன் ஸர்வஸாம்யம் — identity — அடைந்து விடுவான். இந்த குரு இந்த சிஷ்யனை இப்படி குருவாகவே உயர்த்திய மாதிரி இவனும் எதிர்காலத்தில் தனக்கு சிஷ்யனாக வருபவனை ஆக்கிவிடுவான்.

Koviloor Digital Library

ஸூர்யனையும் ஸ்படிக மணியையும் வைத்து நாம் இப்போது பார்த்ததையே ஸ்பர்ச மணியையும் லோஹத்தையும் [உலோகத்தையும்] வைத்து நம்முடைய ஆசார்யாள் உவமை கொடுத்துச் சொல்லியிருக்கிறார்*.

த்ருஷ்டாந்தோ நைவ த்ருஷ்ட–ஸ்த்ரிபுவந–ஜடரே
ஸத்குரோர்–ஜ்ஞாநதாது:
ஸ்பர்சச்சேத்–தத்ர கல்ப்ய: ஸ நயதி யதஹோ ஸ்வர்ணதாம்
அச்மஸாரம் |
ந ஸ்பர்சம் ததா(அ)பி ச்ரித–சரண–யுகே ஸத்குரு:
ஸ்வீய–சிஷ்யே
ஸ்வீயம் ஸாம்யம் விதத்தே நிருபம–ஸ்தேந
வா(அ)லௌகிகோ(அ)பி ||

உவமையையே 'த்ருஷ்டாந்தம் காட்டுவது' என்றும் சொல்வது. அலங்கார சாஸ்திரத்தில் இரண்டுக்கும் வித்யாஸம் உண்டானாலும், நடைமுறை இப்படித்தான். 'ஆசார்யாள் குருவுக்குச் சொல்கிற உவமை' என்று ஆரம்பித்தேன். ஆனால் அவரோ ச்லோக ஆரம்பத்திலேயே, 'குருவுக்கு த்ருஷ்டாந்தமே நம்முடைய த்ருஷ்டியில் அகப்படாது; மூவுலகங்களுக்கும் உள்ளேயே புகுந்து பார்த்தாலும் அகப்படாது' என்கிறார்! முடிக்கிறபோதும் 'நிருபம' – 'உவமையற்றது' — என்று சொல்கிறார். ஏன், உபமான வஸ்து எதுவானாலும் மூவுலகிலிருந்துதான் கிடைத்தாகவேண்டும். ஆனால் குரு ஸமாசாரமோ உலகுக்கெல்லாம் அப்பாற்பட்டது; அது 'அ–லௌகிக' மானது என்கிறார்!

ஸாதாரணமாக குரு ப்ரசம்ஸையாக [புகழ்துதியாக] ஒரு த்ருஷ்டாந்தம் சொல்வதுண்டு. ஸ்பர்ச மணி என்ற ஒரு அபூர்வ மணியின் ஸ்பர்சம் படும்படியாக எந்த

* 'சதச்லோகீ', குரு வந்தனமாகிய முதல் சுலோகம்.

Koviloor Digital Library

லோஹத்தை — இரும்பையேகூட — வைத்தாலும் அந்த ஸ்பரிச விசேஷத்தால் இரும்பு உள்பட எந்த லோஹ மானாலும் அது ஸ்வர்ணமாகிவிடும். அப்படித்தான், இரும்பு மாதிரித் தமஸ் — அஞ்ஞான இருள் — மூடியுள்ள சிஷ்யனும் குரு ஸங்கத்தால் புடம் போட்ட ஸ்வர்ணமாக மாறி ஞானத்தில் ப்ரகாசிக்கிறான் என்று சொல்வதுண்டு. ஆனாலும் எந்த விஷயமானாலும் ஆழமாக ஊடுருவிப் பார்க்கிற ஆசார்யாளோ, அந்த த்ருஷ்டாந்தமும் போதவே போதாது, அது ஸரியே இல்லை என்கிறார்! ஏன்? இரும்புக்கு ஸ்வர்ணமாகிற தன்மையை ஸ்பர்சமணி தருவது வாஸ்தவந்தான். 'அச்ம ஸாரம் ஸ்வர்ணதாம் நயதி' என்று இரண்டாம் பாதத்தில் வருவதற்கு, 'இரும்புக்கும் ஸ்வர்ணத்தன்மையை அடைவிக்கிறது' என்று அர்த்தம். 'அச்மஸாரம்' என்றால் இரும்பு. 'அச்மம்' என்றால் கல். மரத்தின் ஸாரமாக வஜ்ரம் உண்டாகிறதுபோல, கல்லின் ஸாரமாக இரும்பு உண்டாவதாகச் சொல்வது கவி மரபு. ஸ்பர்சமணியின் ஸம்பந்தத்தால் இந்த அச்மஸாரமும் ஸ்வர்ணமாகிறது. இது வாஸ்தவம். ஆனால் ஸ்வர்ணத் தன்மையைத்தான் அந்த ஸ்பர்சமணி தருகிறது. 'ந ஸ்பர்சத்வம்' — அந்த இரும்பும் தன்னைப் போன்ற இன்னொரு ஸ்பர்ச மணியாக ஆகி, வேறே இரும்பு வஸ்துக்களை ஸ்வர்ணமாக்கும்படி இந்த ஸ்பர்சம் transform — ரூபமாற்றம் — பண்ணுவதில்லை.

ஆனால், குரு? ஸத்குரு?

'ஸத்குரு: ஸ்வீய சிஷ்யே ஸ்வீயம் ஸாம்யம் விதத்தே' —

ஸத்குருவானவர் தன்னுடைய சிஷ்யனுக்கோ... 'தனதே தன்னுடையவனாக அத்தனை அத்யந்தமாக இருக்கிற சிஷ்யன்' என்று குரு-சிஷ்யாளின் ப்ரேம பாந்தவ்யத்தைக் காட்டச் சின்னதாக 'ஸ்வீய சிஷ்யே' என்று போட்டிருக்கிறார். 'ஸ்வீய' என்றால் 'தனக்கே தனக்கான'.

Koviloor Digital Library

'one's own' என்கிறார்களே, அது! அப்படிப்பட்ட சிஷ்யனுக்கு ஸத்குரு 'ஸ்வீயம் ஸாம்யம் விதத்தே' — 'தனக்கே முற்றிலும் ஸமதையாகிவிடும் தன்மையைக் கொடுத்துவிடுகிறார்'! குரு சிஷ்யனையும் தன்னுடைய பூர்ண நிலைக்கே transform பண்ணிவிடுகிறார். "சிவமாக்கி எனையாண்ட" என்று மாணிக்கவாசக ஸ்வாமிகள் சொன்ன மாதிரி*!

இது பொதுவாக ரொம்பவும் உத்தமமான பாத்திரத்தின் விஷயத்திலேயே நடப்பது. எங்கேயாவது ஒரு மாறுதலாகத்தான், 'க்ருபா சக்திக்கு எல்லையே கிடையாது; அதனால் எதுவும் பண்ண முடியும்' என்று காட்டுவதற்காகப் பரம அபாத்திரன் ஒருவனையும் — இரும்பு மாதிரியான சிஷ்யனையும் — ஒரு குரு ஆட்கொண்டு உச்சத்திற்குத் தூக்கிவிட்டு ஸ்பர்சமாக்குவது.

பொதுவாக அவரும் குரு லக்ஷணங்களுடன் இருந்து, இவனும் சிஷ்ய லக்ஷணங்களுடன் இருந்து, அவரும் மனப் பூர்வமாகச் சொல்லிக் கொடுத்து, இவனும் மனப் பூர்வமாகக் கற்றுக் கொண்டு, அவர் காட்டுகிற வழியில் போகத் தன்னாலான ஸ்வய ப்ரயத்னம் அத்தனையும் பண்ணி, அவரும் அதைத் தூண்டிக் கொடுத்து, அப்புறம் தம்முடைய அநுபவத்தையே அவனுக்குள் க்ருபா சக்தியால் இறக்கி அவன் லக்ஷ்யஸித்தி அடைவதாகத்தான் நடக்கிறது.

சீடனின் யோக்யதையும் குருவின் கருணையும்

'ஸமுத்ரம் சூழ்ந்த இந்த பூமி பூராவையும் பாத்திர மில்லாத ஒருத்தன் தக்ஷிணையாகத் தந்தாலும் அவனுக்கு

* 'அச்சோப் பதிகம்', 1.

Koviloor Digital Library

வித்யாதானம் பண்ணுவதற்கில்லை. ஏனென்றால் வித்யை என்பது பூலோகத்தைவிடப் பெரிசு' என்ற சாந்தோக்ய வாக்யம்[1] பார்த்தோம். மதுவித்தை என்பதைச் சொல்லி முடிக்கும் இடத்தில், 'இதை ஒரு அப்பா-ரிஷி ஜ்யேஷ்ட புத்ரனுக்கோ, **யோக்யதையுள்ள** வேறே சிஷ்யருக்கோ போதிக்கலாம்' என்று சொல்லிவிட்டு, அப்புறந்தான் முத்தாய்ப்பாக மேலே சொன்னபடிப் பூர்த்தி பண்ணியிருக்கிறது.

'யோக்யதையுள்ளவன்' என்பதற்கு உபநிஷத்தில் சொல்லியிருக்கும் வார்த்தை 'ப்ரணாய்யன்'. அப்படி யென்றால், 'ரொம்பவும் நேர்மை-ஒழுக்கம் உள்ளவன்' என்றும் அர்த்தம்; 'ப்ரியமானவன்' என்றும் அர்த்தம். இங்கே ஆசார்யாள் ஜ்யேஷ்ட புத்ரனை 'ப்ரியார்ஹன்', அதாவது ப்ரியம் காட்டுவதற்குத் தகுதி வாய்ந்தவன் என்றும், ப்ரணாய்யனை 'யோக்யன்' என்றும் சொல்லியிருக்கிறார். புத்ரனும் யோக்யனாயிருந்தால்தான் இப்பேர்ப்பட்ட வித்யோபதேசகரான ஒரு அப்பாவுக்கு ப்ரியமாகும் தகுதி பெறுவான். அதே மாதிரி, யோக்யனாயிருக்கும் சிஷ்யன்தான் அவருடைய பூர்ணமான ப்ரியத்திற்குத் தகுதி பெறுவான்.

யோக்யதை சிஷ்ய லக்ஷணத்தைக் காட்டுவது. ப்ரியம் குரு லக்ஷணத்தை — ப்ரேமையை, க்ருபையைக் காட்டுவது. இரண்டும் சேர்ந்தே சிஷ்யனுடைய லக்ஷ்ய ஸித்தி.

ஆகக்கூடி சிஷ்யன் மட்டுமாகவே ஸித்தியை ஸாதித்துக் கொள்வது என்று இல்லை. 'தத்-த்வோபதேசம்' என்ற ப்ரகரணத்தில் [முன்னூலுக்கு பாஷ்யமாக இன்றிச் சுயமாகவே எழுதிய நூலில்] ஆசார்யாள் தீர்மானமாகச் சொல்லியிருக்கிறார்: "ஸ்ரீ குரோ: கருணாம் விநா"[2]

1. 3.11.6
2. ச்லோ. 44

Koviloor Digital Library

'ஸத்குருவின் கருணை இல்லாமல், குரு க்ருபை இன்றேல்', என்று!

'இன்றேல்' என்ன?

'எத்தனைதான் படிப்பறிவு பெற்றவனானாலும் ஒருத்தன் ஆத்மாவை அறிய முடியாது' — என்கிறார்.

ப்ரஹ்மம் என்பது என்ன; ஜீவன் என்பது என்ன; அது இரண்டும் ஒன்று என்று உபநிஷத் வாக்யம் சொல்கிறதே, அது எப்படி — என்ற விஷயங்களை அந்த ப்ரகரணத்தில் ஆசார்யாள் விசாரம் பண்ணிக் கொண்டு போகிறார். பண்ணிவிட்டு, ஆனாலும், "ஆத்மா ஸ்வப்ரகாசமாக எப்போதுமே நம்மில் நாமாக இருப்பது வாஸ்தவமேயானாலும், இப்போது நமக்குத் தெரியாத அதை எங்கேயோ உள்ள பிரம்மமாயும் நம்மை அதற்கு வேறான ஜீவன் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிற நாம், அப்படியில்லை என்று உபநிஷத் மஹா வாக்யங்கள் சொல்வதை முன்-பின் விஷயங்களோடு கோத்துப் பார்த்து புத்தி மட்டத்தில் ஸரியாகத் தெரிந்து கொண்ட போதிலுங் கூட...."

இப்படித் தெரிந்து கொள்வதற்கு புஸ்தகப் படிப்பும் கூர்ப்பு மூளையும் இருந்தால்போதும், அப்படித்தான் இப்போது பல பேர் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆசார்யாள் நாளிலும் இந்த மாதிரி சில பேர் இருந்திருப்பதாக அவர் சொல்வதிலிருந்து தெரிகிறது. அது மாத்ரமில்லை. மேற்கொண்டு அவர் இந்த மாதிரியானவர்களைப் பற்றி உபநிஷத் வார்த்தையாலேயே குறிப்பிடுவதைப் பார்க்கும்போது அவருக்கும் முந்தைய உபநிஷத் காலத்திலேகூட அப்படிப்பட்டவர்கள் இருந்திருக்கிறார்களென்றும் தெரிகிறது. இப்படித் தாங்களாகவே படித்து, தங்களுடைய யுக்தியாலேயே விசாரணை பண்ணி பிரம்மமும் ஜீவனும் ஒன்றுதான்

Koviloor Digital Library

என்று மூளை மட்டத்தில் தெரிந்து கொண்டிருப்பவர்கள் அந்த லெவலுக்கு ரொம்பவும் மேலே போனால்தான் அநுபவமாக, ப்ரத்யக்ஷமாக அதை உணரமுடியும். அப்படித் தாங்களாகவே ஒருத்தரால் மேலே போகமுடியுமா? முடியாது. குருவின் ஸஹாயம் இருந்தாலொழிய, அவர் க்ருபை பண்ணினாலொழிய முடியாது. இங்கேதான் "**ஸ்ரீகுரோ: கருணாம் விநா**" என்று ஆசார்யாள் சொல்கிறார். எத்தனை படித்து, கிடித்து, மூளை அலசல்கள் செய்தாலும் — '**ததாபி சக்யதே நைவ**' — 'எத்தனை பண்ணிய போதிலும் தகுதி ஏற்படவே செய்யாது!' எதற்கு? '**அபரோக்ஷயிதும்**' — 'உள்ளுக்குள்ளே தெரியாமல் வெளியிலே புத்திக்கு மட்டும் தெரிகிற ஜீவ-ப்ரஹ்ம ஐக்கிய தத்வத்தை உள்ளநுபவ மாகவே உணர்வதற்கு'.

உபநிஷத்தும் சங்கரரும் காட்டும் போலிகள்

ஆனால், தற்காலத்தில் தாங்களே படித்து, தங்கள் புத்தியாலேயே ஆலோசித்து 'ஜீவாத்ம-பரமாத்மாக்கள் வாஸ்தவத்தில் ஒன்றேதான்' என்று அதை புத்தி மட்டத்தில் நிச்சயப்படுத்திக் கொண்டவர்களில் பல பேர் 'குரு என்று ஒருத்தர் மூலம்தான் இதைத் தெரிந்து கொள்ளணும் என்றில்லை' என்கிறார்கள். அநேகமாக இப்படிப் பட்டவர்கள் சொந்த புத்தியின் பலத்தால் பெரிய தத்வார்த்தம் கண்டுவிட்டோம் என்பதில் 'வித்யா கர்வம்', என்கிற ஒருவகையான அஹங்காரத்துக்கு ஆளாகி விடுகிறார்கள். அஹங்காரம் அடியோடு நசித்தால்தான் ஆத்மா அநுபவத்திற்கு வரும். இவர்களானால் அதற்கு மேலும் தடிப்பு ஏற்படுத்திக் கொண்டு விடுவதால் புத்தியினால் நிச்சயப்படுத்திய ஸத்தியம் ஹ்ருதயத்திற்குள் இறங்கி அநுபவத்திற்கு வர முடியாமல் குறுக்கே கருங்கல் சுவரே போட்டுக் கொண்ட மாதிரி ஆகி விடுகிறது.

Koviloor Digital Library

ஆனாலும் புத்திமான்களாயிற்றே! தோல்வியை ஒப்புக் கொள்வார்களா? தங்களுக்கு ஜயம் ஏற்பட்டு, தாங்கள் ஆத்மாநுபூதி பெற்று விட்டதாகவே காட்டிக் கொள்வார்கள். யாரிடமும் உபதேசம் வாங்கிக் கொள்ள அவச்யமில்லை என்கிறவர்களே ஊருக்கெல்லாம் சின்முத்ரை காட்டிக் கொண்டு லெக்சர் கொடுப்பது, புஸ்தகம் எழுதுகிறது என்றிப்படி நிறையப் பார்க்கிறோம்.

இப்படிப்பட்டவர்கள் ஆசார்யாள் நாளிலும், ஆதி உபநிஷத் நாளிலுங்கூட இல்லாமல் போகவில்லை. இவர்களைக் 'கடோபநிஷத்', 'முண்டகோபநிஷத்' இரண்டும் ஒரே போல வர்ணித்திருக்கின்றன[1]. ஒரே ஒரு வார்த்தைதான் வித்யாஸம். பாக்கி வர்ணனை முழுக்க இரண்டிலும் ஒன்றேதான். அது என்ன வர்ணனை? 'வாஸ்தவத்தில் இவர்கள் அஞ்ஞான இருள் சூழ்ந்தவர்கள்..... **'வேஷ்ட்யமாணா:'** என்று ஆசார்யாள் பாஷ்யம்[2]. அதாவது நம்மைச் சுற்றி வேஷ்டி கட்டிக் கொள்கிற மாதிரி, [சிரித்து] 'wrapped in ignorance' ஆக இருக்கிறவர்கள்! ஆனாலும் தாங்களே தீரர்கள், தாங்களே பண்டிதர்கள் என்று தங்களைத் தாங்களே உசத்தியாகப் பாராட்டிக் கொள்கிறார்கள்.'

'தீரர்' என்ற வார்த்தையை நாம் வீரத்தோடு சேர்த்து 'வீர தீர பராக்ரமசாலி' என்கிறோம். 'தீர'த்திலிருந்துதான் 'தைர்யம்' என்பதாக வீர ஸம்பந்தமுள்ள ஒரு குணத்தைச் சொல்கிறோம். அந்த அர்த்தம் ஸரிதான். ஆனாலும் உபநிஷத்துக்கள் போன்ற சாஸ்திரங்களில் ப்ரஹ்மவித்யா ஸாதகர்களையும் ஸித்தர்களையும் 'தீரர்' என்கிறபோது அதை வீரத்தின் counterpart-ஆக [பிரதி அங்கமாக]ச்

1. கடம் : 1.2.5; முண்டகம் : 1.2.8
2. கட பாஷ்யத்தில்

Koviloor Digital Library

சொல்வதில்லை. உத்தமமான புத்தி வன்மையையே இங்கே தீரம் என்றும், அப்படிப்பட்ட குணஸம்பன்னர்களையே தீரர் என்றும் சொல்வதாகப் பார்க்கிறோம். 'தீரர்' என்றால் கிட்டத்தட்ட 'ஞானி' என்றே இங்கே அர்த்தம். கீதையில்கூட பகவான், 'சரீரத்தின் சாவோடு எல்லாம் போய்விட்டது என்று ஞானி மயங்குவதில்லை' என்பதற்கு, 'தீரஸ்தத்ர ந முஹ்யதி' என்றே சொல்லியிருக்கிறார்*. நாம் பார்க்கிற இடத்திலும் அப்படித்தான் அந்த வாய்வேதாந்திகள் தாங்கள் ஞானி என்ற அர்த்தத்திலேயே 'தீரர்கள்' என்று சொல்லிக் கொள்வது, [சிரித்து] புரட்சிக் கருத்துச் சொல்பவர்களானதால் பொது அர்த்தப்படியும் 'தீரர்' என்று சொல்லலாம்!

அப்புறம் 'பண்டிதர்' என்று வருகிறது. பண்டிதர் என்றால் பெரிய படிப்பாளி, 'ஸ்காலர்' என்று மாத்திரம் அர்த்தமில்லை. 'பண்டா' என்று பரம ஞானத்திற்கே பெயர். அதனால் 'பண்டிதர்' என்றாலும் ஞானி என்றே இங்கே அர்த்தம்.

வாஸ்தவத்தில் ஞானம் பெறாத அந்த [சற்று யோசித்து] 'வெற்றறிவாளர்கள்' தங்களை தீரராகவும் பண்டிதராகவுமே 'ஷோ' பண்ணிக் காட்டிக்கிறார்களாம்!

என்ன உசத்தி சொல்லிக் கொண்டு என்ன? யதார்த்தத்தில் எப்படி இருக்கிறார்கள்? பல தினுஸிலும் கோணாமாணாவாகத் தடுமாறிக்கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த ஒரு இடத்தில்தான் அந்த இரண்டு உபநிஷத்துக்கள் வெவ்வேறு வார்த்தைகளைப் போட்டிருக் கின்றன. இரண்டுமே அபூர்வமான வார்த்தைகள். நிகண்டு [அகராதி]களில்கூட இருக்குமா என்று ஸந்தேஹம். ஆனாலும் அகராதி பார்க்காமலே, 'உழப்பிண்டு

* 2.13

Koviloor Digital Library

குழப்பிண்டு திரிஞ்சுண்டிருக்கா' என்று நாம் புரிந்து கொள்ளும்படியாக அந்த வார்த்தைகளின் சப்த விசேஷமே இருக்கிறது!......

'பள பள', 'தொள தொள', 'கண கண', 'டும் டும்' என்றிப்படி சப்தமே அர்த்தத்தைத் தெரிவித்துவிடுகிற தோல்லியோ? இதற்கு 'சப்தாநுகரணம்' என்று பெயர்; இங்க்லீஷில் [எழுத்தெழுத்தாகக் குழந்தை போல் சொல்கிறார்:] ஆ-ன-ம-டோ-பி-யா (onomatopoeia)...

தங்களுக்குத் தாங்களே பண்டித பட்டம் கொடுத்துக் கொண்டவர்கள் வாஸ்தவத்தில் இழுபறி வழிகளில் போய்த் திண்டாடுபவர்கள் என்பதற்கு சப்தாநுகரணமாக ஒரு உபநிஷத்[1] போட்டிருக்கிற வார்த்தை **'தந்த்ரம்யமாணா:'** என்பது; இன்னொன்றில்[2] போட்டுள்ள வார்த்தை **'ஜங்கன்யமானா:'** என்பது. 'வாய் வேதாந்தம் ப்ரமாதமாகப் பேசினாலும் யதார்த்தத்தில் ஜரா-மரண-ரோகாதிகளால் பீடிக்கப்படும் நானா தினுஸுக் கோணல் வழியிலும் போய் அவர்கள் வீணாகப் போகிறார்கள்' என்று ஆசார்யாள் பாதி கோபமும், பாதி அங்கலாய்ப்புமாக இங்கே பாஷ்யத்தில் சொல்கிறார்.

ஒரு லக்ஷ்யத்துக்கும் வராமல் செக்கு மாடு மாதிரி புத்தி வாதத்திலேயே இவர்கள் சுற்றிச் சுற்றி வருவதையும் உபநிஷத் சொல்கிறது. சுற்றிச் சுற்றி வந்தால் தலையும் சுற்றி ப்ரமை, சித்த ப்ரமை ஏற்படத்தானே செய்யும்? அப்படி இவர்களுக்கு ஏற்படுவதையும் ஆசார்யாள் **'விப்ரமந்தி'** என்கிறார்[3].

1. கடம்
2. முண்டகம்
3. முண்டக பாஷ்யத்தில்

Koviloor Digital Library

ஒரே லக்ஷ்யமாகக் குறிக்கோளுக்கு அழைத்துப் போகிறவன்தான் நிஜமான குரு. குரு இல்லாத இந்தப் போலிப் பண்டிதர்கள் லக்ஷ்யத்துக்கு வராமல் எங்கேயோ சுற்றுகிறார்கள். இந்த மாதிரியே இவர்களுக்கு முந்தியும் கதை பண்ணிக்கொண்டு திண்டாடியவர்கள்தான் இவர்களுக்கு 'குரு ஸ்தானம்'! பூர்வகாலத்தில் அசாஸ்த்ரீயமாகப் போனவர்களைச் சொல்லி, 'அவர்கள் மாதிரி நாங்களும் independent' என்று பெருமையாகச் சொல்கிறவர்களை இன்றைக்கும் நாம் பார்க்கிறோமல்லவா? இதைக் 'குருடர் வழி காட்ட, அவர்களுக்குப் பின்னே குருடர் போகிறமாதிரி' என்று உபநிஷத்துக்கள் ஒரு படமாகப் பிடித்துக் காட்டுகின்றன. இதையே விதேச பாஷையிலே படம் பிடித்த மாதிரி பைபிளிலும் 'blind leading the blind', அந்த மாதிரிப் போய் இரண்டு பேரும் குழியில் விழுவது என்று சொல்லியிருக்கிறது*.

இப்போது பின்னே போகிற குருடர்களையே வழிகாட்டியாகக் கொண்டு வருங்காலத்திலும் ஒரு குருட்டுக் கூட்டம் தோன்றி, அதே ரீதியில் பாரம்பர்யமாகப் போய்க் கொண்டிருக்கும் என்பதையும் உபநிஷத் சொல்லாமல் சொல்லியிருக்கிறது. 'குரு பரம்பரை' என்கிற மாதிரி, 'குரு வேண்டாம்' என்கிறவர்களே போலி குருமார்களாகி அவர்களுக்கும் ஒரு பரம்பரை!

இந்தப் பேச்செல்லாம் எதற்கு வந்ததென்றால், தானாகவே ஒருத்தன் மஹாவாக்யத்தை புத்தியால் அலசி அந்த மட்டத்தில் நிர்தாரணம் பண்ணிக் கொள்வது மட்டும் 'ரியலைஸேஷ'னுக்குப் போதாது, குருவின் கருணை இல்லாமல் 'ரியலைஸேஷன்' ஸாத்யமே இல்லை என்று ஆசார்யாள் ['தத்-த்வோபதேச'த்தில்] சொல்லும் போது

* நியூ டெஸ்டமெண்ட், மாத்யூ XV. 14.

Koviloor Digital Library

உபநிஷத்துக்கள் காட்டும் அந்த 'ஸ்வயம் ஸம்பாவித' [தங்களைத் தாங்களே போற்றிக் கொள்ளும்] பண்டிதப் போலிகளை மனஸில் கொண்டே பேசுவதால்தான். அந்த இடத்தில் அவர் அந்த இரண்டு உபநிஷத்துக்களிலும் **'பண்டிதம் மந்யமானா: மூடா:'** என்று முதல் வேற்றுமையில் வருவதையே மூன்றாம் வேற்றுமையில் **'பண்டிதமாநிபி: மூடை:'** என்று சொல்லியிருக்கிறார். லோகத்தில் மஹாபுத்தி மான்களாகத் தங்களைக் காட்டிக் கொள்பவர்களுக்கு உபநிஷத்தும் ஆசார்யாளும் கொடுக்கும் பட்டம் 'மூடர்' என்பதுதான்! கோபத்தில் திட்டுவதாக அர்த்தமில்லை; உள்ளதை உள்ளபடிச் சொல்வதுதான்!

தொடர்ந்து ஆசார்யாள், இக்கால வாய்வேதாந்திகள் மாதிரியே அவர் காலத்திலிருந்த சில பேரும், "சுத்தமான மனஸோடுகூட ஆராய்ந்து பார்த்தால் தன்னால் மஹாவாக்யத்தின் தாத்பர்யமாக ப்ரஹ்மஞானம் ஏற்பட்டுவிட்டுப் போகிறது. குரு என்று ஒருத்தர் என்னத்துக்கு?" என்று கேட்டதைச் சொல்கிறார்.

அந்தஃகரண ஸம்சுத்தௌ ஸ்வயம் ஜ்ஞாநம் ப்ரகாசதே |
வேதவாக்யை: அத:கிம் ஸ்யாத் குருணா ?...

இப்படி அவர்களுடைய கேள்வியைச் சொன்னவர், அதற்குத் தம்முடைய பதிலாக **"இதி ந ஸாம்ப்ரதம்"** என்று சொல்லி ச்லோகத்தின் அந்தப் பாதியைப் பூர்த்தி பண்ணுகிறார்:

'வேதவாக்யை–ரத: கிம் ஸ்யாத் குருணேதி ந ஸாம்ப்ரதம்'.

'இதி'-இப்படிச் சொல்வது, அதாவது, போலிப் பண்டிதர்கள் சொல்வது, 'ந ஸாம்ப்ரதம்' – 'உசிதமில்லை'. 'ஸாம்ப்ரதம்' என்றால் உசிதமானது என்று அர்த்தம். 'ந'

Koviloor Digital Library

போட்டதால் அதற்கு 'ஆப்போஸிட்; அதாவது, 'உசிதமில்லை'.

ஏன் உசிதமில்லை? ஏனென்றால் நமக்கு ப்ரமாணம் வேதந்தான். வேதம் சொல்வதுதான் நமக்கு வழி. அந்த வேதம், உபநிஷத் வாயிலாக, 'ஆசார்யவானான, அதாவது, குருவை உடையவனான, மனிதனே ஸத்யத்தை அறிகிறான்' என்று சொல்லியிருக்கிறது[1] என்று ஆசார்யாள் மேற்கொண்டு அந்தப் புஸ்தகத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

ஆனால் அந்தப் போலிப் பண்டிதர்கள், 'வேதம் ஏன் ப்ரமாணம்? நம்முடைய புத்தி, நம்முடைய மனஸ் ஸாக்ஷியேதான் ப்ரமாணம்' என்றுந்தான் சொல்வார்கள். அவர்களுக்கு, அவர்களுடைய பகுத்தறிவு லெவலிலேயே என்ன பதில் சொல்லி 'கன்வின்ஸ்' பண்ணுவதோ, தெரியவில்லை!

ஆசார்யாளுக்கு வேதம் முக்யம்; அதுவே அவருக்கு மூச்சு. வேதத்திடம், வேதமாதாவின் கருணையிடம் அவர் பரமபக்தியோடு **"மாத்ரு பித்ரு ஸஹஸ்ரேப்யோபி ஹிதைஷிணா வேத"** என்று — அதாவது 'வேதம் ஆயிரம் அம்மா- அப்பாவைவிட ஹிதத்தையே எண்ணுகிறது, செய்கிறது' என்று பாஷ்யத்தில் ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார்[2]. அதிலே விதித்த குரு முக உபதேசந்தான் அவர் எந்நாளும் வலியுறுத்துவது.

வேதப் பிரமாணம்; பிற மதங்கள்

"வேதந்தான் 'அதாரிடி', நம் ஸ்வய புத்தி [அதாரிடி] இல்லை" என்கிறதை ஏன் ஒப்புக்கணும்? — இப்படிக் கேள்வி கேட்டால் அதற்கு எனக்குத் தெரிந்த ஒரே பதில்:

1. சாந்தோக்யம் 6.14.2
2. கடோபநிஷத் 2.1.15 முடிவு.

Koviloor Digital Library

அப்படி [வேதமே 'அதாரிடி', ஸ்வய புத்தி இல்லை என்று] இருந்தவர்களில்தானே இத்தனை மஹான்கள், அநுபூதிமான்கள் தொடர் சங்கிலியாக அநாதி காலம் முதற் கொண்டு தோன்றி இன்றைக்கு வரையில் வந்திருக் கிறார்கள்? இந்த மாதிரி வேறே எந்த மதத்திலும் காணோமே! வேதம் ப்ரமாணமில்லை என்று சொன்ன இரண்டொருத்தர் மஹான்களாக ஆன மாதிரித் தெரிந்தாலும், தனிப்பட அவர்கள் அப்படி ஆனதாகவே வைத்துக் கொண்டால்கூட, அவர்களுடைய ஸித்தாந்தம் ஸரியில்லை என்றுதான் ஆசார்யாள் நன்றாக நிலைநாட்டி, ஒன்று அந்த மதங்கள் இந்த தேசத்தைவிட்டே ஓடும்படி யாகவோ, அல்லது இந்த தேசத்திலேயே ஆதியிலிருந்ததை விட நூறில் ஒரு பங்காக க்ஷீணிக்கும்படியாகவோ ஆக்கிவிட்டாரே! போகப்போக அந்த மதங்களும் அவற்றின் மூலபுருஷர்கள் கொடுத்த ரூபத்திலிருந்து மாறி மாறி, வேத மதத்திலிருந்தே அநேக அம்சங்களை எடுத்துக் கொண்டும், பலதைக் கலந்து வேறே ரூபமாக்கிச் சேர்த்துக் கொண்டுந்தானே வெளி தேசங்களிலோ, இந்த [நம்முடைய] தேசத்திலேயோ இருந்து வருகின்றன?

அவற்றின் மூலபுருஷர்கள், "ஸ்வய புத்தியே ப்ரமாணம்; வேறே வெளிப் புஸ்தகமோ, உபதேசமோ, குரு என்ற ஆளோ இல்லை" என்று சொன்னாலும் அப்படிச் சொன்ன அவர்களையே குருவாகவும், அவர்கள் சொன்னதே ப்ரமாணம் என்றுந்தான் அவர்களைப் பின்பற்றியவர்கள் ஆக்கிக்கொண்டு, கேள்வி கேட்கக் கூடாத மதக் கோட்பாடுகளாக ப்ரமாணப் புஸ்தகங்கள் எழுதி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்! எந்த மதம் என்று இருந்தாலும் ஸரி, அதில் இப்படி 'ஃபாலோ' பண்ணியே ஆகவேண்டும் என்பதான கோட்பாடுகளைக் கொண்ட 'அதாரிடி'யாக 'பேஸிக் ஸ்க்ரிப்சர்' என்று ஒன்று இருக்கிறது.

Koviloor Digital Library

ஒரு ராஜாங்கம் என்றால் அதற்கு கான்ஸ்டிட்யூஷன் இருந்தேயாகவேண்டும் என்கிற மாதிரிதான் இது. அப்படி வேத அதாரிடியை ஆக்ஷேபிக்கும் மதஸ்தர்களும் தங்களுக்கு அதாரிடியாக ஸ்க்ரிப்சர்கள் வைத்துக்கொண்டு அதைப் பின்பற்றுவதால்தான் அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று பல ஸமுதாயத்தார் இருப்பதே!

இப்படி 'அதாரிடி' ஒன்றுக்கு ஸ்வய புத்தியைக் கீழ்ப் படிந்திருக்குமாறு செய்து, அடக்கத்தோடு, நம்பிக்கை யோடு, தாங்கள் பெரியவர் என்று நினைக்கிற ஒருவரின் கொள்கையை அந்தப் பர மதஸ்தர்களும் ஏற்றுக் கொள்கிறார்களல்லவா? அதுவேதான் அவர்களிலும் பல பேருக்கு மஹான்கள் என்னும்படி ஏதோ ஒரு உசந்த அநுபவத்தைக் கொடுத்து, அந்த மதங்களும் ஜீவித்திருக்கும் படியாகச் செய்துவந்திருக்கிறது.

ஆனாலும் நம்முடைய வைதிக ஸம்ப்ரதாயத்தில் கூட்டங்கூட்டமாக ஆதியிலிருந்து வந்திருக்கிற ஞானிகள், யோகிகள் — ராஜயோக ஸித்தர்கள், மந்த்ரயோக ஸித்தர்கள் — இதெல்லாவற்றுக்கும் மேலாக, அத்தனை அநுபவத்தையும் பக்தியினாலே பெற்ற பக்தர்கள் மாதிரி வேறே எங்கேயுமே இல்லை என்று நன்றாக 'ஸ்டாடிஸ்டிக்ஸ்' காட்டியே 'ப்ரூவ்' பண்ணலாம். தத்வ சாஸ்த்ரப் புஸ்தகங்களும் கணக்கு வழக்கில்லாமல் இந்த மதத்திலேயே தோன்றியிருக்கின்றன. ரொம்பவும் நுணுக்கமாக, பல தினுசு மக்களுக்கும் வழி சொல்லிக் கொடுக்கப் பலவிதமான ஸாதனா மார்க்கங்களும் இங்கே தான் தோன்றி, இன்றுவரை இருந்து வருகின்றன. இத்தனையும் வேதப்ராமாண்யத்தை [வேதத்தின் பிரமாணத்தை] ஏற்றுக்கொண்டு அந்த அஸ்திவாரத்தின் மேல் எழுப்பினவைதான்.

Koviloor Digital Library

இதைவிட என்ன காரணம் வேண்டும், நாமும் அந்த ப்ரமாணத்தையே மனஸார ஏற்றுக்கொண்டு, அடக்கத்தோடு பின்பற்றுவதற்கு? — எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது.

ச்ரத்தை : வேதத்திடமும் குருவிடமும்*

நடுவிலே ஒன்று சொன்னேன், ஏதாவது ஒன்றுக்கு ஸ்வயபுத்தியைக் கீழ்ப்படியப் பண்ணி நம்பிக்கையோடு அடக்கமாக ஏற்றுக் கொள்கிறதே ஒரு உசந்த அநுபவத்தைக் கொடுத்துவிடும் என்று. இத்தனை நீட்டிச் சொன்னதற்குத் தான் சின்னதாக ஒரே வார்த்தை, 'ச்ரத்தை' என்று இருக்கிறது. வேதத்திலும், அதை அநுஸரித்த தர்ம சாஸ்த்ரத்திலும், அவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லும் ஆசார்யனிடமும் நமக்கெல்லாம் அது ஒன்று இருந்து விட்டால் போதும்; வேறே ஒன்றுமே வேண்டாம்.

புத்தியால்தான் நாம் வெளிலோகத்தில் ஸகலமும் தெரிந்து கொள்கிறோம். ஆனால் அதே புத்திதான் உள்லோகத்தில் பரம தத்வத்தை நாம் தெரிந்து கொள்ள முடியாமலும் குறுக்கே நிற்கிறது! அம்பாள் அதை இப்படிப் பண்ணிப் போட்டிருக்கிறாள்! இப்படி சோதனை ஒரு பக்கம் பண்ணினாலும், இன்னொரு பக்கம், [சிரித்து] அந்த புத்திக்கு புத்தி சொல்லி, 'உனக்கு உள்லோகத்தில் பிரவேசித்து தத்வார்த்தம் தெரிந்து கொள்ள அதிகாரம் — 'அதாரிடி, அதாரிடி' என்றேனே, அது — இல்லை. அந்த லோக ஸமாசாரம் ஈச்வரனே வேதமாகக் கொடுத்து, ரிஷிகள் மூலம் வெளிவந்திருப்பதில்தான் இருக்கிறது. ஆகவே உள்லோக வழிக்குக் குறுக்கே நிற்கிற புத்தியைப்

---

* நாலாம் பகுதியில் 'குருகுலம்; கடிகாஸ்தானம்' என்ற உரையில் 'ச்ரத்தை; பரிப்ரச்னம்' என்ற பிரிவும், ஆறாம் பகுதியில் 'அத்வைத ஸாதனை' என்ற உரையில் 'சிரத்தை (நம்பிக்கை) அவசியம்', 'ச்ரத்தை' என்ற பிரிவுகளும் பார்க்க.

Koviloor Digital Library

படுக்கப் போட்டு வேத சாஸ்திரங்களைப் பிடித்துக் கொண்டு போ,' என்று எடுத்துக்கூறி நல்லபடியாகத் திருப்பிவிட மஹான்களை, ஆசார்ய புருஷர்களை அனுப்பி வைக்கிறாள்.

சரணாகதி

புத்தியைப் படுக்கப் போடுகிறதுதான் சரணாகதி. அதற்கு அடையாளமாகத்தான் பௌதிக கார்யமாக, 'ஸிம்பாலிக்'காக நமஸ்காரம் என்று ஆக்கிக் கொடுத்திருக் கிறது. புத்தி என்று மூளையை ஸம்பந்தப்படுத்தித்தானே சொல்கிறோம்? பாதத்துக்கு மேலே எட்டாம் சாணாகத் தலையுச்சியிலிருக்கிற அந்த மூளையை பூமிமட்டத்தில் படியவிட்டுத்தானே கீழே விழுந்து நமஸ்காரம் பண்ணுகிறோம்! 'கீழ்ப்படிதல்' என்ற உள்பாவத்திற்கே நமஸ்காரம் வெளியடையாளம். வேதத்திற்கு, வேதத்தின் பரம தாத்பர்யமான ஈச்வரனுக்கு, மூளை கீழ்ப்படியும் சரணாகதிக்கு அடையாளமாக சரீரம் கீழே பூமியில் படியும்படிக் கிடக்கிறதே நமஸ்கார க்ரியை*.

இங்கே புத்திக்கார்யமில்லை. அதன் இடத்தில் 'ச்ரத்தை', 'நம்பிக்கை' என்ற உணர்ச்சி இருக்கிறது. ப்ரத்யக்ஷமாக ஒன்றைத் தெரிந்துகொள்வதில் — ஜ்வாலை வீசினால் உஷ்ணம் என்று, பனிவாடை வீசினால் குளிர் என்று, இப்படிப் பிரத்யக்ஷமாக அநேகம் தெரிந்து கொள்வதில் — இது உஷ்ணந்தான், இது குளிர்தான் என்று புத்தி எப்படி ஸந்தேஹமில்லாமல் நிச்சயமாக இருக்கிறதோ அந்த மாதிரியே, அப்ரத்யக்ஷமான பரலோக, ஆத்மலோக விஷயத்தில் வேத-சாஸ்த்ரம் சொல்கிறதுதான் ஸத்யம் என்ற நிச்சயமான உணர்ச்சியாக அந்த நம்பிக்கை இருக்க வேண்டும். அதற்குத்தான் 'ச்ரத்தை' என்று பெயர். அந்த

* இந்நூலிலேயே 'நமஸ்காரத் தத்துவம்' என்ற உரை பார்க்கவும்.

Koviloor Digital Library

ச்ரத்தையை மூலதனமாகக்கொண்டால் அது நம்மைக் கொண்டு போய் நிறுத்தும் பரிபூர்ணமான கீழ்ப்படிதலுக்கே 'சரணாகதி' என்று பெயர். அங்கே நம் புத்திக்கு வேலை இல்லை; எந்தக் கேள்விக்கும் இடமில்லை.

வேத–சாஸ்திரங்கள் குருமுகமாகவே; அம்பாளின் விசித்ர 'ப்ளான்'!

'வேதம் என்ன சொன்னாலும் அப்படியே நம்ப வேண்டியதுதான்' என்ற தீர்மானமான அபிப்ராயமே 'ச்ரத்தை' என்றால், 'அந்த வேதத்தையும், அதன் வழி வந்த சாஸ்த்ரங்களையும் வித்யைகளையும், ஸாதனா மார்க்கங்களையும், நாமே ஸ்வயமாக படித்துப் புரிந்து கொண்டு பின்பற்றிவிட்டால் போச்சு' என்று நினைத்து விடக்கூடாது. ஏனென்றால் அந்த வேதமே சாந்தோக்ய [உபநிஷ]த்தில் 'நீயாக அப்படி ஒன்றும் பண்ணாதே! நீ ஆசார்யவானாக ஆனால்தான், அதாவது குரு உபதேசமாகவே இதை அறிபவனாக ஆனால்தான் உனக்குப் புரியும்' என்கிறது[1]. முண்டக [உபநிஷ]த்தில்[2] 'குருவையே சென்றடைந்து பின்பற்றிப் போ' என்கிறது. 'நீ உள்லோகம் என்ற இடம் தெரியாத அக்ஷேத்ரவித். அதைத் தெரிந்து கொண்ட க்ஷேத்ரவித்தாக குரு என்று இருக்கிறார். அவர் மூலமாகவே நீயும் தெரிஞ்சுக்கோ!' என்று ரிக் ஸம்ஹிதையிலேயே இருக்கிறது[3]. 'ஆசார்ய முகமாக அறிகிற வித்யைதான் ஸாதிஷ்டமாகிறது — அதாவது ரொம்ப நல்ல, best ஆன பலன் தருகிறது'[4] என்று ஸத்யகாம ஜாபாலர்

1. 6.14.2
2. 1.2.12
3. ரிக்வேத ஸம்ஹிதை (மண்டலப் பிரிவினைப்படி) 10.32.7
4. 4.9.3.

Koviloor Digital Library

அவருடைய குருவிடம் சொல்வதாகவும் சாந்தோக்யத்திலேயே வருகிறது.

எழுத்து, அதைப் படித்து மூளைக்குப் புரிகிற அர்த்தம் — இதுகளோடு வேதம் முடிந்துபோய்விடவில்லை. பெரிய பெரிய அநுபவங்களைத் தருகிற சக்தி அதனுடைய அக்ஷர ரூபத்துக்குள்ளேயே இருக்கிறது. அதை உள்ளே மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் மறையாக அது இருக்கிறது. அந்த சக்தி எப்படி வெளிப்படுமென்றால் ஒருத்தன் தானாகப் படித்து ஒப்பிப்பதால் வெளிப்படாது; ஸ்வய மூளை புரிந்து கொள்கிற அர்த்தத்தால் வெளிப்படாது. பின்னே எப்படி வெளிப்படும்?

மதம் என்று இருப்பது தெய்வத்தை அநுபவிப்பதற்குத் தானே? வேதந்தான் மதப் புஸ்தகம் என்றால் அதிலே மறைந்திருக்கிற தெய்வ சக்தியை எப்படிப் பெறுகிறது? — என்றால்,

முதலில் அந்த வேதவாக்யங்களை ரிஷிகள் அகண்ட ஆகாசத்திலிருந்து க்ரஹிக்கும்படி பராசக்தி அநுக்ரஹித்த போதே ஒரு 'ப்ளான்' போட்டாள்! Five year, ten year plan இல்லை! ரொம்...ப நீ...ண்ட கால ப்ளான்! பிற்காலத்தில் இந்த ஆதி [வேத] மதத்திலிருந்தே வேறு மதங்கள் தோன்றப் போவதற்கும் அன்றைக்கே இடங்கொடுத்துப் போட்ட ப்ளான்! 'அந்தப் பர மதங்களில் பெறக்கூடிய சில நல்ல ப்ரயோஜனங்களையும், கிஞ்சித் [சிறிதளவு] தெய்விகமான சக்திகளையும் அந்த மதப் புஸ்தகங்களைத் தாங்களாகவே படித்துத் தெரிந்து கொள்கிறவரும் பெற்றுவிட்டுப் போகட்டும். வைதிக மதத்திலேயுங்கூட, வேத மந்திரங்களாகவோ, தந்திர சாஸ்திர மந்திரங்களாகவோ இல்லாமல் எல்லாப் பொது ஜனங்களுக்குமாக இருக்கிற ஸ்தோத்ரங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றை

Koviloor Digital Library

அவரவரும் தானாகவே எடுத்துக்கொண்டு பின்பற்றினாலும் பின்பற்றட்டும். இங்கேயுங்கூட ஒரு பெரியவரைக் குருவாகக்கொண்டு அவர் எடுத்துவைத்துப் பண்ணினால் ரொம்ப விசேஷந்தானென்றாலும் அதைக் கட்டாய விதியாகப் போட வேண்டாம். ஆனால் கட்டாய விதியாக குரு உபதேசம் பெற்றே பண்ணுவது என்றும் ஒன்றில் வைக்க வேண்டும். அந்த ஒன்று என்னவென்றால் அத்தனை சக்திக்கும் — லோக க்ஷேமத்திற்கும் ஆத்ம க்ஷேமத்திற்குமான அத்தனை நல்ல சக்திக்கும் — இருப்பிடமாக இருக்கப்பட்ட வேத மந்த்ரங்கள்தான். அதை மட்டும் எவரொருவரும் தானாக எடுத்துக் கொள்ளும்படி விடக் கூடாது. இந்த மஹா பெரிசை ஸ்வீகரித்துக்கொள்ள வேண்டுமானால் ஒருத்தன் மஹா சின்னதாக ஆகும்படிப் பண்ணவேண்டும்' என்று அம்பாள் ஒரு ப்ளான் பண்ணினாள். ரஸபரிதமாக [சுவை நிரம்பியதாக] நாடகம் போடுவதே அவள் குணமானதால் இப்படி விசித்ரமாக ப்ளான் பண்ணினாள்.

ஒரு மநுஷ்யன் தன்னிடம் இருக்கிற மஹா பெரிய வஸ்து புத்தி என்றுதான் நினைக்கிறான். அதைப் பற்றியே கர்வம் கொண்டிருக்கிறான். ஆனால் அதை அப்படியே த்யாகம் செய்துவிட்டு, தன்னைப் பரம எளிமையாக்கிக் கொண்டால்தான் வேதத்தின் ப்ரயோஜனத்தை அவன் அடைய முடியும் என்றே அவள் காட்ட நினைத்ததாகத் தோன்றுகிறது. அறிகிற இந்த்ரியம் புத்தி. 'வேத' என்றாலும் 'அறிவது'தான். பரம ஸத்யத்தைப் பற்றி அறிவிப்பதே வேதம். ஆனால் ஸ்வய மூளையால் அதை அடைய முடியாமல் பண்ணி, மூளைக் கர்வம் பிடித்த மநுஷ்யனுக்குப் பணிவைக் கொடுக்கவேண்டும் என்று நினைத்தாள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஒன்று சேர்க்கவே முடியாமலிருப்பவற்றை ஒன்று சேர்க்கிற மஹா

Koviloor Digital Library

ஸாமர்த்யம் அவளுக்கு உண்டு — 'அகடித கடனா படீயஸீ' என்று இதைச் சொல்வது. அப்படி, பெரிசில் பெரிசான வேதத்தை, ஸ்ருஷ்டியில் உசந்து நிற்கிற மநுஷ்யன் அடங்கி, சின்னவனாகியே பெறவேண்டும் என்று திட்டம் பண்ணினாள்.

என்ன ப்ளான் என்றால்: முதலிலே ஈச்வர ஸ்வரூபமான அகண்ட ஆகாசத்திலிருந்து வேத மந்த்ரங்களை க்ரஹித்த ரிஷிகள் அப்படி க்ரஹிக்கும் போதே அவற்றிலிருந்த அத்தனை திவ்யசக்தியையும், அந்த சக்திக்கெல்லாம் மூலமான, முடிவான சாந்தத்தையும் அப்படியே க்ரஹித்துத் தங்களுக்குள் ரொப்பிக் கொள்ளும்படியும், அப்புறம் வருபவர்கள் அவர்களிடமும் வழிவழியாக வந்த அவர்களுடைய சிஷ்ய பரம்பரை யிடமும் அந்த மந்த்ரங்களை உபதேசமாகப் பெற்றால் மட்டுமே தாங்களும் மூளையர்த்தத்துக்கு மேற்பட்ட நிஜ ப்ரயோஜனமான அந்த திவ்யசக்தி-சாந்திகளைப் பெறும் படியாகவும் வைத்தாள். அதாவது எழுத்தாலோ, வார்த்தையாலோ, ஒருத்தனுடைய ஸ்வய மூளையாலோ தத்வார்த்தங்களை ப்ரத்யக்ஷமாக அநுபவிப்பதற்கில்லை என்றும், ஏற்கெனவே அப்படி அநுபவித்தவன் அந்த எழுத்தையும் வார்த்தையையும் உபதேசித்து அதைக் கேட்டுக் கொண்டால்தான் காதுக்குள்ளே அந்த சப்தம் போகும்போதே ஹ்ருதயத்திற்குள்ளே அதன் லக்ஷ்யமான தத்வம் — ஒரு சக்தி அல்லது சாந்தம் — போகும்படியும் ஒரு உயிரோடு இன்னொரு உயிரை 'லிங்க்' பண்ணி வைத்தாள். அப்படிச் சொல்லிக் கொடுக்கும் உயிர் குரு, சொல்லிக் கொள்ளும் உயிர் சிஷ்யர். அப்புறம் தலைமுறை, தலைமுறை, தலைமுறைகளாக, சிஷ்யர்களே குருவாகி வேறே சிஷ்யர்களுக்கு உபதேசித்துக் கொண்டு போகவேண்டுமென்று வேத பாரம்பர்யம் உண்டாகும்

Koviloor Digital Library

படியாக ப்ளான் போட்டுவிட்டாள்! ஒவ்வொரு குருவும் தன் உயிரிலே கலந்த வேத சாஸ்த்ரங்களை அந்த உயிருடைய சக்தியோடு சைதன்யமயமாக சிஷ்யனின் உயிருக்குள்ளே பாயும்படிப் பண்ணியே தத்வார்த்தமும் அந்த உயிருக்குள் பாய்ந்து அதாவது ஸ்வய அநுபவத்தைக் கொடுக்கும்படியாகப் பண்ணினாள்.

ஆகக்கூடி, மூளையைத் தூக்கிப் போட்டு விட்டு வேதமே 'அதாரிடி' என்று நம்புவதோடு, அந்த அதாரிடியே விதித்திருக்கிறபடி, 'ஆசார்யன் மூலமே அதில் உபதேசம் பெற வேண்டும்' என்றும் நம்பி பக்தி ச்ரத்தையுடன் சரணாகதி பண்ணி, உபதேசம் வாங்கிக்கொண்டால்தான் ப்ரயோஜனம்.

வேதம் மாத்திரமில்லை; மற்ற மதங்களில் சொல்கிற தத்வங்கள்......, தத்வங்கள் வரைகூடப் போகவேண்டாம், நடைமுறை லோக விஷயங்களானாலுங்கூட ஸரி, நாமாக ஒன்றைத் தெரிந்துகொள்வதைவிட, ஒரு விஷயத்தில் அநுபவம் கண்ட ஒருத்தன் அதை எடுத்துச் சொல்லி அவனுடைய ஜீவித சக்தி அதில் கலந்து வந்து நாம் பெறுகிறபோதே அது அதிக பலம் பெற்று, அதிக ப்ரயோஜனம் தருகிறது. ஆனால் மற்ற ஸமாசாரங்களில் தானாகவே தெரிந்துகொண்டாலும் ப்ரயோஜனம் இல்லாமல் போகவில்லை. வேதம், அப்புறம் அதை அநுஸரித்து வந்த சாஸ்திரங்கள் ஆகியவற்றின் விஷயத்தில் மட்டும் குருமுகமாக வந்தால்தான் பலன், தானாக எடுத்துக்கொண்டால் நிஷ்பலன் என்றே இருக்கிறது! இப்படி இருக்கும்படி அம்பாள் ப்ளான் பண்ணி, நடக்கிறது. 'ஏன்' என்றால், அவள் சித்தம் நமக்குத் தெரியாது! அவள் என்னமோ நினைத்துத்தான் இப்படிப் பண்ணினாள் என்று நினைப்பதுகூட எவ்வளவு ஸரியோ?

Koviloor Digital Library

அவள் என்ன நினைத்தாளோ, நினைக்க வில்லையோ, நாம் விமோசனம் பெறுகிறதற்கு வழி நம் பலத்தால் ஸாதித்துக்கொள்ள இங்கே ஒன்றுமில்லை என்ற அடக்கத்தோடு, வேதமே ப்ரமாணம் என்ற நம்பிக்கை யோடு, அந்த வேதத்தை குருமுகமாகவே பெறுகிறதுதான். வேதம் என்றால் வைதிக ஸம்ப்ரதாயத்தில் வந்துள்ள ஸகல சாஸ்த்ரங்களுந்தான். குறிப்பாக, தந்த்ர சாஸ்த்ரத்தை அதில் சேர்த்தே சொல்கிறேன். அநேக தெய்வங்களைக் குறித்த மந்த்ரங்கள் நேராக வேதத்திலில்லாமல் அதில் மறைமுகமாகவே சூசிக்கப்பட்டிருக்கும். அவை நேர் ரூபத்தில் தந்த்ர சாஸ்த்ரத்தில் இருக்கிறவைதான். இவற்றையும் வேதம் மாதிரியே கண்டிப்பாக குரு முகமாகத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

நேராக வேதத்திலில்லை என்பதுகூட எவ்வளவுக்கு ஸரியோ? இப்போது வேதசாகைகளில் ஏராளமானவை நஷ்டப்பட்டு ஏதோ சிலதுதானே அநுஷ்டானத்திலிருக் கின்றன? நஷ்டமான அந்த சாகைகளில் இப்போது தாந்த்ரீகமாக மட்டுமே நமக்குக் கிடைக்கும் மந்த்ரங்கள் இருந்திருக்கலாமோ என்னவோ?

விஷயம், நமது மதத்தில் மந்த்ரம், தத்வம் என்றால் அவை குருமுகமாக உபதேசம் பெற்றால்தான் பலனளிக்கும் என்றே இந்த லோகத்தை நடத்தி வருகிற பெரிய சக்தியினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தத்வ சாஸ்திரங்கள் எல்லாமும் அப்படியே. குருமுகமாக அவற்றில் உபதேசம் பெற்றே பயிற்சி பண்ணவேண்டும்.

யோக சாஸ்த்ரத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். 'யோக சாஸ்த்ரம்' என்கிறபோது பதஞ்ஜலி சொல்லியிருக்கிற அஷ்டாங்க யோகத்தை மட்டுமில்லாமல், பல பெயர்களிலும் உள்ள பலவிதமான யோகங்களையும், அத்தனை Yoga schools-ஐயும் சேர்த்தே சொல்கிறேன்.

Koviloor Digital Library

இன்றைக்கு 'யோகா', 'யோகா' என்றே எங்கே பார்த்தாலும் பேச்சாயிருக்கிறது. அதனாலேயே எங்கே முறை தப்பாக நடந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது. இந்த யோகமெல்லாம் நல்ல அநுபவமுள்ள ஒரு குருவின் கண் பார்வையிலேயே, அவருடைய constant attention-லேயே இருந்துகொண்டு செய்யவேண்டியவை என்பதை ஒரு போதும் மறக்கக்கூடாது. ஸரியான குரு கிடைத்து அவருடைய சாச்வத கவனம் பெற்றுச் செய்யாவிட்டால் பெரிய விபரீதங்களே தேஹ ரீதி, மனோ ரீதி இரண்டிலும் உண்டாகிவிடும். எந்த சாஸ்த்ரீய மார்க்கத்தையும் குரு முகமாக இல்லாமல் பண்ணினால் கெடுதிதான் வரும் என்றாலும், இந்த யோக மார்க்கங்களிலேயோ அந்தக் கெடுதி ரொம்பவும் பயங்கரமாக இருக்கும்.

பொதுவான எளிய வழிபாடும் துதி பாராயணமும் : குருமுகம் என்ற கட்டாயமில்லை

சாதாரணமாக எல்லா ஜனங்களுக்குமே தெய்வ சிந்தனை இருக்கத்தான் வேண்டும். மநுஷ்ய ஜீவன் அந்தப் பெயருக்கு லாயக்காக இருக்க வேண்டுமானால் தனக்கு ஜீவ சக்தியைக் கொடுத்த ஸ்வாமியைச் சிந்தித்து, அவன் அருள் வழிகாட்டுகிறபடிதான் ஜீவனம் நடத்த வேண்டும். இந்த [தெய்வ] சிந்தனை நாமே பண்ணுவதாக இருந்தால், நம்முடைய சித்தம் ஓடுகிற தாறுமாறான ஓட்டத்தில் உருப்படியாக ஒன்றும் தேறாது. அது மாத்திரமில்லாமல் நமக்கு ஸ்வாமியைப் பற்றி சொந்த அநுபவமாக என்ன தெரியும்? நமக்குத் தெரியாதவரைப் பற்றி நாம் என்னத்தைச் சிந்திக்க முடியும்? இங்கே, அப்படித் தெரிந்து கொண்ட பெரியவர்கள் பாடிய ஸ்தோத்திரங்கள் — தமிழ் முதலான ப்ரதேச பாஷைகளில் இருக்கிற துதிகளுந்தான்

Koviloor Digital Library

— நமக்குக் கை கொடுத்துத் தூக்கிவிட ஓடி வருகின்றன. பல காலமாக அவற்றை, ஸ்வாமியை சொந்தத்தில், நேரில் தெரிந்து கொண்ட எத்தனையோ பேர் சொல்லிச் சொல்லி அவற்றுக்கு தெய்விக சக்தி கூடிக் கொண்டே வந்திருக்கும். அவற்றைச் சொல்வதே, அதாவது, 'ஸ்தோத்ர பாராயணம்', 'துதி ஓதுதல்' என்பதே நம்முடைய சித்தத்தை ஸ்வாமியிடம் சேர்த்து வைக்கும்.

நம் தேசம் செய்த பாக்கியம், இம்மாதிரி ஸ்துதிகள் ஒவ்வொரு தெய்வத்தையும் குறித்துக் கணக்கு வழக்கு இல்லாமலிருக்கின்றன. நம் தேசத்திலும் இந்தத் தமிழ்நாட்டில் பிறந்தவர்களின் பாக்கியம் இங்கே தோன்றிய நம் முன்னோர்கள் நம்முடைய தமிழ் பாஷையில் துதிகளை அப்படியே கொட்டி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் ஜனங்கள் அவரவரும், தாங்களே படித்துப் பாராயணம் பண்ணலாம். குருமுகமாகக் கற்றுக் கொண்டுதான் பண்ணணும் என்று கண்டிப்பு இல்லை. அநுபவம் கண்ட குரு எடுத்து வைத்துப் பண்ணினால் அது ரொம்ப விசேஷந்தான்; ஸந்தேஹமேயில்லை. ஆனால் அப்படிக் கட்டாயமாக விதி இல்லை.

எந்த ஸ்தோத்ரம் சொல்வதானாலும் முதலில் பிள்ளையார் பற்றி ஒரு ச்லோகமாவது சொல்லிவிட்டு, அப்புறம் குரு பற்றிப் பொதுவாக உள்ள — அதாவது எந்த குருவுக்கும் 'அப்ளை' ஆகிற — ஒரு ச்லோகத்தை நாம் எந்த மஹானை குருவாக நினைக்கிறோமோ அவரை நினைத்துச் சொல்லிவிட்டு, அதற்கப்புறமே அந்த ஸ்தோத்ரம், அல்லது பிரதேச மொழித் துதியைச் சொல்வது நல்லது.

ஸ்வாமி மஹாசக்தர், மஹா பெரியவர் என்பது நம் எல்லாருக்கும் தெரிந்த விஷயமாகையால் அவரிடம் நாம் சின்னவராக நிற்பதில் விசேஷமில்லை. அப்படி நிற்பதால் நமக்கு விசேஷமாக விநய ஸம்பத் என்ற எளிமை, அடக்கம்

Koviloor Digital Library

உண்டாகி விடாது. நம் மாதிரியே மநுஷ ரூபத்தில் வந்தும் பெரியவராக, தெய்வத்தன்மை நிரம்பியவராக ஆன ஒருத்தரிடம் பணிந்து நின்றால்தான் விசேஷம்; அப்போது தான் விநய ஸம்பத் உண்டாகும். வாழ்க்கையில் அந்த ஸம்பத்தைப் போல இன்பமும், நிறைவும் தருகிற ஒன்று கிடையாது. ஆகையினால் அதை ஒவ்வொருவரும் ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும். அதற்கு குரு வந்தனம் தான் வழி என்பதால்தான் தெய்வத்தையே ஸ்துதிக்கும் போதுங்கூட முதலில் குரு வந்தன ச்லோகம் சொல்லச் சொல்வது. இதிலே ஒரு பக்கம் விநயம். இன்னொரு பக்கம் தன்னம்பிக்கை. என்ன தன்னம்பிக்கை என்றால், நம் மாதிரி மநுஷ்யராகப் பிறந்த அந்த குரு தெய்வம் என்கிற அளவுக்கு உயர்ந்துகொண்டு போனார் என்பதே, நாமும்கூட அந்த திசையில் போகமுடியும் என்ற உத்ஸாஹத்தை ஊட்டுவதுதான்.

ஒரு ஸ்தோத்திரத்தை நமக்கு குரு என்று ஒருவர் கற்றுக் கொடுத்துத்தான் சொல்லவேண்டும் என்ற கட்டாய மில்லாவிட்டாலுங்கூட, நமக்கு இஷ்டமான ஒரு மஹானை குரு ரூபமாக நினைத்து முதலில் இப்படி வழிபட்டால் ரொம்பவும் நல்லது. எந்த குருவுக்கும் பொருந்துவதாக இப்படி அநேக ச்லோகங்கள், பாடல்கள் இருக்கின்றன. ரொம்பவும் பிரஸித்தமாயிருப்பது, குருவையே ஸகல தேவதா ஸ்வரூபமாகக் காட்டிக் கொடுக்கிற ச்லோகம்:

குருர் ப்ரஹ்மா, குருர் விஷ்ணு:, குருர் தேவோ மஹேச்வர: |
குருஸ் ஸாக்ஷாத் பரப்ரஹ்ம, தஸ்மை ஸ்ரீ குரவே நம: ||

தமிழில் திருமூலர் திருமந்திரத்தில்,

தெளிவு குருவின் திருமேனி காண்டல்,
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்,
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்,
தெளிவு குரு உரு சிந்தித்தல்தானே !

Koviloor Digital Library

என்று ரொம்பவும் அழகாக, மனஸ் உருகிச் சொல்கிற மாதிரிப் பாட்டு இருக்கிறது. இப்படி ஒன்றை பக்தியுடன் சொல்லிவிட்டு, ஸ்தோத்ர பாராயணமோ, துதி ஓதுதலோ நாமே ஆரம்பிக்கலாம்.

இங்கேயும் ஒரு விஷயத்தில் ஜாக்ரதை அவசியம். சில ஸ்தோத்ரங்களே மந்த்ர சக்தி பொருந்தியவையாக இருக்கின்றன. ரொம்பவும் வீர்யவத்தாகவே 'லலிதா ஸஹஸ்ரநாமம்', 'லலிதா த்ரிசதி', 'திருமுருகாற்றுப்படை' மாதிரி சில இருக்கின்றன. இப்படிப்பட்டவற்றை ஸம்பிரதாயப்படி குரு முகமாக ஸ்வீகரிப்பதே முறை. ஒரு பெரியவரிடம் போய் இவற்றை மூன்று தடவையாவது, அல்லது அதம பக்ஷம் ஒரு தடவையாவது அவர் சொல்லிக் கேட்டு அப்புறமே நாமாகப் பாராயணம் பண்ண வேண்டும். 'லலிதா த்ரிசதி' ஸமாசாரமாக இன்னம் ஒன்று: அதற்கு அம்பாளின் மூல மந்திரங்களில் குறிப்பாக ஒன்றில் க்ரமமாக உபதேசம் வாங்கிக் கொண்ட பிற்பாடே அந்த ஸ்தோத்ரத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

மந்த்ர சக்தி பொருந்திய ஸ்தோத்ரங்களையும் ஒருத்தர் படிக்கும்படியாக ஒரு மஹான் ஆஜ்ஞை பண்ணினால் அப்போது அந்த மஹானின் ஆஜ்ஞையையே குரு உபதேசமாக எடுத்துக்கொண்டு அப்படியே பண்ண வேண்டும்.

சொல்ல வந்தது, பொதுவாக ஸ்தோத்ரங்களை அவரவரும் தாங்களாகவே பாராயணம் செய்ய இடமிருக்கிறது என்பதுதான்.

அப்படியேதான் வீட்டுக்கு வீடு ஒரு சின்ன பூஜையும். பொதுப்படையாக ஒரு குரு த்யானம் சொல்லி விட்டு அவரவரே ஆரம்பித்துப் பண்ணலாம். மந்த்ர, தந்த்ரங்கள் கலக்காத பூஜையாக இருக்கவேண்டும் என்பது முக்கியம். அந்த (மந்த்ர, தந்த்ர) ஸம்பந்தம் கொஞ்சம் வந்தாலும்

Koviloor Digital Library

விதிவத்தான குருமுக உபதேசம் என்பது கண்டிப்பாக இருந்தே ஆகவேண்டும். அப்படியில்லாத சின்ன பூஜையையுங்கூட ஒரு பெரியவர், அகத்து சாஸ்திரி மாதிரி ஒருவர் எடுத்து வைத்து, 'அவர் குரு, நாம் சிஷ்யர்' என்ற பாவத்துடன் செய்ய ஆரம்பித்தால் ரொம்பவும் ச்ரேஷ்டம்.

எனக்கு இரண்டு தினுஸாக எண்ணம் ஓடுகிறது. ஒரு பக்கம், நமது மத ஸம்ப்ரதாயத்தில் குருவுக்குக் கொடுத்திருக்கிற முக்யத்வத்தைப் பார்க்கிறபோதும், அதோடு ஜனங்களின் தற்காலப் போக்கு ஒரு பெரியவர், பெருந்தலை என்றால் மரியாதை தராமல் இஷ்டப்படியே போவதாக இருக்கிறதே என்பதைப் பார்க்கிற போதும், ஜனங்களுக்கு எங்கேயெல்லாம் முடியுமோ, அங்கே 'குரு வேண்டும், வேண்டும்' என்று நுழைக்கவேண்டும் போலிருக்கிறது. இன்னொரு பக்கமோ, நாம் 'குரு குரு' என்று சொல்லப் போய், லக்ஷோபலக்ஷம் பேர் இருக்கிற இந்த உலகத்தில் ஒவ்வொருத்தரும் தனக்கென்று, தான் மரியாதை பண்ணும்படியாக குரு கிடைக்கமாட்டேன் என்கிறார் என்பதால் பூஜை, புரஸ்காரம், ஸ்தோத்ர பாராயணம் எதுவுமே இல்லாமல் இருந்துவிடப் போகிறார்களே என்றும் இருக்கிறது. அதுதான் என்னால் முடிந்த 'காம்ப்ரமை'ஸைப் பண்ணிச் சொல்லிக் கொண்டு போகிறேன்.

ஸாதாரணமாக என் மாதிரி தர்ம பீடங்களில் தலைவர்களாயிருப்பவர்கள் தர்ம சாஸ்திரத்தில் ஏதொன்றையும் விட்டுக் கொடுத்தோ, இளக்கியோ 'காம்ப்ரமைஸ்' பண்ணுவது கூடவே கூடாதுதான். ஏனென்றால் நாங்களே இளக்க ஆரம்பித்தால், சிஷ்ய வர்க்கம் அதை இளக்கிக் கொண்டே போய் சாஸ்த்ர விதி ஒரேயடியாக நீர்த்து ஆவியாகப் போயே போய்விடும்! அதோடு நான் சில விதிகளில் விட்டுக் கொடுத்த மாதிரி

Koviloor Digital Library

ஒவ்வொரு தர்மபீட ஸ்வாமிகளும் சிலது சிலதுகளை, விட்டுக் கொடுப்பது என்று ஏற்பட்டு, எல்லாமே எடுபட்டுப் போய்விடும்! அதனால் நாங்கள் மூல சாஸ்த்ர வழிகளையே எவ்வளவு கண்டிப்பாகச் சொல்ல வேண்டுமோ அப்படித்தான் சொல்லவேண்டும். அப்படித்தான் நானும் பாடுபட்டுப் பார்க்கிறேன். நான் இத்தனை 'கன்ஸர்வேடி'வாக இருக்கிறேனே என்று பல பேருக்கு வருத்தம்கூட! வருத்தம் என்பது உள்ளூரக் கோபமாகவும் இருக்கும்! வெளியிலே இப்படி வருத்தத்தைக் காட்டிக் கொள்கிறவர்கள் எத்தனை பேரோ அவர்களைப் போல பல மடங்கு ஜனங்களுக்கு உள்ளுக்குள் அப்படித் தானிருக்கும்! 'காலநிலை, நம் கஷ்டம் தெரியாமல் எந்த நாள் ஸமாசாரத்தையோ இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறாரே!' என்று குறைப்படத் தோன்றும். எனக்கானால் தர்மஸங்கடம்! அப்படியிருந்தும், 'முடியாததை எப்படியும் ஜனங்களே விடத்தான், அல்லது இளக்கித்தான் செய்வார்கள். அதற்கு நம் வாயாலேயே அநுமதி தருவானேன்? அப்படித் தந்தால், பிற்பாடு தங்கள் சூழ்நிலை மாறினாலாவது அல்லது மாறப் பண்ணிக் கொண்டாவது அப்படியே சாஸ்த்ர விதிப்படிப் பண்ண வேண்டும் என்று நினைக்கக் கூடியவர்களுக்கும் அந்த நினைப்பை நானே அழிப்பதாக ஆகிவிடுமே!' என்பதால் 'கன்ஸர்வேடிவ் சாமியார்' என்று பெயர் வந்தால் வந்து விட்டுப் போகட்டும் என்று ஏதோ ஒரு மாதிரிப் பண்ணிக் கொண்டு போகிறேன்.

ஆனாலும் சாஸ்திரங்களிலேயே இடம் இருப்பதாகத் தெரிகிற விஷயங்களில் காலத்தை உத்தேசித்துச் சில விஷயங்கள் — ரொம்பவும் கண்டிப்பாக ஸம்ப்ரதாயத்தையே சொல்பவர்கள் ஒப்புக்கொள்வார்களா என்று யோஜிக்கக் கூடிய சில விஷயங்களும் — சொல்கிறேன். அப்படித்தான் இப்போது குரு இருந்தே

Koviloor Digital Library

தீரணும் என்றில்லாமல் சில உபாயங்கள் இருப்பதாகச் சொன்னது.

ஒன்று வேண்டுமானால் பண்ணலாம். 'ஆபத்-தர்மம்' என்று சாஸ்திரத்திலேயே ஒன்று சொல்லியிருக்கிறது. அதாவது, ஆபத்துக் காலத்தில் விதிகளைக் கொஞ்சம் இளக்கிப் பண்ணுவதுதான் ஆபத்-தர்மம். லோகத்தைக் கலி புருஷன் அப்படியே 'மெடீரியலிஸம்' என்கிற பேராபத்தில் தள்ளியிருக்கிற காலமாக இதைச் சொல்லலாம். நான் இப்போது கொஞ்சம் விட்டுக் கொடுத்த மாதிரி சொல்வதை ஆபத்-தர்மமாக எடுத்துக் கொள்ளலாம்....

அஷ்டோத்தர [சத] நாமாவளிகள் தாங்களாகவே படித்துத் தெரிந்து கொண்டு அர்ச்சனை பண்ணலாம், தப்பில்லை. ஆனால் சில அஷ்டோத்தரங்களில் முதலில் பீஜாக்ஷரங்கள் என்ற மந்திர சாஸ்திர அக்ஷரங்கள் சேர்ந்திருக்கும். அப்படிப்பட்டவற்றை குரு முகமாகத்தான் கற்றுக் கொள்ளவேண்டும்.

எதையுமே குருமுகமாகக் கற்றுக்கொண்டால் 'வால்யூ' ஜாஸ்திதான் — கண்டிப்பாக அப்படி விதி இல்லாத இடத்திலுங்கூடத்தான் சொல்கிறேன். ஒன்று தோன்றுகிறது: ஆபத்-தர்மம் என்று சொன்னேன். ஆபத்துக் காலத்தில் ரொம்பவும் ஸ்ட்ரிக்டாகப் போகவேண்டாம் என்று சாஸ்த்ரமே அதை 'அலவ்' பண்ணியிருக்கிறது என்றேன். ஆனாலும் ஆபத்துப் போனவிட்டு, விலகின விட்டு, அதே மாதிரி இளக்கிப் பண்ணிக்கொண்டு போகாமல், முழுக்க சாஸ்த்ர ப்ரகாரம் பண்ண ஆரம்பித்து விடணும். 'ஆபத்ஸந்நியாஸம்' என்று கேள்விப்பட்டிருக்க லாம். மரண காலம் நெருங்கி விட்டதாக ஒருவருக்குத் தெரிகிறபோது, ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டு [தேஹ] வியோஹமானால் விசேஷமாயிற்றே என்று அவர் 'ஃபீல்' பண்ணுகிறாரென்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த நிலையிலே அவர் [ஸந்யாஸ] ஆச்ரமம் பெறுவதற்கு ஒரு

Koviloor Digital Library

குருவைத் தேடிப்பிடித்து, ஸாங்கோபாங்கமாக ஆச்ரம ஸ்வீகாரம் பண்ணிக் கொள்ள முடியுமா? முடியாது என்பதை சாஸ்த்ரம் கவனித்துப் பரம கருணையோடு, அந்த ஸமயத்தில் ரொம்பச் சுருக்கமாக ஒரு சடங்கைப் பண்ணி அவர் தாமே — குருமுகமாக இல்லாமல் தாமே — ஸந்நியாஸம் வாங்கிக் கொள்ளலாமென்று சொல்லியிருக் கிறது. ஆனால் அவருக்கு உடம்பு ஸரியாகி விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அவர் விதிப்ரகாரமே ஒரு குருவை அடைந்து, முன்னே தாமாக எடுத்துக் கொண்ட ஸந்நியாஸத்தை மீண்டும் குருமுகமாகப் பெறவேண்டும். அந்த மாதிரியே, சாஸ்திரம் இடம் கொடுத்து நாமாக மேற்கொள்ளும் உபாஸனைகளையும், அப்புறம் குருமுகமாகப் பெறுவது என்று வைத்துக் கொண்டால் சிலாக்கியம்.

இந்தக் கலிகாலத்துக்கென்றே ஏற்பட்ட மருந்து — தித்திப்பு மருந்து — நாம பாராயணமும், பஜனையும். இவற்றைத் தாங்களாகவே ஆரம்பித்துப் பண்ணலாம். ப்ரணவமும், 'நம:'வும் சேர்க்காமல், 'சிவ, ராம, நாராயண கோவிந்த' முதலான, எந்த தெய்வத்தின் நாமாவையும் ஒருத்தர் தானாகவே ஜபிக்கலாம். இங்கேயுங்கூட முதலில் குட்டியாக ஒரு குருத்யானம் நல்லது. அந்த நாமாவைச் சொல்லி ஸ்வாமியைக் கண்டுகொண்ட ஒருத்தரை குருவாக தியானித்தால் அதுவே ஒரு பக்கம் விநயம், இன்னொரு பக்கம் டானிக்! வெறும் நாமாவையுங்கூட ஒரு நாம ஸித்தாந்தப் பெரியவரிடம் க்ரமப்படி உபதேசம் வாங்கிக் கொண்டால் நிச்சயமாக அது விசேஷந்தான். ஆனால் அதற்கு ஸௌகர்யப்படவில்லையென்பதற்காக ஒத்திப் போட வேண்டாம்; தானாகவே ஆரம்பித்துக் கொள்ளலாம் என்றுதான் சொல்கிறேன். அப்புறம் ஸௌகரியம் ஏற்படுகிற போது ஒரு பெரியவரிடமிருந்து உபதேசமாகவும் பெற்றுக் கொண்டால் விசேஷம்.....

Koviloor Digital Library

பொதுஜனப் பெரும் ஸமுதாயம்: ப்ரத்யேக குரு இல்லாவிடினும், பொதுவான குரு தேவை

ஜனங்களுக்கெல்லாம் தெய்வ சிந்தனை இருக்க வேண்டும். அதற்கான பூஜை, பாராயணம், பஜனை எல்லாமும் எல்லாரிடமும் விருத்தியாக வேண்டும். அதே ஸமயம் எல்லாருக்கும் பணிவு என்ற குணம் விருத்தியானால்தான் அஹங்கார-மமகாரங்களில் மாட்டிக் கொண்டு அழிந்து போகாமல் ஆத்மாவைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமாதலால் எல்லாரும் குரு என்று ஸ்தானம் கொடுத்து ஒருவரிடம் பணிவோடு பக்தி பாராட்டவும் வேண்டும்.

இதன் பொருட்டாக அத்தனை ஜனங்களுக்கும் — லக்ஷோபலக்ஷம் என்று சொன்னேன்; கோடாநுகோடி என்றே சொல்லியிருக்கவேண்டும்; அத்தனை பேருக்கும் — குரு பக்தி எப்படியாவது இருந்தேயாக வேண்டும் என்று நினைக்கிறேன்! அத்தனை பேரையும் பார்த்துப் பார்த்துப் பயிர் பண்ண அத்தனை குருமார்கள் — அதிலும், எவரையும் கேள்வியோடேயே பார்க்கிற குணம் ஜனங்களுக்கெல்லாம் விருத்தியாகிவிட்ட தற்காலத்தில் — கிடைப்பார்களா? கஷ்டம்தான். குரு என்று சொல்லிக் கொள்ளத் தகுதி வாய்ந்தவர்கள் இருந்தால்கூட அவருடைய தகுதியை உணர்ந்து தங்களைச் சிறுக்கிக் கொண்டு ஜனங்களும் போக வேண்டுமே! அப்படி இத்தனை கோடி பேருக்கும் வாய்க்குமா — குரு-சிஷ்ய உறவு வாய்க்குமா — என்றால் ரொம்பவும் ஸந்தேஹம்தான்.

ஆனாலும் இன்றைய ஸமுதாயத்தில் ஜனங்களில் அத்தனை பேரில் ஒவ்வொருவரும் எவராவது ஒருவரை மஹான், தெய்வ புருஷர் என்று நம்பிக்கொண்டிருக் கிறார்கள். அவநம்பிக்கை யுகம் என்றே இக்காலம் பேர்

Koviloor Digital Library

வாங்கி விட்டாலும், மஹான்கள் என்று நம்பப்படுகிறவர் களிடமும், அநேகம் அநேகம் கூட்டங்களாக அத்தனை ஜனங்களும் எவராவது ஒருவரிடம், போய்க் கொண்டு தானிருக்கிறார்கள். பல பேர் பல மஹான்களிடமும் போகிறார்கள். என்றாலும் ஒவ்வொருவருக்கும் குறிப்பாக அவர்களில் ஒருவரிடம்தான் ஜாஸ்தி ஈடுபாடு உண்டாகிறது.

அந்தப் பெரியவர்கள் ஒவ்வொருவரும் தெய்வ ஸம்பந்தமாகவும், லோக வாழ்க்கையை எப்படி வாழ்ந்தால் நல்லது என்பதைப் பற்றியும் உபதேசம் செய்கிறார்கள். ஜனங்கள் அவர்களிடம் போவது தங்களுடைய கஷ்டம் தீர வேண்டும், தாங்கள் ஆசைப்படுவது நடக்கவேண்டும் என்பதற்காகவே என்று முடிந்துவிடாமல், அவர்களுடைய உபதேசப்படிக் கேட்டு அப்படி நடக்கவேண்டும் என்று நினைப்பதாகவும் ஆனால்தான் அந்த பக்தியும் ஈடுபாடும் நிஜமானவை; அர்த்தமுள்ளவை. அநேகமாக எல்லா ஜனங்களுமே இப்படித் தாங்கள் ஆச்ரயிக்கிற பெரியவரின் வழிகளை, கொள்கைகளை கொஞ்சம் கொஞ்சமாவது பின் பற்றாமலிருக்கமாட்டார்கள். குறைந்த பக்ஷம், பின்பற்ற வேண்டும் என்ற முயற்சி, அந்த எண்ணமாவது உள்ளவர் களாகவே இருப்பார்கள்.

இந்த இடத்தில் அந்த மஹான் குருவாகவும், அவரிடம் போகிற ஜனங்கள் சிஷ்யர்களாகவும் ஆகிவிடுகிறார்கள்.

ரொம்பவும் 'ஃபாலோயிங்' உள்ள பெரியவர்கள் என்றால், 'ஃபாலோயர்' என்று இருக்கிற அத்தனை பேர்களில் ஒவ்வொருவரோடும் அவர்கள் நேராகத் தொடர்பு கொண்டு க்ரமப்படி உபதேசம் தரமுடிவதில்லை. ஆனாலும் அவர்கள் தங்களுடைய உபதேசத்தைப் பொதுப்படத் தருகிறார்களோ இல்லையோ? அதைத் தழுவியே தாங்கள் நடப்பது என்று அவருடைய பக்தர்கள்

Koviloor Digital Library

நினைத்தால் அப்போதுதான் அவர்கள் நிஜமாக 'ஃபாலோயர்' ஆகிறார்கள். குரு நடத்தும் வழியில் செல்லும் சிஷ்யர்களாக, ஒரு பெரியவர் கொடுக்கிற பொது உபதேசத்தை — ப்ரத்யேகமாகத் தங்களில் ஒவ்வொருவருக்கும் அவர் உபதேசிக்காமல் பொதுப்படையாக உபதேசிப்பதையே ப்ரத்யேக உபதேசமாகக் கொண்டு — பின்பற்றுகிற அப்போது — இந்த மாதிரி ஜன ஸமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒருவரிடம் போய் அவரைப் பின்பற்றுகிறபோது — எல்லோருக்குமே, ஒவ்வொருத்தருக்குமே ஒரு குரு கிடைத்து விடுகிறார். தனிப்பட மந்திர தீக்ஷை கொடுக்கும் குரு இல்லாவிட்டாலும், தெய்வ சிந்தனைக்கும் நல்வாழ்க்கைக்கும் வழிசொல்கிறவராக ஒரு குரு கிடைத்துவிடுகிறார்.

நானே இருக்கிறேன்; என் மாதிரி வேறே ஸ்வாமிகளும் இருக்கிறார்கள். 'ஜகத்குரு' என்று டைட்டிலும் இருக்கிறது. அதற்காக ஜகத்திலுள்ள ஒவ்வொருத்தருக்கும் நாங்கள் தனிப்பட உபதேசம் கொடுக்கிறோமா என்ன? கொடுக்க முடியத்தான் முடியுமா என்ன? ஜகத்தில் உள்ள அவ்வளவு பேரையும் எங்களைச் சேர்ந்தவர்களாகக் கொண்டு, எங்கள் மூல புருஷர் தெய்வ ஸம்பந்தமாகவும், வாழ்க்கைத் தர்மமாகவும் என்ன உபதேசித்தாரோ அதை நாங்களும் பொதுப்பட ஜகத் பூராவுக்கும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஜனங்களில் ரொம்பவும் பெரும்பாலான பேர், எங்களிடம் தனிப்பட உபதேசம் பெறாவிட்டாலும், எங்களையே குருவாகக் கொண்ட சிஷ்ய லோகமாக இருக்கிறார்கள்.

இந்த மாதிரி 'மஹான்' என்று ஆச்ரயித்து, 'குரு' என்று கொள்கிறவனைக் குறித்தே பாராயணம், பூஜை, பஜனை முதலான எதுவானாலும், அதன் முதலில் குரு வந்தனம் பண்ண வேண்டும்.

Koviloor Digital Library

பாராயண நூலைப் பண்ணியவர், பூஜா கல்பத்தை ஏற்படுத்தியவர், பஜனை ஸம்பிரதாயத்தை உண்டாக்கித் தந்தவர் ஆகியவர்களையும் குருவாக நமஸ்கரிக்க வேண்டும். அவர்கள் இன்னார் என்று தெரியாதபோதுங்கூட, 'எவராயிருந்தாலும் அவருக்கு நமஸ்காரம்' என்று [சிரித்து] 'எந்தரோ மஹாநுபாவுலு' மாதிரி 'எவரோ மஹாநுபாவுலு'வுக்கும் பண்ணவேண்டும்.

மொத்தத்தில் விஷயமென்னவென்றால், ப்ரத்யேக மாக குரு என்று ஒருவரிடம் உபதேசம் பெற்றுத்தான் பண்ணவேண்டும் என்று இல்லாத சின்ன உபாஸனைகளும் இருக்கின்றன. பெருத்த ஜன ஸமுதாயத்தில், அவரவரும் ஸம்ஸார வாழ்க்கை விஷயமாகவே ஆலாப் பறந்து கொண்டிருக்கிற போக்கில் அத்தனை ஜனங்களும் மேற்கொள்ளக் கூடியதாக இந்த உபாஸனைகள் இருக்கின்றன. குரு, பூஜை எடுத்து வைப்பவர் என்றெல்லாம் ஒருத்தருமே கிடைப்பதற்கில்லாத இடமாக லோகத்தில் எங்கெங்கோ எல்லாமோ நம் ஜனங்கள் வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கை கொடுப்பதாகச் சில உபாஸனைகள் — வழிபாட்டு முறைகள் — இருக்கின்றன. இவற்றை விட்டால் இன்று லோகத்தில் ச்ரேயோ மார்க்கமே [உயர் நலனுக்கு வழியே] இல்லை. ஆனபடியால் இவற்றிலேயே பெரும்பாலான ஜனங்கள் போனாலும் போகட்டும். அதில் தப்பில்லை. நல்லதே!

ஆனாலும் அப்போதுங்கூட நம்முடைய ஸநாதன தர்ம ஆலவிருக்ஷம் ஒரு பெரிய வேராகப் பாய்ச்சியிருக்கிற குரு பக்தியை விட்டு விடாமல், பிரத்யேகமாக இல்லா விட்டாலும் பொதுப்படையாகத் தனக்கு நல்ல வழி காட்டுகிறவரை ஒவ்வொருவரும் தியானித்து விட்டே உபாஸனை செய்வது நல்லது என்று தோன்றியதால் சொன்னேன்.

Koviloor Digital Library

அடக்கமும், தன்னம்பிக்கையும் லோகத்தில் தழைப்பதற்கு குரு உபாஸனையே வழியாயிருப்பதால் சொன்னேன்.

விநயமும் ச்ரத்தையும்

அடக்கம் என்பது விநயம். நம்பிக்கை என்பது ச்ரத்தை. இந்த இரண்டுமே நமக்கு இரண்டு கண் மாதிரி. குரு என்றால் வழி காட்டுபவர், அந்த வழியில் போகணுமென்று திரும்பத் திரும்பப் பார்த்தோமோல்லியோ? கண் இருந்தால்தானே ஒரு வழியில் போக முடியும்? அப்படி நமக்கு இரண்டு கண்களாக இருப்பவை விநயமும் ச்ரத்தையுந்தான். இந்த இரண்டில் ஒன்று இருந்தாலே மற்றதும் தன்னால் வந்துவிடும். ஒன்றிடம் நாம் அடங்கிக் கிடக்கிறோமென்றாலே அதுதான் நமக்கு நல்லது செய்யும் என்ற த்ருட நம்பிக்கையில்தானே அப்படிக் கிடக்கிறோம்? அதே மாதிரி, ஒன்றிடம் நாம் அதுவே பரம ப்ரயோஜனம் தருமென்று த்ருட நம்பிக்கை வைக்கிறோமென்றால் அந்த ப்ரயோஜனத்தைப் பெற அதனிடம் அடங்கிக் கிடக்கத்தானே செய்வோம்?

கீதையிலே பகவான் விநயத்தையும் சொல்லியிருக்கிறார், ச்ரத்தையையும் சொல்லியிருக்கிறார். முதலில் **'ப்ரணிபாதம்'** என்கிற நமஸ்காரம், **'பரிப்ரச்னம்'** என்பதாக நன்றாகக் கேட்டுக் கேட்டுத் தெரிந்து கொள்வது, **'ஸேவை'** என்பவற்றை சிஷ்யலக்ஷணமாகச் சொன்னார்.* ஸேவைதான் குருவுக்குச் செய்கிற தொண்டு; பலவிதமான பணிவிடைகள். அதுவும் வித்யையை ஸ்வீகரிப்பதற்கு ஜீவாதாரமான அம்சங்களில் ஒன்று. அப்புறம்

* பகவத்கீதை 4.34

Koviloor Digital Library

"ச்ரத்தாவான் லபதே ஜ்ஞானம்" [சிரத்தையுள்ளவனே ஞானம் பெறுகிறான்] என்றும் சொல்லியிருக்கிறார்[1]. முதலில் சொன்ன ப்ரணிபாத-பரிப்ரச்ன-ஸேவைகள் விநயத்தின் கீழ் வருகிறவையே. ப்ரணிபாதமும், அதாவது நமஸ்காரமும், ஸேவையும் விநயத்தைக் காட்டுபவை என்று எவருக்கும் புரியும். கேட்டுக் கேட்டுத் தெரிந்து கொள்வதான 'பரிப்ரச்னம்' எப்படி விநயத்தில் வரும் என்று தோன்றலாம்.

பரிப்ரச்னம் எப்படி விநயமாகும்?

வளைத்து வளைத்துக் கேள்வி கேட்பதே 'பரிப்ரச்னம்'. "குரு சொல்வதில் நிச்சயம் ஏற்படாவிட்டால் தானே இப்படிக் கேட்கத் தோன்றும்? ஆகையால் விஷயத்திலும், விஷயத்தில் மாத்திரமில்லாமல் விஷயம் சொல்லும் குருவிடமுமே ஸந்தேஹத்தைக் காட்டுவது போல் அல்லவா இந்தப் பரிப்ரச்னம் என்பது தோன்றுகிறது? இந்த இடத்திலேயே பகவான் 'ஸந்தேஹக்காரன் நாசமடைகிறான்' — **'ஸம்சயாத்மா விநச்யதி'**[2] — என்றும் சொல்லியிருக்கிறாரே! ச்ரத்தை, விநயம், சரணாகதி இருந்தால் குரு சொல்வதில் ஸந்தேஹமே வராது; ஆனபடியால், கேள்வியும் எழும்பாது. கேள்வி கேட்பவன் ஸம்சயக்காரன்தானே? சிஷ்ய லக்ஷணத்திற்கு நேர்மாறாக இப்படிப் பண்ணி பகவான் வாயினாலேயே 'விநச்யதி' [அழிந்து போகிறான்] என்று சாபம் வாங்கிக் கொள்வதை எப்படி விநயத்தில் சேர்க்கமுடியும்? — இப்படித் தோன்றலாம்.

அதில்லை ஸரியான அர்த்தம். சிஷ்யன் அவச்யம் பண்ணவேண்டியவைகளிலேயே, ப்ரணிபாதத்திற்கும்

1. பகவத்கீதை 4.39
2. பகவத்கீதை 4.40

Koviloor Digital Library

ஸேவைக்கும் மத்தியில் பரிப்ரச்னத்தை பகவான் சொல்லி யிருக்கிறார். அப்புறம், "ஸம்சயாத்மா வீணாகிறான்" என்று பிரித்துச் சொல்லியிருக்கிறார். ஆகையினால் வளைத்து வளைத்துக் கேள்வி கேட்கிற 'பரிப்ரச்னம்' ஸம்சயம் இல்லை என்று ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

அந்தப் பரிப்ரச்னத்தை எப்படிப் புரிந்துகொள்ளணு மென்றால்: அது குருவை வளைத்து வளைத்துக் கேட்பதில்லை; அப்படிக் கேட்டால்தான் அவரிடம் ஸம்சயம் என்று ஆகும். அவர் சொன்ன விஷயம் ஸரியா என்ற ஸந்தேஹமும் இல்லை. குரு சொல்கிறாரென்றால் அது ஸரியே என்று வைக்கும் நம்பிக்கைக்கு ஹானியான ஸம்சயமில்லை. 'அவர் சொல்லும் விஷயம் ஸரியேதான்; ஆனாலும் அது தனக்கு நன்றாக அர்த்தமாகிவிட்டதா?' என்று ஒரு சிஷ்யன் தன்னையே வளைத்து வளைத்து, "புரிஞ்சிண்டாயாடா?" என்று சோதித்துப் பார்த்துக் கொண்டு, ஆனாலும் அதற்குத் தானாகப் பதில் கண்டுபிடிக்கப்படாது என்று குருவிடம் ஸமர்ப்பிப்பது தான் 'பரிப்ரச்னம்'. தனக்கு ஏதோ ஒரு அணுவளவு புரியாமல் போனால்கூட, மறைக்காமல், ஒளிக்காமல் ஸமர்ப்பிக்க வேண்டும். அது அசட்டுத்தனம், அறியாமை என்று குருவுக்குத் தோன்றினால்கூடப் பரவாயில்லை என்ற அளவுக்கு அபிமான ரஹிதமாக, தன்மானம் விட்டு ஜாடாவும் கேட்டுக் கொள்வதே பரிப்ரச்னம். 'மானத்தை விட்டு' என்றால் விநயம் இல்லாமல் வேறே என்ன?

ஒரு மெஷின் இருக்கிறது. அது வேலை செய்துகொண்டு இருக்கும்போது நாம் பார்க்கிறோம். அது மெஷின், வேலை செய்கிறது என்பதில் நமக்கு ஸம்சயம் இருக்கிறதா? இல்லை. ஆனால் அது எப்படி வேலை செய்கிறது என்று தெரியவில்லை. பக்கத்திலேயே அந்த மெஷினை விற்கிறவரோ, ஓட்டுகிறவரோ இருக்கிறார்.

Koviloor Digital Library

அவருக்கு மெஷின் ஸமாசாரம் முழுக்கத் தெரியும் என்பதில் நமக்குக் கொஞ்சங்கூட ஸம்சயமில்லை. அதனால் அவரிடம் அது எப்படி வேலை செய்கிறது என்று கேட்கிறோம். அவர் சொல்கிறார். சொல்கிறதெல்லாம் நமக்கு அப்படியே புரிந்து விடுகிறதா? சில பாயின்டுகள் புரியாமலிருக்கின்றன. அப்போது மேலே நன்றாகக் கேள்வி கேட்க வேண்டியதுதானே? அதாவது 'பரிப்ரச்னம்' பண்ண வேண்டியதுதானே? இதனால் அந்த ஆஸாமியிடமோ, அவர் சொன்ன விஷயத்திலோ ஸந்தேஹம் என்றாகி விடுமா? நாம் ஸரியாக, நன்றாகப் புரிந்து கொண்டோமா என்று நம்மிடமே ஸந்தேஹத்தில் நம்மையே சோதித்துக் கொண்டு, 'ஓ, இன்ன பாயின்ட் புரியவில்லை' என்று தெரிந்து கொண்டு, விஷயம் தெரிந்தவரிடம் அதைப் பற்றி ஒளிக்காமல் கேட்பதுதான் பரிப்ரச்னம். அது விநயத்தின் கீழே வருகிறதுதான் என்பதில் [சிரித்து] ஸந்தேஹப்பட வேண்டாம்!

ஆசார்யாள் காட்டும் சிரத்தையின் சிறப்பு

இப்படி விநயத்தின் அங்கங்களான ப்ரணிபாத-பரிப்ரச்ன-ஸேவைகளை பகவான் சொல்லிவிட்டு அப்புறம் சிஷ்யனின் இன்னொரு கண் மாதிரியான சிரத்தையைச் சிறப்பித்து, **"ச்ரத்தாவான் லபதே ஜ்ஞானம்"** — "சிரத்தையுள்ளவனே ஞானம் பெறுகிறான்" — என்கிறார். அந்த இடத்தில் ஆசார்யாள் பாஷ்யத்தில் ஒரு ஸூக்ஷ்மமான மனோதத்வ ஸமாசாரம் சொல்லியிருக்கிறார்.

பகவான் முதலில் சொன்ன நமஸ்காராதிகளை பாஹ்யமானவை — அதாவது வெளி விஷயங்கள் — என்று ஆசார்யாள் சொல்கிறார். நமஸ்காரம் பண்ணுவதும்,

Koviloor Digital Library

கேள்வி கேட்பதும், ஸேவை செய்வதும் வெளியிலே தெரிகிறவைதானே? இப்படி வெளியிலே ஒன்று தெரியும்போது, 'அது வெளிக்கு நன்றாகத் தெரிந்தால் போதும். உள்ளுக்குள்ளே நமக்கு அந்த பாவம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. வெளியிலே அப்படி ஒரு 'ஷோ' ஏற்படுத்திவிட்டால் போதும்' என்றும் தோன்ற இடமுண்டாகிறது. அப்படித் தோன்றி, மனஸிலே பக்தி இல்லாமலே விழுந்து விழுந்து நமஸ்காரம் பண்ணலாம்; ஸப்ஜெக்டில் நிஜமான இன்டரெஸ்ட் இல்லாமலே இருக்கிற மாதிரி ஏதாவது கேள்விகள் கேட்கலாம்; சரீர கைங்கர்யமும் மனஸு கலக்காமலே வெளிப் பார்வைக்குப் பிரமாதமாகப் பண்ணிப் பேர் வாங்கிவிடலாம். அந்த நமஸ்காரம், கேள்வி, கைங்கர்யம் என்கிறவை 'விநயம்' என்பதின் கீழ் வர வேண்டியவையானாலும் அவை நிஜமானதாக இல்லாதபோது எப்படி விநயமாகும்? எப்படிப் பலன் தரும்? கபடமாக நடித்துக்காட்டவும் இடம் தருகிற 'விநய' அம்சங்கள் நாம் நேர் வழியில் 'ஸ்டெடியாக'ப் போகாமல் சலனம் அடையவும் செய்யலாம். முடிவில் நிஷ்பலனே மிஞ்சும். ஆனால் இன்னொரு கண் இருக்கிறதே, 'சிரத்தை' என்று! அந்த அசைக்க முடியாத நம்பிக்கை இந்த மாதிரி வெளிவிஷய மில்லை. அது நம் உள்ளத்திலேயே இருப்பது. கபடம் கலக்காத, கலக்க முடியாத உண்மையான உள்விஷயம் அது. அதற்கு வெளி expression–ஆக நாம் மற்றவர் பார்க்கச் செய்கிற எதுவும் இல்லை. ஆகையினால் அதில் நடிப்பதற்கு இடம் இல்லை. ஆகையால் சிரத்தை என்பதே, மற்ற நமஸ்காராதிகளைப் போல நிஷ்பலனிலும் கொண்டு விடலாம் என்ற ஆபத்து இல்லாததாகவும், பலன் பெறும் லக்ஷ்யத்தில் ஸ்டெடியாகச் சேர்ப்பதாகவும் இருக்கிறது — இப்படி ஆசார்யாள் அழகாகப் பாகுபடுத்திச் சொல்லி யிருக்கிறார். அதனால் தான் "ஞானம் அடைகிறவன்

Koviloor Digital Library

யாரென்றால் ச்ரத்தாவான்தான்'' என்று பகவான் ச்ரத்தைக்கு அழுத்தம் கொடுத்துச் சொல்லி யிருக்கிறாரென்று நமக்குப் புரியவைக்கிறார்.

சிரத்தையிலிருந்து சரணாகதி

ச்ரத்தை பூர்ணமாகிவிட்டால் குருவிடம் பூர்ண சரணாகதியும் வந்துவிடும். அப்போது அவர் வாய் வார்த்தையாக உபதேசிப்பது, அதை இவன் மூளை மட்டத்தில் இறக்கிக் கொள்வது, நன்றாக இறக்கிக் கொண்டோமா என்று சோதித்துக் கேள்விகள் கேட்பது என்பதற்கெல்லாங்கூட அவச்யமே இல்லாமல் போய்விடும். குரு அநுபவத்தை அப்படியே நேராக சிஷ்யனின் ஹ்ருதயத்துக்குள்ளே இறக்கி விடுவார். மற்றவர்களுக்கு அவன் சொல்லிக் கொடுப்பதற்காகத்தான் அப்போது அவர் மூளை மட்டத்திலும் அவனுக்கு 'எக்ஸ்ப்ளனேஷன்'கள் கொடுத்து உபதேசம் செய்வதாக இருக்கும்.

அந்த சரணாகதியைத்தான் சாஸ்திரம் தலைமை யானதாக விதித்திருக்கிறது. ஸ்த்ரீ ப்ரஜைக்குப் பதியிடம் சரணாகதி, புருஷ ப்ரஜைக்கு குருவிடம் சரணாகதி – அதுவே மோக்ஷ ஸாதனம் என்று சொல்லியிருக்கிறது.

இரு வித சரணாகதிகளும் குரு சிஷ்ய உறவும்

சரணாகதியில் இரண்டு தினுஸு சொல்வதுண்டு: 'மர்கட கிசோர ந்யாயம்' என்றும், 'மார்ஜார கிசோர ந்யாயம்' என்றும். மர்கட கிசோரம் என்றால் குரங்குக் குட்டி; மார்ஜார கிசோரம் என்றால் பூனைக்குட்டி. குரங்கு ஜாதியில் குட்டிதான் தாயைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும். அப்படி பக்தன் தன்முயற்சியால்

Koviloor Digital Library

பகவானைப் போய்ப் பிடித்துக் கொள்ளணும் என்பது மர்கட கிசோர ந்யாயம். பூனை ஜாதியைப் பார்த்தாலோ, குட்டி தன்னை ரக்ஷித்துக் கொள்ள வேண்டும் என்ற கவலையே இல்லாமல் அது பாட்டுக்குக் கிடக்கிறது. தாய்ப்பூனைதான் அதை வாயால் கௌவிக் கொண்டு இடம் இடமாக எடுத்துப்போகிறது. இப்படி ஸ்வய ப்ரயத்னம் இல்லாமல் பகவானே பார்த்துக்கொள்ளட்டும் என்று இருப்பதுதான் மார்ஜார கிசோர ந்யாயம். இந்த இரண்டில் எது உயர்ந்தது என்ற விவாதம் இப்போது வேண்டாம். யாருக்கு எப்படிப் பிடிக்கிறதோ அப்படி வைத்துக் கொள்ளுங்கள்.

இந்த இரண்டு ந்யாயமும் பகவான்-பக்தன் என்ற ஜோடி விஷயமாகச் சொன்னது. இதை குரு-சிஷ்யன் என்ற ஜோடிக்கு வைத்துப் பார்க்கிற போது சுருக்கமாக ஒன்று மாத்திரம் சொல்லலாமென்று தோன்றுகிறது. முதலில் சிஷ்யன் குருவைத் தேடிப்போய் அவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் அவருக்கு இவன் தேவைப்படுவதைவிட இவனுக்குத்தானே அவர் அத்யாவச்யமாகத் தேவைப்படுகிறார்? அதனால் மர்கட கிசோர ந்யாயத்தில் இவனே பிடித்துக் கொள்ளணும். அப்படிப் பிடித்துக் கொண்டால் அவர் மார்ஜார கிசோர ந்யாயத்தை நடத்த ஆரம்பித்து விடுவார்! அதாவது அவரே இவனுக்கு முழுப் பொறுப்பும் எடுத்துக்கொண்டு இவனை நடத்திப்போவார்.

இப்படி இரண்டு 'ந்யாய'மாகப் பிரிக்காமல், இவன்-அவர் இரண்டு பேருமே பரஸ்பரம் ஒருவரை யொருவர் விடாமல் பிடித்துக்கொண்டே குரு-சிஷ்ய உறவு நடக்கிறது என்றும் சொல்லிவிடலாம்!

'யார் ஸரியான குரு, ஸத்குரு? அவரை எப்படிக் கண்டுபிடித்து அடைவோம்?' என்று நிஜமான தாபத்துடன்

Koviloor Digital Library

ஒருவன் இருந்தானானால், ஈச்வரனே தூண்டிவிட்டு அப்படிப்பட்ட ஒருவர் இவனைத் தேடி வருவார் என்று சொல்லியிருக்கிறது. அதற்கு நிறைய எடுத்துக்காட்டுகளும் இருக்கிறது. இதைப் பார்த்தால் — யாரைப் பிடிப்பது என்றே தெரியாமல் சிஷ்யன் தவித்தபோது குருவே வந்து பிடித்துக் கொள்கிறார் என்பதைப் பார்த்தால் — முதலில் மார்ஜார கிசோர ந்யாயம் மாதிரியான ஒன்றாகத் தோன்றுகிறது. ஆனால் குரு வந்த பிறகு சிஷ்யனும் அவரை மர்கட கிசோரமாகப் பிடித்துக்கொள்ளத்தான் வேண்டும்.

நான் சொன்னதற்கு இன்னொரு திருத்தங்கூட! குருவுக்கும் சிஷ்யன் தேவைப்படத்தான் செய்கிறான். அவர் கற்றதை, அநுபவித்ததை யாருமே வாங்கிக்கொள்ள வராவிட்டால், அவருந்தான் அது தன்னோடு போய்விடப்படாதே என்று சிஷ்யனுக்காகத் தவிப்பார். தன்னிடம் ப்ரஹ்மசாரிகள் வரணும், வரணும் என்று குரு தவித்துச் சொல்வது தைத்திரீயத்தில் மந்திரமாகவே இருக்கிறது!* ஆவஹந்திஹோமம் என்று இன்றைக்கு அதைச் சொல்லி ஹோமம் பண்ணி,. எத்தனையோ படுத்துப்போன பாடசாலைகளில் பசங்கள் வந்து சேர ஆரம்பிப்பதை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம்!...

குரு இன்னார் என்று குறிப்பாகத் தெரியா விட்டாலும், 'குரு என்று ஒருத்தர் வேண்டுமே! நமக்கான அந்த குரு யார் தெரியவில்லையே!' என்று முதலில் ஒருத்தன் தேடுகிறான்; அப்புறம் அந்த குருவே வந்து அவனைப் பிடித்துக் கொள்கிறார், ஆட்கொள்கிறார் என்றால் — முதலில் அவன் குருவைத் தேடினதே ஆஸாமியாக இல்லாமல், ஆனால் தத்வமாக இருக்கிற குருவை அவன் மனஸில் பிடித்துப் போட்டுக் கொண்டதால்தானே? அப்படி அவன்தான் முதலில்

* சீக்ஷாவல்லி 4.2

Koviloor Digital Library

பிடித்தான் என்பதால் இது மர்கட கிசோர ந்யாயமே என்றும் சொல்லலாம்.

குரு என்று ஒருவரையும் தேடாமல் பரம வ்ராத்யனாக இருக்கிற ஒருவனைக்கூட ஸத்குரு ஒருவர் தாமாக ஆட்கொண்டு உசந்த நிலைக்கு ஏற்றுவிப்பது முண்டு. அது ரொம்ப ரொம்ப அபூர்வமாகவே நடக்கிற ஒன்று. அங்கேதான் ஆரம்பமே மார்ஜார கிசோர ந்யாயம்; [சிரித்து] ஸரியாகச் சொன்னால், மார்ஜார **மாதா** ந்யாயம்!

பொதுவாக என்ன சொல்லத் தோன்றுகிறதென்றால்: சிஷ்யன் என்று நாம் பண்ணக்கூடியதை மர்கட கிசோரமாகச் செய்வோம். குரு பண்ண வேண்டியது இன்ன என்று எதுவும் எதிர்பார்க்க வேண்டாம்.

அவர் பண்ணவேண்டிய ஒன்றே ஒன்று, ஞானத்தைத் தருவது. அதற்காகத்தானே குரு என்று ஒருவரிடம் போவது? அதை அவர் எப்படிப் பண்ணுவாரோ, பண்ணிவிட்டுப் போகட்டும்; ஆனால் நிச்சயம் பண்ணுவார் என்ற நம்பிக்கையுடன் — 'ச்ரத்தாவான்'களாக — நம் காரியமாக அவரைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருப்போம்.

சரணாகதி ந்யாயங்கள் இரண்டில் எது என்று முடிவாகச் சொல்லத் தெரியாமல் இப்படி ஏதோ கலந்தாங்கட்டியாக இருக்கிறபோது அதைப் பற்றிச் சொல்வானேன் என்றால், காரணம் இருக்கிறது. இரண்டிலும் மர்கட கிசோரம், மார்ஜார கிசோரம் என்பதாகக் 'கிசோர'ப் பிரஸ்தாவம் இருக்கிறது. கிசோரம் என்றால் குட்டி. குட்டியாக உள்ள மட்டுந்தான் குரங்கு தாயைப் பிடித்துக் கொள்வதும், தாய்ப் பூனை தன் குட்டியைப் பிடித்துக் கொள்வதும். குரங்கோ, பூனையோ எதுவானாலும் குட்டி கொஞ்சம் பெரிசானால் அப்புறம் அதுவும் தாயை விட்டுப் போய்விடுகிறது; தாயும் அதைப்

Koviloor Digital Library

பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால் குரு-சிஷ்யன் விஷயம் இப்படியில்லை என்று வித்யாஸம் காட்டவே அந்த இரண்டு ந்யாயத்தையும் பற்றிச் சொன்னேன்.

குட்டியும் தாயும் ஒரு காலத்திற்கு அப்புறம் ஒன்றையொன்று விட்டுவிடுவதுபோல் குரு-சிஷ்யர்கள் விடுவது என்பதே இல்லை. சிஷ்யன் — ஆத்யாத்மிகத்தில் குட்டியாக குருவிடம் வந்தவன் — அவருடைய அநுக்ரஹத்தால், அவர் தாயாக இருந்து ஊட்டுகிற ஞானப் பாலால் ஆத்ம ஞானியாகவே பூர்ண வளர்ச்சி பெற்ற பிறகுங்கூட குரு-சிஷ்ய பாந்தவ்யம் இருந்துகொண்டே இருக்கும். அப்படித்தான்! சிஷ்யன் அத்வைத ஞானியாகவே ஆன பிற்பாடுங்கூட, குருவிடம் மாத்திரம் அத்வைதம் கொண்டாடிக் கொள்ள முடியாமல் த்வைதம் மாதிரியான — அஸலே வேறே வேறே என்று பிரிந்துவிட்ட த்வைதம் இல்லை; அந்த 'மாதிரி'யான — ஒரு பாவம் இருக்கும்*! அந்த குருவும் [எல்லாமும், எல்லாரும் தானே என்றறிந்த அத்வைத] ஞானியாக இருந்தபோதிலும், இவனை வேறே 'மாதிரி' நினைத்துத்தானே 'சிஷ்யன்' என்று வைத்து உபதேசம் செய்தது? அதனால் அவரும் த்வைதம் மாதிரியான உறவு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார் என்று ஆகிறது. இவர் மார்ஜார அம்மாவாகப் பிடித்துக் கொள்வது, சிஷ்யன் மர்கடக் குழந்தையாகப் பிடித்துக் கொள்வது என்று அந்த உறவு எந்நாளும் தொடருகிறது. 'எந்நாளும்' என்றால், சிஷ்யனுக்கு அத்வைத ஸித்தி வந்த பிற்பாடுந்தான்! குரு ஜீவ யாத்ரை முடித்து, 'ஸித்தி அடைவது' என்கிறார்களே, அப்படி ஆன பிற்பாடுந்தான்! அத்வைத ஞானிகளும் விதேஹமுக்திக்குப் பிற்பாடுகூட அநுக்ரஹம் மட்டும் பண்ணிக் கொண்டிருப்பது

---

* இவ்விஷயமாக ஐந்தாம் பகுதியில் 'ஸ்ரீ சங்கர சரிதம்' என்ற பேருரையில் 'தோடகர்: தாஸ்ய பக்தியின் திருவுருவம்' என்ற பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

அநுபவிகளுக்கு ப்ரத்யக்ஷமாகத் தெரிந்த விஷயம். அது எப்படி என்றால் தெரியாது! அவர்களுடைய சரீரம், கர்மா எல்லாம் அழிந்துபோய்விட்ட போதிலும், அவர்களுடைய அநுக்ரஹ சித்தம் — கருணை என்கிறது — அது மட்டும் அழியாமல் அம்ருதமாக இருந்துகொண்டிருக்கும்படியாக ஈச்வரன் விளையாடுகிறானென்றுதான் சொல்லணும். ஆகக்கூடி, அத்வைதமாகக் கரைந்து போய்விடாமல் குரு-சிஷ்யாள் என்று பரம ப்ரியமான ஒரு உறவு எந்நாளும் இருக்கிறது!

ஆசார்யாளே அவருடைய குருவையும், பரம குருவையும், ப்ரஹ்ம வித்யா குரு பரம்பரை முழுவதையும் பரம பக்தியோடு ஸ்தோத்ரிப்பதில் அவருடைய சிஷ்ய பாவ-த்வைதம் தெரிகிறது. ஆசார்யாளை ஞானிகளான அவருடைய சிஷ்யர்கள் — ஸுரேச்வராசார்யாள், பத்ம பாதாசார்யாள், தோடகாசார்யாள் — ஆகியவர்கள் கருணாமூர்த்தியாக ஸ்துதித்திருப்பதிலிருந்து அவருடைய குரு பாவ-த்வைதம் தெரிகிறது. அவரும் மற்ற ஞானிகள் பல பேரும் தேசமெல்லாம் ஸஞ்சாரம் பண்ணி உபதேசம் செய்திருப்பதும், வருங்காலத்தில் பிறக்கப்போகிறவர்களுக் காகவுங்கூட அத்வைத புஸ்தகங்கள் எழுதி வைத்திருப் பதுமே போதும், இந்த குருபாவ த்வைதத்தைக் காட்ட!

ப்ரேமை என்பதன் பெருமை தெரிவதற்காக பராசக்தியின் லீலையில் இப்படி அத்வைதிகளுக்கும் குரு-சிஷ்ய த்வைதம் மாதிரியான ஒன்று சாச்வதமாக இருக்கிறது என்றே சொல்லத் தோன்றுகிறது. கருணை என்று குரு காட்டும் ப்ரேமை; பக்தி என்று சிஷ்யன் காட்டும் ப்ரேமை.

சொல்ல வந்த விஷயம், சிஷ்யனானவன் குருவிடம் சரணாகதி செய்ய வேண்டும் என்பது.

பல குருமார்கள் வாய்த்தாலும் அவர்களில் முக்யமானவரிடம் சரணாகதி, மற்றவர்களெல்லாரிடமும் ஆத்மார்த்தமான மரியாதை என்று இருக்க வேண்டும்.

Koviloor Digital Library

அரசு

Koviloor Digital Library

Koviloor Digital Library

அரசும் மதமும்

தொகுப்பாசிரியனின் முகவுரை

பாரதம் சுதந்திரம் பெற்ற போது ஸ்ரீ மஹா பெரியவர்களின் அடியார்களான காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்களில் சிலர் அவரிடம் தேசத்திற்கு ஆசியும், அன்றைய சட்டசபையாளர்களுக்கு அறிவுரையும் கொண்டதொரு ஸ்ரீமுகம் வழங்குமாறு வேண்டினர். அவரும் அவ்விதம் வழங்கியருளினார். ஆயின் தீர்க்க தரிசனத்தின் மீதே போலும், தனித்தனியாகப் பிரித்துத் தேசத்துக்கென பொதுப்பட்ட ஓர் அருளுரையும், சட்டசபையாளருக்கென ஓர் அறிவுரையுமாக இரு ஸ்ரீமுகங்கள் வழங்கினார்.

தேசத்திற்கான ஸ்ரீமுகம் பத்திரிகைகள் மூலம் நாடெங்கும் வெளியிடப்பட்டது. ஆனால் சட்டசபை யாளர்களுக்கான அறிவுரையாகிய மற்றொரு ஸ்ரீமுகத்தில் புதிய அரசில் தலைமை ஏற்கவிருந்த அவர்களது தலைவரால் ஏற்கமுடியாத கருத்துக்களும் இருந்ததாக அப்பிரமுகர்கள் கருதியதால் போலும், அது பிரசாரத் திற்கே வராமல் 'சென்ஸார்' செய்யப்பட்டு விட்டது!

பிறகு 1972-ல் சுதந்திர நாளின் வெள்ளி விழா வந்த போது, முன்பு முனிவர் விடுத்துப் பிரசுரமாயிருந்த ஸ்ரீமுகத்தை 'கல்கி' இதழில் மீண்டும் வெளியிட முடிவு செய்யப்பட்டது. உபந்நியாசங்களில் பழகு மொழியிலேயே குழந்தைக்கும் புரியுமாறு மொழியைக் கையாளும் முனிவர், எழுத்துருவில் ஸ்ரீமுகம் முதலியன விடுக்கும் போது இலக்கண மொழியிலும் சொற்சுருக்கத்துடனுமே அவற்றை

Koviloor Digital Library

உருவாக்குவார். சுதந்திர தின ஸ்ரீமுகம் அவ்வாறு அமைந்ததே. அதில் ஓரிடத்தில் எல்லோருக்கும் எளிதில் புரியுமாறு செப்பம் செய்யப்பட்டால் நலமாயிருக்குமோ எனக் 'கல்கி'யின் அன்றைய அதிபர் ஸ்ரீ ஸதாசிவம் அவர்கள் எண்ணினார்.

"பெரியவாளிடம் கேட்டுக் கொள்ளலாமென்று தோன்றினால், நீ வேண்டுமானால் அவரிடம் விஷயத்தைச் சொல்லி 'க்ளாரிஃபிகேஷன்' கேட்டு வருகிறாயா?" என்று அப்போது அவ்வேட்டின் ஆசிரியர் குழாத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த என்னிடம் கேட்டார்.

இதற்கு மூன்றாண்டுகள் முன்பிருந்தே பெரியவாள் மடாதிபதிப் பொறுப்பை முற்றிலும் துறந்து பூஜ்ய ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு அதனை முழுமையாக ஈந்து, பெரும்பாலும் மௌனமாகக் காஞ்சி ஸ்ரீமடத்திற்கு வெளியிலேயே வாஸம் கொள்வதாக இருந்தார். தமது பெயரில் செய்தி விடுப்பது முதலியவற்றையும் 'ஸமாப்தி' செய்தாயிற்று என்று அவரே கூறி, அவற்றையும் நிறுத்தி விட்டிருந்தார். இந்நிலையில் 'நாடெங்கும் பிரசாரமான அவரது பழைய செய்தியைத்தானே மீண்டும் வெளியிடுகிறோம்? இதற்கு அவரது அநுமதி கோர அவசியமில்லை' என்ற எண்ணத்திலேயே அந்த ஸ்ரீமுகத்தைக் 'கல்கி'யில் பிரசுரிக்க எண்ணியபோது அதற்கு ஆதரவளித்திருந்தேன். இப்போது 'க்ளாரிஃபிகேஷன்' கேட்கப் போய், அவர் முதலுக்கே மோசமாக ஸ்ரீமுகத்தை வெளியிட வேண்டாமென்று உத்தரவிட்டு விடப் போகிறாரே என்று பயந்தேன். என் அச்சத்தை ஸ்ரீ ஸதா சிவத்திடம் தெரிவித்தேன்.

"அப்படி அவர்களுக்குச் சம்மதமில்லை என்றால் நாம் போடாமல்தானே இருக்கணும்? அதையும் தெரிந்து கொள்வதற்காகவே நீ ஒரு நடை போய் விட்டு வந்தால்

Koviloor Digital Library

தான் தேவலை என்று தோன்றுகிறது" என்று அவர் தமக்கே உரிய குரு பக்தியில் கூறினார்.

காஞ்சிக்கு வெளியே சிவாஸ்தானத்தில் அப்போது வாஸம் செய்து கொண்டிருந்த ஸ்ரீமஹா பெரியவர்களிடம் சென்றேன். விஷயங்களை விண்ணப்பித்துக் கொண்டேன்.

அவர் பணித்ததன் மீது ஸ்ரீமுகத்தைப் படித்துக் காட்டி அதில் சற்று நெருடும் வாக்கியத்தைச் சுட்டிக் காட்டினேன்.

அதை அவரே வாங்கி வைத்துக்கொண்டு சிறிது நேரம் பார்வையிட்டார்.

"பேப்பர், பேனா கொண்டு வந்திருக்கிறா யோன்னோ?" என்றார்.

எனக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை — அநுமதி கிடைத்துவிட்டதில்!

கையோடு வைத்திருந்த பையிலிருந்து காகிதக் கட்டையும் பேனாவையும் எடுத்து வைத்துக்கொண்டேன்.

பெரியவாள் ஸ்ரீமுகத்தைப் பார்த்துக் கொண்டே 'டிக்டேட்' செய்யத் தொடங்கினார். என் ஆனந்தம் மேன்மேலும் பெருகும்படியாக டிக்டேஷன் பெருகிக் கொண்டே போயிற்று. நாங்கள் ஓரிடத்தில் மட்டுமே தெளிவுபடுத்த வேண்டினோமெனில், கேட்டதற்கு அதிகமாக, மிக அதிகமாக அவர் வழங்கிக்கொண்டே போனார்! ஸ்ரீமுகத்தின் இரண்டாம் வாக்கியத்திலிருந்தே மாறுதல்கள் செய்தவர், மேலும் ஒரு பகுதி சென்ற பின், மிகப் பெரியதாகவே, பழைய ஸ்ரீமுகத்தைக் காட்டிலும் பன்மடங்கு நீண்டதாக அரிய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டே போனார். உபந்நியாஸங்களில் பேச்சு நடையிலேயே சரளமாக உரையாற்றுபவர், இப்போது

Koviloor Digital Library

அதற்கு மாறான இல்க்கண நடையிலும் அதே சரளத்துவத்துடன் மடை பெருக்கிப் போனது ஆச்சரியம்!

ஓரளவு நிறுத்தி நிதானமாகவே கூறினாரெனினும் அந்தத் திருவாயின் வேகத்திற்கு என் பலவீனக் கையால் ஈடுகொடுக்க இயலவில்லை. எதையும் நுட்பமாக உணரும் அவர் இதையும் புரிந்து கொண்டு, "என்னால் இதைவிட 'ஸ்லோ'வாகச் சொல்ல வராது. நீ ஒரு மாதிரி கிறுக்கிக் கொண்டு போனாலே போதும். நான் சொல்கிறது உன் மனஸில் நன்றாகப் பதிந்திருக்கும். அதனால் விட்டுப் போயிருக்கிற வார்த்தைகளையும் நீயே போட்டுக் கொள்ளலாம்" என்று கூறியபடி அந்த அறிவமுதப் பிரவாகத்தைத் தொடர்ந்து பாய்ச்சினார். முடிவில் பழைய ஸ்ரீமுகத்திலேயே திருக்கண் பதித்து, அதன் வாசகங் களையே சிறு மாறுதல்கள், கூடுதல் குறைத்தல்களுடன் மொழிந்து, பிரவாஹத்தின் பூர்த்தியாகப் புதிய மங்கள வாக்குகள் கூறி நிறைவு செய்தார்.

சற்றும் யோசித்து நிறுத்தாமல் மாற்றங்கள், புதுச் சேர்க்கைகள், மீண்டும் பழைய ஸ்ரீமுகத்திற்கே திரும்புதல் என்று தங்குதடையறியாப் பிரவாஹமாகவே அவர் செய்தார். அவரொருவராலேயே அப்படிச் செய்ய இயலும்!

முடித்த பின் அவரே சொல்லித் தெரிந்ததுதான், சட்ட சபையாளர்களுக்கென அவரிடமிருந்து அறிவுரை பெறப்பெற்று, ஆனால், அதன் கருத்துக்களில் சிலவோ பலவோ அன்றைய மத்திய அரசு பீட முக்கியஸ்தருக்கு ஏற்புடையதாக இராதோ என்பதால் (அவரே கூறியபடி) "முழுக்கவே சென்ஸார்" செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற விஷயம்.

இதை அவர் தெரிவித்த விதத்திலிருந்து, அந்த அறிவுரைக் கருத்துக்களையேதான் தற்போது அவர் செய்த நீண்ட விரிவாக்கத்தில் வழங்கியிருக்கிறாரென்று

Koviloor Digital Library

தெளிவாகப் புரிந்தது. மாமேதை என்பதற்கு மேற்பட்ட ஏதோ ஒன்றான அவர், கால் நூறாண்டுக்கு முந்தைய அந்த அறிவுரை வாசகங்களையேகூட முற்றிலும் இப்போது திரும்பவும் கூறியிருக்கக்கூடும்! 1972-ல் இப் புதிய ஸ்ரீமுகம் அருளப்பட்ட போதிலும், அது 1947-ம் வருடத்திய பின்னணியில்தான் வழங்கப்பட்டுள்ளது என்ற ஆச்சரியமான உண்மையைக் கவனித்தீர்களாயின் நீங்களும் இவ்வாறே எண்ணுவீர்கள்.

ஆயினும் இவ்வறிவுரையின் சில பகுதிகள் குறித்து இவ்விஷயமாக ஓர் ஐயப்பாடு எழுகிறது. மாற்றுக் கருத்துக் கொண்டோர் தொடர்பாகவும் கண்டனமாகத் தோன்றும் மொழியைக் கையாளாது அவர்களையும் பதமாக வழிக்குத் திருப்பும் வகையில் மொழிவதே ஸ்ரீ பெரியவாளின் வழக்கம். இவ்வறிவுரையிலோ இதற்கு மாறாகவும் அவர் சில இடங்களில் குரல் கொடுப்பதே ஐயமெழுப்புகிறது. அவர் பழைய அறிக்கையில் மொழிந்த, 1947-ல் புது அரசு அமைத்தவர்களின் 'உத்தேச'மாக மட்டுமே இருந்த கருத்துக்களில் பல, இவ்வறிக்கை மொழிந்த 1972-ல் 'காரிய'மாகவே ஆகியிருந்ததில் அவருக்கு ஏற்பட்டிருந்த உணர்ச்சியினாலேயே இவ்விதம் வழக்கத்திற்கு மாறான குரலில் பேசியிருப்பார் போலும்!

உரையில் சில பகுதிகள் சட்டசபையாளருக்கென இன்றிப் பொதுமக்கட் சமூகத்திற்கோ, அதன் ஒரு சாராருக்கோ கூறப்பட்டதாகக் காண்கின்றன. இவையும் ஸ்வாமிகள் புதிதாகச் சேர்த்தனவாக இருக்கும்.

'கல்கி'யின் சுதந்திர வெள்ளிவிழா ஏட்டுக்கு ஓர் எதிர்பாராக் கட்டுரை போனஸ் கிடைத்ததில் சொல்லி முடியாத மகிழ்ச்சியுடன் சென்னை திரும்பினேன்.

ஓரிரு நாள் சென்ற பின் பெரியவாளைக் காண வருமாறு தொலைபேசிச் செய்தி வந்தது.

Koviloor Digital Library

வயிற்றில் புளியைக் கரைத்தது.

சென்றேன்.

"மாட்டர் பிரின்ட் ஆகிவிடவில்லையே?" என்று விசாரித்தார்.

"இல்லை" என்று மென்று விழுங்கிக் கொண்டு சொன்னேன்.

"அப்படித்தான் நினைத்தேன். நல்லதாகப் போச்சு! அதை ஒன்றும் இப்போது பப்ளிஷ் பண்ணவேண்டாம் என்று தோன்றுகிறது. மூன்று வருஷமாகத்தான் நானும் கொஞ்சம் நிஜ சாமியார் மாதிரி ஸோஷல் லைஃபிலிருந்து ஒதுங்கியிருக்கிறேன். இப்போது உங்களுக்கு 'மெஸ்ஸேஜ்' கொடுக்கப்போக இன்னும் பல பேரும் — நான் வாயைத் திறக்க மாட்டேனா என்று காத்துக் கொண்டிருப்பவர்கள் — பிடித்துக் கொள்வார்கள். உங்களுக்கு மட்டும் தலையை ஆட்டி விட்டு அவர்களுக்கு ஆட்டமாட்டேன் என்றால்? மறுபடி என்னை 'ஸம்ஸாரம்' இழுத்து வைத்துக் கொண்டு விடப்போகிறதே என்று இருக்கிறது! நீயே யோஜித்துப் பாரு! ஸதாசிவத்திடமும் கேளு! அப்புறம் பண்ணுகிறபடி பண்ணிக் கொள்ளுங்கோ. எனக்கு 'வேண்டாமே' என்று தான் இருக்கு" என்றார் ஸ்ரீ ஸ்வாமிகள்.

எனக்கு அழுகை வந்தது. விஷயம் நிறுத்தப்பட்ட தற்காக மட்டும் இல்லை; அவரது உயர்பண்பு என்னை உருக்கியதிலும்தான்! எத்தனை விநயம்! அவருக்கு வேண்டாமென்றிருந்தால் வேண்டாம்தானே? அப்படிப் பட்ட ஸ்தானத்திலிருப்பவர்! ஆயினும், பிறர் கருத்துக்கு விடுகிறார்! அதிலும், சிறியோரிலும் சிறியேனான அடியேன் கருத்துக்கும்!

ஸ்ரீ ஸதாசிவம் என்ன சொல்வார்? "அவா இஷ்டந்தான்! அவா மனசுக்கு நம்மாலே சிரமம் கொஞ்சங்

Koviloor Digital Library

கூட ஏற்படலாமா?" என்று கூறி சகஜமாக முடித்து விட்டார்.

மீண்டும் சிவாஸ்தானம் சென்று 'கல்கி' ஏட்டில் வெளியிடப்போவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டேன்.

ஸ்ரீசரணர் கூறினார்: "முதலில் ஒரு தடவை சென்ஸார் ஆச்சு. மெஸ்ஸேஜ் கேட்டவர்கள் சென்ஸார் பண்ணினார்கள்; இப்போது மறுதடவை மெஸ்ஸேஜ் கொடுத்தவனே சென்ஸார் பண்ணிவிட்டேன்! வருத்தப் படாதே! அப்புறம் எப்போதாவது யாரும் சென்ஸார் பண்ணாமல் பிரயோஜனமாகலாம்!"

'அப்புறம்' என்று அவர் ஒருவிதமாகத் தொனி கொடுத்து வேறு சில சமயங்களிலும் சொன்னதுண்டு. அவை யாவும் அவர் ஒரு மானுட காயத்திற்குள் வாழ்ந்த ஆயுட்காலம் முடிந்த 'அப்புறமே' நிறைவேறியுள்ளன. அதே வரிசையில் சுதந்திர தினத்தன்று வழங்கி, அதன் வெள்ளி விழாவின்போது தலைதூக்கி மட்டும் பார்த்த அவரது அறிவுரை, பொன்விழாவும் நடைபெற்ற 'அப்புறம்' இப்போது முழு உருவில் வெளியாகிறது!

1997-ல் நிகழ்ந்த சுதந்திரப் பொன்விழாவின்போது 'கல்கி' வெளியிட்ட சிறப்பு மலருக்கு இவ்வறிவுரையை வழங்க வாய்ப்பேற்பட்டது. என் பழைய கோப்புகளை அலசலானேன். நல்லதிருஷ்டமும் துரதிருஷ்டமும் கலந்து கலந்து வந்தன. 1972-ல் ஸ்வாமிகள் அறிவுரை அருளியவுடனேயே கல்கியில் பிரசுரிப்பதற்காக, நான் எழுதிக் கொண்ட கிறுக்கலான, சுருக்கலான மூலத்தை ஒரு நாள் முழுதும் செலவிட்டு முழு வடிவமாக உருவாக்கினேன். அப்போது, அவரே பிற்பாடு திருத்தமாக நினைவுக்கு வரும் என ஆசியளித்திருந்ததன் பலனாக, அறிவுரை முற்றிலும் அவரது இலக்கண ரீதியான வாய்

Koviloor Digital Library

மொழியிலேயே மனத்திற்கு வந்து அதனை எழுத்தில் வடித்து விட்டேன். இப்போது கோப்புகளில் தேடியபோது துரதிருஷ்டவசமாக அந்த நல்லுருப் பெற்ற முழுவடிவம் கிடைக்கவில்லை. எனினும் இதனிடையில் சற்று நல்ல திருஷ்டமாக, என்னுடைய கிறுக்கல்–சுருக்கல் மூலப் பிரதி அகப்பட்டது. அதை வைத்துக்கொண்டு உரையின் புனர்நிர்மாணத்தில் இறங்கினேன். அருள்வண்மையில் மேலும் சுமார் முக்காற் பங்கு 'நல்லதிருஷ்டம்' அடித்தது! அதாவது ஸ்வாமிகள் உரையருளி கால் நூறாண்டு கடந்து விட்ட போதிலும் அவர் அன்று செய்த ஆசிவாக்கின் சக்தியில், சுமார் முக்காற்பங்கு உரை 'தடதட'வென்று அவர் அன்று மொழிந்த ரீதியிலேயே மனத்துக்கு வந்துவிட்டது! எனினும் துரதிருஷ்டம் என்னவெனில் சுமார் முக்காற் பங்குதான் இப்படி வந்ததே தவிர பாக்கிச் சுமார் காற்பங்கு ஒத்துழையாமை செய்தது. மூலப் படிவம் ஒரே கிறுக்கலாக எழுதப்பட்டிருந்ததால் அப் பாகங்கள் புரியவில்லை.

ஆசிச் சக்தியைச் சிறிது ஒளித்தும் 'சாமியார்' விளையாடினார் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் இதை விடவும் மிகச் சுருக்கமாகவும், கிறுக்கலாகவும் என்னிடமுள்ள ஏராளமான குறிப்புக்களிலிருந்தும் 'தெய்வத்தின் குர'லுக்காக நான் தொகுக்கும்போது தங்கு தடையின்றி மடமடவென்று மடை திறந்த வெள்ளமாக அடியேனை அவரது திருமொழிகளால் எழுதுவித்துக் கொண்டே போயிருப்பவராயிற்றே அவர்! ஆகையால் 'தெய்வத்தின் குர'லின் இந்த ஏழாம் பகுதியில்தான் இவ்வுரை முழு வடிவில் வெளிவர வேண்டும் என்ற திருவுளச் சங்கற்பத்திலேயேதான் அவர் சுதந்திரப் பொன்விழாவின்போது இவ்வுரையின் சில பகுதிகளை ஒளித்து வைத்து விளையாடினார் போலும்!

ஆயினும் எனக்குத் தெளிவாகப் புரிபட்டு நான் எழுதிய அளவிலுங்கூட அறிவுரை மிக நீண்டதாக

Koviloor Digital Library

இருப்பது தெரிந்ததால், 'எப்படியும் இவ்வளவு நீண்ட கட்டுரை வெளியிடுவது பத்திரிகையாளருக்குச் சிரமமாக இருக்கும். புரிபடாத பகுதிகள் இல்லாமலேகூடக் கட்டுரை மிகப் பெரியதாகத்தானிருக்கும். எனவே இதற்கு மேல் தலையைப் பிய்த்துக்கொள்ளாமல், தற்போது நல்வடிவம் செய்திருப்பதையுங்கூடக் குறைத்தே அனுப்பிவைப்போம்' என முடிவு செய்தேன். அவ்வாறே, இப்போது மூன்றாம் முறையாக, சில பகுதிகளை நான் வேறு 'சென்ஸார்' செய்து அனுப்பினேன். 'கல்கி' மலரில் அது நல்ல முறையில் வெளியாயிற்று.

ஆயின் நானே 'சென்ஸார்' செய்தது எனக்குக் குற்றவுணர்ச்சி அளித்தது. காரணம், நீக்கிய அப்பகுதிகள் ஸ்வாமிகளின் திருவுளத்தில் ஆழ்ந்த இடம் பெற்றவை என்பதே.

தவற்றைத் திருத்திக்கொள்ள ஓர் உபாயம் கண்டேன்.

மீண்டும் முயற்சி செய்து, புரியாத பகுதிகளைப் புரிந்து கொண்டு அதனையும், புரிந்தும் நானே நீக்கிவிட்ட பகுதிகளையும் 'கல்கி'யில் வெளியான உரையுடன் சேர்த்து 'விஜயபாரதம்' ஏட்டுக்கு வழங்கலாம் என்பதே நான் கண்ட உபாயம். அவ்வேட்டின் தீபாவளி மலரில் அவர்கள் எவ்வளவு நீண்டதாயினும் அதனை வெளியிடுவார்கள் என்ற நம்பிக்கையில் முற்றுருவைத் தயார் செய்யத் தொடங்கினேன்.

'சாமியார்' மீண்டும் விளையாடினார்!

உடல்நிலையும், சந்தர்ப்பச் சூழ்நிலையும் பிரதிகூலம் செய்ததால் பணி சீராக நடக்காமல் கடைசி நிமிஷத்தில் தான் அவசரக் கோலமாக முடிக்க வேண்டியதாயிற்று. இன்னமும் அக் காற்பகுதி சரிவரப் புரிபடத்தானில்லை. ஏதோ ஒரு தினுசாக ஒப்பேற்றி அனுப்பிவிட்டேன். கடைசியில் அதை 'விஜயபாரத'த்தினால் தீபாவளி மலரில் வெளியிட இயலவில்லை!

Koviloor Digital Library

ஆயினும் அதை அவர்கள் பொக்கிஷமாகப் போற்றித் தமது வார ஏட்டில் தொடராக வெளியிட முன்வந்தார்கள்.

வாராவாரம் இடைவெளிகளில் கட்டுரைத் தொடர் வெளியானது, எனக்கு மேலும் தலையைப் பிய்த்துக் கொண்டு உரையை முற்றுருவம் செய்வதற்கு நிறைய அவகாசமளித்த நல்வாய்ப்பல்லவா? ஆயினும் வாய்ப்பை நான் பயன் செய்து கொள்ள இயலாமல் பிரதிகூலச் சூழல் தொடர்ந்தது. இடையே அவ்வப்போது பழைய குறிப்புகளுடன் சிறிது பிய்த்துக் கொண்டும் முன்னர் புரிந்து கொண்ட சுமார் முக்காற் பங்குக்கு அதிகமாக எதுவும் தெளிவுபடாததால், இப்போது ரூபமாகியிருப்பதுதான் நமக்குக் கிடைக்கக்கூடிய முழு ரூபமும் என்று முடிவு செய்து, அப்படியே விட்டுவிட்டேன். நான் விட்டு விட்டேன் என்பதைவிட நான் விடும்படியாக 'சாமியார்' விளையாடினார் என்று சொல்வதுதான் சரியாயிருக்கும். ஆம். அவர் ஸங்கற்பமின்றி அவரது திருமொழி எப்படி வரமுடியும்? எக்காரணத்தினாலோ, 'தெய்வத்தின் குர'லின் இவ்வேழாம் பகுதிக்கே தமது உரையின் முழு ரூபமும் என்று முஹூர்த்தம் வைத்து 'ரிஸர்வ்' செய்து விட்டார் போலும்! எனவே முற்றுருவிலில்லாத உரையேதான் 'விஜய பாரத'த் தொடராகவும் வரச் செய்துவிட்டார். வேறு வழியின்றி முன்பு செப்பம் செய்த அளவோடு உரையை விடும்படியாயிற்று. சென்ஸாரில் சிறிதும் வெட்டுப் படாத முழு உருவ அறிவுரை என்ற பெயரில் அதுவே கட்டுரைத் தொடராக வெளியாகி முற்றுப் பெற்றது.

நான் ஊக்கியதன் மீது, முன்னாள் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' செய்தியாசிரியர் ஸ்ரீ ஆர்.எஸ். நாராயண ஸ்வாமி அதனையே ஆங்கிலத்திலும் ஆக்கினார். அதன் பகுதிகள் விவேகானந்த கேந்திரத்தினரின் 'யுவபாரதி'

Koviloor Digital Library

ஆண்டு மலரில் வெளியாயிற்று. இவ்வாறு மஹா பெரியவாளின் முழுமை பெறாத உரையின் பகுதிகள் உலக மொழியான ஆங்கிலத்தில் அச்சில் வெளியாகி விட்டதைக் கண்டபின் எப்படியேனும் மெய்யாகவே உரையில் புரியாது விட்ட பகுதிகளையும் புரிந்து கொண்டு அந்த ஸத்தியமான முழுவடிவை வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் பொங்கியெழுந்தது. 'ஆர்வம்' என்று சொன்னால் போதாது. நம்மிடம் ஒரு தெய்வ மனிதர் உலகுக்கு அளிப்பதற்காக ஒப்புக் கொடுத்த ஒரு நிதியத்தில் ஒரு பங்கு உரியவர்களை அடையாதபடி செய்துவிட்ட கொடுங்குற்றவுணர்ச்சியில் பிறந்த கழிவிரக்கத் தாபமே அது.

அருளாளர் அவ்வளவு அழுத்தமாக அவரது அறிவுரை எனக்குத் திருத்தமாக நினைவில் வரும் எனக் கூறியும் இப்படி மூளியாகவே நினைவு வந்ததெனில், அதற்குக் காரணம் என் பக்தி விசுவாசக் குறைவே என்று கருதி வருந்தினேன். முழு முயற்சி செய்து அவரருளில் முழு நம்பிக்கையைப் பற்றிக் கொண்டு, புரிபடாத பகுதிகளில் மீண்டும் இறங்கினேன். முடிவாக நல்லதிருஷ்டம் கோட்டையடியாக அடித்துவிட்டது! 'சாமியார்' சோதனை விளையாட்டை அமோக அருள் லட்டுப்பந்து விளையாட லாக மாற்றினார். என் தவற்றை நான் உணர்ந்து பச்சாத்தாபப்பட்டதற்கு அவர் இரங்கியதே, அவர் வைத்திருந்த முஹூர்த்தத்திற்கும் சரியாக அமைந்து விட்டது என்றுதான் சொல்லவேண்டும்! 'தெய்வத்தின் குரல்' தொகுப்பதில் வழக்கமாக அவர் காட்டும் அருள் வண்மை அதன் முழு வடிவில் செயற்படலாயிற்று. புரியாத விஷயங்கள் அனைத்தும் அதிகம் தலையைப் பிய்த்துக் கொள்ளாமலே லட்டு லட்டாகத் தெளிவுபட்டன! எத்தனை ஸாரமான கருத்துகளை அடியோடு கோட்டை விடாது முடிவிலாவது பெற்றுவிட்டோம் என்று பூரிக்கச் செய்து விட்டார்! முடிவாகக் கிட்டிய அந்த அறுவடையே

Koviloor Digital Library

இதோ அரை நூறாண்டுக் காலத்திற்கு மேலாகக் கண்ணாடி மூச்சி காட்டிய பொன்னான அறிவுரையின் மெய்யான பூரண ரூபமாக மலர்வது!

இனி அவ்வறிவுரையை தெய்வத்தின் குரலிலேயே கேட்போம்.

*

தர்ம சக்கரம்; பகவானின் அருட்சூசகம்

நமது பாரத நாடு விடுதலை அடைந்திருக்கும் இத்தருணத்தில், இந்தப் புராதன நாட்டு மக்கள் யாவரும் ஒரே மனத்துடன் ஸ்ரீ பகவானை மனமுருகித் துதிக்க வேண்டும். நமக்கு மேன்மேலும் மனோபலத்தையும் தொன்று தொட்டு நமது நாட்டின் தனிச் சிறப்பாக உலக முழுவதிலும் பெருமை பெற்றுத் தந்துள்ள ஆத்மிகத் துறையில் நாம் நன்கு ஈடுபடச் சக்தியையும் கொடுத்தருளுமாறு வேண்டுவோம். அவரது அருளால் தான் நமக்குக் கிடைத்திருக்கும் இச்சுதந்திரத்தை நாம் உண்மையான சுதந்திரமாகக் காப்பாற்றிக் கொள்ளவும், அதன் வழியே நமது நாட்டினர் மட்டுமல்லாது, உலகின் கண்ணுள்ள எல்லா மக்களும் நிறைவாழ்வு என்பதன் நிரந்தரமான ஆனந்தத்தைப் பெற உதவி செய்யவும் முடியும்.

பாக்கியவசமாக நமது சுதந்திர பாரதத்தின் கொடிக்கு நடுவில் நடுநாயகமாக பகவானது தர்மஸ்வரூபமான சக்கரம் இடம் பெற்றிருக்கிறது. இக்கொடியின் அமைப்பைத் திட்டமிட்ட தலைவர்களின் கருத்து வேறுவிதமாக இருப்பதாகத் தோன்றினாலும், நாமோ, 'பகவானே இந்நாட்டின் உயிர்நிலை அவரைச் சுற்றியே பிரஜைகளின் வாழ்க்கை முழுதும் படர்ந்திருப்பதுதான்'

Koviloor Digital Library

என்பதை நமக்கு நினைவூட்டவும், அவரது காப்பு சுதந்திர பாரதத்திற்கு எப்போதும் உண்டு என்று காட்டு முகமாகவுந்தான் அவரது இத் தர்ம சக்கரம் நமது கொடி நடுவில் இடம் பெறக் கருணை கூர்ந்திருக்கிறாரென எண்ணுகிறோம்.

உண்மையான 'ஸெக்யூலரிஸம்'

சுதந்திர பாரத அரசாங்கமானது மத விஷயமாகப் பின்பற்ற வேண்டிய கொள்கை 'ஸெக்யூலரிஸம்' என்பதாக இருக்க வேண்டும் என்பதே தற்போது அரசியலாரின் கருத்தாக உள்ளது. இந்த 'ஸெக்யூலரிஸம்' என்பது அரசாங்கம் எந்த மதத்தையும் சார்ந்ததாக இல்லா திருப்பதே என்று அவர்களால் பொருள் கொள்ளப் பட்டிருக்கிறது.

இது சரியான கருத்தல்ல என எடுத்துக்காட்டி, 'ஸெக்யூலரிஸம்' என்பது உண்மையில் யாது என்று தெரிவிக்க வேண்டியுள்ளது. தற்போது எண்ணுவதுபோல் அது அரசாங்கம் எந்த மதத்தையும் சார்ந்து, அதாவது மதத் தொடர்பே அற்று இருப்பதல்ல. மாறாக அது, அரசாங்கமானது எந்த ஒரு மதத்தையும் மட்டும் சாராது, எல்லா மதங்களையும் ஆதரிப்பதாக இருப்பதே என்பதுதான் சரியான பொருள்.

ஒரு நாட்டின் அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட மதத்தை மட்டுமே சார்ந்து பிற மதங்களை இழிவும் அழிவும் செய்யாது, எல்லா மதங்களையும் ஏற்ற இறக்கமின்றி சம பாவத்துடன் ஆதரித்து, அவை யாவும் பரஸ்பரப் பகையின்றித் தழைத்தோங்க உதவி செய்யவேண்டும் என்ற உயர்ந்த கொள்கையே உண்மையான 'ஸெக்யூலரிஸம்' ஆகும்.

Koviloor Digital Library

மக்களின் உள்ள உயர்வில் அரசின் பொறுப்பு

பிரஜைகளின் உடல் நலத்திற்கும், உலகியல் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் வழிவகைகள் காண்பதான விவசாயம், பொருளாதாரம், உலகியலை மையப்படுத்திய கல்வி, சுகாதாரம், உள்நாட்டு வெளிநாட்டுப் பாதுகாப்பு ஆகியவற்றை அபிவிருத்தி செய்வது ஓர் அரசாங்கத்தின் முக்கியமான பொறுப்பு என்பது உண்மையாயினும், அதோடு பொறுப்பு முற்றிலும் முடிந்து விட்டதாகக் கருதுவதற்கில்லை. உடலைவிட முக்கியம் உள்ளமேயன்றோ? பிரஜைகளின் அந்த உள்ளமாம் உயிரை அபிவிருத்தி செய்வதை ஓர் அரசாங்கம் புறக்கணிக்க முடியுமா? உள்ளவுயர்வு பெறாத மக்கட்கூட்டம் வாழும் நாடு நாடாகுமா? **'உயர்ந்தோர் மாட்டே உலகு'** என்பதன்றோ ஆன்றோர்-சான்றோர் அறிவுரை? எனவே, ஒரு நாட்டின் பரிபாலனத்திற்குப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கம், நாடு நாடாக இருக்கவேண்டுமாயின், மக்களின் உள்ளத்தை உயர்த்தவும் நிச்சயமாக உதவி புரியத்தான் வேண்டும்.

இந்த உள்ள உயர்வை அளிப்பது மதமாகவே இருப்பதால், அதன் அபிவிருத்தியில் அரசாங்கத்திற்குப் பங்கு இருக்கிறது என்பதும் நிச்சயம்.

உலகியலில் செய்யும் எந்த அபிவிருத்தியும் நிலைத்து நிற்பதான பயனும், பயனால் விளைவதான ஆனந்தமும் தரவில்லையென்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இந்த அபிவிருத்தி தாற்காலிகமாகவே முடிவதாகவும், அதனைப் பெற மீண்டும் மீண்டும் போராடுவதாகவும், அப் போராட்டத்தில் பலவிதமான வர்க்கபேதப் போட்டி பொறாமைகளும் சண்டைகளும் எழுவதாகவும் — மொத்தத்தில் அமைதி குலைவதாகவே காண்கிறோம். இன்றைய கண்டுபிடிப்புகளால் உலகியல் சுக சாதனங்கள்

Koviloor Digital Library

கணக்கின்றிப் பெருகிக் கொண்டே போவதில், எத்தனை பெற்றாலும் திருப்தி பெறாமல் மேன்மேலும் அதே தேட்டத்தில் ஓடி, சாந்த வாழ்வு என்னவென்றே அறியாதவர்களாக இருக்கிறோம். 'சுவரை வைத்தே சித்திரம்' என்றபடி உடல் நலனை ஓம்பத்தான் வேண்டுமாயினும், 'சித்திரம் தீட்டவே இச்சுவர்; உள்ளத்தின் உயர்வான உயிரின் நிறைவே அச்சித்திரம்' என்பதையும் நாம் மறவாது பொன்னேபோல் மனத்தில் பொதிந்து கொள்ள வேண்டும். மீண்டும் மீண்டும் நலிவும் அழுக்கும் உறும் உலகியல் சுவரைக் கெட்டிப்படுத்துவதும் அழகுபடுத்துவதுமான ஓயா முயற்சியிலேயே ஈடுபட்டு, அதோடு சேர்ந்துவரும் போட்டி-பொறாமைப் போராட்டத்தில் அமைதியிழந்து, மேன்மேலும் தேவை தேவையெனும் குறைவாழ்வில் வாணாளை வீணாளாக்குவ தோடு முடிந்து விட்டோமாயின், நாம் ஆறறிவு பெற்றும் அறியாதாராகவே முடிந்த பரிதாபமாகத்தான் ஆகும். குறைவாழ்வை நிறைவாழ்வாகவும், போராட்டப் பொறாமையை அன்பு வழியில் நின்று பெறும் அமைதியாகவும், வந்து வந்து மறையும் தாற்காலிக இன்பத்தை நிரந்தர ஆனந்தமாகவும் மாற்றும் உள்ளத்தின் உயர்வு என்ற சித்திரத்தைச் சுவரின் மீது தீட்டிக் கொள்வதற்கு உபாயம் காண்பதே நாம் செய்ய வேண்டுவது.

உள்ளவுயர்வை நல்கவல்ல அந்த உபாயம் நல்லொழுக்கமாம் தர்மமும், தெய்வ பக்தியும், ஆத்ம சிந்தனையும் திரிவேணியாகக் கலக்கும் மதவியலேயாகும்.

வலிவூட்டும் மூன்று மூலிகைச் சாறுகளின் கலவையான 'திரிபலா' என்றும் இம்மூன்று அங்கம் கொண்ட மதவியலைக் கூறலாம். அழியும் மூலிகைச் சாற்றினால் சித்திரம் தீட்டுவது போலின்றி, இந்த அழியாத சஞ்சீவினி மூலிகையால் மதவியல் சித்திரத்தை நாம்

Koviloor Digital Library

உலகியல் சுவரின் மீது தீட்டிக் கொண்டால், பிறவிப்பயன் பெற்று அமரமான பூரணவாழ்வின் பேரானந்தத்தைப் பெறுவோம்.

சுவரை நல்ல முறையில் கட்டித் தருவதற்குப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள அரசாங்கத்திற்கு, அது காரணமாகவே, அச் சுவரான உலகியல் முன்னேற்றத்தி லேயே நமது முழுக் கவனத்தையும் ஈடுபடுத்துவதான திட்டங்களை வகுத்து நம்முடைய வாழ்வின் நிறைவுக்கு ஊறு செய்யாமல், சுவரில் நம் கவனம் எந்த அத்தியாவசிய வரம்போடு நிற்க வேண்டுமோ, அந்த அளவுக்கே தானும் கட்டுப்பட்டு, நம்மையும் கட்டுப்படுத்திச் சுவரின் உத்தேசப் பயனான சித்திரமாகிய உள்ளத்தின் முன்னேற்றத்தில் நம் கவனத்தைத் திருப்பிவிடுவதில் நிச்சயமாகப் பங்கு உண்டு.

மத விஷயத்தில் அரசின் பங்குக்குள்ள வரம்பு

பங்கு உண்டு எனும்போதே கூர்த்த ஜாக்கிரதையுடன் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு விஷயமும் கூற வேண்டும். என்னவெனில், நாட்டைச் சேர்ந்த பிரஜைகளின் உள்ளவுயர்வுக்கு உபாயமான மதாபிமானத்தை வளர்த்துக் கொடுப்பதில் அரசாங்கத்திற்கு **ஒரு பங்கு மட்டுந்தான் உண்டு** என்பதேயாகும். அதாவது மதத்துறையில் அரசாங்கமே முற்றிலும் பொறுப்பேற்பது ஒருபோதும் ஏற்கத் தக்கதல்ல. மத வளர்ச்சியில் தன் பங்கை ஓர் அரசாங்கம் மறக்கலாகாது என்பது எவ்வளவு முக்கியமோ, அதனினும் முக்கியம் அப்பங்கின் வரம்பைக் கடந்து அது செயலாற்றலாகாது என்பதாகும்.

இதன்படி மத விஷயங்களில், கோட்பாடுகளில், பழக்கவழக்கங்களில் ஓர் அரசாங்கமே நேரடியாகப் பிரவேசித்து எதுவும் செய்தல் அறவே கூடாது.

Koviloor Digital Library

மதக் கொள்கைகளுக்கு முரணான சட்டங்கள் கூடாது

அதாவது எல்லா மதங்களுக்கும் ஒரே போல் ஆதரவளிப்பதான சரியான செக்யூலரிஸமோ, எம் மதத்திலும் சம்பந்தம் கொள்ளாத தவறான செக்யூலரிஸமோ, எதனை அரசாங்கம் ஏற்கின்ற போதிலும் அரசியலாரின் சமூகக் கொள்கைகளுக்குப் பொருந்தும் வகையில் மதங்களில் வகுத்துள்ள விதிகளுக்கு முரணாகச் சட்டமியற்றும் அதிகாரத்தை அரசாங்கம் கைக்கொள்ளலாகாது. எம் மதத்திலும் சம்பந்தப்படுவதில்லை என்ற தவறான செக்யூலரிஸத்தை மேற்கொண்ட பின்பும் எதிர்மறைச் சம்பந்தமாக மத விதிகளில் இவ்வாறு துர்பிரவேசம் மட்டும் செய்யலாம் என அரசாங்கம் கருதுமேயாகில் அதனை நாம்* ஏற்பதற்கில்லை.

மதக் கொள்கையை மீறினால் அதிலும் சமநீதி காட்டவேண்டும்

எனினும் தவிர்க்க முடியாமல் அவ்வாறான ஒரு நிலையைத் தாங்கிக் கொள்ள நேரிடின், அப்போது ஒரு விஷயத்தை வலியுறுத்த விரும்புகிறோம். அதாவது மத விதிக்கு முரணாகவும் தமது சமூகக் கொள்கைக்கு ஏற்பச் சட்டமியற்றலாமென ஓர் அரசாங்கம் கருதுகையில் இக் கருத்தை நாட்டின் சகலப் பிரஜைகள் குறித்தும் ஒரேபோல் அமல் செய்து, அதாவது நாட்டில் வழங்கும் எல்லா மதங்களின் விதிகளையும் கருதாது சமமாக அமல் செய்து, பிரஜைகள் அனைவருக்கும் சம நீதி வழங்குதல் என்ற ஆதாரக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

* மடாதிபதி என்ற முறையில் அறிக்கை விடுவதாலும், எல்லா மதத் தலைவர்களுக்கும் பிரதிநிதியாகப் பேசுவதாலும் இங்கும் இன்னும் சில இடங்களிலும் ஸ்வாமிகள் தம்மை 'ராஜரீக'ப் பன்மையில் குறிப்பிட்டுக் கொள்கிறார்.

Koviloor Digital Library

சில மதஸ்தரின் மத விதிகளில் மட்டும் புகுந்து மாற்றுவது, மற்றவர்களைத் தொடாமல் விடுவது எனப் பாரபட்சம் செய்தால் ஜனநாயகக் குடியரசு என்பதன் அஸ்திவாரக் கொள்கையிலேயே ஒன்றான சகலருக்கும் சம நீதி என்பதை அரசாங்கமே முறித்த மாபெரும் தவறாகும்.

அரசின் எல்லைக்கு அப்பாற்பட்ட துறை

எத்துறையிலும் சட்டம் வகுப்பதற்கு முன் அத்துறையில் ஆழ்ந்த அறிவும் தேர்ந்த அநுபவமும் பெற்ற நடுநிலையாளரான தக்கோரிடம் அது குறித்து ஆலோசனை கோரிப் பெற வேண்டியது ஓர் அரசாங்கத்தின் கடமையாகும். இதன் பொருட்டு ஒவ்வொரு துறைக்கும் ஓர் அறிஞர் குழு அமைக்கப்பட வேண்டும்.

பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு என்ற இரண்டிலேயே ஒருவாறு அடங்கிவிடும் ஒன்றாக அரசாங்கப் பணியானது உலகெங்கிலும் வழக்கமாகிவிட்ட இன்றைய நிலையில், மதமென்ற துறையைப் பார்க்கு மிடத்தோ அது அப்பணியின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஆன்மா என்பதன் சம்பந்தமுள்ளதாக இருக்கிறது. ஆட்சி புரிவோருக்கு இத்துறையில் அறிவோ, மதவுணர்ச்சி என்பதேகூடவோ, இருக்க வேண்டிய தேவையில்லை என்றும் ஆகியுள்ளது. எனவே இத்துறை, அரசாங்கம் உள்ளே பிரவேசித்துச் சட்டம் வகுக்க இடம் தராத ஒன்றாக உள்ளதென ஆகிறது.

எல்லா மதங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட சுதந்திரம் பெற்ற தனியமைப்பு

இதன் தொடர்ச்சியாக, இத்துறையில் ஏனைய துறைகளில் போல அரசாங்கம் தனக்கு ஆலோசனை

Koviloor Digital Library

அளிப்பதற்காகக் குழு நியமிப்பதென்றில்லாமல், தான் அறவே விலகி நின்று மதத்துறை சம்பந்தமான விஷயங்களில் முடிவெடுத்து நடத்த முழு நிர்வாகப் பொறுப்புப் பெற்ற, சட்டப்படிப் பூரண அதிகாரம் கொண்டதொரு சுதந்திரமான தனி Autonomous அமைப்பே நிறுவ வேண்டியது அவசியமாகிறது. அதன் சிபாரிசின் மீதே தேவை ஏற்படின் அரசாங்கம் சட்டம் வகுக்கலாம்.

பல மதங்கள் வழங்குகின்ற இந்நாட்டில் அவையனைத்திற்கும் பொதுவான பக்தி, ஆத்ம சிந்தனை, அன்பு, உண்மை, நேர்மை, தொண்டு, பணிவு ஆகியவற்றை அப் பல மதங்களையும் சார்ந்த எல்லாப் பிரஜைகளுக்கும் வளர்த்துக் கொடுப்பதற்காகத் திட்டங்கள் வகுத்து நடத்தும் பொருட்டு எல்லா மதப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடிப் பணிபுரிவதே முக்கியமாக இச்சுதந்திர அமைப்பின் நோக்கமாக இருத்தல் வேண்டும். இதுகாறும் பிரிந்து பிரிந்து சண்டையிடுவதாகவே பெரும்பாலும் இருந்துவந்துள்ள எல்லா மதஸ்தரையும், அதே போல் ஒவ்வொரு மதத்திற்குள்ளுமேயுள்ள உட்பிரிவினரையும் அச்சகலருக்கும் பொதுவான மேற்சொன்ன குணநலன்களை வலியுறுத்துவதன் மூலம் இவ்வகண்ட பாரதம் என்ற ஒரே ஐக்கியமான குடும்பத்தினையே சார்ந்த அன்பு அங்கத்தினர்களாகச் செய்யும் பொறுப்பினை ஆற்றுவது இச் சுதந்திர மத அமைப்பின் முக்கியமான பணியாயிருக்க வேண்டும்.

மக்களுக்கு மன மேம்பாடளிப்பதிலும் அரசாங்கத் திற்குப் பங்குண்டு என்பதால் மட்டுமின்றி, ஓர் அரசாங்கம் அமைதியான முறையில் செயற்பட நாட்டின் சகல பிரிவினரும் ஐக்கியமுற்றிருப்பது அத்தியாவசியம் எனும் காரணத்தினாலும் இப்பணிகளுக்கு உதவி புரியும் மேற்படி அமைப்பின் நிதித் தேவை முழுவதையும் அரசாங்கமே ஏற்க வேண்டும்.

Koviloor Digital Library

மேற்படி அமைப்பில் இடம் பெறத் தக்கவர் யாவர்? தங்களது மத நூல்களைப் பயின்று தேர்ச்சி பெறுவதற்கும், அம்மத அநுஷ்டானங்களை உரியவாறு புரிவதற்குமே வாழ்வை அர்ப்பணித்த பெரியவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும். இந்த யோக்கியதாம்சங்களோடு உலக நடப்புக்களில் பரிசயமுள்ளோராகவும், மக்களோடு நன்கு பழகி அவர்களது மனப்போக்குகளை அறிந்தோராகவும், நடைமுறைக் கண்ணோட்டம் கொண்டோராகவும், நிர்வாக அறிவு பெற்றோராகவும் உள்ளவர்களும் அதில் அங்கம் வகிக்க வேண்டும். இத்தகையோரே இத்துறையில் என்ன செய்ய வேண்டுமோ, எப்படி மக்களை அதில் முன்னேற்ற வேண்டுமோ அவற்றைப் பக்குவமாகச் செய்யவியலும்.

நாட்டிலுள்ள எல்லா மதங்களின் பிரதிநிதிகளாகவும் மேற்சொன்ன தகுதி பெற்றோராக நம்பப்படும் மதத்தலைவர்களுக்கு அங்கத்துவம் அளித்து இச்சுதந்திர மத நிர்வாக அமைப்பு உருவாக்கப் பெற்று இத்துறையின் நேரடிப் பொறுப்பு அதனிடமே ஒப்புவிக்கப்பட வேண்டும். அரசாங்கம் இத்துறையில் நேரடியாகத் தலையிட்டு எந்த மாற்றமும் செய்தல் அறவே கூடாது.

மதத் தலைவர்கள் அரசியலில் ஈடுபடலாகாது

மறு திசையிலும் இதையே கூற விரும்புகிறோம். அதாவது, மதத்தலைவர்களும் அரசாங்க விஷயங்களில் ஒரு நாளும் தலையிடலாகாது. அதற்கான அறிவும், அநுபவமும் பெற்றவர்களின் பொறுப்பில்தான் அரசாங்கம் நடக்க வேண்டும். மனித இயற்கையில் அரசாங்கத்தின் செயற்களமாகிய உலகவியலிலேயே ஈடுபடும்போது அறிவு, அநுபவம் என்பவற்றுக்கு மட்டும் இடம் அளிப்பதாக இன்றி, வேறு சில குறைபாடுகளுக்கும் இடமளிக்க ஏது ஏற்படுகிறது. ஆன்மவியல், உலகியல் என்பவை போல்,

Koviloor Digital Library

அரசியல் என்றே உருவாகியிருக்கும் ஒன்றிலோ அதிகாரம், பதவி, புகழ் என்ற வசீகரண அம்சங்களின் கலப்பு அதிகமிருப்பதால், தர்ம நாட்டம் கொண்ட எவரும் மிக்க வருத்தமடையும்படியான பல போக்குகள் ஊடுருவ அதிகமாகவே ஏது இருப்பதாகத் தெரிகிறது. எனவே, மக்களை உள்ளவுயர்வில் முன்னேற்றுவதற்குப் பொறுப்புப் பெற்ற மதத் தலைவர்கள் தாங்களே பின்னேற்றம் அடையும் அபாயத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமாயின், அரசாங்க சம்பந்தமும் அரசியல் சம்பந்தமும் அறவே கொள்ளாமல் தொலைவில் விலகியே இருக்க வேண்டும்.

மத வளர்ச்சிக்கான போஷணை அளிக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு நினைவூட்டுவது, அது அவ்வாறு செய்யும்போது உரிய பாராட்டை அளித்து மேலும் உற்சாகப் படுத்துவது, மத விஷயங்களில் அரசாங்கம் பிரவேசித்தால் தைரியமாகக் கண்டிப்பது—ஆகியவற்றுக்கு அதிகமாக மதத்தலைவர்கள் அத்துறையில் சம்பந்தம் கொள்ளவே கூடாது. சுத்தி செய்யும் நீர்நிலையையே துர்நாற்றக் குட்டையாக்குவது போன்ற ஆபத்துக்கும் பாபத்துக்கும் இடம் தருவதான அரசியல் சம்பந்தத்தை மதவியலுக்கு ஒருபோதும் காட்டிக் கொடுக்கலாகாது.

அரசாங்கத்தினர்தான் உலகியல் வளர்ச்சியோடு மத வளர்ச்சியிலும், அதற்கு தாங்கள் அளிக்க வேண்டிய போஷணையை எப்போதும் நினைவு கொண்டிருக்கும் அளவுக்குக் கவனம் கொண்டிருக்க வேண்டுமேயின்றி, மதத்தலைவர்களும் அதே போல் அரசியல் துறையில் கவனம் செலுத்த வேண்டுமென்றில்லை. அவர்களது முழுக்கவனமும் மதம் குறித்ததாகவே இருத்தல் வேண்டும்.

தற்போது சுதந்திரமாகப் புதிய அரசாங்கம் ஏற்படுவதால் அத்துறையினரின் பங்கையே முதற்கண் எடுத்துக் கூறப் புகுந்தோம்.

Koviloor Digital Library

அரசு புரிய வேண்டிய மத போஷணை; அதனால் அரசு பெறும் லாபம்

பிரஜைகளின் உள்ள உயர்வுக்கு உதவுவதில் அரசாங்கத்திற்குப் பங்கு உண்டு என்ற காரணத்தோடு, மத வளர்ச்சியின் வழியே ஏற்படும் உள்ளத்தின் உயர்வால் அரசாங்கத்திற்கே நேராக ஒரு லாபமும் உண்டு என்பதை ஓர் அரசாங்கம் எல்லா மதங்களுக்கும் ஆதரவு தந்துதவ வேண்டுமென்பதற்கு ஓர் உபகாரணமாக (துணைக் காரணமாக)க் காட்ட விரும்புகிறோம். தற்போது ஒரு நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறி ஏராளமான குற்றங்கள் நடைபெறுவதால் நீதிமன்றங்கள், உள்நாட்டுப் பாதுகாப்பான போலீஸ் ஆகியவற்றுக்கு அரசாங்கம் ஏராளமாகச் செலவழிக்க வேண்டியுள்ளது. அதோடு சட்டத்தையும் ஒழுங்கையும் காக்கும் பணி மிகக் கடினமானதாகவும், அரசாங்கத்திற்கு மிகுந்த மனச்சுமை யேற்றுவதாகவும் உள்ளது. இச்செலவில் ஒரு சிறு பங்கினை மதங்களின் போஷணைக்காக்கி, எல்லா மதஸ்தர்களுக்கும் ஆலயத் திருப்பணி செய்வது, எல்லா மத ஸ்தாபனங் களுக்கும் திரவியக் காணிக்கையளிப்பது, ஸத்ஸங்கங் களுக்கு மானியமளிப்பது, ஸத்துக்களான யாவருக்கும் சம்மானமளிப்பது என முற்கால மன்னர்கள் செய்தாற் போல் செய்து மதாபிமானம் வளர்வதற்காகச் செலவிட்டாலே போதும், அதன் வழியே மக்களின் உள்ளம் உயர்ந்து பண்பட்டு, முற்காலத்திலிருந்தாற்போலவே குற்றங்களும் வெகுவாகக் குறைந்துவிடும். எனவே நீதித்துறை, போலீஸ் துறை ஆகியவற்றின் தேவையும் வெகுவாகக் குறைந்து அரசாங்கத்திற்கு நிதி, பொறுப்புச் சுமை என்ற இரு இனத்திலும் நிகர லாபம் கிடைக்கும். முற் காலத்தை விடத் தன்னிச்சையாக மக்கள் நடக்கத்

Koviloor Digital Library

தொடங்கியிருக்கும் இக்காலத்தில், அன்றை விட ஆசைகளையும் பேராசையையும் தூண்டிவிடக் கூடிய பொருள்களும், கொள்கைகளும் நாள்தோறும் மலிந்து, குற்றம் புரியும் வாய்ப்புகளும் பெருகிவரும் விஷமயமான சூழலில் மாற்று மருந்தாம் அமிர்தமாக மேற்சொன்ன விதங்களில் அரசாங்கம் அளிக்க வேண்டிய மத போஷணையும் முன்னைக் காட்டிலும் முக்கியத்துவம் பெறுகிறது.

எனவே முடிந்த முடிவாக, ஒரு நாட்டில் நன்மக்கள் பெருகி, குற்றங்கள் குறையவேண்டுமெனில் அதன் அரசாங்கம் மதபோஷணை அளிப்பதைத் தனது கடமைகளில் ஒன்றாகக் கொள்ள வேண்டுமென்றாகிறது. இதனைத் தொடர்ந்து, 'செக்யூலரிஸம்' என்பதை எம் மதமும் சாராத்தன்மை என்று தப்பர்த்தம் செய்து கொண்டு எதற்குமே ஆதரவு தராது விலகி நிற்பதை விடுத்து, குறிப்பிட்டதொரு மதத்தை மட்டும் சாராது எல்லாவற்றை யும் ஆதரிப்பதே முறையான அர்த்தமெனப் புரிந்து கொண்டு அரசாங்கம் செயலாற்ற வேண்டும் என்றுமாகிறது.

இன்று அநேகமாக எல்லா நாடுகளிலுமே பல்வேறு மதத்தினர் கூடி வாழ்வதால், எல்லா மதங்களையும் சமநோக்குடன் ஆதரித்து, அவற்றின் அபிவிருத்திக்கான போஷணையை அரசாங்கங்கள் அளிப்பதே 'ஸெக்யூல ரிஸம்' எனப் பெயர் கொண்ட கொள்கைக்குப் பொருத்த மாக இருக்கும். உலகவியல் என்பதே நவீன விஞ்ஞானத்தா லும் புரட்சிக் கருத்துக்களாலும் உலகெங்கிலும் ஓங்கிப் பரவி, ஆன்மவியல் அடித்துச் செல்லப்படும் ஆபத்துக் கட்டத்தில் ஜன சமுதாயம் இருக்கும் இத்தருணத்தில், மக்கள் மாக்களாகி விடாமல் காக்க வேண்டுமெனில் இத்தகைய செக்யூலரிஸமே நடைமுறையாக வேண்டும்.

Koviloor Digital Library

அரசு போஷணை:
ஹிந்து மதமும் பிற மதங்களும்

எல்லா மதங்களின் வளர்ச்சிக்காகவும் நம் நாட்டு அரசாங்கம் பொருட்செலவு மேற்கொள்ள வேண்டுமென மேலே கூறியது குறித்து ஒரு விஷயம் தெளிவுபடுத்த விரும்புகிறோம். இதனை ஹிந்து மதம் தவிர்த்த மற்ற மதஸ்தர்களும் நடுநிலையிலிருந்து கவனித்து ஏற்க வேண்டுமென விரும்புகிறோம்.

அம் மதங்களில் முக்கியமாகவுள்ள இரண்டின் வளர்ச்சிக்கு அரசாங்கத்திலிருந்து பொருளுதவி தேவைப்படாது எனும் அளவுக்கு அள்ளிச் சொரிந்து கொண்டேயிருக்க அதற்கென்றேயான ஸ்தாபனங்கள் இருப்பது உலகறிந்த உண்மை. ஸ்தாபன ரீதியில் அமைக்கப் பட்ட அவை, ஓர் அரசாங்கம் போலவே செயற்படுபவை. முற்காலத்தில் அரசாங்க முறைமையே பிற நாடுகளிலும் தமது அரசை விஸ்தரிப்பதாக இருந்தது போல, இன்றைக்கும் அம்மதங்கள் பிற மதத்தினரையும் தம் மதமாக்கி, அதை விஸ்தரிக்கப் பலவித உபாயங்களைக் கைக்கொண்டிருப்பதையும் உலகு அறியும். இன்றுள்ள நிலையில் மதம் வளருவதற்கு மட்டுமின்றி, இவ்வாறு மேலும் விஸ்தரிப்பதற்காகப் பலவிதங்களில் ஏராளமாகச் செலவிடவும் அவை பெரும் வசதி பெற்றிருப்பதும் யாவரும் அறிந்த யதார்த்த உண்மையே.

இத் தேசத்தின் மிகவும் பெரும்பாலான ஹிந்து மதத்தவரே இங்கு மாறுபட்டு நிற்பவர். அவர்களது அவல நிலைக்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு: பிற மதஸ்தர்கள் புது ஆலயங்கள் கட்டுவதற்கும், பழுதுற்ற அவர்களது பழைய ஆலயங்களைப் புதுப்பிப்பதற்கும் நிதியத்திற்காக வேண்டுகோள் விளம்பரங்கள் செய்வதாக நாம் பார்ப்பதேயில்லை. ஹிந்துக்கள் விஷயத்திலோ ஒரு சிறிய

Koviloor Digital Library

கோயிலுக்கும் கூட நீண்ட காலம் வேண்டுகோள் விடுப்பதையும் பார்க்கிறோம். ஸ்தாபனம், தனி மனிதர் என இருவகைப்பட்ட பக்கபலமும் ஹிந்து மதத்திற்கு இல்லாததையே இது காட்டுகிறது.

ஹிந்து மதத்தின் நிறுவன அமைப்பு: பண பலமும் ஆள்பலமும் இல்லாதது

ஸ்தாபன ரீதியில் மதத்தைக் கட்டிக்காப்பது என்பதைவிட, தனி மனிதர் ஒவ்வொருவரும் தமது தர்மப்படி மதாநுஷ்டானங்களைச் செய்து அவர்தம் சொந்த வாழ்க்கையின் சக்தியாலேயே மதம் காக்கப்பட வேண்டும் என்பதே ஆதிகாலத்திலிருந்து ஹிந்து மதக் கொள்கையாகவும் நடைமுறையாகவும் இருந்து வந்திருக்கிறது. 2500 வருடம் முன்பு அவ்வாறு அநுஷ்டானத்தாலேயே ஜீவிய உதாரணம் படைத்து மதத்திற்கு உயிரூட்டியவர்களின் தொகை நலிவு கண்ட போதுதான், இங்கு ஹிந்து மத தத்துவ சாஸ்திர அடிப்படையையே கொண்ட பௌத்தம் என்ற புது மதம் நிறுவப்பட்டது. அதுவோ ஸ்தாபன ரீதிக் காப்புக்கு முக்கியமான இடமளிப்பதாக உருவாக்கப்பட்டது. புத்தரிடம் சரண் புகுவதோடு 'சங்கம்' என்ற பெயரில் மதப் பயிற்சி கொடுக்கவும் மதப்பிரசாரம் செய்யவும் அமைக்கப் பட்ட ஸ்தாபனத்திடம் சரண் புகுவதும் அதன் ஆதாரக் கோட்பாடுகளில் ஒன்றாயிற்று. புது மதம் உருவாகி வளர வேண்டுமாயின் பழைய மதஸ்தரையே மதம் மாற்றினா லன்றி எவ்வாறு இயலும்? அவ்வாறே நடைபெற்றது. அந்த நிலையில்தான் ஸ்ரீ ஆதி சங்கராசாரிய சுவாமிகள் தோன்றி இனி ஹிந்து மதத்திற்கும் ஸ்தாபனக் காப்பு ஏற்படுத்த வேண்டிய அத்தியாவசியம் உண்டாகியுள்ளதென உணர்ந்து திருமடங்களை நிறுவலானார். பிற்பாடு ஹிந்து

Koviloor Digital Library

மதத்திலேயே பிற மரபுகள் பிறந்த போதும் அவர்களுக்கும் இவ்வாறே ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டன. இன்றளவும் இந்த எல்லா மரபுகளின் திருமடங்களும் இயங்கி வருகின்றன. ஆயினும், அவற்றுக்கெல்லாம் பொது மதமாக இப்பரந்த பாரத கண்டமெங்கணும் கோடானுகோடியர் தழுவியுள்ள ஹிந்து மதத்திற்கான ரட்சணையை அளிக்கப் போதுமான திரவிய பலமோ, ஆள்கட்டு என்ற பலமோ அவற்றுக்குக் கிடையாது. மடத் தலைவரது அநுஷ்டான பலத்தாலும், அவர் ஜீவிய சக்தியுடன் உபதேச ரூபமாகச் செய்வதாலும் மதத்தை ரட்சிப்பதே சிலாக்கியமென்றும், மடங்கள் திரவியம், ஆள்கட்டு ஆகியவற்றில் மிதமிஞ்சிப் பலம் பெற்றால், அது ஆத்மிகச் சூழ்நிலைக்குக் குந்தகம் விளைவிக்குமென்றும் நம் மதப் பெரியோர்கள் உணர்ந்திருந்ததாலேயே இவ்வாறு வரம்புக்குக் கட்டுப் படுத்தியிருந்தது.

மன்னர்களும் மக்களும் செய்த மதபோஷணை

எனினும், மன்னர்களும் மக்களும் தாமாகவே நல்ல மதாபிமானமுள்ளோராயிருந்ததால் அவர்கள் மூலமே பொருளாலும் ஆள்கட்டாலும் காப்பளிப்பது எனும் அம்சம் நல்லபடியாக நிறைவேறி ஹிந்து மத போஷணை வெகு நீண்டகாலம் வரையில் நன்கு நடந்து வந்திருக்கிறது.

முக்கியமாக ஆலய வழிபாடே ஒரு மத சமூகத்தினரிடம் மதத்தைக் காத்துக் கொடுப்பதாக இருக்கிறது. சமூகத்தினரை மதத்தால் காத்துக் கொடுப்பதும் முக்கியமாக ஆலய வழிபாடுதான். இவ்வாறு முக்கியத்துவம் பெற்ற ஹிந்து மத ஆலயங்கள் நாடெங்கும் பரவியிருப்ப தால் அவற்றுக்குத் திருப்பணி செய்து, அங்கு வழிபாடுகள் முறைப்படி நடக்கச் செய்தலே மத ரட்சணைக்கு மையமாக இருந்ததும், இருப்பதும் ஆகும். மாபெரும் அளவினதாக

Koviloor Digital Library

அநேக ஆலயங்கள் கொண்ட ஹிந்து மதத்தில் ஆலயத் திருப்பணிக்குத் தேவைப்படும் திரவியமும் மாபெரும் அளவினதே. இதையும் ஏற்று, காப்புப் பணியை ஆற்றியது முக்கியமாக மன்னர்களும் மக்களுமே; மதத்திற்கென்று ஸ்தாபனமாக அமைக்கப்பட்ட திருமடங்கள் இதில் ஆற்றிய பங்கு சிறியதே.

பிற மதத்தினர் ஆட்சியில் ஹிந்து மத போஷணையின் நலிவு

வெளிநாட்டுப் புறச் சமயத்தினரின் அரசாட்சி ஏற்பட்டதிலிருந்து இந்த அரசாங்க போஷணை நலிவு காணத் தொடங்கியது. அப் புறச் சமயத்தினரில் மேல் நாட்டிலிருந்து வந்த வெள்ளையரின் ஆட்சி ஏற்பட்ட பின்னரோ, அவர்தம் வாழ்க்கை முறையிலேயே மோகிக்கத் தொடங்கிச் சொந்தமான சமயக் கலாசாரத்தைப் புறக்கணிக்கத் தலைப்பட்ட ஹிந்து சமுதாய மக்களும் தங்களது மதரட்சணையில் அக்கறை இழக்கலாயினர்.

சுதந்திரப் போராட்டம் செய்யத் தவறிய விஷயம்; ஹிந்து மதம் கண்ட பாதிப்பு

சுதந்திரப் போராட்டமும்கூட இந்த அம்சத்தில் மக்களை உரிய திசையில் திருப்பிவிடத் தவறிவிட்டது என்ற துரதிருஷ்டவசமான உண்மையைக் கூறாதிருக்கவியலாது. இப்போராட்டத்தின் முக்கியமான தலைவர் மேல்நாட்டினரின் ஆட்சியைக் களைவதோடுகூட, அல்லது அதனினும் முக்கியமாக, அவர்தம் வாழ்முறையில் இந்தியர்களுக்கு ஏற்பட்ட மோகத்தையும் களைந்தெறிய வேண்டுமென்ற கொள்கை உடையவராயினும், ஏனைய போராட்டத் தலைவர்களும் அவர்களைப் பின்பற்றிய ஏராளமான மக்களும் அதில் அவ்வளவாகக் கவனம்

Koviloor Digital Library

கொள்ளவில்லை. நாட்டை அந்நியரின் அரசியல் ஆளுகையிலிருந்து மீட்பதொன்றுக்கே முழு கவனமும் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கருதியதால், மக்களின் மனப்பான்மையையும் வாழ்முறையையும் அந்நிய வழிகளின் ஆளுகையிலிருந்து மீட்பதற்கு எந்த முயற்சியும் செய்யப்படவில்லை. நாடு அந்நியராட்சியிலிருந்து அரசியல் சுதந்திரம் பெறும்போது அதிலுள்ள பிரஜைகள் ஹிந்து மதம் மட்டுமின்றி எம்மதத்தினராயினும் ஏதோ ஒரு மதத்தின் மூலம் உள்ளவுயர்வு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதைக் கருதாது, அரசியல் சுதந்திரத்திற்காக மட்டுமேதான் போராட்டம் நடத்தப்பட்டது. எனவே குறிப்பாக ஹிந்து மதஸ்தர் மதாபிமானத்தில் பின்னடைவு காணும் நிலையே நீடித்து வந்தது. அந்நிலையில்தான் இறுதியாகச் சுதந்திரம் வந்திருப்பதும்.

இங்கு கவனத்திற்குரிய அம்சம் யாதெனில், இந்திய மக்களில் ஹிந்துக்கள் மாத்திரந்தான் இவ்விதம் சுயமதாபிமானம் குன்றியது. இஸ்லாமியர் எப்போதுமே தீவிரமான சுயமதப் பற்றும் சமுதாயக் கட்டுப்பாடும் உள்ளோராதலின் அவர்கள் மேனாட்டு வழிகளில் ஹிந்துக்கள் போல் மயங்கி சுய மதக்காப்பில் பின்தங்க வில்லை. கிறிஸ்தவர்களோ அம்மேனாட்டினரின் மதத்தைச் சேர்ந்தோரேயாதலின், அவர்கள் விஷயத்தில் இப்பிரச்னை எழும்பவேயில்லை. அதாவது ஹிந்து மதம் மட்டுமே பாதிப்புற்றது.

சுதந்திரப் போராட்ட காலத்தின் போதும் ஹிந்து சமயத்திற்காகவும் அதன் சமூகத்தினருக்காகவும் சமய ஸ்தாபனம் எனக் கூற முடியாமல் சமூக ஸ்தாபனமாகவே இருந்து கொண்டு எழுச்சியுடன் போராடிய ஓரிரு இயக்கங்கள் ஆற்றிய சிறு பங்கைத் தவிர, மாபெரும் சுதந்திரப் போராட்ட இயக்கம் எதுவும் செய்யாமல், ஹிந்து

Koviloor Digital Library

சமயம் பின்னடைவிலேயே உள்ள நிலையில்தான் முடிவாகச் சுதந்திரம் வந்திருப்பது.

இந்த நடைமுறை உண்மைகளை ஹிந்துக்களல்லாதாரும் நடுவு நிலையிலிருந்து நோக்கினால், சுதந்திர பாரத அரசாங்கமானது மக்களின் உள்ள உயர்வுக்குத் தனது பங்கான பணியை ஆற்ற வேண்டுமென்றும், மதத்தின் மூலம்தான் அவ்வுயர்வு நடப்பதாக சரித்திரம் காட்டியிருப்பதால் இங்குள்ள எல்லா மதங்களுக்கும் எம்மதமாயினும் போஷணையளிக்க வேண்டுமென்றும் உணர்ந்து அதைச் செயற்படுத்துமாயின், மிகவும் பாதிப்புற்றிருப்பதும் மிகப் பெரும்பாலோருக்கு உரியதுமான ஹிந்து மதத்திற்கே அரசாங்கத்தின் வழியாக அதிகப் பொருள் உதவி அளிக்க வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளவே செய்வர்.

அனைத்து மத மக்களும் சகோதரச் சமூகமாக

மதத்தைக் காப்பது போன்ற விஷயங்களில் அரசாங்கம் செய்வதைவிட மக்களே செய்யக்கூடியதுதான் மிக அதிகம். முதலில் ஒவ்வொரு மதத்திலும் விசுவாசமாக ஒட்டிக்கொண்டிருப்பவர்கள் அம்மதத்திலுள்ள பிறரையும் தட்டி எழுப்பவேண்டும். இதற்கு ஹிந்து மதத்திலேயே அதிகத் தேவை இருக்கிறது. ஏனெனில், பிற மதஸ்தர் யாவருமே தூங்காமல் விழிப்புடன்தான் இருந்து வருகின்றனர். இவ்வாறு எந்த ஒரு மத சமுதாயமும் முழுதாக அம்மதத்திடம் விசுவாசத்துடன் ஒழுகச் செய்ய அந்தந்த மதத்தினரே முயல வேண்டும்; மேலும், ஒவ்வொரு மதத்தினரும் பிற மதத்தினருக்கும் தமது நியாயமான உரிமைகளையும், வாதங்களையும் அன்போடு எடுத்துச் சொல்லி, அவர்களது ஒப்புதலைப் பெற முயன்று பார்க்க வேண்டும். ஏனெனில் இந்நாட்டின் பிரஜைகள் எல்லோரும் எம்மதத்தினராயினும் சகோதரச் சமூகமாகச் சேர்ந்து வாழ

Koviloor Digital Library

வேண்டியவர்கள். அப்படியின்றி மதபேத உணர்வினால் பரஸ்பரச் சர்ச்சையிலும் சண்டையிலும் ஈடுபட்டோமாயின், நமது சொந்த வாணாளும் வீணாகி, நாட்டின் அமைதியும் குலைவது தவிர ஒரு பயனும் விளையாது. ஆகையால், முதற்கண் பிற மதத்தினர் என்றவுடனேயே எதிர்ப்புணர்ச்சியோடுதான் வாதிடுவது என்றில்லாமல், நேயத்துடனேயே அணுகி, தங்களுக்குள்ள நியாயமான உரிமைகளைப் பொறுமையாக எடுத்துச் சொல்லிப் பார்ப்பது என்ற மனப்பான்மையை வளர்த்துக்கொள்வது அவசியமாகும். இதற்கு நாட்டின் மிகப் பெரும்பாலோராக உள்ள ஹிந்து மதத்தோரே வழிகாட்டவேண்டும்.

இவ்வாறு சொல்லுவது, அம்மதத்திலுள்ள மான-ரோஷ உணர்ச்சிகள் மிக்கோருக்கு அவ்வளவாக ஏற்புடையதாக இராதுதான். காரணம் என்னவெனில், பொதுவாகச் சிறுபான்மையினர்தான் பெரும்பான்மையினரிடம் உரிமைகளை இழந்து அவர்களிடம் குழைந்து செல்வதாக இருக்கும். எவருக்குப் பெரும்பான்மையோ அவருக்கு பலமும் பெரியதாயிருக்குமாதலால் இதுவே உலக இயற்கை. ஆனால் விந்தையாக இந்நாட்டிலோ இதற்கு மாறான நிலையாக உள்ளது!

இந்தியாவில் சிறுபான்மை–பெரும்பான்மையினரின் விசித்திர நிலைமை

ஆதிகாலம் தொடங்கி இங்குள்ள பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்தவர் பெரும்பாலும் சாத்துவீகர்களாகவும் ஏனையோர் அவர்களைக் காட்டிலும் வன்மை படைத்தவராகவும் இருந்துள்ளதைப் பிற நாட்டினரில் பலரும் கண்டு கூறியுள்ளனர். அதோடுகூட சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் முக்கியமான ஹிந்துத் தலைவர்கள் சமரஸம் என்ற பெயரில் சிறுபான்மையினருக்கு மிகவும் விட்டுக்

Koviloor Digital Library

கொடுத்துக் கொண்டே போயிருப்பதில், இன்று அத் தலைவர்களே வருத்தப்படும்படியாக இத்தேசத்தைப் பிளந்து ஒரு பகுதியை ஒரு சிறுபான்மை மதத்தோர் தங்களது தனிநாடாக ஆக்கிக் கொள்ளுமளவுக்கு அவர்கள் வன்மையில் வளர்ச்சி கண்டிருக்கிறார்கள். பெரும்பான்மை மதஸ்தரோ தங்களது நியாயமான உரிமைகளுக்கு அரசாங்கத்திடம் மன்றாடவும் போராடவும் வேண்டிய விபரீதமான நிலை இந்நாட்டில் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நமது யோசனைக்குச் சம்மதிக்கவியலாமல், 'ஆதியிலிருந்தே இந்நாட்டிற்கேயான மதத்தை, இன்றைக்கும் இங்கு மிகவும் பெரும்பான்மையாயுள்ள மதத்தைச் சேர்ந்த ஹிந்துக்கள் பிற மதங்களிடம் முதலடி வைத்துத் தங்களது உரிமைகளின் நியாயத்திற்கு அவர்களிடம் ஒப்புதல் கோருவதாவது?' என்று ஒரு சாரார் கருதக் கூடியது இயற்கையே. எனினும், நமது சீர்தூக்கிப் பார்த்த முடிவு யாதெனில், எவராயினும் எவரிடமாயினும் பிற காரணம் யாவற்றையும் ஒதுக்கி, முதற்கண் அன்பால் பரஸ்பர நல்லிணக்கம் கொள்ள முயலுவதே நமக்கும் நல்லது. நாட்டிற்கும் நல்லது. அது பயன்தராத போதே பிற உபாயங்களை மேற்கொள்ள வேண்டும். தேவையாயின் அப்போது அதனை வலியுறவே செய்யலாம்.

இங்கு கூறவிரும்பியது, மத வளர்ச்சிக்கு அரசாங்க உதவி பெறமுடியுமாயின் அப்போது ஹிந்து மதத்திற்கே அதில் அதிகமான பங்கு அளிக்கப்படவேண்டும் என்பதன் நியாயத்தைப் பிறருக்கு அன்புடன் எடுத்துச் சொல்லி அவர்களது சம்மதத்தைப் பெற முயல வேண்டுமென்பது தான்.

எனினும், அரசாங்கம் எல்லா மதங்களையும் ஒன்று போலவே கருத வேண்டுமாதலால், அதைக் காட்டப் பிற மதங்களுக்கும் அன்பின் அடையாளமான 'டோகன்'

Koviloor Digital Library

(token) என்பது போலத் திரவிய சகாயம் செய்யலாம்; செய்ய வேண்டுவதே!

அரசு ஆதரவு தரவேண்டிய இனங்கள்

நாம் கூற வந்தது, எல்லா மதஸ்தரும் தமது மத நூல்களைப் பதிப்பித்துப் பரப்புவதற்கும், சமயப் பேச்சாளர்கள் மூலம் மக்களுக்கு மத விஷயங்களை எடுத்துச் சொல்வதற்கும், இவற்றிலும் முக்கியமாகத் தத்தமது ஆலயங்களைப் பழுதுபார்த்துப் புதுப்பித்துக் கொள்வதற்கும், தேவையான இடங்களில் சர்ச்சைக்கு இடமில்லாமல் புதிய ஆலயங்கள் எழுப்பிக் கொள்வதற்கும், இன்னோரன்ன பல வகைகளுக்கும் அரசாங்கம் ஆதரவைத் தந்து, பெரும் பங்கோ, சிறு பங்கோ மானியமாக வழங்குதல் வேண்டும். புதிய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய செக்யூலரிஸம் இவற்றுக்கு உதவுவதாக இருத்தல் வேண்டும்.

மத விஷயங்களில் மக்கள் ஆதரவே மூலதனம்

மேற்சொன்னபடி மதத்தை வளர்ப்பதற்கான பணிகளின் செலவில் ஒரு பங்கைத்தான் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென விரும்புகிறோமேயன்றி முற்றிலும் அரசாங்கமே செலவழிக்கவேண்டும் என்று நாம் கூறவில்லை. அப்படிச் செய்தால் அப்போது இப் பணிகளுக்காக மக்கள் செலவிடுவதென்பது நின்றுவிடும். அது கூடாது. ஏனெனில் மத விஷயங்களில் மக்களின் ஆதரவே மூலதனம். உடலுழைப்பாக மட்டுமின்றி, திரவியத் தியாகமாகவும் அவ்வாதரவை அவர்கள் தர வேண்டும். அரசாங்கம் மட்டுமே செலவிடுவது என்றால் அப்போது மக்களின் அக்கறையும் ஈடுபாடும் குறைந்து அவர்களுக்கு மெத்தனம் ஏற்பட்டுவிடும். எனவே அரசாங்கம், மக்கள் ஆகிய இரு சாராரும் பங்கு கொண்டே மதாபிவிருத்திக்கான பணிகள் நடைபெறவேண்டும்.

Koviloor Digital Library

மதச் சுதந்திர உரிமையும் மதமாற்றமும்

மேற்சொன்ன மதாபிவிருத்தியில் மதப் பிரசார விஷயமாக ஒரு கிளையம்சத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம். கிளை எனினும் இதுவே மேற்சொன்ன எல்லா அம்சங்களையும் கிளைகளாகக் கொண்ட அடிமரமும் வேருமாக மதிக்கத்தக்க ஆதாரமான விஷயமாகும்.

அதாவது அரசியற் சுதந்திரம் பெற்ற நம் நாட்டு மக்கள் யாவரும் மதச் சுதந்திரமும் பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தின் மீதுதான் மேற்சொன்ன யாவுமே கூறப்பட்டன. அதற்கு நமது அரசியல் நிர்ணயச் சட்டம் (Constitution) நிச்சயமாக உறுதி கூறும் என்ற நம்பிக்கையின் மீதே கூறப்பட்டன.* இது ஒருவர் தமக்கு விருப்பமான மதத்தைத் தழுவியிருக்கும் சுதந்திரத்தைப் பெற்றிருப்பதற் குச் சட்டபூர்வமாக உரிமை வழங்குவதேயாகும். அவ்வாறு ஒருவருக்கு விருப்பமானது என்பது மிக மிகப் பெரும்பாலும் அவர் எம்மதத்தில் பிறந்தாரோ அதுவாகத்தானிருக்கும். உடன் வாழும் பெற்றோர், சகோதரர் ஆகியோரைப் போலப் பிறந்த காலம் தொட்டுப் பழகிய அம்மதமே ஒருவருக்கு விருப்பமானதாக இருப்பதே பொது இயற்கை. எனினும் சிலருக்கு வேற்று மதத்தில் விருப்பம் ஏற்படலாம். அல்லது எம்மதத்தையும் விரும்பாத நிரீச்சுர வாதத்தில் விருப்பம் ஏற்படலாம். எவ்வாறாயினும், அவரவரும் மதம் குறித்த எந்த விருப்பத்தையும் பற்றியொழுகுவதற்கு உரிமையளிப்பதே மதச் சுதந்திரமளிப்பதாகும்.

---

*இவ்வறிவுரை 1972–ல் வழங்கப்பட்ட போதிலும் அரசில் நிர்ணயச் சட்டம் நிறைவேற்றப்படாத 1947–ன் பின்னணியிலேயே வழங்கப்பட்டதென்பது நினைவிருக்கலாம்.

Koviloor Digital Library

சாத்திரப்படி தாய்மதத்தைத் துறப்பது பெற்ற தாயைத் துறப்பது போன்ற பாபமாகவே கருதப்படுகிற தெனினும், சாத்திர வழிகளைச் சந்தர்ப்பத்தையொட்டி மாற்ற இடம் தராமல் உள்ளபடி இரட்சிப்பதே மதத் தலைவர்களான எம் போன்ற மடத்தலைவர்களின் கடமையெனினும், தற்போதுள்ள ஜனநாயக-தனிநபர்ச் சுதந்திரங்களின் தீவிரமான சூழ்நிலையில் அரசாங்கப் பூர்வமாக இந்நாட்டில் சாத்திர வழியைத்தான் அமல் படுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதற்கு இடமே இல்லை என்று ஆகிவிட்டதால், இவ்விஷயத்தில் எவரும் தமது விருப்பப்படி எந்த மதத்தையும் தழுவ சுதந்திரம் உண்டு என்ற மாற்றுக் கருத்தை மதித்துத்தானாக வேண்டியுள்ளது என்ற நிர்ப்பந்த நிலையிலேயே இவ்வாறு கூற முற்பட்டோம்.

பிரஜைகள் மதச் சுதந்திரம் பெற்றுள்ள இந்நிலையில், எல்லா மதத்தலைவர்களுக்கும் மதாபிமானிகளுக்கும் தத்தமது மதங்களின் கொள்கைகளையும், வழிபாடு முதலான செயலுருவிலான வழிமுறைகளையும் தாங்கள் பின்பற்றுவதோடு, பிறருக்கும் பரப்பிப் பிரசாரம் புரியவும் சுதந்திரமான சட்டவுரிமை இருத்தல் வேண்டும். அந்தப் பிரசாரம் அவர்கள் தங்களுக்கே அதில் ஆழ்ந்த ஈடுபாடும் அநுபவ அறிவும் ஏற்படுத்திக் கொள்வதற்கும், அம்மதஸ்தர் களாகவே உள்ள பிறருக்கும் அவற்றை ஊட்டவும், மொத்தத்தில் பரஸ்பரம் மதத்தினால் தாங்களும், தங்களால் மதமும் இரட்சணை பெறுவ்தற்குப் பேருதவி புரிவதாகவும் இருக்க வேண்டும்.

பிரசாரமும் துஷ்பிரசாரமும்

இப்பிரசார விஷயத்தில்தான் ஒருவர் தமது விருப்பப்படி ஒரு மதத்தைத் தேர்ந்தெடுப்பதில் மதமாற்றம்

Koviloor Digital Library

என்ற விஷயம் வருகிறது. பிரசாரம் என்பதைக் கூர்த்த கவனத்துடன் கண்குத்திப் பாம்பாகக் கவனித்து, துஷ்பிரசாரமாகாமற் காப்பாற்றுவதற்கான விஷயம்.

பிரசாரம் செய்கையில், ஒரு மதக் கொள்கைகள் முதலியன அனைவருக்குமான பொதுச் சமுதாயத்தின் முன் வைக்கப்படுகின்றன. ஒரு மதத்தின் நூல்கள், சொற்பொழிவுகள் முதலியவற்றைப் பிற மதத்தினரும் படித்தும் கேட்டும் அதனைப் பற்றி அறிய முடிகிறது. அவ்வாறு அறிந்ததில் அம்மதத்தின் கொள்கைகள், அநுஷ்டான முறைகள் முதலியவற்றில் சுயமாக விருப்பம் ஏற்பட்டு, அதாவது மதத்திற்காகவே மதத்தில் விருப்பம் ஏற்பட்டு பிற மதஸ்தர் ஒருவர் அதில் சேர்வதுதான் உண்மைத்தன்மை உடையதாகும். ஒருவருடைய சுயமான விருப்பம் ஒன்றின் மீது மட்டுமேதான் அவ்வாறு தாய் மதத்திலிருந்து பிற ஒன்றுக்கு மாறுவது உண்மைத்தன்மை உடையது.

தவறான உபாயங்களுக்குத் தடை, தண்டனை

உண்மைகளையே உரிமையாக்கித் தரத்தான் தர்மம். தர்மத்தை அமல் செய்யத்தான் சட்டம். எனவே சட்ட பூர்வமாக மதச் சுதந்திர உரிமை அளிக்க அரசாங்கம் முற்படுகையில், 1. சுய விருப்பம் ஒன்றின் மீதேயும், 2. ஒரு மதத்தின் கொள்கை, நடைமுறைப் பயிற்சி ஆகியவற்றில் மட்டுமே அச்சுய விருப்பம் இருக்கும் போதும்தான் மதமாற்றம் நடைபெறுகிறது என்ற உறுதிப்பாட்டை உண்டாக்குவதற்கு உதவியாகவும் ஒரு சட்டவிதி இயற்றுதல் அவசியமாகிறது. மத சம்பந்தமேயில்லாத உபாயங்களால் மதமாற்றம் செய்வதைத் தடுக்கும் பொருட்டே இவ்வுறுதிப் பாடு அவசியமாகிறது.

மதப் பிரசாரம் என்பது ஒரு மதத்திலுள்ளோருக்கே அதனை நன்கு பிரகாசப்படுத்திப் பற்றுதலை வளர்த்துக் கொடுக்கும் நோக்கத்திற்காக இன்றி, பிற மதத்தினரையும்

Koviloor Digital Library

அதற்கு மாற்றும் நோக்கத்தைக் கொண்டிருந்தால் துஷ்பிரசாரமேயாகும். துஷ்பிரசாரம் என்பது பொய்மையே; சட்டப்படி குற்றமே. குற்றத்திற்கு இடமளிக்காமல் தண்டனை விதிக்கவே சட்டம். எனவே பிரசாரம் என்பதன் மூலம் பிற மதத்தினருக்கு ஒரு குறிப்பிட்ட மதத்தில் சேருமாறு அழைப்பு விடுவதை, மத மாற்றப் பிரசாரம் செய்வதை, அரசியல் நிர்ணயச் சட்டம் தண்டனைக்குரிய குற்றமாக்குதல் வேண்டும்.*

---

* இவ்விஷயமாகப் பிறிதொரு சமயத்தில் ஸ்ரீசரணர் கூறியது:

"எல்லா ஜனங்களையும் எங்கள் மதத்துக்குக் 'கன்வெர்ட்' பண்ண வேண்டும் என்பது எங்கள் மதத்திலேயே முக்யமாகவுள்ள ஒரு கொள்கையாகும். ஆகையினால் அது எங்களுடைய மத உரிமைகளிலேயே ஒரு அங்கமாகிவிடுகிறது. ஆனபடியால் மத சுதந்திரம் அளிக்கிற ஒரு அரசாங்கம் இந்த உரிமையைப் பறித்துத் தண்டனை வழங்குவது அந்த சுதந்திரத்துக்கே ஹானி உண்டாக்குவதாகும். அப்படிச் செய்ய சட்டரீதியாக அரசாங்கத்துக்கு அதிகாரமில்லை" என்று மதமாற்றம் செய்கிற மதஸ்தர்கள் ஒரு வாதம் பண்ணுகிறார்கள்.

இது கொஞ்சங்கூட ஒப்புக் கொள்ளுவதற்கில்லாத வாதம்.

சரித்திர பூர்வமாக ஒரு உபமானம் காட்டினால் புரியும். ஆதிகால ராஜநீதி சாஸ்திரங்களில் ஒவ்வொரு ராஜாவும் மற்ற ராஜாக்களின்மேல் படையெடுத்துத் தன் ராஜ்யத்தை விஸ்தரித்துக் கொள்வதற்கு இடம் கொடுத்து வழிவகைகள் சொல்லிக் கொடுத்திருக்கிறது. எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக லோகம் பூராவும் அப்படியே நடந்தும் வந்திருக்கிறது. வேறே ஒரு காரணமுமில்லாமல் தன்னுடைய ராஜ்யத்தை விஸ்தாரம் செய்து கொள்வதொன்றுக்காகவே ராஜாவுக்கு ராஜா மோதிக்கொண்டு யுத்தம் செய்வதாக நடந்து வந்திருக்கிறது.

பழைய காலத்திலிருந்து நவீன காலத்துக்கு வருகிற போது வேறே எந்த தினுஸில் ஜனஸமூஹம் நல்லபடியாக வளர்ந்ததோ, வளரவில்லையோ — அநேகம் தினுஸில் அது மேலும் மேலும் வீணாகிக் கொண்டும்தான் வந்திருக்கிறது — அந்த விஷயம் எப்படியானாலும், இந்த ஒரு விஷயத்தில் நல்லறிவு பெற்றுத்தானே

(தொடர்ச்சி, அடுத்த பக்கம்)

Koviloor Digital Library

மதச் சுதந்திரத்தின்படி பிரசாரவுரிமை அளிக்கப் பட்டுள்ளதே என இதற்கு ஆட்சேபணை செய்வது நிற்காது.

(முன்பக்கத் தொடர்ச்சி)
இருக்கிறோம்? எந்த ராஜ்யமும் மற்ற ராஜ்யங்களின் மீது படை எடுப்பது தப்பு என்பதைக் கொள்கையளவில் லோகத்திலுள்ள அத்தனை தேசத்தாரும் ஒப்புக் கொண்டிருக்கிறோமல்லவா? லோகம் பூராவையும் பாதித்த இரண்டு உலக யுத்தங்கள் இந்த ஸெஞ்சுரியின் முன்பாதியில்தான் நடந்தது வாஸ்தவமானாலும், 'கோல்ட் வார்', மறைமுகமாக 'கமெர்ஷியல் இன்ட்ரஸ்டினால்' பிற தேசங்களை ஒரு பெரிய 'பவர்' — வல்லரசு — தன் ஆதிக்கத்தில் கட்டுப்படுத்துவது ஆகியன இன்றைக்கும் இருக்கவே செய்கின்றனவென்றாலும், 'அரசியல் கொள்கை' என்று பார்க்கிறபோது 'ராஜ்ய விஸ்தரிப்புக் காகவே படையெடுத்துப் போவது என்பது நாகரிக ஸமுதாயத்துக்கு ஏற்காது' என்று தீர்மானமாக வைத்துக் கொண்டிருக்கிறோமல்லவா? முன் காலங்களில் நடந்த மாதிரி எப்போது பார்த்தாலும் ராஜ்யத்துக்கு ராஜ்யம் ராணுவ ரீதியான யுத்தங்கள் நடக்காமல்தானே இருக்கின்றன?

ஹிட்லரைப் போல மற்ற தேசங்களின் மேல் காரண மில்லாமல் படையெடுப்பவர்களை முறைகேடாகப் போகிறவர்கள் என்று லோகம் பூராவும் கரித்துக் கொட்டத்தானே செய்கிறது?

ஆதிகால ராஜ்ய விஸ்தரிப்புக் கொள்கையை இப்போது இந்தக் காலத்தில், இந்தச் சூழ்நிலையில் சொல்லிக் கொண்டிருந்தால் ஸரிப்படுமா?

அதே மாதிரிதான் ஆதிகாலத்தில் நடந்த மத மாற்ற, மத விஸ்தரிப்புக் கொள்கையை இந்தக் காலத்தில், இப்போதைய சூழ்நிலையில் சொல்லுவதும் கொஞ்சங்கூட எடுபடாது.

ஸ்தூலமாக ஒரு தேசத்தின் பகுதிகளைக் கவரப் பார்ப்பது எத்தனை தப்போ அப்படித்தான் ஒரு மத ஸமுதாயத்தினரை இன்னொரு மத ஸமுதாயத்தினர் கவரப் பார்ப்பதும்.

பிற மதஸ்தர்களின் கொள்கைகளிலேயே மதமாற்றம் என்பது இருப்பதற்கு ஒரு நல்ல காரணம் வேண்டுமானாலும் சொல்லலாம். அதாவது: அந்த மதத்தின் மூல புருஷர்கள் ஆத்ம ஸம்பந்தமாக,

(தொடர்ச்சி, அடுத்த பக்கம்)

Koviloor Digital Library

ஏனெனில் மதப் பிரசாரம் என்பது அம்மதத்தின் கொள்கை முதலான மதாம்சங்களுக்கு விளக்கமாகவே மட்டும்

(முன் பக்கத் தொடர்ச்சி)

தெய்வ ஸம்பந்தமாகச் சில உண்மைகளைத் தெரிந்து கொண்டு அதையே ஒரு புது மதமாக்கினார்கள். அந்த உண்மைகள் தங்களுக்கு ஒரு நிறைவை அளித்துவிட்டதால், எல்லா ஜனங்களுக்குமே அந்த நிறைவைத் தரத் தங்களுடைய புது மதத்தால்தான் முடியும் என்று அவர்கள் நினைத்து, அதன் பேரிலேயே ஸகல ஜனங்களையும் தங்கள் மதத்துக்கு மாற்றச் சொல்லி உத்தரவு போட்டிருக்க வேண்டும் என்று வைத்துக் கொள்ளலாம்.

ஆனாலும், அவர்கள் எவ்வளவோ பெரியவர்கள் தான் என்றாலும் இந்த அம்சத்தில் அவர்கள் நினைத்தது — 'தங்கள் வழி ஒன்றுதான் வழி; வேறே மார்க்கமே கிடையாது' என்று நினைத்தது — ஸரியென்று சொல்லவே முடியாது. லோகத்திலே, ஈச்வர ஸ்ருஷ்டியிலே எங்கே பார்த்தாலும் 'வெரைய்டி' இருக்கிற மாதிரிதான் இங்கேயும்!

ஒரே பரமாத்மாவை அடையப் பல வழிகள் இருக்கின்றன என்று வேதம் சொன்னதுதான் ஸத்தியம்.

அப்படிப்பட்ட பல வழிகளையும் தனக்குள்ளேயே அடக்கம் பண்ணிக்கொண்டு மொத்தத்தில் 'ஸநாதன தர்மம்' என்று இருப்பது நம்முடைய ஹிந்து மதம். 'ஃபிலாஸஃபி' என்ற தத்வ சாஸ்த்ர ரீதியிலும் ஸரி, 'தீயிஸம்' என்ற தெய்வ வழிபாட்டு முறையிலும் ஸரி, 'மொராலிடி' என்று இருக்கிற தர்ம ஒழுக்கங்களிலும் ஸரி, இந்த மூன்றிலுமே அத்தனை 'வெரைய்டி'யையும் தன்னிலே அடக்கம் பண்ணிக்கொண்டு நிறைந்த நிறைவாக இருக்கிற இந்த மதஸ்தர்களை எந்த மதஸ்தரும் தங்கள் வழிக்குக் கூப்பிடுவதற்கு நியாயமில்லை.

பிற மதஸ்தர்களிலும் நடுநிலைமையோடு பார்க்கிற அறிவாளிகள் அத்தனை பேரும் நம்முடைய மதத்தின் பெருமையை, சிறப்பைப் போற்றி நிறையச் சொல்லி வைத்திருக்கிறார்கள்; எழுதி வைத்திருக்கிறார்கள். மத மாற்றப் பிரசாரம் பண்ணுகிறவர்களிலேயே பல பேருக்கு உள்ளூர நம்முடைய மதத்தின் பெருமை தெரியாமலில்லை. ஆனாலும் குறை சொல்லிப் பழிக்கிறார்களென்றால்,

(தொடர்ச்சி, அடுத்த பக்கம்)

Koviloor Digital Library

முடிந்து, அதனாலேயே பிற மதத்தினரும் தானாகக் கவரப் பட்டு அதைத் தழுவுவதற்குத்தான் மதச் சுதந்திரம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

காரணம், அது மதக் கடமையாகவே தங்களுக்கு வாய்த்து விட்டதாக அவர்கள் நினைக்கும் தொழிலின் நிமித்தமாகத்தான்.

குறை எடுப்பது என்று பார்த்தால் எங்கேயும் அப்படி ஏதாவது தெரியத்தான் செய்யும். எந்த மதத்தைப் பார்த்தாலும் அப்படி [குறைகள்] தெரியாமலிருக்காது. இதையே செய்துகொண்டிருந்தால் நமக்கு நாமே த்வேஷக் கரியை அரைத்துப் பூசிக்கொண்டு, நல்லதற்கான எந்த வழியிலும் போகாமல் பரமாத்மாவிடமிருந்து தள்ளித் தள்ளித்தான் போய்க்கொண்டிருப்போம்.

ஒரு பெரிய ஆல விருக்ஷத்தில் ஏதோ சில இலைகள் அரித்துப் போயிருப்பது போலவும், சில புல்லுருவிகள் ஊடுருவி இருக்கிறது போலவும் ஏதோ சில குறைபாடுகள் நம் மதத்திலும் சேர்ந்திருக்கலாம். பார்க்கிறவரின் குறைபாட்டினாலேயே நிறைவான வஸ்துவிலும் குறை தெரிவது போலவும் சில இருக்கலாம். ஆனாலும், லோகத்தில் வேறெந்த மதத்துக்கும் இல்லாத பெருமையாக, காலம் வகுக்க முடியாத நாளாக, தலைமுறை, தலைமுறை, தலைமுறையாக கோடாநுகோடி பேர்களுக்கு பரிபூர்ணத்வம் தந்து, இன்றைக்கும் ஜீவசக்தியுடனிருக்கிற ஹிந்து மதத்தை விட்டு எவரையும் எந்த மதத்துக்கும் இழுப்பதற்கு நியாயமேயில்லை என்பதுதான் நிஷ்பக்ஷ பாதமாகப் பார்க்கிற எவருடைய முடிவாகவுமிருக்கும்.

ஒரு மதமும் தெரியாத நாடோடிகள், காட்டுக் குடிகள், கோரமான பீபத்ஸமான [அருவருப்புக்குரியதான] முறைகளைக் கொண்ட மதங்களைப் பின்பற்றுகிற, நாகரிகமில்லாத பழங்குடிகள் ஆகியவர்களை வேண்டுமானால் ஒரு நாகரிக மத ஸமுதாயத்தினர் தங்கள் வழிக்கு மாற்றுவதற்கு நியாயமிருந்தாலும் இருக்கலாமே தவிர பண்பட்ட மதங்களாக நாகரிக ஜன ஸமூஹங்களில் நிலைப்பட்டு விட்ட எந்த மதஸ்தரையும் வேறெந்த மதஸ்தரும் கன்வெர்ட் செய்ய நியாயமில்லை. 'ஹிஸ்டரி'யைப் பார்த்தால் நாடோடி, காட்டுக்குடி, பழங்குடி என்று சொல்லிக்கொண்டு நடைபெற்றிருக்கிற கன்வெர்ஷன்களில்கூட நியாயம் தப்பி எத்தனையோ நடந்திருப்பதற்கு

(தொடர்ச்சி, அடுத்த பக்கம்)

Koviloor Digital Library

இடமளிக்குமேயொழிய, தமது கொள்கைகளை விளக்கி அதனால் பிறரை அம்மதத்திற்கு வருமாறு அழைப்பு விடுப்பதற்கல்ல.

(முன் பக்கத் தொடர்ச்சி)
நிறைய எவிடென்ஸ் — சான்றுகள் — இருக்கிறது. பெரிய பெரிய பூப்பிரதேசங்களில் குறைச்சல் ஜன ஸங்கியையுடன் தாங்கள் பாட்டுக்கு ஏதோ ஒரு மதத்தை, — அநேக உசந்த அம்சங்களைக்கூட கொண்ட மதத்தை — அநுஷ்டித்துக் கொண்டிருந்தவர்களை அநாகரிகக் காட்டுமிராண்டிகளென்று பொய்யாக வர்ணித்து, அவர்களை ஒன்று, தங்கள் மதத்துக்கு மாற்றுவது, அல்லது தீர்த்துக் கட்டிவிடுவது என்று பண்ணி, முடிவாக அவர்களுடைய பூப்பிரதேசங்களையெல்லாம் தாங்கள் பறித்துக்கொள்வதாக நடந்திருக்கிறது. அதையே, வேறே தினுஸில் ஸாமர்த்யமாக ஹிந்து ஜன ஸமுதாயத்திடம் பண்ணிப் பார்ப்பதற்குச் சட்டபூர்வமாக எப்படி உரிமை கோரமுடியும்? இப்படிப் பிறரைக் கன்வர்ட் பண்ணுவது ஒருவரின் மதச் சுதந்திர உரிமையில் ஒரு நாளும் வராது.

அரசாங்கம் ஒவ்வொருவருக்கும் சொத்துரிமை கொடுத்துச் சட்டம் போட்டிருக்கிறதென்றால் என்ன அர்த்தம்? நியாயமாகத் தனக்குரிய ஸொத்தை ஒருத்தர் ஆண்டநுபவிக்கலாம் என்றுதான் அர்த்தமே தவிர, பிறத்தியான் ஸொத்தில் உரிமை பாராட்டலாம் என்றாகாதோல்லியோ? அப்படித்தான் இங்கேயும். மதச் சுதந்திர உரிமை என்றால் அவனவனும் தனக்குப் பிடித்த மதத்தைப் பற்றியொழுகுவதற்கு உரிமை என்றுதான் அர்த்தமே தவிர, பிற மதஸ்தனைத் தன் வழிக்கு இழுப்பதற்கில்லை. தன்னுடைய வழியை தாராளமாகப் பிரசாரம் பண்ணிக் கொள்ளலாம். பிறர் வழியை நிந்திக்காமல் அப்படிப் பண்ணிக்கொள்ளலாம். பிறருக்கு ஹிம்ஸை, இடைஞ்சல் ஏற்படுத்தாமல் ஒவ்வொருவனும் தன் மத வழிப்படி வழிபாடு செய்யட்டும்; அதன் கொள்கைகளைப் பிரசாரம் செய்யட்டும். ஆனால் மற்றவரை இழுக்கும் நோக்கத்தோடு செய்தால் அது அந்த மற்றவனின் உரிமைக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதுதான். அந்தப் பிறத்தியானுக்கு ஸ்வயமாகவே மனஸுக்குப் பிடித்து அவன் வேறே வழிக்கு வருவானானால் அந்த விஷயமே வேறே. அங்கேதான்

(தொடர்ச்சி, அடுத்த பக்கம்)

Koviloor Digital Library

ஹிந்து மதமும் மதமாற்றமும்; முதல் மாற்றத்தைச் சரி செய்யும் மறுமாற்றம்

பிறரைத் தம் மதத்திற்கு மாற்றும் கொள்கையை அடியோடு கைக்கொள்ளாத ஒரே பெருமதமான ஹிந்து மதத்திற்கு இவ்வாறு அதன் கொள்கைகளில் சுய விருப்பம் ஏற்பட்டதன் மீதேதான் பிற நாட்டு நல்லறிஞர், அநுபவிகள் ஆகியோர் ஈர்க்கப் பெற்று அதனைத் தழுவியிருக்கின்றனர் என்பது கவனத்திற்குரியது.

ஹிந்து மதத் தலைவர்களும் பழங்காலங்களில் பவுத்த-சமண மதத்தினரை ஹிந்து மதத்திற்கு மாற்றியுள்ளனரே என எதிர்க் கேள்வி விடுக்கலாம். இதற்கு நமது விடை, அதற்கு முற்காலங்களில் ஹிந்துக்களாகவே

(முன் பக்கத் தொடர்ச்சி)
சட்டப்படியான மதச் சுதந்திர உரிமை என்பது அவரவர் இஷ்டப்படி ஒரு மதத்தைப் பற்றியொழுகும் உரிமையைக் காத்துக் கொடுப்பதாகிறது.

முக்யமாகக் கவனிக்கவேண்டிய இன்னொரு விஷயம் என்னவென்றால் நம் ஹிந்து மதம் மதமாற்றத்தை அடியோடு கைக்கொள்ளாத மதம் என்பதாகும். மத மாற்றக் கொள்கை கொண்ட மதங்கள் வேண்டுமானால் பரஸ்பரம் மோதிக் கொண்டு கன்வெர்ட் பண்ணிக் கொண்டு போக ஏதாவது நியாயம் சொல்ல முடியுமோ என்னவோ? ஒரு மோதலுக்கும் சண்டைக்கும் போகாமல் தான் பாட்டுக்கு ஸாத்விகமாகத் தன் வழியைப் பார்த்துக் கொண்டிருக்கிற மதத்திடம், ஒரே பக்கத் தாக்குதலாக பிற மதங்கள் மத மாற்றம் செய்வதென்பது நீதி நியாயங்களில் கொஞ்சமும் சேராது.

ஆகையினால் மதமாற்றம் செய்வதே தங்கள் மதக் கொள்கைகளில், மத உரிமைகளில் ஒன்று என்று ஒருத்தர் சொல்வதற்கு அரசாங்கம் ஒப்புக்கொள்ளாமல் அதைத் தடை செய்வதாகச் சட்டம் போட வேண்டியது அவசியமாகும்; தேசத்தின் ஆத்ம க்ஷேமத்தையும், அமைதியையும், ஒழுங்குப்பாட்டையும் உத்தேசித்து இது மிகவும் அவசியமாகும்.

Koviloor Digital Library

இருந்து அப்புறச்சமயிகளின் பிரசாரத்தால் அச்சமயங்களுக்கு மாறியோரைத்தான் அத் தலைவர்கள் மீண்டும் தாய்ச் சமயத்திற்கு மாற்றினர் என்பதேயாம்.

பிற்காலங்களிலோ ஹிந்து மதத் தலைவர்கள் அவ்விரு புற மதங்களில் தலைமுறைகளாக இருந்துவந்த ஆதி ஹிந்துக்களை மீண்டும் தாய்ச் சமயம் மாற்றுவதில் ஈடுபடவில்லை. ஹிந்துக்களில் புதிய தலைமுறையினர் அம்மதங்களுக்கு இழுக்கப்படுவதை மட்டுமே தடுக்க முயற்சி செய்யலானார்கள்.

கவனத்திற்குரிய ஒன்றுண்டு. யாதெனில், இந்நாட்டிலேயே தோன்றிய பவுத்த-சமண சமயங்களுக்கு வேறாகப் பிறநாட்டுச் சமயத்தினருக்கும் கிறிஸ்து சமயம் தோன்றியதற்கு முன்பிருந்தே, அலெக்ஸாந்தர் காலத்திலிருந்து நம் நாட்டுடன் தொடர்பு உண்டாகி, அவர்கள் அரசியல் ரீதியிலும் வாணிப ரீதியிலும் இங்கு குடியேறினரெனினும் அவர்களை ஹிந்து சமயத்திற்கு மாற்ற ஹிந்துக்கள் எண்ணியதுகூட இல்லை. பின்னாளில் முசல்மான்களும் கிறிஸ்துவர்களும் இங்கு பெருமளவில் பிரவேசித்து, அதோடு நில்லாது, ஹிந்துக்களை வலிவுடனேயே மத மாற்றம் செய்தபோதுங்கூட, பிறப்பாலேயே அப்பிற மதத்தாராக இருந்தோரை ஹிந்துக்களாக மாற்ற ஹிந்துக்கள் எண்ணவில்லை. அதனினும் குறிப்பிடத்தக்கதாக, அப்பிற மதங்களை ஏற்கெனவே தழுவிவிட்ட ஹிந்துக்களைக்கூட மீண்டும் தாய்மதம் மாற்றாமல் புதிதாக மேன்மேலும் ஹிந்துக்கள் அம் மதங்களுக்கு இழுக்கப்படுவதைத் தடுப்பதற்காக மட்டுமே எதிர்ப் பிரசாரம் செய்தனர்.

கருத்தில் கொள்ளத்தக்க மற்றோர் அம்சம் உண்டு. யாதெனில், பொதுவாக ஹிந்து சமய மன்னர்கள் யாவரும் அந்த எல்லாப் புறச்சமயிகளும் அவரவரது ஆலயங்களை

Koviloor Digital Library

இங்கு எழுப்பிக் கொள்ளத் தாராளமாக அநுமதித்தனர்; அவர்களில் பலர் சமய சமரஸத்தில் மேலும் ஒரு படி சென்று அப்புறச் சமய ஆலயங்களுக்கு மானியம் முதலியன அளித்தனர்; இன்னும் சில மன்னர்களோ தாங்களே புறச் சமயங்களுக்காக ஆலயங்கள் எழுப்பித் தந்துமிருக்கின்றனர்.

மொத்தத்தில், ஹிந்துக்கள் தாமாக offensive-ல் எதிர்த்துச் சென்று தமது சமயத்திற்கு ஆள் சேர்த்ததே கிடையாது. மேன்மேலும் தம் மதத்தினரின் சங்கியை சிதைவுறாமல் தடுக்கும் தற்காப்பே (defensive-ஏ) அவர்கள் செய்தது.

ஹிந்து சமூகத்தினர் பழங்காலங்களில் பெருமளவில் செய்ததும், தற்காலத்தில் சிறிய அளவில் செய்ய ஆரம்பித்திருப்பதும் என்னவெனில் அம் மதத்திற்கு முன்னர் ஏற்பட்டிருந்த எதிர்ப்பை எதிர்த்துச் செய்யும் புனர்-மதமாற்றம் (re–conversion) தானேயன்றி, பிற மதத்தினராகவே இருப்போரை எதிர்த்துத் தம் மதத்திற்கு மாற்றம் (conversion) செய்வதல்ல.

இந்த அம்சத்தில் பழங்காலத்தில் செய்ததற்கும் இன்று செய்ய ஆரம்பித்திருப்பதற்கும் மாறுபாடொன் றுண்டு. அன்று பாரதத்திலேயே தோன்றிய பிற சமயங்களுக்கு (பவுத்த-சமண மதங்களுக்கு) மாற்றப் பட்டோரை மீண்டும் ஹிந்து சமயத்திற்கு மாற்றினர். இன்று வெளிநாடுகளைச் சேர்ந்த பிற சமயங்களுக்கு அண்மைக் காலத்தில் மாற்றப்பட்டோரை ஹிந்து சமயத்திற்கு மாற்ற முயலப்படுகிறது. இம்மாறுபாட்டுக்குக் காரணம்: இங்கேயே தோன்றிய பர சமயங்களில் சரித்திரத்தின் போக்கில் இந்நாட்டில் பவுத்தம் எடுபட்டேவிட்டதெனுமளவுக்குச் சுருங்கிவிட்டது.* சமணமோ ஹிந்து மத அம்சங்களில்

*டாக்டர் அம்பேத்கர் போன்றோர் பவுத்தத்திற்கு ஹரிஜனங்களை மாற்றத் தொடங்கியதற்கு முன்பு கூறியது.

Koviloor Digital Library

பலவற்றைத் தன்னிற் கொண்டு அதன் சகோதர மதம் போலாகிவிட்டது. மேலும் அவ்விரு மதத்தினர் இப்போது நமது நாட்டில் மதமாற்றத்தில் ஈடுபடவுமில்லை. மறுபுறத்தில், வெளிநாட்டுச் சமயங்களைச் சார்ந்தோரின் மதமாற்ற நடவடிக்கைகளோ இன்றும் தீவிரம் குன்றாமலே நடைபெறுகின்றன.

மீண்டும் கவனித்தற்குரிய விஷயம், இத்தகைய நிலவரத்திலுங்கூட ஹிந்துக்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் முசல்மான்களாகவும், கிறித்துவர்களாக வும் இந்நாட்டிற்கு வந்தோரின் வம்சத்தினரை ஹிந்துக் களாக மாற்றுவதல்ல; ஹிந்துக்களிலேயே சில தலைமுறை களுக்கு முன் அப் புற மதங்களுக்கு மாறியோரின் வழி வந்தோரைக்கூட மீண்டும் ஹிந்துக்களாக்குவதற்கும் அல்ல. அண்மைக் காலத்தில் அவற்றுக்கு மாற்றப்பட்டோரை மீண்டும் தாய் மதத்திற்கு மாற்றுவதற்கே முயலப்படுகிறது.

மதத் தொடர்பில்லாத உபாயங்கள்; கடும் தண்டனை விதித்தல் வேண்டும்

இதுவரை மதச்சுதந்திரம் பற்றிக் கூறியதெல்லாம் மத விஷயமாகவே பிரசாரம் செய்வது குறித்துத்தான். ஆனால் சரித்திரம் நிகழ்கால நடைமுறையில் காட்டியிருப்பதிலி ருந்தோ, தவறான **நோக்கம் கொண்ட மதப் பிரசாரம்** என்பதைவிடவும் மிகவும் தவறாக, **மதத் தொடர்பே இல்லாத உபாயங்களாலும்** (உபாயங்களாலேயே அதிக அளவில் என்றும் கூறலாம்) மதமாற்றம் செய்வதாக ஏற்பட்டிருக் கிறது. எந்தச் சமுதாயத்திலும் அறிஞர்களாகவும், அநுபவி களாகவும் ஆய்ந்தோய்ந்து பார்க்க அறியாதவர்களாக உள்ளோரே மிகப் பெரும்பாலாராயிருப்பதற்கேற்பவே ஹிந்து சமுதாயத்திலுமுள்ள அப்படிப்பட்ட பாமர மக்கள் இம்முறைகளால்தான் கூட்டம் கூட்டமாக மதமாற்றம் கண்டுள்ளனர்.

Koviloor Digital Library

இவ்வுபாயங்கள் இரண்டு வகையானவை. இரண்டும் மத அம்சங்களை விளக்கி அவற்றால் பிற மதத்தினருக்கு அதில் சுயமான பற்றுதல் ஏற்படுத்தாதவையே.

ஒன்று பலவந்தம்: மிரட்டி உருட்டிக் கட்டாயக் கெடுபிடியால் மதமாற்றம் செய்வது. ஒரு மதஸ்தரின் ஆட்சி ஏற்படுகையில் பிற மதஸ்தருக்கு வரி விதிப்பது போன்ற நடவடிக்கைகளும் இப்பலவந்தத்தைச் சேர்ந்தனவே.

இரண்டாவது, வசிய உபாயம்: கல்வியளிப்பது, நோய்ப் பிணி தீர்ப்பது, ஏனைய சமூக நலன்களைச் செய்வது ஆகியவற்றை மத ஸ்தாபனங்களின் மூலம் செய்து, உதவி பெறுவோருக்கு உதவி செய்வோரிடம் ஒரு கடப்பாடு உண்டாக்கி, அதை நேர்முகமாகவோ சாதுரியமாகவோ எடுத்துக்காட்டி மதமாற்றம் செய்வது.

இவை யாவற்றினும் கேவலம், லஞ்சமாகப் பொருள் கொடுத்தே ஒரு மதத்தரை வேறு மதத்துக்கு மாற்றுவது.

பலவந்தம், வசியம் ஆகிய இவ்விரண்டுமே பொய்ப் பிரசாரத்தைவிடவும் தவறான வஞ்சகச் செயற்பாடாக இருப்பதால் சட்டபூர்வமாகப் பெருங்குற்றமாக்கப்பட்டு அவற்றுக்குக் கடும் தண்டனை விதிக்க வேண்டும்.*

---

*இவ்விஷயம் குறித்து ஸ்ரீசரணர் வேறொரு சமயத்தில் பின்வருமாறு கூறினார்:

பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, அநாதாச்ரமம் முதலான ஸேவா ஸ்தாபனங்கள் என்று வைத்து, அதுகளின் வழியாகத் தங்கள் மதத்துக்கு நம்முடைய மதஸ்தரை மற்றவர்கள் நைஸாக மாற்றுகிறார்கள் என்று ஆக்ஷேபித்தால், ‘இதைச் சமாளிக்க ஹிந்துக்களான நாமும் ஒன்று செய்யலாம், அப்படிச் செய்தால் ஸாத்வீகமாகவே மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்துவதாகிவிடும்’ என்று சில பேர் ஒரு யோஜனை சொல்கிறார்கள். என்ன யோஜனை என்றால் ஹிந்துக்களும் அதே மாதிரிப் பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி, மற்ற ஸேவா ஸ்தாபனங்கள் ஆகியவற்றை அமைக்கவேண்டும் என்பதுதான்.

(தொடர்ச்சி, அடுத்த பக்கம்)

Koviloor Digital Library

பிறிதொன்றும் உண்டு. ஒரு பிரஜையின் மதச் சுதந்திரம் என்பது அந்நபர் சுதந்திரமாகச் சுய விருப்பத்தில்

(முன் பக்கத் தொடர்ச்சி)

இப்படிச் சொல்பவர்கள் இரண்டு விஷயங்களைக் கவனிக்காமல் பேசுகிறார்கள். ஒன்று, உபகண்டமாக விரிந்து பரவியிருக்கும் இந்த தேசத்தில் அந்தப் பிற மதஸ்தர்கள் அநேகமாக ஊருக்கு ஊர் ஸ்கூல், கொஞ்சம் பெரிய ஊர்களிலெல்லாம் ஆஸ்பத்திரிகள், அதைவிடப் பெரிய ஏராளமான ஊர்களில் காலேஜ், அநேகப் பெரிய டவுன்களிலும் ஸிடிகளிலும் ராஜாங்கத்தால்கூட முடியாத அளவுக்குப் பெரிய பெரிய ஆஸ்பத்திரிகள் என்று வைத்திருக்கிற மாதிரி நாமும் ஆயிரம், பதினாயிரக் கணக்கில் வைக்கவேண்டுமானால் அதற்கு எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் வேண்டியிருக்கும் என்பதை மேற்படி யோஜனைக்காரர்கள் எண்ணிப் பார்த்ததாகவே தெரியவில்லை. அவர்களுக்குப் பணம் கொட்டிக் கிடக்கிறது. ஸர்க்கார் கஜானாவைவிட ஜாஸ்தியாகத் திறந்துவிட அவர்களுக்கு 'ஸோர்ஸ்'கள் இருக்கின்றன. ஏழை இந்தியாவில் நம்முடைய ஹிந்து சமூகத்தாரிடமிருந்து அதில் சதாம்சம், ஸஹஸ்ராம்சம் கூடத் திரட்ட முடியுமா என்பது கேள்விதான். இப்போதைவிட நம் மத ஸமுதாயத்தாருக்கும் தீவிர ஸ்வமதாபிமானம் ஏற்பட்டு அவர்கள் வயிற்றை இறுகக் கட்டிக்கொண்டு அள்ளிக் கொடுத்தாலுங்கூட அந்தப் பிற மதஸ்தர்களோடு போட்டி போட நம்மால் ஆகவே ஆகாது; அவர்களுக்கு எங்கேயோ தூரத்தில்தான் நிற்கமுடியும்.

மேலே சொன்ன ஸமூஹப் பணிகள் தவிர, லஞ்சமே கொடுத்து ஆள் வாங்குவதற்கு இந்த யோஜனைக்காரர்கள் என்ன மாற்று சொல்கிறார்கள்? எலெக்ஷனில் ஒவ்வொரு கட்சியும் லஞ்சம் கொடுக்கிற அநியாயமும், ஜனங்கள் பல கட்சிகளிலிருந்தும் வாங்கிக்கொண்டு ஏதோ ஒன்றுக்கு வோட்டுப் போடுகிற அநியாயமும் நடக்கிற கிரிசை கெட்ட நிலைமைக்கு மதத்தையும் இழுத்து விடவேண்டும் என்கிறார்களா?

யோஜனைக்காரர்கள் கவனிக்காத இரண்டு விஷயங்களில் இது ஒன்று. இன்னொன்று இதைவிட 'பேஸிக்'கானது, அடிப்படையானது.

(தொடர்ச்சி, அடுத்த பக்கம்)

Koviloor Digital Library

ஒரு மதத்தைத் தழுவியிருப்பதற்கான உரிமையாகும். இது அவரது உள்ள உயர்வு என்ற மிகவும் உத்தமமான விஷயம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

முதலுக்கே இந்த ஸமாசாரம் அடியோடு தப்பு; அதனால் அந்தத் தப்பை நாமும்தான் பண்ணுவோம் என்பது அர்த்தமேயில்லாதது என்கிறதுதான் நான் சொல்ல வருவது. இப்போது நடக்கிற தப்பை, மற்றவர்கள் பண்ணாமல் நிறுத்துவதுதான் செய்ய வேண்டிய காரியமே தவிர அதையே நாமும் காப்பியடித்து விருத்தி செய்கிறது அல்ல என்கிறதே விஷயம்.

அடிப்படையாகவே கேட்கவேண்டிய கேள்வி, ஸ்கூல்–ஆஸ்பத்திரி–ஆர்ஃபனேஜ் ஆகியவற்றை ஒருத்தர் ப்ரயோஜனப் படுத்திக் கொள்வதற்கும் அவருடைய மதத்துக்கும் என்ன ஸம்பந்தம்? வியாதி தீர்வதற்காக ஒருத்தன் ஆஸ்பத்திரிக்குப் போகிறான். இந்த லோக வாழ்க்கையில் ஸம்ரக்ஷணை பெறுவதற்காக தீனர்கள் ஆர்ஃபனேஜில் சேருகிறார்கள். படித்து உத்தியோகம் பார்த்து ஸம்பாதிப்பதற்காகவே ஸ்கூலுக்கும், காலேஜுக்கும் போகிறவர்கள் போகிறார்கள். இங்கேயெல்லாம் மதம் என்ற விஷயம் எங்கே வந்தது? தான் ஸரியான மதத்தில் இருக்கவேண்டும் என்று அதைத் தேடிக்கொண்டா ஸ்கூலுக்கும், ஆஸ்பத்திரிக்கும், அநாதாச்ர மத்துக்கும் போகிறவர்கள் போகிறார்கள்? ஆகையினால் இவற்றைக் காட்டி ஒரு மதத்துக்கு ஜனங்களை வசியம் செய்வதே அடியோடு தப்பு, அடிப்படையிலேயே தப்பு. தப்பு என்று லேசாகச் சொன்னால் போதாது. பெரிய குற்றம் என்றே சொல்ல வேண்டும். ஸமூஹப் பணிகளின் லக்ஷ்யம் ஸமூஹப் பணியேதான். அந்தப் பணிகளைக் காட்டி, ஆனால் அப்படிக் காட்டுபவர்கள் அதை அதற்கு ஸம்பந்தமேயில்லாத மதமாற்றம் என்ற வேறே ஒரு லக்ஷ்யத்துக்கு உபாயமாக — வேறே ஒரு end–க்கு means–ஆக — ஆக்கும்போது ஸமூஹப் பணி, ஸமயப் பணி ஆகிய இரண்டு உன்னதமான விஷயங்களையும் ஏமாற்று வித்தையாக, மோசடியாக ஆக்குவதாக முடிகிறது. மத ஸம்பந்தமில்லாத ஸமூஹ காரியங்களை மத மாற்றத்துக்கு — அல்லது தாய் மதத்திலேயே ஒருத்தரை இழுக்கப்

(தொடர்ச்சி, அடுத்த பக்கம்)

Koviloor Digital Library

குறித்ததாகும். உள்ள உயர்வு கண்ட பிரஜைகளால்தான் ஒரு நாட்டின் நல்வாழ்வே என்பதால் அதற்கு ஊறு விளைவித்தால் அது சாதாரணக் குற்றங்களில் சேராமல்

(முன் பக்கத் தொடர்ச்சி)
பண்ணுவதற்கு — வசியோபாயமாக்கிக் கொள்வதை அடியோடு ஒத்துக் கொள்வதற்கில்லை.

ஆகையினால் என்றைக்காவது நம் ஹிந்து ஸமுதாயமும் குபேர ஸமுதாயமாக ஆனாலுங்கூட இந்த இரண்டு வேறு விஷயங்களைக் குழப்பித் திரிசமன் செய்கிற பாபம் நமக்கு வேண்டவே வேண்டாம்; அந்தத் திசையில் நம் எண்ணமே போகப்படாது என்பதுதான் என் அபிப்ராயம். அடிப்படையாகவே விஷயம் தப்பு, வேரின் அடியிலேயே விஷம் இருக்கிறது என்னும்போது பிறத்தியார் செய்கிறார்களே என்று ஏட்டிக்குப் போட்டியாய் நாமும் அப்படிச் செய்யவேண்டும் என்பது அறியாத ஜனங்களுக்கு மோசடி, வஞ்சனை இத்யாதிகளை நாமும் இழைக்கிற மஹா பாபத்தில்தான் நம்மைக் கொண்டு சேர்க்கும்.

ஸமூஹப் பணி அவசியம் செய்யவேண்டிய ஒன்றாகையால், இப்போது நாம் வசதிக்கு உச்சமாக எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்கு ஸ்கூல்–காலேஜ் வைப்போம்; ஆஸ்பத்திரி கட்டுவோம், அநாதையில்லங்கள் ஸ்தாபிப்போம். ஈச்வரனை மறந்து எதுவும் கிடையாது. அதனால் நாம் வைக்கிற இந்த ஸ்தாபனங்களிளெல்லாம் பிரார்த்தனை, பஜனை எல்லாமும் வைப்போம். அவன்தானே அத்தனை கல்விக்கும் மூலமும் முடிவும்? அவன்தானே வாஸ்தவத்தில் மருந்துக்கு மேல் மருந்தாக வியாதியை ஸ்வஸ்தப்படுத்தி உயிர் கொடுக்கிறவன்? அவன் தானே அநாத ரக்ஷகனும்? அதனால் அவனை நாமும் மறக்காமல், நம்முடைய பணியால் ப்ரயோஜனமடைபவர்களும் மறக்காமலிருக்கச் செய்ய வேண்டிய எல்லாமும் செய்வோம். ஆனால் இதை ஒரே நீட்டாக நீட்டி, எல்லை மீறிய துராக்ரஹ துர்பிரவேசம் என்கிற அளவுக்குப் போய் மத ரக்ஷணை என்கிற லக்ஷ்யத்துக்கு இதெல்லாந்தான் உபாயம் என்று ஒரு நாளும் கொண்டுவிட வேண்டாம். பிறத்தியாருடன் போட்டி மனப்பான்மையில் இப்படிப் பண்ணிப் பரம தர்மமாக இருக்கிற ஒன்றை அதர்மமாக்கிவிட வேண்டாம். (தொடர்ச்சி, அடுத்த பக்கம்)

Koviloor Digital Library

பெரிய குற்றங்களிலேயே சேரும். மதச் சுதந்திரம் என்பது அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அங்கீகாரம் பெற்றுவிடும் போது அச்சுதந்திரத்தில் குறுக்கிடுவதும் மிகப்பெரும் குற்றமாகும் என்ற காரணத்தையும் கருத்தில் கொண்டால்,

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பிறத்தியார் அதர்மத்தில் போனாலும் நாம் தர்மத்திலேயே போய் அவர்களையும் தர்மத்துக்குத் திரும்பும்படிச் செய்வதுதான் நம்முடைய பெரிய ஹிந்து நாகரிகத்துக்கு ஏற்றது. நேர்மாறாக, அவர்கள் பண்ணும் அதர்மத்தை நாமும் போட்டி போட்டுக் கொண்டு 'அடாப்ட்' பண்ணிக்கொள்வதை ஸ்வப்பனத்திலும் நினைக்க வேண்டாம்.

மொத்தத்தில் ஏற்படுவது என்னவென்றால், நான் சொன்ன அந்த யோஜனைக்காரர்கள் நல்ல உத்தேசத்தின் மேலேயேதான் சொல்கிறார்களென்றாலும் தீர்க்கமாகச் சிந்தனை பண்ணவில்லை என்றே ஆகிறது.

ஆக, இரண்டு விஷயம் சொன்னேன். பிற மதஸ்தர் மாதிரியே நாமும் ஸமூஹப் பணி பண்ணி நம் மதஸ்தருக்கு வேலி போட்டுக் காப்பாற்றலாம் என்கிற யோஜனை, அவர்களுடைய நிதி வசதியையும் நம்முடைய வசதியின்மையையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது யதார்த்தத்தில் ஸாத்தியமேயில்லை என்பது ஒன்று. இன்னொன்று, வெளியிலே ஸமூஹப் பணி என்று ஒன்றைக் காட்டிவிட்டு உள்ளுக்குள்ளே அதில் மத விஷயத்தை ஒளித்துப் பண்ணுவது மோசடிக் குற்றம், பாபம் என்பதால் அடிப்படையிலேயே, அடிவேரிலேயே தப்பானது; இதனால் ஸமயப் பணிக்கும் த்ரோஹம், ஸமூஹப் பணிக்கும் த்ரோஹம், பகவானுக்கும் த்ரோஹம், ஜனங்களுக்கும் த்ரோஹம் பண்ணியதாகும் என்பது.

ஆகையினால் நிஜமான விமோசனம், மத மாற்றத்தையே சட்டப்படிக் குற்றமாக்குவதுதான். அதாவது ஒருத்தன் தானாக இஷ்டப்பட்டு மதம் மாறுவது என்றில்லாமல், ஒரு மதஸ்தர் பிரசாரமாகப் பண்ணியும் வசியோபாயம் அல்லது தண்டோபாயம் [வன்முறை] மூலமும் பிற மதஸ்தரைத் தங்கள் மதத்துக்கு மாற்றுவதற்குச் சட்டபூர்வமாகத் தடை விதிக்க வேண்டும்.

Koviloor Digital Library

பொய்ப் பிரச்சாரம், பலவந்தம், வசிய உபாயம் ஆகியவற்றால் மதமாற்றம் செய்வது எவ்வளவு பெரிய குற்றம் என்பது தெரியும். எனவே அதற்குரிய கடுமையான தண்டனை விதிக்கவேண்டும். ஒருவர் தண்டனைக்காக அஞ்சியே குற்றத்தில் புகாதபடி தடுப்பதான Deterrent punishment என்ற கடுந்தண்டனைக்கான குற்றமாகவே அது சட்டபூர்வமாக ஆக்கப்பட வேண்டும்.

ஆனால் வசிய உபாயத்தால் மதமாற்றம் செய்யப் படும்போதோ, அதைக் கண்டுபிடித்து நிரூபிப்பது கடினமாக இருக்கும் எனத் தெரிய வருகிறது. சுய மதத்தினர் மாத்திரமின்றி சகல மக்களும் நல்வாழ்வு பெற உதவி புரிய வேண்டுமென்று தமது மதம் சொல்வதால், அந்த அடிப்படையிலேயே ஒருவரது மதத்தைக் கருதாது அனைவருக்கும் சமூக நலப்பணிகள் செய்வதாக இந்த உபாயத்தைக் கைக் கொள்வோர் கூறித் தப்பித்துக் கொள்ள முடியும். என்றாலும் உதவி பெற்றோர் எத்தகையோர் என்பதை, அவர்களின் சமூகநிலை, அறிவுநிலை, அவர்களில் மதம் மாறியோரின் எண்ணிக்கை ஆகியவற்றைத் தீர்க்கமாக அலசிப் பார்த்து ஆழ்ந்து விசாரணை செய்வதால் உண்மையைக் கண்டுபிடித்து விடலாம். நாட்டினரின் மனவளர்ச்சியில் தனது பொறுப்பை ஓர் அரசாங்கம் உணர்ந்திருந்தால், அது இந்தக் குற்றத்தையும் கொள்ளை, கற்பழிப்பு முதலிய குற்றங்களோடு சேர்த்து வைத்து முக்கியமான கவனம் தந்து தீர்க்கமான புலன் விசாரணை செய்தல் வேண்டும். உள்ளவுயர்வுக்கே ஊறு விளைவித்து, ஒருவரது கொள்கை நோன்பைக் குலைப்பது கொள்ளையடிப்பதோடும் கற்பழிப்பதோடும் சேர்த்து மதிக்கப்பட வேண்டியதே யாகும்.

Koviloor Digital Library

மதமாற்றம் இருக்கும்வரை தாய்மதத்திற்கு மாற்ற அநுமதி

சட்டம் இயற்றிவிடுவதால் மட்டுமே எந்தக் குற்றமும் நிகழாமல் தடுத்து நிறுத்திவிட முடிவதில்லை. எல்லா நாடுகளிலும் எல்லாக் குற்றங்களும் நடந்து கொண்டு தானிருக்கின்றன. அவ்வாறு சுய விருப்பமொன்றின் மீது மட்டுமேயில்லாத மதமாற்றக் குற்றங்களும் நடைபெறு மாயின், அவை நடைபெறும் வரையில் அவற்றுக்கு எதிர் நடவடிக்கையாகத் தாய் மதத்திற்கே மீண்டும் மதம் மாற்றுவதைக் குற்றமாகக் கருதாமல் அரசாங்கம் அநுமதிக்க வேண்டும்.

சுய விருப்பத்தின் மீது எந்த ஒரு பிரஜையும் எந்த ஒரு மதத்தையும் தழுவியிருக்கச் சுதந்திர உரிமையைச் சட்டபூர்வமாக ஓர் அரசாங்கம் அளிக்கும்போது, கையோடு கையாக, அச்சுதந்திரத்திற்கு ஊறு பயப்பதான மத மாற்றத்தைச் சட்டப்பூர்வமாகத் தடுப்பதில் தனக்குள்ள பொறுப்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதாலேயே, இவ்விஷயம் அதற்குரிய முக்கியமான கவனத்தைப் பெறாமலிருந்துவிடக் கூடாதெனக் கருதி ஒரு மதத்தின் தலைமைப் பீடங்களில் ஒன்றில் இருப்பவரின் கடமையாக இவ்வளவு விரித்துக் கூறினோம்.

இதனால், எல்லா மதங்களுக்குமே சுதந்திர பாரத அரசாங்கம் ஒருபோன்ற ஆதரவளிக்க வேண்டும் என்ற கொள்கையை நாம் ஆட்சேபிப்பதாக அர்த்தமாகாது. உரிய முறையில் அவ்வாதரவு நல்கப்படுவதை வரவேற்கவும் வலியுறுத்தவுமே செய்கிறோம். அந்த 'உரிய முறை'யையே நமது ஆலோசனைக்கு எட்டியபடி விளக்கினோம்.

Koviloor Digital Library

இந்தியாவின் உயிர்நிலையே மதமும் ஆன்மிகமும்தான்

நவீன சீர்திருத்தக்காரர்களும் போற்றும் பல கருத்துக்களைக் கொண்ட விவேகானந்தர் போன்றோரும், அன்னி பெசன்ட் போன்ற மேல்நாட்டு நல்லறிஞர்களுங் கூட இந்தியாவின் உயிர்நிலையே மதத்தை மையமாகக் கொண்ட அதன் ஆத்மிகந்தான் என்றே வலியுறுத்தியிருக் கின்றனர். அதனை மறந்து, மற்ற துறைகளில் இந்நாடு எத்தனை முன்னேற்றம் கண்டாலும் அது உயிரிழந்த சவத்திற்குச் செய்யும் அலங்காரமாகத் தானிருக்கும் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர். மக்களின் உலகவியல் ஆசைகள் வெறித்தனமாக வலுக்காதவாறு ஹிந்து மதம் எனப்படும் சநாதன தர்மத்தினால் அவர்களுக்கு ஆன்மிகவியலை மதா சரணைகளாகவும் தத்துவக் கோட்பாடுகளாகவும் கொடுத்து, அவர்களது உலக வாழ்வு சம்பந்தப்பட்ட அனைத்தையும்கூட ஈசனை மையம் கொண்ட சடங்குகளாகப் புனிதப்படுத்தியளித்து, உலகியலுமே ஆன்ம வியலுக்கு உபாயமாகுமாறு உயர்த்திச் சிறப்புச் செய்து ஆதி காலத்திலிருந்து உலக நாடுகளிடையில் தனிச் சிறப்புப் பெற்றது நமது பாரத நாடு. மதவியலின் மூன்று அங்கங்களில்* ஒன்றான தர்மம் என்பதை விரித்துக் கூறும் சநாதன தர்ம சாத்திரங்கள், ஒரு மானுடன் செய்யக்கூடிய சகல காரியங்களுமே ஆன்ம நலனுக்குப் பயனாகும்படியாக அவை ஒவ்வொன்றுக்கும் விதி வகுத்துக் கொடுத்துள்ளன. நல்லொழுக்கமாம் அத்தர்மம் ஈசனைச் சுற்றியே படர்ந்திருப்பதாகவும் ஆக்கிக் கொடுத்திருக்கிறது. இவ்வழி முறைகளையே இந்நாட்டு மக்கள் பூர்வ காலத்திலிருந்து பற்றியொழுகி வந்திருப்பதால்தான் பிற நாட்டின் மேன் மக்களும் ஒப்புக்கொண்டு பாராட்டுமாறு இந்நாட்டிலேயே

*"நல்லொழுக்கமாம் தர்மம், தெய்வபக்தி, ஆத்ம சிந்தனை" என்று உரையின் தொடக்கப் பகுதியில் கூறப்பட்ட மூன்று.

Koviloor Digital Library

அதிக பக்ஷமாக மஹான்களும் மத நூல்களும் தத்துவ சாஸ்திரங்களும் தோன்றி, பிற நாட்டுப் பூர்வ காலப் பெரியோர்களும் அவற்றிலிருந்து ஆன்மிக உயர்வு கண்டு வந்திருக்கின்றனர். இவற்றின் துணை கொண்டு தத்தமது சூழ்நிலைகளுக்கேற்ற சித்தாந்தங்களை அவர்கள் உருவாக்கியுள்ளனர். இவ்வாறாக, பிற நாடுகளின் உலகியற் போக்கைச் சமனப்படுத்தும் நாடாகவும் நமது நாடே திகழ்ந்திருக்கிறது. இன்றைக்கும் மேநாட்டின் உலகியல் சுக சாதனங்கள் யாவற்றையும் ஆண்டநுபவித்தும் வாழ்க்கையின் நிறைவைக் காணாத அந்நாடுகளின் பக்குவம் பெற்ற நன்மக்கள் நம் நாட்டுக்கே வந்து ஆன்மவியலில் ஈடுபட்டு அந்நிறைவை எய்துவதைக் கண் கூடாகக் காண்கிறோம்.

இவ்வாறு சிற்றின்ப உலகியலிலிருந்து பேரின்ப ஆன்ம வியலுக்கு வழிகாட்டியாக உலக நாடுகளுக்கு உதவி புரிவதையே தனது தனிப்பெருமையாகக் கொண்ட நமது நாட்டில் அந்த ஆன்மவியலை நாமே புறக்கணித்து மேநாடுகளின் உலகியல் முன்னேற்றத்தில் மோஹித்து அதன் பின்னேயே ஓடும் பேதைமையை மெல்ல மெல்லப் பற்றிக்கொண்டு சுதந்திரம் பெறும் இச்சமயத்தில் அது முற்றியும் விட்டது.

இந்தியாவில் மத உணர்வின் நலிவு: ஆயிரம் ஆண்டு வரலாறு காட்டுவது

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே நாம் அந்நியராட்சிக்கு ஆளாகத் தொடங்கினோம். அப்போது முதலில் வந்தவர்கள் ஆசியாவைச் சேர்ந்த பிற நாட்டவர் தாம். அவர்களிலேயே பல பிரிவினரின் ஆளுகையைப் பல அளவுகளில் பெற்று, முடிவாகப் பல காலம் முற்றிலுமே அவர்களின் ஆளுகை அல்லது படையெடுப்புக்கு ஆளாகும் நிலை நம் நாட்டிற்கு வந்தது. விளைவாக ஆயிரமாண்டுக்கு

Koviloor Digital Library

முன்வரையில் உலகுக்கே வழிகாட்டியாக மதாசரணை களைப் பற்றுதலுடன் பின்பற்றிய ஹிந்துக்களின் நாடாகவே இருந்த நமது நாட்டில், பிற்பாடு அவ்வாசிய நாட்டு அந்நியர்களில் பலர் ஹிந்து மதத்தை எதிர்த்து ஹிம்சை வழியில் செய்த நடைமுறைகளினால் ஹிந்துக்கள், குறிப்பாக இந்நாட்டின் வடபுலத்தினர் தங்களது மதாசாரங் களை நிர்பயமாகவும், நிச்சிந்தையாகவும் பின்பற்ற முடியாமலாயிற்று. இது இப் பாரத நாட்டுக்கேயான தனிப் பெருமையாக அதற்கு ஜீவ சக்தியூட்டி வந்த ஆத்மிக கலாசாரத்தை நலிவுபடுத்தத் தொடங்கியது. அதோடு காலம் செல்லச் செல்ல, இங்கு ஆட்சிக்கு வந்துவிட்ட அந்த அந்நியரின் வழக்குகள், கலை, உடை முதலியவற்றிலும் சிலவற்றை ஹிந்துக்கள், குறிப்பாக இந்நாட்டின் வட புலத்தினர், தமதாக ஏற்றனர். எனினும் இத்தனையிலும் சற்று திருப்தி தரும் ஓரம்சமாக, இவற்றால் ஹிந்துக்கள் தமது வாழ்க்கை முறை முற்றிலும் அந்த ஆசிய நாட்டு அந்நிய ஆட்சிக்காரரர்களுடையதன் பிரதியாக (copy–ஆக) ஆகிவிடாமலே, தமது தனித்தன்மையை க்ஷீணித்த தசையிலேனும் காத்துக் கொண்டனர். இதற்கு முக்கியமான காரணம், அவர்களை ஹிந்துக்கள் நாகரிகத்தில் தம்மைவிட மேம்பட்டவர்களாக எண்ணாததுதான்.

இவ்வாறு எழுநூறு ஆண்டுகள் சென்றபின், கடைசி முந்நூறு ஆண்டுகளில் ஐரோப்பிய நாட்டு அந்நியர்கள் இங்கு மெல்ல மெல்ல ஆட்சி பிடிக்க ஆரம்பித்ததிலிருந்து தான் நிலைமை விபரீதமாகவே மாறலாயிற்று.

மேல் நாட்டினரின் மறைமுக சாமர்த்தியமும் இரு 'புரட்சி'களும்

சாமர்த்தியசாலிகளான அவர்கள், பெரும்பாலும் மறைமுகமாகவே தங்கள் காரியமாகிய ஆட்சி பிடிப்பதை

Koviloor Digital Library

யும், அது மாத்திரமின்றி நம் நாட்டின் உயிர்நிலையான மதவியலையே நாம் பின்தள்ளி, அவர்களது உலகியல் வலையில் பிடிபட்டு, வாழ்க்கை முறையை முற்றிலும் அவர்தம் பாணியிலேயே மாற்றிக்கொண்டு, அவர்களது ஊழிய வர்க்கமாக இருப்பதிலேயே பெருமைப்படுபவர் களாக ஆகும்படியும் பலவித சாதுரிய உபாயங்களால் வெற்றிகரமாக நடத்திக்கொண்டுவிட்டனர். தமது உலகியல் நாகரிகம் நம்முடைய ஆன்மிய நாகரிகத்திலும் மேம்பட்டது என நாம் மயங்குமாறு அவர்கள் செய்ய முடிந்ததே இதற்குக் காரணம். இதற்கு இரு 'புரட்சிகள்' உதவின.

அவர்கள் இங்கு வந்த காலத்தை அடுத்தே அவர்களது நாட்டில் பிரமிக்கத்தக்க நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஆரம்பித்தன. இப்போக்கு, நீராவிச் சக்தியில் பெரிய பெரிய இயந்திரங்களை இயக்கி வேக கதியில், குறைந்த பொழுதில் ஏராளப் பண்டங்களை உற்பத்தி செய்து, கைத்தொழிலாக நடந்த குடிசைத் தொழிலைப் பின் தள்ளி, ஆலைத் தொழில் என்பதைக் கொணர்ந்து தொழிற்புரட்சி என்ற Industrial Revolution-ல் பெருமித ஸ்தானம் பெற்றது. இதனால் ஏற்பட்ட 'புரட்சி' என்னவெனில், பெரும் ஆலைகளை நிருமாணித்து அவற்றில் ஏராளமான பண்டங்களைக் குறுகிய காலத்தில் இயந்திரங்களின் மூலம் உற்பத்தி செய்து கைத்தொழில்–குடிசைத் தொழில்களுக்கு அவசியமில்லாமல் செய்ததே.

சிறிய ஜனத்தொகையும், உலகியல் சுகபோக சாதனங்களிலேயே நாட்டமுள்ள மனப்பான்மையும் கொண்ட மேநாடுகளுக்கு அது நலன் பயக்கலாம். ஏனைய நாடுகளிலும் தங்களுக்குக் காலனிகள் பிடித்து, அவற்றிலிருந்து கச்சாப் பொருட்களைத் திரட்டி வந்து அவற்றைக் கொண்டு தங்களது ஆலைகளில் ஏராளமாக உற்பத்தி செய்து அதில் பெரும்பங்கை அக்காலனி

Koviloor Digital Library

நாடுகளின் தலையில் கட்டுவது இந்நாடுகளின் கொள்கையாதலாலும் இப்'புரட்சி' அவர்களுக்கு நற்பயனளித்தது. ஆனால் எளிய வாழ்க்கை – சீரிய சிந்தனை என்றும், சிறுகக் கட்டிப் பெருக வாழ்வது என்றும் உலகியல் சுகங்களை அத்தியாவசிய அதம பட்சத்திற்கே குறைத்து ஆத்ம பரிணாமத்திற்கே அதிக முக்கியத்துவம் தந்த நமது மாபெரும் ஜனத்தொகை கொண்ட பெரிய நாட்டின் உன்னத உள் நாகரிகத்திற்கு இப்'புரட்சி' பெருத்த ஹானியே உண்டாக்கியது. ஆயினும் நாமோ, தங்களது வியாபார லட்சியங்களுக்கு வெற்றி காணும் பொருட்டும், தங்களுக்கு அடிமைப்பட்டவர்களைத் தயார் செய்வதற் கென்றுமே அந்த ஐரோப்பிய அந்நியர்கள் செய்த சாமர்த்தியங்களில் — குறிப்பாக, அவர்கள் அளித்த கல்வி முறைத்திட்டத்தில் — மதிமயங்கி, நமது உள்நாகரிகத்தின் உயர்வை மறந்தோம். நவீன விஞ்ஞானத்தில் பின்தங்கி யிருந்த நாம் அத்துறையில் அவர்களது கண்டுபிடிப்பு களைக் கண்டு அவர்களையே நம்மைவிட நாகரிகத்தில் மேலோராகவும் முன்மாதிரியாகவும் மதித்து, அவர்தம் வெளி நாகரிகத்தையே நமக்கும் சுவீகரித்துக் கொண்டோம்.

போதாக் குறைக்கு இங்கிலாந்தின் தொழிற் புரட்சி யுடனேயே பிரெஞ்சுப் புரட்சி (French Revolution) எனப்படும் தனிமனித சுதந்திரப் புரட்சி கைகோத்துக் கொண்டு வந்தது. தவறான அரசாங்க அதிகாரக் கட்டுப் பாட்டிலிருந்து மனிதர் விடுதலை பெற வேண்டும் என்ற உத்தம லக்ஷியமானது அப்புரட்சியின் வரம்பற்ற போக்கால் சிதைந்து, அறத்தை நாட்டும் வழிமுறைகள், சட்ட-திட்டங்கள் முதலியவற்றின் நல்ல கட்டுப்பாட்டிலிருந்தும் விடுபட்டு அவரவரும் மனம் போனபடிச் செய்யும் சுதந்திரம் என்ற ஒழுங்கீனத்தில் கொண்டுவந்துவிட்டது. அதன்பின் இவ்வரம்பறியாத சுதந்திரப் போக்கு

Koviloor Digital Library

அம்மேனாட்டுச் சமுதாயத்தினர் எல்லோர் கருத்திலுமே சுவடு பதித்து, அவர்களுக்கிருந்த உலகளாவிய செல்வாக்கினால் ஏனைய நாடுகளிலும் பரவலாயிற்று. தலைமுறை தலைமுறையாக தர்மம், தெய்வம், பெரியோர் ஆகியோருக்குக் கட்டுப்பட்டு, இதன் வழி தத்தம் மனத்தையுமே கட்டுப்படுத்தி உலக ஆசைகளைக் குறைத்து ஆத்ம சத்தியத்தை நாடிய நம் மக்களும் மிகப் பரிதாபமாகப் புதிதே வந்த தான்தோன்றிச் சுதந்திரத்தால் கவரப்பட்டு அதற்குப் பலியாகலாயினர்.

இப்போக்குகள் முற்றிய நிலையில்தான் சுதந்திரம் வந்துள்ளது.

நம் முன் நிற்கும் பெரிய கேள்விக்குறி

இப்போது நாம் யாது செய்யப் போகிறோம்? நமது ஆத்மிக நாகரிகத்திற்குத் திரும்பி உலகியலில் எளியராகவும், உள்ள உயர்வில் பெரியவர்களாகவும் உலக நாடுகளிடையே தனி ஸ்தானம் பெற்ற ஒரே நாடாகி, அவர்களுக்கும் நல்வழி காட்டி உயர்வு பெற முயற்சி செய்யப் போகிறோமா? அல்லது நமது ஆன்மிக நாகரிகத்தை நாமே மனமறிந்து மிச்சசொச்சமும் பறிகொடுத்து, நமக்கு அரசியல் சுதந்திரம் கொடுத்து வெளியேறியவர்களின் உலகியல் நாகரிகத்திற்கே தொடர்ந்தும் அடிமைப்பட்டவர்களாக இருந்து, ஏனைய நாடுகளில் பின்தங்கிய ஒன்றாக ஓடிக்கொண்டிருக்கப் போகிறோமா? மனத்தை மிகவும் வியாகுலப்படுத்தும் பெரிய கேள்வியாக இதுவே இன்று எம் முன் நிற்கிறது.

பாரதம் மெய்யான சுதந்திர பாரதமாக இருக்கப் போகிறதா? அதாவது 'ஸ்வ-தந்திரம்' என்பதை இந் நாட்டுக்கென்றே சுயமாக ஏற்பட்ட வாழ்க்கை முறை என்ற உண்மையான பொருளில் கண்டு அநுபவிக்கப் போகிறதா? அல்லது மேநாட்டினரிடமிருந்து அரசியல் சுதந்திரம்

Koviloor Digital Library

பெற்றிருந்தும் இந்தியர் உடம்புக்குள் உள்ள மேநாட்டினரின் ஆவியாக நம்மவர்களே சட்டதிட்டங்கள் செய்து, அவர்களது கொள்கை, வாழ்க்கை முறை ஆகியவற்றுக்கே இனியும் நாட்டின் உயிரானது பரதந்திரப்பட்டிருக்கும் நிலைதான் வாய்க்கப்போகிறதா?

அவநம்பிக்கைச் சூழ்நிலை; காந்தியம் மேவாததன் விளைவு

நன்னம்பிக்கை தோன்றாத சூழ்நிலையாகவே உள்ளது. சுதந்திரப் போராட்டத்தில் தலைமை தாங்கி மஹாத்மா என்று பெயர் பெற்றவர் பாரத நாட்டிற்கேயான நாகரிகத்தில் ஆழ்ந்த பற்றுக்கொண்டு அதனையேதான் எடுத்துக் கூறியபோதிலும், அவரைப் பின்பற்றுவோராகத் தெரிபவர்களிலேயே ஒரு சிலரைத் தவிர ஏனைய தலைவர்கள் வேறுவிதமாக அபிப்பிராயப்படுபவர் களாகவே தெரிகின்றனர். சென்ற சில தலைமுறையாகவே அந்நிய வாழ்க்கைப் பாணி இங்கு வேரூன்றத் தொடங்கி விட்டதால், அது கப்பும் கிளையுமாக வளர்வதிலேயே மகிழ்ச்சி கொண்டவர்களாகத்தான் பொது ஜனங்களில் மிகப் பெரும்பாலோரும் உள்ளனர்.

எதிர்ப்பு நடவடிக்கைகளில் எப்போதுமே ஒருவித உற்சாகம் காட்டுவதுதான் மானுட இயற்கை. எனவே வெள்ளையரை எதிர்ப்பது என்ற அம்சத்தில் நமது மக்கட் சமுதாயம் முழுதும் மஹாத்மா எனும் பெரியவரைப் பின்பற்றியதும் (எதிர்ப்பில் உற்சாகம் கொள்கின்ற) அம் மனப்பான்மையில்தானென்று தோன்றுகிறது. சுதந்திரம் என்பதன் உண்மையான பொருளை அறியாது, நம்மைக் கட்டவிழ்த்து நம்மிஷ்டப்படிச் செய்ய தேச சுதந்திரம் உதவும் என்ற எண்ணத்திலேதான் பெரும்பாலோர் அவரைப் பின்பற்றியதெனத் தோன்றுகிறது. ஆனால், நமது வாழ்வு முறை நமது பிரத்தியேக நாகரிகத்திற்கு

Koviloor Digital Library

இசைந்ததாகவே இருக்கவேண்டும் என்ற அவரது கருத்துக்கு மக்கள் அவ்வளவாகச் செவி சாய்க்கவில்லை.

எனவே இனி நடக்க வேண்டிய இலட்சியத்தில் கவனம் காட்டப்படுமா என்று கவலையுறுமாறு உள்ளது.

நடக்கவேண்டியது, இன்று ஆட்சியதிகாரத்திற்கு வந்துள்ள தலைவர்கள் ஸெக்யூலரிஸத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு அதைத் தீவிரமாகச் செயலாக்கி, மதவியலுக்குச் சிறப்பான போஷணை கொடுத்து, மக்களது உலகியல் பிணிக்கு மாற்று மருந்து காண்பதேயாகும்.

'அரசு மதம்'

இங்கு ஒரு கருத்துத் தெரிவிக்க விரும்புகிறோம். ஒரு நாட்டின் பெரும்பான்மை மக்கள் பலகாலமாகப் பின்பற்றும் ஒரு மதத்தை State Religion என்பதாக அரசாங்கத்தின் மதமாக வைத்துக்கொண்டு, மற்ற எல்லா மதத்தினரும் அவரவருடைய மதத்தைப் பின்பற்றச் சம சுதந்திரமளித்து, அரசாங்கப் போஷணையில் ஏற்றத் தாழ்வின்றி சகல மதங்களையும் ஒன்றாக நடத்தும் ஆட்சி முறையும் உண்டு. நமது நாட்டில் இவ்வாறு ஹிந்து மதம் எனப்படும் சநாதன தர்மத்தையே முற்கால மன்னர்களில் மிகப் பெரும்பாலோர் அரசாங்க மதமாகக் கொண்டு, அவர்களில் ஓரிரு விதிவிலக்குகள் தவிர ஏனைய எல்லோரும், பிற மதங்களின் வளர்ச்சிக்கும் பேராதரவு கொடுத்து வந்திருக்கின்றனர். நவீன முன்னேற்றத்தில் முதலிடம் பெற்றதாகப் பெயரெடுத்த இங்கிலாந்து இன்றும் தனது மதாபிமானத்தில் பிறந்த தெய்வ நம்பிக்கையைக் காட்டுவதாக "God save the King" என்பதைத் தேசீய கீதமாகக் கொண்டுள்ளது. அது மாத்திரமின்றி, அவ்வரசரின் பல கடமைகளில் ஒன்றாக மதத்தைக் காப்பாற்றும் Defender of the Faith-ஆக இருப்பதையும்

Koviloor Digital Library

வகுத்துத் தந்துள்ளது. மேலும் அதில் மதம் என்று இருப்பதைக் குறிப்பிட்டதொரு மதமேயான Church of England என்பதாகக் கொண்டு, பார்லிமென்டின் பார்வையிலேயே அதை நிர்வகிக்கிறது. இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே சுதந்திர பாரதத்திலும், மிகப் பெரும்பாலோர் பின்பற்றுவதும் தற்போது உலகில் வழங்கும் எல்லா மதங்களுக்கும் முற்பட்டதும், பல பிற மதங்களுக்கும் ஆதாரக் கொள்கைகள், சடங்குகள் ஆகியவற்றை அளித்துள்ளதும், இவற்றினும் முக்கியமாக, பல்வேறு மதங்களும் ஒரே மெய்ப்பொருளை அடைவிக்கும் பல்வேறு வழிகள்தாம் எனப் பரந்த திருஷ்டியுடன் கூறி அவற்றின் உரிய வளர்ச்சிக்கும் ஆதரவு தரும் ஒரே மதமாகத் திகழ்வதும், அதனினும் முக்கியமாக, தான் விமரிசையாகக் கொடிகட்டிப் பறந்த பொற்காலத்திலுங் கூட மதமாற்றத்தில் புகாததுமான ஹிந்து மதத்தைச் சுதந்திர பாரதத்தின் அரசாங்க மதமாகப் பிரகடனம் செய்ய மிகுந்த நியாயமிருப்பதாகக் கருதுகிறோம். இதனால் பிற மதங்களின் நியாயமான வளர்ச்சி ஒரு விதத்திலும் தடைப்படாது என்பது சரித்திர பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மை.

எனினும் தற்போது இங்கு இரு மதத்தினரிடை உண்டான எதிர்ப்புணர்ச்சியினால் மாபெரும் கலவரமும் உயிர்ச்சேதமும் மானபங்கமும் நேரிட்டு, அந்தத் தவறான அடிப்படையிலேயே பாரதமாதா இரு கூறுகளாகத் துண்டாடப்பட்டிருப்பதைக் காண்கையில், இப்போதைக்கு பாரத நாட்டில் அதன் தாய் மதம் பெறுவதற்குரிய விசேஷ அந்தஸ்தையும் விட்டுக் கொடுத்து, அரசாங்க மதம் என எந்த ஒன்றையும் கொள்ளாது, ஆயினும் எல்லா

Koviloor Digital Library

மதங்களுக்கும் ஆதரவு தரும் கொள்கைக்கு மாறுபடாதிருக்கும் வகையைச் சேர்ந்த செக்யூலரிஸத்தையே அரசாங்கம் கைக்கொள்வதற்குச் சம்மதிக்க வேண்டியதாக உள்ளது.

கல்வித் திட்டத்தில் மாற்றம்; மத போதனைக்கு முக்கியத்துவம்

இவ்வகை செக்யூலரிஸத்தைச் சுதந்திர பாரத அரசாங்கம் மேற்கொள்ளும்போதில் இங்கு ஆன்மவியல் புத்துயிர் பெற்று உள்ள உயர்வு ஏற்படக் குறிப்பாகச் செய்யக் கூடியதும் செய்ய வேண்டியதுமான ஒரு நற்பணியைக் கூற விரும்புகிறோம். அதாவது, உலகியல் அறிவில் தேர்ச்சி பெறுவதையே ஒரே குறியாகக் கொண்டு, உள்ள வளர்ச்சிக்கான மதபோதனையை அடியோடு தள்ளிவிட்டதான, ஆங்கிலேயர் வகுத்த கல்வித் திட்டம் இனியேனும் மாற்றப்படவேண்டும். இம் முறையால் மிகவும் பாதிப்புற்றிருப்பது ஹிந்து மதத்தினரே, ஹிந்து மதம் தவிர, பிறமதம் சார்ந்தோர் மாத்திரம் தங்களுக்கெனவுள்ள பள்ளிகளில் தமது மதபோதனையை நன்கு நடத்துவதாகவும், பெரும்பான்மையினரான ஏனைய ஹிந்துப் பள்ளி மாணவர்கள் அதனைப் பெறாமல் நன்னெறி போதனை (Moral Instruction) என்று பெயரளவுக்கு, பரீட்சைக்குரிய பாடமாகவும் இல்லாமல் ஏதோ சிறிது படிப்பதுமாகவே, ஆங்கிலேய அரசாங்கத்தினர் செய்துவிட்டனர். எனவே பள்ளிப் படிப்பு, அதன் தொடர்ச்சியாக வீட்டிலும் 'ஹோம் ஒர்க்', விளையாட்டு என்பனவே சிறார்களின் பொழுது முழுதையும் கவர்ந்துவிட்ட நிலையில் ஹிந்து மதச் சிறார்களுக்குச் சமய அறிவும், அதனால் ஏற்படும் மதாபிமானமும், மனத்தில் நன்கு பதியக் கூடிய இளவயதில் மறுக்கப்பட்டு விட்டன.

Koviloor Digital Library

இதுவே ஹிந்துக்களுக்குத் தமது நாகரிகத்தில் அகௌரவ புத்தியை ஏற்படுத்தி, மேல் நாட்டு நாகரிகத்தில் மோஹமூட்டியிருப்பதற்கு ஒரு முக்கியமான காரணம். இதனை அடித்தளத்திலிருந்து மாற்றி, மத போதனைகளும் பெயரளவுக்கின்றி, வெவ்வேறு மத மாணவரும் அவரவர் மதத்தில் ஆழ்ந்த போதனை பெறுமாறு புஷ்டியான ஸ்தானமளித்து புதிய கல்வித் திட்டம் வகுத்து மக்களின் உள்ள வளர்ச்சியை உண்மையாகவே பேண வேண்டியது சுதந்திர அரசாங்கத்தின் ஒரு முக்கியமான கடமையாகும்.

அரசியல் சுதந்திரம் போல் ஆன்மிய சுதந்திரத்திற்காகவும் மக்களே போராடவேண்டும்

ஆயினும் போகிற போக்கைப் பார்க்கும்போது, 'இதையெல்லாம் புதிய பாரத சுதந்திர அரசாங்கத்தார் செய்வார்களா? அந்த விதத்திலேயே நமது தேசத்தின் அரசியல் நிர்ணயச் சட்டம் (Constitution) வகுக்கப்படுமா?' என்ற வினாக்கள் எழத்தான் செய்கின்றன. நவீனப் புரட்சிக் கருத்துக்கள் கொண்ட தேசத் தலைவர்களிடமே முக்கியமாக ஆட்சிப் பொறுப்பு போயிருப்பதால், செக்யூலரிஸம் என்பதற்கு அரசாங்கம் எந்த மதத்தின் சம்பந்தமும் எவ்விதத்திலுமின்றி உலகியல் முன்னேற்றம் என்ற ஒன்றையே கருதி நடப்பது என்றுதான் தப்பர்த்தம் செய்துகொள்ளப்பட்டு, அந்த அனர்த்தமே காரியமாகப் போகிறதோ என்றுதான் தோன்றுகிறது.

எனவே இப்போது பொது ஜனங்களேதான் — குறிப்பாக அவர்களில் ஏனைய நாடுகளின் உலகியல் சார்ந்த கொள்கைக்கு மாறாக பாரதத்திற்கேயான ஆத்மிக மரபில் நாட்டம் கொண்டோராக இன்றைக்கும் மிஞ்சியுள்ள அறிஞர் பெருமக்களேதான் — செயற்களத்தில்

Koviloor Digital Library

முழுமூச்சுடன் குதித்து, சகப் பிரஜைகளையும் தட்டியெழுப்ப வேண்டுமென வற்புறுத்துகிறோம். பாரதம் சுதந்திரம் பெற்றுள்ள இப்போதே அதை உண்மையான ஸ்வ-தந்திர ஆத்மிக நாடாகப் புத்துயிர் கொளச் செய்யும் அரிய வாய்ப்புக் கிட்டியுள்ளது. ஆனால் புதிய அரசாங்கம் அவ்வாய்ப்பை மனமறிந்து பறிகொடுக்கக்கூடிய நிலையே ஏற்படுமோ எனத் தோன்றுவதால் இந் நாட்டில் இன்றுமுள்ள உண்மையுணர்கிற மேன்மக்களே இவ் வாய்ப்பை அந்தரான்மப்பூர்வமாய் ஏற்று, மற்றோரையும் தட்டியெழுப்பும் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு ஆர்வமுடன் ஈடுபடவேண்டுமென வற்புறுத்துகிறோம். அரசியல் சுதந்திரத்திற்கென ஆர்வத்துடன் போராடத் தொண்டர்படை திரண்டது போலவே, நமது ஆன்மிகச் சுதந்திரத்திற்கும் ஒரு சாத்துவீகப் படை திரள வேண்டுமெனக் கூவியழைக்கிறோம்! இதற்கு உறுதுணையாக என்றும் உடனிற்க ஈசனையும் கூவியழைத்து வேண்டுகிறோம்! நன்மக்கள் யாவரையும் அவ்வாறு வேண்டவும் தூண்டுகிறோம்.

அரசியல் சுதந்திரப் போராட்டத்திற் போலவே இவ்வான்மியச் சுதந்திரப் போராட்டத்திலும் நமது நாட்டின் சகல மக்களும் ஜாதி, மத பேதமின்றி ஒற்றுமையாக ஒன்றுகூடிச் செயற்புரிதல் வேண்டும். அந்நியராட்சியை அகற்றியது சுயாட்சியில் நாட்டைச் செவ்வனே உருவாக்குவதற்குத்தான். அந்நியராட்சியை அகற்றுவதில் ஒரே சமுதாயமாக ஒற்றுமை காட்டிய பாரத மக்கள் நாட்டை நல்லுருப்படுத்தும் பெரும் பொறுப்பினைப் பெற்றுள்ள இன்று தமக்குள் பேதங்கள் பாராட்டிப் பிரிந்து பிரிந்து நிற்கின் சுதந்திரம் பெற்றதன் பயனையே இழந்துவிட நேரிடும்.

Koviloor Digital Library

சிறுபான்மைச் சமூகத்தினரும் தேசப் பற்றுக் கொள்ளச் செய்வது பெரும்பான்மையினரின் அன்புக் கடமையாகும்

இவ்வறிக்கையில் நாம் சில சமூகத்தினர் கைக்கொண்ட முறை தவறுகளை எடுத்துக்காட்ட வேண்டியிருந்தது எதிர்காலத்திற்குப் படிப்பினை காட்டி எச்சரிக்கும் பொருட்டுத்தானேயன்றி, இன்று அச்சமூகங்களின் வழிவந்தோரிடம் ஹிந்து சமூகத்தினர் மன வேற்றுமை பாராட்டிப் பூசலிடுவதற்குத் தூண்டுமுகமாகவல்ல. தங்களைப் போலவே இந்நாட்டில் வாழும் ஏனைய சமூகத்தினரும் சம உரிமை பெற்ற சகப் பிரஜைகளே என்ற உணர்ச்சியை நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தினரான ஹிந்துக்களே முன்நின்று நடத்திக் காட்ட வேண்டுமென்பதே நமது விருப்பம். பிற மதத்தினர்களிடமும் அன்போடு பழகி இந்நாட்டிலுள்ள எல்லா மதப் பிரஜைகளும் ஒரே போல பாரதீயர்தாம் என்று அவர்கள் உணருமாறு செய்வதை ஹிந்துக்கள் ஒரு கடமையாக மதித்துப் பொறுப்புணர்ச்சியுடன் ஆற்ற வேண்டுமென்பது நமது விருப்பம். அவ்விதம் செய்தால் தான் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தோருக்கும் பாரதமே தமது தாயகம் என்ற சுதேசாபிமானம் உறுதியாக உருவாகி நிலைக்கும். சுதந்திரப் போராட்டத்தின் கடைசிக் கட்டத்தில் ஒரு சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தோரில் பலருக்கு இதற்கு மாறான உணர்ச்சி அச் சமூகத் தலைவர்களாலேயே தூண்டப்பட்டு அதனால் நிகழ்ந்த உற்பாதங்களை நாம் மறவாதிருப்பின் இவ்வாறு சிறுபான்மையினருக்குச் சுதேசாபிமானம் பாரதத்திடம் உறுதிப்படாவிடில் எதிர்காலத்தில் எத்துணை அபாயம் ஏற்படக்கூடுமென்று காண்போம். மனிதகுலம் முழுவதற்கும் பொதுவான ஒரே ஈசனின் குடிமக்களாகவும்

Koviloor Digital Library

குழந்தைகளாகவும் நாட்டின் சகலப் பிரிவினரும் ஒன்றுகூடி உழைத்தால்தான் இந்நாட்டை உலகுக்கே உதாரணமான தோர் ஆன்மிய மையம் கொண்ட அமைதி நாடாக உருவாக்கவியலும்.

தேசக் கொடியில் தர்ம சக்கரம் இடம் பெற்றதன் உட்காரணம்

நாம் கருத்துச் செலுத்தாவிடினுங்கூட, நாம் அறியாமலே அவ்வீசனேதான் தனது தர்ம சக்கரம் நமது சுதந்திர நாட்டின் புதிய கொடியில் மத்திய ஸ்தானம் பெறச் செய்திருக்கிறாரென்றே தொடங்கினோம். நாமறிந்த அளவில், செல்வாக்குப் பெற்ற நவீனக் கொள்கைத் தலைவர்கள்தாம் சுதந்திர பாரதக் கொடியின் அமைப்பை வகுப்பதிலும் முக்கியம் பெற்றவர்கள். அவர்கள் உலகவியல் முன்னேற்றத்தையே பெரிதாகக் கருதுபவரெனினும், நல்லொழுக்கம், தியாகம், தீரம் ஆகியவற்றில் மிக்கவர்கள். தேசாபிமானம் என்று தங்களுக்குத் தோன்றும் ஒன்றில் தன்நலம் மறுத்துப் பற்றுதல் கொண்டவர்கள். அவர்கள் தெய்வ சம்பந்தமில்லாத நன்னெறிக் கோட்பாட்டை தர்மமாகக் கருதுபவர்கள். அத் தர்மத்தை நாட்டுப் பிரஜைகள் யாவரும் பற்றியொழுக வேண்டும் என்பதே தமது கொள்கை என்பதைக் காட்டுமுகமாக நமது கொடியில் ஒரு புராதனச் சின்னம் நடுநாயகமாக இடம் பெற வேண்டுமெனக் கருதினர். அவ்விதத்தில்தான் தற்போது நமது கொடியின் நடுவில் தர்ம சக்கரம் இடம் பெற்றிருப்பது.

தற்காலத்தில் நமது நாட்டில் வழங்காதது என்றே சொல்லக்கூடிய — தெய்வ சம்பந்தமற்ற — ஒரு பெருமதத்தின் சின்னம் என்பதாலேயே 'மதச் சார்பற்றவர்'களாகக் கருதப்படக்கூடிய அத்தலைவர்கள்

Koviloor Digital Library

இத் தர்ம சக்கரத்தைத் தேர்ந்தெடுத்தனர் என்றாலும் சாரநாத்திலுள்ள ஸ்தம்பத்தில் இடம் பெற்றுள்ளதான இச்சின்னம் சரித்திரப் பிரசித்தி பெற்றவரும், சாஸனம் தோறும் தம்மை 'தேவாநாம் பிரியன்' – 'தேவர்களுக்குப் பிரியமானவன்' – என்று தெரிவித்துக் கொண்டவருமான அசோகச் சக்கரவர்த்தியுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் நம்மெல்லோருக்கும் பெருமையூட்டுவதேயாகும். ஆயினும் பகவானைப் புறக்கணித்து 'அறநெறி மட்டுமே' என்ற நடைமுறைச் சாத்தியமற்ற தர்மம் குறித்துக் குறைபாடும் தெரியவே செய்கிறது. தனது உலக இராஜ்யத்தில் தர்மம் என்ற சட்டத்தை விதித்து நடத்துபவனாகவும், அதனைப் பின்பற்றுவோருக்கு நலன்கள் வழங்குபவனாகவும், அல்லாதாரைத் தண்டிப்பவனாகவும், அவர்களுக்குப் பிறவிகளை உண்டாக்கும் ஓர் உயிருள்ள ஈசனைக் காட்டி அவனிடம் பிரியம், பயம் இரண்டுங் கலந்த பக்தி என்பது சுவாபாவிகமாக (தன்னியல்பாக)ப் பிறக்கச் செய்தாலே பொதுஜன சமூகம் தர்மம் என்ற ஒழுங்குமுறைக் கோட்பாட்டைப் பின்பற்றும். இந்த யதார்த்த உண்மையை மறந்து அறநெறியை மட்டும் போதித்த அம்மதம் நடைமுறையில் பயன் தரவில்லை. அம்மதப் பெரியோர்களும் சிறிது காலத்திலேயே நாடெங்கிலுமிருந்த அவர்களது சங்கத்தின் அலங்கோலப் போக்கிலிருந்து இவ்வுண்மையைக் கண்டு தெளிந்தனர். அதன் விளைவாக அவர்கள் தம் மத ஸ்தாபகரையே அந்த ஈசனின் இடத்தில் வைத்து ஹிந்துக்கள் தங்களது கடவுளருக்கு எழுப்பியதை விடவும் மிகப் பெரிய பிம்பங்களும், ஆலயங்களும் அவருக்குச் சமைத்து வழிபட்டு மந்திராதி ஆகமங்களும் வகுத்தனர். அதோடு ஹிந்துமத தேவதா கணங்களையே நேராகவோ தழுவலாகவோ தமது மதத்திலும் இடம் பெறச் செய்தனர். தெய்வ சம்பந்தமற்ற தர்மத்தைத் தனது இராஜ்யத்தில் பரப்பியதாக இன்றைய சீர்திருத்தவாதத்

Koviloor Digital Library

தலைவர்கள் கருதும் அசோகச் சக்கரவர்த்தியும் தம்மைத் 'தேவர்களுக்குப் பிரியமானவன்' என்ற விருதினாலேயே தெரிவித்துக் கொள்வதும் அம்முறையில்தான். இதைக் கவனியாது, அம்மத ஸ்தாபகர் அம்மதத்தின் மூல உருவத்தை தெய்வ சம்பந்தமில்லாததாகக் கூறி, அதைத் தமது 'தர்ம சக்கரப் பிரவர்த்தனம்' (ஸம்ஸ்கிருதத்தின் திரிபு மொழியான பாலியில் 'தம்ம சக்கப் பவர்த்தனம்') என்ற பிரசித்தமான வாக்குத் தொடரால் குறிப்பதை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கொடி நடுவில் சக்கரத்தைப் பொறிக்கச் செய்துள்ளனர்.

அந்த வாக்குத் தொடருக்குப் பொருள் 'தர்மமாம் சக்கரத்தை நன்கு சுழன்றோடச் செய்தல்', அதாவது 'அம்மதக் கோட்பாடுகளை நாற்றிசையும் பரப்புதல்' என்பதேயாம். எப்படியாயினும் சுதந்திர பாரதத்தில் அறநெறி நன்கு பரவித் தழைக்குமாறு அரசாங்கம் பாடுபடும் என்ற உயர்ந்த இலக்ஷியத்திற்கு உருவகமாகவே தர்மசக்கரம் தற்போது கொடி நடுவில் பொறிக்கப்பட்டுள்ள தென்பது அம்மட்டில் மகிழ்ச்சிக்குரியதே.

தேசிய இல்க்ஷிய வாசகமாக வேதவாக்கு

மகிழ்ச்சிக்குரிய மற்றொன்று, தேசத்தின் இலக்ஷிய வாசகமாகவே உபநிஷத வாக்கான 'ஸத்யமேவ ஜயதே' என்பதைத் தேர்ந்தெடுத்திருப்பதாகும். இதனால் உண்மையே வெல்லும் என்பது சநாதன தர்மத்தின் ஆதார சாத்திரமாம் வேதத்தின் பெரும் பிரமாணத்திலேயே மக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் இங்குங்கூட அந்த நவீன மனப்பான்மையாளருக்கு உரிய விதத்திலேயே, மத சாத்திரம்-தத்துவ சாத்திரம் என்று மேநாட்டார் வேறு படுத்திக் கூறும் இரண்டில் இவ்வாசகம் ஹிந்து மதமாகக் கொள்வதற்கின்றி எல்லோருக்குமுரிய தத்துவ

Koviloor Digital Library

சாத்திரமாயும், அதோடு உலகெங்குமே ஒரு நன்னெறிக் கருத்து என்ற அளவில் வழங்கப்படுவதாயுமிருப்பதாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் பேசப்பட்டது. எவ்விதமாயினும் மறைமொழியே தேசிய இலட்சிய வாசகமாயிருப்பதைப் பாராட்டுகிறோம்.

தர்ம சக்கரமும் அப்பிற மதத்தின் பலமுக சிம்மமும் கொண்ட அசோக ஸ்தூபியின் கீழேயே இவ்வாசகத்தையும் பொறித்து அரசாங்க இலச்சினை ('லாஞ்சனை' எனப்படும் Official Seal – அதிகாரபூர்வமான முத்திரை) உருவாக்கப் பட்டுள்ளது.

தர்ம சக்கரமா? ஆலைத் தொழில் சக்கரமா?

சக்கரத்தைத் தேர்ந்தெடுத்திருப்பதில் சங்கேதமாக மற்றுமொரு கொள்கையும் தெரிவிக்கப்படுகிறதோ என்று ஐயுறுவோரும் உள்ளனர். நம்முடைய 'தேசாசாரம்' என்ற பிரத்தியேக மரபு எளிய வாழ்க்கைதான் என்றும், இயந்திர உதவியை நாடாது, எளிய வாழ்க்கைக்கான சிறிய அளவினதான உபகரணங்களை, பெருத்த ஜனத்தொகை படைத்த நம் நாட்டில் முக்கியமாக மக்களின் உடலுழைப்பிலிருந்தே கைத் தொழிலாகத்தான் பெற வேண்டும் என்றும் சுதந்திரப் போராட்டத் தலைவர்களில் முதலிடம் கொண்ட மஹாத்மா கருதினார். அந்தக் கருத்துக்கு உருவகமாகக் குடிசைத் தொழிலாக உடலுழைப்பின் மூலம் நடக்கும் நெசவுக்குத் தேவைப்படும் எளிய கருவியான கைராட்டையாம் சர்க்காவைத் தமது கட்சியின் கொடி நடுவில் பொறிக்கச் செய்தார். ஆனால் அவ்வழிக்கு மாறாக, மேநாட்டுப் பாணியில் பெருக்கமான சுகபோக சாதனங்களுடன் வாழ்க்கை நடத்தும் முறையையே சுதந்திர பாரதத்தில் நிறுவ விரும்புகிறோம் என்றும், அதற்குத் தேவையான ஏராளமான உபகரணங்

Koviloor Digital Library

களைப் பெரிய பெரிய இயந்திரங்கள் செயற்படும் ஆலைத் தொழில் மூலமே பெறச் செய்வோம் என்றும் காட்டுமுகமாகவே ஆலை இயந்திரத்திற்கும் அடையாள மாகவுள்ள சக்கரத்தை – 'சக்ரா'வை – சர்க்காவின் இடத்தில் நவீனக் கொள்கைக்காரர்களான தலைவர்கள் பொறித்துள்ளனரோ என்பதே அந்த ஐயம்.

கீதை காட்டும் தர்ம சக்கரம்

உண்மை யாதாயினும், நாம் அவனை மறந்து விட்டாலும் நம்மை மறவாத கருணையுடன் பகவானே தான் தனது தர்ம சக்கரத்தை நமது கொடிக்கு நடுநாயகமாக இடம் பெறச் செய்து, அதன் மூலம் இன்றைய கொள்கைச் சூழ்நிலை எப்படியிருந்தாலும் எதிர்காலத்தில் அநுபவத்தால் படிப்பினை பெற்றேனும் இக்கொள்கையைக் கைவிட்டு, இந்நாட்டுக்கே பிரத்யேகமாக உரிய மரபு வழியில்தான் நம் நாடு சென்று, உலகின் ஏனைய நாடுகளுக்கு ஒரு நல்ல மாற்றாகவும், மாற்று மருந்தாகவும் புகழ்கொள்ளுமென நன்னம்பிக்கை ஊட்டுகிறார் என்றே நாம் கொள்கிறோம். இதற்குக் காரணம் இதே தர்ம சக்கரப் பிரவர்த்தனக் கருத்தை இதே சொற்றொடரால் அப் பரமத ஸ்தாபகருக்குப் பல்லாயிரம் ஆண்டு முன்பே சக்கரக் கரத்தனான கிருஷ்ண பகவான் சநாதன தர்மத்தின் முக்கியமான ஆதார நூல்களிலொன்றான கீதையில் கூறியிருப்பதுதான். அப்புனித நூலில் *(3–16)* "ஏவம் ப்ரவர்த்திதம் சக்ரம்" – "இவ்வாறு சுழன்று வரும் சக்கரம்" என்றே மாந்தரின் உயரிய வாழ்க்கைக்குத் தாமளித்துள்ள ஒழுங்கு அமைப்பான தர்மத்தைச் சக்கர வடிவாக பகவான் கூறியுள்ளார். 'இவ்வாறு' என்பது 'எவ்வாறு' என்பதையும் சுருங்கக்கூறி விளங்க வைக்கிறார். உயர் வாழ்வின் அமைப்புக்கு மைய இருசாகவுள்ள தர்மம் என்பது

Koviloor Digital Library

காரணம்-விளைவு (cause and effect) என்று தொடர்ச்சி யாகப் பல அம்சங்கள் கொண்ட ஒரு வெளி வட்டத்தின் சீரான சுழற்சியாகவே பரிணமிப்பதால் சக்கரமாக உவமிக்கப்படுகிறதென அங்கு காட்டுகிறார். அத்தொடரை மானுடன் என்ற இறுதி விளைவில் ஆரம்பித்து யாவற்றுக்கும் ஆதி காரணமாம் பரம்பொருளுடன் முடிக்கிறார்.

ஒன்றையொன்று பற்றிச் செல்லும் ஆறு அங்கங்கள் கொண்டது அத்தொடர். அது யாது?

தர்ம சக்கரம் சுழலும் தொடர்பாதை; தியாகமே அதன் ஸாரம்

"அன்னத்திலிருந்து உயிர்கள் உண்டாகின்றன" என்று பகவான் இத்தொடரை ஆரம்பிக்கிறார். இவ்வன்னம் என்பது யாது, அதற்கு எதனால் இம்முக்கியத்துவம் எனப் பார்ப்போம்:

தன்னலம் பாராது பிறர்க்கென உடைமைகளை ஆக்கும் தியாகமே சநாதன வேத தர்மம் வகுத்தளிக்கும் நமது வாழ்க்கைத் தருமம். அத் தியாகமே யாகம் எனப்படுகிறது. 'யாகம்' என்பது எல்லா சிறந்த வஸ்துக்களையும் தனக்கென்றில்லாமல் தியாகமாக அக்கினியில் அர்ப்பணித்து, அத் தீக்கடவுளின் மூலம் அவை உலகப் பேரரசனான ஈசனின் அதிகாரிகளாக அவ்வுலகைப் பரிபாலிக்கும் தேவர்களைச் சென்றடைந்து, அதற்குப் பிரதியாக அவர்கள் ஜீவகுலம் முழுதற்கும் மேன்மை பொருந்திய இன்ப வாழ்வுக்கான சகலத்தையும் அருளுமாறு செய்ய உதவும் வைதிகச் சடங்கே. மேநாட்டினரும் யாகம், அதன் அடிப்படையான தியாகம் ஆகிய இவ்விரண்டையும் sacrifice என்றே கூறுவது கவனத்திற்குரியது. இத் தியாக தர்மத்தைப் புரியவும் நாம்

Koviloor Digital Library

உயிரைக் காத்துக்கொண்டு வாழ்ந்தால்தான் முடியுமாதலின், பிறர்க்களிப்பதை முக்கியமாகக் கொண்டு அதற்கு எஞ்சியதை அத்தியாவசியச் சுயநுகர்ச்சிக்கு நாமும் ஏற்பதாக வெகு சிக்கன வாழ்க்கையை நடத்த வேண்டும். அவ்வாறு எஞ்சியதை, தேவர் உண்டு மிகுதி வைத்த பிரசாதம் என்ற புனித எண்ணத்துடன் ஏற்றுப் புனித வாழ்வு வாழ வேண்டும். இதுவே வேத தர்ம விதி. உ-ம்: உபநிஷத வரிசையில் முதலிடம் பெறும் 'ஈச'த்தின் முதல் மந்திரமே. "சொந்த நுகர்ச்சியால் ஒரு பொருளிலிருந்து மனிதன் நிறைபயனைப் பெறவியலாது; பிறருக்குத் தியாகம் செய்தே, தியாகம் செய்த பொருளிலிருந்து பெறக்கூடிய நிறைபயனை அடைவாயாக!" என்ற கருத்தினைக் கூறி, அதில் மாந்தரைச் செயற்படத் தூண்டும் ஒப்பற்ற மந்திரம். இவ்வாறு ஈத்துவப்பதில் (ஈந்து உவப்பதில்) அன்னம் வழங்குதலே முதலிடம் பெறுகிறது. ஏனெனில் அன்னத்தினால்தானே உயிர்கள் உண்டாகி வளர்கின்றன? இதுவே (கீதையில்) பகவான் கூறும் காரணவிளைவுத் தொடர்ச்சியில் "அன்னத்திலிருந்து உயிர்கள் உண்டாகின்றன" என்ற வாசகமாக முதலிடம் பெறுகிறது.

அவ்வன்னம் எதிலிருந்து உண்டாகின்றது? மழையினால், மழை பெய்து பயிர் பச்சை வளருவதால். "மழையிலிருந்து அன்னம்" என்று பகவான் தொடர் சங்கிலியில் இரண்டாவது இணைப்பைக் கோக்கிறார்.

மழை எதிலிருந்து உண்டாகிறது? முன்னரே கூறியவாறு, சர்வலோக சக்கரவர்த்தியாம் ஈசனின் ஆக்ஞைப்படிச் செயலாற்றும் அதிகாரிகளான — இயற்கைச் சக்திகள் என நாம் கருதுகின்ற — தேவர்களுக்கு, உலக மாந்தரின் நலன் கருதியே நாம் உடைமைகளைத் தீயிலிட்டு தீக் கடவுள் மூலம் சேர்ப்பிக்கும் தியாகமாம் யாகச் சடங்கினால் அவர்கள் பிரீதியுறுகிறார்கள். அதற்குப்

Koviloor Digital Library

பிரதியாகவே உலகுக்கு அவர்கள் பலவித நலன்கள் புரிவதில் முக்கியமாக உயிரளிக்கும் உணவுக்கானவற்றை உற்பத்தி செய்ய உதவி புரியும் மழையைப் பொழிகின்றனர். "யாகத்திலிருந்து மழை" என்பது தொடர் வரிசையில் மூன்றாவது அம்சம்.

யாகம் எதிலிருந்து உண்டாயிற்று? தியாகம் என்ற உள்ளக்கருத்தை மந்திர சக்தியுடன் கூடிய யாகம் முதலிய கருமங்களாக ஆக்கியதால்தான். "கருமத்திலிருந்து யாகம்" என்பதே தொடரில் நான்காவது அம்சம்.

மந்திர மகிமையால் வலிவு பெற்ற அக்கர்மங்கள் எதிலிருந்து உண்டாயினவெனில், வேதத்திலிருந்தே. "வேதத்திலிருந்து கருமம்" என்று ஐந்தாவது அம்சமாக பகவான் தொடர்சங்கிலியில் கோக்கிறார்.

அவ்வேதம் எதிலிருந்து உண்டாயிற்று? உண்டாவது, அழிவது என்பதின்றி என்றுமுள வேதம், பரமாத்மாவின் மூச்சாக அவருடனேயே பிரிவறச் சேர்ந்திருப்பது. இதனை பகவான் ஆறாவது அங்கமாக, "பரமாத்மாவிலிருந்து வேதம்" எனக் கூறி, ஆதி மூல காரணத்துடன் 'காரணம்-விளைவு' என்ற தத்துவத் தொடரைப் பூர்த்தி செய்கிறார்.

ஆயினும் உபதேசத்தைப் பின்னரும் தொடர்ந்து மானுடனைப் பொறுத்த மட்டில் அவ்வேதம் நிலை கொள்வது அவனது தியாகத்திற்குக் காரிய உருவமாகவுள்ள யாகத்திலேயே என்று சொல்கிறார். தனக்கென வாழாது பிறர்க்குரியாளராக, நமது உடைமைகளைச் சுருக்கி வாழ்வதே நமக்காக பகவான் விதித்த தர்மம் என்று இங்கு தெளிகிறோம். ஆறு அங்கங்களில் மூன்றாவதாகவுள்ள தியாக யாகத்தையே முடிவிலும் அவர் திரும்பக் கூறியிருப்பதிலிருந்து இது ஐயமறத் தெளிவாகத்தானே செய்கிறது?

Koviloor Digital Library

இத்தர்ம சக்கர முறைபாட்டை மீறி, சொந்த அநுபோகத்திற்காகவே வாழ்பவர் ஆயுள் முழுதும் பாபத்தையே சம்பாதித்து வாணாளை வீணாளாக்கி முடித்தவராவர் என்று எச்சரிக்கையும் விடுக்கின்றார்.

தமிழ் மறையாம் திருக்குறளின் ஆரம்ப அதிகாரமான கடவுள் வாழ்த்தில் 'அறவாழி ('அற' - தர்ம; 'ஆழி' - சக்கரம்) அந்தணன்' எனக் கூறப்படும் தர்ம சக்கரம் தாங்கிய பகவானேதான் இன்றில்லாவிடினும், சமீப எதிர்காலத்திலேனும் நம் கண்களைத் திறந்து வைத்து நாம் வீணராகாது அவனது உபதேசப்படி சொந்த உடைமைப் பெருக்கத்தை விடுத்து, உலகுக்கு உதவி செய்யவே வாழும் தியாக தர்மத்தை மேற்கொள்ள அருள் புரிய வேண்டும்.

நமக்குக் கிடைத்துள்ள அரசியல் சுதந்திரம் இவ்வாறு அவரருளால் நமது தேசத்திற்கே உரிய ஸ்வ-தந்திரமாகி அரிய பயன்களாகிய அறத்தையும், அற வாழ்வின் தேவைக்கேற்ற அத்தியாவசியப் பொருளையும், அறத்துக்கு மாறுபடாத பயன்களைத் தரும் இன்பத்தையும், பேரின்பமான வீட்டையும் அளிக்கட்டும்!

நாடு, தனி மனிதர் இரண்டின் சுதந்திரத்திற்காகவும் பிரார்த்தனை, வாழ்த்து

வெகு காலமாக நாடு சுதந்திரத்திற்காகப் பாடுபட்டுள்ளது. கடவுள் அருளாலும், மகான்கள் ஆசியினாலும், மக்களின் ஒப்பற்ற தியாகத்தினாலும் கிடைத்த இந்தச் சுதந்திரத்தினால் நமது நாடு செழித்தோங்கி, பஞ்சம் விலகி, தேச மக்கள் சமூகச் சச்சரவுகள், வகுப்புச் சச்சரவுகள் எதுவும் அறவேயின்றி, ஒற்றுமையுடன் அன்பு கொண்டு ஒரே சமுதாயமாக ஒட்டி வாழ அருள் பொழிய வேண்டுமென எங்கும் நிறைந்த கடவுளைப் பிரார்த்திப்போமாக!

Koviloor Digital Library

நம் நாடு சுதந்திரம் அடைந்ததை ஒட்டி நாமும் தனிப்பட்ட முறையில் சுதந்திரம் அடைய முற்பட வேண்டும். நம்மை நாம் முற்றிலும் அறிந்து கொண்டால் தான் நாம் சுதந்திரம் அடைந்தவர்களாவோம். இந்நிலைக்கு மாறாகத் தற்போது நமது மனமோ இந்திரியங்களோ நமக்கு வசப்படவில்லை. ஆசையையும் கோபத்தையும் நம்மால் அடக்கமுடியவில்லை. இவை இரண்டுமே நம்மை எப்பொழுதும் துன்புறுத்தி வருகின்றன. எந்தப் பொருளை எவ்வளவு அடைந்த போதிலும், போதும் எனும் மன நிம்மதி நமக்கு ஏற்படுவதில்லை. உலகத் துயரம் நம்மை விட்டபாடில்லை. சிறு துயரத்தைக் கண்டு விட்டாலும் மனம் கலங்கத்தான் செய்கிறது. இதனின்றும் கரை ஏற வழியென்ன?

நமது மனம் நமக்கு வசமாக வேண்டும். எவ்வளவோ காலமாகத் தன்னிஷ்டப்படியெல்லாமே தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்த இந்த மனத்தைத் தன்னுள் அடக்கச் சிறிது சிறிதாகவேனும் முயற்சி செய்ய ஆரம்பிக்க வேண்டும். மனம் அடங்கிவிட்டால் நமக்கு வேறொன்றும் தேவையில்லை. அதுதான் நாம் பெற வேண்டிய பூர்ண சுதந்திரமாகும்.

ஒவ்வொரு நாளும் சிறிது நேரமாவது மனத்தை சாந்தமாக வைத்துக் கொண்டு, வேறு நினைவுகளை மனத்தில் செலுத்தாமல், கடவுளது தியானத்தில் அமர வேண்டும். வேறு நினைவுகள் இல்லாமல் தியானம் செய்வதால் நாளடைவில் புத்தியானது தெளிவடையும். ஆசையையும் கோபத்தையும் அடக்குவதற்கு இது ஒரு சாதனமாகும். இவ்வித சாதனையைப் படிப்படியாக மேற்கொண்டவனுக்குச் சீக்கிரமாக ஆத்ம ஞானம் உண்டாகும். குறைவில்லாத அந்த ஞானத்தைப் பெறுபவன்தான் உண்மையான சுதந்திரனாகிறான்.

Koviloor Digital Library

பிற ஸ்திரீகளைத் தாயார்களாக மதிக்க வேண்டும். பிற உயிரைத் தன்னுயிர் போல் மதிக்க வேண்டும். உயிர் போவதாயிருந்தாலும் உண்மையே பேச வேண்டும். சமூகச் சச்சரவுகள், வகுப்புச் சச்சரவுகள் செய்வதை அறவே ஒழிக்க வேண்டும். எல்லோரிடமும் சம அன்பு கொண்டு ஒழுக வேண்டும். மக்களெல்லாம் சுகமாக வாழ வேண்டுமென ஒவ்வொருவனும் நினைக்க வேண்டும். ஒவ்வொருவனும் தனது அறிவு வளர்ச்சிக்கும், ஆத்ம முன்னேற்றத்திற்கும் பாடுபட வேண்டும். இவற்றுக்கெல்லாம் புத்தியும் சக்தியும் தருமாறு கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும்.

பண்டைய பாரதம் போலவே இன்றைய சுதந்திர பாரதமும் உயரிய தியாக இலட்சியத்தில் உலகுக்கே வழிகாட்டியாகத் திகழ வேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்!

Koviloor Digital Library

Koviloor Digital Library

சமூஹம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

சிறுவர்களுக்கு – 1

மூட்டை தூக்கி

உங்கள் வீடு ஒரு குடும்பம். இதற்கு அப்பாவும் அம்மாவும் தலைவர்கள். இப்படியே இந்த உலகம் முழுவதும் ஒரு பெரிய குடும்பம். இதற்கு ஈசுரவனும் அம்பிகையும் அப்பாவும் அம்மாவுமாக இருக்கிறார்கள். உங்களுக்கு உங்கள் குடும்பத்தின் தாய் தந்தையிடம் பக்தி இருக்க வேண்டும். அப்படியே பெரிய உலகக் குடும்பத்தின் பெரிய அப்பாவும், பெரிய அம்மாவுமான ஈசுவரனிடமும் அம்பாளிடமும் பக்தி இருக்க வேண்டும். உங்கள் குடும்பத்துக்கும் உலகக் குடும்பத்துக்கும் நடுவில் பள்ளிக்கூடம் என்கிற ஒரு குடும்பம் இருக்கிறது. உங்களுடன் படிக்கிறவர்களெல்லாம் உங்கள் குடும்பத்தில் உடன் வாழ்கிற சகோதரர்கள் மாதிரி. இந்தப் பள்ளிக் குடும்பத்தின் தலைவர் உபாத்தியாயர் — 'வாத்தியார்' என்கிற ஆசிரியர். அவரையும் ஓர் அப்பா – அம்மாவாக நீங்கள் மதித்து வணங்க வேண்டும்.

பள்ளிக் காலத்தில் உங்கள் கடமை படிப்பது ஒன்றுதான். உங்களுடைய கவனம் முழுவதும் படிப்பதிலேயே இருக்க வேண்டும். மற்ற விஷயங்களி லெல்லாம் நீங்கள் ஈடுபட இது சமயம் அல்ல. வேறு எத்தனையோ நல்ல விஷயங்கள் இருந்தாலும்கூட அவற்றையும் நீங்கள் படிப்பு முடிந்தபின்தான் கவனித்து, ஈடுபடலாம். 'இப்போதே எனக்கு அவற்றில் ஈடுபடச் சிறிது சக்தியும், புத்தியும் இருக்கிறதே. எனவே உலகத்துக்கு நல்லது

Koviloor Digital Library

செய்கிற அந்தச் சமாசாரங்களில் இப்போதே பிரவேசிப்பேன்' என்று போகக் கூடாது.

ஒரு மூட்டைதூக்கி இருக்கிறான். அவனுக்கு இடுப்பைப் பிடித்துக் கொள்கிற மாதிரி இருக்கும்போது என்ன செய்வான்? மூட்டை தூக்க அப்போதும்கூட அவனுக்குக் கொஞ்சம் சக்தி இருந்தாலும், தூக்கமாட்டான். உடம்பு சரியில்லாததால் முதலில் அதை சொஸ்தம் செய்து கொள்வான். பூரணமாகக் குணம் ஆன பிறகுதான் மூட்டை தூக்குவான்.

உலகத்துக்கு நல்லது செய்வதும் மூட்டை தூக்குகிற மாதிரிதான். அதைச் செய்யச் சக்தி வேண்டும். சக்தியை நன்றாக வளர்த்துக் கொள்ளாமல் இந்த மூட்டையைத் தூக்குகிறேன் என்று ஆரம்பித்தால் இடுப்பைப் பிடித்துக் கொள்ளும். உடம்புக்குப் பிடிப்பு வியாதி உண்டாகிற மாதிரி உள்ளத்துக்கும் வியாதி ஏற்படும். சின்ன வயசில் உங்கள் உள்ளத்துக்குப் போதிய சக்தி ஏற்படுகிற முன்பே, படிப்புத் தவிர மற்ற விஷயங்களை மேற்கொண்டால், உள்ளத்துக்கு வியாதிதான் உண்டாகும்.

ஏற்கனவே நம் உள்ளத்தில் ஆசை, கோபம் முதலிய பல வியாதிகள் இருக்கின்றன. முன்பு நாம் எல்லோரும் ஒரு விதத்தில் மூட்டைதூக்கிகளாக இருந்ததால்தான் இந்த வியாதிகள் வந்திருக்கின்றன. நாம் செய்கிற ஒவ்வொரு தப்புக் காரியமுமாகச் சேர்ந்து மூட்டையாகி விடுகிறது. இந்தப் பிறப்புக்கு முன்னால் இன்னொரு பிறப்பில் தப்புக்கள் செய்தோம். அதனால்தான் இப்போது இந்த உடம்பு என்கிற மூட்டை வந்திருக்கிறது. இதில் பழைய தப்புக்களின் வாசனையும் இருக்கிறது. அதனால்தான் ஆசை, கோபம் எல்லாம் நமக்கு இருக்கின்றன. அது போவதற்காகத்தான் குழந்தையாக இருக்கும்போது பள்ளிக் கூடத்துக்குப் போகிறோம். அறியாமை என்கிற வியாதி,

Koviloor Digital Library

படிப்பு என்கிற மருந்தினால் போகிறது. அதோடு நம் கெட்ட குணங்களும் போக வேண்டும். இதற்குப் படிப்பு மட்டும் போதாது. பணிவு வேண்டும். பணிந்து கிடந்தால் கெட்ட குணங்கள் ஓடிப் போகும். தாய், தந்தை, ஆசிரியர், தெய்வம் ஆகியவர்களிடம் பக்தியோடு, படிப்பில் கவனம் செலுத்தி வந்தால் அறிவும் வரும், குணமும் வளரும்.

பணிவு இல்லாமல் படிப்பில் மட்டும் தேர்ச்சி பெற்றால் எவரும் முழு மனிதனாக ஆக முடியாது. 'நமக்கு எல்லாம் தெரியும், நாம் புத்திசாலி' என்ற அகம்பாவம்தான் வெறும் படிப்பினால் உண்டாகும். இப்படிப்பட்டவர்களுக்குப் பகவான் துணை புரியமாட்டார். பகவானின் அநுக்கிரகம் இல்லாமல் எத்தனை புத்திசாலியாலும் வாழ்க்கையில் சந்தோஷம் பெறமுடியாது.

பழைய தப்பு மூட்டை என்கிற வியாதிக்கு மருந்து படிப்பு. இந்த மருந்தைக் கவனமாகச் சாப்பிட்டு அந்த மூட்டையை இலேசாக்கிக் கொண்ட பிறகுதான், உலகத்துக்கு நல்லது செய்வதற்காக வேறு மூட்டையைத் தூக்கலாம். டாக்டர் நோயாளிக்கு மருந்து கொடுப்பதோடு நிற்கமாட்டார். "இன்னின்ன ஆகாரம் சாப்பிடு, இன்னின்ன சாப்பிடாதே" என்று பத்தியமும் வைப்பார். இந்தப் பத்தியம் இல்லாமல் மருந்து மட்டும் பலன் தராது. உங்களுக்கெல்லாம் படிப்பு தான் மருந்து என்றால், அதோடு சேர்த்துக் கொள்ள வேண்டிய பத்தியம் பணிவு என்பதே. பணிவுடன் தெய்வபக்தி, குரு பக்தி, அப்பா–அம்மாவிடம் பக்தியுடன் இருந்து வாருங்கள். படிப்பிலேயே கவனம் செலுத்துங்கள். ஸ்வாமி காப்பாற்றுவார்.

Koviloor Digital Library

உள்ளத்தைக் குளிப்பாட்டுங்கள் !

உடல் தூய்மை

குழந்தைகளான உங்களுக்குச் சொறி சிரங்கு ஒன்றும் வராமலிருக்க வேண்டும். இவை வந்துவிட்டால் ரொம்பக் கஷ்டப்படுகிறீர்கள். படிக்க முடிவதில்லை. விளையாட முடிவதில்லை. உட்கார முடிவதில்லை. சாப்பிட முடிவதில்லை. சொறி, சிரங்கு எதனால் உண்டாகிறது? அழுக்கினால் உண்டாகிறது. ஆகவே, உடம்பை அப்பழுக்கில்லாமல் சுத்தமாக வைத்துக் கொண்டால்தான் சொறியும் சிரங்கும் வராமல் இருக்கும். உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்வது எப்படியென்றால் நன்றாகத் தேய்த்துக் குளிக்க வேண்டும். சோப்போ, சீயக்காயோ போட்டு உடம்பைத் தேய்த்து நன்றாக நீராடினால் உடம்பின் அழுக்குகள் போகின்றன. ஒரு நாள், ஒரு வேளை இப்படிக் குளித்துவிட்டால் போதாது. மறுபடியும் மறுபடியும் அழுக்கு சேர்ந்து கொண்டே தான் இருக்கும். எனவே, தினந்தினமும் நீராட வேண்டும். பிரதி தினத்திலும் கூடக் காலை மாலை இரண்டு வேளைகளிலும் குளித்தால் மிகவும் நல்லது.

உங்களுடைய சின்ன வயசிலேயே பச்சைத் தண்ணீரில் குளிக்கப் பழகி விட்டீர்களானால் அப்புறம் சளி, இருமல் உங்களைத் தீண்டாது. பச்சைத் தண்ணீரில் குளித்தால் நரம்புகளுக்கும் தெம்பு. மனசிலும் ஓய்ச்சல் போய் உற்சாகமாக இருக்கும். உடம்பிலே அழுக்குப்

Koviloor Digital Library

போவதோடுகூட மனசு கூடப் பளிச்சென்று இருக்கிற மாதிரி இருக்கும்; வேலையில் சுறுசுறுப்பு பிடிக்கும்.

சுத்தத்தைத்தான் தூய்மை, தூய்மை என்பது. நீங்கள் எல்லாவிதத்திலும் தூய்மையாக இருக்க வேண்டும். அழுக்கு என்பது உங்கள் கிட்டவே வரக் கூடாது. அதற்குத்தான் முதலில் உடம்புக்குக் குளிப்பதைச் சொன்னேன். உடம்புக்கு அப்புறம் உடுப்பு.

உடைத் தூய்மை

நீங்கள் போட்டுக் கொள்ளும் உடை அழுக்கு மயமாக இருந்தால் எத்தனை குளித்தும் பிரயோஜனம் இல்லை. துணியில் அழுக்கு இருந்தாலும் சொறி சிரங்கு வரத்தான் செய்யும். சலவைக்குத் துணியைப் போட்டால் நன்றாக வெளுத்துத் தருவார்கள். அதைவிட நீங்களே உங்கள் உடைகளை நன்றாகத் துவைத்துக் கொள்ளுவது சிறந்தது. துணியைத் துவைத்துப் பிழிவது உங்கள் தேகத்துக்கே ஓர் ஆரோக்கியப் பயிற்சியாக இருக்கும். நாமே நம் துணியை இவ்வளவு நன்றாகச் சுத்தப்படுத்தி வெள்ளை வெளேரென்று ஆக்கியிருக்கிறோம் என்றால் உங்களுக்கே அதில் ஒரு பெருமை, திருப்தி, சந்தோஷம் இருக்கும். உங்கள் பெற்றோர்களுக்கும் சந்தோஷமாக இருக்கும். சலவைச் செலவும் இதனால் குறையும்.

உடம்பைத் தேய்த்துக் குளிப்பது, உடுப்பைத் துவைத்துக் கட்டுவது — இவை இரண்டாலும் அழுக்கிலிருந்து, சொறி சிரங்கிலிருந்து விடுபட வேண்டும்.

உள்ளத் தூய்மை

உடல், உடை இவற்றுக்கு மேலாக ஒன்று இருக்கிறது. அதுதான் உள்ளம், மனம் என்பது. மனச் சுத்தம், உள்ளத் தூய்மைதான் மிக மிக முக்கியம். அது இல்லாமல் உடம்பும்,

Koviloor Digital Library

உடுப்பும் எவ்வளவு தூய்மையாக இருந்தாலும் பயனேயில்லை. மனசிலே அழுக்குப் படியாமல் அதை அவ்வப்போது தேய்த்துக் கழுவிக் குளிப்பாட்டிக் கொண்டே இருக்கவேண்டும்.

மனசுக்கு ஏற்படுகிற அழுக்கு என்பது என்ன? தப்பு, தவறு செய்வதுதான் உள்ளத்துக்கு அழுக்கு. நாம் செய்கிற காரியங்களில் தவறு ஏற்படக்கூடாது. அதாவது கெட்ட நோக்கங்களுக்காகக் காரியம் செய்யவே கூடாது.

ஆனாலும் காரியம் என்று வந்துவிட்டால் நல்லதைச் செய்கிறபோதுகூட அதிலே சில தப்பு, தவறுகள் நேர்ந்து விடலாம். இதனால் பெரிய குற்றம், அதாவது தோஷம் இல்லை. ரொம்பப் பெரியவர்கள்கூட எவ்வளவோ நல்ல காரியங்கள் செய்கிற போது அவர்களையும் கொஞ்சம் சறுக்கிவிட்டிருக்கிறது. நாமே எல்லாம் செய்து கொள்ள முடியும் என்று கர்வப்படாமல், பகவான் துணையால்தான் எதையும் சாதிக்க முடியும் என்று நாம் உணருவதற்காகவே இப்படிச் சில தவறுகள் நேர்ந்துவிடுகின்றன. இம்மாதிரி சமயங்களில் நீங்கள் பகவானை வேண்டிக் கொள்வதுதான் சரி. அதுவே அழுக்கைக் கழுவிவிடும்.

பொய்யும் பயமும்

ஆனால் சாதாரணமாக ஒரு தப்புச் செய்தபோது உங்களுக்கு என்ன தோன்றுகிறது? அது ஓர் அழுக்கு மாதிரி உங்கள் மனசையே உறுத்துகிறது. உடனே இந்த அழுக்கை யாரும் தெரிந்து கொண்டுவிடக் கூடாது என்று அதை மூடி மறைக்கத் தோன்றுகிறது. நியாயமாக, தவறுதல் உண்டான வுடன் பிரார்த்தனை பண்ணினால், அந்தப் பிரார்த் தனையே சோப்பைப் போல் அந்தத் தப்பை அகற்றிவிடும். அப்படிச் செய்யாமல் தப்பை மற்றவர்கள் தெரிந்து கொள்ளாமல் மூட வேண்டும் என்கிற போது, பொய்

Koviloor Digital Library

சொல்ல வேண்டியதாகிறது. அழுக்கைத் தேய்த்துக் கழுவாமல், மூடி மூடி வைத்தால் சீழ் பிடித்துச் சிரங்காகிவிடும். அது மாதிரி, தப்பை மூடியவுடன் அது பொய் என்ற சிரங்காக ஆகிவிடுகிறது. உள்ளத்தை ரொம்பவும் கெடுக்கிற பயங்கரமான சிரங்கு பொய்தான்.

எதனால் தப்பை மறைக்கப் பார்க்கிறோம்? ஒன்று, நம்மை மற்றவர் நல்லவன் என்றே நினைக்க வேண்டும் என்ற பொய் எண்ணத்தினால்; அல்லது இன்னொருத்தரிடம் பயத்தினால் மறைக்கப் பார்க்கிறோம். பொய் என்பது சிரங்கு என்றால் பயம் என்பது சொறி மாதிரி.

பெரியவர்களிடமெல்லாம் உங்களுக்கு நிறைந்த மரியாதையும் மதிப்பும் இருக்கத்தான் வேண்டும். ஆனாலும் அர்த்தமில்லாத பயம் கூடாது. பயம் உள்ளத் தூய்மையைக் கெடுக்கிற அழுக்கு. தப்பு செய்தால் கூட, அதை உணர்ந்து, பணிவுடன் உள்ளபடி பெரியவர்களிடம் சொல்ல வேண்டுமே ஒழிய, பொய்யால் மூடி மறைக்கக் கூடாது. தப்பு செய்தது போதாது என்று, பொய்யும் சொன்னோம் என்பது வெளிப்பட்டு நமக்கு மேலும் அவமானம், கஷ்டம்தான் ஏற்படும். உள்ளபடி சொன்னால் பெரியவர்கள் மன்னித்துவிடுவார்கள். மன்னிக்காமல் அவர்கள் தண்டித்தாலும் பரவாயில்லை. அவர்களுக்கு அந்த உரிமை உண்டு. ‘நாம் தப்பு செய்தோம்; அதனால் அதற்குரிய தண்டனையைப் பெறுகிறோம்’ என்று தைரியத்துடன் தண்டனையை ஏற்க வேண்டும். தைரியம், சத்தியம் இவை எல்லாம் மன அழுக்கைப் போக்குகிற சோப், சீயக்காய் மாதிரி.

பொறாமை

இன்னொரு பெரிய அழுக்கு, குழந்தைகளிடம் சுலபத்தில் சேர்கிற அழுக்கு, பொறாமைக் குணம்.

Koviloor Digital Library

இன்னொரு பையன் படிப்பிலோ, விளையாட்டிலோ நம்மைவிடக் கெட்டிக்காரனாக இருந்தால், அல்லது ஸில்க் சட்டை போட்டுக் கொண்டு வந்தால், காரில் வந்து இறங்கினால், முதல் கிளாஸில் ஸினிமாவுக்குப் போனால் உடனே அவனைப் பார்த்துப் பொறாமை உண்டாகி விடுகிறது. அது அழுக்கு மாதிரி மனத்தை ரொம்பவும் கெடுத்து விடும். பலவிதமான சண்டைகளில் நம்மைக் கொண்டு தள்ளிவிடும். அவனைச் சண்டை போட்டு ஜயிக்க முடியவில்லை என்றால், கோள் சொல்லிக் கெடுக்கத் தோன்றும். இம்மாதிரி ஓர் அழுக்கிலிருந்து இன்னோர் அழுக்கு என்று வளர்ந்து கொண்டே போகும். இந்த அழுக்கான எண்ணங்களாலே நம் படிப்பிலே கவனம் குறையும். விளையாட்டில் உற்சாகம் குன்றும். இவ்வாறு அறிவு, உடம்பு இரண்டையும் பாழாக்கிக் கொள்வோம். நம்மை நாமே கெடுத்துக் கொள்வதைத் தவிர பொறாமையால் வேறு எந்த விதப் பயனும் இல்லை.

படிப்பில் போட்டி

ஒன்றே ஒன்றில்தான் போட்டியிருக்க வேண்டும். 'அந்தப் பையன் இவ்வளவு நிறைய மார்க்கு வாங்குகிறானே! நாமும் அப்படி வாங்க வேண்டும்' என்ற ஆசையுடன், ஊக்கமாகப் படித்துப் போட்டி போட வேண்டும். இந்தப் போட்டியும் பொறாமையாகிப் போவதற்கு விடக்கூடாது. அறிவாளியாக, நல்லவனாக இருப்பதற்குப் போட்டி போடலாமே தவிர, பொறாமை கூடவே கூடாது. விளையாட்டிலும் அப்படியே!

விளையாட்டு

உடம்பை பலமாக வைத்துக்கொள்வதற்காகவும், மனம் உற்சாகமாக இருப்பதற்காகவும் நீங்கள் யாவரும் விளையாட வேண்டியது அவசியம். நான் சொல்லாமலே, உங்களுக்காகவே விளையாட்டில் இஷ்டமும், ஈடுபாடும்

Koviloor Digital Library

இருக்கத்தான் செய்யும். இங்கேதான் ஜாக்கிரதை தேவை. உங்கள் படிப்புக்குச் சிறிதுகூட இடையூறு இல்லாதபடியும், பிறருக்கு எந்த விதத்திலும் இம்சை ஏற்படாதபடியும் உங்களுடைய விளையாட்டு ஆசையை அளவுக்குள் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

விளையாட்டு என்றால் மற்றவரை ஜயித்தாக வேண்டும் என்ற ஆர்வமும், விடாமுயற்சியும் ஏற்படவே செய்யும். ஆகையினால் அதில் போட்டியும் தவிர்க்க முடியாத அம்சமாகிவிடுகிறது. அதனால் தவறில்லை. ஆனால் இது காரணமாக, ஜயிக்கிறவர்களிடம் பொறாமை எண்ணம் ஏற்பட இடம் தரக் கூடாது. விளையாட்டுப் போட்டி சண்டையாகவும், விரோதமாகவும் ஆகிவிடக் கூடாது. நம்மை ஜயிக்கிறவனை நமக்கு உதாரணமாகக் கொண்டு சிநேகம் பாராட்ட வேண்டுமேயன்றி விரோதியாகக் கருதலாகாது.

சிநேகிதம், சகோதரத்துவம்

எல்லா மாணவர்களிடமும் சிநேகிதமாயிருப்பது தான் உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருக்கும். ‘பகவானுடைய பெரிய குடும்பத்தில் நாம் அத்தனை பேரும் அவருடைய குழந்தைகள். அதனால் சிநேகிதர்களையும்விட நெருங்கிய உறவான சகோதரர்கள்’ என்ற உணர்ச்சியை வளர்த்துக்கொள்ள வேண்டும். அதைப் போல் இன்பம் தருவது எதுவுமில்லை.

முன்–பின் பிறவிகள்; கர்வம் முதலான அழுக்குகள்

நாம் போட்டி போடும்படியாக, நம்மைவிட இன்னொரு மாணவன் படிப்பிலோ, விளையாட்டிலோ அதிகத் தகுதி பெற்றிருப்பது எதனால்?

Koviloor Digital Library

நமக்கெல்லாம் பல பிறவிகள் உண்டு. போன பிறவியில் நம்மைவிட நல்லது செய்த பசங்களுக்கு இந்தப் பிறவியில் பகவான் நம்மைவிடச் சௌகரியங்கள் தந்திருக்கிறார். அவர்களைக் கண்டு, பொறாமைப்பட லாகாது.

இதே போல், நம்மளவு சௌகரியமோ, அறிவோ அழகோ இல்லாதவர்களைப் பார்த்து நாம் தாழ்த்தியாக நினைத்துக் கர்வப்படவும் கூடாது. கர்வம் என்பது சொறி, சிரங்கு எல்லாவற்றையும்விடக் கொடிய பெரிய வியாதி போன்றது. போன பிறவியில் நம்மைவிடத் தப்பு செய்ததால் அவர்கள் இப்போது பணத்தில், புத்தியில், அழகில் நம்மைவிடக் கீழாக இருக்கலாம். ஆனால் நமக்குக் கர்வம் வந்தால், இதுவே அவர்கள் செய்த தப்புக்களை யெல்லாம்விடப் பெரிய தப்பு. இதனால் நாம் அடுத்த பிறவியில் இப்போது அவர்கள் இருப்பதைவிடக் கீழான நிலையில் பிறப்போம்.

இன்னும் பலவிதமான அழுக்குகள் இருக்கின்றன. பிறர் இல்லாதபோது அவர்களைப் பற்றி கேலியாகவோ, நிந்தையாகவோ பேசுவதில் உங்களுக்கு எண்ணம் போகவே கூடாது. இப்படிப் பேசுவதில் ஒரு சுவாரசியம் இருக்கிறதே என்பதற்காக இதில் ஈடுபடக்கூடாது. ஒருவனிடம் தப்புத் தெரிந்தால், அதை நேரில் நல்லபடியாக, நயமாக, அன்பாக அவனிடமே சொல்ல வேண்டுமே ஒழிய, அந்தத் தப்பை மற்றவர்களிடம் சொல்லி சந்தோஷப்படுவது வெறும் கோழைத்தனம்தான். இப்படிப் புறங்கூறுகிறபோது அங்கே அந்தப் பையன் இல்லாதிருக்கலாம் — ஆனால் எங்கேயும் உள்ள ஸ்வாமி அங்கேயும் இருக்கிறார். என்றைக்கோ ஒரு நாள் அவர் தண்டித்து விடுவார். அதற்கு யாரும் தப்ப முடியாது.

Koviloor Digital Library

அழுக்கு நீக்கிகள்

பொய், பயம், பொறாமை, நிந்தனை ஆகிய அழுக்குகளைப் போக்குகிற சோப்பு, சீயக்காய், அரப்பு, வாசனைப் பொடிமாதிரி சத்தியம், தைரியம், விட்டுக் கொடுக்கிற சுபாவம், இன்சொல் ஆகியன இருக்கின்றன.

அழுக்கு நீக்கிக்கான நீர் பிரார்த்தனையே

சோப்பு முதலானவை அழுக்கைப் போக்குகிற பண்டங்களானாலும் அவற்றை அப்படியே நம் மீது வைத்துக் கொண்டிருக்க முடிவதில்லை. இவ்விதம் செய்தால் இந்த வஸ்துக்களே அழுக்கு மாதிரிதான் நம் மீது படிகின்றன. ஆகவே, அழுக்குப் போக்கும் வஸ்துக்களும் நமக்குப் பயனாக வேண்டுமானால் ஜலம்தான் அத்தியாவசியமாக இருக்கிறது. சீயக்காய், சோப்பு முதலியவைகளை ஜலத்துடன் சேர்த்தே தேய்த்துக் கொள்கிறோம். அதற்கப்புறமும் இவையே உடம்பைப் பிடித்துக் கொண்டு அழுக்காகி விடாமல், நிறைய நீரைக் கொட்டிக் கொண்டு குளிக்கிறோம்.

இப்படியே நம் மன அழுக்கைப் போக்குகிற நல்ல குணங்கள் பல இருந்தாலும்கூட, வேறொரு ஜலம் இல்லா விட்டால் இந்த நல்ல குணங்கள் மாத்திரம் நமக்கு மனத் தூய்மையைக் கொடுக்க மாட்டா. அந்த ஜலம்தான் தெய்வ பக்தி. எல்லா அழுக்குகளும் நீங்குவதற்குக் கங்கா ஸ்நானமாக இருப்பது ஸ்வாமியிடம் செய்கிற பிரார்த்தனை தான்.

சின்ன வயசிலிருந்தே தினமும் ஐந்து நிமிஷங் களாவது தனிமையில் உட்கார்ந்து ஸ்வாமியையே நினைக்க வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. எனவே, இப்போதே இந்த நல்ல பழக்கத்தை ஆரம்பித்து விடவேண்டும்.

Koviloor Digital Library

முதலில் நமக்கு நேராக எல்லா நன்மைகளும் செய்து வருகிற தாய் தந்தையரையும், ஆசிரியரையும் மனத்தில் நினைத்து வணங்க வேண்டும். பிறகு உலகம் முழுவதற்கும், ஈ, எறும்பிலிருந்து நம் அப்பா, தாத்தா உள்பட எல்லாருக்கும், தாயும் தந்தையுமாக இருக்கிற ஸ்வாமியை நினைக்க வேண்டும். ஒரு நாள் குளித்தால் போதாதது போலவே, தினம் தினமும் மன அழுக்குப் புதிதாகச் சேருமாதலால், அன்றன்றும் பிரார்த்தனை செய்து மனத்தைக் கழுவ வேண்டும்.

இறைவனின் அன்பும் தர்ம ஒழுங்குப்பாடும்

சூரிய மண்டலம் எத்தனை பெரிது! அதை விடப் பெரிய நட்சத்திர மண்டலங்கள் எத்தனையோ இருக்கின்றனவாம். இத்தனையையும் செய்த ஸ்வாமி எவ்வளவு பெரியவராக இருக்க வேண்டும்? அத்தனை பெரியவர் குழந்தைகளான நம் பிரார்த்தனையையும் கேட்கிறார்! புழு பூச்சியிலிருந்து எல்லாவற்றுக்கும் இந்த உலகத்தில் அததற்குத் தேவைப்படுகிற ஆகாரத்தை அவர்தான் வைத்திருக்கிறார். அப்படியானால் அவர் இருதயத்தில் எத்தனை அன்பு இருக்கவேண்டும்?

அன்பு இருப்பது மட்டுமல்ல. நாம் ஒழுங்கில்லாமல், தப்பும் தவறுமாகக் காரியம் செய்வது போலவா அவர் செய்கிறார்? அவரை 'ஏன்?' என்று கேட்டுக் கண்டிப்பதற்கு அவருக்கு மேல் எவரும் இல்லாவிட்டாலும் அவர் எத்தனை ஒழுங்கோடு தினமும் இந்தப் பூமியை ஒரு முறை சுழலவிட்டுப் பகலையும் இரவையும் படைக்கிறார்? இதே போல் இந்தப் பூமி சரியாக ஒரு வருஷத்தில் சூரியனைச் சுற்றி வரச் செய்து பலவிதமான பருவங்களை உண்டாக்குகிறார்! ஒவ்வொன்றும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ஒழுங்கு செய்திருக்கிறார். நாமும்

Koviloor Digital Library

அவரைப் போல் மனசில் அன்பாக இருக்க வேண்டும்; காரியத்தில் ஒழுங்காக இருக்க வேண்டும். இந்த ஒழுங்குக்குத் தான் தர்மம், அறம் என்று பெயர்.

அன்பும் அறமும் உருவான ஸ்வாமியை வேண்டினால் நமக்கும் இவை உண்டாகும். அவருடைய அருளை நினைத்து நன்றி செலுத்துவதே மன அழுக்கை யெல்லாம் போக்குகிற பெரிய ஸ்நானம்.

நல்ல பிள்ளைகளாவதற்கு வேண்டுக!

கெட்ட பிள்ளையாவது எளிது. ஆனால் அந்தப் பெயர் எடுத்துவிட்டால் அப்புறம் நமக்கு எத்தனை அவமானம், கஷ்டம்! வாழக்கையில் முன்னுக்கு வரவே முடியாது. நல்ல பிள்ளையாவது கடினம் என்று தோன்றலாம். ஆனால் கடவுளின் அருளைத் துணை கொண்டால் இதையும் எளிதாகச் சாதித்துவிடலாம். நல்ல பிள்ளை என்று பெயர் வாங்கினால்தான் வாழ்க்கையில் முன்னேற நல்ல நல்ல வாய்ப்புக்கள் வரும். ஒருநாள் இல்லா விட்டால் ஒரு நாள் கெட்டவன் தண்டனை பெறத்தான் செய்வான்.

ஸ்வாமியின் பாத கமலங்களை விடாமல் பிடித்துக் கொண்டு, “எனக்கு வேறு கதியில்லை; நீதான் நல்ல வழி காட்ட வேண்டும்” என்று வேண்டிக்கொள்ள வேண்டும். பிஞ்சான உங்கள் குழந்தை உள்ளத்திலிருந்து உண்டாகிற வேண்டுகோளுக்கு ஸ்வாமி நிச்சயம் பலன் தருவார். உள்ளத் தூய்மையை இவ்வாறு இளவயதிலேயே பெறுவது தான் எளிது. பிற்பாடு அழுக்கு ரொம்பவும் தடித்துப் போக விட்டால் நல்ல வழி தேட வேண்டும் என்ற எண்ணம் கூடப் போய்விடும். எனவே, இன்றிலிருந்து பகவானைப் பிரார்த்தியுங்கள். உங்களை அழுக்கேயில்லாமல் பளிச்சென்று வைத்து உங்களுக்கு ஒரு குறைவும் வராமல் ஸ்வாமி காப்பாற்றுவார்!

Koviloor Digital Library

அம்மை அப்பன்

உலகக் குடும்பத்தின் அம்மாவும் அப்பாவும்

இந்த உலகம் முழுவதையும் நடத்துகிறவர் ஸ்வாமி. இதில் மனிதர்கள் இருக்கிறோம். மிருகங்கள் இருக்கின்றன. பட்சிகள் இருக்கின்றன. புழு பூச்சிகள் இருக்கின்றன. மரம், செடி, கொடி, புல், பூண்டு எல்லாம் கொண்ட ஒரு பெரிய குடும்பமே உலகம். அந்தக் குடும்பத்தை நடத்துகிறவர் ஸ்வாமி.

நம்முடைய சிறிய குடும்பம் ஒவ்வொன்றையும் அம்மா, அப்பா என்ற இரண்டு பேர் நடத்துகிறார்கள். குடும்பம் நடப்பதற்குச் சாமான்கள் வேண்டியிருக்கின்றன. அவற்றை வாங்குவதற்குப் பணம் வேண்டியிருக்கிறது. அப்பா என்கிறவர் உத்தியோகம் செய்து, சம்பளமாகப் பணம் வாங்கிக்கொண்டு வருகிறார். அந்தப் பணத்தைக் கொண்டு சாமான்கள் வாங்கிப் போடுகிறார். இந்தச் சாமான்களை வைத்துக் கொண்டு அம்மா சமைத்துப் போடுகிறாள்; மற்ற வீட்டுக் காரியங்களைச் செய்கிறாள்.

ஸ்வாமி மனிதர்களை விட ரொம்பப் பெரியவர்; நம்மை விட அவருக்குச் சக்தி ரொம்பவும் அதிகம். அதனால் அவருடைய உலகக் குடும்பத்தை நடத்துவதற்கு ஒருத்தர் சம்பாதிக்க வேண்டும், இன்னொருத்தர் சமைத்துப் போட வேண்டும் என்று இல்லாமல் அவர் ஒருவராகவே நடத்திவிடுகிறார்.

Koviloor Digital Library

நம் அப்பா அம்மா மாதிரி, ஸ்வாமி சரக்குகள் வாங்க வெளியே போக வேண்டாம். எல்லாச் சரக்குக்கும் மூலம் அவரேதான். குணங்களும் சரக்குகள் மாதிரிதான். இந்தக் குணங்கள் எல்லாவற்றுக்கும்கூட ஸ்வாமியேதான் மூலம். அவர் குணக்கடல். எல்லாக் குணங்களும் அவரிடமிருந்து தான் வந்தன. அப்பாவும் அம்மாவும் நமக்குத் தருகிற சாமான்களுக்கெல்லாம் மூலம் ஸ்வாமியிடமே இருக்கிற மாதிரி, அவர்கள் இருவரும் நம்மிடம் காட்டுகிற அன்புக்கும் மூலம் ஸ்வாமியிடம்தான் இருக்கிறது.

நமக்கு எப்போதும் நல்லதையே நினைத்துக் கொண்டு, நம்முடைய சந்தோஷத்துக்காக எத்தனை கஷ்டத்தையும் தாங்கிக் கொள்கிற அன்பு நம் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இருக்கிறதல்லவா? நாம் நல்லவர்களாக வேண்டும்; புத்திசாலிகளாக வேண்டும்; நாம் வாழ்க்கையில் நன்றாக முன்னுக்கு வர வேண்டும் என்பதுதானே நம் பெற்றோரின் ஒரே குறிக்கோளாக இருக்கிறது? இதற்காகவே தான் அவர்கள் சில சமயங்களில் நம்மைத் தண்டிக் கிறார்கள், கண்டிக்கிறார்கள். இதைக் கொண்டு நாம் அவர்களிடம் கோபப்படக் கூடாது. நம்முடைய நல்லதை நினைத்தேதான் அவர்கள் கண்டிக்கிறார்கள் என்று உணர வேண்டும். அவர்கள் கோபித்துக்கொண்டாலும் அதற்குக் கூடக் காரணம் நம்மிடம் அவர்களுக்குள்ள அன்புதான். இந்த அன்பினால் தான் அவர்கள் நம்மை வளர்த்துப் படிக்க வைத்து, நமக்கு உடம்புக்கு வந்தால் இரவெல்லாம் கண் விழித்துக் கவனித்து, எல்லாக் காரியங்களும் செய்கிறார்கள். இப்பேர்ப்பட்ட அன்பு அவர்களுக்கு எங்கிருந்து வந்தது என்று பார்த்தால், இந்த அன்பு என்ற சரக்குக்கும் மூலம் ஸ்வாமிதான். ஸ்வாமியேதான் அப்பா அம்மா என்கிற உருவங்களில் வந்து நம்மிடம் அன்பைச் செலுத்துகிறார்.

Koviloor Digital Library

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

நம் அப்பாவையும் அம்மாவையும் ஸ்வாமியாக நினைக்க வேண்டும்.

இதையே மாற்றி ஸ்வாமியையும் அப்பா அம்மா என்ற உருவங்களில் நினைக்க வேண்டும்.

'கொன்றை வேந்தன்' என்ற நீதி நூலில் ஒளவைப் பாட்டி முதலில் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்கிறாள். இது தாய் தந்தையரைத் தெய்வமாக நினைப்பது. இதை அடுத்தே 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்கிறாள். 'ஆலயம் தொழுவது' என்றால் ஆலயத்திலுள்ள தெய்வத்தைத் தொழுவதேயாகும். அப்படித் தொழும்போது அத் தெய்வத்தையே தாய் தந்தையர் என அன்புடன் எண்ண வேண்டும்.

ஸ்வாமி எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்றால் அவருக்கு நம்மைப்போல் உருவம் இருக்க முடியாது. ஆனால் உருவம் இல்லாத ஒருவரை எப்படி நினைப்பது? அதனால் அவரை அப்பா அம்மா என்ற இரு உருவங்களில் நினைக்க வேண்டும். நமக்குத் தெரிந்தவர்களில் நம்மிடம் ரொம்ப அன்பாக இருப்பது தாய், தந்தையர்தானே? அன்பாக இருப்பவர்களை நினைத்துக் கொண்டால்தான் நமக்கும் சந்தோஷமாக இருக்கிறது. அதனால் ஸ்வாமியை அம்மாவாக, அப்பாவாக, இரண்டும் சேர்ந்த அம்மையப்ப னாக நினைத்துப் பக்தி செலுத்தவேண்டும்.

பார்வதி என்ற அம்மாவாகவும், பரமசிவன் என்ற அப்பாவாகவும் அவர் ஆகியிருக்கிறார்; லக்ஷ்மி என்ற அம்மாவாகவும் மஹாவிஷ்ணு என்ற அப்பாவாகவும் ஆகியிருக்கிறார்; சீதை என்ற அம்மாவாகவும் ராமர் என்ற அப்பாவாகவும் ஆகியிருக்கிறார்.

இந்த உருவங்களை நினைத்துக் கொண்டாலே அன்பாக இருக்கிறது. சந்தோஷமாக இருக்கிறது.

Koviloor Digital Library

மனமும் அறிவும் தெளிய

மனத்தில் அன்பும் சந்தோஷமும் இருக்கிறபோது தான் புத்தி தெளிவாக இருக்கிறது. புத்தி தெளிவாக இருக்கிற போது படித்தால் பாடம் நன்றாக ஏறுகிறது. கோபம், ஆத்திரம், அழுகை, பொறாமை எல்லாம் உண்டாகிறபோது புத்தி குழம்பிப் போகிறது. அப்போது படிப்பும் ஏறமாட்டேன் என்கிறது.

தினமும் கொஞ்ச நாழி ஸ்வாமியைப் பார்வதி – பரமசிவனாகவோ, மகாலக்ஷ்மி – மகாவிஷ்ணுவாகவோ நினைத்துக் கொண்டு விட்டீர்களானால் மனம் நல்லதாக ஆகும்; புத்தியும் தெளிவாக ஆகும். அதனால் படிப்பும் நன்றாக வரும். நன்றாகப் பாஸ் பண்ணிவிடலாம்.

ரொம்பப் புத்திசாலியாக இருந்து நிறைய மார்க் வாங்கிப் பாஸ் பண்ணினால்கூட, நல்லவன் என்ற பெயரெடுக்கா விட்டால் பிரயோஜனம் இல்லை. நல்ல பெயர் இல்லாவிட்டால் பிற்காலத்தில் வாழ்க்கையில் முன்னேறவே முடியாது. நல்லவனாக இருந்துவிட்டால் அது நமக்கும் சந்தோஷம்; மற்றவர்களுக்கும் சந்தோஷம்; பெரியவனான பின் வாழ்க்கையில் முன்னுக்கு வருவதற்கும் அதுதான் உதவும்.

நம்மை நல்லவர்களாக, புத்திசாலிகளாக, இரண்டாகவும் செய்வது ஸ்வாமியிடம் நாம் வைக்கிற பக்திதான்.

சிறுவயதிலேயே ஸ்வாமியிடம் பிடிப்பு

இந்தச் சின்ன வயதிலிருந்தே ஸ்வாமியைப் பிடித்துக் கொள்ள வேண்டும். இப்போது தான் அவரைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவும் முடியும். வயதாக ஆக வேறு பல தினுசான ஆசைகள் எல்லாம் வந்து, ஸ்வாமியை

Koviloor Digital Library

நினைக்க வொட்டாமல் இடைஞ்சல் செய்யும். இப்போது உங்களுக்கு அந்த இடைஞ்சல் இல்லை. அதனால் இப்போதே அவரிடம் பக்தி வைக்கப் பழகிவிட்டால் அப்புறம்கூட அந்த ஆசைகள் உங்களிடம் வந்து உபத்திரவம் பண்ணாது.

நீங்கள் எல்லோரும் க்ஷேமமாக இருக்க வேண்டும். நிறைய மார்க் வாங்கி, நன்றாய்ப் பாஸ் பண்ணி வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வரவேண்டும். இதற்கெல்லாம் வழியாக இப்போதிலிருந்தே ஸ்வாமியிடம், அம்மையப்பனிடம் பக்தியோடு இருங்கள்.

பிறருக்கு உபகாரமாக

இப்போது நாம் இத்தனை பேரும் ஒரே ஒரு மரத்தின் நிழலில் இருக்கிறோம்*. ரொம்ப வருஷங்களுக்கு முன் இத்தனூண்டு சின்னதாக இருந்த ஒரு செடிதான் இப்போது இவ்வளவு பேருக்கும் நிழல் தருகிற மரமாக ஆகியிருக்கிறது. இன்றைக்குச் சின்னவர்களாக இருக்கிற நீங்களும் பெரியவர்களாகிற போது இந்த மரம் மாதிரிப் பல பேருக்கு உபகாரமாக இருக்க வேண்டும்.

வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வர வேண்டும் என்பது பிறருக்கெல்லாம் உபகாரம் செய்வதற்காகத்தான். நிறையச் சம்பாதித்து அதையெல்லாம் நமக்காகவே செலவழித்துக் கொண்டால் ஸ்வாமி சந்தோஷப்படமாட்டார். அவருக்கு நாம் எப்படிக் குழந்தையோ அதே மாதிரி ஏழைகள், நோயாளிகள், அநாதைகள் எல்லாரும் குழந்தைகள். அந்தக் குழந்தைகளுக்கு நாம் உபகாரம் பண்ணாமல் நமக்கே செலவழித்துக் கொண்டால் ஸ்வாமி அதற்கப்புறம் நமக்கு அருள் செய்யமாட்டார்.

* இது ஒரு பள்ளியின் மர நிழலில் ஆற்றிய உரை.

Koviloor Digital Library

அதனால் நீங்கள் எல்லோரும் உலகத்துக்கு உங்களால் முடிந்த உபகாரத்தை செய்யவேண்டும். அதில் உங்களுக்கு ஒரு பெரிய சந்தோஷமும் திருப்தியும் உண்டாகும். நீங்களே சாப்பிடுவதை விட ஓர் ஏழைக்குச் சாப்பாடு போட்டால் அதில் உங்களுக்கு இன்னும் ஜாஸ்தி இன்பம் உண்டாகும். நாம் பிறந்திருப்பதே மற்றவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகத்தான் என்று தெரியும். இப்படி உங்களால் முடிந்த உதவியைச் செய்து நீங்கள் மற்றவர் களின் மனத்தைக் குளிர வைத்தால் அதைப் பார்த்து ஸ்வாமியும் உங்களிடம் மனம் குளிர்ந்து நிரம்ப அருள் செய்வார்.

உங்களிடம் மற்றவர்களுக்கு நல்ல அபிப்பிராயம் வந்தால் அவர்களும் நீங்கள் ஸ்வாமியைத் தொழுவதைப் பார்த்துத் தாங்களும் தொழுவார்கள். பக்தியினால் உங்களுக்கு உண்டாகிற ஆனந்தமும் நல்லறிவும் அவர்களுக்கும் கிடைக்கும். ஆனபடியால் நீங்கள் ஸ்வாமியிடம் பக்தியாக இருப்பதே எல்லாவற்றையும் விடப் பெரிய பரோபகாரமாகிறது.

கெட்ட குணங்கள் தாக்காமலிருக்க

அவ்வப்போது பொறாமை, கோபம் எல்லாம் வரத்தான் செய்யும். சண்டைக்குப் போவோமா, சுவரில் திட்டி எழுதுவோமா என்று தோன்றும். ஆனால் இதுகளில் புத்தி போனால் படிப்புக் கெட்டுப் போகும். நல்ல பெயரும் எடுக்க முடியாது. இதற்காகத்தான் தினமும் எழுந்தவுடனும், இரவு தூங்கும் முன்பும் ஸ்வாமியைப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

நம்மை உருட்டித் தள்ளுகிற மாதிரி பெரிய காற்று அடித்தால் தூணைப் போய் பிடித்துக் கொள்கிறோ மல்லவா? அதே மாதிரி கோபம், பொறாமை முதலிய

Koviloor Digital Library

கெட்ட குணங்கள் நம்மைத் தாக்குகிற போது அம்மையப்பனாக இருக்கிற ஸ்வாமியை பிடித்துக்கொள்ள வேண்டும். நாம் விழாமல் அவர் காப்பார்.

வேளைதோறும் ஐந்து நிமிஷம் வேண்டுதல்

அதனால் இன்றிலிருந்து தினமும் இரண்டு வேளை ஐந்து ஐந்து நிமிஷம் ஸ்வாமியை அம்மையப்பனாக நினைத்துப் பிரார்த்தனை பண்ணுங்கள். "நான் கெட்ட வழி போகக்கூடாது. எனக்கு நல்ல புத்தி தா" என்று அன்போடு சந்தோஷமாகப் பிரார்த்தனை பண்ணுங்கள். இதனால் நல்ல மனம், உறுதியான புத்தி, படிப்பிலே பாஸ், பிறகு உயர்ந்த உத்தியோகம், பிறர் எல்லாருக்கும் உபகாரமான நல்ல வாழ்க்கை எல்லாம் உங்களுக்கு ஏற்படட்டும்.

அரோஹரா

ஆரம்பத்தில் பார்வதி என்று ஒரு தாயாரைச் சொன்னேன். அவளுக்குப் பதி, கணவர் பரமசிவன், 'பார்வதீபதி' என்கிற அவரே உலகுக்கெல்லாம் தகப்பனார். பெரிய தெய்வமானதால் அவருக்கு 'மஹாதேவன்' என்றும் பெயர். உங்களைப் போல் ஒரு குழந்தை அவரை "ஹரஹர" என்ற பெயரைச் சொல்லி ஓயாமல் வழிபட்டு வந்தது. அந்தக் குழந்தைக்கு ஞானசம்பந்தர் என்று பெயர். இந்தக் குழந்தை ஊர் ஊராக ஹரஹர என்று சொல்லிக்கொண்டு போவதைப் பார்த்து எல்லா ஜனங்களும் 'அரோஹரா' என்று கோஷம் போட்டார்கள். அந்தக் காலத்தில் உலகத்தில் இருந்த கெட்டதெல்லாம் அந்தக் கோஷத்தில் ஓடிப் போய்விட்டது. வையம் அதாவது, உலகம் துயர் தீர்ந்தது. அதாவது, கஷ்டமே இல்லாமல் ஆயிற்று. "என்றைக்கும் இதேமாதிரி ஹர ஹர சப்தம் எழும்பிக் கொண்டே இருக்கட்டும்; அதனால் உலகத்தின் கஷ்டங்கள்

Koviloor Digital Library

எல்லாம் போகட்டும்" என்று சம்பந்தக் குழந்தை தேவாரம் பாடிற்று.

அரன் நாமமே சூழ்க
வையகமும் துயர் தீர்கவே

அரன் என்றால் ஹரன். ஹரன் என்றால் சிவன்.

இப்போது நான் "நம: பார்வதீ பதயே!" என்று சொல்வேன். உடனே நீங்கள் அம்மையான பார்வதியையும் அவள் பதியான நம் அப்பா பரமசிவனையும் நினைத்துக் கொண்டு அன்றைக்கு அந்தக் குழந்தை சொன்ன மாதிரியே பக்தியோடு "ஹர ஹர மஹாதேவா" என்று சொல்ல வேண்டும்.

நம: பார்வதீ பதயே!
ஹர ஹர மஹாதேவா!

Koviloor Digital Library

வாலிப மாணவர்களுக்கு

உணர்ச்சி வெள்ளமும் கட்டுப்பாட்டு அணையும்

யௌவனம், வாலிபம் என்பது உணர்ச்சி வேகங்கள் கட்டறுத்துக் கொண்டு புரளுகிற பருவம். தற்காலத்தில் மிதமிஞ்சிய சக்தியுடன் ஸர்வ ஜனங்களின் மேலும் ஆளுகை செலுத்திக் கொண்டிருக்கிற பாலிடிக்ஸ், ஸினிமா, பத்திரிகைகள், ஸ்போர்ட்ஸ் ஆகியவை அத்தனை பேரையுமே உணர்ச்சி வேகங்களில் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கையில், தன்னியற்கையாகவேறு அந்த வேகங்களின் எழுச்சிக்கு ஆளாகியிருக்கிற வாலிப வயசு மாணவர்கள் — கல்லூரிகளில் படித்துக் கொண்டிருப்பவர்கள் — ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்பட்டிருப்பது இரண்டு பங்கு [மடங்கு] சிரமம்தான். ஆனாலும் தங்களுடைய எதிர்காலத்துக்கான வளர்ச்சியை முன்னிட்டு அவர்கள் இந்த சிரமத்தை சமாளித்தே தீர வேண்டும். அதிலேயேதான் தேசத்தின் தற்கால அமைதி, எதிர்கால அமைதி ஆகியவையும் அடங்கியிருக்கின்றன. வாலிப வயஸுக்காரர்கள் கட்டுப்பாடு இழந்தால் அவர்களும் கெட்டுப் போய், வீட்டிலும் அமைதி குலைந்து கெட்டுப் போய், நாட்டிலும் அமைதியின்மையே அடிவேர் வரை பரவிக் கெடுத்து விடும்.

கட்டறுத்துப் புரளுகிற இந்த உணர்ச்சி வெள்ளத்துக்கு அணைபோட்டு வைப்பதாகத்தான் நம்முடைய முன்னோர்களான பெரியவர்கள் பாலப் பிராயத்தில் அக்ஷராப்யாஸம் ஆன நாளிலிருந்து தெய்வ பக்தியையும், குரு பக்தியையும், அந்த பக்தியிலிருந்து

Koviloor Digital Library

விளைகிற விநயம் என்கிற அடக்க குணப் பண்பையும் விதித்து, குருகுலத்தில் அதைப் பசங்களுக்கு நடைமுறை யாக்கிக் கொடுத்தார்கள்.

பக்தி அவசியம்

இப்போது குருகுலவாஸக் கல்வி முறை அடிபட்டுப் போய்விட்டாலும், இன்றைக்கும் யுவர்களைத் தப்பான உணர்ச்சி வேகங்கள் அடித்துக் கொண்டு போகாமல் ரக்ஷிப்பதற்கு பக்தியையும், விநயத்தையும் விட்டால் வேறே உபாயமில்லை. தெய்வத்திடம் பக்தியும், அகத்திலே தாயிடமும்-தகப்பனாரிடமும் கல்விசாலையில் ஆசிரியர் களிடமும் கட்டுப்பட்டு மரியாதை காட்டுவது என்ற ரூபத்தில் ப்க்தியும் மாணவர்களுக்கு அத்யாவச்யம்.

பக்தியுடன் ஸ்வாமியிடம் தினமும் இரண்டு வேளையும் கால்மணி, அரைமணி நேரம் ஜபம், பிரார்த்தனை செய்வது, அவ்வப்போது கோவிலுக்குப் போவது, ஸத்கதா ச்ரவணம் செய்வது, தெய்விகமான ஆத்ம ஸம்பந்தமான நூல்கள் கொஞ்சம் படிப்பது ஆகியன அவர்களுக்கு ரொம்பவும் நல்லது செய்யும். ஆனாலும் இங்கேயுங்கூட நான் ஜாக்ரதையுடனேயே கால்மணி-அரைமணி பிரார்த்தனை, 'கொஞ்சம்' தெய்வ பரமாகப் படிப்பது என்று கால அளவைக் குறுக்கிக் கொடுத்திருக்கிறேன். ஏன் குறுக்கினேன் என்றால் மாணவர்களுக்கு முக்கியம் படிப்புத்தான். அதிலேதான் அவர்கள் மிக நிறையக் கவனம் செலுத்தவேண்டும். அப்படிப் பார்க்கும்போதுதான் 'ஆவரேஜ்', சராசரி என்ற நிலையிலுள்ள ஒரு மாணவன் தெய்வ சம்பந்தமாகவேகூட ரொம்பவும் பொழுதைச் செலவு செய்து படிப்புக்கு ஊறு விளைவித்துக் கொள்ளக் கூடாது என்ற அபிப்பிராயத்தில் பக்தி பண்ணுவதற்கு கால அளவைக் குறுக்கிக்

Koviloor Digital Library

கொடுத்தேன். நல்ல புத்திசாலியாக இருந்து, படிப்புக்கு அதிகப் பொழுது செலவிடத் தேவையில்லாதவர்களுக்கு இந்தக் குறுக்கல் இல்லை. அதே ஸமயத்தில் அவர்களுக்குக்கூட இந்தக் காலகட்டத்தில் படிப்புத்தான் முதல் முக்யத்வம் என்ற ப்ரக்ஞை மறக்கக் கூடாது.

அடிப்படையில் அத்தனை மாணவர்களுக்கும் உறுதியான தெய்வ நம்பிக்கை என்பது இருந்து, தெய்வந்தான் தங்களை நல்வழியில் நடத்திச் செல்ல வேண்டும் என்ற பிரார்த்தனா சிந்தனை பலமாக ஸ்திரப்பட்டுவிட்டால் போதும், தெய்வ பக்திக்காக எவ்வளவு பொழுதை ஒதுக்குவது என்பது அடுத்த பக்ஷம் தான். அது அவரவரும் படிப்பில் எப்படி, கெட்டிக்காரரா இல்லையா என்பதைப் பொறுத்து அமையும். கெட்டிக் காரர்கள் படிப்புக்குப் பொழுதைக் குறைத்துக் கொண்டு பக்தி பண்ணுவதற்கு ஜாஸ்தி செலவிடலாம். அப்படி யில்லாதவர்கள் இதற்கு மாறுதலாகச் செய்ய வேண்டும்.

படிப்புக் காலத்தில் தெய்வ விஷயமாகக் கூட ரொம்பவும் போய்விட வேண்டாம் என்று ஒரு பக்கம் சொல்லும்போதே, இன்னொரு பக்கம் அதிலும் இருக்க வேண்டிய அளவுக்கு ஈடுபாடு இல்லாவிட்டால் மனஸின் நல்ல வளர்ச்சி ரொம்பவும் பாதிக்கப்பட்டுவிடும் என்பதையும் வலியுறுத்தியாக வேண்டியிருக்கிறது. தெய்வ சிந்தனை, அதோடேயே இழைந்து வரும் தர்மம் என்கிற நெறிமுறைகள் ஆகியவை இல்லாவிட்டால் மனுஷ்ய ஜன்மமே வீண்தான்.

நன்னெறி வளர

இதைக் கவனத்துக்குக் கொண்டு வரக் காரணம் — பெரிய துரதிருஷ்டமாக, தற்காலக் கல்வி முறையில் தெய்வ நம்பிக்கைக்கும், அதோடேயே கை கோத்துக் கொண்டு

Koviloor Digital Library

வரும் தர்மம், நீதி என்கிற நன்னெறி போதனைக்கும் உரிய இடம் கொடுக்கப்படவில்லை என்பதுதான். படிப்புத் திட்டத்திலேயே இவை இடம் பெற்றிருந்தால் இவற்றுக்காக மாணவர்கள் எக்ஸ்ட்ரா பொழுது செலவிட அவசியம் இராது. இவை இல்லாவிடில் எந்தப் படிப்பும் பிரயோஜனமில்லை என்பதால் இவற்றை இப்போது மாணவர்கள் 'எக்ஸ்ட்ரா' பொழுதில்தான் ஸம்பாதித்துக் கொண்டாக வேண்டியிருக்கிறது. கலாசாலை விடுமுறை யான சனி, ஞாயிறுகளிலும், நவராத்ரி—கிறிஸ்துமஸ்— கோடை விடுமுறைகளிலும் மாணவர்கள் இப்படிப்பட்ட விஷயங்கள் கற்றுக் கொள்வதாக வைத்துக் கொள்ள வேண்டும்.

அவர்கள் கற்றுக்கொள்வது போலவே முக்யமான விஷயம் இப்போது மத போதனையும், நீதி போதனையும் கற்றுக் கொடுப்பதற்கு ஆங்காங்கே ஸங்கங்கள் அமைக்க வேண்டும். பேட்டைவாஸிகளான பெரியவர்கள் ஒன்று சேர்ந்து இந்த அத்யாவசியமான காரியத்தில் ஈடுபட்டு இப்படிப்பட்ட ஸங்கங்களை அமைத்துத்தரவேண்டும். நம்முடைய இளைஞர்கள் உத்தம புருஷர்களாக உருவாவதற்குச் செய்யவேண்டிய அத்யாவசிய பணி. அதை இளைஞர்களும் முற்றிலும் பயன்செய்து கொள்ள வேண்டும்.

அரசியல் வேண்டவே வேண்டாம்

பாலிடிக்ஸ், ஸினிமா, பத்திரிகை, ஸ்போர்ட்ஸ் என்று நான் சொன்னதில் பாலிடிக்ஸ் என்பது மாணவர்களுக்கு வேண்டவே வேண்டாம். தேச நடப்பு அதில்தானே இருக்கிறது என்று கேட்கலாம். தேச நடப்பு அதில்தான் இருந்தாலும் அந்த நடப்பை நல்ல கூர்மையான அறிவுடன் நடத்தித் தரவும் கல்வியில் தேர்ச்சி பெறுவதுதானே

Koviloor Digital Library

உதவும்? இப்போது கல்விக்கு இடையூறு செய்துகொண்டு பொலிடிகல் ப்ரசினைகளில் இறங்குவது அதை மேலும் உணர்ச்சி வேகத்தால் கெடுத்து, தங்களையும் கெடுத்துக் கொள்வதில்தான் முடியும். 'மேலும்' கெடுத்து என்று சொன்னேன். ஏனென்றால் தற்போது அரசியலில் யோக்யர்களும், யோக்யமான கொள்கைகளும் அபூர்வமாகிக் கொண்டே வந்து அது ஸ்வய நலத்துக்கும், ஆத்திர-க்ஷாத்திரங்களுக்குமே வளப்பமான விளை நிலமாகியிருக்கிறது. இந்த நிலையில் பக்குவ தசைக்கு வராத இளவயஸு மாணவர்கள் அதில் போய் விழுந்தால்?

இப்போது போலில்லாமல் பாலிடிக்ஸ் — அரசியல் — ஒழுங்காக, தார்மிகமாக இருந்தாலும், எதற்கும் உரிய பருவம் என்று ஒன்று உண்டாகையால், படித்துத் தேர்ச்சி பெற்று உத்யோகத்துக்குப் போய் வாழ்க்கைப் பொறுப்பு எடுத்துக் கொள்ளவே கடமைப்பட்டுள்ள மாணவ ஸமூஹம் அரசியலில் இறங்கவே கூடாது.

கல்வி கற்கிற காலத்தில் ஆற்ற வேண்டிய கடமை கல்வி கற்பதுதான். அதற்குக் குந்தகமாக அரசியலில் ஈடுபாடு காட்டுவது இன்றைக்கும், என்றைக்குமாக தனக்கும் ஹானி பண்ணி, தேச நடப்புக்கும் குந்தகந்தான் உண்டாக்கும்.

மாணவப் பிராயத்தில் படிக்கிற படிப்பும், அதோடு, அதைவிட, உணர்ச்சி ப்ரவாஹம் பெருகும் அந்த தசையில் ப்ரவாஹத்தைக் கட்டுப்படுத்துவதற்காகக் கைக்கொள்ளும் பக்தி, விநயாதி ஸத்குணங்களுந்தான் யுவர்களை நல்ல மனிதர்களாக, தர்மத்தின் புஷ்டி பெற்ற ப்ரஜைகளாக ரூபம் செய்யும். அந்தப் புஷ்டியைப் பெற்ற பலசாலிகளாக ஆகி, படிப்பு முடிந்த பின்பே, அந்த தர்மபலம் கொண்டு தேச நடப்பை தாங்கி தரித்து அதை தக்க வழியில் நடத்திக் கொண்டு போகவேண்டும். பலம் பெறுவதற்கான

Koviloor Digital Library

அப்யாஸம் பெறுகிற மாணவ தசையிலேயே, பலம் பெற்று விட்டவர் செய்ய வேண்டியதைச் செய்யப் புறப்படுவது அனர்த்தத்திலேயே முடியும். 'நாம் தேசத்தை நல்ல வழியில் நடத்துவதற்கு நல்ல புத்தி பலமும், தர்ம பலமும், தெய்வ பலமும் பெறவேண்டும். முதலில் இவற்றை நாம் பெற்று, நிலைப்படுத்திக் கொண்டால்தான் பிற்பாடு தேச ப்ரச்னைகளின் பளுவைக் கஷ்டப்படாமல், தாங்கி அதை அபிவிருத்தி செய்யமுடியும். ஆகவே பலம் பெறாத தற்போதைய ஸ்திதியில் நாம் ராஜீய வியவஹாரங்களில் இறங்குவது நமக்கும் நல்லதில்லை, ராஜ்யத்துக்கும் நல்லதில்லை' என்று யௌவனப் பிராயத்தினர் உணர வேண்டும்.

இவற்றில் புத்திபலத்தை முக்யமாகக் காலேஜில் பெறுகிற படிப்பாகவே பெறவேண்டும்; அதோடு அதைக் கொண்டுதான் நாளைக்கு இவன் ஒரு உத்தியோகத்திலே அமர்ந்து வீட்டை நடத்தமுடியும் என்றும் ஏற்பட்டிருக் கிறது. படிப்புக்குக் குந்தகம் பண்ணிக்கொண்டால் வீட்டை நடத்த முடியாமல் போகும். தன் வீட்டையே நடத்தாதவன் நாட்டை எப்படி நடத்தமுடியும்?

ஆகவே இந்தப் பிராயத்தில் செய்யவேண்டியது, தன்னை ஒரு நல்ல பிரஜையாக பலப்படுத்திக் கொள்வதும், தற்போது தனக்குள்ளதும், கல்யாணமான பின் தனக்கு ஏற்பட இருப்பதுமான வீட்டை நிர்வஹிப்பதற்குத் தேவையான அஸ்திவாரத்தைப் போட்டுக் கொள்வதும் தான். அதற்கப்புறம்தான் நாடு வருகிறது. பிற்பாடு அதன் நடப்புகளை நல்லபடி செய்வதற்கே இப்போது அதில் தலையிடாமல், தகுந்த யோக்யாதாம்சங்களைப் பெறவேண்டும்.

அரசியல்வாதிகள் தங்களுடைய ஆதாயத்தையே நினைத்துக்கொண்டு மாணவர்களையும் தங்கள் பக்கம்

Koviloor Digital Library

இழுக்கத்தான் பார்ப்பார்கள். மாணவர்கள் அப்படி இழுபடாதபடி அவர்களுக்குத் தகுந்த புத்திமதியை, அறிவுரையை அவர்களுடைய கல்வி ஸ்தாபனத்தினரும், அகத்துப் பெரியவர்களும் எடுத்துச் சொல்லிக்கொண்டே யிருக்க வேண்டும். இன்றைக்கு சீலமுள்ள பெரியவர்களாகவும், தலைவர்களாகவும் நம்மிடையே உள்ளவர்களும் அவர்களை உரியபடி எச்சரித்து, விஷயத்தை விளக்கிக் காப்பாக நிற்க வேண்டும்.

வாலிபர்களுக்கு இப்படி சும்மா சும்மாச் சொல்வதால் அலுப்பும் ஆயாஸமும் ஏற்படாத விதத்தில் — bore அடிக்காத விதத்தில் — பக்குவமாக, அவர்களுக்கும் அதில் ஒரு ருசி, 'இன்டரஸ்ட்' உண்டாகுமாறு சொல்ல வேண்டியதைச் சொல்லி, எச்சரிக்கை வேண்டியதில் எச்சரிக்கை ஏற்படுத்த வேண்டும். இது குறிப்பாக அறிவாளிகளான ஆசிரியர்மார்கள் கவனம் செலுத்திச் செய்யவேண்டிய காரியம்; பெரிய ஸேவை. தேசத்தின் முதிர்ச்சி பெற்ற தலைவர்களும் ஆகர்ஷணம் உள்ள முறையில் இப்படிப் பிரசாரம் செய்து மாணவர்களுக்கு விழிப்பு உண்டாக்கிக் கொண்டேயிருக்கவேண்டும்.

படிப்பு பாதிக்காமல் ஸேவை

தேசத்துக்கும் ஸமூஹத்துக்கும் மாணவப் பருவத்தில் செய்யக் கூடிய நல்லதுகளை, எல்லாக் கல்விசாலை களிலும் படிப்பு போக பாக்கித் துறை நடவடிக்கைகளுக்கும் extra-curricular activities என்று இடம் கொடுத்து வைத்திருக்கிறார்களல்லவா, அதற்கு உட்பட்டே படிப்புக்குக் குந்தகம் இல்லாதபடி செய்யத் தடையில்லை.

தாங்கள் படிக்கும் கல்வி நிலையத்தின் ஆதரவிலேயே நடத்தப்படும் இவ்வித ஸேவைகளில் ஈடுபடுவதோடு மாணவர்கள் நிறுத்திக் கொள்வது நல்லது. அதற்கு

Koviloor Digital Library

அதிகமாக பொதுநலப் பணிகளில் பிரவேசிக்க வேண்டிய தில்லை. பிற ஸ்தாபனங்களின் மூலமும் பணி செய்யப் படிப்புக்கு மிஞ்சிப் பொழுதிருந்தால் அப்போது வேண்டு மாயின் பெற்றோர் அநுமதியுடன் அவற்றில் உரிய அளவுக்கு ஈடுபடலாம். படிப்புக்கு பாதிப்பு கூடாது என்பது முக்கியம்.

இங்கே கல்வி நிலையங்களுக்கும் ஜாக்ரதை தேவை. பாடம்-படிப்பு என்பதைவிட இம்மாதிரி உலகத்துக்கான பணிகளாலேயே கல்வி நிலையத்துக்குப் பெயரும் புகழும் கிடைக்கக் கூடுமென்பதால் அந்த நிலையங்களே இவற்றுக்கு மிதமிஞ்சிய இடம் கொடுத்து, சராசரி மாணவர்களும், மந்தமானவர்களும் படிப்பில் முன்னேறாமல் பின்தங்கி நிற்பதற்கு வழி செய்து விடக் கூடாது. படிப்புக்கு முக்யத்வம் கொடுத்து நன்றாக எல்லை வகுத்துக் கொடுத்து விட்டே, வெளியுலகப் பணிகளை அவை மேற்கொண்டு, மாணவர்களைப் படிப்பின் அடிப்படையில் தரம் பிரித்து, அவரவர் அளவுக்கு உட்பட்டே அப்பணிகளில் ஈடுபடுத்த வேண்டும்.

ஆனால் இப்படி வெளியுலகுக்கு நல்லது செய்வதை அரசியல் கட்சிகளின் ஸம்பந்தத்தை அடியோடு விலக்கியே செய்யவேண்டும். அரசியல் கட்சித் தொடர்பு அவர்களுக்கு அடியோடு கூடாது.

சினிமா, போதைப் பொருட்கள், பத்திரிகைகள், ஸ்போர்ட்ஸ்

இழுப்புச் சக்திகளில் பாலிடிக்ஸ் மாதிரி நான் சொன்ன மற்றவை ஸினிமா, பத்திரிகைகள், ஸ்போர்ட்ஸ்.

அறிவு வளர்ச்சிக்கு உதவும் டாகுமெண்டரி தவிர ஸினிமா அடியோடு வேண்டாம்; பாலிடிக்ஸ் மாதிரித் தான் அதுவும் என்பதே என் அபிப்பிராயம். தற்போதைய

Koviloor Digital Library

ஸினிமாக்களைப் பற்றி நான் கேள்விப்படுவதிலிருந்து வேறு விதமாக என்னால் அபிப்ராயப்படமுடியவில்லை. ஆனாலும், எவரானாலும் மனோரஞ்சகமாகக் கொஞ்சம் பொழுதுபோக்கு இல்லாவிட்டால் வாழ்க்கையே இறுக்கிப் புழுங்குகிற மாதிரிதான் ஆகிவிடும். குறிப்பாக இந்த ஸ்வதந்திர யுகத்தில் இந்தப் பாயிண்டையும் கவனிக்காமலிருக்க முடியவில்லை. அதனால் என்னுடைய அபிப்ராயக் கண்டிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொடுத்து, எப்போதாவது ஒரு ஸமயம், இருப்பதற்குள் தரக் குறைவாக இல்லாதது என்று பெயர் வாங்கிய படங்களுக்குப் போவதென்று மாணவர்கள் வைத்துக் கொள்ளலாம் என்று 'கன்ஸெஷன்' கொடுக்கிறேன்.

ஸினிமாவுக்குச் சொன்னதேதான் மற்ற கலை நிகழ்ச்சிகளுக்கும். ஆடல்-பாடல், நாடகம் எந்தக் காலத்திலும் இருந்திருப்பதால், வரம்புக்கு உட்பட்டு அவற்றை மாணவர்களும் பார்த்துவிட்டு, கேட்டுவிட்டு போகட்டும் என்று ரொம்பவும் விட்டுக் கொடுத்தே சொல்கிறேன்! இதிலே ஆபத்து என்ன என்றால், கொஞ்சம் அதில் பிரவேசித்தாலே அது போதைப் பொருள் மாதிரி மேலே மேலே இழுத்துக்கொண்டு போவதுதான்.

போதைப் பொருள் என்று ஒரு வார்த்தை சொல்லி விட்டேன். இப்படி காபி, ஸிகரெட்டில் ஆரம்பித்துப் பல இருக்கின்றன. இவை மாணவர்களுக்கு ஒருநாளும் கூடவே கூடாது. பொதுஸேவை, ஸினிமா ஆகியவற்றில் நான் கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் சொன்னதுமாதிரி இங்கே 'ரிலாக்ஸ்' பண்ணுவதற்குக் கொஞ்சங்கூட இடமில்லை. நல்லதற்கே இல்லாத காபி, ஸிகரெட், இன்னும் நான் வாய்விட்டுச் சொல்ல ப்ரியப்படாத போதை வஸ்துக்கள் ஆகியவற்றின் பக்கமே மாணவர்கள் போகப்படாது.*

* Drugs எனும் போதை வஸ்துக்கள் பரவலாக ஆகாத காலத்தில் கூறியது.

Koviloor Digital Library

அடுத்த இழுப்பு பத்திரிகைகள். உணர்ச்சிகளைக் கிளறிவிட்டுப் பரபரப்பூட்டுகிறதாகவே தற்காலத்தில் பெரும்பாலான பத்திரிகைகள் இருப்பதாகத் தெரிகிறது. பத்திரிகைகள் ஆத்ம ஸம்பந்தமாகவும், கலாசார விஷயமாகவும், லோக நலனுக்கானதாகவும், அறிவை விருத்தி செய்வதாகவும் எவ்வளவோ சிறப்பான விஷயங்களை விநியோகிக்கமுடியும். ஆனால் நடைமுறை இதற்கு ரொம்பவும் மாறுபட்டிருப்பதாகவே தெரிகிறது. நல்லதற்கில்லாத விஷயங்களில் யுவர்களைக் கவரும் படியாகவே அவற்றில் பல விஷயங்கள் வருவதாகவும் பார்க்கிறேன்.

அப்படியிருக்கும்போது நல்லதையே பொறுக்கி யெடுத்து selective reading என்று மாணவர்கள் படிப்பது சிரமம்தான். சிரமம் என்பதால் விட்டுவிடக்கூடாது. இந்த வயஸில் பிடிவாத குணம் என்பது பலமாக இருக்கிற தல்லவா? அந்தப் பிடிவாதத்தையே நல்ல வழியில் 'சானலைஸ்' செய்து, ஸினிமா, பத்திரிகை ஆகியவற்றின் விஷயத்தில் நல்லதில் மட்டுமே ஈடுபடுவது என்று ஒரே பிடியாக இருக்கவேண்டும். சொல்வது ஸுலபம், செய்வது கஷ்டம் என்பது எனக்குத் தெரியாமலில்லை. ஆனால் மாணவர்கள் இன்றைக்குப் படிப்பில் உருப்படவும், நாளைக்கு உலகத்தில் ஸத் பிரஜைகளாக உருவாகவும் இந்தக் கஷ்டத்தை ஸாதித்தேயாகவேண்டும் என்பதா லேயே சொல்கிறேன். எனக்கே, அவர்களை நினைத்தால், நாலா திசைகளிலும் பலவித தப்பான forceகள் அவர்களைப் போட்டு இழுப்பதை நினைத்தால், பாவமாகத்தான் இருக்கிறது. ஸ்வாமியிடம் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஸ்போர்ட்ஸுக்கு வருகிறேன். ஆனால் அதுதான் இப்போது அநேக மாணவர்களுக்கு

Koviloor Digital Library

முதலாவதாக இருப்பதாகத் தெரிகிறது. மாணவர்களுக்கு விளையாட்டு ரொம்பவும் அவசியம்தான். தேக பலத்தை விருத்தி செய்து கொள்வது, ஸந்தோஷமாகத் துள்ளிக் கொண்டு விளையாடி வேலையின் அலுப்பையும் வாழ்க்கையின் சலிப்பையும் போக்கி கொள்வது, 'டீம் ஸ்பிரிட்' என்பதாக ஒரு கட்டுப்பாட்டில் ஒன்றுபட்டு உழைப்பது — என்றிப்படிப் பல நல்ல அம்சங்கள் விளையாட்டில் இருக்கிறது. ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அம்ருதமே நஞ்சாகும் என்று வசனம் இருக்கிறதே! அப்படித்தான் இப்போது ஆகியிருப்பதாக தெரிகிறது.

Sense of proportion — விகிதாசாரப் பாகுபாட்டு உணர்ச்சி — என்று ஒன்று சொல்வார்கள். அதாவது எது எதற்கு எவ்வளவு இடம் என்று நிர்ணயமாகப் பாகுபடுத்திக் கொண்டு அதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அர்த்தம். அப்படி தினமும் அரை மணி, ஒரு மணி விளையாட வேண்டியதுதான். அதற்கு மேல் அதையே ஸதா கால சிந்தனையாக்கிக் கொண்டுவிடக் கூடாது.

இப்போது யுவர்கள் விளையாடுவதைவிட அதிக நேரம் பெரிய பெரிய விளையாட்டுப் போட்டிகளில் பிற ஆட்டக்காரர்கள் — ஸ்போர்ட்ஸ்மென் என்கிறார்கள் — கலந்து கொண்டு ஆடுவதைப் போய் நேரில் பார்ப்பதிலோ, அல்லது அதைவிடப் பல மடங்கு நேரம் அதைப் பற்றிய 'கமெண்டரி' கேட்பதிலோ, பத்திரிகைகளில் sports column படிப்பதிலோதான் செலவழிக்கிறார்கள்*. நாள் கணக்கில், வாரக் கணக்கில், தினந்தோறும் மணிக் கணக்கில் இப்படியே செலவிடுகிறார்கள் என்று கேள்விப்படும்போது, 'ஐயோ, பொன்னான நேரத்தை இப்படி விருதா செய்யவா?' என்றுதானிருக்கிறது. 'டைவர்ஷன்' வேண்டுமென்றால் ஏதோ கொஞ்சம் பார்க்கட்டும், கேட்கட்டும்,

* டெலிவிஷன் வருவதற்கு முற்காலத்தில் கூறியது.

Koviloor Digital Library

படிக்கட்டும். ஆனால் பரீக்ஷையைத் தலைக்கு மேல் வைத்துக் கொண்டிருக்கிற போதுகூட 'கமென்டரி'யில் முழுகுவது என்றால் அது புத்திசாலிகள் செய்கிற காரியமாகவே இல்லையே! நம்முடைய மாணவர்கள் அப்படிப்பட்ட [புத்திசாலிகளல்ல என்கிற] பட்டம் பெறலாமா என்று இருக்கிறது.

பழங்காலக் கல்விக்கூடங்கள்

மொத்தத்தில் யௌவனப் பருவம் என்பது ஒன்றுக்கொன்று ரொம்பவும் எதிரெதிரான சக்திகளின் போராட்டமாகவே இருக்கும்படியாக இக்காலத்தில் ஆகியிருக்கிறது. இந்தப் பருவத்தில்தான் வேகம், துடிப்பு கட்டுக்கடங்காமல் பெருகுவது. ஆனாலும் இதே ஸமயத்தில்தான் ரொம்பவும் கட்டுப்பாடாக இருக்க வேண்டியும் இருக்கிறது. பழங்காலத்தில் பாலப் பிராயம் ஆகி, ஏழெட்டு வயஸிலேயே குருகுலம் என்று கொண்டு விட்டார்கள். அந்தச் சின்ன வயஸிலிருந்தே குருவின் வீடு, கல்விக்கூடம், இரண்டுமாக இருந்த குருகுலத்தில் வீட்டின் ஸ்வதந்திரம் கொஞ்சமும், கல்விக்கூடத்தின் கண்டிப்பு நிறையவுமாக இருந்த 'ஸெட்-அப்'பில் சிறுவர்கள் வளர்ந்து பழகியதால், வாலிப தசை வரும்போதும் ஒரு கண்டிப்பின் கீழ் கட்டுப்பட்டிருப்பது தன்னியற்கையாக ஸாத்யமாயிருந்தது. இப்போதோ அஸ்திவாரப் பிராயமான அந்தச் சின்ன வயஸில் ஸ்வக்ருஹத்திலே — சொந்த வீட்டிலே — ஒரே ஸ்வதந்திரமாக அடங்காமலிருப்பதும், அதனாலேயே அதற்குத் தனியாக உள்ள கல்விக்கூடத்திலும் அதே போக்கில் போய், கட்டுப்பாட்டுக்கு உடன்படாமலிருப்பதுமாக இருக்கும் நிலவரம் ஏற்பட்டிருக்கிறது.

ஸொந்த வீட்டுக்கும் குருகுலத்துக்கும் உள்ள அடிப்படையான வித்யாஸத்தால் இப்படிக் கோளாறாக

Koviloor Digital Library

நடக்கிறது. ஸொந்த வீட்டில் அப்பா-அம்மாவிடம் ரொம்பவும் ஸ்வாதீனம் கொடுத்துப் போகிறது. அவர்களும் வாத்ஸல்யத்தின் மீது செல்லம் கொடுப்பதில் போதிய அளவு கண்டித்து வளர்ப்பதில்லை. குருகுலத்தில் அப்படியில்லை. குரு அவச்யமான அளவுக்கே ப்ரியம் காட்டி, உரிய அளவுக்குக் கண்டிப்பு செய்பவர். அகத்தில் கண்டிப்புப் போதாமல் பள்ளிக்கூடத்தில் மட்டும் கண்டிப்பு என்று வரும் போது பசங்களுக்கு முரண்டு பிடிக்கத்தான் தோன்றும். இப்படியாக அஸ்திவாரப் பிராயத்தில் கட்டுப்பட்டுவிட்டால் அந்த தோஷம் அடுத்ததான காளைப் பருவம் என்றே சொல்லப்படுகிற வாலிப தசையில் நன்றாகவே தலைக்கேறத் தானே செய்யும்?

கட்டுப்பாடு தேவை

குருகுலவாஸ முறையைத் தற்போது சொல்லி என்ன ப்ரயோஜனம்? நடைமுறை ஸாத்யமில்லாத ஒன்றுக்காக மனப்பால் குடிப்பதாகத்தான் அது ஆகும். கறிக்குதவாத ஏட்டுச் சுரைக்காய்தான் இப்போது அதைப் பற்றிப் பேசுவது.

ஆனாலும் அது இல்லாத பெரிய குறையினால் ஏற்பட்டுவிட்ட காளைப் பருவ ஸ்வாதந்த்ரியத்தைப் போக்குவதற்கு ஏதாவது பண்ணித்தான் ஆகவேண்டும். கட்டுப்பாடில்லாத காளை எல்லாரையும் முட்டிவிட்டுத் தானும் அடி, சூடு வாங்காமலிருக்க ஏதேனும் பண்ணித் தானாகவேண்டும்.

ஆனபடியால், எப்படியோ ஓரப்படி இந்தக் காளைக்கு மூக்கணாம் கயிறு போட்டாகவேண்டும். அப்போதுதான் அது தனக்கும் உபயோகமாக, மற்ற பேருக்கும் உபயோகமாக உருவாக முடியும்.

Koviloor Digital Library

மிருக ஜாதிக்காளைக்கு வேறு மநுஷ்யர்கள்தான் மூக்கணாங்கயிறு போடவேண்டும். மநுஷ்ய ஜாதிக் காளைக்கும் கல்விக்கூடத்து ஆசிரியர்களும் வீட்டுப் பெரிய வர்களும் அப்படிப் பண்ண வேண்டும்தான். ஆனால் அப்படி மட்டுமே முடித்துவிட்டால் இந்தக் காளை மநுஷ்ய ஜாதியாக இருப்பதற்கு அழகில்லை, கௌரவமில்லை. மநுஷ்ய ஜன்மா எடுத்ததற்கு அழகு, இந்தக் காளை ஸ்வயமாகத் தானேயும் கட்டுப்பாடு, அடக்கம் என்ற மூக்கணாங்கயிற்றைப் போட்டுக் கொள்வதுதான். தனக்கு மற்றபேர் மூக்கணாங்கயிறு போடும்போதும் முரண்டு பிடிக்காமல், இஷ்டப்பட்டு அதற்கு காட்டிக்கொண்டு நிற்க வேண்டும்.

பெரியவர்களின் பங்கு

நிஜமான மநுஷ்யர்களாக நல்லபடி வளர்ச்சி பெறாமல் தாங்கள் வீணாகப் போய்விடக்கூடாது என்ற கவலை, தாபம், விசாரம் மட்டும் வாலிபர்களுக்கு இருந்து விட்டால் போதும்; ப்ரியப்பட்டு மூக்கணாங்கயிறு போட்டுக் கொண்டு விடுவார்கள்; மற்றவர்கள் போடுவதற்கும் இஷ்டப்பட்டு விட்டுவிடுவார்கள்.

அவர்களுக்கு இந்தக் கவலையை எப்படி உண்டு பண்ணுவது? பெரியவர்கள்தான் விடாமல் பிரியத்துடனும் பொறுமையுடனும் எடுத்துச் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும். அப்படிச் சொல்லவேண்டுமானால் சொல்பவர்களும் கட்டுப்பாடான வாழ்க்கை நடத்துபவர்களாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்களுடைய வாயுபதேசத்திற்கு என்ன மதிப்பு இருக்கும்? அதற்கு யார் காது கொடுப்பார்கள்? அதுவும் generation gap என்று நன்றாகவே ஊறிப் போய்விட்ட இளந்தலைமுறைக்காரர்கள் கேட்பார்களா? அவர்களுக்

Koviloor Digital Library

காகவே gap தெரியாவிட்டாலும், இக்காலச் சிந்தனையாளர்களும், மனோதத்வ ஆராய்ச்சியாளர்களும் நவநாகரிகர்களும் சொல்லிக் கொடுத்தாவது இப்படி ஒரு gap–ஐ தெரிந்து கொண்டு விட்ட இளந்தலைமுறைக்காரர்கள் கேட்பார்களா?

தற்காலத்திலுள்ள பெரும்பாலான பெரியவர்கள் இந்தக் கட்டுப்பாடான வாழ்க்கை நடத்தும் விஷயத்தில் கேள்விக்குரியவர்களாகத்தான் இருப்பதாகத் தோன்றுகிறது. அவர்களுடைய வார்த்தைக்கு என்ன 'வால்யூ' இருக்கும்? ஆகையினால் இளம் தலைமுறையினரை உத்தேசித்தாவது வயதான தலைமுறையினர் நன்னெறிகளில், — நல்லொழுக்கங்கள் என்கிறவற்றில் — கட்டுப்பட்டு வாழ ஆரம்பிக்கவேண்டும். அதை அடுத்த தலைமுறையினருக்கும் உரிய முறையில் பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும்.

சுயக்கட்டுப்பாடே பெரிய சாகஸம்

இப்படி மற்றபேர்தான் தங்களை நல்வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்று வாலிபர்கள் விட்டு விடாமல் தாங்களாகவே நல்வழிப்படுவதுதான் அழகும் கௌரவமும். பெரியவர்கள் இவர்களுக்கு உதாரணம் காட்டுவதற்குப் பதில் இப்போதுள்ள ஸ்திதியில் இவர்களே பெரியவர்களுக்கு உதாரணம் காட்டும்படித் தங்களை உசுப்பி எழுப்பிக் கொண்டால் அதுதான் யௌவன ஸாஹஸங்களில் ரொம்பவும் விசேஷமான 'க்ரெடிடபி' ளான ஸாஹஸமாக இருக்கும்.

'அட்வென்ச'ருக்குப் பறக்கும் யுவ ஸமூஹத்தில் அங்கங்கே சில பேராவது இந்த 'அட்வென்ச'ரில் புறப்பட்டு, தங்களுடைய ஸாஹஸ ஸாமர்த்தியத்தால் மற்ற மாணவர்களையும் அந்த 'ஸ்பிரிட்' தொற்றிக் கொள்ளுமாறு

Koviloor Digital Library

செய்யவேண்டும். இதுதான் என் ஆசை. இதற்காகவே, எவரைப் போல் வித்யா ஸ்வீகரணம் செய்த கல்விமான் இல்லையோ, எவரைப்போல் ஸாஹஸம் செய்தவர் இல்லையோ, அதே ஸமயம் எவரைப்போல் விநய பக்தி உள்ளவரும் இல்லையோ அந்த ஆஞ்ஜநேய ஸ்வாமியைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

நடக்கமுடியாத ஒன்று நடக்க வேண்டுமென்று நான் ஆசைப்படுவதாகவும், ப்ரார்த்தனை பண்ணுவதாகவும் தோன்றலாம். வயதானவர்களாலேயே தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமலிருக்கும் போது காளைப் பருவத்தினரிடம் அதை எப்படி எதிர்பார்க்கலாமென்று தோன்றலாம். நான் எல்லா யுவர்களும் அப்படி ஆவார்களென்று ஒருநாளும் எதிர் பார்க்கவில்லை. நூற்றுக்கு ஏழெட்டுப் பேரைத்தான் எதிர் பார்க்கிறேன். நான் சொல்வது விசித்ரமாகத் தோன்றி னாலும், வயதானவர்கள்தான் ரொம்ப வருஷம் கட்டுப் பாடு இல்லாத போக்கில் பழகி ஊறிப் போய்விட்டதால் அந்தப் போக்கிலிருந்து மீளுவது முடியாமல் போகிறது. வாலிபர்கள் அப்படியில்லை. மனஸ் வைத்துவிட்டால், ஒரு பிடிவாதமான ஸங்கல்ப பலத்தில் மனஸுப்படியே ஸாதித்துக் கொள்கிற சக்தி அவர்களுக்கு உண்டு. அப்படி ஏழெட்டு பெர்ஸென்ட் இந்த விஷயத்தில் புறப்பட்டால் போதுமென்றுதான் நினைக்கிறேன். வயதானவர்கள் தங்கள் விஷயம் தங்களோடு என்று முடித்து விடுவது போலில்லாமல் வாலிபர்கள் dynamism உள்ள உத்ஸாஹிகளாகத் தங்கள் வழியில் மற்ற ஸகாக்களையும் இழுக்க முடியுமாதலால் இந்த ஏழெட்டுப் பெர்ஸன்டே ஸங்கமாகச் சேர்ந்து காரியம் செய்ய ஆரம்பித்தால் மற்ற வாலிபர்களிலும் கணிசமான பேரை கட்டுப்பாட்டு நெறிகளில் கொஞ்ச நஞ்சமாவது கொண்டு வர முடியும் என்பதே என் நம்பிக்கை.

Koviloor Digital Library

புதுவிதமான மாணவர் யூனியன்

மாணவர் யூனியன் என்று தற்போது வைத்துக் கொண்டு உரிமைப் போராட்டம் நடத்துகிறார்களோல்லியோ? அதற்குப் பதிலோ, ...கொஞ்சம் விட்டுக் கொடுத்துச் சொல்கிறேன்..... அதோடு கூடவோ, தாங்கள் ஸஜ்ஜனங்களாக, அதாவது நன்மக்கள்–மேன்மக்கள் என்பவர்களாக உருவாகிற உண்மையான உரிமைக்காக ஒரு யூனியன் அவர்கள் அமைத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு ஏழெட்டு நல்ல பசங்கள், நல்ல செயலூக்கமும் விட்டுக் கொடுக்காத மனோபலமும் கொண்டவர்களாக இதற்காகச் சேர்ந்துவிட்டால் போதும். அவர்களே மற்றவர்களையும் தட்டியெழுப்பி இப்படி ஒரு யூனியனை ஏற்படுத்திவிடமுடியும்.

அதம்பிக் கொண்டு, 'தான்' என்று புறப்படுகிற பிராயத்தில், தானும் அடங்கி விநயமாக ஆகி, மற்றவர்களையும் ஆக்குவதற்கே அதம்பிக்கொண்டு அங்கங்கே ஏழெட்டுப் பசங்கள் புறப்பட்டுவிட்டால் 'ஸீன்' அப்படியே மாறிவிடும்; இரும்புக் காலமாக, கரிக்கட்டைக் காலமாக இருக்கிற தற்காலம் பொற்காலமாகிவிடும்!

கல்வியும் பணிவும்

உணர்ச்சி வேகங்களின் பிரவாஹம் வியாதியாகப் பிடித்துக் கொண்டிருக்கிற போது கல்விதான் அதற்கு மருந்து. மூளை வளர்ச்சி மட்டுமின்றி முழு மநுஷ்ய வளர்ச்சிக்கான கல்வியாக அது இருக்கவேண்டும்.

மருந்து சாப்பிடும்போது பத்தியம் வைக்காமலிருக்க மாட்டார்கள். மருந்தைவிடக் கூடப் பத்தியமே வியாதி தீர்ப்பதில் அதிக உபகாரம் செய்வதும் உண்டு.

Koviloor Digital Library

அப்படி, 'வித்யை' என்கிற கல்வி மருந்தோடு சேரும் பத்தியமாக 'விநயம்' என்ற கட்டுப்பாடு, எளிமையை ஆன்றோர் வைத்திருக்கிறார்கள். வித்யையும் விநயமும் யுவப் பிராயத்தினருக்கு இரண்டு கண்கள் மாதிரி.

இப்போது விநயத்தில் அடங்கி, தாழ்ந்து இருந்தால் பிற்பாடு உச்ச நிலைக்கு உயரலாம். கால்தூசியை உதாரணம் காட்டுவார்கள். அது நம்முடைய காலுக்கு அடியில் பொடியூண்டாக எழும்புகிறது. ஆனால் சட்டென்று காற்றிலே அந்த பொடி உயர்ந்து நம் தலைக்கு மேல் போய்விடுகிறதல்லவா? அப்படி, கல்வி கற்கும் நாளில் அடிநிலையில் அடங்கியிருந்தால் பிற்பாடு வாழ்க்கைக்குப் பொறுப்பெடுத்துக் கொள்ளும் நாளில் உயர்ந்த ஸ்தானம் பெறலாம்.

இந்த உண்மை நம்முடைய மஹத்தான நாகரிகத்துக்கும் கலாசாரத்துக்கும் வார்ஸாக உள்ள யுவர்களின் உள்ளத்தில் பதிய வேண்டும். பகவான் அதற்கு க்ருபை பண்ணவேண்டும்.

நல்லதை விருத்தி செய்து கெட்டதைக் குறைக்க வேண்டும்

லோகம் என்று இருந்தால் அதில் எல்லாமே நல்லதாக இல்லாமல் கெட்டதும் இருக்கத்தான் செய்யும். ஸ்ருஷ்டி தோன்றிய நாளாக இப்படித்தான் இருந்து வந்திருக்கிறது. 'முடிவிலே, இந்த லோக வாழ்க்கையே — அதிலே நல்ல வாழ்க்கை என்று சொல்கிறதும் உள்படத் தான் — நிஜமில்லை; லோகாதீதமான, மாயாதீதமான ஒன்றுதான் நிஜம்; இதிலிருந்து அதற்குப் போய்ச் சேருவதுதான் நமது முடிவான லக்ஷ்யமாக இருக்க வேண்டும்' என்று நமக்குக் காட்டுவதற்காகவே ஸ்வாமி

Koviloor Digital Library

இந்த லோகத்தில் கெட்டதுகளையும் வைத்திருக்கிறார் போலிருக்கிறது.

நாம் வாழுகிற இந்த பூலோகத்துக்கு 'மிச்ரலோகம்' என்று பெயர். அப்படியென்றால் 'கலப்பு உலகம்'. என்ன கலப்பு என்றால் நல்லதும் கெட்டதும் கலந்து இருப்பது தான். தேவலோகத்தில் எல்லாம் நல்லதே. அஸுர லோகத்தில் எல்லாம் கெட்டதே. மநுஷ்யர்களான நம்முடைய இந்த லோகத்திலோ இரண்டும் கலந்து மிச்ரமாயிருக்கும். அப்படித்தான் ஈச்வர நியதி. ஆனாலும் இதில் நல்லதைவிடக் கெட்டது ரொம்ப ஜாஸ்தியாகி விட்டால் நாம் அந்தக் கெடுதலிலேயே அழுந்தி அழுக்காகி இங்கேயிருந்து போய்ச் சேரவேண்டிய லக்ஷ்யமான நிஜத்தை அடைய முடியாமலே போய்விடும். அப்படி ஆகுமாறு விடப்படாது. பூர்வ யுகங்களிலுங்கூட நல்லதோடு கெட்டதும் இருந்தாலும் க்ருத, த்ரேதா, த்வாபர யுகங்களில் முறையே, நல்லதே ரொம்ப ஜாஸ்தி, 'ரொம்ப' என்று சொல்ல முடியாவிட்டாலும் ஜாஸ்தி, ஜாஸ்தி என்று சொல்ல முடியாவிட்டாலும் ஸமம் என்று மூன்று விதமாக இருந்திருக்கிறது. கலியில் நிலைமை மாறி, கெட்டது ஜாஸ்தியாயிருக்கும் என்றும் சாஸ்த்ரங்கள் சொல்கின்றன. அப்படிச் சொன்னதால் இங்கே முழுக்கக் கெடுதலே வியாபித்து, நல்லது எடுபட்டே போய்விடும் என்று அர்த்தமில்லை. ஏனென்றால் அப்போது 'கலப்பு லோகம்' என்ற இதன் பேரே பொய்யாகி இது அஸுர லோகமாக அல்லவா ஆகிவிடும்? அதோடுகூட, கலியின் கொடுமைக்கும் அதே சாஸ்திரங்களில் பரிஹாரம்-நிவாரணம் சொல்லியிருப்பதால், இங்கே இந்த யுகத்திலும் நல்லதற்குப் பாதியளவு இடமில்லாவிட்டாலும், நாற்பது சதவீதமாவது இடமுண்டு என்று காட்டுவதாகவே

Koviloor Digital Library

ஏற்படுகிறது. தற்காலத்தில் ஆகியிருப்பதுபோல் அந்த அளவுக்கும் கீழே நல்லது போய்விடுவதற்கு நாம் இடம் தரப் படாது. லோகம் பூராவும் இப்போது காணப்படுகிற மாதிரி கெட்டதிலேயே மேலும் மேலும் போய் விழுந்து மீட்சியே இல்லாமலாகிவிடக்கூடாது. அதற்கு நல்லதை விருத்தி செய்து, கெட்டதைக் குறைக்கவேண்டும். முழுக்கக் குறைத்து ஸைஃபர் பண்ணிவிட முடியாதுதான். ஆனாலும் நல்லதை அது அமுக்கிப் போட்டுவிட்டுத் தானே தலையோங்கி நிற்க முடியாத அளவுக்குள்ளாவது அதைக் குறைக்கத்தான் வேண்டும்.

ஜெனரலாக உள்ள இந்த விஷயத்தையே வாலிப லோகத்துக்குப் பொருத்தித்தான் ஏதோ மனஸில் தோன்றியதைச் சொன்னேன். பூராவும் அப்படியே சீர்திருந்திவிடுமென்று எதிர்பார்த்து, சீர் திருத்துமாறு கேட்டுக் கொள்கிறேனென்று அர்த்தமில்லை. கெட்டதற்கே அடியோடு விட்டுவிடக்கூடாது என்பதற்காகவே முடிந்த மட்டும் திருந்துவதற்காக, திருத்துவதற்காக எனக்குத் தெரிந்த மட்டும் ஏதோ சொன்னேன்.

ஸாரத்தில் நம்முடைய இளம் தலைமுறையினர் உசந்த சரக்கு என்பதே என் அபிப்ராயம். நல்ல லோஹத்தில் [உலோகத்தில்] தடிமனாகக் களிம்பு ஏறினாற் போல இப்போது வேண்டாத அம்சங்கள் அவர்களைப் பிடித்துக் கொண்டிருக்கின்றன. அதை நன்றாகத் தேய்த்து சுத்தம் செய்து அவர்களைப் பளிச்சென்று ப்ரகாசிக்கப் பண்ணவேண்டும். இந்தக் காரியத்தைப் பெரியவர்களும் பண்ணவேண்டும்; அதோடு விட்டுவிடாமல் அவர்கள் தாங்களாகவேயும் பண்ணிக் கொள்ளவேண்டும். நல்லதற்கும் இந்த லோகத்தில் இந்தக் காலத்திலும் நிச்சயமாக இடம் உண்டு; கெட்டதன் ஆதிக்கத்தில் நல்லது

Koviloor Digital Library

அடித்துக் கொண்டே போய்விட்டது என்று ஆகாமல் அது ஜீவனுடன் வாழ இடம் உண்டு என்று ஆகவேண்டும். அப்படி மக்கள் — பெரியவர்கள், வாலிபர்கள் எல்லோரும் சேர்ந்து — ஆக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ஈச்வர க்ருபை அப்படி ஆக்கிக் கொடுக்கவேண்டும்.*

* சிறுவர்களுக்கும், வாலிபர்களுக்குமான இவ்வுரைகளைப் படித்த கையோடு, 'குரு–சிஷ்ய உறவு' என்ற உரையில் 'தற்கால ஆசிரியர்மார்களுக்கு' என்றுள்ள பிரிவைப் படித்தால் வட்டம் பூர்த்தியாகும்.

Koviloor Digital Library

கோ ஸம்ரக்ஷணம்
(பசு பராமரிப்பு)

தாயாக விளங்கும் பசு

வாயில்லா ஜீவன் என்று சொல்லப்படுகிற வர்க்கத்தைச் சேர்ந்ததே பசு. அப்படியிருந்தாலும் அது 'அம்மா' என்று அடிவயிற்றிலிருந்து வாய்விட்டுக் குரல் கொடுக்கிறது. 'அம்மா' என்று சொல்கிற அந்தப் பசுவே நமக்கெல்லாம் அம்மாவாக இருக்கிறது. அம்மாவின் முதல் லக்ஷணம் என்ன? பால் கொடுப்பதுதான். நாம் குழந்தையா யிருந்தபோது நம்மைப் பெற்றெடுத்த தாயார் நமக்குப் பாலூட்டி உயிரூட்டினாள். அந்தக் குழந்தைப் பிராயத்தி லேயே பசுவும் நமக்குப் பால் கொடுத்து ப்ராண ரக்ஷை தந்தது. பெற்ற தாய் பால் கொடுப்பது நம்முடைய குழந்தைப் பருவத்தோடு முடிந்துவிட்டது. ஆனால் நமக்கு வயதான பின்னரும் பசு தரும் பாலும், அதிலிருந்து பெறப்படுகிற தயிர், மோர், நெய் ஆகியனவும் நம் ஆஹாரத்தில் தொடர்ந்து இடம் பெறுகின்றன. ரொம்பவும் வயஸான தசையிலும், மற்ற ஆஹாரங்கள் குறைந்து அல்லது நின்றே போன நிலையிலும் ஒரு மனிதருடைய உடலில் உயிரை நிறுத்திக் கொடுக்கும் உணவாகப் பசு தருகிற பாலே இருக்கிறது. நம்முடைய ஆயுஸின் ஆரம்பத்தில் ஒரு குறுகிய காலகட்டத்தில் மாத்திரம் நம்மைப் பெற்றெடுத்த தாய் பால் தருகிறாளென்றால் பசுவோ நம்முடைய ஆயுள்காலம் பூராவும் பால் தருகிறது. அதனால்தான் உறவுகளிலேயே பரமோத்தமமான தாயுறவைப் பசுவுக்குத் தந்து 'கோமாதா' என்றே சொல்வது.

Koviloor Digital Library

'கோ' என்றால் 'பசு' என்று எல்லோருக்கும் தெரியும். Cow என்ற வார்த்தையும் 'கோ'விலிருந்து வந்தது தான். டிக்ஷனரியிலேயே அப்படித்தான் போட்டிருக்கும்.

அந்த கோவை மாதாவாகவே நம்முடைய தேசத்தில் தொன்றுதொட்டுக் கண்டு அன்பும் பக்தியும் செலுத்தி யிருக்கிறார்கள்.

அன்பும் சாந்தமும் நிறைந்த தோற்றத்தோடு நிற்கிற ஒரு பசுவைப் பார்த்தாலே பெற்ற தாயாரைப் பார்ப்பது போன்ற ஒரு உணர்ச்சி தோன்றும்.

பெற்றெடுத்துப் பாலூட்டும் மாதாவை ஜனக மாதா என்பது. அதே மாதிரி இன்னும் ஒரு சில மாதாக்களைச் சொல்வதில்தான் கோமாதாவும் ஒன்று. பூமாதா, ஸ்ரீமாதா என்று இன்னும் இரண்டு மாதாக்கள்.

கோமாதாவும் பூமாதாவும்

ஜனக மாதாவும், கோமாதாவும் பாலைச் சுரக்கிற மாதிரி, தானியங்கள், (உ)லோஹங்கள், தாதுக்கள் ஆகிய வளங்களையும், இவை எல்லாவற்றுக்கும் மேலாக நீர்வளம் என்பதையும் பூமி சுரக்கிறது. அதனால்தான் பூமாதா என்பது. பசுத்தாய் என்பதுபோல் புவித்தாய்.

மிருகமாகத் தெரிகிற பசு, ஜடமாகத் தெரிகிற பூமி ஆகிய எல்லாவற்றிலும் உயிருள்ளதும் அன்பே உருவ மானதுமான மாத்ருத்வத்தை — தாய்த் தத்துவத்தை — கண்டு கொண்டு நம்முடைய முன்னோர்கள் கோமாதா என்றும் பூமாதா என்றும் சொன்னார்கள்.

பூமாதாவே கோமாதாவாக உருக்கொண்டதும் உண்டு. த்வாபரயுகம் முடிகிற நிலைக்கு வந்து, கலியுகம் ஆரம்பிப்பதற்கு முந்தைய ஸமயம். லோகத்திலே துஷ்ட அரசர்களின் ரூபத்தில் அஸுர சக்திகள் தலையோங்கிய அப்போது பூமாதேவியால் அந்தப் பாப பாரத்தைத் தாங்க

Koviloor Digital Library

முடியவில்லை. அப்போது பூமாதேவியும், அவளுடைய சார்பிலே பிரம்மாவும் மஹாவிஷ்ணுவிடம் முறையிட்டு பிரார்த்தித்துக் கொண்டதன் மேல்தான் பகவான் க்ருஷ்ணாவதாரம் பண்ணினார். அந்த ஸமயத்திலே தன்னுடைய முறையீடு பகவானுடைய மனஸைத் தொட்டு இறக்கி அவரை ரக்ஷணத்துக்கு வரும்படிப் பண்ண வேண்டுமானால் தான் அவருடைய பத்னியான பூமாதேவி ரூபத்திலில்லாமல் அதைவிட ப்ரியத்துக்கும் பரிவுக்கும் உரிய தாயான கோமாதா ரூபத்தில் இருந்தால்தான் முடியும் என்பதால் பூமாதாவே கோமாதாவாக் உருவம் எடுத்துக்கொண்டுதான் போனாள் என்று புராணக்கதை இருக்கிறது. அதற்கேற்கத்தான் பகவான் கோபாலனாகப் பிறந்து, அந்த அவதாரத்தில் **கோக்க**ளோடு அத்யந்தமாக உறவாடினார்.

'கோ' என்றாலே பூமி என்றும் ஒரு அர்த்தம்.

க்ருஷ்ணர் பூர்ணாவதாரம். அம்சாவதாரம் என்பதாக பகவான் தன்னுடைய ஓரொரு அம்ச கலையை மட்டும் வெளிப்படுத்தியும் அவதாரங்கள் நிகழ்த்தியதுண்டு. பாகவதத்தில் சொல்லியிருக்கிற கணக்குப்படி பகவானுக்கு இருபத்து நாலு அவதாரங்கள். அந்த இருபத்து நாலில் நம் எல்லோருக்கும் தெரிந்த தசாவதாரங்கள் போக பாக்கியிருக்கிற பதினாலு பேரும் அம்சாவதாரங்கள். அப்படி பகவானின் அம்ச அவதாரங்களாக இருந்தவர் களில் ப்ருது என்கிற சக்ரவர்த்தியும் ஒருத்தர். அவர்தான் லோகத்தில் நாடு, நகரம் என்ற அமைப்புகளை முறைப்படி ஏற்படுத்தியவர். அவர் பூமாதாவையே கோமாதா ரூபத்தில் கண்டு அந்த பசுத்தாயிடமிருந்து அவரவர்களும் தங்கள் தங்களுக்கு இஷ்டமான ஸம்பத்துக்களை தங்கள் தங்கள் ஸ்வதர்மம் என்ற கன்றைக் கொண்டு கறந்து கொள்ளச் செய்தார் என்று பாகவதத்தில் சொல்லியிருக்கிறது.*

*4.18

Koviloor Digital Library

கோ ரூபத்தில் பகவானுக்கு எத்தனை ப்ரீதி என்பதற்காகச் சொன்னேன். **கோ**வுக்கும் அவரிடத்தில் அதேபோல ப்ரீதி. வேணுகோபாலனாக பகவான் இடது பாதத்தை பூமியில் ஊன்றிச் செங்குத்தாக வைத்துக் கொண்டிருக்கும்போது தாமரை மாதிரியான அவருடைய உள்ளங்காலை ஒரு **கோ** நக்கிக் கொண்டிருக்கும். சித்ரங்களில் அப்படியே போட்டிருக்கும்.

ஸ்ரீமாதாவும் கோமாதாவும்

கோமாதா, பூமாதா, ஜனக மாதா மாதிரியே ஸ்ரீமாதா என்று ஒரு மாதா. மற்ற மூன்று மாதாக்களுக்கும், அவர்கள் மாத்திரமல்லாமல் லோகத்திலுள்ள ஸகல மாதாக்களுக்கும், மாதா-பிதா-பத்னி-குழந்தை முதலிய ஸகல உயிரினங்களுக்கும், உயிரில்லாத அசேதனங்கள் அத்தனைக்குங் கூட மூலகாரணமாயிருக்கிற தாயான பராசக்தியே ஸ்ரீமாதா. அவளிடமிருந்து சுரக்கிற அருட்பாலால்தான் நம்முடைய ஜனகமாதாவுக்கும், கோமாதாவுக்கும் பால் சுரப்பது; அந்த அருட்பாலால்தான் பூமாதா தான்ய வளமும் நீர்வளமும் சுரப்பதும்.

அந்த ஸ்ரீமாதாவுக்கே கோமாதா என்பதையும் ஒரு பெயராக லலிதா ஸஹஸ்ரநாமத்தில் சொல்லியிருக்கிறது. ஸஹஸ்ரநாமத்தில் முதல் நாமாவே 'ஸ்ரீமாதா' என்பது. உள்ளே அந்த நாமாவளியில் 'குருமூர்த்தி:, குணநிதி:, **கோமாதா**' என்று வருகிறது. ஞானப் பாலூட்டும் 'குரு மூர்த்தி'யாகவும், ஸகல கல்யாண குணமாக இருந்து கொண்டு அருட்பாலூட்டும் 'குணநிதி'யாகவும் அம்பாளுக்குப் பெயர்கள் சொன்ன கையோடு 'கோமாதா' என்று சொல்லியிருப்பது விசேஷம். ஸ்ரீமாதாவான அம்பாள் வாஸ்தவமாகவே தேரழுந்தூரில் கோமாதாவாக வந்ததாக அந்த ஊர் ஸ்தல புராணத்தில் இருக்கிறது.

Koviloor Digital Library

அப்போது ரொம்பவும் பொருத்தமாக, கோபாலக்ருஷ்ண மூர்த்தியாகப் பிற்காலத்தில் வந்த அவளுடைய ஸஹோதரரான மஹாவிஷ்ணுவே பசு ரூபத்திலிருந்த அவளை ஸம்ரக்ஷித்தாரென்றும், அப்புறம் கோபாலரான அவர் பசுபதியான பரமேச்வரனுக்கு அவளைத் திருமணஞ் சேரியில் கன்யாதானம் செய்து கொடுத்தாரென்றும் ஐந்தாறு ஸ்தல புராணங்களை ஒன்றாக இணைத்துக் கதை இருக்கிறது.*

லௌகிகச் சிறப்பும் வைதிகச் சிறப்பும்

ப்ரத்யக்ஷத்தில் நமக்குப் போஷாக்கு மிகுந்த பாலைக் கொடுத்தும், இன்னும் எத்தனையோ விதங்களிலும் பயன்களைத் தருகிற **கோவே** அப்ரத்யக்ஷத்திலும் அதைவிட ஜாஸ்தியான பயன்களைத் தருகிறது. ப்ரத்யக்ஷம் என்பதை லௌகிகம் என்றும் அப்ரத்யக்ஷத்தை அலௌகிகம் என்றும் சொல்வது. அலௌகிகம் என்பதை விட தெய்விகம் என்றும் ஆத்மிகம் என்றும் சொன்னாலே இக்காலத்தில் புரியும். வாஸ்தவத்தில் அதை வைதிகம் என்றே சொல்லவேண்டும். ஏனென்றால் வேதம் காட்டிக் கொடுக்காவிட்டால் நமக்கு தெய்வத்தையும் தெரியாது, ஆத்மாவையும் தெரியாது. தெய்விகம், ஆத்மிகம் எல்லாம் வைதிகம்தான்.

நேராக நம்முடைய இந்த்ரியங்களுக்கு அகப்படக் கூடியதாகவும், விஞ்ஞான பூர்வமாக நிரூபித்துக்கொள்ள முடிவதாகவும் இருப்பது லௌகிகம். அப்படியில்லாமல், ஆனால் ஆத்மாவுக்கு நல்லது செய்வதாக இருப்பது வைதிகம்.

---

* கதை விவரத்திற்கு 'தெய்வத்தின் குரல்', இரண்டாம் பகுதியில், 'புராணம்' என்ற உரையில் 'பல வரலாறுகளிடையே தொடர்பு' எனும் பிரிவு பார்க்க.

Koviloor Digital Library

இந்த இரண்டிலும் பசுவின் பெருமையைப் பார்க்கிறோம். ஒரு பசுவிடம் லௌகிகமாகச் சிறப்புப் பொருந்தியதாக இருக்கும் விஷயங்களிலேயேகூட வைதிகச் சிறப்பையும் பார்க்கிறோம்.

பசும்பால் : முழு உணவு, ஸத்வ அபிவிருத்தி

உதாஹரணமாக அது தரும் பாலையே எடுத்துக் கொள்வோம்.

லௌகிகமாகத் தெரிவது, அத்தனை ஆஹார தினுஸுகளுக்குள்ளும் பசும்பால் ஒன்றுதான் ஒரு மநுஷ்யன் ஜீவிப்பதற்குத் தேவையான ஸகல ஊட்ட ஸத்தும் கொடுத்து complete food — பூர்ண ஆஹாரம் — என்று சொல்லும்படியாக இருக்கிறது. ஸாதாரணமாக, இப்படிப்பட்ட புஷ்டி ஊட்டுகிற வஸ்து என்றால் அது ஜீர்ணிப்பதற்கு ஸுலபமாக இருக்காது. ஆனால் பாலோ பச்சைக் குழந்தையும் ஸரி, பல்லு போன கிழவரும் ஸரி எளிதில் ஜீர்ணித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. மிகவும் பலஹீனனான நோயாளிக்கும் உரிய ஆஹாரமாக அது இருக்கிறது.

அலௌகிகமான வைதிகப் பார்வையில் பார்த்தாலோ அந்தப் பாலுக்கே ஸத்வ குணத்தை அபிவிருத்தி செய்கிற தன்மை இருக்கிறது. அலௌகிகம் தான் என்றாலும் இதை வெறும் நம்பிக்கையின் மேல் மட்டும்தான் ஏற்கவேண்டுமென்றில்லாமல், வெறும் க்ஷீர பானம் மாத்திரமே ஆஹாரம் என்று வைத்துக் கொண்டிருக்கும் ஸாதுக்கள் எவ்வளவு ஸாத்வீகமாக இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது வைதிகமான அலௌகிகத்துக்கே லோகத்தில் ப்ரத்யக்ஷ நிரூபணமும் பெற முடிகிறது.

Koviloor Digital Library

'கோமாதா' என்று அம்பாளுக்கு நாமா சொன்னதற்கு முந்தி 'குருமூர்த்தி', 'குணநிதி' என்ற நாமங்கள் வருகின்றன. ஞானியான 'குருமூர்த்தி'யாக, ஸத்வகுண ஸம்பன்ன 'குணநிதி'யாக ஒருவரை உருவாக்கும் அநேக அம்சங்களில் ஆஹார சுத்தியும் ஒன்று. அப்படிப்பட்ட சுத்தமான ஆஹாரமாகப் பால் இருக்கிறது.

இதிலே ஒரு வேடிக்கை. சாக போஜனம் என்பதாகத் தாவர வர்க்கத்திலிருந்து பெறாமல், ஜீவஜந்துக்களிடமிருந்து பெறுகிற ஆஹார வகைகள் பொதுவாக ஸத்வ குணத்துக்கு ஹானி உண்டாக்கி ராஜஸ, தாமஸ குணங்களை வ்ருத்தி செய்வதாகவே இருக்கும். ஸத்வம்-ஸாத்விகம் என்றால் மனம் தெளிந்து சாந்தமாகவும் அன்பாகவும் இருப்பது. பரபரப்பு, படபடப்பு இல்லாமலிருப்பது. அதே ஸமயத்தில் ஓய்ந்துபோய்த் தூங்கி விழாமல் நல்ல விழிப்புடனும் இருப்பது. ரஜஸ்-ராஜஸம் என்றால் காம க்ரோதாதி மோதல்களில் துடித்துக்கொண்டு பரபர, படபட என்று பரப்பது. தமஸ்-தாமஸம் என்றால் எதிலும் ஊக்கம், உத்ஸாஹம் இல்லாமல் ஓய்ந்துபோய் தூங்கி வழிந்து கொண்டு மந்தமாக இருப்பது. இந்த மந்த நிலையில் உசந்த மனோபாவங்கள் எழும்பாமல் காமக்ரோதாதிகள் உள்ளே முளை விட்டுக் கொண்டுதான் இருக்கும்; வெளியிலேதான் அவை துடிப்பாக வராமலிருக்குமே தவிர உள்ளே அசுத்தம்தான். ஸத்வம் மட்டுந்தான் சுத்தம். ரஜஸ், தமஸ் இரண்டும் அசுத்தம்.

ஒரு ஜீவ ஜந்துவிடமிருந்து பெறுகிற ஆஹார வஸ்து என்றால் அது ராஜஸ-தாமஸப் போக்குகளை உண்டாக்குவதே பொது இயல்பு. பசும்பால் ஜீவ ஜந்துவிடமிருந்து பெறுகிறதுதான்; அது ரத்தத்துக்கே ஸமானம். அப்படிப்பட்ட ஒன்றை ஆஹாரம் பண்ணுவது ஸத்வ குணாபிவ்ருத்திக்கு ஹானி உண்டாக்குவதாக

Koviloor Digital Library

இருக்கும் என்பதோடு, அஹிம்ஸா போஜனத்துக்கும் விரோதமானதாகத் தோன்றுகிறது. ஆனால் நம்முடைய சாஸ்த்ரங்களோ அஹிம்ஸையையே பரம தர்மமாகக் கொண்டவனும், மனம், குணம் என்பவை அறவே அற்றுப் போகாமல் இருந்துகொண்டிருக்கிற வரையில் பரம ஸாத்விகனாகவே இருக்கவேண்டியவனுமான ஸந்நியாஸிக்கும் **கோ** க்ஷீர பானத்தை அநுமதித்திருக்கின்றன. ரக்த மாம்ஸம் என்றே தள்ளத்தக்க ஒன்றும் பரம பரிசுத்தத்தை உண்டாக்குவதாகப் பசுவிடம் இருக்கிறதென்றால் அது எப்பேர்ப்பட்ட தெய்வத்தன்மை பெற்றதாக இருக்க வேண்டும்?

விச்வப்ரேமைக்கு இருப்பிடம்

ஸந்நியாஸியுடைய ஆஹாரத்தில் இரண்டு அம்சங்கள். ஒன்று, அது அவனுக்கு ஸத்வ குணத்தை வளர்த்துக் கொடுக்கவேண்டும் என்பது. இன்னொன்று, அந்த ஆஹார வஸ்து **ஏதொரு பிற ஜீவனுக்கும்** ஹிம்ஸை விளைவிக்காமல் பெறப்பட்டதாக இருக்கவேண்டும் என்பது. கோக்ஷீரத்தில் இந்த இரண்டும் பூர்த்தி செய்யப்படுகின்றன. அது ஸத்வத்தைப் புகட்டுவதாக உள்ளது. அதை **கோ**விடமிருந்து க்ரஹிப்பதில் அந்த **கோ**வுக்கு ஹிம்ஸையும் இல்லை. பகவத் ஸ்ருஷ்டியிலேயே அது விச்வப்ரேமைக்கு ஒரு இருப்பிடமாக உண்டாக்கப்பட்டிருக்கிறது. அதனால் தான் mammal-கள் எனப்படுகிற பாலூட்டி ஜீவ ஜந்துக்களில் **கோ**வுக்கு மட்டுமே தன்னுடைய கன்றுக்குத் தேவைப்படுகிற அளவுக்கு மாத்திரமின்றி, அந்த அளவுக்கு உபரியாக மற்ற மநுஷ்யர்களுக்கும் கொடுப்பதற்கு வசதியாக நிறையப் பால் சுரக்கிறது. ஒரு பசு கொடுக்கக் கூடிய அவ்வளவு பாலையும் அதன் கன்றே குடித்தால் அந்தக் கன்றுக்கு வயிறு முட்டி வாந்தி செய்ய ஆரம்பித்து

Koviloor Digital Library

விடும். இதிலிருந்து தெரிவது என்ன? நேராகத் தான் ஈன்ற கன்று என்ற ஒன்றை முன்னிட்டே கோ சுரப்பு விட்டாலும் அது நம்மைப் போன்ற மற்ற மநுஷ்யர்களுக்கும் இயற்கையாகவே தாயாயிருந்து போஷாக்குப் பண்ண வேண்டும் என்பதே பகவத் ஸங்கல்பம் என்றுதானே தெரிகிறது? அந்த மாத்ரு ப்ரேமையே **கோவுக்கு** வேறெந்த ப்ராணிக்குமில்லாத உன்னத ஸ்தானத்தைக் கொடுத்திருக் கிறது. அதை தெய்வமாகவே கருதும் உன்னதம்.

பசு தெய்வந்தான். ம்ருக ஜாதியாகத் தெரிந்தாலும் மாநுஷமான தாய் போல் பாலைக் கொடுக்கிற கோமாதா வாக இருக்கிற அவள் தெய்வமான ஸ்ரீமாதாவின் ஸ்வரூபமேதான். இஷ்டப்பட்டதையெல்லாம் அளிக்கிற அப்படிப்பட்ட தெய்வத் தாயாக அவள் இருக்கிறபோதே காமதேனுவாக விளங்குகிறாள். பசு பால் கொடுக்கும். இந்தக் காமதேனுப் பசுவோ பாற்கடலிலிருந்து உத்பவித்தவள். ஸ்ரீமாதாவேதான் அப்படி கோமாதாவாக வந்தாள். இதையேதான் 'பஞ்சசதீ'யில் மூக கவி பிரார்த்திக்கிறார்; காமாக்ஷியம்பாளிடம், 'எங்களுக்குக் காமதேநுவாக நீ இருப்பாய்!' என்று பிரார்த்திக்கிறார்:

காமதுகா பவ கமலே காமகலே காமகோடி காமாக்ஷி.*

கோவின் மலமும் பரிசுத்தம்!

எதிரிடையாகத் தோன்றுகிறவையும் பசுவிடத்தில் ஒன்று சேர்கின்றன. ரக்த ஸமானமான அதன் க்ஷீரம் புத்தியைக் கெடுப்பதற்குப் பதில் சுத்தப்படுத்துவதைச் சொன்னேன்; உடம்புக்கு சக்தியைக் கொடுப்பதே உள்ளத்துக்கும் சுத்தி தருவதைச் சொன்னேன். இதைவிடவும் எதிரிடையான இன்னொன்று, அதனுடைய கழிவுப் பொருளான கோமயம் என்கிற சாணமும்

* 'மூக பஞ்சசதீ', ஆர்யா சதகம், ச்லோ. 49

Koviloor Digital Library

பரிசுத்தப்படுத்துவதுதான். அது உடம்பு, உள்ளம் இரண்டையும் சுத்தி செய்வதாக இருக்கிறது. கழிவுப் பொருளான மலம்தான் பொதுவில் மிகவும் அசுத்தமான தாக இருப்பது; நோய் நொடிகளைப் பரப்புவது; பரம துர்கந்தமாகவும் இருப்பது. அதை உடனேயே தேய்த்து அலம்பி சுத்தம் செய்வோம். ஆனால் கோவின் மலமோ மற்ற மலங்களையும், ஏனைய அசுத்தங்களையும் போக்குவதாக இருக்கிறது; நோய்க்கிருமிகளை அழிப்பதாக இருக்கிறது. அது துர்கந்தமும் வீசுவதில்லை. அதற்குப் பவித்ரமான, ஆரோக்யமான ஒரு தினுஸு மணம் இருக்கிறது.

மற்ற பிராணிகளின் மலம் புனிதத்தன்மையைக் கெடுத்து அசுத்தி செய்வதாயிருக்க, கோமயம் மட்டும் அசுத்தியை நீக்கிப் புனிதம் செய்வதாக இருக்கிறது. சாப்பிட்ட உச்சிஷ்டம் – எச்சில் என்பது – ஸுகாதாரப்படியும் அசுத்தம்; சாஸ்த்ரப்படியும் மடித்தப்பானது. அதன் அசுசியைப் போக்கிப் புனிதப் படுத்துவது கோமயம். அதனால்தான் எச்சிலிடுவதற்கு கோமயத்தை உபயோகிப்பது. பரம சுத்தத்தை க்ருஹத்துக்கு வரவழைப்பதற்காகவே, ஆரோக்யலக்ஷ்மியையும் ஸௌமங்கல்ய லக்ஷ்மியையும் நம் க்ருஹத்தில் குடிகொள்ளப் பண்ணுவதற்காக வாசலில் கோலம் போடும் இடத்தில் சாணம் தெளிப்பதும், வீட்டைச் சாணியால் மெழுகுவதும். இப்போது பாஷனின் பெயரில் இந்தப் பழக்கங்கள் எல்லாம் போய், எங்கே பார்த்தாலும் infection, pollution என்று ஆகியிருக்கிறது.

கோமயம் எவ்வளவு புனிதமாக நினைக்கப்படுகிறது என்பதற்கு அநேகச் சான்றுகள் உண்டு. உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன். ஸந்நியாஸிக்கு அக்னி ஸம்பந்தம் கூடாது என்ற விதியை ரொம்பவும் கண்டிப்பாகப்

Koviloor Digital Library

பின்பற்றுகிற ஸாதுக்கள் உண்டு. அவர்கள் அக்னி மூட்டிச் சமைத்த ஆஹாரம் எதையும் புஜிக்க மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒரு பிரிவினர் விறகு, கரி மூட்டாமல் முழுக்கவும் பசுஞ்சாணி விரட்டியிலேயே அக்னி மூட்டி அதிலே சமைத்ததென்றால் அப்போது தோஷமில்லை என்று அதை புஜிக்கிற வழக்கத்தைக் கைக் கொண்டிருக்கிறார்கள். பசுவுக்கு இருக்கப்பட்ட புனிதத்தன்மையால்தான் இப்படி அதன் மலத்துக்குங் கூடப் பெருமை இருக்கிறது.

போபால் உதாரணம்

சாஸ்த்ரக் குடுக்கைகள்தான் கோமயம் சுத்தீகரணம் பண்ணுகிறதென்று அறியாத்தனத்தின் பேரிலும் குருட்டு நம்பிக்கையின் பேரிலும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றே முன்பெல்லாம் படிப்பாளிகள் என்கப்படுகிறவர்கள் எண்ணி வந்தனர். ஆனால் இப்போது ஸயன்டிஃபிக்காக — விஞ்ஞான பூர்வமாகவே — பசுஞ்சாணத்தின் சுத்திகரண சக்தியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். நாஸ்திக ருஷ்யாவின் விஞ்ஞானிகளே வரட்டிப் புகை மிகவும் சக்தியுள்ள disinfectant, anti–pollutant என்று பரிசோதனைகள் மூலம் கண்டுபிடித்துச் சொல்லியிருக் கிறார்கள். ஸமீபத்தில்* ரொம்பவும் ஆச்சர்யமாக ஒன்று ந்யூஸ் பேப்பரிலேயே பெரிசாகப் போட்டு வந்ததைப் பார்த்தோம் — போபாலில் நடந்த பயங்கரமான 'காஸ் லீக்கேஜ்' விபத்தில் ஊர் பூராவும் ஜனங்களும் மிருகங்களும் ப்ராணன் போயும், ப்ரஜ்ஞா பங்கமாயும் பலவிதமான ரோகங்களுக்கு ஆளாகியும் சாய்ந்த போதிலும் அக்னிஹோத்ரப் புகை சூழ்ந்திருந்த ஒரு க்ருஹத்தில்

* இப்பகுதி 1984–ல் கூறியது.

Koviloor Digital Library

மட்டும் எந்த ஹானியும் ஏற்படாமல் ஸ்வஸ்தமாக இருந்தார்கள் என்று ந்யூஸ் படித்தோம்.

ஆனால் இந்த இடத்தில் கோமயத்துக்கு மட்டுமே முழு 'க்ரெடிட்'டும் தருவது ஸரியல்ல. சாணம் ஒரு சிறந்த விஷநாசினிதான் என்றால்கூட இங்கே அந்த சாணத்தை உபயோகித்துப் பண்ணிய அக்னிஹோத்ரம் என்ற மந்த்ர பூர்வமான வைதிக கர்மாவுக்கே முக்யம். கோமயத்தின் வீர்யம் மாத்திரமில்லாமல், அதைவிட அதிகமாக மந்த்ர வீர்யமே விஷவாயுவை முறித்திருக்கும். ஆனாலும் மந்த்ரத்தை வெறும் ஜபமாக மாத்திரம் செய்யாமல் யஜ்ஞம் என்கிற கிரியையோடு சேர்த்து வைத்திருக்கும்போது அந்த யஜ்ஞத்தில் சாஸ்த்ரோக்தமாக உபயோகிக்கப்படும் த்ரவ்யங்கள் [திரவியங்கள்], உபகரணங்கள் ஆகியவற்றின் வீர்யசக்தியும் மந்த்ர சக்தியோடு சேர்ந்தே பூர்ண பலனை உண்டாக்குகிறது. அப்படிப் பார்த்தால் விஷவாயுவைப் போக்கியதில் கோமயத்துக்கும் நிச்சயமாக ஒரு பங்கு உண்டு என்றே ஆகும்.

கோமயத்துக்குத் தனிப்பட்ட முறையில் இருக்கப்பட்ட சுத்திகரண சக்தி அதோடு நின்றுவிடாமல், அது யஜ்ஞத்தில் ப்ரயோஜனமாகிறபோது அதுவே மந்த்ர சக்தியை ரக்ஷித்துக் கொடுத்து, அந்த மந்த்ர சக்திக்கு மேலும் உரமூட்டிக் கொடுப்பதே அதன் விசேஷம்; வைதிகமான விசேஷம். யஜ்ஞத்தில் எந்த சுத்திகரண த்ரவ்யத்தை வேண்டுமானாலும் சேர்க்கலாம் என்று இல்லாமல் இந்த ஒன்றைத்தான் சேர்க்க வேண்டும் என்றுதானே இருக்கிறது?

பஞ்சகவ்யம்

லௌகிகமாக வெளி அசுத்தியைப் போக்குவதை விட முக்யம், வைதிகமாக அது உள் அசுத்தியையும்

Koviloor Digital Library

போக்குவதே. மற்ற ஜந்துக்கள் விஷயத்தில் மூக்கைப் பிடித்துக் கொண்டு அலம்பித் தள்ள வேண்டியதாக இருக்கிற மலத்தையே அது கோவிடமிருந்து கோமயமாக வருகிறபோது நம்முடைய உள்ளழுக்கைப் போக்கிக் கொள்வதற்காக நாம் உட்கொள்ளும் பஞ்ச கவ்யத்தில் ஒரு வஸ்துவாகச் சேர்க்கும்படி சாஸ்திரத்தில் விதித்திருக்கிறது.

'பஞ்சகவ்யம்' என்றால் என்ன? 'கவ்யம்' [gavyam] என்றால் கோ ஸம்பந்தப்பட்டது. அப்படிப்பட்ட ஐந்து சேர்ந்ததே பஞ்சகவ்யம். அதில் மூன்று — பாலும், பாலிலிருந்து பெறுகிற தயிரும், நெய்யுமாகும். பாக்கி இரண்டு? இங்கேதான் எதிரிடையானவையும் வருகின்றன. கோமயமும், கோமூத்திரமும்தான் அந்தப் பாக்கி இரண்டு. பால், தயிர், நெய், கோமூத்திரம், கோமயம் என்ற ஐந்தையும் கலந்து செய்வது பஞ்ச கவ்யம். **க்ஷீரம், ததி, ததா சாஜ்யம், மூத்ரம், கோமயம் ஏவ ச** என்று சொல்லியிருக்கிறது. ஒருவருக்கு ஏற்பட்ட விழுப்பு, தீட்டுகளைப் போக்குகிற புண்யாஹவாசன கர்மாவில் 'பஞ்சகவ்ய ப்ராசனம்' என்பதாக இந்த ஐந்தையும் சேர்த்த ஒன்றைக் கொடுப்பார்கள். அதை உட்கொள்ளவேண்டும்.

வெளியிலே விழுப்பு போய் மடியாவது என்ற சுத்திகரணம் பஞ்சகவ்யத்தினால் நடக்கிறது என்றாலும் அதுவே அதன் முக்ய ப்ரயோஜனம் இல்லை. அதனுடைய முக்ய ப்ரயோஜனம் இதைவிடப் பெரிய சுத்திகரணமாக, நமக்கு உள்ளழுக்கை உண்டாக்கிய பூர்வ கர்ம பாபத்தையே போக்குவதுதான்.

ஸாதாரண விஷயமில்லை. நம்முடைய கஷ்டங்கள், ஜன்மாக்கள் எல்லாவற்றுக்கும் காரணம் பாபகர்மாக்கள் தான். அவையே நசிப்பது என்றால் எவ்வளவு பெரிய விஷயம்? அதற்குப் பசு தருகிற ஐந்து வஸ்துக்கள் உதவுகின்றன என்றால் பசுவைப் போன்ற பரம உபகாரி நமக்கு எவருண்டு?

Koviloor Digital Library

சரீர சுத்தியோடேயே, சித்தத்துக்குப் பரம அசுத்தியை உண்டாக்கும் பாபமாகிற அசுத்தத்தையும் நிவர்த்தித்துக் கொள்ளப் பஞ்ச கவ்யம் உதவுகிறது. சித்தத்துக்கு ஏற்பட்ட பாப அசுத்தியே சரீரத்தில் தோலிலிருந்து ஆரம்பித்து எலும்புக் குருத்து வரையில் பலவித வியாதிகளாகப் பரவுகிறது. இந்த வெளி வியாதி உள் வியாதி இரண்டையும் சுட்டெரிக்கவே பஞ்சகவ்ய ப்ராசனம். 'ஒரு கட்டையை அக்னி பஸ்மம் பண்ணுகிறாற்போல நான் உட்கொள்ளும் இந்தப் பஞ்சகவ்யம் சர்மத்திலிருந்து [தோலிலிருந்து] அஸ்தி [எலும்பு] வரை என் தேஹத்தில் ஊடுருவியுள்ள பாபத்தை பஸ்மம் பண்ணட்டும்' என்றே பஞ்சகவ்ய ப்ராசனத்தின் [உட்கொள்தலின்]போது சொல்லும்படி சாஸ்த்ரத்தில் விதித்திருக்கிறது:

யத் த்வக்–அஸ்தி கதம் பாபம் தேஹே திஷ்டதி மாமகே |
ப்ராசனம் பஞ்சகவ்யஸ்ய தஹத்வாக்நிரிவேந்தனம் ||

'தஹது அக்நி: இவ இந்தனம்' என்பதே ஸந்தியில் 'தஹத்வாக்நிரிவேந்தனம்' என்று ஆகியிருக்கிறது. 'இந்தனம்' என்றால் 'விறகு'. விறகை நெருப்பு எரிக்கிற மாதிரிப் பாபத்தைப் பஞ்ச கவ்யம் எரித்துவிடட்டும் என்று அர்த்தம்.

கோவிலிருந்து கிடைக்கும் பாலிலிருந்து சாணி வரையில் எல்லாமும் நம் வியாதிகளைப் போக்கிப் புஷ்டியும் தருகின்றன; பாபத்தைப் போக்கி ஆத்மாவைக் கடைத்தேற்றவும் செய்கின்றன.

பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகிய இந்த எல்லாவற்றுக்கும் இருக்கிற நாலு சிறப்புக்கள்: ஒன்று, அவை வாய்க்கு ருசியாக இருக்கின்றன; இரண்டு, உடம்புக்குப் புஷ்டி அளிக்கின்றன; மூன்று, ஆஹாரமாக இருப்பதோடு மருந்தாகவும் இருக்கின்றன; நாலு, வைதிக

Koviloor Digital Library

ப்ரயோஜனம் உடையவையாக இருந்துகொண்டு பாபத்தைப் போக்கி ஆத்மாவை ரக்ஷித்துக் கொடுக்கின்றன.

வைத்தியத்திலும் வாத்தியத்திலும்

இந்த வஸ்துக்களோடு, பசுவிடம் எதுவுமே மட்டமாக இல்லாமல், உத்தமமானதாக இருப்பதால் கோமயமும் கோமூத்திரமுங்கூட மருந்தாக இருக்கின்றன. முன்னைவிட இப்போது புதிது புதிதாக வியாதிகள் முளைத்துக் கொண்டிருந்தாலும் குழந்தைகளுக்கு வயிற்றில் கட்டி விழுவதை மட்டும் தக்கத் தடுப்பு மருந்துகளால் — preventive medicines என்கிறவற்றால் — நன்றாகக் குறைத்திருக்கிறார்களென்பது தெரிகிறது. கட்டி விழுந்து கொண்டிருந்த காலத்தில் அதற்கான மருந்துகளில் கோமூத்ரம் ப்ரதானமான ஸ்தானம் பெற்றிருந்தது.

பஞ்சகவ்யம் மேல் தோலிலிருந்து உள்ளெலும்புவரை நோய்களை நீக்குவதாக வைதிகமான புண்யாஹ வாசனத்தில் சொல்லியிருப்பதற்கேற்கவே லௌகிகமான வைத்ய சாஸ்த்ரத்திலும் சொல்லி அப்படியே மருந்தாக அது ப்ரத்யக்ஷ பலன் தருவதையும் பார்க்கிறோம். நம்முடைய ஆயுர்வேத வைத்ய சாஸ்த்ரத்தில் சொல்லி யிருப்பதையே மேல் நாட்டாரின் அல்லோபதி மெடிகல் ஸிஸ்டத்திலும் ஆதரித்துச் சொல்கிறார்களென்பது குறிப்பிடத்தக்கது. சர்ம வியாதியான [தோல் நோயான] குஷ்டம் ஸ்வஸ்தமடையப் பால் ஸஹாயம் செய்யும் என்று மேல் நாட்டு வைத்ய நிபுணரொருவர் சொல்லியிருக்கிறார். எலும்பை பலப்படுத்தும் கால்ஷியம் பாலில் இருப்பதும் தெரிந்ததே.

ஆயுர்வேத மருந்துகளில் பலவற்றுக்கு, அவற்றோடு சேர்த்துச் சாப்பிட வேண்டிய 'அநுபானம்' என்பதாகப் பாலையே சொல்லியிருக்கிறது.

Koviloor Digital Library

பாலிலிருந்தே பெறுகிற தயிர்-மோர்-வெண்ணெய்-நெய் ஆகியனவும் புஷ்டியைத் தருகிறவையாயும், ஒவ்வொரு வியாதிக்கு மருந்தாகவும் இருப்பவையாகும்.

ஸங்கீதத்திலும் கோ ப்ரயோஜனப்படுகிறது. அடித்துச் சப்தம் எழுப்புகிற மத்தள-பேரிகை போன்ற சர்ம வாத்யங்களில் மாட்டுத் தோல் ப்ரயோஜனமாகிறது.

பசுவை வதைப்பது தாயைக் கொல்வது போன்றது

இங்கே முக்யமாகக் கவனிக்க வேண்டிய விஷயம்: இப்படிச் சொன்னது தானாகவே இயற்கை மரணம் அடைந்த கோவைக் குறித்ததுதான். கோஹத்தி — பசு வதை — என்பது ஸ்வப்னத்திலும் நினைக்கக்கூடாத மஹா பாபம்; படு பாதகம் என்பது. வதை வரையில் போகவேண்டாம்; அதற்கு ஒரு சின்ன ஹிம்ஸை விளைவித்தால்கூடப் பாபமாகும். கோவை மாதா என்றே அல்லவா பார்த்தோம்? அதனால் கோஹத்தி என்பது ப்ராயச்சித்தமேயில்லாத மாத்ருஹத்திக்கு ஸமானமான மஹா பெரிய தோஷமாகும். அதை முக்யமாக எடுத்துச் சொல்வதற்காகத்தான் கோவைப் பற்றிப் பேச ஆரம்பித்ததே.

கறக்கிற மட்டும் ஒட்டக் கறந்து குடித்துவிட்டு, அல்லது அந்தப் பாலை விற்றுப் பணம் பண்ணிவிட்டு, கறவை நின்றுபோன பிறகு கோவுக்குத் தீனி போட்டு ரக்ஷித்து என்ன ப்ரயோஜனம் என்கிற எண்ணத்தில் அதை இறைச்சிக் கூடத்துக்கும் கசாப்புக் கடைக்கும் அனுப்புவ தென்பது நம்மைப் பெற்ற தாயார் வயஸாகி வேலை செய்ய முடியாமல் ஆனவுடன் அவளைக் கொலை செய்தால் எப்படியோ அப்படித்தான். கோ மாம்ஸம் தாய் மாம்ஸத்துக்கு ஸமானமே.

Koviloor Digital Library

தானாக மரித்த **கோவின்** சர்மத்தைத்தான் ஸங்கீத வாத்யங்களுக்கு எடுத்துக் கொள்ளலாம். ஏனென்றால் ஸங்கீதம் தெய்வ பரமானதாக இருக்கிறதனால். ஸ்வாமி கோவிலிலேயே வாத்யங்கள் வாசிக்க வேண்டித்தானே இருக்கிறது? ஆனால் அதற்காக உயிருள்ள **கோவை** உபயோகமாயில்லை என்பதற்காக வதைத்துத் தோலை உரிப்பது என்றால் அதை ஸ்வாமி க்ஷமிக்கவே மாட்டார்.

அதேபோலத்தான் **கோவின்** வயிற்றுக்குள்ளிருந்து எடுக்கும் கோரோசனையும். ஸ்வாமிக்கே கந்த உபசாரத்தில் சேர்க்கக்கூடிய வாசனை த்ரவ்யமாக அது இருப்பது வாஸ்தவம். அதோடு மருந்துச் சரக்காகவும் இருக்கிறது. அப்படியிருந்தாலும், அதற்காக **கோவை** வதைப்பது நியாயமாகாது; கொஞ்சங்கூட நியாயமே ஆகாது. இயற்கை மரணம் என்று ஒன்று எந்த ஜீவனுக்கும் உண்டல்லவா? அப்படி மரித்த கோவிலிருந்து சர்மமோ, கோரோசனையோ பெறவேண்டும்.

கோ ச்ருங்கமும் விசேஷமே

கோ பரம புனிதமானதாக இருப்பதால் அதன் உடம்புக்குள்ளிருந்து எடுக்கிற கோரோசனையும் ஈச்வரார்ப்பணம் ஆவதற்குத் தக்கதாக இருக்கிறது.

நடராஜாவாக ஆடும் ஈச்வர ஸந்நிதியில் நந்திகேச்வரரே ம்ருதங்கம் வாசிப்பது பல பேருக்குத் தெரிந்த விஷயம். அதைவிடவும் விசேஷமாக ஒன்று. '**கோ** ச்ருங்கம்' என்கிற மாட்டுக் கொம்பின் வழியாகப் பரமேச்வரனுக்கு அபிஷேகம் செய்வதை விசேஷமான தாகச் சொல்லியிருக்கிறது. ருத்ர–சமகங்கள் ஒரு ஆவ்ருத்தி சொல்கிற காலத்துக்கு **கோ** ச்ருங்க த்வாரம் வழியாக சிவலிங்கத்துக்கு க்ஷீராபிஷேகம் [பாலபிஷேகம்] செய்வது மஹா புண்யம். காளை மாட்டின் மேல் உட்கார்ந்து

Koviloor Digital Library

கொண்டிருப்பவருக்கு கோச்ருங்கத்தால் பசும்பால் அபிஷேகம் பொருத்தந்தானே?

பெண் பசு பால் என்ற உணவை நேராகத் தருகிறது என்றால் காளை மாடுதான் முக்யமாக உழவில் உழைத்து பயிர் பச்சை மூலம் உணவு தருகிறது. இப்படி மாட்டு ஜாதியே மநுஷ்ய ஜாதியின் வயிற்றுக்குப் போடும் பரமோபகாரத்தைப் பண்ணுவதாக இருக்கிறது. அதனிடம் நாம் அளவில்லாத நன்றியும் பக்தியும் காட்டவேண்டும். அதற்குச் சின்ன ஹானி செய்தாலும் தெய்வாபராதமாக, தெய்வக் குற்றமாக நினைக்கவேண்டும்.

கொம்பு வழியாக அபிஷேகம் என்பதோடு பஞ்சகவ்ய வஸ்துக்களான ஐந்துமே ஸ்வாமிக்கு அபிஷேகமாகின்றன.

நெய்யபிஷேகம்

ஐந்தில் நமக்குத் தெரிந்தது பாலபிஷேகம் மட்டுமே. அடுத்தபடியாகத் தயிரபிஷேகம். நெய்யபிஷேகம் நாம் அதிகம் கேள்விப்பட்டதில்லை. மலையாளம் திருச்சூரில் நெய்யபிஷேகம்தான். ஹிமயமலை பனிப் பாளம் மாதிரி அங்கே லிங்கத்துக்கு நிறைய நெய்யபிஷேகம் செய்திருக்கும். எத்தனை காலம் ஆனாலும் அந்த நெய் கெடுவதில்லை என்பதோடு எத்தனைக்கெத்தனை பழசோ அத்தனைக்கு அந்த நெய் ஒளஷதமாக இருக்கிறது. மலையாள வைத்யர்கள் 'புராதன க்ருதம்' என்று அந்தப் பழைய நெய்யையே மருந்தாகக் கொடுப்பது வழக்கம்.

மலையாள தேசம் வரையில் போகவேண்டாம். நம் திருவையாற்றுக்குப் பக்கத்தில் இருக்கிற தில்லை ஸ்தானத்திலும் ஸ்வாமி பெயர் 'நெய்யாடியப்பர்' என்றே இருப்பதிலிருந்து அங்கும் ஸ்வாமி நெய்யால் அபிஷேகம் பெற்றவர் என்றே தெரிகிறது. அந்த ஸ்தலத்தின் பெயரே 'திருநெய் ஸ்நானம்' என்றுதான் ஆதியில் இருந்து அது

Koviloor Digital Library

தமிழ்வழக்குப் படி அப்பர், ஸம்பந்தர் தேவாரங்களில் 'திருநெய்த்தானம்' என்று வந்து, 'திருநெய்த்தானம்' என்பதுதான் பொது ஜனங்கள் பேச்சில் 'தில்லைஸ்தானம்' என்று ஏதோ சிதம்பர ஸம்பந்தம் உள்ள மாதிரி ஆகியிருக்கிறது!

பால், தயிர், நெய் தவிரப் பஞ்ச கவ்யத்திலுள்ள கோ மூத்ரத்தாலோ, கோமயத்தாலோ தனித்தனியே அபிஷேகம் செய்கிற வழக்கம் இல்லை. ஆனால் ஐந்தையும் கலந்த பஞ்சகவ்யத்தால் அபிஷேகம் செய்வது விசேஷம். அப்படி ஈச்வரார்ப்பணமாவதுதான் பசுக் குலத்துக்கே பெருமை சேர்ப்பது என்று அப்பர் ஸ்வாமிகள் பாடியிருக்கிறார்:

ஆவினுக்(கு) அருங்கலம் அரன் அஞ்சாடுதல்*

'ஆ' என்றால் பசு. 'அஞ்சாடுதல்' என்பது பஞ்சகவ்யத்தில் நீராடுவது; அதாவது பஞ்ச கவ்யத்தால் அபிஷேகம் பெறுவது.

திருநீறு

அபிஷேகப்ரியனான, பரமேச்வரன் விபூதி ப்ரியனும் ஆவான். **'காடுடைய சுடலைப் பொடி பூசி'** என்று தேவாரத்தின் முதல் பாட்டிலேயே ஞான ஸம்பந்தக் குழந்தை சொல்லியிருக்கிற மாதிரி, ஸ்வாமி இட்டுக் கொள்வது ச்மசான [மயான]த்தில் சவங்களை எரித்துப் பெறுகிற பஸ்மாவே. ஆனாலும் நாம் விபூதி தயாரித்து அவனுக்கும் இட்டுவிட்டு, அபிஷேகங்கூடப் பண்ணி, நமக்கும் இட்டுக் கொள்கிறோமே, அது எங்கேயிருந்து வருகிறது? கோமய உருண்டைகளைப் புடம் போட்டுத்தான் விபூதி பண்ணுவது. விபூதியைவிடப் பவித்ரமாக ஒன்று கிடையாது. ஸம்பந்த மூர்த்தி

* 'சொற்றுணை வேதியன்' எனத் தொடங்கும் 'நமசிவாயப் பதிகம்'.

Koviloor Digital Library

ஸ்வாமிகளின் 'மந்திரமாவது நீறு' என்ற திருநீற்றுப் பதிகத்தைப் பார்த்தால் போதும், அந்தத் திருநீற்றுக்கு என்னவெல்லாம் மஹிமை இருக்கிறதென்று தெரியும். 'பஸ்மஜாபாலோபநிஷத்' என்றே இருக்கிற உபநிஷத்தில் பரமேச்வரனே கோமயத்திலிருந்து எப்படி விபூதி செய்வது என்று விளக்கமாகச் சொல்லி, அது ஸர்வ பாபங்களையும் போக்கி மோக்ஷம் தருவது என்று சொல்வதாக இருக்கிறது. கோவின் மலத்துக்கே அப்படிப்பட்ட நிர்மல சக்தி இருக்கிறது. வெளி மலம், கச்மலம் — 'கசுமாலம்' என்று நாட்டு ஜனங்களும் சொல்வதைப் போக்குவதோடு அணு, கர்ம, மாயா மலங்களையும் சேதிப்பதாக கோமயத்தி லிருந்து பெறுகிற விபூதி இருக்கிறது. யஜ்ஞத்தில் நீற்று விழுகிற ஹோம பஸ்மாவை வைஷ்ணவர்களும் மந்த்ர பூர்வமாக தரித்துக் கொள்வார்கள்; அதில் ஸமித்துச் சாம்பலோடு கோமயத்தாலான வரட்டியின் சாம்பலும் கலந்திருக்கும்.

சுத்தம் செய்து கொள்வதற்கு இரண்டு வழி: ஒன்று ஸ்நானம் பண்ணுவது, இன்னொன்று விபூதி அணிந்து கொள்வது. ஸ்நானம் செய்வதை 'நீராடுதல்' என்றும் விபூதி தாரணத்தை 'நீறாடுதல்' என்றும் சொல்லுவார்கள். ஸ்வாமிக்கு நீறாட்டலையே நீராட்டலாகி விபூதி அபிஷேகமும் செய்கிறோம். அது அடிப்படையில் கோமயாபிஷேகந்தான்.

பாலாபிஷேகம் அல்ல; பாலபிஷேகம்

ஒன்று கவனிக்க வேண்டும். 'சந்தனாபிஷேகம்', 'க்ஷீராபிஷேகம்' என்கிற மாதிரியே பல பேர் 'பாலாபிஷேகம்' என்கிறார்கள். அது தப்பு. 'பாலபிஷேகம்' என்று 'ல'வைக் குறிலாகவே சொல்ல வேண்டும். 'சந்தன', 'க்ஷீர' என்ற வார்த்தைகள் 'அகாரத்தில் முடிவதால்,

Koviloor Digital Library

அவற்றோடு 'அபிஷேகம்' என்று 'அ'காரத்தில் ஆரம்பிக்கும் வார்த்தையைச் சேர்க்கும்போது இரண்டு குறில் 'அ'காரங்கள் சேர்ந்து ஒரு நெடில் 'ஆ'காரமாகி, 'சந்தனா பிஷேகம்', 'க்ஷீராபிஷேகம்' என்ற கூட்டு வார்த்தைகள் உண்டாகின்றன. 'பால்' என்கிற வார்த்தை 'அ'காரத்தில் முடியாமல் 'ல்' என்ற ஒற்றெழுத்துடன் முடிகிறது. அதோடு 'அபிஷேகம்' சேரும்போது, ல் + அ என்பது [குறிலான] 'ல' ஆகத்தான் வருமாதலால் 'பாலபிஷேகம்' என்றுதான் ஆகும். தேன் + அபிஷேகமும் இப்படியேதான் — 'தேனபிஷேகம்' ஆகுமே தவிர 'தேனாபிஷேகம்' இல்லை.

இதே மாதிரிதான் 'ஷடாக்ஷரம்' என்பதும் தப்பு. ஷடக்ஷரம்தான் சரி. பஞ்ச + அக்ஷரம் — பஞ்சாக்ஷரம்; அஷ்ட + அக்ஷரம் — அஷ்டாக்ஷரம் என்கிற மாதிரி இல்லாமல் ஷட் + அக்ஷரம் என்றே இருப்பதால் ஷடக்ஷரம் என்றே ஆகும்....

கோவின் மலமும் பவித்ரமானதாக இருக்கிற மாதிரியே அதன் குளம்படிப் புழுதியும் பவித்ரமானதாகும். ஸாதாரணமாகக் கால் புழுதி என்றால் அது துச்சமானது. அதையே தெய்வத்திடம், தெய்வ ஸமதையான மஹான் களிடம் பாததூளி என்று போற்றி ஏற்றுக்கொள்கிறோம். கோதூளியும் அப்படியே. ஸாயங்காலத்தில் **கோக்கள்** மந்தையாக மேய்ந்து முடிந்து கொட்டிலுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும்போது அவற்றின் குளம்படியிலிருந்து பெரிசாகப் புழுதிப் படலம் கிளம்பும். அந்தப் புழுதி உடம்பு முழுவதும் படும்படி நின்றால் அதை புண்ய தீர்த்த ஸ்நானத்துக்கு மேலாகச் சொல்லியிருக்கிறது. புழுதி போவதற்கு ஸ்நானம் செய்வதுதான் வழக்கம் என்றாலும் இங்கேயோ புழுதியே புண்யஸ்நானமாக இருக்கிறது! பாலக்ருஷ்ணனே அப்படிப் புழுதியில் திளைத்தாடினான் — 'கோதூளி தூஸரித'னாக இருந்தான் என்று

Koviloor Digital Library

வர்ணித்திருக்கிறது. எப்பொழுதும் அப்படிப் புழுதி படிந்திருப்பதே அவனுக்கு ஒரு ஸௌபாக்ய சோபையை உண்டாக்கிற்று — **'சச்வத் கோகுர நிர்தூதோத்தத–தூளீ–தூஸர ஸௌபாக்யம்'** — என்று ஆசார்யாளே பாடியிருக்கிறார்.* அப்படிப் பசு மந்தை புழுதி எழுப்பிக் கொண்டு கொட்டில் திரும்புகிற ஸாயங்காலத்தையே 'கோதூளி லக்னம்' என்று விசேஷித்துச் சொல்லியிருக்கிறது.

கோமாதா, பூமாதா என்று இரண்டு சொன்னதில் பூமாதா தன் புழுதியையே கோமாதாவின் குளம்படியிலிருந்து பெற்று தனக்கும் அபிஷேகம் செய்து கொள்கிறாள்.

பசு இன்றேல் வேள்வி இல்லை

அபிஷேகம் பக்தி வழிபாட்டில் வருவது. அதற்கு முக்யமாக ஆகமங்களும் புராணங்களும் ப்ரமாணம். அவற்றை விடவும் நம்முடைய மதத்துக்கு மூல ப்ரமாணமாயிருப்பது வேதமே. அதன் அடிப்படையில்லாமல் ஆகம, புராணங்களுக்கு ப்ராமாண்யம் [ப்ரமாணமாகும் தன்மை] இல்லை.

வேதம் ஏதோ நம்முடைய தேசத்துக்கு மட்டுமேயானது என்று நினைத்தால் அதைவிடப் பெரிய தப்பில்லை. நம்முடைய தேசத்தில் மட்டும்தான் வேதத்துக்கு ப்ரயோகம், கர்ம பூமியான இந்த பரத கண்டத்தில் மட்டும்தான் வேத கர்மாக்கள் செய்தால் பலன் உண்டு என்றாலும் அந்தப் பலன் இந்த தேசத்துக்கானது மட்டுமில்லை. ஸகல லோகத்துக்கும் பலனை உத்தேசித்துத்தான் இங்கே நம் தேசத்தில் வைதிக கர்மா செய்வது. ஹ்ருதயத்திலிருந்து ரத்தம் சரீரம்

* கோவிந்தாஷ்டகம், 5.

Koviloor Digital Library

பூராவுக்கும் பாய்கிற மாதிரி இங்கே செய்யும் வைதிக அநுஷ்டானங்கள் லோகம் முழுதற்கும் க்ஷேமங்களைப் பாய்ச்சிவிடும். அதாவது வேதம் இருந்தால்தான் லோகமே நன்றாக இருக்கும்; லோக க்ஷேமமே இங்கே நம்முடைய தேசத்தில் செய்கிற வைதிகமான யஜ்ஞ கர்மாநுஷ்டானாதி களில்தான் இருக்கிறது. அதைப் பற்றிக் கொஞ்சங்கூட ஸந்தேஹப்பட வேண்டாம். அப்படி லோகத்தையே வாழ்விப்பது யஜ்ஞம்; வேள்வி என்பது. அதற்கு இரண்டு அவசியமானவை. ஒன்று யஜ்ஞம் பண்ணுகிற கர்த்தாவான 'யஜமானன்'. இன்னொன்று யஜ்ஞத்தில் உபயோகமாகிற அதி முக்யமான த்ரவ்யங்களைத் தருகிற **கோ**தான்.

யஜ்ஞத்தில் முக்யமாக ஆஹுதி கொடுக்கப்படும் த்ரவ்யம் பசுவிடமிருந்து பெறுகிற நெய்யே. ஆஜ்யம் என்று அதைச் சொல்வது. 'ஹவிஸ்' — தமிழில் அதுவே 'அவி' என்று வரும்; அந்த ஹவிஸ் — என்பதே யஜ்ஞத்தில் ஆஹுதி கொடுக்கப்படும் பலவிதமான த்ரவியங்களுக்கும் பொதுப் பெயராயினும், குறிப்பாக ஹவிஸ் என்றால் பசும் நெய்தான். மற்ற ஆஹுதி த்ரவியங்களையும் நெய்யால் தடவி சுத்தம் செய்துதான் ஹோமம் செய்யவேண்டும்.

அக்னிஹோத்ரம் முதலான பல யஜ்ஞங்களில் **கோ**க்ஷீரம் ஹோமம் செய்யப்படுகிறது. ததி என்கிற தயிரும் ஹோம த்ரவ்யமாக ப்ரயோஜனமாகிறது. ஸத்துமா என்கிற ஸக்துவும் தயிரும் கலந்து ததி ஸக்து ஹோமம் என்று செய்வார்கள்.

நெய், பால், தயிர் அக்னியில் ஹோமமாகின்றன வென்றால், அந்த அக்னியை வளர்த்துக் கொடுப்பதே எது? கோமயத்தைப் போட்டுத் தட்டிய வரட்டிதானே?

ஆகையினால் **கோ** இல்லாவிட்டால் யஜ்ஞம், வேள்வி என்பதே இல்லை.

Koyiloor Digital Library

பசு காத்தலே பாரினைக் காத்தல்

லோக க்ஷேமத்துக்கு முதுகெலும்பாயிருப்பது வேதம். அந்த வேதத்துக்கு முதுகெலும்பு வேள்வி. வேள்விக்கு முதுகெலும்பாய் இருப்பது அதைச் செய்கிற கர்த்தாவும், அதில் ப்ரதான த்ரவ்யமாயிருக்கிறவற்றைக் கொடுக்கிற **கோ**வும்தான். ஆகவே முடிவாக லோகம் வாழவே முதுகெலும்பாயுள்ள இரண்டில் ஒன்று **கோ** என்றாகிறது. அதனால்தான் '**கோ**ரக்ஷணமே பூரக்ஷணம்', 'பசு காத்தலே பாரினைக் காத்தல்' என்கிறது. அந்தக் காரணத்தினால் தான் லோகம் முழுதும் நன்றாக இருக்கவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறபோது முதலில் **கோ**வையும், அப்புறம் யஜமானனையும் தனிப்படச் சொல்லிவிட்டு, அப்புறமே ஸமஸ்த லோகத்துக்கும் ஸௌக்யத்தை வேண்டுவது:

கோ–ப்ராஹ்மணேப்யோ சுபமஸ்து நித்யம்
லோகா: ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து

எத்தனையோ ப்ராணிகள் இருக்கும்போது **கோ**வையும், பல ஜாதிகள் இருக்கும்போது ப்ராம்மணனை யும் மட்டும் பிரித்துச் சொன்னதற்குக் காரணமே அந்த இருவருந்தான் அத்தனை ப்ராணிகளும், அத்தனை ஜாதி ஜனங்களும் க்ஷேமமாயிருப்பதற்கு உதவுகிற யஜ்ஞ கர்மாவில் விசேஷமாகப் பயன்படுவது என்பதுதான். லோகம் முழுவதும் நன்றாயிருக்கப் பண்ணும் பொருட்டே இந்த இருவரும் — **கோ**வும் ப்ராஹ்மணனும் — நன்றா யிருக்க வேண்டும் என்றே இவர்களை லோகத்திலிருந்து பிரித்துச் சொன்னதே தவிர வேறே பக்ஷபாதம் இல்லை.

இப்படிச் சொன்னது ராமாயண பாராயணத்தின் முடிவிலே சொல்கிற மங்கள ச்லோகங்களில் முதலாவ தானதில். வேதத்தையே அநுஸரித்து, அச்வமேதாதி யஜ்ஞங்களைச் செய்துகொண்டு தர்ம ராஜ்யம் நடத்திய

Koviloor Digital Library

ராமசந்த்ர மூர்த்தியின் கதா பாராயணத்துக்கு முடிவிலே வருகிற ச்லோகமானதால் முதலில் லோகத்தை ஆளுகிற ராஜாக்கள் நியாயமார்க்கத்தில் ஆட்சி செலுத்திப் பரிபாலனம் செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டு அப்புறம் **கோவின்** க்ஷேமம், ப்ராஹ்மணனின் க்ஷேமம், லோக க்ஷேமம் ஆகியவற்றைச் சொல்லியிருக்கிறது:

ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
ந்யாய்யேந மார்கேண மஹீம் மஹீசா: |
கோ ப்ராஹ்மணேப்யோ சுபமஸ்து நித்யம்
லோகா: ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து ||

ராமர்-க்ருஷ்ணர் இந்த தேசத்தின் இரண்டு கண்கள். க்ருஷ்ணபரமாத்மாவிடமும் லோகத்தின் நலனைப் பிரார்த்திக்கும்போது இதே மாதிரி லோக ஹிதத்தைச் சொல்வதற்கு முந்தி **கோ,** ப்ராஹ்மணன் ஆகியவர்களின் நலனைச் சொல்லியிருக்கிறது:

நமோ ப்ரஹ்மண்ய தேவாய ***கோ ப்ராஹ்மண ஹிதாய ச*** **|**
ஜகத்–ஹிதாய **க்ருஷ்ணாய கோவிந்தாய நமோ நம: ||**

இப்படி யஜ்ஞத்தைத் தாங்கி தரித்து தூக்கி நிறுத்துபவர்களாக யஜ்ஞ கர்த்தாவான ப்ராஹ்மணன், யஜ்ஞத்துக்கு வேண்டிய த்ரவ்யம் தருகிற **கோ** என்ற இரண்டு பேர் இருந்தாலும் அந்த இருவரிலும் **கோவுக்கே** முதலிடம் கொடுத்து, அப்புறமே ப்ராஹ்மணனுக்கு இடம் தந்து '**கோ** ப்ராஹ்மண' என்று சொல்வதாகவே இருக்கிறது. ராமாயண மங்கள ச்லோகம், க்ருஷ்ண பரமாத்மாவைப் பற்றின ச்லோகம், பொது வசனம் எல்லாவற்றிலுமே ப்ராஹ்மணனைப் பின்னுக்குத் தள்ளி **கோவுக்கே** முக்யத்வம் தந்து '**கோ**-ப்ராஹ்மண' என்றே சொல்வதாக யிருக்கிறது.

Koviloor Digital Library

ப்ராஹ்மணர்களை பூதேவர், அதாவது தேவலோகத்தில் இல்லாமல் பூலோகத்திலேயே இருக்கிற தேவர்கள் என்பது. வேதத்துக்கே தங்களை அர்ப்பணம் செய்துகொண்டு, லோக க்ஷேமத்துக்காக யஜ்ஞ கர்மாநுஷ்டானங்களைப் பண்ணிக் கொண்டிருக்கும் ப்ராஹ்மணர்களைத்தான் அப்படிச் சொல்கிறது; தற்காலத்திலிருக்கும், ஸ்வதர்மத்தை விட்டுவிட்ட ப்ராஹ்மணர்களை அல்ல. இப்படி தேவராகச் சொல்லப்பட்டவர்களுக்கும் முந்தி **கோ.** 'தான் கெட்டது போதாதென்று சந்த்ர புஷ்கரணியையும் கெடுத்தான்' என்கிற மாதிரி, ப்ராஹ்மணன் வேத ரக்ஷணமான ஸ்வதர்மத்தை விட்டதில் யஜ்ஞ-ஹோமாதிகளுக்கு க்ஷீணம் ஏற்பட்டுவிட்டதால் அவற்றுக்கு நெய், கோமயம் முதலியன தருகிற **கோவின்** புண்யகார்யமும் தடைப்பட்டு விட்டது!

ஸாந்நித்ய விசேஷம்

தன்னிடமிருந்து த்ரவியங்களைக் கொடுத்து யஜ்ஞ ரக்ஷையைச் செய்கிற **கோ,** எதையும் கொடுக்காவிட்டாலும் தன்னுடைய ஸாந்நித்ய மாத்ரத்திலேயே மந்த்ரங்களை ரக்ஷித்துக் கொடுக்கிற வல்லமை வாய்ந்ததாக இருக்கிறது. அதனால்தான் மாட்டுக்கொட்டிலில் ஜபம் செய்தால் கோடிப் பங்கு [மடங்கு] பலன் என்பது. 'கோஷ்டம்' என்ற மாட்டுக் கொட்டிலை போன்ற பரிசுத்தமான ஸ்தலம் எதுவும் இல்லை.*

ஸகல தேவதைகளும் கோவுக்குள் அடக்கம்

ஏனென்றால் **கோவுக்குள்** முப்பத்து முக்கோடி தேவர்களுமே அடக்கம். ஸகல புண்யதீர்த்தங்களும் ஒரு

* 1927ல் மஹாத்மா காந்தியை ஸ்ரீசரணர் பாலக்காட்டிலுள்ள நெல்லிச்சேரியில் மாட்டுக் கொட்டிலிலேயே சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Koviloor Digital Library

பசுவுக்குள் இருக்கின்றன. நம்முடைய ஆலயம் ஒவ்வொன்றிலும் சில தெய்வங்களுக்கு ஸந்நிதிகள் இருக்கின்றன; அதைச் சேர்ந்ததாக ஒவ்வொரு புண்ய தீர்த்தம் இருக்கிறது. **கோ** என்பதோ அத்தனை தெய்வங்களும் அத்தனை புண்ய தீர்த்தங்களும் குடி கொண்ட ஆலயமாக இருக்கிறது. **கோவே** ஒரு நடமாடும் கோயில். ஸர்வ தேவதைகளுக்குமான மஹத்தான கோயில்.

கோமாதாவும் லக்ஷ்மியும்

ஸர்வ தேவதா ஸ்வரூபம் என்றால் நம்முடைய சிற்றறிவால் இன்னதென்றே கிரஹித்துக் கொள்ள முடியாமல் அல்லவா இருக்கிறது? ஒரே மலைப்பாக — பயம் கலந்த மலைப்பாக — இருக்கிறதே தவிர அன்போடு பக்தி பண்ணும்படியாக இல்லையே! அதனால் கோமாதாவைக் குறிப்பாக லக்ஷ்மி என்ற ஒரு தேவதையின் ஸ்வரூபமாகச் சொல்வது. அமர[கோச]ம் என்கிற ஸம்ஸ்க்ருத நிகண்டுவில் [அகராதியில்] லக்ஷ்மியின் பல பெயர்களைச் சொல்லும்போது 'லோகமாதா', 'லோகஜனனி' என்னும் இரண்டு பெயர்கள் சொல்லியிருக்கிறது. கோமாதா அந்த லோகமாதாவே.

கோமாதாவை லக்ஷ்மி என்கிறது ஒரு பக்கம். அவளை லக்ஷ்மியின் வாஸ ஸ்தானமாகச் சொல்வது இன்னொரு பக்கம். லக்ஷ்மிக்கு வாஸ ஸ்தானங்கள் ஐந்து. ஸுமங்கலியின் ஸீமந்தம் என்கிற வகிடு, மலர்ந்த தாமரைப் பூவின் உள்பக்கம், யானையின் மஸ்தகம் [தலை], வில்வ பத்ரத்தின் பின் பக்க ரேகை ஆகிய நாலோடு பசுவின் பின்புறமும் ஐந்தாவதாக மஹாலக்ஷ்மியின் நிவாஸமாக இருக்கிறது. **கோவிடத்தில்** எதிரிடைகள் சேர்கிறதில் கோமய, கோமூத்ரங்களும் பவித்ரமாக இருப்பதாகப் பார்த்தோமல்லவா? அப்படியேதான் அதன் முக

Koviloor Digital Library

மண்டலமாக இல்லாமல் ப்ருஷ்டபாகமாக இருக்கப்பட்ட பின்புறமும் பரம பவித்ரமான லக்ஷ்மீவாஸமாக இருக்கிறது. அழகுக்காக **கோவின்** முகத்தில் சந்தன குங்குமங்கள் இட்டுக் கழுத்தில் மாலை போட்டாலும், **கோபூஜை** என்று பண்ணும்போது பின்புறத்தை அலங்கரித்து அங்கேயே அர்ச்சனாதிகள் செய்யவேண்டும். ஒரு **கோவினிடம்** நிக்ருஷ்டமானது [தாழ்ந்தது] என்று எதுவுமேயில்லை. அதனிடம் ஸர்வமும், ஸர்வாங்கமும் உத்க்ருஷ்டமே [உயர்ந்தனவே]. நம் மடம் மாதிரி தர்மபீடங்களில் ப்ரதிதினமும் காலம் கார்த்தாலே நடக்கிற முதல் வழிபாடு கோபூஜைதான் என்பதிலிருந்து **கோவுக்குள்ள** உத்க்ருஷ்ட மான ஸ்தானத்தைப் புரிந்து கொள்ளலாம். பசுவைவிட யானை எவ்வளவோ பெரியதாக இருந்தாலும் கோபூஜைக்கு அப்புறந்தான் கஜபூஜை.

'பசுவுக்கு ஒரு வாயுறை'

தெய்வமாகப் பூஜை பண்ணுவது இருக்கட்டும். அது சிலர்தான் பண்ண முடியும். ஆனால் எவரானாலும் பண்ண வேண்டிய கடமையாக ஒன்று இருக்கிறது. **கோவுக்கு** ஆஹாரம் போடுவதுதான் அது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் ஒரு பசுவுக்குக் கைப்பிடி அளவு புல்லாவது கொடுக்கவேண்டும். **'கோ** க்ராஸம்' என்று இதை சாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது. 'க்ராஸம்' என்றால் ஒரு வாய் ஆஹாரம். **'கோ** க்ராஸம்' என்பதை வைத்துத்தான் புல்லுக்கு இங்கிலீஷில் grass என்று பெயர் வந்திருக்கிறது. திருமூலர் 'திருமந்திர'த்தில்* ப்ரதி தினமும் ஜீவர்கள் செய்யவேண்டிய கடமைகளில், ஈச்வரனுக்கு ஒரு பச்சிலை, அதாவது வில்வ பத்ரமேனும் அர்ச்சிப்பது, ஒரு

* 252–வது மந்திரம்.

Koviloor Digital Library

கைப்பிடியாவது ஆஹாரம் பிச்சை போடுவது ஆகிய இரண்டுக்கும் நடுவில் கோக்ராஸம் கொடுப்பதையும் சொல்லியிருக்கிறார். முடிவாக ஜீவர்களிடம் இனிமை யாகப் பேசுவதையும் சொல்லியிருக்கிறார்.

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை,
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை,
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி,
யாவர்க்குமாம் பிறர்க்(கு) இன்னுரைதானே.

மன்னிக்க முடியாத குற்றம்

கறக்கிற காலத்திலும் ஸரி, கறவை நின்றுபோன பிற்பாடும் ஸரி கோமாதாவின் வயிற்றுக்குப் போதிய ஆஹாரம் போடாமல் வாடவிட்டால் அது நமக்குப் பெரிய களங்கம். இந்த விஷயத்தில் நாமெல்லாரும் பெரிய குற்றவாளிகளாக இருக்கிறோம். இதில் நம்முடைய கவனக் குறைவு மன்னிக்க முடியாத தப்பாகும்.

நம் மதத்தில் பசுவுக்குத் தெய்வ ஸ்தானம் கொடுத்திருக்கிற மாதிரி இல்லாத பிற மதஸ்தர்கள் தங்கள் தேசத்தில் வளர்க்கிற பசுக்களையும், நம் தேசத்திலுள்ள பசுக்களையும் பக்கத்தில் பக்கத்தில் நிறுத்தி வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் அவமானப்படும்படியே இருக்கும். மற்ற தேசத்தார் பசுவைத் தெய்வமாக சொல்லாவிட்டாலும், அவர்கள் பசு மாம்ஸம் சாப்பிடுபவர்களாக இருந்தாலும் நடைமுறையில் அவற்றின் வயிற்றுக்கு யதேஷ்டமாகப் போட்டு அவற்றைத் தள தள என்று வைத்துக் காப்பாற்றுகிறார்கள். நாமோ நமக்குப் பால் கொடுப்பதற்காக அதற்கு அதம பக்ஷமாக எவ்வளவு தீனி தேவையோ அவ்வளவே போடுகிறோம். அதனால் பார்வைக்கே அந்நிய தேசத்துப் பசுக்களுக்குப் பக்கத்தில் நம் தேசப் பசுவை நிறுத்தினால் ஸான்டோவுக்குப்

Koviloor Digital Library

பக்கத்தில் சோனி மாதிரி இருக்கிறது. மாம்ஸத்துக்காகவே அவர்கள் பசுவைப் புஷ்டி பண்ணுகிறார்கள் என்று சொல்லி நாம் தப்பித்துக்கொள்ள முடியாது. என்ன காரணத்திற்கானாலும் ஸரி, ஒரு பசுவை உயிரோடு விட்டு வைக்கும் வரை வயிறு ரொம்பப் போடுகிறார்களல்லவா?

பசுவைப் புஷ்டியாக வைத்துக் காப்பாற்றுவதற்கான வற்றைச் செய்யாமல் பசுவதையைச் சட்டத்தின் மூலம் தடுக்க வேண்டும் என்று நாம் வெறுமனே முழக்கிப் பிரயோஜனமில்லை. பசுவதையை ஆதரிப்பவர்கள் நாம் வைத்திருக்கும் கறவை நின்றுபோன கோக்களைக் காட்டி, 'இப்படி இவற்றை எலும்பும் தோலுமாக, குற்றுயிரும் குலை உயிருமாக வைத்திருப்பதைவிட ஒரேயடியாக ஹத்தி செய்து விடுவது அவற்றுக்கே விமோசனந்தானே!' என்று கேட்டால் நாம் வாயைத் திறக்க யோக்யதையில்லாத நிலையாகத்தான் இப்போது இருக்கிறது.

அரசாங்கத்தின் கடமையும் மக்களின் கடமையும்

இப்படிச் சொன்னதால் பசுவதைத் தடுப்புச் சட்டம் வேண்டாமென்றோ, அல்லது அத்தனை பசுக்களுக்கும் அவை இயற்கையாக உயிர் பிரிகிற வரையில் நல்ல பராமரிப்பு அளிக்கப்படும் காலம் வருகிற வரையிலாவது பசுவதையைச் சட்டமூலம் தடுக்கக் கூடாதென்றோ சொல்வதாக அர்த்தம் செய்துகொண்டுவிடக்கூடாது. கோஹத்தித் தடுப்புச் சட்டம் எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவில் கொண்டுவர வேண்டியதே. அது அரசாங்கத்தார் பண்ண வேண்டியது. ஆனால் அதோடு முடிந்துவிடாமல் மக்கள் கடமை என்றும் ஒன்று இருக்கிறது. அது கோ ஒரு நாளும் ஒட்டி உலர்ந்து நிற்க விடாமல், அதற்கு வேண்டிய அளவு தீனி போட்டும், ஸுகாதாரமான கொட்டில்களில் வாழுமாறு வைத்தும்

Koviloor Digital Library

ஸம்ரக்ஷிப்பதே. பல காலமாக கோஹத்திக்கு அரசாங்கத் தரப்பில் தடுப்புச் சட்டம் போட வேண்டும் என்று பல பேர் வற்புறுத்தி, கிளர்ச்சியெல்லாங்கூடப் பண்ணிவருகிறார்களே தவிர மக்கள் தரப்பில் கோஸம்ரக்ஷணைக்கு என்னவெல்லாம் பண்ணவேண்டுமோ அதை வற்புறுத்தி விசேஷமாக எதுவும் சொல்லவோ செய்யவோ இல்லை. இந்த விஷயத்தில் நானே என் கடமையை ஸரிவரப் பண்ணவில்லை. நம் கடமை என்ற இந்த அம்சத்தை அழுத்தி எடுத்துக் காட்ட வேண்டுமென்றுதான் எதிர்த் தரப்பாரின் குற்றச் சாட்டிலும் நியாயமில்லாமலில்லை என்று சொன்னேன். மொத்தத்தில் அரசாங்கச் சட்டம் அவச்யம்தான்; அதே அளவுக்கு மக்கள் உரிய முறையில் **கோக்களை** அவற்றின் கடைசிக் காலம் வரையில் நன்கு நடத்தவேண்டியதும் அவச்யம் என்றே சொல்ல வந்தேன்.

ஒரு பக்கம் பசுவைத் தெய்வமாகக் காட்டி கோபூஜை செய்யும் மதஸ்தர்களாக நாம் இருக்கிறோம்; இன்னொரு பக்கம் மாம்ஸத்துக்காகவும், தோலுக்காவும் ஏராளமான கறவை நின்ற **கோக்களை** ஹத்திக்கு அனுப்பிக்கொண்டும் இருக்கிறோம்; அல்லது அவற்றை வயிறு வாடி வதங்கி நசியுமாறு வைத்திருக்கிறோம். இந்த 'ஹிபாக்ரிஸி' நமக்குப் பெரிய களங்கம். தானாக உயிர் பிரிகிற வரையில் **கோக்களை** நல்லபடி வைத்துக் காப்பாற்றாத வரையில் நம்மை ஹிந்துக்கள் என்று சொல்லிக் கொள்வதற்கே லாயக்கில்லை.

கோவின் வயிற்றை நிரப்ப ஸுலப வழி

பசுக்களை வயிறு வாடாமல் ரக்ஷிப்பதற்கு நம்மில் அத்தனை பேரும் ஏதோ ப்ரமாத த்யாகம் பண்ண வேண்டும், ச்ரமப்பட வேண்டும் என்றுகூட இல்லை. பசுவுக்காக எவ்வளவு த்யாகம் பண்ணினாலும் தகும்,

Koviloor Digital Library

ச்ரமப்பட்டாலும் தகும் என்பதும் வாஸ்தவம். அப்படிச் சில பேரோ, பல பேரோ புறப்பட்டால் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் எல்லோரும் அவ்வளவு தூரம் போகாமல் ஒரு சின்ன விஷயத்தைக் கவனித்தாலே போதும், எத்தனையோ கோக்களின் வயிறு நிறைந்துவிடும். அதாவது நாம் தினமும் சாப்பிடும் கறிகாய்களில் உதவாதது என்று சீவித் தள்ளுகிற மேல் தோலியெல்லாம் கோவுக்கு ஆஹாரமாகப் போடும்படித் தக்க ஏற்பாடு செய்து விட்டாலே எத்தனையோ பசுக்களின் வயிறு ரொம்பும். தினந்தோறும் வீட்டுக்கு வீடு கறிகாய்கள் நறுக்குகிறோம். ஹாஸ்டல்களிலும் ஹோட்டல்களிலும் நூற்றுக் கணக்கானவர்கள் சாப்பிடுவதால் ஏராளமாகக் கறிகாய்கள் நறுக்கப்படுகின்றன. நறுக்கும்போது 'வேஸ்ட்' என்று மேல் தோலிகளை குப்பைத் தொட்டியில் கொட்டி, தோட்டி களுக்கு அவற்றை சுத்தப்படுத்தும் வேலையை வைக்கிறோம். இதற்குப் பதில் ஒவ்வொரு வீட்டிலும், ஹாஸ்டல், ஹோட்டல் போன்ற இடங்களிலும் கறிகாய்த் தோலியைப் போட்டு ஈ, எறும்பு வராமல் மூடி வைக்கும் படியாகத் தனியாக தொட்டி வைத்திருக்கவேண்டும். இவற்றை வீட்டுக்கு வீடு சேகரித்துப் பசுவின் வயிற்றுக்குக் கொண்டு சேர்ப்பதற்கென்றே தொண்டர்கள் திரள வேண்டும்.

இதிலே அப்படியென்ன கிடைத்துவிடப் போகிறது என்று அலக்ஷ்யமாக நினைக்க வேண்டாம். நாம் கோடானுகோடிப் பேரில் ஒவ்வொருவரும் கறிகாய் சேர்த்துக் கொள்கிறோமாதலால், வீட்டுக்கு வீடு தோலி சேகரிப்பு என்றால் மொத்தத்தில் போர் போராகக் குவியும். ஹாஸ்டல், ஹோட்டல்களில் சேர்வதைக் கேட்கவே வேண்டாம். ஜனத்தொகையின் விகிதத்தோடு பார்த்தால் பசுவின் 'பாபுலேஷன்' ரொம்பக் குறைச்சலாகவே இருக்கும். அப்படிப்பட்ட பசுக்களிலும் நல்ல முறையில்

Koviloor Digital Library

பண்ணைகளிலும், ஸௌகரிய தசையிலுள்ள சொந்தக் காரர்களின் வீடுகளிலும் பராமரிப்பு பெறுகிறவற்றிற்கு நாம் எதுவும் செய்ய வேண்டுமென்பதில்லை. கசாப்புக் கடைக்கும் இறைச்சிக் கூடத்துக்கும் போகக்கூடிய ஸ்திதியில் இருக்கும் பசுக்களைக் காப்பாற்றுவதுதான் இங்கே நமக்கு முதன்மையான குறிக்கோள். அதில் கணிசமான அளவுக்கு இந்தத் தோலி சேகரிப்பு நமக்கு ஸஹாயம் பண்ணும் என்பதில் ஸந்தேஹமில்லை. சிறுதுளி பெருவெள்ளம். கவனக் குறைவு சிறிதும் இல்லாமல் இந்த ஸுலபமான காரியத்தைச் செய்தால் அந்த வெள்ளத்தைப் பிரத்யக்ஷமாகப் பார்க்கலாம். கோபாலக்ருஷ்ணனின் அருள் வெள்ளத்தையும் பெறலாம்.

கோ ஸம்ரக்ஷணம் நம்முடைய அத்யாவச்யக் கடமையாதலால், இதை நடைமுறை ஸாத்யமில்லாத கார்யம் என்று தள்ளிவிடாமல், சில ச்ரமங்கள் இருந்தாலும் அவற்றைச் சமாளித்துக் கொண்டு, கஷ்ட நஷ்டப் பட்டாவது அவச்யம் இதைச் செய்யவேண்டும். அப்படி யொன்றும் கஷ்டமும் நஷ்டமும் பெரிசாக வந்து விடாது. பால் மறுத்த பசுக்களைக் கட்டித் தீனி போட முடியவில்லை என்பதால்தானே அவற்றைக் கசாப்புக் கடைக்கு அனுப்புவது? அப்படித் தாய்த் தெய்வமும், தெய்வத் தாயுமான **கோ** கொலைக் களத்துக்குப் போகிறதுதான் பெரிய கஷ்டமும் நஷ்டமும். அது நேராமல் பார்த்துக் கொள்வதற்குச் செய்கிற எந்த முயற்சியும் கஷ்ட நஷ்டங்களில் சேராது.

கறிகாய்த் தோலி மாதிரியே சாதம் வடித்த கஞ்சியும் பசுவுக்கு ஆஹாரமானதால் அதையும் சேகரித்துப் பசுக்களுக்குச் சேர்க்கலாம். ஆனால், இப்போது பெரும்பாலான வீடுகளில் குக்கர் சமையல் வழக்கம் வந்து விட்டது. அப்படியில்லாத இடங்களில் இந்தக்

Koviloor Digital Library

கைங்கர்யமும் செய்யலாம். அரிசியை ஜலம் விட்டு அலம்புகிற கழுநீர் என்கிற கழிவு நீருங்கூடப் பசுவுக்கான ஆஹாரம்தான். அதுவும் பசு வயிற்றுக்குப் போகும்படிச் செய்யலாம். செய்யவேண்டும்.

வீட்டுத் தோட்டங்களில் ஒரு சின்ன திட்டில் பசுவுக்கென்றே அகத்திக் கீரை பயிரிடுவது என்று ஏற்பட்டு விட்டால் அதுவும் **கோ** வதை நின்று **கோ** ரக்ஷணம் நடப்பதற்குக் கணிசமான உபகாரம் செய்ததாகும். அகத்திக் கீரையைப் பசு பரம ப்ரீதியோடு சாப்பிடும்.

பகவான் வாஸுதேவனின் வயிற்றுக்கே போடுவதாக நினைத்து இப்படியெல்லாம் எந்த முறையிலேனும் நாம் ஒவ்வொருவரும் பசுக்களை அவச்யம் ரக்ஷிக்க வேண்டும். அந்த உணர்ச்சி வந்துவிட்டால், சிரமமே ஏற்பட்டாலும் அது சிரமமாகத் தெரியாது. மனமிருந்தால் வழியுண்டு. இந்த விஷயத்தில் நிச்சயமாக மனம் இருந்தேயாக வேண்டும். அப்போது வழியும் தானே பிறக்கும்.

காப்பு விடுதிகள்

முடிவாக ஸகல மக்களும் ஒன்றுகூடி நடத்த வேண்டிய பணி என்னவென்றால் ஒரு பசுகூட வதைக்குப் போகாமல் வயிறு ரொம்பத் தீனி பெறவும், ஸுகாதாரமான கொட்டில்களில் வாஸம் பெறவும் செய்வதுதான். இதற்காகக் கறவை நின்றுபோன பசுக்களுக்கென்றே ஆங்காங்கு காப்பு விடுதிகளை மக்கள் அமைத்துச் செவ்வனே பரிபாலிக்க வேண்டும். கறவை நின்ற பசுக்களை வைத்துக் காப்பாற்ற ப்ரியப்படாமல் இறைச்சிக் கூடத்துக்கு விற்கவிருக்கும் எல்லா சொந்தக்காரர்களிடமிருந்தும் அவற்றை வாங்கி இந்த விடுதிகளில் வைத்துக் காப்பாற்ற வேண்டும். போதிய பண்பாடில்லாத சொந்தக்காரர்களா யிருந்தால் அவர்கள் மாம்ஸ விலையையும் தோல்

Koviloor Digital Library

விலையையும் நினைத்து பேரம் பண்ணக்கூடும். அவர்களுக்குப் பொறுமையாகவும் சாந்தமாகவும் இப் பணியிலுள்ள புண்யம், ஜீவகாருண்யம் இரண்டையும் எடுத்துச் சொல்லி நியாய விலைக்கோ, இலவசமாகவோ விற்கச் செய்யவேண்டும். பல மாட்டுக்காரர்கள் நிஜமாகவே ஏழைகளாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்கள். அவர்களிடமிருந்து இலவசமாக எதிர் பார்ப்பதற்கில்லைதான். எப்படியானாலும் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது என்ற காரணத்துக்காக ஒரு பசுவைக்கூடக் கொலைக் கூடத்துக்குப் போகும்படிப் பண்ணிவிடக்கூடாது. 'விலைக்கு மாடு வாங்குவது, விடுதி அமைப்பது, தீனி போடுவது என்றால் நிரம்பப் பணம் பிடிக்குமே! அதோடு, 'மாடோ பாடோ' என்று கிழ மாடுகளைப் பராமரிப்பதென்றால் சரீர உழைப்பும் நிரம்பத் தேவைப்படுமே!' என்றால், இந்தப் பணியின் முக்யத்வத்தைப் பார்க்கிறபோது பணமும் உழைப்பும் ஒரு பெரிசில்லை.

பசு சேவையில் மக்கள் ஒரு குடும்பமாகச் சேர்வது

இது எத்தனை அவச்யம் என்று, awareness create செய்வது என்கிறார்களே, அப்படி வலுவான ப்ரசாரத்தால் ஜன ஸமூஹத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி விட்டால் போதும், இத்தகைய பெரிய ஜனத்தொகையுள்ள நம் தேசத்தில் தேவையான பணமும் திரளும், தொண்டர்களும் திரளுவார்கள் என்றே நம்புகிறேன். அங்கங்கே நாலு பேர் விடா முயற்சியுடன் புறப்பட்டுவிட்டால் போதும். பொருள் பலம், ஆள் பலம் இரண்டும் கிடைத்துவிடும். இதில் ஒரு விஷயம் என்னவென்றால், பணம் கொடுக்கிறவர் வேறே, சரீரத்

Koviloor Digital Library

தொண்டு செய்கிறவர் வேறே என்று அடியோடு இரண்டாகப் பிரிந்து நிற்கக்கூடாது. பணம் கொடுக்கிறவரும் கொஞ்சமாவது உடம்பால் உழைக்க வேண்டும், உடம்பால் உழைக்கிறவரும் கொஞ்சமாவது பொருளுதவி பண்ணவேண்டும். அப்போதுதான் எல்லோருக்கும் total involvement — பூர்ணமான ஈடுபாடு — இருக்கும். அதோடு ஸமூஹத்திலும் மக்கள் பணம் படைத்தவர், உழைப்பாளி என்று இரண்டு ஜாதிகளாகப் பிரிந்து நிற்காமல், எல்லோரும் ஒரேபோல் கோமாதாவின் குழந்தைகளாக, ஒரே குடும்பமாக, ஐக்யப்படுவார்கள்.

என் ஆசை என்னவென்றால், ஹிந்துக்களான நாமெல்லோரும் இப்படி ஒரு குடும்பமாக கோசேவையில் சேர்வதோடு, மற்றவர்களுக்கும் நல்லபடியாக ப்ரேமையுடன் எடுத்துச் சொல்லிப் பிற மதஸ்தர்களையும் இதில் ஈடுபடுத்தி நம்முடைய ஒட்டுமொத்த ஜன ஸமூஹம் முழுதுமே ஏக குடும்பமாக ஒற்றுமையோடு இப் பணியில் ஈடுபட வேண்டும் என்பதே. மதாபிமானம் என்பது ஒவ்வொரு மதஸ்தருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கலாமானாலும், ஜீவகாருண்யம் என்பது ஸகலருக்கும் பொதுவானதாகையால் அந்த அம்சத்தைக் கொண்டு இந்தப் பணியில் இந்த நாட்டிலுள்ள அத்தனை மதஸ்தர்களும் ஒன்று சேர்ந்து தோள் கொடுக்க வேண்டும் என்பதே என் அவா.

பேணுவது புண்யம்; புறக்கணிப்பது பாபம்

பசுவைப் பேணிக் காப்பது ஸர்வ பலன்களையும் அளிக்கும் பரம புண்யம். இதைச் சொல்லும் கையோடேயே அதைப் புறக்கணிப்பது சாபங்களை வாங்கித் தரும் மஹா பாபம் என்பதற்கும் ஆதாரமிருப்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. ஸூர்ய வம்சத்திலே வந்த மஹாத்மாவான ராஜா திலீபன்

Koviloor Digital Library

வாழ்க்கையில் இரண்டுக்கும் சான்று இருக்கிறது. அவர் தேவலோகம் சென்றிருந்தபோது காமதேனுவை ப்ரதக்ஷிணம் செய்யாமல் வந்து விடுகிறார். அந்தத் தப்புக்காக அவருக்கு ஸந்ததி வாய்க்காது என்று சாபம் ஏற்படுகிறது. சாப நிவ்ருத்தி என்றும் ஒன்று உண்டே! அது என்ன? அந்தக் காமதேனுவின் கன்றான நந்தினி, ஸூர்ய வம்சத்தின் குலகுரு வஸிஷ்டரிடம் இருக்கிறது. வஸிஷ்டர் சொன்னதின் பேரில் அதற்கு ஒரு மாட்டுக்காரன் செய்வதைவிட பக்தியுடன் திலீபன் மேய்த்து கட்டி, குளிப்பாட்டிவிட்டு, இன்னும் எல்லாக் கைங்கர்யமும் செய்கிறார். பத்னி ஸுதக்ஷிணையுடன் சேர்ந்து அப்படிப் பண்ணுகிறார். சாபம் நிவ்ருத்தி ஆகிறது. சாபம் நிவ்ருத்தியாகி ஏதோ ஒரு சாமானியப் பிள்ளை பிறந்தது என்றில்லாமல் ஸூர்யவம்சத்துக்கு ரகு வம்சம் என்றே இன்னொரு பெயர் ஏற்படும்படியான பெருமைகள் நிறைந்த ரகு திலீபனுக்குப் புத்ரனாகப் பிறந்தவன்தான். அப்புறம் பகவானே ரகுராமனாக அவதாரம் செய்யவும் அதுவே அடிப்படை.

முற்காலத்தில் நடந்த பசு பராமரிப்பு

சொல்லி ப்ரயோஜனமில்லை என்றாலும் சொல்லாமலும் இருக்கமுடியவில்லை. வெள்ளைக்கார அரசாங்கம் வருகிறதற்கு முந்தி ஊருக்கு ஊர், கிராமத்துக்கு கிராமம் பசுக்களுக்கென்றே பிரத்யேகமாக மேய்ச்சல் பூமி சாஸனமாக விடப்பட்டிருந்தது. கோக்ஷேமத்துக்குள்ள முக்யத்வம் தெரியாத வெள்ளைக்கார அரசாங்கம் அந்த பூமிகளையும் தர்க்காஸ்தாகக் கொடுத்து விட்டது. பசுவின் வயிற்றில் அதிலிருந்து அடி விழ ஆரம்பித்தது. அதே மாதிரி, மந்தைக் கரைக்குளம் என்று பசுக்களுக்காகவே முன்காலத்தில் இருந்த குளங்களும் இப்போது

Koviloor Digital Library

எடுபட்டுவிட்டன. Minor irrigation works — சிறிய நீர்ப்பாசனத் திட்டம் — என்று அரசாங்கத்தில் போடுவதில் இந்த மந்தைக்கரைக் குளத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அநேக க்ராமங்களாக இருந்தவை உருமாறித்தான் இன்றைய சென்னை மாநகராகியிருக்கிறது. இப்போது மந்தைவெளி என்று இருக்கிற பேட்டை ஆதியில் மேய்ச்சல் பூமியாகவே இருந்திருக்கிறது. அமிஞ்சிக் கரையை 'அமைந்த கரை' என்கிறார்களே, அது மந்தைக்கரைக் குளமாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

முன்னாளில் மாடுகளிடம் எத்தனை அபிமானம் காட்டி அதை ரக்ஷித்தார்கள் என்பதற்கு ஒரு சான்று சொல்கிறேன். மனிதர்களாகப் பிறந்தவர்கள் கடைத்தேறு வதற்காக செய்யவேண்டிய தர்மங்களை எண்-நான்கு — அதாவது முப்பத்திரண்டு — அறங்கள் என்று சொல்லி யிருக்கிறது. அதை இரட்டிப்பாக்கி அறுபத்துநாலு தர்மங்கள் என்றும் சொல்வதுண்டு. அவற்றில் ஒன்றாக 'ஆதீண்டு குற்றி நிறுவுதல்' என்பதைச் சொல்லியிருக்கிறது. அது என்ன? ஒரு கோவுக்கு உடம்பிலே அரிக்கிறது. நமக்கு எங்கே அரித்தாலும் நாம் கையை வளைத்துச் சொறிந்து கொள்கிறோம். கோவோ பின்னங் காலைக் கொண்டுதான் சொறிந்து கொள்வது. அப்போது சில இடங்களில் அரித்தால் அதற்கு ஸரியாக சொறிந்து கொள்ள வராது. அந்த மாதிரி ஏற்படும்போது அது அரிப்பெடுக்கிற பாகத்தை நேரே வைத்துத் தேய்த்துச் சொறிந்து கொள்வதற்கு வாகாகக் கல்லை நட்டு வைப்பதுதான் 'ஆதீண்டு குற்றி நிறுவுதல்'. ஆங்காங்கே இந்த மாதிரி நட்டு வைத்தார்கள். அந்த வழியில் போகிற மாடுகள் அவற்றில் சொறிந்து கொண்டு தினவு தீர்ந்தன. இப்படிச் சின்ன விஷயங்களைக்கூடப் பரம தர்மமாக நினைத்து கோவுக்குச்

Koviloor Digital Library

செய்த தேசத்தில் நாம் அதை எலும்பும் கூடுமாக்குகிறோம், வதையாவதற்கு விடுகிறோம் என்றால் அது நமக்குப் பெரிய அபக்யாதி.

தேசியச் செல்வம்

கோ ஸம்ரக்ஷணை பற்றிச் சொல்லும்போது பசு மடங்கள் என்ற கோசாலை நிறைய வைத்துப் போஷிக்கும் நம் பக்கத்து நகரத்தாருக்கும் பிஞ்ஜராபோல் என்று வைத்து நடத்துகிற வடக்கத்திக்காரர்களுக்கும் நன்றி சொல்ல மறக்கக் கூடாது. பழையநாளில் **கோ**வின் வயிற்றுக்கு யதேஷ்டமாகப் போடவே மேய்ச்சல் பூமிகளைப் பராமரித்தார்கள். 'டவுன் லைஃப்' என்பது வந்து விட்டதில் எங்கே பார்த்தாலும் தோட்டமா, துரவா, வயலா இல்லாமல் கட்டிடங்களும் ஆஃபீஸ்களுமாகி விட்டன. இந்த உத்பாதத்தில் மநுஷ்யனுக்கு அத்யாவச்யமான ப்ராணவாயுவுக்கே குறைபாடு வந்துவிட்டது என்று இப்போதிப்போதுதான் அரசாங்கத்தார் கொஞ்சம் கண்ணை முழித்துக்கொண்டு அங்கங்கே காலியிடங்கள், பார்க்குகள், விளையாட்டு மைதானங்கள் இருக்கப் பண்ணுவதில் கொஞ்சம் முனைப்புக் காட்டி வருகிறார்கள். நகரவாஸிகளுக்கு இவற்றையே lungs — ச்வாஸகோசம் — என்று சொல்கிறார்கள். அந்த 'லங்க்'ஸுடனேயே **கோ**வின் வயிற்றுக்கும் இடம் தந்து அங்கங்கே மேய்ச்சல் பூமிகளும் ஏற்படுத்த வேண்டும்.

பசுவை தேசீயச் செல்வம் என்றே சொல்ல வேண்டும். பால் வற்றின பின்பும் அது செல்வந்தான். பால் வற்றினாலும் அது ஆயுஸ் உள்ளவரையில் சாணம் கொடுத்துக்கொண்டுதானே இருக்கிறது? அந்தச் சாணம் எருவாகப் பிரயோஜனப்படுகிறது. இப்போது புதிதாக 'கோபர் காஸ்' என்று அதிலிருந்தே எரிவாயுவும் எடுக்கிறார்கள்.

Koviloor Digital Library

ஆனால் **கோ** ஸம்ரக்ஷணம் — பசுவின் பராமரிப்பு — என்பது பொருளாதார முறையில் வரவுக்கும் செலவுக்கும் ஸரியாக ஈடுகட்டுகிறதா, லாபம் கிடைக்கிறதா என்றெல்லாம் பார்த்து மட்டும் நடக்கவேண்டிய வியாபார காரியமல்ல. முன்னேயே சொன்ன இந்த லௌகிகத்தோடு மட்டும் **கோ** நின்றுவிடாமல் தெய்விக, வைதிக ஸம்பந்தமுள்ளதாகவுமிருக்கிறது. லௌகிகத்தை விடவும் இந்தப் பெருமைதான் அதற்கு முக்யமானது. ஆகையால் தாயைப் பராமரிப்பது போலவும் தெய்வத்தாயைப் பூஜிப்பது போலவும் **கோ** ஸம்ரக்ஷணத்தை நாம் நினைக்க வேண்டும்.

கோவின் மூலம் நாம் லௌகிகமாகப் பயன் பெறுவதை மட்டுமே கருத்தில் கொண்டு, அப்படிப்பட்ட பயனைக் கொடுக்க அதற்குச் சக்தி இல்லாமல் போகும்போது அடிமாட்டுக்காக விற்பதாக நடப்பதற்கு முற்றுப்புள்ளி வைத்தாகவேண்டும்.

காபியில் பாலை வீண் செய்ய வேண்டாம்

கோவிடமிருந்து நாம் பயன் பெறும் விஷயமாகவும் ஒன்று சொல்லவேண்டும். உண்மையான பயன், அது தரும் த்ரவியங்களை வைதிக யஜ்ஞங்களிலும் தெய்வகார்யங்களிலும் உபயோகப்படுத்திக்கொள்வதும், அதன் பால், தயிர் முதலானவற்றை நாம் சாப்பிட்டு ஆரோக்ய விருத்தி பெறுவதுந்தான். ஆனால் துர்பாக்யவசமாக நடப்பது என்னவென்றால் ஆரோக்யத்துக்கு ஹானியான காபிக்குத் தான் இப்போது பாலில் பெரும்பகுதி போகிறது. அம்ருத துல்யமான பாலை உடம்பு, மனஸ் இரண்டையும் கெடுக்கும் விஷ வகையான கஃபைன் சேர்ந்த டிகாக்ஷனோடு சேர்த்து வீணடிக்கிறோம். பசு ரக்ஷணம் போலவே ஆத்ம ரக்ஷணத்திலும் ஜனங்கள் கவனம்

Koviloor Digital Library

செலுத்தி, காபி குடிக்கிற கெட்ட பழக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவேண்டும்.

பலமுறை காபி குடிப்பதற்குப் பதில் அந்தப் பாலில் ஒரு பாகம் கோயில் அபிஷேகத்துக்கும், ஒரு பாகம் ஏழை நோயாளிகளுக்கும் ஏழைக் குழந்தைகளின் வயிற்றுக்கும் போகுமாறு செய்யவேண்டும். பால் ருசியே காணாமல் நோஞ்சான்களாக லக்ஷக்கணக்கான ஏழைக் குழந்தைகள் இருக்கும்போது, நினைத்தபோதெல்லாம் பல பேர் காபி ருசி பார்ப்பது ஸமூஹத்துக்குச் செய்கிற த்ரோஹமாகும்.

காபிக்குப் பதில் காலை வேளையில் மோர்க் கஞ்சி சாப்பிடலாம். 'தக்ரம் அம்ருதம்' என்று சொல்லியிருக்கிறது. 'தக்ரம்' என்றால் மோர்தான். ஒரு பங்கு பாலிலிருந்து அதைப் போல் இரண்டு மூன்று பங்கு மோர் பெறலாமாதலால் இது சிக்கனத்துக்கும் உதவுவதாக இருக்கிறது. சில பேருடைய தேஹவாகுக்குப் பால் ஒத்துக்கொள்ளாது; பேதியாகும். அப்படிப்பட்டவர்களுக்கும் ஏற்றதாக கோமாதா அந்தப் பாலிலிருந்தே இந்த மோரை அருள்கிறாள். கொழுப்புச் சத்து சேரக்கூடாத ரோகங்களுக்கு ஆளாகிறவர்களும் வெண்ணெய் கடைந்து எடுத்து விட்ட மோர் சேர்த்துக் கொள்ளலாம்.

நெய்த்தீபம்

யஜ்ஞம் குறைந்து போனதால் அதற்கு நெய் செலவிடவும் இப்போது வாய்ப்பு குறைந்துவிட்டது. ஆனாலும் தெய்வ கார்யங்கள் இப்போதும் அகத்துப் பூஜை, கோயில் பூஜை, மடாலயங்களில் பூஜை என்ற ரூபத்தில் நடந்துவருவதால் நெய்த்தீபம் ஏற்றும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். நாமே பால் தோய்த்து வெண்ணைய் எடுத்து சுத்தமான பசு நெய் தயாரித்துக் கோயில்களுக்கும், மடாலயங்களுக்கும் கொடுப்பது பரம

Koviloor Digital Library

புண்யம். நெய் விளக்கின் ஜ்யோதிஸ் வெளுப்பாக வெளியே வீசுகிற மாதிரியே உள்ளுக்குள்ளேயும் பவித்ரத்வத்தை ஊட்டும். தெய்வ ஸந்நிதானத்தில் அது இருப்பது ரொம்பவும் விசேஷம். கோயில்களில் சுக்ரவாரங்களிலாவது நெய்த் தீபம் எரியுமாறு ஏற்பாடு செய்யவேண்டியது பக்தலோகத்தின் கடமை. கோமாதா நமக்குப் பல விதங்களிலும் பரம கருணையோடு செய்ய முன் வரும் உபகாரங்களில் எதையும் நாம் தவறவிடாமல் உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும். இப்போது நாம் அவளிடமிருந்து பெறவேண்டியதையும் தவற விட்டு, அல்லது தப்பான முறையில் பயன்படுத்திக் கொண்டு, அவளுக்கு நாம் தரவேண்டிய ரக்ஷணையையும் தவற விட்டுக் கொண்டிருக்கிறோம்.

இப்படியில்லாமல், **பரஸ்பரம் பாவயந்த:** என்று பகவான் கீதையில் சொன்ன மாதிரி* பரஸ்பரம் நாமும் **கோவும்** ஒருவரையொருவர் போஷித்துக் கொள்ள வேண்டும். கறவைக் காலத்தில் **கோவுக்கு** நாம் தருகிற போஷாக்கை விட **கோவினால்** நாம் பெறுகிற போஷிப்பு அதிகமாகும். கறவை நின்ற பிறகும் அந்த நன்றி நமக்கு மறக்கவே கூடாது. அதனால் **கோவுக்கு** ஆயுள் உள்ளவரையில் அதை ரக்ஷிக்க வேண்டும். கறவை மாடுகளுக்கு மட்டுமில்லாமல் மறுத்துப்போனவற்றுக்கும் பாதுகாப்புத் தர இப்போது எங்கேயோ சில இடங்களில் மட்டுமுள்ள கோசாலைகளும், பசு மடங்களும், பிஞ்ஜராபோல்களும் பலமடங்கு விருத்தியாக வேண்டும். இதற்காகச் செய்கிற செலவு முழுதும் புண்ய வரவேயாகுமாதலால் அனைவரும் தயங்காமல் தங்கள் பொருளையும், பொருளோடு உழைப்பு, கவனிப்பு

* **3.11.** பகவான் கூறியது மனிதர்களும் தேவர்களும் பரஸ்பரம் ஒருவரை மற்றவர் போஷித்துக் கொள்வதைப் பற்றியாகும்.

Koviloor Digital Library

ஆகியவற்றையும் இதற்காகத் தாராளமாகக் கொடுக்க முன்வரவேண்டும்.

இந்த தேசத்தின் புராதனமான கலாசாரத்தில் ஊறி வந்துள்ள கோரக்ஷண தர்மம் நம் ரத்தத்தில் பேச வேண்டும். அப்படிப் பேசி, ஒரு பசு கன்றுக்கு ஊட்டுக் கொடுப்பதற்கு எப்படித் துடித்துக் கொண்டு போகிறதோ அந்தத் துடிப்புடன் நாம் கோஸம்ரக்ஷணையில் முனைய வேண்டும்.

பசுவதைத் தடைச் சட்டம்

மக்கள், அரசாங்கம் ஆகிய இருவரும் பேணிக் காக்க வேண்டிய கோஸம்ரக்ஷண தர்மத்தில் மக்கள் செய்வதற்கு பெரிய பக்க பலமாக அரசாங்கம் முக்யமாகச் செய்ய வேண்டியது கோவதையைத் தடுத்துச் சட்டம் செய்வதாகும். அரசாங்கம் சட்டம் செய்வதற்கும் மக்களின் அயராத தூண்டுதல்தான் வழிவகுக்கும். சட்டத்தின் பலவந்தத்துக்கு பயந்துதான் கோவதை நிற்க வேண்டும் என்றில்லாமல் அதற்கு இந்த தேசத்திலுள்ள ஸகல இனமக்களும் மனமொப்பி ஆதரவு தருமாறு வெகுவாகப் பிரசாரம் செய்யவேண்டும். மாற்று அபிப்ராயமுள்ளவர் களிடமும் கோபப்படாமல் சாந்தமாகவும் அன்புடனும் விடாமல் எடுத்துச் சொல்லவேண்டும்.

முகலாய அரசர்களான அக்பரும் ஷாஜஹானும், மிக ஸமீப காலத்திலேயே ஆஃப்கானிஸ்தானின் அமீரும் பசு ஸம்ரக்ஷணையின் அவசியத்தை உணர்ந்து அதற்கான சட்டங்களைச் செய்திருக்கிறார்களென்பது குறிப்பிடத் தக்கது.

ஆகவே நாம் உரிய முறைப்படி எடுத்துச் சொன்னால் இந்த தேசத்தின் ஸகல பிரிவுகளையும் சேர்ந்த பிரஜைகள் எல்லோருமே நமக்கு ஆதரவு தருவார்கள் என்பதே என்

Koviloor Digital Library

நம்பிக்கை. அரசாங்கமும் எந்த ஒரு பிரிவினருக்கும் விரோதமாகச் சட்டம் செய்வதற்கில்லை என்ற காரணத்துக்காக இந்த உத்தமமான கார்யத்தைப் பண்ணாமலிருக்கும் நிலை மாறிச் சட்ட பூர்வமான ரக்ஷணை கிடைக்கும்.

அவசியமான சிலவற்றை அழிக்காமல் காப்பளிப்பதற்குச் சட்டம் செய்தால்தான் முடிகிறது என்பதால் அரசாங்கம் அப்படியே செய்கிறது. க்ரூரமான வனவிலங்குகள் கூட அழிந்துபோய்விடக் கூடாது என்று சட்டபூர்வமாகக் காப்புத் தரப்பட்டிருக்கிறது. சந்தன மரத்துக்கு அப்படிக் காப்பு இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் தெரியாத ஒன்று சொல்கிறேன்: இலுப்பை மரம் அப்படிப்பட்ட உயர்ந்த வஸ்துவா என்று தோன்றக்கூடும். ஆனால் வங்கம், பிஹார் எல்லையிலுள்ள ஸாந்தால் பர்கணாவைச் சேர்ந்த ஆதிவாஸிகளுக்கு இலுப்பை மரம்தான் முக்யமான உணவை அளித்து வந்தது. அதனால் அதை இஷ்டப்படி வெட்டிச் சாய்க்கக்கூடாது என்று சட்டமே இருந்தது.

எனவே லௌகிக த்ருஷ்டி, வைதிக த்ருஷ்டி என்று எப்படிப் பார்த்தாலும் மிகவும் உயர்வு பொருந்திய கோவை வதைக்கக்கூடாது என்று சட்டம் செய்வதற்கு மிகவும் நியாயமுள்ளது. அது மிகவும் அவசியமானது. இனவேறுபாடு இல்லாமல் எல்லாப் பெருமக்களும் அப்படிப்பட்ட சட்டம் இயற்றுவதற்கு ஆதரவு திரட்டித்தந்து அரசாங்கத்தைச் செயற்பட வைக்க வேண்டும்.

தொன்று தொட்டுப் பசுவும் அதனுடன் இணைந்துள்ள புனிதமான எண்ணங்களும் தத்வங்களும் நம்முடைய கலாசாரத்துக்கென்றே ஏற்பட்ட பல சீரிய அம்சங்களை உருவாக்கியிருப்பதால் வேறெதற்கும் இல்லாத தனியானதொரு ஸ்தானத்தைப் பசுவுக்குத் தந்து

Koviloor Digital Library

அது என்றென்றும் போஷாக்குடன் இருக்கச் செய்ய வேண்டும். **கோ** ஸம்ரக்ஷணம் பரம தர்மம்; பரம புண்யம்.

பசுவின் க்ஷேமம் நாட்டுக்கே க்ஷேமம் தரும். அதை ஸம்ரக்ஷித்தால் தன்னால் லோகத்தில் பாபம் குறையும்; சாந்தி பெருகும். அதற்கு ஹிம்ஸை நடந்தால் லோகம் முழுதற்குமே கஷ்டந்தான் உண்டாகும். லோகம் தர்மத்தில் நிலை நிற்பதற்கு **கோ** ஸம்ரக்ஷணம் அவசியம். சாஸ்த்ர வசனப்படி தர்ம தேவதையே தபஸ், செளசம் [தூய்மை], தயை, ஸத்தியம் என்ற நாலு கால்களுடைய ஒரு ரிஷபமாகத்தான் இருக்கிறது. அந்த தர்மக் காளையுடனேயே கோமாதாவும் இருப்பதாகவும், தர்மத்தையே பாலாகச் சுரக்கிற 'தர்மதுகா'வாக அப்பசுத் தாய் இருப்பதாகவும், அந்த ஜோடியைக் கலி புருஷன் ஹிம்ஸித்ததாலேயே இந்த யுகம் இப்படிச் சீர்குலைந்திருக் கிறதென்றும் 'பாகவத'த்தில் இருக்கிறது*. ஆகையினால் கலிதோஷம் நீங்கி தர்மம் தலையெடுப்பதற்குச் செய்ய வேண்டியவற்றில் **கோ** ரக்ஷணம் முக்யமான ஒன்றாகும். அதிலே நாம் தவறினோம் என்ற பெரிய களங்கம் ஏற்படாமல் நமக்கு கோபாலக்ருஷ்ண ஸ்வாமி அநுக்ரஹிக்க வேண்டும்.

மஹாபாரதத்தில் ஆநுசாஸனிக பர்வத்தில் பீஷ்மர் ஸகல தர்மங்களையும் தர்ம புத்ரருக்கு உபதேசிக்கும்போது **கோ**ஸம்ரக்ஷணத்தையும் சொல்லி **கோ** மஹிமையை எடுத்துக் கூறுகிறார். நஹுஷ மஹாராஜனுக்கு ச்யவனர் என்ற மஹரிஷியை விலை கொடுத்து வாங்கும்படியாக ஒரு ஸந்தர்பம், நிர்பந்தம் ஏற்படுகிறது. '[மூவுலகும் அடங்கும்] தன் த்ரைலோக்ய ராஜ்யம் முழுதையும் விலை கொடுத்தாலும் அந்த உத்தம ரிஷிக்கு ஈடாகாதே! எதைத்

* 1.17

Koviloor Digital Library

தருவது?' என்று புரியாமல் அவன் தவிக்கிறான். அப்போது பசுவின் வயிற்றில் பிறந்த ஒரு ரிஷி அவனிடம் வந்து ஒரு பசுவை அவருக்கு விலையாகத் தந்தால் போதுமானது என்கிறார். அவர் சொன்னதை ச்யவனரும் மனஸார ஒப்புக் கொண்டு, 'கோவுக்கு ஈடான எந்த இன்னொரு செல்வமும் நான் காணவில்லை — **கோபிஸ்துல்யம் ந பச்யாமி தநம் கிஞ்சித்'** என்று சொல்கிறார். அப்படியே நஹுஷ மஹாராஜாவும் கோவைக் கொடுத்து அவரை வாங்கி அப்புறம் அவரை ஸ்வதந்திரமாக விட்டுவிடுகிறான்.

கோதானத்துக்கு மிஞ்சி ஒரு புண்யமுமில்லை. பாப பரிஹாரத்துக்கு அதுவே பெரிய மருந்து. தானம் வாங்குபவர் அதை நன்றாக ஸம்ரக்ஷித்து வைத்துக் கொள்ளக் கூடியவர்தான் என்று நிச்சயப்படுத்திக் கொண்டே கோதானம் செய்ய வேண்டும்.

ச்யவன மஹர்ஷி **கோ** மஹிமையைச் சொல்லும் ச்லோகங்களில் ஒன்று:

நிவிஷ்டம் கோகுலம் யத்ர ச்வாஸம் முஞ்சதி நிர்பயம் |
விராஜயதி தம் தேசம் பாபம் சாஸ்யாபகர்ஷதி ||

என்ன அர்த்தமென்றால்: "எந்த தேசத்தில் பசுக்கள் தங்களுக்கு ஹிம்ஸை நேருமோ என்று பயப்படாமல் கோகுலங்களில் நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டிருக்கின்றனவோ அந்த தேசமே, எல்லாப் பாபங்களும் விலகப் பெற்று ப்ரகாசமாக விளங்கும்."

நம்முடைய பாரத தேசம் அப்படி ஆவதற்கு, அதை அந்த மாதிரி ஆக்குகிற மனப்பான்மையையும் செயற்பான்மையையும் நாம் பெறுவதற்கு கோவைக் கண்ணாகப் பேணிய கண்ணன் அருள் புரிவானாக!

Koviloor Digital Library

பண்பாடு

Koviloor Digital Library

Koviloor Digital Library

நாடகக்கலை – அன்றும் இன்றும்

இறைவனின் நாடகமும் மனிதரின் நாடகமும்

லோகம் முழுக்க ஒரு நாடகம்; பகவான் கபட நாடக சூத்திரதாரி என்று மகான்கள் சொல்கிறார்கள். சர்வ தேசத்திலும் மகாகீர்த்தி வாய்ந்த நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர். அவர்கூட ஓர் இடத்தில், 'லோகம் முழுதுமே ஒரு நாடகமேடைதான்; எல்லா ஸ்த்ரீ-புருஷர்களும் அதிலே வரும் நடிகர்கள்தான்' என்று சொல்கிறார்.*

ஸ்வாமி நடத்துகிற இந்தப் பெரிய நாடகத்தில் மநுஷ்யனும் 'நாடகம்' என்று ஒரு கலையை உண்டாக்கி யிருக்கிறான். அநாதி காலமாக இலக்கியத்தில் இது ஒரு முக்கியமான அங்கமாக இருந்து வந்திருக்கிறது. வேதங்களிலே ஆங்காங்கே சம்பாஷணை ரூபத்தில் இரண்டு பேர் பேசிக் கொள்கிற மாதிரியான மந்திரங்கள் இருக்கின்றன. ஆராய்ச்சிக்காரர்கள் இதுதான் நாடகக் கலையின் தோற்றுவாய் (origin) என்று சொல்கிறார்கள். தமிழிலும் இயல் – இசை – நாடகம் என்று சொல்கிறார்கள். 'கத்யம்' (Prose) என்பதை 'இயல்', 'பத்யம்' (Poetry) என்பதை 'இசை' என்று சொல்லி, 'நாடகம்' என்பதற்கு மட்டும் அதே வார்த்தையையே தமிழிலும் வைத்துக் கொண்டிருக்கிறோம். 'கூத்து' என்பதே நாடகத்திற்கான தமிழ் வார்த்தை.

ஸம்ஸ்கிருதத்தில் கவி சிரேஷ்டர்கள் என்று தலை மேல் வைத்துக் கொண்டு கொண்டாடக்கூடிய

---

* As You Like It II. 7

Koviloor Digital Library

காளிதாஸன், பவபூதி காலத்திலிருந்து நாடக இலக்கியம் மஹோன்னதமாக வளர்ந்திருக்கிறது. காளிதாஸன், பவபூதி இருவருமே கவிகள் (Poets) என்பதைவிடப் பெரிய நாடகாசிரியர்களாக (Dramatist) இருந்திருக்கிறார்கள். இன்னும் பாஸன், விசாகதத்தன் முதலான பல பேரும் நாடகாசிரியர்களாக இருந்திருக்கிறார்கள்.

நாடகக் கலையின் தனி விசேஷம்

நாடகக் கலைக்கு ஒரு தனி விசேஷம் உண்டு. ஒரு லெக்சர் கேட்கிறோம். மனஸில் ஓரளவுக்குப் பதிகிறது. அதோடு கொஞ்சம் பாட்டு கீட்டு சேர்த்துக் கதா காலக்ஷேபம் என்று பண்ணினால் அது இன்னும் அழுத்தமாக உள்ளே போய்ப் பதிகிறது. ஆனால் இங்கே கூட ஹரிகதைக்காரர் வர்ணிக்கிற சம்பவங்களையும் சம்பாஷணைகளையும் நாம் நேரிலே பார்க்காமல் மானஸிகமாகத்தான் பார்க்கிறோம்; கேட்கிறோம், இதுவே 'டிராமா' என்றால் பல பாத்திரங்கள் நேரிலே வந்து தினுசுதினுசான உணர்ச்சிகளைக் காட்டி நடிக்கிறார்கள். 'ஸீன்'களைப் பார்க்கிறோம். ரொம்பவும் ஸ்வாரஸ்யமாக இருக்கிறது. அதனால் மனஸில் ஆழமாகப் புகுந்து விடுகிறது.

மகாகவிகள் பலவிதமான அலங்காரங்களுடன் (தமிழில் 'அலங்காரம்' என்பதை 'அணி' என்றே நேர் மொழி பெயர்ப்பாகச் சொல்வார்கள்) ப்ராஸம் முதலான சப்த அழகுகளுடனும் காவியங்களைச் செய்திருக்கிறார்கள். சம்ஸ்கிருதத்தில் தண்டி செய்திருக்கிற அலங்கார சாஸ்திரத்தைப் பின்பற்றியே தமிழில் 'தண்டியலங்காரம்' என்று இருக்கிறது. 'அலங்காரம்' என்றாலே அது மேலுக்குப் போட்டுக் கொள்கிறதுதான்; அதுவே ஆசாமி இல்லை. அப்படியே காவியத்துக்கு உவமை, உத்ப்ரேக்ஷை போன்ற

Koviloor Digital Library

எத்தனை 'அணி'களிருந்தாலும், மூலமாக இருப்பது அதன் பொருள்தான். காவியத்துக்கு ஜீவனாக இருப்பது உணர்ச்சி, அநுபவம்; இதை 'ரஸம்', 'ரஸம்' என்று விசேஷித்துச் சொல்வார்கள். Nature என்கிற இயற்கை வர்ணனை, பாத்திரங்களுடைய ஸ்வபாவம் என்கிற மன இயற்கையின் விசித்திரங்கள் எல்லாவற்றையும் ஒரு கவி எத்தனைக் கெத்தனை நன்றாகச் சித்தரித்து, அல்லது பிரதிபலித்து எழுதுகிறாரோ அத்தனைக்கத்தனை அது ஸ்வாரஸ்யமாக இருக்கிறது. கவிதையாக, காவியமாக வைத்துக் கொண்டு நாம் படித்தும் கேட்டும் மட்டும் சந்தோஷப்படுகிற கலாசிருஷ்டிகளுக்கு 'ச்ராவ்ய காவ்யம்' என்று பெயர். அதையே மேடை மேல் நடித்துப் பார்க்கிற மாதிரி ஸீன் ஸீனாகப் பிரித்து, வசனங்களைப் போட்டு எழுதி விட்டால் 'த்ருச்ய காவ்யம்' என்று சொல்வார்கள். த்ருச்ய காவ்யம் தான் நாடகம்.

ஸ்தூலமாக ஸீன்களைக் காட்டிக் கொண்டு, நடிகர்கள் ஸ்தூலமாக வந்து வீரம், சிருங்காரம், கருணை இத்யாதி பாவங்களைக் காட்டுவதைவிட, நாமே மானசிகமாக பாவனை பண்ணிக் கொள்வதிலேயே சிலர் இன்னும் நுட்பமான ரஸாநுபவத்தைப் பெறமுயலலாம். ஸம்ஸ்கிருத இலக்கியத்தில், எழுதுகிறவனே எல்லாவற்றையும் அப்பட்டமாகச் சொல்லித் தீர்த்து விடாமல் ரஸிகன் அதைப் பூர்த்தி செய்து கொள்கிற மாதிரி விட்டுவிடுவதை ஆலங்காரிகர்கள் [அலங்கார சாஸ்திரக்காரர்கள்] விசேஷமாக மெச்சுவார்கள். இம்மாதிரி, சொல்லாமல் சொல்வதை 'த்வனி', 'வ்யங்க்யம்' என்றெல்லாம் ரொம்பவும் புகழ்ந்து சொல்வது வழக்கம். காளிதாஸாதிகள் எழுதியுள்ள நாடகங்களிலும்கூட இப்படிப்பட்ட 'த்வனி' அழகு நிரம்ப உண்டு. 'டிராமா' என்பதால் எல்லாவற்றையும் நாசூக்கில்லாமல் போட்டு உடைத்துவிட்டார்கள் என்று அர்த்தம் இல்லை. இப்படிப்பட்ட — 'சாகுந்தலம்'

Koviloor Digital Library

மாதிரி, 'மகாவீர சரிதம்' மாதிரி இருக்கப்பட்ட – நாடகங்களை நாம் மானஸிகமாக – 'கற்பனைக் கண்ணால்' என்று இந்த நாள் பத்திரிகைக்காரர்கள் எழுதுகிறார்களே, அப்படி – பார்த்துக் கொண்டாலே, 'ஸ்டேஜ்' மேல் பார்ப்பதைவிடக்கூட உயர்த்தியாக இருந்தாலும் இருக்கும். ஆனால் இது ரஸிகனின் தரத்தைப் பொறுத்த விஷயம்.

பொதுவாகச் சொல்லப் போனால் ஜனங்களுக்கு கவிதை என்பதை வைத்துக் கொண்டு படிப்பதில் பிடிப்பு ஏற்பட மாட்டேன் என்கிறது. அதையே நாடகம் என்று போட்டுக் காட்டினால் உத்ஸாஹத்தோடு கூட்டம் கூட்டமாகப் போய்ப் பார்க்கிறார்கள். கதாபாத்திரங்கள் என்று எழுத்திலே 'abstract' – ஆக இருக்கிறவர்களை நம் போலவே உள்ள மநுஷ்யர்கள் வேஷம் போட்டுக் கொண்டு கண் முன்னால் காட்டும்போது, தன்னால் அது ஜனங்களை இழுத்து விடுகிறது! புஸ்கத்தினாலோ, லெக்சரினாலோ செய்வதைவிட ஆழமாகவும் அழுத்தமாகவும் ஜனங்களுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்வதற்கு நாடகமே மிகவும் சக்தியோடு உதவுகிறது.

நாடகமும் உணர்ச்சிகளும்

எந்த நாடகத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் எல்லாவிதமான உணர்ச்சிகளும் கலந்து கலந்து வரும். ஒரே உணர்ச்சி நாடகம் முழுவதும் இருந்தால் சலிப்புத் தட்டிவிடும். எல்லா உணர்ச்சிகளும் சமமாக வந்தாலும் அதனால் மனஸில் நிலையான ரஸாநுபவம் ஏற்படாமல் ஒன்றையொன்று அடித்துக் கொண்டு போய்விடும். எல்லாமே கடைசியில் பிசுபிசுத்துப் போய்விடும். அதனால் ஒவ்வொரு நாடகத்தில் ஒவ்வொரு உணர்ச்சி பிரதானமாக இருக்கும். பாட்டுக்காரனுக்குப் பக்கவாத்தியங்கள் மாதிரி மற்ற உணர்ச்சிகளும் இதற்கு அநுகூலமாகக் கவிந்து கவிந்து

Koviloor Digital Library

வரும். 'வேணி ஸம்ஹாரம்' என்ற பட்ட நாராயணருடைய நாடகத்தை எடுத்துக் கொண்டால் அதில் வீரம்தான் பிரதானமாக இருக்கும். இருந்தாலும் அதிலும் கொஞ்சம் சோகம், ஹாஸ்யம் முதலான எல்லாமும் வரத்தான் செய்யும், பவபூதி, ஸ்ரீராமன் விஷயமாக 'மஹாவீர சரிதம்', 'உத்தர ராம சரிதம்' என்று இரண்டு நாடகங்கள் எழுதியிருக்கிறார். 'மஹாவீர சரிதம்', அதன் பேருக்கு ஏற்ற மாதிரி வீர ரஸப் பிரதானமானது. இதிலே ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் வீரப் பிரதாபத்தை முக்கியமாகக் காட்டுகிறார். நாம் 'மஹாவீர்' என்றால் ஜைன மத ஸ்தாபகரை நினைத்துக் கொள்வோம். வடக்கத்திக்காரர்கள் 'மஹாவீர்' என்றால் ஹநுமானை நினைப்பார்கள். பவபூதி சொல்கிற மஹாவீரரோ ஸாக்ஷாத் ராமரேதான். தர்ம ஸம்ஸ்தாபனத்துக்காகவே ஏற்பட்ட ராமருடைய வீரப் பிரதாபத்தை ஒரு நாடகத்தினால் சித்திரித்துக் காட்டினார் பவபூதி. இவரே 'உத்தர ராம சரித' நாடகத்தில், ஸ்ரீராம பட்டாபிஷேகத்துக்குப் பின் ஸீதா தேவியை வனத்துக்கு அனுப்பியது முதலான சம்பவங்களைச் சொல்லும்போது நம்மை ஒரேயடியாகச் சோகத்தில் உருகிப் போகும்படி பண்ணுகிறார். 'உவமைக்குக் காளிதாஸன்' (உபமா காளிதாஸஸ்ய) என்பது போல், 'கருணைக்கு பவபூதி' (காருண்யம் பவபூதிரேவ) என்று சொல்லும்படியாக, அப்படி நெஞ்சைத் தொடும்படி சோகத்தை வர்ணிப்பார். காவியங்களில் 'நவரஸம்' என்பதில் 'கருண' என்றால் 'சோகம்' என்றே அர்த்தம். இப்போது நாம் இரக்கம். தயை என்கிற அர்த்தத்தில் கருணை என்பதைப் பிரயோகிக்கிறோம். இந்த ரஸத்துக்கு பவபூதியிலிருந்து ஓர் உதாரணம் சொல்கிறேன்.

புலம்பி அழாமல், மனஸ் வெதும்பித் தன்னைத் தானே குத்திக் காட்டிக் கொண்டு, கொஞ்சம் ஹாஸ்யம்

Koviloor Digital Library

கலந்த மாதிரி பேசுகிற போது அதனுடைய சோகம் நேராக அழுவதைவிட ஆழமாக நம் நெஞ்சைத் தொட்டுவிடுகிறது.

ராமனை இப்படிப் பேச வைக்கிறார் பவபூதி, 'உத்தர ராம சரித்ர'த்தில்:

ஹே ஹஸ்த...... ராமஸ்ய காத்ரமஸி நிர்பர கர்ப்ப கின்ன–
ஸீதா விவாஸன படோ: கருணா குதஸ்தே ?

சம்பூகன் என்பவனைக் கொல்வதற்காக ராமர் வாளை உருவிய கட்டத்தில் அவரை இப்படிப் பேச வைக்கிறார் பவபூதி. சம்பூகனை ஏன் கொல்லப்போனார் என்றால் அவன் தன்னுடைய சமூக ஸ்தானத்துக்கு தகாத உக்ர தபஸை மேற்கொண்டிருந்தான். அதனால் லோக தர்மமே பாதிக்கப்பட்டதால்தான், தர்மராஜ்யமே ராமராஜ் யம் என்று நடத்திய ராமர் அவனைக் கொல்லப் போனார். அவன் யோக்கியதை மீறிப் பண்ணினான் என்றாலும் அவன் பண்ணினதோ ரொம்பவும் உத்தம விஷயமான தபஸ்! ஆகையால் தபஸ் செய்து கொண்டிருக்கும் சம்பூகன் மேல் வாளைப் பிரயோகிக்க ராமருடைய கை தயங்குகிறது. அப்போது ராமர் அந்தக் கையைப் பார்த்துச் சொல்வதாகக் கவி சொல்கிறார்: "ஹே ஹஸ்தமே, கையே! உனக்கு இரக்கம் ஒரு கேடா? நீ ராமனுடைய சரீரத்தின் அங்கமாக்கும்! அந்த ராமன் எப்படிப்பட்டவன்? நிறைகர்ப்பமான ஸீதையை நிர்தாக்ஷிண்யமாகக் காட்டுக்கு விரட்டியவன். அப்படிப்பட்டவனுக்கு அங்கமாக இருக்கிற கையே, உனக்குத் தயை எதற்கு, தாக்ஷிண்யம் எதற்கு?"

இம்மாதிரி ராமனை ஆத்ம நிந்தை பண்ணிக் கொள்ள வைக்கும்போதே, சோக ரஸத்தை மட்டுமில்லாமல், உள்ளூர ராமனுக்கு ஸீதையிடம் அன்பு இருந்த போதிலும் ராஜதர்மத்துக்காகவே அவர் அவளைத் திரஸ்காரம் செய்தார் என்பதையும் நாம் உணரும்படியாகப் பண்ணிவிடுகிறார். நிந்தை மூலமே கதாபாத்திரத்தின்

Koviloor Digital Library

குணத்தை (Character) காட்டுகிறார். நமக்குத் தர்மத்தையும் சொல்லிக் கொடுக்கிறார்.

கதாநாயகன்

விதூஷகன், காமாதுரன் இப்படிப்பட்ட பல தினுசான பாத்திரங்கள் ஒரு நாடகத்தில் இருந்தாலும் முக்கியமான பாத்திரத்தை குணத்தில் உயர்த்திக் காட்டுவதும், அதன் மூலம் அந்தக் குணத்தில் நமக்குப் பிடிப்பு உண்டாகச் செய்வதும், தர்மங்களைச் சொல்வதும் தான் நல்ல நாடகத்துக்கு லக்ஷ்யமாக இருந்தது. நாடக இலக்கியம் என்பது ஸம்ஸ்க்ருதத்தில் மஹா பெரிசாகப் பரந்து விரிந்து இருந்ததில் பல தினுஸான கதா நாயகர்களும் இருக்கத்தான் செய்தார்கள் என்றாலும், அவர்களில் 'தீரோதாத்தன்' என்பதாக தீரம், நல்ல குணம் இரண்டிலும் ச்ரேஷ்டமானவனையும், 'தீரப்ரசாந்தன்' என்பதாக தீரம், சாந்தம் இரண்டும் ஒன்று கூடியிருப்பவனையுந்தான் 'ஐடியல் ஹீரோ'க்களாகக் கொண்டாடினார்கள். உத்தமமான நாடகாசிரியர்கள் உத்தமமான இப்படிப்பட்ட கதாபாத்திரங்களின் மூலம் ஜனங்களுக்கு தர்ம வழிகளை கண்ணுக்கு முன்னாடி ரஸித்து பார்க்கும்படியாகக் காட்டினார்கள்.

மங்களமான முடிவே

ஸம்ஸ்க்ருத நாடகத்தில் இன்னொரு அம்சம் சொல்ல வேண்டும். பொதுஜனங்களின் மனப்பான்மையை அநுசரித்து, நல்ல வழியில் நடக்கிறவன் கடைசியில் நன்மையே அடைவான் என்றுதான் காட்ட வேண்டும் என்று நாடக ஆசிரியர்களுக்கு விதி ஏற்பட்டிருந்தது. அதனால்தான் 'உத்தர ராம சரித'த்தில்கூட, பவபூதி சோக ரஸத்துக்குப் பேர் எடுத்திருந்தும், முடிவில் ஸீதை பூமிக்குள்

Koviloor Digital Library

போய் அப்படியே மறைந்ததாக இல்லாமல், மறுபடியும் ராமரோடு சேர்ந்ததாக மாறுதல் செய்திருக்கிறார்! "முடிவு மங்களமாக இருக்க வேண்டும்; பொதுஜனங்களுக்குத் தர்மத்தில் பற்றுதல் உண்டாக வேண்டுமானால் தர்மவான் சந்தோஷத்தை அடைந்ததாகவே காட்ட வேண்டும்" என்கிற அபிப்பிராயம் ஒரு பக்கம். இன்னொரு பக்கம் 'ஏற்கனவே ஜனங்களுக்கு இருக்கிற கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமில்லை. அதை மறப்பதற்காகத்தான் ஒரு பொழுது போக்காக நாடகம் பார்க்க வருகிறார்கள். இதிலே சித்திரித்துக் காட்டுகிற துக்கம், துக்கமாக இருக்கும்போதே, அதற்குள்ளேயும் ஏதோ ஓர் ஆனந்தம் இருக்கிறதென்பது வாஸ்தவம்தானானாலும் ரொம்பவும் ரஸிகர்களாக இல்லாமல் சாமானியமாக இருக்கப்பட்டவர்கள் ஒரு நாடகம் பார்த்து முடித்து வீட்டுக்குத் திரும்பும்போது அவர்களுக்குப் பழைய துக்கம் போதாது என்று புதுசாக ஒரு துக்கத்தைக் கொடுக்க வேண்டாம்' என்ற அபிப்பிராயத்தில் எந்த நாடகமும் மங்களமாக முடிய வேண்டும் என்று சட்டம் மாதிரிப் போட்டு விட்டார்கள். அதனால் பழைய ஸம்ஸ்கிருத நாடகங்களில் 'ட்ராஜெடி'யே கிடையாது. எல்லாம் 'காமெடி'தான்.

சோகத்துக்குள்ளும் நம்மை உயர்த்துகிற ஏதோ ஒன்று இருக்கிறது என்பது வாஸ்தவம்தான். அதனால்தான் ஷேக்ஸ்பியர் போன்ற மேல்நாட்டு நாடகாசிரியர்கள் லோக மெல்லாம் கொண்டாடும் பெரிய ட்ராஜெடிகளை எழுதி யிருக்கிறார்கள். அது அவர்கள் தேசாசாரத்துக்குப் பொருத்தம். அவர்கள் மற்ற பொழுதுகளில் சந்தோஷமாக இருக்கத் தெரிந்தவர்கள். 'பால் ரூம் டான்ஸ்' என்று ஆடுவார்கள். அதனால் அவர்கள் டிராமாவில் அழுதால் பரவாயில்லை. நம் வாழ்க்கையில் இந்த டான்ஸூம் ஆனந்தமும் கேளிக்கையும் இல்லை; அவை நமக்கு

Koviloor Digital Library

இருக்கவும் வேண்டாம். அதோடு நமக்குப் பொதுவாகவே, எத்தனை சௌகரியம் இருந்தாலும், வெளியிலே சந்தோஷமாகக் காட்டிக் கொள்ளாமல் கொஞ்சம் மூக்கால் அழுவதே ஸ்வபாவமாக இருக்கிறது. இந்த அழுகைக்கு நடுவில் பொழுதுபோக்கு என்று ஒரு நாடகத்துக்குப் போனால் அழுகையை ஜாஸ்தியாக்கிக் கொள்ளாமல் அங்கிருந்து ஸந்தோஷமாகத் திரும்ப வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் நாடக லக்ஷணம் வகுத்தவர்கள் மங்களமான முடிவே இருக்க வேண்டும் என்று விதித்ததாகச் சொல்லலாம். இதனால், எல்லாம் ஹாஸ்யக்கூத்தாக, 'காமிக்'காக இருந்துவிட்டது என்று அர்த்தமில்லை. எல்லா உணர்ச்சிகளும் கலந்திருக்க வேண்டும் என்பதால்தான் 'நவரஸம்' என்று பிரித்து வைத்து, அவற்றைச் சித்திரிப்பதற்கே முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

நவ ரஸம்; சாந்தம்

ஒரு காவியம், அல்லது நாடகம் என்றால் அதில் ஒரு கதை, Plot இருக்கிறது. அநேக ஸம்பவங்கள் வருகின்றன. இயற்கை வர்ணனைகள் இருக்கின்றன. உவமை போன்ற அணிகள், எதுகை மோனை போன்ற சொல் ஜாலம் எல்லாம் இருக்கின்றன. ஆனால் இதெல்லாம் அதற்கு உயிர் இல்லை. 'ரஸம்' என்ற உணர்ச்சி அநுபவம்தான் உயிர் என்று வைத்தார்கள். ஒரு வாக்கியத்தில் எத்தனை சொல்லழகு இருந்தாலும் அது கவிதையாகிவிடாது, 'ரஸம்' இருந்தால்தான் அது கவித் தன்மை பெறும் – "வாக்யம் ரஸாத்மகம் காவ்யம்" என்று ஒரு பெரிய 'கிரிடிக்' சொல்லியிருக்கிறார்*. இந்த ரஸங்களின் கணக்கில் இரண்டு தினுசான அபிப்பிராயங்கள் உண்டு. ஒரு சாரார் எட்டு

* "ஸாஹித்ய தர்பண"த்தில் விச்வநாதர்

Koviloor Digital Library

ரஸம் என்பார்கள்; இன்னொரு சாரார் ஒன்பது ரஸம் [நவரஸம்] என்பார்கள். சிருங்காரம், ஹாஸ்யம், கருண (சோகம்), ரௌத்திரம் (கோபம்), வீரம், பயானகம் (அச்சம்), பீபத்ஸம் (அருவறுப்பு), அத்புதம் (அற்புதம்) என்ற எட்டும் ரஸங்கள் என்பது ஒரு கட்சி. இவற்றோடு 'சாந்தம்' என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது நவரஸக்காரர்களின் வாதம்.

சாந்தத்தை ரஸமாகச் சேர்க்காத ஆலங்காரிகர்கள் அதை மட்டமாக நினைத்தார்கள் என்று அர்த்தமில்லை. பார்க்கப் போனால் அவர்கள்தான் நவரஸக்காரர்களை விட அதை உயர்த்தியாக மதித்தார்கள். நம் பண்பாடே சாந்தத்தில் நிறைந்து போவதுதான். "சாந்தி: சாந்தி: சாந்தி:" என்று மூன்று முறை சொல்லியே எந்த வைதிக காரியத்தையும் நாம் பூர்த்தி செய்கிறோம். அந்த சாந்த நிலையில், உணருகிறவன்-உணரப்படுவது என்ற பேதமில்லாமல் எல்லாம் அடங்கிப் போகிறது. 'உணர்ச்சி என்பது ஒரு மனோபாவம், ஒருத்தனைப் பிடித்து ஆட்டுகிற நிலை. இதுவோ ஆட்டமெல்லாம் அடங்கிய நிலை. எனவே உணர்ச்சிமயமான மற்ற எட்டு ரஸங்களோடு இதை எப்படிச் சேர்ப்பது? ரஸம் என்றால் அதை ருசிக்கிற ரசிகனுக்கு அது வேறானது. இங்கே ரஸமும் ரஸிகனும் ஒன்றாக இருப்பதால், மற்ற எட்டோடு இதை வைப்பதற் கில்லை. இது மனஸின் ஸம நிலை; மற்றதெல்லாமோ – வீரமாகட்டும், சிருங்காரமாகட்டும், சிரிப்பாகட்டும், கோபமாகட்டும் – அவை எல்லாமோ மனஸின் கொந்தளிப்பு நிலை, அவை சித்தத்தைக் கலக்குகிறவை. நிலைத்து நீடித்து ஸ்திரமாக நிற்கிற ஆனந்தத்தை அவை உண்டாக்குவதில்லை. அவை தாற்காலிகமானவைதாம். மாறாத ஆனந்தம் சாந்தம்தான். இதை மற்றவற்றோடு சேர்க்கக் கூடாது. மற்ற ரஸங்கள் எல்லாம் பூர்த்தியாகிற இடமே அது' என்று ஒரு சாரார் சொல்கிறார்கள்.

Koviloor Digital Library

ரஸங்களில் ஒன்றாக இருக்கிற ஹாஸ்யம் வேறு, ஆனந்தம் வேறு. ஆனந்த ரஸம் என்று ஒன்று கிடையாது. அப்போதைக்கு ஒரு ஸந்தோஷத்தை உண்டாக்கிச் சிரிக்கப் பண்ணுவது ஹாஸ்யம். ஆனந்தம் என்பதுதான் நம் ஆத்மாவின் ஸ்திரமான, சாசுவதமான ஸ்வபாவம். எதிலும் பட்டுக் கொள்ளாமல், துக்க லேசமேயில்லாமல், தன்னில் தானாக இருக்கிற சாந்த நிலையில் இருப்பதுதான் ஆனந்தம்.

அந்த ஆனந்தம் சூரிய வெளிச்சம்போல சர்வ வியாபகமாகப் பரந்து இருப்பது. ஆனால் நமக்கு அது தெரியவில்லை. மரத்தடியில் சூரிய வெளிச்சம் தெரியாத மாதிரி, மாயையின் நிழலில் இருக்கிற நமக்கு இந்த ஆனந்தம் தெரியவில்லை. மரக்கிளை ஆடும்போது இடுக்கு வழியே துளித் துளி வெளிச்சம் வருகிற மாதிரி கோபம், காமம், வீரம், பயம், சோகம் இத்யாதி உணர்ச்சிகள் ஆட்டம் போடுகிறபோது, ஆனந்தத்தின் ஒளி துளித் துளி நம் மேல் படுகிறது. நல்ல உணர்ச்சி, கெட்ட உணர்ச்சி எதுவானாலும் நாம் ஒன்றை உணருகிறோம் என்றால் அதற்கு ஆத்மாதானே அடிப்படை? அதனால் எந்த ரஸத்தை அநுபவித்தாலும், ஆத்மாவின் ஸ்வபாவமான ஆனந்தம் அதற்குள் கொஞ்சம் 'டால்' அடித்துக் கொண்டு தான் இருக்கும். இப்படியில்லாமல் மரத்தை விட்டு வெளியிலே வந்துவிட்டால், முழு ஸூர்ய வெளிச்சம். கிளைகள் பலவிதமாக ஆடுகிறபோது, பல தினுசாக விழுந்த துளித் துளி வெளிச்சமெல்லாம் ஒன்றாகச் சேர்ந்த முழு வெளிச்சம் அதுதான்.

சூரிய வெளிச்சத்தில் கலர் இல்லை. அந்த மாதிரி சாந்தத்தில் தனியாக ஒரு உணர்ச்சி, ஒரு ரஸம் இல்லை என்பது ஒரு அபிப்பிராயம். ஆனாலும் ஸூர்ய வெளிச்சத்திலிருந்துதான் இத்தனை கலர்களும் வந்திருக்

Koviloor Digital Library

கின்றன. ஸ்பெக்ட்ராஸ்கோப்பில் ஸூர்ய வெளிச்சத்தைப் பிரித்து (split) பண்ணிப் பார்த்தால் அதிலிருந்தே ஏழு கலர்களும் வருவதைப் பார்க்கலாம். ஸயன்ஸ் நிபுணர்கள் ஸூர்ய வெளிச்சத்தில் இன்னின்ன கலர்கள் இன்னின்ன விகிதத்தில் இருக்கின்றன என்று அளவிட்டிருக்கிறார்கள். அதே விகிதத்தில், இந்த ஏழு கலர்களைக் கலக்கிற போதெல்லாம், அத்தனை கலர்களும் சேர்ந்து வெள்ளையாகி விடுகின்றன!

ஒவ்வொரு மூலப்பொருளை எலிமென்டை எரிக்கிற போது அது ஒவ்வொரு விதமான கலரில் ஜொலிக்கிறது. இதே மாதிரி கெமிகல்களை எரிக்கிற போதும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கலர் இருக்கிறது. சாதாரண நெருப்புக் குச்சியின் நெருப்பு மஞ்சளாயிருக்கிறது; ஆனால் பச்சை, சிவப்பு மத்தாப்புக் குச்சிகள் பச்சையாகவும் சிவப்பாகவும் எரிகின்றன. பெட்ரோல் காஸை எரித்தால் நீலமாக ஜ்வாலை வீசுகிறது. மயில் துத்தத்தை எரித்தால் பச்சைப் பசேல் என்றிருக்கிறது. எந்தெந்த எலிமென்டை எரித்தால் ஏழு வர்ணங்களில் ஒவ்வொன்றாக ஜ்வாலை வீசுமோ அந்த எலிமென்ட்கள் எல்லாம் ஸூர்ய மண்டலத்தில் இருக்கின்றன; அவை எல்லாம் சேர்ந்து எரிவதால்தான் மொத்தத்தில் அது கலரே இல்லாத சுத்த வெளிச்சமாயிருக்கிறது என்று ஸயன்ஸ் நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த எலிமென்ட் மட்டுமின்றிப் பூலோகத்தில் அதிகம் காண முடியாத ஹீலியம் (Helium) என்ற மூலப்பொருளும் ஸூர்யனில் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். லாடின் பாஷையில் ஹேலியோஸ் என்றாலே சூரியன் என்று அர்த்தம். சூரியனை மையமாகக் கொண்டுள்ள நம்முடைய பிரபஞ்சத்தையே இதனால்தான் 'ஹீலியோ-ஸென்ட்ரிக்'

Koviloor Digital Library

என்று சொல்கிறோம். கடைசியில் இந்த 'ஹீலியம்' என்ற வார்த்தை எங்கேயிருந்து வந்தது என்று பார்த்தால் சம்ஸ்கிருதத்திலிருந்துதான். சம்ஸ்கிருதத்தில் "ஹேலி:" என்றால் சூரியன். இதிலே வேடிக்கை, இந்த ஹீலியம் எரியவே எரியாது – Non–inflammable என்பார்கள். அது ரொம்ப இலேசான வாயு.

நவரஸத்தில் ஆரம்பித்து இந்த ஸூர்யன் கதை எல்லாம் எதற்கு என்றால், விஷயத்துக்கு வருகிறேன். எப்படி ஒரு கலரும் இல்லாத ஸூர்ய வெளிச்சத்தில்தான் அத்தனை கலர்களும் பிறக்கின்றனவோ, அத்தனை கலர்களையும் வெளிவிடுகிற மூலப் பொருள்கள் எல்லாம் இருக்கின்றனவோ, அப்படியே ஒரு உணர்ச்சியும் இல்லாத சாந்தத்தில்தான் அத்தனை உணர்ச்சிகளும் பிறந்திருக் கின்றன; அந்த உணர்ச்சிகளுக்கு ஆஸ்பதமான ஸகல ஜீவர்களும் காரியங்களும் அதற்குள்ளேயே அடக்கம்; சாந்த ஆத்மாதான் இத்தனையும். ஆனால் இத்தனையாக இருப்பது மட்டுமின்றி, இவற்றுக்கெல்லாம் பிடிபடாமல் தனியாகவும் இருக்கிறது. மற்றதெல்லாம் எரியும்போது ஹீலியம் எரியாததுபோல், அது மட்டும் எந்த உணர்ச்சி யாலும் பாதிக்கப்படாமல் பரம லேசாக இருக்கிறது.

சாந்தமாக இருக்கிறபோது எங்கு பார்த்தாலும் பரவியுள்ள ஒரே ஆனந்த ஸாகரம்தான். அந்த ஒன்றுதான் மற்ற ரஸங்களாக இருக்கிறபோது துளித் துளி ஆனந்தத்தைத் தாற்காலிகமாகக் கொடுக்கிறது. ஒவ்வொரு மூலப் பொருள் ஒவ்வொரு கலரில் எரிகிற மாதிரி, நாம் ஒவ்வொரு மனோபாவத்தில் ஒவ்வொரு உணர்ச்சியைக் காட்டுகிறோம். எல்லா உணர்ச்சிகளுக்கும் மூலமான 'உணர்விறந்த' நிலையை அடைந்துவிட்டால் அப்படியே ஸூர்யன் மாதிரி ஸ்வயம்பிரகாசமாக இருந்துவிடுவோம்.

Koviloor Digital Library

சாந்த நிலையை அடையவே கலைகள் உதவவேண்டும்

காவிய ரஸங்களைச் சொன்னேன். இப்படியே ருசியிலும் ஆறு ரஸங்கள் இருக்கின்றன. 'அறுசுவை' என்பார்கள். நாக்குக்கு ருசிக்கிற இந்த 'ரஸங்'களை வைத்துத்தான் மனசுக்கு ருசியாக இருக்கப்பட்ட கலை அநுபவங்களுக்கும் நவ'ரஸம்' என்று பெயர் வைத்தார்கள். இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு, உறைப்பு, கரிப்பு என்று ஆறு ரஸங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றுமே 'ப்பு' என்றுதான் முடிகின்றன. அதனால் எல்லாவற்றிலுமே "உப்பு" இருப்பதாகச் சொல்லலாம். 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்று இதனால்தான் சொல்கிறோம் போலிருக்கிறது! இதில் எந்த ரஸத்தையும் தனியாகச் சாப்பிட முடியவில்லை. வெறும் உப்பை, வெறும் புளியை, மிளகாயை, கடுக்காயை, பாகற்காயைச் சாப்பிடுவது என்றால் முடியாத காரியம். சர்க்கரை, வெல்லத்தை வேண்டுமானால் ஏதோ கொஞ்சம் சாப்பிடலாம். ஆனாலும் அதுகூட, மாவு கீவு சேர்த்துத் தித்திப்புப் பட்சணமாகப் பண்ணினால் சாப்பிடுகிற அளவுக்கு வெல்லத்தையும் சர்க்கரையையும் சாப்பிட முடிவதில்லை. அது திகட்டி விடுகிறது. ஆனால் தனியாகச் சாப்பிட முடியாத இந்த ஷட் ரஸ வர்க்கங்களையும் விதம்விதமாகக் கலந்துவிட்டால், பல தினுசு வியஞ்சனங்கள் செய்து வயிறாரச் சாப்பிட முடிகிறது. ஒன்று சேருவதில், ஸங்கத்தில் விளைகிற பெரிய ருசிக்கு இது ஒரு திருஷ்டாந்தம், வாழ்க்கையிலும் இப்படியே ஏதோ ஓர் உணர்ச்சி மட்டும் இருந்தால் சீக்கிரம் திகட்டிவிடும். அதனால்தான் அழுகை சிரிப்பு, வெற்றி தோல்வி, மான அவமானம் எல்லாம் கலந்து வருகின்றன.

சரி, எல்லாக் கலரும் சேர்ந்த வெள்ளை மாதிரி, எல்லாச் சுவைகளும் சேர்ந்த சுவை ஏதாவது இருக்கிறதா?

Koviloor Digital Library

உணர்ச்சியில் சாந்தம், கலர்களில் சூரிய ஒளி போல் சுவைகளில் ஏதேனும் உண்டா? ஒன்றே ஒன்று இருக்கிறது. அதுதான் வெண்ணெய். இதுவும் பார்த்தால் வெளுப்பாக இருக்கிறது. ரொம்ப நைஸாக இருக்கிறது. அதன் ருசியிலேயே ஒரு ஸாத்விகம், சாந்தம். மற்ற ருசியெல்லாம் ராஜஸம்தான், உணர்ச்சியைத் தூண்டுபவைதான். வெண்ணெய் மட்டும் உணர்ச்சியை உண்டுபண்ணுவ தில்லை. வெண்ணெயைக் கொஞ்சம் ஜாஸ்தி சாப்பிட்டு விட்டாலோ உணர்ச்சி செத்து, மந்தமாக, உறக்கமாகவே ஆகிவிடுகிறது. கிருஷ்ண பரமாத்மா அதன் சாந்தம், ஸாத்விகம் இவற்றுக்காகத்தான் நவநீத சோரனாக இருக்கிறார். வெண்ணெயின் ருசியைத் தித்திப்பு என்று சொல்ல முடியாது. அதுவே உண்மையான மதுர ரஸம் என்று சொல்லலாம். இதிலே இன்னொரு விசேஷம் என்ன என்றால் வெண்ணெய் காய்ச்சின நெய்யைவிட்டுத் தீபம் ஏற்றினால் அதுவும் ஸூர்ய வெளிச்சம் போல் வெள்ளை ஒளியாக இருக்கிறது. ஒவ்வொரு தைலத்தில் ஏற்றுகிற தீபத்துக்கு ஒவ்வொரு நிற ஜ்வாலை உண்டாகிறது. நல்லெண்ணெய் விளக்கு செம்மஞ்சளாக எரியும்; கடலெண்ணெய் தீபம் ஒரு தினுசான மஞ்சளாக எரியும். நெய் விளக்கு மட்டும், அதைப் பார்த்தாலே மனசு அடங்குகிற மாதிரி, வெள்ளை ஒளியாகப் பிரகாசிக்கிறது – அதிலே சிவப்பு ஜோதி வீசுவதில்லை. நல்ல சுத்தமான நெய்க்கு இதுதான் லக்ஷணம். அதனால்தான் ஸ்வாமி சந்நிதானத்தில் எல்லோர் மனத்திலும் சாந்தம் உண்டாக வேண்டும் என்று நெய் விளக்கே ஏற்றச் சொல்வது.

"சாந்தமுலேக ஸௌக்யமுலேது" என்று தியாகையர்வாள் பாடினது போல், நாம் எத்தனைவிதமான உணர்ச்சிகளில் மொத்துப்பட்டாலும் கடைசியில் சாச்வத ஸௌக்கியம் வேண்டுமானால் சாந்த நிலையைத்தான்

Koviloor Digital Library

அடைய வேண்டும். அதற்குத்தான் எல்லாக் கலைகளும் உதவ வேண்டும்.

நாடகங்களில் நானாதினுசான உணர்ச்சி மோதல்கள் இருந்தாலும், அது மிக உயர்ந்த நாடகமானால் அதைப் பார்த்து முடித்தபின் மனஸில் இனம் தெரியாத ஒரு விச்ராந்தியும் அமைதியும் ஆனந்தமும்தான் நிலவ வேண்டும்.

மதாசாரியர்களும் நாடகங்களும்

சாந்த ரஸத்தையே பிரதானமாக வைத்து எழுதின நாடகங்கள் ரொம்பவும் அபூர்வம்தான். மற்ற ரஸங்கள் முக்கியமாக வரும்போது, சாந்தம் அவற்றை அநுசரித்து வருகிற விதத்திலேயே பிரசித்தமான கவிகளும் நாடகம் எழுதியிருக்கிறார்கள். ஆனால் கிருஷ்ணமிச்ரர் என்பவர் மட்டும் சாந்தத்தையே பிரதான ரஸமாக வைத்து ஒரு நாடகம் எழுதியிருக்கிறார். கோணா மாணா என்று உணர்ச்சிகளைக் கிளறிவிடுகிற நாடகங்களே — நாடக ஸ்தானத்தில் வந்துள்ள ஸினிமாக்களே — ஜாஸ்தியாகி விட்ட இன்று, அந்தச் சாந்த ரஸ நாடகத்தைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன்.

கிருஷ்ண மிச்ரர், 'கீதகோவிந்தம்' பாடிய ஜயதேவரின் சம காலத்தவர் என்கிறார்கள். சுமார் தொள்ளாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்தவர். அவர் பரம அத்வைதி. அவர் ஸித்தாந்தச் சண்டைக்காக நாடகம் எழுதவில்லை. தம் ஸ்வாநுபூதியையே உருவகமாக, allegorical ஆக, ஒரு நாடகமாக்கி எழுதினார். ஞான மார்க்கத்தினால் பெறுகிற அத்வைத சாந்த நிலையைப் பற்றி எழுதினார். ஆனால் கட்சி, பிரதி கட்சி இல்லாமலே எழுதினார். பலவிதமான தத்துவங்களும் அதில் பாத்திரங்களாக வருகின்றன. விவேகன் (அதாவது, ஞானத்தைத் தேடுகிற ஸாதகன்) தான்

Koviloor Digital Library

கதாநாயகனான ராஜா, அவனுக்கு எதிரி மஹாமோஹன் (அதாவது, மாயை). விவேகனுக்குப் பலவிதமான நல்ல குணங்களும் மந்திரிகளாக, சைன்யங்களாக இருக்கின்றன. விஷ்ணு பக்தி, சிரத்தை, கருணை, தர்மம், வைராக்கியம் எல்லாம் இப்படிப்பட்ட கதாபாத்திரங்கள். அஞ்ஞானம், பாபம், அஸத்தியம் முதலிய கெட்ட குண பட்டாளங்கள் மஹாமோஹனின் பரிவாரமாக வருகின்றன. விவேகன் மஹாமோஹனை ஜயித்து ஞானத்தை அடைந்ததாகக் கதை போகிறது. ஞான உதயம்தான் நாடகத்தின் லட்சியம். "பிரபோத சந்திரோதயம்" என்பதே இந்த நாடகத்தின் பெயர். பிரபோதம் என்றாலும் ஞானம் என்றாலும் ஒன்றே தான்.

ஞானம் சூரிய ஜோதிஸ் மாதிரி இருக்கிறது என்று இத்தனை நாழி நான் சொன்னேன். ஆனால் கிருஷ்ண மிச்ரர், அதிலே கொஞ்சம் கூடத் தாபம் இல்லாமல் இருப்பதால் ஞானத்தைச் சந்திரனாகவே குளிர்ச்சியாகச் சொல்கிறார். பூரண சந்திரன் உதித்தவுடன் சமுத்திரம் பொங்குவது போல் பூரண ஞானம் உதித்து, சாந்த நிலவைப் பொழிகிற போது இருதயத்தில் ஆனந்த சமுத்திரம் பொங்கு வதால் அவர் வைத்த பெயர் ரொம்பப் பொருத்தமாக இருக்கிறது. இந்த நாடகத்தின் ஆரம்பமே நம்மை ரொம்ப உச்சிக்குத் தூக்கிக் கொண்டு போகிறது.

"அந்தர் நாடீ நியமித மருத் லங்கித ப்ரம்ம ரந்த்ரம்" என்ற தக்ஷிணாமூர்த்தி தியான சுலோகத்துடன் நாடகத்தை ஆரம்பிக்கிறார். டிராமா என்றால் ஒரே வசனம், ஆக்ஷன்தான். இங்கோ மங்கள சுலோகத்தில் வாயையே திறக்காமல், ஒரு காரியமும் இல்லாமல், தானாக இருக்கிற தக்ஷிணாமூர்த்தியை வர்ணிக்கிறார். "பிராணனை சுஷூம்னா நாடி வழியாக சிரஸின் உச்சிக்குக் கொண்டு போனால் அங்கே கிடைக்கக் கூடிய ஜீவாத்ம பரமாத்ம

Koviloor Digital Library

ஐக்கியத்தைக் காட்டுபவர்; வெளியிலே பத்தினி தெரியா விட்டாலும், உள்ளுக்குள்ளே சாந்தி என்பவளைப் பத்தினி யாக உடையவர்; சாந்தியிடம் விளைந்த ஆனந்தத்தில் திளைத்தவர்; ஆத்ம ஜோதி வடிவானவர்; அந்த ஜோதிக்கு வெளி அடையாளமாகவே நெற்றியில் நெருப்புக் கண்ணை வைத்திருப்பவர்' என்றெல்லாம் மிக அழகான வாக்கில் வர்ணிக்கிறார். இங்கே ஜோதி, அக்னி நேத்திரம் இவற்றைச் சொன்னாலும், ஜில்லென்று 'சந்திரோதயம்' என்றே நாடகத்துக்குத் தலைப்பு கொடுத்துவிட்டார்.

இன்னொரு விசேஷம், இங்கே ஸாக்ஷாத் பரமேசுவரனை குருஸ்வரூபமாக வர்ணித்தாலும் நாடகத்தில் வருகிற பாத்திரங்களில் விஷ்ணு பக்தி என்று ஒரு ஸத்பாத்திரத்தைக் கொண்டு வந்து, விஷ்ணு பக்தியே ஞானத்தில் சேர்ப்பதாகக் காட்டுகிறார். சைவ, வைஷ்ணவ பேதமோ, வேறு எந்தவித சர்ச்சையோ இல்லாமல், திறந்த மனசோடு தாம் அநுபவித்ததை எழுதிவிட்டார்.

பிற்காலத்தில் வேதாந்த தேசிகர் வந்தார். "நிகமாந்த மஹாதேசிகன்", "ஸர்வதந்திர ஸ்வதந்திரர்" என்றெல்லாம் வைஷ்ணவர்கள் கோயிலுக்குக் கோயில் சந்நிதி ஏற்படுத்தி நமஸ்கரிக்கிற பெரியவர் அவர். மகாவித்வான், நிரம்ப யோக்கியதை வாய்ந்தவர். அவருடைய விசிஷ்டாத்வைத கொள்கைக்கு 'பிரபோத சந்திரோதயம்' வித்தியாசமாக இருந்தது. எனவே, இந்த நாடகத்தை ஆக்ஷேபித்து, இதே 'டெக்னிக்'கில் அவரும் ஒரு நாடகம் எழுதினார். இதிலும் தத்துவங்கள்தான் பாத்திரங்கள். 'பிரபோத சந்திரோதய' பாத்திரங்கள் சிலர் இதிலும் வருவார்கள். ஸாதகனுக்கு இடைஞ்சல் செய்யும் தற்புகழ்ச்சிக் குணத்தை 'டம்பன்' என்ற பாத்திரமாக கிருஷ்ணமிச்ரர் சிருஷ்டித்தார். தேசிகனும் அந்த டம்பனைத் தம் நாடகத்துக்கு எடுத்துக் கொண்டார். இதிலே, இந்தக் காலத்தில் சிலர் தற்போதுள்ள

Koviloor Digital Library

நிலவரங்களையே நாடகத்தில் கேலி — Satire — செய்து எழுதுகிறார்கள் அல்லவா, அது மாதிரி தேசிகனும் செய்திருக்கிறார்! டம்பனை, "நீ எந்த ஊர்?" என்று ஒருவர் கேட்கிறார். அதற்கு டம்பன், "என் ஊர் சின்ன காஞ்சீபுரம். நான் அங்கே அக்கிரகாரத்தில் இருக்கிறேன்" என்று ஆரம்பித்துத் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறான். அந்தக் காலத்தவருக்கு உடனே இந்த satire புரிந்திருக்கும். சின்னக் காஞ்சீபுரம் அக்கிரகாரத்தில் அப்போது வசித்து வந்த தாத்தாச்சாரியாருக்கும் வேதாந்த தேசிகருக்கும் ஸௌஜன்யம் இல்லை. அவரைத்தான் இங்கே இவர் வறட்டு ஜம்பக்காரனான டம்பனாக வர்ணிப்பது. ஆக, இப்போது நாம் செய்கிற சாமர்த்தியம் எல்லாம் அப்போதே நம் பெரியவர்களுக்குத் தெரியாமல் போகவில்லை.

தேசிகனுடைய டிராமாவுக்கு 'சங்கல்ப சூரியோதயம்' என்று பேர். சூரியன் உதித்தவுடன் சந்திரன் இருந்த இடம் தெரியாமல் மழுங்கிவிடும் அல்லவா? அது போல் மிச்ரரின் 'சந்திரோதயத்'தை இது ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடும் என்பதால் இப்படிப் பேர் வைத்தார்.

கிருஷ்ணமிச்ரர் ஒரு சண்டைக்கும் போகவில்லை. குளிர்ச்சியாகப் பேர் வைத்தார். தேசிகன் வாதப் போர் செய்வது என்று ஆரம்பித்தவுடன் சூடு பிடித்துவிட்டது. 'சூரியோதயம்' என்று பேர் உண்டாயிற்று.

பிற்பாடு வந்த மத்வாசாரியார், அத்வைதம் விசிஷ்டாத்வைதம் இரண்டையும் ஆக்ஷேபித்தவர். ஆனபடியால் அவர் 'சந்திரோதயம்', 'சூரியோதயம்' இரண்டையும் கண்டித்து ஒரு கிரந்தம் எழுதினார். சந்திரன், சூரியன் இருவரையும் விழுங்குபவன் ராகு அல்லவா? எனவே தம் நூலுக்கு 'உபயக்ராஸ ராஹூதயம் [ராஹூ உதயம்]' என்று பெயர் வைத்தார். உபய — இரண்டையும்

Koviloor Digital Library

(சந்திர சூரியர் இருவரையும்); க்ராஸ — பிடிக்கிற, பீடிக்கிற; 'ராஹூதயம்' — ராகுவின் உதயம் என்று அந்தத் தலைப்புக்கு அர்த்தம். ராகு என்பது நிழல், இருள். 'சாயா கிரகம்' என்றே பேர். முதலில் குளிர்ச்சியும் ஒளியும் சேர்ந்த சந்திரன். பிறகு குளிர்ச்சியில்லாவிட்டாலும் பிரகாசமாவது இருக்கிற சூரியன் என்று போய்க் கடைசியில் ஒளியும் இல்லாத ராஹூ பாம்புடன் முடிகிறது! கண்டனமே லட்சியம் என்றால் இப்படியாகிறது!

அது ஒரு பக்கம் இருக்கட்டும். பெரிய தத்துவங்களைச் சொல்வதற்கு, மதாசாரியர்களேகூட நாடகம் எழுதினார்கள் என்றால், அந்தக் கலைக்குப் பூர்வத்தில் எத்தனை உயர்ந்த ஸ்தானம் இருந்திருக்கிறது என்று தெரிகிறது. இதுமட்டுமில்லை. குமாரில பட்டர் போன்ற மகா பெரிய தத்வ சாஸ்த்ரஜ்ஞர்கள் தங்கள் சித்தாந்தத்துக்குப் பிரமாணம் காட்டும்போது, வேத வாக்கியம், தர்மசாஸ்திர வாக்கியம் இவற்றோடு, 'சாகுந்தலம்' போன்ற நாடக வசனத்தையும் மேற்கோள் காட்டி, 'எங்கள் அபிப்பிராயத்துக்கு இது ஓர் ஆதாரம்' என்கிறார்கள். மனச்சாட்சிக்கும் ஓரளவு சத்தியப் பிரமாணம் உண்டு என்பதற்குக் குமாரிலபட்டரும் வேதாந்த தேசிகரும் காளிதாஸனை மேற்கோள் காட்டுகிறார்கள்.

இன்றைய இழிநிலை

அப்படிப்பட்ட நாடகக் கலை இப்போது எப்படி இருக்கிறது? ரொம்ப ஜனங்களை இழுக்கிற சக்தி – mass media வாக இருக்கிற சக்தி - அதற்கு இருப்பது வாஸ்தவம் தான். ஜனங்களை இழுத்து இந்திரியங்களைக் கிளறி அனுப்பி விட்டால் போதுமா? அது சரியா? டிராமாவால், சினிமாவால் எத்தனையோ நல்லது செய்யலாம், செய்யலாம்

Koviloor Digital Library

என்கிறார்கள். "லாம்" என்பது வாஸ்தவம்தான். வாஸ்தவத்தில் என்ன நடக்கிறது என்பதுதான் கேள்வி. அணு சக்தியால் நல்லது செய்யலாம் செய்யலாம் என்று சொல்லிக் கொண்டே 'பாம்'களைக் குவித்துக் கொண்டு போகிற மாதிரிதான் நடந்து வருகிறது.

பொறுப்புணர்ந்த நாடகாசிரியரும், நாடகம் நடத்துகிறவரும் என்ன செய்ய வேண்டும்? ஜனங்களின் மனஸை உயர்த்தப் பாடுபட வேண்டும். அவர்களுடைய உணர்ச்சிகளை நல்வழியில் திருப்பிக் கட்டுப்படுத்தி, லோகத்தோடு அவர்கள் ஸெளஜன்யமாக இருக்கும்படியாகவும், தங்களுக்குள் சாந்தமாக ஆகும்படியாகவும் செய்யக்கூடிய நாடகங்களை எழுதி நடிக்க வேண்டும். இப்போது நடப்பது நேர்மாறாக இருக்கிறது. ஒரு நாடகம் அல்லது சினிமா பார்க்கிறவன் அது முடிந்து வெளியே போகிறபோது முன்னைவிட மனசு கெட்டுப் போகிற ரீதியிலேயே இப்போது இருக்கிறது. காமமும் குரோதமும்தான் ஜீவனின் பரம விரோதிகள் என்பது கீதாவாக்கியம். இப்போது படங்களில் இந்த இரண்டும்தான் பிரதானம். வெவ்வேறு வகுப்பு ஜனங்களை, வெவ்வேறு கட்சிக்காரர்களைப் பரஸ்பரம் சண்டைக்குத் தூண்டிவிடுகிற நாடகங்களும் சினிமாக்களும் ஜாஸ்தியாகிவிட்டதாகச் சொல்கிறார்கள். விரஸத்துக்கோ எல்லையே இல்லாமல் போய்விட்டதாகத் தெரிகிறது.

நாடகக் கலை ஆயிரம் காலப் பயிர் என்பது வாஸ்தவம்தான். நானே இத்தனை நேரம் அதை சிலாகித்துத்தான் பேசினேன். ஆனால் முன்னெல்லாம் அதற்கு வரம்புகள் இருந்தன. அந்த வரம்புகள் போன பின் அந்தக் கலையே வீணாகி விட்டது. இன்னின்ன காட்சிகளைத்தான் மேடையில் காட்டலாம் என்ற விதிகள் முன்பு இருந்தன. சில விதமான ஸம்பவங்களை மற்ற பாத்திரங்கள் பேசுகிற மாதிரி கொண்டு போய்

Koviloor Digital Library

விடுவார்கள்; ஸ்தூலமாகக் கண் முன் காட்டி மனஸை விகாரப்படுத்த மாட்டார்கள்.

நாடகம் நடிப்பதற்கென்றே 'பரத புத்திரர்கள்' என்று தனியாக ஒரு ஜாதியார் இருந்தார்கள்; மற்றவர்களை அதில் நுழையவிட மாட்டார்கள். யார் வேண்டுமானாலும் சினிமாவில் சேரலாம், அப்பாவை விட்டு விட்டுப் பிள்ளை ஓடிப்போய் சினிமாவில் பிழைத்துக் கொள்ளலாம், ஸ்திரீகள் வீட்டை விட்டு ஓடிப்போய் ஸ்டாராகி விடலாம் என்பதற்கெல்லாம் அப்போது இடமே இல்லை. இதெல்லா வற்றையும் விட, அந்தக் காலத்தில் எத்தனையோ கௌரவ மான வரம்புகளுக்கு உட்பட்டே ஸ்திரீ புருஷர்கள் நடித்த போதிலும் கூட, வாஸ்தவத்தில் புருஷன் பெண்டாட்டியாக இருப்பவர்கள்தான் நாடகத்திலும் தம்பதிகளாக வருவார்கள். நட-ஸூத்ரதார tradition என்று இதைச் சொல்லுவார்கள். இப்போது இந்த நல்ல ஒழுக்க விதிகள் எல்லாம் போய்விட்டன. ரொம்பக் குழந்தைகள் திருட்டுப் புரட்டில் விழுவதற்குச் சினிமாக் காட்சிகள்தான் காரணம் என்கிறார்கள். பெண் குழந்தைகள் மானம் மரியாதை இல்லாமல் ஆகியிருப்பதற்கும் இதுதான் காரணம். நம்முடைய தர்மத்துக்கே பெரிய நஷ்டம் இதனால் வந்திருக்கிறது. முன்னெப்போதையும்விட இப்போது சமூகத்துக்கு நாடகக் கலையால் ஏற்பட்டிருக்கிற ஆபத்து பயங்கரமானது. ஏனென்றால் முன்னே நாடகம் என்றால் ஒரு ஊரில்தான் நடக்கும். இப்போது சினிமா என்று வந்து, எத்தனை காப்பி வேண்டுமானாலும் பிரின்ட் பண்ணி உலகம் முழுக்க ஒரே சமயத்தில் காட்ட முடியும் என்றாகி விட்டது.

நாடகம் நல்ல கலைதான். வாஸ்தவம். நல்லபடியாக நடத்தினால் ஜனங்களை நல்வழிப்படுத்த அது பெரிய சாதனம் என்பது வாஸ்தவம். ஆனால் நடைமுறையைப்

Koviloor Digital Library

பார்க்கிறபோது, எனக்கு ஸினிமா, டிராமா அடியோடு வேண்டாம் என்றுதான் தோன்றுகிறது. டாகுமெண்ட்ரி, கல்விப் படங்கள் (விஷுவல் எஜுகேஷன்) என்று காட்டுகிறார்களே, அதோடு போதும் என்றுதான் தோன்றுகிறது. ஸயன்ஸ்களுக்கு மட்டும் சினிமா போதும். சமூகச் சீர்திருத்தம், சமய வளர்ச்சி இதற்கெல்லாம் சினிமா வேண்டாம். அவை மற்ற வழியில் நடக்கிறபடி நடக்கட்டும், நடக்காவிட்டால் போகட்டும் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

என்னை எல்லோரும் ஸ்தோத்திரம் செய்யலாம். அதற்காக நானும் எல்லாருக்கும் நல்லவனாகப் பேர் எடுக்க வேண்டுமென்று, என் மனஸுக்குத் தப்பு என்று தோன்றுவதைச் சொல்லாமல் இருந்தால் அதைவிடப் பெரிய தப்பு இல்லை. ஸினிமாக்காரர்களை ஒரு நல்ல கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு இப்போதுள்ள சட்டம் போதவில்லை என்றால், ஸினிமாவே வேண்டாம் என்பதுதான் என் அபிப்பிராயம்.

புராணப் படம் எடுத்தால் ஸ்வாமிகள் ரொம்ப ஆசீர்வாதம் பண்ணிவிடுவார் என்று சிலபேர் நினைக்கலாம். ஆனால் சமூகப்படம்கூட வேண்டியதில்லை என்று நான் நினைக்கும்போது நம்முடைய ஸ்டார்கள் தெய்வங்களாக வேஷம் போட்டுக் கொள்வதை ஆமோதிப்பேனா என்ற கேள்விக்கே இடமில்லை.

வேதாத்யயனத்திலிருந்து ஆரம்பித்து நம்முடைய மஹத்தான சம்பிரதாயத்தைச் சேர்ந்த பல சம்பத்துக்கள் போய்விட்டன. இப்போது ஸினிமா, டிராமா போகிற போக்கையும், சமூகத்துக்கு இதனால் ஏற்பட்டிருக்கிற உத்பாதத்தையும் பார்க்கும்போது தொன்று தொட்டு வந்த நம்முடைய நாடகக் கலையும் அப்படிப் போகட்டும் என்றுதான் தோன்றுகிறது. ஜனங்களை ரொம்பவும்

Koviloor Digital Library

தப்பிலும், விகாரத்திலும் தூண்டிக் கொடுக்கும் விதத்தில் இப்போது ப்ரளய ப்ரவாஹமாக வந்திருக்கிற ஸினிமாக் கூத்து இதே கதியில்தான் போகும், அதை மாற்ற முடியாது என்றால் ஒரு உத்தமமான கலையாக ஆதிகாலத்திலிருந்து வந்திருக்கிற நாடக்கலை போயே போய்விடட்டும் என்று தோன்றுகிறது.

நான் சொல்வதற்காக எல்லாம் மாறிவிடும் என்று நினைக்கவில்லை; மாறுமோ மாறாதோ, சொல்ல வேண்டியது என் கடமை என்பதால் சொன்னேன்.

Koviloor Digital Library

ஸ்வயம்வரத்தில் அத்வைதமும் காஞ்சி ஸ்ரீ மடமும்

நள–தமயந்தியரின் பெருமை

தமயந்திக்கு ஸ்வயம்வரம் வைத்தான் அவளுடைய பிதாவான விதர்ப ராஜன் பீமன். இதற்கு முன்பே அவள் நிஷத நாட்டரசனான நளனைப் பற்றிக் கேள்விப்பட்டு அவன்மீது பிரியம் கொண்டிருந்தாள். நளனும் தமயந்தியைப் பற்றிக் கேள்விப்பட்டு அவள் மேல் பிரியம் கொண்டான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்த தில்லை. கேள்வி ஞானத்திலேயே பரஸ்பரம் ரூப செளந்தரியத்தையும் குண சம்பத்துகளையும் தெரிந்து கொண்டு பிரியம் கொண்டார்கள். ஓர் அன்னத்தின் மூலம் தூதும் விட்டுக் கொண்டார்கள்.

இவ்விஷயம் தெரியாமல் பீமன் தமயந்திக்கு ஸ்வயம்வரம் வைத்தான். சகல தேச ராஜாக்களும் அவளது ஒப்பில்லாத செளந்தரியத்தை அறிந்து ஸ்வயம்வரத்துக்கு வந்தனர். பூலோகவாசிகள் மட்டுமல்ல — இந்திரன், அக்கினி, யமன், வருணன் ஆகிய தேவர்களும் அவளை மணக்க விரும்பினர். ஆனால் அவர்களுக்கு இவள் நளனையே பதியாக வரித்துவிட்டது தெரியும். மகா உத்தமியான அவள் இனி பர புருஷர் எவரையும்—அவன் தேவராஜாவாகவே இருந்தாலும்கூட — கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாள் என்று அவர்களுக்குத் தெரியும். தங்களில் ஒருத்தரை அவள் வரிக்க வேண்டுமானால் அதற்கு ஒரு வழிதான் இருந்தால் இருக்கலாம் — அதாவது

Koviloor Digital Library

அவளிடம் தங்களில் ஒருவருக்கு மாலையிடுமாறு நளனே சிபாரிசு செய்தால் அவள் அதைக் கேட்கக் கூடும் என்று அவர்கள் எண்ணினார்கள்.

எனவே ஸ்வயம்வரத்துக்கு முன்பாகவே நளனிடம் அந்தத் தேவர்கள் வந்து, "எங்களுக்கு ஒரு உதவி செய்வாயா?" என்று கேட்டுக் கொண்டார்கள்.

"செய்கிறேன்" என்று வாக்குத் தத்தம் கொடுத்தான் நளன்.

"நீ தமயந்தியிடம் தூது போக வேண்டும். எங்களில் ஒருவனுக்கு அவள் மாலையிட வேண்டுமென்று எடுத்துச் சொல்லவேண்டும்" என்றனர் தேவர்கள்.

இது போல் எங்கேயாவது கேட்டதுண்டா? நளனும் தமயந்தியும் பரஸ்பரம் பிரியம் வைத்திருந்தார்கள். ஸ்வயம்வரத்தில் அவள் தன்னையே வரிக்கப் போகிறாள் என்ற ஆவலுடனேயே நளன் நிஷத ராஜ்யத்திலிருந்து விதர்பத்துக்கு வந்திருக்கிறான். அப்படிப்பட்ட நிலையில் அவள் வேறொருவனைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று இவனே அவளை நிர்ப்பந்தம் செய்ய வேண்டும் என்கிறார்கள்!

தேவர்கள் ஏன் இப்படிச் செய்தார்கள்? அவர்களுக்குத் தமயந்தியின் பெருமை, நளனின் பெருமை இரண்டும் தெரிந்திருந்ததால்தான் இப்படிச் செய்தார்கள். ஒரு மனிதனிடம் வைத்த மனத்தை மாற்றி சாட்சாத் தேவேந்திரனைக் கூட ஸ்மரிக்காத பாதிவ்ரத்யம் கொண்டவள் தமயந்தி என்று அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் தேவர்களான தாங்களே ஸ்வயம்வரத் துக்குப் போய் நின்றாலும் அவள் நரனான நளனுக்குத்தான் மாலை இடுவாள் என்றும், அப்படி ஆகாமல் செய்ய ஏதாவது வாய்ப்பு இருக்குமானால் அது அந்த நளனை

Koviloor Digital Library

விட்டே அவளிடம் தங்களுக்காகச் சிபாரிசு செய்யப் பண்ணுவதுதான் என்றும் நினைத்தார்கள். அதேபோல் கொடுத்த வாக்கை ஒருபோதும் மீறாத சத்தியப் பிரதிக்ஞன் நளன் என்பதும் அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் நளனிடம் தங்களுக்கு உபகாரம் செய்வதாக வாக்குப் பெற்றுக் கொண்டு, அப்புறம் அவனையே தமயந்தியிடம் தங்களுக்காகத் தூது போகுமாறு கூசாமல் சொன்னார்கள்.

நளன் மகா உத்தமன். சத்தியசந்தன். இப்போது சத்தியத்துக்காக அவன் தன் பிரேமையையே தியாகம் செய்ய முன்வந்து விட்டான். உதவி செய்வதாகச் சொல்லி விட்டு அந்த வாக்கை மீறக் கூடாது என்பதால் தேவர்கள் விருப்பப்படி தமயந்தியிடம் தூது போக முன்வந்தான்.....

புண்ணிய ச்லோகர்கள், ப்ராத ஸ்மரணீயர்கள் என்றெல்லாம் சில மகாத்மாக்கள் இருக்கிறார்கள். பிராதக் காலத்தில் — அதாவது காலையில் துயில் எழுந்தவுடன் — இந்தப் புண்ணிய புருஷர்களை நினைக்க வேண்டும் என்று ஆன்றோர்கள் விதித்திருக்கிறார்கள். அப்படி நினைப்பதால் அவர்களுடைய சத்தியம், தர்மம், தியாகம், சீலம் முதலிய குணங்களெல்லாம் நமக்கு வரும். அன்றன்றும் நம் காரியங்களைத் தொடங்குவதற்குமுன் அவர்களை நினைப்பதால் நாமும் வாழ்க்கைப் போராட்டத்துக்கு அவர்களைப் போலவே ஜயசாலிகளாக முகம் கொடுக்கலாம். இந்தப் பரிசுத்தர்களையும், தார்மிகர் களையும் ஸ்மரிப்பதால் நம்முடைய தோஷங்களும், அதர்ம சிந்தையும் குறையும். தாற்காலிகமாகவாவது மனசில் பயமில்லாத தீரமும், தெளிவும், சாந்தியும் பிறக்கும். இப்படி நாலு புண்ணிய ச்லோகர்கள் இருக்கிறார்கள். அவர்களில் முதல்வன் நளன்; அப்புறம் தர்மபுத்திரர்; மூன்றாவது ஸீதாதேவி. நாலாவது கிருஷ்ண பரமாத்மா.

Koviloor Digital Library

புண்ய ச்லோகோ நளோ ராஜா, புண்ய ச்லோகோ
யுதிஷ்டிர: |
புண்ய ச்லோகா ச வைதேஹீ, புண்ய ச்லோகோ
ஜனார்தன: |

இந்த நாலு பேருக்கும் வாழ்க்கையில் உண்டான தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனாலும் அவர்கள் இத்தனை தொல்லைக்கு நடுவிலும் தர்ம மார்க்கத்திலிருந்து துளிக்கூட விலகாமல் இருந்து, ஜயசாலிகளாக ஆனார்கள். அவர்களை விடிகிற வேளையில் நினைப்பதால் நம் புத்தியும் கொஞ்சத்தில் கொஞ்சம் அந்த மார்க்கத்தில் பிரவிருத்திக்க ஆசைப்படும்....

நளன் தன்னுடைய மிகவும் பிரியமான விருப்பத்தைத் தியாகம் செய்து தேவர்களுக்காகத் தூது போக ஒப்புக்கொண்டான். தமயந்தி இருக்கிற உப்பரிகைக்கு ஏகக் காவல் போட்டிருந்தது. இவன் எப்படி அங்கே போக முடியும்? இந்திரன் உடனே மாயம் செய்தான். இந்திர ஜாலம் என்றே சொல்கிறோம் அல்லவா? அந்த மாயா பலத்தால் தாற்காலிகமாக நளனை தமயந்தி தவிர மற்றவர்கள் கண்களுக்குத் தெரியாமல் அரூபமாக்கி விட்டான்.

நளனும் அருவமாக தமயந்தியை அடைந்தான். அவள் கண்ணுக்கு மட்டும் தென்பட்டான். இவனைப் பார்த்ததும் அவள் ஒரே குதூகலத்தில் ஆழ்ந்துவிட்டாள். ஆனால் இவனோ தன்னுடைய சத்தியப் பிரமாணத்துக்குத் துளிக்கூட தவறிழைக்காமல் அவளிடம் தேவர்களின் பெருமைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, "என்னைவிட அவர்கள் எவ்வளவோ உத்கிருஷ்டமானவர்கள். ஆகையால் இந்திரன், அக்கினி, யமன், வருணன் இவர்களில் ஒருத்தரை நீ வரிப்பதுதான் சிலாக்கியம்" என்று அவர்கள் சார்பில் வாதாடினான்.

Koviloor Digital Library

தமயந்தி விட்டுக் கொடுக்கவில்லை. நளனே சொன்னாலும் கூடப் பதிவிரதா தர்மத்தை ஒரு நாளும் விட முடியாது என்று அவள் சொல்லிவிட்டாள். அவனை அவள் பதியாக வரித்தபின் இன்னொருத்தரை மனத்தால் நினைத்தாலும் பதிதையாகிற மகாபாபம் வந்து சேரும் என்று தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

அவளிடம் தன் முறையீடு நிச்சயம் எடுபடாது என்று நளன் புரிந்து கொண்டு தேவர்களிடம் திரும்பி வந்தான். அவர்களுக்கும் நடந்ததெல்லாம் தெரியும். ஆனபடியால் தங்களுக்குக் காரியசித்தி ஆகாவிட்டாலும், நளன் சொன்ன வாக்குத் தவறாமல் அந்தரங்க சுத்தமாகத் தன்னால் முடிந்த அளவு முயன்று பார்த்ததில் அவனிடம் திருப்தி கொண்டு அவனுக்குச் சில வரங்களைத் தந்தார்கள்.

ஸ்வயம்வரம்

ஸ்வயம்வர வேளை வந்தது. பல தேசத்து ராஜாக்கள் ஸ்வயம்வர மண்டபத்தில் வந்து திரண்டிருந்தனர். நளனும் வந்திருந்தான்.

ஒரு நளன் இல்லை; ஐந்து நளர்கள் ஸ்வயம்வர மண்டபத்தில் பிரசன்னமாயிருந்தார்கள்! இதைப் பார்த்து எல்லோருக்கும் ஆச்சரியமாகி விட்டது.

ஐந்து நளர்கள் எப்படி உண்டானார்கள்? இதுவும் தேவமாயைதான். இந்திரன் முதலிய நாலு தேவர்களும் தத்ரூபம் நளன் மாதிரியே வேஷம் போட்டுக்கொண்டு வந்து விட்டார்கள்! 'ஐந்து நளர்களில் யார் உண்மை நளன் என்று தமயந்தி எப்படிக் கண்டு கொள்வாள்? எவனோ ஒருத்தனுக்கு மாலையிடுவாள். அது நிஜ நளனாக இல்லா விட்டால் தங்களில் ஒருவனுக்கே அதிர்ஷ்டச் சீட்டு விழுந்துவிடும் அல்லவா?' — இப்படி எண்ணிச் சூழ்ச்சி செய்து விட்டார்கள் தேவர்கள். முதலில் வெட்கத்தை

Koviloor Digital Library

விட்டு நளனிடம் வேண்டினார்கள்; இப்போது அவன் மாதிரி உருவம் எடுத்துக் கொண்டு வேஷதாரிகளாகி விட்டார்கள். பெண்ணாசை அத்தனை பொல்லாதது!

தமயந்தி ஸ்வயம்வர மண்டபத்துக்கு வந்தாள். ஒவ்வொரு ராஜகுமாரனாகத் தாண்டிக் கொண்டே வந்தாள். நளன் ஒருவனையே மனத்தில் நினைத்துக் கொண்டு வந்தாள். கடைசியில் பார்த்தால் ஒரு நளனுக்குப் பதில் ஐந்து நளர்கள் இருக்கிறார்கள்! தமயந்தி அப்படியே திகைத்து நின்றுவிட்டாள். 'இவர்களுக்கிடையே துளிக்கூட வித்தியாசம் தெரியவில்லையே! தவறாக நிஜ நளனுக்கு மாறாக இன்னொருத்தருக்கு மாலை போட்டுவிட்டால் பாதிவ்ரத்யத்துக்குத் தோஷம் வந்துவிடுமே!' என்று நடுங்கித் திக்பிரமையுடன் நின்றாள்.

தாய்களின் தியாகம்

நளனுடைய சரித்திரத்தைத் தமிழில் அழகான வெண்பாக்களில் புகழேந்திப் புலவர் பாடியிருக்கிறார். இதற்கு மூலமாக மகாபாரதத்தில் நளோபாக்கியானம் வருகிறது. இதையே ஸ்ரீஹர்ஷர் என்ற ஸம்ஸ்கிருதக் கவி 'நைஷதம்' என்ற அற்புதமான காவியமாக எழுதியிருக்கிறார். நிஷத நாட்டு மன்னனான நளனின் கதையைச் சொல்வதால் அதற்கு **நைஷதம்** என்று பெயர். இந்தக் காவியம் பண்டிதர்களுக்கெல்லாம் அருமருந்து போன்றது என்பதால், **"நைஷதம் வித்வத் ஔஷதம்"** என்பார்கள். வித்வான்களுக்கு ஔஷதம் என்பதிலேயே இன்னொரு அபிப்ராயத்தையும் சொல்லாமல் சொன்னதாகிறது. அதாவது ஸாதாரண வாசகர்கள் அந்தக் காவியத்தை ஸுலபத்தில் புரிந்து கொள்ள முடியாது. அது 'புலவர் நடை' என்கிறார்களே, அப்படிப்பட்டதில் ஆனது.

தமயந்தி ஸ்வயம்வர மண்டபத்தில் நின்றபடி நிற்கட்டும். இப்போது ஸ்ரீஹர்ஷரின் கதையைக் கொஞ்சம்

Koviloor Digital Library

சொல்கிறேன். அவருடைய தகப்பனார் ஒரு ராஜ சதஸில் வித்வானாக இருந்தவர். ஒரு சமயம் வேறொரு ராஜ்யத்திலிருந்து ஒரு கவி இந்தச் சபைக்கு வந்தார். இருவருக்கும் வாதப் போட்டி நடந்தது. ஸ்ரீஹர்ஷரின் தகப்பனார் தோற்றுவிட்டார். மிகவும் மனமுடைந்து அவமானத்துடன் அவர் வீட்டுக்கு வந்தார். அபஜயம் அடைந்த ஏக்கத்திலேயே காலமாகிவிட்டார்.

அப்போது ஸ்ரீஹர்ஷர் சிறு குழந்தை. தாயார் மாமல்லதேவிதான் குழந்தையை வளர்த்தாள். தன்னுடைய பதி வித்வத் சபையில் தோற்றுப் போனதற்குப் பரிஹாரமாகப் புத்திரனை மஹாபண்டிதனாக்க வேண்டும் என்று அவள் கங்கணம் கட்டிக் கொண்டாள். அவளுக்கு அவளுடைய பதி **சிந்தாமணி** என்கிற மந்திரத்தை உபதேசித்திருந்தார். அதை முறைப்படி ஜபித்து ஸித்தி பெற்றால் அமோகமான சரஸ்வதி கடாக்ஷம் உண்டாகும். இப்போது அவள் தன்னுடைய அறியாக் குழந்தை ஸ்ரீஹர்ஷருக்குச் சிந்தாமணி மந்திரத்தை உபதேசித்தாள். எப்போது பார்த்தாலும் அதை அந்தக் குழந்தை ஜபித்து வருமாறு பழக்கினாள். குழந்தையானதால் அதுவும் எல்லா வேளைகளிலும் — விளையாடுகிறபோதுகூட — அந்த மந்திரத்தை உருப் போட்டுக் கொண்டேயிருந்தது.

ஆனாலும் மாமல்லதேவிக்கோ எப்போது குழந்தைக்கு மந்த்ர ஸித்தி உண்டாகுமோ என்று கவலையாகவே இருந்தது. திடீரென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

குழந்தையின் பெருமைக்காக எந்த மகாத் தியாகத்தையும் செய்யக்கூடிய மாதா ஒருத்திக்குத்தான் அப்படிப்பட்ட யோசனை தோன்ற முடியும். அது என்ன யோசனை? சில மந்திரங்களை உக்கிரமான முறையில் அப்பியாசம் செய்வதுண்டு. இதன்படி பிரேதத்தின் மேல்

Koviloor Digital Library

உட்கார்ந்துகொண்டு ஜபித்தால் விரைவில் ஸித்தி உண்டாகும். இதனால்தான் இப்போதுகூடச் சில மந்திரோபாஸகர்கள் ச்மசானத்துக்குப் போய் ஜபம் செய்கிறார்கள். சிறு குழந்தையான ஸ்ரீஹர்ஷர் மாமல்லதேவி படுத்துக் கொண்டிருக்கும் போது அவள் மீது உட்கார்ந்து கொண்டுகூடப் பழக்க விசேஷத்தால் சிந்தாமணி மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டே யிருப்பதுண்டு. இதையொட்டித்தான் அவளுக்குப் பரமத் தியாகமான யோசனை உண்டாயிற்று. ஒருநாள் அவள் படுத்திருக்கையில் அவள் உடலின் மேலேறி விளையாடிக் கொண்டிருந்தது குழந்தை. அப்போதும் மந்திர ஜபத்தை அது விடவில்லை. தன் யோசனைப்படி அந்தச் சந்தர்ப்பத்தை விடாமல் மாமல்லதேவி அப்போதே கழுத்தை நெரித்துக்கொண்டு பிராணத் தியாகம் செய்து கொண்டுவிட்டாள். 'எப்படியாவது நம் பிள்ளை அபிவிருத்தியடைந்து சமானமில்லாத வித்யாஸித்தி பெற்றால் போதும்; நம் உயிர் போனாலும் போகட்டும்' என்று எண்ணி இப்படிச் செய்துவிட்டாள். அவள் நினைத்தபடியே குழந்தை அவள் தூங்குவதாக எண்ணி அவளுடைய சவத்தின் மீதிருந்தபடி மந்திரத்தை ஜபித்துக் கொண்டேயிருந்தது. அவள் செய்த தியாக விசேஷத்தால் அந்தக் குழந்தைக்கு சரஸ்வதியின் பூரண அநுக்கிரகமும் கிடைத்து விட்டது! நமக்குக் கொடூரமாகத் தோன்றினாலும்கூட இந்தக் கதையில் ஒரு தாயாரின் தியாகமே முக்கியமானது!

குழந்தையின் மேன்மைக்காகத் தாயார் எந்தத் தியாகமும் செய்வாள். தமிழ் நாட்டில் கோச்செங்கட் சோழன் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அவனுக்குக் கண்கள் செக்க சேவேல் என்று இருக்கும். அதனால்தான் செங்கட்சோழன் எனப் பெயர் வந்தது. இதற்குக் காரணம் ஒரு தாயின் தியாகம்தான். இவனுடைய தாயாருக்குப்

Koviloor Digital Library

பிரசவ வேதனை உண்டானபோது, ஆஸ்தான ஜோதிஷர் இன்னும் ஒரு முகூர்த்தத்துக்குப் பிறகு மிகவும் உத்தமமான லக்னம் உண்டாவதாகவும் அப்போது பிள்ளை பிறந்தால் அது சக்கரவர்த்தியாகப் பிரக்யாதியுடன் விளங்கும் என்று சொன்னார். எங்கே அந்த லக்னம் வருமுன்பே குழந்தை பிறந்து விடுமோ என்று ராணிக்குக் கவலை உண்டாயிற்று. பிரசவ வேதனையில் துடித்துக் கொண்டு எப்போது பிள்ளை பிறந்து வேதனை தீரும் என்று எதிர்பார்ப்பதற்குப் பதில் இவளோ, தன் வேதனை நீண்டாலும் பரவாயில்லை, பிள்ளை அடுத்த லக்னத்திலேயே பிறக்க வேண்டும் என்று நினைத்தாள். நினைத்தது மட்டுமில்லை. தன்னையே தலைகீழாகக் கட்டித் தொங்கவிடச் சொன்னாள் — அப்படிச் செய்வதால் சிசு ஜனிப்பதில் காலதாமதம் உண்டாகும் என்பதால்! அவ்விதமே செய்தார்கள். சகிக்க முடியாத கஷ்டத்தை அந்தத் தாயார் பிள்ளையின் மேன்மையை வேண்டித் தானாக ஏற்றுக் கொண்டாள். அவள் விரும்பியபடியே பிரஸவமும் தாமதமாயிற்று. நல்ல லக்னத்தில் குழந்தை பிறந்தது. இவளைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டதால் குழந்தை முகமெல்லாம் ரத்தம் குப்பென்று ஏறியிருந்தது. குறிப்பாகக் கண்களில் ரத்தம் கட்டிச் செக்கச் செவேல் என்றாகி விட்டது. அதனால்தான் அவனுக்கு 'கோச்செங்கண்' என்றே பேர் வைத்தார்கள். அவனும் ஜ்யோதிஷர் சொன்னபடியே பிற்காலத்தில் புகழ்பெற்ற மாமன்னனாக விளங்கினான்.....

ஸ்வயம்வரத்தில் அத்வைதம்

தாயாரின் தியாகத்தினால் மகாகவியானார் ஸ்ரீஹர்ஷர். தாம் இயற்றிய நைஷத காவியத்தில் சிந்தாமணி மந்திரத்தைப் பற்றியும் அதன் பிரயோகங்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த மந்திர பலத்தால் தாம்

Koviloor Digital Library

வாக்குவன்மை அடைந்ததையும் ஆங்காங்கே சொல்லி யிருக்கிறார். நளனுக்கும் தமயந்திக்கும் விவாகம் நடை பெற்றபின் ஸரஸ்வதி தேவியே அவர்களுக்குச் சிந்தாமணி மந்திரத்தை அநுக்கிரகம் செய்தாள் என்று நைஷதத்தில் கூறுகிறார்.

இன்னும் அந்த விவாஹ கட்டத்துக்கு நாம் வரவில்லை. ஐந்து நளர்களைப் பார்த்து தமயந்தி மலைத்து நின்றவரையில் தானே வந்திருந்தோம்?

இந்த இடத்தில்தான் வெகு ரஸமான ஓர் உபமானத்தைக் கையாளுகிறார் ஸ்ரீஹர்ஷர். ஆதிசங்கர பகவத்பாதர்களின் அத்வைதத்தைப் பின்பற்றுகிறவர்களுக் கெல்லாம் இந்த உவமை வெகு ருசியாக இருக்கும்.

ஐந்து மதங்களுக்கிடையே மிக உயர்ந்த உண்மையான அத்வைதத்தைத் தெரிந்து கொள்ள முடியாமல் ஜனங்கள் மயங்குவதுபோல், ஐந்து நளர்களுக்குள் உண்மையான நளனை அறிய முடியாமல் தமயந்தி மயங்கினாள் என்கிறார் ஸ்ரீஹர்ஷ கவி:

ஸாப்தும் ப்ரயச்சதி ந பக்ஷசதுஷ்டயே தாம்
தல்லாபசம்ஸினி ந பஞ்சம கோடி மாத்ரே |
ச்ரத்தாம் ததே நிஷதராட் விமதௌ மதானாம்
அத்வைத தத்வ இவ ஸத்யதரேபி லோக: ||

ஐந்து மதங்கள் என்னென்ன என்று பாரதத்தில் சொல்லியிருக்கிறது. சாங்கியம், பாதஞ்ஜலம், பாஞ்சராத்ரம், பாசுபதம், வேதம் என்பனவே அவை. ஈசுவரன் என்ற ஒன்றைச் சொல்லாமல் வெறும் தத்துவ ஆராய்ச்சியைச் சொல்வது சாங்கியம். ராஜயோகம், அஷ்டாங்க யோகம் என்றெல்லாம் செய்கிற யோக மார்க்கம்தான் பாதஞ்ஜலம். விஷ்ணு ஒருத்தர்தான் பரம் பொருள் என்று சொல்கிற மதம் பாஞ்சராத்ரம். இவ்வாறே

Koviloor Digital Library

சிவன் மட்டும்தான் பரமாத்மா என்கிற சமயம் பாசுபதம். வேதம், மற்ற எல்லா மதங்களையும் அங்கமாகக் கொண்டது. வேதம் சொல்கிற ஒவ்வோர் அம்சத்தைத்தான் மற்ற மதங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு அந்த ஓரம்சத்தையே ஒரு முழு சம்பிரதாயமாக்கி விட்டன. வேதத்தின் பரம தாத்பரியமோ, 'பிரம்மத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை; ஜீவனும்கூடப் பிரம்மம்தான்' என்கிற அத்வைதம்தான். ஸ்ரீஹர்ஷர் இப்படித்தான் கருதி, "வேதமதம்" என்று சொல்லாமல், "அத்வைத தத்வம்" என்றே சொல்லியிருக்கிறார்.

வெறும் லௌகிகத்தில் இருக்கிற ஜனங்களுக்கு, எல்லா மதங்களும் வெறும் லௌகிக இந்திரிய வியாபாரத்திலிருந்து இவனுடைய பார்வையைத் திருப்புவதால், எடுத்த எடுப்பில் எல்லா ஸமயங்களும் ஒரே மாதிரிதான் தெரியும் — ஐந்து நளர்களும் ஒரே போல் தென்பட்ட மாதிரி. ஆனாலும் இவர்களில் ஒரே ஒரு நளன்தானே சத்தியமானவன்? அப்படியே அத்வைதம் ஒன்றுதான் சத்தியமானது என்கிறார் ஸ்ரீஹர்ஷர்.

'சத்தியமானது' என்று சொல்லாமல் 'ஸத்ய தரமானது' என்கிறார். இப்படிச் சொன்னதில் நிரம்ப விசேஷம் உண்டு.

'தரம்' என்றால் 'மேம்பட்டது' என்று அர்த்தம். 'தரமான சரக்கு' என்று சொல்கிறோம் அல்லவா? 'சத்தியதரம்' என்றால் மேம்பட்ட உண்மை என்று அர்த்தம். அப்படியானால் கீழ்ப்பட்ட சத்தியம் என்று இருக்கிறதா? இருக்கிறது. எப்போதுமே சத்தியமாக இருப்பதுதான் மேம்பட்ட சத்தியம். தாற்காலிகமாகச் சத்தியமாக இருப்பது கீழ்ப்பட்ட சத்தியம். ஒருபோதும் சத்தியமாக இல்லாததுதான் அசத்தியம் அல்லது பொய். மலடி மகன், முயல் கொம்பு இவை ஒரு போதும் இல்லாதவை. இவை

Koviloor Digital Library

'அத்யந்த அஸத்' அல்லது முழுப் பொய். தகர டப்பியின் மூடி வெயிலில் மினுக்குகிறபோது அதை ரூபாய் என்று நினைக்கிறோம்; வைக்கோலால் செய்த பழுதையை இருட்டிலே பார்த்துப் பாம்பு என்று எண்ணுகிறோம். உண்மையில் ரூபாயோ, பாம்போ இல்லை. ஆனாலும் இந்த உண்மையை அறிகிற மட்டில் நமக்கு ரூபாய் கிடைக்கப் போகிறது என்பதில் ஏற்பட்ட மகிழ்ச்சி, பாம்பு கடித்து விடப் போகிறதே என்பதில் உண்டான பீதி எல்லாம் உண்மையாகவே இருக்கின்றன. ரூபாய் இல்லாவிட்டாலும் அந்தத் தோற்றத்தை உண்டாக்குவதற்கு ஆதாரமாக 'டப்பா மூடி' என்கிற உண்மையான வஸ்து இருக்கிறது; பாம்புக்கு ஆதாரமாக வைக்கோற் பழுதை என்கிற வஸ்து மெய்யாகவே உள்ளது. மலடி மகனுக்கும் முயல் கொம்புக்கும் இந்த மாதிரி ஆதார வஸ்து எதுவும் இல்லை. எனவே, பழுதைப் பாம்பும், டப்பா மூடி ரூபாயும் அத்யந்த அஸத் அல்ல. ஆனால் அவை நிரந்தர சத்தியமும் அல்ல. தாற்காலிகமாக சத்தியம் மாதிரி இருந்து நம்மை சந்தோஷத்திலும், பயத்திலும் ஆட்டி வைத்தன. உண்மையில் மூடி என்றும் பழுதை என்றும் தெரிந்ததும் இந்த உணர்ச்சிகள் போய்விட்டன. இதைத்தான் மாயை, மித்யை, ப்ராதிபாஸிக ஸத்யம், கீழ்ப்பட்ட ஸத்யம் என்று சொல்வது. கனவுகூட இப்படிப்பட்டதுதான். கனவு காண்கிற வரையில் அது சத்தியமாகவே இருக்கிறது. கனவு முடிந்த பின்பு, அது பொய்யாகிவிட்டாலும், கனவைக் கண்டவன் — அதாவது கனவுக்கு ஆதாரமாக இருந்த ஒருத்தன் — இருக்கவே செய்கிறான். இந்த உலக நடப்புக்களை வ்யாவஹாரிக ஸத்தியம் என்பார்கள் — விவகார உண்மை என்று அர்த்தம். உலகம் மாறிக் கொண்டேயிருக்கிறது; நாம் மாறிக் கொண்டேயிருக் கிறோம். எப்போதும் மாறாமல் ஒரே மாதிரி இருக்கிற 'ஸத்யதரம்' விவகாரத்தில் இல்லை. ஞான நிலையில்

Koviloor Digital Library

பார்த்தால் இந்த விவகார சத்தியமும் கனவு மாதிரி, மூடி ரூபாய், பழுதைப் பாம்பு இவை மாதிரிப் பிராதிபாஸிக சத்தியம்தான் என்று தெரியும். பரமாத்மா என்ற ஒன்றுதான் எப்போதும் மாறாமல் ஒரே மாதிரி இருக்கிற சத்தியம். அதுதான் பழுதையே பாம்பாகத் தெரிந்த மாதிரி மாயையால் இத்தனை தோற்றங்களாகவும் தெரிகிறது. இந்தத் தோற்றங்களையெல்லாம் ஞானத்தால் அழித்து விட்டால் ஆதாரமான பரமாத்மா அல்லது பிரம்மம் ஒன்றுதான் நிற்கும். விவகாரத்தை நாம் சத்தியம் என்று நினைத்தாலும் இதற்கும் மேலான நித்திய சத்தியமாக, சத்தியதரமாக இருப்பது இரண்டற்ற — அத்வைதமான — பிரம்மம்தான்.

மற்ற சித்தாந்தங்களும், மதங்களும் விவகார சத்தியம் போல் ஓரளவு வரை சத்தியமாக நிற்கும். ஆனால் எக்காலமும் சத்தியமாக, அதாவது 'ஸத்யதர'மாக இருப்பது அத்வைதம் தான். மற்ற தேவர்கள் அந்த மற்ற மதங்களைப் போல் ஓரளவு வரை நளனைப்போல் தெரிந்தாலும், நளன்தான் சத்தியதரமானவன்.

தாற்காலிக சத்தியமான உலகமே நித்ய சத்தியம் போல் வேஷம் போட்டுக் கொண்டிருப்பதால்தான் நாம் இந்த உலகமே உண்மை என்று மயங்கி இருக்கிறோம். தமயந்தியின் ஸ்வயம்வரத்தில் கூடிய தேவர்களும் வேஷத்தைத்தான் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அத்வைதம் தவிர இதர சித்தாந்தங்களை ஸ்ரீஹர்ஷர் பொய்யென்று சொல்லிவிட்டதாகக் கோபிக்கக் கூடாது. அத்வைதமே 'சத்தியம்' என்று அவர் சொல்லியிருந்தால் தான் மற்றவை 'பொய்' என்றாகும். ஆனால் அவர் அத்வைதத்தை 'ஸத்யதரம்' என்றே சொல்வதால், மற்றவையும் அடியோடு பொய்யில்லை, ஒவ்வொரு நிலையில் அவையும் சத்தியமாக இருப்பவை என்று சொன்னதாகவே ஆகிறது.

Koviloor Digital Library

உண்மையான அத்வைதிகள் எந்த சித்தாந்தத்தையும் துவேஷிப்பதில்லை. 'மற்ற சமயங்கள் பரஸ்பரம் பிணங்கிக் கொள்கின்றன; நமக்கு அவை எதனிடமும் பிணக்கு இல்லை' என்று கௌடபாதர் என்கிற ஒரு பெரிய அத்வைத ஆசாரியர் சொல்கிறார்*. பரமாத்மாவிடமிருந்து இரண்டாகப் பிரிந்து பக்தி செய்கிற மதங்களைக்கூட அத்வைதம் ஆரம்ப நிலையில் ஒப்புக் கொள்கிறது. ஸாதகன் எந்த சித்தாந்தத்தில் ஆழமாக ஈடுபட்டாலும் தானாகக் கொஞ்சம் கொஞ்சமாக அத்வைதத்துக்கே வந்து சேருவான் என்கிற நிச்சயம் அத்வைதிகளுக்கு உண்டு. பரம சத்தியத்துக்கு அழைத்து வர உதவி புரிகிற இதர சித்தாந்தங்களைப் பொய் என்று எப்படிச் சொல்வது?

இத்தனை அபிப்பிராயங்களும் தொனிக்கிற மாதிரி ஸ்ரீஹர்ஷர் ரத்னச் சுருக்கமாக "ஸத்யதரம்" என்கிற ஒரு வார்த்தையை அத்வைத ஸம்பந்தமாகப் போட்டு விட்டார்!....

ஸரஸ்வதியின் சாதுரியம்

ஸ்ரீஹர்ஷரின் கதைப்படி அவருடைய இஷ்ட தெய்வமான ஸரஸ்வதியே தமயந்தியுடன் சுயம்வர மண்டபத்துக்கு வந்து ஒவ்வொரு ராஜகுமாரனைப் பற்றியும் சொல்கிறாள். இந்த ஐந்து பேரைப் பார்த்ததும் அவளுக்கும் ஒரு சங்கடம் உண்டாயிற்று. தேவர்கள் ஸாக்ஷாத் ஸரஸ்வதியை ஏமாற்ற முடியுமா? ஆனாலும் ஸரஸ்வதிக்கோ இந்திராதி தேவர்களை வேஷக்காரர்கள் என்று அப்பட்டமாகக் காட்டிக் கொடுக்க மனமில்லை. அது உசிதக் குறைவாகப்பட்டது. உள்ளதைச் சொல்லா விட்டாலும் தப்பாகும். ஸரஸ்வதி அறிவுத் தெய்வம் அல்லவா? எனவே சபையில் கூடியிருந்த மற்றவர்கள்

* மாண்டூக்ய காரிகா — 3.17.

Koviloor Digital Library

தெரிந்து கொள்ளாவிட்டாலும், தமயந்தி தானாகவே புரிந்து கொள்ள அநுகூலமான முறையில் மறைமுகமாக இந்த ஐந்து பேரைப் பற்றியும் சொன்னாள். தேவன் ஒவ்வொருத்தனுக்கும் நளனுக்கும் ஒரே சமயத்தில் பொருத்தமாக இருக்கிற மாதிரி லட்சணங்களைச் சொல்லி சிலேடையாக வர்ணித்தாள். அதற்குப் 'பஞ்சநளீயம்' என்றே பெயர். அதைத் தமிழில் விளக்குவது கஷ்டம். அது இங்கே நமக்கு அவசியமும் இல்லை.

மற்ற நாலு நளர்கள் தேவரானதால் அவர்களின் கால் பூமியில் பாவவில்லை; அவர்கள் இமை கொட்டவில்லை; இதை எல்லாம் பார்த்துத் தமயந்தி நிஜ நளனைப் புரிந்து கொண்டு மாலை போட்டாள் என்ற கதை உங்களுக்கே தெரிந்திருக்கும்.

தமயந்தி கதை உங்களுக்கே தெரிந்திருக்கக் கூடியது தான். நான் அதை அதற்காகவே சொல்ல வரவில்லை. எனக்கு அதை எவ்வளவு தூரம் சொல்ல வருமோ? பௌராணிகர்களானால் ஸ்வாரஸ்யமாகச் சொல்வார்கள். ஒரு காவியத்துக்குள் தத்துவத்தை எவ்வளவு நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறது என்று காட்டவே இதைச் சொன்னேன்....

இலக்கியம் தர்மம் கூறும் முறை

ஒரு யஜமானன் கட்டளை இடுவது போல் 'சத்தியம் பேசு; தர்மமாக நட' என்று வேதம் ஆக்ஞை பிறப்பிக்கும். இதற்குப் '**பிரபு ஸம்மிதை**' என்று பெயர். இதையே நண்பன் எடுத்துச் சொல்கிற மாதிரி புராணங்கள் கதா ரூபத்தில் விளக்கும். இதற்கு 'ஸுஹ்ருத் ஸம்மிதை' எனப் பெயர். கதையானாலும் புராணம் செய்த ரிஷிகளும் தர்மத்தை ரொம்பவும் வெளிப்படையாகவே வலியுறுத்திக் கொண்டு போவார்கள் — 'ஸுஹ்ருத்' அல்லது நீதிமானான நண்பன்

Koviloor Digital Library

பேசுகிற பாணியில். இதை விட ஹிதமாகவும் மதுரமாகவும் தர்மத்தைச் சர்க்கரையில் தோய்த்த மாத்திரை மாதிரிக் கதையில் தோய்த்துச் சொல்கிறவன் கவி. நம் நாக்குக்குச் சர்க்கரை ருசிதான் தெரியும்; மருந்துச் சரக்கு இருப்பதே தெரியாது. வயிற்றுக்குள் போய்த்தான் அது வேலை செய்யும். இம்மாதிரி காவியரஸத்தை நாம் அநுபவிக்கிற போது நமக்குத் தெரியாமலே நமக்குள் தர்மங்கள் ஊறுகிற விதத்தில் கவி பேசுவான். காவியத்தை 'காந்தா ஸம்மிதை' என்பார்கள்—அதாவது அது பிரிய பத்தினியின் வாக்கு மாதிரி என்று அர்த்தம்.

உயர்ந்த கவி மகத்தான தர்மங்களையும் தத்துவங்களையும் நவரஸத்தில் தோய்த்து மிகவும் ரஞ்ஜகமாகக் கொடுத்து விடுகிறான். இலக்கிய உலகத்தில் இருப்பவர்கள் இதையே ஸ்வதர்மமாகக் கொள்ள வேண்டும் — வெறும் ரஞ்ஜகமாக மட்டுமல்லாமல் அதற்குள் தர்மமான பலனும் இருக்கிற மாதிரி எழுதவேண்டும். படிக்கிறவனை அப்போதைக்குச் சந்தோஷப்படுத்துவதோடு நில்லாமல், அவனை உயர்த்துகிற விதத்தில் எழுத வேண்டும்.

நளன் கதையில் காஞ்சிமடத்து ஸ்வாமி

உங்களுக்கு இன்னொரு ரஸமான விஷயமும் நைஷதத்திலிருந்து சொல்கிறேன். அத்வைத தத்துவத்தை ஸ்ரீஹர்ஷர் சொன்னதோடு நம் மடத்தில் ஆராதிக்கப்படும் சந்திரமௌளீசுவரரைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்.

தமயந்தியின் சுயம்வரத்தில் பல ராஜ்ய மன்னர்கள் வந்திருந்தது போல, தமிழ்நாட்டிலிருந்தும் சென்றிருந்தார்கள். காஞ்சீபுரத்திலிருந்து போயிருந்த அரசனைப் பற்றி ஸரஸ்வதி தேவி தமயந்தியிடம் சொல்கிறாள்:

Koviloor Digital Library

ஸிந்தோஜத்ரமய பவித்ரமஸ்ருஜத் தத்கீர்த்தி
பூர்த்தாத்புதம்
யத்ர ஸ்நாந்தி ஜகத்தி ஸந்தி கவய: கே வா ந
வாசம்யமா: |
யத் பிந்துச்ரியம் இந்து ரஞ்ஜதி ஜலம் சாவிச்ய
த்ருச்யேதரோ
யஸ்யாஸெள ஜலதேவதா ஸ்படிகபூர் ஜாகர்தி
யோகேச்வர: ||

"இந்த அரசன் காஞ்சீபுரத்தில் சமுத்திரம் போன்ற ஒரு பெரிய தடாகத்தை வெட்டியிருக்கிறான். அது பரம நிர்மலமான ஜலம் நிரம்பியது. அதை வர்ணிக்க முடியாமல் கவிகள் மௌனமாகிவிட வேண்டியதுதான். இந்தத் தடாகத்திலிருந்து தெளித்த துளிதான் சந்திரனோ என்று தோன்றும். இந்தத் தடாகத்திலிருந்து அபிஷேகம் செய்யப்பட்டு ஸ்படிக மயமான யோகேச்வரர் கண்ணுக்குத் தெரியாமல் போகிறார்" என்பது சுலோகத்தின் பொருள்.

சுத்தமான ஸ்படிகம் ஜலத்தைப் போலவே நிறமில்லாதது அல்லவா? அதை ஜலத்துக்குள் போட்டால் அது இருப்பதே தனியாகத் தெரியாது. ஸ்படிக லிங்கத்துக்கு நிறைய ஜலத்தைக் கொட்டி அபிஷேகிக்கும் போது அது ஜலத்திலிருந்து வேறாகத் தெரியாது.

காஞ்சீபுரத்தில் உள்ள ஸ்படிக மயமான யோகேச்வரர் யார்? நம் மடத்திலுள்ள ஸ்ரீ சந்திர மௌளீசுவர ஸ்படிக லிங்கம்தான். ஆதி ஆசாரியாள் ஐந்து ஸ்படிக லிங்கங்களை ஐந்து இடங்களில் பிரதிஷ்டை செய்தார். பதரியில் முக்தி லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார். நேபாளத்தில் உள்ள நீலகண்ட க்ஷேத்திரத்தில் வரலிங்கம்; சிதம்பரத்தில் மோக்ஷலிங்கம்; சிருங்கேரியில்

Koviloor Digital Library

போகலிங்கம்; காஞ்சீபுரத்தில் யோக லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்தார்.

காஞ்சி மடத்தில் பூஜிக்கப்படும் யோகலிங்கத்தைத் தான் ஸ்படிக மயமான யோகேச்வரர் என்கிறார் நைஷதகவி. இந்த மூர்த்தியின் அபிஷேகத்துக்குப் பயனாகிற தீர்த்தத்தைக் கொண்ட தடாகத்தை வெட்டியதே காஞ்சி ராஜனுக்குப் பெருமை என்று சொல்லாமல் சொல்கிறார்.

ஸ்ரீஹர்ஷரின் ச்லோகத்தில் 'யோகேச்வர' என்ற வார்த்தை முடிவாக இருக்கிறது. இதில் ஒரு குழறுபடி. 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்' என்று ஒரு பழமொழி கேள்விப்பட்டிருக்கலாம். இதில் 'எழுதினவன்' என்கிறது ஏட்டுப் பிரதிகள் எடுப்பவனைத்தான். அவன் ஒரு ஓலைச் சுவடியைப் பார்த்து அதிலிருப்பதை இன்னொரு சுவடியில் காப்பி பண்ணுவான். அப்படிப் பண்ணும்போது அவன் ஏதாவது தப்பு செய்துவிட்டால் அது பெரிய அனர்த்தமாகிவிடுவதும் உண்டு. இங்கே அப்படித்தான் 'யோகேச்வர' என்பதை 'யாகேச்வர' என்று எழுதி அதுவே ஒரு பாடாந்தரமாகப் பரவியும் விட்டது! 'யோ'வுக்கு உள்ள கொம்பை தவறிப்போய் விட்டுவிட்டதால் யோகேச்வரர் யாகேச்வரராகிவிட்டார்! ஆனாலும் காஞ்சீபுரத்தில் எங்கே தேடிப் பார்த்தாலும், எத்தனை காலத்துக்கு முந்தின கதைகளை ஆராய்ந்து பார்த்தாலும் யாகேச்வரர் என்று ஒரு ஸ்படிக லிங்க ஸ்வாமி இருந்ததாகத் தெரியவில்லை.

ஸம்ஸ்க்ருத காவ்யங்களுக்கு உரையெழுதிய பிரஸித்தமான உரைகாரர்களில் ஒருவர் மல்லிநாத ஸூரி என்பவர். அவர் நைஷதத்துக்கு எழுதியிருக்கும் வ்யாக்யானத்தில் இந்த இடத்தில் 'யோகேச்வர' என்ற பாடத்தையே எடுத்துக் கொண்டிருக்கிறார். அதோடு அந்த ஸ்படிக லிங்க யோகேச்வரர் பிரஸித்தி பெற்றவர் என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறார்! 'ஸ்பாடிகம் லிங்கம் யோகேச்வர இதி ப்ரஸித்தி:' என்று சொல்லியிருக்கிறார். தற்காலத்தில்

Koviloor Digital Library

மஹா பண்டிதராக இருக்கும்* மஹாமஹோபாத்யாய கோபிநாத் கவிராஜும் 'யோகேச்வர' என்ற பாடத்தையே ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகையினால் ஸந்தேஹத்துக்கு இடமில்லாமல் நம்முடைய மடத்து ஸ்வாமியைத்தான் ஸ்ரீஹர்ஷர் சொல்லியிருக்கிறாரென்று ஆகிறது.

ஸ்ரீஹர்ஷருக்கு அத்வைத தத்துவத்தில் நிரம்பவும் பற்று இருந்ததோடு, ஸ்ரீ ஆசாரியர்களால் ஆராதிக்கப்பட்ட யோக சந்திர மௌளீசுவர லிங்கத்திடமும் மிகுந்த பக்தி இருந்ததாகத் தெரிகிறது. அவர் எண்ணூறு வருஷங்களுக்கு முன்னால் வசித்ததாக அறிகிறோம். காஞ்சி ராஜனைப் பற்றிச் சொன்னது போல், அவர் குளம் வெட்டியவர்களைப் பல இடங்களில் பெரிதாகப் புகழுவதைப் பார்க்கும் போது அவர் ரொம்பவும் தண்ணீர்ப் பஞ்சமுள்ள குஜராத், மார்வாட் (ராஜபுதனம்) போன்ற சீமையைச் சேர்ந்தவர் என்று தோன்றுகிறது. இந்தச் சீமைகளில்தான் குளம், குட்டை, கிணறு வெட்டுவதைப் போற்றுகிற **வாபீ ப்ரசஸ்தி** என்ற பல சாஸனங்கள் கிடைக்கின்றன. பல நூறு வருஷங்களுக்கு முன்னால், வட இந்தியாவில் எங்கோ ஒரு பிரதேசத்தில் இருந்த ஒரு கவி காஞ்சீபுரத்து யோகேசுவரரைத் தெரிந்து கொண்டு அவரைச் சிலாகித்துக் கூறியிருக்கிறார் என்பதிலிருந்து நம் மடத்தின் தொன்று தொட்ட ப்ரஸித்தி தெரிகிறது. அதோடு இங்கே பூஜிக்கப்படுகிற சந்திரமௌளீசுவரர் உலகுக்கெல்லாம் சொந்தமான ஸ்வாமி என்றும் தெரிகிறது. ஒவ்வொரு வீட்டுக்கும் சொந்தமாக ஒரு ஸ்வாமியை வைத்துப் பூஜை செய்கிறோம். உலகத்தையே ஒரு வீடாக்கி அதற்கு ஸ்வாமியாகப் பஞ்சலிங்கங்களை ஆசாரியார் பிரதிஷ்டை செய்திருக்கிறார். லோகமெல்லாம் க்ஷேமமாயிருப்பதற்காக இந்தச் சந்திரமௌளீசுவர ஆராதனை எந்நாளும் அமோகமாக நடந்து வர வேண்டும்.

---

* குறிப்பிடப்படுபவர் இதன் பிற்பாடு மறைந்து விட்டார்.

Koviloor Digital Library

சிவபாதசேகரன்*

இறைவன் திருவடியை முடியில் கொண்டவன்

சக்கரவர்த்தி, மன்னர் மன்னன், ராஜாவுக்கெல்லாம் ராஜா என்று நாம் ஒருத்தனைக் கொண்டாடுகிறோம். ஆனால் அவன் இதைவிடப் பெரிசாக நினைத்தது தானும் வேறே ஒரு மஹா பெரிய ராஜாவுக்குத் தொண்டனாக இருப்பதைத்தான். தன் தலையில் நவரத்ன கிரீடம் சூட்டிக் கொண்டிருப்பதை விட, அந்தச் சிரஸிலே தனக்கும் ராஜாவாக இருக்கப்பட்டவனின் காலை அழுந்த வைத்துக் கொண்டால் அதுதான் பெரிய ஆபரணம் என்று பெருமைப்பட்டான்.

அவன்தான் ராஜராஜ சோழன் என்று நாம் போற்றுகிறவன். தன்னை எப்போதும் ஸகலலோக சக்ரவர்த்தியான பரமேச்வரனின் தொண்டனாக நினைத்துக் கொண்டு, அந்த சந்திரசேகரனின் திருவடி தன் முடியில் சூட்டப்பட்டிருப்பதாகப் பாவித்து, பாவித்து ஸந்தோஷப்பட்டுக் கொண்டு, இதனால் சிவபாத சேகரனாக ஆண்டவனுக்கு அடங்கிக்கிடப்பதையே உயர்வாக நினைத்தவன்.

சிரஸின் உச்சியில் ஸஹஸ்ரார கமலம் என்று ஆயிரம் இதழ்த் தாமரைப் பூ இருக்கிறது. மூலாதாரத்திலுள்ள

* ராஜராஜ சோழனின் ஆயிரமாவது ஆண்டு விழாவையொட்டிக் கூறியது. இவ்வுரையை 'சான்றோர்' என்ற பிரிவில் சேர்க்கவும் இடமுண்டாயினும், பண்பாடு குறித்த விஷயங்களே இதில் அதிகம் இருப்பதால் இந்தப் பிரிவில் சேர்த்திருக்கிறது.

Koviloor Digital Library

குண்டலினீ சக்தியை ஸாதனைகள் பண்ணி அங்கே கொண்டு போனால், அந்தக் கமலத்திலே குரு ரூபமாக இருக்கிற ஈச்வரனின் பாதகமலம் தெரியும். அந்த கமலத்திலிருந்து தேனுக்குப் பதில் பெருகுகிற அம்ருதத்தில் — சரணாம்ருதத்தில் — நாடி நரம்பெல்லாம் குளிர்ந்து, ஜீவ பாவமே அடித்துக் கொண்டு போய், பரமாத்மாவோடு பரமாத்மாவாக ஐக்யப்பட்டிருக்கிற மோக்ஷானந்தம் ஸித்திக்கும். பகவான் பாதத்தைத் தலைமேல் வைக்கும்படி மகான்கள் பிரார்த்திப்பதற்கு இதுதான் உள்ளர்த்தம்.

சிரஸி தயயா தேஹி சரணௌ

என்று ஆசார்யாள் 'ஸௌந்தர்ய லஹரி'யில் இந்தத் திருவடி தீக்ஷையைத்தான் அம்பாளிடம் வேண்டுகிறார்.

இந்த தீக்ஷை கிடைத்த ஆனந்த பரவசத்தில் அப்பர் ஸ்வாமிகள்,

புகழ்ச் சேவடி என்மேல் வைத்தாய் நீயே

என்று பாடுகிறார். அந்தச் சேவடியின் அடியிலே தன் முடி சூடிய தலை கிடக்கவேண்டும் என்று ஆசைப்பட்டவன் தான் சிவபாத சேகரன்.

அப்பர், ஸம்பந்தர், ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் ஆகியவர்களுடைய தேவாரத் திருப்பதிக ஏடுகளைச் சிதம்பரத்திலிருந்து கண்டெடுத்துக் கொண்டு வந்து லோகத்துக்கெல்லாம் கொடுத்த பரம உபகாரி ராஜராஜன் தான். அவன் இல்லாவிட்டால் நம் தமிழ்த் தேசத்தின் பக்திப் பண்பாட்டுக்கே மூச்சாக இருக்கிற தேவாரம் இல்லை; எல்லாம் கரையான் அரித்து மட்கி மண்ணாகி யிருக்கும். இதனால் "திருமுறை கண்ட சோழன்" என்றே அவனுக்கு ஒரு பெயர்.

சிதம்பரேச்வரனான நடராஜாவிடத்தில் அவனுக்கு அபார பக்தி. 'நடராஜா' என்ற பெயரைத் தமிழில்

Koviloor Digital Library

'ஆடவல்லான்' என்று அப்பர் அழகாகச் சொல்லியிருப்பது அவன் மனஸை ரொம்பவும் கவர்ந்திருக்கிறது.

பெருமை இறைவனுக்கே

தேவாரம் என்ற சொற்கோவிலைக் காப்பாற்றிக் கொடுத்தவன், தஞ்சாவூரில், இன்றும் லோகம் பிரமித்துக் கொண்டாடும்படியான கற்கோயிலையும் கட்டினான். தான் பெற்ற வெற்றிகளுக்கு நன்றிக் காணிக்கையாகக் கட்டினான்.

வடக்கே இப்போது ஒரிஸ்ஸா என்கிறோமே அந்தக் கலிங்கம்வரை படையெடுத்துப் போய், கோதாவரி–கிருஷ்ணா நதிகளுக்கு மத்தியிலே கீழைச் சளுக்கியர்கள் ஆண்டு கொண்டிருந்த வேங்கிநாடு, தெற்கே ஈழம் என்னும் இலங்கை, இப்போது Laccadives – லக்ஷத் தீவு – என்கிற அராபியன் ஸீ ஐலண்ட்ஸ் எல்லாவற்றையும் ஜயித்துத்தான் ராஜராஜன் என்று காரணப் பெயர் வாங்கினான். அவனுடைய சொந்தப் பெயர் அருண்மொழி வர்மன் என்பது. பெயருக்கேற்ப தேவாரமாகிய அருள்மொழி களைக் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறான்! சேக்கிழாருக் கும் அருண்மொழித்தேவர் என்றே இயற்பெயர். அவர் அருள்மொழியான "பெரிய புராண"த்தைச் செய்திருக் கிறார்.

ராஜராஜனாக ஆனவுடன் நமக்கானால் தற்பெருமையும் தலைக்கனமும்தான் ஏற்படும். ஆயுஸ் பரியந்தம் தனக்கும், அப்புறம் பின் ஸந்ததிக்கும் ராஜ்யாதி காரம் என்றில்லாமல், ஒரு அஞ்சு வருஷம் மினிஸ்டர் என்று ஆகிவிட்டாலே, தனக்காக வெற்றி விழா, பாராட்டு விழா, கிரீடச் சூட்டு, கேடயச் சூட்டு எல்லாம் பண்ணிக் கொள்கிறோம். அவனோ ராஜராஜனானவுடன் தன்

Koviloor Digital Library

போராற்றல், வெற்றி, வீரதீரம் அத்தனையும் ஈச்வரப் பிரஸாதம்தான் என்பதாக, தான் அடங்கி, ஈச்வரனையே பெரியவனாக, அம்பாளையே பெரியவளாக வைத்து மஹா பெரிய கோவிலைக் கட்டினான். பெருமை எல்லாம் பகவானைச் சேர்ந்ததுதான் என்று உணர்த்தும்படியாக அந்தக் கோயிலில் எல்லாம் பெரிசாக, பெயர்களிலும் 'பெரிய' ஸம்பந்தம் இருக்கும்படியாகச் செய்தான். ஸ்வாமி பெயரே ப்ருஹத்-ஈச்வரர், பெருவுடையார்; அம்பாள் ப்ருஹந்நாயகி-பெரிய நாயகி. 'கோயில் பெயரே ப்ருஹத்-ஈச்வரம்-பெரிய கோயில். Big Temple of Tanjore, Great Pagoda at Tanjore என்று அதற்கு லோகம் பூரா கியாதி இருக்கிறது. 'ராஜராஜேச்சுரம்' — 'ராஜராஜேச்வரம்' — என்பது கல்வெட்டில் இருக்கிற பேர். ராஜராஜேச்வரி என்பது அம்பாளுக்குப் பிரஸித்த நாமா. இங்கே ஈச்வரனுக்கும் ராஜராஜனை முன்னிட்டு 'ராஜராஜேச்வரம்' என்று வாஸஸ்தானம் ஏற்பட்டிருக்கிறது.

எல்லாம் பெரிசு அங்கே. நந்திகேச்வரர் the Big Bull of Tanjore என்று அந்நிய தேசங்களிலும் புகழ் எடுத்திருக்கிறார். பிராகாரச் சுற்றிலே இருக்கிற ஒவ்வொரு கோஷ்ட தேவதையும் எட்டடி, பத்தடி உயரம். அளவிலே மட்டுமில்லாமல், அழகிலே, அருளிலே எல்லாமே பெரிய மூர்த்திகள். எண்ணூறடி நீளம், நானூறடி அகலத்துக்கு விஸ்தாரமாகக் கோவில் கட்டினான். மஹாலிங்கம், மஹாதேவன் என்று பெயருள்ள பெருவுடையாருக்கு பிரம்மாண்டமான லிங்கத் திருமேனி வைத்தான். அவர் தலைக்கு மேலே உள்ள விமானத்தை இருநூறு அடிக்கு மேலே உயரமாகக் கட்டி அதற்கு 'தக்ஷிண மேரு' என்று பெயர் வைத்தான். வடக்கே உள்ள மேருவுக்கு — மேரு என்றால் இங்கே கைலாஸம் என்றே அர்த்தம் பண்ணிக் கொள்ளணும், அதற்கு — ஸமானமாகத் தென் தேசத்தில் உள்ளது என்று பொருள்.

Koviloor Digital Library

தக்ஷிண மேரு விடங்கர்; ஆடவல்லான்

'தக்ஷிண மேரு விடங்கர்' என்றே இங்கே ஒரு சிவ மூர்த்திக்குப் பேர் வைத்திருக்கிறான். ஸோமாஸ்கந்தர்தான் அந்த மூர்த்தம். அருவுருவ லிங்கமான மூலஸ்தான மூர்த்திக்கு உருவ representative ஆக எல்லாக் கோயிலிலும் இருப்பவர் அம்பாளோடும் குமாரஸ்வாமியோடும் உள்ள ஸோமாஸ்கந்தர்தான். இவருக்கு திருவாரூர் முதலான ஏழு 'விடங்க' க்ஷேத்ரங்களில் தியாகராஜா என்று பெயர். அங்கே உள்ள தியாகராஜ விக்ரஹங்கள் 'டங்கம்' எனும் உளியினால் செதுக்கப்படாமல், தேவ சிற்பி விச்வகர்மாவின் மனஸாலேயே கல்பிக்கப்பட்டதால் 'விடங்க மூர்த்திகள்' எனப்படும். இந்த மானஸிக விடங்க ஸ்ருஷ்டிகள் ரொம்பவும் பூர்வகால சமாசாரம். தஞ்சாவூர் கோவில் கட்டினது கி.பி. ஆயிரத்தையொட்டித்தான். அதாவது இது ஆயிர வருஷ சமாசாரம்தான். இங்கே நம் உலகத்தைச் சேர்ந்த ஸ்தபதி உளியை வைத்துக் கொண்டு தான் விக்ரஹம் அடித்தான். பின்னே ஏன் 'விடங்க' என்று பேர் வைத்தான் என்றால்:

ஸப்த விடங்கர்கள் இருந்தாலும், 'விடங்கர்' என்ற மாத்திரத்தில் திருவாரூர் தியாகராஜாதான் நினைவு வரும். சோழ ராஜாக்களுக்கு ஆதியில் தலைநகராயிருந்தது திருவாரூர்தான். மநு நீதிச் சோழன் தன் பிள்ளையைத் தேர்க்காலில் பலிகொடுக்கப் போனது திருவாரூரில்தான் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அதனால், ராஜராஜன் தான் புதுசாக, மஹா பெரிசாக ஒரு கோவில் கட்டினபோது தன் குல மூதாதைகளையும், குலதெய்வத்தையும் நினைவு கொண்டு, மற்றவர்களும் அவர்களை நினைக்கப் பண்ண வேண்டும் என்றே 'தக்ஷிண மேரு விடங்கர்' என்று ஸோமாஸ்கந்தருக்குப் பேர் வைத்தான்.

Koviloor Digital Library

சிவாலயங்களில் இரண்டு ராஜாக்கள் முக்கியம். ஒன்று நடராஜா, மற்றது தியாகராஜா என்கிற ஸோமாஸ் கந்தர். தன் பேரிலேயே இரண்டு ராஜாக்களைக் கொண் டிருந்த ராஜராஜனுக்கு 'இந்த இரண்டு ராஜாக்களிடமும் தனியான ஈடுபாடு! அதனால் ராஜராஜேச்வரத்தில் அந்த இருவருக்கும் தனியாக ஒவ்வொரு பேர் கொடுத்துச் சிறப்புச் செய்தான். தக்ஷிண மேரு என்று எந்த பிரம்மாண்ட விமானத்துக்குப் பேர் வைத்தானோ அதன் சொந்தக் காரரே இந்த ஸோமாஸ்கந்தர்தான் என்று த்வனிக்கும்படி யாக அவருக்கு 'தக்ஷிண மேரு விடங்கர்' என்று பெயரிட்டான். நடராஜாவுக்கு, தனக்கு ரொம்பப் பிடித்ததான, நாவுக்கரசர் நாவில் வந்ததான 'ஆடவல்லான்' என்ற பெயரை வைத்தான்.

ராஜராஜனின் பெருமைகளும், தலையான பெருமையும்

ராஜராஜனுக்கு எத்தனையோ பெருமை சொல் கிறார்கள். அவனுடைய வீர தீரப் பிரதாபங்களைச் சொல் கிறார்கள். பக்தியைப் பாராட்டுகிறார்கள். கோவிலுக்காக வும், மூர்த்திகளுக்காகவும், ஆபரணாதிகளுக்காகவும், நித்ய நைமித்திக வழிபாடுகளுக்காகவும், சிப்பந்திகளுக்காகவும், கலைஞர்களுக்காகவும், அவன் வாரி வாரி விட்ட ஔதாரியத்தைப் புகழ்கிறார்கள். இத்தனையையும் ஒரு detail விடாமல் கல்வெட்டில் பொறித்து வைத்ததைப் போற்றுகிறார்கள். தான் பரம சாம்பவனாக இருந்தும், பெருமாள் கோவில், புத்த விஹாரம் எல்லாவற்றையும் பேணிய மனோ விசாலத்தை ஸ்தோத்திரிக்கிறார்கள். அட்மினிஸ்ட்ரேஷனிலும் அபாரத் திறமை காட்டி, ராஜ்யத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து முடியாட்சியி லேயே குடியாட்சியாக ஊர்ச் சபைகளுக்கு நிறைய ஸ்வதந்திரம் தந்து, அதன் மெம்பர்களை ஜனநாயகக்

Koviloor Digital Library

குடவோலைத் தேர்வு முறையில் நியமிக்கப் பண்ணினதைக் கொண்டாடுகிறார்கள். நிலங்களையெல்லாம் அளந்து ரிஜிஸ்டர் பண்ணினான்; தெருக்களுக்குப் பேர் கொடுத்து door number போட்டான் என்றெல்லாம் சிலாகிக்கிறார்கள். அவனுடைய மத உணர்ச்சி, கலா ரசனை, உதார குணம், planning எல்லாவற்றுக்குமே ஒரு ரூபகமாக இந்தப் பெரிய கோவிலை அவன் கட்டினதை அவனுடைய சிகரமான சிறப்பாகப் போற்றுகிறார்கள்.

எல்லாம் பெரிசாகப் பண்ணின அந்தப் பெரியவன் ராஜராஜனிடம் எனக்கு ரொம்பப் பெரிசாகப் படுவது, அவன் 'ஆடவல்லான்', 'தக்ஷிண மேரு விடங்கன்' என்று இரண்டு பேர் வைத்தானே, அதுதான்.

ஏனென்றால் இது தமிழையும் ஸம்ஸ்கிருதத்தையும் இருகண்களாக அவன் மதித்துப் போற்றினான் என்பதற்கு அற்புதமான proof ஆகத் தெரிகிறது. நம்முடைய மஹத்தான கலாசாரத்துக்கு மாதா பிதாக்களாக இருக்கிற இந்த இரண்டுக்கும்தானே இப்போது குத்துப் பகை, வெட்டுப் பகை என்று பேதப்படுத்தி வைத்திருக்கிறது? இதைப் பார்த்து மனஸ் தாங்க முடியாமல் வேதனைப் படுகிறபோது, 'ராஜராஜனுக்குச் சிலை வைக்கிறார்கள்; அவனுடைய ஜன்ம தினமான ஐப்பசி சதயத்தில் ப்ருஹதீச்வரருக்கு மஹாபிஷேகாதிகள் பண்ணுகிறார்கள்' என்றெல்லாம் கேள்விப்பட்டால், உடனே ஒரு ஆஸ்தை, நம்பிக்கை, உத்ஸாஹம் ஏற்படுகிறது. ராஜராஜனைக் கௌரவிக்கப் புறப்பட்டு விட்டார்களோல்லியோ? ஸரி, அவன் தமிழ், ஸம்ஸ்கிருதம் இரண்டு மரபுகளையும்தானே போற்றி வளர்த்தான்? அதையும் தெரிந்து கொள்வார்கள். 'நாமும் அப்படியே செய்வதுதான் அவனுக்கு நிஜமான உத்ஸவம். பேத புத்தி போனால்தான் அவனுக்கு விழா எடுக்க நமக்கு உரிமையும் தகுதியும் உண்டு' என்றும் புரிந்து கொண்டு விடமாட்டார்களா? என்று தோன்றுகிறது.

Koviloor Digital Library

தமிழ் மகன் என்று ராஜராஜனை நன்றாகச் சிறப்பிக்கட்டும். அது வாஸ்தவம்தான். தேவாரத் திருமுறைகளை அவன்தான் கண்டெடுத்தான். அதுமட்டுமில்லாமல் ஈச்வர ஸந்நிதானத்தில் அது பிரதிபூஜா காலத்திலும் ஜீவசக்தியோடு பிரகாசித்து ஒலித்துக் கொண்டு எந்நாளும் லோகத்தில் சிரஞ்ஜீவியாக இருக்கும்படி, ஆலயங்களில் ஓதுவாமூர்த்திகளை நியமனம் பண்ணி, வழிபாட்டிலேயே ஓர் அங்கமாகத் 'திருப்பதிக விண்ணப்ப'த்தை ஆக்கினான். பெரிய கோவிலில் இப்படி ஐம்பது பேரை நியமித்திருக்கிறான். ஆனபடியால் தமிழ்ப் பண்பாட்டுக்குப் புத்துயிர் தந்தவன் என்று அவனை விசேஷிக்க ஸகல நியாயமும் உண்டு.

ஆனால் இதைமட்டும் சொன்னால் one-sidedதான்; ஒருதலைப்பக்ஷம்தான். ஸம்ஸ்கிருதத்துக்கும், வேத, வைதிக, ஆகம சம்பிரதாயங்களுக்கும் அவன் அளவிலாத மதிப் புணர்ச்சியோடு தொண்டு செய்திருப்பதையும் சேர்த்துச் சொன்னால்தான் அவனுக்குப் பூர்ண நியாயம் பண்ணினவர்களாவோம். ஆலய நிர்மாணம், பூஜை, உத்ஸவம், எல்லாம் சாஸ்திர சம்பிரதாயப்படியேதான் அவன் ஏற்பாடு பண்ணினான். மூலஸ்தானத்துக்கு நர்மதா பாணலிங்கம்தான் சிலாக்யம் என்ற சாஸ்திர விதிக்குக் கட்டுப்பட்டு, ராஜ்ய காரியம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, "அறுபா நான்கு வேளான் செட்டி" என்ற அறுபத்து நாலு பேரோடுகூட அவன் எத்தனையோ நூறு மைல்கள் போய் நர்மதையில் இத்தனாம் பெரிய லிங்கத்தைக் கண்டு, இவ்வளவு தூரம் தூக்கிக் கொண்டு வந்தான் என்று தெரிகிறது. கோயிலிலே அநேகக் கல்வெட்டுக்களைப் பொறித்தபோது, முதல் கல்வெட்டை,

ஏதத் விச்வநிருபச்ரேணி மௌலி

என்று ஸம்ஸ்கிருதத்திலேயே ஆரம்பித்திருக்கிறான்.

Koviloor Digital Library

ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்

என்றும்

வடமொழியும் தென்தமிழும் ஆனான் கண்டாய் என்றும் தேவாரத்தில் ஸ்வாமியைச் சொல்லியிருப்பதை அதே 'ஸ்பிரிட்'டில் எடுத்துக்கொண்டு, ஒரு பக்கம் ஏகப் பட்ட கனபாடிகளும், இன்னொரு பக்கத்தில் ஏகப்பட்ட ஓதுவார்களுமாக வேதமும் தேவாரமும் ஸந்நிதானத்தில் நிவேதனம் பண்ணும்படியாகச் செய்தான்.

வெள்ளைக்காரர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி

இங்கே முக்யமான ஒரு விஷயம் தெளிவு செய்யணும்.

பழைய நூல்களில் ஆரிய, திராவிட (அல்லது தமிழ்) என்று வருகிற இடங்களில் இந்த இரண்டும் வேறு வேறு ரேஸ்களைக் குறிப்பதாகக் கொள்வதற்கு இடமே இல்லை. ஒன்றேயான பாரதீய ஜன ஸமூகத்திலேயேதான் பாஷை களை வைத்து — ரேஸை வைத்து அல்ல – பஞ்ச கௌடர்கள், பஞ்ச திராவிடர்கள் என்றும் பத்து பாஷை களைப் பேசுபவர்களாகப் பாகுபாடு செய்திருந்தார்கள். இந்தப் பிரிவினைக்காரர்களின் கொள்கைப்படியே, ஒரே Dravidian stock–ஐச் சேர்ந்தவைதான் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்றும். ஆனாலும், தமிழர்கள் தெலுங்கர்கள், கன்னடர்கள் இவர்களுக்கிடையில் சம்பிரதாயங்களில் எத்தனை வித்தியாஸங்கள் ஏற்பட்டு ஒன்றொன்றும் கிளை மரபை உண்டாக்கியிருக்கிறது? தமிழிலிருந்து தோன்றியது மலையாளம். அப்படியிருந்தும் கேரளீய கலாசாரம் தமிழ் மரபுகளுக்கு வித்தியாசமாக ஏற்பட்டில்லையா? இப்படித்தான் ஸநாதன தர்ம விருக்ஷம் என்கிற ஒரே தாய் மரத்தில் ஸம்ஸ்கிருதத்தை base ஆகவும், தமிழை base ஆகவும் கொண்டு இரண்டு கிளைகள்

Koviloor Digital Library

பிரிந்தன. பிரிந்தாலும் முழுக்க வேறல்ல; வேர் ஒன்றுதான், அடிமரம் ஒன்றுதான் என்பதை மறக்காமல் அன்பில் இணைந்து பரஸ்பரம் வளர்ந்திருக்கின்றன. ராஜராஜன் முதலான தமிழ் அரசர்கள் இந்த வளர்ச்சிக்கே வளம் கொடுத்தவர்கள். வெள்ளைக்கார அரசாட்சி வந்தபின்தான் divide and rule– 'பிரித்து ஆள்வது' என்கிறார்களே — அந்தக் கொள்கைப்படி சாமர்த்தியம் செய்து, வேதத்தில் கெட்ட சக்திகளாகச் சொல்லியுள்ள தஸ்யுவிலிருந்து ஆரம்பித்து, ராமர் சண்டை போட்ட ராவணன், ஸுப்ரமண்யர் சண்டை போட்ட சூரபத்மாஸுரன் என்றிப்படி எவரை எடுத்துக்கொண்டாலும் அவர்கள் ஆரிய ரேஸுக்கு விரோதமான திராவிட ரேஸ் என்று நன்றாகக் கட்டிவிட்டார்கள், இந்த அபிப்ராயத்தை குழந்தைகள் ஸ்கூலில் படிக்கிறபோதே பாடமாக இன்ஜெக்ட் பண்ணிவிட்டார்கள். ஒரு premise–ஐ [அடிப்படைக் கருத்தை] ஒப்புக் கொண்டுவிட்டால் அப்புறம் எல்லாம் அதற்கு ஸாதகமாகவும் அநுகூலமாகவுமே தெரியும். அப்படித்தான் இப்போது நம்மவர்களே 'இரண்டு ரேஸ் தியரி'யைக் கேள்வி கேட்காமல் basic–ஆக ஒப்புக்கொண்டுவிட்டதால் நம்மவர்களுக்கே எதை எடுத்தாலும் இதற்கு அத்தாட்சி கிடைப்பதாகத் தோன்றுகிறது! இதுதான் ஸநாதனிகளை 'ஸுபர்ஸ்டீஷியஸ்' [குருட்டு நம்பிக்கைக்காரர்கள்] என்று பரிஹஸிக்கிற இன்றைய அறிஞர்கள், பகுத்தறிவுவாதிகள் ஆகியவர்களுடைய பெரிய 'ஸுபர்ஸ்டிஷ'னாக இருக்கிறது.

இப்போது நான் "ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்" என்று சொன்னதிலும், இனிமேலே நான் சொல்லப் போகிற 'ஆரியம் பாடுவது – தமிழ் பாடுவது', 'ஆரியக் கூத்து – தமிழ்க் கூத்து' என்கிறவைகளிலும் இவை ஸம்ஸ்கிருதம் – ஸம்ஸ்கிருத base-ல் உண்டான கலாசாரம்,

Koviloor Digital Library

தமிழ் - தமிழ் base-ல் உண்டான மரபு இவற்றைக் குறிப்பதேயன்றி, Race difference–ஐ அல்ல. ஒரே ரேஸின் உட்பிரிவுகளாகவே இவற்றைக் கொள்ள வேண்டும்.

பிரிந்தே போகாமல் இரண்டையும் இணைக்கிற ஐக்ய பாவத்தின் உச்சியில்தான் ராஜராஜன் தன் மனஸைக் கவர்ந்த இரண்டு மூர்த்திகளில் ஒன்றுக்கு "ஆடவல்லான்" என்ற அழகான தூய தமிழ்ப் பெயரையும், இன்னொன்றுக்கு "தக்ஷிணமேரு விடங்க" என்ற ஸ்வச்சமான ஸம்ஸ்கிருதப் பெயரையும் இட்டான். இந்த இரண்டு பெயர்களைக் கேட்டாலே, ஒரே ஈச்வரன்தான் இந்த இரு பெரும் மரபுகளுக்கும் மூலமாக இருக்கிறான் என்ற உணர்ச்சி ஏற்பட்டு, பேத புத்தி போய்விடும்.

இந்த இரண்டு பேர்களும் அன்றாட வாழ்க்கையி லேயே பிரஜைகள் எல்லாருடைய நாக்கிலும் புரண்டு, ஐக்ய பாவம் குறையாமல் செய்ய வேண்டும் என்றுதானோ என்னவோ, படி, மரக்கால் மாதிரியான அளவைகளுக்குக் கூட 'ஆடவல்லான்', 'தக்ஷிணமேரு விடங்கன்' என்றே ராஜராஜன் பெயர் கொடுத்தான்! ஈச்வரன்தான் நமக்குப் 'படி அளக்கிறான்' என்று புரிய வைக்கிற மாதிரியும் இருக்கிறது!

சாஸ்திரப்பிரகாரமே கலை வளர்ப்பு

'ராஜராஜன்', 'சிவபாத சேகரன்' என்பவை தவிர அவனுக்கு வேறு பட்டப் பெயர்களும் உண்டு. பாண்டியர் களை ஜயித்ததால், 'பாண்டிய குலாசனி' என்று ஒரு பிருதம் (விருது). 'அசனி' என்றால் வஜ்ராயுதம். 'பாண்டிய வம்சத்தைப் பிளக்கும் வஜ்ராயுதம்' என்று அர்த்தம். அநேக சோழ ராஜாக்கள் தங்களைப் பாண்டியர்களுக்கு யமனாகக் கருதி 'மதுராந்தகன்' என்று பேர் வைத்துக் கொண்டிருக் கிறார்கள். சேரர்களையும் ராஜராஜன் ஜயித்ததால்

Koviloor Digital Library

அவனுக்குக் 'கேரளாந்தகன்' என்ற பெயருண்டு. பெரிய கோவிலின் மூன்று வாசல்களில் முதலாவதற்குக் 'கேரளாந்தகன் திருவாசல்' என்றுதான் பெயர். அந்தக் கோவிலிலே அவன் போஷித்து வளர்த்த ஒரு கலை இன்றைக்குக் கேரள தேசத்தில் தான் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது! அதைப் பின்னாடி சொல்கிறேன். அவனுடைய இன்னொரு பட்டப் பெயரைச் சொல்லத் தான் வந்தேன். 'ராஜ வித்யாதரன்' என்பதே அது. வித்யை களை, கலைகளைத் தாங்கி ஆதரித்த பிரபு என்று அர்த்தம். கந்தர்வர்களோடு சேர்த்துச் சொல்லப்படுகிற தேவலோக Fine Arts நிபுணர்களான வித்யாதரர்களுக்கு நாயகன் என்றும் அர்த்தம் பண்ணிக்கொள்ளலாம்.

போஜன், விக்ரமாதித்யன், பல்லவ ராஜா மஹேந்திர வர்மா, பிற்காலத்தில் கிருஷ்ணதேவராயர் ஆகியவர்களைப் போல ராஜராஜனும் பெரிய Patron of Arts. பொழுது போக்காக மட்டும் அல்லாமல், Fine Arts என்பவை ஜீவனை refine பண்ணிப் பரமாத்மாவிடத்தில் கொண்டு போய்க் கலக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்ற பெரிய லக்ஷ்ய முள்ளவன்.

அதனால் வேதமும் திருமுறைகளும் ஓதுவது மட்டுமில்லாமல், தமிழ், ஸம்ஸ்கிருதம் இரண்டிலும் ஈச்வரபரமான வேறு பாடல்களும் பாடுவதற்கென்று ஆரியம் பாடுவோர், தமிழ் பாடுவோர் என்று இரண்டு சாராரை ராஜராஜேச்வரத்தில் நியமித்தான். ஆரியம் பாட மூன்று பேர்; தமிழ் பாட நாலு பேர்.

நடராஜா, ஆடவல்லான் என்றே பேர் வைத்துக் கொண்டிருப்பவனுக்கு டான்ஸ் வைக்க வேண்டாமா? அதையும் பெரிசாகப் பண்ணினான். பூஜையிலே பண்ண வேண்டிய அநேக உபசாரங்களில் 'ந்ருத்த-கீத-வாத்யம்' ஆகியவை சாஸ்திரத்திலேயே சொல்லப் பட்டிருக்கின்றன.

Koviloor Digital Library

சாஸ்திரப் பிரகாரம்தான் ராஜராஜன் பண்ணினானே தவிர, தான் ராஜா, தனக்குக் கலையார்வம் இருக்கிறது என்பதற்காக innovation எதுவும் செய்யவில்லை.

'ந்ருத்த-கீத-வாத்யம்' என்பதைக் கொஞ்சம் மாற்றித் தமிழ் மூதாதைகள் 'கொட்டாட்டுப் பாட்டு' என்றார்கள். 'கொட்டு' என்பது வாத்யம். தவில், மிருதங்கம் மாதிரிக் கொட்டி ஓசை எழுப்பும் வாத்யங்களுக்கு முதலில் இப்படிப் பெயர் இருந்து, அப்புறம் எல்லா வாத்யத் தினுசுகளையும் குறிப்பதாகிவிட்டிருக்கலாம். 'ஆட்டு' என்பது நிருத்தம். அதாவது டான்ஸ். 'பாட்டு' – கீதம் என்று உங்களுக்கே தெரியும்.

'ஆட்டு' என்பதைப் பொதுவாகக் 'கூத்து' என்றார்கள். நடராஜாவுக்கு நேர்த் தமிழ் 'கூத்தப்பிரான்' என்பது. இந்தக் கூத்துக்காகப் பெரிய கோவிலில் நானூறு பெண்டுகளை நியமித்து, மற்றவர்களைப் போலவே அவர்களுக்கும் பொன், பொருள், ஜாகை வசதி எல்லாம் செய்து கொடுத்தான். ஆண்களிலும் நிருத்தாச்சாரியர் என்று இருந்த அநேக நாட்டியக்காரர்களைக் கோவில் ஸேவையில் நியமித்தான். இந்த ஆண் நாட்டியக்காரர்கள் குறிப்பாக நாடகத்தில் தேர்ச்சி பெற்றவராவர்.

சாந்திக் கூத்து; கதகளிக்கு மூலம்

கொட்டு-ஆட்டு-பாட்டு மூன்றிலும் வ்யுத்பன்னனாக [விற்பன்னனாக] இருப்பவன்தான் நிருத்தாசார்யன் எனப்படுவான். இப்படி ராஜராஜன் அப்பாயிண்ட் பண்ணின நாலுபேரில் ஒருத்தனுக்குத் **திருவள்ளறைச் சாக்கை** என்று பேர். இவன் 'மறைக்காடன்' – அதாவது வேதாரண்யத்தைச் சேர்ந்தவன். பாக்கி மூன்று பேரில் இருவர் 'ஒற்றியூரான்' எனப்படுகிறார்கள். அதாவது,

Koviloor Digital Library

தஞ்சாவூருக்கு இருநூறு மைல் தள்ளி தொண்டை மண்டலத்தில் நம் மெட்றாஸைச் சேர்ந்தாற் போலிருக்கிற திருவொற்றியூர்க்காரர்கள். 'சாக்கை' என்ற பேரையும், ஒற்றியூர் ஸமாசாரத்தையும் நான் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணமுண்டு.

திருவொற்றியூரில் பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மண்டபம் ஒன்று இருக்கிறது. அதிலே டான்ஸ் ஆடுகிற புருஷன் ஒருத்தனின் சிற்பம் இருக்கிறது. அவனுடைய ட்ரெஸ்ஸைப் பார்த்தால் ஆச்சரியமா யிருக்கிறது. இந்தக் காலத்தில் மலையாளக் கதகளிக் காரர்கள் தலையில் பெரிசாக ஒரு தினுஸூச் சும்மாடு வைத்துக் கொண்டிருக்கிறார்களே, அதே மாதிரி இவன் வைத்துக் கொண்டிருக்கிறான். கதகளிக்காரன் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் கத்தி மாதிரியே இவன் கையிலும் இருக்கிறது!

தமிழறிஞர்களிடம் இதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டதில், கதகளிக்கு ஜன்மபூமி தமிழ் தேசந்தான் என்று எனக்குத் தீர்மானம் ஏற்பட்டிருக்கிறது. பூர்வத்தில் மலையாளம் தமிழ்நாட்டின் ஒரு பகுதியான சேரநாடாகத் தான் இருந்தது. தமிழ்நாட்டின் கதகளி பிற்காலத்தில் அங்கே மாத்திரம் தங்கிவிட்டிருக்கிறது. 'கதகளி' என்பது 'கதை-களி' என்ற இரண்டு வார்த்தைகளின் கூட்டு. கதை என்றால் கதைதான். 'களி' என்பது டான்ஸாகிய கூத்துக்கே தமிழில் வழங்கிய இன்னொரு பெயர். கூத்தனான நடராஜாவின் favourite நைவேத்யத்துக்கு இதனால்தான் களி, திருவாதிரைக் களி என்றே பேர் வைத்துவிட்டாற் போலிருக்கிறது! ஒன்றுக் கொன்று ஸம்பந்தமில்லாத தனிப் பாடல்களுக்கு டான்ஸ் என்றில்லாமல், ஒரே பெரிய கதையை நாட்ய த்வாரா விளக்கி ஆடுகிற dance drama என்பதே 'கதகளி' என்பதன் அர்த்தம்.

Koviloor Digital Library

கதகளிக்காரனின் டர்பன், தோடு, மூஞ்சியில் அவன் அப்பிக்கொள்கிற கலர்ப் பூச்சு, இதுகளோடு அவன் மாதிரியே கத்தியைப் பிடித்துக் கொண்டு ஆடுகிற டான்ஸ் தமிழ் நாட்டில் ஆதியிலேயே இருந்திருக்கிறது. உக்ரகாளி யோடு ஈச்வரன் நாட்டியப் போட்டி நடத்தி, ஊர்த்வ தாண்டவம் செய்து அவளை அபஜயப்படுத்தி, அவளுடைய உக்ரத்தை சாந்தமாக்கினதைப் பண்டையத் தமிழ் நூலில் சாந்திக்கூத்து என்று சொல்லியிருக்கிறது. அதுதான் கதகளிக்கு மூலம்.

வாசிகை பூண்டு, மணித்தோடணியணிந்து
பூசிய சுண்ணம் முகத்தெழுதி
தேசுடனே ஏந்து சுடர்வாள் பிடித்திட்(டு)
ஈசனுக்கும் காளிக்கும் சாந்திக் கூத்தாடத்தகும்.

'வாசிகை' என்பது டர்பன்; 'முகத்துப் பூசிய சுண்ணம்' என்பது மூஞ்சியில் அப்பிக்கொள்கிற கலர்ப் பூச்சு.

மலையாள நம்பூதிரி வம்சத்தில் அவதரித்த ஸ்ரீ சங்கர பகவத்பாதாளுக்குத் திருவொற்றியூருடன் நெருங்கின ஸம்பந்தமுண்டு. அங்கே திரிபுரஸுந்தரிக்கு யந்திர ஸ்தாபனம் செய்திருக்கிறார். இன்றைக்கும் அம்மன் கோயில் அர்ச்சகர்களாக நம்பூதிரிகளே இருக்கிறார்கள். இப்போது மலையாளத்தில் மட்டும் தங்கிவிட்ட கதகளி ஆயிரம் வர்ஷம் முந்தி ராஜராஜன் நாளில் தமிழ் நாட்டுக் குள்ளேயே மற்ற இடங்களைவிடத் திருவொற்றியூரில் ரொம்பப் பொலிவோடு இருந்திருக்கிறது.

'சாந்திக் கூத்து' என்றது காளியைச் சாந்தப் படுத்தினது மட்டுமில்லை. அதைக் கொஞ்சம் எக்ஸ்ப்ளெயின் செய்கிறேன்.

பலவிதக் கூத்துகள்

பழந்தமிழ்நாட்டில் நாட்டிய – நாடகாதிகளை சாந்திக் கூத்து, விநோதக் கூத்து என்ற இரு பெரும்

Koviloor Digital Library

பிரிவுகளாகவே பிரித்திருந்தார்கள். கொஞ்சம் வேடிக்கை, விளையாட்டு, விநோத ரஸம் இருக்கும்படியாக உள்ளது விநோதக் கூத்து. பொம்மலாட்டம், கழைக்கூத்து இவையும், குடத்தைத் தலையில் பாலன்ஸ் பண்ணிக்கொண்டே ஆடுகிற குடக் கூத்தும் இந்த வகையைச் சேர்ந்ததே.

இதைவிட ஸீரியஸானது சாந்திக் கூத்து. அதிலே நாலு ஸப்-டிவிஷன்கள்.

முதலாவது **சொக்கம்.** சுத்த ந்ருத்தம் என்பதும் இதுதான். பாட்டுக்கு அபிநயமாக இல்லாமல் தில்லானா, ஜதிஸ்வரம் போல பலவித அடவுகளைப் பிடித்து, மனஸை உயர்த்துகிற விதத்தில் கலா ஸௌந்தர்யத்தோடு கௌரவ மாக உடம்பு, கை, கால்களை வளைத்துக் காட்டுவதுதான் சொக்கம். இது பரத சாஸ்திரத்திலுள்ள 108 கரணங்களை ஆதாரமாகக் கொண்டது. பிருஹதீச்வரத்தில் கர்ப்ப கிருஹத்தைச் சுற்றி வரும்போது, விமானத்தின் இரண்டாம் தளத்தில், ஸாக்ஷாத் பரமேச்வரனே இந்த 108 கரணங்களை ஆடிக்காட்டுவதாகச் சில்பங்கள் அமைத்திருப்பதைப் பார்க்கலாம்.

இரண்டாவது, **மெய்க்கூத்து.** இது அகத்துறை, அகமார்க்கம் எனப்பட்ட ச்ருங்கார ரஸத்தை ஒரு தூக்குத் தூக்கி ஜீவாத்ம - பரமாத்ம ஐக்யமான நாயக-நாயிகா பாவத்தில் ஆடுவது. தேவாரம், திருவாசகம், திருக்கோவை யார், திவ்யப் பிரபந்தம் எல்லாவற்றிலுமே இப்படிப்பட்ட அக மார்க்கப் பாடல்கள் இருக்கின்றன.

மூன்றாவது **அவிநயம்.** அவிநயம் என்றால் இங்கே 'விநயமில்லாதது' என்று அர்த்தமில்லை. 'அபிநயம்' என்பதே தமிழ் மொழிப் பண்புப்படி அவிநயமாயிருக்கிறது. ச்ருங்காரம் மட்டுமின்றி நவரஸங்களையும் காட்டும் தனிப் பாட்டுக்களுக்கு அபிநயம் செய்து காட்டுவது இதன் கீழ் வரும்.

Koviloor Digital Library

நாலாவதுதான் **நாடகம்.** அதாவது ஒரு பெரிய கதையை எடுத்துக் கொண்டு அதை ஆடல் பாடல்களாக நடித்துக் காட்டுவது. இந்த நாடகத்திலும் மேலும் இரண்டு உட்பிரிவு உண்டு. ஸம்ஸ்கிருதத்தில் உள்ள கதைகளைத் தழுவி நடிக்கிறவைகளுக்கு **ஆரியக் கூத்து** என்றும், தமிழ்க் கதைகளை நடித்துக் காட்டுவதற்குத் **தமிழ்க் கூத்து** என்றும் பெயரிட்டு, இரண்டாகப் பிரித்தார்கள். "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்திலேயே கண்" என்று வசனமே இருக்கிறபடியால், ஸம்ஸ்கிருத கதா நாடகங்கள் அக்காலத்தில் எவ்வளவு பஹுஜனப் பிராபல்யம் – mass attraction – பெற்றிருந்தன என்று தெரிகிறது. அந்த பாஷை, இந்த பாஷை என்ற பேதம் தெரியாமல் அன்பு மயமாக இருந்த நாள்!

இப்படி வகைப்படுத்தின சாந்திக் கூத்திலே பலவித ரஸ பேதங்கள், உணர்ச்சிப் போராட்டங்கள் இருந்தாலும், முடிந்த முடிவாக அது மனஸைச் சாந்தப்படுத்தவே செய்யும். அதனால்தான் "சாந்திக் கூத்து" என்று பேர். இந்த நாளில் excite பண்ணுவதுதான் entertainment என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாளிலோ elevate பண்ணுவதுதான் entertainment என்று தெரிந்து கொண்டு, எத்தனைதான் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டாலும் முடிவாக ஆத்மார்த்தமானதாக்கி, சாந்தத்தில் அடங்கச் செய்தார்கள். நடராஜாவின் ஆட்டமெல்லாம் தக்ஷிணா மூர்த்தியின் சாந்தத்தில் நிறையும்படி பண்ணினார்கள். "சாந்தம் சிவம்" என்றுதானே உபநிஷத்தே அவனைச் சொல்கிறது?

இந்த சாந்திக் கூத்தைச் சேர்ந்த ஆரியக் கூத்தில், 'சேதம்' என்பது ஒரு வகை. புராணக் கதைகளை ஸ்வாரஸ்யத்துக்காகக் கொஞ்சம் மாற்றிக் கொள்வது– adapt செய்து கொள்வது – என்று ஒரு வழக்கம் இருக்கிறதல்லவா? மூல

Koviloor Digital Library

ரூபத்தையே சிதைத்து, ஸ்வாரஸ்யம் என்ற பெயரில் விரஸத்தை உண்டு பண்ணாத வரையில் இதை அநுமதிக்க லாம். இப்படிப் பூர்விகத் தமிழர்கள் அநுமதி தந்தார்கள். இருந்தாலும் இந்த adapted versionஐயே 'அதாரிடி' உள்ள மூலம் என்று எவனும் நினைத்துவிடக் கூடாது என்று கருதி, 'இது மூலம் இல்லை; அதன் சேதம் தான்' என்று புரிய வைக்கிறதற்காக, adapted play க்களுக்குச் 'சேதம்' என்றே பேர் வைத்தார்கள். இதுவே ஸம்ஸ்கிருதப் பேர்தான். சேதித்தது, வெட்டி கொட்டி மாற்றினது என்று அர்த்தம். இப்படி ஸம்ஸ்கிருத புராண, காவிய, நாடகாதிகளைச் சேதித்து ஆடினவனுக்குத்தான் சாக்கை என்று பேர். முன்னே, திருவெள்ளறைச் சாக்கை என்பவனை ராஜராஜன் நியமித்ததாகச் சொன்னது ஞாபகமிருக்கிற தோல்லியோ?

'சேதம்' என்ற கூத்து வகை ரொம்பவும் ஆதிநாளி லிருந்தே இருந்திருக்கிறது. பரமேச்வரன் திரிபுரதஹனம் பண்ணின ஸம்ஸ்கிருதக் கதையைக் 'கொட்டிச் சேதம்' என்ற பெயரில் adapt பண்ணி, பறையூர்க் கூத்தச் சாக்கையன் என்பவன் சேரன் செங்குட்டுவனுக்கு முன்னால் ஆடிக் காட்டினான் என்று சிலப்பதிகாரத் திலேயே வருகிறது.

சாக்கை, சாக்கையன் என்பது ஒருமை. பன்மையில் இந்த ஆட்டக்காரர்களைச் சாக்கையர் என்பார்கள்.

கதகளி போலவே மலையாளத்தில் இப்போதும் பிரஸித்தமாயுள்ள ஒரு நாட்டிய நாடக வகைக்கு சாக்கியார் கூத்து என்றே பெயர் சொல்கிறார்கள். நம்முடைய மடத்து [ஆகம, சில்ப, கிராமியக் கலை] ஸதஸ்களில்கூட சாக்கியர்கள் என்கப்பட்ட கேரள தேசத்து ஆர்டிஸ்ட்கள் வந்து சாக்கியார் கூத்து நடத்தியிருக்கிறார்கள். இது முழுக்க மலையாள பாஷையில் இல்லாமல், ஆரியக் கூத்து வகை

Koviloor Digital Library

என்பதை நிரூபிக்கும் வகையில், முதலில் ஸம்ஸ்கிருத ச்லோகங்களைப் பாடுகிறார்கள். அப்புறம் அதை விளக்கி ஸம்ஸ்கிருதம் கலந்த மலையாள மணிப்ரவாள பாஷையில் கானம் பண்ணிக்கொண்டு டான்ஸ் செய்கிறார்கள்.

ஒரே கல்லில் மூன்று மாங்காய்

தமிழ் தேசத்தில் பூர்வகாலத்தில் ஆரியக்கூத்து இப்படி ஸம்ஸ்கிருதம், தமிழ் இரண்டையும் இணைத்துத் தருவதாக இருந்திருக்கலாம். இப்போது ஒன்றிடம் மட்டும் அதிப்பிரியம், மற்றதிடம் தீவிர த்வேஷம் என்று இருக்கிற துர்பாக்ய ஸ்திதியில் அந்த ஆரியக் கூத்தை யாராவது 'ரிவைவ்' பண்ண மாட்டார்களா என்றிருக்கிறது. டான்ஸ் டிராமா – அதுவும் கதகளி மாதிரி நூதன வேஷத்திலே என்றால் நிச்சயமாக ஜனங்களை ஆகர்ஷிக்கும். அந்தக் கவர்ச்சிக்காகவே இரண்டு பாஷா ஞானமும் ஸம்பாதித்துக் கொள்ளத் தோன்றும். இதிலிருந்து தன்னால் பேதமும் த்வேஷமும் போய்விடும். டிராமாவின் கதையும் கன்னா பின்னா social themeகளாக இல்லாமல் தெய்வபரமாக இருப்பதால் ஆத்மாவை உசத்திக் கொள்ளவும் உபாயமாயிருக்கும். நல்ல கலை அழகோடு பொழுது போக்குக்குப் பொழுதுபோக்கு; தெய்வ பரமான சிந்தனை; பாஷைப் பிணக்கு போவது – இப்படி ஒரே கல்லில் இரண்டில்லை, மூன்று மாங்காய்!

ராஜராஜன் பெரிய கோவிலில் தினமும் ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து இரண்டும் நடக்கும்படி ஏற்பாடு செய்திருந்தான். இப்போது அவனுக்கு விழா எடுக்கிறவர் கள் இதற்குப் புத்துயிர் தர ஏதாவது பண்ணினால், இந்த தெய்வத் தமிழ் நாட்டைப் பீடித்துக் களங்கப்படுத்தி வருகிற பேதம் போவதற்கு ஒரு வழி கோலியதாக இருக்கும்.

Koviloor Digital Library

கலை மூலம் கடவுள்

தேவார - வேத ஓதுவிப்பு; ஆரியம் - தமிழ் பாடுவது; ஆரியக் கூத்து - தமிழ்க் கூத்து ஆடுவது; இது தவிர வெறும் டான்ஸ் என்றிப்படி வெகு லகுவாகவும், லளிதமாகவும், ஆயாஸமான ஸாதனை எதுவுமில்லாமல், ஜனங்களுக் கெல்லாம் கலை மூலம் கடவுளைக் காட்டிக் கொடுத்த பரமோபகாரி ராஜராஜன்.

அவனைப் பற்றி நாம் பெருமைப்படுகிறோ மென்றால், அவனைப் பெருமைப்படுத்தி விழா நடத்து கிறோமென்றால் அவனுக்கிருந்த தெய்வ பக்தியையும், பாரத கலாசாரத்தின் இரண்டு கிளை மரபுகளிலும் அவனுக்கிருந்த ஸமமான கௌரவ புத்தியையும் நாமும் பெற வேண்டும். அவன் எதையும் grand scaleல் செய்ய முடிந்ததென்றால் அதற்குக் காரணமே இந்த இரண்டும் தான்.

கலைகளை நெறிகெட்டுப் போவதற்கு வழியாக்கா மல் ஈச்வரபரமாக்கி, ஈச்வரார்ப்பணம் பண்ணுவித்து, ஜனங்களும் இதனால் அரன் குடிமக்களாக, பாஷை முதலான பேதங்களின்றி அன்பிலே ஒன்று சேர்ந்திருக்கும் படி செய்வதற்கு அந்த சிவ பாத சேகரன் போட்டுக் கொடுத்திருக்கிற பாதையிலே போவோம்.

Koviloor Digital Library

தமிழ்த் தாத்தாக்களும் தமிழ்ப் பாட்டிகளும் காஞ்சி ஸ்ரீமடமும்

ஐயர்களில் ஓர் உ.வே

ஸ்ரீவைஷ்ணவர்களில் பெரியவர்களாக இருக்கப் பட்டவர்களின் பேருக்கு முன்னால் 'உ. வே.' என்று போடுவார்கள். இது 'உபய வேதாந்த' என்ற வார்த்தை களுக்குச் சுருக்கமாகும். ஸ்ரீ ராமாநுஜ ஸம்ப்ரதாயத்தில் தமிழுக்கும் ஏற்றம் கொடுத்து, ரிஷிகள் ஸம்ஸ்கிருதத்தில் கொடுத்துள்ள வேதாந்த சாஸ்திரத்தைப் போலவே ஆழ்வார்கள் **"வேதம் தமிழ் செய்து"** கொடுத்திருக்கும் திவ்ய ப்ரபந்தத்திலும் அந்த ஸம்ப்ரதாயஸ்தர்கள் நல்ல தேர்ச்சி பெற வேண்டுமென்று வைத்திருக்கிறது. 'உபயம்' என்றால் இரண்டை, இரட்டையைக் குறிப்பது. ரிஷி ப்ரபந்தம், ஆழ்வார் ப்ரபந்தம் என்று இரண்டு பாஷைகளில் உள்ள வேதாந்தத்திலும் நல்ல ஞானம் பெற்றவர்கள் என்ற அர்த்தத்தில் தங்களுடைய பெரியவர்களுக்கு 'உபய வேதாந்த' என்று மரியாதையாக அடைமொழி போடுகிறார்கள். அதன் 'அப்ரிவியேஷன்' தான் 'உ.வே.'

இம்மாதிரி ஸ்ரீ சங்கர ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்மார்த்தர்-[ஐயர்]-களிலும் உபய வேதாந்தியாக இருக்கிற ஒரே ஒருவர்தான் உ.வே. ஸ்வாமிநாதையர் என்று யாராவது நினைத்தால் அது தப்பு. ஸ்வாமிநாதையருக்கு தமிழ் ஒன்று தான் பேச்சு, மூச்சு, நினைப்பு எல்லாம். ரிஷி ப்ரபந்தத்தில் அவருக்கு ஈடுபாடு இல்லை. தமிழிலும் கூட, அந்த

Koviloor Digital Library

பாஷைக்காகவே, பொதுப்படையான அதன் இலக்கியத்துக் காகவே இதயத்தைக் கொடுத்தவரே தவிர ஆழ்வார் ப்ரபந்தத்தில் தனிப்பட்ட பிடிமானம் கொண்டவரில்லை. பக்தி என்று வரும் போதும் பரம சாம்பவராகவே [சிவ பக்தராகவே] இருந்தார். ஆனபடியால் வைஷ்ணவர்கள் சொல்லும் 'உ.வே.' பட்டம் இவருக்குக் கிடைப்பதற்கு நியாயமில்லை. பின்னே என்ன 'உ.வே.' என்றால், அவை இவருடைய இனிஷியல்கள்தான். அவர் பிறந்த ஊர் உத்தமதானபுரம். அவருடைய பிதா வேங்கடஸுப்பையர்.

ஓடி ஓடி ஜன்மப்பணி செய்த இருவர்

இவரைக் கொஞ்சம் நிஜமாகவே 'உபய வேதாந்த' மாக்க வேண்டுமென்று எனக்கு ஆசை. இப்படிச் சொல்வதால் இவரை அத்யயனம் பண்ண வைக்கணும், ஆழ்வார் பாசுரங்கள் ஓத வைக்கணும் என்று ஆசைப் பட்டதாக அர்த்தமில்லை. தமிழுக்கென்று சிறப்பாக இருக்கிற மரபு, அதையும் தழுவுவதாக தேசம் பூராவுக்கும் பொதுவாக ஸம்ஸ்க்ருதத்தை முக்யமான கருவியாகக் கொண்டு உருவாயிருக்கும் ஸமயாசார அநுஷ்டானங்கள் – ஆகிய இரண்டிலுமே ஆழ்ந்த அபிமானமும், இரண்டிலுமே ஓரளவு அறிவும் இருப்பதுதான் நான் ஆசைப்படும் 'உபய வேதாந்தம்'. ஸகல தமிழ் ஜனங்கள் விஷயமாகவும் எனக்கு இந்த ஆசை உண்டு. 'புலவருலகத்திலே அஸாதாரணமான யோக்யதாம்சமும், மதிப்பும் பெற்ற உ.வே. ஐயர் போலுள்ளவர்கள் நல்ல தெய்வ பக்தியுடன் இருப்பதோடு நின்று விடாமல், ஸநாதன ஸமயாசார ஸம்ப்ரதாயத்தை ஏதோ மேலெழுந்தவாரியாகப் பின்பற்றுவதுடன் நின்று விடாமல், கெட்டியாக அதில் பிடிமானம் கொள்ள வேண்டும். அதற்குப் புனர் ஜீவன் ஊட்டிய ஆசார்யாளிடம் பக்தி வைக்க வேண்டும். இப்படிச்

Koviloor Digital Library

செய்தால் அது தமிழறிஞர் உலகத்துக்கே உதாரணமாயும் வழிகாட்டியாயும் இருக்கும்' என்று எனக்கு ஆசை. ஏனென்றால், எப்படி ஆதியில் தமிழுலகம் முழுவதும் ஒரு பாட்டியைப் பின் தொடர்ந்தே போயிற்றோ — ஔவைப் பாட்டியைத்தான் சொல்கிறேன் — அப்படி இந்த நூற்றாண்டில் தமிழில் புலவருலகம் ஒருவர் பின்னால் போயிற்று என்றால், அது 'தமிழ்த் தாத்தா' என்றே போற்றப் பட்ட ஸ்வாமிநாதையரைத்தான்.

காரைக்கால் அம்மையாருக்குப் பெருமை ஸாக்ஷாத் ஈச்வரனே அவளை "அம்மா!" என்று கூப்பிட்டது. அப்படி ஔவைப் பாட்டிக்குப் பெருமை ஈச்வர குமாரனான முருகனே அவளைப் "பாட்டி" என்று கூப்பிட்டு, "சுட்ட பழம் வேணுமா? சுடாத பழம் வேணுமா?" கேட்டதுதான். அறிவிலே ஸரஸ்வதி அவதாரமாக இருந்த ஔவைப் பாட்டியையே கொஞ்சம் அசடாக்கி, அதனால் வித்யை யோடு விநயமும் அவளிடம் சேரும்படி சிவகுமாரர்களில் சின்னவர் செய்தார். தாழ்மையிலே உள்ள ஸௌக்யத்தை அவள் தெரிந்து கொள்ளும்படியாக அருள் செய்தார்.

சிவகுமாரர்களில் பெரியவரான பிள்ளையார் என்ன செய்தாரென்றால் இப்படி விநயத்தோடு தாழ்ந்து இருந்தவளைத் தம்முடைய தும்பிக்கையால் ஒரே தூக்காகத் தூக்கி உயர்த்தி, சிவலோகமான கைலாஸத்திலேயே சேர்த்து விட்டார். ஸாதாரணமாக ஒரு பேரப்பிள்ளை பாட்டியைக் கையைப் பிடித்து வண்டியிலே, ரயிலிலே ஏற்றி இறக்கி, ஊருக்கு அழைத்துக் கொண்டு போகுமென்றால், ஔவைப் பாட்டியைப் பிள்ளையார்க் குழந்தை இந்த உலகத்திலிருந்தே பரலோகத்துக்குக் கொண்டு சேர்த்து விட்டது!

பாட்டி, தாத்தாவைப் பேரன் பிடித்து அழைத்துக் கொண்டு போவது அவனுக்குக் கொஞ்சம் வயசு வந்த

Koviloor Digital Library

அப்புறம். ரொம்பக் குழந்தையாக நடக்கக் கற்றுக்கொள்கிற போது அந்தப் பேரப்பிள்ளைதான் தாத்தாவுக்கோ, பாட்டிக்கோ பின்னால் போய் நடை பழகிக் கொள்வது. கைத்தடி வைத்துக் கொண்டு போகிற கிழங்களின் 'ஸ்பீடை'த்தான் நடைவண்டி தள்ளிக் கொண்டு போகும் குழந்தை பின்பற்ற முடியும். ஆனால் அன்றைக்குத் தமிழ்ப் பாட்டி ஒளவைக்குப் பின்னாலும், இன்றைக்குத் தமிழ்த் தாத்தா ஸ்வாமிநாதையருக்குப் பின்னாலும் தமிழுலகம் போயிற்று என்றாலும், அவர்கள் தங்களுடைய பணியிலே காட்டிய 'ஸ்பீடை' யாரும் பின்பற்ற முடியாது! இரண்டு பேருமே அப்படிச் சுறுசுறுப்பாக, நின்ற இடத்தில் நிற்காமல் ஓடி ஓடித் தங்கள் ஜன்மப் பணியைச் செய்தவர்கள்.

ஆத்திசூடி

ஒளவையார் தானே தர்ம போதனை பண்ணினவள். குழந்தைகள்தான் நாட்டுக்கு விதைமுதல். அவர்களை ஸரி செய்து விட்டால் எல்லாம் ஸரியாகி விடுமென்பதால் அவர்களை முன்னிட்டே நீதி நூல்களை இயற்றித் தந்தாள். வேத தர்மத்தை, மநு தர்மத்தையே குழந்தைகளுக்குக் குட்டிக் குட்டிப் போதனைகளாகக் கொடுத்தாள். நம் மதத்துக்கு அச்சாணி, 'தர்மம்' என்ற கொள்கை. இதையே தமிழில் 'அறம்' என்பது. இதை வைத்தே ஒளவை "அறம் செய விரும்பு" என்று ஆத்திசூடியை ஆரம்பித்திருக்கிறாள். "தர்மம் சர" – "அறத்தைச் செய்" – என்பது வேத கட்டளை. 'பூர்ண அதிகார ஸ்தானத்திலுள்ள வேதம் கட்டளை போடலாம்; கிழப்பாட்டி நாம் போடலாமா?' என்று ஒளவை அடக்கத்தோடு நினைத்தாள். அதனால், 'இஷ்டமிருக்கிறதோ இல்லையோ, தர்மம் பண்ணித்தான் ஆகணும்' என்று கட்டளை போட்டுக் 'கம்பெல்' செய்வதாக "அறம் செய்" என்று சொல்லாமல், "நீயாக இஷ்டப்பட்டு

Koviloor Digital Library

அறம் பண்ணேன்!" என்று குழந்தைகளை 'நைஸ்' பண்ணும் விதத்தில் "அறம் செய விரும்பு" என உபதேசித்திருக்கிறாள்!

'ஆத்திசூடி' என்று இந்த நூலுக்கு ஏன் பேர் என்றால், அது பரமேச்வரனுடைய ஒரு பேர். எந்த போதனைக்கும் முந்தி வரும் முதல் போதனை, பரமாத்மாவை நினைக்கப் பண்ணுவது. நம்முடைய கலாசாரத்தில் அவனை ஸ்மரிக்கப் பண்ணாமல் எதையும் எழுத ஆரம்பிக்கும் வழக்கமில்லை. சிருங்கார ரஸ ப்ரதானமான நாடகமானால் கூட அதன் ஆரம்பத்தில் பகவானை நமஸ்காரம் பண்ணும் 'மங்கள ச்லோகம்' இருக்கும். விஷயமறிந்தவர்கள் இதை 'நாந்தி' என்பார்கள். தமிழிலும் 'கடவுள் வாழ்த்து' இல்லாத நூலே கிடையாது. தமிழ் மக்கள் படிக்கும் முதல் நூலான 'ஆத்திசூடி'யின் ஆரம்பத்தில் பரமேச்வரனை "ஆத்திசூடி" என்று குறிப்பிட்டு ஒளவை கடவுள் வணக்கம் செலுத்தியிருக்கிறாள்.

ஈச்வர சிரஸிலே உள்ள அநேக வஸ்துக்களில் பிறைச் சந்திரன், கங்கை, நாகம், கபாலம் முதலானவற்றோடு கொன்றை, ஆத்தி ஆகிய புஷ்பங்களும் இடம்பெறுகின்றன. இவற்றில் பிறைச் சந்திரன் விசேஷமானது. அது நிரம்பவும் அழகானது என்பதோடு ஈச்வரனின் அருள் மனஸைக் காட்டுவதாகவும் இருக்கிறது. யாரையாவது ரொம்பக் கொண்டாடினால், "தலைக்கு மேலே தூக்கி வெச்சுண்டு கூத்தாடறார்" என்கிறோம். பாபம் பண்ணிய சந்திரன், அதனால் தேய்ந்து மாய்ந்து போய், அப்புறம் கொஞ்சம் பச்சாத்தாபப்பட்டுப் பரமேச்வரனின் காலில் விழுந்தவுடன், அவர் வாஸ்தவமாகவே அவனைத் தூக்கித் தம் தலைக்கு மேல் வைத்துக் கொண்டு ஆனந்தத் தாண்டவ கூத்தாடியிருக்கிறார்! அந்தக் கோலத்தைத்தான் 'சந்த்ர மௌளீச்வர்' என்று சொல்கிறோம். அந்த சந்த்ரமௌளீச்வரர் நம் மடத்தின் ஸ்வாமி.

Koviloor Digital Library

இவரை நினைப்பூட்டுவது 'ஆத்திசூடி' என்ற பெயர். எப்படியென்றால், ஆத்திப் பூவானது வடிவமைப்பில் அசல் பிறைச் சந்திரன் போலவே இருக்கும். வர்ணத்திலும் அது கொன்றைப் பூவைப்போல் ஆழ்ந்த பவுன் மஞ்சளாக இல்லாமல் நிலா மாதிரி இளமஞ்சளாக இருப்பதாகும். 'அகஸ்தி' என்பதுதான் 'ஆத்தி'யாகியிருக்கிறது. 'ஆத்தி' என்பதைவிடவும் 'அகஸ்தி' என்ற மூல வார்த்தையை தெளிவாகத் தெரிவிப்பதாக 'அகத்திக்கீரை' என்றும் சொல்கிறோம். பசுவுக்கும் பரமப்ரியமான இந்த ஆத்தி என்ற பரம ஔஷதத்தை அகஸ்த்ய மஹரிஷிதான் முதலில் லோகத்துக்கு கொண்டு வந்தாரோ என்னவோ? பரமேச்வரனிடமிருந்து தமிழ் என்ற அம்ருதத்தைக் கொண்டு வந்து கொடுத்த அவரையும் குழந்தைகள் எடுத்த எடுப்பில் நினைக்கட்டும் என்றே, ஈச்வரனுக்கு எத்தனையோ நாமாக்கள் இருந்தாலும், தமிழ்ப் பாட்டி 'ஆத்திசூடி' என்று ஆரம்பித்திருக்கிறாள் போலிருக்கிறது. நம்முடைய மடத்து சந்த்ர மௌளீச்வரரையும் அது ஞாபகப்படுத்துவதால் எனக்கு ஒரு ஸந்தோஷம், ஒரு பெருமை.

தமிழ் வித்வான்களும் ஸ்ரீமடமும்

எப்படியாவது தமிழ்ப் பெரியார்களுக்கெல்லாம் மடத்திலே ஒரு ஸம்பந்தம் ஏற்படுத்திப் பார்ப்பதில் எனக்கு ஒரு த்ருப்தி. ஏனென்றால், நம் மடம் என்றால் வெளியிலே என்ன நினைக்கிறார்கள்? அங்கே ஸம்ஸ்க்ருதத்துக்குத்தான் எல்லா முக்யமும் என்றே நினைக்கிறார்கள். வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் 'உபய வேதாந்தம்' என்று ஸம்ஸ்க்ருதம், தமிழ் இரண்டையும் போஷிக்கிறாற்போல, இந்த ஸ்மார்த்த மடத்தில் இல்லையே என்று நினைக்கிறார்கள். இதற்கு ஹிஸ்டாரிகலாக ஒரு காரணம் உண்டு. ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் 'ஆல் இண்டியா பேஸிஸி'லேயே [அகில இந்திய

Koviloor Digital Library

அடிப்படையிலேயே] தம்முடைய அவதார கார்யத்தைச் செய்தவர். இந்தப் பெரிய தேசத்தின் தக்ஷிணத்தில் காஞ்சீ புரத்திலும், ச்ருங்கேரியிலும் செய்தாற்போலவே வடக்கு-மேற்கு-கிழக்கு எல்லைகளிலும் முறையே பதரி, த்வாரகை புரி ஜகந்நாதம் ஆகிய இடங்களிலும் அவர் மடங்கள் ஸ்தாபித்து, இன்றளவும் அந்தப் பீடங்களில் ஆசார்யர்கள் இருந்து வருகிறார்கள். ஆகையினால் எந்த ஒரு பிரதேசத்தையும் சேர்ந்ததாக இன்றி, தேசம் பூராவுக்கும் உள்ள ஸகல வேத - சாஸ்த்ரங்களுக்கும் உரிய ஸம்ஸ்க்ருதத்தோடு மாத்திரம் சங்கர மடங்களுக்கு விசேஷ ஸம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் நம்முடைய மடத்துக்குத் தமிழ் ஸம்பந்தமும் இல்லாமல் போய் விடவில்லை. அந்தந்தக் காலத்தில் இருந்து வந்திருக்கிற ஆசார்யர்களிடம் தமிழ்ப் புலவர்கள் தங்கள் புலமையைத் தெரிவித்துக் காட்டி ப்ரஸாதம், ஸம்பாவனை பெற்றுப் போயிருக்கிறார்கள். ஸ்வாமிநாதையரே சொல்லியிருக்கி றார் – அவருடைய இளவயஸிலே, அவருக்குப் பதினெட்டு இருபது வயசு இருக்கிறபோது, அதாவது இந்த 20-ஆம் நூற்றாண்டு பிறப்பதற்கு இருபது இருபத்தைந்து வருஷம் முந்திகூட அவர் நம்முடைய மடத்துக்கு வந்திருக்கிறார். மடத்துப் பண்டிதர்கள் அவருடைய பிரஸங்கங்களைப் பாராட்டி யிருக்கிறார்கள். அப்போது ஆசார்யர்களாக இருந்த இளையாத்தங்குடிப் பெரியவாளிடம் அவர் ஆசீர்வாதம் பெற்றிருக்கிறார்.

தமிழ், ஸம்ஸ்க்ருதம் இரண்டும் பேதப்பட்டு நிற்க ஆரம்பித்தது முக்கியமாக இந்த 20-ஆம் நூற்றாண்டில்தான். இதை எப்படியாவது ஆதியில் இருந்த மாதிரி ஐக்யப்படுத்தி விட வேண்டும்; எல்லோரையும் சந்த்ரமௌளீச்வர் ஸந்நிதானத்தில் அவர் குழந்தைகளாக ஒன்று சேர்த்து வைத்துவிட வேண்டும் என்பதுதான் எனக்கு எப்போதும் நினைப்பாயிருக்கிறது. அதனால் ஸம்ஸ்க்ருதப் பண்டிதர்

Koviloor Digital Library

களைப் போலவே தமிழ் வித்வான்களையும் ஸ்ரீமடத்தில் ஆதரித்து ஸம்மானிக்க ஆரம்பித்தது. இந்த ரீதியிலேதான் ஸ்வாமிநாதையரையும் மடத்தின் பக்கம் வரப்பண்ணி, தத்-த்வாரா [அதன்மூலம்] தமிழுலகத்துக்கு வைதிகாசாரங் களில் அபிமானம் வளர்வதற்கு ஸஹாயம் செய்ய நினைத்தது.

உ.வே.சா. செய்த பணி

தமிழ்ப்பாட்டி தானே ஒரிஜினலாகப் பாடியவள். பாட்டினால் தர்ம போதனை பண்ணினவள். தமிழ்த் தாத்தா முக்யமாக ஆராய்ச்சியாளர்தான். ஏற்கெனவே இருந்த நூல்களை ஆராய்ந்து பதிப்பித்தவர். அரைகுறை யாய்க் கிடைத்த பல நூல்களை முழுதாகக் கண்டுபிடித்துப் பூர்ண ரூபத்தில் கொடுத்திருக்கிறார். மூலம் அடியோடு மறைந்தே போய், எங்கேயோ மேற்கோள்களில் பிரஸ்தாவிக்கப்பட்டதால் மட்டும் துளித் துளி தெரிந்த நூல்களையும் தேடு தேடு என்று தேடிப் போய், கண்டு பிடித்துப் பிரகாசப்படுத்தியிருக்கிறார். எங்கேயாவது ஒரு அபூர்வமான சுவடி இருக்கிறது என்று கேள்விப்பட்டு விட்டால் போதும், உடனே எப்பாடு பட்டாவது, எத்தனை அலைச்சல் அலைந்தாவது, யாரானாலும் அவரிடம் கெஞ்சி மன்றாடியாவது அதைப் பெற்றுவிடுவார். இப்படி அவரால் புத்துயிர் பெற்ற தமிழ் நூல்கள் ஏராளம். அவருடைய பதிப்புக்களிலெல்லாம் இருக்கிற விசேஷம் என்னவென்றால், பல பிரதிகளை ஒப்பிட்டுப் பாட பேதங் கள் கொடுத்திருக்கும்; விளக்க வேண்டிய விஷயங்களுக் கெல்லாம் 'விசேடக் குறிப்பு' என்று கொடுத்திருப்பார்; பழைய உரைகளில் தமக்குப் புரியாத மேற்கோள்களைத் தனியாக, 'விளங்காமேற்கோளகராதி' என்று கொடுத்திருப் பார். ஒரு ரிஸர்ச்-ஸ்டடிக்கு இருக்க வேண்டிய அத்தனை அம்சங்களும் அவற்றில் சிறப்பாக இருக்கும்.

Koviloor Digital Library

ஆனால் தமிழ்ப்பாட்டியைப் போல் இந்தத் தாத்தாவுக்கு நீதி போதனைக்காக ஏற்பட்ட ஒன்றாக பாஷை இல்லை. பாஷைக்காகவே பாஷை என்று பணி செய்தார். அதனால் வைதிக தர்மத்துக்கு வேறான சமண ஸமயத்தை ஸமயம் நேர்ந்த போதெல்லாம் வலியுறுத்தும் "ஜீவக சிந்தாமணி" போன்ற நூல்களைக்கூடப் பதிப்பித்திருக்கிறார். நம்முடைய தமிழின் உயர்ந்த இலக்கிய பாரம்பர்யம் தெரிவதற்கு அவருடைய இந்தத் தொண்டு நிரம்ப உபகாரம் செய்துதான் இருக்கிறது. அதனால், அவர் செய்த ஆராய்ச்சிப் பணிகளைக் கவனித்து அவ்வப்போது அவரைப் பாராட்டி ஊக்கி, அவரை மடத்தின் பக்கம் நெருங்கி வரப் பண்ணினேன்.

அவர் பெரிசாகத் தமிழ் ஆராய்ச்சி பண்ணியிருக்கிறாரென்றால் நானும் ஏதோ கொஞ்சம் இந்த விஷயத்திலே என் 'ஸாமர்த்திய'த்தைக் காட்டியிருக்கிறேன். இதிலே ஒன்று, இரண்டு அவர் வருகிறபோது 'அவிழ்த்து' விடுவேன். அவருக்கு உச்சி குளிர்ந்து விடும். ஸம்ஸ்க்ருதத்துக்கு என்றே ஏற்பட்ட மடம் என்று நினைக்கப்படும் ஒன்றின் 'தம்பிரான்' தமிழில் கைவரிசை காட்டுகிறாரே என்பதில் அவருக்கு ஏற்பட்ட ஸந்தோஷம் வளர்ந்து வளர்ந்து, நம்முடைய மடத்தில் நல்ல அபிமானமும், பகவத்பாதாளிடம் பக்தியுமாக உறுதிப்பட்டன. காலக்ரமத்தில் நமக்குத் தப்பாமல் வ்யாஸ பூஜா காணிக்கை அனுப்ப ஆரம்பித்து விட்டார்! நான் ஆசைப்பட்டபடி நம் தர்மாசாரங்களில் அவருக்கு நல்ல பற்று ஏற்பட்டு விட்டது.

தஞ்சைவாணன் கோவை

நம் மடத்துக்கு நீண்ட காலமாகவே தமிழ்ப் புலவர்கள் தொடர்பு உண்டு என்று நான் ஸாக்ஷி காட்டிய ஒரு விஷயம் அவருடைய ஆராய்ச்சிக்கும் ஒத்தாசை பண்ணியதால் ஆனந்தக் கூத்தாட ஆரம்பித்து விட்டார்.

Koviloor Digital Library

அதென்ன விஷயம்?

'தஞ்சைவாணன் கோவை' என்று கேள்விப்பட்டிருக்கலாம். 'கோவை' என்பது தொண்ணூற்றாறு ப்ரபந்த வகைகளில் ஒன்று. 'அகப்பொருள்' என்பதாக நவரஸங்களில் ச்ருங்காரத்தைச் சொல்கிறார்களல்லவா? அந்த ரஸப் பிரதானமாக ஆக்கப்பட்ட காவிய வகைகளில் ஒன்றே கோவை என்பது. இப்படி நாயிகா பாவத்தில் ஈச்வராராதனையே செய்து மாணிக்கவாசக ஸ்வாமிகள் செய்த நூலுக்குத்தான் 'கோவை' என்பதே டைட்டிலாகித் "திருக்கோவையார்" என்று பெயர். முதலில் வரும் 'திரு' மரியாதை அடைமொழி; பின்னால் வரும் 'யார்' என்பதும் மரியாதை விகுதிதான்; 'கோவை' என்பதே நூலின் பெயர். 'தஞ்சைவாணன் கோவை' என்பது தஞ்சையில் இருந்த வாணன் என்ற வள்ளலைப் பற்றிய ச்ருங்கார காவியம்.

அவனைப் பற்றி ஒரு கதை உண்டு. ஒருநாள் தமிழ்ப் புலவர்கள் அவனுடைய அரண்மனைக்குப் போனபோது அவன் ஊரில் இல்லை. ஆனால் அவனுடைய ராணி இருந்தாள். அவளும் நல்ல ரஸிகத்தனம் உள்ளவள். அதனால், வந்த புலவர்கள் வெறுமே திரும்ப வேண்டாமென்று அவளுக்கே தாங்கள் இயற்றி வந்திருக்கும் பாட்டுக்களைப் பாடிக் காட்டுவது – அந்தப் புலவர்கள் பாஷையில் சொல்வதானால் 'திருச்செவி சாற்றுவது' – என்று முடிவு பண்ணி, அப்படியே செய்தார்கள்.

இவளையும் ஒரு தமிழ்ப்பாட்டி என்று சொல்லிவிடலாம்! எப்படி என்றால், வயஸிலே இவள் பாட்டி இல்லை; யௌவனப் பிராயத்தில் இருந்தவள்தான். ஆனால் பாட்டுக்களைப் புலவர்களிடமிருந்து பெற்றவள் அல்லவா? அதனால் 'பாட்டி' என்று சொல்லலாம். பாட்டு ஸமர்ப்பணத்துக்குப் பாத்திரமானதால் பாட்டியான தஞ்சைவாணன் பத்தினி அவனைப் போலவே, அல்லது

Koviloor Digital Library

அவனையும்விட அதிகமாகவே, தானும் புலவர்களை ஸம்மானிக்க வேண்டுமென்று நினைத்தாள். அவர்கள் பாடிய ஒவ்வொரு பாட்டுக்கும் ஒரு தாம்பூல மரியாதை பண்ணினாள். ஒவ்வொரு தாம்பூலத்திலும் ஸாதாரணத் தேங்காய்க்குப் பதில் தங்கத்தாலான ஒரு தேங்காயை வைத்துக் கொடுத்தாள். வாணன் ஊரிலில்லாத போது இவர்கள் வருவார்களென்று முன்னமேயே தெரிந்து, நிறைய ஸ்வர்ணத் தேங்காய்கள் பண்ணி வைத்துக் கொண்டிருந்தாள் போலிருக்கிறது!

புலவர்கள் ஒரே ஸந்தோஷமாக விடைபெற்றுக் கொள்ளும் ஸமயத்தில் தஞ்சை வாணன் திரும்பி வந்து விட்டான். ராணி ஒவ்வொரு பாட்டுக்கும் ஒரு தங்கத் தேங்காய் கொடுத்தாள் என்றதும் அவனுக்கு ஏக கோபம் வந்து விட்டது. "என்னது? தங்கத் தேங்காயா? எதற்கு என்ன மதிப்புக் கொடுக்கலாம் என்பதில் இப்படியா வியவஸ்தை கெட்டுப் பண்ணுவது?" என்று அவளை ரொம்பவும் கோபித்துக் கொண்டு விட்டு புலவர்களைப் பார்த்தான். "தங்கத் தேங்காய்களை எல்லாம் திருப்பிக் கொடுத்துவிட்டு, இந்த ஸபையிலேயே சற்று நேரம் உட்கார்ந்திருங்கள். நியாயமாக உரிய ஸம்பாவனையை நான் தீர்மானம் பண்ணிவிட்டு அப்புறம் வந்து கொடுக்கிறேன்" என்றான்.

ராணிக்கு ஈயாடவில்லை. புலவர்களுக்கும் ரொம்ப ஏமாற்றமாயிற்று. ஆனாலும் வேறு வழியில்லாமல் தேங்காய்களை வாணனிடம் திருப்பிக் கொடுத்தார்கள். அவன் அரண்மனைக்கு உள்ளே போய் விட்டான். ஸபா மண்டபத்தில் அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்த புலவர்கள், "கொடைவள்ளலாகவும், மரியாதைப் பண்பில் மிக்கவனாகவும் இருந்தவன் என்ன இப்படி அடியோடு மாறி, நம்மை இத்தனை நேரம் காக்க வைக்கிறானே!" என்று அலுப்படைந்தார்கள்.

Koviloor Digital Library

வாணன், ராணி ஸஹிதம், திரும்பி வந்தான்.

புலவர்களுக்கு ஸம்பாவனை பண்ணினான். என்ன ஸம்பாவனை என்றால், அந்தத் தங்கத் தேங்காய் ஒவ்வொன்றிலும் மூன்று கண்களுக்குப் பதில் விலை மதிக்க முடியாத மூன்று ரத்தினங்கள் பதித்துக் கொடுத்தான்!

வெறும் தேங்காயாகக் கொடுக்காமல் தங்கத் தேங்காயாக ராணி தந்தாளென்றால், 'வெறும் தங்கத் தேங்காயா தருவது?' என்றே கோபமடைந்து, ரத்தினங்கள் பதிப்பித்துக் கொடுத்தான் அந்த வள்ளல்.

இவனுடைய ராணி பாட்டி என்றால், இவனும் தமிழுக்கு அள்ளிக் கொடுத்த தாதா ஆதலால் தமிழ்த் தா(த்)தா தான்!

இந்த தஞ்சைவாணனைப் பற்றி ஸ்வாமிநாதையர் ஒரு ஆராய்ச்சி செய்திருந்தார். அதாவது, அவன் ஆட்சி நடத்திய தஞ்சை சோழ தேசத்திலுள்ள தஞ்சாவூர் இல்லை என்றும், பாண்டிய நாட்டிலுள்ள தஞ்சாக்கூர்தான் என்றும் பல காரணங்கள் காட்டி அவர் முடிவு செய்திருந்தார்.

மதுரையிலிருந்து மானாமதுரை போகும் ரயில்வே லைனில் திருப்பாச்சத்தி என்று ஒரு ஸ்டேஷன் இருக்கிறது. அதற்கு ஒரு மைல் தெற்கே போனால் வருவது இந்தத் தஞ்சாக்கூர்.

ஸ்ரீ மடத்தின் ஸாக்ஷி

"தஞ்சாக்கூர்தான் வாணன் ஊர் என்பதற்கு ஆதரவாய் நம் மடமும் ஒரு ஸாக்ஷி தருகிறது" என்று அவரிடம் நான் சொன்னவுடன் அவருக்கு ரொம்பவும் ஆவலும், ஆனந்தமும் உண்டாகி விட்டன.

மடத்தின் அறுபத்து மூன்றாவது ஆசார்யாளான [நான்காவது] மஹாதேவேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்

Koviloor Digital Library

1783-ல் பீடமேறிச் சில மாஸங்களில் சிவகங்கை ராஜா விஜயரகுநாத பெரிய உடையார் மடத்துக்கு ஒரு கிராமத்தை அர்ப்பணம் பண்ணியிருக்கிறார். அந்த தான சாஸனம் மடத்தில் இருக்கிறது. அந்த கிராமம் இந்தத் தஞ்சாக்கூரைத் தொட்டுக் கொண்டு அதன் தெற்கு பாகத்தில் இருக்கிறது. அதன் பெயர் புலவச்சேரி.

"புலவர்சேரி என்பதுதான் புலவச்சேரி என்றாகி யிருக்கிறது. அநேக புலவர்கள் வாழ்ந்த, அல்லது அடிக்கடி வந்து தங்கியிருந்த, இடமாக இது இருந்திருக்கவேண்டும் என்பது என் ஊஹம். நீங்கள் தஞ்சாக்கூர்தான் புலவர்களைக் கொண்டாடிய வாணனின் ஊர் என்று காட்டியிருப்பதாகத் தெரிந்தவுடன் நான் ஊஹித்த விஷயம் நிச்சயப்பட்டே விட்டது. அவனுடைய காலத்தில் எப்போது பார்த்தாலும் மொய்த்துக் கொண்டிருந்த புலவர்கள் தங்கியிருந்ததால் தான் இந்த கிராமத்துக்கு புலவர்சேரி என்ற பேர் ஏற்பட்டிருக்கிறதென்று புரிந்து கொண்டேன்" என்று சொன்னேன்.

இதைக் கேட்ட ஐயர், பழைய சுவடி ஒன்றைக் கண்டு பிடித்தால் எப்படிப் பரவசமடைவாரோ அப்படிக் களிக் கூத்தாடினார்!

அநேகமாக எல்லாரும் சோழதேசத் தஞ்சை என்று நினைத்ததைப் பாண்டிய நாட்டு ஊர் என்று காட்டிய மாதிரியே இன்னொரு ஊர் விஷயமாகவும் அவர் ஆராய்ச்சி பண்ணி முடிவு வெளியிட்டிருக்கிறார். இதிலேயும் என் துக்குணியூண்டு 'ரிஸர்ச்' சேர்ந்திருக்கிறது.

திருச்சித்ரகூடம் எது?

சைவர்களுடைய 'பாடல் பெற்ற ஸ்தல'ங்களில் முதலிடம் பெற்றுள்ள சிதம்பரத்தை வைஷ்ணவர்களும் தங்களுடைய நூற்றியெட்டு 'திவ்யதேச'ங்களில் ஒன்றான

Koviloor Digital Library

'தில்லை நகர் திருச்சித்ர கூடம்' என்கிறார்கள். பரமேச்வரன் நடராஜாவாக ஏக ஆட்டம் ஆடும் அந்த க்ஷேத்ரத்திலே, அந்த ஆலயத்திலேயே மஹா மாயாவியான மஹாவிஷ்ணு கோவிந்தராஜா என்ற பெயரில் ஒரே தூக்கமாகத் தூங்கிக் கொண்டே ஜகத்ரக்ஷணம் பண்ணுகிறார்! இந்த ஸந்நிதிதான் திருமங்கையாழ்வாரும் குலசேகரப் பெருமாளும் மங்களாசாஸனம் செய்துள்ள தில்லைச் சித்ரகூடம் என்கிறார்கள்.

ஆனால் ஸ்வாமிநாதையருக்கோ இந்த திவ்யதேசம் சிதம்பரம் இல்லை என்று அபிப்பிராயம். 'சித்ரகூடம் என்பது பெயரானால் அதிலுள்ள மூர்த்தி ராமசந்த்ர மூர்த்தியாகத்தானே இருக்கணும்? பேர் சித்ரகூடம், பெருமாள் கோவிந்தராஜா என்றால் பொருத்தமே இல்லையே' என்று அவருக்கு யோஜனை. சேஷ சயனம் செய்யும் மஹாவிஷ்ணுவை கோவிந்தராஜா என்று கிருஷ்ணராக ஆக்குவது மட்டும் ஸரியா என்றால், ஸரிதான். ஏனென்றால் கிருஷ்ணர் பூர்ணாவதாரம் என்ற முறையிலே அவரையும் மஹா விஷ்ணுவையும் ஒருவ ராகவே பாவிப்பது வழக்கந்தான். திருப்பதி ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கே "கோவிந்தா"தானே போடுகிறோம்?

ஐயரின் கவனத்தில் பதிந்த இன்னொரு விஷயம். சித்ரகூடத்தைப் பாடியுள்ள குலசேகரர் தம்முடைய 'பெருமாள் திருமொழி'யின் அந்தப் பாசுரத்தில் முழுக்க ராமாயண ஸம்பவங்களையே சொல்லிக் கொண்டு போவதாகும். ஆனபடியால் ராமரை மூலவராகக் கொண்ட ராமக்ஷேத்ரமாகிய வேறேதோ தில்லைச் சித்ரகூடத்தைத் தான் சிதம்பரமாக நினைக்கும் வழக்கம் வந்து விட்டதா என்று ஐயர் ஆராய்ந்து கொண்டிருந்தார்.

ஒரு எதிர்க் கேள்வி கேட்கலாம். "குலசேகரர் ராமனையே இஷ்ட மூர்த்தியாக உபாஸித்தவர். பூர்வத்தில்

Koviloor Digital Library

இவர் சேர நாட்டு அரசராகத் திருவஞ்சிக்களத்திலிருந்து கொண்டு ஆட்சி நடத்திய போது ராமாயண உபந்நியாஸம் நடந்து, அதிலே 'ஜனஸ்தானத்திலிருந்த பதிநாலாயிரம் ராக்ஷஸர்களுடன் யுத்தம் செய்வதற்காக ராமர் தனி மனிதராகப் புறப்பட்டார்' என்ற இடம் வந்தவுடன் இவர், பக்திப் பரவசத்தில் கால பேதங்களை மறந்துவிட்டார். 'என் ஸ்வாமி தனித்துப் போகவா? இதோ என் ஸேனைகளைத் திரட்டிக் கொண்டு, கூடப் போவேன்' என்று கிளம்பி யிருக்கிறார்! அவருக்கு 'அந்தா ராம மய'மாக இருந்ததால் திருக்கண்ணபுரத்தில் கூடத்தான் கௌஸல்யா தேவியின் பாவத்தில் குழந்தை ராமருக்கு தாலாட்டுப் பாடியிருக் கிறார். ஆகையால் கோவிந்தராஜாவையும் அவர் ராமராகப் பாடியிருப்பதில் ஆராய்ச்சிக்கான விஷயம் என்ன இருக்கிறது?" என்று கேட்கலாம்.

இதிலே எனக்கு ஒரு கட்சியும் இல்லை. ஸ்வாமி நாதையர் கருத்தைச் சொல்ல மட்டும் வந்தேன். அவர் அபிப்பிராயப்படி, திருக்கண்ணபுரத்தில் பாடிய மாதிரி ஜெனரலாக – பொதுப்படையாக – இல்லாமல், சித்ரகூடத்தில் பாடியபோது,

தில்லை நகர் திருச்சித்ர கூடந்தன்னுள்
திறல்விளங்கு மாருதியோ டமர்ந்தான் தன்னை

என்று, இது ராமனின் மூர்த்தி இருக்கும் ஸந்நிதிதான் என்று திட்டமாகக் குறிப்பிட்டே காட்டியிருக்கிறது.

தில்லை விளாகம்; ராம விக்ரஹச் சிறப்பு

இவருடைய அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தும் ஒரு விஷயம் கேள்விப்பட்டார். 'தில்லை விளாகம்' என்று சிதம்பரத்தின் பேர் கொண்டதாக, தஞ்சாவூர் ஜில்லா திருத்துறைப் பூண்டி தாலுகாவில் உள்ள கிராமத்தில் நூறு

Koviloor Digital Library

வருஷம் முந்தி ஸீதா–லக்ஷ்மண–ஹநுமத் ஸமேத ராமசந்த்ர மூர்த்தி விக்ரஹமும், சிவகாமஸுந்தரி ஸமேத ஸ்ரீமந் நடராஜ மூர்த்தி விக்ரஹமும் பூமிக்கடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டார். இவரும் உடனே உண்மையைக் கண்டெடுக்க ஆராய்ச்சியால் 'தோண்டினார்'. முடிவாக இந்தத் தில்லை விளாகம் தான் திருச்சித்ரகூடம் என்ற திவ்யதேசம் என்று தீர்மானம் பண்ணினார். 'உபய வேதாந்தி'யாய் இல்லாவிட்டாலும், 'உபய'த்தில் ஒன்றான திவ்ய ப்ரபந்தப் 'பெருமாள் திருமொழி'யில் இவர் செலுத்திய ஈடுபாடு பலனளித்து விட்டது!

'தில்லை' விளாகம் என்று இன்று ஊர் பேரே இருப்பதால் இது ஆதியில் 'தில்லைச் சித்ரகூடம்' என்று பேர் பெற்றிருக்கக் கூடும்தான். தில்லைக்குரிய நடராஜாவும், சித்ரகூடத்துக்கு உரிய ராமரும் சேர்ந்து இருக்கும் இந்த ஊருக்குத்தானே இந்தப் பேர் ரொம்பப் பொருத்தம்?

இங்கே நடராஜ மூர்த்தி அகப்பட்டது எவ்விடத்தி லென்றால், 'அம்பல ஊருணி' என்ற குளத்தருகில். மறுபடியும் தில்லைச் சிற்றம்பல ஸம்பந்தம் வந்துவிடுகிறது! அதாவது பூர்வகாலத்தில் இது இரண்டாவது சிதம்பரமாகக் கொண்டாடப்பட்டிருக்க வேண்டும். இப்போதும் திருவெண்காட்டை 'ஆதி' சிதம்பரம் என்று சொல்லிக் கொள்கிறார்கள். சிதம்பர தீக்ஷிதர் மூவாயிரவரில் ஒரு பிரிவினர் வெகு காலம் முன்பு தில்லை விளாகத்திலும் பூஜகர்களாக இருந்திருக்கலாம். அதனாலேயே குலசேகரப் பெருமாள் 'அந்தணர்க ளொருமூவா யிரவரேத்த' என்று பாடியிருக்கலாம்!

தில்லை விளாகத்துக்கு உள்ள ராம ஸம்பந்தம் ரொம்ப ஸ்வாரஸ்யம்! விக்ரஹம் கிடைத்த பிறகு கட்டிய

Koviloor Digital Library

கோவிலுக்குப் புஷ்கரிணியாக இப்போது 'ராம தீர்த்தம்' எனப்படுவதற்கு ரொம்ப காலமாக 'நல்ல பிள்ளை பெற்றாள் குளம்' என்ற பெயர் வழங்கி வந்திருக்கிறது. யார் அந்த 'நல்ல பிள்ளை பெற்றாள்' என்றால் கௌஸல்யா தேவிதான். **"கௌஸல்யா ஸுப்ரஜா"** என்ற விச்வாமித்ரர் வாக்கால் இன்றைக்கும் விச்வ முழுவதும் ஸ்துதிக்கப் படுபவன் ராமன். 'ஸுப்ரஜா'வுக்கு நேர்தமிழ்தான் 'நல்ல பிள்ளை'. இவ்வூருக்குப் பக்கத்தில் 'கழுவன் காடு' இருக்கிறது – ஜடாயுக் கழுகை நினைவுபடுத்துவதாக. 'ஜாம்பவான் ஓடை'யும் இருக்கிறது. ஏழெட்டு மைலில் 'தம்பிக் கோட்டை' – லக்ஷ்மணன் பேரில் ஏற்பட்டது என்கிறார்கள். அப்புறம் ஆறேழு மைல் போனால் அதிராம்பட்டினம் என்கிற அதிவீர ராமபட்டினம்.

இன்றைக்கு தெய்விகமான ரூப ஸௌந்தர்யத்துக்குப் பேர் போன விக்ரஹங்களாக ஒரு பத்துப் பதினைந்தை முதல் rankகள் கொடுத்துச் சொன்னால் அதில் தில்லை விளாகம் ராமரும் ஒருத்தராக இருப்பார். ஐந்தடி உயரத்துக்கு அந்தசந்தமாய் ஸர்வாங்க ஸுந்தரமாய் நிற்கும் ராமசந்த்ர மூர்த்தியை எத்தனை முறை பார்த்தாலும் தெவிட்டாமல் பார்த்துக் கொண்டே இருக்கலாம். நரம்புகள், ரேகைகள்கூடத் தெரிகிற மாதிரி அப்படியொரு நுட்பமான சிற்ப வேலைப்பாடு. 'வேலைப்பாடு' என்று சொல்வது கூடத் தப்பு – சிற்பி கை வழியாக ஸ்ரீராமனே வந்திருக்கிறானென்று தான் சொல்லணும். இதிலேயுள்ள அநேக விசேஷங்களில் ஒன்று, 'ராம சரம்' என்கிற அம்பு மற்ற ஸ்தலங்களிலுள்ளது போல், கூர்முனைக் கோடியிலுள்ள தலைப்புற நுனியில் மொட்டையாகவோ, பிறை வடிவமாகவோ முடியாமல் ஒரு முக்கோணத்தைப் போல முடிந்திருப்பது. இன்னொரு விசேஷம், இடதுகை மணிக்கட்டில் கௌஸல்யா தேவி – நல்ல பிள்ளை

Koviloor Digital Library

பெற்றாள் – அந்த நல்ல பிள்ளையின் வனவாஸத்தில் அதற்குத் தீங்குகள் வராமலிருக்க வேண்டும் என்று கட்டிய ரக்ஷை காணப்படுவது.

ஸீதை, லக்ஷ்மணர், ஹநுமார் எல்லாமே நெஞ்சைக் கவர்கிற மூர்த்திகள். ஹநுமாரிடம் சிறப்பு அம்சம், 'திறல் விளங்கு மாருதி' என்று ஆழ்வார் சொன்னது வீரத்தின் திறலாக இல்லாமல் பணிவின் திறலாக, பக்தியின் சக்தியாக வடித்தெடுக்கப்பட்டிருப்பதாகும். எங்கேயுமே யஜமானர் முன்பு அவர் அஸம்பாவிதமாக வீரத்தைக் காட்டிக் கொண்டு நிற்பதில்லை என்றாலும் இங்கே அடக்கத்திலும் அடக்கமாக இடது கையை உடம்பைச் சேர ஒட்டித் தொடையில் வைத்துக் கொண்டு வலது கையால் வாயைப் பொத்திக் கொண்டு நிற்கிறார்.

பரத, சத்ருக்னர்களோடு பட்டாபிஷிக்தராக அமர்ந்த திருக்கோலத்தில் இல்லாமல், இப்படி ஸீதா, லக்ஷ்மண ஸமேதராக மாத்திரம் ராமர் நின்ற திருக்கோலத்தில் விளங்குகிற ஆலயங்களை 'சித்ரகூடம்' என்று சொல்வது வழக்கம். வனவாஸத்தில் ஸீதா லக்ஷ்மணர்களோடு மாத்திரம் ராமர் இருந்ததில் முக்யமான இரண்டு இடங்கள் சித்ரகூடமும், பஞ்சவடியும் ஆகும். ஆனால் பஞ்சவடியில் ஸீதையின் அபஹரணம் நடந்ததால் அதைச் சொல்லாமல், இப்படி மூவராக உள்ள ஸந்நிதியைச் சித்ரகூடம் என்றே சொல்கிறார்கள். சித்ரகூடத்தில் ஆஞ்ஜநேயர் ராமரிடம் வந்து சேரவில்லைதான். ஆனால் நாம் வழிபடும்போது ஒரு தெய்வத்தோடு அதன் பிரதம கிங்கரரையும் சேர்த்துத்தான் ஆராதிக்க வேண்டும். நந்திகேச்வரர் இல்லாமல் பரமேச்வர னையும், கருடாழ்வார் இல்லாமல் மஹாவிஷ்ணுவையும், ஆஞ்ஜநேயர் இல்லாமல் ராமரையும் பூஜிப்பதற்கில்லை என்பதாலேயே இங்கே ஆஞ்ஜநேயரும் காட்சி கொடுக்கிறார்.

Koviloor Digital Library

ஆலயங்கள் எடுத்தவர்கள்

கண்டெடுத்த இந்த ராமர் 'ஸெட்'டுக்குப் புதிதாகக் கோவில் கட்டி வைத்ததில் இன்னொரு பாட்டி ஸம்பந்தம் வருகிறது. இவள் ஒரு ஸுமங்கலிப் பாட்டி. கோபால க்ருஷ்ணையர் என்ற என்ஜினீயரின் பத்தினி. தில்லை விளாகத்தில் ராம மூர்த்திக்குக் கோவில் கட்டுவதற்கென்று அறுபதினாயிரம் ரூபாய் எடுத்து வைத்தவள் – அல்லது பதியை எடுத்து வைக்கச் சொன்னவள் – அவள்தான். நூறு வருஷம் முந்தி அறுபதினாயிரம் என்றால் அது இன்று எத்தனையோ லக்ஷம்.

எவ்வளவு தூரம் வாஸ்தவமோ, இதைப்பற்றி இன்னொன்று கூடக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதாவது, அந்த அம்மாள், தர்மவதி, தாராளமாக அறுபதினாயிரம் தரணும் என்று புருஷரிடம் சொல்லி விட்டு ஸுமங்கலியாக ராமசரணாரவிந்தத்தை அடைந்து விட்டாளாம். அப்புறம் பத்திரம் எழுதும்போது அவள் பர்த்தாவுக்கு அவ்வளவு மனஸ் வராமல், ஆறாயிரம் கொடுத்தால் போதாதா என்று தோன்றியதாம். அப்படியே எழுத ஆரம்பித்தாராம். 'எண்ணால்', 'எழுத்தால்' என்று இரண்டு விதமாகத் தொகையைக் குறிப்பிட வேண்டுமல்லவா? முதலில் 'எண்ணால்' 6000 என்று எழுதப் போனவர் தம்மையறியாமல் மூன்று ஸைஃபர்களுக்கு அப்புறம் நாலாவதாக இன்னொரு ஸைஃபரும் போட்டு விட்டாராம். உடனே கண்டுகொண்டார், பத்து மடங்கு ஜாஸ்தியாக பார்யாள் விரும்பிய தொகையையே போட்டு விட்டோமென்று. ஆனாலும் மனஸிலே என்னவோ ஒன்று தைத்து, 'எழுதியதை அடித்து மாற்ற வேண்டாம்; அவளுடைய பக்தியின் ஸூக்ஷ்ம சக்தியும் ராமசந்த்ர மூர்த்தியின் பிரபாவமுந்தான் நம்மை இப்படி எழுதப் பண்ணியிருக்கிறது' என்று தெளிவு ஏற்பட்டு, அறுபதினா யிரம் ரூபாயே கொடுத்துக் கோவிலைக் கட்டினாராம்.

Koviloor Digital Library

இதற்குச் சில வருஷங்களுக்குப் பிறகு, யாரோ குடியானவன் அம்பலவூருணி அருகில் வெட்டின போது தில்லை விளாகத்துக்கு அந்தப் பேர் ஏற்படக் காரணமான நடராஜாவின் திவ்யமான பெரிய மூர்த்தி அம்பாளோடு கண்டெடுக்கப்பட்டது*. விஷயம் பெரி. நா. மெ. கண. குடும்பத்து நாட்டுக் கோட்டைப் புண்யவானுக்குத் தெரிந்தது. உடனே அவர் நடராஜ மூர்த்திக்கே உரியதான 'ஸபை' என்கிற அமைப்பில் கோவில் கட்டினார்.

ராமர் ஸெட், நடராஜா ஸெட் ஆகிய இரண்டுவகை விக்ரஹங்களும் ஒரே அமைப்பில் இருந்ததைக் கொண்டும், மற்ற தடயங்கள், ஊக - அநுமானங்களிலிருந்தும் சிதம்பரத்தில் போலவே இங்கேயும் ஈச்வரன் நடராஜா, பெருமாள் ராமர் ஆகிய இருவர் ஸந்நிதிகளும் பக்கத்தில் பக்கத்தில் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றியதால் அவ்வாறே ஆலய நிர்மாணம் செய்யப்பட்டது.

ஐயரின் ஆராய்ச்சிக்கு அப்புறம் தில்லை விளாகம் ரொம்பப் பிரஸித்தி பெற்றுவிட்டது. இரண்டு மூர்த்திகளுக்குள் சிதம்பரத்தில் ஈச்வரன் — நடராஜா — முக்யஸ்தராக இருப்பதற்கு ஈடு செய்கிறாற்போல, இங்கே பெருமாள் — ராமர் — முக்யம் பெற்று அடியார்களை ஏராளமாக ஆகர்ஷிக்கிறார்.

மடத்துக்கு உறவுக்காரர்கள்

தில்லை விளாகத்துக்கு இன்னொரு பெருமை அதன் கிட்டே ஒளவைப் பாட்டிக்குக் கோவில் இருப்பதாகும். தில்லை விளாகத்துக்குத் தெற்கே நாலு மைலில் உள்ள கற்பனார் கோயில் என்ற ஸ்தலத்துக்குப் பக்கத்தில், தஞ்சாவூர் மஹாராஷ்டிர ராஜ வம்சத்தைச் சேர்ந்த

* ராம விக்ரஹம் 1862லும், நடராஜ விக்ரஹம் 1892லும் கண்டெடுக்கப்பட்டன.

Koviloor Digital Library

துளஜாஜியின் பெயரில் துளஜாப் பட்டினம் என்ற ஊர் இருக்கிறது. அங்கேதான், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்று சொன்னவளுக்கு ஆலயம் இருக்கிறது. 1940 வாக்கில் கற்பனார் கோயிலில் புதுசாகக் கும்பாபிஷேகம் நடந்த போது இந்த ஔவை கோவிலும் பிரஸித்தி பெற்றுவிட்டது. தமிழறிஞர்கள் அங்கே கூடி அதை ஒரு புலவர்சேரியாகவே செய்தார்கள்.

அதற்குத் தெற்கே இன்னொரு நாலு மைல் போனால் ஸமுத்ரம். இங்கே இயற்கையாக ஏற்பட்டுள்ள சில அமைப்புக்களால் தென் வடலாக சுமார் இரண்டு மைல் அகலமும், கீழ் மேலாக சுமார் முப்பது மைல் நீளமும் கொண்ட ஸமுத்ரப் பரப்பு வருஷத்தில் நாலு மாஸம் ஒரே உப்புக் கட்டிகளாக உறைந்து நிறைந்திருக்கும். ராஜ கோபாலாச்சாரியார் தலைமையில் உப்பு ஸத்யாக்ரஹம் செய்தது வேதாரண்யத்தின் இந்தப் பகுதியில்தான். ஔவையாருக்குப் பக்கத்திலேயே வேதம்! நான் ஆசைப் படுகிற மாதிரி வேதமும் தமிழும் இந்த நாட்டில் கைகோத்துக் கொண்டு போயிருக்கின்றன என்பதற்கு இன்னொரு ஸாக்ஷி!

இந்த ஆசையினால்தான், ஔவையாரைப் போல ஒரு தமிழ்ப் பெரியவர் 'ஆத்திசூடி' என்கிற மாதிரி ஒரு வார்த்தையால் சந்த்ரமௌளீச்வரை ஞாபகப்படுத்தினால் கூட உடனே, "அவர் எங்கள் மடத்துக்கு உறவுக்காரர்" என்று சொந்தம் கொண்டாடிக் கொண்டு நான் பெருமைப் படுவது.

கம்பனும் ஸ்ரீ மடமும்

இம்மாதிரி கவிச் சக்கரவர்த்தி என்னும் கம்பனுக்கே மடத்தோடு சொந்தம் இருக்கிறது. மடம் இருக்கிற காஞ்சி மண்டலம் தான் கம்பர் பிறந்து வளர்ந்த அவருடைய

Koviloor Digital Library

சொந்த ஊர் என்று ஒருவர் ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவர் பெயர் வஸிஷ்ட பாரதி. முதுபெரும் புலவர். இவரையும் தமிழ்த் தாத்தா என்று சொல்லலாம்.

'கம்பரைக் கம்பநாடர், கம்பநாட்டாழ்வார் என்கிறார்கள். இதிலிருந்தே, அவர் சோணாட்டில் உள்ள தேரழுந்தூரில் வந்து தங்கியவர்தான், அவருடைய சொந்தச் சீமை சோணாடாக இல்லாத கம்பநாடு என்று ஆகிறது. முன்னூல்களைப் பார்த்தால் 'கம்பநாடன்' என்பது காஞ்சீபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் ஏகம்பநாதனின் பெயராகவே தெரிகிறது. 'ஏகம்பன்' என்பது 'கம்பன்' என்றாகலாம். அல்லது கம்பா நதி பாய்வதால் காஞ்சி மண்டலத்திற்கு கம்ப நாடு என்று பெயர் ஏற்பட்டதாகவும் கொள்ளலாம். இப்படி இன்னொரு சீமையிலிருந்து இவர் சோணாட்டுக்குப் போய் வாஸம் செய்ய ஆரம்பித் திருந்தால்தான், இவர் புதிதாகப் போன சீமைக்காரர்கள் இவரை இன்ன நாட்டுக்காரர் என்று சொல்லிக் 'கம்ப நாடர்' என்று பெயர் வைக்க இடம் ஏற்படும்' என்பது இந்தத் தமிழ்த் தாத்தாவின் கருத்து.

அந்தக் கருத்தில் மேலும் தாளித்துக் கொள்ள என்னிடம் கொஞ்சம் சரக்கு இருக்கிறது. காஞ்சி மண்டல ஸம்பந்தமே கம்பரை நம் மடத்தோடு உறவுபடுத்தப் போதும் என்றாலும், கூடுதலாக இன்னொரு விஷயமும் இருக்கிறது:

காஞ்சீபுரத்துக்கு மூன்று மைலில் அம்பி என்று ஒரு கிராமம் இருக்கிறது. புலவச்சேரி மாதிரி இதுவும் நம்முடைய சந்த்ரமௌளீச்வரருக்கு சொந்தமான கிராமம். கி.பி. 1111-இல் விஜயகண்ட கோபாலன் என்ற தெலுங்கு சோழராஜா இந்த கிராமத்தை மடத்துக்குக் காணிக்கையாக அர்ப்பணம் செய்திருக்கிறான். அந்த தான சாஸனத் தாமிரப் பட்டயம் — [செப்பேடு] — மடத்தில் இருக்கிறது.

Koviloor Digital Library

அதிலே 'அம்பி'யின் முழுப் பேர் அம்பிகாபுரம் என்று கண்டிருக்கிறது. அங்கே ஆலயத்தில் உள்ள சிவ பெருமானுக்கு அம்பிகாபதீச்வரர் என்றே பெயர். கம்பருடைய பிள்ளையின் பெயரும் அம்பிகாபதிதான்! கம்பர் நம்மாழ்வாரைப் பற்றி 'சடகோபர் அந்தாதி' பாடிய வைஷ்ணவராயிருந்த போதிலும், சைவ – வைஷ்ணவ ஸமரஸ மனோபாவமுள்ளவராகப் பிள்ளைக்கு ஈச்வரன் பேரை வைத்திருக்கிறார்! கம்பரின் காலம் கிட்டத்தட்ட அம்பி கிராமம் மடத்துக்குச் சாஸனமாக்கப்பட்ட அதே காலம்தான் என்பதையும், அவர் பகவத்பாதாளை அநுஸரிப்போருக்கு உரிய சைவ – வைஷ்ணவ அபேத நோக்குப் பெற்றிருந்ததையும் பார்த்தோமானால், அவர் அம்பி கிராமத்தின் மூலம் நம்முடைய காஞ்சி மடத்தோடேயே ஸம்பந்தப்பட்டுக் கூட இருக்கலாம் என்று பெருமை கொள்ள நியாயமிருக்கவே செய்கிறது.

தத்வரீதியில் கூட அவர் நம்முடைய ஆசார்யாளின் ஸித்தாந்தத்தை நன்றாக ஆதரித்து 'ராமாயண'த்தில் ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார்: "மாயையினால் பிரம்மமே தான் உலகம் போலத் தோன்றுகிறது – இருட்டினால் ஒரு பழுதை பாம்பாகத் தெரிகிற மாதிரி. விளக்கைக் கொண்டு வந்தால் இருட்டு ஓடிப் போகிறாற்போல், ஞான விளக்கிலே மாயையிருள் ஓடிவிடும். வெளிச்சத்திலே, வெறும் கல்பிதமான பாம்புத் தோற்றம் அதற்கு ஆதாரமான பழுதையிலே ஒடுங்கி, பழுதை மட்டுமே உண்மைப் பொருளாய் நிற்கிறது. இப்படித்தான் ஞானப்ரகாசத்திலே உலகத் தோற்றம் என்ற பஞ்ச பூத விஸ்தாரமும் கல்பனை வஸ்துவாக ஆதார ஸத்யத்தில் ஒடுங்கி அந்த மெய்ப்பொருள் மாத்திரமே மிஞ்சும்" என்று ஆசார்யாள் விளக்கியிருக்கிறார். இந்தக் கருத்தை இதே உபமானத்தினால் கம்பரும் சொல்லி அந்த மறைமுடிவான மெய்ப்பொருள்தான் ராமன் என்கிறார்:

Koviloor Digital Library

அலங்கலில் தோன்றும் பொய்ம்மை
அரவெனப் பூதம் ஐந்தும்
விலங்கிய விகாரப் பாட்டின்
வேறுபா டுற்ற வீக்கம்
கலங்குவ தெவரைக் கண்டால்
அவரென்பர் கைவில் ஏந்தி
இலங்கையில் பொருதா ரன்றே
மறைகளுக் கிறுதி யாவார்.

இப்படிப் பரம அத்வைதம் பேசும் கம்பரோடு நம் மடம் நிச்சயம் பந்துத்வம் கொண்டாடலாம்.

அம்பிகாபதி கதையால் இன்னொரு தமிழ்ப் பாட்டியும் நமக்கு உறவாகிறாள். அவன் ப்ரேமை கொண்ட, அவனிடம் ப்ரேமை கொண்ட சோழ ராஜகுமாரிதான். அவனுடைய ஒரு கவிதைக்கு அவள் 'பாட்டுடைத் தலைவி' ஆனதால் 'பாட்டி' ஆகிறாள்! அந்தப் பாட்டுதான் அவனை ராஜாவின் சிரஸாக்கினைக்கு ஆளாக்கி அவனுடைய உயிரையே குடித்தது; உடனே அவளும் பிராணத்யாகம் செய்து விட்டாளென்று கதை.

காமாக்ஷி தொடர்புள்ள பாட்டி

பல தினுஸான பாட்டிகளைப் பார்த்துவிட்டோம். என்னென்ன தினுஸு? சொந்தமாகப் பாட்டுப் பாடியதாலும், சிருங்கார எண்ணம் வராமல் சிறுமியாயிருக்கும் போதே குழந்தை ஸ்வாமியான பிள்ளையார் அருளால் கிழவி ஆனதாலும் பாட்டியான ஔவை — இவள் கன்னிப் பாட்டி; பாட்டுக்கள் ஸமர்ப்பிக்கப்பட்டதால் பாட்டியான தஞ்சாக்கூர் ராணி– இவள் யௌவன ஸுமங்கலிப் பாட்டி; ராமர் கோயில் கட்டிய தில்லை விளாகத்தின் தீர்க்க ஸுமங்கலிப் பாட்டி;

Koviloor Digital Library

பாட்டுடைத் தலைவியானதால் பாட்டியான சோழ ராஜ குமாரி — இவளும் கன்னிப் பாட்டி என்றாலும், ச்ருங்காரத்தில் மனஸை விட்டு, கல்யாணமாகாமலே அமங்கலி மாதிரியாகி உயிரை விட்டவள்... என்றிப்படிப் பல தினுஸுப் பாட்டிகளை எப்படியோ மட ஸம்பந்தப் படுத்திச் சொல்லிவிட்டேன்.

அமங்களமாய் முடிக்காமல் இன்னம் ஒரு பாட்டியைச் சொல்ல வேண்டும். நம்முடைய மடத்துக்கே, சந்த்ரமௌளீச்வரருக்கே ஜீவசக்தியாக இருக்கும் ஸர்வ மங்கள மங்களையான காமாக்ஷி மஹா த்ரிபுரஸுந்தரியின் ஸம்பந்தமுள்ளவள் இந்தப் பாட்டி. சங்ககாலத்திலேயே வாழ்ந்து பாட்டுக்கள் இயற்றியதால் 'பாட்டி' ஆனவள். அகநானூறு, புறநானூறு, நற்றிணை முதலியவற்றில் இவளுடைய பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. முக்யமாக இவள் தெய்வ ஆவேசமாகிய 'வெறியாடல்' என்பதைப் பற்றிப் பாடியிருப்பதால் 'வெறி பாடிய' என்றே அடைமொழி பெற்றிருக்கிறாள். காஞ்சி காமாக்ஷி ஆதியிலே ரொம்ப உக்ரமாக — உக்ரம் என்றால் என்ன? நம்மால் தாங்க முடியாத அளவுக்கு அருள் வெறி பிடித்திருந்த உக்ரம்தான்! — இருந்தாளென்றும், ஆசார்யாள்தான் அவளை சமனப்படுத்தினாரென்றும் சொல்கிறார்கள், அதனால் இப்போதும் 'பேய்க்காமாக்ஷி', 'வெறி காமாக்ஷி' என்று சொல்லும் வழக்கிருக்கிறது! பேய், வெறி என்பதெல்லாம் தெய்வ ஆவேசந்தான் என்பது 'பேய், மகள்' 'வெறி பாடியவள்' என்றெல்லாம் கூறப்படும் சங்க காலப் பெண் புலவர்கள் இருந்ததிலிருந்து தெரிகிறது. இப்படி மறைமுகமாக மாத்திரம் இல்லாமல் நேராகவே காமாக்ஷி ஸம்பந்தமுள்ளவள், நான் சொல்ல வந்த பாட்டி. 'வெறி பாடிய' என்று பட்டப் பெயர் பெற்ற அவளுடைய இயற்பெயர் காமக்கண்ணியார். 'காமக் கண்ணி' என்றால் 'காமாக்ஷி' என்றே அர்த்தம்!

Koviloor Digital Library

அறிவுக்கும் அடைக்கும் தாழ் இல்லை!

பல ஜனகர்கள்

ஸீதையுடைய அப்பாவின் பேர் — ஜனகர் இல்லை! ஜனகர் என்பது மிதிலையைத் தலைநகராகக் கொண்டு விதேஹம் என்ற ராஜ்யத்தை ஆண்ட ஸூர்ய வம்சக் கிளைப் பிரிவினரில் நிமி என்பவரின் வழியில் வந்த எல்லாருக்கும் உரிய குடிப் பெயர். ஸீதையுடைய அப்பாவின் பேர், அதாவது இயற்பெயர், ஸீரத்வஜர் என்பது. குடிப் பெயரைச் சேர்த்து அவரை ஸீரத்வஜ ஜனகர் என்று சொல்ல வேண்டும். ஸீரம் என்றால் கலப்பை. ஸீரத்வஜர் என்றால் கலப்பைக் கொடியை உடையவர். இந்தக் கலப்பைக் கொடிக்காரருக்குப் பொருத்தமாகக் கலப்பை கிளறிவிடும் உழுபாதையிலேயே ஸீதை அகப்பட்டாள். "ஸீதா" என்றாலே கலப்பை முனையின் பாதைதான்.

மிதிலை ராஜவம்சத்தைச் சேர்ந்த அநேக ஜனகர் களில் கேசித்வஜ ஜனகர், காண்டிக்ய ஜனகர் என்று இரண்டு பேர். அந்த இரண்டு பேரும் பெரியப்பா— சித்தப்பா பிள்ளைகள். தர்மத்வஜ ஜனகர் என்பவர் இவர்களுடைய பாட்டனார். அவருக்கு அமிதத்வஜர், க்ருதத்வஜர் என்று இரண்டு பிள்ளைகள். க்ருதத்வஜரின் பிள்ளை கேசித்வஜர், அமிதத்வஜரின் பிள்ளை காண்டிக்யர்.

Koviloor Digital Library

தர்மத்தையே ஜீவித லக்ஷ்யமாகக் கொண்டு, கொடியைத் தூக்கிப் பிடிக்கிற மாதிரி உசத்திக் காட்டுகிறவன்தான் தர்மத்வஜன். ஆனால் 'தர்மத்வஜன்' என்ற வார்த்தைக்கு 'ஆஷாடபூதி', 'ஹிபாக்ரிட்' என்றும் கேலியாக ஓர் அர்த்தம் உண்டு. தர்மாநுஷ்டானத்தை அடக்கமாகப் பண்ணாமல் பகட்டாகக் கொடி பிடித்துக் காட்டுகிறவன் போலியாகத்தான் இருப்பான் என்ற அபிப்ராயத்தில் இப்படி அர்த்தம் ஏற்பட்டது. நான் சொன்ன தர்மத்வஜ ஜனகர் இம்மாதிரி போலி இல்லை. இந்த விஷயம் இருக்கட்டும்.

முழு ராஜ்யத்தையும் தலைப் பிள்ளைக்கே பட்டம் கட்டுவதுதான் பொது வழக்கம். ஆனாலும் சில ஸமயங்களில் இளைய பிள்ளைகளுக்கும் ராஜ்யத்தில் ஸ்வதந்திரமான பங்கு தருவதுண்டு. ஒரு கனிஷ்ட புத்ரன் மஹாசூரனாக யுத்தங்கள் பண்ணிப் புது ராஜ்யங்கள் பிடித்துக் கொடுக்கும்போது பிதாவான ராஜா ஜ்யேஷ்ட புத்ரனுக்கு மட்டுமில்லாமல் இவனுக்கும் மூத்தவனுக் கடங்கிய குறுநில அரசாக இல்லாமல், ஸ்வதந்திரமான தாகவே ராஜ்யத்தில் பங்கு தருவதுண்டு. ராஜ்ய ஆசையே யில்லாமல், தம்பி ஆண்டால் அது தாம் ஆளுவதற்கு மேலே என்று நினைத்தவர் ஸ்ரீராமசந்த்ர மூர்த்தி. முடிவிலே அவர் கோஸல தேசத்தை இரண்டாகப் பிரித்துக் குசன், லவன் இரண்டு பேருக்கும் பட்டம் கட்டினார். அது மட்டுமில் லாமல், கோஸலத்துக்கு அப்பாற்பட்ட ராஜ்யங்களை லக்ஷ்மண, பரத, சத்ருக்னர்களின் எல்லாப் பிள்ளை களுக்கும் பாகம் போட்டுக் கொடுத்தார்.

கேசித்வஜருக்கும் காண்டிக்யருக்கும் தகப்பனார் களாக இருந்த அண்ணா-தம்பி ஜனகர்கள் இரண்டு பேருமே தனித்தனி ராஜ்யங்களுக்கு ராஜாக்களாக இருந்தவர்கள். அதனால் அவர்களுக்கப்புறம் பிள்ளை

Koviloor Digital Library

களான கேசித்வஜர், காண்டிக்யர் இரண்டு பேரும் அந்தந்த ராஜ்யங்களுக்கு வார்ஸாக ஆட்சி பெற்றார்கள்.

பழைய கால ராஜாக்கள் க்ஷத்ரிய தர்மப்படி வீர புருஷர்களாக யுத்தங்கள் செய்து ராஜ்யத்தை விஸ்தரித்துக் கொண்டு போவார்கள். தர்ம சாஸ்த்ரப்படி நல்ல நிர்வாஹம் நடத்துவார்கள். அதோடு யாக யஜ்ஞாதிகளும் நிறையப் பண்ணுவார்கள். இப்படிக் கர்ம மார்க்கத்தில் சிறப்பாக ஈடுபட்டிருந்தாலும் அவர்களுக்கு வேதாந்த ஞானமும் இருக்கும். புத்ரன் வயசுக்கு வந்ததும் அவனுக்குப் பட்டம் கட்டி விட்டு, ராஜபோகத்தை எல்லாம் விட்டுக் காட்டுக்குப் போய் தபஸ் பண்ணிப் பரமாத்மாவோடு சேர்ந்து விடுவார்கள். ஆள்கிறபோதே தாமரை இலைத் தண்ணீராக இருந்து கொண்டு நிரம்ப வேதாந்த விசாரம் செய்த ராஜாக்களும் இருந்திருக் கிறார்கள். இப்படியிருந்த ஒரு ஜனகரைப் பற்றி ப்ருஹதாரண்யக உபநிஷத்திலே நிறைய வருகிறது.

கேசித்வஜர்

கேசித்வஜர், காண்டிக்யர் ஆகிய இரண்டு பேரில் கேசித்வஜர் நிரம்ப வேதாந்தக் கல்வி பெற்றவர். ஆனாலும் இந்த நாளில் பல பேர் ஏதோ புஸ்தகத்தில் வேதாந்தம் படித்துவிட்டு, 'ஆத்மாவை ஒண்ணும் தொடாது; அது சடங்கு, கர்மா எதற்கும் பிடிபடாதது' என்று சும்மாவுக்காகச் சொல்லிக் கொண்டு, அதனாலேயே எல்லா அநுஷ்டானத்தையும் விட்டு விட்டுத் தாங்கள் எதுவும் தொடாத நிலைக்கு வந்துவிட்ட மாதிரி ப்ரமையில் இருப்பது போலப் பூர்வ காலங்களில் இருக்கமாட்டார்கள். படித்து, வேதாந்த தத்வமெல்லாம் தெரிந்து கொண்டிருப் பார்கள். ஆனாலும் அபூர்வமாக எப்போதேனும் எவருக் கேனும்தான் ஈச்வராநுக்ரஹம் ஒரேயடியாகப் புரண்டு

Koviloor Digital Library

வந்து சட்டென்று ஆத்ம ஞானத்தைத் தருமே ஒழிய, மற்ற எல்லாரும் எவ்வளவு படித்திருந்தாலும் படித்த வேதாந்தம் அநுபவமாகணுமானால் அதற்குப் பூர்வ கர்மாவையும் மனஸின் வாஸனைகளையும் யதேஷ்டமாகக் கர்மாநுஷ் டானமும் பக்தியுபாஸனையும் பண்ணிப் போக்கிக் கொண்டால்தான் முடியும் என்று உணர்ந்திருந்தார்கள். அதனால் பிறப்புப்படி வாய்த்த ஸ்வதர்மத்தை முறையாகப் பின்பற்றியும், வைதிக கர்மாக்களையும் ஈச்வர ஆராதனையையும் நிறையப் பண்ணியும் வந்தார்கள். இதனால் பூர்வ கர்மாவும், 'வாஸனை' என்கிற சித்த மலமும் குறைந்து கொண்டே வந்து, சித்த சுத்தி ஏற்பட்டு, சித்தம் ஆடாமல் நிற்கப் பழக்கப்பட்ட அப்புறமே ஆத்ம தத்வத்தை நேராக விசாரம் செய்யும் பக்வம் உண்டாகும். அப்போதுதான் ஞானாப்யாஸத்தில் முழுக்கப் பிரவேசிப்பார்கள். முடிவிலே புஸ்தக வேதாந்தத்தை அநுபவ வேதாந்தமாக்கிக் கொள்வார்கள்.

அதாவது, வேதத்தில் கர்ம காண்டம் என்று முதலிலும் ஞான காண்டம் என்று பிற்பாடும் இருப்பதை அநுஸரித்துக் கர்மாவில் ஆரம்பித்தே ஞானத்துக்குப் போனார்கள்.

இம்மாதிரி கேசித்வஜருக்கு ஆத்ம வித்யையில் நல்ல வித்வத் இருந்தபோதிலும் அது ஸ்வாநுபூதியாவதற்குப் பூர்வாங்கமாக ஸ்வதர்மப்படி முறையாக ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார். யாகாதி அநுஷ்டானங்களும் பண்ணினார்.

அத்வைத ஞானிகளும் நடைமுறை உலகும்

ப்ருஹதாரண்யகத்தில் வரும் ஜனகர், ஸீதை அப்பா ஜனகர் முதலானவர்கள் ஆத்மாநுபூதியில் ஸித்தியே பெற்ற பிற்பாடும் ராஜ்ய நிர்வாஹம் பண்ணினவர்கள். பார்த்தால்

Koviloor Digital Library

வேடிக்கையாயிருக்கும் — லோகம் மாயை, உடம்பு மாயை, மனசு மாயை என்றிருந்த அத்வைத ஞானிகள் பல பேர் தான் இவற்றை நிஜமாக நினைக்கிற த்வைதிகளைவிடவும் லோகத்திலே கார்ய ரூபத்தில் அபாரமாக ஸாதித்திருக் கிறார்கள். ஆசார்யாள் [ஆதி சங்கரர்] ஒரு உதாரணம் போதும். பரம அத்வைதியான அவர் முப்பத்திரண்டே வயசுக்குள் ஆஸேது ஹிமாசலம் இந்த தேசத்தை ஓர் இடம் விடாமல் சுற்றி, எத்தனை வாதம், எத்தனை பாஷ்யம், எத்தனை யந்த்ர ப்ரதிஷ்டை, மூர்த்தி ப்ரதிஷ்டை, ஸ்தோத்ர க்ரந்தம், மட ஸ்தாபனம் என்று பண்ணியிருக்கிறார்? அப்புறம் ஆசார்யாளின் மடம் ஒன்றில் ஆதிபத்யம் வகித்த வித்யாரண்யாள்தான் விஜயநகர ஸாம்ராஜ்யத்துக்கு விதை விதைத்து எழுச்சி தந்தது. அதற்கப்புறம் சிவாஜி மஹாராஜா ஹிந்து ஸாம்ராஜ்யம் ஸ்தாபித்தாரென்றால் அதற்கான கார்ய உத்ஸாஹத்தை அவருக்கு ஊட்டி, அவரை ஸதாவும் guide பண்ணிக் கொண்டிருந்தவரும் பரம அத்வைதியான ஸமர்த்த ராமதாஸ் ஸ்வாமிகள்தான். இங்கே நம்முடைய தஞ்சாவூரிலே நாயகர்களின் ராஜ்யம் ஏற்படக் காரணமாயிருந்து, முதல் மூன்று ராஜாக்களுக்கு பிரதம மந்த்ரியாக இருந்தது யாரென்று பார்த்தால் அவரும் ஒரு கடைந்தெடுத்த அத்வைதிதான் — கோவிந்த தீக்ஷிதர் என்பது அவர் பெயர். ஆகக் கூடி, விஷயம் தெரியாத வெள்ளைக்காரர்கள் அத்வைதத்தின் 'மாயா டாக்ட்ரின்' (Maya Doctrine)தான் ஹிந்துக்களுக்குக் கார்யப் பிரபஞ்சத்தில் ஈடுபாடில்லாமல் சோப்ளாங்கிகளாக்கித் துருக்கர், வெள்ளைக்காரர்கள் முதலியவர்களிடம் நாட்டைப் பறிகொடுக்க வைத்தது என்று சொன்னாலும், சரித்திரத்தை நிஷ்பக்ஷபாதகமாகக் கூர்ந்து பார்த்தால் உண்மை இதற்கு நேர்மாறானது என்று தெரியும்.

அதெப்படி அத்வைத ஞானிகள் வியவஹார லோகத்தில் இத்தனை ஸாதித்தார்களென்றால், அந்த

Koviloor Digital Library

ஞானமேதான் இந்த ஸாதனைக்குச் சக்தி தந்தது என்றுதான் புதிர் மாதிரி பதில் சொல்ல வேண்டும். 'லோகம், உடம்பு, மனஸ் என்பவை அடிப்படையில் மாயை. ஆனாலும் வியவஹாரத்தில் இருக்கிற மாதிரி ஒரு தோற்றம் அதற்கு இருக்கிறது' என்கிற அத்வைதக் கொள்கையை ஏற்கும்போது இந்தத் தோற்றத்தை தர்மமாகக் கர்மத்தினால் ஒழுங்குபடுத்தி, அப்புறம் ஞானத்துக்குப் போக வேண்டும் என்றும் ஏற்படுகிறது; அதே சமயத்தில் இது தோற்றம்தானேயொழிய அடிப்படையான ஸத்ய வஸ்து இல்லை என்பதால் இதோடேயே தன்னை 'ஐடிண்டிஃபை' பண்ணிக் கொண்டு, அதனால் இதிலேயே உழன்று கொண்டு, உழப்பிக் கொண்டு நிற்காமல் இதில் பட்டுக் கொள்ளாமல் விலகி நின்று பார்க்கவும் முடிகிறது. இதுவேதான் ஸர்வமும் என்று தப்பாக நினைக்கும்போதுதான் அந்த நினைப்பால் இதைக் காப்பாற்றி வைத்துக் கொள்வதில் அதீதமான கவலை ஏற்படுகிறது. அதனாலேயே சித்தத்திலே தெளிவு குறைகிறது. தர்மம் தப்பிக்கூட இதைக் காப்பாற்றிக் கொண்டாலென்ன என்கிற ரீதியில் சித்தம் போக இடமேற்படுகிறது. அதாவது ஒழுங்காகக் காரியத் திட்டம் போட முடியாமலிருக்கிறது. உள்ளத்தை வைத்துத்தானே உடம்பு? ஸைகாலஜிகூட அப்படித்தானே சொல்கிறது? அதீத ஈடுபாட்டு விசாரத்தால் சித்தம் பலமிழக்கிற போது, அதற்கு தார்மிக பலமும் குறைகிறபோது, அதன் பிரதி பலிப்பாகவே சரீரத்தின் பலம், உத்ஸாஹம், காரிய சக்தி எல்லாமும் குறைந்து போகின்றன. அத்வைதிக்கு இப்படி இல்லை. அவன் லோக வியவஹாரத்திலேயே இருப்பதாகத் தோன்றினாலும், அதிலேயே உழப்பிக் கொண்டு விசாரப் படாமல் விலகி நின்று பார்த்துக் கொண்டு இருப்பதால், ஸ்திரமான சித்த பலத்தோடு, சிதறிப் போகாத தேஹ பலத்தோடு யுக்தமாகத் திட்டம் போட்டு, அதை சக்திகரமாகக் கார்யத்தில் நிறைவேற்ற அவனால் முடிகிறது.

Koviloor Digital Library

ஞானாப்யாஸம் பண்ணி அத்வைதாநுபவத்தில் ஸித்தி அடைந்தவர் மட்டுந்தான் இப்படி என்றில்லை. ஞான சாஸ்த்ராப்யாஸம் மட்டுமே நிறையப் பண்ணி, ஆனாலும் அதையே இப்போது ஸாதனையாக்கிக் கொள்ளாமல், அதற்குப் போவதற்குப் பூர்வாங்கமாகக் கர்மா-பக்திகளை அப்யாஸம் செய்து கொண்டிருப்ப வனுக்குங்கூட, அவனுடைய ஆழ்ந்த அத்வைதப் படிப்பு உள்ளூரத் தானாகவே ஓரளவு கைகொடுத்து, அவனையும் ஓரளவுக்குப் பட்டுக் கொள்ளாமல் விலகி நிற்கவும், அதனாலேயே கார்யங்களை அதிகத் தெளிவோடும் சக்தியோடும் பண்ணவும் பக்குவப்படுத்திவிடும்.

இப்படித்தான் கார்ய லோகத்தில் கேசித்வஜர் காண்டிக்யரைவிட சோபித்து ப்ராக்டிலாக முன்னேறினார்.

காண்டிக்யர்

காண்டிக்யர் வேதாந்தத்தின் பக்கம் அதிகம் போகவில்லை. அவர் முழுக்கவும் கர்ம மார்க்கக்கார ராகவே இருந்தார். ப்ரம்ம வித்யா சாஸ்த்ரங்களில் கேசித்வஜர் எப்படி நிபுணராயிருந்தாரோ, அப்படி வைதிக கர்மாநுஷ்டானங்களிலும், அவற்றுக்கான சாஸ்த்ரங் களிலும் காண்டிக்யர் நிபுணராயிருந்தார். ஆகக்கூடி, கர்ம காண்டம், ஞான காண்டம் என்ற இரண்டிலே இந்த இரண்டு ஜனகர்களில் ஒவ்வொருத்தர் ஒவ்வொன்றில் பெரிய 'ஸ்கால'ராக இருந்தனர். அதே ஸமயத்தில் வியவ ஹாரத்தில் எல்லா ராஜாக்களும் எப்படி இருப்பார்களோ அப்படியே 'ப்ராக்டிலாக'வும் இருந்தார்கள். இத்தனை நாழி அத்வைதிகளைப் பற்றி நான் சொன்னதற்கேற்ப, கர்ம மார்க்க காண்டிக்யரைவிடவும் ஞான சாஸ்த்ர நிபுணரான கேசித்வஜர்தான் ப்ராக்டிகலாக முன்னேறுவதில் அதிக சிறப்போடு விளங்கினார்.

Koviloor Digital Library

அக்கால ராஜதர்மத்தில் எல்லா தேசங்களையும் ஜயித்து, அவற்றைக் கட்டியாளும் ஸார்வபௌமனாவதே ஒரு ராஜாவின் கடமையாக நினைக்கப்பட்டது. அந்தப்படி காண்டிக்யர் தம்முடைய ஒன்றுவிட்ட ஸஹோதரரான கேசித்வஜரின் ராஜ்யத்தையும் கைப்பற்றுவதற்கு முஸ்தீபு பண்ணினார். வேதாந்தப் படிப்பால் ப்ராக்டிகல் வியவஹாரங்களில் கொஞ்சமும் பின்வாங்காத கேசித்வஜரும் இப்படியே காண்டிக்யரின் படை மேல் எதிர்த் தாக்குதல் நடத்தினார். சித்தப்பா—பெரியப்பா பிள்ளைகளான இரண்டு ஜனகர்களுக்கும் யுத்தம் மூண்டது.

கார்ய லோகத்தில் ஒன்றைச் செய்து முடிப்பதில் அதிக ஸாமர்த்தியம் பெற்றிருந்த கேசித்வஜரே ஜயித்தார்.

காண்டிக்யர் மந்த்ரி-பிரதானிகள், புரோஹிதர்கள் முதலான ஸ்வல்ப பரிவாரத்தோடு காட்டுக்குத் தப்பி ஓடினார். அங்கேயும் யாகங்களை விடாமல் பண்ணினார்.

இங்கே, கேசித்வஜரும் இனி சத்ரு பயமில்லை என்பதால் நிம்மதியாக நிறைய யாகங்கள் செய்யலாமென்று ஆரம்பித்தார்.

கதை உருவாகிறது!

ஏதாவது தடங்கல் வந்தால்தானே கதை, கதையாக ரூபம் எடுக்கும்? இப்போது கேசித்வஜரின் யஜ்ஞாநுஷ்டானத்துக்கு அப்படியொரு தடங்கல் ஏற்பட்டது. ஹோமத்துக்கு ப்ரயோஜனமாகும் க்ஷீரத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த பசுவை ஒரு புலி அடித்துப் போட்டு விட்டது.

கோவதை என்றாலே எந்த ஹிந்துவுக்கும் தன்னால் ஹ்ருதயம் துடித்துப்போகும். அதிலும் யஜ்ஞத்துக்கு உபகரித்து வந்த பசு இந்த கதிக்கு ஆளாயிற்று என்னும் போது கேசித்வஜர் பதறிப் போய்விட்டார். அப்போது

Koviloor Digital Library

அவர் படித்த வேதாந்தம் கைகொடுக்க வந்தது. "நடந்தது நடந்து விட்டது, வருத்தப்பட்டு என்ன ப்ரயோஜனம்?" என்று தேற்றிக் கொண்டார்.

வருத்தத்தை இப்படிப் போக்கிக் கொள்ளலாம்; ஆனால் யக்ஞத்துக்கு பால் தந்த பசு யக்ஞ மத்தியிலேயே போய் விட்டதென்றால் அது சாஸ்த்ரப்படி தோஷ மாயிற்றே. அதை எப்படிப் போக்கிக் கொள்வது?

சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கும் தோஷங்களை நிவ்ருத்தி பண்ணவும் அந்த சாஸ்த்ரங்களிலேயே ப்ராயச் சித்தம் சொல்லியிருக்கும். அவற்றைச் செய்துதான் தோஷத்தைப் போக்கிக் கொள்ளவேண்டும்.

"இப்போது நான் பண்ண வேண்டிய ப்ராயச்சித்தம் என்ன?" என்று தம்முடைய பண்டித ஸதஸைக் கேசித்வஜர் கேட்டார்.

அவர் கர்மாநுஷ்டானத்தில் ஈடுபாடுள்ளவர்தான் என்றாலும், குறிப்பாக ப்ரஹ்ம வித்யையில் சிறப்புப் பெற்றவர்தானே? அதனால் அவருடைய ஸதஸில் கர்மாநுஷ்டானங்களில் விசேஷமாக நைபுண்யம் [நிபுணத்துவம்] பெற்றவர்கள் இல்லை போலிருக்கிறது. அவர்களில் எவருக்கும் தோஷ பரிஹாரமாகப் பண்ண வேண்டிய ப்ராயச்சித்தம் என்னவென்று சொல்லத் தெரியவில்லை.

நம்முடைய பூர்விகர்களுக்கு ஸத்ய ப்ரக்ஞையும், விநயமும் ரொம்பவும் ஜாஸ்தி. அதனால் தங்களுக்குத் தெரியாததைத் தெரியாது என்று ஒப்புக்கொண்டு, யார் தெரிந்தவரோ அவரிடம் தயங்காமல் போய்த் தெரிந்து கொள்வார்கள். வேத, உபநிஷத, இதிஹாஸ, புராணங்களில் இப்படி அநேக எடுத்துக்காட்டுக்கள் பார்க்கலாம்.

இப்போது தங்களுக்குத் தெரியாத ப்ராயச்சித்த ஸமாசாரம் கசேரு என்ற பிராம்மணோத்தமருக்குத்

Koviloor Digital Library

தெரிந்திருக்கலாமென்று நினைத்து அவரைக் கேட்டுப் பார்க்கச் சொன்னார்கள்.

ராஜா கேசித்வஜர் உடனே கசேருவிடம் போய்க் கேட்டார். அவருக்கும் பரிஹாரம் தெரியவில்லை. நாமாக இருந்தால், "ராஜாவே நாம்தான் தெரிந்தவர் என்று வந்து கேட்கிறார். எதையாவது சொல்லி வைப்போமே" என்று நினைப்போம். கசேரு அப்படிப் பண்ணவில்லை. "எனக்குத் தெரியவில்லை. பார்க்கவரைக் கேளும்" என்று சொல்லி விட்டார்.

கேசித்வஜர் பார்க்கவரிடம் போனார். அவர், "எனக்கும் தெரியவில்லை. சுனகருக்குத் தெரிந்திருக்கும். அவரிடம் போம்" என்றார்.

நாமானால், "கோவிந்த நாமாவே ஸர்வ ப்ராயச் சித்தம்" என்று மூணு தரம் "கோவிந்தா" சொல்லிவிட்டு அதோடு விட்டிருப்போம். ஆனால் ஒரு ராஜ்யாதிபதியாக இருக்கப்பட்ட கேசித்வஜர் ஒரு பசுவின் மரணத்துக்குச் செய்ய வேண்டிய ப்ராயச்சித்தத்தில் பூர்ணமாக 'ஸின்ஸிய'ராக இருந்து, சுனகரிடமும் போனார்.

ப்ராயச்சித்தம்: பகவந் நாமமும் வைதிக கர்மமும்

"ஆனால் கோவிந்த நாமா ப்ராயச்சித்தம் இல்லையா?" என்றால் ப்ராயச்சித்தம்தான். வேறு ப்ராயச் சித்தம் எதுவுமே நம்மால் முடியவில்லை என்று தீர்ந்து போய்விட்டபோது தான் அந்தப் பெரிய ப்ராயச்சித்தத் துக்குப் போக வேண்டும். ரொம்பவும் வீர்யமான மருந்தை முதலிலேயே கொடுப்பார்களா? மருந்து, ஊசி, ஆபரேஷன் என்று ஒன்றுக்கப்புறம்தானே மற்றொன்றுக்குப் போவார்கள்? அம்மாதிரி சாஸ்த்ரத்தில் சொன்ன மற்ற பரிஹாரங்கள் நம்மால் முடியவே இல்லை என்றாலோ, அவற்றாலும் பயன் ஏற்பட்டதாகத் தெரியாவிட்டாலோ

Koviloor Digital Library

தான் மஹா பெரிய உபாயமான நாமாவே கதி என்று சரணாகதி செய்ய வேண்டும்.

நமோச்சாரணம் ஸுலபமாயிருக்கிறதென்பதால் நாம் பிறத்தியார் விஷயமாக அதுவே நமக்கு ப்ராயச்சித்தம் என்று பண்ணுவதுபோல், நம் விஷயமாகப் பிறத்தியார் பண்ணினால் சும்மா இருப்போமா? நமக்குத் தர வேண்டிய பணத்தைக் கடன்காரன் தரமாட்டேன் என்கிறான். "கோவிந்த நாமா சொல்லவிட்டேன். கடனைத் திருப்பிக் கொடுக்காத தோஷம் எனக்கு வராது" என்கிறான். ஒப்புக் கொள்வோமா?

அதற்கு உண்டான பரிஹாரத்தைப் பண்ண முடியாத போதுதான் மனஸ் உருகி நாமாவைச் சொல்லி அழுதால் கோவிந்தன் தோஷத்தைக் கழுவி விடுவான்.

வேர்த்து விருவிருத்து, பசித்துக் களைத்து ஒரு வீட்டுக்குப் போகிறோம். நன்றாக ஸ்நானம் பண்ணி, வயிறாரச் சாப்பிடணும் போல இருக்கிறது. வீட்டுக் காரர்கள் "கோவிந்தேதி ஸதா ஸ்நானம்னு இருக்கு. 'கோவிந்தா'ன்னுங்கோ. அதுவே குளிச்சாப் போலே. 'நாமாம்ருதம்'னு நாமாவை ஸாதாரணச் சாப்பாட்டுக்கு மேலே அம்ருதமாவே சொல்லியிருக்கு. அதனாலே போஜனத்துக்குப் பதிலும் 'கோவிந்தா போட்டுடுங்கோ' என்று சொன்னால் அப்போது நமக்குப் பற்றிக் கொண்டு வருமே தவிர, நாம மஹிமையா தெரியும்? நிஜமாகவே மஹிமை தெரியும்போது அதுவே ஸர்வ ப்ராயச்சித்தம் தான்.

சத்ருவிடம் பரிஹாரம் கேட்டல்!

கேசித்வஜர் சுனகரிடம் போனார். அவர் பெரிய குண்டாகத் தூக்கிப் போட்டார். "கசேரு, பார்க்கவர், நான், இன்னம் யாரெல்லாம் பெரியவர்களென்று நீ நினைத்துக்

Koviloor Digital Library

கொண்டிருக்கிறாயோ அந்த எவருக்குமே நீ கேட்கும் விஷயம் தெரியாது. தெரிந்தவர் ஒருத்தரே ஒருத்தர்தான். நீ ஜயித்து, காட்டுக்கு ஓட்டியிருக்கிறாயே, அந்தப் பரம சத்ருவான காண்டிக்ய ஜனகர்தான் தர்ம சாஸ்த்ரம் பூராவும் கரைத்துக் குடித்திருக்கிறாராதலால் அவர் ஒருத்தருக்குத் தான் கர்மா ஸம்பந்தமாக ஒரு விஷயம் விடாமல் தெரியும். அதனால் அவருக்கே இந்த ஸமாசாரமும் நிச்சயம் தெரிந்திருக்கும்'' என்று சொல்லி விட்டார்.

'பரம சத்ருவிடம் போய் பரிஹாரம் கேட்பதா? கேட்டால் தான் அவர் சொல்வாரா?' என்றுதான் வேறு எவராயிருந்தாலும் இந்த நிலையில் நினைத்திருப்பார்கள். 'தன்னாலான முயற்சி பண்ணியாய்விட்டது. எதுவும் பிரயோஜனப்படாததால் ஸர்வ ப்ராயச்சித்தமாக நாம ஜபம் பண்ண வேண்டியதுதான்' என்று இருந்திருப்பார்கள். ஆனால் கேசித்வஜர் அப்படிச் செய்யவில்லை.

'பரம சத்ருவாகத்தான் இருக்கட்டும், எதுவாகத்தான் இருக்கட்டும், நமக்கு வேண்டிய விஷயம் தெரிந்த ஒருவர் இருக்கிறார். நம்முடைய தர்மாசரணையை நாம் மனப்பூர்வ மாகப் பண்ணுகிறோமென்றால், இதிலே தோஷ நிவ்ருத்திக்கு யாரிடம் உபாயம் இருந்தாலும் அவரை ஆச்ரயித்து, பிரார்த்தித்து அதைத் தெரிந்து கொள்ளப் பிரயத்னப்படத்தான் வேண்டும். பிரயத்னம் பலிக்காமல், அவர் சத்ரு பாவத்துடனேயே இருந்து உபாயம் சொல்லா விட்டால் அது அவரைப் பொறுத்த ஸமாசாரம். அவர் பரிஹாரம்தான் சொல்வாரோ, பரிஹாஸம்தான் செய்வாரோ, அவரிடம் போய்க் கேட்க வேண்டியது நம் கடமை' என்று உடனேயே கேசித்வஜர் தீர்மானித்து விட்டார்.

Koviloor Digital Library

அதனால் சுனகரிடம், "மஹர்ஷே! நல்ல தகவல் கொடுத்தீர்கள். ரொம்பவும் நமஸ்காரம். விஷயம் கேட்டுக் கொள்வதற்காக காண்டிக்யனைத் தேடி இப்போதே காட்டுக்குப் போகிறேன். பரிவாரங்களோடு போனால் அங்கேயும் சிறைப் பிடித்து வதைக்க வந்துவிட்டேனென்று நினைத்து அவன் ஓடி ஒளிந்து கொண்டு விடலாம். அதனால் நான் மட்டும் தனியாளாகப் போகிறேன். தனியாய் நான் போவதால் என்னை அவன் கொன்று போட்டாலும் பரவாயில்லை. ஒரு யாகத்தின் பொருட்டுப் போய் உயிரை பலி கொடுத்தாலும் அப்போது அந்த யாகத்தைப் பூர்த்தி செய்த பலனே கிடைத்துவிடும். இப்போது பாதி யாகத்தில் பசு போய் அபூர்த்தியாய் நிற்கும் யாகத்தை இப்படி உயிரைக் கொடுத்துத்தான் நான் பூர்த்தி பண்ணினதாயிருக்கட்டும்! அல்லது அவன் ப்ராயச்சித்த கர்மாவைச் சொல்லிக் கொடுத்தால் ரொம்ப நல்லது. அதைப் பண்ணி அப்புறம் யஜ்ஞத்தைப் பூர்த்தி செய்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கேசித்வஜர் அங்கேயிருந்தே நேரே தான் மட்டும் ரதத்திலேறிக் கொண்டு காட்டுக்குப் போனார்.

உயிரே போனாலும் போகட்டும் என்று ராஜாவாக இருக்கப்பட்ட ஒருவர் கர்மாநுஷ்டானத்தில் இருந்த ச்ரத்தையினால் தனியாளாகக் காட்டுக்கு, சத்ரு இருக்கும் இடத்துக்குப் போனார்.

இதிலே இன்னொரு விசேஷம், ஒரு விஷயத்தில் அறிவு பெறுவதற்காக சத்ருவிடமும் போய் விஜ்ஞாபனம் செய்து கொள்கிற விநய மனப்பான்மை. ஏதோ ஒரு விஷயத்தில் நமக்கு அறிவு பெறணும் என்று இருந்தால்கூட, அதை போதிக்கக் கூடியவர் யார் என்பதையும் கவனித்தே க்ரஹிக்கத் தோன்றும். நமக்குப் பிடிக்காத ஒருவருக்கோ, தாழ்ந்த நிலையிலிருக்கற ஒருவருக்கோதான் அந்த விஷய

Koviloor Digital Library

ஞானம் இருக்கிறது என்றால், 'போயும் போயும் இவனிடமா கேட்டுக் கொள்வது?' என்று விட்டுவிடுவோம். அப்படிக் கூடாதென்றுதான் திருவள்ளுவர் **"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்"** என்று சொன்னார். அந்த உசந்த மனோ பாவத்தைக் கேசித்வஜர் கதையில் பார்க்கிறோம்.

யாகத்தைப் பாதியில் நிறுத்தித்தான் இப்படிக் கேசித்வஜர் பேர் பேராக அலைந்தது. யாகமென்றால் அது முடிந்து அவப்ருத ஸ்நானம் என்பதைப் பண்ணும் வரையில் [யாகத்தை செய்பவனான] யஜமானன் தீக்ஷையுடனேதான் இருக்க வேண்டும். அதாவது க்ஷெளரம் [க்ஷவரம்] பண்ணிக் கொள்ளக் கூடாது. க்ருஷ்ணாஜினம் என்ற கறுப்பு மான் தோல் உடுத்திக் கொள்ள வேண்டும். இன்னம் அநேக நியமங்கள் — அரித்தால்கூட கையால் சொறிந்து கொள்ளாமல் மான் கொம்பால்தான் சொறிந்து கொள்ள வேண்டும் என்கிற மாதிரி. அந்தப்படி இப்போது தாடியும் மீசையும் மான்தோலுமாகத்தான் கேசித்வஜர் இருந்தார். இந்தக் கோலத்திலேயேதான் அவர் காட்டுக்குப் போனது.

காட்டிலே காண்டிக்யரும் அவரது சின்ன பரிவாரமும் இருக்குமிடத்தை கேசித்வஜர் கண்டுபிடித்து விட்டார். உடனே பரம சத்ருவின் இருப்பிடத்துக்குக் கொஞ்சம்கூட மனஸ் கலங்காமல் தேரைச் செலுத்தினார்.

காட்டுக்கு வந்த பரதனை தூரத்திலிருந்து பார்த்ததும் லக்ஷ்மணனுக்கு எப்படிக் கோபம் வந்ததோ அப்படியே தான் இப்போது காண்டிக்யருக்கும் கேசித்வஜரைப் பார்த்ததும் வந்தது. பரதன் பரிவாரத்தோடு வந்தது போலில்லாமல் இவர் தனியாக வந்தும் அவருக்கு ஏன் கோபம் வந்ததென்றால், ஏகாங்கியாக அவர் வருவதே ஒரு சூழ்ச்சிதான் என்ற ஸந்தேஹம் ஏற்பட்டதாலேயே கோபம் வந்தது.

Koviloor Digital Library

"அடே கேசித்வஜா! யஜ்ஞ தீக்ஷ வேஷத்தில் க்ருஷ்ணாஜினம் போட்டுக் கொண்டு நீ வந்தால் நான் உன்னைக் கிட்டே சேர்த்துக் கொண்டுவிடுவேன், அப்புறம் ஸமயம் பார்த்து என்னைத் தீர்த்துக் கட்டிவிடலாம் என்று தான் நீ இப்படி வந்திருக்கிறாயென்று புரிந்து கொண்டு விட்டேனடா! உன்னை முந்திக் கொண்டு நான் இதோ அம்பு போட்டு உன்னைத் தொலைத்து விடுகிறேன் பார்! மான் தோல் போர்த்தியவனைக் கொல்லக் கூடாது என்று தந்திரம் பண்ணினாயானால் அது பலிக்காது. இந்தத் தோலைப் போர்த்திக்கொண்டு உயிரோடு ஓடுகிற மானையே அடிக்க நமக்கு ராஜதர்மம் இடம் கொடுப்பதால், வேஷதாரியான உன்னையும் அந்த விதிப்படி வேட்டையாடுவேன்" என்று காண்டிக்யர் கன கோபமாக நாணேற்ற ஆரம்பித்தார்.

"அப்பா, காண்டிக்யா! அவசரப்படாதே! நான் ஸத்ய மாய் உன்னைக் கொலை பண்ண வரவில்லை. உனக்கு மட்டுமே தெரிந்ததான ஒரு தர்ம சாஸ்த்ர ஸமாசாரம் கேட்டுக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறேன் — நிராயுதபாணியாய் வந்திருக்கிறேன். அறிவு பிக்ஷ போட்டு உபகாரம் பண்ணப்பா. யஜ்ஞ பூர்த்திக்கு அவச்யமான விஷயம் கேட்டுப் போக வந்தேன். அந்த விஷயம் தெரியாமலே போகுமானால், அபூர்ணமாக யஜ்ஞத்தை விடுவதைவிட, என் உயிரையே விடவும் தயாராயிருக் கிறேன். ஆகையால் நீ ஒன்று, கோபத்தை விடு, அல்லது பாணத்தை விடு. இரண்டையும் வரவேற்கிறேன்" என்று கேசித்வஜர் ரொம்பவும் உணர்ச்சியோடு கேட்டுக் கொண்டார்.

தமக்குத் தெரிந்த ஒரு விஷயத்தை அறிந்து போகவே அவர் வந்திருப்பதாகச் சொன்ன மாத்திரத்தில் காண்டிக்யரின் ஸந்தேஹமும் கோபமும் இருந்த இடம் தெரியாமல் ஓடிப் போய்விட்டன.

Koviloor Digital Library

இந்தியப் பண்பாடு

'இண்டியன் கல்ச்சர், இண்டியன் கல்ச்சர்' என்று இப்போது நிறைய ப்ரஸங்கம் பண்ணுகிறோமே, ப்ரஸங்கம் மாத்திரம் பண்ணுகிறோமே, அது வாஸ்தவத்தில் இதுதான். தன் உயிரே போவதாயிருந்தாலும் அறிவை எங்கிருந்தும் பெறப் பாடுபடுவது, அதே மாதிரித் தன் உயிரையே எடுக்கக் கூடியவனாயிருந்தாலும், அவன் சாஸ்த்ரப்படித் தகுதி பெற்றவனாயிருந்தால் தனக்குத் தெரிந்த அறிவை அவனுக்கும் கொடுப்பது — இதுதான் இண்டியன் கல்ச்சர். நம்முடைய பண்பாடு அறிவிலே உயர்ந்த கலாசாரம் என்று லோகமெல்லாம் கொண்டாடும் படியாக வளர்ந்துவந்திருப் பதற்குக் காரணம், தகுந்த பாத்திரம் கிடைத்தபோது அறிவைக் கொஞ்சங்கூட அடைத்து வைக்காமல் திறந்து விட்டதுதான். இதற்குக் 'கான்வெர்ஸா'க இன்னொன்றும் சொல்ல வேண்டும். அபாத்திரத்திடம் அறிவு போனால் அதைவிட விபரீதமில்லை என்பதால் நம் பூர்விகர்கள் இப்படிப்பட்டவர்களுக்குத் தங்கள் உயிரே போனாலும் அறிவைக் கொடுக்க மாட்டார்கள்.

குரு தக்ஷிணை

காண்டிக்யர் கேசித்வஜரிடம் ஸமாதானமாகப் போய் அறிவு தானம் பண்ணுவது அவரோடேயே வனத்தில் வஸித்துக்கொண்டிருந்த மந்த்ரி, புரோஹிதர்களுக்குப் பிடிக்கவில்லை. ராஜ விச்வாஸத்தினாலேயே அவர்களுக்கு இப்படித் தோன்றிற்று. அவரிடம் வந்து, "உங்களிடமிருந்து ராஜ்யத்தை அபஹரித்த சத்ரு ஒண்டியாக வந்திருக்கும் இப்போது அவனோடு யுத்தம் செய்து ராஜ்யத்தைத் திரும்பப் பெறுவதே செய்ய வேண்டியது. இவனுக்கா தர்ம சாஸ்த்ர உபதேசம் பண்ணுவது?" என்று தடுத்தார்கள்.

Koviloor Digital Library

காண்டிக்யரோ, "நீங்கள் சொல்கிறபடி இவனை நான் கொன்றால் எனக்கு பூலோகம் ஸ்வாதீனமாகுமென்பது வாஸ்தவந்தான். ஆனால் நம்பிக்கையின் பேரில், தர்மம் தெரிந்து கொள்வதற்காக வந்து ப்ராணத் தியாகம் செய்வதால் இவனுக்கோ பரலோகமே அல்லவா ஸ்வாதீனமாகி விடும்? நம்பி வந்தவனுக்கு அறிவைத் தராமல் அடைத்து வைத்துக் கொண்ட எனக்கு அந்தப் பரலோகத்தின் வழி அடைத்துத்தானே போய்விடும்? தாற்காலிகமான இஹலோகத்துக்காக சாச்வதமான பரலோகத்தை இழக்கமாட்டேன்" என்று சொல்லி விட்டார்.

கேசித்வஜரைப் பார்த்து, "உன் தர்ம சாஸ்த்ர ஸந்தேஹத்தைக் கேள்" என்றார்.

கேசித்வஜர் விஷயத்தைச் சொன்னார்.

பாதி யஜ்ஞத்தில் பசு வதையானால் என்ன ப்ராயச்சித்தம் பண்ண வேண்டுமோ அது காண்டிக்யருக்குத் தெரிந்திருந்தது. தெரிந்ததைக் கொஞ்சம் கூட ஒளிக்காமல் சொன்னார். எதிரி அல்லவா அந்த ப்ராயச்சித்தத்தால் பயனடையப் போகிறவன் என்று பார்க்காமல் யதோக்தமாய் எல்லாம் உபதேசம் பண்ணினார்.

கேசித்வஜர் ரொம்பவும் ஸந்தோஷத்தோடு ராஜ்யத்துக்குத் திரும்பினார். ப்ராயச்சித்தத்தைப் பண்ணிவிட்டு, அப்புறம் யஜ்ஞத்தையும் பூர்த்தியாக்கி அவப்ருத ஸ்நானம் செய்தார்.

எத்தனையோ. அலைந்து திரிந்து தோஷ பரிஹாரம் தெரிந்து கொண்டு, அதைப் பண்ணி யாகத்தைப் பூர்த்தி செய்தும் ஏனோ தம்முடைய மனஸிலே பூர்த்தியில்லை என்று கேசித்வஜர் கண்டார். 'ஏனோ' என்றால் ஏன், ஏன் என்று ஆலோசித்துப் பார்த்தார். 'யஜ்ஞம் என்கிற சடங்கை

Koviloor Digital Library

மந்த்ரத்திலோ, திரவியத்திலோ கொஞ்சமும் லோபம் [குறைவு] இல்லாமல் பண்ணிவிட்டோம். அது மட்டுமில்லை. யஜ்ஞத்துக்குப் பத்னி தக்ஷிணை. அந்த தக்ஷிணையும் யதேஷ்டமாகக் கொடுத்தாலே பூர்த்தி ஏற்படும். இதிலும் நாம் ஒன்றும் லோபம் வைக்கவில்லை. ரித்விக்குகள், மற்ற ப்ராம்மணர்கள், யாசகர்கள், பொது ஜனங்கள் ஆகிய எல்லோருக்கும் திருப்தியாக அள்ளிக் கொடுத்துவிட்டோமே!' என்று யோஜித்த கேசித்வஜருக்குச் சட்டென்று குறை என்ன என்று புரிந்து விட்டது. 'இத்தனை பேருக்கு இவ்வளவு செய்தாலும் முக்யமான ஒருத்தரை மறந்து போய்விட்டோமே! அவருடைய உதவியில்லா விட்டால் யஜ்ஞம் முடித்தே இருக்க முடியாதே! ப்ராயச் சித்தம் உபதேசம் பண்ணின காண்டிக்யனுக்கு குரு தக்ஷிணை தர மறந்துவிட்டதே! அந்த தக்ஷிணை தராத வரையில் யஜ்ஞம் பூர்த்தியாகாமல் குறைப்பட்டுத்தான் நிற்கும். நம் மனசும் நிறைவு காணாமல் குறைந்து கொண்டு தானிருக்கும்' என்று தெரிந்து கொண்டார்.

உறவு முறைப்படி காண்டிக்யர் இவருக்கு ஒன்றுவிட்ட ஸஹோதரர்; அரசியல் முறைப்படியோ சத்ரு. அப்படிப்பட்டவரையே இப்போது தர்ம முறைப்படி குருவாக நினைத்து தக்ஷிணை தந்து மரியாதை செய்யக் கேசித்வஜர் எண்ணினார். இது அறிவு தானத்துக்கு நம் தேசம் தந்த பெருமை.

என்ன தக்ஷிணை என்று கேசித்வஜர் நிர்ணயம் பண்ணவில்லை. காண்டிக்யரையே கேட்பது, அவர் என்ன கேட்டாலும் கொடுப்பது என்று தீர்மானித்தார். காலத்திலே எந்த உதவி செய்தாலும் அது ஞாலத்தைவிடப் பெரியது என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறா ரென்றால், அதிலும் ஞானமாக, அறிவாகச் செய்யும் உதவிக்கோ ஈடே இல்லை. அதனால் தக்ஷிணை

Koviloor Digital Library

விஷயத்தைக் காண்டிக்யரின் இஷ்டத்துக்கே விட்டு விட வேண்டுமென்று கேசித்வஜர் முடிவு செய்தார்.

அவரிடம் போய்க் கேட்பதற்காக ரதத்திலேறிக் கொண்டு மறுபடி காட்டுக்குப் புறப்பட்டார்.

முன்னே யஜமானக் கோலத்தில் தாடி, மீசை, கிருஷ்ணாஜினங்களோடு போனார். இப்போது அவப்ருத ஸ்நானமாகி விட்டதால் அதெல்லாமில்லாமல் ராஜாக் கோலத்திலேயே போனார்.

காண்டிக்யர் கேட்ட தக்ஷிணை!

இப்படி ராஜரிகத் தோற்றத்துடன் இவர் மறுபடி வருவதைப் பார்த்தவுடன் காண்டிக்யருக்கு எப்படி இருந்திருக்கும்? 'சரிதான். நம்மிடம் விஷயத்தைக் கறந்து கொண்டு யாகத்தை முடித்தாயிற்று. யாக காலத்தில் ஸாத்விகம்தான் அநுஷ்டிக்க வேண்டுமென்பதால் ஸாதுவாக வந்தான். காரியம் ஆக வேண்டுமென்று காலைப் பிடித்தான். இப்போது காரியம் முடிந்துவிட்டதால் கழுத்தைப் பிடிக்கவே மறுபடி வருகிறான்' என்று தீர்மானம் பண்ணிவிட்டார்.

உடனே அம்பைத் தொடுத்து யுத்தத்துக்கு ஆயத்தமாக நின்றார்.

முன் தடவை மாதிரியே அவரைக் கேசித்வஜர் இப்போதும் தடுத்தார். "அப்பா! நான் உனக்கு ஸம்பாவனை பண்ணிவிட்டுப் போக வந்திருக்கிறேனே யொழிய, ஹானி பண்ண வரவில்லை. வேறுவிதமாக எடுத்துக் கொள்ள வேண்டாம். யஜ்ஞ பூர்த்திக்குப் பெரிய உபகாரம் பண்ணின உனக்கு, நீ என்ன தக்ஷிணை கேட்டாலும் ஸமர்ப்பணம் செய்யவே வந்திருக்கிறேன்.. கேள்" என்றார்.

Koviloor Digital Library

என்ன தக்ஷிணை கேட்பதென்று காண்டிக்யர் தம்மோடிருந்த குட்டிப் பரிவாரத்துடன் கலந்து ஆலோசனை செய்தார். இழந்த ராஜ்யத்தைத் திரும்பிக் கேட்டுப் பெறுவதற்கு இதுவே வாய்ப்பு என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்களில் சிலர் இன்னும் ஒரு படி மேலே போய், 'எது கேட்டாலும் தருகிறேன்' என்று கேசித்வஜர் முன் வந்திருக்கிற இந்த வாய்ப்பை விடாமல், தன்னுடைய ராஜ்யத்தோடு அவருடைய ராஜ்யத்தையும் காண்டிக்யர் கேட்டு வாங்கிக் கொண்டுவிட வேண்டு மென்று அபிப்ராயப்பட்டார்கள்.

காண்டிக்யர் தீர்க்கமாக யோசித்துப் பார்த்ததில் அவருக்கு மற்றவர்களின் ஆலோசனை ஸம்மதமாகப் படவில்லை. "ராஜ வம்சத்தில் பிறந்தவனின் ஸ்வதர்மம் ராஜ்யத்தைப் பெற்றுக் கட்டி ஆளுவதே என்பது வாஸ்தவ மாயிருக்கலாம். ஆனால் அப்படிப் பெறுவதும் க்ஷத்ரிய தர்மப்படி யுத்தத்தின் மூலமோ, வீர பராக்ரமத்துக்கு ஸம்மானமாகவோ, அல்லது விவாஹ ஸம்பந்தத்தின் மூலமோதான் இருக்கவேண்டுமேயன்றி, 'தக்ஷிணை' என்ற கௌரவமான பெயரிலுள்ள யாசகத்தால் அல்ல. வேறெந்த விதத்திலும் அர்த்த [பொருள்] ஸம்பாதனம் செய்து கொள்ள உரிமை பெறாத பிராம்மணனுக்குத்தான் அர்த்தமாக [பொருளாக] தானம் பெற உரிமை உண்டு. இது க்ஷத்ரியனான என் தர்மமாகாது. ஒருவனுக்கு தர்ம சாஸ்த்ர விஷயம் சொல்லி அதற்கு ப்ரதியாக அதர்மமான முறையில் ராஜ்ய தானம் வாங்கிக் கொண்டேனானால் பதிதனாகி விடுவேன்.

"தர்ம–அர்த்த–காம–மோக்ஷங்களில், 'தர்ம உபதேசத் துக்காக அர்த்தம் பெற வேண்டும்' என்ற காமம் எனக்கு இப்போதில்லை. மோக்ஷத்துக்கு நேர் வழியாக முடிவிலே வருகிற ப்ரம்ம வித்யையில்தான் இப்போது எனக்கு

Koviloor Digital Library

நாட்டம் ஏற்பட்டிருக்கிறது. கேசித்வஜன் என்னிடமிருந்து கர்மத்தைப் பற்றிய தர்மத்தைக் கேட்டுக் கொண்டாற் போலவே நான் அவனிடம் ப்ரஹ்ம வித்யையில் உபதேசம் பெற்றுக் கொள்ள ஆசைப்படுகிறேன். என் வித்யா தானத்துக்கு தக்ஷிணையாக அவனிடமிருந்து இன்னொரு வித்யா தானமே கேட்கப் போகிறேன். எந்த ஜாதியாரும் அறிவுதானம் பெறத் தடையில்லை.

" 'க்ஷத்ரியனின் ஸ்வதர்மம் ராஜ்யத்தைப் பெற்று ஆட்சி நடத்துவதே அல்லவா?' என்று நீங்கள் கேட்டால் அதற்கும் பதில் வைத்திருக்கிறேன். ராஜ்யத்தைப் பெற்று ஆட்சி நடத்தினவன்தான் நான். அதிலே எனக்கு ஸாமர்த்யம் போதவில்லை என்று இப்போது நாம் காட்டிலே வந்து வஸித்து, நீங்கள் இவனிடம் என்னைப் பிச்சை கேட்கச் சொல்வதிலிருந்தே நன்றாக நிதர்சன மாயிருக்கிறது. ப்ரஜைகளைப் பாலித்து, சத்ருக்களைத் தடுத்து, ராஜ்ய ரக்ஷணம் செய்ய சக்தியில்லாத நான், ராஜ்யத்தைக் கேட்காமல் போனால் அது தோஷமாகாது. சக்தியுள்ள க்ஷத்ரியன் ராஜ்யத்துக்குப் பாடுபடுவதுதான் தர்மத்தில் ஆசை. சக்தியில்லாத நான் அப்படிச் செய்தால் அது போகத்தில் ஆசைதான். இப்படிப்பட்டவனை ராஜ்ய பாரமும் ராஜ போகமும் ஸம்ஸாரத்தில் மேலும் அழுத்தத்தான் செய்யும். ஸ்வதர்மம் என்பதோ படிப்படியாய் ஜீவனை ஸம்ஸாரத்திலிருந்து விடுவிக்கப் பக்குவப்படுத்துவதல்லவா? என்னால் முடியாததும், என்னை ஸம்ஸாரத்தில் மேலும் அழுத்துவதுமான ராஜ்ய பாரத்தை கேசித்வஜன் என்னிடமிருந்து அபஹரித்தது பகவான் எனக்குச் செய்த அநுக்ரஹமே என்று இப்போது தெரிந்து கொண்டிருக்கிறேன். எனக்கு இந்த ராஜ்யமில்லை என்று பகவான் வைத்துவிட்ட பிறகும் நான் ஆத்ம ஸாம்ராஜ்யத்தை அறிய முயற்சி பண்ணாவிட்டால் —

Koviloor Digital Library

அதுவும் ஆத்ம வித்யையில் கரைகடந்தவனான இவன், 'என்ன வேணுமானாலும் தருகிறேன்' என்று சொல்லியும் அந்த அறிவு தானம் பெறாவிட்டால் — என்னைப் போல முட்டாள் எவனும் இருக்க முடியாது.

"உயிர் போனாலும் போகட்டும் என்று இவன் அன்றைக்கு ப்ராயச்சித்தம் கேட்டுக் கொள்ள வந்ததும், இன்றைக்கு மறுபடி தக்ஷிணை தர வந்திருப்பதும் எதனால்? இவனுடைய அத்யாத்ம சாஸ்த்ர ஞானத்தினால்தானே? இவன் இப்போதே ஞானமார்க்க ஸித்தனாக ஆத்மாவில் ஒன்றிப்போய் உட்காராவிட்டாலும் இவனுடைய ஆத்ம சாஸ்த்ர ஞானம் உள்ளூர இவனுக்குக் கைகொடுத்துக் கொண்டே வந்திருக்கிறது. ஆத்மா அமரமானது என்ற அந்த நிச்சய புத்தியாலேயே உயிர் இருப்பதையும் போவதையும் இவன் பொருட்படுத்தவில்லை. அதே மாதிரி, உயிரோடிருந்து உலகத்தையே கட்டியாள்வதையும் இவன் என்னைப் போல பாரமாக நினைக்காமல், ராஜ்ய 'பாரம்' என்பதையும் லேசாக எடுத்துக் கொண்டு என்னைவிட நன்றாகப் பாலனம் பண்ணவும் இவனுடைய ஆத்ம சாஸ்த்ர அறிவே ஸஹாயம் செய்திருக்கிறது. அவனிடமே அந்த ராஜ்யப் பொறுப்பை விடுவதுதான் எனக்கு அறிவுடைமையாகும்.

"இத்தனை நாளாக, நமக்கு அநுகூலமாக ஸந்தர்பம் ஏற்படும்போது மறுபடி ராஜ்யத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்திலேயே வனவாஸம் செய்தேன். இப்போது அந்த எண்ணத்தை விட்டுவிட்டேன். ராஜ்யத்துக்குத் திரும்புவது பற்றி இனி ஒரு நாளும் நினைக்க மாட்டேன். இவனிடம் ஆத்மோபதேசம் வாங்கிக் கொண்டு, இந்த வனத்திலேயே அதற்கான ஸாதனையைப் பண்ணி ஸித்தி பெற்று முடிந்து போவது என்றே முடிவு செய்துவிட்டேன்" என்று காண்டிக்யர் உறுதியாகச் சொன்னார்.

Koviloor Digital Library

கேசித்வஜரிடம், "எனக்கு வேண்டிய தக்ஷிணை இது தான்: அத்யாத்ம வித்யையை உபதேசிக்க வேணும்" என்று ரொம்பவும் தாழ்மையோடு கேட்டுக் கொண்டார்.

"அப்படியா? நன்றாக ஆலோசனை பண்ணித்தான் கேட்கிறாயா? இப்போது என்னிடமிருந்து ஸுலபமாய் ராஜ்யத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டுவிடலாமே! நன்றாகச் சிந்தனை பண்ணிச் சொல்லு'' என்றார் கேசித்வஜர்.

"நன்றாக யோஜித்துத்தான் கேட்கிறேன். ராஜ் யத்தைப் பற்றிய விசாரம் எனக்கு இல்லாமல் நீ அதை எடுத்துக்கொண்டு பெரிய உபகாரம் பண்ணியிருக்கிறாய். நீயோ அதை நிர்விசாரமாகவே நிர்வாஹம் பண்ணுகிறாய். அதற்கு உன்னைப் பக்குவப்படுத்தியிருப்பது அத்யாத்ம சாஸ்த்ரம். அதனால் அதுதான் எனக்கு வேண்டும். க்ஷத்ரிய தர்மப்படி அர்த்தம் யாசிக்காமல் வித்யாதானம் கேட்கிறேன். அநுக்ரஹம் பண்ணணும்" என்று காண்டிக்யர் பிரார்த்தித்துக் கொண்டார்.

ஸந்தர்பங்கள் உருவாவதைப் பொறுத்துச் சில பேருக்கு ஓர் உச்சமான கட்டத்தில் திடீர்ப் பக்குவம் வந்து விடும். படிப்படியாகப் பக்குவமாவதே பொது நியதியானாலும் ஈச்வர க்ருபையில் சில பேருக்கு க்ஷண காலத்தில் பல படி தாண்டிப் போகிற ஸ்திதி ஏற்படும். அம்மாதிரிதான் இப்போது, பல காலமாகக் காண்டிக்யர் அப்யஸித்து வந்திருக்கும் கர்மாநுஷ்டான பலத்தில் ஏற்பட்ட சித்த சுத்தி என்பதன் விசேஷமும், அந்த விசேஷத்தோடு க்ருபா விசேஷமும் சேர்ந்து அவர் நேரே ஞான மார்க்கத்தை அப்யஸிப்பதற்கான ஆர்வத்தையும் ச்ரத்தையையும் பெற்றுவிட்டார்.

Koviloor Digital Library

பரம சத்ருக்கள் குரு-சிஷ்யரானது

நம்முடைய பண்பாட்டிற்கேற்க கேசித்வஜர் இதைப் பார்த்துப் பெருமை கொண்டார். தம்மை விடவும் ஒரு படி அவர் மேலே போய்விட்டதில் பொறாமைப் படாமல் பெருமைப்பட்டார். "அப்பா! நான் ஆத்ம சாஸ்த்ரம் நிறைய அறிந்திருந்தும் ஆத்ம ஸாதனைக்கே என்னை அர்ப்பணித்துக் கொள்ளாமல் இன்னமும் காம க்ரோதாதிகளைப் போக்கிக் கொள்வதற்காக ஸ்வதர்மம், கர்மாநுஷ்டானம் ஆகியவற்றைத் தொடர வேண்டியவ னாகவே இருக்கிறேன். இவற்றால் பாபத்தைப் போக்கிக் கொள்வது போலவே, பூர்வ புண்யங்களையும் போக்கிக் கொண்டால்தான், பாப-புண்யம் இரண்டும் அறியாத ஆத்மாவில் சேரலாம். அதனால்தான், உடலை வருத்திக் கர்மா பண்ணிப் பூர்வ பாபத்தைப் போக்கிக் கொள்வது போலவே, உடலுக்கு ராஜ போக ஸௌக்யம் என்பதையும் கொடுத்துப் புண்யத்தைப் போக்கிக் கொள்கிறேன். இன்னும் சில காலம் எனக்கு இந்தக் கர்ம யோகமும் ராஜபோகமும் நீடிக்க வேண்டியதாயிருக்கிறது. ஆனால் நீயோ இப்போது என்னிடம் ஆத்ம சாஸ்த்ரம் கற்றுக் கொண்டு உடனேயே நேராக ஆத்ம ஸாதனைக்குப் போவதற்கான விவேகத்தைப் பெற்றுவிட்டாய். நீ அத்ருஷ்டசாலி. வா, உனக்கு ஸாங்கோபாங்கமாக வேதாந்தம் சொல்கிறேன்" என்றார் கேசித்வஜர்.

இங்கே அவர் சத்ருவான காண்டிக்யரைத் தங்களுடைய குலத்துக்கே ஆனந்தமூட்டும் வார்ஸான "குல நந்தனன்" என்று அழைப்பதாக இந்தக் கதையைச் சொல்லும் விஷ்ணு புராணத்தில் இருக்கிறது.

அப்புறம் அஷ்டாங்க யோகம், ஈச்வர பக்தி ஆகியவற்றை உபநிஷத்துக்களில் சொல்லியிருக்கும் ஞான தத்வங்களோடு அழகாக இழைத்து, சுலபமாகப் புரிந்து

Koviloor Digital Library

கொள்ளும்படி காண்டிக்யருக்குக் கேசித்வஜர் உபதேசம் செய்தார்.

ஆத்ம ஞானத்துக்கு நம் தேசம் தந்த பெருமைக்கு அளவேயில்லை. அதனால்தான் பரம சத்ருக்களாக இருந்த இரண்டு பேரில் இப்படி ஒருவர் குருவாகவும், மற்றவர் சிஷ்யராகவும் ஆனார்கள்.

உபதேசத்தைக் காண்டிக்யர் நன்றாக உள்ளே வாங்கிக் கொண்டார். அதிலே ஸந்தோஷம் கொண்ட கேசித்வஜர், "இன்னும் நான் உனக்கு என்ன பண்ணணும்?" என்று பரம அன்போடு கேட்டார்.

அதே அன்போடு காண்டிக்யரும், "நீ பண்ணுவதற்கு இனியும் ஏதாவது மீதியிருக்கிறதா என்ன? அகண்டமான ஆத்ம ஸ்வரூபத்தையே அல்லவா எனக்கும் காட்டிக் கொடுத்துவிட்டாய்? என் ச்ரேயஸுக்காக என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ, அத்தனையும் பண்ணி விட்டாய். இன்னும் எனக்காக மெனக்கிடாமல் நீ ராஜ்யத்துக்குத் திரும்பலாம்" என்று நன்றியோடு சொல்லி நமஸ்காரம் செய்தார். உபசாரங்கள் பண்ணிக் கேசித்வஜரை ஊருக்குத் திருப்பியனுப்பி வைத்தார்.

அப்புறம் காண்டிக்யர் தாம் பெற்ற உபதேசத்துக்கு உரிய ஸாதனையைத் தீவிரமாகச் செய்து, பிரம்ம நிர்வாணம் அடைந்தார். கேசித்வஜரும் கர்மத்தால் பாப க்ஷயமும், போகத்தால் புண்ய க்ஷயமும் ஏற்பட்ட பிறகு ஞான அநுஷ்டானங்கள் பண்ணி மோக்ஷ ஸித்தி அடைந்தார்.

கதையின் படிப்பினைகள்

பல உயர்ந்த லக்ஷ்யங்களை இந்த விஷ்ணு புராண உபாக்யானம் காட்டுகிறது. படிப்பறிவையே அநுபவ அறிவு

Koviloor Digital Library

என்று மயங்காமல் படித்ததைப் பரிச்ரமப்பட்டு படிப்படியாக வாழ்க்கையநுபவமாக்கிக் கொள்வது; அவரவருக்கும் வாய்த்த ஸ்வதர்மக் கடமையைப் பேணி நடப்பது; செய்கிற அநுஷ்டானத்தில் மனப்பூர்வமான பக்தி ச்ரத்தைகள் காட்டுவது; தர்மத்தைத் தெரிந்து கொண்டு செய்வதற்காகத் தன் உயிருக்கே ஆபத்தையும் பொருட் படுத்தாமல் முயல்வது; ராஜ்ய லாபத்தைவிடவும் ஆத்ம ஞானத்துக்கான உபாயத்தையே பெரிதாகப் போற்றுவது என்றிப்படிப் பல குறிக்கோள்களை இந்த இரண்டு ஜனகர்களின் கதை நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

இதெல்லாவற்றையும்விடக் குறிப்பாகத் தெரியும் ஒரு கொள்கை, அறிவுக்குத் தடை போடாமல் யோக்யதாம்ச முள்ள எவரிடமிருந்தும் சொந்த பாச-த்வேஷங்கள் பாராட்டாமல் அதைக் கோர வேண்டுமென்பதும், அதே போல யோக்யதையுள்ள எவருக்கும் அதை ஸ்வய விருப்பு-வெறுப்புப் பாராமல் கொடுக்க வேண்டுமென்பது மாகும். அன்புக்கு மட்டும்தான் அடைக்கும் தாழில்லை என்று இல்லை, அறிவுக்கும் அப்படியே என்பதே பாரதீயர்கள் கடைப்பிடித்த உன்னத நெறி என்பதற்கு இந்த உபாக்யானம் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. இப்படி ஸகலருக்கும் அறிவைத் தடையில்லாமல் பரப்ப வேண்டு மென்ற எண்ணம் ஏற்பட வேண்டுமானால் அதற்கும் அன்புதான் காரணம்.

Koviloor Digital Library

"ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே !"[1]

முகவுரை

அண்மையில்[2] நூற்றாண்டு விழா கண்டவர் ஸங்கீத சக்கரவர்த்தி அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் அவர்கள். மூன்றாண்டுகளில் நூறு தொடவிருப்பவர் ஞானச் சக்கரவர்த்தியான காஞ்சி ஸ்ரீ மஹா ஸ்வாமிகள். இவர் "தேவச் சொர்க்கச் சக்கரவர்த்திப் பெருமா"ளான முருகனைப் பற்றிய ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் கிருதிக்கு அரியக்குடியிடம் முத்தாகப் பொருள் கூறியது மறக்க வொண்ணா நிகழ்ச்சி.

1961 ஜூன் மாதம் ஸ்வாமிகள் தேவகோட்டையில் நீண்ட முகாமிட்டிருந்தார்கள். ஜாடையில்கூட ஏதும் தெரிவிக்காத காஷ்ட மௌனம் பூண்டு, அது ஒரு வாரம். பத்து நாளென்று நீண்டுகொண்டே போயிற்று. அடியாரின் விண்ணப்பங்களைச் செவி கொள்கிறாரா என்றுகூடத் தெரியவில்லை. இந்த நிலையில் ஒரு நாள் காலை, அடுத்துள்ள காரைக்குடியைச் சேர்ந்த நகரத்தார் பெருமக்கள் சிலர் அவரைத் தரிசித்துத் தங்கள் விஞ்ஞா பனங்களை ஸமர்ப்பித்தனர். அவர்கள் பேச்சிடையே அரியக்குடியவர்கள் காரைக்குடியில் இருப்பதாகப் பிரஸ்தாவம் வந்தது.

---

1. இவ்வுரையை 'தெய்வ விஷயம்' என்ற பிரிவில் வெளியிடவும் இடமுண்டாயினும், இதில் இசை தொடர்பாகவும் பல விஷயங்கள் வருவதால் 'பண்பாடு' என்பதில் சேர்த்திருக்கிறது.
2. இக்கட்டுரை வெளியான 1990 தீபாவளியின் போதாகும்.

Koviloor Digital Library

உடனே அனைவருக்கும் ஆச்சரியமாக, அவரை அழைத்து வர முடியுமா என ஸ்ரீ ஸ்வாமிகள் சைகையில் கேட்டார்கள்.

உத்தரவானதாக அரியக்குடிக்குச் சொல்வதாகக் கூறி அவர்கள் விடைபெற்றனர்.

அன்று பிற்பகல் மூன்று மணியளவில் அரியக்குடி ஸ்வாமிகளின் முகாமுக்கு வந்துவிட்டார். பரவசம் என்றே சொல்லக்கூடிய பரபரப்புடன் வந்தார். காஷ்ட மௌனத் திலிருந்த ஜகதாசாரியர்கள் தம்மைக் கூப்பிட்டனுப்பி யிருக்கிறாரென்பதில் ஏற்பட்ட உணர்ச்சி மிகுதி!

ஜகதாசாரியர்கள் ஜகத்திலேயே எளியவற்றை உவப்பவரல்லவா? அதற்கேற்கவே இருந்தது அவர் தேவ கோட்டையில் தங்கியிருந்த ஜாகை. ஒரு விடுதியின் தோட்டப்புறத்திலிருந்த சிறிய அறையில் ஸ்வாமிகளின் வாஸம் அமைந்திருந்தது. வாயிற்பக்க வழியாக பக்தர்கள் தரிசிப்பதற்கின்றித் தோட்டம் பார்க்க அமைந்த சிறிய ஜன்னலொன்றைத் திறந்து வைத்துக் கொண்டு அதன் வழியேதான் தரிசனம் தந்து வந்தார். அடியார்கள் செடியும் கொடியும் புல்லும் மண்டிய பின்புறப் பகுதிக்கு வந்து சாளரம் வழியே ஸ்வாமிகளைக் கண்டு சென்றனர். சுகஜீவன சொகஸுகளை விரும்பும் நமக்கும் தமது எளிய வாழ்முறையில் சிறிதேனும் பழக்கம் தரவோ என்னவோ, ஸ்வாமிகள் இவ்விதம் செய்வதுண்டுதானே?

அரியக்குடி வந்துவிட்டாரென்று ஸ்வாமிகளிடம் அறிவிக்கப்பட்டவுடன் அவரையும் பின்புற ஜன்னலுக்கே அழைத்து வருமாறு ஸமிக்ஞை செய்தார்கள்.

அரியக்குடி அவ்விதமே தோட்டப்புறம் வந்து ஸாஷ்டாங்கமாகத் தண்டனிட்டெழுந்தார்.

அவ்வளவுதான். அனைவருக்கும் மகிழ்ச்சியாக, ஒன்று நடந்தது — அத்தனை நாட்கள் தக்ஷிணாமூர்த்தியாக

Koviloor Digital Library

இருந்த குரு மூர்த்தியின் மணிக்குரல் அதற்கே உரிய ஜீவச் செழிப்போடு ஒலிக்கலாயிற்று. கடகடவென பேசிக் கொண்டே போனார்கள்.

"நீ ராஷ்ட்ரபதி அவார்ட் வாங்கினதெல்லாம் கேள்விப்பட்டேன். அப்போ ஒனக்கு ரெட் கார்ப்பெட் போட்டு — அப்படின்னா என்னன்னு தெரிஞ்சுண்டிருப்பே; நடைபாவாடையா ரத்னக் கம்பளம் போட்டு — பெரிய ஸதஸுலே கௌரவப்படுத்தியிருப்பா. நான் என்னடான்னா இங்கே கல்லும் முள்ளுமா ஒரு கீக்கிடத்திலே ஒன்னை ஒக்காத்தி வெக்கறேன்.

ஸங்கீதமும் ஸாஹித்யமும்

"எதுக்குக் கூப்பிட்டேன்னா, 'ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே' இருக்கே*, அதை யாராவது சுத்தமாப் பாடிக் கேக்கணும்னு ஒரு ஆசை. ஒன் பேரு காதுல பட்டவுடனே அந்த நினைப்பு வந்துடுத்து... சுத்தமாப் பாடறதுன்னா ஸங்கீதமும் சுத்தமாயிருக்கணும்; ஸாஹித்ய உச்சரிப்பும் சுத்தமாயிருக்கணும். ரொம்பப் பேர் தெலுங்கு, ஸம்ஸ்க்ருதக் கீர்த்தனங்களிலே வார்த்தைகளை விரூபமாக்கிடறா.

"ஸங்கீத அம்சத்தையும், தாளத்தையும், ஸாஹித்ய சந்தஸையும் — 'சந்தம்'னு தமிழ்ல சொல்றாளே, அது, அதையும் — அநுஸரிச்சுச் சில கீர்த்தனங்களிலே வார்த்தைகளை ஒரு தினுஸாச் சேர்த்து, பிரிச்சு எல்லாம் கொடுத்திருக்கும். அதாவது ஸாஹித்யம்னு எழுதிப் பார்க்கிறதுக்கு இப்படி ரூபம் பண்ணியிருக்கும். அதையே ஸங்கீதமா — அர்த்தபாவம் கலந்த ஸங்கீதமா — பாடறப்போ ஸங்கீதம், தாளம் இதுகளோடகூட அர்த்தத்துக்கும் ஹானி

* ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றிய 'ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே' என்ற பாடல்.

Koviloor Digital Library

இல்லாம எப்படி ஸந்தி பிரிக்கணுமோ, சேர்க்கணுமோ அப்படிப் பாடணும். நல்ல வாக்யேகாரராள் க்ருதிகள் இதுமாதிரி சுத்தமாப் பதம் பிரிச்சுப் பாட நிச்சயமா எடம் குடுக்கும். ஆனா, பாடறவாள்ள ரொம்பப் பேர் அர்த்தத்தைக் கவனிக்காம ஸங்கீதத்தை மட்டும் கவனிக்கிறதுல, எழுத்தில இருக்கிற பாட்டே காதுல கேட்கிறப்போ விபரீதமா அர்த்தம் கொடுக்கும்படியாப் பண்ணிடறா...

"இந்த 'ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே'யிலேயே ஒரு எடத்துல 'குருகுஹாயாஜ்ஞான த்வாந்த ஸவித்ரே'ன்னு வரது. அது 'குருகுஹாய, அஜ்ஞான த்வாந்த ஸவித்ரே'ன்னு பிரிஞ்சாதான் ஸரியான அர்த்தம் குடுக்கும். 'குருகுஹனுக்கு, அஞ்ஞான இருட்டுக்கு ஸூர்யனாயிருக் கிறவனுக்கு (நமஸ்காரம்)'னு அர்த்தம். சில பேர் என்ன பண்ணறான்னா 'குருகுஹாயா'ன்னு அப்படியே நீட்டி அதை ஒரு தனி வார்த்தை மாதிரிக் காட்டிட்டு, 'ஞான த்வாந்த ஸவித்ரே'ன்னு – அதாவது, ஞான இருட்டுக்கு ஸூர்யன்னு – விபரீதமாப் பாடறா!

" 'சங்கராசார்யம்' க்ருதி இருக்கே[1], நீ பாடறயோ என்னவோ, [வீணை] தனம்மா குடும்பத்துல வந்து, செம்மங்குடி சீனு[2], எம்.எஸ்.கூட பாடறா — அதிலே 'பரமாத்வைத ஸ்தாபன லீலம்'னு வரது. 'விளையாட் டாவே பரம தத்வமான அத்வைதத்தை ஸ்தாபிச்சவர்'னு அர்த்தம். பாடறச்சே 'பரம அத்வைத ஸ்தாபன லீலம்'னு (பாடியே காட்டுகிறார்கள்) 'அ'வுல அழுத்தங் குடுத்துப் பதம் பிரிச்சுப் பாடினாத்தான் ஸரியா அர்த்தம் குடுக்கும்.

1. ஆதி சங்கரர் பற்றி சங்கராபரண ராகத்தில் ஸுப்பராம தீக்ஷிதர் இயற்றிய பாடல்.
2. செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர்

Koviloor Digital Library

நான் ஏதோ காமாசோமான்னு பாடறச்சேயே இந்த மாதிரி ஸங்கீதத்துக்கும் ஹானியில்லாம, தாளத்துக்கும் ஹானி யில்லாம, அதோடகூட அர்த்தத்துக்கும் ஹானியில்லாமப் பாட முடியறதுன்னு தெரியறதோல்லியோ? நான் சொன்னவாள்ளாமும் இப்படித்தான் பாடறா. ஆனா, புரிஞ்சுக்காதவா, புரிஞ்சுண்டு பாடணும்கிற கவலை இல்லாதவா, 'பரமா'ன்னு அப்படியே நீட்டிண்டே போய் 'த்வைத ஸ்தாபன லீலம்'னு பாடி அத்வைத ஆசார்யாளை த்வைத ஆசார்யாளா கன்வெர்ட் பண்ணிடறா! [வெகு நேரம் சிரிக்கிறார்கள்.]

"ஸங்கீதத்தில் த்வைதம்-அத்வைதம் முதலான எந்த பேதமும் இல்லைதான். ஸங்கீதத்தில் ஸங்கீதந்தான் முக்யம். ஸாஹித்யம் எதைப் பத்தினதோ, யாரைப் பத்தினதோ அதிலே பாடறவா மனஸை ஸங்கீதமே ஐக்யப்படுத்தி விடறது. அதனாலதான் நீ, வைஷ்ணவன், ஓங்கிட்ட 'ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய' ஒட்டிண்டிருக்கு; இல்லாட்டா, நீ அதுகிட்ட ஒட்டிண்டிருக்கே; எதுவோ ஒண்ணு. அந்த க்ருதி நீ பாடிக் கேட்டிருக்கேன். ஸங்கீத அம்சத்துல நீ சுத்தம்கிறதுக்கு நான் சொல்ல வேண்டாம். ஸாஹித்யமும் நீ சுத்தமாப் பாடறேன்னு கவனிச்சேன். அதனாலதான் ஒனக்குச் சொல்லி அனுப்பினேன்.

"என் தர்பார்ல கல்லும் முள்ளும்தான்! பக்க வாத்தியமும் இல்லாம, தம்பூர்கூட இல்லாம வந்திருக்கே. எத்தனை ச்ரமமானாலும் ஸஹிச்சுண்டு எனக்காகக் கொஞ்சம் அந்த க்ருதியைப் பாடு."

கடல் மடையாகப் பேசிப் போன ஸ்வாமிகள் நிறுத்தியதும் அரியக்குடி கடல் மடையாகவே கண்ணீர் பெருக்கிவிட்டார். மீண்டும் ஒரு முறை ஸ்வாமிகள் முன் நெடுஞ்சாண்கிடையாக வணங்கி எழுந்தார். 'பெரியவா' பாடச் சொல்லிப் 'பெரியவா'ளுக்காகப் பாடுவதை விட

Koviloor Digital Library

எந்தப் பெரிய கௌரவமும் தமக்கில்லை என்று கூறினார். "தாஸனையும் பொருட்டாக எண்ணி வலிந்து ஸந்தர்ப்பம் கொடுத்து அநுக்ரஹித்திருக்கிற கருணைக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ச்ருதி, பக்க வாத்தியம் எல்லாவற்றுக்கும் பெரியவாள் அநுக்ரஹமேதான் இட்டு நிரப்ப வேண்டும். 'அவ்விடத்தில்' எதிர்பார்க்கும் அளவுக்கு சரியாகப் பாடவும் அநுக்ரஹந்தான் ஸஹாயம் செய்ய வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டு பாட ஆயத்தமானார்.

இடங்களின் பெயர்களில் ராகங்கள்

ஸ்வாமிகள், "[கிருதியின் ராகம்] காம்போதி-ன்னு சொல்றோம். புஸ்தகப் பேரு காம்போஜிதானே?" என்று கேட்கிறார்கள்.

அரியக்குடி ஆமாம் என்றவுடன் ஸ்வாமிகள் கூறலானார். "காம்போஜம் என்கிறது கம்போடியான்னு பல பேருக்குத் தெரிஞ்சிருக்கும். அங்கே பாரத கலாசாரம் ரொம்ப ஆழமாப் பரவியிருக்கிறதும் தெரிஞ்சிருக்கலாம். ஒரு வேளை அந்தத் தேசத்திலேருந்து இறக்குமதி பண்ணிண்ட ராகம்தான் காம்போஜியோன்னா, அப்படி யில்லைன்னு ஸாம்பமூர்த்தி* மாதிரியான ரிஸர்ச்காரா சொல்றா. நம்ம கிட்டேயிருந்துதான் அவா அநேக ஸமாசாரம் கடன் வாங்கிண்டாளே தவிர, நாம அந்தக் காலத்திலே நாகரிகத்திலே ரொம்பப் பின்தங்கியிருந்த அவாகிட்டேயிருந்து எதுவும் எடுத்துக்கலை; நிச்சயமா, ஸங்கீதத்திலே ரொம்ப முன்னேறியிருந்த நாம ஏதோ folk musicதான் இருந்த கிழக்காசிய தேசங்களிலிருந்து எதுவும் கடன் வாங்கலைன்னு சொல்றா. பின்னே ஏன் காம்போஜின்னு பேருன்னா இன்னொண்ணு தோணறது.

* காலஞ்சென்ற பேராசிரியர் பி. ஸாம்பமூர்த்தி

Koviloor Digital Library

கம்போடியாவை மாத்திரம் காம்போஜம்னு சொல்லலை. இந்தியாவோட வடக்கத்தி எல்லையை ஒட்டினாப்பல இருக்கிற ஒரு ப்ரதேசத்தையும் காம்போஜம்னே சொல்லியிருக்கா-ன்னு தெரியறது. காளிதாஸன் ரொம்ப விஷயம் தெரிஞ்சவர். 'மேக ஸந்தேச'த்துல 'இந்தந்த வழியா போ'ன்னு மேகத்துங்கிட்ட யக்ஷன் சொல்லிண்டு போறதை வெச்சே கரெக்டா map போட்டுடலாம்! அவ்வளவு ஸரியா சொல்லியிருப்பார். அவர் 'ரகுவம்ச'த்துல ரகு தேசம் தேசமாப் படை எடுத்துண்டு போய் ஜயிச்சதை வரிசையாச் சொல்லிண்டு போறச்சே, ஸிந்து நதியைத் தாண்டி வடக்கே இமயமலையை ஒட்டினாப்போலேயே காம்போஜத்தைச் சொல்லியிருக்கார். இதிலேருந்து அகண்ட பாரதம்னும் விசால இந்தியான்னும் சொல்ற தேசத்துக்குள்ளேயே ஹிண்டுகுஷ் பிராந்தியத்திலே ஒரு காம்போஜம் இருந்திருக்கிறதாத் தெரியறது. அங்கே விசேஷமாயிருந்த ஒரு ராகத்திலேயிருந்து காம்போஜி உண்டாச்சு போலேயிருக்கு.

"அநேக ராகங்கள் ஒவ்வொரு சீமையிலேருந்து வந்ததாலேயோ என்னமோ, அந்தச் சீமையின் பேரை வெச்சுண்டிருக்கோல்லியோ? 'ஸௌராஷ்டிரம்', 'நவரஸ கன்னட' — 'கன்னட'ன்னேகூட ஒரு ராகம் — 'ஸிந்து பைரவி', 'யமுனா கல்யாணி', இப்படியெல்லாம் இருக்கோல்லியோ? அந்த மாதிரி, காம்போஜப் பிரதேச ஸம்பந்தமா காம்போஜி ராகம்னு இருக்கலாம்.

"ரிஸர்ச் பண்றவா என்ன சொல்றா-ன்னா காம்போதி, மோஹனம் மாதிரி சில ராகங்கள் தேசம் பூராவுமே ரொம்ப ஆதி காலத்திலேருந்து இருந்திருக்குங்கிறா. அப்பறம் அதுக்கு நன்னா மெருகேத்தினவா எந்தச் சீமைக்காராளோ அதன் பேரு ராகத்துக்கு வந்திருக்கலாங்கிறா...

Koviloor Digital Library

"கேதாரம்கிறது இமயமலையில இருக்கிற க்ஷேத்ரம். 'கேதார்நாத்' என்கிறது. 'கௌள' என்கிறது கௌட தேசம்; பெங்கால். கேதாரம்னு ராகம் இருக்கு. கௌளைன்னு ராகம் இருக்கு. ரெண்டையும் சேர்த்துக் கேதார கௌளைன்னும் இருக்கு. இந்த மூணு ராகமும் ப்ராசீனமா தக்ஷிணத்திலே இருந்திருக்குங்கிறா. அப்படியிருக்கச்சே வடகோடி இமயமலை, கீழ்க்கோடி பெங்கால் பேர்கள் சேர்ந்திருக்குன்னா இதுகளை ஸ்பெஷலைஸ் பண்ணினவா — ஒருத்தரோ, பல பேரோ — அந்தச் சீமைகளிலே இருந்திருக்கலாம்னுதானே தோணறது? மநுஷாளை, குறிப்பா ஸங்கீத வித்வான்களை அவாளோட ஊர்ப் பேரிலேயே சொல்ற வழக்கம் ஒன்னையே 'அரியக் குடி'ங்கிறதுலேந்து தெரியறது. இப்படி ஒரொரு ராகத்தைப் பிரஸித்தி பண்ணின வித்வானோட சீமைப் பேரிலயே கன்னட, கௌளை, கேதாரம், காம்போஜி-ங்கிற மாதிரிப் பேர்கள் வந்திருக்கலாம்.

தேவாரப் பண்கள்

"ஒனக்குப் பண்ணாராய்ச்சியிலே பரிசயம் உண்டோ?"

"அவ்வளவாக இல்லை."

"திருப்பாவைக்கு ராகம் போட்டிருக்கியே! ஆனா, தேவாரம் மாதிரி திவ்ய ப்ரபந்தங்களிலே பண் பேர் கொடுக்கவுமில்லை; பாசுரம் ஸேவிக்கிறவா ஸங்கீதமாப் பாடறதுமில்லையே! திவ்ய ப்ரபந்தத்தை ப்ராம்மணாளே சொல்றதாலே வேதம் மாதிரியா ஒரு தினுஸா அதை ஏத்தல் எறக்கல் ப்ராஸத்தோட சொல்றதுன்னுதானே ஏற்பட்டிருக்கு? நீ ஒன் மனோபாவப்படி, மனோதர்மப்படி [திருப்பாவைக்கு ராகம்] போட்டாயாக்கும்?"

"ஏதோ எனக்குத் தெரிஞ்ச அளவுக்கு."

Koviloor Digital Library

"அதுவேதான் ஸ்டான்டர்டா மத்த வித்வான்களும் ஒத்துண்டு பாடற மாதிரி ஆயிருக்கே! ......நம்மோட பழைய ராகங்கள் ஒரிஜினல் ரூபம் மாறாம, ரொம்பக் காலமா வந்துண்டிருக்கிறது தேவாரப் பண்களிலேதான்னு தெரியறது. வேதத்தை ஸ்வரம் தப்பாம வைதிகாள் வம்ச பரம்பரையா ரக்ஷிச்சுக் கொடுத்திருக்கிற மாதிரியே ஓதுவா மூர்த்திகள் வழிவழியா தேவாரங்களை ரூபம் மாத்தாம — செய்யுள் ரூபம் மாத்ரமில்லை; பண்ணோட ரூபமும் மாறாம — காப்பாத்திண்டு வந்திருக்கா. ப்க்திக்குத் தொண்டே ஸங்கீதத்துக்கும் பெரிய தொண்டாயிருக்கு. இப்போ சங்கராபரணம், பைரவி, நீலாம்பரின்னுல்லாம் சொல்ற ராகங்கள் வேறே பேருல இன்னின்ன பண்ணாயிருந்து, அப்படியே தொடர்ந்து பாடிண்டு வரா–ன்னு ரிஸர்ச் பண்ணி நிச்சயப்படுத்தியிருக்கா. இதுல ஸௌராஷ்ட்ரம், கேதாரகௌளை இருக்கு. காம்போதியும் இருக்கு. யதுகுல காம்போதிகூட இருக்கு. காம்போதிக்குத் 'தக்கேசி'ன்னோ என்னமோ பண்ணிலே பேர் சொல்றா...[1] காம்போதி மேளராகம்[2] இல்லையோல்லியோ?"

"இல்லை, ஹரிகாம்போதிதான் மேளம், காம்போதி [அதன்] ஜன்யம்.[3]"

"ஆனா ஹரிகாம்போதியைவிட ஃபேமஸா இருக்கு. அப்பாவைவிட பிள்ளை ஒசத்தியாயிருக்காப்பல இப்படி

1. காம்போதி தக்கேசிப் பண்ணேதான்.
2. ஏறுவரிசை, இறங்கு வரிசை இரண்டிலும் ஏழு ஸ்வரங்களும் கிரமமாகவும், அன்னிய ஸ்வரம் கலக்காமலும் அமைந்த ஸம்பூர்ண ராகம்.
3. ஒரு மேளராகத்தின் ஸ்வரங்களில் ஒன்றையோ சிலவற்றையோ விட்டுவிட்டது. 'ஜன்யம்' என்றால் மூலமான மேளராகத்திலிருந்து 'பிறந்தது' என்று பொருள்.

Koviloor Digital Library

சில ஜன்ய ராகங்கள் ஜனக ராகத்தைவிட ப்ரபலமாயிருக்கு இல்லியா?"

"பைரவியும் பெரியவா சொல்சிற மாதிரிதான். அது நடபைரவி ஜன்யம்."

"ஸரி, நீ பாடு. வரவழைச்ச கார்யத்தைப் பண்ண விடாம ஊர்க்கதையிலே போயிண்டிருக்கேன்."

'ஒன்ஸ் மோர்!'

அரியதோர் இசை விருந்தாக அரியக்குடியவர்கள் 'ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே' பாடினார். பக்க வாத்தியங்களும் தம்புரா சுருதியுமின்றி அவர் பாடினாலும் நிறைவாகவே இருந்தது.

கிருதி முழுதையும் அவர் பாடி முடிக்கும் வரையில் ஸ்வாமிகள் கண்மூடி ஆழ்ந்து, செவி மடுத்தார்கள்.

முடிந்ததும், "நீ தனியாப் பாடினதாலேயே பாட்டு இன்னும் எடுப்பா நின்னுது. வார்த்தைகளும் ஸ்பஷ்டமாக் கேட்டுது. 'த்ருப்தோஸ்மி'* சொல்றேன். இன்னொரு தரம் பாடு. 'ஒன்ஸ் மோர்' எதுக்குக் கேக்கறேன்னா — வாக்கியம் வாக்கியமா நிறுத்திப் பாடு. அர்த்தம் சொல்லிண்டு வரேன். ஒனக்குத் தெரியாதுங்கிறதுக்காக இல்லே. அந்த வ்யாஜத்திலே என் மனஸை இன்னம் சித்தே தீக்ஷிதர் வாளுடைய ஸாஹித்ய அழகிலே சுத்த விடறதுக்காகவும் தான் சொல்றேன். இங்கே இருக்கிறவாள்ளாமும் மஹான் களோட ஸ்ருஷ்டிகளில எவ்வளவு அழகு, அர்த்தம் இருக்குன்னு தெரிஞ்சுப்பா" என்று ஸ்வாமிகள் ஆக்ஞாபித்தார்.

* வைதிக கர்மாக்களில் செய்யப்படும் உபசாரங்களைக் குறித்துப் புரோஹிதர் தமது திருப்தியைக் கூறும் வாசகம்.

Koviloor Digital Library

அரியக்குடியவர்கள் ஒவ்வொரு சொற்றொடராக நிறுத்தி மீண்டும் அக் கிருதியைப் பாட, ஸ்வாமிகள் பொருள் விளக்கி வந்தார்கள். அதனை, இதே விஷயங்கள் தொடர்பாக வேறு சில சமயங்களில் அவர்கள் அருளியவற்றிலிருந்து சில சுடர்மணிகளையும் சேர்த்து இங்கு அளிக்கப்படுகிறது.

முகவுரை முற்றும்

* * *

'ஸுப்ரஹ்மண்யர்' என்றால் வைதிக தெய்வம்

"ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய நமஸ்தே, நமஸ்தே":

"ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கு மறுபடி மறுபடி நமஸ்காரம்" என்று எல்லோருக்கும் புரியும். மங்களமாக 'ஸ்ரீ' என்று ஆரம்பித்து ஒன்றுக்கு இரண்டாக 'நமஸ்தே' சொல்லியிருக்கிறார். ஒரு தடவைக்கு மேல் சொல்லி விட்டால் அனந்தம் தடவை சொல்லிவிட்டதாக அர்த்தம். முக்யமான ஒரு விஷயத்தை அழுத்தமாகச் சொல்வ தென்றால் இப்படி டூப்ளிகேட் பண்ணுவது வழக்கம். 'போற்றி, போற்றி' என்பது அப்படித்தான். 'ஜய ஜய சங்கர' என்கிறோம். ப்ரஹ்மஸூத்ரம்கூட ஒரே வாக்யத்தை இரண்டு தடவை திருப்பித்தான் முடிகிறது.

"நமஸ்தே நமஸ்தே" — "தே" - உனக்கு; "நம:" - நமஸ்காரம். 'நம: தே' என்பது 'நமஸ்தே' என்றாகும். "தே" — உனக்கு. "ஸுப்ரஹ்மண்யாய" - ஸுப்ரஹ்மண்யனுக்கு. பாட்டு முழுக்க 'க்கு' போட்டுக் கொண்டு நாலாம் வேற்றுமையிலேயே போகிறது.

ஸுப்ரஹ்மண்யனான உனக்கு நமஸ்காரம். அனந்த கோடி நமஸ்காரம்.

Koviloor Digital Library

ஸுப்ரஹ்மண்யன் என்றால்? நல்ல ப்ரஹ்மண்யன். தேர்ந்த ப்ரஹ்மண்யன். ப்ரஹ்மண்யன் என்றால்?

'ப்ரஹ்மம்' என்றால் ஸத்யமான பரமாத்ம ஸ்வரூபம் என்று மாத்ரமே அர்த்தம் பண்ணிக்கொள்கிறோம். 'ப்ரஹ்ம' பதத்துக்கு இன்னொரு முக்யமான அர்த்தம் 'வேதம்' என்பது. வேதத்துக்கு 'ப்ரஹ்ம' என்று ஒரு பெயர். அதனால்தான் வேத மந்திரத்தில் ஒரு குழந்தைக்கு தீக்ஷை கொடுப்பதான உபநயனத்தை 'ப்ரஹ்மோபதேசம்' என்பது. வேதம் கற்றுக் கொள்வதாலேயே அந்தக் குழந்தை 'ப்ரஹ்மசாரி' ஆகிறான். 'ப்ரஹ்ம யஜ்ஞம்' என்கிற மாதிரியான பல இடங்களிலும் 'ப்ரஹ்ம' என்றால் வேதம் என்றே அர்த்தம். வேதத்தை அநுஸரிப்பது, அநுஷ்டிப்பது — அதாவது வைதிகம் என்பதுதான் ப்ரஹ்மண்யம். அதை முக்கியமாகக் கொண்டவர்களே ப்ராஹ்மணர்கள். வேதங்களின் பரம தாத்பர்யமான ப்ரஹ்மமாகிற பரமாத்ம ஸ்வரூபமாகவே இருப்பதால் ஸுப்ரஹ்மண்யராக இருக்கப்பட்ட மூர்த்தி வைதிகத்தின் விசேஷ தெய்வமாக, வைதிகர்களின் விசேஷ தெய்வமாக இருப்பதாலும் ஸுப்ரஹ்மண்யராகிறார்.

வேதத்துக்கு முக்கியமென்ன? அக்னி உபாஸனை. ஸுப்ரஹ்மண்யர்தானே அக்னி ஸ்வரூபமாயிருப்பவர்? பரமேச்வரனின் நேத்ராக்னிப் பொறி ஆறு சேர்ந்துதானே அவராக ஆனது? அதனால் அவர் வேத தேவராக இருப்பவர். வேதம் படிப்பதும் சொல்லிக் கொடுப்பதுமே தொழிலாயுள்ள ப்ராஹ்மணர்களின் தெய்வமாயிருப்பவர் ஸுப்ரஹ்மண்யர்.

ஆசார்யாளும் 'ஸுப்ரஹ்மண்ய புஜங்க'த்தில், **"மஹீதேவ தேவம், மஹாவேத** *பாவம்*, **மஹாதேவ** *பாலம்*" என்று சொல்லியிருக்கிறார். 'மஹீதேவர்' என்றால் 'ப்ராஹ்மணர்'. 'மஹீதேவ தேவர்' என்றால் ப்ராஹ்மணர் களின் தெய்வம் என்று அர்த்தம்.

Koviloor Digital Library

தமிழிலுள்ள பக்தி நூல்களில் ரொம்பவும் புராதனமான 'திருமுருகாற்றுப்படை'யிலும் இப்படியே தான் சொல்லியிருக்கிறது. ஷண்முகனின் ஆறு முகங்களில் ஒவ்வொன்றும் ஒருவிதமான அநுக்ரஹம் செய்வதாக நக்கீரர் சொல்லிக் கொண்டு போகும்போது

ஒரு முகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅது
அந்தணர் வேள்வியோர்க்கும்மே

என்று சொல்லியிருக்கிறார். திருவேரகம் என்கிற ஸ்வாமி மலையை வர்ணிக்கிற இடத்திலும் அங்கே நல்ல ப்ரஹ்மசர்ய அநுஷ்டானமுள்ள ப்ராஹ்மணர்கள் முத்தீ வளர்த்து யஜ்ஞாதிகள் செய்து ஸுப்ரஹ்மண்ய மந்திர ஜபமும் பூஜையும் செய்வதையே சொல்லியிருக்கிறார்.

யஜ்ஞ கர்மத்தில் பங்கு கொண்டு செய்கிற ப்ராஹ்மணர்களுக்கு ரித்விக் என்று பெயர். பதினாறு வகையான ரித்விக்குகளில் ஒருவருக்குப் பேர் 'ஸுப்ரஹ்மண்ய' என்பது.

'ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி' என்பதே குமாரஸ்வாமிக்கு ப்ரஸித்த நாமாவாக இருப்பதிலிருந்தே அவர் வேதத்துக்கும் வைதிகத்துக்கும் அதிதேவதை என்று நிச்சயமாகிறது.

தீக்ஷிதரும் முருகனும்

முத்துஸ்வாமி தீக்ஷிதருக்கு ஸுப்ரஹ்மண்ய ஸம்பந்தம் ஜாஸ்தி. அவர் ஸகல க்ஷேத்ரங்களுக்கும் போய் ஸகல தெய்வங்களையும் பாடி வைத்தவர். ஆசார்யாள் மாதிரி. ஆனாலும் உபாஸனையில் அவரை அம்பாள் பக்தராகவே விசேஷமாகத் தெரிந்து கொண்டிருக்கிறோம். கடைசியிலும் அவர் மீனாக்ஷியம்மன் பேரில் 'பாசமோசனி' என்று பாடிக்கொண்டேதான் சரீரத்தை விட்டிருக்கிறார். ஆனால் அவருடைய பிறப்பு, அவருக்கு ஸாஹித்ய

Koviloor Digital Library

வ்யுத்பத்தி [ஆற்றல்] ஏற்பட்டது முதலியவற்றிலெல்லாம் ஸுப்ரஹ்மண்ய ஸம்பந்தமே இருக்கிறது.

முத்துஸ்வாமி என்கிற பேரே வைத்தீச்வரன் கோவில் முத்துக்குமாரஸ்வாமியின் பெயரை வைத்துத்தான் அவருக்கு நாமகரணமாயிருக்கிறது. அப்பா ராமஸ்வாமி தீக்ஷிதர் — அவரும் பெரிய பண்டிதர். ஸங்கீதத்தில் நிரம்பத் தெரிந்தவர். ஸாஹித்யங்கள் பண்ணியிருப்பவர். பெரிய ஸ்ரீவித்யா உபாஸகருங்கூட. அவருக்கு நாற்பது வயசு வரை புத்ர பாக்யமில்லை. பத்னியோடுகூட வைத்தீச்வரன் கோவிலுக்குப் போய் முத்துக்குமாரஸ்வாமி ஸந்நிதியில் ஒரு மண்டலம் விரதம் இருந்தார். அந்த அம்மாளுக்குத் தன் மடியிலே தேங்காய், பழம் முதலான மங்கள வஸ்துக்களை யாரோ கட்டுவதாக ஸ்வப்னம் ஏற்பட்டது. அடுத்தாற் போலவே கர்ப்பமும் உண்டாயிற்று. முத்துக்குமாரஸ்வாமி புத்ரவரம் தந்ததற்கே அப்படி ஸ்வப்னத்தில் ஸமிக்ஞையா யிருக்கிறதென்று புரிந்து கொண்டார்கள். அதற்கேற்றாற் போல் பிள்ளையும் ஒரு க்ருத்திகா நக்ஷத்திரத்திலேயே — அது பங்குனி மாஸ க்ருத்திகை — பிறந்தது. அப்படிப் பிறந்தவர்தான் முத்துஸ்வாமி தீக்ஷிதர்.

அப்புறம் அவர் வளர்ந்து ஸங்கீத அப்யாஸம், ஸ்ரீவித்யா அப்யாஸம், காசியில் ஸந்நியாஸ குருவுடன் வாஸம் எல்லாம் பண்ணினார். காசியிலேயே குரு ஸித்தியானார். ஸித்தியாகிற ஸமயத்தில் அவர் தீக்ஷிதரிடம் "தக்ஷிணத்துக்குத் திரும்பிப் போய்விடு. அங்கே முதலில் திருத்தணிக்குப் போ. நீ எதற்காக ஜன்மா எடுத்திருக் கிறாயோ அது ஸபலமாகும்படியாக [பலிதமடையுமாறு] ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி அநுக்ரஹம் பண்ணுவார்" என்று சொன்னார்.

அப்படியே தீக்ஷிதர் திருத்தணிக்குப் போனார். அடிவாரத்தில் திருக்குளத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டு

Koviloor Digital Library

அவர் மலை ஏறிப் போய்க் கொண்டிருக்கும்போது முன்பின் தெரியாத ஒரு கிழ ப்ராஹ்மணர் அவரை, "முத்துஸ்வாமி!" என்று பெயர் சொல்லிக் கூப்பிட்டு, "வாயைத் திற" என்றார். அவர் அப்படியே பண்ணியதும் வாயிலே ஒரு கல்கண்டைப் போட்டுவிட்டு போன இடம் தெரியாமல் போய்விட்டார். வந்தது யாரென்று தீக்ஷிதருக்குப் புரிந்து விட்டது. இவர் வந்த கார்யமும் தத்க்ஷணமே ஆரம்பித்து விட்டது — ஸாஹித்ய வ்யுத்பத்தி ஏற்பட்டுவிட்டது! தகப்பனாரான பரமேச்வரனுக்கும் குருவாக இருந்த குஹன் மீது அப்போதே எட்டு வேற்றுமைகளில் ஒவ்வொன்றிலும் ஒரு க்ருதியாக எட்டு க்ருதிகளைப் பாடிவிட்டார்.

க்ருதிகளில் தம் முத்ரையாக அவர் 'குருகுஹ' என்ற ஸுப்ரஹ்மண்ய நாமாவையே வைத்திருப்பதையும் குறிப்பாகக் கவனிக்க வேண்டும். குகையில் இருப்பவன் குஹன். ஹ்ருதய அந்தரங்கம் என்ற குகையில் ஆத்ம ஸ்வரூபமாக உள்ள குருதான் குருகுஹன்.

தீக்ஷிதர் சரீர யாத்திரையை முடித்தது ஒரு தீபாவளியில். அதற்கு அடுத்த ஆறாம் நாள்தான் மஹா ஸ்கந்த ஷஷ்டி வருவதும். ஷஷ்டியன்று பூர்த்தியாகிற விதத்தில் ஆறு நாள் வ்ரத உபவாஸங்களிருப்பது வழக்கம். அதாவது தீக்ஷிதர்வாளின் பிறப்பு மட்டுமில்லாமல் முக்தியடைந்ததிலும் ஒரு ஸுப்ரஹ்மண்ய ஸம்பந்தம் தெரிகிறது...

தீக்ஷிதர் க்ஷேத்ரம் க்ஷேத்ரமாகப் போய் அங்கேயுள்ள மூர்த்தியை — அது என்ன மூர்த்தியானாலும் அதை — வித்யாஸமில்லாமல் பாடினார் என்றேன். அந்தந்த க்ருதியிலேயே அது எந்த க்ஷேத்ரத்தைப் பற்றியது என்பதற்கு அகச் சான்று என்கிறார்களே, அப்படிப்பட்ட internal evidence இருக்கும். குறிப்பிட்ட க்ஷேத்ரத்தில் அந்த

Koviloor Digital Library

ஸ்வாமிக்கு உள்ள பெயர், அதற்கான மந்த்ர ரஹஸ்யம், அந்த ஸ்தல புராணக் குறிப்பு என்று ஏதாவது இருக்கும். இந்த 'ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய'வில் குறிப்பாக அது இன்ன க்ஷேத்ரத்தில் பாடியது என்று காட்டுவதாக ஒன்றுமில்லை.

அத்தனை ஸுப்ரஹ்மண்ய க்ஷேத்ரங்களிலுள்ள மூர்த்திகளையும் சேர்த்துத் தம்முடைய பாட்டினாலேயே மூலமூர்த்தியாக அவர் பண்ணிவைத்து விட்ட மாதிரி இந்த க்ருதி பிரகாசிக்கிறது!

அனந்தகோடி நமஸ்காரத்தோடு ஆரம்பித்திருக்கிறார் அப்புறம் —

முருகனின் அழகும் அருளும்

"மநஸிஜ கோடி கோடி லாவண்யாய":

இரண்டு தடவை 'நமஸ்தே' போட்ட மாதிரி இரண்டு தடவை 'கோடி' போட்டிருக்கார். கோடியைக் கோடியால் பெருக்கினால் எவ்வளவு பெரிசு? அதுதான் 'கோடி கோடி'.

'மநஸிஜ கோடி கோடி' — கோடி கோடி மன்மதர்கள். மநஸிஜன் என்பது மன்மதன் பெயர். மனஸிலிருந்து ஜனித்தவன் மநஸிஜன். காமம் மனஸில் பிறப்பதுதானே? புராண ரீதியிலும் கதை இருக்கிறது. மஹா விஷ்ணுவின் புத்ரனே மன்மதன். ஆனாலும் ரொம்ப விசித்ரமாக, காமனான அவன் மஹாலக்ஷ்மியிடம் பெருமாளின் காமத்தினால் அவளுடைய கர்ப்பத்திலிருந்து பிறந்தவனில்லை. விஷ்ணுவின் மனஸிலிருந்தே — அவர் மனஸால் எண்ணின மாத்திரத்திலேயே அவன் உண்டாகிவிட்டான். இன்னொரு பிள்ளை ப்ரம்மாவும் நேரே தகப்பனாரான விஷ்ணுவின் நாபியிலிருந்தே உண்டானவர். இப்படி எல்லாமே ஸ்வாமி வேடிக்கை விசித்ரமாகப் பண்ணுகிறார்!

Koviloor Digital Library

அழகுக்குப் பெயரெடுத்தவன் மன்மதன். 'மன்மதன்னு எண்ணம்!' என்றுதான் பரிஹாஸம் பண்ணுகிறோம். அப்படிப்பட்ட மன்மதர்கள் கோடி கோடி பேரின் அழகு சேர்ந்தால் எவ்வளவு அழகாயிருக்குமோ அத்தனை அழகானவர் ஸுப்ரஹ்மண்யர். 'மநஸிஜ கோடி கோடி லாவண்யர்'.

க்ருஷ்ண பரமாத்மாவைப் பற்றி [பாகவதத்தில்] **"ஸாக்ஷாத் மன்மத மன்மத:"** என்று சொல்லியிருக்கிறது. மன்மதனுக்கும் மன்மதனாக இருக்கப்பட்ட அப்பேர்ப் பட்ட ஸௌந்தர்யவான் என்று அர்த்தம். அவர் மன்மதனையே படைத்தவர். அவருடைய மனஸுக்குள்ளேயிருந்துதான் அவன் ஸ்ருஷ்டியானது. மன்மதனுக்கும் மூலமானவர் மன்மத மன்மதனாக இருப்பதில் ஆச்சர்யமில்லை. க்ருஷ்ணனாக அவர் வந்தபோதும் மன்மதனேதான் அவருடைய பிள்ளையான ப்ரத்யும்னனாக வந்து தனக்கு அவரே மூலபுருஷர் என்று காட்டியிருக்கிறான்.

ஸுப்ரஹ்மண்யர் கோடி கோடி மன்மத லாவண்யராக இருப்பதுதான் ஆச்சர்யம். இவர் யார்? பரமேச்வரனின் புத்ரர். அந்தப் பரமேச்வரனோ மன்மதனை அப்படியே பஸ்மம் பண்ணினவர். எந்த நேத்ராக்னியினாலே அவர் மன்மதனைப் பொசுக்கினாரோ அதே நேத்ராக்னியிலிருந்து உண்டானவர் ஸுப்ரஹ்மண்யர். காமத்திலே பிறக்காமல் ஞானத்திலே பிறந்தவர். ஞானமே லோகத்தை ரக்ஷிக்க வேண்டும் என்று கருணாமூர்த்தியாக ஆன ஸ்வரூபம் என்று தத்வார்த்தம். தத்வார்த்தம் இருக்கட்டும். நான் வேடிக்கையாகச் சொல்ல வந்தேன் — மன்மதனை தஹனம் பண்ணினவரின் பிள்ளை கோடி கோடி மன்மதனாக இருக்கிறார்!

குமாரன் என்பது அவருக்கு ஒரு விசேஷப் பேர் அல்லவா? தெற்கே எப்படிப் பிள்ளை என்றாலே பார்வதி

Koviloor Digital Library

பரமேச்வரர்களின் மூத்த பிள்ளைதான் என்று வைத்துப் 'பிள்ளையார்' என்கிறோமோ, அப்படி வடக்கே இளைய பிள்ளையைத்தான் கொண்டாடி 'குமார்', 'குமார்' என்றே சொல்கிறார்கள். நாமுங்கூட குமாரஸ்வாமி, குமரன் என்று சொல்கிறோம். இப்போது புருஷ ப்ரஜைகளில் பாதிப் பேருக்குப் பேர் 'குமார்'தான்! 'குமார' சப்தம் குறிப்பாக ஸுப்ரஹ்மண்யருக்கே உரியதாக இருக்கிறது. வால்மீகி ராமாயணத்தில் விச்வாமித்திரர் ராம லக்ஷ்மணர்களுக்கு ஸுப்ரஹ்மண்ய அவதாரக் கதையைச் சொல்லி முடிக்கும் போது இந்தக் 'குமார ஸம்பவ'க் கதையைக் கேட்டால் இன்னின்ன பலன் கிடைக்கும் என்று சொன்னதாக வருகிறது. ஆதி கவி வாக்கில் வந்த 'குமார ஸம்பவம்' என்ற வார்த்தையையே காளிதாஸர் தம்முடைய காவ்யத்துக்குத் தலைப்பாகப் போட்டார்.

குமாரன் என்ற பேர் விசேஷம் இருக்கட்டும். அதை எதற்குச் சொல்ல வந்தேனென்றால், அதற்குப் பிள்ளை என்ற அர்த்தத்தோடு மன்மத ஸம்பந்தமாக இன்னோர் அர்த்தமும் சொல்வதுண்டு. மன்மதனுக்கு 'மாரன்' என்றும் ஒரு பேர் உண்டல்லவா? மாரனுக்கு வெட்கத்தை உண்டாக்குகிறவன், அதாவது மாரனைப் பழிக்கும் மஹா அழகன்தான் குமாரன்: 'குத்ஸித மார: — குமார:'. குமாரன் என்றாலே மன்மத மன்மதன், மநஸிஜ கோடி கோடி லாவண்யன் என்று அர்த்தம் ஏற்பட்டுவிடுகிறது.

தமிழ் தேசத்துக்கு அவர் ரொம்பப் பிரியம். தமிழ்த் தெய்வம் என்றே சொல்கிறோம். தமிழில் வைதாரையும் வாழ வைப்பவர் என்கிறோம். இந்த பாஷையில் அவருக்கென்று அருமையாக ஒரு பெயர் சூட்டியிருக் கிறோம் — முருகன். முருகு என்றாலே அழகு என்றுதான் சொல்கிறார்கள். காமன் எரிந்து போன அப்புறம் அவனுடைய கரும்பு வில்லையும் புஷ்ப பாணத்தையும்

Koviloor Digital Library

அம்பாளே எடுத்துக் கொண்டு காமேச்வரி ஆனாள். அதனால்தான் ஸுப்ரஹ்மண்ய அவதாரம் ஏற்பட்டது. அவளுக்குப் பேரே ஸுந்தரி, த்ரிபுரஸுந்தரி. அவளுடைய பிள்ளை, தாயைப் போலப் பிள்ளை என்றபடி லாவண்ய மூர்த்தியாகத்தானே இருப்பார்? 'மநஸிஜ கோடி கோடி லாவண்யாய.'

"தீன சரண்யாய":

அழகு இருந்தால் போதுமா? நமக்கு வேண்டியது அருள். ஸ்வாமி அழகு வடிவமாக இருக்கிறாரென்றால் அந்த அழகே அருள் வடிவம்தான். காருண்யம்தான் லாவண்யம். இரண்டும் வேறே வேறேயில்லை. ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி தீன ஜனங்களுக்கெல்லாம் புகலிடமாக இருப்பவர் — 'தீன சரண்யர்'. எளியவர்கள், கஷ்டப்படுகிறவர்கள், பயப்படுகிறவர்கள், தரித்ரர்கள் எல்லாரும் 'தீனர்கள்' என்ற வார்த்தைக்குள் வந்து விடுவார்கள். இவர்களுக்கெல்லாம் துக்க நிவ்ருத்தி தரும் புகலாக அவர் இருக்கிறார். 'தீன சரண்யர்'.

பாடலின் சில சிறப்பம்சங்கள்

தீன சரண்யாய.... லாவண்யாய... ஸுப்ரஹ்மண்யாய — எல்லாம் ஒரே மாதிரி, எதுகையோ மோனையோ ஏதோ ஒன்றாக, பாடியிருக்கிறார். எதுகைதான். ஆனால் வார்த்தையின் ஆரம்பம் எதுகையாக இல்லாமல் முடிவில் இருக்கிறது. இதை 'அந்த்ய ப்ராஸம்' என்பார்கள். 'யாய', 'யாய' என்று வருவது 'அவருக்கு' என்று நாலாம் வேற்றுமையில் அர்த்தம் கொடுக்கும். 'ஸுப்ரஹ்மண் யருக்கு, கோடி கோடி மன்மத லாவண்யருக்கு, தீன சரண்யருக்கு நமஸ்காரம்'. 'உனக்கு நமஸ்காரம்' என்பது தான் 'நமஸ்தே'.

Koviloor Digital Library

'மநஸிஜ கோடி கோடி...' என்று வேகமான கதியில் பாடித் திருப்புவது வழக்கமாயிருக்கிறது. ஆரம்பத்திலிருந்து மெதுவாக, கம்பீரமாகப் பாடிக்கொண்டு வந்து இங்கே வேகமாகத் திருப்புவது. முதலில் பாடுவது சௌக காலம். விளம்ப காலம் என்றும் சொல்வார்கள். 'விளம்பம்' நல்ல ஸம்ஸ்க்ருத வார்த்தை. Slow என்று அர்த்தம். 'சௌகம்' — ஸரியாகப் புரிபடவில்லை. 'ஸௌக்யம்'தான் 'சௌக'மாச்சோ என்னவோ? நிதானமாகப் பாடினால் மனஸுக்கு விச்ராந்தியாக, ரொம்ப ஸௌக்யம் உண்டாகிறது. அது ராகத்தின் இழுப்பு, வளைசல்களுக்கு இடம் கொடுத்து ராக பாவத்தையும் விசேஷமாகத் தெரிவிக்கிறது. ஸாஹித்யத்தின் அர்த்த பாவத்திலேயும் தோய்ந்து நிற்க அவகாசம் கொடுக்கிறது. தீக்ஷிதர்வாள் க்ருதிகளில் இது தனிச் சிறப்பு. கம்பீரமான ஸம்ஸ்க்ருத பாஷை அதற்கேற்ற கம்பீர நடையோடு மத்த கஜம் அசங்கி அசங்கி வருகிற மாதிரி சௌக க்ருதிகளாகப் பண்ணிக் கொடுத்திருக்கிறார்.

ஆனாலும் நாம் அவஸர ப்ரக்ருதிகளாக இருக்கிறோமோல்லியோ? மனஸாலே, உடம்பாலே சாஞ்சல்ய மயமாக ஓடிக் கொண்டேயிருப்பதுதானே நம் நேச்சராக இருக்கிறது? அதனால் ஒரே சௌகமாக வளர்ந்து கொண்டு போனால் அலுப்புத் தட்டிப் போகிறது. அதற்காகத்தான் மாற்றாகக் கொஞ்சம் அங்கங்கே வேகமான நடையில் திருப்பும்படியாகவும் ஒவ்வோர் உருப்படியிலும் வைத்திருக்கிறார். சௌக காலத்துக்கு ரிலீஃபாக மத்யம காலம். ஒரே தித்திப்பு லட்டு சாப்பிட்டால் திகட்டப் போகிறதென்று கிராம்பு போட்டு விருவிரு பண்ணுகிற மாதிரி பாட்டிலேயும் கொஞ்சம் விருவிரு.

இந்தப் பாட்டில் பல்லவி, சரணம் இரண்டிலேயும் முடிக்கிற இடத்தில் மத்யம கால ஆவர்த்தங்கள்

Koviloor Digital Library

வைத்திருக்கிறார். ஆனால் பெரும்பாலான பாட்டுக்களில் அநுபல்லவியிலேயும் சரணத்திலேயும்தான் மத்யம காலம் வைத்திருப்பார். ஸுப்ரஹ்மண்யர் நல்ல யுவா. **"என்றும் இளையாய்"** என்று சொல்லப்படுகிறவர். அதனால் ஆரம்பத்திலேயே அவர் குதிநடை போட்டுக்கொண்டு வருகிற மாதிரி மத்யம காலம் வைத்து விட்டார் போலிருக்கிறது!

எல்லோருக்கும் பொதுவான ஸ்வாமி

"பூஸுராதி ஸமஸ்தஜன பூஜிதாப்ஜ சரணாய":

"பிராமணர் முதலான எல்லா மக்களாலும் பூஜிக்கப்படும் தாமரைப் பாதங்களை உடையவர்." "சரணாய" — பாதங்களை உடையவருக்கு, "நம:" — நமஸ்காரம் என்று, பல்லவியில் வரும் 'நமஸ்தே'யோடு சேரும்.

"பூஸுராதி" — பிராமணர் முதலிய. 'பூஸுரர்' என்றால் பிராமணர். 'ஸுரர்' — தேவர்கள். யாகம் செய்து தேவர்களை பூமிக்கு வரவழைப்பதால், அவர்களுடைய அநுக்ரஹத்தால் பூமிக்குப் பலவித க்ஷேமங்களை உண்டாக்குவதால் பிராமணரை 'பூஸுரர்' என்பது. அந்தக் கடமையைச் சரியாகச் செய்தால்தான் இந்தப் பட்டம். இல்லாவிட்டால் 'ப்ரம்ம பந்து' என்று கேலிப் பேர்தான். 'ப்ராமணர்களுக்கு உறவுக்காரன்' என்று அர்த்தம். என்ன கேலி புரிகிறதோல்லியோ? இவனை பிராமணன் என்று சொல்வதற்கான லாயக்கு இவனுக்கு இல்லை. ஆனால் இவன் எந்தக் குடும்பத்தில் பிறந்திருக்கிறான், இவனுக்கு உறவுக்காரர்கள் யார் என்று பார்த்தால் அவர்களெல்லாம் பிராமணராயிருக்கிறார்கள். அதனால் இவனை 'ப்ரம்ம பந்து' என்று வேண்டுமானால் சொல்லிவிட்டுப் போகலா மென்று அப்படிப் பேர் சொல்வது!

Koviloor Digital Library

பிராமணரின் ஸ்வாமி ஸுப்ரஹ்மண்யர். ஆரம்பத்திலேயே பார்த்த ஸமாசாரம். 'மஹீதேவ தேவ'ரே 'பூஸுர பூஜிதர்'. அப்படியானால் பிராமணருக்கு மட்டுந்தான் ஸ்வாமியா என்றால் அப்படியில்லை. அத்தனை ஜாதி ஜனங்களுக்கும் அவர் ஸ்வாமி. அவருடைய இரண்டு பெண்டாட்டிகளில் ஒருத்தி ஸுரமகள், ஒருத்தி குறமகள் என்று சொல்வார்கள். ஜீவ வர்க்கம் முழுவதற்கும் அவர் ஸ்வாமி. அவர் த்ராவிட ஸ்வாமிதான், தமிழ்த் தெய்வம் என்று ஒருத்தர் சொல்கிறார். இன்னொருத்தர் அவர்தான் ப்ராமண ஸ்வாமி, பேரே ஸுப்ரஹ்மண்யர் என்கிறார். வாஸ்தவத்தில் அவர் எல்லார் ஸ்வாமியுந்தான். தீக்ஷிதர் இந்தக் கக்ஷிதான். இதுதான் நமக்கு மனஸுக்குப் பிடித்திருக்கிறது. சண்டை சாடி இல்லாமல் ஸர்வ ஜன ஐக்கியத்தை உண்டாக்குவதாக இருக்கிறது. ஸ்வாமியின் பேரில் நாமெல்லாம் ஒன்று சேரத்தான் வேண்டுமே தவிர, கக்ஷி ஆடிக் கொண்டு பிரிந்து போகக் கூடாது. 'பூஸுராதி **ஸமஸ்தஜன**' என்றபடி அவர் சரணத்தில் ஸமஸ்த ஜனங்களும் அன்பிலே ஒன்று சேரணும்.

பாத தாமரை

"பூஜிதாப்ஜ சரணாய" – பூஜித அப்ஜ சரணாய. 'பூஜிக்கப்பட்ட தாமரைத் திருவடிகளை உடையவருக்கு' நமஸ்காரம். 'ப்ராமணர் முதலான எல்லா மக்களாலும் பூஜிக்கப்பட்ட திருவடித் தாமரைகளை உடையவர்.' 'அப்ஜ' என்றால் தாமரை. 'அப்' என்றால் ஜலம். ஜலத்தில் ஜனிப்பது அப்ஜம். ஜலஜம் என்றுகூடத் தாமரைக்கு ஒரு பேர். அம்புஜம் என்றாலும் தாமரைதான். 'அம்பு' என்றாலும் ஜலந்தான். ஜலாசயமான 'ஸரஸ்' என்கிற குளத்தில் பிறப்பதால் ஸரஸிஜம், ஸரோஜம் என்று பேர். ஜலஜா, அம்புஜா, ஸரோஜா என்று பேர்கூட வைக்கிறோம்.

Koviloor Digital Library

வனஜா என்பதும் தாமரையின் பேரில் உண்டானதுதான். 'வனம் என்றால் காடு அல்லவா? காட்டிலேயா தாமரை முளைக்கும்?' என்று தோன்றலாம். 'வனம்' என்பதற்கும் ஜலம் என்று ஒரு அர்த்தம் உண்டு. ஜலத்துக்குக் 'கம்' என்று இன்னொரு பேர். 'கம்'மில் பிறப்பதாலேயே தாமரையைக் 'கம்ஜம்', 'கஞ்ஜம்' என்பது. 'கஞ்ஜலோசனே!', 'கஞ்ஜதளாயதாக்ஷி!' என்றெல்லாம் பாட்டுக்களில் வருகிறதல்லவா? 'நீர'மும் ஜலம்தான். நீரம்தான் நீர். தாமரையை 'நீரஜம்' என்று சொல்கிறோம். இப்படியே 'வாரி' — அதுவும் ஜலந்தான் — அதை வைத்து 'வாரிஜம்' என்பது. 'அப்ஜம்' என்றால் தாமரை என்று சொல்ல வந்தேன்.

ஸமஸ்த ஜனங்களும் பூஜை செய்து பூப் போடும் பாதம் தாமரைப் பூவாக இருக்கிறது! அத்தனை அழகு, குளிர்ச்சி, ஸௌகுமார்யம் [மென்மை]! தாமரையிலிருந்து தேன் வழிகிற மாதிரி திருவடித் தாமரையிலிருந்து காருண்யாம்ருதம் வழிகிறது.

முருகன்–சக்தி–ஸர்ப்பம்

"வாஸுகி தக்ஷகாதி ஸர்ப்ப ஸ்வரூப தரணாய":

"வாஸுகி, தக்ஷகன் முதலான ஸர்ப்பங்களின் ரூபத்தை எடுத்துக் கொண்டிருப்பவர்." ஸர்ப்பம் என்றால் ப்ராண சக்தியான குண்டலினீ என்று அர்த்தம். குண்டலம் மாதிரி பாம்பு வளைத்துச் சுருட்டிக் கொண்டு படுத்துக் கொள்கிறதல்லவா? அப்படித்தான் ஸாதாரணமாக நாம் இருக்கிற ஸ்திதியில் ப்ராண சக்தி சுருட்டிக் கொண்டு தூங்குகிற மாதிரி இருக்கிறது. ஸாதனை செய்தால் அது விழித்துக் கொண்டு மஹா சக்தியோடு ப்ரகாசித்து எழும்பி, அப்புறம் பரமாத்ம ஸ்வரூபமான பரம சாந்தியில் ஐக்கியமாகி விடுகிறது. குண்டலினீ சக்தி என்று அதை

Koviloor Digital Library

அம்பாளாகச் சொல்வது. அதனால்தான் பரமசிவனுக்கு ஒரே நாகாபரணம். நாக குண்டலமே போட்டுக் கொண்டிருக்கிறார். சிவகுமாரரான ஸுப்ரஹ்மண்யர் சக்தி ஸ்வரூபமாக இருப்பவர்.

ஸுப்ரஹ்மண்யர் என்றால் வேல்தான் முக்யமாக நினைவு வருவது. எல்லா ஸ்வாமிக்குமே ஆயுதங்கள் இருந்தாலும், ஸுப்ரஹ்மண்யரும் அநேக ஆயுதங்களைத் தரித்துக் கொண்டிருந்தாலும் ஸாக்ஷாத் அவரே வேலாயுதம் என்று நினைக்கிற அளவுக்கு எந்த ஸ்வாமியுடனும் எந்த ஆயுதத்தையும் 'ஐடென்டிக'லாக (ஸர்வஸமமாக) நினைப்பதில்லை. அந்த வேலுக்கு என்ன பேரென்றால் சக்தி, சக்த்யாயுதம் என்பதே! சக்திவேல் என்பார்கள். சக்தி ஸ்வரூபரான அவர் குண்டலினீயானபடியால் ஸர்ப்ப ஸ்வரூபமாக இருக்கிறார். "ஸொப்பனத்தில் பாம்பு வந்துதா? அப்ப ஸுப்ரஹ்மண்யருக்கு ப்ரீதி செய்யணும்" என்றுதான் சொல்கிறோம். ஷஷ்டி பூஜை என்பதே நாகராஜ பூஜையாகப் பண்ணுகிற வழக்கமிருக்கிறது. குறிப்பாக, புத்ர தோஷம் நீங்க ஷஷ்டி வ்ரதம், நாக பூஜை என்று செய்கிறோம். தேவர்களெல்லாம் தங்களுக்கு மஹா சக்திமானான ஸேநாதிபதி வேண்டுமென்று வேண்டிக் கொண்டதன் பேரில் சக்தி ஸ்வரூபமான புத்ரனைப் பரமேச்வரன் அவர்களுக்கு வரமாகத் தந்தார். அவரையே ஜனங்கள் தங்களுக்குப் புத்ரவரம் வேண்டி ஷஷ்டியில் வ்ரதமிருந்து பூஜை செய்கிறார்கள். அதில் ஸர்ப்பத்திற்கு, புற்றுக்குப் பால் நைவேத்தியம் முக்யமாகச் செய்கிறார்கள்.

ஆந்த்ர, கர்நாடக தேசங்களில் ஸுப்ரஹ்மண்யருக்கு நராக்ருதியில் விக்ரஹம் வைப்பதில்லை. நாக ஸ்வரூபமாகத் தான் அங்கே கோவில்களில் இருக்கும். 'ஸுப்ரஹ்மண்யா' என்றே கன்னட தேசத்தில் ஸ்தலம் இருக்கிறதே, அங்கே கூட அப்படித்தான். 'ஸுப்பராயுடு' என்று தெலுங்கர்கள்

Koviloor Digital Library

செல்லமாகச் சொல்வதே பாம்பையும் குறிப்பதாக இருக்கிறது.

ஆசார்யாள் 'புஜங்க'த்திலே ஸுப்ரஹ்மண்யரை நாகத்தோடு ஸம்பந்தப்படுத்திச் சொல்லியிருக்கிறாரா என்று பார்க்க வேண்டுமென்று ஆரம்பித்தேன். டைட்டிலை நினைத்ததுமே சட்டென்று சிரிப்பு வந்து விட்டது. பேரே புஜங்கம்! புஜங்கம் என்றாலே பாம்புதான். அதற்குக் கால் கிடையாது. மரவட்டை, கம்பளிப் பூச்சிக்கெல்லாம் எண்ணி முடியாத கால்கள். ஸர்ப்பத்துக்குக் காலே இல்லை. உடம்பு முழுக்க புஜம் மாதிரி சாட்டையாட்டமாக நீண்டிருக்கிறது. புஜத்தை அப்படியே வளைத்து வளைத்து இழுத்துக் கொண்டு போகிறதால் அது 'புஜங்கம்'. பாம்பின் கதி மாதிரியே அமைந்த ஒருவித சந்தத்துக்கு புஜங்க ப்ரயாதம் என்று பெயர். அந்த மீட்டரில் உள்ள ச்லோகத்தைச் சொல்லும் போதே பாம்பு வளைந்து வளைந்து போகிற மாதிரி யிருக்கும். ஆசார்யாள் பல தெய்வங்களின் மேலே புஜங்கம் பாடியிருக்கிறார். ஆனாலும் 'புஜங்கம்' என்ற மாத்திரத்தில் நினைப்பது 'ஸுப்ரஹ்மண்ய புஜங்க'த்தைத்தான். மற்ற ஸ்வாமிகளின் மேலே அஷ்டகம், பஞ்சரத்னம், இன்னம் பலவிதமான ஸ்துதிகளையும் பண்ணிவிட்டு ஒரு புஜங்கமும் பண்ணியிருக்கிறார். ஆனால் ஸுப்ரஹ்மண்யர் பேரில்தான் சொல்ல வேண்டியது அத்தனையையும் அடக்கி ஒரே ஒரு புஜங்கம் மட்டும் பண்ணி நிறுத்தி விட்டார். இதுவே ப்ரூஃப்தான், அவர் நாகஸுப்ரஹ்மண்ய மாகவே ஸ்வாமியைக் காட்டுவதற்கு என்று புரிந்தது.

தெய்வங்களிடம் முரண்பாடுகளும் ஒன்றுசேர்தல்

ஸர்ப்ப ஸ்வரூபம் என்று சொல்லும்போது ஸர்ப்பங்களில் தலைவர்களாக உள்ள வாஸுகி, தக்ஷகன்

Koviloor Digital Library

ஆகியவர்களை தீக்ஷிதர் குறிப்பிட்டு 'அந்த ரூபங்களை எடுத்துக் கொண்டவனே!' என்கிறார். ஸர்ப்ப ஜாதியில் முக்யமான ஏழு ஸர்ப்பங்களின் படம் போட்டு அதற்கே ஷஷ்டி பூஜை பண்ணுகிறதுண்டு. வாஸுகிதான் நாகலோகத்தில் நாகராஜாவாக இருப்பது. மந்தர மலையை இந்த வாஸுகியால் கட்டித்தான் அம்ருத மதனத்தின் போது க்ஷீராப்தியைக் கடைந்தது. விசித்ரமாயிருக்கிறது — அம்ருதத்தை உண்டாக்க விஷப் பாம்பு உபகரணமாகிறது! விரோதமாயிருக்கிறவையெல்லாமும் ஸத்கார்யத்தில் ஒன்று சேர்ந்துவிடுவதே இதற்குத் தாத்பர்யம்!

ஸுப்ரஹ்மண்யர் ஸர்ப்ப ஸ்வரூபர் என்பதைப் பார்த்தாலே [இந்த ஒன்று சேர்தல்] தெரியும். அவர் வாஹனம் என்ன? மயில். அது ஸர்ப்பத்தின் பரம வைரி. ஒரு ஸர்ப்பத்தை அது நசுக்கிக் கொண்டிருக்கிற மாதிரியே சித்திரித்திருக்கும். 'நாகபந்த மயூரா' என்று திருப்புகழில்கூட இருக்கிறது. ஸர்ப்பத்தை நசுக்கிக் கொண்டு அதன் மேலே உட்கார்ந்து கொண்டிருக்கிற மயிலின் மேலே உட்கார்ந்து கொண்டிருப்பவரே ஸர்ப்ப ஸ்வரூபர்!

'ஸிம்ஹ ஸொப்பனம்' என்பதாக ஸொப்பனத்தில் சிங்கத்தைப் பார்த்தால்கூட யானைக்கு பயத்தில் ப்ராணன் போய்விடும். ஆனால் சிங்கத்தின் மேலேயே ஒரு யானை உட்கார்ந்திருக்கிறது. விக்நேச்வரரின் அநேக மூர்த்தங்களில் 'ஹேரம்பர்' என்று ஒன்று கேள்விப்பட்டிருக்கலாம். அந்த ஹேரம்ப கணபதிக்கு ஸிம்மம்தான் வாஹனம்.

பாம்பு – மயில் மாதிரிதான் பாம்பும் கருடனும். மஹா விஷ்ணுவுக்கு ஒன்று படுக்கை, மற்றது வாஹனம்.

மயிலும் கருடனும் பாம்பைத் தின்று விடுமென்றால் பாம்பு சந்திரனைத் தின்று விடும்! அப்படித்தானே க்ரஹணத்திற்குக் கதை சொல்லுகிறோம்? பரமசிவன் சிரஸிலோ பாம்பும் இருக்கிறது, சந்திரனும் இருக்கிறது.

Koviloor Digital Library

பார்வதி பரமேச்வராளைத் தம்பதியாகப் பார்க்கும் போதும் இப்படியே விசித்ரமாயிருக்கிறது. மாட்டைப் பார்த்தால் சிங்கம் விடுமா? ஒரே அடியில் அடித்துப் போட்டுத் தின்று விடும். ஆனால் பரமசிவன் ரிஷப வாஹனத்தில் உட்கார்ந்திருக்க, அம்பாளோ ஸிம்ஹ வாஹினியாக இருக்கிறாள்.

தாத்பர்யம், பரமாத்மாவின் ஸந்நிதியில் எதிரெதிராக இருப்பதெல்லாங்கூட த்வேஷ பாவம் போய் ஒற்றுமை யாய்ச் சேர்ந்து விடுகின்றன என்பதுதான்...

'வாஸுகி தக்ஷகாதி'யில் இருந்தோம். வாஸுகிதான் அம்ருதம் எடுக்கக் கடைகயிறு என்று சொன்னேன்.

முருக-ஆதிசேஷர்கள்

வாஸுகியேதான் ஆதிசேஷன் என்றும், அவை வெவ்வேறே என்றும் இரண்டு விதமாகச் சொல்கிறார்கள். அதெப்படியானாலும் ஆதிசேஷனுக்கும் ஸுப்ரஹ்மண்ய ஸம்பந்தமுண்டு. வேங்கடரமண ஸ்வாமிக்கு ஸுப்ரஹ்மண்ய ஸம்பந்தம் நிறையத் தெரிகிறது. திருப்பதி மலைக்கு அல்லது திருமலைக்கு சேஷசைலம், சேஷகிரி, சேஷாசலம் என்றெல்லாம் பேர். அது ஆதிசேஷ ஸ்வரூபம். 'ஸர்ப்ப ஸ்வரூப தரண'ரான ஸுப்ரஹ்மண்யர்தான் அப்படி மலையாயிருக்கிறார். திருச்செங்கோடு அர்த்த நாரீச்வர க்ஷேத்ரமான போதிலும், ஒன்று சேர்ந்த அந்த இரண்டு பேரை — அம்பாளையும் ஸ்வாமியையும் — மூன்று பேராக ஸோமாஸ்கந்தமாக்கிய ஸுப்ரஹ்மண்யருக்கும் அங்கே ரொம்ப விசேஷம். அந்தத் திருச்செங்கோட்டுக்கு நாகாசலம், நாககிரி என்றும் பெயர். சேஷாசலம், சேஷகிரி என்ற அதே அர்த்தந்தான். காஞ்சீபுரத்தில் காமாக்ஷி ஆலய உள்சுற்றில் நுழையும்போதே 'ஆதிசேஷன்'

Koviloor Digital Library

என்று பேர் போட்டு, ஸர்ப்பரூபத்தில் ஸுப்ரம்மண்ய ஸ்வாமிதான் இருக்கிறார்.

"வாஸுகி, தக்ஷகாதி" — தக்ஷகனும் நாகர்களில் முக்யமானவன். ஸர்ப்ப யாகம் பண்ணிப் பாம்பு ஜாதியையே பூண்டோடு இல்லாமல் பண்ணிவிட இருந்த ஜனமேஜயனைப் பழி தீர்த்துக் கொண்டது தக்ஷகன்தான்.

தேவர்கள் தொழும் தேவதேவன்

"வாஸவாதி ஸகல தேவ வந்திதாய":

'பூஸுராதி' என்று பூமியிலே ஆரம்பித்தவர் இப்போது தேவலோகத்திலுள்ள நிஜ ஸுரர்களைப் பற்றியே பாடுகிறார். 'பூஸுராதி' என்று கீழ் ஸ்தாயியில் கனமாகப் பொருத்தத்தோடு ஆரம்பித்தவர் இப்போது மேல் லோகவாஸிகளைப் பற்றி மேல் ஸ்தாயியில் லளிதமாக ஸாஹித்யத்தைக் கொண்டு போயிருக்கிறார்.

என்ன அர்த்தமென்றால், "வாஸவன் என்கிற இந்திரன் முதலான எல்லா தேவர்களாலும் வணங்கப் படுபவர்" ஸுப்ரஹ்மண்யர். அஷ்டவஸுக்கள் என்று தேவர்களில் ஒரு க்ளாஸ். அவர்கள் இந்திரனுக்குப் பரி வாரமாயிருப்பவர்கள். அதனால் அவன் வாஸவன். ஸாதாரணமாக, 'ரகு'வின் வம்சத்தில் வந்தவன் 'ராகவன்', 'ப்ருகு' வம்சத்தில் வந்தவன் 'பார்க்கவன்' என்றுதான் இருக்கும். இங்கே வஸு வம்சத்தில் வராமல் அவர்களுக்கு அதிபதியாக இருக்கப்பட்ட இந்த்ரனுக்கு 'வாஸவ'ப் பேர் இருக்கிறது.

இந்த்ரன் தேவராஜா. அவனே நமஸ்கரிக்கிறானென்றால், 'யதா ராஜா ததா ப்ரஜா' என்று எல்லா தேவர்களும் நமஸ்காரம் பண்ண வேண்டியதுதானே? அதுதான் 'வாஸவாதி ஸகல தேவ வந்திதாய'.

Koviloor Digital Library

சூரபத்மா தேவர்களை அடித்துத் துரத்திவிட்டு இந்த்ரனின் ஸிம்ஹாஸனத்தை அபஹரித்த போது, தேவர்களெல்லோரும் தங்களுக்கு மஹாசக்தனான ஒரு ஸேநாநாயகன் வேண்டுமென்று ப்ரார்த்தனை பண்ணித்தான் ஈச்வரன் ஸுப்ரஹ்மண்யரைப் படைத்தது. அதனால் அவர்கள் அவரை ரொம்பவும் பூஜிக்கத்தானே வேண்டும்?

பூஜித்தது மட்டுமில்லை. இந்த்ரன் தன்னுடைய குமாரியான தேவஸேனையை ஸுப்ரஹ்மண்யருக்கே கன்யாதானம் பண்ணி அவரை மாப்பிள்ளையாக்கிக் கொண்டுவிடுகிறான். தேவர்களுக்கு ஸேநாபதியா யிருப்பவர் 'தேவஸேநா-பதி'யாகவும் ஆகிறார். அதைத்தான் பாட்டில் பிற்பாடு 'தேவராஜ ஜாமாத்ரே' என்று சொல்லியிருக்கிறது. 'தேவராஜனின் ஜாமாதா அதாவது மாப்பிள்ளைக்கு, நமஸ்காரம்' என்று சொல்லியிருக்கிறது...

இரு விதத்திலும் திருமாலின் மருமகன்

ஒரு ஸமாசாரம் ஞாபகம் வருகிறது. தேவஸேனையை இந்த்ரனின் குமாரி என்கிறோம். வள்ளியை நம்பிராஜன் குமாரி என்கிறோம். 'ஸுரமகள், குறமகள்' என்று சொன்னேன். ஆனால் வாஸ்தவத்தில் இரண்டு பேருமே மஹாவிஷ்ணுவின் குமாரிகள்தான். அவருடைய ஆனந்த பாஷ்பத்திலிருந்து உத்பவித்தவர்கள். அப்புறம் ஒவ்வொரு காரணத்துக்காக ஒருத்தி இந்த்ரனிடமும், மற்றவள் நம்பி ராஜனிடமும் பெண்ணாக வளர்ந்தார்கள்.

மஹாவிஷ்ணு யார்? ஸாக்ஷாத் அம்பாளின் உடன் பிறப்பு. அதாவது ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் மாமா. மாமா பெண்களைத்தான் இவர் முறை தப்பாமல் கல்யாணம் பண்ணிக் கொண்டு, 'மருமகன்' என்ற வார்த்தையை இரண்டு அர்த்தத்திலும் ஜஸ்டிஃபை பண்ணிக் கொண்டிருக்கிறார்! அதனால்தான்

Koviloor Digital Library

போலிருக்கிறது, அருணகிரிநாதர் 'முருகோனே' என்று சொல்கிற அளவுக்கு 'மருகோனே மருகோனே' என்றும் பாடியிருக்கிறார். பிள்ளையார் கூடத்தான் விஷ்ணுவுக்கு மருமானாயிருந்த போதிலும் 'மால்மருகோன்' என்று ஸுப்ரஹ்மண்யரையே சொல்கிறோம்.

சைவ–வைஷ்ணவ ஒற்றுமை

த்வேஷ பாவம் போய் ஒன்று சேர்ந்து விடுவதைச் சொன்னேனே, இங்கேயும் அதற்கு எக்ஸாம்பிள். விஷ்ணுவின் பிள்ளையான மன்மதனை எரித்த ஈச்வரனுக்கு அதே நேத்ராக்னியிலிருந்து பிறந்தவர் ஸுப்ரஹ்மண்யர். இவருக்கே அந்த விஷ்ணு ஓட்டிக்கு இரட்டியாகத் தம் பெண்களைக் கல்யாணம் பண்ணித் தந்திருக்கிறார்!

இப்படிப் பார்த்துக் கொண்டு போனால், சைவம்–வைஷ்ணவம் என்பது கூடப் போய் "ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யாய" ஒரு வைஷ்ணவருக்கு மாஸ்டர்–பீஸாக இருப்பது விசித்ரமேயில்லை, ரொம்ப ந்யாயம்தான் என்றாகிவிடும். விஷ்ணுவின் மாப்பிள்ளைதானே அவர்? மாப்பிள்ளையிடமில்லாத ப்ரியமும் மரியாதையும் உண்டா?

இன்னம் ஒரு படி மேலே, அம்பாள் விஷ்ணு ஸஹோதரிதானே? மீனாக்ஷியை ஸுந்தரேச்வரருக்கு யார் தாரை வார்த்துத் தருவது? பெரிசாக, லோகமே கொண்டாடுகிற சில்பமாக அடித்து வைத்திருக்கிறதே!...

முதலில் "ஸமஸ்த ஜன"ங்களும் பூஜிப்பதாகச் சொன்ன தீக்ஷிதர் அப்புறம் "ஸகல தேவ"ர்களும் வந்தனை செய்வதைச் சொல்கிறார். மனிதர்களில் பல ஜாதி இருப்பது போல் தேவரிலும் உண்டு. வஸுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள் — இன்னம் அடுத்த படிகளில் கந்தர்வர்கள்,

Koviloor Digital Library

வித்யாதரர்கள், கின்னரர்கள் — என்பதெல்லாம் தேவ ஜாதிகள். எல்லா மனுஷ்ய ஜாதிகளாலும் பூஜிக்கப்படுவது போலவே இந்த எல்லா தேவ ஜாதிகளாலும் பூஜிக்கப் படுபவர் ஸுப்ரஹ்மண்யர் — "ஸகல தேவ வந்திதாய; வரேண்யாய."

உச்சநிலையில் உள்ளவர்

"வரேண்யாய":

'வரேண்யர்' என்றால் ரொம்ப உயர்ந்தவர், சிறந்தவர் என்று அர்த்தம். காயத்ரீ மந்திரத்தில் அந்த வார்த்தை வரும். பரமாத்ம தேஜஸுக்கு மிஞ்சி எதுவுமில்லை; அதுதான் best என்று ஸூபர்லேடிவ் போட்டுக் காட்டும் போது வேதஸாரமான காயத்ரியில் வருகிற வார்த்தையை இங்கே தீக்ஷிதர்வாள் போட்டிருக்கிறார். 'ஸுப்ரஹ்மண் யாய', 'லாவண்யாய', 'சரண்யாய' என்று பல்லவியில் ஒரே மாதிரி அந்த்ய ப்ராஸம் போட்டதோடு சேரும்படியாக அநுபல்லவியிலும் 'வரேண்யாய' என்று உச்ச ஸ்தானத்தில், உச்ச ஸ்தாயியில், வேதத்தின் உச்சியான மந்த்ரத்தில் வரும் உச்சத்தைக் காட்டும் வார்த்தையை இழைத்திருக்கிறார்....

ஸாஹித்ய அழகு

வாக்கிய ஆரம்பத்திலும் எதுகை ப்ராஸம் இருக்கிறது; ஸ்ரீஸு(ப்ர)-பூஸு(ராதி); வாஸ(வாதி) - தாஸ(ஜன). பொயட்ரி ரூபமும் அர்த்தம் மாதிரியே அழகாக அமையும்படிப் பண்ணியிருக்கிறார். இதுதான் மஹான்களின் ரசனா விசேஷம். ரஸ(sa)னை இல்லை; ரச(cha)னை. ரசனை என்றால் கவிதை அமைப்பு. அர்த்தம், வார்த்தை இரண்டும் அழகாக, வார்த்தைகளைக் கோக்கும் விதமும் ஒரு ஒழுங்கிலே அழகாக வரும்படி அமைவது.

Koviloor Digital Library

இலக்கிய ஸ்ருஷ்டிகளை "composition" என்கிறார்கள். Composed, composure என்றாலே ஹாயாக அமைதி நிலையில் இருப்பதுதான். தமிழிலும் அழகாகச் சொல்லமைதி, பொருளமைதி என்கிறோம். இப்படி ரசனை பண்ணுவதிலேயே ஒரு கவி அல்லது ஸாஹித்யகர்த்தா வுடைய ரஸனா விசேஷமும் தெரிந்துவிடும்.

அருள் புரிவதில் தலை சிறந்தவர்

"தாஸ–ஜனாபீஷ்ட–ப்ரத–தக்ஷதராக்ர–கண்யாய":

'வரேண்யாய' என்று ஸ்வாமியின் சிறப்புக்கு ஸூபர்லேடிவ் கொடுத்தவர், அவர் எப்படி அருளை வாரி வழங்குகிறாரென்பதற்கு இங்கே ஏகப்பட்ட ஸூபர்லேடிவ் கொடுத்துக்கொண்டே போகிறார்.

'தாஸ ஜன அபீஷ்ட ப்ரத' – 'அடியாரான மக்களின் மனோரதங்களை நிறைவேற்றித் தருகிற'. 'தருகிறவருக்கு' என்பதற்கு 'ப்ரதாய' என்று போட்டிருந்தாலே போதும்; ஆனால் ஸ்வாமியின் அநுக்ரஹ சீலத்தை அப்படி ஸாதாரணமாகச் சொல்லி, விட்டு விடுவதற்கு தீக்ஷிதருக்கு மனஸ் வரவில்லை. 'ப்ரத'வுக்கு அப்புறம் ஒரு 'தக்ஷ', அதற்கப்புறம் ஒரு 'தர', அதற்கு அப்புறம் ஒரு 'அக்ரகண்ய' என்று ஸூபர்லேடிவ்களாகக் கோத்துக் கொண்டே போகிறார்: 'அபீஷ்ட ப்ரத-தக்ஷதராக்ரகண்யாய'.

'அபீஷ்டப்ரத தக்ஷ' என்றால் மனோபீஷ்டங்களை அருள்வதில் மஹா கெட்டிக்காரர். முதலில் 'வாஸுகி, தக்ஷகாதி' என்ற இடத்தில் Taksha. இங்கே Daksha. தக்ஷ என்றால் ரொம்பவும் கெட்டிக்கார, ரொம்ப ஸாமர்த்யமான என்று அர்த்தம். அபீஷ்டத்தை அளிப்பதில் ஸுப்ரஹ்மண்யர் தக்ஷர். அதோடு மட்டுமில்லை. அதற்கும் மேலே! கேட்டதைக் கொடுப்பதில் மிகவும் சிறந்து

Koviloor Digital Library

விளங்கும் 'தக்ஷ'ர்களான தெய்வங்களிலும் மற்ற எல்லாரைவிட இவரே சிறந்தவர் — 'தக்ஷதரர்'. "இது தரமானது" என்கிறோம். அப்படியானால், மற்றவற்றோடு 'கம்பேர்' பண்ணும்போது இதுவே சிறந்தது என்று அர்த்தம். அப்படித்தான் இவர் மற்ற அநுக்ரஹ மூர்த்திகளுக்கு நடுவே 'தர'மானவராயிருக்கிறார். மற்ற தெய்வ உபாஸகர்கள் எங்கள் தெய்வமும் அப்படித்தான் என்று வந்து விட்டால் என்ன பண்ணுவது? 'ஸரி, அவர்களோடும் நாம் சண்டைக்குப் போக வேண்டாம். ஐக்கியத்துக்கும் ஸமரஸத்துக்கும்தானே ஸ்வாமியும், ஸங்கீதமும், ஸாஹித்யமும் இருப்பது?' என்று தீக்ஷிதர்வாள் நினைத்து, 'அபீஷ்ட-ப்ரத-தக்ஷ-தரர்களாகப் பல பேர் இருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் அவர்களில் முதல்வராக, 'நம்பர் ஒன்'னாக இவரே மதிக்கப்படுகிறார் என்று போட்டு விடுவோம்' என்று முடிவு பண்ணி 'தக்ஷ-தர'வுக்கு அப்புறம் 'அக்ரகண்யாய' என்று முத்தாய்ப்பு வைத்து விட்டார் போல இருக்கிறது. 'தாஸ ஜனங்களின் இஷ்டத்தை வழங்குபவர்களில் சிறப்புற்றவர் களிலேயும் முதலாமவராக மதிக்கப்படுபவர்' என்று பெரிசாக நீட்டிக்கொண்டு போயிருக்கிறார். 'அக்ர' — முதலில், முதலிடத்தில்; 'கண்ய' — மதிக்கப்படுகிறவர்.

பேரஸுரரை வதைத்த வீர பௌருஷம்

"தாரக ஸிம்ஹமுக சூரபத்மாஸுர ஸம்ஹர்த்ரே":

"தாரகன், ஸிம்ஹமுகன், சூரபத்மன் என்ற அஸுரர்களை ஸம்ஹாரம் பண்ணினவருக்கு" — நமஸ்காரம் என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

"ஸுப்ரஹ்மண்ய, லாவண்ய, சரண்ய, அக்ரகண்ய" என்றெல்லாம் - இதுவரை பாட்டின் பல்லவியிலும் அநுபல்லவியிலும் வந்த வார்த்தைகள் 'அ'காரத்தில்

Koviloor Digital Library

முடிந்ததால் 'அப்படிப்பட்டவருக்கு' என்று நாலாம் வேற்றுமையில் சொல்லும்போது "யாய" என்று ஆயிற்று. இப்போது சரணத்தில் வரும் பேர்களில் பெரும்பாலானவை அகாராந்தமாக முடியாமல் 'ரு'விலே — தமிழில் குற்றியலுகரம் என்று சொல்லும் தேய்ந்த 'ரு'விலே — முடிகின்றன. முதலில் 'ஸம்ஹர்த்ரு', அப்புறம் 'உபதேசகர்த்ரு' அப்புறம் 'ஸவித்ரு' என்றிப்படி இருக்கின்றன. இவை நாலாம் வேற்றுமையில் 'ஹர்த்தாய', 'கர்த்தாய' என்றெல்லாம் ஆகாது. 'ஹர்த்ரே', 'கர்த்ரே' என்றே ஆகும். சரணம் பூராவும் இப்படி 'த்ரே', 'த்ரே' என்று வரிகள் முடிவதைக் கவனிக்கலாம்.

தாரகன், ஸிம்ஹமுகன், சூரபத்மன் மூன்று பேரும் ஸஹோதரர்கள். தாரகனுக்கு யானை முகம். ஸிம்ஹமுகன் பேரிலிருந்தே சிங்க மூஞ்சி என்று தெரிகிறது. சூரபத்மன் க்ரூரமான அஸுர முகம் படைத்தவன். தென் தேசத்தில் சூரபத்மனைத்தான் அஸுர ராஜனாகவும், ஸ்வாமியின் ப்ரதான சத்ருவாகவும் சொல்கிறோம். சூரஸம்ஹாரம் என்றே உத்ஸவம் பண்ணுகிறோம். 'வீர, தீர, சூர' என்று அந்த சூரசப்தமே மஹா வீர்யத்தைக் குறிப்பிடுகிறது. சூரனையும் ஜயித்த மஹா சூரராக ஸ்வாமியை ஸ்தோத்ரம் செய்கிறோம். ஆனால் வடக்கே தாரகாஸுரனைத்தான் அவனுடைய இடத்தில் சொல்கிறார்கள். 'குமார ஸம்பவ'த்திலும் தாரக வதத்துக்காகவே குமாரஸ்வாமி ஸம்பவித்ததாகத்தான் காளிதாஸர் சொல்லியிருக்கிறார். ஆசார்யாள், 'புஜங்க'த்திலே **"த்வயா சூரநாமா ஹதஸ் தாரக: ஸிம்ஹவக்த்ரச்ச"** என்று மூன்று பேரையும் சொல்லி யிருக்கிறார். 'ஸிம்ஹவக்த்ரன்' என்றாலும் 'ஸிம்ஹமுகன்' தான். தீக்ஷிதரும் தக்ஷிணத்திலுள்ள வழக்கப்படியே — ஸ்காந்த மஹா புராணத்திலும் இப்படித்தானிருக்கிறது — மூன்று பேரையும் சொல்லியிருக்கிறார். மஹாபல பராக்ரமம் படைத்த மூன்று க்ரூர ராக்ஷஸர்களை

Koviloor Digital Library

பால்யத்திலேயே ஹதாஹதம் பண்ணிய வீராதிவீரர் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி.

கோடி கோடி மநஸிஜ லாவண்யத்தைச் சொல்லியாச்சு; தீன சரண்யராக, அபீஷ்ட வரதர்களில் அக்ரகண்யராக உள்ள காருண்யத்தைச் சொல்லியாச்சு; மஹா அஸுரர்களையும் ஸம்ஹாரம் பண்ணிய வீர பௌருஷத்தையும் இப்போது சொல்லியாச்சு. அழகு, அருள், ஆற்றல் மூன்றிலேயும் ச்ரேஷ்டமானவரென்று காட்டியாச்சு.

குரு என்ற தனிப் பெருமை

இதற்கெல்லாம் மேலே இன்னம் அவர் என்ன? தீக்ஷிதர் ஒவ்வொரு க்ருதியிலேயும் என்ன முத்ரை வைத்திருக்கிறார்? 'குரு குஹ'.

குரு — அதுதான் ஸுப்ரஹ்மண்யருடைய எல்லாப் பெருமைகளுக்கும் மேலான மஹா பெருமை. குருவாக உபதேசித்து மோக்ஷத்தை அநுக்ரஹிக்கிற பேரருளைச் செய்கிறவர் அவர். **"குருவாய் அரர்க்கும் உபதேசம் வைத்த"** என்று அருணகிரிநாதர் சொல்கிறபடி, பரம ஞான மூர்த்தியான அப்பாவுக்கும் உபதேசம் செய்த தகப்பன் ஸ்வாமி, ஸ்வாமிநாத ஸ்வாமி அவர். **"ஞான பண்டித ஸ்வாமி".** அழகு, அருள், வீர தீர சக்தி எல்லாம் சொன்னபின் தீக்ஷிதர் இதற்கு வருகிறார்:

"தாப–த்ரய ஹரணநிபுண தத்வோபதேச கர்த்ரே":

தாபத்ரயம் என்பதாக ஜீவாத்மாவுக்கு மூன்று தினுஸுத் தாபம். மூன்று ஸமாசாரங்கள் அதை தஹித்து வேக வைக்கின்றன. ஆத்யாத்மிகம், ஆதி பௌதிகம், ஆதி தைவிகம் என்ற மூன்று. இவை மநுஷ்யரைத் தபிக்க வைக்கின்றன. ஆத்யாத்மிகம் என்பது தன் ஆத்மாவாலேயே

Koviloor Digital Library

தன்னை வருத்திக் கொள்வது. அதாவது நம்முடைய மனஸின் பலவிதமான சஞ்சலிப்பு, கொந்தளிப்பினாலேயே நம்மை வறுத்தெடுத்துக் கொள்வது. ஆதிபௌதிகம் என்பது பூதர்களால் அதாவது உயிர்களால், நம்மைத் தவிர பிற மநுஷ்யர்களாலும் மற்ற ஜீவராசிகளாலும் உண்டாகிறது. ஆதிதைவிகம் என்ற இடத்தில் தைவம் என்றால் விதி. நம்முடைய வினையே விதியாக வந்து வருத்துவது ஒரு தாபம். அல்லது மநுஷ்ய சக்திக்கு அப்பாற்பட்டதாக 'இயற்கை உற்பாதம்' என்கின்ற, ஆனால் உண்மையில் தேவ சக்திகளின் கோபத்தைக் காட்டுவதான புயல், பூகம்பம், எரிமலை வெடிப்பது முதலியவற்றால் ஏற்படுவது ஆதி தைவிகமான தாபம். ஆதிபௌதிகத்தாலும், ஆதி தைவிகத்தாலும் விபத்து, வியாதி இத்யாதி ஏற்படலாம். ஆனால் அதை நமக்குத் தாபமாக மாற்றி வருத்தம் தருவது, வறுத்து எடுப்பது மனஸ்தான். மனஸ் என்ற ஒன்று இல்லாவிட்டால் எந்தத் தாபமும் தெரியாதுதானே? **'மனம் இறக்கக் கற்றுவிட்டால்'** தாபமேயில்லை. ஆத்மாராமர்களாக, ஆனந்தமயமாக ஆகி விடலாம். அப்படி ஆகக் கற்றுக் கொடுப்பதுதான் தத்வோபதேசம். தாபத்ரயங்களைப் போக்குவதில் மிகவும் வல்லமை வாய்ந்த தத்வ உபதேசத்தைச் செய்பவர் ஸுப்ரஹ்மண்யர்: "தாபத்ரய ஹரண நிபுண தத்வோபதேச கர்த்தா."

ஸ்கந்த மூர்த்தியாகி அவர் பிதாவான ஈச்வரனுக்கு ப்ரணவ உபதேசம் பண்ணினது மட்டுமில்லை. ஸநத்குமாரர் என்று ஒரு ப்ரஹ்மநிஷ்டர். ஸ்ருஷ்டி ஆரம்பத்தில் ப்ரம்மாவிடமிருந்து முதலில் தோன்றிய நாலு பேர் யாரென்றால், தாங்களும் புனர் ஜன்ம ஸ்ருஷ்டியிலிருந்து தப்பிய ஞானிகளாக இருந்தவர்கள்; தங்களாலும் ப்ரஜா ஸ்ருஷ்டி ஏற்படாமல் ப்ரம்மச்சாரி, ஸந்நியாஸி இரண்டுமாக, எல்லா ஆச்ரமங்களுக்கும் மேலே போன அதிவர்ணாச்ரமிகளாக இருந்தவர்கள். ஸநகர், ஸநந்தனர்,

Koviloor Digital Library

ஸநாதனர், ஸநத்குமாரர் என்று அவர்களுக்குப் பேர். அவர்களில் ஸநத்குமாரரைக் 'குமாரர்' என்றே சொல்வது. ஸநத் என்பது ப்ரம்மாவின் பேர். அவருடைய புத்ரர் ஸநத்குமாரர். அவர் நாரதருக்கே தத்வோபதேசம் செய்திருக்கிறார். அந்த உபதேசமும் அதைப் பற்றிய கதையும் சாந்தோக்யோபநிஷத்தில் வருகிறது. ஸநத்குமாரர் நாரதருக்கு இருட்டைத் தாண்டிய நிலையைக் காட்டினார் என்று உபநிஷத்து முடிக்கிற இடத்தில், அந்தக் குமாரரே தான் குமார சப்தத்தை ப்ரஸித்த நாமாவாகக் கொண்ட ஸ்கந்தமூர்த்தி என்று இரண்டு தரம் சொல்லியிருக்கிறது.

அஞ்ஞான இருட்டுக்கு அப்பால் இருக்கிற ஞான ஜ்யோதிஸ்தான் ஸுப்ரஹ்மண்யர். அக்னி ஸ்வரூப மென்றால் அது ஞானாக்னிதான். அவர் கையிலே தகதகவென்று இருக்கிற சக்த்யாயுதமும் ஞானவேல்தான். பாஹுபல பராக்ரமத்தைக் காட்டும் சக்தி; கோடி கோடி மன்மத லாவண்யம்; தீன ரக்ஷணத்தில் முதல்வராக இருக்கும் காருண்யம் எல்லாமும் கடைசியில் அந்த ஞானத்தில் பிறந்தவையே; அந்த ஞானத்தோடு பிரிக்க முடியாமல் ஸம்பந்தப்பட்டவையே. ஞானத்தை மற்றவருக்கும் வழங்கும் குருநாதனாக இருப்பதே ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியின் உயிரான லக்ஷணம் — 'தத்வோபதேச கர்த்ரே; வீரநுத குருகுஹாயாஜ்ஞான-த்வாந்த-ஸவித்ரே.'

வீரர்கள் தொழும் ஞானி!

"வீரநுத":

ஞானி வேறே, வீரன் வேறே என்பது விஷயம் தெரியாத நிலையில்! நிஜமான ஞானி எதுவாகவும் இருப்பான் — அவன் எல்லாமாக இருப்பதால்! உள்ளுக்குள்ளே ஆத்மா ஒன்றைத் தவிர எதுவாகவு மில்லாமல், வெளிக் கார்யத்தில் அந்த ஆத்மாதான்

Koviloor Digital Library

ஸகலமும் ஆனதால் எதுவாக வேண்டுமானாலும் — கத்தியை எடுத்துச் சுற்றுகிற மஹா வீரனாகக்கூட — இருப்பான். கீதை என்று ஞானோபதேசம் செய்யும் போது, "காண்டீவத்தை எடுடா! அம்பைத் தொடுடா!" என்று பகவான் சொல்லியிருக்கிறாரில்லையா? ஸுப்ரஹ்மண்யர் ஞான வீரர். தேவ ஸேனைக்கெல்லாம் கமான்டர்-இன்-சீஃப். அதனால் வீரர்களால் தொழப்படுபவர். அதுதான் 'வீர நுத'. 'நுத' — தொழப்படுகிற. அவருடைய முக்யமான பரிவாரம் நவ வீரர்கள் என்ற ஒன்பது பேரைக் கொண்டது. வீரபாஹு, வீரகேஸரி, வீர மஹேந்திரர் என்று 'வீர' என்றே பேர் ஆரம்பிக்கிற ஒன்பது மஹாவீரர்கள் அவருடைய அஸிஸ்டென்டுகள். அதனாலும் 'வீரநுத'.

இதய குகையில் இலகும் குரு, அஞ்ஞான இருள் நீக்கும் ஸூரியன்

"குருகுஹாய; அஜ்ஞான த்வாந்த ஸவித்ரே":

வீரத்தைச் சொன்னவுடனே ஞானம்! குருகுஹனாக ஸ்வாமி இருப்பது! மலைகள் அவருக்கு முக்யவாஸம். குறிஞ்சிக் கடவுள் என்றே போற்றுகிறோம். மலைக் குஹைகளில் வஸிப்பதால் குஹன். தத்வார்த்தமாகச் சொன்னால் ஹ்ருதய குஹையிலிருக்கும் ஆத்ம ஸ்வரூபம். அதுவே குருவாக வந்து உபதேசிக்கிறபோது குருகுஹன். ஸ்வாநுபவத்தினால் தீக்ஷிதருடைய ஹ்ருதயத்திலிருந்து பீறிக் கொண்டு வந்து அவருடைய முத்ரையாவே ஆகி விட்ட நாமா, குருகுஹன் என்பது.

"குருகுஹாய; அஜ்ஞான - த்வாந்த - ஸவித்ரே."

'த்வாந்தம்' இருட்டு. ஸவித்ரு, ஸவிதா என்றால் ஸூர்யன். இருட்டை இருந்த இடம் தெரியாமல் ஸூர்யன் விரட்டி அழித்து விடுகிற மாதிரி அஞ்ஞான இருட்டை

Koviloor Digital Library

த்வம்ஸம் பண்ணும் ஞான ஸூர்யன். ஸநத்குமாரர் இருட்டுக்கு அந்தண்டைக்கு வழிகாட்டினார் என்கிற ஸமாசாரம்.

காயத்ரி உருவில் முருகனைக் காட்டும் பாடல்

'ஸவித்ரு, ஸவிதா' என்ற பேரைப் போட்டிருப்பதில் ரொம்பவும் வைதிக விசேஷம் இருக்கிறது. ஸூர்யனுக்கு எத்தனையோ பேர் இருக்கிறது. 'ஆதித்ய(ன்)-ஸவிதா-ஸூர்ய(ன்)-கக(ன்)-பூஷா' இப்படியெல்லாம் பல பேர்கள் ['ஆதித்ய ஹ்ருதய'த்தில்] சொல்லியிருக்கிறது. பாஸ்கரன், பானு, மார்த்தாண்டன், திவாகரன், தினகரன், தினமணி, ரவி என்றெல்லாமும் பல பேர் இருக்கிறது. அவற்றில் ஸவிதா என்பதுதான் காயத்ரீ மந்த்ரத்திலேயே வருகிற பேர். அந்த மந்திரத்தில் பரமாத்மாவின் ஞான ஜ்யோதிஸ்ஸை ஸூர்ய மண்டலத்திற்குள் இருக்கும் தேஜஸ்ஸாக பாவித்து, ப்ரார்த்தித்து, அது நம் அறிவுச் சுடரையும் கொழுந்து விட்டெரியும்படி தூண்டிவிட வேண்டும் என்று சொல்லும்போது ஸவிதாவாகவே பேர் கொடுத்துச் சொல்லியிருக்கிறது. அந்தப் பேரின் விசேஷம் அது அழிவைச் சொல்லாமல் படைப்பைச் சொல்வது. ஸவிதா என்றால் உற்பத்தி செய்கிறவன், உண்டாக்குகிறவன். 'ப்ரஸவம்' என்ற வார்த்தையில் வரும் 'ஸவ'த்தின் அடியாகப் பிறந்த வார்த்தை ஸவிதா. ஸூர்யன் இருட்டையும், சேற்றையும், சகதியையும், குப்பை கூளத்தில் வளரும் க்ருமிகளையும், பூச்சிகளையும் அழிப்பது மட்டுமில்லை. அவனாலேயே மழை, தாவர வளர்ச்சி, நம் ஆரோக்ய வளர்ச்சி, ஆத்யாத்மிகமாக நம்முடைய புத்தி வளர்ச்சி எல்லாம் உண்டாகின்றன. அப்படியே ஸுப்ரஹ்மண்யரான ஞான ஸூர்யன் அஞ்ஞான இருட்டை அழிப்பது மட்டுமில்லை; அஞ்ஞானம்

Koviloor Digital Library

போனபின் எல்லாம் சூன்யமாகி விடுவதில்லை; அஞ்ஞானம் அழிந்த இடத்தில் பூர்ணாநுபவமான ஞான ப்ரகாசத்தை அவர் உண்டாக்குகிறார். ஸவிதா பத ப்ரயோகம் ரொம்பப் பொருத்தமாக விழுந்திருக்கிறது. திருமுருகாற்றுப்படையும் ஸூர்யோதயத்தை உவமை சொல்லித்தான் ஆரம்பிக்கிறது.

இந்த க்ருதியின் ஸாரமே வேத ஸாரமான காயத்ரி ஸ்வரூபமாக ஸ்வாமியைக் காட்டுவதுதான் என்று தோன்றுகிறது. ப்ரஹ்மண்யப் பேரோடுதானே பாட்டு ஆரம்பிக்கிறது? அப்புறம், அநுபல்லவியில் உச்சமான இடத்தில் [காயத்ரி மந்திரத்தில் வருகிற] 'வரேண்ய' சப்தம் வந்தது. அதே மாதிரி சரணத்தில் உச்சமான இடத்தில் 'ஸவித்ரு' சப்தத்தை வைத்திருக்கிறார். ஸாஹித்யத்திலே அந்த இடத்தில் ராக ஸஞ்சாரம் ஜிவ்வென்று மேலே போய் "ஸவித்ரே" என்று பளிச்சென்று வருவது, அஞ்ஞான இருட்டு கும்மென்று பரவி நெரிக்கிற போது ஞான ஸூர்யோதயமாக, ஸ்வாமி பளிச்சென்று வந்து ரக்ஷிக்கிறது போன்ற அபிப்ராயத்தைக் கொடுக்கிறது. அப்புறம்,

வள்ளி மணாளன்

"விஜயவல்லீ பர்த்ரே":

அதுதான் வேடிக்கை. நிஜ ஞானியுடைய வேடிக்கை. அவன் வெளியிலே எப்படி வேணுமானாலும் வேஷம் போடுவான், மஹாவீரனாகக்கூட இருப்பான் என்றே னோல்லியோ? ச்ருங்கார நாயகனாகக் கல்யாணம் கார்த்திகை பண்ணிக் கொண்டுகூடக் கூத்தடிப்பான். திருச்செந்தூரில் வீர பராக்ரமரான சூர ஸம்ஹார மூர்த்தி, பழநியிலே ஸந்நியாஸி, ஸ்வாமி மலையில் பிரம்மச்சாரி யாயிருக்கிற குருமூர்த்தி, அவரே திருப்பரங்குன்றத்தில் தேவஸேனையின் பதி, திருத்தணியில் வள்ளியையும்

Koviloor Digital Library

சேர்த்துக் கொண்ட இரட்டைப் பெண்டாட்டிக்காரர்! 'விஜயவல்லி' என்பது வள்ளிதான். 'அவளுடைய பர்த்தாவுக்கு (நமஸ்காரம்)' என்பதுதான் 'விஜயவல்லி பர்த்ரே'. வெற்றி வேலன் என்கிறபடி அவரோடு ஜயம், விஜயம் (விசேஷமான ஜயம்தான் விஜயம்) எப்போதும் சேர்ந்திருக்கும். அவருக்கு இரண்டு பக்கங்களில் நிற்கிற பத்னிகளில் தேவஸேனைக்கு ஜயந்தி என்றே பெயர். மற்றவள் விஜயவல்லி. ஸுப்ரஹ்மண்யரைப் பற்றி ரொம்பவும் ஜனரஞ்ஜகமான விருத்தாந்தம் வள்ளி கல்யாணம்தான். அதிலேயே பரம வேதாந்தம் — இந்த்ரிய வேடர்களுக்கு நடுவில் சிக்கிக் கொண்டிருக்கிற ஜீவாத்மாவைப் பரமாத்மா விடுவித்துத் தன்னோடு அப்படியே சேர்த்துக் கொண்டுவிடுவதற்கு ரூபகமாக வள்ளி கல்யாணக் கதை இருக்கிறது.

ஒரு வேடப்பெண் பரம ப்ரேமையோடு பக்தி பண்ணினதற்காக ஸாக்ஷாத் லோக மாதாபிதாக்களின் குமாரர் தினுஸுதினுஸாக வேஷம் போட்டுக் கொண்டு கூத்தடித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டது அவர் எப்பேர்ப்பட்ட தீன சரண்யர் என்பதற்குப் பெரிய சான்றாக இருக்கிறது.

சக்தி வேலன்

"சக்த்யாயுத தர்த்ரே":

"பராசக்தியின் ஸ்வரூபமானதும், மஹா சக்தி பொருந்தியதுமான வேலாயுதத்தை தரித்துக் கொண்டிருப்பவர்."

மாறி மாறி அவருடைய வித வித வேஷங்கள் — சூராதி அஸுரர்களின் ஸம்ஹர்த்தாவாக, உடனே தாபத்ரயம் போக்குகிற தத்வோபதேசகராக, அடுத்தே வீரர்கள் நமஸ்கரிக்கிற மஹா வீரராக, உடனேயே

Koviloor Digital Library

குருகுஹன் என்ற பெருமையோடு அஞ்ஞான தமஸைப் போக்கும் ஸவிதாவாக, அப்புறம் வள்ளி கல்யாண மூர்த்தியாக — இப்போது மறுபடி சக்திவேலன் என்ற வீர பராக்ரமராக!

தீரர்: மீண்டும் காயத்ரி

"தீராய":

தீரன் என்றால் நாம் அஞ்சா நெஞ்சம், பலம் இவற்றைத்தான் நினைக்கிறோம். அதுவும் ஸரிதான். ஆனால் தீர சப்தம் தீக்ஷ்ண்யமான புத்தியையும் குறிக்கும்.

மறுபடியும் காயத்ரி! காயத்ரியிலும் இந்த 'தீ' சப்தம் வருகிறது. நம் புத்தியைப் பரமாத்ம தேஜஸ் தூண்டணும் என்கிற போது புத்தியை 'தீ' சப்தத்தாலேயே சொல்லி யிருக்கிறது.

'காயத்ரி'க்கு 'ரூட் மீனிங்' என்னவென்றால், "எது கானம் செய்யப்படுவதால் (கானம் செய்கிறவனை) ரக்ஷிக்கிறதோ, அது" என்பதே. வேத ஸ்வரங்களை உரியபடி ஏற்றியிறக்கிச் சொல்வதே ஒரு உசந்த கானம்தான். 'ஸாமகானம்' என்கிறோம். அந்த அர்த்தத்தில்தான் காயத்ரி தன்னை கானம் செய்பவரை ரக்ஷிப்பதாகச் சொன்னது. வேத ஸ்வரங்களுக்குப் பதில் ஸங்கீத ஸப்த ஸ்வரங்களைக் கொண்டு ஸகல ஜனங்களும் கானம் செய்யும் காயத்ரியாக தீக்ஷிதர்வாள் இந்த க்ருதியைப் பண்ணியிருக்கிறாரென்று சொல்லும்படி இதில் அந்த மஹா மந்த்ர விசேஷங்களை வைத்திருக்கிறார்.

ஸப்தஸ்வரத்தில் ஆரம்ப ஸ்வரம், ஆதார ஸ்வரம் என்ன? ஷட்ஜம்; 'ஸ' என்பது. அது மயூர சப்தம் — மயிலின் குரல் எழுப்பும் ஸ்வரம் — என்று சொல்கிறார்கள். மயூரம் என்றால் ஸுப்ரஹ்மண்யர்தான் முன்னே நிற்கிறார். "மரகத

Koviloor Digital Library

மயூரப் பெருமாள் காண்!" என்று அருணகிரிநாதர் சொல்கிறார். ஆதார ச்ருதியாக இருக்கப்பட்ட ஸ்வரத்திற்கே அதிதேவதை என்றால் அவர் ஸங்கீத மூர்த்திதானே? அவருக்கு ஒரு ஸங்கீத காயத்ரி இருக்கத்தானே வேண்டும்? தம்முடைய அநுக்ரஹத்தில், அம்சத்தில் அவரே ஒரு தீக்ஷிதரை உண்டாக்கி, அப்புறம் அவருக்குத் தாமே குருவாகக் கல்கண்டை வாயில் போட்டுக் கல்கண்டாகப் பாடவைத்து அப்படி ஒரு க்ருதி செய்து கொண்டிருக்கிறார்!

ப்ரம்மாவால் தொழப்பட்டவர், ஈசனுக்கு உபதேசித்தவர்

"நத விதாத்ரே":

விதாதா என்றால் ப்ரம்மா. 'வீர நுத'வில் வந்த 'நுத'வும் இந்த 'நத'வும் ஒன்றேதான். 'வணங்கப்பட்ட' என்று அர்த்தம். ஸுப்ரஹ்மண்யரை ப்ரம்மா வணங்கின கதை தெரிந்ததுதான். ஸ்வாமி அவரை ப்ரணவார்த்தம் கேட்க அவர் உளறிக் கொட்டினார். குழந்தை என்ன பண்ணிற்று என்றால் அந்த ஸ்ருஷ்டிகர்த்தாவை ஜெயிலில் போட்டு விட்டு, தானே ஸ்ருஷ்டி பண்ண ஆரம்பித்து விட்டது! சில க்ஷேத்ரங்களில் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியின் கையில் ப்ரம்மாவுக்குரிய ஜபமாலையும் கமண்டலமும் இருக்கும். காஞ்சீபுரம் குமரக் கோட்டத்தில்கூட அப்படித்தான். ப்ரம்மாவின் தொழிலை ஸ்வாமியே நடத்திய அவஸரம் [கோலம்] அது.

அப்புறம் பரமேச்வரன் ப்ரம்மாவுக்காகப் பரிந்து பேசினார். அப்போது, "ப்ரம்மா ஸரியாக அர்த்தம் சொல்லவில்லை என்றால் ஸரியான அர்த்தம்தான் என்ன? உனக்கு தெரியுமானால் சொல்லேன்!" என்றார்.

Koviloor Digital Library

அதற்கு பாலஸுப்ரஹ்மண்யர், "இப்படிப் பையனை வாத்தியார் கேட்கிற மாதிரிக் கேட்டால் சொல்ல முடியாது. வாத்தியாரிடம் பையன் கேட்கிற மாதிரிக் கேளும், சொல்கிறேன்!" என்று கம்பீரமாகச் சொன்னார்.

மஹாவீரனுக்கும் பிள்ளையிடம் தோற்றுப் போவதென்றால் மட்டும் பெருமையாகவே இருக்குமாம். அப்படி, பரமசிவனும் ஸந்தோஷப்பட்டுக் கொண்டு புத்ரனுக்கே சிஷ்யராகி ப்ரணவோபதேசம் பெற்றுக் கொண்டார். அறிவைச் சம்பாதித்துக் கொள்வதற்கு எத்தனை தாழ்ந்தும் தழைந்தும் போகலாம் என்று லோகத்துக்கு இதிலேயே பாடம்.

ஸுப்ரஹ்மண்யரின் மஹிமை நன்றாகத் தெரிந்து விட்டது. ப்ரம்மா ஜெயிலிலேயே அவர் இருந்த திக்கை நோக்கி நமஸ்காரம் பண்ணி ரொம்பவும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஸ்வாமி அவரை விடுதலை பண்ணிப் பழையபடி ஸ்ருஷ்டி க்ருத்யத்தைக் கொடுத்தார். இந்தக் கதையில்தான் அவர் குறிப்பாக ப்ரம்மாவால் வணங்கப்பட்டு "நத விதாத்ரு" ஆனது.

"தேவராஜ ஜாமாத்ரே":

'தேவராஜ ஜாமாதா' — இந்திரனின் மாப்பிள்ளை. முன்னேயே பார்த்தோம்.

எல்லா உலகுகளையும் ஆண்டு அநுபவிப்பவர்

"பூராதி புவந போக்த்ரே":

'பூ' என்றால் பூமி. 'பூராதி' — பூமி முதலிய; 'புவந' — உலகங்கள். கணக்கில்லாத லோகங்களைப் பதிநாலு லோகம் என்றும், அதில் கீழ் லோகங்கள் ஏழு போக பூமியிலிருந்து ஏழு லோகம் என்றும் classify பண்ணி,

Koviloor Digital Library

மேலும் சுருக்கமாக பூர்-புவஸ்-ஸுவர் லோகம் என்று மூன்றாகச் சொல்வது வழக்கம். பூ லோகம் அடி. புவர் லோகம் நடு. ஸுவர் லோகம் உச்சி. மூன்றையும் சேர்த்து 'வ்யாஹ்ருதி'கள் என்பதாக ஓம்காரத்துடன் சேர்த்துச் சொல்வது வேத ஸம்ப்ரதாயம். நாம் வைதிகமாகப் பண்ணும் கர்மமோ, ஜபமோ, த்யானமோ எதுவானாலும் ஸமஸ்த லோகங்களுக்கும் அதனால் நல்லது ஏற்பட வேண்டும் என்ற உசந்த அபிப்ராயத்தில் அப்படிச் சொல்வது.

மறுபடியும் காயத்ரி வந்து விடுகிறது! காயத்ரி ஆரம்பத்திலும் வ்யாஹ்ருதிகளைச் சேர்த்திருக்கிறது. முன்னேயே 'பூஸுராதி' என்ற இடத்தில் 'பூ'வை [தீக்ஷிதர்] கொண்டு வந்தார். அப்புறம் 'வாஸவாதி ஸகல தேவ'ர்களைச் சொன்ன போது அவர்களுடைய வாஸ ஸ்தானமான ஸுவர் லோகத்தை understood ஆக, உள்ளுறை பொருளாகக் குறிப்பிட்டார். இப்போது கீர்த்தனம் முடிகிற ஸமயத்தில் 'பூராதி புவநம்' என்று அத்தனை லோகங்களையும் சொல்கிறார்.

பூராதி புவநங்களில் நடக்கும் ஸகல காரியமும் ஒரு பராசக்தியின் லீலா அநுபவத்திற்குத்தானே? அந்த மஹா சக்தியாக இருந்துகொண்டு ப்ரபஞ்சங்கள் எல்லாவற்றையும் ஆண்டு அநுபவித்துக் கொண்டிருக்கும் 'போக்தா' ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியே என்கிறார். 'பூராதி புவந போக்த்ரே'.

இம்மை – மறுமை இரண்டும் அருள்பவர்

முடிவாக,

"போக மோக்ஷ ப்ரதாத்ரே":

Koviloor Digital Library

ஸகல புவன போகங்களையும் அநுபவிக்கும் போக்தா வாஸ்தவத்தில் அவர்தான். ஆனால் நாமும் இதில் செல்வம், ஸந்தானம், பதவி, கீர்த்தி என்றெல்லாம் பல போகங்களை அநுபவிப்பதாக நாடகம் நடத்திக் காட்டுகிறார். லோக நாடகத்தில் நாம் விரும்பும் போகங்களை — ஸௌக்யங்களை — அளிக்கிறார். 'தாதா' — அளிப்பவர், 'ப்ரதாதா' — சிறப்பாக அளிப்பவர். அதுவே நாலாம் வேற்றுமையில் 'ப்ரதாத்ரே'.

நாடகம் நடக்கிற மட்டும் நன்றாக நடக்கணும்தான். அதற்கான போகங்களை அருள்வதும் ஸரிதான். ஆனால் எப்போதும் நாம் நாடக பாத்ரமாக வேஷத்திலேயே இருப்பதென்றால் நம்மைப் போல அசடு இல்லை என்று தான் அர்த்தம். வேஷம் போய் விட்டால் நாம் நிஜத்தில் எந்த நாமாக இருப்போமோ அந்த ஸத்ய நிலையை அடைய வேண்டாமா? வேஷம் போட்டுக் காட்டும் மனஸ் அழிந்து போய் ஆத்மா மட்டுமாக இருப்பதுதான் அந்த நிலை. ஸம்ஸாரப் பிடுங்கலிலிருந்து விடுபட்ட மோக்ஷம் என்னும் ஸதானந்த நிலை. அந்த நிலையையும் அவரே 'குருகுஹ'னாக, 'தத்வோபதேச கர்த்தா'வாக, 'அஜ்ஞான த்வாந்த ஸவிதா'வாக அள்ளிக் கொடுக்கிறார் — அதாவது, மோக்ஷ ப்ரதாதாவாகவும் இருக்கிறார்.

தனலக்ஷ்மியிடமும், ஸந்தான லக்ஷ்மியிடமும் மோக்ஷத்தை வேண்டினால் கிடைக்காது. போகம்தான் கிடைக்கும். தக்ஷிணாமூர்த்தியிடம் போய் போகத்தைக் கேட்டால் கிடைக்காது. அவர் மோக்ஷந்தான் கொடுப்பார். ஸுப்ரஹ்மண்யர் இரண்டும் தருவார். 'போக மோக்ஷ ப்ரதாதா'. இம்மை, மறுமை என்ற இரண்டும் தருபவர் அவர். இதற்கு மேலே சொல்ல எதுவுமில்லை. க்ருதியும் அப்படியே பூர்த்தியாகிறது.

* * *

Koviloor Digital Library

முடிவுரை; இசைக் கலைஞர்களுக்கு அறிவுரை

அற்புத விளக்கமளித்த ஸ்வாமிகள் அரியக் குடியவர்களிடம் கூறினார்: "நல்ல குரு சிஷ்ய பரம்பரையில் வந்திருக்கிற ஒன்னோட சங்கீதத்தை நீ நல்லபடியா காப்பாத்திண்டு வரதுல ரொம்ப ஸந்தோஷம். இதே மாதிரி நீயும் நல்ல சிஷ்யாளைத் தயாரிச்சு இந்தப் பாரம்பர்யம் தொடர்ந்து போகும்படியாப் பண்ணணும். வேதம் கத்துண்ட ப்ராமணன் இன்னம் ஒருத்தனுக்காவது அதைச் சொல்லிக் கொடுத்தே தீரணும்னு, 'அத்யாபனம்'னே அவனுக்குக் கம்பல்ஸரியா ஒரு கடமை கொடுத்திருக்கு. அது எல்லாக் கலைக்கும், சாஸ்த்ரத்துக்கும் பொருந்தும். தான் கற்ற வித்தை தன்னோட போகாம இன்னம் பல பேர்கிட்டப் போகும்படியாப் பண்ணணும்.

"ஸங்கீத வித்வான்கள் முக்யமா ஒண்ணு பண்ணணும். தாங்க(ள்) பாடற ஸம்ஸ்க்ருதப் பாட்டு, தெலுங்குப் பாட்டுகளுக்கு அர்த்தம் தெரிஞ்சுண்டு, அர்த்த பாவத்தோட பாடணும். தமிழே போறும்னு சொன்னா ஸரியில்லே. ஸங்கீத நுட்பம், அர்த்த விசேஷம் ரெண்டிலேயும் உசத்தியா மஹா பெரியவா பல பேர் இந்தத் தமிழ் தேசத்துல தெலுங்கிலேயும் ஸம்ஸ்க்ருதத்திலே யும் நூத்துக்கணக்காப் பாட்டுக்களைக் கொட்டிட்டுப் போயிருக்கா. அதெல்லாம் வேண்டாம்னு தள்றது நமக்குத் தான் நஷ்டம். தமிழிலேயும் நிறையப் பாடட்டும். மத்த பாஷையிலேயும் பாடட்டும். 'அர்த்தம் தெரியலையே'ன்னா தெரிஞ்சுக்கணும். தெரிஞ்சுக்கறது கஷ்டமேயில்லை. நமக்கா இஷ்டம் இருந்தா ஆகாத போகாத ஸமாசாரங்களுக் கெல்லாம் எத்தனை ஒழைச்சுத் தெரிஞ்சுக்கறோம்? சுத்தமான ஸங்கீதம், ஒசந்த அர்த்த விசேஷம் — இதுகளுக்கே வித்வான்கள் 'டெடிகேட்' பண்ணிண்டா பாஷை குறுக்கே நிக்காது. இதுக்கெல்லாம், ஸங்கீத

Koviloor Digital Library

ஒலகத்துல இப்ப முதலா இருக்கிற நீ ஒன்னாலானதைப் பண்ணு. அநுக்ரஹ பலம் ஒனக்கு சக்தி கொடுக்கட்டும்."

அரியக்குடி நாத்தழுதழுத்து, "என் ஆயுஸில் இன்றைவிட நான் பெரிய பாக்கியம் அடைந்ததில்லை" என்று கூறி விடைபெற்றார்.

அந்த விநாடியே ஸ்வாமிகள் மீண்டும் மௌனம் பூண்டு விட்டார்.

* * *

முழுப் பாடல்

பல்லவி

ஸ்ரீ ஸு³ப்ரஹ்மண்யாய நமஸ்தே நமஸ்தே
மநஸிஜ கோடி கோடி லாவண்யாய தீன சரண்யாய

அநுபல்லவி

பூஸு³ராதி ஸமஸ்த ஜன பூஜிதாப்ஜ சரணாய
வாஸு³கி தக்ஷகாதி ஸர்ப்ப ஸ்வரூப தரணாய
வாஸவாதி ஸகல தேவ வந்திதாய வரேண்யாய
தாஸ ஜனாபீஷ்ட ப்ரத தக்ஷதராக்ர கண்யாய

சரணம்

தாரக ஸிம்ஹமுக சூரபத்மாஸு³ர ஸம்ஹர்த்ரே
தாபத்ரய ஹரண நிபுண தத்வோபதேச கர்த்ரே
வீரநுத குருகுஹாயாஜ்ஞான த்வாந்த ஸவித்ரே
விஜயவல்லீ பர்த்ரே சக்த்யாயுத தர்த்ரே
தீராய நத விதாத்ரே தேவராஜ ஜாமாத்ரே
பூராதி புவந போக்த்ரே போக மோக்ஷ ப்ரதாத்ரே

ஸ்ரீ ஸு³ப்ரஹ்மண்யாய நமஸ்தே !

Koviloor Digital Library

தூக்கக்காரனும் ஆட்டக்காரனும் பாட்டுக்காரர்களும்[1]

இரண்டு ராஜாக்கள்: ஸர்வலோக ராஜாவின் இரண்டு வேஷங்கள்

முந்தாநாள் வைகுண்ட ஏகாதசி போச்சு. நாளன்றைக்கு ராத்திரி முடிந்து மறுநாள் பிறக்கிறதற்கு முன்னாடியே ஆர்த்ராபிஷேகம் — திருவாதிரை அபிஷேகம் — நடந்துவிடும்.[2] ஒன்று பட்டினி நாள்; மற்றது ஏழு 'தான்' கூட்டோடு களி சாப்பிட்டேயாக வேண்டிய நாள்! **'திருவாதிரை ஒரு வாய் களி தின்னாதவர் நரகக் குளி'** என்று பயமுறுத்தியே களி சாப்பிடவைக்கிற நாள். 'களி'க்கு எதுகைக்காகக் 'குழி'யைக் 'குளி'யாக்கியிருக்கிறது!

ஒன்று தூக்கக்காரன் விரதம், மற்றது ஆட்டக்காரன் பண்டிகை. ஆனால் இரண்டு பேரும் ஒரே மாதிரி ராஜாக்கள்—ரங்கராஜா, நடராஜா.

ராஜா என்றால் ராஜஸபை, ராஜஸதஸ் என்று தர்பார் இருக்கணுமோல்லியோ? அப்படித்தான் அந்த இரண்டு பேருக்கும் அந்த அம்சமும் ஒற்றுமையாக

1. இவ்வுரையை 'தெய்வ விஷயம்' என்ற பிரிவில் சேர்க்க இடமுண்டாயினும் இதில் இசைத் துறை குறித்தும் கருத்துக்கள் இருப்பதால் 'பண்பாடு' எனும் பிரிவில் சேர்த்திருக்கிறது.

2. இது 1966 டிஸம்பர் 25–ந் தேதி ஸ்ரீசரணர் ஆந்திர மாநிலப் புரொதத்தூரில் ஓர் உரையாடலின்போது கூறியவற்றின் தொகுப்பு. அம்மாதம் 23–ம் தேதி வைகுண்ட ஏகாதசியும் 27/28–ந் தேதி திருவாதிரை அபிஷேக/தரிசனங்களும் நிகழ்ந்தன.

Koviloor Digital Library

இருக்கிறது. ரங்கம் என்றால் ஸபைதான். சிதம்பரத்திலோ ஸபை, ஸபை என்றே ஸந்நிதியைச் சொல்கிறது- சித்ஸபை, கனகஸபை என்று. விஷயம் தெரிந்தவர்கள் அந்த ஆட்டக் காரன் ஸாக்ஷாத்தாக ஆடுகிற அந்த இடம் மட்டுமே சித்ஸபை என்றும், அந்த வாசல்படிக்கு அடுத்தாற்போல பக்தர்கள் நிற்கிற இடமே கனக ஸபை என்றும் சொல்வார்கள். எப்படியானாலும் ஸபைதான். இந்த இரண்டு ஸபைகளிலும் இருக்கிற இரண்டு ராஜாக்களும் ஒரே மாதிரி தெற்குப் பார்த்தே இருப்பதிலும் ஒற்றுமை!

இன்னொரு ஒற்றுமை, இந்த இரண்டு ராஜாக்களுமே தங்கள் ராஜ்யப் பிரஜைகளுக்குத் தண்டனை கொடுக்கிற தற்கோ, மற்ற ராஜ்யங்களோடு சண்டை போடுவதற்கோ ஸபை கூட்டி தர்பார் நடத்துகிறவர்களில்லை! இது 'பொலிடிகல்' — ராஜாங்க — அரசாங்க ஸபையே இல்லை! 'ராஜ அங்கமான ஸபையேயில்லாத ராஜாக்களா? வேடிக்கையாயியிருக்கே?' என்றால் வேடிக்கையேதான்!

ப்ரபஞ்சம் பூராவையும், ப்ரபஞ்ச வாழ்விலே நடக்கிற எல்லாவற்றையும் — அதிலிருந்து தப்பித்துக் கொண்டு மோக்ஷத்திற்குப் போய்ச் சேர்வது பர்யந்தம் ஸகலத்தையும் — வேடிக்கையாகவே நடத்தி வைக்கிற ஸர்வலோக ராஜா தான் இப்படி இரண்டு வேஷம் போட்டுக் கொண்டி ருப்பது! ஒருத்தன் வேடிக்கை ஆட்டமாகவே ஆடி அதை நடத்தி விடுகிறான் — நாளன்றைக்குக் களி தின்ன வைத்துப் பண்டிகை கொண்டாட வைக்கப் போகிறானே, அவன்! ஆமாம், அவனுடையது தண்டனை தரும் ஸபையில்லை, நடன ஸபை! ம்யூஸிக் ஸபா, டான்ஸ் ஸபா என்றே சொல்கிறோமே, அந்த மாதிரி ஸபை! முந்தா நாள் பட்டினி போட வைத்தவனுடைய ஸபை? அது நான் சொன்ன வேடிக்கையிலேயும் இன்னும் வேடிக்கை! சயனக்ருஹம்- bedroom-தான் இங்கே ஸபை! அங்கே ஒரே ஆட்டமான

Koviloor Digital Library

ஆட்டமென்றால், இங்கே ஸரியான தூக்கம்! ஆட்டமாக ஆடினால், களி, கிளி சாப்பிட்டால்தானே முடியும்? அப்படி அங்கே! தூக்கத்துக்கு ஏர்வையாக [ஏற்றதாக] இங்கே பட்டினி!

தூக்கத்திலேயே உலகை நடத்துவது

'அது ஸரி, ஸபை கூட்டி டான்ஸ் ஆடுவது பொருத்தம். ஸபை கூட்டித் தூங்குவார்களா? ஊர்ச் சத்தம் இல்லாமல் ஏகாந்தமாக அல்லவா தூங்குவார்கள்?' என்றால், அதுதான் வேடிக்கையிலேயும் வேடிக்கை என்றது! இதைப் பண்ணுகிறவனை மஹா மாயன், மஹா மாயன் என்றே சொல்கிறது! பண்ணுகிற அத்தனையும் ஸாதாரண மாய வேடிக்கையாக இல்லாமல், அஸாதாரண மான வேடிக்கையிலும் வேடிக்கையாகப் பண்ணுகிறவன் அவன்! 'ஏன், என்ன, எப்படி?' கேட்டுப் புண்யமில்லை! அதனால் களிக்காரன் களிக்கூத்தாடிக் கொண்டே பண்ணும் ப்ரபஞ்ச நிர்வாகத்தை இந்தப் பட்டினிக்காரன் தூங்கிக் கொண்டே பண்ணி விடுவான்!...

'களிக்கூத்து' என்றேன். மலையாள பாஷை தமிழிலிருந்தே பிறந்தது; இன்றைக்கும் தமிழைவிட ஆதிகாலத் தமிழ்பாஷை வழக்குகள் பலவற்றைக் கொண்டதாக அந்த பாஷை இருக்கிறது. அந்த பாஷையில் டான்ஸுக்கே 'களி' என்றுதான் பெயர்! 'கதகளி' என்கிறோமே அது 'கதை' ப்ளஸ் 'களி', அதாவது ஒரு கதையோடு சேர்ந்த — ஒரு கதையை நடித்துக் காட்டுகிற — டான்ஸ்தான்! 'ஆட்ட கதா' என்றுகூட அதற்கு இன்னொரு பேர் உண்டு. இந்தப் பேரிலே டான்ஸ் முதலிலேயும், கதை பின்னாலேயும் வருகிறது. அது இருக்கட்டும்...

மாயக்காரன்! 'மாயோன்' என்றே பழந்தமிழிலக்கியத் தில் அவனைச் சொல்லியிருக்கிறது. ஆனால் அதற்கு

Koviloor Digital Library

ஸம்ஸ்க்ருத மூலம் காட்டப் பிரியப்படாத தனித் தமிழ்க்காரர்கள், 'இது மாஜிக், வேடிக்கை என்கிற மாயை ஸம்பந்தப்பட்டதில்லை; அவன் கறுப்பு நிறம் என்பதாலேயே 'மாயோன்' என்று பேர்' என்கிறார்கள். கடைசியில் அதுவும் மாஜிக் வேடிக்கையில்தான் கொண்டு விடுவதாக எனக்குத் தோன்றுகிறது. கறுப்பு என்றால் இருட்டு. இருட்டு என்றால் தூக்கம். தூக்கத்திலேயே ப்ரபஞ்சத்தை நிர்வஹிக்கும் மாயம் கோத்துக் கொண்டு போவதாகச் சொல்லலாமோல்லியோ?

'அது எப்படி, தூக்கத்திலேயே ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி-ஸ்திதி-ஸம்ஹாராதிகளை நிர்வஹிப்பது?' என்றால் அந்த மாயப் புதிரை அவிழ்ப்பதாக ஒரு எக்ஸ்ப்ளனேஷன் சொல்கிறேன்: தூங்கினால்தானே கனாக் காணமுடியும்? அப்படி ஒரு மாயக் கனாவாகத்தான் தூங்குகிற பெருமானின் சித்தத்தில் இந்த ப்ரபஞ்சம் உண்டாகி நடக்கிறது; இது நிஜமில்லை, நனவு இல்லை, அவனுடைய வேடிக்கை நினைவான கனவுதான் என்ற பரம தாத்பர்யந்தான் அந்த 'எக்ஸ்ப்ளனேஷன்'.

அதை ஸபையிலே பண்ணிக்காட்டுகிறான். ரங்கம் என்றால் நாடக ஸபைதான். தியேட்டர் என்கிறோமே, அது. அதுதான் தமிழ் 'அரங்கம்'. இன்றைக்கும் டான்ஸ் 'அரங்கேற்றம்' என்றுதானே சொல்கிறோம்?

பாண்டுரங்கன்

இன்னொரு அர்த்தம் கலர், வர்ணம் என்பது. தமிழ் தேசத்திலே ஸ்ரீரங்கநாதன் மாதிரி மஹாராஷ்டிராவிலே பாண்டுரங்கன்தான் வைஷ்ணவமான பிரதான மூர்த்தி. அங்கே 'ரங்க' என்கிறது கலர்தான். பாண்டு என்றால் வெள்ளை. பாண்டவர்களின் அப்பாவான பாண்டுவுக்கு அந்த 'வெள்ளைக்கார'ப் பேர்தான்! அர்ஜுனன்

Koviloor Digital Library

என்றாலும் 'வெள்ளைக்காரன்'தான்! க்ருஷ்ணன் என்றால் கறுப்பன். இந்தக் கறுப்பனும் அந்த வெள்ளைக்காரனும் தான் அத்தனை அன்யோன்யம்! அந்தக் கறுப்பனே தன்னுடைய மஹா மாயாவித்தனத்திலே வெளுப்பவனாக இருந்த அவஸரம்தான் - திருக்கோலம்தான் - பாண்டு ரங்கன்.

இப்போது கோலம் என்று ஒரு வார்த்தை சொன்னேன். இழைக் கோலம், மாவுக் கோலம் என்றும் போடுகிறோம். அதற்குப் பேரும் ரங்கவல்லிதான். பூர்வத்திலே கொடி கொடியாக டிஸைன்கள் கலர்க் கலர் மாவுகளில் போட்டு வந்தார்கள். இப்போதும் அந்த வழக்கம் இல்லாமலில்லை. அந்த 'கலர்க்கொடி'தான் 'ரங்க வல்லி'. 'ரங்கோலி' என்று பேச்சில் இருக்கிறதே அது... கும்பகோணத்தில் கோமளவல்லி, திருவல்லிக்கேணியில் வேதவல்லி என்கிற மாதிரி, கோவில்களில் மஹா லக்ஷ்மிக்கு 'வல்லி'ப் பேரே சொல்லும் வழக்கப்படி ஸ்ரீரங்கத்தில் தாயாராயிருக்கும் ரங்கநாயகியையும் ரங்கவல்லி என்பார்கள்.

கறுப்பு ஸ்வாமி வெள்ளைப் பாண்டுரங்கனான கதை என்ன என்று அங்கேயுள்ள ஸ்தல புராணங்களில் எதிலும் எனக்குத் தெரிந்தவரையில் இல்லை. 'ரிஸர்ச்'காரர்களா னால், ஆதியிலே இப்போது பண்டரிபுரம், பண்டர்பூர் என்கிற இடத்துக்குப் பாண்டர்கே என்று பேர் இருந்ததாக வும், வார்த்தைகள் எப்படியெப்படியோ திரிந்து ஏற்பட்ட ஊர்ப் பெயர்களுக்கு அர்த்தம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது என்றும், பாண்டர்கே கோவிலிலிருக்கிறவனை, அந்தப் பேரை ஸம்ஸ்கிருதம் பண்ணி 'பாண்டுரங்கன்' என்று சொல்லிவிட்டார்கள் என்றும் சொல்கிறார்கள். எனக்கென்னவோ அவர்கள் தல்லகாலாக மாற்றிப் போட்டுச் சொல்லுவதாகவே தோன்றுகிறது!

Koviloor Digital Library

[கறுப்பன் எப்படி வெளுப்புக்காரனானான் என்பதற்கான] கதை அகப்படாவிட்டாலும் அதிலே பெரிய தத்வார்த்தமே தெரிகிறது. மஹா மாயமாகவே அவன் மஹா ஞானமும்கூடக் கொடுப்பது தெரிகிறது! கறுப்பு-வெளுப்பு இரண்டும் ஒன்றுதான் என்கிற அத்வைத ஞானம்! பொது ஜனங்களுடைய ராத்ரிக் காலம் ஞானிக்குப் பகல் வேளை, ஞானியுடைய ராத்ரிக் காலம் பொது ஜனங்களுக்குப் பகல் வேளை என்று கீதையிலே அவனே சொல்லியிருக்கிறான்[1]. பரமாத்மா தெரியாத இருட்டிலே ஜனங்கள் லோகத்தை மட்டும் நல்ல வெளிச்சமான பகலாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்; இந்த லோகம் தெரியாமல் இருட்டிப் போய்விட்ட அநுபூதி ஸ்திதியில் ஞானி பரமாத்மாவையே அநுபவித்துக் கொண்டிருக்கிறான் என்று அர்த்தம். நம்முடைய அந்த மாயத்ருஷ்டிக்கு இருட்டின் கலராகத் தெரிகிற கறுப்பன் வாஸ்தவத்தில் பகல் காலத்தின் வெள்ளை வெளிச்சமாக ஞானி அநுபவிக்கிற பரமாத்மாவே என்று காட்டத்தான் பாண்டுரங்கனாக இருக்கிறான்.

வேற்றுமையில் ஒற்றுமை

இங்கே நம் ஊரிலே அந்த ஆட்டக்காரனும் தூக்கக்காரனுங்கூட இதே பரம ஸத்யத்தைத்தான் 'unity in diversity' — வேற்றுமையிலேயே ஒற்றுமை — என்கிறபடி காட்டிக் கொண்டிருக்கிறார்கள். பிரபஞ்சமெல்லாம், உயிர்களெல்லாம் ஒடுங்கிப் போகிற சாந்தமாக சிவனைத் தான் பொதுவிலே சொல்வது. உபநிஷத்திலேயே அப்படித் தான்[2]! 'ப்ரபஞ்சங்கள் எல்லாம் 'உபசமனம்' என்பதாக

1. கீதை 2.69
2. மாண்டுக்ய உபநிஷத்து 7, 12

Koviloor Digital Library

உள்ளே அடங்கிப் போன சாந்தமே சிவமாக இருக்கிறது, அத்வைதமாக இருக்கிறது. இப்போது தூக்கம்-முழிப்பு-கனா என்று மூன்று பார்த்தோமே, அவற்றைக் கடந்த நாலாவது நிலையான 'துரீய'மாக இருக்கிறது' என்று அந்த உபநிஷத் சொல்கிறது. ஆனாலும் இங்கே நாம் என்ன பார்க்கிறோம்? அந்த சாந்த சிவம்தான் ஆட்டமான ஆட்டம் ஆடுகிறது.

அந்த சாந்த சிவத்துக்கு எதிர்வெட்டாக மஹா விஷ்ணுவையே இந்த மாய ப்ரபஞ்ச காரகனாக அத்தனை மாயா நாடகமும் பண்ணுவித்துக் கொட்டம் போடுபவனாகச் சொல்வது பொது வழக்கம். இங்கே பார்த்தாலோ அவன்தான் பரம சாந்தனாக, **'சாந்தாகாரம் புஜகசயனம்'** என்று சயனித்துக்கொண்டு, நித்திரை பண்ணிக்கொண்டிருக்கிறான்!

'எதிர்வெட்டே இல்லை! நாங்கள் இரண்டு பேரும் எதிரே எதிரே நின்று வெட்டிக் கொண்டிருக்கிறவர் களில்லை'....

எதிரே நிற்பவன்தான் எதிரி! பக்கத்திலே இருக்கிறவன்தான் பக்ஷமாக இருப்பவன். 'பக்கம்' என்ற வார்த்தையே 'பக்ஷ'த்தின் மரூஉ தான்! அதனால்தான் கோவில் ஸந்நிதிகளில் ஸ்வாமிக்கு இரண்டு பக்கமுமே ஸேவார்த்திகள் நிற்பது. கடாக்ஷம் — கடைக்கண் — தான் குளிர்ச்சி; க்ருபா வர்ஷம் பொழிவது. அதைத்தானே பிரார்த்திப்பதும்? நேர்ப்பார்வையை இல்லையே! அந்தக் கடைக்கண் பார்வை பக்கவாட்டில் நின்றால்தானே கிடைக்கும்?...

'நாங்கள் இரண்டு பேரும் எதிரிகள் இல்லை. வெட்டிக் கொள்கிறவர்களில்லை. ரொம்பவும் பக்ஷமாக ஒட்டிக் கொண்டவர்கள்தான்! 'ஒட்டிக் கொண்டு' என்றால் கூடப் போதாது; ஒன்றியே இருப்பவர்கள்; ஒன்றாகவே

Koviloor Digital Library

இருப்பவர்கள். பக்கத்தில் பக்கத்தில் இல்லை. எங்களில் பரஸ்பரம் ஒருத்தருக்குள்ளேயே இன்னொருத்தர்! '**இருவர் அங்கத்தால் திரிவரே(லு)ம் ஒருவன் ஒருவன் அங்கத்(து) உளன்**' என்று பொய்கை ஆழ்வார் சொன்ன மாதிரி அங்க வித்யாஸம் வெளியிலே தெரிந்தாலும் உள்ளே அந்தரங்கத்திலே, ஒன்றாகவே இருப்பவர்கள்' என்றே அந்த இரண்டு பேரும் சொல்லாமல் சொல்லிக்கொண்டு, அதற்கு மறைமுகமாகச் சான்று காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

'இருவர் அங்கத்தால்' என்று நான் ஸந்தி பிரித்துச் சொன்னது மூலத்திலும், ஸ்ரீ வைஷ்ணவர்கள் பாசுரம் ஸேவிக்கிற பாணியிலும் 'இருவரங்கத்தால்' என்று சேர்ந்து வரும். அதைச் சாதுர்யமாக 'இரு அரங்கத்தால்' என்றும் பிரித்துக் கொள்ளலாம்! அரங்கம் என்றே சொல்லும் ஸ்ரீரங்கம், ஸபை எனப்படும் சிதம்பரம் ஆகிய இரண்டு அரங்கத்தால் அவர்கள் திரிந்தாலும், — 'திரிவரேலும்', அதாவது ஜகத் வியாபாரம் முழுவதையும் பண்ணுகிறார் களாயினும், ஒருத்தருக்குள் ஒருத்தர்தான் – 'ஒருவனொரு வனங்கத்துளன்' – என்று அர்த்தம் பண்ணலாம்.

தூங்குபவரின் உள்ளேயே ஸபை; விச்வாகார நடனம்

எல்லாம் ஸரி, இன்னம் ஒரு கேள்வி நிற்கிறதே! 'ஸபையிலே ஸபாபதி என்றே பேர் பெற்றவன் டான்ஸ் பண்ணுகிறது ரொம்பப் பொருத்தம்; சயனித்துக் கொண்டு நித்திரை பண்ணி 'சாயி' என்றே – ரங்கசாயி, சேஷசாயி, பன்னகசாயி, புஜகேந்த்ரசாயி, க்ஷீராப்தி சாயி என்றெல்லாமே – பேர் பெற்றிருக்கிறவன் ஸபையிலே வந்து படுக்கையைப் போட்டுக் கொண்டு தூக்கம் போடுகிறா னென்றால் பொருத்தமாயில்லையே!' என்ற கேள்விக்குப் பதிலைக் காணோமே!' என்றால்:

Koviloor Digital Library

அவர் ஏதோ அவருக்கு வெளியிலே இருக்கிற ஒரு ஸபைக்குள்ளே வந்து பைந்நாகப் பாயை விரித்துக் கொண்டு நித்திரை பண்ணவில்லை. அந்த ஸபை — அரங்கம், அதுவும் — அவருடைய சித்தத்துக்குள்ளேயே அவருடைய ஸ்வப்னமாக விரிகிற ஸமஸ்த ஸ்தூல-ஸூக்ஷ்ம-காரண ஜகத்துக்களில் இருப்பதுதான்! நம்முடைய ஜகத்துக்குள் உள்ள ஸபைக்கு அவர் வரவில்லை! அவருக்குள்தான் நாமும், ஜகத்தும், ஸபையும் எல்லாமுமே இருக்கிறது!

ஜகத் ஆட்டமாக ஆடுகிறதுதான்! பூமி தன்னைத் தானே சுற்றிக் கொண்டு ஒரு டான்ஸ், ஸூர்யனைச் சுற்றி வருவதான இன்னொரு டான்ஸ் என்று இரண்டை ஒரே ஸமயத்தில் பண்ணிக் கொண்டிருக்கிறது. மற்ற கிரஹங்களும் அப்படியே ஸூர்யனைச் சுற்றிக் கொண்டு — ராஸ லீலையில் க்ருஷ்ணனைச் சுற்றி கோபிகா ஸ்த்ரீகள் மாதிரி — டான்ஸ் பண்ணிக் கொண்டு தான் இருக்கின்றன. அந்த ஸூர்யனும், இன்னும் நக்ஷத்ர-க்ரஹ மண்டலங்கள் பூராவுமே ஒரு டான்ஸாக எதையோ நோக்கி ஸஞ்சரித்துக் கொண்டே இருப்பதாகத்தான் தெரிகிறது என்று ஆஸ்ட்ரோ ஃபிஸிக்ஸில் சொல்கிறார்கள்.

ஒரு பக்கம் இப்படி விச்வாகார டான்ஸ். இன்னொரு பக்கம், இன்னொரு கோடியில், ரொம்....பக் கோடியில் துளியிலும் துளியான அணுவுக்குள்ளேயும் ப்ரோடான் என்கிற பரமாணுவைச் சுற்றி எதைவிட 'ஸ்பீட்' கிடையாதோ அந்த 'லைட்'டின் வேகத்தோடு எலெக்ட்ரான் என்ற பரமாணு பண்ணும் டான்ஸ்!

மநுஷ்யர்களாகிற நம்மை எடுத்துக் கொண்டாலோ ரத்தம் துடித்துத் துடித்துப் பாய்கிற டான்ஸ், ச்வாஸம் ஏறி இறங்குகிற டான்ஸ், வயிற்றுக்குள்ளே அன்ன

Koviloor Digital Library

பானங்களைச் சுழட்டிச் சுழட்டி ஜீர்ணிக்கிற டான்ஸ், பலவிதமான 'க்ளான்டு'களும் சுரந்து கொண்டிருக்கிற டான்ஸ் என்று டான்ஸ் மயமாக இருக்கிறது!

நம்முடைய, நம்மில் ஒவ்வொருத்தருடைய, சித்தத்தையும் எடுத்துக் கொண்டாலோ, கேட்கவே வேண்டாம்! இதுவரை சொன்ன அத்தனை டான்ஸையும் சேர்த்து வைத்த டான்ஸ்! ஆசை, கோபம், அந்த இரண்டிலே கவடுவிடுகிற நூறாயிரம் உணர்ச்சிகள் ஆகியவை ஆடுகிற, நம்மை ஸதாவும் ஆட்டி வைக்கிற டான்ஸ்!

இத்தனையும் அவனுடைய மாயக் கனாவுக்குள் இருக்கிறது தான்!

அதாவது இத்தனை டான்ஸூம் நடக்கிற ஸபை, அரங்கம், அவன் சித்தத்துக்குள் இருக்கிறதுதான்!

அந்த அவனை, அவனுடைய அந்த ஸாக்ஷாத் ஸ்வரூபத்தில் நம்மால் பார்க்க முடியாது. அது பார்க்கக் கூடிய ஸ்வரூபமே இல்லை. ஞானிகள் அநுபவமாகவே தெரிந்து கொள்ளும் தத்வ ஸ்வரூபம் அது.

பரம கருணையினாலே — நாம் நிஜம் என்று நம்பி மோசம் போகும் ஜகத்து தன்னுடைய லீலா நிமித்தமான மாய ஸ்வப்னமே என்று நமக்கும், பாமர பாமரமான நமக்கும், கண்ணுக்கு முன்னால் அழகாக, திவ்ய ரூபமாகக் காட்டிக் கொடுக்கிற பரம கருணையினாலே — அந்த தத்வ ஸ்வரூபன் அந்த தத்வத்தின் ரூபகமான [உருவகமான] ஒரு ஸ்தூல மூர்த்தியாகி, ஸகலரும் தன்னைப் பார்த்துத் தத்வம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று, அரங்கம் என்று பெரிசாக ஸபை கூட்டி, ஜகத்துக்குள்ளே தான் வந்து நித்திரை செய்வதாக தரிசனம் கொடுக்கிறான்!

Koviloor Digital Library

இரு ஸபைகளும் மௌன அகண்டமே!

ஜகத் என்பது நிஜமேயில்லை, 'பொய்ம்மாயை'தான்[1] என்கிற இதே தத்வத்தைத்தான் சித்ஸபையிலே ஆட்டக் காரரும் காட்டுகிறார். பரமாத்மாவின் சித்த ஸபைக்குள்ளே முளைத்த ஜகத்தையே தன்னுடைய ஆட்டத்தினால் உண்டாக்குவதாக நமக்குப் புரியும்படி, கண்ணுக்குத் தெரியும்படி பரம க்ருபையோடு – **'க்ருபாநிதி இவரைப் போலக் கிடைக்குமோ ?'** என்றே கோபாலக்ருஷ்ண பாரதி கேட்கிறாரே,[2] அப்படிப்பட்ட க்ருபையோடு — ஆனந்த நடனமாக, வெளிநாட்டு அநுபவிகளும் கலாரஸிகர்களுங் கூட, 'இதற்கு மேலே ஒரு மூர்த்தியில்லை!' என்று கொண்டாடும்படியான ரூபத்தோடு ஆடிக் காட்டுகிறார்!

அத்தனை சித்தங்களும், அவருடைய திவ்ய சித்தமுமேகூட அடங்கிப் போய், வெளியிலே தெரிகிற சிவனும் உள்ளுக்குள் உள்ளே இருக்கும் சிவமாக இருக்கிற பரப்ரஹ்மமான ஞான ஆகாசமே இத்தனைக்கும் அடி ஆதாரம். அது ஒன்றே பரம ஸத்யம். அது ஆடாமல் அசையாமல் இருந்து கொண்டே இத்தனை ஆட்டத்துக்கும் ஆதாரமாக இருக்கிறது. 'சிதம்பரம்' என்றால் அந்த 'ஞானாகாசம்' தான். 'சித்' – ஞானம்; 'அம்பரம்' – ஆகாசம். அதையே தம் ஆட்டத்துக்கான ஸபைமேடை — dias — ஆக காட்டுகிறார்.

அதே மௌன அகண்டத்தையே நித்திரை என்ற ரூபத்தில் அரங்கத்தின் தூக்கக்காரர் காட்டுகிறார்.

---

1. 'பொய்ம்மாயப் பெருங்கடலில்' என்ற அப்பரடிகளின் திருவாக்கு ஸ்ரீசரணர் மிகவும் உவந்த ஒன்று. எனவே போலும், இவ்வுரையில் 'பொய்ம்மாயை' என்று புணர்ச்சி 'ம்'மை அழுத்தியே ஒவ்வொரு முறையும் கூறினார்.
2. 'ஸபாபதிக்கு' என்ற பாடல்.

Koviloor Digital Library

ஆகக்கூடி மொத்தத்தில், மறக்கக் கூடாத பெரிய தத்வமாக, ஸத்யமாக நாம் தெரிந்து கொள்வது, 'அந்த இரண்டு ஆஸாமிகளும் வெளிப்பார்வைக்கு அடியோடு வித்யாஸமான வெவ்வேறே கார்யங்களைப் பண்ணினாலும் உள்ளே ஒருத்தரே தான்! ஒரே தத்வத்தைத்தான் அவர்கள் இரண்டு விதமாக ரூபகம் செய்து காட்டுகிறார்கள்' என்பதுதான்.

கனவும், விளையாட்டும்

நிஜமாக இல்லாததை ஒன்று, கனா என்று சொல்வோம்; அல்லது விளையாட்டு என்போம்.

எதுவோ ஒன்று நிஜமாக நடக்கப் போகிறது என்று எதிர்பார்க்கிறோம். அது ஏமாற்றிவிட்டு ஓடிப் போய் விடுகிறது. 'எல்லாம் கனாவாப் போச்சு' என்கிறோம். அந்தக் கனவான பொய்ம்மாயமாகவே ஜகத்தைக் காட்டுகிறான் ஸ்ரீரங்கத்துத் தூக்கக்காரன்.

விளையாட்டு என்பது நிஜமில்லாததுதான். ஏதோ சின்ன சொப்பை, பொம்மையை பெரிய அண்டான் குண்டான் மாதிரி வேஷம் கொடுத்து வைத்து, பாலப் பிராயத்துக் குழந்தைகள் அம்மா-அப்பா, தாத்தா-பாட்டி என்று தங்களுக்கு வேஷம் கொடுத்துக் கொண்டு பண்ணுவதுதான் விளையாட்டு. பெரியவர்கள் 'ஸ்போர்ட்ஸ்' என்று பண்ணும் விளையாட்டுகளும் வாழ்க்கையின் நிஜமான ப்ரச்னைகளுக்கு ஸம்பந்தப் படாமல், ஏதோ ஒரு பந்தை ஏதோ ஒரு goal-க்கு அடிக்க வேண்டும் என்று, காரணம் சொல்ல முடியாததான, வாழ்க்கைக்கு அவசியம் என்று சொல்ல முடியாததான காரியங்களாக இருக்கிறவைதானே? 'எதற்காக மண்டையை உடைத்துக் கொண்டு 'செஸ்' காய்களைத் தள்ள வேண்டும்?' என்று கேட்டால் என்ன பதில் சொல்வது?

Koviloor Digital Library

"விளையாட்டுக்குச் சொன்னேன்: நிஜம்னு நினைச்சுட்டியா?" என்று கேட்கிறோமே, அங்கே நன்றாகவே தெரிகிறதோல்லியோ, விளையாட்டு என்கிறது நிஜமில்லை என்று! 'விளையாட்டே வினையாச்சு' என்றும் சொல்கிறோம். வினைதான் நிஜமாகவே நடப்பது. அப்படியானால், விளையாட்டு நிஜமில்லை என்றும், எதனாலோ அப்படிப்பட்டதுகூட நிஜமாகிவிட்டது என்றும்தானே அர்த்தமாகிறது?

'மாயக் கனா' என்கிறாற் போலவே 'மாய விளையாட்டு' என்று சொல்கிறதையும் கவனிக்கவேண்டும்.

இரண்டும் ஒன்றுதான் என்று ஆகிவிட்ட தோல்லியோ?

அதிலே கனாவைக் காட்டுகிறான் ஸ்ரீரங்கத்துத் தூக்கக்காரன். விளையாட்டைக் காட்டுகிறான் சிதம்பரத்து ஆட்டக்காரன்.

'விளையாட்டு', 'விளையாடல்' எல்லாம் ஆட்டம் என்கிறதிலேயே முடிவதாக இருக்கிறது. ஆடல் கலை என்கிறதும் ஒரு விநோத விளையாட்டுதான்! நிஜமாக வாழ்க்கையிலே எழும்பாத பாவங்களை உண்டாக்கிக் கொண்டு, வாழ்க்கைக்கு அவசியம் என்று சொல்ல முடியாத ஜதி பேதங்களைப் போட்டுக்கொண்டு, இல்லாத பாத்திரங்களை இருக்கிறதாக வைத்துக் கொண்டு அபிநயம் செய்கிறதால் அது விளையாட்டுதானே? 'நிஜம்' என்று நாம் நினைக்கும் வாழ்க்கையே பொய்ம்மாயையாகிவிடும் அநுபூதி வரை அபிநயக் கலை அதன் உச்ச ஸ்தானத்தில் கொண்டு விட்டு விடுவதாகச் சொல்கிறார்கள். அப்படி யானாலும், அதுவும் விளையாட்டில் ஆரம்பித்து விளையாட்டு விநோதமாகவே போவதுதானே? உச்சியான பூர்த்தி ஸ்தானத்தில் விளையாட்டே வினையாவதாகச் சொல்லலாம்! [ஸ்ரீசரணர் சிறிது பொழுது தமக்குள்ளேயே

Koviloor Digital Library

சிரித்துக் கொண்டிருந்து, பின்னர் தொடர்வார்:] ஸரியாய்ச் சொன்னால், விளையாட்டால் வினையே போவதாகச் சொல்லலாம்!

அப்படிப்பட்ட நாட்டிய விளையாட்டாகவே இந்தப் பொய்ம் மாய ஜகத்தின் ஸ்ருஷ்டியிலிருந்து ஆரம்பித்து அதிலிருந்து விடுவித்து சிதம்பரமான ஞானாகாசமாகிற பரம ஸத்யத்தில் சிவமாகிற தன்னுடன் தானாகவே ஐக்கியப்படுத்திக் கொள்வதான அநுக்ரஹம் வரையில் 'ஐந்தொழில்'கள் என்கிறவற்றைப் பண்ணி விடுபவன்தான் சிதம்பரத்து ஆட்டக்காரன். ஸ்ருஷ்டி–ஸ்திதி– ஸம்ஹாரம் [என்பவை] எல்லாருக்கும் தெரிந்த மூன்று தொழில்கள். இந்த மூன்றுமே பரம ஸத்யத்தை மறைத்து விடும் மாயை என்ற திரைக்குள் நடப்பவைதான்! அந்த மாயத் திரையைப் போட்டு மறைக்கும் 'திரோதானம்' என்பது நாலாவது தொழில். திரையை நீக்கி, ஞானாகாசத்தில் மோக்ஷமளிக்கிற 'அநுக்ரஹம்' ஐந்தாவது தொழில்.

சாந்தன் எனப்படுகிற பரமேச்வரன் ஆட்டமாக ஆடிப் பண்ணும் இதையே மாயா விநோதன் எனப்படுகிறவன் சாந்தமான தூக்கமாகப் பண்ணிக்காட்டுவதில் அந்த இருவரும், unity in diversityஐ நிரூபித்துக் காட்டுகிறார்கள்.

சிவ–விஷ்ணு அபேதம்

காற்று ஆட்டமாக ஆடுகிற புயலுக்கும் ஆதாரமாக ஒரு சாந்த கர்ப்பம், still centre உண்டு. அணுவுக்குள்ளும் ஒரு still centre-ஐச் சுற்றியே மஹா வேக ஆட்டம் நடப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியே, தனக்கு உள்ளே இருக்கிற ஆடாத அசையாத ஸத்ய ஸ்திதியையே அந்த ஆட்டக்காரன் வெளியிலே ஞானாகாசமாகவும், தூக்கக்

Koviloor Digital Library

காரன் தன்னுடைய மௌன நித்திரையாகவும் தெரிவிக்கிறார்கள்.

'கோயில்' என்றே சைவர்கள் சொல்வது ஆட்டக் காரனின் சிதம்பரத்தைத்தான். வைஷ்ணவர்கள் 'கோயில்' என்று மட்டும் சொன்னால் அது தூக்கக்காரனின் ஸ்ரீரங்கம்தான்.

இரண்டு இடத்திலும் 'டான்ஸ் தியேட்டர்' என்கிற அர்த்தம் கொடுக்கும் 'ஸபை' என்றும் 'ரங்கம்' என்றும் தான் அவர்களுடைய ஸந்நிதிகளுக்குத் தனிப்பெயரும் கொடுத்திருக்கிறார்கள்.

நம்முடைய பூர்விகர்கள் அந்த இரண்டு பேரும் ஒருத்தனேதான் என்று நன்றாகத் தெரிந்து கொண்டிருந் தார்கள் என்பதையே இது காட்டுகிறது.

அந்த இரண்டு பேருக்கும் விசேஷமான திருநாள்கள் இந்த தநுர் மாஸத்திலேயேதான் வருகிறது.

இரண்டு பேருக்குமான திருப்பாவை - திருவெம் பாவைப் பாராயணமும் இந்த மாஸத்துக்கென்றே ஏற்பட்டிருக்கிறது.

சிவ-விஷ்ணு அபேதத்தைப் போக்கி ஐக்கியத்தை இப்படிக் காட்டும் பெரிய சிறப்பால்தான் தநுர்மாஸத்திற்கு இத்தனை விசேஷம், **'மாஸானாம் மார்க்கசீர்ஷோ (அ)ஹம்'** - 'மாஸங்களுக்குள்ளே நான் மார்கழியாக இருக்கிறேன்' என்று பகவான் கூறும்படியான தனிச் சிறப்பு* ஏற்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது.

தநுர்மாஸம், மார்கழி

தநுர்மாஸம் என்றும், மார்கழி என்று தமிழில் திரிந்து வந்திருக்கிற மார்க்கசீர்ஷம் என்றும் இரண்டு பெயர் ஏன் என்றால், வருஷத்தைக் கணக்குப் பண்ணுவதில் இரண்டு

* கீதை – 10.35

Koviloor Digital Library

விதங்கள் இருக்கின்றன. அவற்றில் 'ஸௌரமானம்' என்பது ஸூர்யனை வைத்துப் பண்ணினது. பன்னிரண்டு ராசிகளில் ஒவ்வொன்றுக்கும் ஒரு மாஸமாக ஸூர்யன் தாண்டிக் கொண்டே போய் ஒரு வருஷம் பூர்த்தியான வுடன் மறுபடி ஆரம்பித்த ராசிக்கே வருகிற மாதிரி பூமி அதைப் பிரதக்ஷிணம் பண்ணிக் கொண்டு போகும் போது தோன்றும். வாஸ்தவத்தில் ஸூர்யன் இருந்தபடிதான் மத்தியில் இருப்பது. பூமிதான் அதைச் சுற்றிக் கொண்டே போய் ஒரு வருஷம் ஆனதும் ஆரம்பித்த இடத்திற்கே வருவது. ஆனால் பார்வைக்கு மாறுதலாகத் தெரியும். பூமியின் அந்த ஒரு ஸூர்ய ப்ரதக்ஷிணம் மாஸத்திற்கு ஒரு ராசி வீதம் நடந்து 365 நாளில், அதாவது ஒரு வருஷத்தில் பன்னிரண்டு ராசியையும் 'கவர்' பண்ணிவிடுகிறது. இவ்வாறு உள்ளபடியே வைத்துக் கொண்டாலும் ஒரு ராசிக்கு வருஷத்தில் பன்னிரண்டில் ஒரு பங்கான காலம் பிடிக்கிறது என்ற fact நிற்கிறது. ஒவ்வொன்றின் பெயரிலுமாக, முதல் மாஸத்தை 'மேஷம்' என்கிற ராசியில் ஆரம்பித்து, அதற்கு மேஷ மாஸம் என்று பெயர் கொடுத்து, அப்படியே வரிசையாகச் சொல்லிக் கொண்டு போகிற போது ஒன்பதாவது மாஸம் தநுர் ராசியாக அமைவதால் அதற்கு தநுர்மாஸம் என்று பெயர்.

இன்னொரு விதக் கணக்குக்குச் சாந்த்ரமானம் என்று பெயர். சந்த்ரனை வைத்து கணக்குப் பண்ணுவதால் அப்படிப் பெயர். அதன்படி ஒரு க்ருஷ்ண பக்ஷம் 'ப்ளஸ்' ஒரு சுக்ல பக்ஷத்திற்கு எத்தனை நாள் பிடிக்கிறதோ அது ஒரு மாஸம். பெரும்பாலும் ஒரு க்ருஷ்ண பக்ஷ ப்ரதமையிலிருந்து அடுத்த க்ருஷ்ண பக்ஷ ப்ரதமை என்றே சாந்த்ரமானக்காரர்கள் அநுஸரிக்கிறார்கள். வடக்கே ஒரு பௌர்ணமியிலிருந்து அடுத்த பௌர்ணமி வரை ஒரு மாஸம் என்று வைத்துக் கொள்வதும் இருக்கிறது.

Koviloor Digital Library

தமிழ் தேசத்தில் இந்தச் சாந்த்ரமான வழக்கே ரொம்ப காலத்துக்கு முன்னால் இருந்ததால்தான் மாஸத்திற்கே 'திங்கள்' என்று சந்த்ரனின் பெயரைக் கொடுத்திருக்கிறது.

இதில் எந்த நக்ஷத்திரம் ஒரு பௌர்ணமியன்று சந்திரனுக்குக் கிட்டேயிருக்கிறதோ அதன் பெயரையே அந்த மாஸத்திற்குப் பெயராக வைத்திருக்கிறது. சித்ரா நக்ஷத்திரம் பூர்ணிமை சந்திரனுக்குக் கிட்டேயுள்ள மாஸம்தான் சித்திரை, வைசாகம் அப்படி இருப்பது வைகாசி. தமிழில் அந்த நக்ஷத்ரப் பெயர்கள் ரொம்பவும் ரூப பேதம் [உருமாற்றம்] அடைந்து 'ப்ரோஷ்டபதி' என்ற நக்ஷத்ரப் பெயரிலான மாஸம் 'புரட்டாசி', ச்ராவண நக்ஷத்ர மாஸம் 'ஆவணி', 'தைஷ்யம்' என்பது 'தை' என்று இப்படியெல்லாம் ஆகியிருப்பதில்தான் 'மார்க்கசீர்ஷம்' என்பது 'மார்கழி' என்றாகியிருக்கிறது.

தாரா [தாரகை] மண்டலத்தில் 'நக்ஷத்ரங்கள்' என்று பிரதானமாக இருக்கிற இருபத்தேழும் ராசிக்கு இரண்டே கால் நக்ஷத்ரம் வீதம் பன்னிரண்டு ராசிகளில் கவர் ஆகி விடுகின்றன. ஒரு பூர்ணிமை நக்ஷத்திரத்திற்கு அடுத்த பூர்ணிமை நக்ஷத்ரம் இரண்டே கால் நக்ஷத்ரம் தள்ளி அடுத்த ராசியைச் சேர்ந்ததாக இருக்கும். இப்படி இருப்பதால் இங்கேயும் பன்னிரண்டு பூர்ணிமைகளில் - அதாவது பன்னிரண்டு மாஸத்தில் ஒரு வருஷ காலம் பூர்த்தியாகிவிடுகிறது.... மலமாஸம், அதிக மாஸம் என்று ரொம்ப detail-ல் போகாமல் சொல்லிக் கொண்டு போகிறேன்....

ஸௌரமானப்படி மேஷ மாஸம் என்பது இங்கே சித்திரை மாஸம். ரிஷப மாஸம் என்பது வைகாசி மாஸம். இப்படியே ஸௌரமான தநுர் மாஸம்தான் சாந்த்ரமான மார்க்கசீர்ஷமாகிற மார்கழி.

Koviloor Digital Library

சிவ-விஷ்ணு பேதம் போல் சைவ-வைஷ்ணவ ஸமரஸத்தைக் காட்டுவதாக ஈச்வரனுக்கு முக்யமான திருவாதிரை, பெருமாளுக்கு முக்யமான வைகுண்ட ஏகாதசி ஆகிய இரண்டு உத்ஸவங்களும் இந்த மாஸத்திலேயே வருவதால்தான் பகவத் கீதை விபூதி யோகத்தில், தாம் மாஸங்களில் மார்கழி என்று பகவான் சொல்கிறார் என்று தோன்றியதைச் சொன்னேன்.

கிறிஸ்துவும் சிவ-விஷ்ணுக்களும்

அந்த இரண்டுக்கும் நடுவிலே இன்றைக்கு கிறிஸ்துமஸ்.* அது லோகம் பூராவிலும் ரொம்பப் பேர் மதாநுஷ்டான தினமாகவோ, அல்லது 'ஹாலிடே' உல்லாஸமாகவோ — 'ஹோலிடே'யாகவோ, வெறும் 'ஹாலிடே'யாகவோ — கொண்டாடும் நாளாக இருக்கிறது. இதன் காரண புருஷரையும் நம்மைச் சேர்ந்தவராக, அதிலும் தம்முடைய பேராலேயே நான் சொன்ன அந்த சிவ-விஷ்ணு அபேதத்தைக் காட்டுகிறவராக, சொல்லிக் கொள்ளலாமோ என்று தோன்றுகிறது!

அவர் பெயர் என்ன? 'ஜீஸஸ் க்ரைஸ்ட்' என்கிறோம். அது ஜெர்மானிக் என்றும் Teutonic என்றும் சொல்கிற பாஷா 'க்ரூப்'பைச் சேர்ந்த ஜெர்மன் பாஷை, இங்கிலீஷ், டட்ச், இன்னும் ஸ்கான்டினேவியன் பாஷைகள் என்பதாக நார்வே, ஸ்வீடன், டென்மார்க் முதலான தேசங்களில் பேசப்படும் பாஷைகள் ஆகியவற்றில் அவருக்கு ஏற்பட்டிருக்கிற பெயர்தான். அவருக்கு மூலத்தில் ஹீப்ரூக்களின் பாஷையில் என்ன பெயரோ அதுவே - ஸம்ஸ்க்ருத

* உரை நிகழ்ந்தது 1966–ல் வைகுண்ட ஏகாதசியான டிஸம்பர் 23–க்கும் திருவாதிரையான அம் மாத 27/28–க்கும் இடையிலுள்ள 25–ந் தேதி என்று வாசகருக்கு மீண்டும் நினைவூட்டுகிறோம்.

Koviloor Digital Library

'ச்ராவணீ' தமிழ் 'ஆவணி'யாக உருமாறின மாதிரி - இந்த பாஷைகளில் ஜீஸஸ் என்று ஆகியிருக்கிறது.

அவர் இந்த பாஷைகள் வழங்குகிற ஐரோப்பாவைச் சேர்ந்தவரேயில்லை. நம்முடைய ஆசியாக் கண்டத்துக் காரர்தான் அவர். அவருடைய தாய்பாஷை அரமீயன் என்கிறது. அது ஹீப்ருக்களின் பாஷைகளான ஸெமிடிக் க்ரூப்பைச் சேர்ந்த ஒரு பாஷையே. அதிலே அவருக்கு வைத்த பெயர் 'யீஷுவ' (Yeshua) என்கிறதே! அந்த final 'வ'வை 'அ' மாதிரி பட்டும் படாமலும் சொல்ல வேண்டும். அதுதான் மற்ற ஐரோப்பிய பாஷைகளில் 'ஜோஷுவா' என்றும் 'ஜீஸஸ்' என்றும் ஆயிற்று.

'ய'கர வரிசை 'ஜ'கர வரிசையாவது எல்லா இடத்திலேயும் உண்டு. வேதத்திலேயே மற்ற சாகைகளில் [கிளைப் பிரிவுகளில்] 'ய' என்று வருவது வடதேசத்தில் இப்போதும் அநுஷ்டானத்திலிருக்கிற சுக்லயஜுர் வேதத்தின் மாத்யந்தின சாகையில் 'ஜ' என்றுதான் வரும்... யமுனாவை ஜமுனா என்கிறார்கள். யந்த்ரம் என்பதை ஜந்தர் என்கிறார்கள். தமிழிலே ஸம்ஸ்க்ருத 'ஜ'வை 'ய' ஆக்குவது ஸஹஜம். வேடிக்கையாக இதற்கு ஒரு 'கான்வெர்ஸ்'! ஸம்ஸ்க்ருதத்தில் 'யாமம்' என்றே இருப்பதை நாம் 'ஜாமம்' என்கிறோம்! எதற்குச் சொல்ல வந்தேன் என்றால், 'யீஷுவ'வின் 'யீ'தான் 'ஜீஸ'ஸில் 'ஜீ'யாகியிருக் கிறது. அந்த 'ஜீ'யை நாம் மறுபடி 'ய'காரப்படுத்தி, ஆனால் கொஞ்சம் வித்யாஸமாக, 'யேசு' என்கிறோம்.

மூல 'யீஷுஅ' நம்முடைய 'ஈச'தான், அதாவது சிவ நாமாதான் என்று வைத்துக் கொள்ளலாமே என்று தோன்றுகிறது.

அப்படிச் சொன்னால் நம்மவர்கள், அந்த மதஸ்தர்கள் இரண்டு பேரிலுமே யாராவது அபிப்ராய பேதமாகச் சொல்வார்களோ, என்னவோ? பேதம்

Koviloor Digital Library

வேண்டாம் என்றுதானே சொல்லிக் கொண்டிருக்கிறேன்? ஆனபடியால் வைத்துக் கொள்ளலாமே என்றில்லாமல் வைத்துக் கொள்ளலாமோ என்று தோன்றுகிறது என்று வேண்டுமானால் திருத்திக் கொள்கிறேன்!

'ஜீஸஸ் க்ரைஸ்ட்'டில் 'ஜீஸ'ஸை 'ஈச'னாகச் சொல்லலாமோ என்று!

'க்ரைஸ்ட்'டுக்கு வருகிறேன். அது முழுக்கவும் ஐரோப்பிய பாஷையாகவே ரூபமான [உருவான] வார்த்தைதான். நாம் பட்டாபிஷேகம் என்று விசேஷமாக அபிஷேகம் பண்ணுகிறோமோல்லியோ? மங்கள ஸ்நானம் என்று தலைக்குத் தைலம் வைத்து அப்படிப் பண்ணுகிறது. இதே மாதிரி எல்லா தேசங்களிலும் மத சாஸ்த்ரபூர்வமாகத் தைலம் தேய்ப்பதாக இருந்திருக்கிறது. அப்புறம் ஸ்நானம் பண்ணுவிக்கிறது இல்லை; தைலம் தேய்த்து மட்டும் நிறுத்தி விடுவது. கொஞ்சமாகப் பூசுவதால், அதுவே உள்ளே போய் விடும். அதற்கு 'அனாயின்ட்' பண்ணுவதென்பது பெயர். ஈச்வரனே அந்த மாதிரிச் சில பேரை லோகோத்தாரணம் பண்ணுவதற்காக 'அனாயின்ட்' பண்ணி, அதாவது பட்டாபிஷேகம் பண்ணி, 'மெஸையா' (Messiah) என்று அனுப்புவதாகச் சொல்வார்கள். ஹீப்ரு 'மேஷியா' இங்கிலீஷில் 'மெஸையா' ஆயிற்று. அதற்கே ஐரோப்பிய பாஷையான க்ரீக் (Greek)-ல் இருக்கிற பெயர் 'க்ரைஸ் டோஸ்' என்பது. அதன் அடியாகத்தான் இங்கிலீஷ் முதலான பாஷைகளில் 'க்ரைஸ்ட்' என்ற வார்த்தை ஏற்பட்டது. ஜீவ ஸமூஹ உத்தாரணத்துக்கென்றே ஈச்வரன் அனாயின்ட் பண்ணி அனுப்பினவரே ஜீஸஸ் என்கிற நம்பிக்கையுள்ள மதஸ்தர்கள் அவரொருத்தரையே குறிப்பாக அப்படிச் சொல்வதாக வைத்துக் கொண்டிருக் கிறார்கள்.

Koviloor Digital Library

'ஜீஸ்'ஸுக்கு 'ஈச' ஸம்பந்தம் காட்டின மாதிரி இந்த 'க்ரைஸ்டு'க்கு க்ருஷ்ண ஸம்பந்தம் காட்டினாலென்ன என்று தோன்றுகிறது!

க்ருஷ்ணனை நாம் கிஷ்டன், கிட்டன், கிருட்டிணன் என்றெல்லாம் சொல்கிறோமோ இல்லியோ? இந்த மாதிரி 'க்ரிஸ்டன்' என்றும்தான் சொல்லலாம். முடிவிலே சொல்லும் 'அன்' விகுதி தமிழில்தான் உண்டு. நாம் 'ஈச்வரன்' என்பது வடக்கத்திக்காரர்களுக்கு 'ஈச்வர்'தான்; நம் சங்கரன், ராமன் எல்லாமே சங்கர், ராம் என்றிப்படித் தான்! வர வர இங்கேயும் அதுவே ஃபாஷனாகி வருகிறது... அது இருக்கட்டும்.... 'அன்' விகுதி போய்விட்டால் க்ரிஸ்டன் ஆன க்ருஷ்ணன் என்ன ஆவான்? 'க்ரிஸ்ட்' என்று தானே ஆவான்? 'சிவ' ஸம்பந்தமானது 'சைவம்', 'விஷ்ணு' ஸம்பந்தமானது 'வைஷ்ணவம்' என்று ஆரம்ப இகாரம் ஐகாரமாகிற மாதிரி 'க்ரிஸ்ட்' ஸம்பந்தமானது 'க்ரைஸ்ட்' என்றே ஆகும்! அப்படித்தானே?

ஆகக்கூடி, 'ஜீஸஸ் க்ரைஸ்ட்' = 'ஈச க்ருஷ்ணன்'.

[நெடுநேரம் தாமும் சிரித்து உடனிருந்தோரையும் சிரிக்க வைத்து விட்டு ஸ்ரீசரணர் தொடர்கிறார்:] இப்படியாகத்தானே சிவ-விஷ்ணு அபேதம் காட்டுகிற மாஸத்திலே அந்த இரண்டு பேருக்குமான திருநாள்களுக்கு மத்தியிலே வருகிற கிறிஸ்துமஸ் பண்டிகையின் காரண புருஷர் தம்முடைய பெயரிலேயே ஈச்வரன் என்று சொல்லப்படும் சிவன், விஷ்ணுவின் பூர்ணாவதாரமான க்ருஷ்ணன் ஆகிய இரண்டு பேரின் பேர்களையும் பேதம் பார்க்காமல் ஒன்று சேர்த்து வைத்துக் கொண்ட மாதிரிக் காட்டுகிறார் என்று ஸமய ஸமரஸத்தை மேலும் கொஞ்சம் நீட்டிப் பார்க்கலாமோ என்று தோன்றிற்று. தோன்றினதைச் சொன்னேன்.

Koviloor Digital Library

இரு நிந்தாஸ்துதிப் பாடல்கள்

அந்த இரண்டு திருநாள்களைப் பற்றியே கொஞ்ச நாளாக நினைப்பு இருக்கிறது. அப்படியிருப்பதில் திரும்பத் திரும்ப இரண்டு பாட்டுகளைச் சுற்றியே எண்ணம் சுழண்டு கொண்டிருக்கிறது. ரொம்பவும் வேடிக்கையான பாட்டுக்கள். வேடிக்கையிலேயே தத்வார்த்தமும் நிறைய இருப்பதாக அவற்றைச் செய்த பெரியவர்கள் பாடிக் கொடுத்திருக்கிறார்கள். தலைக்கொன்றாக, சிவபரமாக ஒன்றும், விஷ்ணுபரமாக ஒன்றும். 'நிந்தா ஸ்துதி' என்று சொல்கிற வகையைச் சேர்ந்த பாட்டுக்கள். நிந்தை என்றால் வாயில் வந்தபடி வைகிறதில்லை; சமத்காரமாகப் பரிஹாஸம், கேலி பண்ணுகிறது தான்! ஸ்வாமியிடம் கோபித்துக் கொண்டு திட்டுகிறதில்லை; 'நம்மோட ஸ்வாமி' என்ற ஸ்வாதீனத்தால் பரம ப்ரியத்தில் அவரைக் கிண்டல் பண்ணுகிறதுதான்!

மனஸுக்குள் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் அந்த இரண்டு பாட்டுக்களை மற்றவர்களுக்கும் சொல்லலாமே என்று தோன்றித்தான் ஆரம்பித்தேன். பூர்வ பீடிகை ரொம்ப தூரம் இழுத்துக் கொண்டு போய்விட்டது. ஆனால் நான் விடுவதாக இல்லை – அந்தப் பாட்டுக் களையும்தான், உங்களையுந்தான்!

முதலில் வைகுண்ட ஏகாதசிதானே வந்தது? இனிமேலேதானே திருவாதிரை வரப் போகிறது? அதனால் விஷ்ணுபரமான பாட்டையே முதலில் சொல்கிறேன்.

அருணாசலக் கவிராயரும் 'ராம நாடக'மும்

அந்தப் பாட்டைப் போட்டவர் அருணாசலக் கவிராயர். ராமர் விஷயமான இலக்கியம் என்று தமிழ் நாட்டில் எடுத்துக் கொண்டால் கம்ப ராமாயணத்துக்கு அடுத்தபடியாக அவருடைய 'ராமநாடகம்'தான்

Koviloor Digital Library

பிரஸித்தம். பிரஸித்தம் என்று புகழ்பெற்றிருப்பதில் இப்படி இரண்டாவது ஸ்தானம் என்றால், ஜனங்களின் வாயிலே புரண்டு வருகிறதிலேயோ அதற்கே கம்பராமாயணத்தை விடவும் முன் ஸ்தானம், முதல் ஸ்தானம்! ஏனென்றால் கம்பராமாயணம் எல்லாப் பொது மக்களுக்கும் புரியாத தாகக் கால வித்தியாஸத்தால் ஆகி, இப்போது புலவர் மொழிக் காவியம் என்பதாக ஆகிவிட்டது. அருணாசலக் கவிராயர் இரண்டே நூற்றாண்டு முன்னாடிதான் இருந்தவர் என்பதாலும் – பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பிறந்து எழுபது எண்பது வயசு ஜீவித்தவர் அவர்*; அதனாலும் – அவர் பேச்சு மொழி, பழமொழி, வசனம் எல்லாம் சேர்த்து, அதோடு ரொம்ப முக்யமாக ராக தாளங்கள் போட்டுப் பாடும்படியான கீர்த்தனங்களாக, மொத்தத்தில் ஸர்வ ஜன ரஞ்ஜகமாக அந்த ராம நாடகத்தைப் பண்ணியிருப்பதாலும் அதுவே ஜனங்களின் வாய்ப் புழக்கத்திற்கு ஜாஸ்தியாக வந்து விட்டது. 'ராம **நாடகம்**' என்பதாக அது இருப்பதும் ஸர்வ ஜன வசீகரத்திற்கு இன்னொரு காரணம். அதிலே ராமாயணக் கதை பூராவையும் சொல்லிக் கொண்டு போகும்போது கவி தன் வாய்மொழியாக மட்டும் அவசியமான அளவுக்கே விருத்தமாகவும் பாட்டாகவும் சொல்வது, அதைவிட ஜாஸ்தியாக அதிலே வருகிற பாத்திரங்களின் வசனங்களாகவே பாட்டுக்களின் மூலம் சொல்வது என்று ரூபம் பண்ணியிருக்கிறதால் அது நாடகமாகவே நடிப்பதற்கு ஏற்றதாக இருக்கிறது. அதிலும் opera என்கிற ஸங்கீத நாடகமாக மாத்திரமில்லாமல் நாட்டிய நாடகம், Dance-drama என்று சொல்கிறார்களே அப்படி! அந்தப் பாட்டுக்களை நாட்டியத்துக்கு ஏற்ற மாதிரியே அவர் உசிதமான வார்த்தைகளையும் ரஸபாவங்

* 1711 – 1788

Koviloor Digital Library

களையும் கலந்து பண்ணியிருக்கிறார். இப்படியெல்லாம் அந்த நூல் இருப்பதால் பொது ஜனங்களிலிருந்து ஸங்கீத வித்வான்கள் வரை பலபேரும் பாடியும், கதாகால க்ஷேபக்காரர்கள் கையாண்டும், ஸதிர்க் கச்சேரி ஸ்திரீகள் ஆடியும், நாட்ய-நாடகமாக அப்படிப் பல பெண்டுகள் சேர்ந்து நடித்துக் காட்டியும் பல தினுஸிலே அது பரவிவிட்டது.

கீர்த்தனை என்று அந்தப் பாட்டுக்களைச் சொன்னாலும் – 'ராம நாடகக் கீர்த்தனைகள்' என்றே அந்த 'ஓர்க்'குக்குப் பெயர் சொல்வதுண்டு; அப்படிச் சொன்னாலும் – அந்தப் பாட்டுக்கள் குறிப்பாக 'தரு' (daru) என்ற பாடல் வகையைச் சேர்ந்ததேயாகும். பல பாட்டுக்களைத் தொடர்ச்சியாக அமைத்து ஒரு கதையைச் சொல்லிக் கொண்டு போகிறபோது அந்தப் பாட்டுக்கு 'தரு' என்றே தனிப்பெயர் கொடுத்திருக்கிறது.

அருணாசலக் கவிராயர் நான் சொல்லி வந்த சைவ-வைஷ்ணவ ஸமரஸத்தைக் காட்டுபவராக இருப்பதும் ஒரு விசேஷம்! அவருடைய பெயரே, விஷ்ணு அவதாரமான ராமர் கதையைச் சொன்ன அவர் சைவர் என்று காட்டுகிறது. 'நீறுபூசி வேளாளர்' என்று விபூதியிட்டுக் கொள்வதை வைத்தே பெயர் ஏற்பட்ட ஸமூஹத்திலே பிறந்தவரவர். ஒரு காலத்தில் ஜைனர்களாக இருந்து அப்புறம் ஹிந்து மதத்திற்கு, அதிலே சைவ மரபுக்கு வந்தவர்களின் ஸமூஹத்துக்கு அப்படிப் பேர். தஞ்சாவூர் ஜில்லா தில்லையாடியில் இருந்த அந்தக் குடிகளில் ஒன்றிலே பிறந்தவரவர். கல்யாணமான பிறகு சீர்காழிக்கு வந்து அங்கேயே கடைசி வரை இருந்தார். அதனால் அவரைச் சீர்காழிக் கவிராயர் என்றே சொல்வதாக ஆயிற்று.

சைவக் குடும்பத்திலே பிறந்த அவர் படித்ததும் — தமிழ், ஸம்ஸ்கிருதம் இரண்டிலும் அவர் நிரம்பவே

Koviloor Digital Library

படித்திருக்கிறார்; அப்படிப் படித்ததெல்லாமும் — சைவ மடமான தர்மபுர ஆதீனத்தில்தான். ஆனாலும், சைவமா, வைஷ்ணவமா என்று பேதம் பாராட்டாத அவருக்கு ராம கதையிலேயே ஒரு தனி ருசி இருந்தது. அதனாலேயே இப்படித் தம்முடைய காவிய ஸ்ருஷ்டியை உண்டாக்கினார்.

அவர் ஸங்கீதத்தில் அவ்வளவாக வித்வத் பெற்றிருந்தவரில்லை. அதனால் பாட்டுக்கள் மட்டுமே, ஓரளவுக்குச் சந்தத்துக்கு அநுகுணமான தாள அமைப்போடு அவர் போட்டுக் கொடுத்தார். அவற்றுக்கு ராகம் போட்டு, தாளத்தையும் நன்றாக ஸரிப் பண்ணிக் கொடுத்தது கோதண்டராமையர், வேங்கடராமையர் என்ற, ராமன் பேர் கொண்டே, இரண்டு ஸங்கீத வித்வான்கள். அவர்கள் சீர்காழிக்குக் கிட்டேயுள்ள சட்டநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள். கவிராயரிடம் தமிழ் கற்றுக் கொண்ட மாணாக்கர்கள்...

ஸங்கீதத்தில் பாஷை–ஜாதிச் சண்டை

எந்த field-ல் ஆகட்டும், ஸம்பந்தமில்லாமல் நம் பாஷை - பிறத்தியார் பாஷை, இந்த ஜாதி - அந்த ஜாதி என்று பேதம் கற்பித்து த்வேஷத்தைப் பரப்பிக் கொண்டு வருவதாக தற்காலத்தில் ஒரு துர்பாக்கியமான போக்கு ஏற்பட்டிருக்கிறது. ஸங்கீதத்திலும் அப்படிக் கொண்டு வந்து, இப்போது த்ரிமூர்த்திகள் என்றே அதில் போற்றப் படுகிறவர்களையும் அவர்களுக்கு முந்தியே தமிழில் பாடிய கவிராயர், முத்துத்தாண்டவர் மாதிரியானவர்களையும் பாஷை, ஜாதி பேதத்தைக் காட்டிப் பிரித்து வைத்து, ஒரு த்வேஷ ப்ரசாரம் ஆரம்பித்திருப்பதாகக் கேள்வி. வாஸ்தவத்திலோ, அந்த மாதிரி பேத எண்ணத்தினால் அந்த த்ரிமூர்த்திகளை நிர்ணயம் பண்ணவேயில்லை. அந்தக்

Koviloor Digital Library

காலத்தில் இப்படியெல்லாம் பேதம் பார்க்கவேயில்லை. இப்போது என்ன பார்த்தோம்? அந்த இரண்டு பிராமணர்கள் ஒரு நீறுபூசி வேளாளரிடம் தமிழ் படித்திருக் கிறார்கள். அந்த ஆசிரியரோ அந்த சிஷ்யர்களைக் கொண்டே தம்முடைய பாட்டுக்களை ஸங்கீத ஸாஹித்ய மாக மெருகேற்றிக் கொண்டிருக்கிறார்.

வாக்கேயக்காரர்கள் என்பதாக ஸாஹித்யம், ஸங்கீதம் இரண்டையும் ஒருத்தரே ஒன்றுசேர அமைப்பவர் களாக இருப்பவர்களுக்கே முதல் மரியாதை பண்ண வேண்டும் என்ற அபிப்ராயத்திலேயே த்ரிமூர்த்திகள் என்று தற்போதிருக்கிற அந்த மூன்று பேரை அப்படி உசத்தி வைத்திருக்கலாம். ஸங்கீதம் என்ற முறையில் ராகபாவம், தாளக்கட்டு ஆகியன எதில் என்ன தரம் என்று ஸங்கீத வித்வான்களுக்குத்தானே தெரியும்? அதைப் பார்த்துத்தான் அவர்கள் ஸாஹித்யகர்த்தாக்களுக்கு ஸ்தானம் கொடுத்தார் களே தவிர ஜாதியைப் பார்த்தோ, பாஷையைப் பார்த்தோ இல்லை. பாஷையைப் பார்த்திருந்தால் ஸம்ஸ்க்ருதத் திலேயே பாடிய தீக்ஷிதர் ஒருத்தரையே ஏக மூர்த்தியாக வைத்திருக்க வேண்டும். தெலுங்கிலே பாடிய (தியாகையர், சியாமா சாஸ்த்ரிகள் ஆகிய) இரண்டு பேரை – மூன்றிலே இரண்டு மெஜாரிட்டியாக – சேர்த்து த்ரிமூர்த்தியாக்கி யிருக்க வேண்டியதில்லை. துரதிருஷ்டம், அந்த மூன்று பேரும் ஒரே ஜாதியாய் இருந்துவிட்டார்கள்! அதனால் தான் 'டிஸ்க்ரிமினேஷன்' குற்றச்சாட்டு!

உள்ளதை உள்ளபடி பார்த்துத்தான் – இல்லாத, பொல்லாத உள்நோக்கங்கள் கற்பிக்காமல் – எல்லா ஜாதி ஸங்கீத வித்வான்களும் பாடி வந்திருக்கிறார்கள். ஐயர்வாள் க்ருதிகளை விசேஷமாகப் பிரசாரம் செய்தவர்களில் முக்யமான இரண்டு பேர் காஞ்சீபுரம் நாயனாப் பிள்ளையும், கீவளூர் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையும் ஆவார்கள். ச்யாமா சாஸ்த்ரி க்ருதிகள், தீக்ஷிதர் க்ருதிகளில்

Koviloor Digital Library

கூட அநேகம், வீணை தனத்தின் மூலம்தான் பிரசாரத்திற்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. மேளக்காரர்கள் ஏராளமாக த்யாகையர் க்ருதிகளையே வாசித்து வந்திருக்கிறார்கள்.

இன்னொரு பக்கத்தில் [பூணூல் போட்டிருப்பது போல் ஜாடையில் காட்டி ஸ்ரீசரணர் சொல்கிறார்:] ...வித்வான்கள் நிறையவே தமிழ்ப் பாட்டுக்கள், கவிராயர் – முத்துத்தாண்டவர் – மாரிமுத்தா பிள்ளை – பாபவிநாசம் முதலியார் முதலியவர்கள் போட்ட பாட்டுக்கள், தாயுமானவர் பாடல்கள், அருட்பா, அப்பர் ஸ்வாமிகள் தேவாரம் எல்லாம் பாடித்தான் வந்திருக்கிறார்கள். நானும் குழந்தை நாளிலிருந்தே பாட்டுக் கேட்டிருக்கிறேன்; ஸ்வாமிகளானதற்கு அப்புறம் ஐம்பது வருஷத்திற்கு மேலாக எல்லாப் பெரிய வித்வான்களும் இங்கேயே வந்து பாடியிருக்கிறார்கள்; மேளம் – வீணை – ஃப்ளூட் இத்யாதிகளும் வாசித்திருக்கிறார்கள். பாட்டு ஸெலக்ஷனில் ஜாதி வித்யாஸம், பாஷா வித்யாஸம் கொஞ்சங்கூடத் தலை தூக்கினதாகத் தெரிந்ததில்லை.

'பேதமே வேண்டாம்; ஸமரஸம், ஸமரஸம்' என்று சொல்லிவிட்டு, அதைப் பற்றிப் பேசியே சர்ச்சை மூட்ட வேண்டாம்! விஷயத்திற்குப் போகிறேன். ஏற்கெனவே ரொம்ப 'டிலே' பண்ணியாச்சு!....

ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றம்

கவிராயர் ராமநாடகம் பண்ணி முடித்தவுடன், பூர்வத்தில் கம்பர் ஸ்ரீரங்கத்தில்தான் அவருடைய ராமாயணத்தை அரங்கேற்றியிருந்ததால், தாமும் அதே மாதிரிச் செய்யலாமென்று உத்தேசித்தார். திருவரங்கத்திலேயே அரங்கேற்றுப்படி! ஸ்ரீரங்கத்தின் வித்வத் ஸமூஹப் பெரியவர்களின் அங்கீகாரம் நூலுக்கு நல்ல பெயரை,

Koviloor Digital Library

புகழைக் கொடுக்கும் என்றும் ரொம்பக் காலமாக இருந்து வந்தது. அப்படியே அங்கே போய், கம்பராமாயணம் அரங்கேற்றம் நடந்த பங்குனி ஹஸ்த தினத்தன்றே தம் நூலை அரங்கேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்; கம்பர் அரங்கேற்றிய அதே ஸந்நிதியில்!

ராமாயணத்தை ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றுவதில் ரொம்பப் பொருத்தமுண்டு. என்னவென்றால்: ஸ்ரீரங்கநாத விக்ரஹந்தான் ராமர் அவதரித்த இக்ஷ்வாகு வம்ச ராஜாக்களின் குலதெய்வம். ராமரும் வனவாஸம் முடித்துத் திரும்பியவுடன் அதற்குத்தான் பூஜை பண்ணினார். தொடர்ந்தும் பண்ணியிருப்பார். ஆனால் அவருடைய தயாள குணத்தினால், ஸ்நேஹ பாவத்திலே பிறந்த தியாகத்தினால், பட்டாபிஷேகம் பார்த்துவிட்டு விபீஷணர் லங்கைக்குத் திரும்பினபோது, அவருக்கு ரொம்பப் பெரிய gift-ஆக ஒன்று கொடுக்க வேண்டுமென்று நினைத்து, இக்ஷ்வாகு குல தெய்வமும், குலதனமுமான ரங்கவிக்ரஹத்தையே கொடுத்து விட்டார்! விக்நேச்வரர்தான் புண்யம் கட்டிக் கொண்டு, 'ட்ரிக்'குகள் பண்ணி, அது இந்தியாவை விட்டுப் போகாமல் ஸ்ரீரங்கத்திலே இருக்கும்படியாகப் பண்ணினார்.

காவ்ய நாயகனான ராமனுடைய குலதெய்வத்தின் க்ஷேத்ரத்திலேயே அவனைப் பற்றிய காவ்யத்துக்கு அரங்கேற்றுப்படி செய்வது பொருத்தம்தானே?

ஸ்ரீரங்கம் வந்து அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு பண்ணிக் கொண்டிருந்த கவிராயரிடம் அந்த ஸ்தலத்துப் பெரியவர்கள், "ரங்கநாதராலயத்தில் அரங்கேற்றுகிறீர். ஆனபடியால் முதலில் அவர் மேலே ஒரு பாட்டுப் போடும்!" என்று சொன்னார்கள்.

கவிராயர் அப்படியே பண்ணினார்.

Koviloor Digital Library

கவிராயரின் ஸ்ரீரங்கநாதப் பாடல்

அதுதான் நான் சொன்ன நிந்தா ஸ்துதிப் பாட்டு. என் நினைவிலே இப்ப கொஞ்ச நாளாகச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கும் பாட்டு. உங்களுக்கும் தெரிவிக்க ஆசைப்படும் பாட்டு.

முன்னெல்லாம் இங்கே வருகிற ரொம்பப் பேர் பாடிக் காட்டின பாட்டுதான் அது. ஆனால் அப்படி 'ஃபேமஸா'க இருந்தது கொஞ்ச வருஷமாகக் காதில் படவேயில்லை.

எனக்குப் பாட வராது. இருந்த தொண்டையும் போய்விட்டது. பரவாயில்லை. இப்போது ஸாஹித்யந்தான் முக்யம்; ஸங்கீதம் இல்லை. அதனால் 'டெக்ஸ்'டை மட்டும் சொல்கிறேன்.

[இப்படிச் சொன்னாலும் நல்ல இசைப் புலமையும் குரலும் கொண்ட ஸ்ரீசரணர் இப்பாடலையும் பின்னர் வர இருக்கும் இன்னொரு பாடலையும் வசனமாகச் சொல்லிப் போகும்போது ஆங்காங்கே மனத்துக்குள்ளேயோ, மெல்லிசாக வாய்விட்டுமே கூடவோ அழகாகப் பாடவுந்தான் செய்தார்.]

அரங்கம் என்று ஸபை கூட்டி விட்டு அங்கே ஸ்வாமி படுத்துக்கொண்டிருப்பது விசித்ரமாயிருக்கிறது என்று முன்னே பார்த்தோமில்லையா? அதையேதான் கவிராயர் 'டாபிக்'காக எடுத்துக் கொண்டு, 'படுத்துக் கொண்டதற்குக் காரணம் இதுவா, இல்லாவிட்டால் இதுவா?' என்று நிறையக் கேள்வி அடுக்கிக் கொண்டே போகிறார். அதிலே ஹாஸ்யம், பரிஹாஸம் எல்லாம் இருக்கும். ஆனாலும் வெடித்துக் கொண்டு வராமல், 'ஹாஸ்ய வெடி' என்கிற மாதிரி இல்லாமல், கொஞ்சம் ஸூக்ஷ்ம நயத்தோடே மறைமுகமாகவே இருக்கும்.

Koviloor Digital Library

'ஏன் பள்ளிகொண்டீர் ஐயா ?'

என்று முதல் கேள்வி.

'ஏன் பள்ளிகொண்டீர் ஐயா ? ஸ்ரீரங்கநாதரே ! நீர் – ஏன் பள்ளிகொண்டீர் ஐயா ?

அதுதான் பல்லவி.

அப்புறம் அநுபல்லவி. அதிலே நிந்தா ஸ்துதி எதுவுமில்லாமல் ஸ்ரீரங்கத்தைப் பற்றி பேர் சொல்லாமல் அழகான கவிதை பாஷையில் காவேரி வர்ணனையுடன், காவேரியின் பெயரையும் சொல்லாமல், பாடியிருக்கிறார். காவேரி இரண்டாகப் பிரிந்து ஓடுகிற இடமாகத்தானே ஸ்ரீரங்கம் இருக்கிறது? அதைச் சொல்கிறார்:

ஆம்பல் பூத்தசைய பருவத மடுவிலே – அவதரித்த இரண்(டு) ஆற்றுநடுவிலே (ஏன் பள்ளிகொண்டீரையா ?)

'ஆம்பல் பூத்தசைய பருவத மடுவிலே' என்றால், 'ஆம்பல் என்கிற அல்லி ஜாதிப் புஷ்பம் பூத்து அசைந்து ஆடுகிற மலைச் சுனையில்' என்று அர்த்தமில்லை. 'பூத்தசைய' என்பது 'பூத்து அசைய' என்று இரண்டு வார்த்தையாகப் பிரியாது. 'பூத்த' ஒரு வார்த்தை; 'சைய' ஒரு வார்த்தை என்றே பிரியும். 'சையம்' என்பது 'ஸஹ்யம்' என்ற ஸம்ஸ்க்ருத வார்த்தையின் திரிபு — 'மத்யம்' என்பது 'மையம்' என்று தமிழில் ஆனமாதிரி 'ஸஹ்யம்' என்பது 'சைய'மாயிருக்கிறது. ஸஹ்ய பர்வதம், ஸஹ்யாத்ரி என்று மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கிறது. அதிலுள்ள ஒரு சுனைதான் தலைக்காவேரி என்று காவேரியின் உற்பத்தி ஸ்தானமாக இருப்பது. கொடகுதேசத்திலுள்ள அங்கே பிறந்து முன்னே மைஸூர் ராஜ்யமாயிருந்த கன்னட தேசம் வழியாகப் பாய்ந்து, சேலம் ஜில்லாவிலே தமிழ் தேசத்துக்குள் ப்ரவேசித்து, அப்புறம் திருச்சிராப்பள்ளிக்கு வருகிற காவேரி, அங்கே காவேரி என்றும் கொள்ளிடம்

Koviloor Digital Library

என்றும் இரண்டாகப் பிரிகிற இடத்திலேயே ஸ்ரீரங்கம் இருக்கிறது. அதை இரண்டு பக்கமும் அணைத்துக் கொண்டு காவேரி பாய்கிறாள்.

கல்யாணப் பெண் வரனுக்கு மாலை போடுகிறது வழக்கமென்றால் இங்கேயோ அப்படிக் காவேரி கல்யாணப் பெண்ணானபோது தானே மாலையாகி திருமாலை இரண்டு பக்கமுமாக அணைத்துக் கொண்டிருக் கிறாள்! அதனால் அந்த ஸ்ரீரங்கநாதனை லக்ஷ்மீநாரா யணன், ஸீதாராமன் என்கிற மாதிரி அவள் பேர் சேர்த்து — அதுவும் முன்னாடியே சேர்த்து; 'மிஸ்ஸிஸ்'ஸில் பத்னி பேருக்குப் பின்னாடி புருஷன் பேர் சேர்க்கிற மாதிரியில் லாமல் இங்கே மிஸ்டர் பேருக்கு முந்தி மிஸ்ஸிஸ் பேர் சேர்த்து — காவேரி ரங்கன் என்று சொல்வதாயிருக்கிறது.

உபய காவேரி என்று இரண்டாகப் பிரிந்து ஏற்பட்ட இட மத்தியிலே ஸ்வாமி பள்ளி கொண்டிருப்பதைத்தான் 'இரண்டாற்றின் நடுவிலே' என்று பாடியிருக்கிறார்.

காவேரி ஸஹ்யாத்ரியில் உற்பத்தியாவதை, அவள் புனிதமான திவ்ய தீர்த்தமானதால் உற்பத்தி என்று சொன்னால் போதாது என்று, அவதாரம் பண்ணின தாகவே 'அவதரித்து' என்று உசத்திச் சொல்லியிருக்கிறார்.

அவதாரம் என்ற வார்த்தையைப் போட்டாரோ இல்லையோ, அவருக்கு ரங்கநாதனின் அவதாரமான ராமசந்த்ரமூர்த்தியிடமே மனஸ் போய்விட்டது! ஸந்தர்ப வசாத் அவர் ரங்கநாதனைப் பாடும்படி ஏற்பட்டாலும் அவருக்குப் பிடிமானம் என்னவோ ராமனிடம், ராம கதையிடம்தான்! அதனால், 'பல்லவி - அநுபல்லவிகளில் க்ஷேத்ர மூர்த்தியைப் பிரஸ்தாவித்தாயிற்று; அது போதும்' என்று சரணத்தில் இஷ்ட மூர்த்தியான ராமனுக்கே, பாலகாண்டம் தொடங்கி அவன் கதைக்கே, போய்ப் பாட ஆரம்பித்து விட்டார்!

Koviloor Digital Library

வியங்கியமான [மறைமுகமான] நிந்தா ஸ்துதியும் இங்கேயிருந்துதான் ஆரம்பம். இஷ்டமானவர்களிடந்தானே ஸ்வாதீனம்?

கோசிகன் சொல் குறித்ததற்கோ?

கோசிகன் என்பது குசிக வம்சத்தில் பிறந்ததால் விச்வாமித்ரருக்கு ஏற்பட்ட பெயர். ராமர் அவதார காரியமாக முதல் முதலில் பண்ணினது விச்வாமித்ரர் சொல்படி தாடகை மேலே பாணம் போட்டதுதான். 'அப்படிப் பண்ணும்படி பெரிய மஹர்ஷி சொல்லி விட்டார். ஆனாலும் ஸ்த்ரீ ஹத்தி கூடவே கூடாது என்று சாஸ்த்ரமாச்சே!' என்று ராமர் தயங்கத்தான் தயங்கினார். தர்ம விக்ரஹம் என்றே பெயர் வாங்கப் போகிறவ ரில்லையா, அதனால்! அந்தக் கோசிகரோ, "லோகத்துக்குப் பெரிய உத்பாதத்தை உண்டாக்குபவர் விஷயத்தில் ஸ்த்ரீ–புருஷ பேதமெல்லாம் பார்க்க வேண்டியதில்லை. போடு இவள் மேல் பாணம்!'' என்றார். விநய விக்ரஹமுமான ஸ்வாமி மறுக்க முடியாமல் அப்படிப் பண்ணி விட்டார்.

அப்போது பண்ணினாரே தவிர அப்புறம் மனசு ஸமாதானமாகவில்லை. 'தர்மத்தில் 'இப்படியா, அப்படியா?' – சொல்லமுடியாத ஒரு இரண்டும் கெட்டான் விஷயத்தில், தர்மஸங்கடம் என்பதில், எதுவோ ஒன்றைப் பண்ணிவிட்டோம். அதுதான் ஸரி என்று அடித்துச் சொல்ல முடியாது போலிருக்கே!' என்று ரொம்பவும் வியாகுலப்பட்டார்.

தீராத வியாகுலம் என்றால் அதைத் தீர்க்கமுடியா விட்டாலும் ஏதாவது தூக்க மாத்திரை சாப்பிட்டுத் தூங்கிப் போய் மறக்கவாவது செய்வோம் என்று தோன்றும் – இல்லியா?

Koviloor Digital Library

"அப்படி ஏதோ சாப்பிட்டுவிட்டுத்தான் பள்ளி கொண்டு விட்டாயா?" என்று கேட்கிறார். அதுதான் 'கோசிகன் சொல் குறித்ததற்கோ?'

அந்தச் சொல்லை இவர் 'குறித்தது', அதாவது consider பண்ணியது, பண்ணி வியாகுலப்பட்டது பின்னாடி. அப்போது உடனே பாணம்தான் போட்டார். அது குறி தப்பாமல் ராக்ஷஸியின் குலையிலே தைத்து அவள் ப்ராணனை விட்டு விழுந்தாள். "அந்த மாதிரி வேகமாக பாண ப்ரயோகம் பண்ணின ஆயாஸத்தில் அசந்து [அயர்ந்து] போய்த்தான் படுத்துக் கொண்டாயா?" என்று அடுத்த கேள்வி:

அரக்கி குலையில் அம்பு தெறித்தற்கோ ?

வில் நாணைத் தட்டிப் பார்த்து அதன் பிகு தெரிந்து கொண்டு பாணம் போடுவதுதான் 'தெறிப்பது'.

ராமர் அநாயஸமாக, மலர்ந்த புஷ்பமாக இருந்து கொண்டேதான் மஹாஸ்திரங்களையும் போட்டது. பக்தியின் ஸ்வதந்திரத்திலும், கவிக்கு உள்ள ஸ்வதந்திரத்தி லும் அவரை வேறே மாதிரியாகச் சொல்லிக் கவிராயர் சீண்டுகிறார்! அதையும் அவர் ரஸிக்கத்தான் ரஸிப்பார் என்று தெரிந்தவராகையால்!

பள்ளி கொண்டதற்கு இது காரணமில்லையென்றால்,

ஈசன் வில்லை முறித்ததற்கோ ?

என்று இன்னொரு 'பாஸிபிள்' காரணத்தை அடுத்த கேள்வியாகக் கேட்கிறார். ஸீதையை விவாஹம் செய்து கொள்ளப் பிரியப்படுபவன் தம்மிடமிருந்த ருத்ர தநுஸை நாண் பூட்டிக் காட்ட வேண்டும் என்று ஜனகர் நிபந்தனை போட்டிருந்தார். ராமருக்கு ஒன்றும் கல்யாண ஆசையில்லை; என்றாலும் விச்வாமித்ரர் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு அந்தப் பந்தயத்திற்குப் போனார். போனவர்

Koviloor Digital Library

ஒரு வேகம் பிறந்து, வெறுமனே நாண் பூட்டிக் காட்டாமல் அந்த தநுஸையே உடைத்து விட்டார்! 'அத்தனை வேகம் காட்டினது தான் பிற்பாடு உன்னை tired ஆக்கித் தூக்கம் போட வைத்து விட்டதா?' என்று கேட்கிறார்.

அதுவும் இல்லையென்றால்,

பரசுராமன் உரம் பறித்ததற்கோ ?

அப்புறம் பரசுராமர் — க்ஷத்ரிய வம்சத்தைப் பூண்டோடு அறுப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டவர் — வந்தார். ராமரிடம், "நீ உடைத்த ருத்ர தநுஸ் ஏற்கெனவே மூளியானதுதான். அந்த ஓட்டை வில்லை முறித்தது ஒன்றும் பெரிசில்லை. இதோ என்னிடம் மூளி, கீளி ஆகாத விஷ்ணு தநுஸ் இருக்கிறது. இதை நாண் பூட்ட முடியுமா, பார்! பூட்டாவிட்டால் உன்னை விடமாட்டேன்!" என்று 'சாலஞ்ஜ்' பண்ணினார். ராமருக்கு அதுவும் ஒரு பெரிய கார்யமாக இல்லை. பரசுராமர் கொடுத்த விஷ்ணு தநுஸையும் சிரமப்படாமலே நாண் பூட்டினார். அதோடு, பரசுராமரால் நடக்கிற க்ஷத்ரிய வம்ச நாசத்துக்கு முடிவு கட்ட வேண்டுமென்று நினைத்து அவருடைய சக்தி முழுதையும் கவர்வதையே குறியாகக் கொண்டு பாணப் பிரயோகமும் பண்ணி விட்டார்! அந்த முன்னவதாரக் காரர் தம்முடைய பின்னவதாரக்காரரிடம் தம்முடைய சக்தி முழுதையும் இழந்துவிட்டுத் தம்முடைய ஸம்ஹார கார்யத்தை ஸமாப்தி பண்ணினார்.

அவருடைய சக்தியை ராமர் கவர்ந்ததுதான் 'பரசுராமர் உரம் பறித்தது' என்று பாட்டில் வருவது.

'சக்தி போனால் ஓய்ந்து போய்ப் படுக்கலாம். ராமருக்கோ சக்தி கூடியல்லவா இருக்கிறது? பின்னே ஏன் படுத்துக்கணும்?' என்றால்:

Koviloor Digital Library

அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டு விட்டால் அதை ஜீர்ணிப்பதிலேயே சோர்வு ஏற்பட்டுத் தூக்கம் தூக்கமாகத் தானே வருகிறது? ராமருக்கு ஏற்கெனவே மஹாசக்தி. இப்போது இன்னொரு அவதாரத்தின் பெரிய சக்தியையும் சாப்பிட்டிருக்கிறார். 'இப்படிச் சக்திச் சாப்பாட்டில் அமிதமாகப் போனதில்தான், சோர்வு உண்டாகித் தூங்கிவிடலாம் என்று பள்ளி கொண்டீரா?' என்றே கவிராயர் கேட்கிறார்.

இன்னும் ஒரு காரணம் - கேள்வி:

மாசிலாத மிதிலேசன் பெண்ணுடன்
வழிநடந்த இளைப்போ ?

'குற்றம் குறையே இல்லாத சுத்தையான ஸீதையுடன் காட்டுக்கு நடந்து போனாயே! அதிலே ஏற்பட்ட களைப் பினால் இளைப்பாறுவதற்கே பள்ளிகொண்டாயா?'

'இளைப்பு' என்றால் ஒல்லியாய்ப் போவது மட்டுமில்லை. சோர்ந்து, ஓய்ந்து போவதும் இளைப்புத் தான். அதைப் போக்கிக் கொள்வதையே 'இளைப்பாறுவது' என்கிறோம்.

இதற்கு மேலே, வனவாஸ காலத்திலே நடந்தவை ஸம்பந்தமாகக் கேட்கிறார்.

தூசிலாத குஹன் ஓடத்திலே கங்கைத்
துறை கடந்த இளைப்போ ?

"வேடனாயிருந்தாலும் உடம்பிலேதான் தூசி, மனஸுு தூசி படாத பரம நிர்மலம் என்று இருந்த குஹனின் ஓடத்தில் கங்கையைத் தாண்டிப் போனாயே! அப்போது ஜிலுஜிலு என்றுதான் இருந்ததென்றாலும் ரொம்ப நாழிப் பிரயாணம், ஒரே மாதிரியான துடுப்போசையை மட்டும் கேட்பது ஆகியவற்றில் ஏற்பட்ட 'bore'-ல்தான், monotony-ல்தான் தூங்கினாயா?

Koviloor Digital Library

மீசரம் ஆம் சித்ரகூட சிகரத்தின்
மிசை கிடந்த இளைப்போ ?

'மீசரம்' என்றால் உயர்ந்தது. 'ரொம்ப உயரமான சித்ரகூட சிகரத்துக்கு ஏறிப் போய், அந்த சிரமத்தில் அங்கே அப்படியே கிடந்தாயே, அப்போது பிடித்த தூக்கம்தான் இன்னும் விடவில்லையா?'

காசினி மேல் மாரீசன் ஓடிய
கதி தொடர்ந்த இளைப்போ ?

'காசினி' என்றால் பூமிதான். இங்கே கரடும் முரடுமான காட்டு நிலம் என்று அர்த்தம் பண்ணிக்கணும். அப்படிப்பட்ட 'காட்டு வழியிலே மாரீச மான், மானுக்கே உரிய வேகத்தோடு ஓடினபோது அதற்கு ஈடுகொடுத்துத் தொடர்ந்து போனாயே! அந்தச் சோர்வுதான் படுக்கையில் தள்ளிற்றா?'

அதற்கப்புறம் சின்னச் சின்னதாகக் கேள்விகளை அடுக்கிக் கொண்டு போகிறார்! பாட்டு வேக வேகமாக ஓடுகிறது!

'மாரீச மானைத் தொடர்ந்து போனது, முதலில் ஓட்டமும் நடையுமாக, அப்புறம் அந்த 'நடை' கூடக் கூடாதென்று ஒரே ஓட்டமாக ஓடினாய்! அதிலே ஏற்பட்ட களைப்பில்தான் தூக்கமா?' என்று இத்தனை ஸமாசாரத்தை,

ஓடிக் களைத்தோ ?

என்று சின்ன வாசகமாக்கிக் கேட்கிறார்.

தேவியைத் தேடி இளைத்தோ ?

'அப்படி இங்கே நீ மாரீசன் பின்னே ஓட, அங்கே உன் பர்ணசாலைக்கு ராவணன் வந்து ஸீதா தேவியைத் தூக்கிக் கொண்டு போய் விட்டானே! நீ அவளைத் தேடு

Koviloor Digital Library

தேடு என்று தேடி அலைந்தாயே! அந்த அசர்வா [அயர்வா]?'

மரங்கள் ஏழும் தொளைத்தோ ?

'அதற்கப்புறம் ஸுக்ரீவனுடன் ஸக்யம் பண்ணிக் கொண்டு [நட்புப் பூண்டு] அவனுக்கு சத்ருவான அண்ணன் வாலியை வதம் செய்வதாக வாக்குக் கொடுத்தாய். அந்த மஹா பலிஷ்டனை ஜயிப்பதற்கான பலம் உனக்கு இருக்குமா என்று ஸுக்ரீவன் ஸந்தேஹப் பட்ட போது அதை [நி]ரூபித்துக் காட்டுவதற்காக, பர்மா teak [தேக்குமரம்] மாதிரி பெரிய சுற்றளவுடன் வரிசையாக நின்ற ஏழு மராமரங்களையும் துளைத்துக் கொண்டு போகும்படி பாணத்தைப் போட்டுக் காட்டினாய்! அத்தனை விசையோடு நாணை வலித்தது, உனக்கே ரொம்பவும் வலித்துத்தான் படுக்கை போட்டு விட்டாயா?'

கடலைக் கட்டி வளைத்தோ ?

"லங்கைக்குப் போவதற்காக ஸமுத்ரத்துக்கே அணை கட்டுகிற பெரிய கார்யம் பண்ணினாயே! யஜமானனாக உட்கார்ந்து கொண்டு உத்தரவு போடாமல் உன்னுடைய உத்தம குணத்தினால் நீயும் வானரப் படையோடு சேர்ந்து கல்லு, மண்ணு தூக்கி அந்தக் கார்யத்தில் ஈடுபட்டாயே! அதில் ஏற்பட்ட சோர்வுதான் காரணமா?"

அப்புறம் பெரிய வாசகமாகவே இரண்டு கேள்வி கேட்டு – ஏகப்பட்ட கேள்விதான் கேட்டாச்சே! – அதோடு முடித்து விடுகிறார்.

**இலங்கை எனும் காவல் மாநகரை இடித்த வருத்தமோ ?
ராவணாதியரைத் தொலைத்த வருத்தமோ ?**

லங்கைக்குப் போனபின் ஊருக்கு வெளியிலே வானர ஸேனை ராக்ஷஸ ஸேனையோடு போர்க்களத்தில் யுத்தம்

Koviloor Digital Library

செய்ததோடு நிற்காமல், ஊரெல்லைக்குள்ளே போய் அதன் கோட்டை கொத்தளம் முதலானவற்றை இடித்துத் தூள் பண்ணின. அப்போது பதிநாலு வருஷ வனவாஸத்திற்கு ஒப்பி வாக்குக் கொடுத்திருந்த ஸ்வாமி தர்ம விக்ரஹ மானபடியால் தாம் நகரப் பிரவேசம் பண்ணப்படாது என்று ரணகளத்தில் பாசறையிலேயே இருந்தார். அப்போது மட்டுமில்லை. இதற்கு முந்தி அவரே வாலிவதம் பண்ணி, ஸுக்ரீவன் கிஷ்கிந்தா ராஜ்யத்திற்கு ராஜாவாகும்படிப் பண்ணியிருந்த போதிலும், தாம் அந்த ஊருக்குள் போய் அவனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணி வைக்காமல் காட்டிலேயே தான் இருந்தார்; லக்ஷ்மணரைத்தான் பட்டாபிஷேகம் பண்ண அனுப்பி வைத்தார். பிற்பாடு அவர் ராவண ஸம்ஹாரம் பண்ணியதாலேயே விபீஷணன் லங்கா ஸாம்ராஜ்யாதிபதியாகப் பட்டாபிஷேகம் பெற்றுக் கொண்ட போதும் அதையேதான் செய்தார். அப்படித் தம்மைத் தாமே, தர்மத்தை அலசிப் பார்த்து அவர் கட்டுப் படுத்திக் கொண்ட உசத்தியால்தான் இன்றைக்கும் அவரை லோகம் தர்மமூர்த்தி என்று கொண்டாடுகிறது....

லங்கையை வானரங்கள் இடித்தபோது அவருக்கு இரண்டு தினுஸில் வருத்தம். தாமும் அவர்களோடு உடலை வருத்தி ஸஹாயம் பண்ண முடியாமல் தர்மம் கட்டுப் படுத்துகிறதே என்பதில் அவருடைய மனசு வருத்தப் பட்டது ஒன்று. ரொம்ப அழகாகவும், பெரிசாகவும் மயன் நிர்மாணம் பண்ணிக் கொடுத்திருந்த லங்காநகரத்தையும், அந்த நகரவாஸிகள் பண்ணின தப்புக்களுக்காக யுத்தத்தின் அவசியத் தேவையை முன்னிட்டு, இடிக்கும்படி இருக்கிறதே என்ற வருத்தம் இன்னொன்று. "அதை மறக்க 'ஸ்லீப்பிங் டோஸ்' போட்டுக் கொண்டாயா?" என்று பழைய கேள்வியை மறுபடியும் அதே மாதிரி மறைமுகமாகப் போடுகிறார்.

Koviloor Digital Library

அதோடு, ராமர் சரமாரியாக பாணம் போட்ட மாதிரியே தாமும் அவர் மேல் கேள்விக் கணை மாரி போட்டாயிற்று என்று கவிராயர் 'ஃபீல்' பண்ணினார். கடைசியாக ஒரே ஒரு கேள்வி ராமகுண மேன்மையைத் தெரிவிப்பதாகக் கேட்டு முடித்து விட்டார்:

ராவணாதியரைத் தொலைத்த வருத்தமோ ?

முதலில் ராவணாதிகள் பண்ணின அக்ரமத்திற்காக அழகான லங்கா பட்டணத்தை த்வம்ஸம் செய்வானேன் என்று ராமர் வருத்தப்பட்டார். அப்புறம் அவர்களை யெல்லாம் ஹதாஹதம் செய்து, வீரராகவன் என்றே எல்லாரும் புகழும்படி நின்றபோதோ அவருக்கு உள்ளூர, "இந்த அக்ரமக்காரர்களைக் கூட ஏன் வதம் பண்ணி யிருக்க வேண்டும்? அவர்களிலும், ராவணன் உள்பட, மஹா பலம், வீரம், யுத்த சதுரம், அஞ்சா நெஞ்சம், விட்டே கொடுக்காத உறுதி, நல்ல வேத பாண்டித்யம், ஸங்கீதத்திலே அபாரத் தேர்ச்சி – என்றிப்படி சிறப்புக்களைப் பெற்றிருந்தவர்கள் இருந்தார்களே! அவர்களுடைய மனசு திருந்தும்படிச் செய்ய முடியாமல் வதம் அல்லவா பண்ணும்படியாயிற்று?" என்று வருத்தம் ஏற்பட்டது.

பரம சத்ருவிடம் இப்படிப்பட்ட கருணையுள்ளம் படைத்த உச்சாணியில் ராமரைக் காட்டியதே அவருடைய பட்டாபிஷேகத்தைப் பாடின மாதிரி என்று அதோடு கவிராயர் முடித்து விட்டார்.

பின் இரு சரணங்கள்

அந்தச் சரணம்தான் முடிந்ததே தவிர அப்புறம் இரண்டு சரணங்கள் பாடினார். ராமாயணக் கதையை வைத்துத் தம்முடைய இஷ்டமூர்த்தியைக் கேலியாகக் கேள்விகள் கேட்டவருக்கு பாகவதத்தை வைத்து

Koviloor Digital Library

க்ருஷ்ணனையும்தான் அப்படிச் சீண்டிப் பார்ப்போமே என்று தோன்றி க்ருஷ்ண சரித்ர ஸம்பவங்களையும் இதே மாதிரி சொல்லிக் கேள்வி கேட்டு இரண்டாவது சரணம் பண்ணியிருக்கிறார். இஷ்டமூர்த்திக்கு அப்புறம் கிஷ்டமூர்த்தி!

அந்தச் சரணத்தை முடித்த அப்புறம், ராமர் மட்டு மில்லாமல் இன்னொரு அவதாரத்தையும் பாடியதால், எல்லா அவதாரத்திற்கும் மூலமான மஹாவிஷ்ணுவே ஆன ரங்கநாதர் குறித்ததாகவும் பாடணும் என்று தோன்றி, மூன்றாவது சரணமும் பண்ணியிருக்கிறார். ஊர்ப் பெரியவர்கள் அவரிடம் கேட்டதும் அதைத்தானே?

அதிலே கேள்வி, கேலி எதுவுமில்லை. ரொம்பவும் உருக்கமாகப் பெருமாளின் அநுக்ரஹத்துக்குப் பிரார்த்திப்ப தாகவே பாடிக் கீர்த்தனத்தை முடித்து விட்டார்.

இந்தப் பாட்டு ராமநாடகத்தின் கதை பாகத்தில் வராமல், பாயிரத்துக்கும் முந்தியே பாடின தனிப்பாட்டாக இருப்பது. ஆகையினால் இது கீர்த்தனம்தான். இன்னும் ஸரியாய்ச் சொன்னால், 'க்ருதி'தான், 'தரு' இல்லை.

அந்த இரண்டு சரணங்களைச் சொல்லப் போனால் திருவாதிரைக்காரரைப் பற்றிய பாட்டைச் சொல்ல நேரம் இருக்காது. இப்பவே ரொம்ப நேரமாகி விட்டது. அதனால் தூக்கக்காரன் ஸமாசாரத்துக்கு மங்களம் பாடிவிட்டு, அந்த ஆட்டக்காரன் ஸமாசாரத்துக்குப் போகிறேன்!

பாபவிநாச முதலியாரும் கவிராயரும்

நடராஜா ஸம்பந்தமாக நிந்தா ஸ்துதிப் பாடல் பாடினவர் பாபவிநாச முதலியார் என்கிறவர். அவரைப் பற்றிய வாழ்க்கை விவரம் தெரியவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில், தஞ்சாவூரில் மஹாராஷ்டிர ராஜவம்சத் திலே வந்த துளஜா மஹாராஜா ஆட்சி செய்து

Koviloor Digital Library

கொண்டிருந்த போது அவனிடம் ஸம்மானம் பெற்றவர் அவர் என்று தெரிகிறதாம். அருணாசலக் கவிராயரும் அவனுடைய ஆட்சிக் காலத்தில் இருந்தவர்தான். அவன் ஸ்ரீரங்கத்தில் ராமநாடகம் அரங்கேற்றம் ஆனவுடன், கவிராயர் தன் ராஜ்யத்தைச் சேர்ந்தவர் என்பதால் தஞ்சாவூர் ராஜ ஸதஸிலேயும் அதற்கு அரங்கேற்றம் செய்ய நினைத்தானாம். ஆனால் அந்த ஸமயம் பார்த்து நவாப் மதர்மல்லின் படை தஞ்சாவூருக்கு வந்து முற்றுகையிட்ட தால் அவன் ஆசைப்பட்டதைச் செய்ய முடியவில்லையாம். ஆனால் கவிராயர் வேறே பல இடங்களுக்குப் போய் Art Patron-களாக அந்த நாளில் இருந்த பல ப்ரபுக்களால் யதேஷ்டமாக ஸம்மானிக்கப்பட்டிருக்கிறார். மணலி முத்துகிருஷ்ண முதலியார் அவருக்குக் கனகாபிஷேகமே பண்ணியிருக்கிறார். கவிராயரின் காலத்திலேயே ராம நாடகம் தேசத்தில் நன்றாக ப்ரசாரமாகி அவரும் சீர் சிறப்போடு இருந்திருக்கிறார். அவரது வாழ்க்கை பற்றி விவரமாகவே details கிடைத்திருக்கின்றன.

பாபவிநாச முதலியாரைப் பற்றி அப்படியில்லை. அவர் நிந்தா ஸ்துதியாகவே பாடிக் கொடுத்திருக்கிற அழகான பாட்டுக்கள் மட்டுமே கிடைத்திருக்கின்றன; ப்ரசாரத்திலும் இருந்து வந்திருக்கின்றன. ஆனாலும் இப்போது பல வருஷமாக அவர் பாட்டு எதுவும் என் காதில் படவில்லை. நான் சொல்லப் போகிற பாட்டு ஒரு காலத்தில் ரொம்ப ப்ரஸித்தியாய் இருந்திருக்கிறது.

முதலியார் தம்முடைய பாட்டுக்களை நாட்யத்தில் அபிநயத்துக்கு ஏற்றபடி அமைத்திருக்கிறார். அதனால் அவற்றைப் ‘பதங்கள்’ என்றே சொல்வார்கள். எல்லாம் உதிரி உதிரியான தனிப் பாட்டுக்கள்தான்; ஒரே கதையாகத் தொடர்கிறவை இல்லை.

Koviloor Digital Library

கவிராயர் மாதிரி இல்லாமல் முதலியார் நன்றாக உடைத்தே பரிஹாஸம் பண்ணுவார். அதுவே ரஸமாகவும் இருக்கும். பரிஹாஸத்திலேயே அங்கங்கே அவருடைய கனிந்த பக்தியுள்ளமும் தெரியும். தத்வார்த்தமாகவும் சில இருக்கும். நல்ல விஷய ஞானமுள்ளவர் என்றும் தெரியும்.

அப்படி ஆட்டக்காரனிடம், ஆதிரையானிடம் பாடின ஒன்றைத்தான் சொல்ல [நான்] ப்ரியப்படுவது.

முதலியாரின் நடராஜர் பாடல்

காலில் கொஞ்சம் அடிபட்டால்கூட அதை நிலத்தில் அழுந்த வைக்காமல், லேசாக ஊன்றிக் கொண்டுதான் நடக்கிறோம். நன்றாகவே 'பாரலைஸ்' ஆகி, கால் என்று ஒன்று கண்ணுக்குத் தெரிந்தும் அது காரியத்துக்கு உதவாமல் 'முடம்' என்று சொல்லும்படியே ஆகிவிட்டால் அதை நிச்சயம் பூமியில் வைக்கவே மாட்டோம். தூக்கித்தான் வைத்துக் கொண்டிருப்போம். ஒரு கால் இப்படி ஆகி, இன்னொன்று நடக்கிற சக்தியோடு இருந்தால் அப்போது சக்தியுள்ள காலை மட்டுமே பூமியில் வைத்து மற்றதைத் தூக்கிக் கொண்டு நொண்டி நொண்டியே போவார்கள்.

நடராஜாவும் இடது காலைத் தூக்கித்தான் வைத்துக் கொண்டிருக்கிறார். வலது காலை மட்டும் அபஸ்மார புருஷனென்றும், முஸலகன் – தமிழ் வழக்கிலே 'முயலகன்' – என்றும் சொல்கிற அஸுரன் மாதிரியான ஒரு ரூபத்தின் மேலே அழுந்த வைத்திருப்பார். 'அபஸ்மாரம்' என்றால் நினைக்கத் தகாத சிந்தனை. அதை த்வம்ஸம் பண்ண வேண்டும். கோணாமாணா சிந்தனை மாதிரியே காலும் கையும் கோணக் கோண இழுத்துக் கொண்டு கிடக்கிற காக்காவலிப்புக்கும் அபஸ்மாரம் என்றே பெயர். முஸலக ரோகம், முயலக நோய் என்பதும் அதைத்தான்.

Koviloor Digital Library

கோணாமாணா சிந்தனையைச் சிந்தனையாகப் பார்க்க முடியாதாகையால் ஸ்தூலத்தில் ஒரு ரூபமாக நடராஜாவின் வலது காலின் கீழே காட்டும் போது, ஸ்தூலமான உடம்புக்கு ஏற்படும் கோணாமாணா வலிப்பு வியாதியின் பெயரையே அந்த ஆஸாமிக்கு வைத்திருக்கிறது. கால்-கை வலிப்புத்தான் காக்கைவலிப்பு, காக்கா வலிப்பு என்று ஆனது.

'அந்த வலிப்புக்காரனை வலது காலால் மிதிக்கிற ஆட்டக்காரனே இடது காலைத் தூக்கிக் கொண்டிருக்கிறானே! தன்னிடமே அந்த வியாதியை அவன் வாங்கிக் கொண்டு முற்றிப் போய் அந்தக் கால் 'பாரலை'ஸே ஆகி விட்டது போலிருக்கிறதே!' என்ற பாவம் முதலியாருக்கு ஏற்பட்டிருக்கலாம். அதையே ஹாஸ்யக் கிண்டலாக்கிப் பாட்டுப் போட்டுவிட்டார்!

காம்போதி ராகத்தில் போட்ட பாட்டு. முதலில் சொன்ன கவிராயர் பாட்டு மோஹனம்.

பாட்டைச் சொல்கிறேன்:

நடமாடித் திரிந்த உமக்(கு) இடதுகால் உதவாமல்
முடமான(து) ஏனென்று சொல்லுவீரையா!

இதுதான் பல்லவி. 'நட(da)மாடி', 'நட(ta)மாடி' என்று இரண்டு விதமாகவும் ஆரம்ப வார்த்தையை வைத்துக் கொள்ளலாம். ஆனால் 'நட(da)மாடி' – நாம் எல்லாருமே பண்ணுகிறதுதான்; அதாவது நடந்து போவது. 'நட(ta)மாடி' என்றால் 'நடனம் ஆடி', 'ஆடி' என்கிறது இங்கேதான் ஜாஸ்திப் பொருத்தம். நடனத்தை ஆடல் என்றுதானே சொல்வது? அதனால், 'நட(ta)மாடி' என்று பாடுவதே அதிகப் பொருத்தம் என்கலாம். ஆனாலும், அடுத்த வரி 'முடமாகி' என்று da-காரமாக இருப்பதால் முதல் வரியையும் 'நடமாடி' என்று பாடுவதுதான் பொருத்தம்

Koviloor Digital Library

என்றும் தோன்றுகிறது. 'நடனமாடி, அப்படி ஆடியபடியே சுற்றிச் சுற்றித் திரிந்த நீ இப்படி ஒரு காலைத் தூக்கிக் கொண்டு ஏன் அப்படியே ஒரே 'போஸி'ல் எத்தனையோ வருஷமாக நின்று விட்டாய்? ஏன் இப்படி உன் இடது கால் வழங்காமல் – டான்ஸ்காரன், இரண்டு காலும் ஜதிகள் போட வேண்டியவன், ஒரு கால் பிரயோஜனப்படாமல் – அதைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும்படி இருக்கிறது?' என்று கேட்டுவிட்டு, அப்புறம் அது இன்ன காரணத் தாலா, இன்ன காரணத்தாலா என்று, கவிராயர் கேட்ட மாதிரியே, பாபவிநாச முதலியாரும் அடுக்கிக் கொண்டு போகிறார்.

அந்தப் பாட்டு மாதிரியே இங்கேயும் அநுபல்லவி யிலே கேள்வி எதுவும் கேட்கவில்லை; சரணத்தில்தான் அதை ஆரம்பிக்கிறார். 'குஞ்சித சரண'த்தைப் பற்றித்தானே கேள்வி? அதனால் பாட்டின் சரணத்திலேயே கேள்விகளை ஆரம்பிக்கிறார்.

திடல் மேவும் தில்லை நகர் மருவு பேரானந்தச்
சுடை விரித்தாடினவா! தேவசிற்சபை அறிய

என்பது அநுபல்லவி.

கொள்ளிடத்துக்கும் வெள்ளாற்றுக்கும் நடுவே, மலைப் பாங்காக இல்லாத சமவெளியில் சிதம்பர க்ஷேத்ரம் இருக்கிறது. அதுதான் 'திடல் மேவும் தில்லை நகர்'. அங்கே ரொம்ப ஸந்தோஷமாகத் தன்னுடைய ஸொந்த ஊர் என்று ஸ்வாமி ஒட்டிக் கொண்டு இருப்பதைத்தான் 'மருவு' என்று சொல்கிறார். அப்படியிருந்து கொண்டு, நமக்கெல்லாம் இன்ன என்றே தெரியாத ப்ரஹ்மானந்தமான பேரானந்தத்திலே அவன் தனக்கென்றே விசேஷமான செஞ்சடையை இரண்டு பக்கமும் விரித்துக்கொண்டு ஆடுகிறான். அதைத்தான் இங்கே சொல்லியிருக்கிறார்.

Koviloor Digital Library

சுடிகை, சுடை என்பது சிவனொருத்தனுக்கே இருக்கப்பட்ட விசேஷம் வாய்ந்த சடைமுடிதான். ஸம்ஸ்க்ருதத்திலும் வேதத்திலேயே வருகிற 'ருத்ர'த்திலிருந்து ஆரம்பித்து அதற்குக் 'கபர்தம்' என்று தனிப்பெயர் சொல்லியிருக்கிறது. அதனால் அவனைக் 'கபர்தி' என்று சொல்லியிருக்கிறது.

ஞான ஒளியால் ப்ரகாசமாக இருக்கும் ஞானாகாசத்தையே நாம் பார்க்கும்படி, அறியும்படி 'சித்ஸபை' என்று ஆக்கிக் கொண்டு அங்கேதான் அவன் 'நடமாடித் திரிவது'. 'தேவ சிற்சபை' என்கிறதில் 'தேவ' என்றால் 'ப்ரகாசமாயிருக்கிற' என்று அர்த்தம். 'தேவலோகத்து சித்ஸபை' என்று பொருள் கொண்டால் ஸரியில்லை. இந்த ஸபை தேவலோகத்துக்கு அப்பாற்பட்டது. 'சித்ஸபை அறிய' என்பதை சித்ஸபையில், 'அந்த ஸபையிலே அவனை தரிசிக்க வருகிற எல்லோரும் அறிய' என்று நீட்டி அர்த்த மாக்கிக்கணும்.

இனிமேலே சரணம். அங்கேதான் நிந்தா ஸ்துதியாகக் காரணம் கேட்டுக் கொண்டு போவது.

திருநீற்றைச் சுமந்தீரோ, நெருப்பான மேனிதனில்:
சீதத்தினால் மிகுந்த வாதகுணமோ ?

'திருநீற்றைச் சுமந்தீரோ?' என்பதற்கு 'சுமந்தீரே!' என்றே அர்த்தம். பழம் பாடல்களில் அப்படித்தான் வரும்.

'ஸ்வாமி இட்டுக் கொள்வது சந்தனமாக இல்லாமல் சுடுகாட்டு விபூதியாயிருக்கிறதே! ஏற்கெனவே அவன் அக்னியாயிருப்பவன் ஆயிற்றே!' என்பதால் பக்தர்கள் விபூதி அபிஷேகம் பண்ணுகிறபோதும், அவனுக்கு உடம்பெல்லாம் விபூதி பூசும்போதும் அந்த விபூதியிலேயே ரொம்ப ஜில்லிப்புச் சரக்குகள் சேர்த்திருப்பார்கள் போலிருக்கிறது! 'அப்படிப் பண்ணப்போக, சூட்டு உடம்பிலே அந்த ஜில்லிப்புச் சேர்ந்ததில் கோளாறாகி

Koviloor Digital Library

உனக்குச் சீதளம் ஏறி, அதனாலேயே இடதுகால் வாதக் காலாகி விட்டதா?' என்று இந்த முதல் கேள்வி. வெளிப்படையாகவே கேட்கிறார். கவிராயர் மாதிரி மறைத்து இல்லை. இப்படியேதான் தொடர்ந்தும்!

ஒருமையுடன் மார்க்கண்டர்க்(கு) உதவியாய் மறலி விழ
உதைக்கச் சுளுக்கேறி உண்ட குணமோ?

யமன் பிடிக்க வந்தபோது தன்னையே கதியாய்க் கட்டிக் கொண்ட மார்க்கண்டேயரை ரக்ஷித்தே ஆகணும் என்று ஸ்வாமி அதுவொன்றே சிந்தையாயிருந்ததைத்தான் 'ஒருமையுடன்' என்கிறார். மறலி என்றால் யமன். 'மறல்' என்றால் சாவு. அதை உண்டாக்குகிறவன் மறலி.

அவனை ஸ்வாமி அந்த இடதுகாலால்தான் ஓங்கி ஒரு உதைவிட்டே வதை பண்ணிவிட்டார்! அப்புறம், மறுபடி உயிர் கொடுத்தார். 'அப்படி உதைத்ததால் அந்தக் கால் நன்றாகச் சுளுக்கிக் கொண்டு அதன் தொடர்ச்சியாக உண்டான தன்மையால் – 'உண்ட குணம்' என்பது 'உண்டான தன்மை' என்பதே; அப்படி ஆனதால்தான் — முடிவிலே அந்தக் கால் முடமே ஆகிவிட்டதா?'

பரவைதன் தெருவாசற்படி இடறிற்றோ?

ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுக்குப் பெரியவர்கள் சாஸ்த்ரோக்தமாகக் கல்யாணம் நிச்சயித்து, அது நடந்து கொண்டிருக்கும்போது ஸ்வாமி ஒரு கிழப் பிராமணர் வேஷத்தில் அங்கே போய் அவர் தனக்கு 'அடிமை, அதனால் தமக்குத் தொண்டு செய்து கொண்டு தம்மிடமே கிடக்க வேண்டியவர், கலியாணம் கார்த்திகை பண்ணிக் கொண்டு குடும்ப வாழ்க்கை நடத்த உரிமை இல்லாதவர் என்று வாதம் பண்ணினார். பொய்ப் பத்திரத்தை மெய் மாதிரிக் காட்டுவது உள்பட என்னென்னவோ பண்ணி, முடிவில் தாம் ஸ்வாமியே என்று ஸுந்தரருக்குத்

Koviloor Digital Library

தெரியும்படிச் செய்தார். உடனே ஸுந்தரரும் அவருக்கு 'மீளா அடிமை' என்று தம்மை ஆக்கிக்கொண்டு விட்டார். அப்படி சாஸ்த்ரோக்தக் கல்யாணத்தை நிறுத்தியவரே அப்புறம் ஒரு சாப விமோசனம் ஏற்படவேண்டும் என்பதற்காக ஸுந்தரரை 'இசை வேளாளர்' என்று சொல்கிற ஸமூஹத்தைச் சேர்ந்த ரொம்பவும் புனிதமான பரவை என்பவளிடம் ப்ரேமை கொள்ளும்படியாகவும், அவளும் அவரை ப்ரேமித்து அவர்கள் உறவு ஏற்படுத்திக் கொள்ளும்படியாகவும் பண்ணினார்! இது திருவாரூரில். இது போதாதென்று, அதே சாபத்தின் இன்னொரு பாதி விமோசனமாகணும் என்பதற்காக வடக்கே, மெட்ராஸ் திருவொற்றியூரில் புலனடக்கத்தோடும், ஈச்வர பக்தியோடும் கன்யா மாடத்தில் – மாடம் என்கிறது இங்கே மடம் என்றே அர்த்தம் கொடுக்கும்; அப்படிப்பட்ட இடத்தில் – வசித்துக் கொண்டிருந்த வேளாளப் பெண்ணான சங்கிலி என்பவளுக்கும் ஆதி சைவப் பிராம்மணரான ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளுக்கும் பரஸ்பர ப்ரேமை உண்டாகும்படியும் பண்ணினார்.

பண்ணினார், பண்ணினார் என்று நான் சொல்வதெல்லாம் அந்தக் கதாபாத்திரங்கள் உள்பட யாருக்கும் தெரியாமல், திரைக்குப் பின்னால் இருக்கிற ஸூத்ரதாரியாக ஸ்வாமி ஸந்தர்பங்களை உண்டாக்கினதைத்தான்!

அப்புறம் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் திருவாரூருக்குத் திரும்பி வந்தார். இதற்குள்ளே பரவைக்கு திருவொற்றியூர் ஸங்கதி தெரிந்து விட்டது. அது தெரிந்து அவள் தன்னிடம் ஒரே கோபமாயிருக்கிறாள் என்பது ஸுந்தரருக்கும் தெரிந்துவிட்டது. 'தாஸ்யம்' என்ற அடிமை வழியில் பக்தி பண்ண ஆரம்பித்த அவர் போகப் போக ஸ்வாமிக்கு ரொம்பவும் நெருங்கிய தோழராக – 'தம்பிரான்

Koviloor Digital Library

தோழர்' என்றே அவரைச் சொல்லும்படியாக – 'ஸக்யம்' என்ற வழியில் சேர்ந்து விட்டார். ரொம்பவும் உரிமையுடன் ஸ்வாமியிடம் எதையும் வற்புறுத்திக் கேட்குமளவுக்குப் போய்விட்டார். நன்றாகத் திட்டக் கூடச் செய்தார்! அவருடைய பதிகங்களிலேயே நிறையச் சான்று இருக்கிறது! அதனால் அவருக்கு 'வன்றொண்டர்' — 'வன்தொண்டர்' — என்றும் ஒரு பேர் ஏற்பட்டு விட்டது!

இப்போது ஸுந்தரர் கொஞ்சங்கூடத் தயங்காமல் ஸ்வாமியிடம், "நீயே பரவையின் வீட்டுக்கு தூது போய் அவளை ஸமாதானப்படுத்தி ஊடலைத் தீர்க்க வேண்டும்" என்று கேட்டு விட்டார்! அதை விட ஆச்சர்யம், ஸ்வாமியும், "ஆஹா"! என்று ஒப்புக் கொண்டார்! லோகத்தின் பார்வையில் ஒரு ஆடல் மகளோடு ஒருவருக்கு இருந்த தகாத உறவுக்கு விரிசல் ஏற்பட்டபோது அதை ஒட்டி வைப்பதாகவே தோன்றும் அகார்யத்தை [செய்யத் தகாததை]ச் செய்யப் புறப்பட்டு விட்டார்! பக்த பராதீனர்!

"அப்போது வேக வேகமாகப் பரவை வீட்டுக்குப் போனாயே! அந்த வேகத்திலே அவளுடைய வீட்டு வாசல்படி இடறி விழுந்து விட்டாயா? விழுந்ததில்தான் இடதுகால் முடமாச்சா?" – இப்படிப் பாபவிநாச முதலியார் கேட்கிறார். இவருக்கும்தான் ஸ்வாமியிடம் அஸாத்யத் துணிச்சல்!

இப்படித் துணிச்சலாயிருந்தாலும் உள்ளுக்குள்ளே இவருக்கும் ஸரி, அந்த வன்றொண்டருக்கும் ஸரி, ஸ்வாமியிடம் ஒரே உருக்க மயமான பக்தி!

அதனால், "ஸ்வாமியே! உன்னை இப்படி இடதுகால் உதவாதவனாகப் பார்க்கிற பரம துர்பாக்கியம் எனக்கு ஏற்பட்டிருக்கிறதே! நான் பண்ணின மஹா பாபங்களால் தான் எனக்கு இப்படி ஒரு மனக்கஷ்டம் உண்டாகணு மென்றே உன் காலை முடமாக்கிக் கொண்டு

Koviloor Digital Library

காட்டுகிறாயா?" என்று அடுத்த கேள்வி கேட்கிறார். இரண்டே வார்த்தையில் இத்தனை அபிப்ராயத்தை 'காப்ஸ்யூலா'க அடக்கிக் கேட்கிறார்!

எந்தன் பாபமோ, என் சிவனே?

முதல் இரண்டு வார்த்தையிலேயே கேள்வி அடங்கி விட்டது. அப்புறம் அவருக்கு இருக்கிற பரம பக்தியில் "என் சிவனே!" என்று தன்னுடைய உடைமையாகவே அவர் ஸ்வாமியைக் கூப்பிடுவது நம்முடைய நெஞ்சைத் தொடுகிறது.

"என்னுடைய ஸொந்த ஸ்வாமியே! நான் பண்ணின பாபத்துக்காக எனக்கு மனக்கஷ்டம் என்ற தண்டனை தரணுமென்றே, த்ரிமூர்த்திகளிலும் ப்ரதானமாயிருக்கப் பட்ட நீ உன் காலை முடமாக்கிக் கொண்டாயா?" என்று கேட்கிறார்.

எந்தன் பாபமோ, என் சிவனே?
மூவர்க்கும் முதல்வனென
நடமாடித் திரிந்த....

என்று அந்தச் சரணம் பல்லவியோடு சேர்ந்து முடிகிறது.

சரணம் முடிந்ததே தவிர கேள்விகள் முடியவில்லை. அதனால் இன்னொரு சரணம் பாடியிருக்கிறார்.

இவர் பேர் பாபவிநாசம். தான் பண்ணின பாபத்தால்தான் அவன் முடமாக ஆனதா என்று மேலே கேட்டார். அடுத்த சரண ஆரம்பத்தில் பாபம் விநாச மாவதைச் சொல்லி ஒரு கேள்வி கேட்கிறார். அதிலே நிந்தை, கேலி எதுவுமில்லை. பரமதத்வத்தையே பரம பக்தியோடு கேள்வி மாதிரி ஆக்கி - கேள்வியே அதற்குப் பதிலும் ஆகிவிடும் 'leading question' ஆக்கி - கேட்கிறார்.

Koviloor Digital Library

பின்னிட்டு அந்தச் சரணத்தில் வருகிற இரண்டு கேள்விகளும் அதே மாதிரியானவைதான். உசந்த விஷயத்தை நல்ல காவ்ய பாஷையில் கேள்வியாகக் கேட்கிறார்.

முதல் கேள்வி:

பக்திசெய்யும் பெரியோர்கள் பாபநாசனமாகும்
பரமபதம் இது என்று தூக்கி நின்றததுவோ ?

மஹாபக்திமான்களாக இருக்கப்பட்டவர்களுக்கும் பூர்வ கர்மாவால் ஏற்பட்ட பாபம் என்பது இருந்து கொண்டு அவர்களைக் கொஞ்சமாவது பழிவாங்கிக் கொண்டுதான் இருக்கும். முடிவாக ஸ்வாமிதான் பரம கருணையினாலே அந்தப் பாபத்தை நாசம் செய்து அவர்களுக்கு மோக்ஷாநுக்ரஹம் கொடுப்பார்.

நடராஜா நடனத்தாலேயே ஐந்தொழிலும் புரிவதாகச் சொன்னேனே, அதில் முடிவாக இந்த மாய ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியையே பக்தர்கள் விஷயத்தில் இல்லாததாகப் பண்ணி, அதிலே அங்கமான அவர்களுடைய பூர்வ பாபத்தையும் நாசமாக்கி, மாயைக்கு அப்பாற்பட்ட தம்முடைய பரமபதமான மோக்ஷத்தில் சேர்த்துக் கொள்ளும் 'அநுக்ரஹம்' என்ற ஐந்தாவது தொழிலைச் செய்வது அந்தத் தூக்கிய திருவடி, இடது திருவடிதான். நாட்யமாடுகிற அழகில் வளைந்து இருக்கும் அதைத்தான் 'குஞ்சிதபாதம்' என்று சொல்லி ரொம்பவும் ஸ்தோத்ரிப்பது. 'குஞ்சிதம்' என்றால் 'வளைந்திருப்பது'.

அந்தத் திருவடியின் இந்த நிஜமான மஹிமையைத் தான் – நையாண்டியாக இட்டுக் கட்டி உண்டாக்கின சிறுமையில்லை; நிஜமான தத்வத்தைத்தான் – சொல்லி இங்கே கேட்கிறார். "பாபநாசம் பண்ணும் பரமபதம் இதுதான்; பிடிச்சுக்கோங்கோ இதை!" என்றுதான் ஸ்வாமி அந்தக் காலைத் தூக்கி எடுத்துக் காட்டுகிறாரா என்று

Koviloor Digital Library

கேட்கிறார். "இப்படிக் காட்டுவதைத்தான் முடமானதாக 'மிஸ்டேக்' பண்ணிக் கொண்டேனா?" என்று கேட்காமலே கேட்கிறார்!

காவ்ய அழகிலே இதையும் மிஞ்சுவதாக இன்னொரு தத்வ ஸத்யத்தை அடுத்த கேள்வியாகப் போடுகிறார்.

"உன்னுடைய வாம [இடது] பாகம் பூராவும் அம்பாளுடையதாகையால் இந்தத் தூக்கிய திருவடியும் அவளைச் சேர்ந்ததுதான். அவள் யார்? உன்னிடம் பரம ப்ரேமை கொண்ட சிவ-காமி! பட்ட கட்டை மாதிரி இருந்த உன்னைத் தன்னிடம் ப்ரேமிக்கும் படிப் பண்ணுவதாலும் 'சிவகாமி'! நீ கட்டையாட்டம் இருந்தாலும் அவளோ கொடி மாதிரி இருக்கிற சிவகாமவல்லி. 'வல்லி' என்றால் கொடி. பார்வைக்கு இப்படி லலிதமாக, லேசாக இருந்தாலும் அவளுடைய சக்தி பெரிசாக இருக்கிறது. மரம் மாதிரி உள்ள உன்னையே அசைத்து ப்ரேமையை உண்டாக்கி விடுகிறாள்!

"உங்கள் இரண்டு பேர் ப்ரேமையும் ஸங்கமித்து, ஜீவலோகம் முழுவதிடமும் பரம கருணை என்பதாகக் கொடி மாதிரிப் படர்ந்து கொண்டே போகும்படி அவள்தான் பண்ணுகிறாள். இருந்தாலும் அவள் பார்வைக்குக் கொடியாகத்தான் ஒரே துவளலாகத் துவண்டு இருக்கிறாள். உன்னுடைய ரூபத்தில் இடது காலாக இருந்து கொண்டு அங்கே துவண்டு வளைந்திருப்பதோடு, பக்கத்திலே தனி மூர்த்தியாக நிற்கிற போது இடுப்பை வளைத்துக் கொண்டு, உடம்பையே துவள விட்டுக் கொண்டும் இருக்கிறாள்! அப்படிப்பட்டவளின் அந்த ம்ருதுவான பாதத்தை நாட்யரங்கத்தின் கெட்டித் தரையில் வைத்தால் நொந்து போகுமே என்றுதான் கீழே வைக்காமல் தூக்கிக் கொண்டிருக்கிறாயா?"

Koviloor Digital Library

நாட்யமாடுகிறவர் ஜதிகளை நன்றாக, அழுத்தமாகப் போடவேண்டும் என்பதால் அதன் அடித்தரையைக் கெட்டிப் பண்ணித்தான் வைத்திருப்பார்கள்.... "'அந்த கெட்டித் தரையில் பூங்கொடிப் பாதத்தை வைக்கவாவது?' என்று தயக்கம் கொண்டே தூக்கி எடுத்திருக்கிறாயா?

சக்தி சிவகாமவல்லி தன் பாதம் நோகுமென்றே
தரையில் அடிவைக்கத் தயங்கி நின்றததுவோ?

முடிவான அடி – திருவடியைப் பற்றியதேயான பாட்டின் கடைசி அடி – நிஜக் காரணங்களில் இன்னொன்றைக் கேள்வி ரூபத்தில் தெரிவிக்கிறது. யதார்த்த ஸத்யத்தை அப்பட்டமாகவே, bare fact – ஆகவே அது தெரிவிப்பதாகச் சொல்லலாம். தத்வம், காவ்ய நயம் ஆகியவற்றோடு அந்தக் கேள்வியும் இருந்தால், பாட்டு முடிந்து விட்டதே என்று நமக்கு துக்கமாக இருக்குமென்றே ஸாஹித்யகர்த்தா இப்படிப் பண்ணியிருக்கலாம்!

ஈச்வரன் கைலாஸபதியாகவும், மஹாவிஷ்ணு வைகுண்டாதிபதியாகவும் இருக்கிறாற்போல ஸத்ய லோகத்துக்கு அதிபதியாயிருப்பவர் ப்ரம்மா. அவர்தான் இந்த டான்ஸ் கச்சேரிக்குத் தாளம் அமர்த்திக் கொடுப்பவர். மஹாவிஷ்ணு ம்ருதங்கம் வாசிப்பார்; பிரம்மா கையாலே தாளம் நன்றாக அறைந்து போட்டுக் கொண்டிருப்பார். அதற்கேற்கத்தான் பரமேச்வரன் இந்தக் காலையும் அந்தக் காலையும் மாற்றி மாற்றித் தூக்கித் தரையில் குத்திக் குதித்து ஆடுவது!

அப்படி ஆடுகிற போது அவர் இடது காலைத் தூக்கிக் கொண்டிருக்கிற ஒரு ஸந்தர்ப்பம். 'தான் இன்றைக்கு ஆடுவது போதாது. என்றைக்கும் அழகுக்கு அழகான விக்ரஹ ரூபமாகவும் நாம் இருந்து கொண்டு ஜனங்கள் கண்குளிர தரிசனம் பண்ணும்படியாகவும் இதை

Koviloor Digital Library

ஆக்கித் தரவேண்டும்' என்று க்ருபாநிதியான ஸ்வாமிக்கு தோன்றிவிட்டது. உடனே அந்த க்ஷணத்தில் என்ன pose-ஓ அதையே snap shot என்று எடுத்து எந்த நாளும் இருக்கிற ஃபோட்டோப் படம் ஆக்குகிற மாதிரி, அவர் சித்ரமாக இல்லாமல் சில்பமாக — சிதம்பரத்தில் எத்தனையோ காலமாக ஜனங்களை ஆகர்ஷித்துக் கொண்டு வந்திருக்கிற ஸௌந்தர்ய விக்ரஹமாக — ஆகிவிட்டார்! விக்ரஹம்: ஆனாலும் வெறும் சிலையாயில்லாமல் ஜீவகளை ததும்பிக் கொண்டிருக்கிற ஸ்வாமியின் ரூபமாகவே இருப்பது! அப்படி இருக்கும்போது ஒரே போஸில்தானே இருக்க முடியும்? அப்படித்தான் அவர் ஒரு க்ஷணம் காலைத் தூக்கியதே சாச்வதமாக ஆகி, கால் ஊனமாகிவிட்டதா என்ன என்று நினைக்கும்படிப் பண்ணியிருக்கிறதா?

ஸத்ய லோகாதிபதி தாளத்திற்(கு) ஏற்க நடம்
தாக்கியே ஒரு காலைத் தூக்கி நின்றததுவோ ?

இதுதான் அந்தப் பாட்டில், — 'பதம்' என்கிற வகையைச் சேர்ந்த பாட்டில் — முடிவான அடி. 'பதம்' என்பதும் 'அடி' என்று அர்த்தம் கொடுக்கும். கடைசியில் எல்லாம் ஒன்று சேர்ந்து திருவடிப் பெருமையைச் சொல்வதுதான்!

ஸ்வாதீனம் காட்டும் ஆனந்த பக்தி

இப்படி மணிமணியாக இரண்டு பாட்டுக்கள். ஸ்ரீரங்கத்துத் தூக்கக்காரனையும் சிதம்பரத்து ஆட்டக்காரனையும் கேள்விக்கு மேல் கேள்வியாகக் கேட்டு இரண்டு பாட்டுக்காரர்கள் போட்டவை. ஒருத்தர் தூக்கக்காரனைப் பாட்டாலேயே ஆட்டி அசக்கி எழுப்பி விடுகிறாரென்றால், மற்றொருத்தரோ ஆட்டக்காரனையே ஆட்டி வைத்து விடுகிறார்!

Koviloor Digital Library

மூக்கைச் சிந்திப் போட்டுக் கொண்டு எதற்காகவாவது ஸ்வாமியிடம் அழுவதுதான் பக்தி என்றில்லாமல், ஸ்வாதீனத்துடன் அவனிடம் ஆனந்தமாகக் கேள்வி கேட்டுக் குடைவதும் பக்திதான் என்று நமக்குத் தெரிவித்து, கேட்கிறபோதே நமக்கும் அந்த ஆனந்தம் தரும் பாட்டுக்கள்!

Koviloor Digital Library

சான்றோர்

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஒரு ரிஷியின் தியாகம்

ஏரண்டகர் : பெயர்க்காரணம்

ஏரண்டகர் என்று ஒரு ரிஷிக்குப் பெயர். "ஏரண்டம்" என்றால் ஆமணக்கு. ஆமணக்குக் கொட்டையிலிருந்துதான் விளக்கெண்ணெய் எடுப்பது. இந்த ரிஷியின் பெயருக்கு "விளக்கெண்ணெய் சாமியார்" என்று அர்த்தம். கேலிப் பெயர் மாதிரி த்வனிக்கிறது. மஹான்கள் தங்களுக்கு ஊரும் பேரும் சொல்லிக்கொள்ள மாட்டார்கள். அநாமதேயமாகக் கிடப்பார்கள், திரிவார்கள். ஜனங்கள் அவர்களைப் போற்றிப் பட்டம் கொடுத்தாலும் சரி, தூற்றிப் பரிஹாஸப் பேர் வைத்தாலும் சரி, இரண்டும் அவர்களுக்கு ஒன்றுதான்.

ஏரண்டகருக்கு அப்பா, அம்மா வைத்த பெயர் என்னவோ யாருக்கும் தெரியாது. ஏரண்டகர் என்பது ஜனங்களாக வைத்த பெயர்தான். அதற்குக் காரணம் உண்டு.

கும்பகோணத்துக்கு மேற்கே இரண்டு மைலில், ஸ்வாமிமலைக்குப் போகிற வழியில் கொட்டையூர் என்று ஒரு ஸ்தலம் இருக்கிறது. கொட்டையூர் என்று ஏன் பேர்? எத்தனையோ கொட்டைகள் இருக்கின்றன. இருந்தாலும் கொட்டை என்று இரண்டுதான் முக்கியமாகச் சொல்லப் படுகின்றன. ஒன்று ஆத்மார்த்தமானது - ருத்ராக்ஷத்தைக் கொட்டை என்றே சொல்வார்கள். சிவ தீக்ஷை செய்து கொண்டு ருத்ராக்ஷம் போட்டுக் கொண்டிருப்பவர்களைக் 'கொட்டை கட்டி' என்பார்கள். இந்தக் கொட்டை, மனஸில் சேருகிற அழுக்குகளை எடுப்பது. இன்னொரு கொட்டை, வயிற்றில் சேருகிற அழுக்குகளை,

Koviloor Digital Library

கெடுதல்களை எடுக்கிற ஆமணக்குக் கொட்டை. முத்துக்கொட்டை, கொட்டைமுத்து என்றும் சொல்வார்கள். அதை ஆட்டித்தான் விளக்கெண்ணெய் எடுப்பது. வயிற்று அடைசலைப் போக்குவதோடு இன்னும் பல தினுசிலும் அது தேஹாரோக்யத்துக்குப் பிரயோஜனப் படுவது. வயிறு லேசாகி, தேஹம் ஆரோக்கியமாக இருந்தால்தான் மனஸும் லேசாகி ஈச்வரபரமாக நிற்கும். ஆனதால் ஆமணக்கு ஆத்மார்த்தமாகவும் நல்லது செய்வதே. ருசியும் வாஸனையும் ஸஹிக்காவிட்டாலும் "நல்ல ருசி, நல்ல வாசனை" என்று நாம் தின்றதுகளால் ஸங்கடம் உண்டாகும்போது உதவுவது ஆமணக்குத்தான்.

லோகத்தில் அடைகிற இந்திரிய ருசிகளும், விஷய வாஸனையும்தான் ஜனங்களுக்கு இஷ்டமாயிருக்கின்றன. இந்த வழியிலேயே போய் ஜனங்கள் பாபத்தையும் துக்கத்தையும் பெருக்கிக் கொள்ளும்போது மஹான்கள் அவர்களை ரக்ஷிக்க உபதேசம் பண்ணுகிறார்கள். அந்த உபதேசம் விளக்கெண்ணெய்யாகத்தான் தோன்றும். ஆனால் அதுதான் உண்மையில் விள்க்கும் எண்ணெய். 'பல் விளக்குவது', 'பாத்திரம் விளக்குவது' என்று ஸாதாரண ஜனங்கள் சொல்வதில் நிரம்ப அர்த்தம் இருக்கிறது. ஒன்றிலே இருக்கிற அழுக்கைத் தேய்த்துப் போக்கி விட்டால் அது சுத்தமாகி, விளக்கம் பெற்றுவிடுகிறது என்பதைத்தான் இப்படிச் சொல்கிறார்கள். வயிற்றில் இருக்கிற அழுக்குகளை அலசிப் போக்கி சுத்தமாக்கி வைப்பதே விளக்கெண்ணெய். மஹான்களின் உபதேசம் மனஸிலுள்ள அழுக்குகளைத் தேய்த்து அலம்பி விளக்கி வைத்து ஞான விளக்கை ஏற்றி வைப்பது.

கொட்டையூர் என்று சொன்னேனே, அது ரொம்பவும் பூர்வ காலத்தில் ஊராகவே இல்லாமல் ஆமணக்கங் காடாகத்தான் இருந்ததாம். ஏதோ ஒரு ஸந்தர்ப்பத்தில் அங்கே ஒரு கொட்டைமுத்துச் செடியின்

Koviloor Digital Library

கீழ் பரமேச்வரன் லிங்கமாக ஆவிர்பவித்தார். அப்புறம் காடு ஊராயிற்று. புண்ய ஸ்தலமாயிற்று. ஆமணக்கின் கீழிருந்து ஸ்வாமி வந்ததால் அதற்குக் கொட்டையூர் என்றே பெயர் ஏற்பட்டது. இப்போதும் அங்கே ஸ்தல விருக்ஷம் ஆமணக்குத்தான்.

இந்த ஊரில்தான் அந்த ரிஷி பஹு காலமாகத் தபஸ் பண்ணிக் கொண்டிருந்தார். அதனால் 'கொட்டையூர்க் காரர்' என்றே அர்த்தம் தருகிற 'ஏரண்டகர்' என்ற பெயரை அவருக்கு ஜனங்கள் வைத்து விட்டார்கள். பிற்காலத்தில் அந்தப் பெயர் அவருக்கு இன்னொரு விதத்திலும் பொருந்திவிட்டது. ஆமணக்கு எப்படித் தன்னையே பிழிந்து கொண்டு எண்ணெய்யாகி ஜனங்களுக்கு உபகரிக்கிறதோ அப்படித் தன்னையே லோகோபகாரமாக இந்த ஏரண்டக ரிஷியும் தியாகம் செய்துகொண்டார். அந்தக் கதையைச் சொல்லத்தான் ஆரம்பித்தேன். உயிர்த் தியாகிகள், Martyrs என்று ஏதேதோ சொல்கிறார்களே, அந்தத் தத்வம் ஸமீப காலத்து தேச பக்தியில்தான் தோன்றியதென்றில்லை; ததீசியிலிருந்து எத்தனையோ மஹரிஷிகள்கூட ஆதியிலிருந்து ஜன ஸமூகத்தின் க்ஷேமத்துக்காக உயிரையே கொடுத்திருக்கிறார்கள் என்பதற்கு உதாரணம் காட்ட நினைத்துத்தான் ஏரண்டகர் கதை ஆரம்பித்தேன்.

காவேரி தடம் மாறியது

அவர் இருந்த காலத்தில் காவேரி தமிழ் நாட்டுப் பக்கமாகப் பாயவே இல்லை. கொடகில் உற்பத்தியாகிற காவேரி அப்போது வேறே ஏதோ வழியில் ஓடி, கொஞ்சம் தூரத்திலேயே 'அரபியன் ஸீ' என்கிற மேற்கு ஸமுத்திரத்தில் விழுந்து கொண்டிருந்ததாம். தலைக்காவேரி, மெர்க்காராவில் எவ்வளவோ மழை பெய்த போதிலும்

Koviloor Digital Library

காவேரிப் பிரவாஹம் விஸ்தாரமாக ஓடி உலகத்துக்கு விசேஷமாகப் பிரயோஜனப்படாமல் சிற்றாறாக ஓடி வீணாக மேற்கு ஸமுத்திரத்தில் விழுந்து வந்ததாம்.

அந்த ஸமயத்தில் சோழ தேசத்தை ஆண்டு கொண்டிருந்த ராஜா, "அடடா, அகஸ்தியர் கொண்டு வந்து விட்டிருக்கும் இந்தப் புண்ய தீர்த்தம் இன்னும் எவ்வளவோ பெரிசாக ஓடி, இன்னும் எத்தனையோ ஜனங்களுக்கு உபயோகமாக முடியுமே! இந்தச் சோணாட்டில் ஜீவநதி எதுவுமே இல்லையே! நம்முடைய சீமைக்குக் காவேரி பாயும்படி பண்ணிவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்று நினைத்தார்.

உடனே தலைக்காவேரிக்குப் போய் அங்கே தபஸ் பண்ணிக் கொண்டிருந்த அகஸ்திய மஹர்ஷிக்கு நமஸ்காரம் பண்ணினார். பூர்வத்தில் அகஸ்தியருக்குப் பத்தினியாக இருந்த லோபாமுத்திரையைத்தான் பிற்பாடு அவர் காவேரியாகக் கமண்டலத்தில் கொண்டு வந்திருந்தார். அந்தக் கமண்டலத்தைப் பிள்ளையார் காக்காய் ரூபத்திலே வந்து கவிழ்த்துவிட்டு, காவேரியை நதியாக ஓடும்படிச் செய்திருந்தார். நதி என்றால் அது ஏதோ அசேதன ஜலப்பிரவாஹமில்லை. அது ஒரு தேவதா ஸ்வரூபமே. காவேரி தேவி பதியின் மனஸை அறிந்தே அவரை விட்டு ரொம்ப தூரம் ஓடிவிடக் கூடாதென்று தான் தன் கதியை ஒருவிதமாக அமைத்துக் கொண்டு சிற்றாறாக இருந்தாள்.

அகஸ்தியரைப் பிரார்த்தித்தால் அவர் கருணை கொண்டு காவேரியைச் சோழ மண்டலத்துக்கு அனுப்பி வைப்பார் என்று ராஜா நினைத்தார். அதாவது அகஸ்தியர் லோகோபகாரமாக அவள் நீளக்க ஓடட்டும் என்று நினைத்து விட்டால் அவளும் அவர் மனஸ் பிரகாரமே தன் போக்கை மாற்றிக் கொண்டு விடுவாள் என்று தெரிந்து

Koviloor Digital Library

வைத்துக் கொண்டிருந்தார். அதனால் அகஸ்தியரிடம் போய்ப் பிரார்த்தித்தார். அவருக்குப் பணிவிடை செய்து, அதனால் அவர் மனஸ் குளிர்ந்திருந்தபோது, "ஒரு வரம் தரவேண்டும்" என்று யாசித்தார். "காவேரி விஸ்தாரமாகப் பாய்ந்தால் எத்தனையோ வறண்ட சீமைகள் பச்சுப் பச்சென்றாகும். எத்தனையோ ஜனங்களுக்குக் குடிநீரும், பயிருக்கு நீரும் கிடைக்கும். இதற்கெல்லாம் மேலாக அவள் தெய்வத் தன்மை உடையவளாதலால் அவள் தன்னில் ஸ்நானம் செய்கிறவர்களின் பாபங்களைப் போக்குவாள். அவளுடைய கரையைத் தொட்டுக்கொண்டு அநேக புண்ய க்ஷேத்திரங்கள் உண்டாகி ஜனங்களுக்கு ஈச்வர க்ருபையை வாங்கிக் கொடுக்கும்" என்றெல்லாம் விஜ்ஞாபித்துக் கொண்டு, "ஆகவே காவேரி பெரிசாகப் பாய வரம் தரவேண்டும்" என்று முடித்தார்.

மஹா பதிவ்ரதையான லோபாமுத்ரையிடம் அகஸ்தியருக்கு இருந்த அன்பு அளவில்லாதது. அதனால் தான் அவர் அவள் அந்த சரீரத்தை விட்டுத் தீர்த்த ரூபம் எடுத்த பிறகும் தம்மை விட்டுப் போகாமல் கமண்டலத்தில் அடைத்து வைத்திருந்தார். அவளால் லோகத்துக்குக் கிடைக்கக் கூடிய பிரயோஜனம் வீணாகப் போகக் கூடாதென்றே பிள்ளையார் காக்காயாக வந்து அதைக் கவிழ்த்து விட்டது. ஆனாலும் பதிக்குத் தன்னிடமிருந்த பிரியத்தை அவள் அறிந்திருந்ததால் அவளோ அவரை விட்டு அதிக தூரம் ஓடாமல் சிறிய நதியாகவே ஓடினாள்.

இப்போது சோழ நாட்டு அரசர் வந்து அகஸ்தியரை ரொம்பவும் பய பக்தியுடன் வேண்டிக் கொண்டவுடன் அவருக்கு மனஸ் இரங்கி விட்டது. அவர் ஸ்வபாவமாகவே கருணை நிறைந்தவர்தான். என்றாலும் என்னமோ நடுவே பத்தினிப் பாசம் அவரைக் கொஞ்சம் இழுத்து விட்டது. இப்போது ராஜா பணிவோடு எடுத்துச் சொன்னதும்

Koviloor Digital Library

லோகோபகாரமாக எவ்வளவோ செய்யக் கூடிய காவேரியைத் தாம் ஸ்வய பாசத்தால் தடுத்து வைப்பது ஸரியில்லை என்று புரிந்து கொண்டார். அவளை மனஸாரத் தியாகம் செய்தார். "நீ இவளை அழைத்துக் கொண்டு போகலாம்" என்று வரம் தந்தார்.

பகீரதனின் பின்னால் கங்கை போனமாதிரி சோழ ராஜாவுக்குப் பின்னால் காவேரி போனாள் — அதாவது நம்முடைய தமிழ் நாட்டுக்கு வந்து சோழ மண்டலத்தில் விசாலமாகப் பாய்ந்தாள்.

காவேரி இல்லாத சோழ தேசத்தை இப்போது நம்மால் கல்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. அப்படி இந்தச் சீமையின் மஹா பெரிய கலாசாரத்துக்கே காரணமானவள் இங்கே வந்து சேர்ந்த கதை இதுதான்.

நதிகளும் கலாசாரமும்

நதிகளால்தான் 'அக்ரிகல்ச்சர்' மட்டுமில்லாமல் மக்களின் 'கல்ச்ச'ரும் உருவாகியிருக்கிறது. ஜீவ நதிகள் அவை பாட்டுக்கு ஓடிக்கொண்டே இருப்பதில் அந்தப் பிராந்தியத்திலுள்ளவர்களுக்கு ஸம்ருத்தியாகப் பயிர்ச் செழிப்பு ஏற்பட்டு விடுகிறது. ஆஹாரத்தைப் பற்றிக் கவலையில்லை. நதி தீரம், தோப்பு, தென்னஞ் சோலை என்று பரந்த ஆகாசத்தின் கீழே வாழ்கிறபோது நிச்சிந்தையான மனஸில் உயர்ந்த எண்ணங்கள் உண்டாகி உயர்ந்த கலா சாரங்களாக உருவெடுக்கின்றன. உலகத்தில் எந்தப் பெரிய நாகரிகத்தைப் பார்த்தாலும் நதி ஸம்பந்த முள்ளதாகவே இருக்கிறது. பழைய காலத்தில் இப்போது போல ஷிப்பிலும், குட்ஸிலும் தானியங்களை வரவழைத்துக் கொள்ள முடியாமலிருந்ததால் நதிப் பிரதேசங்களிலிருந்தவர்கள் தவிர மற்றவற்றிலிருந்தவர்களுக்கு 'அன்ன விசாரம் அதுவே விசாரம்' என்றாகி அப்படிப் பட்டவர்கள் கலாசாரத்தில்

Koviloor Digital Library

அபிவிருத்தியடைய முடியாமலே இருந்திருக்கிறது. எகிப்திலிருந்த புராதனமான பெரிய கலாசாரத்துக்கு 'நைல் நதி நாகரிகம்' என்றே பெயர் சொல்கிறார்கள். மெஸபொடேமியாவில் இருந்த நாகரிகத்திற்கு யூஃப்ரடிஸ்- டைக்ரிஸ் என்ற நதிகளை வைத்தே பெயர் வைத்திருக்கிறது: ரோம ஸாம்ராஜ்யத்தின் கலாசாரத்துக்கு அங்கே ஓடும் டைபரைப் பிணைத்துப் பெயர் கொடுத்திருக்கிறது. எத்தனையோ பெரிசான சீனாவிலும் ஆதி கலாசாரம் எது என்று பார்த்தால் அது யாங்ட்ஸி-கியாங் நதியை ஒட்டி எழுந்ததாகவே இருக்கும். நம் தேசத்திலும் ஸிந்து நதி நாகரிகம், கங்கை நதி நாகரிகம் என்றெல்லாம் ஆறுகளை வைத்தே உயர்ந்த கலாசாரம் உண்டாகியிருப்பதைக் காட்டு கிறார்கள். River Valley Civilisations என்றே பொதுவில் சொல்கிறார்கள்.

அப்படி இந்தத் தமிழ் தேசத்தில் சோழ நாட்டுக்கு என்று ஏற்பட்டிருக்கிற அலாதியான, refined கல்ச்சருக்குக் காரணமானவள் காவேரி.

காவேரி தொடர்புள்ள மூன்று ரிஷிகள்; மூன்றாமவர் ஏரண்டகர்

காவேரியோடு ஸம்பந்தப்பட்டவர்களாக மூன்று ரிஷிகள் இருக்கிறார்கள். முதலாவதாக அவளுடைய பிதாவான கவேர மஹர்ஷி. அவர் ராஜரிஷி. கவேர புத்ரி என்பதால் தான் அவளுக்குக் காவேரி என்றே பெயர். 'காவேரி' என்பதைத் தமிழில் 'காவிரி' என்கிறார்கள். காக்காய் விரித்ததால் காவிரி, பாயுமிடமெல்லாம் 'கா' என்னும் சோலைகளை விரித்துக் கொண்டே போவதால் 'காவிரி' என்றெல்லாம் விளக்கம் சொல்கிறார்கள்.... பிதா கவேரர் அவளை வீட்டை விட்டு வெளிவராமல் கன்யகா தர்மப்படி காப்பாற்றி வந்தார்.

Koviloor Digital Library

அடுத்த ரிஷி அகஸ்திய மஹர்ஷி. இவர் காவேரியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, 'படிதாண்டாப் பத்தினி' என்பதற்கு ஒரு படி மேலாக அவளைத் தம்முடைய கமண்டலுவை விட்டு வெளியே வர முடியாதபடி பிரேமையினால் அடைத்து வைத்திருந்தார். ஆனால் இவள் கொடகு, கன்னட தேசம், தமிழ் தேசம் மூன்றின் ஜனங்களுக்கும் தாயாக அவர்களுடைய உடம்புக்கும் உள்ளத்துக்கும் தன் தீர்த்தத்தையே க்ஷீரமாக ஊட்ட வேண்டுமென்பதுதான் ஈச்வர ஸங்கல்பம். அந்த ஸங்கல்பம் காரியமாகணுமென்றுதான் பிள்ளையார் வந்து கமண்டலுவைத் தட்டிவிட்டார். அப்படியும் அவள் ஏதோ சின்ன நதியாக ஓடி முடிந்துபோன போதுதான் சோழ ராஜா அவளை வழி திருப்பிவிட்டுக் கொடகிலிருந்து கர்நாடகம், அப்புறம் தமிழ்நாட்டில் முதலில் கொங்குநாடு (கோயம்புத்தூர், சேலம்) அப்புறம் சோணாடு (திருச்சி, தஞ்சாவூர்) என்று பாய வைத்தார்.

தஞ்சை ஜில்லாவுக்கு அவள் வந்த பின்னும் ஒரு கட்டத்தில் அவள் முடிந்து போகாமல் அவளை விஸ்தரித்துவிட வேண்டியிருந்தது; அப்படி விஸ்தாரமாக ஓடப் பண்ணினவர்தான் மூன்றாவது ரிஷி. அவர்தான் ஏரண்டகர். முதல் இரண்டு ரிஷிகள் ஒரு ஸாதாரணப் பெண்ணுக்கான தர்மப்படிக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த காவேரியை இவர்தான் தெய்வத் தன்மை பொருந்தின மாதா என்று புரிந்து கொண்டு அவள் அநுக்ரகம் இன்னும் பல ஊர்களுக்குக் கிடைக்கும்படியாக நீட்டிவிட்டார்.

அகஸ்தியரிடமிருந்து சோழ ராஜா வரம் பெற்றுக் காவேரியை நம் சீமைக்குக் கொண்டு வந்ததை 'மணிமேகலை'யில் சொல்லியிருக்கிறது. அந்த ராஜாவின் பேர் காந்தமன் என்று அதில் வருகிறது:

Koviloor Digital Library

செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையில் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணக் கொழுகிய சம்பாபதி அயல்
பொங்குநீர்ப் பரப்போடு பொருந்தித் தோன்ற...

சம்பாபதி என்பதுதான் காவேரிப் பூம்பட்டினம். காவேரி அங்கேதான் ஸமுத்திர ராஜனோடு ஸங்கமிக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும். அதனாலேயே அதற்கு அப்படி (காவேரிப் பூம்பட்டினம் என்று) பெயர். காவேரி அங்கே வருவதற்கு முற்காலத்தில் அந்த சோழ ராஜதானிக்கு சம்பாபதி என்றே பெயர். புகார் என்றும் ஒரு பெயர் உண்டு. 'பூம்புகார்' என்று சிறப்பித்துச் சொல்வதுண்டு.

நடுவிலே வந்த ஆபத்து

இப்போதைய தஞ்சாவூர் ஜில்லாவுக்குச் சோழ ராஜாவின் பின்னால் வந்த காவேரி முதலில் சம்பாபதி வரைக்கும் பாய்ந்து ஸமுத்திரத்தில் விழவில்லை. இது சீர் காழிக்குத் தென்கிழக்கில் பத்து மைலில் உள்ள இடம். முதலில் காவேரி அவ்வளவு தூரம் வரவில்லை. கும்பகோணத்துக்குக் கிட்டத்தில் கொட்டையூர் என்று இருப்பதாகச் சொன்னேனே, அதற்கும் இன்னும் கொஞ்சம் தள்ளி அதாவது கும்பகோணத்திலிருந்து நாலு மைல் மேற்கே உள்ள ஒரு இடத்தோடு காவேரி முடிந்து விட்டது.

ஸாதாரணமாக ஒரு நதி என்றால் அது ஸமுத்திரத்தில் விழுந்துதான் முடியும்; அல்லது வேறே ஒரு மஹாநதியில் கலந்துவிடும் - யமுனை கங்கையில் கலக்கிறாற்போல. கும்பகோணத்துக்கு மேற்கே

Koviloor Digital Library

ஸமுத்திரமோ வேறே நதியோ ஏது? பின்னே, காவேரி என்ன ஆச்சு என்றால், அந்த இடத்தில் பெரிசாக ஒரு பிலம் இருந்தது; அதாவது பூமிக்கடியில் குகை மாதிரி, 'டன்னல்' மாதிரி, அதுபாட்டுக்குப் பெரிசாக ஒரு பள்ளம் போய்க் கொண்டேயிருந்தது. அந்தப் பள்ளம் அழகாக பிரதக்ஷிண ரீதியில் சுழித்து வெட்டினது போல பூமியைக் குடைந்து கொண்டு போயிருந்தது. இந்தப் பள்ளத்தின் பக்கம் காவேரி வந்ததோ இல்லையோ, அப்படியே அந்தப் பிரதக்ஷிணக் குடைசலில் வலம் வருகிறது போல சுழித்துக் கொண்டு உள்ளே ஓடி, அகாதமான பிலத்துக்குள் மறைந்தே போய் விட்டது. அதனால் அந்த ஊருக்கே திருவலஞ்சுழி என்று பேர் ஏற்பட்டு விட்டது.

"சோழ சீமையிலே இன்னம் நாற்பது ஐம்பது மைல் காவேரி ஓடி, வளம் உண்டாக்கி விட்டு ஸமுத்ரத்தில் விழும் என்று நினைத்தால், இப்படி நடுப்பறவே மறைந்து போய் விட்டதே" என்று ராஜாவுக்குத் துக்கம் துக்கமாக வந்தது.

இதிலே இன்னொரு சமாசாரம் என்னவென்றால், இந்த மாதிரி திடுதிப்பென்று ஒரு நதி பள்ளத்தில் விழுந்து மறைந்து போகாமல், ஸம பூமியிலேயே கொஞ்சம் வித்யாஸமாயுள்ள ஏற்ற-இறக்கங்களை அநுசரித்து ஓடி, இயற்கையாக ஸமுத்திரத்திலே விழும்போதுதான், கடைசியில் ஸங்கமிக்கின்ற இடத்துக்குக் கொஞ்சம் முன்னாலிருந்து ஆரம்பித்து, அதுவரைக்கும் ஆறு அடித்துக் கொண்டு வந்திருக்கும் பூஸாரமெல்லாம் அதைச் சுற்றிப் பரவி 'டெல்டா' என்று 'ஃபார்ம்' ஆகி, ரொம்பவும் வளப்பமான பகுதி உண்டாகும். இப்படியில்லாமல், ஸாரமெல்லாம் வீணாகிப் பள்ளத்துக்குள் போகிறதே என்று ராஜாவுக்கு வியஸனமாய் விட்டது.

நெய்வேலியில் லிக்னைட் எடுப்பதற்குத் தோண்டிய போது முதலில் பூமிக்கடியிலிருந்து எத்தனையோ கோடி காலன் ஜலம் பம்ப் பண்ண வேண்டியிருந்ததைப்

Koviloor Digital Library

பார்த்தோமில்லையா? சில 'கோல் மைன்'களில் [நிலக்கரிச் சுரங்கங்களில்] பூமிக்கடியிலிருந்து ஜலம் குபீரென்று வெள்ளமாக வந்து பொருட் சேதம், உயிர்ச் சேதம் உண்டாக்குவதாகவும் அவ்வப்போது 'ந்யூஸ்' பார்க்கிறோம். இதற்கான பல காரணங்களில் ஒன்று இம்மாதிரி இடங்களில் பூர்வத்திலே ஏதாவது ஆறு பூமிக்குள்ளே போய்ப் புகுந்து கொண்டிருப்பதாகும். மேலே பூமி மட்டத்திலே ஆறே இல்லாமல் வற்றிப்போயும் கூட, அடியிலே மட்டும் ஆதியில் தேங்கின ஜலம் அப்படியே இருப்பதுண்டு. அப்புறம் அந்தப் பிரதேசத்தில் எதற்காகவாவது வெட்டி, கொத்தி, தோண்டும்போது அது பொங்கிவந்து பெரிய உத்பாதத்தை ஏற்படுத்துகிறது.

"அருள் தாயாகத் தமிழ் தேசத்துக்கு வந்திருக்கிற காவேரியின் ஸாரம் வீணாகப்படாது; பிற்காலத்தில் அவள் உத்பாத ஹேதுவாகிக் கஷ்டத்தைத் தருபவளாக ஆகிவிடக்கூடாது. இதற்கு என்ன செய்யலாம்? பிலத் துவாரத்துக்குள் ஓடி அந்தர்தானமாகி விட்டவளை எப்படி வெளியிலே கொண்டு வந்து, ஸமுத்ரத்துக்குக் கொண்டு சேர்ப்பது?" என்று ராஜா நிரம்பவும் விசாரமாக யோஜித் தார். அதே யோஜனையாக உலாத்திக் கொண்டிருந்தார்.

அப்போது பக்கத்தில் கொட்டையூரில் ஏரண்டக ரிஷி தபஸ் பண்ணிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். அவருக்கு ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, பிலத்துக்குள் போய்விட்ட காவேரி வெளியிலே வருவதற்கு அவர் அநுக்ரஹம் செய்ய வேண்டும், உபாயம் சொல்ல வேண்டும் என்று பிரார்த்தனை பண்ணினார்.

மஹரிஷி கண்ட உபாயம்

மஹரிஷி கொஞ்சம் ஆலோசனை செய்ததும் அவருக்கு உபாயம் புரிந்தது. 'லோகம் பண்ணின ஏதோ

Koviloor Digital Library

தப்புக்குத் தண்டனையாகத்தான், இப்படி, அருள்தாயாக இருக்கப்பட்டவளை அருள் வடிவமான பரமாத்மா பள்ளத்தில் மறையப் பண்ணியிருக்கிறார். அந்தத் தப்புக்குப் பிராயச்சித்தமாக ஒரு பெரிய தியாகம் பண்ணினால்தான் அவள் வெளியில் வரும்படியாக ஈச்வரன் அநுக்ரஹிப்பார்' என்று ஏரண்டகருக்குத் தெரிந்தது.

ராஜானம் ராஷ்ட்ரஜம் பாபம்: குடிகள் பண்ணும் பாபமெல்லாம் அவர்களை நல்வழிப்படுத்தத் தவறிய ராஜாவிடம் போய்ச் சேர்ந்துவிடும். ஆனதால் ஜன ஸமூஹத்தின் குற்றத்தினால் ஒரு விபரீதம் உண்டாகும் போது அதற்குத் தியாக ரூபமாகப் பரிஹாரம் பண்ண வேண்டுமென்றால் அரசனுடைய உயிரைப் பலிகொடுத்தால் கஷ்டம் நீங்கி நல்லது நடக்கும். அல்லது ஒரு ஞானியை பலி தரலாம். ஞானியின் ஹிருதயத்திலிருந்து தன்னியல்பாக அதுபாட்டுக்கு ஸகல ஜனங்கள் மீதும் கருணை ஊறிக் கொண்டிருக்கும். ஸர்வபூத அந்தராத்மாவான ஈச்வரனை அந்த ஞானி கண்டுகொண்டவனாகையால் அவனுக்குள் ஜன ஸமூஹம் பூரா அடக்கம் என்று வைத்துக் கொள்ளலாம். ஆகையால் இப்படிப்பட்ட ஒரு ஞானியை பலி தந்தாலும் மக்கள் குலத்துக்குப் பெரிதாக ஒரு நன்மையை ஸாதித்துத் தர முடியும்.

"என்ன உபாயம்?" என்று கேட்ட ராஜாவிடம் இதைச் சொன்னார் ஏரண்டகர்.

அதைக் கேட்டவுடன் ராஜா, "ஆஹா, அப்படியானால் என் பிரஜைகளுக்காக, இனிமேலே பிரளய பரியந்தம் வரப் போகிற அவர்களுடைய ஸந்ததிகளின் நன்மைக்காக இதோ நானே என் சிரஸைக் கொடுக்கிறேன். கொடகிலிருந்து காவேரியை நான் இவ்வளவு தூரம் கொண்டு வந்தது பெரிசில்லை. இப்போது அவளை லோகோபகாரமாக வெளியில் வரப் பண்ணுவதற்காகப் பிராணத் தியாகம்

Koviloor Digital Library

செய்யும்படியான ஒரு பாக்யம் எனக்கு லபித்திருக்கிறதே, இதுதான் பெரிசு'' என்று ஸந்தோஷத்தோடு பலி கொடுத்துக் கொள்ளப் புறப்பட்டார்.

'ராஜ போகம்' என்றே சொல்வது போல் அநேக ஸௌக்யங்களை அநுபவித்தே பழக்கப்பட்ட சரீரத்தை அவர் இப்படி த்ருணமாத்ரமாய் நினைத்துத் தியாகம் செய்யக் கிளம்பியபோது ஞானியான ஏரண்டகர் சும்மா இருப்பாரா?

"அப்பா! நாங்கள் சரீர ஸுகத்தை அறவே விட்டு, அதைப் பிராரப்த வசத்தால் ஏற்பட்ட ஒரு சுமை என்றே நினைக்க வேண்டியவர்கள். ஆகையால் லோக க்ஷேமார்த்தமாக ஒரு சரீரம் பலியாக வேண்டுமென்றால் அதற்கு முதல் பாத்யதை எங்களுக்குத்தான். நான்தான் பலியாவேன்'' என்றார்.

ஆதாயங்கள் கேட்பதில்தான் "எனக்கு முதல் பாத்யதை, எனக்கு முதல் பாத்யதை" என்று 'ப்ரயாரிடி' கேட்பது பொது வழக்கம். இங்கேயோ சோழ ராஜாவும் மஹர்ஷியும் தங்கள் தேஹத்தையே பரித்யாகம் பண்ணுவதில் அவரவரும் 'ப்ரயாரிடி' கொண்டாடிக் கொண்டார்கள்.

"ஜனங்களின் தோஷம் அவர்களைத் திருத்தாத ராஜாவைத்தானே சேர வேண்டும்?'' என்று உரிமை — செத்துப் போவதற்கு உரிமை! — கேட்டார் ராஜா.

ரிஷியும் விடவில்லை. "உனக்கு ஜனங்களுக்காகப் பிராணத் தியாகம் செய்யும் வாய்ப்பு யுத்தத்திலும் கிடைக்கிறது. நான் யுத்தம் பண்ணுவதற்கு இடமில்லை. ஆனதனால் என்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிற இந்த ஸந்தர்ப்பத்தை நழுவ விடமாட்டேன். நீ வயதிலும் என்னை விடச் சின்னவன். திடீரென்று நீ உயிரை விட்டு விட்டால், அடுத்து ராஜ்ய பாலனத்துக்கு யாரும் பயிற்சி

Koviloor Digital Library

பெறவில்லையாதலால் நாடே கஷ்டத்துக்கு ஆளாகும். ஜனங்களின் கஷ்டத்தைத் தீர்ப்பதாக நினைத்து நீ செய்கிற தியாகமே அவர்களை இதைவிடப் பெரிய அராஜகக் கஷ்டத்துக்கு ஆளாக்கிவிடும். உபாயம் சொன்னவன் நான் தானே? சொல்லிவிட்டு, அதைக் காரியத்தில் பண்ணிக் காட்டவும் எனக்கு இடம் இருக்கும்போது நான் சும்மா இருந்து கொண்டு உன்னைப் பலியாகச் செய்தால் எனக்கு ராஜஹத்தி தோஷம் உண்டாகிவிடும்'' என்றெல்லாம் சொல்லிவிட்டு, அவனுடைய பதிலுக்குக் கூடக் காத்திராமல், கிடுகிடுவென்று அந்தப் பள்ளத்துக்கு வந்தார்.

மஹா வேகத்தோடு அதற்குள்ளே பாய்கிற சுழலிலே தம் சிரஸைப் பலி கொடுத்து விட்டார். அதாவது அதில் அப்படியே தலை குப்புற விழுந்து விட்டார்.

நல்லதைச் சொல்லி ஆபத்து!

பக்கத்திலேயிருந்து இதைப் பார்த்துக் கொண்டே யிருந்த ஒருவர் அப்போது ஒரு ச்லோகம் சொன்னதாக இருக்கிறது:

ஹிதம் ந வாச்யம் அஹிதம் ந வாச்யம்
ஹிதாஹிதே நைவ வதேத் கதாசித்
ஹிதஸ்ய வக்தாபி விபத்திமேதி
ஏரண்டகோ நாம பிலம் ப்ரவிஷ்ட:

“யாருக்கும் நல்லதையும் சொல்ல வேண்டாம்; கெட்டதையும் சொல்ல வேண்டாம். ஒருபோதும் நல்லது கெட்டதுகளை எடுத்துச் சொல்லவே வேண்டாம். நல்லதைச் சொன்னவனும்கூட ஆபத்தை அடைகிறான். உதாரணமாக, ஏரண்டகர் என்று பேர் படைத்தவர் பிலத்தில் பிரவேசித்து விட்டார்'' என்பது ச்லோகத்தின் அர்த்தம்.

Koviloor Digital Library

இதிலும் கொஞ்சம் நியாயமில்லாமல் போகவில்லை. லோகத்தில் எத்தனையோ நடக்கும். ஈச்வர லீலை, ஜனங்களின் கர்ம கதி எப்படி எப்படியோ இருக்கும். ஆனதால் உலகத்தில் இருக்கிற தப்பு, ஸரிகளையே ஒருத்தன் எப்போது பார்த்தாலும் நினைத்துக் கொண்டு அட்வைஸ் பண்ணிக் கொண்டே இருப்பது என்றால் தன் ஆத்மாவைக் கவனித்து உயர்த்திக் கொள்ள முடியாமலே போகும். அதனால் தன் லிமிடேஷனைப் புரிந்து கொண்டு, நம்முடைய அட்வைஸ் எங்கே எடுபடுமோ அங்கே மட்டும் நல்லது பொல்லாதுகளைச் சொல்வதோடு நிறுத்திக் கொள்வதுதான் நம் மாதிரி ஸாமான்ய நிலையில் இருக்கப் பட்டவர்களுக்கு யுக்தமாயிருக்கும். அதுதான் இந்த ச்லோகத்தின் படிப்பினை. நல்லதைச் சொல்லிவிட்டு அது நடைமுறை ஆவதற்கு நாமே தியாகம் செய்ய நேரிடலாமென்னும்போது, அப்படிப்பட்ட தியாகத்துக்குப் பரிபக்குவப்படாதவர்கள் ஒன்றும் சொல்லாமல் வாயை மூடிக் கொண்டிருப்பதே ச்லாக்யம் என்ற நீதியை இதிலிருந்து நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனாலும் இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் தியாகத்துக்கு நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற லக்ஷ்யத்தையும் வைத்துக்கொள்ள வேண்டும்.

மஹான்கள் விஷயம் வேறே. அவர்கள் ஆத்ம பரிபாகம் அடைந்து விட்டார்கள். ஈச்வரனுடைய லோக நாடகம் என்ன, ஜனங்களின் கர்ம கதி என்ன என்றெல்லாம் தெரிந்து கொண்ட அவர்கள் எத்தனை விபரீதம் நடந்தாலும் "அவன் இஷ்டப்படி" என்று சரணாகதி பண்ணிக் கிடந்தாலும் கிடப்பார்கள்; அல்லது தங்களுடைய பக்தி வேகத்தால் அவனையே நாடகத்தை மாற்றும்படிப் பண்ணினாலும் பண்ணுவார்கள். அவனை ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் மாதிரி கெடுபிடி பண்ணி வேலைகூட வாங்குவார்கள்; அல்லது தங்கள் தபஸை

Koviloor Digital Library

யெல்லாம் த்யாகம் பண்ணி தத்-த்வாரா [அதன் மூலம்] ஜன ஸமூகத்தின் பாப கர்மாவை 'ந்யூட்ரலைஸ்' பண்ணி ஒரு பெரிய மங்களம் ஏற்படும்படியாகவும் பண்ணுவார்கள்.

உத்கிருஷ்டரான ஏரண்டக ரிஷி லோக ஹிதம் சொன்னதற்காக இப்படி அநியாயமாக ஜீவனைப் பலி தர வேண்டியிருக்கிறதே என்பதைப் பார்த்து எவரோ ஒருத்தர் மனஸ் நொந்து, யாரும் எவருக்கும் நல்லதையும் சொல்ல வேண்டாம், கெட்டதையும் சொல்ல வேண்டாம் என்று ச்லோகம் பண்ணிவிட்டார். ஏரண்டகரேதான் இந்த ச்லோகத்தைச் சொல்லிக் கொண்டு பிலத்துக்குள் இறங்கினார் என்றும் சிலர் சொல்கிறார்கள். அவருக்கும் அந்த ஸமயத்தில் கொஞ்சம் மனஸ் கலங்கிக் கண்ணி லிருந்து ஜலம் வந்து, இப்படிச் சொன்னார் என்கிறார்கள். இப்படிச் சொல்வது ஸரியில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. மஹான்கள் ஒரு மஹாத் தியாகம் செய்யும் போது நல்ல மன நிறைவோடு லோகத்தையெல்லாம் வாழ்த்திக் கொண்டுதான் போவார்களே தவிர, தன் ஒருத்தனுக்கு சிரமம் உண்டாயிற்றே என்று நினைத்துத் தியாகத்துக்காகப் பச்சாதாபப் பட்டார்கள் என்பது அந்தத் தியாகத்தையும் வியர்த்தமாக்கி, மஹானையும் வெற்று ஆளாக ஆக்கி விடுவதாகும்.

எனக்கு என்ன தோன்றுகிறதென்றால், அவர் கண்களில் ஜலம் வந்திருந்தால் அது ஆனந்த பாஷ்பமாகத் தான் இருந்திருக்கும் என்றே தோன்றுகிறது. "என்றைக்கோ ஒரு நாள் இந்தச் சரீரம் போக வேண்டியதுதான்; அது ஏதோ வியாதி, வக்கையில் போகாமல் லோகோபகாரமாக நம்முடைய மனப் பூர்வமாகக் காணிக்கை தரப்பட்டுப் போகிறதே" என்று அவர் ஸந்துஷ்டிதான் அடைந்திருப் பார். விளக்கெண்ணெய்ச் சாமியாராகையால் ஆமணக்குக் கொட்டை தன்னைப் பிழிந்து கொண்டு ஜனங்களுக்கு உபகரிப்பது போலவேதான் அவரும் இருந்திருப்பார்.

Koviloor Digital Library

கீதை, பைபிள், குறள் போதனை; ஏரண்டகரின் உத்தம உதாரணம்

கீதையிலே யோகிகளில் உச்சநிலைக்குப்போன 'பரமயோகி' எவன் என்று பகவான் ஒரு இடத்தில்* சொல்லியிருக்கிறார். மூக்கைப் பிடித்தவன், குகையிலே அடைத்துக் கொண்டு கிடப்பவன், மாஸக் கணக்காய் பட்டினி கிடப்பவன், 'ஸஹஸ்ராரம் அது இது' என்று என்னவோ சொல்கிறார்களே அந்த இடத்துக்குக் குண்டலிநீ சக்தியைத் . தூக்கிக் கொண்டு போனவன் ஆகியவர்களைப் 'பரம யோகி' என்று சொல்லவில்லை. வேறே என்ன லக்ஷணம் சொல்கிறார்?

ஆத்மௌபம்யேந ஸர்வத்ர ஸமம் பச்யதி யோ (அ)ர்ஜுந |
ஸுகம் வா யதி வா து:கம் ஸ யோகீ பரமோ மத: ||

"அர்ஜுனா! எவன் ஸுகமாயினும் துக்கமாயினும் எங்கேயும் தன்னையே உபமானமாகக் கொண்டு ஸமமாகப் பார்க்கிறானோ, அவனே பரம யோகி என்பது என் துணிபு" என்று சொல்கிறார்.

"ஆத்மௌபம்யேந" அதாவது, "தன்னையே உபமான மாகக் கொண்டு" என்பதைத்தான் ஓரளவுக்கு பைபிளின் "Do unto others as thou wilt be done!" என்ற Golden Rule சொல்கிறது. நமக்குப் பிறத்தியார் எப்படிச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறோமோ, அப்படியே நாம் பிறத்தியாருக்குச் செய்ய வேண்டும்.

யோகத்தின் கிட்டேயே போகாத தற்கால நிலையில் நாம் என்ன நினைக்கிறோம்? 'நமக்கு வருகிற கஷ்டத்தைப் பிறத்தியான் போக்கணும். நமக்குத் தரித்ரமா, பிறத்தியான் நமக்கு அள்ளிக் கொடுக்கணும். நமக்கு வியாதியா,

Koviloor Digital Library

பிறத்தியான் சுச்ரூஷை பண்ணணும். நமக்கு ஒரு காரியம் பாரமா இருக்கா, அதைப் பிறத்தியான் தலையில் கட்டிவிட வேண்டும்' — இப்படித்தானே நினைக்கிறோம்? இதை அப்படியே மாற்றி நம் இடத்தில் பிறத்தியானை வைத்து, அவனுக்கு எந்த விதத்தில் கஷ்டமானாலும் அதை நாம் போக்கணும் என்று ஆக்கிக் கொண்டு விட்டால் அதுதான் 'ஆத்மௌபம்யம்'. இன்னொருத்தனைக் கஷ்டப்படுத்தி யாவது நாம் ஸந்தோஷம் அடையணும் என்று இப்போது நினைப்பதில், 'இன்னொருத்தன்', 'நாம்' என்கிற இரண்டு பேரின் இடத்தையும் 'இண்டர்சேஞ்ஜ்' பண்ணி விட்டால், பரஸ்பரம் இடம் மாற்றிவிட்டால் அதுதான் 'ஆத்மௌபம்யம்'. அன்பு என்ற ஒன்றை வளர்த்துக் கொண்டுவிட்டால் இந்த ஆத்மௌபம்யம் தன்னால் ஸித்தித்துவிடும் என்று திருக்குறளிலிருந்து தெரிகிறது. விச்வ வியாபகமான அன்பு இல்லாமல் நம்மிடம் மாத்திரமே நாம் அன்பு பாராட்டிக் கொண்டிருக்கும்போது பிறத்தியானுக்கு ஸௌக்கியம் தருகிற எல்லாமும் நம்மிடம் வந்துவிட வேண்டுமென்று நினைக்கிறோம்; உத்தமமான அன்புக் குணம் நமக்கு வந்து விட்டாலோ இது அப்படியே மாறி, பிறத்தியாருக்கு நம்முடைய ஸகலத்தையும் கொடுத்துவிட வேண்டுமென்று தோன்றிவிடும். ஸகலத்தையும் என்பதற்கு "நம்முடைய எலும்பையும்" என்று திருவள்ளுவர் சொல்கிறார். அதாவது ததீசி மஹர்ஷி தம்முடைய முதுகெலும்பையும் தேவ கார்யத்துக்காகக் கொடுத்தது போல உயிரையும் தியாகம் செய்வதே அன்புடைமை என்கிறார்:

> அன்பிலார் எல்லாம் தமக்குரியர் – அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு.

ஸுகம், துக்கம் இரண்டையும் ஸமமாகப் பார்க்க வேண்டும் என்று கீதையில் இருப்பதாகச் சொன்னேன்

Koviloor Digital Library

அல்லவா? இதற்கு லோகத்தின் ஸுகம், துக்கம் என்று அர்த்தம் பண்ணிக்கொள்ளாமல் தன்னுடைய ஸ்வய இன்பம், துன்பம் என்று பொருள் எடுத்துக் கொள்ளலாம். லோகத்தின் ஸுக, துக்கங்களை ஸமமாகவே பார்த்து விட்டால் அப்புறம் அதற்குத் துக்கம் உண்டாகும்போது அதனிடத்தில் அருள் பாராட்டி ஸுகத்தை உண்டு பண்ணுவதற்கு இடமே இருக்காதல்லவா? தன்னுடைய ஸுக துக்கங்களை ஒன்றாகக் கருதி, அதாவது தனக்குத் துக்கம் ஏற்படுவதையும் கருதாமல் லோக க்ஷேமத்துக்காகக் காரியம் செய்ய வேண்டும் என்றுதான் பகவான் சொல்லி, அப்படிக் கார்யம் பண்ணுவதை "லோக ஸங்க்ரஹம்" என்கிறார். இந்த லோக ஸங்க்ரஹத்துக்காகவேதான், உலகம் மாயையே என்று நன்றாகக் கண்டுகொண்ட ஞானிகள்கூட, தங்களுக்கென்று ஒரு கர்மாவும் தேவைப்படாவிட்டாலும் கர்மாக்களைப் பண்ணிக் காட்ட வேண்டும் என்றும் விதித்திருக்கிறார்.

ஞான நிலையில் ஸுகம், துக்கம் என்ற இரண்டையும் abstract-ஆக [தனித் தத்வங்களாக]ப் பார்க்கிறபோது இரண்டும் ஒன்றாகத்தான் இருக்கும். ஸுகமும் பொய், துக்கமும் பொய் என்றுதான் இருக்கும். ஆனாலும் அதிலேயே பிரேமையின் நிமித்தமாக லோக த்ருஷ்டி மாதிரி ஒன்றை ஈச்வரன் ஏற்படுத்துகிறபோது, ஸுகம் துக்கம் இரண்டும் தனக்கு ஒட்டவில்லை என்று தெரிகிற போதே, லோகத்தின் ஸுக துக்கங்களைப் பார்த்து அது நல்ல வழியில் ஸுகம் அடையும்போது அதில் ஒரு ஞானியும் ஸந்தோஷப்படுகிற மாதிரியும், அது துக்கம் அடையும்போது அதற்காக அவனும் கருணையில் உருகுகிற மாதிரியும் இருக்கும். இப்படி அது துக்கப்படுகிறபோது அதைப் பரிஹரிப்பதற்காக அவன் தன்னையே தியாகமும் பண்ணிக் கொள்ள முன் வருவான். 'தன்னை' என்று

Koviloor Digital Library

சொல்லும்போது நாம் அவனுடைய சரீரத்தை அர்ப்பணம் பண்ணுவதைச் சொல்கிறோம். ஆனால் அவனுக்கு இந்த சரீரம் நிஜத் 'தான்' இல்லை என்பது தெரியும்!

இப்படி பரமத் தியாகியாக, ஆத்மௌபம்யத்தால் கிருஷ்ண பரமாத்மா சொல்கிற பரமயோகியாகவும் ஆன ஏரண்டகர் திருவலஞ்சுழியில் காவேரியின் பிலத்துச் சுழலில் இறங்கிப் பிராணத் தியாகம் பண்ணினார்.

'பெரும் பள்ள'மும் 'திருவலம்புர'மும்

இவர் இறங்குவதற்குள், முன்னே பிலத்தில் பிரவேசித்த காவேரி அண்டர்-க்ரவுண்டாகவே நாற்பது ஐம்பது மைல் ஓடிவிட்டாள். இவர் இங்கே இறங்கிப் பலியானாரோ இல்லையோ, அந்த க்ஷணமே, அந்த நாற்பது ஐம்பது மைல் தாண்டியுள்ள இடத்தில் பூமிக்கடியிலிருந்து அப்படியே பீச்சிட்டுக் கொண்டு வெளியில் வந்து விட்டாள். மேலே வருவதற்கு அவள் கன வேகமாக வழி பண்ணிக் கொள்ளும்போது முதலில் பெரிசாக ஒரு பள்ளம் உண்டாயிற்று. அதனால் அந்த இடத்துக்கு இப்போதும் 'பெரும் பள்ளம்' என்று ஒரு பேர் இருக்கிறது. ஜனங்கள், "இதென்னடா பள்ளம்? பூகம்பமா என்ன?" என்று பார்த்துக் கொண்டே இருக்கும்போது அதில் அன்டர்-கிரௌண்டாக இருந்த காவேரி கிடுகிடுவென்று நிரம்பி பூமிக்கு வெளியிலே வந்தாள்.

பூமியை அவள் தொடுகிற இடத்தில் லிங்கம் ஒன்று இருந்தது. இந்த லிங்கத்தைப் பூஜை பண்ணித்தான் மஹா விஷ்ணு வலம்புரிச் சங்கு பெற்றார் என்பது கதை. அதனால் அந்த லிங்கத்துக்கு வலம்புரீச்வரர் என்று பெயர். அவரை வலம் புரிந்தே, அதாவது பிரதக்ஷிணம் பண்ணிக் கொண்டே காவேரி மேற்கொண்டு பூமிக்கு மேலாக

Koviloor Digital Library

ஓடினாள். அந்த ஸ்தலத்துக்கு திருவலம்புரம் என்றும் பெயர் இருக்கிறது.

பாடல் பெற்ற ஸ்தலங்கள் மொத்தம் 274. அதில் மூவரும் பாடியவை நாற்பத்து நாலுதான். இந்த நாற்பத்து நாலில் திருவலம்புரமும் ஒன்று.

திருவலஞ்சுழியில் பிலத்துக்கு உள்ளே போன காவேரி திருவலம்புரத்தில் மறுபடி வெளியிலே வந்தாள். அங்கிருந்து தென் கிழக்காக மூன்று மைல் ஓடி சம்பாபதி, புகார் என்றெல்லாம் சொல்லப்படும் ஊரைக் காவேரிப் பூம்பட்டினமாக்கிக் கொண்டு அங்கேயே ஸமுத்திரத்தில் கலந்து விட்டாள்.

ஈசனின் அருள் லீலை

அவளோடு திருவலஞ்சுழியில் உள்ளே போன ஏரண்டகரிஷிக்கு ஸ்வாமி உயிர் கொடுத்து அவளோடேயே திருவலம்புரத்தில் வெளியே கொண்டு வந்தார் என்று கதை. அவர், "போனால் போகட்டும் இந்த உயிர்" என்று தியாகம் பண்ணினது பண்ணினதுதான். ஆனால் இப்படிப்பட்ட தியாகியைப் பலிவாங்கின பழி காவேரிக்கு இருக்கப்படாது என்றோ, அல்லது தானாக அவருடைய சரீரம் விழுகிற வரை ஜனங்களுக்கு அவரைத் தரிசிப்பதால் ஏற்படும் பரிசுத்தி நீடிக்கட்டும் என்றோ ஸ்வாமியே அவருக்குப் புத்துயிர் கொடுத்து விட்டார்.

அதுமட்டுமில்லை. அவர் லோகத்தின் கஷ்டத்தைத் தாம் தாங்கிக் கொண்டாரென்றால், ஸ்வாமியோ அவர் தாங்கிக் கொண்ட பாரத்தைத் தாமே தம்மிடம் transfer பண்ணிக் கொண்டதாக [மாற்றிக் கொண்டதாக] இன்றைக்கும் காட்டிக் கொண்டிருக்கிறார்!

Koviloor Digital Library

பிலத்தில் இறங்கின ரிஷி காவேரி தாரைக்குத் தம்முடைய தலையைப் பலியாகக் காட்டியதில் அவருடைய தலையிலே ஒரு பள்ளம் உண்டாகி விட்டது. இப்போது அவர் வெளியே வந்த பெரும்பள்ளத்திலிருந்த வலம்புரீச்வர லிங்கத்தின் தலைக்கு அந்தப் பள்ளம் இடம் மாறி விட்டது! ரொம்பவும் ஃபோர்ஸோடு வந்த கங்கையைக்கூட அநாயாஸமாக ஜடையிலே தாங்கிக் கொண்ட ஈச்வரன் இங்கே ஞானியும் தானும் ஒன்றே என்று காட்டுவதற்காகத் தலையில் பள்ளம் விழுந்தவராக விளங்குகிறார்!

பகீரதன் ஆகாசத்திலிருந்த கங்கையை பூமிக்கு இறக்கினான். ஏரண்டகர் பூமிக்கு அடியில் மறைந்து போன காவேரியை நில மட்டத்துக்கு ஏற்றினார்.

திருவலம்புரத்தில் காவேரி வெளியிலே வந்த பிற்பாடு, திருவலஞ்சுழியிலிருந்து அந்த இடம் வரைக்கும் அவள் 'அன்டர் கிரௌண்டாக' இருந்ததும் மாறி, பூமிக்கு மேலேயே ஓடலானாள். கொடகில் அவதாரம் பண்ணினவள் புகாரில் ஸமுத்திரத்தில் புகும்வரையில் முறிபடாத ஜீவநதியாக ஆனாள். முடிகிற இடத்தில் Granary of Tamilnadu — தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் — என்னும் படியாகத் தன் ஸாரத்தை எல்லாம் விநியோகித்து 'டெல்டா'வும் உண்டாக்கி விட்டாள். இதற்கெல்லாம் காரணம் ஏரண்டகரின் தியாகம்தான்.

திருவலஞ்சுழி பிள்ளையார்

திருவலஞ்சுழியில் அவள் பிலத்திலிருந்து ஸம பூமிக்கு வந்த இடத்தில் ஒரு பிள்ளையார் இருந்தார். திருவலம்புரியில் எப்படி ஊர்ப் பெயருக்கேற்ப வலம்புரீச்வரர் இருந்தாரோ அப்படியே இந்தத் திருவலஞ்சுழியிலும் பிள்ளையார் வலம்புரி விநாயகராக இருந்தார் – அதாவது

Koviloor Digital Library

தும்பிக்கையை வலப்பக்கமாகச் சுழித்துக் கொண்டிருக்கிற அபூர்வமான ரூபத்தில் அவர் இருந்தார். 'தக்ஷிணாவர்த்த கணபதி' என்று இந்த மூர்த்தியைச் சொல்வார்கள். 'தக்ஷிண ஆவர்த்த' என்றால் 'வலது பக்கம் சுழித்த' என்று அர்த்தம்.

திருவலஞ்சுழியில் இப்போது ப்ரஸித்தமாக இருக்கிற மூர்த்தி 'ச்வேத விநாயகர்'. தமிழில் 'வெள்ளை வாரணப் பிள்ளை'. வெள்ளை வெளேரென்று ஸலவைக் கல்லில் பண்ணின மாதிரி இருப்பார். அந்த ஸ்தலத்திலுள்ள பாடல் பெற்ற சிவாலயத்துக்கு வெளியிலே தனிக் கோயிலில் அவர் இருக்கிறார். அங்கேயிருக்கிற ஸலவைக்கல் பலகணி இந்தத் தமிழ் தேசத்தின் மிகவும் அபூர்வமான சில்ப அதிசயங்களில் ஒன்று. இந்த ச்வேத விநாயகரைப் பூஜித்தே தேவேந்திரன் அம்ருதம் பெற்றான் என்று கதை.

ஆனால், நமக்கு அமிருத தாரையான காவேரியை தமிழ் தேசம் மீளவும் பெற்ற திருவலஞ்சுழியில் இருந்த 'தக்ஷிணாவர்த்த கணபதி' என்று நான் சொன்னது இந்த ச்வேத விநாயகரை அல்ல. இவர் (ச்வேத விநாயகர்) பெரும்பாலான கோயில்களில் உள்ளதைப் போல் இடது பக்கம் தும்பிக்கையைச் சுழித்த 'வாமாவர்த்த கணபதி'தான். நான் சொன்ன வலம்புரி விநாயகர் இருப்பது சிவாலயத்திலேயேதான். தனிக் கோவிலாக இல்லாமல் சிவாலயத்தின் அநேக ஸந்நிதிகளில் ஒன்றில் அவர் இருக்கிறார்.

பிலத்திலிருந்து ஸம பூமிக்கு வந்த காவேரி, வலது பக்கம் தும்பிக்கையைச் சுழித்த அவரைத்தான் தானும் வலது பக்கம் சுழித்துப் பிரதக்ஷிணம் பண்ணிவிட்டு மேற்கொண்டு ஓட ஆரம்பித்தாள்.

கொடகிலே கன்னங் கரேலென்று காக்காயாக வந்து இவர் கவிழ்த்து விட்டதினாலேயே ஓட ஆரம்பித்த காவேரி தன்னுடைய போக்குக்கு வந்த விக்னம் நீங்கி மறுபடி

Koviloor Digital Library

பூமிக்கு மேல் ஓட ஆரம்பித்தபோது வெள்ளை வெளேரென்றிருக்கிற ச்வேத விநாயகரிருக்கும் ஊரிலுள்ள வலம்புரியானை — வலம்புரி யானையை — வலம் வந்து மேலே பிரவஹித்துக் கொண்டு போனாள்.

பிள்ளையார் பிரதக்ஷிணத்தோடு ஆரம்பிப்பது வழக்கம்; தக்ஷிணாவர்த்தப் பிள்ளையாரின் பிரதக்ஷிணத் தோடு கதையை முடிக்கிறேன்.

Koviloor Digital Library

கன்னடியன் கால்வாய்

கர்ம வியாதியும் காயத்ரி சக்தியும்

சுமார் ஐநூறு, அறுநூறு வருஷங்களுக்கு முன்னால் திருவனந்தபுரத்திலிருந்து கொண்டு ஆட்சி செய்த ஒரு கேரள ராஜாவுக்கு தீராத ரோகம் உண்டாயிற்று. எத்தனை வைத்யம் பார்த்த போதிலும் வியாதி பிடிபடவில்லை. 'ராஜ வைத்யம்' என்றே சொல்கிறோமல்லவா, அப்படி எவ்வளவோ சிகித்ஸை செய்தும் குணமாகாமல் ரொம்பவும் கஷ்டப்பட்டான்.

ஒருநாள் ராத்திரி பகவானையே பிரார்த்தனை பண்ணிக் கொண்டு அப்படியே கொஞ்சம் கண்ணயர்ந்து விட்டான். அப்போது ஒரு ஸ்வப்னம் வந்தது. ஸ்வப்னத்தில் ஆகாசத்துக்கும் பூமிக்குமாக ஒரு பெரிய ரூபம் தோன்றி, அவனிடம், "ராஜாவே! உனக்கு ஏற்பட்டிருப்பது கர்ம வியாதி. அதாவது, ஜன்மாந்தரத்தில் நீ பண்ணின பாபத்தில் தீராமல் மிச்சமாயிருந்த சேஷமே ரோகமாகி யிருக்கிறது. இதை நீ அநுபவித்துத்தான் தீர்த்துக் கொள்ள வேண்டுமேயொழிய ஔஷதத்தால் குணப்படுத்த முடியாது. ஒன்று வேண்டுமானால் நீ செய்யலாம். உன் ஆக்ருதிக்கு எள்ளினால் ஒரு ப்ரதிமை பண்ணி அதற்குள்ளே பூராவும் தங்கத்தால் நிரப்பி, அதிலே உன் கர்மாவை, பாபத்தை, ரோகத்தை ஆவாஹனம் செய்து ஸத்தான ஒரு பிராமணனுக்கு தானம் கொடுத்துவிடு. அப்போது கர்மா உன்னைவிட்டு அவனிடம் போய்விடும். அவன் நல்ல மந்த்ர சக்தியுள்ளவனாயிருந்தால் ரோகத்தை ஜெரித்துக் கொண்டு விடுவான். அது எப்படியானாலும்

Koviloor Digital Library

அவனுக்கு இப்படி ரோகத்தை உண்டாக்குவதற்கு பரிஹாரமாகத்தான் இவ்வளவு ஸ்வர்ணம் கொடுக்கச் சொன்னது" என்று சொல்லிற்று.

விடிந்ததும் ராஜா அப்படியே எள்ளிலே பிம்பம் பண்ணி, அதற்குள் துவரம்பருப்பு மாதிரியான ஸ்வர்ண மணிகளைக் கொட்டி நிரப்பி வைக்கச் செய்தான். தான ஸமாசாரத்தை பிராமண மஹா ஜனங்களுக்கு ஒளிவு மறை வில்லாமல் தெரியப்படுத்தினான்.

தானம் வாங்கிக் கொள்ள எவரும் முன்வரவில்லை. 'ராஜா தன் கர்மாவை அநுபவித்துக் கொள்ள வேண்டியது தான். ஸ்வர்ணத்துக்காக நம்முடைய மந்த்ரசக்தியைப் பணயம் வைப்பதா? மந்த்ர சக்தி போதாமலிருந்து விட்டாலோ நம் உயிரையே பணயம் வைப்பதாக ஆகிவிடுமே' என்று எல்லாரும் ஒதுங்கிப் போய் விட்டார்கள்.

ராஜாவுக்கானால் ரோக பாதை தாங்க முடிய வில்லை. வெளியூர், வெளி ராஜ்யங்களிலிருந்தாவது எவராவது வரமாட்டார்களா என்று நாலா திக்கிலும் தண்டோரா போட ஆள் அனுப்பினான்.

இதனால் கேரள ராஜா விஷயம் கர்நாடக ராஜ்யத் துக்கும் எட்டிற்று.

நல்ல மந்த்ர சக்தியும் தைர்யமும் உள்ள ஒரு கன்னட பிரம்மசாரி தானம் வாங்கிக் கொள்வதற்காகத் திருவனந்த புரம் வந்தான்.

ராஜாவுக்கு ஸந்தோஷம் தாங்க முடியவில்லை. விதி வத்தாக தாரை வார்த்து எள்ளுப் பொம்மையை பிரம்ம சாரிக்குத் தானம் பண்ணினான்.

அப்போது ஓர் ஆச்சரியம் நடந்தது. பிரம்மசாரி ப்ரதிமையையே உற்றுப் பார்க்க, அது தன்னுடைய வலது

Koviloor Digital Library

கையை உயரத் தூக்கிக் கொண்டு சுண்டு விரலையும் கட்டை விரலையும் மடித்துக் கொண்டு மற்ற மூன்று விரல்களையும் நீட்டிக் காட்டிற்று.

ராஜாவின் பூர்வகால கர்ம சேஷம் கால புருஷன் என்ற மூர்த்தியாக ப்ரதிமையில் ப்ராண ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. அதனால், அசேதனமான பிம்பம் நிஜமாகவே பிராணன் உள்ள ஸசேதன ஜீவனாக ஆகி விட்டது.

அது இப்படி மூன்று விரலை உயர நீட்டிக் காட்டியதும் பிரம்மசாரி தலையை ஆட்டி "அதெல்லாம் முடியாது" என்றான்.

உடனே பிம்பம் மோதிர விரலை மடக்கி விட்டு மற்ற இரண்டு விரல்களை மட்டும் நீட்டியபடி வைத்திருந்தது.

"அதுவும்கூட முடியாது" என்று கர்நாடக பிரம்மசாரி தலையாட்டினான்.

பிம்பம் நடு விரலையும் மடக்கி, ஆள்காட்டி விரல் ஒன்றை மாத்திரம் காட்டிக் கொண்டிருந்தது.

"போனால் போகிறது. உன்னிஷ்டப்படியே ஆகட்டும்" என்றான் பிரம்மசாரி.

அப்படி அவன் சொல்லி வாய் மூடுவதற்குள் பிம்பம் பரம ஸந்தோஷத்தோடு அவன் காலிலே விழுந்து ஸாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி எழுந்தது.

அப்புறம் பிம்பம் வெறும் பிம்பமாக மட்டும் நின்றது. காலபுருஷன் அதை விட்டுச் சென்று விட்டான்.

இதொன்றும் புரியாமல், பிரமித்துப் போயிருந்த ராஜாவையும், மற்ற பரிவாரங்களையும் பார்த்து பிரம்மசாரி விளக்கினான்.

பிரம்மசாரி பிம்பத்தை உற்றுப் பார்த்தபோது, 'உனக்கு என்னுடைய மந்த்ர ஜபத்தில் எவ்வளவு பலனைக்

Koviloor Digital Library

கொடுத்தால் நீ என்னைப் பாதிக்காமல் போவாய்?' என்று மானஸிகமாகக் கேட்டானாம். அவன் ஒரு நாளில் மூன்று வேளையும் செய்கிற த்ரிகால ஸந்த்யாவந்தனங்களின் பலனைக் கொடுத்தால் போய் விடுவதாக, பிம்பம் மூன்று விரலைக் காட்டியதாம். அவ்வளவு பெரிய பலனைக் கொடுக்க முடியாது என்று அவன் சொன்னதன் மீது, அப்படியானால் மூன்று வேளைகளில் இரண்டின் பலனையாவது கொடுக்குமாறு யாசித்துத்தான் பிம்பம் இரண்டு விரலைக் காட்டியதாம். அதுவும் அதிகம் என்று அவன் பேரம் பேசினான். அதனாலேயே பிம்பம் ஒரே ஒரு வேளை ஸந்த்யாவந்தன பலனைக் கேட்டதாம். அதைத்தான் போனால் போகிறதென்று இவன் தத்தம் செய்ய, பயங்கரமான கர்மசேஷமும், 'போயே போய்விடு கிறேன்' என்று இவனுக்குக் கும்பிடு போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தது.

முறைப்படி காயத்ரி செய்தால் அதற்கு எத்தனை வீர்யமிருக்கிறதென்று இதிலிருந்து தெரிந்து கொண்ட ஜனங்கள் அந்த சுத்த பிரம்மசாரியை ரொம்பவும் கொண்டாடினார்கள். ராஜாவுக்கா, ஆதியில் மஹா பலியிடம் தானம் வாங்க வந்த வாமன பிரம்மசாரியே தான் இன்றைக்கு இப்படி வந்து தன் உபாதையைத் தீர்த்து வைப்பவனோ என்று தோன்றியது. வாமனர் – மஹாபலிக்காக விசேஷமாக ஓணம் கொண்டாடுவதும் கேரளாவில்தானே?

வாஸ்தவத்திலேயே, பிரம்மசாரி பிரதிமையை தானம் வாங்கிக் கொண்டவுடனே ராஜாவுக்கு நோய் குணமாகி விட்டது.

தானம் பெற்றதற்குப் பச்சாத்தாபம்

ஊர் உலகமெல்லாம் கொண்டாடிய போதிலும் பிரம்மசாரிக்கு மாத்திரம் ரொம்ப வியாகுலமும் பச்சாத்

Koviloor Digital Library

தாபமுந்தான் உண்டாயின. 'இப்படிப் புத்தியில்லாமல் செய்து விட்டேனே! தர்ம சாஸ்திரத்தில் பிராமண லக்ஷணம் தாரித்ரியம்தான் (வறுமைதான்) என்றல்லவா விதித்திருக்கிறது? க்ருஹஸ்தனாக இருந்தாலாவது குடும்ப சம்ரக்ஷணை செய்ய வேண்டும். அதைவிட முக்யமாக "தேஹி" என்று வருகிற அதிதிகளுக்கு ஸத்காரம் செய்ய வேண்டும். அதையும் விட முக்கியமாக ஸர்வ லோகத்தின் க்ஷேமத்துக்காகவும் யாக யக்ஞாதிகள் செய்ய வேண்டுமென்பதற்காக ப்ரதிக்ரஹத்தை [தானம் வாங்குவதை] அநுமதித்திருக்கிறது. பிரம்மசாரியான எனக்குப் பெரிய ஐச்வர்யமாக காயத்ரி இருக்கும்போது நான் ஏன் இப்படி ஏகமாக ஸ்வர்ண தானத்தை வாங்கிக் கொண்டேன்? அந்த அளவுக்கு ப்ரதிக்ரஹ தோஷத்தையுமல்லவா ஸம்பாதித்துக் கொண்டிருக்கிறேன்? ராஜாவின் கர்மாவுக்குப் பரிஹாரம் பண்ணி விட்டேன்; இப்போது என் தோஷத்துக்கு என்ன பரிஹாரம்? நான் ஒரு வேளை காயத்ரீ ஜப பலனைத் தத்தம் செய்தது கூடத் தப்புத்தான். லோகமெல்லாம் நன்றாக இருப்பதற்கே பிராமணன் தர்மகர்த்தா மாதிரி போஷிக்க வேண்டிய காயத்ரீ சக்தியை யாரோ ஒரு ஆளுக்காக மாத்திரம் செலவிட்டது தப்புத்தான். இப்போது அப்படியெல்லாம் பண்ணாமல், லோகோபகாரமாக இத்தனை ஸ்வர்ணத்தையும் செலவழித்தே ப்ரதிக்ரஹ தோஷத்துக்குப் பிராயச்சித்தம் பண்ணிக் கொள்ள வேண்டும். என்ன காரியம் உலகுக்கு சாச்வதமாக ப்ரயோஜனப்படும்படி பண்ணலாம்?'' என்று நிரம்ப யோஜித்தான்.

ராஜாவுக்குச் சரீர வியாதி போக்கின இவனுக்கே மனோ வியாதி வந்துவிடும் போலாயிற்று. யோஜித்து, யோஜித்து முடிவில், சிரஞ்ஜீவியாக லோகத்தில் என்றைக்கும் இருந்து கொண்டிருக்கிற அகஸ்திய மகரிஷியை எப்படியாவது தர்சனம் பண்ணி அவர்

Koviloor Digital Library

சொல்கிற மாதிரி பிராயச்சித்தம் செய்வதென்று தீர்மானம் பண்ணினான்.

அகஸ்தியரை ஏன் நினைத்தான் என்றால் இந்த பூமியில் நம் மாதிரி மனுஷ்யர் போல வாழ்ந்தவர்களில் அவரைப் போல திவ்ய சக்தியைக் காட்டியவர் எவரு மில்லை. அங்குஷ்ட ப்ரமாணமே [கட்டை விரலளவே] இருந்து கொண்டு அவர் தபோ பலத்தினால் இரண்டு மஹா பர்வதங்களுக்கு ஸமமாகத் தம்மை நிரூபித்துக் கொண்டிருக்கிறார். பார்வதீ பரமேச்வராள் திருக் கல்யாணத்தின்போது கூடின கூட்டத்தில் ஹிமாசலமே அமுங்கியபோது ஈச்வரன் இவரைத்தான் தென் கோடிக்கு அனுப்பி, தராசை ஸம எடை கட்டி நிறுத்துகிற மாதிரி அதன் லெவலுக்குக் கொண்டு வந்தார். இறங்கிய மலை ஏற இங்கே உபகாரம் பண்ணினவரே, விந்திய பர்வதம் கர்வித்துக் கொண்டு மேலே மேலே வளர்ந்து கொண்டு போனபோது அதன் தலையில் ஒரு அமுக்கு அமுக்கி வளராமல் தடுத்து நிறுத்தினார். மஹா ஸமுத்திரத்தையே தம்முடைய உள்ளங் கைக்குள் அடக்கி ஆசமனீயம் செய்திருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக நமக்கு அவர் செய்துள்ள சாச்வதமான உபகாரம், தம்முடைய கமண்டல தீர்த்தத்திலிருந்து காவேரியை அநுக்ரஹித்திருப்பதுதான். தமிழ் நாட்டைத் தொடுவதற்கு முந்தி காவேரி கர்நாடக தேசத்தில்தானே பாய்கிறது? அங்கே பல குடும்பங்கள் அகஸ்தியரையே தங்களுடைய குலத்துக்கு ரக்ஷகராக, ஆசாரியராகப் பூஜித்து வந்தார்கள்.

உண்மைக் கதை

அப்படிப்பட்ட ஒரு குடும்பத்தில் வந்தவன்தான் நம்முடைய கதைப் பிரம்மசாரி. 'பிரம்மசாரி, பிரம்மசாரி என்கிறேனே தவிர, அவன் பேர் என்னவோ தெரிய

Koviloor Digital Library

வில்லை. இத்தனைக்கும் நான் சொல்கிறதென்னமோ அத்தைப் பாட்டிக் கதையில்லை. இது வெறும் ஸ்டோரி இல்லை. இதற்குப் பலமான ஹிஸ்டரி ஆதாரம் இருக்கிறது. 'ப்ராசீன லேக மாலா' என்று பழைய சிலாசாசனம், தாம்ர சாஸனம் முதலானவைகளைத் தொகுத்து பம்பாயி லிருக்கிற நிர்ணய ஸாகர் அச்சுக் கூடத்தார் தங்களுடைய 'காவ்ய மாலா' ஸீரிஸில் பிரசுரித்திருக்கிறார்கள். அதிலே மூன்றாம் பாகத்தில் உள்ள ஒரு சாஸனத்தில் இந்தக் கதை வாஸ்தவத்தில் நடந்திருப்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. அதுமட்டுமில்லை. இங்கே வெள்ளைக்கார ராஜ்யம் நடந்தபோது நம்முடைய மெட்றாஸ் பிரெஸிடென்ஸியில் அரசாங்கத்தாரின் ஆர்க்கியலாஜிகல் டிபார்ட்மெண்டார் 1903-4ல் பிரசுரித்துள்ள வருஷாந்தர ரிபோர்ட்டின் 84வது பக்கத்திலும் இந்தக் கதை ஸம்பந்தப் பட்ட சாஸனத்தைக் கொடுத்திருக்கிறது. சேர்மா தேவியில் உள்ள ஒரு சாஸனம்தான் அது. இன்னம் கொஞ்ச நேரத்தில் தெரியும். சேர்மாதேவிக்கும் நம் கதைக்கும் என்ன ஸம்பந்தமென்று.

இட்டுக்கட்டிச் சொன்ன கதை இல்லை என்பதற் காகச் சொல்ல வந்தேன். இட்டுக் கட்டினதாயிருந்தால் அந்த பிரம்மசாரிக்கு ஏதாவது பேர் நாமே வைத்து விடலாம். நிஜமாயிருப்பதால்தான் வைக்க முடியவில்லை. இதிலிருந்து எத்தனையோ உத்தமமான காரியங்களை லோகோபகாரமாக சாதித்த நம் பூர்விகர்கள் தங்கள் கார்யத்தை மட்டும் காட்டி, தாங்கள் அநாமதேயமாகப் பின்னுக்கு ஒதுங்கிக் கொண்ட பரமோத்தமமான குணப் பான்மையைத் தெரிந்துகொள்கிறோம். நாமானால் கார்யமே செய்யாமல் பேருக்குப் பறக்கிறோம்!

அகஸ்த்யர் சிரஞ்சீவியாக மலயாசலத்திலே தபஸ் பண்ணிக் கொண்டிருக்கிறாரென்பதால் பிரம்மசாரி மலய

Koviloor Digital Library

பர்வதத்திற்கு யாத்திரை தொடங்கினான். 'மலய மாருதம்' என்று சொல்கிறோமே அந்தத் தென்றல் காற்று, சந்தன மரம் நிறைந்த இந்த மலய பர்வதத்திலிருந்து அடிப்பது தான். தெற்கிலிருந்து வருவதால் 'தென்றல்' என்று பெயர். வடக்கேயிருந்து வருகிற காற்றுக்கு 'வாடை' என்று பெயர். தெற்காகக் காற்றடிக்கும் வஸந்த காலத்தில் அது நமக்கு எவ்வளவு ஹிதமாக இருக்கிறதோ, அத்தனைக் கத்தனை குளிர்காலமான சிசிர ருதுவில் வீசும் வாடைக் காற்று நம் எலும்பையெல்லாம் குடைகிறாற் போல ஹிம்ஸை செய்யும். அதோடு மழையில் மட்கின வஸ்துக்களின் துர்கந்தமும் வரும். அதனால்தான் நாற்ற மடிக்கிற எதையும் துர்வாடை என்கிறோம்.

மலய பர்வதம் என்பதுதான் தமிழிலக்கியங்களில் நிரம்பவும் சிறப்பித்துச் சொல்லப்படும் பொதிகை மலை. மலையாள பாஷை ஏற்பட்ட காலத்திற்குப் பின் இதன் மேற்குப் பக்கத்துக்குக் கொஞ்சம் தாண்டி விட்டாலே மலையாள ராஜ்யமாகிவிட்டது. ஆதியில் தமிழ் நாட்டின் சேர ராஜ்யத்தைச் சேர்ந்ததாகத்தான் இன்றைய மலையாள மாகிய கேரளமும் இருந்தது. பிற்பாடோ, மலய பர்வதத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்கள் கேரள ராஜாக்களின் கீழ் வந்து விட்டன. அப்புறம் பிரிட்டிஷ் ராஜ்யத்தின்போது சில பகுதிகள் தமிழ்நாட்டின் திருநெல்வேலி ஜில்லாவுக்குள் வந்தன. ஸ்வதந்திரம் வந்த பிற்பாடு கன்யாகுமரி ஜில்லா என்று ஏற்பட்டதில் இன்னம் அநேக பகுதிகளும் தமிழ் நாட்டில் சேர்ந்திருக்கின்றன. கொடகு தேசத்தில் காவேரியை உண்டு பண்ணி கொடகு, கர்நாடகம், தமிழ்நாடு மூன்றுக்கும் ஜீவனத்தை அநுக்ர ஹித்த அகஸ்தியர், தமிழ்நாட்டுக்கும் மலையாளத்துக்கும் பொதுவான ஆதி சேர ராஜ்யப் பகுதிகளுக்கு வாழ்வு தருவதற்காக மலய பர்வதத்திலிருந்து தாம்ரபர்ணியை உற்பத்தி பண்ணினார். அந்தப் புண்ய நதி ஆரம்பத்தில்

Koviloor Digital Library

கொஞ்ச தூரம் பழைய கேரள ராஜ்யத்தில் ஓடி அப்புறம் தென் பாண்டி நாடு எனப்படும் தமிழ் தேசத்துக்கு வந்து விடுகிறது.

அகஸ்த்யர் அளித்த தீர்வு

திருவனந்தபுரத்திலிருந்து அகஸ்த்ய தர்சன மொன்றே குறியாகப் பொதிகைக்குப் புறப்பட்ட பிரம்மசாரி தானம் பெற்ற அவ்வளவு ஸ்வர்ணத்தோடு காட்டு வழிகளில் போவது ஆபத்து என்று கண்டான். அம்பாஸமுத்திரத்தில் அவனுடைய நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமாயிருந்த ஒரு கோயில் குருக்கள் இருந்தார். 'அவரிடம் ஸ்வர்ணத்தை ஒப்புவித்துவிட்டு அப்புறம் மலயம் போகலாம்; அகஸ்த்ய பகவான் தர்சனம் கிடைத்து, ஸ்வர்ணத்தை எப்படி லோகோபகாரமாகச் செலவழிப்பது என்று அவரிடமிருந்து தெரிந்து கொண்ட பின் குருக்களிடமிருந்து திரும்ப வாங்கிக் கொள்ளலாம்' என்று நினைத்தான். அப்படியே அம்பாஸமுத்ரம் போனான். துவரம்பருப்பு மாதிரிச் செய்திருந்த ஸ்வர்ண மணிகள் அடங்கிய மூட்டையை குருக்களிடம் ஒப்படைத்தான். சில்லறைக்குப் பதில் இம்மாதிரிப் பொன்மணிகளை அந்நாளில் ராஜாங்கத்தார் உபயோகப்படுத்தினார்கள். பவுன் அத்தனை மலிவாயிருந்த காலம்!

அகஸ்த்ய தர்சனம் தாமஸமாகிறதே என்று ஒரே தாபத்துடனும், ஆவலுடனும் பசி, தூக்கம், கால் வலி எதுவும் பார்க்காமல் நடந்தான் பிரம்மசாரி. இப்படிக் காடும் மலையும் கடந்து வந்ததில் ஒரு நாள் அப்படியே களைத்துப்போய் விழுந்து விட்டான். கண்ணை இருட்டிக் கொண்டு மயக்கமாய் வந்தது.

அந்த ஸமயத்தில் அங்கே திடீரென்று ஒரு விருத்தப் பிராமணர் தோன்றினார். பிரம்மசாரியைக் களைப்பாற்றி னார்.

Koviloor Digital Library

அவர் வேறு யாருமில்லை. அகஸ்த்யரேதான் அப்படி ரூபம் எடுத்துக்கொண்டு வந்திருந்தார். தனக்காக அந்தக் குழந்தை ரொம்பவும் ச்ரமப்பட்டுக் கொண்டு வருவது மலய பர்வதத்திலிருந்த அவருடைய தீர்க்க த்ருஷ்டியில் தெரிந்தது. உடனே, அந்தக் குழந்தையைத் தானே எதிர் கொண்டு போய் ஸந்தித்துவிட வேண்டுமென்றே, இப்படி முக்கால் வழியில் தோன்றிவிட்டார். ஆனாலும் இன்னம் கொஞ்சம் விளையாட்டுப் பார்க்க வேண்டும், சோதித்து அவன் பெருமையை இன்னம் பிரகாசப்படுத்த வேண்டுமென்றே வேறே வேஷத்தில் தோன்றினார்.

கொஞ்சம் சிரமபரிஹாரம் செய்து கொண்ட உடனேயே மலயாசலத்துக்குப் போகப் பறந்தான் பிரம்மசாரி. அவன் எங்கே அவ்வளவு அவசரமாகப் போகிறானென்று, தெரியாத மாதிரி கேட்டறிந்த கிழப் பிராமணர், "வேறே வேலை இல்லை. அகஸ்த்யருமாச்சு, தர்சனமுமாச்சு. சித்தன் போக்கு சிவன் போக்கு என்று அவர் எங்கே இருப்பாரோ, என்ன சொல்வாரோ? அவருக்காக ஏன் காட்டிலும் மலையிலும் அலைந்து கொண்டு இந்த வீண் பிரயாஸை?" என்றெல்லாம் சொல்லி அவனைத் தடுக்கப் பார்த்தார்.

பிரம்மசாரியோ முன் வைத்த காலைப் பின் வைக்க வில்லை. அகஸ்த்யரிடம் அவனுடைய பக்தி விச்வாஸங்கள் கொஞ்சம் கூடக் குறையாமல், "பரம கருணையுள்ள எங்கள் அகஸ்த்யர் நிச்சயம் கைகொடுப்பார். நீர் இடைமறிக் காதீர்!" என்று சொல்லிவிட்டு மறுபடி புறப்பட்டான்.

உடனே அகஸ்த்யர் ஸ்வய ரூபத்தில் அவனுக்கு தர்சனம் தந்து ஆசீர்வதித்தார். "அப்பா குழந்தை! இப்போது இங்கே ஒரு பசு வரும். பக்கத்தில் தெரிகிற இந்தத் தாம்ரபர்ணி கரையில் அது நிற்கும். அது நிற்கிற இடத்தில் ஆற்றுக்கு அணை கட்டி, அதிலிருந்து ஒரு கால்வாய்

Koviloor Digital Library

வெட்டு. கால்வாய் எப்படிப் போக வேண்டுமென்றால் - நிற்கிற பசுவின் வாலை நீ பிடித்துக்கொள். அது ஓட ஆரம்பிக்கும். ஓடுகிற வழியை அடையாளம் பண்ணிக் கொள். அந்த வழியாகவே கால்வாயை வெட்டிக் கொண்டு போக வேண்டும். பசு நடுவில் எங்கெங்கே சாணம் போடுகிறதோ அங்கங்கே ஒரு மடை — sluice என்பது — அமைக்க வேண்டும். அது சிறு நீர் பெய்கிற இடங்களில் சிறிய வடிகால்கள் வெட்ட வேண்டும். பசு படுத்துக் கொள்ளுமிடங்களில் ஏரி தோண்ட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் பசு உன் பார்வையிலிருந்து மறைந்து விடும். அங்கே கால்வாயை முடித்துவிடு. இப்படி, மநுஷ்யர், மிருகம் எல்லாவற்றுக்கும் தாகம் தீரவும், அவை அழுக்கும் ஆயாஸமும் போக ஸ்நானம் பண்ணவும், பயிர் பச்சை விளைந்து பல பேர் பசி தீரவும் உபகாரம் செய்வதால் உன்னுடைய ப்ரதிக்ரஹ தோஷம் ஓடியே போய்ப் புண்ய லோகம் சேருவாய். இந்த லோகத்திலும் ஆசந்த்ரார்க்கம் [ஸூரிய சந்திரர் உள்ளளவும்] உன் கீர்த்தி நிற்கும்" என்று சொல்லிவிட்டு அந்தர்தானமாகிவிட்டார்.

காவேரியையும் தாம்ரபர்ணியையும் கொடுத்தவர் லோகோபகாரமாக நீர்வளம் பெருக்கித் தருவது தவிர வேறு என்ன பரிஹாரம் சொல்வார்?

அகஸ்த்யர் மறைந்தாரோ இல்லையோ, அதே மாதிரி மாயமாக அங்கே ஒரு பசு திடீரென்று தோன்றி, தாம்ர பர்ணிக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டது.

அந்த இடம்தான் சேர்மாதேவி.

தற்போது திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள அந்த ஊர் முன்பு கேரள தேசத்தில் இருந்தது. ஊரின் பேரிலிருந்தே இது தெரிகிறது. 'சேரமாதேவி' என்பதைத் தான் 'சேர்மாதேவி' என்கிறோம். சேர ராஜ்யம்தானே கேரளம்? அங்கே தென்னை ரொம்பவும் விசேஷம். நாலு

Koviloor Digital Library

பக்கமும் மலையும், தாம்ரபர்ணி நதியுமாக ரொம்பவும் ரமணீயமாக இருக்கப்பட்ட சேரமாதேவியிலும் ஒரே தென்னஞ் சோலையாக இருக்கும். தென்னைக்கு ஸம்ஸ்கிருதத்தில் நாரிகேளம் என்று பெயர். அந்த 'நாரிகேளம்' தான் எப்படியெப்படியோ திரிந்து 'கேரளம்' என்றாகிவிட்டது. இதில் முதல் இரண்டெழுத்துக்களான 'கேர' என்பது தமிழில் 'சேர' ஆயிற்று. 'க'வும் 'ச'வும் ஒன்றுக்குப் பதில் மற்றது வருவதுண்டு. கவுரிமான் – சவுரி மான்; கீர்த்தி – சீர்த்தி; மூக்கு – மூச்சு — இப்படி. 'கை' என்று நாம் சொல்லும் அவயவத்தைத் தெலுங்கில் 'சை' (செயி) என்கிறார்கள். 'கை' என்கிற நாமும் கையின் கார்யத்தைச் 'செய்'வது என்றுதான் சொல்கிறோம். ஸம்ஸ்கிருதத்திலும் 'கர' என்றால் கை; 'கரோமி' என்றால் செய்கிறேன் என்றே இருக்கிறது. ஸம்ஸ்கிருதத்தில் 'சோள ராஜா' என்பது தமிழில் 'கோழி வேந்தன்' – 'ச'வுக்குப் பதில் 'க'.

இப்படி தமிழில் 'சேர'வாகவும் ஸம்ஸ்கிருதத்தில் 'கேரள'வாகவும் இருந்த ராஜ்யத்தின் ஆதிகால முக்ய பட்டணங்களில் ஒன்றாயிருந்தது சேரமாதேவி. பட்டமஹிஷி, அவள் பேரில் ஏற்பட்ட பட்டணம் இரண்டுக்கும் 'மாதேவி' அடைமொழி கொடுப்பதுண்டு. 'பாண்டி மாதேவி' என்று ஞானஸம்பந்தரே மங்கையர்க் கரசியைத் தேவாரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். சிபியின் வம்சத்தில் வந்ததால் செம்பியர் என்று பேர் பெற்ற சோழர்களிலும் செம்பியன்மாதேவி என்று ஏராளமாக சிவதர்மம் செய்த ஒரு ராணி இருந்திருக்கிறாள். சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் ஒன்பதாம் திருமுறையாக வைக்கப்பட்டிருக்கிற திருவிசைப் பாக்களைப் பாடியவர்களில் ஒருவரான கண்டராதித்த சோழ ராஜாவின் பத்தினிதான் இந்தச் செம்பியன் மாதேவி. அவள் பேரிலும் ஒரு ஊர் இருக்கிறது.

Koviloor Digital Library

சேரமாதேவியில் நின்ற பசுவின் வாலை பிரம்மசாரி பிடித்துக் கொண்டான். உடனே அது ஓட ஆரம்பித்தது. அந்த வழியை அவன் நன்றாக அடையாளம் பண்ணிக் கொண்டான். அது சாணம், சிறுநீர் கழித்த இடங்களையும் குறித்துக் கொண்டான். மற்ற எல்லாப் பிராணிகளுக்கும் கழிவுப் பொருளாக உள்ள இவையும் பசுவிடமிருந்து வரும்போது மட்டும் க்ருமி நாசினியாகவும், தோஷ நாசினி யாகவும் ஆகிவிடுகின்றன. கோமயம், கோமூத்ரம் ஆகியவை எப்படி ரோகங்களைப் போக்குகின்றன, disinfectant-ஆக இருக்கின்றன என்பதைப் பற்றி வைத்யப் புஸ்தகங்கள் பக்கம் பக்கமாகச் சொல்கின்றனவென்றால், இவை எப்படி தோஷங்களை, தீட்டு துடக்குகளை நிவிருத்தி செய்கின்றன என்பதைப் பற்றி தர்ம சாஸ்திரங்கள் அதைவிட ஜாஸ்திப் பக்கம் சொல்கின்றன. சாணம், சிறுநீர் என்று சொல்லி யிருக்கிறதே என்று பரிஹாஸம் செய்யலாகாது என்பதற்காகச் சொல்கிறேன். மாடு எங்கெங்கே படுத்துக் கொண்டது என்பதற்கும் அடையாளம் செய்து கொண்டான்.

தாஸியின் உத்தம சிந்தை

உலகத்துக்கு உதவ வேண்டும் என்பதற்காக இப்படி அவன் மாட்டோடு இழுபட்டுப் போய்க் கொண்டேயிருந்த போது அது ஸீனியபுரம் என்கிற ஊரில் ஒரு தாஸியின் வீட்டுக்குள்ளாகப் போயிற்று. லக்ஷ்யத்துக்காக மானாபி மானம் விட்ட சுத்தப் பிரம்மசாரியும் அதோடேயே போனான். போகிற வழியையெல்லாம் அவன் அடையாளம் செய்து கொண்டதில் இந்த வீட்டையும் செய்து கொண்டான். இதைக் கவனித்தாள் அந்த தாஸி. கலாசி என்று அவளுக்குப் பெயர். அவள் உடனே பசுவுக்கு முன்னால் வந்து மறித்து நின்றுகொண்டு, "ஏன் என்

Koviloor Digital Library

வீட்டுக்குள் மாடு வரவிட்டாய்? அப்புறம் அடையாளம் வேறு பண்ணிக் கொள்கிறாய்?" என்று கேட்டாள்.

ஸத்யஸந்தனான பிரம்மசாரி எல்லா விருத்தாந்தமும் சொன்னான். "பசுவின் கதியை நானாகத் தடுக்கக் கூடாது என்பதால்தான் இதை உன்னிடம் சொல்லாமல் போனேன். கால்வாய் வெட்டும்போது, உன்னைக் கேட்டுக் கொண்டு, உனக்குரிய ஸ்வர்ணத்தைக் கொடுத்துவிட்டு, இந்த வீட்டை இடித்து, இதையும் கால்வாய் மார்க்கத்தில் கொண்டு வர இருந்தேன்" என்று தெரிவித்துக் கொண்டான்.

வழியிலே ஆர்ஜிதம் செய்து கொள்ளும் பிறத்தியார் சொத்துக்களுக்கு நஷ்டஈடு கொடுத்துவிடும்படியும் அகஸ்த்யர் சொல்லியிருந்தார். 'காம்பன்ஸேஷன்' என்று சொல்கிறார்களே, அது!

உடனே கலாசி, "அதெல்லாம் நீ ஒன்றும் நஷ்டஈடு தரவேண்டாம். இங்கே பயிர்கள் பாசனமில்லாமல் நாசமாகின்றன. நீ வெட்டுகிற கால்வாயில் இந்த ஊர் வாழும். அப்படி வாழப் பண்ணும் புண்யத்தில் எனக்கும் இந்த வீட்டைக் கொடுப்பதால் பங்கு கிடைப்பதே போதும். அதோடு ஊர் வயலுக்கெல்லாம் ஜலம் வரும்போது என் நிலத்துக்கும்தானே கிடைக்கப் போகிறது?" என்று பெரிய மனஸோடு சொல்லிவிட்டாள். எந்தக் குலத்தவரானாலும், எந்தத் தொழில் செய்பவர்களானாலும் அவர்களிலும் உத்தமமான சிந்தை உள்ளவர்கள் இருக்கவே செய்வார்கள்.

அப்புறம் பசு அவனைக் கொஞ்ச தூரம் இழுத்துக் கொண்டு போய் 'பரந்தாரீ' என்னும் கிராமம் வந்தவுடன் அங்கேயுள்ள வறண்டுபோன ஒரு ஏரிக் கரையிலிருந்து அப்படியே பறந்து போய் மறைந்து விட்டது. இப்போது அந்தக் கிராமத்தைப் 'பிரஞ்சாரி' என்கிறார்கள்.

அகஸ்த்யரின் மகிமையால் வந்த தெய்வப் பசுவே அது என்று பிரம்மசாரி புரிந்து கொண்டான். பசுவை

Koviloor Digital Library

விடப் புனிதமான ஐந்து எதுவுமில்லை. முப்பத்து முக்கோடி தேவதைகளும் அதில் அடக்கம். சகல பாபங்களையும் போக்கும் தாம்ரபர்ணியிலிருந்து வரும் கால்வாய்க்கு எத்தனை பெருமையுண்டு என்று காட்டவே இப்படிப் பசு ரூபத்தில் அகஸ்தியர் அந்தக் கால்வாய்க்கு 'ப்ளான்' போட்டுக் கொடுத்தது.

குருக்கள் மோசடியும் ஈசன் தந்த தண்டனையும்

பரந்தாரீ ஏரியோடு கால்வாய் முடிந்துவிட வேண்டும் என்று புரிந்துகொண்ட பிரம்மசாரி உடனே ஸ்வர்ணத்தை எடுத்துக்கொண்டு வருவதற்காக அம்பா ஸமுத்ரத்துக்கு ஓடினான். பொதுத் தொண்டு என்றால் இப்படித்தான் ஓய்ச்சலில்லாமல் ஓடியாடியாக வேண்டும்! அதிலே எத்தனையோ இடைஞ்சல், தோல்வி எல்லாமும் வந்தால் அதையும் முழுங்கிக் கொள்ளத்தான் வேண்டும்!

பிரம்மசாரிக்கு இப்போது அப்படித்தான் ஏற்பட்டது. அம்பாஸமுத்ரக் குருக்கள் திருப்பிக் கொடுத்த மூட்டையை அவன் பிரித்துப் பார்த்தால் அதில் ஸ்வர்ணத்தினாலான துவரை மணிக்குப் பதில் அசல் துவரம் பருப்புக்கள் தானிருந்தன! வெறும் துவரம்பருப்பு மூட்டையைக் கொடுத்துவிட்டு அந்தக் குருக்கள் "இதுதான் நீ தந்தது" என்று ஒரேயடியாக சாதித்துவிட்டார்.

பிரம்மசாரி ராஜாவிடம் ஓடினான். அம்பாஸமுத்திரமும் அப்போது கேரள ராஜ்யத்தில்தான் இருந்ததால், தானம் கொடுத்த பழைய ராஜாவிடமேதான் போய் முறையிட்டான்.

ராஜாவுக்கு பிரம்மசாரியின் பெருமை ஏற்கனவே தன்னுடைய வியாதி தீர்த்தபோது கொஞ்சம் தெரிந்ததென்றால் இப்போது பூர்ணமாய்த் தெரிந்தது. தானம் வாங்கின அவ்வளவு ஸ்வர்ணத்தையும் பொதுஜனப் பணிக்கே அவன்

Koviloor Digital Library

செலவழிக்கவிருந்ததாலும், அந்த ஸ்வர்ணம் தன்னுடைய தாதலால் தனக்கும் கிஞ்சித் புண்யம் லபிக்குமென்பதாலும் ராஜாவுக்கு ஒரு கூடுதலான ஈடுபாடு பிறந்தது. ஆனாலும் ஸ்வர்ணத்துக்குப் பதில் துவரம் பருப்பைக் கொடுத்தவர் சிவாசாரியாராதலால் அவரிடமும் மரியாதை தப்பக் கூடாதென்று நினைத்து அவரைக் கூப்பிட்டனுப்பி நல்ல வார்த்தையாகச் சொன்னான்.

அந்த மனுஷ்யரோ பழைய பல்லவியையே பாடினார்.

அவரை ஸத்ய ப்ரமாணம் பண்ணவைக்க ஒன்று தான் வழியென்று ராஜாவுக்குத் தோன்றியது. அதைச் சொன்னான். "அப்படியானால் சரி; நீர் பூஜை செய்கிற கச்யபேச்வர மஹாலிங்கத்தைத் தொட்டுக் கொண்டே ப்ரமாணம் பண்ணும்; நம்புகிறோம்" என்றான்.

குருக்கள் ஒப்புக்கொண்டார். ஏனென்றால் மந்திர சாஸ்திரத்தில் ரொம்பவும் கெட்டிக்காரரான அவர், தம் மனஸுக்குள் தந்திரமாக ஒரு திட்டம் போட்டுக் கொண்டு விட்டார். ஆலயங்களில் ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் பண்ணும்போது என்ன செய்கிறார்கள்? மூர்த்திகளிட முள்ள கலைகளை, அதாவது நமக்குப் பிராணன் மாதிரி அந்த விக்ரஹங்களில் பிராண பிரதிஷ்டை ஆகியுள்ள தெய்வாம்சங்களைக் 'கலாகர்ஷணம்' என்கிற சடங்கால் கும்பத்திலே ஆகர்ஷித்து வைத்து விடுவார்கள். அப்போது விக்ரஹத்தில் தெய்வ சக்தி இல்லை. அதற்குப் பூஜை பண்ண வேண்டாம். அதை சாக்கால் மூடிவிட்டு, அது இருக்கிற இடத்தை வெட்டி, கொத்தி, ரிப்பேர் செய்யலாம் என்றாகிவிடுகிறது. 'இதே போல நாமும் ப்ரமாணம் பண்ணுவதற்கு முந்தி ரஹஸ்யமாக கச்யபேச்வர ஸ்வாமியின் கலைகளைக் கோவிலுக்குப் பக்கத்திலிருக்கும் புளிய மரத்தில் ஆகர்ஷித்து வைத்து விட்டு, வெறும் கல்லாகிவிட்ட லிங்கத்தைத் தொட்டுக் கொண்டு ஸத்யம்

Koviloor Digital Library

பண்ணி விடலாம்' என்று அந்தக் குருக்கள் திட்டம் போட்டுக் கொண்டார்.

திருவொற்றியூரில் ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் ஏதோவொரு காரணத்தினால் சங்கிலி நாச்சியாருக்குப் பொய்ப் பிரமாணம் பண்ணித்தர நேர்ந்தபோது முன்கூட்டியே ஸ்வாமியிடம், "நீ அப்போது மூலஸ்தானத்தில் இல்லாமல் வெளி ப்ராகாரத்து மகிழ மரத்திலே போய் இரு" என்றார்; ஸ்வாமி அவர் கிட்டேயும் 'ஸரி' என்று தலையாட்டிவிட்டு, அன்றைக்கு ராத்ரியே சங்கிலி நாச்சியார் ஸ்வப்னத்திலேயும் போய் விஷயத்தை அம்பலமாக்கி விட்டார்: "நீ ஒன்றும் தெரியாதவள் மாதிரி, ஸுந்தரனிடம், 'ஸ்வாமி ஸன்னிதானத்திலே போய் ஸத்யம் பண்ண வேண்டாம்; இந்த மகிழ மரத்தின் கீழே பண்ணினாலே போதும்' என்று சொல்லு" என்று 'கோழி' சொன்னார் – என்ற கதை தெரிந்திருக்கலாம். இங்கே தொண்டை மண்டலத்தில் நடந்த மாதிரியே நம் கதையில் கேரள ராஜ்யத்திலும் நடந்தது!

குருக்கள் ப்ரமாணம் பண்ணவிருந்ததற்கு முதல் நாள் ராத்ரி, ஸ்வாமி பிரம்மசாரியின் ஸ்வப்னத்தில் தோன்றி "நாளைக்கு என்னைக் குருக்கள் புளிய மரத்தில் கலாகர்ஷணம் பண்ணி வைத்திருப்பார். அதனால் புளிய மரத்தைத் தொட்டுக் கொண்டு அவர் ப்ரமாணம் பண்ணினாலே போதும் என்று சொல்லிவிடு" என்று சொன்னார்.

மறுநாள் பிரம்மசாரி, குருக்கள், ராஜா, ஊர் ஜனங்கள் எல்லாரும் கோவில் வாசலில் கூடினார்கள். ஸந்நிதானத்துக்கு எல்லாரும் போக இருந்தபோது, பிரம்மசாரி, ஸ்வாமி சொல்லிக் கொடுத்தது போலவே, "இத்தனை காலமாக ஸ்வாமியைத் தொட்டுப் பூஜை பண்ணிக் கொண்டிருக்கிற ஒரு சிவாசாரியாரிடம் போய்

Koviloor Digital Library

அந்த ஸ்வாமி மேல் கை வைத்துக் கொண்டு ஸத்யம் பண்ணு என்று கேட்பது அபசாரமாகப் படுகிறது. அதோடு என்னுடைய அல்ப வ்யவஹாரத்துக்குப் பரமேச்வரனை இழுப்பதும் முறையாகத் தோன்றவில்லை, ஆனதால், அவர் இந்தப் புளிய மரத்தைத் தொட்டுக்கொண்டு ப்ரமாணம் பண்ணினாலே போதும். பச்சை மரத்தைத் தொட்டுக் கொண்டு பச்சைப் பொய் சொல்ல எவரும் துணிய மாட்டார்களல்லவா?" என்றான்.

அவனுடைய பெருந்தன்மையைப் பார்த்து எல்லாரும் ஆஹாகாரம் செய்தார்கள். இது ஸ்வாமி ஆடின நாடகத்தினால் அவனுக்கு கிடைத்த லாபம்!

ராஜா குருக்களைப் பார்த்து, "பிரம்மசாரி சொல்வது யுக்தமாகத்தான் இருக்கிறது. ஆனபடியால் இந்தப் பச்சை மரத்தைத் தொட்டுக் கொண்டு ஸத்யம் பண்ணும்" என்று தீர்ப்புக் கொடுத்து விட்டான்.

அந்த நிலவரத்தில், எதற்கும் துணிந்த குருக்கள் அதே போலத் தாம் ஸ்வாமியை ஆவாஹனம் பண்ணி வைத்திருந்த அந்த விருக்ஷத்தைத் தொட்டபடியே ப்ரமாணம் பண்ணினார். "இந்தப் பிரம்மசாரி என்னிடம் கொடுத்து வைத்திருந்த அதே மூட்டையை, நான் அப்படியேதான் அவரிடம் திருப்பிக் கொடுத்தேன். இது ஸத்யம்" என்று அவர் சொன்னார்.

சொன்னாரோ இல்லையோ, உடனே அங்கே ஒரு ஜ்வாலை அவரைச் சுற்றி எழுந்தது; அதிலே அவர் பஸ்மமாகி விட்டார்!

யார், எந்தத் தப்புப் பண்ணினாலும் பொறுக்கலாம். ஆனால் தன்னை நம்பி ஒரு பொருளை ஒப்படைத்தவனை மோசம் பண்ணுவது, அப்புறம் ஸத்யத்துக்கும் தந்திரமாக மோசம் பண்ணப் பார்ப்பது, எல்லாவற்றுக்கும் மேல் ஜனங்களின் பாப பரிஹாரார்த்தம் தாம் பூஜை பண்ணுகிற

Koviloor Digital Library

ஸ்வாமியையே தம்முடைய மோசடிக்கு உடந்தையாக்கிக் கொள்ளப் பார்ப்பது என்பதாக குருக்கள் வரம்பு மீறிப் பண்ணிக் கொண்டே போனதால்தான் ஸ்வாமி அவரை எரித்துவிட்டார்.

இதைப் பார்த்து மலைத்துப் போன ராஜாவுக்கும் மற்றவர்களுக்கும் பிரம்மசாரி விஷயத்தைச் சொன்னான். உடனே ராஜா குருக்கள் வீட்டை நன்றாகச் சோதனை போடப் பண்ணினான். ஸ்வர்ண மூட்டை அகப்பட்டது. ஒரு முறை தானம் கொடுத்ததையே மறுபடியும் பிரம்ம சாரிக்கு மீட்டுக் கொடுத்து ரொம்பவும் சந்தோஷப் பட்டான் ராஜா.

குருக்களை தஹனம் பண்ணி விட்டதால், கச்யபேச் வரருக்கு 'தாஹகேச்வரர்' என்று புதிதாக ஒரு பெயர் ஏற்பட்டது. இன்றைக்கும் பேச்சு வழக்குத் தமிழில் அவரை 'எரிக்கட்டிச்சாமி', 'எரிச்ச முடியார்', 'எரிச்சாவடையார்' என்றெல்லாம் சொல்கிறார்கள். அந்த ஊரிலே எனக்குத் தெரிந்த ஸமீப காலம்வரையில் ஸாமான்ய ஜனங்கள் குற்றம் செய்ததாக நினைத்தவர்களை இந்த ஸ்வாமி முன்னால் ஸத்யம் பண்ணச் சொல்லும் வழக்கம் இருந்திருக்கிறது. கோர்ட்டில் கூசாமல் போய் சொன்னவர் கள் கூட இங்கே நிஜத்தைக் கக்கிவிடுவார்களாம்.

பெயருக்கு ஆசைப்படாதவன்

அகஸ்த்யர் உத்தரவுப்படியே ஸ்வர்ணத்தைக் கொண்டு பிரம்மசாரி சேர்மாதேவியில் அணைகட்டி மாடு போன மார்க்கமாய், அணையிலிருந்து கால்வாய் வெட்டி, மடைகள், வடிகால்கள், ஏரிகள் எல்லாம் அங்கங்கே அமைத்து, பரந்தாரீயின் பெரிய மடுவில் கால்வாயைக் கொண்டு போய் முடித்தான். ஸீனியபுரத்தில் கலாசி தன் வீட்டை இடித்துக் கால்வாயைக் கட்டிக்கொண்டு போக

Koviloor Digital Library

அநுமதித்ததற்குப் பிரதியாக அங்கே அமைத்த மடைக்குக் கலாசி மடையென்றும், அந்த இடத்திலிருந்து கால் வாய்க்கே கலாசிக் கால்வாய் என்றும் பெயர் வைத்தான்.

அவளே இப்படிக் கேட்டுக் கொண்டாள் என்று சொல்வதுமுண்டு. எனக்கு அது அவ்வளவு ஸம்மதமாகப் படவில்லை. ஊருக்கு நன்மையாக வெட்டப்படும் ஒரு கால்வாய்க்காக நஷ்ட ஈடு இல்லாமல் தன் வீட்டையே கொடுத்தவளுடைய தியாகபுத்திக்கு நான் சொல்கிற கதைதான் ஸரியாய் இருக்கிறது. அவளுடைய பெயரை இவனாகவே வைத்து அவளுக்கு என்றைக்கும் புகழ் தேடிக் கொடுத்தான் என்பதே அவனுடைய குணச் சிறப்புக்கும் பொருத்தமாயிருக்கிறது.

அவள் பெயரைச் சிரஞ்ஜீவியாக்கியவன் – கால்வாய்க்கே காரணபூதம், கருவி எல்லாமாயிருந்தவன் – தன் பெயரே உலகுக்குத் தெரியாமலிருந்து அப்படியே போய்விட்டான்! இன்றைக்கும் ஆயிரக் கணக்கான ஏக்கர் சாகுபடிக்கும், ஆயிரக் கணக்கான மநுஷ்யர்கள், மிருகங்கள் குடிக்கவும் குளிக்கவும் நீரைத் தந்துகொண்டு அக் கால்வாய் மாத்திரம் இருக்கிறது. பேர் தெரியாதவனுடைய ஊரை வைத்து அதைக் 'கன்னடியன் கால்வாய்' என்றே சொல்கிறார்கள். 'கர்நாடக குல்யா' என்று சேரமாதேவி சாஸனத்தில் ஸம்ஸ்க்ருதப் பேர் கொடுத்திருக்கிறது. அந்த சாஸனத்தை திருவனந்தபுரம் ஸம்ஸ்தானத்தார் நல்ல படியாகக் காப்பாற்றிக் கொடுத்திருக்கிறார்கள்.

'மிளகுப் பிள்ளையார்'

இத்தனை செய்தவனுக்கு அஹம்பாவம் வந்துவிடப் போகிறதே, ஈச்வர க்ருபை இல்லாவிட்டால் மனிதன் ஸாதித்த எந்த ஸாதிப்பும் பலன் தராது என்ற விநய பாவம் அவனுக்குப் போய்விடப் போகிறதே என்று ஸ்வாமி ஒரு

Koviloor Digital Library

சோதனை பண்ணினார். அணையும் கால்வாயும் கட்டி முடிந்ததோ இல்லையோ அப்புறம் இரண்டு மூன்று வருஷம் மழையே பெய்யவில்லை. தாம்ரபர்ணி ஆறே வற்றிவிட்ட பிறகு அணையையும் கால்வாயையும் வைத்துக் கொண்டு என்ன பண்ணுவது?

ஆசாரிய ஸ்வரூபமான அகஸ்த்யர் மூலமே ஈச்வரனை உபாஸித்த பிரம்மசாரி, இப்போதும் அவரே தஞ்சமென்று அந்தச் சேர்மாதேவி தாம்ரபர்ணி மணலில் தலைகீழாக நின்று கொண்டு பகீரதன் மாதிரி தபஸ் பண்ண ஆரம்பித்தான். தன்னுடைய ப்ரதிக்ரஹ தோஷம் போக வேண்டுமென்ற எண்ணம்கூடப் போய் உலகத்துக்கு உபகரிக்க வேண்டுமென்பதற்காகவே, வீடு, வாசல், பிள்ளை குட்டி எதுவுமில்லாத ஏகாங்கிக்கட்டை இப்படியெல்லாம் கஷ்டப்பட்டான்.

அகஸ்த்யர் பிரத்யக்ஷமானார். சோதனையில் தேறிய அவனை சிலாகித்தார். அங்கே ஒரு மகா கணபதியைப் பிரதிஷ்டை பண்ணினார். “மிளகுப் பொடியில் ஜலம் விட்டு கெட்டியாகக் கலந்து இந்தக் கணபதியின் உடம்பு பூராவும் அப்பிவிடு. அப்புறம், இந்த ஜலக் கஷ்டத்தில் எப்பாடு பட்டாவது குடம் குடமாகத் தீர்த்தம் கொண்டு வந்து விக்ரஹத்தின் ரூபமே கண்ணுக்குத் தெரியாதபடி தட தடவென்று அதற்கு அபிஷேகம் பண்ணு. மழை கொட்டித் தீர்த்துவிடும். தாம்ரபர்ணியில் பூர்ணப் பிரவாஹம் ஏற்பட்டு, அணை, வாய்க்கால் எல்லாம் நிரம்பிவிடும்” என்றார்.

அப்படியே பண்ணினான். அப்படியே மழையும் கொட்டி அன்றிலிருந்து அவனுடைய சாச்வத தர்மமாகக் கால்வாய் ஐந்தாறு நூற்றாண்டுகளாக இன்னமும் பயன் தந்து கொண்டிருக்கிறது. அகஸ்த்யர் அநுக்ரஹித்தபடி ‘ஆசந்த்ரார்க்கம்’ அவன் கீர்த்தி இப்படியே நிலவுமென்பதில் ஸந்தேஹமில்லை.

Koviloor Digital Library

இப்போதும் எப்போதாவது மழை தப்பினால் அந்த சேர்மாதேவிப் பிள்ளையாருக்கு மிளகுப் பொடிக் காப்பு சார்த்தி அபிஷேகம் பண்ண, உடனே மழை கொட்டி விடுகிறதாம். அங்கேயுள்ள வேத பாடசாலைக்குப் பக்கத்திலுள்ள கால்வாய் மடையின் முன்னால் வருஷா வருஷம், மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும், ஒரு நாள் மஹா கணபதிக்குப் பிரார்த்தனை நடத்துகிறார்கள். 'மிளகுப் பிள்ளையார்' என்றே அவருக்குப் பேர் சொல்கிறார்கள்.

அந்நாளில் விலைவாசி, கூலி எல்லாம் குறைவாயிருந்ததால், கால்வாய் கட்டின பிற்பாடும் பவுன் மணிகளில் பாக்கியிருந்தது. கால்வாய் புறப்படுமிடத்தில் நதியின் ஸ்நான கட்டத்தில் சிவாலயம் ஒன்றைக் கட்டினான். அதற்கு சாச்வத பூஜைக்கான மான்யமும் வைத்தான். 'அப்பன் கோயில்' என்பதாக அது நித்ய பூஜையுடன் இருந்து வருகிறது.

அப்படியும் ஸ்வர்ணம் மிஞ்சியது. அதைக் கொண்டு அந்த ஆலயத்தின் அங்கமாகவே அன்ன சத்திரமும் வைத்தான். பிற்பாடு திருவாங்கூர் ராஜாங்கத்தாரும் திரவிய ஸஹாயம் செய்து இந்த ஸந்தர்ப்பணை நின்று போகாமல் நன்றாக ரக்ஷித்து நல்ல ஸ்திதிக்கு கொண்டு விட்டிருக்கிறார்கள்.

படிப்பினை : ஒருமைப்பாடு

வயிற்றுக்கு அன்னம், ஆத்மாவுக்கு ஆலய தர்சனம், இரண்டுக்கும் வேண்டிய தீர்த்தம் — ஸ்நானமில்லாமல் ஆத்மாபிவிருத்திக்கான ஆசாரம் ஏது? அப்படிப்பட்ட தீர்த்தம் — எல்லாம் விசேஷமாக உபகரித்த பிரம்மசாரியைப் பற்றிச் சொல்லி விட்டு நம் கதையைப் பார்த்தால் எப்படியிருக்கிறது? எத்தனையோ நூறு வருஷம்

Koviloor Digital Library

கழித்து அவன் கதையைச் சொல்லி ஸந்தோஷப் படுகிறோமே! நம்மைப் பற்றி அறுநூறு வருஷத்திற்கப்புறம் யாராவது நினைத்துப் பேசுவார்களா? ஒருவேளை இப்படிப் பேசினால் பேசக் கூடும்: "இன்டெக்ரேஷன், ஒருமைப்பாடு, ஹா ஹூ என்று ஓயாமல் வாய்ப் பந்தல் போட்டுக் கொண்டே, இந்தப் பேச்சு ஜோடனை எதுவும் தெரியாமல் அதற்கு முன் ஆயிரம் பதினாயிரம் வருஷங்களாக, எல்லாரும் ஒரே ஈச்வரனின் குழந்தைகள் என்ற பொதுவான மதாபிமானத்தில் ஒன்றாகச் சேர்ந்திருந்த அத்தனை ஜனங்களுக்கும் அந்த அபிமானத்தைப் போக்கிக் கட்சியபிமானம், பாஷாபிமானம், ஜாதி அபிமானம் என்று உண்டாக்கி ஒரேயடியாகப் பிரித்துப் பிரித்து வைத்தவர்கள்; 'ஸயன்ஸூம் டெக்னாலஜியும் ஸர்வ தேசங்களையும் ஒன்றுக்கொன்று கிட்டத்தில் கொண்டுவந்து விட்டது' என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டே ராஜ்யத்துக்கு ராஜ்யம், ஏன் ஜில்லாவுக்கு ஜில்லா, கிராமத்துக்குக் கிராமம்கூட எல்லைச் சண்டை, ஜலப் பங்கீட்டுச் சண்டை என்று மண்டையை உடைத்துக் கொண்டவர்கள்" என்று வேண்டுமானால் நம்மைப் பற்றிப் பேசுவார்களோ என்னவோ? அப்படியாகாமலிருக்கத்தான், கன்னட வாஸனையே இல்லாத தெற்குக் கோடித் தமிழ் ஜனங்களுக்காக ஒரு கன்னடக்காரர் மலையாள ராஜாவின் பொருளைக் கொண்டு மஹத்தான உபகாரம் செய்த இம் மாதிரியான கதைகளைச் சொல்லிச் சொல்லி மனஸில் பதியும்படிச் செய்வது.

Koviloor Digital Library

மதத்தைக் காத்த மாதரசியர்

ஞானமார்க்கம் காட்டிய இரு ராணிகள்

நம்முடைய மதத்துக்குப் பெரிய ஆபத்து வந்தபோதெல்லாம் அதை ரக்ஷித்துக் கொடுத்திருப்பது ஸ்திரீகுலம்தான்.

நம் மதத்தின் சகல தர்மங்களுக்கும் வேராக இருப்பவர்களே பெண்கள்தான் – **"ஸ்த்ரீ மூலம் ஸர்வ தர்மா:"** என்றே சொல்லியிருக்கிறது.

நம் மதத்துக்கு என்ன பெயர்? 'ஹிந்து மதம்' என்பது தப்பு. அது வெளி தேசத்தவர்கள் வைத்த பெயர். வேத மதம் என்பதே ஸரியான பெயராகும். அந்த வேதத்தை ஒரு தேவதையாகச் சொல்லும்போது புருஷ தெய்வமாகவா சொல்கிறோம்? இல்லை. 'வேத மாதா' என்றுதான் அம்மா வாகச் சொல்கிறோம். நம் மதமே ஸ்திரீயாக இருக்கிறது என்பதற்கேற்ப அது ஸ்திரீகளாலேயே ஜீவன் பெற்று வந்திருக்கிறது.

"கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்று, அவன் நல்லதோ கெட்டதோ எது பண்ணினாலும் அவன் மனஸுப்படியேதான் போக வேண்டுமென்று சரணாகதி செய்தவர்களாகவே நம் தேசத்தின் மஹா பதிவிரதைகளில் பெரும்பாலோர் இருந்தாலும், இதற்கு வித்தியாசமாக, புருஷன் தப்பாகப் போகும்போது அவனைத் திருந்தப் பண்ணினவர்களும் இருந்திருக் கிறார்கள்.

Koviloor Digital Library

பொதுவாக எல்லா ஜனங்களும் இருக்கிற மாதிரி இக லோக ரீதியிலேயே போயிருக்கக்கூடிய பதியையும், வயிற்றில் பிறந்த குழந்தைகளையும் ஞான மார்க்கத்தில் திருப்பிவிடும் அளவுக்கு மஹாஞானிகளாக இருந்த ஸ்த்ரீகளும் நம் தேசத்தில் இருந்திருக்கிறார்கள் என்று நம் புராதனமான புராணங்களிலிருந்தும் ஞான நூல்களிலிருந்தும் தெரிகிறது. அப்படிக் குறிப்பாக இரண்டு ராணிகளை சொல்ல வேண்டும்.

ஒருத்தி சூடாலா. அவளைப் பற்றி 'யோக வாஸிஷ்டம்' என்ற உத்தமமான ஞானக்ரந்தத்தில் வருகிறது. அவள் ஆத்மாநாத்ம விசாரம் செய்துகொண்டு, அதோடு யோக ஸித்திகளெல்லாமும் கைவரப்பெற்ற மஹா ஞானியாக இருந்திருக்கிறாள். அவளுடைய பதி — சிகித்வஜன் என்கிறவன் — குறைசொல்லும்படி இல்லா விட்டாலும் எல்லார் மாதிரியும் லோக ரீதியிலேயே ராஜாவாக இருந்தவன். ஆனால் காலம் போகப்போக, அவனைச் சூடாலாவின் இன்ஃப்ளூயென்ஸே ஞான மார்க்கத்துக்குத் திருப்பிவிடுகிறது. தர்ம-அர்த்த-காம-மோக்ஷங்களில் மோக்ஷம் நீங்கலாக மற்ற மூன்றுக்கும் ஒரு பத்னியே பதிக்குத் துணையாயிருப்பவள் என்றுதான் சாஸ்த்ர வசனம். இங்கேயோ பதியின் மோக்ஷத்திற்குப் பத்னியே துணை செய்திருப்பதாகக் கதை வித்யாஸமாக — அழகான வித்யாஸமாக — போகிறது.

இன்னொரு ராணி ஞானி, மதாலஸா என்கிறவள். அவள் கதை 'மார்க்கண்டேய புராண'த்தில் வருகிறது. உள்ளுக்குள்ளே ஞானியாக இருந்தாலும் வெளியிலே குடும்ப ஸ்த்ரீ மாதிரியே அவள் இருந்திருக்கிறாள். அவளுக்கு நாலு பிள்ளைகள் பிறக்கின்றன. முதல் மூன்று பிள்ளைகளுக்கும் சிசுப் பிராயத்தில் தாலாட்டுப் பாடுகிற நாளிலிருந்து அவள் ஞானோபதேசம் செய்கிறாள்.

Koviloor Digital Library

அதனால் அவர்கள் ராஜ்யத்தை விட்டுவிட்டு நிவிருத்தி மார்க்கத்துக்குப் போய் விடுகிறார்கள். லோகத்திலே தர்ம ராஜ்யம் நடக்க வேண்டும் என்பதற்காக நாலாம் பிள்ளையை மட்டும் அவள் நல்ல ராஜாவாக இருப்பதற்கான உபதேசங்கள் கொடுத்து பிரவிருத்தி மார்க்கத்திலேயே பழக்குகிறாள். ஆனாலும் வயோதிக தசையில் தன்னுடைய பதியுடன் அவள் தபஸுக்காக காட்டுக்குப் போகும்போது, அந்தப் பிள்ளையையும் பிற்காலத்தில் உரிய சமயத்தில், நிவிருத்திக்குத் திருப்புவதற்கான ஞானோபதேசத்தை எழுதி ஒரு மோதிரத்திற்குள் வைத்து, அதை அவனுக்குப் போட்டு விட்டே போகிறாள். அப்படியே பிற்பாடு அவனும் ஞான வழிக்குத் திரும்புகிறான்.

தேசத்தையே ரக்ஷித்த பெண்டுகள்

இதெல்லாம் 'இன்டிவிஜுவல்' என்கிற தனி மனிதர்களுக்குப் பெண்பாலார் ஆத்ம ரீதியில் செய்த உபகாரம். நான் சொல்ல வந்தது இதையல்ல. தங்களுடைய மதாபிமானத்தால் தேசத்தையே ரக்ஷித்த பெண்டுகளைப் பற்றிச் சொல்லவே நினைத்தேன்.

மதத்துக்கு வரும் ஆபத்து பற்றி ஆரம்பித்தேன். புருஷன் வேத தர்மத்தை விட்டு வேறே மதத்துக்குப் போகிறபோது, 'அவன் இஷ்டம்தான் நம்மிஷ்டம்; எது பண்ணினாலும் பண்ணிவிட்டுப் போகட்டும்' என்றில்லாமல், அவனையும், அவனோடு சேர்த்து ஒரு ராஜ்யம் முழுவதையும் வைதிகத்துக்குத் திருப்பிக் கொண்டு வரக் காரணமாயிருந்த ஒரு பத்தினியை நினைத்துக் கொண்டுதான் இந்தப் பேச்சை ஆரம்பித்தேன்.

அவளுக்குப் பெயர் மங்கையர்க்கரசி. 'மங்கையர்க் கரசியார்' என்று மரியாதை கொடுத்து அறுபத்து மூன்று

Koviloor Digital Library

நாயன்மார்களில் ஒருவராக அவளைச் சொல்லியிருக்கிறது. காரணப் பெயராகவும் அதை நினைக்கும்படி நிஜமாகவே ஸ்திரீ குலத்துக்கு, மங்கையருக்கு, குண விசேஷத்தால் ராணியாக - அரசியாக - இருந்தவள் அவள். வாஸ்தவத்திலும் பாண்டிய நாட்டின் ராணியாயிருந்தாள்.

ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னாலிருந்த பாண்டிய ராஜாவின் பத்தினி அவள். சோழ ராஜாவின் பெண்ணாகப் பிறந்தவள். அந்தக் காலத்தில் சோழர்கள் ஆதிக்கம் குன்றியிருந்தார்கள். வடக்கே பல்லவ மஹேந்திர வர்மாவும், தெற்கே பாண்டியன் நின்றசீர்நெடுமாறன் என்கிற மாறவர்மாவும் தலைதூக்கி யிருந்தார்கள். இந்த இரண்டு ராஜாக்களுமே வைதிக மதத்தை விட்டு ஜைனத்துக்குப் போயிருந்தவர்கள். முதலில் அப்பர் ஸ்வாமிகளின் பிரபாவத்தினால் மகேந்திர வர்மா வைதிகத்துக்குத் திரும்பி வந்தான்.

திலகவதியாரும் திருநாவுக்கரசரும்

அந்தக் கதையைக் கொஞ்சம் சொல்கிறேன். அப்பரால் அந்தப் பல்லவ ராஜா சமணத்தை விட்டு சைவம் தழுவினது பின் கதை. முன்னாடி, அப்பரே சைவத்தை விட்டுவிட்டுச் சமணத்துக்குப் போயிருந்தவர் தான். அப்படிப்பட்டவர் சைவசமயக் குரவரில் ஒருவராக, நால்வரில் ஒருவராக — நெஞ்சுருகி நெஞ்சுருகி, கேட்கிற நம்முடைய நெஞ்சும் உருகும்படி தேவாரம் பாடி ஸாக்ஷாத் ஈச்வரனிடமே வாகீசர், நாவுக்கரசர் என்று பட்டம் வாங்கினவராக — ஆனாரென்றால் இப்படி அவரை 'ரீ-கன்வெர்ட்' பண்ணின பெருமையும் ஒரு ஸ்திரீக்குத்தான் போகிறது.

அப்பர் சமணராக இருந்த அப்போது அவருக்கு அந்தப் பேரோ, திருநாவுக்கரசு சுவாமிகள் என்ற பேரோ

Koviloor Digital Library

கிடையாது. தர்மஸேனர் என்ற பேரே இருந்தது. அதுவும் அவருக்கு அப்பா அம்மா வைத்த பெயரில்லை. பெற்றோர் வைத்த பெயர் மருள்நீக்கியார் என்பது. மருள் என்பது மாயை. அப்புறம் இவருக்கே ஏதோ மாயை உண்டாகித் தான் சைவத்தை விட்டு ஜைனத்துக்குப் போய் அந்த மதத்தில் ரொம்பக் கற்றுத் தேர்ந்து ஆசார்ய ஸ்தானம் அடைந்து 'தர்மஸேனர்' என்று பேர் வைத்துக் கொண்டார். அவரை மறுபடி வைதிக மதத்துக்குத் திருப்பியது அவருடைய தமக்கைதான். 'திலகவதி' என்பது அவள் பெயர். 'திலகவதியார்' என்று மரியாதையாகச் சொல்வார்கள். இவளுக்கும் இதையே காரணப் பெயராகச் சொல்லும்படி 'மாதர் குல திலகம்' என்கிறபடி இருந்தாள்.

இவளுடைய பாதிவ்ரத்யம் [கற்பு நெறி] ஆச்சரியமானது. கல்யாணமான அப்புறம் பதியிடம் பரம பக்தி வைத்த உத்தம ஸ்திரீகள் பலர் இருந்திருக்கிறார்கள் என்றால், திலகவதியோ தனக்கு நிச்சயம் பண்ணிய வரன் கல்யாணம் நடக்கு முன்பே மரணமடைந்து விட்டதற்காகத் தானும் 'ஸதி' தர்மப்படி பிராணனை விட்டுவிட நினைத்தவள். அவள் குழந்தையா யிருக்கிறபோதே கலிப்பகையார் என்ற ஸேநாதிபதியை அவளுக்குப் பெற்றோர் நிச்சயம் செய்திருந்தார்கள். அப்புறம் கலிப்பகையார் ஏதோ யுத்தம் என்று வடதேசம் போய் விட்டார். அவர் திரும்பி வந்து இவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு முன்பே இவளுடைய தகப்பனார் கண்ணை மூடிவிட்டார். உடனே பரம பதிவிரதையான தாயாரும் உடன்கட்டை ஏறிவிட்டாள். திலகவதி, அவளுடைய தம்பி மருள்நீக்கி இரண்டு பேருக்கும் அப்போது சிறு வயதுதான். அப்படி இருந்தும் அந்த அம்மாள் இவர்கள் என்ன ஆவார்களோ என்று நினைக்காமல் பதி பக்தியினால் தானும் புருஷனோடு உயிரை விட்டு விட்டாள்.

Koviloor Digital Library

இப்படி அப்பா அம்மா இரண்டு பேரும் போய் கன்யாப் பெண்ணும் தம்பியும் நிர்க்கதியா யிருக்கும்போது இடிக்குமேல் இடிமாதிரி யுத்தரங்கத்திலே இருந்து சேதி வந்தது – கலிப்பகையும் வீர ஸ்வர்க்கம் அடைந்துவிட்டா ரென்று. அப்போதுதான் ஆச்சரியமான பதிவிரதா தர்மத்தோடு திலகவதி, "அவரை எனக்குப் பதி என்று பெற்றோர்கள் நிச்சயம் பண்ணி விட்டதால் என்னை அவருக்கு மனஸினால் கன்யாதானம் பண்ணிக் கொடுத்து விட்டதாகத்தான் அர்த்தம். அதனால் நானும் இப்போது என் தாயார் காட்டிய வழியில் பதியின் பின்னே போகிறேன்" என்று பிராணத்தியாகத்துக்குப் புறப்பட்டு விட்டாள். இவளுக்கென்று அவரிடம் காதல், கீதல்கூட இல்லை; அப்படி இருந்தாலாவது தன் மனஸை அவருக்கு அர்ப்பித்துவிட்டதால், அவர்போன பின் இவளால் ஜீவிக்க முடியவில்லை என்பது நியாயந்தான் எனலாம். இவளோ தாயார் தகப்பனார் நிச்சயம் பண்ணிவிட்டார்கள் என்ற ஒன்றுக்காகவே அந்த வரனைப் பதியாகக் கொண்டு விட்டாள்.

இப்படி இவள் உயிரை விடுகிறேன் என்று புறப்பட்டபோது மருள்நீக்கி ரொம்ப அழுதார். தாயார்-தகப்பனார் போன பின் தமக்கையின் ரக்ஷணையை நம்பியே தான் வாழ்வதாகவும், சின்னப் பையனான தன்னைத் தனியாய் விட்டு விட்டு அவளும் போகிறாளென்றால் அவளுக்கு முந்தித் தான் தற்கொலை பண்ணிக் கொள்வேன் என்றும் தீர்மானமாகச் சொன்னார்.

தம்பி இப்படிச் சொன்னதும் அவள் மனஸை மாற்றிக் கொண்டாள். பிராணனை விடாவிட்டாலும், இனி வேறு எவரையும் பதியாக வரிப்பதில்லை என்று திடமாக நிச்சயித்துக் கொண்டு, வைதவ்ய [விதவைகளுக்குரிய]

Koviloor Digital Library

ஆசாரத்தை மேற்கொண்டு சிவ பக்தி, சிவாலயப் பணி செய்து கொண்டு தபஸ்வினியாக வாழ்நாளைக் கழிக்க ஆரம்பித்தாள். தம்பியையும் பொறுப்போடு கவனித்து வளர்த்தாள்.

கொஞ்சம் வயதானதும் மருள்நீக்கியார் மேலே படிப்பதற்காகப் பிறந்த ஊரான திருவாமூர் கிராமத்தை விட்டுத் திருப்பாதிரிப்புலியூருக்கு – திருப்பாப்புலியூர் என்று பேச்சிலே சொல்வது – போனார். பாடலி விருக்ஷம் என்பதைத் தமிழில் பாதிரி மரம் என்பார்கள். அந்த மரம் ஸ்தல விருக்ஷமாக இருந்த ஊருக்குத் திருப்பாதிரிப்புலியூர் என்றும், பாடலீபுத்ரம் என்றும் பெயர். வடக்கே அசோகனுடைய பாடலீபுத்ரம் மாதிரி தெற்கே இது. படிக்கப் போன மருள்நீக்கியார் அங்கே சமணர்கள் பெரிய கல்விசாலை வைத்திருப்பதைப் பார்த்தார். கல்வியறிவைப் பொது மக்களுக்கெல்லாம் பரப்புவதில் சமணர்கள் நிறையத் தொண்டு செய்திருக்கிறார்கள். சமண முனிவர்கள் வாழ்கிற இடத்துக்கு உள்ள 'பள்ளி' என்ற பெயரே இப்போதும் ஸ்கூலுக்குப் பேராக இருக்கிறது!

மிஷனரிகள் வைக்கிற ஸ்கூலில் சேர்ந்து அப்படியே கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய மதத்துக்கு இழுக்கப்படுகிற மாதிரி, மருள்நீக்கியாரின் கதையும் ஆயிற்று. நல்ல புத்திமானான அவரை ஜைனர்கள் தங்கள் மதத்தில் இழுத்துக் கொண்டு விட்டார்கள். அவரும் அதில் ஒரு ஆசாரியராக ஆகி, தர்மஸேனர் என்ற பெயரில் புகழோடு இருந்து வந்தார். முக்யமாக, அப்போது பல்லவ ராஜா மஹேந்திர வர்மாவே சமணனாக இருந்ததால் royal patronage–ல் அந்த மதம் அப்போது செல்வாக்கு அடைந்திருந்தது.

இங்கே திலகவதி திருவாமூரை விட்டுக் கொஞ்சம் தள்ளிக் கடில நதிக்கு வட கரையில் பண்ணுருட்டிக்குப்

Koviloor Digital Library

பக்கத்தில் உள்ள திருவதிகை என்கிற பெரிய சிவ க்ஷேத்திரத்துக்கு வந்து, அங்கே கோவிலைப் பெருக்கி மெழுகுவது, நந்தவனத்திலிருந்து பூப்பறித்து மாலை தொடுத்துத் தருவது முதலான சிவ புண்ணியங்களைப் பண்ணிக் கொண்டிருந்தாள்.

தம்பி சைவத்தை விட்டு விட்டு வேறே மதத்துக்குப் போய்விட்டானென்று அவள் கேள்விப்பட்டாளோ இல்லையோ ஏற்கனவே தாயார், தகப்பனார், பதியாக வரிக்கப்பட்டவர் ஆகியவர்கள் செத்துப்போனதை விட இதுதான் அவளுக்குத் தாங்க முடியாத கஷ்ட்மாயிற்று. ஸதா ஸர்வதா ஈச்வரனிடத்தில், “இப்படி வேத தர்மத்தை விட்டு வேறு வழியில் போய் விழுந்திருக்கிற ஸஹோதரனை நீதான் கை தூக்கி விட வேண்டும்” என்று கதறிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

அவள் இதில் எவ்வளவு தீவிரமாகத் தவித்திருக்க வேண்டும் என்பது ஸாக்ஷாத் சிவபெருமானே அவளுடைய ஸ்வப்னத்தில் ப்ரஸன்னமானதிலிருந்து தெரிகிறது. கனவில் ஈச்வரன் வந்து, “கவலைப்படாதேயம்மா! போன ஜன்மாவில் உன் தம்பி பண்ணின தபஸில் கொஞ்சம் குறையேற்பட்டதால்தான் இப்போது பர மதம் சேர்ந்திருக்கிறான். அந்தக் கர்மா தீருவதற்காக அவனுக்குச் சூலை நோயைத் தண்டனையாகக் கொடுத்து, அதன் வழியே அவனை என்னிடம் திருப்பிக்கொள்வேன்” என்று வாக்குக் கொடுத்தார்.

சூலை நோய் என்பது ஒரு வயிற்று உபாதி. குடலை முறுக்கிப் பிழிந்து வலியெடுக்கும். பிழிந்தால்தானே அழுக்கு – கர்மா – போகும்?

தர்மஸேனர் சூலை நோயில் அவஸ்தைப்பட்டார். அவரோடு கூட இருந்த சமணர்கள் என்னென்னவோ

Koviloor Digital Library

வைத்யம், மாந்த்ரீகம் எல்லாம் பண்ணியும் பிரயோஜன மில்லாமல் போயிற்று.

பிராணனே போய்விடும் போலத் துடித்துக்கொண் டிருந்த தர்மஸேனருக்கு அக்காவைப் பார்க்க வேண்டுமென்று ரொம்பவும் ஆசையாயிற்று. அவளிடத்தில் அவருக்கு மிகவும் பாசம். மதம் மாறினது அவளுக்குப் பிடிக்காது என்றே இத்தனை காலம் அவளைப் பார்க்காமல் இருந்தார். இப்போது உயிரே போகிறது என்கிற போது கண்ணை மூடுமுன் அவளைப் பார்க்க வேண்டும் என்று தோன்றவே அவளுக்கு ஆள் அனுப்பினார்.

இவருக்கு அவளிடமிருந்ததைவிட அவளுக்கு இவரிடம் வாஞ்சை ஜாஸ்தி. இவருக்காகத்தான் அவள் தன் உயிரை விடாமல் வைத்துக் கொண்டதே. ஆனாலும் இப்போது ஆள் வந்து சேதி சொன்னதும், அவள் என்ன பண்ணினாள்? தம்பியிடமிருந்த அபிமானத்தையும்விட அதிகமாக அவளுக்கு மதாபிமானம் இருந்தது. அதனால் உயிருக்குயிரான தம்பி உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த அந்த சமயத்திலும் அவள் மனஸைக் கல்லாக்கிக் கொண்டு, ‘ஜைன வேஷத்திலிருக்கிற என் தம்பியை நான் பார்க்க மாட்டேன். அவன் இருக்கிற சமணப் பள்ளிக்குள் காலெடுத்து வைக்கவும் மாட்டேன்” என்று சொல்லி அனுப்பிவிட்டாள்.

நம்முடைய ஸ்திரீகளுடைய மதப் பற்று எப்படிப் பட்டது என்று இங்கே ‘பெரிய புராண’த்தின் வாயிலாகத் தெரிந்து கொள்கிறோம்.

தர்மஸேனருக்குத் தாங்கள் செய்த மந்திர தந்திரம், வைத்தியம் எதுவும் பலிக்காமல் போனதும் பாடலி புத்ரத்துச் சமணர்கள் இவரால் நம் பெயர் கெட்டுவிடப் போகிறதே என்று அவரைக் கைவிட்டு விட்டார்கள்.

Koviloor Digital Library

திருவதிகைக்கு அவர் அனுப்பியிருந்த ஆள் திரும்பி வந்து திலகவதி வர மறுத்துவிட்டாள் என்று சொன்னான்.

மருள் நீக்கியாரை நடுவே மூடி தர்மஸேனராக்கியிருந்த மருளும் நீங்குவதற்குக் காலம் வந்தது. அக்காவின் காலில் போய் விழுந்து விடுவோம் என்று அவருக்குத் தோன்றியது. ஜைன வேஷத்தில் தன்னைப் பார்க்க அவள் ஸஹிக்கமாட்டாள் என்பதால் அதுவரை உடுத்திக்கொண்டிருந்த பாயை அவிழ்த்து வேஷ்டி கட்டிக் கொண்டு, மயில் பீலியையும் போட்டுவிட்டுத் திருவதிகைக்குப் போனார்.

அங்கே தபஸ்வினியாக உட்கார்ந்திருந்த அக்காவை நமஸ்காரம் பண்ணி, "இந்தச் சூலை நோயின் சித்ரவதை தீர நீதான் கதி" என்றார்.

அன்பு மனஸ் கொண்ட அவளுக்கு உள்ளம் உருகிவிட்டது. "வயிற்று வலி நிவிருத்திக்காகவும், அதை விட நாஸ்திக நிவிருத்திக்காகவும் திருநீறு தருகிறேன்" என்று சொல்லிப் பஞ்சாக்ஷரத்தால் மந்திரித்து விபூதி கொடுத்தாள்.

'மதக் கொள்கை எப்படி வேண்டுமானாலும் போகட்டும், வியாதி தீர்கிறதென்றால் ஸரி' என்று குழந்தையை மசூதிக்குத் தூக்கிக் கொண்டு போய் ஊதிக்கொண்டு வருகிறோமல்லவா? இவரோ இன்னம் பக்குவப்பட்டவர். அக்காள் கொடுத்த விபூதியைப் பயபக்தியோடு உடம்பு முழுக்கப் பூசிக்கொண்டார்.

சூலை தீரச் சூலபாணிதான் கதி என்று தம்பியை அழைத்துக்கொண்டு கோயிலுக்குப் போனாள் திலகவதி.

அங்கே வயிற்று வலி ஒரு பங்கு என்றால், பர மதத்துக்குப் போனோமே என்ற பச்சாத்தாபம் அதைப் போலப் பல மடங்கு மனஸில் வேதனை தர மருள் நீக்கியார் போய் மனஸார மன்னிப்பு வேண்டினார். பச்சாத்தாபப்பட்டு விட்டால் ஈச்வராநுக்ரஹம்

Koviloor Digital Library

கிடைத்துவிடும். அப்படி மருள் நீக்கியாருக்குக் கிடைத்த ஈசனருளினாலேயே தமிழ் தேசத்துக்கும் மகா பாக்யம் கிட்டிற்று. அவருக்கு ஸ்தோத்திரம் பாடும் சக்தி வந்து, **"கூற்றாயினவாறு விலக்ககில்லீர்"** என்று பதிகம் பாடி விண்ணப்பிக்க ஆரம்பித்து விட்டார். அவருக்கு வந்த பெரிய கஷ்டத்திலிருந்தே நமக்கெல்லாம் தேவாரம் கிடைக்கப் பண்ணிவிட்டான் பகவான்!

சூலை நோய் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. அப்போது அவர் செய்த பதிகத்தைக் கேட்டு மெச்சிய திருவதிகை வீரட்டானேச்வரர் அவருக்கு நாவுக்கரசர் — வாகீசர் — என்ற புதுப் பெயரை வைத்து, கடல் மடையாக அன்றிலிருந்து அநேகம் தேவாரங்களைப் பாட அருள் பண்ணினார்.

அவருக்கு 'அப்பர்' என்று பெயர் வைத்தது ஞான ஸம்பந்தமூர்த்திகள்.

இது பிற்பாடு நடந்த ஸம்பவம். இதற்கு முந்தி, பாதிரிப்புலியூர் ஜைனர்கள் தங்களுடைய தர்மஸேனர் ஈச்வராநுக்ரஹத்தால் சூலை தீர்ந்து, உடனே ஈச்வர பக்தியை எங்கேயும் பரப்பக்கூடிய தேவாரங்களைப் பாட ஆரம்பித்து விட்டார் என்று அறிந்ததும், தங்கள் மதத்துக்கு ஆபத்து வந்து விட்டது என்று பயந்து, மஹேந்திர வர்மப் பல்லவனிடம் போய் ஏதோ இல்லாததும் பொல்லாததுமாகக் கோள் சொன்னார்கள். அதைக் கேட்டுக் கொண்டு அவனும் திருநாவுக்கரசு ஸ்வாமிகளைச் சுண்ணாம்புக் காளவாய்க்குள் தள்ளினான். அங்கேயும் ஈச்வரனின் பாத கமலங்களை அவர் ஸ்மரித்துக் கொண்டிருக்கக் காளவாயே ஏர்-கண்டிஷன் பண்ணின மாதிரி ஆகிவிட்டது. ஸுஸ்வரமான வீணா கானத்தையும், ஸ்வச்சமாக ஜிலுஜிலுவென்று வீசுகிற சந்திரிகையையும், மந்தமாருதத்தையும், வஸந்த காலத்தின் மாதுர்யத்தையும்,

Koviloor Digital Library

வண்டுகள் ரீங்காரம் செய்கிற ஒரு குளிர்ந்த தடாகத்தின் இனிமையையும் ஒன்றாகச் சேர்த்து அநுபவித்தால் எத்தனை இன்பமா யிருக்குமோ அப்படிப்பட்ட பரமேச்வர பாதாரவிந்த அநுபவத்தை அந்தக் கொதிக்கிற காளவாய்க்குள் தாம் அநுபவிப்பதாக அவர் ஆனந்தமாகப் பாடினார்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

தன் தண்டனை அவரை ஒன்றும் பண்ணவில்லை என்றதும் ராஜாவுக்கு இன்னும் கோபம் வந்தது. அவருக்கு விஷம் கொடுக்கப் பண்ணினான். அப்புறம் யானையை விட்டு இடறப் பண்ணினான். எதனாலும் அவரைப் பாதிக்க முடியவில்லை. அப்புறம் கல்லிலே அவரைக் கட்டி ஸமுத்திரத்திலே கொண்டு போய்ப் போடப் பண்ணினான்.

"சொற்றுணை வேதியன்" என்று அப்போதுதான் அவர் தேவாரம் பாடினார்.

அவனுடைய அருள்துணை ஸமுத்திரத்தில் கல்லைக் கட்டி இறக்கினபோதும் காப்பாற்றாமல் விடாது என்று கானம் செய்தார்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

இப்படிப் பஞ்சாக்ஷரத்தின் துணையை நம்பி இவர் ஜபித்துக் கொண்டிருக்க சிவபெருமான் அருளில் அந்தக் கல் தூணே தெப்பமாக மிதந்து வந்து கரையிலே அவரை ஒதுக்கியது. இப்போதும் அந்த இடத்துக்குக் 'கரையேற

Koviloor Digital Library

விட்ட குப்பம்' என்று பெயர் இருக்கிறது. இதுவும் திருப்பாப்புலியூர் கிட்ட உள்ளதுதான்.

இந்த அற்புதத்தைப் பார்த்ததும் மஹேந்திர வர்மா வுக்குக் கண் திறந்தது. அவனும் ஜைன மதத்தை விட்டு வைதிக மதத்துக்குத் திரும்பி விட்டான்.

ராஜா வைதிக ஸமயத்துக்கு வந்ததும் பல்லவ ராஜ்யம் முழுதும் வேதநெறி தழைத்தோங்க ஆரம்பித்துச் சமணம், பௌத்தம் முதலிய புற சமயங்கள் மங்க ஆரம்பித்தன. அவன் வைதிக ஸமயத்துக்கு வந்ததற்குக் காரணம் அப்பர் ஸ்வாமிகள் என்றால் அவரே அப்படி வைதிகத்துக்கு வந்ததற்குக் காரணம் திலகவதியார்தானே? அப்பரால் நடந்த மஹா பெரிய மதத் தொண்டுக்கு அவள்தான் வித்து.

மங்கையர்க்கரசியாரும் திருஞானசம்பந்தரும்

பாண்டிய நாட்டில் அப்போதும் சமணர்களின் செல்வாக்கு அதிகம் இருந்தது. ராஜா மாறவர்மாவே அந்த மதத்துக்கு மாறிவிட்டான்.

"ஒருத்தரும் சிவாலயம் போகக் கூடாது; விபூதி இட்டுக் கொள்ளப்படாது" என்றெல்லாம் அவன் ஆக்ஞை பண்ணி விட்டான். 'யதா ராஜா ததா ப்ரஜா' — 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்பதால் ஜனங்களும் அதற்கு அடங்கி நடக்க வேண்டியிருந்தது.

எல்லாரையும் விட ஒரு ராஜாவுக்குக் கட்டுப்பட்டு அவன் நினைக்கிற பிரகாரமே பண்ண வேண்டியவர் மந்திரிதான்; இதே போல் ஒரு ஆண்பிள்ளைக்கு எல்லோரையும் விட அடங்கியிருக்க வேண்டியது அவனுடைய பெண்டாட்டிதான். பாண்டிய ராஜா விஷயத்திலோ, வெளிப்படக் காட்டிக் கொள்ளா விட்டாலும், அவனுடைய மந்திரி குலச்சிறையாரும்

Koviloor Digital Library

பத்தினி மங்கையர்க்கரசியும்தான் உள்ளூர அவன் ஆக்ஞைக்குக் கட்டுப்படாமலிருந்தது!

அந்த இரண்டு பேரும் சிவபெருமானிடத்தில் பரம பக்தி கொண்டவர்கள். ராஜா ஆக்ஞையை, பதியின் உத்தரவைப் பகிரங்கமாக அவர்கள் ஆக்ஷேபிக்க முடியா விட்டாலும், ரகசியமாக ஈச்வர ஆராதனையே பண்ணிக் கொண்டிருந்தார்கள். மங்கையர்க்கரசி புடவை, ரவிக்கைக்குள் விபூதி, ருத்ராக்ஷ தாரணம் பண்ணிக் கொள்வாளாம். பதி சொல்லை எதிர்த்துச் சண்டை போடாமல், அதற்காக சாச்வதமான ஸநாதன தர்மத்தையும் விட்டு விடாமல் இப்படி சாதுரியமாக நடந்து பார்த்தாள். ஆனாலும் அவளுக்கு மனஸை உறுத்திக் கொண்டுதானிருந்தது. 'மனஸ் ஸாக்ஷிப்படி புருஷனையும் அநுசரிக்க முடியவில்லை; தைரியமாக தர்மத்தையும் அநுஷ்டிக்க முடியவில்லையே' என்று வேதனைப்பட்டுக் கொண்டு, இதற்கு என்ன விமோசனம் என்று அவள் கவலைப்பட்டுக் கொண்டே இருந்தபோதுதான், அவளுடைய மனக் கவலைக்கு மருந்தாக அவளுக்கு ஒரு ஸமாசாரம் தெரிய வந்தது.

"ஸம்பந்தர் என்று ஓர் அருள் குழந்தை. அது சிவபக்தி மஹிமையால் தேவாரம் பாடிக் கொண்டே என்னென்னமோ அற்புதங்களைப் பண்ணியிருக்கிறது. அப்படிப்பட்ட குழந்தை இப்போது திருமறைக்காட்டில் — வேதாரண்யம் என்பது அதுதான் — அப்பரோடு கூட இருக்கிறதாம்; அது கால் வைக்கிற ஊரில் மற்ற மதம் போய், பூலோக கைலாஸமாகி விடுகிறதாம்" என்றெல்லாம் அவள் கேள்விப்பட்டாள்.

உடனே மந்திரியைக் கூப்பிட்டு ரஹஸ்யமாக ஆலோசனை பண்ணினாள். ஸம்பந்தரை எப்படியாவது மதுரைக்கு வர வைத்துவிட்டால் பாண்டியனையும் பிரஜை

Koviloor Digital Library

களையும் மறுபடித் தன் மதத்துக்குத் திருப்பி விடலாம்; அதுதான் விமோசனத்துக்கு வழி என்று தோன்றுகிறது என்று குலச்சிறையாரிடம் சொன்னாள். அவரும் ஒப்புக் கொண்டார்.

இரண்டு பேரும் சேர்ந்து ஸம்பந்த மூர்த்தி ஸ்வாமி களுக்குத் தூது அனுப்பினார்கள். அவரும் ஆனைமலை வழியாக வந்து சேர்ந்தார். கதையை ஓட்டமாக ஓட்டிக் கொண்டு போகிறேன்.

அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே — அவர் பதிகம் பாடவில்லை. என் மாதிரி உபந்நியாஸம் பண்ணவில்லை. ஒரு அற்புதமும் பண்ணவில்லை — வெறுமே அவருடைய தர்சன மாத்ரத்திலேயே மதுரை ஜனங்களுக்கு ஒரு பக்தி வந்து விட்டது. நடுவாந்தரத்தில் மங்கிக் கிடந்த மீனாக்ஷி ஸுந்தரேச்வர ஆலயத்துக்கு அவர் போக, ஜனங்களும் ராஜ ஆக்ஞை பற்றி ஞாபகமே இல்லாமல் அவரோடு கூட்டமாகப் போனார்களாம்.

இதையெல்லாம் பார்த்துவிட்டு ஜைனர்கள் ராஜாவிடம் போய், வசியம் பண்ணுகிற துர்மாந்திரீக சக்தியோடு ஒரு சின்னப் பிள்ளை வந்திருப்பதாகவும், அது தங்களுக்குக் "கண்டுமுட்டு" என்றும் சொன்னார்களாம். இந்தத் தகவலைக் கேட்டது தனக்குக் "கேட்டுமுட்டு" என்று பாண்டியன் சொன்னானாம். 'கண்டுமுட்டு' என்றால் கண்ணால் பார்த்ததாலேயே தீட்டு என்று அர்த்தம். 'கேட்டு முட்டு' என்பது காதால் கேட்கிறதாலேயே ஏற்படும் தீட்டு.

அவர்கள் ஸம்பந்தரைக் கண்டதாகச் சொன்னதைக் கேட்டதே தீட்டு என்று பாண்டிய ராஜா நினைத்திருக் கிறான்.

அந்த ஜைனர்கள் அன்றைக்கு ராத்திரி என்ன பண்ணினார்கள் என்றால் ஸம்பந்தர் தங்கியிருந்த மடத்துக்கு நெருப்பு வைத்து விட்டார்கள்! பரமேச்வர

Koviloor Digital Library

சித்தம் என்ன என்று அப்போது ஸம்பந்தருக்குப் புரிந்தது. "மதுரையில் மறுபடியும் விபூதி, ருத்ராக்ஷம் பரவ வேண்டும்; பிரஜைகள் சிவபக்தி செய்தால் அதற்காகத் தண்டிக்கிற ராஜாவுக்கே தண்டனை கொடுத்துத் திருத்த வேண்டும்" என்பதுதான் ஈச்வர சங்கல்பம் என்று தெரிந்து கொண்டார். அதனால் ஜைனர்கள் வைத்த நெருப்பு ராஜாவையே தாக்கித் தண்டிக்கட்டும் என்று நினைத்தார். **"அமணர் கொளுவுஞ்சுடர் பையவே சென்று பாண்டியற் காகவே"** என்று பாடினார்.

அந்தத் தீ வேகமாகப் போய் ராஜாவைத் தஹித்துப் பொசுக்கிவிடாமல் நிதானமாகவே, உயிர் போகிற மாதிரி கொடுமை பண்ணாமலே, அவனை வருத்த வேண்டும் என்ற கருணையால்தான் "பையவே" என்று சொன்னார் என்பார்கள்.

நெருப்பு பாண்டியன் வயிற்றிலே புகுந்து எரிச்சல் வலியாக வாட்டி தேஹம் முழுக்கப் பரவ ஆரம்பித்தது. 'வெப்பு நோய்' என்று அதைச் சொல்லி யிருக்கிறது.

அப்பருக்கும் சூலைநோய் என்று வயிற்றில் உபாதை கொடுத்தே ஈச்வரன் ஆட்கொண்டான். அவர் அப்போது தாமே போய்த் திலகவதியாரின் காலில் விழுந்து விபூதி வாங்கிக் கொண்டார். இப்போது பாண்டியனுக்காக மங்கையர்க்கரசி குலச்சிறையாரையும் அழைத்துக்கொண்டு ஸம்பந்தரிடம் போய், அவர் காலில் விழுந்தாள். முதலில் தன் பதியுடைய மதி திருந்த வேண்டுமென்பதற்காகச் சம்பந்தரை வரவழைத்தவள், இப்போது அவரிடம் பதி உயிர் பிழைக்க வேண்டும் என்று மாங்கல்ய பிக்ஷை வேண்டினாள். அவர் ஈச்வர ஸங்கல்பம் எப்படி இருக்கிறதென்று பிரார்த்தனா சக்தியினால் தெரிந்து கொண்டார். தாம் ராஜாவை சொஸ்தப்படுத்தி, அதன் மூலம் **"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்... அமணரை**

Koviloor Digital Library

வாதில் வென்றழிக்கத் திருவுளமே" ஈச்வரன் கொண்டிருப்பதாக ஸுந்தரேச்வர ஸந்நிதானத்தில் உத்தரவு பெற்று நேரே அரண்மனைக்கே வந்து விட்டார்.

ராஜாவைக் குணப்படுத்துவதற்காக ஏகப்பட்ட ஜைனர்கள் தங்களுடைய மந்திரங்களை ஜபித்துக்கொண்டு மயில் பீலியும் கையுமாகக் கூடியிருந்த மண்டபத்தில் — அவர்கள் எதுவும் செய்யத் துணிந்தவர்கள் — இப்படி இந்தச் சின்னக் குழந்தை தன்னந்தனியாக வருகிறதே என்று அப்போது மங்கையற்கரசி பதறிவிட்டாள். அவரைப் பற்றி அவள் கேட்டிருந்த அற்புத சக்தி யெல்லாம் அந்த சமயத்தில் அவளுக்கு மறந்து போய், ஒரு தாயாரின் ஹ்ருதயமே அவளிடம் பேசிற்று. 'மஹா பெரிய மந்திரவாதிகள் இருக்கிற இடத்தில் இந்தக் குழந்தைப் பிள்ளை வருகிறதே! அதுவாகவேயா வருகிறது? நாமல்லவா வலிந்து ஆளனுப்பிக் கொலைக் களத்துக்கு வரவழைத்து விட்டோம்?' என்று ரொம்ப 'கில்டி'யாக நினைத்துக் கொண்டாள். அப்போது அவள் கவலை யெல்லாம் 'சைவமே போய்விட்டுப் போகட்டும்; ஜைனந்தான் இருந்து விட்டுப் போகட்டும்; பதியின் தேஹ சிரமம்கூட எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும்; இந்தக் குழந்தைக்கு ஒரு கெடுதலும் வராமல் இருந்து விட்டால் அதுவே போதும்' என்பதாகத்தான் இருந்தது!

அவள் மனஸில் படுகிற வேதனை ஸம்பந்தருக்குத் தெரிந்தது. உடனே அவளைக் கூப்பிட்டு ஒரு பதிகம் ஆறுதலாகப் பாடினார்.

ஆழ்வார், நாயன்மார்களைப் பற்றிய கதைகளில் உள்ள அநேக நிகழ்ச்சிகளுக்கு அவர்களுடைய பாட்டுக்களிலேயே direct reference [நேர் குறிப்பு] இருக்கிறது என்று சொல்ல முடியாது. மங்கையர்க்கரசியும், குலச்சிறையாரும் ஸம்பந்தரை வரவழைத்ததை ஏற்றுக்

Koviloor Digital Library

கொண்டு அவர் மதுரைக்கு வந்ததற்கும், அப்புறம் அவள் பயப்பட்டபோது அவளுக்குத் தைரியம் கொடுத்ததற்கும் வெளிப்படையாகவே ஸம்பந்தரின் தேவாரத்தில் 'எவிடென்ஸ்' இருக்கிறது.

"மஹா பெரிய மந்திரவாதிகளாகத்தான் இருக்கட்டுமே! ஆனாலும் ஈச்வர ப்ரஸாதம் இல்லாதவர்கள் எத்தனை பலிஷ்டரானாலும் அவனை நம்பியவருக்கு எதிரில் துரும்பு மாதிரிதான். நான் வருகிற வழியில் ஆனைமலை முதலான இடங்களில் சமணர்கள் எனக்குப் பண்ணின தீங்கெல்லாம் என்ன ஆச்சு? இந்த ஈனர்களுக்கு இளைத்த எளியவனாக நான் ஆகிவிடுவேனா? இப்படிச் சொல்வது அஹம்பாவத்தாலா? இல்லை. அந்தப் பரமேச்வரன் என் பக்கத்திலேயே நிற்கிறானே, அந்தப் பக்க பலத்தில்தான் சொல்கிறேன். என்னை இங்கே தூக்கிக் கொண்டு வந்தவன் அவன்தானே? அவன் என்னை விட்டு விடுவானா? அவன் எனக்குள்ளேயே புகுந்து கொண்டிருக்கிறபோது, 'நான்' என்று அஹம்பாவமாகச் சொல்லிக் கொண்டு செய்ய என்ன இருக்கிறது?" என்று இந்த மாதிரிக் கருத்துக்களை வைத்து ஸம்பந்தர் பதிகம் பாடினார்:

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்!

"மான் மாதிரிக் கண் படைத்த மாதரசியே! 'வழுதி' என்கிற பாண்டியனுக்கு மகா பெரிய தேவியாய் இருக்கப்பட்டவளே!"

"வழுதிக்கு மாபெருந் தேவிகேள்" என்கிறார். எதைக் கேட்டுக்கொள்ளச் சொல்கிறார்?

பானல்வாயொரு பாலனீங்கிவன் என்றுநீபரி வெய்திடேல்

'பால் நல்வாய்' என்பது ஸந்தியில் 'பானல்வாய்' என்றாயிருக்கிறது. "பால் குடிக்கிற பாலனாக நான்

Koviloor Digital Library

இருக்கிறேனே, இந்த சூராதி சூரர்களுக்கு எப்படித் தப்பிப் பிழைக்கப் போகிறேன் என்று நீ பயப்படாதே. கவலைப்படாதே – பரிவு எய்திடேல்.”

ஏதோ ‘பெரிய புராணத்’திலேதான் கதையாக இட்டுக் கட்டிக் குழந்தைப் பிள்ளையாயிருந்தபோதே ஸம்பந்தர் மகத்தான காரியங்களைச் சாதித்தார் என்று எழுதினதாகத் தோன்றினால் அது தப்பு; அவர் வாயாலேயே அவர் தம்மைப் பால்வாய்ப் பிள்ளையாகச் சொல்லிக் கொள்வதால் உண்மை ஊர்ஜிதமாகிறது.

‘பால்வாய்’ என்று மட்டும் சொல்லாமல் தன் வாய்க்குத் தானே ‘நல்’ என்று பாராட்டி அடைமொழி ஏன் போட்டுக் கொண்டார்? அவரோ அஹம்பாவமே இல்லாதவர். ஏன் சொன்னாரென்றால் அந்தப் பால் ஸாக்ஷாத் தேவியுடையதாக இருந்ததால்தான்! ஏதோ பசும்பாலாக இருந்திருந்தால் “நல்லவாய்” என்று சொல்லியிருக்க மாட்டார்.

“ஆனைமலை முதலான இடங்களில் எத்தனையோ இன்னலைத் தந்த – நான் தங்கியிருந்த மடத்துக்கே நெருப்பு வைத்த – இந்த ஈனர்களால் என்னை ஒன்றும் செய்ய முடியவில்லையே:

ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயரன் நிற்கவே

“என்னை இவர்களுக்கு எளிசு பண்ணிவிட மாட்டான் என்கூடவே நின்று கொண்டிருக்கிற ஆலவாய் அரன்.”

ஆலவாய் என்பது மதுரை. அரன் என்றால் ஹரன். சிவ நாமங்களுக்குள் ஸம்பந்தருக்கு ரொம்பவும் பிடித்த பெயர்.

Koviloor Digital Library

இப்படி யெல்லாம் அவர் மங்கையர்க்கரசியைத் தேற்றின பிறகு, ஜைனர்களுக்கும் ஸம்பந்தருக்கும் எந்த மதம் உசந்ததென்று ராஜாவின் உடம்பை குணப் படுத்துவதை வைத்தே பலப் பரீக்ஷை நடந்தது. Trial of strength நடந்தது.

இதற்குக் காரணம் மங்கையர்க்கரசிதான். “சைவமும் ஜைனமும் பதியின் உடம்பும் எப்படி வேணுமானாலும் போகட்டும்; இந்தக் குழந்தை ஆபத்தில்லாமல் மீண்டால் போதும்” என்று சற்று முந்தி நினைத்தவளுக்கு இப்போது ஸம்பந்தரிடம் அபார நம்பிக்கை வந்து விட்டது. அதனால், இவராலே இப்போது சைவத்தையும் காப்பாற்றிவிட வேண்டும், பதியையும் காப்பாற்றி விட வேண்டும். இரண்டையும் சேர்த்து ஒரே காரியத்தால் முடிக்கப்பண்ணி விட வேண்டும் என்று நினைத்தாள். ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்கிற மாதிரி.

ராஜாவுக்குச் சரீரம் முழுக்க வெப்பு நோய் பரவியிருந்ததல்லவா? இப்போது அதை ஜைனர்களும், ஸம்பந்தரும் அவரவருடைய மதத்தின் மந்திர சக்தியால் குணப்படுத்திப் பார்க்கட்டும்; யார் குணப்படுத்துகிறார் களோ அவருடைய மதமே ஜயித்ததாக அர்த்தம் என்று மற்றவர் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றாள்.

அவஸ்தைப்பட்டவன் ராஜாதானே? அதனால் முன்னே ‘கேட்டுமுட்டு’ என்ற அவனே இப்போது சடக்கென்று ஒப்புக்கொண்டு விட்டான்.

அவனுடைய சரீரத்தை ஜைனர்களும் சம்பந்தரும் ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொண்டு அந்தந்தப் பாதியைத் தங்கள் தங்கள் மந்திரத்தால் சொஸ்தப் படுத்துவது என்று ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

Koviloor Digital Library

சமணர்கள் இடது பாதியை மந்திரம் சொல்லி மயில்பீலியால் தடவ ஆரம்பித்தார்கள். தடவத் தடவ அக்னியில் நெய்யை ஆஹுதி பண்ணுகிறது போல வெப்பு — உஷ்ணம் — மேலும் மேலும் ஜாஸ்தியாயிற்று. ராஜாவால் பொறுக்க முடியாமல் ஸம்பந்தரைப் பார்த்தான்.

அவர் **"மந்திரமாவது நீறு"** என்கிற பதிகத்தைப் பாடிக்கொண்டு ஸுந்தரேச்வர ஸ்வாமியின் விபூதிப் பிரஸாதமான 'ஆலவாயரன் திருநீற்றை'ப் பாண்டிய னுடைய வலது பாதி சரீரத்தில் இட்டார்; இட இட உஷ்ணம் அப்படியே அடங்கிக் குளிர்ச்சியாக ஆயிற்று. அப்புறம் அவன் வேண்டிக் கொண்டதன் பேரில் இடது பக்க வெப்பு நோயையும் அவரே தீர்த்தார்.

திலகவதி தானே தம்பிக்கு விபூதி கொடுத்தாள்; மங்கையர்க்கரசி புருஷனுக்கு ஸம்பந்தரைக் கொண்டு விபூதி பூசுவித்தாள். இரண்டு இடத்திலும் விபூதியே வியாதி தீர்த்தது. வைதிகத்தைக் காத்தது!

இப்படி அனலாயிருந்த உடம்பை அவர் புனலாகப் பண்ணிய பிறகும் ஜைனர்கள் தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் அனல்வாத, புனல்வாதங்கள் நடத்தச் சொல்லி, அதிலும் தோற்றுப் போனார்கள். அவரவர் களுடைய ஸித்தாந்தத்தைச் சுவடியில் எழுதி அதை நெருப்பில் போட்டால் எந்தச் சுவடி எரியாமல் இருக்கிறதோ, அதுவே ஸத்தியமென்று வைத்துக் கொள்வது அனல்வாதம். இப்படியே தங்கள் தங்கள் தத்துவத்தை எழுதிய சுவடியை ஆற்றிலே போட்டு, எது பிரவாஹத்தை எதிர்த்துக் கொண்டு மறு திசையில் போகிறதோ அதுவே உண்மையானதென்று வைத்துக்கொள்வது புனல்வாதம்.

எல்லாவற்றிலும் ஸம்பந்தர்தான் ஜயித்தார்.

ஸம்பந்தர் ஜயித்தார் என்றால் என்ன அர்த்தம்? சைவம் ஜயித்தது என்று அர்த்தம். சைவம் ஜயித்தது என்றால் வேத மதம் ஜயித்தது என்றே அர்த்தம்.

Koviloor Digital Library

பாண்டியனும் பாண்டிய நன்னாடும் மறுபடி ஸநாதன தர்மத்துக்கே வந்து விட்டது.

ஆர்யாம்பாள்–ஸரஸவாணியும் ஆதிசங்கரரும்

தமிழ் தேசத்தில் புறச் சமயம் அகன்று வைதிக மதம் புது ஜீவனோடு வேர் விட்டதற்கு இரண்டு ஸ்திரீகளை பகவான் கருவிகளாக வைத்துக்கொண்டு, அவர்கள் ஸ்திரீ ஸ்வபாவப்படி பின்னால் நின்று கொண்டு, அப்பர், ஸம்பந்தரின் பிரபாவம் வெளியாகும்படி செய்யுமாறு லீலை செய்திருக்கிறான்.

பாரத தேசம் முழுவதையும் எடுத்துக் கொண்டாலும் ஸ்ரீ சங்கர பகவத் பாதாள் அக்காலத்தில் வேத பாஹ்யமாக [மறை வழக்கத்துக்குப் புறம்பாக] இருந்த எழுபத்திரண்டு மதங்களை ஜயித்து வைதிகத்தை ஸ்தாபித்தாரென்றால் இதுவும் ஒரு ஸ்திரீயின் தியாகத்தினால்தான் ஏற்பட்டது. அவருடைய தாயார் ஆர்யாம்பாள் அவர் எட்டு வயஸுக் குழந்தையாக இருந்தபோது ஸந்நியாஸியாகப் புறப்பட்டுப் போவதற்கு அவருக்கு அநுமதி தந்திருக்காவிட்டால், அவர் இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்க முடியாது.

'சங்கர விஜய'*த்திலேயே இன்னொன்று! ஒரு பத்தினி தன் பதியைத் தியாகம் பண்ணியே மதத்தை வளர்த்திருக் கிறாள்!

இங்கே வைதிக மதத்துக்கும் அதற்கு வேறான இன்னொரு மதத்துக்கும் சண்டை யில்லை. ஆசார்யாள் கர்மம், பக்தி, ஞானம் எல்லாவற்றையும் சேர்த்துச் சொன்ன total வைதிக மதத்துக்கும், அதில் கர்மத்தை மட்டுமே ஒப்புக்கொண்ட partial வைதிக மதத்துக்குமே சண்டை. "வேத கர்மாவே எல்லாமும்; பக்தியும் வேண்டாம்,

* ஆதிசங்கரரின் சரிதம்

Koviloor Digital Library

ஞானமும் வேண்டாம்'' என்று வாதம் செய்த மண்டன மிச்ரரை ஆசார்யாள் ஜயித்தார். இந்த வாதத்துக்கு மத்யஸ்தம் பண்ணித் தீர்ப்புச் சொன்னது யாரென்றால் மண்டனருடைய பத்தினியான ஸரஸவாணிதான்! 'ஸதியும் பதியின் ஒரு பங்கு. அதனால் தன்னையும் ஆசார்யாள் ஜயிக்க வேண்டும்' என்று மஹா பண்டிதையான அவள் ஆசார்யாளிடம் சொல்ல, அப்படியே அவளையும் அவர் வாதத்தில் வென்றார்.

அப்போது ஸம்பூர்ண வைதிக மதமானது அதன் ஒரு அம்சமான கர்ம மார்க்கத்தின் மேலே ஜயம் பெற்றுவிட்டதாகத் தீர்ப்புச் சொல்லும் பொறுப்போடு ஸரஸவாணியின் பங்கு தீர்ந்துவிடவில்லை. அதற்காகத் தன் பதியையே தியாகம் செய்ய வேண்டியதாகவும் அவளுக்கு ஏற்பட்டது. ஏனென்றால், மண்டனமிச்ரர் வாதத்தில் தாம் ஜயித்தால் ஆசார்யாள் ஸந்நியாஸத்தை விட்டுவிட்டுத் தன் மாதிரி கிருஹஸ்தராக வேண்டுமென்றும், இதற்கு மாறாக ஆசார்யாள் ஜயித்து விட்டால், தாம் கர்மாவையெல்லாம் விட்டு விட்டு அவரைப் போலவே ஸந்நியாஸியாகி விடுவதாகவும் 'சாலஞ்ஜ்' பண்ணியிருந்தார். எந்தப் பத்தினிப் பெண்டும் செய்யத் துணிய முடியாத இந்தத் தியாகத்தை ஸரஸவாணி நம் நெஞ்சைத் தொடுகிற மாதிரி ஒரு சின்ன ஸமிக்ஞை மூலம் பண்ணி விட்டாள். ஆசார்யாளிடம், "நீங்கள் ஜயித்துவிட்டீர்கள். இவருக்கு ஸந்நியாஸம் கொடுங்கள்'' என்று அவள் நேராகச் சொல்லவில்லை — அப்படிச் சொல்லியிருந்தால் அவளுடைய அறிவுப் பக்குவத்தின் அருமை நமக்குத் தெரிந்திருக்காது.

வாதமெல்லாம் அப்போது முடிந்து, அது இரண்டு பேரும் போஜனம் செய்ய வேண்டிய ஸமயமாயிருந்தது.

ஸந்நியாஸியின் போஜனத்துக்கு பிக்ஷை என்று பேர். கிருஹஸ்தனின் போஜனத்துக்கு வைச்வதேவம் என்று பேர்.

Koviloor Digital Library

ஸரஸவாணி என்ன செய்தாளென்றால் ஸந்நியாஸியாயிருந்த ஆசார்யாளை மட்டுமல்லாமல், அந்த நிமிஷம்வரை க்ருஹஸ்தராயிருந்த மண்டன மிச்ரரையும் சேர்த்து, “இரண்டு பேரும் பிக்ஷைக்கு எழுந்தருளணும்” என்று பிரார்த்தித்துக் கொண்டாள்!

அவள் ஸரஸ்வதியின் அம்சமாதலால் இவ்வளவு அர்த்த புஷ்டியுடன் பேசினாள்.

ஹொய்ஸள ராஜகுமாரியும் ராமாநுஜரும்

ஸ்ரீ ராமாநுஜாசார்யார் கதையிலும் மதம் மாறிய ஒரு ராஜாவை மறுபடி தாய் மதத்துக்குத் திருப்புவதென்பது ஒரு பெண்ணை மையமாக வைத்தே நடந்திருக்கிறது. அப்போது கர்நாடக தேசத்தை ஆண்ட ஹொய்ஸள ராஜா ஜைனனாக மாறியிருந்தான். அவனுடைய பெண்ணுக்குப் பிடித்திருந்த பேயை ராமாநுஜர் விரட்டியதாலேயே அவன் வைஷ்ணவத்துக்கு மாறினான். விஷ்ணுவர்த்தனன் என்று ராமாநுஜரால் பெயரிடப்பட்ட அவன்தான் பிரசித்தி பெற்ற பேலூர் சென்னகேசவர் கோவிலைக் கட்டினவன்.

சிங்கள ராஜகுமாரியும் மாணிக்கவாசகரும்

மாணிக்கவாசகரும் ஒரு பெண்ணின் நோயை ஓட்டி, நம் மதத்தை நிலைநாட்டியிருக்கிறார். அவர் ஜயித்தது ஜைனத்தை அல்ல; பௌத்தத்தையாகும். இந்தக் கதையில் வருகிற ராஜா நம் தேசத்தைச் சேர்ந்தவன் அல்ல. அவன் பக்கத்துத் தேசமான சிங்களத்தின் ராஜா. சிங்களம் என்கிற லங்கையில் புத்த மதம்தான் நெடுங்காலமாகவே பிரதானமாயிருந்தது.

இந்த பௌத்த ராஜாவுக்கு ஊமையாக ஒரு பெண் பிறந்தது. வேத மதத்தின் பெருமையைத் தெரியப்படுத்துவ

Koviloor Digital Library

தற்கு ஊமையாகவாவது ஒரு பெண்தான் வரவேண்டி யிருக்கிறது! சிங்கள ராஜாவுக்கு ஊமையாகப் பிறந்தது பிள்ளையாக இருந்திருக்கக் கூடாதா? ஆனால் அப்படி இல்லை. இந்தப் பெண்ணைப் பேச வைப்பதற்கு அப்பன்காரன் பல சாமியார்களிடம் அழைத்துக் கொண்டு போனான். எப்போதுமே, ஏதாவது கஷ்டம் வந்து விட்டால், எந்த மதத்தைச் சேர்ந்த சாமியாராக இருந்தாலும் அவரிடம் ஓடுவார்கள். சிங்களத்து பௌத்த ராஜா மாணிக்கவாசகரைப் பற்றிக் கேள்விப்பட்டு அப்போது அவர் இருந்த சிதம்பரத்துக்குப் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்தான். அதுவே வைதிகத்துக்கும் பௌத்தத்துக்கும் பலப் பரீக்ஷை நடத்தவும் வாய்ப்பாய் அமைந்தது. ஊமைப் பெண்ணை எந்த மதஸ்தர் பேச வைக்கிறாரோ அந்த மதம் ஜயித்ததாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று இரண்டு கட்சிகளும் ஒப்புக்கொண்டன.

வாழ்க்கை முழுவதையும் ஈச்வரார்ப்பணம் செய்து அருட்பழமா யிருந்த மாணிக்க வாசகர், “அப்பா நடராஜா! இந்த ஒரு குழந்தையின் நிமித்தமாக லோகம் முழுவதும் உன் கருணை வெள்ளத்துக்குப் பாத்திரமாகும்படி ஸத்யமான வேத தத்துவத்தை நிலைநாட்ட மாட்டாயா?” என்று பிரார்த்தித்துக் கொண்டு அந்தப் பெண்ணைப் பார்த்து ஈச்வர ஸம்பந்தமான கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார்.

‘டக் டக்’கென்று ஊமைப் பெண் எல்லாவற்றுக்கும் வாய் திறந்து பதில் சொன்னாள்.

இப்படி முதல் இரண்டு வரி மாணிக்க வாசகரின் கேள்வியும், அடுத்த இரண்டு வரி சிங்கள ராஜகுமாரியின் பதிலுமாக ஒவ்வொரு அடியும் அமைந்து, இப்படி இருபது அடிகள் கொண்டதாகத் திருவாசகத்தில் இருக்கிற பாடல்தான் **‘திருச்சாழல்’** என்பது. அதைக் கேட்டு பௌத்தர்கள் தோல்வியை ஒப்புக்கொண்டார்கள்.

Koviloor Digital Library

புத்தரின் சிற்றன்னையும் புத்தரும்

பௌத்த மதப் பேச்சு வந்ததில், இத்தனை நாழி நான் சொன்னதற்கு 'கான்வர்'ஸாக — எதிர்வெட்டாக — ஒன்றும் நினைவு வருகிறது. திலகவதி, மங்கையர்க்கரசி முதலானவர்கள் ஸரியான வழியில் சென்றபோது அவர்களாலேயே மதரக்ஷணை நடந்ததென்று பார்த்தோமல்லவா...? மாறாக, பெண்கள் தப்பு வழியில் போனால் அவர்களால் மதமே சேதமுற்றுப் போய்விடு மென்று காட்டுவதாகவும் ஒன்று பௌத்த மத விஷயமாக நடந்திருக்கிறது. புத்தர் 'ஸங்கம்' என்று வைத்து, கூட்டங்கூட்டமாகப் புருஷர்களை பிக்ஷுவாக்கினா ரல்லவா? அப்போது அவருடைய மாற்றாந்தாயாயும், அதோடு அம்மாவின் தங்கை என்பதாலேயும் இரண்டு விதத்திலும் சித்தி ஆனவளான மஹாப்ரஜாவதி என்பவள் தனக்கும் அவர் ப்ரவ்ரஜ்யை [துறவறம்] தந்து பிக்ஷுணியாக்க வேண்டும் என்று அவரிடம் கேட்டாள். அதற்கு அவர், "பெண்களுக்கு இந்த மாதிரி பிக்ஷு ஜீவனம் ஸரிப்பட்டு வராது. அதோடு, ஏராளமான புருஷ பிக்ஷுக்கள் இருக்கும்போது பிக்ஷுணிகளும் அதேமாதிரி சேர ஆரம்பித்துவிட்டால் ஆச்ரம தர்மத்துக்கே விரோதமாக ரொம்ப அஸம்பாவிதங்கள், விபரீதங்கள் நடக்க நேரிடும். அதனால் உன் எண்ணத்தை விட்டுவிடு" என்றார். அந்த அம்மாள் கேட்காமல் பிடிவாதம் பிடித்தாள். தாயின் ஸ்தானத்திலிருந்த அவளை மறுத்துப் பேச புத்தரால் முடியவில்லை. அதனால் அவள் கேட்டபடியே அவளுக்குப் ப்ரவ்ரஜ்யை கொடுத்து, அந்த மதத்தில் பெண்களும் பிக்ஷுணியாவதற்கு அனுமதித்தார். அப்படி அவர் பண்ணுகிறதற்கு முன் ஒன்று சொன்னாராம். என்ன சொன்னாரென்றால், "நான் நன்றாக யோசித்துப் பார்த்து 'கூடாது' என்று வைத்துவிட்ட ஒன்றை நீ

Koviloor Digital Library

மாற்றும்படி பண்ணிவிட்டாய். இதனால் என்ன ஆகப் போகிறதென்றால், இந்த மதத்துக்கு ஆயுஸே பாதி போய்விடப் போகிறது" என்றாராம். அவர் சொன்னது போலவேதான் பிற்பாடு பிக்ஷு-பிக்ஷுணி ஸங்கத்தில் ரொம்பவும் கோளாறாக நிறைய நடந்து, ஊருலகத்தி லெல்லாம் பரிஹாஸம், அவப்பெயர் ஏற்பட்டது. மஹேந்த்ர வர்ம பல்லவனுடைய 'மத்தவிலாஸ ப்ரஹஸனம்' என்ற ஹாஸ்ய நாடகத்தைப் பார்த்தாலே தெரியும், எத்தனை கீழ்த்தரத்துக்கு ஸந்நியாஸாச்ரமம் போய்விட்டது என்று.

பௌத்தம் இந்த நாட்டைவிட்டுப் போனதற்கு அறிவாளிகள் லெவலில் நம்முடைய ஆசார்யாள் வேதாந்த வழியிலும், குமாரில பட்டர் கர்ம மீமாம்ஸா வழியிலும், உதயணசார்யார் ந்யாய [தர்க்க] சாஸ்த்ர வழியிலும் அம் மதக் கொள்கைகளைக் கண்டித்தது காரணமென்றால், பொதுஜனங்களின் லெவலில் அதன் பிக்ஷுஸங்கம் வீணாய்ப் போனதில் ஸமுதாயம் முழுதற்குமே அதனிடம் மதிப்பு மரியாதைகள் குன்றிப் போனதே அதற்கு ஆதரவு குன்றிப்போனதற்குக் காரணமாகும். இப்படியொரு பெரிய ஹானி ஒரு ப்ரஸித்தமான மதத்துக்கு ஏற்பட்டது ஒரு ஸ்த்ரீயின் பிடிவாதத்தால்தான் என்று பார்க்கிறோம். இதிலிருந்து ஆக்க சக்தி மாதிரியே அழிவு சக்தியும் ஸ்த்ரீகளுக்கு எவ்வளவு இருக்கிறது என்று தெரிகிறது.

ஆனால் பொதுவாக நம்முடைய பெண்குலம் ஆக்க சக்தியாகவேதான் இருந்து வந்திருக்கிறது; அபூர்வமாகத் தான் அழிவுசக்தியாக ஆனது. இப்படி, நம் மதத்துக்கு 'அழிவு' ஏற்படவிருந்த ஸமயங்களில் அதைப் புத்துருவாக 'ஆக்கு'வதற்குப் பெரிய உபகாரம் செய்த உத்தமிகள் சில பேரைச் சொன்னேன்.

Koviloor Digital Library

மதத்தைக் காத்த மற்ற மாதரசியர்

இன்னம் அநேக ஸ்திரீகள் நம் மத உணர்ச்சிக்குப் புது எழுச்சி தந்திருக்கிறார்கள். சிவாஜி துருக்கர்களை ஜயித்து ஹிந்து ஸாம்ராஜ்யம் எழுப்பினானென்றால், அதற்கு விதை ஊன்றியவள் சின்ன வயசிலிருந்தே பாலோடு அவனுக்கு மதாபிமானத்தையும் ஊட்டின மாதா ஜீஜாபாய்தான். அப்புறம் வெள்ளைக்காரர்களுக்கு எதிராக ஜனங்களை எழுப்பினவர்களிலும் ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாய் போன்றவர்கள் பாலிடிக்ஸைவிட நம் மதத்தை அவர்கள் அழித்துவிடப் போகிறார்களே என்ற விசர்ரத்தாலேயே உயிரைக் கொடுத்தும் மதத்தைக் காப்பாற்றுவதற்காக யுத்தத்துக்குப் போனார்கள்.

இன்றைய பெண்டிர் செய்ய வேண்டியது*

இவ்வாறு அநேகம் பெண்களாலேயே நம் தேசம் அந்நிய மதங்களின் ஆதிக்கத்திலிருந்து அவ்வப்போது மீட்கப்பட்டு, ஸநாதன தர்மம் புத்துயிர் பெற்று வந்திருக்கிறது. எப்போதுமே புருஷர்களை விட அவர்களுக்கு அதிக மதாபிமானம் இருந்திருக்கிறது. இவன் ஆஃபீஸ், ஷிஃப்ட், டூர் என்று போக ஆரம்பித்த பின் ஸ்திரீகள்தான் இவன் செய்ய வேண்டிய பூஜாதிகளைப் பண்ணிக்கொண்டு இந்த மட்டும் இங்கே மதானுஷ்டானம் இருக்கச் செய்திருக்கிறார்கள்.

பூர்வகால ஸ்திரீகளைப் போல மதத்தை ரக்ஷித்துக் கொடுப்பதில் இக்காலப் பெண்களும் நன்றாக மனஸைச் செலுத்திவிட்டால் நாம் 'கன்வெர்ஷ'னைப் பற்றிக் கவலைப் படவேண்டியதே யில்லை.

---

* இதே நூலில் குரு–சிஷ்ய உறவு என்ற உரையில், 'பெண்களின் பாண்டித்யம் : அக்கால–இக்கால மாறுபாடு' என்ற உட்பிரிவும் காண்க.

Koviloor Digital Library

இதற்கு என்ன செய்ய வேண்டுமென்றால்—

ஸம்ஸ்கிருதம், தமிழ் இரண்டிலும் ரொம்பவும் காவியச் சுவையுடன் வாழ்க்கைப் பயனையும் தருகிற நூல்கள் ஏராளமாக இருக்கின்றன. தமிழ் நாட்டில் பிறந்தவர்களுக்கு இது இரட்டை பாக்யம். இந்தியா பூராவுக்குமாக இருக்கிற ஸம்ஸ்கிருதத்தோடு மட்டுமில்லாமல், மற்ற எந்தப் பிரதேசத்து பாஷையையும் விட ஜாஸ்தியாக ரொம்பப் பழங்காலத்திலிருந்து தமிழ் பாஷையில்தான் பக்திநூல்களும் நீதி நூல்களும் ரொம்பவும் ரஸம் நிறைந்தனவாக வந்திருக்கின்றன. ஸம்ஸ்கிருதம், தமிழ் இரண்டும் கற்றுக் கொண்டு விட்டால் லோகத்தில் தெரியாததே இராது. ஆனாலும் இத்தனை யிருந்தும், 'செய்யுளாயிருக்கே' என்று உடனேயே கீழே போட்டுவிடுவதாக இருக்கிறது.

செய்யுளை வசனமாக்கி, பழந்தமிழைப் புதுத் தமிழிலும், ஸம்ஸ்கிருதத்தை தமிழிலும் பண்ணிச் சின்னச் சின்னப் புஸ்தகங்களாகப் போட்டுக் கொடுத்து, அவற்றோடு ஒரு பிரஸாதமும் வைத்து அனுப்புகிறோ மென்றால் பெண்டுகள் ஆசை ஆசையாகப் படிப்பார்கள் என்பதே என் நம்பிக்கை. இப்போதே 'ஸௌந்தரிய லஹரி', 'அபிராமி அந்தாதி' என்று எவ்வளவு ஆர்வத்தோடு கற்றுக் கொள்ளுகிறார்கள்? பக்தி மட்டுமில்லாமல், தர்மமும், மதாசரணைகளும் அவர்களுக்குத் தெரியும்படியாக சாஸ்திர ஸமாசாரங்களையும் புஸ்தகம் போட்டுத் தரவேண்டும்.

பெண்கள் அங்கங்கே ஒரு எட்டுப் பேர் ஸங்கமாகச் சேர்ந்து கொண்டு மடத்துக்குத் தெரியப்படுத்திவிட்டால் அவர்களுக்கு மடமே இம்மாதிரிப் புஸ்தகங்களைப் பொருள் விளக்கிப்போட்டு, அவர்கள் படிக்கப் படிக்க ஒவ்வொன்றாக அனுப்பிக்கொண்டே இருக்குமாறு திட்டம்

Koviloor Digital Library

போட்டு அமல் செய்யணும் என்று எனக்கு இருக்கிறது. மதத்தைப் பெண்களும், பெண்களை மதமும் பரஸ்பரம் ரக்ஷிக்கும்படியாகப் பண்ண அங்கங்கே இந்த மாதிரி நிறைய ஸத் ஸங்கங்கள் ஏற்பட வேண்டும். பெண்கள் தாங்களே கூடி, தங்களுக்குள்ளாகவே படித்துப் புரிந்து கொள்ளும்படியாக Self–instructor — ஸ்வய போதினி — மாதிரி இந்த தர்ம புத்தகங்களைப் போட வேண்டும். இதற்கு மடம் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பது என் எண்ணம். இந்த மாதிரி ஏழெட்டுப் புஸ்தகம் ஸம்ஸ்கிருதத்திலும் பழந்தமிழிலும் பதவுரை படித்து அர்த்தம் பண்ணிக்கொண்டு விட்டால் அப்புறம் வித்வான்கள் எழுதுவதையும் சொல்வதையும் புரிந்து கொண்டுவிட முடியும். செய்யுள், கடினமான நடை என்ற பயமெல்லாம் போய்விடும். நூல்களின் ரஸம் தன்னால் மேலே மேலே தேடிப் பிடித்துப் படித்துக் கொண்டு போகிற அபிருசியை உண்டாக்கிவிடும்.

ஸ்திரீகள் யாவரும் — 'தாய்க்குலம்' என மரியாதையாகச் சொல்லப்படுகிற யாவரும் — ஸரஸவாணி களாக ஆக வேண்டும் என்பதே என் ஆசை. நாட்டின் மஹோன்னத நிலைக்கு அஸ்திவாரம், ஸைன்யத்தின் பலமோ, ஸயன்ஸின் அபிவிருத்தியோ, மந்திரிகளின் யுக்தியோ, பொருளாதார முன்னேற்றமோ இல்லை; பெண்கள் தர்மத்தை நடத்துவதால் பெறுகிற தெய்வத் தன்மையே தேசத்துக்கு அஸ்திவாரம், ஜீவரத்தம் எல்லாம். அவர்கள் அப்படி தர்மப்படி ஆகிவிட்டால் நம்முடைய வேத மதத்துக்கு ஒரு நாளும் ஒரு குறைவும் வராது. அம்பாள் ஸ்வரூபமாகவே அவர்களைச் சொல்லி யிருக்கிறது. அம்பாள்தான் இப்படிப்பட்ட அநுக்ரஹத்தைச் செய்ய வேண்டும்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

தெய்வ விஷயம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

தெய்வ ஸாக்ஷி

வேதாந்தத்தில் 'ஸாக்ஷி'

"கடவுள் ஸாக்ஷியாகச் சொல்றேன்" என்று பாமர ஜனங்கள்கூடச் சொல்கிற வழக்கமிருக்கிறது. ஸமஸ்த லோகங்களிலும் நடக்கிற சின்னச் சின்ன கார்யங்கள் உள்பட ஸகலத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறவன் பரமாத்மா.

ஆத்மா என்று வேதாந்த சாஸ்திரங்களில் சொல்கிறபோது அங்கே கார்யம் என்பதே கிடையாது. ஆனாலும் அங்கேயுங்கூட ஆத்மாவை 'ஸாக்ஷி மாத்திரமாக இருப்பது' என்றே சொல்லியிருக்கும். அந்த இடத்தில், நாம் நடைமுறை லோகத்தில் சொல்கிற ஸாக்ஷி மாதிரி ஆத்மா ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று அர்த்தமில்லை. தனக்கு வேறே ஒன்று இருப்பது, தான் அதைப் பார்ப்பது என்ற கார்யத்தைப் பண்ணுவது என்பதெல்லாம் அத்விதீயமான [இரண்டற்ற] ஆத்மாவுக்குக் கிடையாது.

பின்னே ஏன் அதை ஸாக்ஷி என்று சொல்லியிருக்கிறதென்றால்: ஸாக்ஷி என்பவன் கார்யம் பண்ணுகிறதில்லை. நடக்கிற வியவஹாரத்தில் அவன் நேராகப் பங்கெடுத்துக் கொள்வதில்லை. ஆனாலும் அவன் இருக்கிற இடத்தில் தான் அந்தக் கார்யம், வியவஹாரம் நடக்கிறது. தான் பங்கெடுத்துக் கொள்ளாமல், பட்டுக் கொள்ளாமல் தனக்கு முன்னே நடக்கிறதை அவன் பார்த்துக் கொண்டு மட்டுமிருக்கிறான். ஆத்மா இல்லாத இடமேயில்லையானபடியால், வியவஹார தசையில் லோகத்தில் நடக்கிற

Koviloor Digital Library

ஸகல கார்யங்களும் ஆத்மாவின் ஸந்நிதானத்தில்தான் நடக்கிறது. ஆனாலும் ஆத்மா அதிலே பங்கு கொள்கிறதில்லை. இந்தப் பாயின்டை மட்டும் வைத்துக் கொண்டு அதை ஸாக்ஷி என்று சொல்லியிருக்கிறது.

ஒரு ஆஸாமியை ஸாக்ஷி என்று சொல்வதற்கும் ஆத்மாவை ஸாக்ஷி என்று சொல்வதற்கும் இரண்டு பெரிய வித்யாஸங்கள் இருக்கின்றன.

ஒன்று, ஆஸாமி தனக்கு முன்னாடி நடப்பதைப் பார்க்கிற மாதிரி ஆத்மா பார்க்கிறதில்லை. அது நிஷ்க்ரியமானது [கார்யமில்லாதது]. பார்ப்பதும் ஒரு கார்யந்தானே? அந்தக் கார்யமும் ஆத்மாவுக்குக் கிடையாது. ஸாக்ஷியாயுள்ள ஆஸாமியின் லக்ஷணமாக இரண்டு ஸமாசாரம் சொல்வார்கள் : 'அவன் participant இல்லை' — அதாவது கார்யத்தில் பங்கு கொள்பவன் இல்லை; spectator, 'பார்வையாளன்தான்' என்பார்கள். இந்த இரண்டில் 'participant இல்லை' என்பது மாத்திரந்தான் ஆத்மாவுக்குப் பொருந்தும். அது spectatorம் இல்லை! இது ஒரு பெரிய வித்யாஸம்.

இன்னொரு வித்யாஸம், ஸாக்ஷியாக உள்ள ஆஸாமி இருந்தால்தான் அவன் பார்க்கிற கார்யம் நடக்கும் என்றில்லை. எத்தனையோ கார்யங்கள் ஒருத்தர் ஸாக்ஷியும் இல்லாமல்தான் நடக்கிறது. கார்யம் பாட்டுக்கு நடப்பது, சில ஸமயங்களில் ஒரு ஆஸாமி பாட்டுக்கு அதைப் பார்ப்பது என்றுதான் இருக்கிறதே தவிர, ஸாக்ஷி இருந்தால்தான் கார்யமே நடக்கும் என்று இல்லவே யில்லை. ஆனால் ஆத்மா விஷயத்தில் பார்த்தாலோ, ஸகல கார்யங்களுக்கும் ஆதார சக்தியே ஆத்மாதான் என்று தெரிகிறது! லோகம், ஜீவராசிகள் அத்தனைக்கும் அடிப்படை, ஒன்றே ஒன்றான அந்த ஆத்மாதான். அது

Koviloor Digital Library

இல்லாவிட்டால் இதுகள் எதுவுமே இல்லை; இதுகளே இல்லாததால் இதுகள் செய்கிற எந்தக் கார்யமும் இல்லை.

வேடிக்கையாக இருக்கிறது: ஆத்மாவுக்குக் கார்ய ஸம்பந்தமேயில்லை; அது நிஷ்க்ரியமானது; ஆனால் அது இல்லாவிட்டால் ஒரு கார்யமுமில்லை! ஸாக்ஷியாக உள்ள ஆஸாமி மாதிரி அது ஒரு கார்யத்தில் பங்கு எடுத்துக் கொள்கிறதில்லை. அதே ஸமயத்தில், மநுஷ்யர்களில் ஸாக்ஷி என்று இருக்கிற எந்த ஆஸாமியும் அது மாதிரி தான் பார்க்கிற கார்யத்துக்கு அடிப்படையான ஆதார சக்தியாக இருக்கவுமில்லை.

இப்படி பேதங்கள் இருந்தாலும் 'ஒரு கார்யம் நடக்கிற போது அங்கே அதில் நேராக ஈடுபடாதவராக வெறுமனே இருப்பது' என்ற அம்சத்தில் ஸாக்ஷியாயுள்ள ஆஸாமிக்கும் ஆத்மாவுக்கும் ஒற்றுமை இருப்பதாலேயே ஆத்மாவை 'ஸாக்ஷின்' என்று சொல்லியிருப்பது.

நன்றாகப் பூந்து [புகுந்து] புறப்பட்டுப் பார்த்தால், ஆத்மா ஸாக்ஷி கூட இல்லை. ஆத்மாவாக இருக்கிற மாதிரி நிலையில்... ஸதாவுமே உள்ள ஸத்தியமான நிலைதான் அது. அப்படித் தெரியாமல் மாயை மயக்கி வைத்திருக்கிறது. அதனால் அந்த மாயை போவதற்காக ஸாதனை என்று ஒன்றைப் பண்ணி, ஈச்வர கிருபை இருந்தால் ஸித்தியாகி, ஆத்மாவாக மட்டுமே இருக்கிற ஸமாதி என்ற ஒன்றைப் பெற வேண்டியிருக்கிறது. அந்த ஸமாதி நிலையில் லோகம், ஜீவராசிகள், காலம், கார்யம் என்ற எதுவுமே அடியோடு இல்லை என்றுதான் ஆகியிருக்கும். 'லோகமேயில்லை, space [இடம்] என்ற concept - ஏ [கருத்தே] இல்லை' என்கிறபோது, 'எந்தக் கார்யமும் நடக்கிற இடத்தில் ஆத்மா இருக்கிறது' என்றால் அர்த்தமேயில்லை. கார்யம் என்பதும் இல்லவேயில்லை என்கிறபோது கார்யத்துக்கு ஆதாரமாக ஆத்மா இருப்பதாகச் சொல்கிறதும் அர்த்தமில்லாததுதான்.

Koviloor Digital Library

மாஜிக்கில் ஒரு அரண்மனை இருக்கிறதாக ஜாலக் காட்சி காட்டினால் அந்த அரண்மனைக்கு ஆதாரமாக மட்டும் நிஜமான ஒரு அஸ்திவாரம் இருக்கணுமா என்ன?

ஆனபடியால் அத்வைத சாஸ்திரங்களை ஸரியாகப் புரிந்து கொண்டு பார்த்தால், அஸலான ஆத்மாவையே ஸாக்ஷி என்று சொல்லவில்லை என்று தெரியும். அந்த அஸல் ஆத்மா, மாயையோ கீயையோ எதுவோ ஒன்றால் இப்போது நாமிருக்கிற மாதிரி ஒரு ஜீவன் என்று ஆகியிருக்கோல்லியோ? வாஸ்தவத்தில் மாறுபாடே அறியாத ஆத்மா, ஜீவன் என்பதாக மாறவுந்தான் இல்லை. மாறாவிட்டாலும் நடைமுறையிலே அப்படி ஆனதாகத் தோன்றவாவது தோன்றுகிறதோ இல்லையோ? மாயையிலேயே முழுக்க முழுகிப் போயிருக்கும் இந்த ஜீவனுக்கு மாயா ஸம்பந்தமேயில்லாத ஆத்மாவைப் படிப்படியாகக் காட்டிக் கொண்டே போகிற போதுதான் ஒரு உசந்த ஸ்டேஜில், ஆனாலும் முடிந்த முடிவான ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்குக் கீழ்ப்பட்ட ஸ்டேஜில், 'லோகம், கார்யம், தனி மநுஷ்ய ஜீவன் என்றெல்லாம் இருக்கிற மாதிரி இருந்தாலும், தெரிகிற மாதிரித் தெரிந்தாலும் உன் ஆத்மா அந்த எதிலும் ஸம்பந்தப்படவில்லை. ஸாக்ஷி மாத்திரமாகப் பட்டுக் கொள்ளாமல் பார்த்துக் கொண்டு மட்டுமே இருக்கிறது. ஸாக்ஷியாக பார்க்கிற அந்த காட்சிக்கும் அதுதான் ஆதாரம்' என்று சொல்வது. அதற்கும் மேல் ஸ்டேஜில், 'பார்க்கிறதென்பதும் இல்லையப்பா! கார்யம் பாட்டுக்கு நடக்கிறது; ஆத்ம சக்தியின் ஸந்நிதான விசேஷத்தாலேயே நடக்கிறது. ஆனால் ஆத்மா அதைப் பார்க்கிறதென்பதும் இல்லை. கான்வாஸை ஆதாரமாக வைத்து அதன் மேலேயேதான் ஆயில் பெய்ன்டிங் பண்ணியிருந்தாலும், அந்தச் சித்திரம் வர்ணிக்கிற கார்யத்தில் கான்வாஸ் பங்கெடுத்துக் கொள்கிறதா? அப்படித்தான் இதுவும் என்பது. அதற்கும்

Koviloor Digital Library

மேலே தத்வத்தை உள்ளபடிக் காட்டி முடிக்கிற போது, 'கார்யமும் இல்லையப்பா! ஆதாரம், ஆதார சக்தி என்கிறதுகளும் இல்லை. ஆத்ம சக்தி என்கிறதே இல்லை. ஆத்ம சாந்திதான், சாந்த ஸமாதிதான் முடிந்த முடிவு' என்பது.

ஸாக்ஷி என்று ஆரம்பித்து விட்டு, என்னவோ வேதாந்தமாக இழுத்துக்கொண்டு போனபடி கொஞ்சம் 'மெடஃபிஸிக்ஸ்' சொன்னேன். நான் ஆரம்பித்தது கதை சொல்வதற்குத்தான். உங்களுக்கும் கதா ருசி மெடஃபிஸிக்ஸில் இருக்குமோ இருக்காதோ? ஆனாலும் நாம் நிஜம், ரொம்ப ரொம்ப நிஜம் என்று நினைக்கிறதெல்லாமும் கதையாகப் போய் விடுகிற நிஜமான நிஜத்தில் அந்த மெடஃபிஸிக்ஸ்தான் நம்மைக் கொண்டு சேர்க்கிறது. ஆசார்யாள் நமக்கு அநுக்ரஹம் பண்ணியிருக்கும் நிரந்தரமான ஸ்ரீ அதுதான். உத்தேசிக்காமலே அதைச் சொல்லும்படி ஆனதிலும் ஸந்தோஷந்தான். உத்தேசித்தபடி இப்போது கொஞ்சம் கதை சொல்கிறேன். பரமார்த்தத்திலிருந்து வியவஹாரத்துக்கு வருகிறேன்.

வியவஹாரத்தில் ஸாக்ஷி

வியவஹார தசையில், லோகம் என்று ஒன்று இருப்பதாகவும் அதிலே ஜீவ ராசிகள் வாழ்கிறதாகவும் தெரிகிற நிலையில், இது எல்லாவற்றையும் 'ப்ளான்' பண்ணி, ஆட்டிப் படைத்து நடத்தி வைக்கிறவன் ஈச்வரன் தான். 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்கிறோம். ஆத்மாவை **ஸாக்ஷி** என்று சொல்லி விட்டு அப்புறம் ஸாக்ஷி இல்லை என்று சொன்ன மாதிரி இந்த 'அவனன்றி அணுவும் அசையாது' கொள்கைக்கும் மாறாக இன்னொன்று சொல்ல வேண்டியிருக்கிறது. 'மாறாக' என்றால் முற்றிலும் 'ஆப்போஸிட்'டாக இல்லை. அதைக்

Koviloor Digital Library

கொஞ்சம் 'அமென்ட்' பண்ணித்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. 'எல்லாம் அவன் செயல்', 'எல்லாம் சிவன் செயல்' என்றால், 'திருட்டுப் புரட்டு, அடிதடி, கொலை, கொள்ளை, ஃபோர்ஜரி, கோழிப் பெடிஷன் எதுவுமே தப்பில்லை; எல்லாம் அவன் ஆட்டிப் படைத்து நடத்துகிறதுதானே?' என்று ஆகி வியவஹாரத்தில் தர்மாதர்ம வியவஸ்தையே போய் விடும். அதனால்தான் 'அமென்ட்மென்ட்' போட வேண்டியதாகிறது. என்ன 'அமென்ட்மென்ட்' என்றால், நல்லது – கெட்டது, தப்பு – ஸரி எல்லாவற்றுக்குமே அவன்தான் மூலம், ஒரு புழு பூச்சியிலிருந்து ஆனை திமிங்கிலம் வரையில் அததற்கும் கொடுத்திருக்கிற சக்தி அவனொருத்தனிடமிருந்தே வந்தது தான் என்றாலும் எல்லார் செய்கிற எல்லாக் கார்யங்களையும் நேராக அவன் செய்யவில்லை. ஜீவ வர்க்கத்துக்குத் தனித்தனி மனஸ்களை அவன் கொடுத்து, அவரவருக்கும் தனக்கென்று ஒரு எண்ணம், உணர்ச்சி, ஆசை, த்வேஷம் இத்யாதி என்று அவனிடமிருந்து பிரிந்து நினைக்கும்படியாக வைத்திருக்கிறான். எல்லாரும் அவனுடைய வேஷந்தான் என்றாலும், தன்னுடைய மஹா விநோதமான மாயா சக்தியினால் அந்த வேஷக்காரர் களுக்குத் தங்களுடைய ஒரிஜினல், தங்களுடைய மூல ஸ்வரூபம் அவனேதான் என்பது அடியோடு தெரியாமல் மயக்கி லோக நாடகம் ஆடுகிறான். ஆனாலும் வேஷத்தைக் கலைத்துத் தன்னோடு அவர்கள் ஏகீ பாவம் [ஐக்கிய உணர்ச்சி] பெறுவதற்கும் அவன் வழி காட்டாமலில்லை. நல்லது, கெட்டது எல்லாவற்றையும் அவனே படைத்திருந் தாலும், ஜீவ மனஸ் இவற்றிலே கெட்டதுகளில் போய்ப் போய் விழுகிற மாதிரி மயக்கப் பண்ணினாலும், அந்த ஜீவனுக்கே புத்தி என்கிற ஒன்றையும் கொடுத்து, 'இது நல்லது, இது கெட்டது' என்று பாகுபாடு பண்ணிப் பார்த்து நல்லதிலேயே போக வேண்டும் என்று தீர்மானிக்கிற

Koviloor Digital Library

சக்தியைக் கொடுத்திருக்கிறான். வழுக்க மரத்திலே ஏறுகிற மாதிரி, புத்தியின் த்ருட ஸங்கல்ப சக்தியினாலே ஏறுகிறதும், மனஸின் சாபல்ய [சபலத்திற்கு ஆளாகிற] சக்தியாலே வழுக்கி, வழுக்கி இறங்குகிறதுமாக ஏற்ற இறக்கங்களைப் பண்ணி வேடிக்கைப் பார்த்து, ஜன்மாந்தரங்களுக்கு அப்புறமாவது ஒரு ஜீவன் கெட்டதான மாயையிலேயே மறுபடி வழுக்கி விழாமல், நல்லதாய் அதிலிருந்து மேலே ஏறித் தன்னை ஈச்வரன் என்கிற கல்யாண குணநிலயமான ரூபத்திலே அடையும்படியும், அதற்கும் அப்புறம் அந்த வேறான ஈச்வர ரூபமும் போய், நிர்குண ஸ்வரூபமான ப்ரம்மத்திலே ஏகாத்மாவாக ஒன்றாய்விடும்படியும் அநுக்ரஹிக்கிறான். தான் ஜீவனுக்குக் கொடுத்திருக்கும் புத்தியால் அவனே ஆலோசித்து நல்லது கெட்டதைத் தெரிந்து கொள்வதும் போதாது என்ற பரம கருணையால் அவற்றை எடுத்துச் சொல்லும் சாஸ்திரங்களைக் கொடுத்திருக்கிறான். தானே அவதாரங்கள் எடுத்தும், தன்னுடைய அம்சமாக மஹான்களை, ஆசார்ய புருஷர் களை அனுப்பி வைத்தும் அந்த சாஸ்திரப் பிரகாரமான ஆதர்ச வாழ்க்கையை நடத்திக் காட்டி ஜனங்களுக்கு நல்ல வழியில் பிடிப்பு ஏற்படுத்திக் கொடுக்கிறான்.

இருந்தாலும் அவன் அநுக்ரஹம் ஆவேசமாக ஒரு ஜீவனை ஆட்கொண்டு அவனைக் கார்யமில்லாத சாந்தத்தில் சேர்க்கிறவரை, அல்லது ஒரு ஜீவனுக்கு ஸொந்த ஆசா-த்வேஷங்களில்லாமல் ஈச்வரனுடைய கருவி மாத்ரமாகவே அவன் கார்யம் செய்கிற நிலை வருகிற வரை, ஜீவர்கள் அவரவர்களே கார்யம் செய்கிற மாதிரியும், தங்கள் காரியத்துக்கு ஜவாப்தாரியாக நல்லது பண்ணினால் ஸந்தோஷமும், கெட்டது பண்ணினால் துக்கமும் அடைய வேண்டுமென்றுதான் நிர்ணயித்து அப்படியே நாடகம் நடத்தி வருகிறான். 'கர்மா தியரி' என்று இப்போது தேசாந்தரங்களில், மதாந்தரங்களிலும் பல பேர்

Koviloor Digital Library

ஒப்புக் கொண்டு வருவதான நம்முடைய மதத்தின் ஒரு ஆணி வேரான கொள்கை இப்படி ஜீவனைக் கர்த்தாவாகக் கொண்டுதான் ஏற்பட்டிருப்பது. ஸகலத்துக்கும் ஈச்வரனே கர்த்தா, எல்லாம் சிவன் செயல் என்றால் நல்ல கார்யங்கள் தான் புண்யமானவை, ஸந்தோஷத்தைத் தருகிறவை, கெட்ட கார்யங்கள் பாபமானவை, அவை துக்கத்தையே தரும் என்று பிரித்துச் சொல்ல நியாயமில்லாமல் போகும்.

ஆனபடியால், ஸாமான்ய ஜனங்களான நாமெல்லோரும் இருந்து வாழ்க்கை நடத்தும் நடைமுறை ஸ்திதியில், நம் ஸகலருடைய சக்தி ஸாமர்த்தியங்களுக்கும் ஈச்வரன்தான் மூலம் என்றாலும், அந்த அர்த்தத்தில் 'அவனின்றி அணுவும் அசையாது' என்பது வாஸ்தவந்தான் என்றாலும், தனித் தனிக் கார்யம் என்று எடுத்துக் கொண்டால், ஜீவர்களான நாம்தான் அவற்றுக்கு ஜவாப் சொல்ல வேண்டிய கர்த்தா என்று புரிந்து கொள்ள வேண்டும்.

இப்படி நம்மையெல்லாம் கார்யம் பண்ணவிட்டிருக்கிற அவன் என்ன பண்ணுகிறானென்றால் நாம் செய்கிற அத்தனையையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் ஸர்வ வ்யாபி அல்லவா? 'அவனுடைய கை எல்லா இடத்திலும் விரிந்திருக்கிறது. அவனுடைய பாதம் எங்கும் பரவியிருக்கிறது. அவனுக்கே எங்கே பார்த்தாலும் கண்; எங்கே பார்த்தாலும் மூஞ்சியும் காதும் வாயும். லோகத்தில் ஸர்வத்தையும் அவன் வியாபித்திருக்கிறான்' என்று அவன் வாயாலேயே கீதையில் சொல்லியிருக்கிறது.

ஸர்வத: பாணிபாதம் தத் ஸர்வதோக்ஷி சிரோமுகம் |
ஸர்வத: ச்ருதிமல் – லோகே ஸர்வமாவ்ருத்ய திஷ்டதி ||*

'ஸர்வதோக்ஷி' – 'எங்கே பார்த்தாலும் அவனுக்குக் கண்' என்பதுதான் குறிப்பாக நமக்கு விஷயம். எங்கே

* XIII. 13

Koviloor Digital Library

பார்த்தாலும் கண்ணாயிருப்பதால் லோகத்திலே நாம் பண்ணும் அத்தனை கார்யங்களையும் பார்த்துக் கொண்டிருக்கிற மஹா பெரிய ஸாக்ஷியாக அவன் இருக்கிறான். 'விச்வ ஸாக்ஷிணீ' என்று ஸஹஸ்ர நாமத்தில் அம்பாளுக்குப் பேர் சொல்லியிருக்கிறது. 'கர்மாதி ஸாக்ஷிணீ' என்று த்ரிசதியிலும் வருகிறது.

அந்தப் பராசக்தி, அல்லது பரமாத்மாவின் பார்வையில் படாமல் யாரும் எதுவும் பண்ண முடியாது.

பார்த்தால் பார்த்து விட்டுப் போகட்டுமே என்று நாம் பாட்டுக்கு அடாவடி பண்ணிக் கொண்டு போக முடியாது. ஏனென்றால் அவன் வெறுமனே பார்த்து ஸாக்ஷியம் சொல்கிற 'விட்னஸ்' மட்டுமில்லை. பார்க்கிற கார்யங்களின் பலனை நமக்குத் தீர்ப்பாக, தண்டனையாக, அல்லது 'அவார்ட்', 'ரிவார்ட்'களாக வழங்குகிற ஜட்ஜூம் அவன்தான். ஸாக்ஷி, நியாயாதிபதி இரண்டுமாக இருக்கிறவன் அவன். பாரமார்த்திகமாக ஒரு ஸ்டேஜில் பார்த்தால் கார்யம் பண்ணுகிற [பெரும்பாலும் குற்றவாளி யாகவே இருக்கிற] பேர்வழியும் அவன்தான். ஆனால் அந்தப் பாரமார்த்திகம் நமக்கு இப்போது எட்டாது என்றுதானே மெடஃபிஸிக்ஸைத் தள்ளி வைத்து விட்டுக் கதை பேச வந்திருக்கிறோம்? இங்கே அவன் விட்னஸ், ஜட்ஜ் இரண்டுமாக இருப்பவன் என்பதோடு நிறுத்திக் கொண்டால் போதும்.

ஸாக்ஷி, நியாயாதிபதி இரண்டும் ஒரே ஆஸாமியாக இருப்பதால் பொய் ஸாக்ஷியை நிஜமென்று நம்பி நியாயாதிபதி தீர்ப்புக் கொடுக்கிறதற்கு இடமேயில்லை. இந்த ஸாக்ஷி – நியாயாதிபதியை யாரும் ஏமாற்ற முடியாது. அநேகக் குற்றங்கள் கோர்ட்டுக்கே போகாத மாதிரி இந்தப் பெரிய கோர்ட்டாரிடமிருந்து யாரும் தப்பிக்கவும் முடியாது!

Koviloor Digital Library

அந்த ப்ரக்ஞைதான் அநாதி காலமாக ஜன ஸமுதாயத்தை இந்த மட்டுமாவது நல்ல வழியில் போகும்படிப் பண்ணியிருக்கிறது. அந்த ஸர்வ ஸாக்ஷி நாம் பண்ணுகிறதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று அப்பப்பவாவது நமக்கு ஞாபகம் வருவதால்தான் ஏதோ ஒரு அளவுக்காவது தப்புத் தண்டாக்களில் போகாமலிருக்கிறோம்.

நமக்கு அதில் எவ்வளவு நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும், எதிராளி ஒருவர் நம்முடைய வார்த்தையை நம்பப் பண்ண வேண்டுமானால் அதற்கு தெய்வ ஸாக்ஷியை இழுப்பது மாதிரி வேறு எதற்கும் 'பவர்' இல்லை என்று நன்றாகத் தெரிகிறது! நம் வார்த்தையை நம்பாதவரை நம்ப வைப்பதற்குப் பெரிய அஸ்திரம், "ஸ்வாமி ஸாக்ஷியா சொல்றேன்", "அம்பாள் ஸாக்ஷி", "ஆகாசவாணி, பூமி தேவி ஸாக்ஷி" என்று இந்த மாதிரி ஸத்தியம் வைப்பதுதான்! "ஸத்யமா சொல்றேன்" என்று நம்முடைய ஸொந்த ஹோதாவில் பிரதிக்ஞை பண்ணுவதை விட தெய்வ ஸாக்ஷியைத் துணைக்குக் கூப்பிட்டால்தான் அது எதிராளியிடம் எடுபடுகிறது. நாமே செய்கிற ஸத்தியத்துக்கு 'வெய்ட்' கொடுக்காதவர்கள்கூட, 'ஸ்வாமி பேரைத் தைரியமா இழுத்துட்டு பொய்யைச் சொல்ல மாட்டான்' என்று, நாம் தெய்வத்தின் மேல் ஸாக்ஷி வைப்பதற்கு 'வெய்ட்' கொடுப்பார்கள்.

சில ஸமயங்களில் ஸ்தூலமாகவே தெய்வ ஸாக்ஷிக்கு அடையாளம் வைத்துக் கொண்டு கார்யங்கள் செய்கிறோம். இரண்டு தரப்புக்கள் ஒன்று சேர்ந்து முக்யமான ஒப்பந்தங்கள் பண்ணிக் கொள்வது போன்ற ஸமயங்களில், ஸர்வ வ்யாபகமாக உள்ள ஸர்வ ஸாக்ஷி நம் கண்ணுக்குத் தெரியாததால் கண்ணுக்குத் தெரிகிற விதத்தில் அந்த ஸாக்ஷியை ஆக்கிக் கொண்டு ஒரு ஒப்பந்தம் பண்ணிக்

Koviloor Digital Library

கொண்டால் அதை மீறப்படாது என்ற பயமிருக்குமென்பதால் இப்படிப் பண்ணுகிறோம்.

நம்முடைய வைதிக மதத்தில் ஸ்வாமிக்கு அப்படிப்பட்ட முக்யமான மூர்த்தியாக இருப்பது அக்னி. அதனால்தான் அக்னி ஸாக்ஷியாகப் பண்ணுவதென்று வைத்துக் கொண்டிருக்கிறோம். வதூ-வரர்கள் [மணமகள்-மணமகன்] செய்து கொள்ளும் ஆயுஸுக் கால ஒப்பந்தந் தான் விவாஹம். அதை அக்னி ஸாக்ஷியாகவே செய்கிறோம்.

ராமபிரானும் அக்னி ஸாக்ஷியும்

தாம்பத்யம்தான் இப்படிச் செய்வது வழக்கமாயிருந்தாலும் 'ஸக்யம்' என்கிற நட்பும் அக்னி ஸாக்ஷியாகப் பண்ணிக் கொண்ட ஒரு அபூர்வமான ஸம்பவம் ராமாயணத்தில் வருகிறது. இன்றைக்கு "ராமர் ஸாக்ஷியா சொல்றேன்" என்று சொல்கிற பல பேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தெய்வ ராமரே மநுஷ்யராக நடித்ததால் அக்னியை ஸாக்ஷி வைத்துக் கொண்டிருக்கிறார். 'ஸுக்ரீவ ஸக்யம்' என்று கேட்டிருக்கலாம்.

ஸீதாபஹரணத்திற்கு அப்புறம் ராம லக்ஷ்மணாள் அவளைத் தேடிக் கொண்டே கிஷ்கிந்தைக்கு வருகிறார்கள். அவர்களை ஹநுமார் ஸந்திக்கிறார். ராமர் ராஜ்யத்தை இழந்து விட்டுக் காட்டுக்கு வந்திருக்கிறாரென்றால் ஹநுமாரின் யஜமானனான ஸுக்ரீவனும் அப்போது அதிகாரத்தை இழந்துவிட்டு கிஷ்கிந்தாபுரியிலிருந்து ரிச்யமூக பர்வதத்துக்கு வந்து ஒளிந்து கொண்டிருக்கிறான்; இவர் மாதிரியே அவனும் பத்னியைப் பறிகொடுத்திருக்கிறான். இப்படி ஒரே மாதிரி கஷ்டத்துக்கு ஆளானவர்களுக்கிடையே பரஸ்பரம் ரொம்பவும் 'ஸிம்பதி' இருக்கும். அதை வைத்து இரண்டு பேரும் பரஸ்பர ஸஹாயம் செய்து

Koviloor Digital Library

கொண்டு இவர் அவன் கஷ்டத்தைப் போக்குவது, பதிலுக்கு அவன் இவர் கஷ்டத்தைப் போக்குவது என்று பண்ணிக் கொள்ளலாமே என்று 'ஐடியா' தோன்றுகிறது. ஸுக்ரீவனுடைய இரண்டு கஷ்டங்களுக்கும் காரணம் அவனுடைய அண்ணாவான வாலிதான். மஹாவீரரான ராமர்...

மஹாவீரர் என்றால் இப்போது ஜைன மதஸ்தாபகரான வர்த்தமான மஹாவீரரைத்தான் நினைப்பதாயிருக்கிறது. ஆதியிலே அந்தப் பேர் ராமசந்திர மூர்த்திக்கே இருந்திருக்கிறது. பவபூதி ராம சரித்திரத்தைத்தான் வால்மீகத்திலில்லாத ஒரு புது தினுஸுக் கதையாக 'மஹாவீர சரிதம்' என்று நாடகமாக எழுதியிருக்கிறார். நான் இப்போது சொல்லிக் கொண்டிருக்கும் வாலி ஸமாசாரமான கட்டத்துடன் அது அபூர்ணமாக — 'இன்கம்ப்ளீட்'டாக — நின்று போயிருக்கிறது. ஸொச்சம் கதையை வடக்கே ஒருத்தரும், தெற்கே இன்னொருத்தரும் ஒவ்வொரு விதத்தில் பூர்த்தி செய்திருக்கிறார்கள்.

'மஹாவீர'ப் பெயர் ஹநுமாருக்கும் உண்டு. நாம் 'ஹநுமார்' என்றும், தெலுங்கு தேசத்தில் 'ஆஞ்ஜநேயலு' என்றும், கன்னட தேசத்தில் 'ஹநுமந்தையா' என்றும், மஹாராஷ்ட்ராவில் 'மாருதி' என்றும் அதிகம் சொல்கிற அந்த ராமதாஸ ச்ரேஷ்டரை ஹிந்துஸ்தானி பேசும் மாகாணங்களில் 'மஹாவீர்' என்று சொல்வதே ஜாஸ்தி...

ராமர் மஹாவீரர் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். அந்த மஹாவீரரைக் கொண்டு வாலியை வதம் செய்து ஸுக்ரீவனுடைய கஷ்டத்தைப் போக்குவது, ப்ரதியாக ஸுக்ரீவன் வானர ஸைன்யங்களைக் கொண்டு லோகம் பூராவும் ஸீதையைச் சல்லடை போட்டுச் சலித்துக் கண்டுபிடித்து, அவளைத் தூக்கிக் கொண்டு போன ராவணனை ஸபரிவாரம் ஹதம் பண்ணுவதில் ராமருக்கு

Koviloor Digital Library

ஸஹாயம் செய்வது என்று ஹநுமாரும் ராமலக்ஷ்மணர்களும் ஒரு 'அவுட்லைன்' போட்டுக் கொள்கிறார்கள். அதை அஸல் 'ப்ளா'னாகவே 'ராடிஃபை' பண்ணுவதற்காக ஸுக்ரீவனிடம் அந்த இரண்டு பேரையும் ஹநுமார் தோளில் தூக்கிக் கொண்டு போகிறார்.

இங்கே ஒரு கேள்வி வரலாம். ராவணன்தான் ஸீதையைத் தூக்கிக் கொண்டு போனவனென்பது ராம லக்ஷ்மணாளுக்கும் தெரியும்; ஸுக்ரீவன்-ஹநுமாருக்கும் தெரியும். ராவணனை வழியில் பார்த்து, சண்டை போட்டு, குற்றுயிராகிக் கிடந்த ஜடாயு சொல்லி ராமலக்ஷ் மணாளுக்குத் தெரியும். ரிச்யமூகத்துக்கு மேலே ராவணன் ஸீதையோடு பறந்து போன போது ஸுக்ரீவனும் ஹநுமாரும் பார்த்திருக்கிறார்கள். ஸீதையும் அவர்களைப் பார்த்து, பிற்பாடு ராமர் அங்கே வந்தால் இவர்கள் அடையாளம் காட்ட இருக்கட்டுமே என்று தன் உத்தரீயத்தைக் கிழித்து அதில் நகைகளைக் கட்டி அவர் களிடம் போட்டிருக்கிறாள். இப்படியாக அவர்களுக்கு ராவணன்தான் ஸீதையைத் தூக்கிக் கொண்டு போனவன் என்று தெரிந்த அப்புறம் அவனுடைய ராஜதானியான லங்கா பட்டணத்தில் தான் அவளைச் சிறை வைத்திருப்பா னென்று ஊஹம் பண்ணி, அங்கே படையெடுத்துப் போய்ச் சண்டை போட்டு, அல்லது ஸமாதானமாகவே முயற்சி பண்ணிப் பார்த்து அவளை மீட்க வேண்டியதுதானே? எதற்காக நாலு திசையிலும் ஆளனுப்பி லோகம் பூராவையும் சல்லடை போட்டுச் சலிக்கணும்? இப்படிக் கேள்வி வரலாம்.

பதில் என்னவென்றால், ராக்ஷஸ புத்தி ரொம்பவும் மாயாவித்தனம் பண்ணுவது. எதையுமே நேராகப் பண்ணாமல் சூதாகப் பண்ணுவதே அவர்கள் குணம். மாரீசன் மானாக வந்தது, ராவணன் ஸந்நியாஸி வேஷத்தில் வந்தது, கம்பராமாயணப்படி சூர்ப்பனகைகூட ஸௌந்தர்ய

Koviloor Digital Library

வதியாக ரூபமெடுத்துக் கொண்டு வந்தது என்கிற மாதிரி பெரிய பெரிய சூதுகளிலிருந்து ஆரம்பித்து ஸகல நடவடிக்கையிலும் ஒரு சூது, ஏமாற்று, ஒளிப்பு இருக்கிறாற் போலவே அவர்கள் பண்ணுவார்கள். ராவணனுக்கு லங்காபுரிதான் ராஜதானி, லங்கா த்வீபந்தான் நேர் ராஜ்ய மென்றாலும் அவன் த்ரிலோகத்திலும் கொடி கட்டிப் பறந்தவன். ஆனதினாலே யாரும் ஊஹிக்கக் கூடிய லங்கையில் இல்லாமல் வேறே எங்கேயாவது தேசாந் தரத்தில், லோகாந்தரத்தில்கூட அவன் அவளை ஒளித்து வைத்திருக்கக் கூடியவன்.

அதற்கும் மேலே ஒன்று. அவளை அவன் வயிற்றிலேயே கூட ஒளித்து வைத்திருக்கக்கூடியவன்! புரிகிறதோல்லியோ? ராக்ஷஸர்கள் நர மாம்ஸ பக்ஷிணிகள். 'பிசிதாசனர்' என்று அவர்களுக்குப் பெயர். பிசிதம் என்றால் மாம்ஸம், குறிப்பாக நர மாம்ஸம். 'அசனம்' என்றால் ஆஹாரம். Cannibal என்கிறார்களே, அப்படிப் பட்டவர்கள் ராக்ஷஸர்கள். அதனால் ராவணன் ஸீதையை மிரட்டும் போது, "இன்ன கெடுவுக்குள் நீ எனக்கு இணங்கா விட்டால் உன்னைக் கொன்று விடுவேன்" என்று மாத்திரம் சொல்வதில்லை; "கொன்று **தின்று** விடுவேன்" என்று சொல்வது வழக்கம்!

அதனாலே, 'ஸீதை எங்கே இருக்கிறாள் என்று தேடுவதற்கு, அவள் இல்லாமல் போய் விட்டாளா? அவன் அவளை ஒளித்து வைக்காமல் ஒழித்தே விட்டானா?' என்று கண்டு பிடிக்கும்படியும் இருந்தது. லோகம் பூராவும் தேடிப் பார்த்தால்தானே இதை நிச்சயம் செய்து கொள்ள முடியும்?

ராம லக்ஷ்மணாளை ஸுக்ரீவனிடம் ஹநுமார் சேர்த்த கதையிலிருந்தோம். அதைத் தொடர்ந்தே ராமரும் ஸுக்ரீவனும் ஸ்திரமான நட்பு ஒப்பந்தமாக ஸக்யம் செய்து கொள்கிறார்கள்.

Koviloor Digital Library

கல்யாணத்தில் பாணிக்ரஹணம் செய்கிறது போலவே முதலில் ஸுக்ரீவன் தன்னுடைய கையை ராமர் பிடிக்க வேண்டும், அப்படிப் பண்ணி விட்டாலே ஃபார்மலான ஒப்பந்தமாகி விடும் என்றுதான் நினைக்கிறான். ராமரிடம் கையை நீட்டுகிறான். பால காண்டத்தில் விவாஹ ஸமயத்தில் ஜனகர் ராமரிடம் ஸீதையின் கையைப் பிடிக்கச் சொல்லும் போது, **"பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணினா"** என்று சொன்னதன் அச்சாகவே இப்போது ஸுக்ரீவன், **"க்ருஹ்யதாம் பாணினா பாணிம்"** என்கிறான்.

வெள்ளைக்காரர்களைப் பரிஹாஸம் பண்ணும் பௌராணிகர்கள் இதை வைத்து வேடிக்கையாகச் சொல்வார்கள். வதூ வரர்கள் பாணிக்ரஹணம் செய்து கொள்வதாக நம்முடைய கலாசாரத்தில் உண்டே தவிர, இதர பந்துக்களோ ஸ்நேஹிதர்களோ கையோடு கை பிடிக்கிற வழக்கம் கிடையாது. ரொம்ப அன்பு மேலிட்டுப் போனால் நெருங்கின பந்து மித்ராள் ஆலிங்கனம் செய்து கொள்வதுண்டு; வயஸில் பெரியவர்கள் சின்னவர்களை உச்சி மோந்து பார்ப்பார்கள். ஆனால் நம்முடைய நர வர்க்கத்தின் நாகரிகத்தில் கையோடு கை பிடிப்பதில்லை. வானர ஆசாரம்தான் அப்படி. அதனால்தான் ஸுக்ரீவன் அப்படிப் பண்ணினான். அதைத்தான் இன்றைக்கு நமக்கே நாகரிகம் சொல்லிக் கொடுக்கிற தேசத்துக்காரர்கள் 'ஷேக் ஹான்ட்' என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிற 'எவல்யூஷன் தியரி' [பரிணாமக் கொள்கை]க்கு இப்படி அவர்களே நிரூபணமாயிருக்கிறார்கள் – என்று, நான் சொல்லவில்லை, கதை புராணம் சொல்லும் உபந்யாஸகர்கள். சொல்வதுண்டு!

அவரவர்களுடைய லெவலைப் புரிந்து கொண்டு, அநுதாபத்தோடு அந்த லெவலுக்குத் தாமும் இறங்கி வந்து இழைந்து பழகுவது ராமசந்திர மூர்த்தியின் குணவிசேஷம்.

Koviloor Digital Library

ஆகையினாலே அவர் ஸுக்ரீவன் ஆசைப்பட்டாற் போலவே அவன் கையைப் பிடித்துக் கொள்கிறார்.

ஹநுமார் பேருக்குத்தான் வானரம். அவருக்குத் தெரியாததில்லை. ராமர் மநுஷ்ய ஜாதிக்கான தர்மங்களை யெல்லாம் முழுக்க முழுக்க சாஸ்திர ப்ரகாரம் பண்ணிக் காட்டுபவர் என்று அவருக்குத் தெரியும். மநுஷ்ய தர்மப்படி ஒரு ஏற்பாட்டை மாற்ற முடியாதபடி உறுதிப்படுத்த வேண்டுமானால் அதற்கு அக்னி ஸாக்ஷியாகப் பண்ணுவதற்கு மிஞ்சி வழியில்லை என்று ஹநுமார் நினைத்தார். அதனால், இப்போது ராமரும் ஸுக்ரீவனும் அக்னி பகவானின் ஸந்நிதானத்தில் ஸ்நேஹ உடன்படிக்கை செய்து கொண்டு விட வேண்டும் என்று அவர்தான் ஏற்பாடு பண்ணினார்.

ராமர் மஹாவிஷ்ணுவேதான் என்றும் ஹநுமாருக்குத் தெரியும். அந்த மஹா பகவான் அக்னி பகவானை ஸாக்ஷி வைத்துக் கொள்ள வேண்டுமா என்றால், மஹா பகவான் இப்போது இந்த அவதாரமெடுத்திருப்பதே மநுஷ்ய வர்க்கத்திற்கு சாஸ்திர வழிப்படி ஸகல தர்மங்களையும் அநுஷ்டித்துக் காட்டி ஒரு 'ஐடிய'லைக் கொடுக்க வேண்டு மென்றுதானே? அதனால்தான் மநுஷ்யர்களை ஒரு ஒப்பந்தத்தில் கட்டுப்படுத்தி வைப்பதற்குப் பெரிய விதியாக இருக்கும் அக்னி ஸாக்ஷியை ராமரும் பண்ணுமாறு செய்ய வேண்டும், அவதார 'பர்ப'ஸைத் தாம் புரிந்து கொண்டு அப்படிப் பண்ணுவதை அவர் தப்பாக நினைக்காமல் ஸந்தோஷமேபடுவார் என்று நினைத்து அந்த மாதிரியே செய்தார்.

மஹா பலசாலியான அவர் பக்கத்திலிருந்த மரத்தி லிருந்து கிளைகளை முறித்து, அவற்றை ஒன்றோடொன்று தேய்த்தே நெருப்பு மூட்டினார். அந்த அக்னியை ராமருக்கும் ஸுக்ரீவனுக்கும் மத்தியில் ஸ்தாபித்தார்.

Koviloor Digital Library

வதூ-வரர்கள் மாதிரியே அந்த இரண்டு பேரும் அக்னியைப் ப்ரதக்ஷிணமும் வந்தார்கள்.

"ராமா! நாம் ஸ்நேஹிதர்களாகி விட்டோம். இனிமேலே ஸுகமோ, துக்கமோ நம் இரண்டு பேருக்கும் ஒன்றுதான்" என்று ஸுக்ரீவன் சொல்ல, அவரும் அப்படியே அங்கீகாரம் பண்ணிக் கொண்டார்.

இந்த ஸர்க்கத்தை முடிக்கிற இடத்தில் வால்மீகி ராமாயணத்தில் ரொம்பவும் அழகான ஒரு கருத்தைத் தெரிவிப்பதாக ச்லோகம் இருக்கிறது:

ஸீதா – கபீந்த்ர – க்ஷணதாசராணாம்
ராஜீவ – ஹேம – ஜ்வலநோபமாநி |
ஸுக்ரீவ – ராம – ப்ரணய – ப்ரஸங்கே
வாமாநி நேத்ராணி ஸமம் ஸ்புரந்தி ||

ஸக்யம் செய்து கொண்டது இரண்டு பேர் — ராமர், ஸுக்ரீவன் என்ற இரண்டு பேர். அப்படி அவர்கள் செய்தவுடன் மூன்று பேருக்கு இடது கண் துடித்ததாம்! அதிலே ஒருவருக்கு ராஜீவம் என்கிற நீலத் தாமரைப் பூ மாதிரியான கண்ணாம்; இன்னொருவருக்கு மஞ்சளும் சிவப்பும் கலந்த தங்க நிறக் கண்ணாம்; மூன்றாமவருக்கு அக்னி ஜ்வாலை மாதிரி கண்ணாம். அந்த மூன்று கண்களும் இந்த ஸக்யம் ஏற்பட்டவுடன் ஒரே போலத் துடித்தது என்று ச்லோகம் வருகிறது.

யார் அந்த மூன்று பேர்? நீலத் தாமரை போலக் கண் இருப்பது ஸாக்ஷாத் ஸீதைக்குத்தான். ஜலத்திலே அந்தப் பூ இருப்பது போலவே அப்போது அவளுடைய கண் அழுகையிலேயே முழுகியிருந்தது. இப்போது இந்த ஸக்யம் உண்டானதால் அந்த அழுகை போய் அவளுக்கு நல்ல காலம் பிறக்கப் போகிறது. ஸ்த்ரீகளுக்கு இடது கண் துடிப்பது நல்ல காலம் வருவதற்கு அறிகுறி; வலது கண்

Koviloor Digital Library

துடித்தால் கெட்ட காலத்துக்கு அறிகுறி. புருஷர்களுக்கு இதைத் தலைகீழ் பண்ணி வலது கண் துடித்தால்தான் நல்லதுக்கு அறிகுறி; இடது துடித்தால் கெட்ட காலத்தைக் குறிக்கும். ஸக்யத்தின் விளைவாக ஸீதைக்கு நல்ல காலம் வரப் போவதால் அவளுக்கு இடது கண் துடித்தது. மற்ற இரண்டு இடது கண்களும் இரண்டு புருஷர்களுடையது. யார் யாரென்றால், உடனே வதமாகப் போகிற வாலியும், கொஞ்ச காலம் தள்ளி வதமாகப் போகிற ராவணனுந்தான். மஞ்சளும் சிவப்பும் கலந்த தங்க நிறக் கண்காரன் என்றது வாலியைத்தான். வானரர்களுக்கு செம்மஞ்சள் கண், 'பிங்காக்ஷம்' என்பது. ஜ்வாலைக் கண்காரன் ராவணன். கோபாக்னியில் அவன் கண் ஜ்வாலை வீசும்! அக்னி ஸாக்ஷியான ஸக்யம் அந்த அக்னியை அணைப்பதில்தான் முடியப் போகிறது!...

ஸூர்ய வம்சத்தில் பிறந்தவருக்கும் ஸூர்ய புத்ரனுக்கும் இப்படியாக அக்னி ஸாக்ஷி உறவு உண்டாகி, அப்புறம் அவர்கள் பரஸ்பர ஸஹாயம் செய்து கொண்டு ஸௌக்யத்தை அடைந்தார்கள்.

ஈசனே ஸாக்ஷியாக

நான் மெடஃபிஸிக்ஸ் சொல்ல நினைக்கவில்லை. கதை சொல்லத்தான் உத்தேசித்தேன். மெடஃபிஸிக்ஸ் அதுவாகவே வந்து கொஞ்சம் இழுத்தது. அப்புறம் ஸுக்ரீவ ஸக்யம் கதை சொன்னேன். ஆனால் இந்தக் கதையும் நான் உத்தேசித்த கதையில்லை!

ஸ்வாமியே ஸாக்ஷியாக வந்து நிஜத்தை [நி]ரூபித்த தாக அநேக ஸ்தல புராணங்களில் இருக்கிறது. இரண்டு பேருக்கு மத்தியில் ஸந்தேஹம், மனஸ்தாபம் வந்து விடுகிறது. நிஜத்தை எடுத்துச் சொல்லி ரூபித்து அதைப் போக்க லோகத்தில் மநுஷ்யாள் யாருமே இல்லை. அந்த

Koviloor Digital Library

ஸந்தர்பத்தில், அநியாயத்துக்கு ஆளாகி மனஸ் துடிக்கிற கட்சிக்காரர் ஆண்டவன்தான் ஸாக்ஷி சொல்லி ரூபிக்க் வேண்டுமென்று 'சாலஞ்'ஜாகவே பிரார்த்தனை பண்ணுவார். 'இன்ன இடத்தில் இப்படி நடந்ததற்கு இன்ன ஊர் கோயிலிலுள்ள இன்ன ஸ்வாமிதான் ஸாக்ஷி' என்பார். அந்த ஸ்வாமியும் அப்படியே ஸாக்ஷி சொல்லி நியாயமுள்ளவரின் கட்சியை நிலைநாட்டுவார். இப்படிப் பல ஸ்தல புராணக் கதைகள் இருக்கின்றன. அதில் சிலதைச் சொல்லணுமென்றுதான் ஆரம்பித்தேன். ஆனால் அது முதலில் மெடஃபிஸிகல் 'ஸாக்ஷின்', அப்புறம் ஸ்வாமி ஸாக்ஷி சொல்வதற்குப் பதில் ஸ்வாமியே அக்னி ஸாக்ஷியாக ஸக்யம் செய்து கொண்டது என்று திசை மாறிப் போய் விட்டது. இதெல்லாமும் நல்ல விஷயந்தா னென்றாலும் சொல்ல வந்ததற்கு வேறேதானே? இப்போதாவது வேறே விஷயத்துக்குப் போகாமல் சொல்ல நினைத்ததை நிர்விக்னமாகச் சொல்வதற்கு விக்நேச்வரர் கதையில் ஆரம்பித்தால்தான் முடியும் போலிருக்கிறது. "ஸாக்ஷி கணபதி" என்றே ஒரு க்ஷேத்ரத்தில் இருக்கிறார். அவரில் ஆரம்பித்துப் பார்க்கிறேன்.

ஸாக்ஷி கணபதி

ஸாக்ஷி கணபதி இருப்பது ஸ்ரீசைலத்தில். அந்த மஹா க்ஷேத்ரத்தில் ஜ்யோதிர்லிங்கமான மல்லிகார்ஜுன மஹா லிங்கம் உள்ள பிரதானமான ஆலயத்திலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தில், ஊர் எல்லையில், சாலை ஓரத்திலேயே அவர் இருக்கிறார்.

இப்போது ஸ்ரீசைலம் கோபுர வாசல் வரை ஸௌகர்யமாக பஸ், கார் போக வசதி ஏற்பட்டு விட்டது. இந்த நூற்றாண்டின் முதல் பாதி வரையில் ஸரியான பாதை இல்லாமல் காடு, மலைகள் தாண்டி ரொம்பவும் ச்ரம

Koviloor Digital Library

ஸாத்தியமாகத்தான் ஸ்ரீசைல யாத்திரை பண்ண வேண்டி யிருந்தது. ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் தேவாரத்திலேயே **"செல்லலுற அரிய சிவன் சீபர்ப்பத மலையை"** என்று அந்த ஸ்தலம் ஸுலபமாகப் போய்ச் சேர முடியாததென்பதைச் சொல்லியிருக்கிறார். 'சீ பர்ப்பதம்' என்றால் ஸ்ரீசைலம். ஸ்ரீமான் சீமானாகிற மாதிரி ஸம்ஸ்கிருத 'ஸ்ரீ' தமிழ் 'சீ' ஆகும். 'பர்ப்பதம்', 'பருப்பதம்' என்றெல்லாம் சொல்வது பர்வதம்தான். பர்வதம் என்றால் மலை. சைலம் என்றாலும் மலைதான். ஆகையால் ஸ்ரீசைலம் என்பதையே தமிழ் பாஷைப் பண்புக்கேற்ப 'சீ பர்ப்பதம்' என்பார்கள். 'திருப் பருப்பதம்' என்றும் சொல்வதுண்டு.

த்வாதச ஜ்யோதிர்லிங்க க்ஷேத்ரங்கள் என்னும் பன்னிரண்டு விசேஷமான சிவ ஸ்தலங்களில் ஸ்ரீசைலம் ஒன்று. பிரதானமான சக்தி பீடங்களில் ஒன்றாகவும் அது இருக்கிறது.

எத்தனை சிரமமிருந்தாலும் பக்த ஜனங்கள் பொருட் படுத்தாமல் தரிசனம் பண்ண வருவார்கள் என்று காட்டு வதற்குப் போலவே ஸ்வாமி இப்படிப்பட்ட மஹா க்ஷேத்ரங்களில் பலதை காடு, மலைகளுக்கு நடுவில் வைத்திருக்கிறார். திருப்பதி, பதரி முதலியவை கூட அப்படி இருந்தவைதான். இன்னமும் சபரிமலையில் கடைசி மைல்களைக் காட்டு வழியில் காலால் நடந்துதான் கடக்க வேண்டியிருக்கிறது.

நன்றாகப் பசித்துச் சாப்பிட்டால்தான் உடம்பில் பூர்ணமாக ஒட்டும் என்பது மாதிரி, கஷ்டப்பட்டு யாத்ரை பண்ணினால்தான் தர்சன பலன், தர்சனாநந்தம் பூர்ணமாகக் கிடைக்கும். திருப்பதி போன்ற க்ஷேத்ரங்களில் நாளுக்கு நாள் ஸௌகர்யங்கள் ஜாஸ்தி பண்ணித் தருகிறார்களென்று கேட்டால் ஒரு பக்கம் ஸந்தோஷமாகத் தானிருக்கிறதென்றாலும் இன்னொரு பக்கம் இப்போது

Koviloor Digital Library

ஜனங்களுக்கு ஜெனரலாக ஒரு நேம நிஷ்டை வியவஸ்தைகள் இல்லாமல் போயிருப்பதில் க்ஷேத்ரங்களையும் பிக்னிக் ஸென்டர்களாக்கிக் கொண்டு விடுகிறார்களே என்று துக்கமாகவும் இருக்கிறது. காட்டேஜ்களில் நடக்கிற தகாத கார்யங்களைக் கேட்கிற போது, நன்றாக எட்டடி, பத்தடி உயரமாக 'நின்ற' திருக்கோலத்திலிருக்கிற வேங்கடரமண ஸ்வாமியே 'கிடந்த' திருக்கோலத்தில் நித்திரை போய் விட்டாரா என்றுகூடத் தோன்றுகிறது!

அவர் தூங்கவேயில்லை. நாம் பண்ணுவதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிற ஸர்வ ஸாக்ஷி அவர் என்றுதானே ஸப்ஜெக்டே எடுத்துக் கொண்டிருக்கிறோம்? ஸாக்ஷியே ஜட்ஜுமாகித் தண்டனையும் தருவார் என்றும் பார்த்தோமே! ஆனாலும் 'அரசன் அன்று கேட்பான். தெய்வம் நின்று கேட்கும்' என்ற வசனப்படி அவர் விளையாடுவதாலேயே நாம் அவஸரப்பட்டு 'ஸ்வாமி தூங்கிப் போய்ட்டாரா? ஸ்வாமிக்குக் கண் இல்லையா?' என்றெல்லாம் கேட்கிறோம்.....

ஆதி காலத்திலிருந்து எத்தனையோ சிரமம் இருந்த போதிலும் ஸ்ரீசைலத்துக்குப் போகிற பேர் போய்க் கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். தேவாரம் பாடிய மூவரும் அந்த ஊரைப் பாடியிருக்கிறார்கள். தேவாரமுள்ள ஊர்களுக்குப் பாடல் பெற்ற ஸ்தலம் என்று பெயர். அப்படி மொத்தம் 274 இருக்கின்றன. அதில் வடநாட்டு ஸ்தலங்கள் என்பவை ஐந்தே ஐந்துதான். அந்த ஐந்தில் ஒன்று திருப் பருப்பதம் என்னும் ஸ்ரீசைலம். அந்த ஐந்தில் அப்பர், ஸம்பந்தர், ஸுந்தரர் ஆகிய மூவரும் பாடியவை இரண்டு தான். ஒன்று கைலாஸம் என்றும் நொடித்தான்மலை என்றும் சொல்லப்படும் ஹிமாலய க்ஷேத்ரம்; பரமசிவனின் ஸாக்ஷாத் வாஸ ஸ்தலம். விக்ரஹமாயில்லாமல் அவனே ஸாக்ஷாத்தாக இருக்கிற இடம். மற்றது ஸ்ரீசைலம்தான்.

Koviloor Digital Library

போக ரொம்பக் கஷ்டமான அந்த க்ஷேத்ரத்துக்கு நம் ஆசார்யாளும் போயிருக்கிறார். அவருக்கு மிகவும் பிடித்த க்ஷேத்ரம் அதுவே என்று காட்டுகிற ரீதியில் 'சிவாநந்த லஹரி'யின் நடுநாயகமான ஐம்பதாவது ச்லோகத்தில் **"ஸேவே ஸ்ரீகிரி மல்லிகார்ஜுன மஹாலிங்கம் சிவாலிங்கிதம்"** என்கிறார். 'ஸ்ரீகிரி' என்றால் 'ஸ்ரீசைலம்'தான். ஸுலபத்தில் போக முடியாமல் அந்த இடம் இருந்ததாலேயே ஏகாந்த நிஷ்டைக்கு ஆசார்யாள் இஷ்டம் கொண்ட போது அதைத் தான் 'சூஸ்' பண்ணினார். "என் உடம்பு பூரா கொடி படர்ந்து கொண்டு காதுகளிலிருந்து பக்ஷிகள் கூடு கட்டித் தொங்கிக் கொண்டு இருக்கும்படியாக வெளி லோக ப்ரக்ஞையே இல்லாமல் ஸ்ரீசைல சிகர குகையிலே (**'ஸ்ரீசைல ச்ருங்க குஹரேஷு') நான் எப்போது ஸமாதியி லிருப்பேன்?" என்றே ஒரு இடத்தில்*** அவர் கேட்டிருக்கிறார். அதிலிருந்து அந்த இடம் எத்தனை எட்டாக்கை, அங்கே போவது எத்தனை சிரமமாயிருந்திருக்கணும் என்று புரிந்து கொள்ளலாம்.

இவ்வளவு ச்ரம ஸாத்தியமாகவே அடையக்கூடிய இடமாயிருப்பதால் அங்கே யாத்திரை செய்கிற பக்தர் களுக்கு மற்ற எந்த க்ஷேத்ரத்தையும்விட அதிகமான இஹ பரஸெளக்யங்களைத் தர வேண்டுமென்று பரமேச்வரன் உத்தேசம் பண்ணினார்.

ஆனாலும் அவருடைய குணம் என்னவென்றால்... அவரை 'ஆசுதோஷி' என்பார்கள். அதாவது, எளிசாக ஒரு பக்தி பண்ணியே, அது கபட பக்தியாகக் கூட இருக்கலாம், அப்படிப் பண்ணியே ரொம்ப சீக்கிரத்திலே அவரை ப்ரீதி பண்ணுவித்து எந்த வரத்தை வேண்டுமானாலும் வாங்கிக் கொண்டு விடலாம். அம்ருத மதனம் பண்ணின போது க்ஷீர ஸாகரத்திலிருந்து ஐராவதமும், கல்பக வ்ருக்ஷமும்

* 'யோக தாராவளி' – ச்லோகம் 28.

Koviloor Digital Library

வந்தவுடன் இந்திரன் அதுகளைத் தட்டிக் கொண்டு போய் விட்டான். காமதேநு வந்தவுடன் ப்ரம்ம ரிஷிகள் எடுத்துக் கொண்டார்கள். அப்புறம் வந்த கௌஸ்துபமும் மஹாலக்ஷ்மியும் மஹாவிஷ்ணுவிடம் போய்ச் சேர்ந்தது எல்லாருக்கும் தெரியும். அம்ருதத்தை அத்தனை தேவர்களும் எடுத்துக் கொண்டு சாப்பிட்டார்கள். ஆனால் இதற்கெல்லாம் முதலில் பயங்கரமான ஹாலாஹல விஷம் வந்ததே. அதை? அதை மட்டும், "அப்பா பரமேச்வரா, நீதாண்டாப்பா ரொம்ப நல்லவன், பரம உபகாரி. ஆனதினாலே இந்த விஷத்தை வெளியிலே விடாமல் நீயே உள்ளுக்குள்ளே வெச்சுக்கோ!'' என்று அந்த ஆசுதோஷியிடம் போய்த்தான் அத்தனை தேவர்களும் குல்லாய் போட்டார்கள். அவரும் பரம ப்ரீதியுடன் அதைச் சாப்பிட்டார். ஒன்று கவனிக்கணும்: அதாவது முதல் முதலில் விஷ உத்பவம்; அப்புறம்தான் நல்ல நல்ல வஸ்துக்களாகக் காமதேநுவில் ஆரம்பித்து அம்ருதம் முடிய அநேகம் வந்தது. விஷம் வந்த போது எவனிடம் தஞ்சமென்று போய் அவனும் ரக்ஷித்தானோ அவனை அப்புறம் உத்தம வஸ்துக்கள் வந்தபோது யாராவது நினைத்தார்களோ? அப்படியும் அந்தப் பரமேச்வரன் பொருட்படுத்தாமல் அநுக்ரஹம் பண்ணிக் கொண்டுதான் இருந்தான்!

அகத்தில் அப்பாக்காரர் ரொம்ப தாக்ஷிண்ய மாகவோ அப்பாவியாகவோ இருந்தால் பிள்ளைதான் 'முழித்துக் கொண்டு' கறார் கண்டிப்புக் காட்ட வேண்டிய இடத்தில் அவரை ஞாபகப்படுத்தித் தட்டியெழுப்புவான். இப்போது பிள்ளையார் அப்படி 'முழித்து'க் கொண்டார். 'மஹா ச்ரமப் பட்டே வரக்கூடிய ஸ்ரீசைல யாத்ரிகர்களுக்கு விசேஷ பலன் தருவது என்று தகப்பனார் இப்போது விதி பண்ணியிருந்தாலும் மற்ற ஸ்தலங்களுக்கு யாத்ரை போகிற வர்களும் கொஞ்சம் கொஞ்சி, கெஞ்சிக் கேட்டுக் கொண்டு

Koviloor Digital Library

விட்டால் மனஸ் இறங்கி அவர்களுக்கும் எக்ஸ்ட்ரா பலன் கொடுத்து விடுவார். காசிதான் தன்னுடைய ராஜதானி, அங்கே மரணமடைகிறவர்களுக்கெல்லாம் முக்தி என்று விதி பண்ணினவர் அப்புறம் காசிக்கு ஸமானம் என்று அநேக க்ஷேத்ரங்களையும், 'காசிக்கும் வீசம் அதிகம்' என்று கும்பகோணத்தையும் ஒப்புக் கொண்டவர்தானே? இந்த ஸ்ரீசைல விஷயத்திலும் அந்த மாதிரி ஆக விடப்படாது' என்று பிள்ளையார் தீர்மானம் பண்ணிக் கொண்டார்.

பிதாவிடம் போனார். "ஸ்ரீசைலம் போகிறவர்களுக்கு மட்டுமே நீங்கள் தருவதாக இருக்கும் பலன்களை வேறே யாருக்கும் தரக் கூடாது. அங்கே யார் யார் வருகிறார்களென்று நான் பார்த்து ஸாக்ஷி சொல்கிறேனோ அவர்களுக்குத்தான் அந்த எக்ஸ்ட்ரா நன்மைகளைக் கொடுக்கணும். உங்களுக்குக் கருணை ஸ்வபாவம். ("நீங்கள் ஈஸியாக ஏமாந்து போய் விடுவீர்கள்" என்று எப்படி ஒரு பிள்ளை அப்பாவிடம் சொல்ல முடியும்? அதனால் 'கருணை ஸ்வபாவம்' என்றது!) "அதனால் பொய்யாகக் கூட யாராவது ஸ்ரீசைல யாத்ரை பண்ணினதாகச் சொல்லி வரத்தைத் தட்டிக் கொள்ள முடியும். அப்படியாகாமல் ஊரெல்லையிலேயே நான் ஸாக்ஷி கணபதியாக உட்கார்ந்து கொண்டு நிஜமாகவே யார் வருகிறார்களோ அவர்கள் பேர், ஊர், அங்கே வந்த தேதி எல்லாவற்றையும் எழுதி வைத்துக் கொண்டு உங்களுக்குக் காட்டுகிறேன். அவர்களுக்கே ஸ்பெஷல் அநுக்ரஹத்தைப் பண்ணுங்கள்" என்று சொன்னார்.

"அப்படியே!" என்று ஸ்வாமியும் ஒப்புக் கொண்டார்.

ஸ்ரீசைல எல்லையில் அந்த ஸாக்ஷி கணபதி, 'ஸாக்ஷி கணபதி' என்றே பெயர் வைத்துக்கொண்டு இருக்கிறார். இன்றைக்கும் சிலா மூர்த்தமாக இருக்கிறார். நல்ல கம்பீரமான மூர்த்தம். பாங்காக ஒரு காலைத் தொங்க

Koviloor Digital Library

விட்டுக் கொண்டும் ஒரு காலை மடித்துக் கொண்டும் உட்கார்ந்திருப்பார். மேல் இரண்டு ஹஸ்தங்களில் எல்லாப் பிள்ளையார்களையும் போலப் பாசாங்குசம் வைத்துக் கொண்டிருப்பார். கீழ் ஹஸ்தம் இரண்டிலும்தான் அபூர்வமான மாறுபாடு: "இவர் ஸாக்ஷி கணபதி" என்று ஸாக்ஷி சொல்கிற மாதிரி, வேறெங்கேயுமில்லாத புதுமை யாகச் சுவடியும் எழுத்தாணியும் அந்த இரண்டு கைகளில் வைத்துக் கொண்டிருப்பார். நிஜமான ஸ்ரீசைல யாத்ரிகர் களின் பேர், ஊர், அவர்கள் யாத்ரை பண்ணின காலம் முதலியவற்றைக் குறித்து வைத்துக் கொள்வதற்குத்தான் ஏடும் எழுத்தாணியும்.

யாத்ரையை யதோக்தமாக முடித்து விட்டு நாம் புறப்படும் போது கடைசியில் எல்லையில் அவரிடம் போய்ச் சொல்லிக் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் வழிபடும் ஸ்வாமியை இங்கே முடிவில் வழிபட வேண்டும்! நாம் இன்னார் முதலிய 'டிடெய்ல்'களை அவரிடம் தெரிவித்துக் கொள்ள வேண்டும். அவர் தாம் வைத்திருக்கும் பேரேட்டில் அதைப் பதிவு பண்ணிக் கொண்டு, அப்புறம் பிதாவிடம் சொல்லி, "நான் ஸாக்ஷி! அவர்கள் வந்தது வாஸ்தவந்தான்" என்று நமக்காகப் பரம க்ருபையோடு 'காரன்டி' கொடுத்து யதேஷ்டமாக ஈச்வர ப்ரஸாதத்தை வாங்கிக் கொடுப்பார். "பூணலைப் பிடிச் சுண்டு ஸத்ய ஸாக்ஷி சொல்றேன்" என்பது வழக்கம். இந்த ஸாக்ஷி கணபதி மூர்த்தத்தில் அந்தப் பூணூல் வரி வரியாக எடுப்பாகத் தெரியும். கணபதியின் ஆனந்த நிறைவைக் காட்டும் தொந்தியைக் கட்டியிருக்கிற ஸர்ப்ப உதர பந்தமும் ஸ்பஷ்டமாக இருக்கும்.

இவர் தனிப்பட்ட எந்த இரண்டு மநுஷ்யர்களுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு வியவஹாரம் உண்டானதைத் தீர்த்து வைத்த ஸாக்ஷி இல்லை. கஷ்டப்பட்டு ஸ்ரீசைல

Koviloor Digital Library

யாத்ரை செய்பவர்கள் அதே பலனை மற்றவர்களுக்கும் ஸ்வாமி கொடுத்து விடுவதால் மனஸ்தாபப்படாமல் காப்பாற்றி ஸாக்ஷி சொல்பவர். அப்படிச் சொல்வதுகூட ஸரியில்லை. யாத்ரா பலன், அதைப் பிறத்தியாருடன் 'கம்பேர்' பண்ணி தாபப்படுவது என்றெல்லாம் நிஜ பக்தர்கள் நினைக்கவே மாட்டார்கள். ஆனாலும் வேலைக்கேற்ற கூலி பெற்றுத் தரணும், ச்ரமத்துக்கேற்ற புண்ய பலனை பக்தர்களுக்கு வாங்கித் தரணும் என்ற நியாயத்துக்காகவும், யாரும் பொய் பண்ணி அதில் பங்கு வாங்கிக் கொண்டு விடக் கூடாது என்ற ஸத்யத்துக்காகவும் தாமாகவே ஸாக்ஷிக்காரரானவர் இந்த கணபதி. கணபதிப் பிள்ளையார் கணக்குப் பிள்ளை மாதிரி ஸ்ரீசைல யாத்ரிகர் களுடைய 'ஸ்டாடிஸ்டிக்'ஸை ஏடும் எழுத்தாணியும் வைத்துக் கொண்டு குறித்துக் கொள்கிறார்!

லோகத்திலுள்ள எல்லா ஜனங்களுடைய எல்லாக் கார்யங்களையும் இப்படிக் குறித்து வைத்துக் கொள்கிற ஒரு குட்டி ஸ்வாமி உண்டு; சித்ரகுப்தன்தான்! ஏக பர வஸ்துவா யுள்ள பெரிய ஸ்வாமிதான் ஸர்வ ஸாக்ஷி, ஸர்வத்துக்கும் ஜட்ஜ் என்றாலும் ஒரு ராஜா ஒவ்வொரு டிபார்ட்மென் டாகப் பிரித்து அதிகாரிகளைப் போட்டு அவர்கள் மூலம் ஆட்சி நடத்துகிற மாதிரி அந்த த்ரிலோக சக்ரவர்த்தியும் முத்தொழிலுக்கு மும்மூர்த்தி, படிப்புக்கு ஸரஸ்வதி, பணத்துக்கு லக்ஷ்மி, மழைக்கு இந்திரன் என்றிப்படி அதிகாரிகள் வைத்து நடத்துவதில் நம் காரியங்கள் எல்லா வற்றையும் ஸாக்ஷியாகப் பார்த்து எழுதிக் கொள்பவன் சித்ரகுப்தன்; ஜட்ஜ் பண்ணி தண்டனை தருகிறவர் தர்ம ராஜன் என்கிற 'தெற்கத்தியான்'. யம தர்பாரில் கணக்குப் பிள்ளையாக இருக்கிற சித்ர குப்தனுக்குத்தான் ரூப வர்ணனையில் ஏடும் எழுத்தாணியும் கொடுத்திருக்கிறது. அபூர்வமாக அவனுக்குக் காஞ்சீபுரத்தில் தென்னண்டை ராஜ வீதியில் கோவிலிருக்கிறது. இவனுடைய கணக்கைப் பார்த்துத்தான் ஒருவர் கைலாஸத்துக்கோ வைகுண்டத்துக்

Koviloor Digital Library

கோ அனுப்பப்படுகிறார் என்பதைக் காட்டுவது போலக் கைலாஸ நாதர் கோவிலுக்கும் வைகுண்டப் பெருமாள் கோவிலுக்கும் நடுவில் இந்தக் கோவில் இருக்கிறது! கர்ணாம்பாள் என்ற பத்னி ஸமேதனாக சித்ரகுப்தன் உத்ஸவ மூர்த்தத்தில் இருக்கிறான். கணக்குப் பிள்ளையைக் கர்ணம் என்று சொல்வது, ஈச்வர ஸாம்ராஜ்யத்துக் கர்ணத்தின் பத்னி கர்ணாம்பாளாயிருக்கிறாள்!

"ஸாக்ஷி கோபால்"

தெலுங்கு நாட்டு கணபதியில் ஆரம்பித்துக் காஞ்சீபுரத்துக் கணக்குப் பிள்ளைக்கு வந்தேன். ரொம்பவும் வடக்கே மட்ராவிலிருந்து [வட மதுரையிலிருந்து] காஞ்சீபுரத்துக்கே வந்து அப்புறம் ஒரிஸ்ஸாவுக்குப் போய் அங்கேயே நித்யவாஸம் பண்ணுகிற ஒரு ஸாக்ஷிக்கார ஸ்வாமியின் கதை பார்க்கலாம்.

அவர் க்ருஷ்ண பரமாத்மா. 'ஸாக்ஷி கோபால்' என்றே அவரைச் சொல்வார்கள். ஒரிஸாவில் அவர் ஸ்திரவாஸம் வைத்துக் கொண்ட ஊருக்கும் 'ஸாக்ஷி கோபால்' என்றே பேர்.

நாம் ப்ருஹதீச்வரர் உள்ள ஸ்தலத்தை ப்ருஹதீச்வரம் என்று சொல்வோம். கபாலீச்வரர் இருப்பது கபாலீச்வரம். வடக்கத்திக்காரர்கள் வார்த்தையின் கடைசி சப்தத்தை ஒடித்து, 'ஒற்று' என்கிற மெய்யெழுத்தோடு, வார்த்தையை முடித்து விடுவார்கள். ஸம்ஸ்க்ருதத்தில் 'ராம:' என்றும் தமிழில் 'ராமர்' என்றும் இருப்பது வடக்கத்தி பாஷைகளில் 'ராம்' ஆகி விடுகிறதல்லவா? இதனால் என்னவாகிற தென்றால் ப்ருஹதீச்வரர் - ப்ருஹதீச்வரம் என்ற இரண்டுமே 'ப்ரஹதீச்வர்' ஆகிறது! 'வைத்யநாதர்' இருக்குமிடம் 'வைத்யநாதம்' என்று நாம் சொன்னால், அவர்கள் ஸ்வாமி பேர், ஸ்தலத்துப் பேர் இரண்டையுமே

Koviloor Digital Library

'வைத்யநாத்' என்கிறார்கள்! இதே மாதிரி ராம்நாத், ஸோமநாத், த்ரயம்பகேச்வர் என்றெல்லாம் இரண்டையும் ஒன்றாகச் சொல்கிறார்கள், 'ஸாக்ஷி கோபாலன்,' அவர் இருக்கிற 'ஸாக்ஷி கோபாலம்' இரண்டுமே 'ஸாக்ஷி கோபால்' ஆகிறது.

அவர் என்ன ஸாக்ஷி சொன்னார்? யாருக்குச் சொன்னார்?

காஞ்சீபுரத்திலிருந்து அந்த ஊரைச் சேர்ந்த ஒரு வ்ருத்த ப்ராமணரும் ஒரு வாலிபமான ப்ராமண பிரம்ம சாரியும் காசி யாத்ரை போனார்கள். போகிற வழியில் வ்ருத்தர் ரொம்பவும் நோய்வாய்ப்பட்டுப் படுத்து விட்டார். அப்போது அந்தப் பிள்ளை அவருக்குக் கண்ணும் கருத்துமாக சுச்ரூஷை பண்ணினான். அசிங்கம் பார்க்காமல் விஸர்ஜனாதிகளைச் சுத்தம் செய்வது உள்பட, மருந்து கொடுப்பது, கஞ்சி கொடுப்பது எல்லாம், ராப்பகல் பார்க்காமல், அபிமானத்தோடு பண்ணினான். உடம்பு குணமாயிற்று. அப்புறமுங் கூட, 'வயஸானவர், நடந்தால் நெகிழ்ந்து கொள்ளும்' என்று அவனே அவரைத் தூக்கிக் கொண்டு மேலே யாத்ரையைத் தொடர்ந்தான். இப்படியே காசிக்குப் போய் விட்டு அப்புறம், இரண்டு பேருக்குமே க்ருஷ்ணபரமாத்மாதான் இஷ்ட தெய்வமானதால் ப்ருந்தாவன், மட்ராவுக்குப் போனார்கள்.

மட்ராவில் அப்போதிருந்த க்ருஷ்ண மூர்த்தம், கோவில் எதுவும் இப்போது இல்லை. அங்கே அநேகம் கோவில்கள், மூர்த்திகள் இருந்ததெல்லாம், இந்தக் கதை நடந்த காலத்துக்கு அப்புறம், விக்ரஹ ஆராதனை பிடிக்காத மதஸ்தர்களால் — தங்களுக்குப் பிடிக்காததோடு பிடித்த மதஸ்தர்கள் அப்படி ஆராதிப்பதும் பிடிக்காதவர் களின் — தாக்குதலில் இடித்து நொறுக்கப்பட்டதால் நம்முடைய வ்ருத்தரும் யுவாவும் குறிப்பாக எந்தக்

Koviloor Digital Library

கோவிலுக்குப் போனார்கள் என்று அடையாளம் காட்ட முடியவில்லை. ஆகக் கூடி, தங்கள் இஷ்டமூர்த்தியின் ஆலயத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

இஷ்ட மூர்த்தியை இஷ்டம் கொண்ட வரையில் வ்ருத்தர் தர்சனம் செய்து கொண்டார். அவருக்கு ஸந்தோஷம் தாங்கவில்லை. உடனே அந்த ஸந்தோஷம் அப்படியே அந்த ப்ரம்மசாரியிடம் நன்றியாக மாறி விட்டது.

அவர் நல்ல ஸொத்துக்காரர். அவருக்கு ஒரே பெண்தான். ப்ரம்மசாரிப் பிள்ளையோ ஏழை, அநாதை. ப்ராமணன்தான் என்றாலும் அதிலும் அவரை விடத் தாழ்வாக நினைக்கப்பட்ட பிரிவை, ஸப்-ஸெக்டைச் சேர்ந்தவன். இருந்தாலும் அவன் அத்தனை பணிவிடை பண்ணி, தன்னுடைய போன உயிரை மீட்டு, தன் உடம்பைத் தூக்கியும் கொண்டு வந்ததால்தானே இஷ்டமூர்த்தி தர்சனம், யமுனா ஸ்நானம் எல்லாம் கிடைத்தது என்று வ்ருத்தருக்கு நன்றி பெருக்கெடுத்து வரவே, "அப்பா, உன்னால்தான் எனக்கு ஜன்மா ஸாபல்யமாயிற்று. என் பெண்ணை உனக்கே கொடுத்து, ஸொத்தையும் எழுதி விடுகிறேன்" என்று சொன்னார்.

அவனால் நம்ப முடியவில்லை. "எனக்கா? உங்கள் பெண்ணையா? நான் பாட்டுக்கு எதையும் எதிர்பார்க்கா மல் ஏதோ என்னால் முடிந்த ஸஹாயம் பண்ணினேன். கிடைக்கத் தகாத ஆசையை எனக்குக் கிளப்பி விட்டு அப்புறம் ஏமாத்திவிடாதேள்!" என்று கேட்டுக் கொண்டான்.

அவன் அப்படிச் சொன்னதாலேயே அவருக்குத் தீர்மானம் நன்றாகக் கெட்டி ஆயிற்று. "ஒருநாளும் உன்னை ஏமாத்தமாட்டேன். தெய்வ ஸந்நிதானத்துல ஸத்யமா சொல்றேன். இந்த கோபாலன் ஸாக்ஷி" என்று ஆவேசமாகச் சொன்னார்.

Koviloor Digital Library

ப்ரம்மசாரிக்கு ஆனந்தம் பிடிபடவில்லை.

அப்புறம் இரண்டு பேரும் காஞ்சீபுரத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

திரும்பி வந்தவர் நல்ல ரூபவதியாக இருக்கிற தன்னுடைய பெண்ணைப் பார்த்து, தம் வீடு வாசல், ஸொத்து ஸ்வதந்திரங்களையும் பார்த்து, அதோடு அந்தப் பிள்ளையாண்டான், அவனுடைய பொருளாதார 'ஸ்டேடஸ்', ஜாதி ரீதி 'ஸ்டேடஸ்' முதலானவற்றை ஒப்பிட்டுப் பார்த்தாரோ இல்லையோ, மட்ராவில் அவர் பண்ணின தீர்மானம், கொடுத்த வாக்குறுதி எல்லாம் ஓட்டம் பிடித்து விட்டன!

கன்யாதானம் செய்து கொடுக்காமல் அவர் காலம் கடத்திக் கொண்டே போனதைப் பார்த்து விட்டு ப்ரம்ம சாரிப்பிள்ளை துணிந்து அவரை ஞாபகப்படுத்தினான்.

அவ்வளவுதான்! அவர் ஸ்வரத்தை அப்படியே மாற்றிக் கொண்டு விட்டார். "உனக்கா? என் பெண்ணையா? கேட்கிறவாகூடச் சிரிப்பா! மூளை கீளை பிசகி விட்டதா?" என்று ஹேளனமாகப் பேசினார்.

தெய்வ ஸாக்ஷியாகக் கொடுத்த வாக்கை மீறிய பாபம் அவருக்குச் சேரக் கூடாதே என்று ப்ரம்மசாரிக்கு இருந்தது. அநாதையும் தரித்ரனுமான தான் அவரோடு வாதம் செய்து எடுபடாது என்பதால் காஞ்சீபுரத்தில் ராஜாவிடமே பிராது கொடுத்தான்.

'கேட்கிறவா சிரிப்பா' என்று வ்ருத்தர் சொன்னாற் போலவே ராஜா சிரித்தான். அவருடைய குலப் பெருமை, பணப் பெருமை அவனுக்குத் தெரியும். பிராது கொடுத்த பிள்ளையைப் பார்த்தாலோ மலைக்கும் மடுவுக்குமாயிருந் தது. இருந்தாலும் தர்ம ந்யாயப்படி ராஜா அவரைக் கூப்பிட்டு விசாரித்தான்.

Koviloor Digital Library

அப்போது வ்ருத்த ப்ராமணர் ஒரு யுக்தியால் தப்பித்துக்கொள்ளப் பார்த்தார். 'யாத்ரா மார்க்கத்தில் நமக்கு ரொம்பவும் தேஹ உபாதி ஏற்பட்டு அந்தப் பையன் சுசுரூஷை பண்ணினான் என்பதையும் அதற்கு ப்ரதியாக நாம் பெண்ணைத் தருவதாகச் சொன்னதையும் நம்பக்கூடிய விஷயங்கள் என்றே ராஜா நினைத்துத் தீர்ப்புப் பண்ணினாலும் பண்ணி விடக்கூடும். அவன் ஏழை என்பதால் நாம் வாக்கை மீறுகிறோம் என்பது நமக்கு அவப்பெயரையே உண்டாக்கும். அதனால் ஜாதி வித்யாஸத்தைக் காரணம் காட்டுவோம். அப்படிச் செய்தால் ராஜா, 'வயஸான ஒரு ஆசாரக்கார ப்ராமணர் ஜாதியின் உட்பிரிவுகளுக்கிடையே உள்ள வித்யாஸத்தைப் பொருட்படுத்தாமல், அதை மீறித் தம்முடைய ஒரே பெண்ணை எவனோ ஒரு ஏழைப் பையனுக்குக் கல்யாணம் பண்ணிக்கொடுப்பதாக ஒருகாலும் வாக்குதத்தம் செய்திருக்கமாட்டார். இப்படி அவர் செய்தாரென்பதற்குத் தக்க ஸாக்ஷியம் இருந்தாலொழிய ப்ரம்மசாரிக்கு ஸாதகமாக நாம் தீர்ப்புப் பண்ணுவதற்கில்லை' என்று விட்டு விடுவான்' என்று வ்ருத்தர் ஸாமர்த்தியமாக நினைத்தார்.

ஜாதி, உபஜாதிக் கட்டுப்பாடுகளையும், நாட்டாண்மையையும் ராஜாங்கம் ரொம்பவும் மதித்து ரக்ஷித்த காலம்!

அவருடைய ஸாமர்த்தியம் பலித்தது.

"ஸாக்ஷியம் எதுவுமில்லை. வழக்கைத் தள்ளுபடி பண்ணுகிறேன்" என்று ராஜா தீர்ப்புக் கொடுத்தான்.

பார்த்தான் ப்ரம்மசாரி. 'ஸாக்ஷியம் இல்லாமலா? யாருக்குமில்லாத தெய்வ ஸாக்ஷியே இருக்கிறதே! அவ்வளவு உசந்த விஷயத்தைக் கோர்ட்டுக்கு இழுக்க

Koviloor Digital Library

வேண்டாமென்று இதுவரை மூடி வைத்திருந்தோம். இனியும் மூடி வைத்தால் கிழவனார் நிச்சயம் தெய்வக் குற்றத்துக்கு ஆளாகி விடுவாரே!' என்று ப்ரம்மசாரிக்கு வேகம் வந்தது.

"ஸாக்ஷி இல்லாமலில்லை. மதுரா நகரத்துக் கோயில் ஸ்வாமியே ஸாக்ஷி. உங்களுக்கெல்லாம் நான் ஒரு பொருட்டாயில்லாத அநாதனானாலும், இடைப் பசங்களுக்கும் அத்யந்தமாயிருந்த அந்த மதுராநாதன் என்னையும் பொருட்படுத்தி ஸாக்ஷி சொல்ல வருவான்" என்று உறுதியான நம்பிக்கையோடு சொன்னான்.

"நல்லது. அப்படியானால் அவரைப் போய் அழைச்சுண்டு வா. இந்த நீதி ஸ்தலத்துக்கு பகவானே வருவானானால் எங்களுக்கும் பரம பாக்யம்தான்" என்று ராஜா சொன்னான்.

கோபாலனாவது, வருவதாவது என்று வ்ருத்தர் — நிறைய சாஸ்திர, புராணங்கள் படித்தவர் — நினைத்தார். அவ்வளவு படிக்காதவன், அவரை விட ரொம்பச் சின்ன வயஸுக்காரன் த்ருட நம்பிக்கையோடு காடு மலை தாண்டி ஆயிரம் மைல் போய் மட்ராவை அடைந்தான். கோவிலுக்குப் போனான்.

"கோபாலா! ஸாக்ஷி சொல்ல வா!" என்று ஸ்வாதீனமாகக் கூப்பிட்டான்.

"காத்துக் கொண்டிருக்கேன்!" என்று ஸ்வாமியும் புறப்பட்டார்!

ஸர்வ வ்யாபியான அவர் அவனை அத்தனை அலைக்கழிக்காமல் காஞ்சீபுரம் நீதி ஸ்தலத்திலேயே ஆவிர்பவித்திருக்கலாமே, ஏனப்படிச் செய்யவில்லை என்றால், 'பக்தி விச்வாஸத்தின் சக்தி ஒரு எளிய ஜீவனைக் காட்டு வழியில் போக வர இரண்டாயிரம் மைல் நடத்துவிக்கும்; பக்த பராதீனனும் தீனதயாளனுமான தன்னையும்

Koviloor Digital Library

அப்படிப்பட்ட எளியவர்களுக்காக ஆயிரம் மைல் காலால் நடந்து போகும்படிப் பண்ணும்' என்று லோகத்துக்குக் காட்டத்தான்!

பக்த பராதீனன்தான், தீன தயாளன்தான் என்றாலும் அவன் ஏதாவது கொஞ்சமாவது மாயாவித்தனமும் பண்ணாமலிருக்க மாட்டான். அதன்படி இப்போது, "நான் உன் பின்னாடியே வரேன். ஆனா நான் வரேனான்னு ஸந்தேஹப்பட்டுண்டு நீ திரும்பிப் பார்க்கப்படாது. பார்த்தியானா அந்த எடத்திலேயே நான் விக்ரஹமா நின்னுடுவேன்!" என்று சொன்னான்.

இதே மாதிரி கண்டிஷன் போட்டு ஆசார்யாளுக்குப் பின்னாடியே போன ஸரஸ்வதி அவதாரமான ஸரஸவாணிதான் அவர் திரும்பிப் பார்த்து விட்ட ச்ருங்கேரியில் சாரதாம்பாளாக ஆனது!

கோபாலன் சொன்னதை ப்ரம்மசாரி ஒப்புக் கொண்டான். திருப்பி நடையைக் கட்டினான். சிலம்பு ஜல் ஜல்லென்று சப்தம் செய்ய, கோபாலனும் அவனுக்குப் பின்னேயே போனான். அந்த சப்தமே அவன் வருவதை ப்ரம்மசாரிக்குத் தெரிவித்ததால் அவன் திரும்பிப் பார்க்க அவச்யமில்லாமலிருந்தது.

'அப்புறம் ஏதோ இடத்தில் ஏதோ காரணத்தால் பகவான் நின்றிருப்பான். அவன் வரக் காணுமே என்று ப்ரம்மசாரி திரும்பிப் பார்க்க, அந்த இடத்திலேயே விக்ரஹ மாயிருப்பான். அந்த ஊர்தான் ஸாக்ஷி கோபால் என்று கதையை முடிக்கப் போகிறார்' என்று நினைப்பீர்கள். நீங்கள் இப்படி எதிர்பார்ப்பதாலேயே, எதிர்பார்ப்பதற்கு வித்யாஸமாகவே பண்ணும் அந்த மாயா விநோதன், வழியிலே எங்கேயும் நின்று விடாமல், அதாவது ப்ரம்ம சாரியைத் திரும்பிப் பார்க்கும்படிப் பண்ணாமல், காஞ்சி எல்லை வரை ஒழுங்காக வந்து சேர்ந்தான்! இன்னும் ஒன்று இரண்டு மைலில் ராஜாவின் நீதிஸ்தலம்.

Koviloor Digital Library

ஆனாலும் நீதி ஸ்தலம்வரை கோபாலஸ்வாமி போக வில்லை. ஏழை ப்ரம்மசாரிக்குக் கட்டுப்பட்டு ஆயிரம் மைல் வந்தவன், ராஜாவுக்குக் கட்டுப்பட்டு அவன் கோர்ட்டில் ஸாக்ஷிக் கூண்டில் நிற்க இஷ்டப்படவில்லை.

அதனால் என்ன ஆச்சென்றால்: ஊரெல்லைக்கு வந்த ப்ரம்மசாரிக்கு, 'க்ருஷ்ணனையாக்கும் இத்தனாம் தூரம் வரப் பண்ணி நமக்கு ஸாக்ஷி சொல்ல வைக்கப் போகிறோம்!' என்ற ஆச்சர்யமும் பெருமிதமும் பொங்கிக் கொண்டு வந்தது. தனக்காக இப்பேர்ப்பட்ட அநுக்ரஹம் பண்ணும் மூர்த்தியைப் பார்க்கிற ஆசை அதை விடப் பொங்கிக் கொண்டு வந்தது! கட்டுப்படுத்த முடியாமல் திரும்பிப் பார்த்து விட்டான்.

பகவானும் அந்த எல்லையிலேயே சிலா ரூபமாக நின்று விட்டான்!

அதற்காக ப்ரம்மசாரி இடிந்து போய் விடவில்லை. "ஊர் ஜனங்கள் இங்கே வந்து திடீர் விக்ரஹம் முளைத்திருப்பதைப் பார்த்து நிஜத்தைத் தெரிந்து கொள்வார்கள். ஸ்வாமியே ஆயிரம் மைல் நடந்திருக்க, அந்த வ்ருத்தரும் ராஜாவும்தான் இரண்டு மைல் அவரை எதிர்கொண்டழைப்பது போல வந்து, பார்த்து, விஷயம் தெரிந்து கொள்ளட்டுமே!' என்றே நினைத்தான்.

அவர்களும் வந்தார்கள்.

கோபாலனும் ஸாக்ஷி சொன்னான்.

அதன்படி ராஜா நீதி வழங்கினான்.

வ்ருத்தருக்கும் கண் திறந்தது. பகவானையே பணி கொண்ட இப்பேர்ப்பட்ட பிள்ளை தனக்கு மாப்பிள்ளை யாவது பெரிய பாக்யமென்று, ராஜ ஆக்ஞைக்காக இல்லாமல், மனப்பூர்வமாகவே கன்யாதானம் பண்ணிக் கொடுத்தார்.

எல்லாம் சுபமாக முடிந்தது.

Koviloor Digital Library

ஸ்வாமி முடிவாக ஓரிஸ்ஸாவில் ஸ்திரவாஸம் வைத்துக் கொண்டதாக முதலில் நான் சொன்னது ஞாபகம் இருக்கிறதா? காஞ்சி எல்லைக்கு வந்த ஸாக்ஷி கோபாலர் ஏன் எப்படி ஓரிஸ்ஸாவுக்குப் போனார் என்றால்:

மேலே சொன்ன கதை நடந்த பிறகு மட்ரா கோபாலன் காஞ்சி கோபாலனாகிவிட்டானென்பது வட தேசம், உத்கலம் என்கிற ஓரிஸ்ஸா முதலிய எல்லா இடங்களிலும் பரவிற்று.

ஓரிஸ்ஸாவில் புரி ஜகந்நாத்தில் ஸ்வாமி ஜகந்நாதர், க்ஷேத்ரம் ஜகந்நாதம்; இரண்டுமே 'ஜகந்நாத்' ஆகி விட்டது. புரி என்பது ஊர். அதைத்தான் நாம் 'பூரி' என்று கோதுமைத் தின்பண்டமாக்கிச் சொல்கிறோம்! அந்தப் புரி ஜகந்நாத்தில் புருஷோத்தமன் என்று ஒரு ராஜா இருந்தார். ஜகந்நாத ஸ்வாமிக்கும் புருஷோத்தமன் என்ற பெயருண்டு. ராஜாக்கள் ராஜ்யம் விட்டு ராஜ்யம் விவாஹ ஸம்பந்தம் பண்ணிக் கொள்வதுண்டல்லவா? அப்படி இந்த ராஜா அப்போது காஞ்சியிலிருந்து ஆட்சி நடத்திய தொண்டை மண்டலாதிபதியின் பெண் பத்மாவதியைக் கல்யாணம் செய்து கொள்வதாக ஏற்பாடாயிற்று...

பக்தி, ஸங்கீர்த்தனம் என்று இருப்பவர்களுக்கு ஜகந்நநாத க்ஷேத்ரம் என்றவுடன் இரண்டு மஹான்களின் நினைவே வரும். ஒருவர் ஸ்ரீக்ருஷ்ண சைதன்யர். மற்றவர் எட்வின் ஆர்னால்ட் இங்கிலீஷ் பொயட்ரியாக மொழி பெயர்த்திருக்கும் "கீத கோவிந்த மஹா காவ்ய"த்தைச் செய்த ஜயதேவ ஸ்வாமி. அவர் பாட, அதற்கு நர்த்தன மாடிய அவருடைய பத்னியின் பெயரும் பத்மாவதிதான்...

காஞ்சீபுர ராஜகுமாரி பத்மாவதியை புரி ராஜா புருஷோத்தமன் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஸம்மதித்ததற்கு ஒரு முக்ய காரணம், அங்கே போனால்

Koviloor Digital Library

ஸாக்ஷி கோபாலனைத் தரிசனம் பண்ணி விட்டு வரலாமென்பதுதான். அப்படியே அவர் கல்யாணமாகி ஸ்வாமி தரிசனம் செய்தாரோ இல்லையோ, இளம் பத்னியைக் கூட மறந்து அந்த ஸ்வாமியிடமே அவருக்கு மஹா ப்ரேமை உண்டாகி விட்டது. விக்ரஹத்தைத் தமக்குக் கொடுக்கும்படி மாமனாரைக் கேட்டுக் கொண்டார்.

புது மாப்பிள்ளை கேட்பதை மாமனார் மறுக்க முடியுமா? 'பெண்ணைக் கொடுத்தாயோ, கண்ணைக் கொடுத்தாயோ?' என்று வசனம். பெண்ணைக் கொடுத்த காஞ்சீபுர ராஜர் கண்ணனையும் கொடுத்தார்!

மாப்பிள்ளை தன்னுடைய ராஜ்யத்துக்குப் பத்னியோடும் பகவானோடும் திரும்பினார். புரியில் ஏற்கெனவே பிரஸித்தமான ஜகந்நாத ஸ்வாமி இருந்ததால் அவருக்குப் போட்டியாக ஸாக்ஷி கோபால் அங்கே இருக்க வேண்டாம், தனி ராஜாவாக அவர் வேறே ஊரில் கோவில் கொள்ளட்டும் என்று அவர் நினைத்தார். க்ருஷ்ணன் பெயரில் முகுந்தபுர் என்று ஒரு க்ஷேத்ரம் அவருடைய ராஜ்யத்திலிருந்தது. அதை அடுத்துள்ள ஊரில் முக்யமான ஆலயம் எதுவுமில்லாததால் அங்கே ஸாக்ஷி கோபாலுக்குக் கோவில் கட்டி ப்ரதிஷ்டை பண்ணினார்.

அதுவே இப்போது ஸாக்ஷி கோபால் என்று வழங்கும் க்ஷேத்ரம்.

யு.பி. மட்ராவிலிருந்து தமிழ்நாட்டுக் காஞ்சிக்கு வந்து அப்புறம் ஒரிஸ்ஸாவில் தன் பெயரிலேயே ஊரை உண்டாக்கிக் கொண்டு தங்கி விட்ட ஸாக்ஷி கோபால், 'தேசிய ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு' என்று கோஷம் போடுவதெல்லாம் அவரது குழந்தைகளாக அனைவரும் பக்தியில் ஒன்று சேர்ந்தால்தான் முடியும் என்பதற்கும் ஸாக்ஷியாக இருக்கிறார்!

Koviloor Digital Library

'ஸாக்ஷிநாயகேச்வரர்'

பரமசிவனும் தமிழ்நாட்டு ஸ்தலங்கள் இரண்டில் ஸாக்ஷி சொல்லி அவற்றிலொன்றில் ஸாக்ஷி நாயகேச்வரர் என்றும், மற்றதில் ஸாக்ஷி நாதேச்வரர் என்றும் பெயர் பெற்றிருக்கிறார். இரண்டுமே தஞ்சாவூர் ஜில்லாவிலிருக்கும் ஊர்கள்தான்.

ஸாக்ஷி நாயகேச்வரர் இருப்பது அவளிவணல்லூர். 'வள வள என்று இதென்ன பேர்?' என்று வேடிக்கையாயிருக்கிறதா? 'அவள் இவள் நல்லூர்' என்பதுதான் ஸந்தியில் 'அவளிவணல்லூர்' என்றாயிருக்கிறது. 'அவள்தான் இவள்' என்று ஸ்வாமியே ஸாக்ஷி சொல்லி ஒரு பெரிய சர்ச்சையைத் தீர்த்து வைக்கும் பாக்யத்தைப் பெற்ற நல்ல ஊர் 'அவளிவணல்லூர்.'

நீடாமங்கலத்திலிருந்து தஞ்சாவூர் போகிற வழியில் சாலியமங்கலம் என்ற ஊர் வரும். அதற்கு வட கிழக்கில் அந்த ஊர் இருக்கிறது. காவேரியின் தென் கரையிலுள்ள பாடல் பெற்ற ஸ்தலங்களின் வரிசையில் அது ஸரியாக நூறாவதாகும். அப்பர், ஸம்பந்தர் இருவரும் பாடிய ஸ்தலம்.

அந்த ஊரில் ரொம்ப காலம் முந்தி ஒரு குருக்கள் இருந்தார். அவருக்கு இரண்டு பெண்கள். அந்த இரண்டு பேரும் ஏறத்தாழ ஒரே ஜாடையாக இருப்பார்கள். ஆதி சைவர், சிவாசாரியர், சிவப்ராமணர் என்றெல்லாம் சொல்கிற தங்களுடைய குருக்கள் ஜாதிப் பிள்ளைகள் இரண்டு பேருக்கு இரண்டு பெண்களையும் அப்பாக்காரர் கல்யாணம் பண்ணிக் கொடுத்தார்.

பெரிய மாப்பிள்ளை காசி யாத்ரை போனார். கல்யாணத்தில் ஊஞ்சலுக்கு முன்னாடி போகிற 'உளஉளாக்கட்டை' காசி யாத்ரை இல்லை; நிஜமான காசி யாத்ரை.

Koviloor Digital Library

அந்த நாளில் அந்த யாத்ரை முடித்துத் திரும்பப் பல வருஷங்கள் பிடிக்கும். அப்படி அவர் நாலைந்து வருஷத்துக்கப்புறம் திரும்பி வந்தார். வேட்டகத்துக்கு வந்தார்.

இதற்கு நடுவில் என்ன ஆயிருந்ததென்றால் அவருடைய பத்னியான குருக்களின் மூத்த பெண்ணுக்குப் பெரியம்மை போட்டி, பிழைத்ததே புனர்ஜன்மமாக அவள் உயிர் தப்பினாள். ஆனால் உக்ரமான அம்மை அவளிடம் கைவரிசையைக் காட்டி விட்டது; முகமெல்லாம் பொளிந்து தள்ளி, கண்ணை நொள்ளையாக்கி, அவள் நிறமும் கறுத்து, தலை மயிர் கொட்டிக் குரூபமாகும்படிப் பண்ணி விட்டது.

காசி போய்த் திரும்பிய பதி நாம் கல்யாணம் பண்ணிக் கொண்ட அவள்தானா இவள் என்று அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அந்தப் பெண் உருமாறியிருந்தாள்.

இந்த அனர்த்தம் போதாதென்று இந்த ஸமயத்தில் இளைய பெண்ணும் புக்ககத்திலிருந்து பிறந்தகம் வந்திருந்தாள். காலப் போக்கில் அவளுடைய ரூபத்தில் ஏற்பட்டிருந்த மாறுதல்களால் அவள் அக்காக்காரி அழகாக இருந்தபோது எப்படியிருந்தாளோ அப்படியே அஸலாக ஆகிவிட்டாள்.

கல்பனையாக வின்யாஸம் பண்ணத் தெரிந்த கதாசிரியர்கள் இங்கே பொருத்தமாகச் சேர்த்துக் கொள்ளலாம் — ஆதியிலே அக்கா இவளைவிடச் சிவப்பு, இப்போது அவள் கறுத்துப் போக இவள் சிவந்து விட்டாள்; ஆதியில் அவளுக்குத்தான் தலைமயிர் ஜாஸ்தி, அவளுக்குக் கொட்டிப் போன இப்போதானால் இவளுக்கு அடர்த்தியாக வளர்ந்திருந்தது, என்றெல்லாம்!

Koviloor Digital Library

ஆக மொத்தத்தில், காசி யாத்ரை முடித்து வந்தவர் தன் பத்னியைப் பத்னியில்லை என்று நினைத்த அனர்த்தத்துக்கு மேல் மச்சினியைப் பத்னி என்று நினைக்கும்படி ஆயிற்று!

'வைசூரியில் விரூபமானவள் மச்சினிதான். அவளைப் புக்ககத்தினர் தள்ளி வைத்து விட்டிருக்க வேண்டும். அவளையே இப்போது தன்னுடைய வேட்டகத்தினர் தன் பத்னி என்று சொல்லித் தலையில் கட்டப் பார்க்கிறார்கள்' என்று அவர் நினைத்து விட்டார். வாஸ்தவமான பத்னியை ஏற்க மாட்டேன் என்று மறுத்து, பத்னியில்லாதவளிடம் பாத்யதை கேட்டார்.

ஊரார் எத்தனை சொல்லியும் அவர் கேட்கவில்லை. பரம்பரையாக அர்ச்சனை செய்யும் குடும்பத்தில் வந்து பஹு காலமாக அர்ச்சகராக இருந்துவரும் மாமனார்க் காரர் பக்கம்தான் அந்த ஊரே பேசும் என்று முடிவு பண்ணிவிட்டார். அதனால் அவர்கள் ஸாக்ஷியத்துக்கு அவர் ஒரு மதிப்பும் தரவில்லை.

மாமனார்க்காரர், தான் எத்தனையோ வருஷங்களாக ஆறு காலமும் பூஜை பண்ணி வரும் கோவில் ஸ்வாமிதான் இப்போது சாக்ஷிக்கு வர வேண்டும் என்று நெஞ்சுருகி ப்ரார்த்தனை செய்து கொண்டார்.

"ஸந்நிதிக்கு எல்லாரையும் அழைத்து வாரும். யாம் உண்மை உரைப்போம்" என்று அசரீரி கேட்டது.

அப்படியே மாப்பிள்ளை, பெண்கள் எல்லாரையும் குருக்கள் அழைத்து வந்தார்.

ஸ்வாமியும் சொன்னபடியே, மாப்பிள்ளையிடம் அம்மை வார்த்துக் குரூபமாயிருந்த பெண்ணைக் காட்டி, "ஆதியில் நீ யாரை அக்னி சாக்ஷியாகக் கல்யாணம் செய்து கொண்டாயோ அவள் இவள்தான்," என்று சொன்னார்.

Koviloor Digital Library

கருணாமூர்த்தியாகையால், அவர்கள் எதிர்பார்க்காத இன்னொரு விஷயம் அந்தப் பெண்ணிடம் சொன்னார் — வைசூரியால் கொடுமைப்பட்டதோடு, பதியிடமும் சிறுமைப்பட்டு மனஸ் ஒடிந்து போயிருந்தவளிடம் சொன்னார். "இந்தக் கோவில் திருக்குளத்தில் முழுகி எழுந்திரு. குரூபம் போய் முன்னைவிட ரூபவதியாவாய்" என்று வரம் கொடுத்தார்.

அப்படியே நடந்தது. மாப்பிள்ளை நிஜ பத்னியை ஏற்றுக் கொண்டார். அஸம்பாவிதம் நேராமல் அந்த அர்ச்சகக் குடும்பம் ஸ்வாமி ஸாக்ஷியால் க்ஷேமமடைந்தது. அந்த ஸ்வாமிக்கு ஸாக்ஷிநாயகேச்வரர் என்றே அதற்கப்புறம் பேராகிவிட்டது.

இந்த வரலாறு அந்த ஆலய கர்ப்பக்ருஹத்திலேயே ஸ்வர்மிக்குப் பின்பக்கச் சுவரில் சில்பமாகச் செதுக்கப் பட்டிருக்கிறது.

'ஸாக்ஷிநாதேச்வரர்'

ஸாக்ஷிநாதேச்வரர் என்ற பேரில் ஈச்வரன் இருப்பது திருப்புறம்பயம் என்ற க்ஷேத்ரத்தில். அது கும்பகோணத் துக்கு வடமேற்கே ஐந்து, ஆறு மைலில் மண்ணியாற்றின் வடகரையிலிருக்கிறது. அந்த ஊருக்கு வடக்கே ஒரு மைலில் கொள்ளிட நதி.

சோணாட்டு ஸ்தலமானாலும் பாண்டிய ராஜதானி யான மதுரையோடு அந்த ஊரை ஸாக்ஷிநாத ஸ்வாமி ஸம்பந்தப்படுத்தி ஒரு குட்டி மாகாண [மாநில] ஒருமைப் பாடு காட்டியிருக்கிறார்.

வடமதுரை கோபாலன் கதை பார்த்தோம். வரப் போகிற கதையில் தென்மதுரை சிவனின் லீலை பார்க்கப் போகிறோம். மதுரை என்றால் அறுபத்து நாலு

Koviloor Digital Library

திருவிளையாடல் நினைவு வந்துவிடும். ஸுந்தரேச்வரரின் கடைசியான அறுபத்து நாலாவது லீலையாகத் திருப்புறம்பய ஸாக்ஷிநாதர் ஸமாசாரந்தான் வருகிறது.

சோழ தேசத்தில் பிறந்து வளர்ந்து மதுரையில் கொலையானவனின் கதையைச் சொல்லும் சிலப்பதி காரத்திலும் இதே மாதிரி ஒரு கதை பற்றி 'ரெஃபரன்ஸ்' வருகிறது*. அதன் கதாநாயகி பத்தினிப் பெண்டிர் பல பேரைப் பற்றிச் சொல்லும் போது இந்த ஸ்தல புராணத்துக் கதாநாயகி மாதிரி அதற்குப் பூர்வகாலத்தில் இருந்த இன்னொருத்தியையே முதலாவது கற்புக்கரசியாகச் சொல்கிறாள்.

கதைக்கு வருகிறேன். சிலப்பதிகாரம் மாதிரியே காவிரிப் பூம்பட்டினத்தில் ஒரு வணிகர், வைசியர், இருந்தார். அவருடைய ஸஹோதரியை மதுரையிலிருந்த ஸ்வஜாதிக்காரர் ஒருத்தருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருந்தது.

கொஞ்ச நாளில் அவளுக்கு ஒரு பிள்ளையும் பிறந்தது. அவள் மதுரையில் புருஷன் வீட்டில் 'ஸெட்டில்' ஆனாள். அப்புறம் எதனாலோ அவளுடைய பிறந்தகம், புகுந்த அகம் ஆகிய இரண்டு குடும்பங்களுக்கும் ஸம்பந்தம் கத்தரித்துப் போய்விட்டது.

ஸஹோதர வணிகருக்கு ஒரு பெண் பிறந்தது. உடனே அவருக்கு முறைப்பிள்ளை நினைவு வந்தது. 'மருமகன் பிறந்தானே! அவனுக்கு இப்போ பத்து, பன்னிரண்டு வயஸு இருக்குமே! வயஸு வித்யாஸம் சித்தே ஜாஸ்தியா யிருந்தாலும் முறை விட்டுப் போகாம அவனுக்குத்தான் பெண்ணைக் கொடுக்கணும்' என்று முடிவு பண்ணினார்.

* "வன்னிமரமும் மடைப்பள்ளியும் சான்றாக முன்னிறுத்துக் காட்டிய மொய்குழலாள் "(மதுரைக் காண்டம், வஞ்சினமாலை)

Koviloor Digital Library

ஸஹோதரி பிள்ளை, ஜாமாதா இரண்டு பேரையுமே 'மருமகன்' என்றுதானே சொல்கிறது?

முடிவு பண்ணினாரே தவிர, கத்திரித்துப் போன உறவை 'ரின்யூ' பண்ணுவதில் அவருக்கு ஒரு 'ரிஸர்வேஷன்' ஏற்பட்டு, அப்புறமும் அநேக வருஷங்கள் ஓடிப் போயிற்று. பெண்ணும் கல்யாண வயஸை, அதாவது அந்தக் காலக் கல்யாண வயஸை, அடைந்தாள்.

துரத்ருஷ்ட காலம், வணிகர், அவருடைய ஸம்ஸாரம் ஆகிய இரண்டு பேரும் கண்ணை மூடிவிட்டார்கள்.

கல்யாண வயஸுக் கன்யாப் பெண் அநாதையாக நின்றது. தனக்கு ஒரு அத்தான் உண்டு; அவனுக்குத்தான் தன்னைக் கொடுக்க அப்பா உத்தேசித்திருந்தார் என்று அந்தப் பெண்ணுக்குத் தெரியும். அப்பா அப்படி நிச்சயம் பண்ணி விட்டதால் அந்த பிள்ளைதான் தன் பதி என்று அவள் பாதிவ்ரத்யம் [கற்பு நெறி] அநுஷ்டிக்க ஆரம்பித்து விட்டாள், அப்பர் ஸ்வாமிகளுடைய தமக்கையான திலகவதியார் மாதிரி!

அப்பா பண்ணத் தவறியதை அந்தப் பெண்ணிடம் அபிமானமும் இரக்கமும் கொண்ட ஊர் ஜனங்கள் பண்ணினார்கள். மதுரையிலிருந்த மருமான் அட்ரஸைக் கண்டுபிடித்து விஷயங்களைத் தெரிவித்து அவனுக்கு ஓலை அனுப்பினார்கள்.

அவனும் காவிரிப்பூம்பட்டினம் வந்தான்.

அவனுக்கு ஏற்கெனவே கல்யாணமாகிப் பசங்கள் கூட இருந்தது. ஆனாலும் இரண்டாம் கல்யாணம் அப்போது வழக்கத்தில் இருந்ததால், அதிலும் வணிக வகுப்பாரிடையே அதிகமாக இருந்ததால், வந்தான். மாமா பெண்ணுக்கு அவள் ஊரிலிருந்த கொடுக்கல்-வாங்கல் களைப் பைஸல் பண்ணிவிட்டு, போகிறதுதான்

Koviloor Digital Library

போகிறோம், சோழ நாட்டில் கொஞ்சம் க்ஷேத்ராடனமும் அவளோடு பண்ணிவிட்டு மதுரைக்குத் திரும்பிக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்ற தீர்மானத்தோடு வந்தான்.

அப்படியே காவிரிப் பூம்பட்டினத்தில் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து, மாமா பெண்ணோடு யாத்ரை புறப்பட்டான்.

அந்தப் பெண்ணுடைய துரத்ருஷ்டமும் தொடர்ந்து போயிற்று. என்னவாச்சு என்றால்:

திருப்புறம்பய க்ஷேத்ரத்தில் அவர்கள் ஒருநாள் ராத் தங்க வேண்டி வந்தது. ரொம்ப தூரம் நடந்து வந்த அலுப்பும் புழுதியும் போவதற்காக அவன் கோவில் கிணற்றில் குளித்தான். மடப்பள்ளிக்குப் போய் ப்ரஸாதம் வாங்கிக் கொண்டு ஸ்தல விருக்ஷமான வன்னி மரத்தின் கீழே உட்கார்ந்து கொண்டு இரண்டு பேரும் சாப்பிட்டார்கள். அப்புறம் ப்ராகாரத்திலேயே தள்ளித் தள்ளிப் படுத்துக் கொண்டு தூங்கிப் போய் விட்டார்கள்.

பாதி ராத்ரியில் ஒரு பாம்பு வந்து அவனைக் கடித்தது. முழித்துக் கொண்டு "ஐயோ!" என்று அலறினான். சத்தம் கேட்டு அந்தப் பெண்ணும் எழுந்திருந்து வந்து அவனைப் பார்த்தாள். கிடுகிடுவென்று அவன் உடம்பு நீலம் பாரித்துப் போயிற்று. அப்புறம் அவனிடமிருந்து பேச்சு மூச்சு இல்லை. அவள் பாம்புக்கடி என்று புரிந்து கொண்டு நடுநடுங்கிப் போய் விட்டாள்.

மனஸினால் அவனுக்கே தான் உரியவள் என்று உறுதியாக ஆத்மார்ப்பணம் பண்ணியிருந்தாலும் சாஸ்த்ரப் படி கல்யாணமாகாததால் சரீர ஸம்பந்தம் கூடாது என்று, அந்த ஆபத்து வேளையிலும் அவனைத் தொட்டுக் கூடப் பார்க்காமல், அவர்களைப் போலவே ப்ராகாரத்தில் படுத்துக் கொண்டிருந்த வேறு ஜனங்களை எழுப்பியே

Koviloor Digital Library

தொட்டுப் பார்க்கப் பண்ணினாளாம்! 'அரவம் தீண்டினாலும் ஆரணங்கு தீண்டாமல்' என்று புஸ்தகத்தில் பார்த்திருக்கிறேன். ஸாதாரண ஜனங்களிடங்கூட இத்தனை சாஸ்த்ர வ்யவஸ்தை, மனக் கட்டுப்பாடு இருந்ததுதான் ஸமீப காலம் வரையில் நம் தேசத்தை லோகத்தின் மதிப்பிலேயே உசத்தி வைத்திருக்கிறது.

'கல்யாணம் பண்ணிக் கொண்டு நல்வாழ்வு தர இருந்தவன், பாவம், போய் விட்டான்' என்று தெரிந்தது. அந்தப் பெண் அழுது துடித்தது. இதற்குள் பொழுதும் விடிந்து விட்டது.

அப்போது அந்த ஊருக்குத் திருஞானஸம்பந்தர் எழுந்தருளியிருந்தார். அவர் காதுக்குத் துக்க ஸமாசாரம் போயிற்று. அவர் அந்தப் பெண்ணிடம் ரொம்பவும் கருணை கொண்டார். உடனே, ஹாலாஹல விஷ பானம் பண்ணிய ஸ்வாமியிடம் போய் அந்த மதுரை வணிகனுக்கு விஷத்தை இறக்கி மறுபடி உயிர் கொடுக்கும்படிப் பதிகம் பாடினார். அப்பூதி பிள்ளைக்கு விஷம் இறங்க அப்பர் பாடின மாதிரியே!

திருமருகலிலும் இதே மாதிரி இந்த ஞானஸம்பந்தரே இன்னொருத்தனுக்கு விஷம் இறங்குவதற்காகப் பாடியிருக் கிறார். அதைப் பற்றிப் பெரிய புராணத்திலேயே இருக்கிறது. திருப்புறம்பய விஷயம் அந்த ஊர் ஸ்தல புராணத்திலும், திருவிளையாடற் புராணத்திலும் சொல்லியிருக்கிறது.

சிலப்பதிகாரம் ஸம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளுக்கும் பல நூற்றாண்டு முந்தினது. அதிலும் இதே மாதிரி கதை இருப்பதிலிருந்து, பகவான் ஏறக்குறைய ஒரே மாதிரி கதை உடைய மூன்று பத்தினிப் பெண்களை இந்தத் தமிழ் நாட்டில் படைத்து விளையாடியிருக்கிறானென்று தெரிகிறது.

Koviloor Digital Library

"நீ ச்மசானவாஸி' – **'பிணம்புகு மயானம் புரிந்தனை'.** ஆனாலும் யமன் கபளீகரம் பண்ணிவிட்ட உயிரைக் கூட உன்னால் வெளிப்படுத்த முடியுமே – **'விழுங்குயிர் உமிழ்ந்தனை !'** என்றிப்படி ஸ்வாமியை அவருக்குப் புத்ர ஸ்தானத்திலிருந்து, ஆளுடைய பிள்ளையார் என்று பெயர்பெற்ற ஸம்பந்தமூர்த்தி ஸ்வாமிகள் திரும்புறம் பயத்தில் பாடிய பதிகத்தில் போற்றி வேண்டினார்.

ஸ்வாமி அநுக்ரஹம் செய்தார். விஷம் ஏறின வேகத்திலேயே கிறுகிறுவென்று இறங்கிற்று. 'மாண்டவன் மீண்டான்' என்பது நிஜமாயிற்று.

"அப்பா, இன்னமும் இந்தப் பொண்ணைக் காக்க வைக்காதே! மொதல்ல கல்யாணத்தைப் பண்ணிக்கோ. அப்பறம் க்ஷேத்ராடனம் முடிச்சுட்டு மதுரைக்குத் தம்பதியாப் போய்ச் சேருங்கோ" என்று ஸம்பந்தர் அவனுக்கு உத்தரவிட்டுவிட்டு அங்கேயிருந்து புறப்பட்டார்.

'மஹான் சொன்னதை மீறப்படாது. ஆனாலும் இங்கே கல்யாணமாச்சுன்னு ஊர்ல போய்ச் சொன்னா ஊர்க்காரா ஸாக்ஷி கேட்பாளே! இங்கே யாரைப் பிடிச்சு, அவச்யம் ஏற்படறப்போ, அங்கே ஸாக்ஷி சொல்ல வரப்பண்ண முடியும்?' என்று அவனுக்கு யோசனையாயிற்று.

முடிவாக ஸ்வாமியேதான் ஸாக்ஷி என்று வைத்துக் கொண்டான். 'ஸ்வாமி' என்று நினைத்தவுடன் அவன் மனக் கண்ணில் ஸ்வாமி — சிவலிங்கம் — மட்டுமில்லாமல் கோவில் இருந்த முழு 'ஸெட்-அப்'பும் தோன்றிற்று. குறிப்பாக, அவன் களைத்து வந்த போது குளிக்கிறதற்குக் குளுகுளுவென்று ஜலம் கொடுத்த கிணறும், கிளுகிளு வென்று கிளை பரப்பிக் கொண்டு அவன் சாப்பிட இடம் கொடுத்த வன்னி மரமும் ஸ்வாமியோடுகூட அவன் மனக் கண்ணில் பதிந்தது. கிணற்றுக்குப் பதில் சில பேர்

Koviloor Digital Library

அவனுடைய வாடிய வயிற்றுக்கு ஆஹாரம் தந்த மடைப் பள்ளியைச் சொல்வார்கள். சிலப்பதிகாரத்தில் அப்படித் தான் இருக்கிறது. வன்னி, எல்லாரும் ஒப்புக் கொள்வது. அதோடு கிணறு and/or மடைப்பள்ளி என்று வைத்துக் கொள்ளலாம்!

மனஸில் பார்த்தது அப்படியே அவன் வாயில் வர, "ஸ்வாமி, வன்னி மரம், கிணறு, மடைப்பள்ளி ஸாக்ஷியாக உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்" என்று சொல்லி மாமா பெண் கழுத்தில் தாலியைக் கட்டினான்.

லிங்கமென்பதே அக்னி ஸ்வரூபந்தான். 'வன்ஹி' என்றாலும் அக்னி என்றே அர்த்தம். இப்படி இரட்டை அக்னி ஸாக்ஷி!

தம்பதியாக மதுரைக்குத் திரும்பினார்கள்.

திடுதிப்பென்று மாமா பெண் என்று சொல்லிக் கொண்டு ஒரு இளையாளை அகமுடையான் அழைத்துக் கொண்டு வந்திருப்பதைப் பார்த்ததும் மூத்தாளுக்கு ஆத்திரமும் அஸூயையுமாக வந்தது. ஆனாலும் மென்று முழுங்கிக் கொண்டு அவர்களை வரவேற்றாள்.

அப்புறம் சண்டை என்று மூளாமலே உள்ளூரக் கமுக்கமாக cold war என்று சொல்கிறார்களே, அந்தச் சூழ்நிலையிலே அந்தக் குடும்பம் சில வருஷங்கள் நடந்தது. இதற்கிடையில் இளையாளுக்கும் குழந்தை பிறந்து வளர்ந்தது.

ஒரு நாள் மூத்தாள் பிள்ளை இளையாள் பிள்ளையைக் காட்டடியாக அடித்து விட்டது. அதுவரை எவ்வளவோ பொறுமையாயிருந்து வந்த இளையாள் அடித்த பிள்ளையை அதட்டினாள். அப்போதுங்கூட அடிக்காமல் அதட்டத்தான் செய்தாள்.

Koviloor Digital Library

ஆனால் அதுவே எரிமலை மாதிரி வெடிக்கத் தயாரா யிருந்த மூத்தாளைக் கிளறிவிட்டு நெருப்பைக் கக்க வைக்கப் போதுமானதாயிருந்தது. "குலம் கோத்ரம் இல்லாம, முறைப்படி கல்யாணம் பண்ணிக்காம என் புருஷனைக் கையில போட்டுண்ட..." — சின்ன பாஷையில் அவளை ஒரு சொல் சொல்லி — "அப்படிப்பட்டவளுக்கு சாஸ்த்ரப்படி, ஸம்ப்ரதாயப்படி, சட்டப்படி இந்த வீட்டுக்கு வார்ஸா இருக்கிற பிள்ளையை ஏச வாயேது?" என்று ஆரம்பித்து ஒரு பாட்டம் தீர்த்து விட்டாள்.

அவமானத்தில் அப்படியே மட்கி மண்ணாகிவிட்ட மாதிரி உட்கார்ந்த இளையாள் அப்புறம் மீனாக்ஷி-ஸுந்த ரேச்வரர் ஆலயத்துக்கு ஓடினாள். பொற்றாமரைக் குளத்தில் ஸ்நானம் பண்ணிவிட்டு ஸ்வாமி ஸந்நிதிக்குப் போய்க் கதறினாள். "அப்பா! உன்னையும், உன் ஸ்தல வ்ருக்ஷத்தையும், உன் அபிஷேகக் கிணற்றையும் — உனக்கு நைவேத்யம் பண்ணும் மடைப்பள்ளியையும் என்றும் வைத்துக் கொள்ளலாம் — ஸாக்ஷி சொல்லியே என் முறைப் பிள்ளையான அத்தான் என்னைக் கைப்பிடித்தார். இதை இன்றைக்கு ஒருத்தி ஸந்தேஹப்பட்டு வாய்விட்டுச் சொல்கிறாளென்றால், சொல்லாமலே ஸந்தேஹப்படு கிறவர்கள் பல பேர் இருப்பார்கள். எல்லார் ஸந்தேஹத்தை யும் நீதான் தீர்த்து வைக்கணும். இல்லாவிட்டால் உன் ஸந்நிதியிலேயே உயிரை விட்டு விடுவேன்'' என்று கதறினாள்.

"உன் மூத்தாளையும் ஊராரையும் இங்கு அழைத்து வருக!" என்று ஸ்வாமி அசரீரியாகச் சொன்னார்.

அப்படியே அழைத்துக் கொண்டு வந்தாள்.

ஸுந்தரேச்வர ஸ்வாமி, ஸோமஸுந்தரக் கடவுள் என்றும் சொக்கநாதப் பெருமான் என்றும் தமிழ் நூல்களில்

Koviloor Digital Library

அன்போடு சொல்லப்படுபவர், தமது அறுபத்து நாலாவது லீலையாக, தாமே நேரில் ஒன்றும் செய்யாமல் ஸினிமா 'ட்ரிக்-ஷாட்' காட்சி மாதிரித் திருப்புறம்பயத்து ஸாக்ஷிகளை மட்டும் மதுரையில் தன் ஸந்நிதிக்கே வருவித்துக் காட்டினார்!

ஸந்நிதியின் ஈசான்ய திசையில் திருப்புறம்பய சிவ லிங்கம், வன்னி, கிணறு — மடைப்பள்ளி சேர்த்துக் கொள்ளலாம் — எல்லாம் தோன்றின. ஒரு முஹூர்த்த காலம் அப்படித் தோன்றிவிட்டு யதா ஸ்தானம் போய்ச் சேர்ந்தன.

ஊரே அதிசயப்பட்டு ஆஹாகாரம் பண்ணி, இளையாளுடைய பக்தி மஹிமையை ஸ்தோத்ரம் செய்தது.

மூத்தாளும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

கோபம் தணியாத புருஷன், அவளைத் தள்ளி வைக்க நினைத்தான்.

அப்போது இளையாள் அவனிடம், "அப்படிப் பண்ணாதிங்க! யாருக்கும் தோணக் கூடிய ஸந்தேஹந்தான் அக்காவுக்கும் தோணிச்சு. அவங்க அதை மறைக்காம சொன்னதாலதான் இந்தச் சின்னவளோட கற்பு, பக்திங்களை ஸ்வாமியே ரூபிச்சுக்காட்டி, உலகம் தெரியப் பண்ணியிருக்காரு" என்று கேட்டுக் கொண்டாள்.

புருஷனும் மனஸை மாற்றிக் கொண்டான்.

கதை மங்களமாக முடிந்தது.

முடிவுரை: திருவொற்றியூர்

நான்தான் கதைக்கு மங்களம் பாடுவேனா என்று இருக்கிறது! விக்நேச்வரரை வேண்டிக் கொண்டது போக,

Koviloor Digital Library

போதும் போதும் என்கிற அளவுக்கு அவர் கிளறி விட்டுக் கொண்டிருக்கிறார்! வன்னி மரத்தைச் சொன்னவுடன் திருவொற்றியூர் மகிழ மரம், ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் கதையில் சங்கிலி நாச்சியாருக்காக ஸ்வாமி அந்த மரத்துக்குள்ளே ஸாக்ஷியாக ஸாந்நித்யம் அடைந்தது எல்லாம் ஞாபகம் வருகிறது. நிறுத்திக் கொள்கிறேன். பெரிய புராணம் மூலம், வசனம் எல்லாம் புஸ்தகம் இருக்கிறது. நீங்களுந்தான் கொஞ்சம் தேடி, கீடிக் கண்டுபிடித்துப் படித்துப் பாருங்களேன்! எல்லாவற்றையும் நானே சொல்லி விட்டால்?

Koviloor Digital Library

கங்கா ஸ்நானமும் காவேரி ஸ்நானமும்

முன்னுரை

ஸ்ரீ மஹா பெரியவர்கள் ஸ்ரீகாளஹஸ்தியில் 1966ம் ஆண்டு எழுந்தருளியிருந்த போது, தீபாவளிக்கு அண்மையில் அவர்களைத் தரிசிக்கச் சென்ற அடியார்களில் ஒருவர், 'தீபாவளிக்கும் கங்கா ஸ்நானத்துக்கும் என்ன தொடர்பு?' என்று விளக்கி வைக்குமாறு பெரியவர்களை வேண்டிக் கொண்டார்.

பெரியவர்கள் புன்னகை பூத்து, "ஏன், தீபாவளிக்கும் கங்கைக்கும் சம்பந்தம் இருக்க முடியாதென்று நினைக்கிறாயா? தீபாவளி கிருஷ்ண பரமாத்மா நரகாஸுரனைக் கொன்றதால் ஏற்பட்ட பண்டிகை. கங்கையோ பரமேச்வர ஸம்பந்தமுள்ளது. யமுனைதான் கிருஷ்ணனுடைய நதி. 'யமுனா தீர விஹாரி' என்றே அவரைச் சொல்கிறோம். அதனால் தீபாவளியில் கங்கா ஸ்நானம் என்று ஏன் விசேஷம் கொடுத்திருக்கிறது என்று உனக்குத் தோன்றுகிறதாக்கும்?" என்று கேட்டார்.

அந்த அடியார் அப்படித்தான் எண்ணியிருப்பார் போலும். பேசாமல் இருந்தார்.

"அது இருக்கட்டும்; தீபாவளிக்கு நாம் எல்லோரும் கங்கா ஸ்நானம் பண்ணுகிறோமென்றால் அதற்குக் காரண புருஷரான கிருஷ்ணர் அன்றைக்குக் காவேரி ஸ்நானம் பண்ணினார் என்று நீ கேள்விப்பட்டிருக்கிறாயோ?" என்று ஓர் அபூர்வ விஷயத்தை வினாவாக விடுத்தார் ஸ்ரீ ஜகத்தரு.

Koviloor Digital Library

"இல்லை. பெரியவாள்தான் சொல்லி அநுக்ரஹம் செய்ய வேணும்" என்று அவர் விண்ணப்பித்துக் கொண்டார்.

கூடியிருந்தவர்களில் வேறு எவருக்காவது அந்தக் கதை தெரியுமா என்று பெரியவர்கள் அலுக்காமல் ஒவ்வொருவராகக் கேட்டார். எவருக்கும் தெரியவில்லை.

பண்டிதராகத் தோன்றிய ஒருவர், "ஸ்ரீமத் பாகவதத்தில் நரகாஸுர வதத்தைச் சொல்லியிருக்கும் இடத்தில், அதற்கு தீபாவளி, கங்கை, காவேரி ஆகிய எந்த ஸம்பந்தமுமே சொல்லியிருக்கவில்லை" என்றார். அவர் சொன்ன மாதிரியிலிருந்து, அதனால் இவ்விஷயங்களை ஏற்பதற்கில்லை என்பது போலிருந்தது.

"பாகவதத்திலே இல்லாவிட்டாலும் புராணாந்தரங்களில் [வேறு புராணங்களில்] இந்த ஸமாசாரங்கள் இருக்கின்றன. ராமாயண, பாரத, பாகவதாதிகளில் வால்மீகியும், வியாஸரும், சுகப்ரம்மமும் சொல்லாமல் விட்ட அநேக விஷயங்கள் வேறு புராணங்களிலும், உப புராணங்களிலும், ஸ்தல புராணங்களிலும் வருகின்றன. கதைப் போக்கு, கதா பாத்திரங்களுடைய குண விசேஷம், லோகத்துக்கு இதனால் கிடைக்கிற உபதேசம் என்று எப்படிப் பார்த்தாலும் இவை பெரும்பாலும் மூல ராமாயண, பாரத, பாகவதாதிகளுக்கு complementaryயாகவே [இட்டு நிரப்பி முழுமை தருவனவாகவே] இருக்கின்றன. ஆகையால், மூலக்ரந்தத்துக்கு contradictoryயாக [முரணாக] இல்லாதவரை இப்படிப்பட்ட additional [கூடுதலான] ஸமாசாரங்களையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்" என்று கூறிய பெரியவர்கள், "நரகாஸுரனை பகவான் ஸம்ஹாரம் பண்ணினவுடன் பூமாதேவி வந்து அவரிடம் பிரார்த்தித்துக் கொண்டதாக பாகவதத்தில் வருகிறதோ இல்லையோ?" என்று தெரியாதவர் போலப் பெரியவாள் பண்டிதரைக் கேட்டார்.

Koviloor Digital Library

"வருகிறது, நரகன் அபஹரித்திருந்த இந்திரனுடைய குடையையும், [இந்திரனின் தாயாரான] அதிதியின் குண்டலங்களையும் பூமாதேவிதான் கொண்டு வந்து பகவானிடம் அர்ப்பணித்தாள் என்று வருகிறது. அப்போது அவள் செய்த ஒரு ஸ்தோத்திரமும் இருக்கிறது. ஆனால் இது பொதுப்படையான ஸ்துதியாக இருக்கிறதே தவிர, நரகனின் ஞாபகார்த்தமாகத் தீபாவளி கொண்டாடப்படவேண்டும் என்று அவள் வரம் கேட்டதாக இல்லை" என்று கூறிய பண்டிதர் "நரகாஸுரனுடைய பிள்ளை பகதத்தனை பகவான்தான் ரக்ஷிக்க வேண்டும் என்று பூமாதேவி ஒப்புக்கொடுத்ததாகவும் இருக்கிறது" என்றார்.

"வாலியை ராமர் ஸம்ஹாரம் பண்ணினவுடன் அவன், பிள்ளை அங்கதனை அவருடைய guardianshipலேயே விட்ட மாதிரி" என மொழிந்த ஜகத்குரு, "அது ஸரி; நரகாஸுரனே இப்படி, தான் வதமான தினத்தை லோகமெல்லாம் பண்டிகையாகக் கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாகவும் இன்னொரு version [கதாபேதம்] கேள்விப்பட்டிருக்கிறாயோல்லியோ?" என்று கேட்டார்.

"கேட்டிருக்கிறேன்" என்றார் அவர்.

"எனக்கென்னவோ அவனுடைய அம்மாவான பூமாதேவி இப்படி வரம் கேட்டாள் என்பதுதான் ரொம்ப விசேஷமாக மனஸில் படுகிறது. பகவான் ஹஸ்தத்தால் மரணமடைந்து அவருக்குள்ளேயே ஐக்கியமாகிற ஸ்டேஜில் இருக்கும் ஒருத்தனுக்கு நல்லறிவு உண்டாகி இம்மாதிரி வேண்டிக் கொள்வதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால் ஒரு பெற்ற தாய் புத்ர சோகத்தில் வயிறெரியாமல், பரம துக்கமான ஸமயத்தில், நம் பிள்ளை போனாலும், அவன் போனதற்காகவே, லோகத்தில் ஸமஸ்த ஜனங்களும் ஸந்தோஷமாக விழா கொண்டாட வேண்டும் என்று வேண்டிக்கொண்டாளென்றால்

Koviloor Digital Library

அதுதான் நெஞ்சைத் தொடுகிற மாதிரி இருக்கிறது. பொறுமைக்கு பூமாதேவி என்பது இங்கேதான் நிரூபணமாகிறது. அந்தத் தாயாருடைய தியாக சக்தியினால்தான் தேசம் பூராவிலும் வேறெந்தப் பண்டிகைக்குமில்லாத பிராதான்யம் [முதன்மை] தீபாவளிக்கே ஏற்பட்டிருக்கிறது என்று எனக்கு அபிப்பிராயம்" என்றார்.

கண்ணன் காவேரி ஸ்நானம் செய்த கதையைத் தெரிந்து கொள்வதில் தங்கள் ஆர்வத்தைச் சில பக்தர்கள் தெரிவித்துக் கொண்டனர்.

"அவன் [முதலில் விண்ணப்பித்த அடியார்] 'கங்கா ஸ்நான ஸம்பந்தத்தைச் சொல்லு' என்று கேட்டான். நான் காவேரி ஸ்நானத்தைப் பற்றிச் சொல்கிறேனென்றால், 'ஸ்வாமிகளுக்கு நாம் கேட்ட விஷயம் தெரியாது' என்று நினைக்கமாட்டானா? அதனால், கங்கா ஸ்நானம், காவேரி ஸ்நானம் எல்லாவற்றையும் பற்றிச் சொல்கிறேன்" என்று குறும்பாகக் கூறிய குருநாதர், மேலும் குறும்பாக "இவர் [பண்டிதர்] 'பாகவதத்திலே வந்தால்தான் ஒப்புக்கொள்வேன்' என்று சொன்னாலும் நான் அதோடு வேறு கதைகளையும் போட்டுப் பிசைந்து அவியலாகத்தான் சொல்லப் போகிறேன். காவேரி மாஹாத்மியத்தைப் பற்றி ஸ்காந்தம், ஆக்நேய புராணம், பிரம்ம வைவர்த்த புராணம் முதலானதுகளில் இருக்கிறது. அதிலொன்றில்* துலா காவேரி மஹிமையைச் சொல்கிற இடத்தில்தான் தீபாவளிக் கதை வருகிறது. சுகருக்கு பாகவதத்தை உபதேசித்த அதே வியாஸாசாரியாள்தான் இந்த எல்லாப் புராணங்களையும் கொடுத்திருக்கிறார்" என அர்த்த புஷ்டியுடன் மொழிந்து, நிமிர்ந்து அமர்ந்து, கதை கூற ஆயத்தமானார்.

* பிரம்ம வைவர்த்த புராணத்தில்

Koviloor Digital Library

ஓர் அம்மாள் "நரகாஸுர வதக்கதையைக்கூடப் பெரியவாள் வாயாலே கேட்கணும்" என்று விஞ்ஞாபித்துக் கொண்டாள்.

"எல்லாக் கதையும்தான்! ஏதோ இப்போது எனக்கு நினைவு வருகிற வரைக்கும் சொல்கிறேன்" என்று, ஸர்வக்ஞர் கடல் மடையாகத் தொடங்கினார். பண்டிதரும் ஓரிரு இடங்களில் எடுத்துக் கொடுக்க, அது மேலும் பொங்கிப் பெருகச் செய்தார்.

கங்கையும் காவேரியுமாக இருந்த அந்தப் பிரவாஹத்தை இங்கே வாசகர்களுக்கு வழங்குகிறோம்.

நரகாஸுரனும் அவன் ஊரும்

நம்முடைய தேசத்தில் இருக்கிற அநேக ராஜ்யங்களில் ஒரே மலைகளும், பிரம்மபுத்ரா மாதிரியான காட்டாறுகளும் மலை ஜனங்களுமே ஜாஸ்தி இருக்கிற அஸ்ஸாமுக்கு அவ்வளவு பெருமை இருப்பதாக நாம் நினைப்பதில்லை. ஆனால் லோகத்திலேயே 'மாக்ஸிமம்' மழை பெய்கிற சிரப்புஞ்ஜி அங்கேதான் இருக்கிறது. ஆதி காலத்தில் அதற்கு நிரம்பப் பெருமை இருந்திருக்கிறது. அப்போது அதற்குக் 'காமரூபம்' என்று பேர். ஏன் அப்படிப் பேர் என்றால், தக்ஷிணத்தில் பராசக்தி காமாக்ஷியாக இருக்கிற மாதிரி அங்கேயும் 'காமா' என்ற பெயரில் பிரசித்தமான சக்தி பீடத்தில் இருக்கிறாள். 'காமாக்யா' என்று சொல்வார்கள். 'ஆக்யா' என்றால் பெயர். சிவ நாம மகிமையைச் சொல்வதாக ஸ்ரீதர ஐயாவாள் செய்திருக்கிற ஸ்துதிக்கு 'ஆக்யா ஷஷ்டி' என்றே பெயர். 'காமாக்யா' என்றால் 'காமா' என்று நாமமுடையவள். அவளுடைய வாஸஸ்தலமானதால் அஸ்ஸாமுக்கே காமரூபம் என்று பெயர். அதற்கு இன்னொரு பெருமை என்னவென்றால், பகவான் வராஹ அவதாரமெடுத்து, ஹிரண்யாக்ஷனை

Koviloor Digital Library

ஸம்ஹாரம் பண்ணி, ஜலத்துக்குள் முழுகியிருந்த பூலோகத்தைத் தம்முடைய தெற்றிப் பல் நுனியில் கொத்தி எடுத்துக் கொண்டு வந்தபோது அவருடைய பல் பட்ட இடம் இந்தக் காமரூபம்தான். மலையும் குன்றுமாகக் கரடு முரடாக இருந்ததால் இந்தப் பிரதேசம்தான் வழுக்கி விழாமல் 'பாலன்ஸ்' பண்ணிக் கொள்ள ஏற்றதாக இருந்தது போலிருக்கிறது.

இப்படி பூமாதேவியோடு வராஹமூர்த்திக்கு ஸ்பரிசம் ஏற்பட்டதிலிருந்து ஒரு புத்திரன் ஸம்பவித்தான். பகவத் லீலை நமக்குப் புரியாது. ஸாக்ஷாத் பகவானே ஓர் அஸுரனைக் கொன்று, நம்மெல்லோரையும் தாயாகத் தாங்குகிற பூமாதேவிக்கு அநுக்ரஹித்த இந்தப் புத்திரன் எதனாலோ அஸுரனாக இருந்தான். நல்லதற்கு மட்டும் God, கெட்டதற்கு Satan [சாத்தான்] என்றில்லாமல், நல்லது -கெட்டது எல்லாவற்றுக்கும் ஒரே பரமாத்மாதான் மூலம் என்றுதானே நம் சாஸ்திரம் சொல்லுகிறது? அதனால் இப்படி பகவானுக்கும் பூமாதேவிக்குமே அஸுரப் பிள்ளை பிறந்தது போலிருக்கிறது.

அந்தப் பிள்ளைதான் நரகாஸுரன்.

அவன் ப்ரம்மாவைக் குறித்து தபஸ் பண்ணி மஹா பலத்தைப் பெற்றான். லோகங்களையெல்லாம் ஹிம்ஸித்து நரக பாதைக்கு ஆளாக்கினான். அதனால்தான் அவனுக்கு நரகாஸுரன் என்றே பேர் வந்ததோ என்னவோ? 'பௌமன்' என்றும் அவனுக்கு இன்னொரு பெயர். 'பூமியின் பிள்ளை' என்பதால் இப்படிப் பேர் வந்தது. அங்காரகனும் [செவ்வாயும்] பூமி குமாரனானதால் அவனுக்கும் 'பௌமன்' என்ற பெயருண்டு. ஸங்கல்பத்தில் செவ்வாய்க் கிழமையை மங்களவாரம் என்றோ, அங்காரக வாரம் என்றோ சொல்லாமல், "பௌம வாஸர யுக்தாயாம்" என்றுதான் சொல்கிறோம். 'அஸ்ட்ரானமிப்படி'யும் மார்ஸ்

Koviloor Digital Library

[செவ்வாய்] கிரஹத்தில்தான் நம்முடைய உலகம் மாதிரியே நம்மைப் போன்ற உயிரினம் இருக்கக் கூடும் என்று சொல்கிறார்கள். கிரேக்க-ரோம 'மைதாலஜி'களில், செக்கச் செவேலென்றிருக்கிற அந்தக் கிரஹத்தை யுத்த தேவதையாகச் சொல்கிறார்கள். 'செவ்வாய்' என்றே தமிழில் சிவப்பை வைத்துப் பெயர் இருக்கிறது. செக்கச் செவேலென்ற சிவ நேத்ராக்னியில் தோன்றி தேவஸேநாதி பதியாக இருக்கும் முருகனை அங்காரகனோடு இணைத்து நினைக்கிறோம்.

இந்த பௌமனோ கன்னங் கரேலென்று, தான் போகிற இடத்தையெல்லாமும் நரக இருட்டாகப் பண்ணுகிறவனாக இருந்தான்! தேவலோகத்துக்குப் போய் தேவர்களை அடித்து நொறுக்கி ஹதாஹதம் பண்ணினான். இந்திரனுடைய குடையையும் — குடைதான் பெரிய ராஜச் சின்னம்; 'வெண்கொற்றக் குடை' என்கிறோம். 'சத்ரபதி', 'சத்ரபதி சிவாஜி' என்றெல்லாம் சொல்கிறபோது 'சத்ரம்' என்றால் குடைதான் — அப்படிப்பட்ட இந்திரனுடைய குடையையும், இந்திரனுடைய தாயார் அதிதியின் குண்டலங்களையும் நரகாஸுரன் பறித்துக் கொண்டு வந்தான். காம ரூபத்தில் ப்ராக்ஜ்யோதிஷபுரம் என்கிற ஊரைத் தலைநகராக வைத்துக் கொண்டு கொடுங்கோல் ராஜ்யம் நடத்தினான். 'ஜ்யோதிஷபுரம்' என்றால் 'பிரகாசமான பட்டணம்' என்று புரிந்து கொள்வீர்கள். 'ப்ராக்' என்றால் முன் பக்கம், கிழக்குத் திசை என்று அர்த்தம். ஸூர்யோதயம் கிழக்கில் தானே? இந்தியாவுக்கே கீழ்க்கோடியில் காமரூபத்தில் இருந்ததால், தன்னுடைய இருட்டு ஊருக்கு ப்ராக்ஜ்யோதிஷபுரம் என்று பெயர் வைத்தான்.

பஹு காலம் இந்திரனும் பகவானிடம் முறையிடாமல் பொறுத்துக் கொண்டே இருந்தான். வேறே யாரோ

Koviloor Digital Library

அஸுரன் என்றால் பகவானிடம் 'கம்ப்ளெயின்' பண்ணலாம். இவனோ பகவானுக்கே அல்லவா பிள்ளையாக இருந்தான்? அதனால், 'உன் பிள்ளையின் அழகைப் பார்' என்று பிராது கொடுத்தால் அது பகவானையே குத்திக் காட்டுகிற மாதிரிதானே என்று நினைத்துப் பொறுத்துக் கொண்டேயிருந்தான்.

கண்ணனிடம் முறையீடு

அப்புறம் பகவான் கிருஷ்ணாவதாரம் பண்ணினார். எளியவர்களுக்குள் எளிய இடைப் பசங்களோடும் கோபிகா ஸ்திரீகளோடும் பரம ப்ரேமையோடு உறவாடிக் கொண்டே, அதிமாநுஷ்யமான அற்புதங்களையும் பண்ணினார். பூதனையிலிருந்து ஆரம்பித்து அநேக அஸுரர்களை அதி பால்யத்திலேயே ஹதம் பண்ணினார். இந்த இந்திரனே ஏழு நாள் மழை பெய்துவிட்டு ஓய்ந்து போய்த் தன் காலில் விழுந்து சரணாகதி பண்ணி, கோவிந்த பட்டாபிஷேகம் செய்யும்படியாகக் கோவர்த்தன கிரியைச் சுண்டு விரலில் தூக்கி, கோக்களையும், கோபர்களையும் ரக்ஷித்தார்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் ப்ரம்மா, 'இதென்ன நம் தகப்பனாரான பரமாத்மா இப்படி மாயத்தில் மாட்டிக் கொண்டு, மாடு மேய்த்துக் கொண்டு திரிகிறாரே! இந்த மந்தையை யெல்லாம் நாம் மறைத்து விட்டாலாவது அவருக்கு மாயை போகுமா?' என்று தப்பாக நினைத்து, ஆநிரை முழுதையும், ஆயப் பசங்கள் அத்தனை பேரையும் கடத்திக் கொண்டே போய்விட்டார்! க்ஷண காலத்தில் பாலகிருஷ்ணன் அவ்வளவு பேருக்கும் 'டூப்ளிகேட்' ஸ்ருஷ்டி பண்ணி விட்டார். ஒரு வருஷம் முழுக்க அந்த டூப்ளிகேட் ஸ்ருஷ்டியையேதான் கோகுலத்திலே இருந்த தாய், தகப்பன்மார்களெல்லாம் 'ஒரிஜினல்' என்று

Koviloor Digital Library

நினைத்துக் கொண்டிருந்தார்கள்! பரிபாலன தெய்வமான கிருஷ்ணரால் இப்படி ஸ்ருஷ்டி செய்ய முடிந்தாலும், ஸ்ருஷ்டிக்குத் தெய்வமான ப்ரம்மாவால் தாம் கடத்திக் கொண்டு போன பசுக்கூட்டத்தையும், இடைப் பசங்களை யும் பரிபாலித்துச் சமாளிக்க முடியவில்லை! தெரியாத காரியத்தை இழுத்துப் போட்டுக் கொண்டு திண்டாடினார். ஸம்ஹாரம் செய்து விடலாமா என்றால், ப்ரம்மா ஸம்ஹார மூர்த்தியுமில்லையே! கிருஷ்ணர் பச்சைக் குழந்தையா யிருந்ததிலிருந்து அநேக அஸுரர்களை வதம் செய்திருக்கிறாரே, அப்படிச் செய்ய ப்ரம்மாவுக்கு ஸம்ஹார சக்தியுமில்லை; மனஸும் இல்லை. அப்போது தான், அவருக்கு மும்மூர்த்தி என்றிருந்தாலும், தாம் தகப்பனாருக்குக் கொஞ்சங்கூட ஸமதையில்லை. நம் ஸ்ருஷ்டி சக்திகூட தகப்பனாரின் அநுக்ரஹத்தினால் கிடைத்ததுதான் என்று தெரிந்தது. 'தகப்பனார் எந்த மாயைக்கும் ஆளாகவில்லை. மாயை எவருக்கு அடிமையாக வேலை செய்கிறதோ அப்படிப்பட்ட ப்ரபு அவர். இதைப் புரிந்துகொள்ளாதபடி நம்மைத்தான் மாயை மூடியிருந்தது' என்று பிரம்மாவுக்கு அறிவு பிறந்தது. அவர் தாம் கடத்திக் கொண்டு போனவர்களையெல்லாம் கிருஷ்ணரிடமே கொண்டு வந்து கொடுத்து, ஏகமாக ஸ்தோத்திரம் பண்ணி, மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போனார்.

பிரம்மா தப்புப் பண்ணினபோது, பெற்ற பிள்ளை யென்றும் பாராமல் அவரை இப்படித் திணறப் பண்ணின கிருஷ்ணர்தான் வெளியிலே என்ன வேஷம் போட்டாலும் உள்ளூர பந்து-மித்ரர் என்ற பந்த பாசமே இல்லாமல் தர்ம நியாயப்படி பண்ணுகிறவர்; இவரால்தான் புத்திரன் என்றும் பார்க்காமல் நரகாஸுரனைக் கொல்ல முடியும் என்று இந்திரனுக்குத் தீர்மானமாயிற்று. ஆனாலும், அவதாரம் பண்ணின நாளிலிருந்து எப்போது பார்த்தாலும்

Koviloor Digital Library

அஸுர ஸம்ஹாரத்துக்கே அவரை இழுத்து ச்ரமப்படுத்து வதா என்று இன்னும் கொஞ்சம் பொறுத்துக் கொண்டிருந்தான்.

கம்ஸ வதமாகி, ஜராஸந்தனைத் துரத்திவிட்டு, பகவான் துவாரகாபுரியை நிர்மாணம் பண்ணிக்கொண்டு அங்கே கொஞ்ச காலம் விச்ராந்தியாக இருந்தார். அப்புறம் ருக்மிணியின் உறவுக்காரர்களோடு சண்டைப் போட்டு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டார். அதற்கப் புறம் ஸத்ய பாமா முதலான அநேக பத்னிகளையும் விவாஹம் செய்து கொண்டார். இதிலெல்லாமும் நடுவே சண்டைகள் வந்தன. அப்புறம் கொஞ்ச காலம் எந்தச் சண்டையுமில்லாமல் பத்தினிகளோடு ஸந்தோஷமாக, சாஸ்திரோக்தமான கிருஹஸ்த தர்மங்களைச் செய்து கொண்டு த்வாரகையில் வாழ்ந்து வந்தார்.

இனிமேல் அவரை உபத்திரவப்படுத்தினால் பரவாயில்லை என்று இந்திரன் அவரிடம் வந்து நரகாஸுர னுடைய ஹிம்ஸையைப் பற்றி முறையிட்டான்.

நரகாஸுர வதம்; ஸத்யபாமாவின் பங்கு

உடனே கிருஷ்ணர் ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவைப் போல் கருடனை அழைத்து அவன் மேலேறிக் கொண்டு, ஸத்ய பாமாவையும் துணை சேர்த்துக்கொண்டு ப்ராக் ஜ்யோதிஷபுரத்துக்குப் புறப்பட்டு விட்டார். ஸத்ய பாமாவை எதற்கு அழைத்துக்கொண்டு போனாரென்றால், அவள் பூமாதேவியின் அவதாரம்தான். ருக்மிணி, ஸ்ரீதேவி. பாமா, பூதேவி. பொதுவாக ருக்மிணிதான் அடக்கம் முதலான உத்தம குணங்கள் உள்ளவள், பாமாவுக்கு அஹங்காரம் ஜாஸ்தி என்று நினைக்கிறோம். பகவானும் மாய நாடகமாடி, பாமாவுக்கு ரொம்ப அநுகூலமா யிருக்கிறது போலக் காட்டியே கடைசியில் ருக்மிணியின்

Koviloor Digital Library

முன் அவள் 'மூக்கு அறுபடும்படி' செய்திருப்பதாகக் கதைகள் இருக்கின்றன. ஆனால் இப்போது ஸத்ய பாமாவிடம் இருந்த உயர்ந்த குணங்கள் தெரிவதற்காகவே அவளை அழைத்துக் கொண்டு போனார். என்ன இருந்தாலும் அவர் புருஷர். ஆதலால் பெற்ற பிள்ளையை வதம் பண்ணுவதற்கான நெஞ்சுரம் அவருக்கு இருந்ததுகூட ஆச்சரியமில்லை. லோகத்துக்கே விரோதியாகத் தன் பிள்ளை இருக்கிறான் என்பதால் அவன் சாக வேண்டியது தான் என்று ஒரு தாயார் நினைப்பதுதான் இதைவிட விசேஷம். இப்படி நினைத்துத் தன் துஷ்டப் பிள்ளை சாவதையும் தன் கண்ணாலேயே பார்த்து லோக க்ஷேமத்தை நினைக்கக் கூடிய உசந்த குணம் ஸத்ய பாமாவுக்கு உண்டு என்று தெரியப்படுத்துவதற்காகவே அவளை அழைத்துக் கொண்டு போனார்.

தர்மத்துக்காகப் போராடிய வீராங்கனைகளாகச் சில ராஜ ஸ்திரீகள் ஆதியிலிருந்து, ஸமீபத்து அஹில்யா பாய், ஜான்ஸி ராணி வரை இருந்திருக்கிறார்கள். கைகேயி சம்பராஸுர யுத்தத்தின்போது தசரதருக்கு ரத ஸாரத்யம் செய்திருக்கிறாள். கௌஸல்யை யுத்த பூமிக்குப் போனதாக இல்லை. அவள் அடக்க குணம் நிறைந்தவள். அதே மாதிரி ருக்மிணி. அவளை பகவான் யுத்த பூமிக்கு அழைத்துப் போனதில்லை. கைகேயி மாதிரி இளையாளாகவும், கொஞ்சம் 'தாட் பூட்' உள்ளவளுமான பாமாவைத்தான் அழைத்துப் போனார். கருட வாஹனத்துக்குப் பதில் ஸத்யபாமாதான் இந்தக் கதையில் பகவானை ரதத்தில் வைத்து ஸாரத்தியம் செய்துகொண்டு போனாள் என்றும் ஒரு கதாபேதம் உண்டு.

பொறுமைக்கு உருவமான பூமியினாலேயே துஷ்ட ராஜாக்கள் படுத்தும் பாடு தாங்க முடியாமல், அவள் பசு ரூபம் எடுத்துக்கொண்டு போய், மஹாவிஷ்ணுவிடம் பிரார்த்தித்துக் கொண்டதன் மேல்தான் அவர் பூபாரம்

Koviloor Digital Library

தீர்ப்பதற்கென்றே கிருஷ்ணாவதாரம் செய்திருக்கிறார். அதில் கம்ஸன், சிசுபாலன், ஜராஸந்தன், துர்யோதனன் முதலானவர்களைத் தீர்த்துக் கட்டினால் மட்டும் போதாது; இவர்களையெல்லாம் விட க்ரூரமான நரகாஸுரனைத் தாயும் தந்தையுமான இரண்டு பேருமே சேர்ந்து வதம் பண்ண வேண்டும் என்று தம்பதியாகப் போனார்கள்.

ப்ராக்ஜ்யோதிஷபுரத்துக்குள் யாரும் நுழைய முடியாதபடி அநேக கோட்டைகளைக் கட்டிக்கொண்டு உள்ளே வஸித்தான் நரகன். வெளி எல்லையில் முதலில் மலைகளையே கோட்டையாக அமைத்துக் கொண்டிருந்த வன் அதற்குள்ளே ஆயுதங்களாலேயே ஆன கோட்டை, அப்புறம் ஜலத்தை மந்திர சக்தியால் எழுப்பி நிறுத்தி அமைத்துக் கொண்ட ஜலக் கோட்டை, அதற்கும் உள்ளே நெருப்பாலேயே ஆன அக்னிக் கோட்டை, அப்புறம் வாயுக் கோட்டை என்று பலவற்றைக் கட்டிக்கொண்டு உள்ளுக் குள்ளே இருந்தான்.

பகவான் ஒவ்வொரு கோட்டையையும் தவிடு பொடி யாக்கிக்கொண்டு ஊருக்குள்ளே வந்து, பாஞ்சஜன்ய [சங்க]த்தை "பூம் பூம்" என்று முழக்கி அஸுரனை யுத்தத் துக்குக் கூப்பிட்டார்.

முதலில் நரகாஸுரனுடைய ஸேனாதிபதியான முரன் என்கிறவன் சண்டைக்கு வந்தான். அவனுக்கு ஐந்து தலை. வீர பராக்கிரமத்தோடு சண்டை போட்டான். பகவான் ஸுதர்சன சக்ராயுதத்தால் அவனுடைய ஐந்து தலைகளையும் அறுத்து அவனை ஸம்ஹாரம் செய்தார்.

கருடன் எப்படி விஷ்ணுவின் வாஹனமோ, அப்படியே ஸுதர்சன சக்ரம் விஷ்ணுவின் ஆயுதம். கருடா ரூடரான கிருஷ்ணர், இந்தச் சக்கரம், விஷ்ணுவின் கதையான கௌமோதகீ முதலானதுகளையும் தரித்திருக் கிறார். ராமர் முதலான அவதாரங்கள் இப்படிச் செய்த

Koviloor Digital Library

தில்லை. இதனால்தான் கிருஷ்ணரையே மஹாவிஷ்ணுவின் பூர்ணாவதாரம் என்பது.

முரனை வதைத்ததாலேயே அவருக்கு முராரி, முரஹரி என்ற பெயர்கள் ஏற்பட்டன. முரனுக்கு அரி [சத்ரு] முராரி. த்ரி-புரம் என்ற மூன்று புரங்களில் உருவமா யிருந்த அஸுரர்களுக்கு விரோதியானதால் ஈச்வரனுக்குப் புராரி என்று பெயர். முரஹரி என்றாலும் முரனை அழித்தவர்.

முரன் கதை முடிந்ததும் அவனுடைய ஏழு புத்திரர் களும் வந்து யுத்தம் பண்ணி, அவன் போன கதிக்கே தாங்களும் போய்ச் சேர்ந்தார்கள்.

கடைசியில் ஒரு பெரிய யானை மேல் ஏறிக்கொண்டு நரகாஸுரனே யுத்த பூமிக்கு வந்தான்.

கருடனின் மேலிருந்துகொண்டு பகவான் அவனோடு சண்டை போட்டார். அவனுடைய ஸைன்யத்தை வதம் பண்ணுவதில் கருடன், ஸ்தயபாமா இரண்டு பேரும் அவருக்கு ஸஹாயம் செய்தார்கள். தாமே எதையும் ஸாதித்துக்கொள்ள முடியுமாயினும், அவர்கள் வெறுமனே வேடிக்கை பார்த்ததாக இருக்கக் கூடாது என்று நினைத்து, அவர்களுக்கும் இப்படி ஸேவா பாக்யத்தைக் கொடுத்தார்.

அஸுர ஸைன்யம் முழுவதும் நிர்மூலமானபின் பகவானுக்கும் நரகாஸுரனுக்கும் நேருக்கு நேர் உக்ரமான யுத்தம் நடந்தது. பகலோடு முடியாமல் ராத்திரியெல்லாம் சண்டை நீடித்தது. ரா வேளையில் அஸுரர்களுக்கு பலம் விருத்தியாகும். ஆனாலும் பரமாத்மாவானதால் நரகனின் தாக்குதலைச் சமாளித்தார். அவனால்தான் இவருக்கு ஈடு கொடுக்க முடியவில்லை.

முடிவிலே அருணோதய காலத்தில் பகவான் நரகா ஸுரனைச் சக்ராயுதத்தால் ஸம்ஹாரம் செய்துவிட்டார்.

Koviloor Digital Library

அன்று விடிந்தபோது லோகத்துக்கே பெரிய விடிவு காலமாயிற்று!

இது நடந்தது ஒரு ஆச்வின மாஸத்துக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியிலாகும். மறுநாள் அமாவாஸ்யை.

ஆச்வினம் என்பதை ஆச்வியுஜம் என்றும் சொல்வதுண்டு. நம்முடைய புரட்டாசி அமாவாஸ்யைக்கு மறுநாளான ப்ரதமையிலிருந்து ஐப்பசி அமாவாஸ்யை முடிய இருக்கிற சுமார் முப்பது நாளுக்கே ஆச்வினமாஸம் என்று பெயர். அந்த மாசத்தில்தான் க்ருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் நரகாஸுரவதம்.

கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி என்பது பரமேச்வரனுக்கு ரொம்பவும் ப்ரீதியானது. மாஸம்தோறும் வரும் அந்தத் திதிக்கு மாஸ சிவராத்ரி என்றே பெயர். மாசி மாஸத்தில் இப்படி வருவதைத்தான் மஹா சிவராத்திரி என்று கொண்டாடுகிறோம். ஒரு ஐப்பசி மாஸ சிவராத்திரி முழுதும் விழித்துக் கொண்டு சண்டை போட்டே பகவான் நரகாஸுரனை வதம் பண்ணியிருக்கிறார்!

ஸத்யபாமாவேதான் நரகனை ஸம்ஹாரம் பண்ணினது என்று இன்னொரு விதமாகவும் சொல்வதுண்டு.

யாரானாலும், இரண்டு பேரும் அதிலே ஸந்தோஷப் பட்டு, லோக க்ஷேமத்தையே புத்ர நாசத்தை விடப் பெரிதாக மதித்திருக்கிறார்கள் என்பதுதான் முக்கியம்.

பூமாதேவியின் பிரார்த்தனை

இப்படிச் சாகிற சமயத்தில்தான் நரகாஸுரன், தான் அழிந்த தினத்தை லோகமெல்லாம் மங்கள ஸ்நானம் பண்ணி மங்களோத்ஸவமாகக் கொண்டாடி மகிழ வேண்டும் என்று வேண்டிக் கொண்டதாக ஒரு version.

Koviloor Digital Library

பரம மங்களம் கங்கா ஸ்நானமே. அந்த ஸ்நான புண்யம் எந்த ஜலத்தில் ஸ்நானம் பண்ணுகிறவருக்கும் அன்றைய தினத்தில் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டான். இன்னொரு கதைப்படி, நரகனின் தாயாரான பூமாதேவி இப்படிப் பிரார்த்தித்து வரம் பெற்றதாக இருக்கிறது. முன்னேயே சொன்ன மாதிரி ஸாக்ஷாத் பரமாத்மாவின் கையால் வதமாகி ஸாயுஜ்ய முக்திக்குப் போகிற நிலையில் இருக்கிற நரகன் இப்படி லோகோபகாரமாக வரம் கேட்டுக் கொண்டதில் விசேஷம் எதுவும் தெரியவில்லை. அவனுடைய பெற்ற தாயார் இப்படிக் கேட்டாளென்றால்தான் அது மஹா உசத்தி என்று தோன்றுகிறது. தன் பிள்ளை எத்தனையோ வருஷமாக லோகத்தை அழவைத்ததற்குப் பிராயச்சித்தமாக எதிர்காலத்தில் வரப்போகிற அத்தனை வருஷமும் ஜனங்கள் அவன் பேரைச் சொல்லிக் கொண்டு, தங்கள் வாழ்க்கைப் போராட்ட அழுகைகளை மறந்து, ஆனந்தமாகப் பண்டிகை கொண்டாட வேண்டும் என்று நினைத்து இப்படி வரம் கேட்டாள்.

பூமாதேவியின் அவதாரமான ஸத்யபாமாவே ஸம்ஹாரத்துக்கு ஸஹாயம் பண்ண, தனியாக பூமாதேவி வந்து நரகாஸுரன் அபஹரித்திருந்த குடை, குண்டலங் களைக் கிருஷ்ணருக்கு ஸமர்ப்பணம் செய்துவிட்டு இப்படிப் பிரார்த்தித்தாள் என்று சொல்லியிருக்கிறதே என்று தோன்றலாம். ஒரு தெய்வம் அவதாரம் பண்ணின பிறகும், அந்த மூல தெய்வமும் இருக்கிறபடியே இருந்து கொண்டு அவதாரமும் தனியாக இருந்திருக்கிறது. பரமேச்வர அவதாரமான ஆசார்யாளே கைலாஸத்தில் ஈச்வர தரிசனம் பண்ணிப் பஞ்ச லிங்கங்களை வாங்கிக் கொண்டிருக்கிறார். பாகவதத்திலேயே பிற்பாடு ஒரு பிராம்மணனின் செத்துப்போன குழந்தைகளை விஷ்ணு லோகத்திலிருந்து மீட்டு வருவதற்காக கிருஷ்ணர்

Koviloor Digital Library

அர்ஜுனனோடு அங்கே போனதாகவும், அங்கே சேஷ சயனத்திலிருந்த நாராயண மூர்த்தியைப் பார்த்ததாகவும், விஷ்ணுவும் கிருஷ்ணரும் ஸம்பாஷித்துக் கொண்டதாகவும் வருகிறது. அப்படித்தான் இப்போது பூமாதேவி, பாமா இரண்டு பேரும் ஏக காலத்தில் வெவ்வேறாக இருந்திருக்கிறார்கள்.

தன் பிள்ளை போன தினத்தில் எல்லோருக்கும் கங்கா ஸ்நான புண்ணியம் கிடைக்க வேண்டும் என்று பூமாதேவி கேட்டுக் கொண்ட விசேஷம்தான் இன்றைக்கும் நாம் தீபாவளியன்று 'கங்கா ஸ்நானம்' செய்வது.

உறவுக்காரர்கள் 'போய்'விட்டால் ஸ்நானம் பண்ணுவது வழக்கம், எதுவாவது உபயோகமில்லை என்று முடித்துவிட்டால் 'முழுக்குப் போட்டுவிட்டேன்' என்கிறது இதனால்தான். செத்துப்போனதாலேயே லோகத்துக் கெல்லாம் உபகாரம் பண்ணின நரகாஸுரனை அத்தனை பேரும் எத்தனையோ தலைமுறைகளாக உறவுக்காரனாக நினைத்து வருஷா வருஷம் அவனுக்காக முழுக்குப் போடும்படி அவனுடைய அம்மா செய்திருக்கிறாள்! ஆனால் இது துக்க முழுக்கு இல்லை: ஸந்தோஷ முழுக்காக இருக்க வேண்டும் என்றே அவள் இதை மங்கள ஸ்நானமாக, அதாவது எண்ணெய் தேய்த்துக் கொண்டு செய்யும் ஸ்நானமாகப் பண்ணினாள். துக்க முழுக்கானாலும், உபவாஸ விரதாநுஷ்டானத்துக்கான 'மடி'யான ஸ்நானமானாலும் பச்சைத் தண்ணீரில்தான் குளிக்க வேண்டும். ஆனால் இதுவோ ஸந்தோஷமான பண்டிகை அல்லவா? அதனால்தான் எண்ணெய் தேய்த்துக் கொண்டு அப்புறம் வெந்நீரில் ஸ்நானம் செய்ய வேண்டும் என்றும் வித்தியாசமாக அவள் வரம் வாங்கி வைத்திருக்கிறாள். 'ஐப்பசி மாதம் அடைமழை' என்பது வசனம். அதிலே எண்ணெய் தேய்த்துப் பச்சைத் தண்ணீர்

Koviloor Digital Library

ஸ்நானம் செய்தால் குளிர் நடுக்கும்; ஜலதோஷம், ஜ்வரம் வரும். நரகாஸுரனைச் சபிப்போம்! அதனால்தான் ஹிதமாக, ஸௌக்கியமாக வெந்நீர் ஸ்நானம் பண்ணும்படி வேண்டிக் கொண்டிருக்கிறாள்!

இதிலே இன்னொரு புதுமை — ஸூர்யோதயத்துக்கு முன்னாடி அப்யங்கனம் [எண்ணெய்க் குளியல்] பண்ணக் கூடாது என்பது விதி. ஆனாலும் இதற்கு வித்யாஸமாக ஒரு விதி சாக்ஷாத் பகவானிடமிருந்து வரமாக வாங்கி விட்டாலே பிள்ளையைப் பற்றி விசேஷமாக நினைக்கத் தூண்டும் என்று பூமாதேவி நினைத்தாள். அதனால்தான் தீபாவளி ஒரு நாளில் மட்டும் ஸூர்யோதயத்துக்கு முந்தி அருணோதய காலத்திலேயே தைல ஸ்நானம் பண்ண வேண்டும் என்று வரம் கேட்டு அதற்குப் பகவானின் அங்கீகாரத்தைப் பெற்றாள்.

அருணோதயம் என்றால் அருணனின் உதயம். அருணன் என்பவன் ஸூர்யனுடைய தேரோட்டி. அவன் ஒரே சிவப்பாக இருப்பான். நல்ல சிவப்புக்கு அருண வர்ணம் என்றே பெயர். 'ஆனை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே' என்கிறது போல் சூரியன் அடிவானத்தில் தெரிகிறதற்கு ஒரு முஹூர்த்த காலத்துக்கு முந்தியே அங்கே சிவப்பு பரவ ஆரம்பித்து விடுவதைத்தான் அருணோதயம் என்பது. ஒரு முஹூர்த்தம் என்பது இரண்டு நாழி, அதாவது நாற்பத்தெட்டு நிமிஷம். தீபாவளியன்று ஸூர்யோதயத்துக்கு ஒரு முஹூர்த்தம் முந்தியே எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். விடிவதற்கு முன்னால் அப்யங்கனம் செய்து கொள்ள வேண்டும் என்பதற்காக, ராத்திரி இரண்டு மணி, மூன்று மணிக்கே ஸ்நானம் செய்வது தப்பு.

இந்த ஸ்நானத்திலே நாம் வைத்துக் கொள்கிற எண்ணெய்யில் லக்ஷ்மி தேவி வாஸம் பண்ண வேண்டும்

Koviloor Digital Library

என்றும், குளிக்கிற வெந்நீரில் கங்கா தேவி வஸிக்க வேண்டும் என்றும் பூமாதேவி கேட்டுக் கொண்டாள். அதன் பின்பாதியை ஒட்டித்தான், பிரஸித்தமாக தீபாவளியன்று 'கங்கா ஸ்நானம்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் தைலத்தில் லக்ஷ்மி என்பதை நாம் மறந்து விட்டோம். என்றாலும் அதுதான் தீபாவளிக் கதையை பூமாதேவியோடு மட்டுமல்லாமல் ஸ்ரீதேவி யுடனும் சேர்த்து வைக்கிறது! வடக்கே தீபாவளியை விசேஷமாக லக்ஷ்மி பூஜையாகவே செய்து, வியாபாரிகள் புதுக் கணக்கு ஆரம்பிக்கிறார்கள். இதிலேயும் பூமா தேவியின் பெருமை தெரிகிறது. தன்னை எந்தத் தினுஸிலும் பெருமைப்படுத்திக் கொள்ளாமல் சக்களத்தியான ஸ்ரீதேவிக்கும், பரமேச்வரனின் பத்னி ஸ்தானத்தில் நினைக்கப்படும் கங்கா தேவிக்குமே பண்டிகையில் ஸம்பந்தம் இருக்கும்படி செய்திருக்கிறாள்.

கங்காதரன் என்று ஈச்வரனுக்குப் பேர் இருப்பதால் கங்கை என்றவுடன் சிவ ஸம்பந்தமானது என்று தோன்றி னாலும் அதற்கு விஷ்ணு சம்பந்தமும் நிரம்ப உண்டு. வாமன ப்ரம்மசாரி த்ரிவிக்ரமனாக வளர்ந்து லோகம் முழுவதையும் முதல் அடியால் அளந்துவிட்டு, தேவ லோகத்தை இரண்டாம் அடியால் அளந்தபோது ப்ரம்மா ஓடோடி வந்து அந்தப் பாதத்தில் வார்த்த தீர்த்தம்தான் ஆகாச கங்கையாயிற்று. அந்த கங்கையின் ஒரு தாரையையே பகீரதன் தன்னுடைய பித்ருக்களைக் கடைத்தேற்றுவதற்காகப் பூலோக கங்கையாகக் கொண்டு வரத் தபஸ் பண்ணினான். ஆகாச தாரையின் வேகத்தைப் பூமி தாங்க முடியாது என்றே பரம கருணாநிதியான ஈச்வரன் அதைத் தம் ஜடாபாரத்தில் தாங்கி, அடக்கி, பூமி தாங்கும்படியான வேகத்தில் கட்டுப்படுத்தி, விட்டார். ஆகக்கூடி கங்கைக்கு விஷ்ணு, சிவன் இருவர் ஸம்பந்தமும் இருக்கிறது.

Koviloor Digital Library

தன் பிள்ளையின் நினைவுக்காகப் புதிதாக ஒன்றைப் பண்ணி விட்டால் மட்டும் போதாது, அதனால் ஸகல ஜனங்களும் ஸந்தோஷப்பட்டு விட்டாலும் போதாது, அவர்களுக்குப் புண்ணியமும் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்றுதான் தைலத்தில் லக்ஷ்மியின் ஸாந்நித்யமும், வெந்நீரில் கங்கா ஸாந்நித்யமும் இருக்கும்படி பூமாதேவி செய்தாள்.

கீதை : தீபாவளியின் தம்பி

கங்கை சிவ ஸம்பந்தமா, விஷ்ணு ஸம்பந்தமா என்பதை பூமாதேவி நினைக்கவில்லை. சைவ-வைஷ்ணவ வித்யாஸமில்லாமல் ஸமஸ்த ஜனங்களும் புண்ய தீர்த்தங் களுக்குள் அக்ர [முதன்மை] ஸ்தானம் தருவது கங்கைக்குத் தானே? அதனால் தீபாவளி ஸ்நானத்துக்கு கங்கா ஸ்நான பலன் ஏற்படவேண்டும் என்று வரம் பெற்றாள்.

ஸாதாரணமாக எந்த க்ஷேத்திரத்தின் ஸ்தல புராணத்தைப் பார்த்தாலும், 'இது காசிக்கு ஸமமானது; அல்லது காசியையும் விட உசந்தது' என்றே இருக்கும். இப்படி ஒரு க்ஷேத்ரத்தை மற்ற எந்த க்ஷேத்திரத்தோடும் 'கம்பேர்' பண்ணாமல் காசியோடேயே எல்லா க்ஷேத்திரங் களையும் ஒப்பிட்டிருப்பதாலேயே காசிதான் க்ஷேத்ர ராஜா என்று தெரிகிறது. இப்படியே மற்ற புண்ய தீர்த்தங்களைப் பற்றிய புராணங்களிலும் அவற்றை ஒன்றோடொன்று ஒப்பிட்டு உசத்தி சொல்லாமல், அந்தந்த நதியையும் பற்றி "இது கங்கா துல்யமானது" அல்லது "கங்கையை விட விசேஷமானது" என்றுதான் சொல்லியிருக்கும். இதனா லேயே கங்கைதான் தீர்த்தங்களில் தலைசிறந்தது என்று 'ப்ரூவ்' ஆகிறது. நம் ஆசார்யாளே

பகவத்கீதா கிஞ்சித் அதீதா
கங்கா ஜலலவ கணிகா பீதா

Koviloor Digital Library

ஸக்ருதபி ஏன முராரி ஸமர்ச்சா
க்ரியதே தஸ்ய யமேந ந சர்ச்சா"

என்று 'பஜகோவிந்த'த்தில் சொல்கிறார். 'எவன் கொஞ்சமாவது கீதா பாராயணம் பண்ணி, துளியாவது கங்கா தீர்த்தத்தைப் பானம் பண்ணி, ஒரு தடவையாவது முராரிக்கு அர்ச்சனை பண்ணுகிறானோ அவனுக்கு யமனிடம் வியவஹாரம் ஒன்றுமில்லை — அதாவது யமலோகத்துக்கு, நரகத்துக்குப் போகாமல், புண்ய லோகத்துக்கு அவன் போகிறான்' என்று அர்த்தம். "நமனை அஞ்சோம்" என்று அப்பர் ஸ்வாமிகளும், "நலியும் நரகும் நைந்த; நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை" என்று நம்மாழ்வாரும் சொன்ன மாதிரி, கங்கா தீர்த்த பானம் பண்ணினவனிடம் யமனுக்கு 'ஜூரிஸ்டிக்ஷன்' [ஆணையெல்லை] இல்லை என்று பகவத் பாதாள் சொல்கிறார்.

இந்த ச்லோகத்தில் ஒரு ஆச்சரியம், இதில் சொல்லியிருக்கிற கீதை, கங்கை, முராரி, யமன் ஆகிய நாலுக்குமே தீபாவளி ஸம்பந்தம் இருப்பதுதான்!

கீதையை நான் தீபாவளியின் தம்பி என்று சொல்வது வழக்கம். ஏன்? தீபாவளிக்கு நான் என்ன சிறப்புச் சொன்னேன்? சற்றும் எதிர்பாராத ஒரு சூழ்நிலையில், அதாவது மஹத்தான புத்ர சோகத்தின் மத்தியில் இப்படிப் பட்ட கோலாஹலமான பண்டிகையை ஒரு தாயார்க்காரி உண்டாக்கிக் கொடுத்ததால்தான் அது பண்டிகைகளுக்கே ராஜாவாக இருக்கிறது என்றுதானே சொன்னேன்? இதே மாதிரிதான், எத்தனை மதப் புஸ்தகங்கள், தத்வ சாஸ்திரங்கள் இருந்தாலும், அதற்கெல்லாம் சிகரமாக 'கீதை', 'கீதை' என்றே ஆதிகால மதாசாரியர்களிலிருந்து திலக், காந்தி, இப்போதுள்ள பல ஸாதுக்கள், பிலாஸஃபிக்காரர்கள், அரசியல்வாதிகள்வரை எல்லோரும் கொண்டாடுவதைப் பார்க்கிறோம். கீதையும் தீபாவளி மாதிரியேதான்

Koviloor Digital Library

கொஞ்சமும் எதிர்பார்க்க முடியாத சந்தர்ப்பத்தில் பிறந்த தியாக சக்தியிலிருந்து தோன்றியிருக்கிறது. ஸாதாரணமாகத் தத்வோபதேசம் என்றால் விச்ராந்தியான ஆசிரமத்திலே வயஸான குரு, வயஸில் சின்னவனான சிஷ்யனுக்குச் செய்வதாக இருக்கும். ஆனால் இந்த பகவத்கீதையோ நேர்மாறாக யுத்த பூமியில், கோரமான ரணகளத்தில் பிறந்தது. அர்ஜுனன் தனக்கு ஸம வயஸினனான கிருஷ்ணரிடம், தான் யஜமானனாயிருந்து, அவர் வண்டிக் காரனாகத் தேரோட்டுகிறபோது பெற்றுக் கொண்ட உபதேசம். அடுத்த க்ஷணமே தன் தலை போனாலும் போகக் கூடும் என்கிற ஆபத்தான ஸந்தர்ப்பத்தில், பிராணனை விட ஸத்யத்தைத் தெரிந்து கொள்வதுதான் பெரிசு என்ற தியாக புத்தியுடன் அர்ஜுனன் பகவானிடம், **"சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபன்னம்"** – "சிஷ்யனாக நான் உன்னிடம் சரணாகதி பண்ணிவிட்டேன். எனக்கு உபதேச ரூபமாக உத்தரவு போடு" என்று நமஸ்காரம் செய்த போது கீதை பிறந்தது. இதனால்தான் பண்டிகை களில் தீபாவளி மாதிரி புஸ்தகங்களில் கீதை உச்சியாக இருக்கிறது. தீபாவளி, கீதை இரண்டையும் கிருஷ்ணரே தான் கொடுத்திருக்கிறார்.

அடுத்ததாக ஆசார்யாள் சொல்கிற கங்கைக்கும் தீபாவளிக்கும் உள்ள 'கனெக்ஷன்' இத்தனை நாழி பார்த்தோம்.

மூன்றாவதாக முராரியை அர்ச்சிக்க வேண்டும் என்கிறார். பகவானுடைய பெயர்கள் எத்தனையோ இருக்க "முராரி ஸமர்ச்சா" என்றே சொல்கிறார். நரகாஸுரனின் ஸகாவான முரனைக் கொன்றபோதுதான் பகவான் முராரியானார் என்பதைச் சற்றுமுன்தான் பார்த்தோம்.

கடைசியில் ஆசார்யாள் யமனைப் பற்றிச் சொல்கிறார். நரகன் என்றவுடனேயே நரகத்தின் ஞாபகமும்

Koviloor Digital Library

யமதர்மராஜா ஞாபகமும்தான் வருகின்றன. அதுவும் தவிர, தீபாவளியன்று யமனுக்குத் தர்ப்பணம் பண்ண வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. வட தேசத்தில் தீபாவளிக்கு முதல் நாள் 'யம தீபம்' என்றே போடுகிறார்கள்.

ஏன் கங்கா ஸ்நானம்?

இப்படியாக தீபாவளியை நினைத்துக் கொண்டே பகவத்பாதாள் இந்த ச்லோகத்தைப் பண்ணின மாதிரி இருக்கிறது. அது இருக்கட்டும். "கங்கா ஸ்நானம்" என்று ஏன் தீபாவளியன்று வைத்திருக்கிறது என்ற கேள்விக்குப் பதில் சொல்ல வந்தேன்.

'பிள்ளை போன நாளைப் பண்டிகையாக எல்லோரும் எந்தக் காலத்திலும் நின்று போகாமல் செய்து வரவேண்டும்' என்று பூமாதேவி ஆசைப்பட்டாள். பண்டிகை என்பதால் மங்கள ஸ்நானம், புது வஸ்திர தாரணம், பக்ஷண போஜனம் எல்லாவற்றையும் ஏற்படுத்திக் கொடுத்தாள். இதிலே பிள்ளை நினைவு வரும்படி புதிசாக, நூதனமாக ஏதாவது இருக்க வேண்டுமென்று உதயத்துக்கு முந்தியே தைல ஸ்நானம் செய்ய வேண்டும் என்று வரம் வாங்கினாள். பகவானே இதற்கு ஒப்புக் கொண்டும் கூட, இப்படி சாஸ்திர விரோதமாக அப்யங்கனம் பண்ண யாராவது பயப்படப் போகிறார்களே என்று நினைத்து, பயம் போகும்படியாக என்ன செய்யலாம் என்று பார்த்தாள். 'அன்றைக்கு அந்த வேளையில் தேய்த்துக் கொள்கிற எண்ணெய்யில் லக்ஷ்மியும், குளிக்கிற வெந்நீரில் கங்கையும் வஸிக்கும்படி செய்துவிட்டால் யாரும் பயப்பட மாட்டார்கள்; லக்ஷ்மியும் கங்கையும் வேண்டாம் என்று எவருமே நினைக்க மாட்டார்கள். இதனால் ஸகல ஜனங்களுக்கும், பண்டிகை என்ற ஸந்தோஷத்துடன் புண்ணியம் என்பதும் கிடைக்கும்' என்று நினைத்தாள்.

Koviloor Digital Library

இதனால் தான் அந்த ஸ்நானத்துக்கு கங்கா ஸ்நானம் என்றே பேர் ஏற்பட்டது.

இப்படி கங்கா ஸ்நானம் பண்ணியவர்களுக்கு நரக பயமும், அபமிருத்யுவும் [அகால மரணம், கோர மரணம்] ரோகங்களும் ஏற்படாமலிருக்க வேண்டும் என்று கூடுதலாக நம்மெல்லோருக்காகவும் வரம் வாங்கித் தந்தாள். அவள் நரகனுக்கு மட்டுமில்லை, நம் எல்லோருக்குமே தாய் அல்லவா? Mother Earth என்றே இங்கிலீஷில்கூடச் சொல்கிறார்களே! கோமர்தா, பூமாதா, வேதமாதா என்பதாகப் பசு, பூமி, வேதம் மூன்றையும் ஸகலருக்கும் தாயாராகவே சொல்லியிருக்கிறது.

இருந்தாலும், நரகனை நேரே தான் பெற்றதால் அவனிடம் அதிகப் பிரியம் வைத்து இந்த நாளுக்கு 'நரக சதுர்த்தசி' என்றே பேர் ஏற்பட வேண்டும் என்று வரம் வாங்கிக் கொண்டாள். ஆனாலும் இப்போது பஞ்சாங்கத்தில்தான் அந்தப் பேர் போட்டிருக்கிறதே தவிர, நாம் தீபாவளி என்றே சொல்கிறோம். 'தீபாவளி' என்றால் தீப வரிசை. வடக்கேதான் இப்படி விளக்கேற்றி வைத்து நிஜ தீபாவளியாகக் கொண்டாடுகிறார்கள். நாம் கார்த்திகை தீபோத்ஸவம் என்று வைத்துக்கொண்டு விட்டோம்.

இதுவரைக்கும் நான் சொன்னதில் ஸாரமான கதா பாகம் அநேகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இப்போது தெரியாத கதைக்கு — காவேரி ஸ்நானக் கதைக்கு — போகிறேன்.

பகவானுக்கும் தோஷம்

ஸமஸ்த ஜனங்களுக்கும் கங்கா ஸ்நானத்தால் தோஷங்கள் போய், அவர்கள் ஸந்தோஷமாகப் பண்டிகை கொண்டாடும்படி வரம் கொடுத்த கிருஷ்ண

Koviloor Digital Library

பரமாத்மாவோ இப்போது தம்மையே ஒரு தோஷத்துக்கு ஆளாக்கிக்கொண்டார்! தெய்வமேயானாலும் சாஸ்திரம் சொல்கிற விதி நிஷேதங்களின்படி — 'இதைச் செய்' என்பது விதி; 'இதைச் செய்யாதே' என்பது நிஷேதம்; இதுகளின்படி — பலன்களை ஏற்றுக்கொண்டு அநுபவித்துக் காட்டினால்தான் லோகத்தில் தர்மாநுஷ்டானம் நிற்கும் என்பதால் இப்படிப் பண்ணினார். என்ன செய்தா ரென்றால், 'வீர ஹத்தி' என்ற தோஷத்தைத் தாம் ஏற்றுக் கொண்டார். மஹா வீரனாக உள்ள ஒருவனைக் கொன்றால் அதனால் ஏற்படும் தோஷம்தான் 'வீரஹத்தி'. நரகாஸுரன் துஷ்டனானாலும் உண்மையான வீரமுள்ளவனானதால், இப்போது பகவான் வீரஹத்திக்குத் தம்மை ஆளாக்கிக் கொண்டார்.

வீரஹத்தி தோஷம் பிடித்ததால் பகவானுடைய நீலமணி மாதிரியான பிரகாச ஸ்வரூபம் மங்கிப்போயிற்று. கறுத்து, வாடிக் கிடப்பவர்களை "பிரம்மஹத்தி மாதிரி இருக்கு" என்கிறோமல்லவா? பிராம்மணனைக் கொல்வதால் ஏற்படும் தோஷந்தான் பிரம்மஹத்தி. இம்மாதிரிக் கொலை பாதகங்களால் தேஹ காந்தி, தேஜஸ் போய்விடும்.

ராமசந்திர மூர்த்தி ராவணனைக் கொன்றதால் அவருக்கு வீரஹத்தி மட்டுமில்லாமல் ப்ரம்மஹத்தி, சாயாஹத்தி என்று மொத்தம் மூன்று தோஷங்கள் ஸம்பவித்தன. ராவணன் ப்ராம்மணன். விச்ரவஸ் என்ற ரிஷியின் பிள்ளை அவன். நன்றாக வேத அத்யயனம் பண்ணியிருந்த அவன், கைலாஸத்துக்கு அடியில் மாட்டிக் கொண்டபோது ஸாம கானத்தோடு வீணா கானம் செய்தே ஈச்வரனை ப்ரீதி பண்ணி மீண்டு வந்தான். அதனால் அவனைக் கொன்றதில் ராமருக்கு ப்ரம்மஹத்தியும் ஏற்பட்டது. 'சாயா' என்றால் பிரகாசம், ஒளி என்று அர்த்தம்; figurative ஆக [உருவகமாக] 'சாயா' என்பது

Koviloor Digital Library

கீர்த்திக்குரிய எந்தக் குணத்தையும் குறிக்கும். இங்கிலீஷில் கூட lustre–illustrious, glow–glory என்கிற போது பிரகாசம் என்பதே கீர்த்திக்குரிய தன்மைகளையும் குறிக்கிறதைப் பார்க்கிறோம். ராவணனுக்கு ரூப காம்பீர்யம், வேத சாஸ்திரப் படிப்பு, ஸங்கீத ஞானம், சிவ பக்தி என்றிப்படி அநேக 'சாயா'க்களிருந்ததால் அவனை வதைத்ததில் ராமருக்கு சாயா ஹத்தி தோஷம் உண்டாயிற்று. இந்த மூன்றில் பிரம்மஹத்தி போக அவர் ராமேச்வரத்திலும், வீர ஹத்தியிலிருந்து விமோசனம் பெற வேதாரண்யத்திலும், சாயாஹத்தி விலகுவதற்காகக் கும்பகோணத்துக்குப் பக்கத்திலுள்ள பட்டீச்வரத்திலும் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தார். ராமேச்வர விஷயம் மட்டும் இப்போது எல்லோருக்கும் தெரிகிறது. ஆனால் இதே மாதிரி மற்ற இரண்டு ஊர் கோவில்களிலும் கூட 'ராமலிங்கம்' என்றே இப்போதும் இருக்கிறது.

ஈசன் சொன்ன பிராயச்சித்தம்

பூர்வாவதாரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தது போலவே, இப்போதும் கிருஷ்ண பரமாத்மா வீரஹத்தி போக என்ன வழி என்று பரமசிவனிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள நினைத்தார்; கைலாஸத்துக்குப் போனார்.

சைவ-வைஷ்ணவர்களாகிய நம்மில் சில பேருக்குத் தான் சிவன், விஷ்ணு என்ற இரண்டு பேரில் யார் யாரை விடப் பெரியவர் என்று கட்சி கட்டத் தோன்றுகிறது. அவர்கள் இரண்டு பேருக்குமோ, 'தாங்கள் இரண்டு பேருமே ஸாரத்தில் ஒன்றுதான். லீலைக்காகவும், லோகாநுக்ரஹத்துக்காகவும், நிர்வாஹம் – ஸம்ஹாரம் என்று தொழில் பிரிவினை பண்ணிக் கொண்டதற்காகவும்

Koviloor Digital Library

தான் வேறு வேறு மாதிரி வேஷம் போடுகிறோம்' என்று தெரியும். அதனால் அவரும் இவர் காலில் விழுவார்; இவரும் அவர் காலில் விழுவார். அடித்துக் கொண்டு சண்டையும் போட்டுக்கொள்ளுவார்கள்; அதில் ஒரு ஸமயம் ஒருவர் தோற்பார்; இன்னொரு சமயம் மற்றவர் தோற்பார். அப்படியே அன்பிலே நெருக்கமாகித் தாங்கள் இரண்டு பேருமே ஒரே தேஹத்தில் பாதிப்பாதியாகச் சேர்ந்தும் இருப்பார்கள்.

இப்போது க்ருஷ்ண பரமாத்மா கைலாஸத்துக்குப் போய் ஈச்வரனிடம், "என்னுடைய வீரஹத்தி தோஷம் விலகுவதற்கு ஒரு பிராயச்சித்தம் சொல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

ப்ராயச்சித்தான்–யசேஷாணி தப: கர்மாத்மகாநி வை
யாநி தேஷாம் அசேஷாணாம் க்ருஷ்ணாநுஸ்மரணம் பரம்.

அதாவது, "ப்ராயச்சித்தங்களாக அநேக வித தபஸ்கள், கர்மாநுஷ்டானங்கள் என்று எத்தனையோ இருக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் மேலான ஸர்வப் பிராயச்சித்தம் என்னவென்றால் க்ருஷ்ண ஸ்மரணந்தான்" என்று சொல்லியிருக்கிறது.

அப்படிப்பட்ட பதிதபாவனர் தமக்கு தோஷம் வந்ததாகவும் பிராயச்சித்தம் சொல்ல வேண்டுமென்றும் கேட்ட போது, சிவனும் லோகத்தின் படிப்பினைக்காவே அவர் இப்படிக் கேட்கிறார் என்று புரிந்து கொண்டு, என்ன தோஷபரிஹாரம் சொல்லலாம் என்று யோசித்தார். 'நீ தோஷரஹிதன்' என்று சொன்னால் அவர் ஒப்புக்கொள்ள மாட்டார். எல்லா தோஷமும் போகத்தான் கங்கா ஸ்நானம் இருக்கிறதே, அதைச் சொல்லலாமா என்றால், அது ஸகல தோஷ நிவாரணம் என்பதாலேயே குறிப்பாக ஒரு பெரிய தோஷம் ஸம்பவித்திருக்கிறபோது அதற்குப்

Koviloor Digital Library

போதுமா என்று தோன்ற ஆரம்பித்துவிடும். நமக்கு ஃபாமிலி டாக்டர் என்னதான் பெரிய ஜெனரல் ஃபிஸீஷியன் ஆனாலும், ஹார்ட், லங்க்ஸ் என்று ஏதாவதொன்றுக்கு ஒரு பெரிய கோளாறு வந்தால், அதற்கென்றே வேறே ஒரு ஸ்பெஷலிஸ்டிடம் போனால் தான் தேவலை என்று தோன்றும். ஃபாமிலி டாக்டரும் அப்படித்தான் அனுப்பி வைப்பார். தெய்வ விஷயமாகவே எடுத்துக் கொண்டாலும் சிவனோ, அம்பாளோ, மஹாவிஷ்ணுவோ எவர் ஒருத்தருமே பரப்ரம்ம ஸ்வரூபமானதால் ஸகல அநுக்ரஹமும் பண்ண முடியும் என்றாலும், விக்னம் விலகணுமானால் பிள்ளையாரைப் பூஜிக்கவேண்டும், படிப்பு வேண்டுமானால் ஸரஸ்வதியைப் பூஜை பண்ண வேண்டும், ஆரோக்யம் வேண்டுமானால் ஸூர்ய நமஸ்காரம் பண்ண வேண்டும் என்றுதானே தோன்றுகிறது? அதே மாதிரி இப்போது 'க்ருஷ்ணருக்கு கங்கா ஸ்நானத்தைச் சொன்னால் போதாது. ஸ்பெஷலாக ஒன்று சொல்லியாக வேண்டும். கங்கா ஸ்நானம் பாப நிவாரணம் என்று பச்சைக் குழந்தைக்குக்கூடத் தெரியும். அதைப் போய் கிருஷ்ணரிடம் சொன்னால் அவரை முட்டாளாக்கினதாக ஆகும். கங்கையாலும் போக்க முடியாத தோஷத்தைத் தாம் பண்ணி விட்டதாகவும் அதற்கு அதை விட சக்தி வாய்ந்த ப்ராயச்சித்தம் சொல்ல வேண்டுமென்றும் அவர் கேட்பார்.'

இப்படி யோஜனை பண்ணி ஈச்வரன், "இது துலா மாஸம். (அதாவது நம் ஐப்பசி)*. இந்த மாஸம் பூராவும் பிரதி தினமும் அருணோதயத்திலிருந்து உதயாதி ஆறு நாழிகை (2 மணி 24 நிமிஷம்) வரை அறுபத்தாறு கோடி

---

* ஆச்வினம் என்று முன்பு சொன்ன மாதம் சாந்திரமானம் எனும் பஞ்சாங்கப்படியானதாகும். அதில் பின் பகுதியோடு அதற்கடுத்த கார்த்திகத்தின் முன் பகுதியும் சேர்ந்ததே ஸௌரமானப் பஞ்சாங்கப்படி துலாமாதம். தீபாவளி அதில் நிகழ்வது.

Koviloor Digital Library

புண்ய தீர்த்தங்களும் காவேரியில் வாஸம் செய்கின்றன. அதிலே ஸ்நானம் பண்ணினால் வீர ஹத்தி தோஷம் போயே போய்விடும்” என்று சொன்னார்.

காவேரி துலா கட்டம்

காவேரி முழுவதிலும் இப்படி துலா மாஸத்தில் ஸகல தீர்த்த ஸாந்நித்யம் இருப்பதாகச் சொன்னாலும், இப்படிச் சொல்வதும் ஜெனரலாக இருப்பதால், இதிலும் ஸ்பெஷலாக ஒன்று வேண்டும் போலிருக்குமே, அதனால்– மாயவரத்தில் [மயிலாடுதுறையில்] மட்டும் துலா ஸ்நானம் அதி விசேஷமாகச் சொல்லப்படுகிறது. மாயூரம் என்பது அதன் சரியான பெயர். மயில் என்று அர்த்தம். மயிலாப்பூரில் எப்படி கல்பகாம்பாள் மயிலாகிப் பரமேச்வரனைப் பூஜித்தவளோ அப்படியே அபயாம்பாள் மயிலாக ஈச்வராராதனை செய்ததால் மாயூரம், கௌரீ மாயூரம் என்று அந்த க்ஷேத்திரத்துக்குப் பேர் ஏற்பட்டது.

அங்கே காவேரிப் படித்துறை ஒன்றை ‘லாகடம்’ என்பார்கள். ‘துலா கட்டம்’ என்பதுதான் இப்படி முதலெழுத்தை உதிர்த்து லாகடமாகியிருக்கிறது! ஜனங்களில் பல பேர் சில வார்த்தைகளின் முதல் எழுத்தையோ, உள்ளே வருகிற எழுத்தையோ ‘சாப்பிட்டு’ விடுவார்கள்! ‘ தொள்ளாயிரம்’ என்பதை ‘த்ளாயிரம்’ என்பார்கள். ‘மாயவரம்’ என்பதை ‘மாயரம்’ என்றுதான் சொல்வார்கள். ‘வியாபாரம்’ என்பதை ‘யாபாரம்’ என்பார்கள். தொள்ளாயிரம் த்ளாயிரம் ஆகிற மாதிரி, ‘துலா’ கட்டம் ‘த்லா’ கட்டமாகி, லாகட்டமாகி, ‘மூட்டை’யில் ‘ட்’ போய் ‘மூடை’ என்கிறது போல ‘லாகட’மாகியிருக்கிறது!

இந்தத் துலா கட்டத்தில் ஐப்பசி மாஸம் பூராவும் ஸ்நான விசேஷத்துக்காக ஜனங்கள் சேருவார்கள்.

Koviloor Digital Library

அங்கேதான் கிருஷ்ணரை வீரஹத்தி நிவ்ருத்திக்காக ஈச்வரன் ஸ்நானம் பண்ணச் சொன்னார். சொன்னதோடில்லாமல் தாமும் கூட வந்தார்.

யமுனாதீர விஹாரி தீபாவளியன்று நம் எல்லோருக்கும் கங்கா ஸ்நானம் கிடைக்கும்படியாக அநுக்ரஹம் செய்துவிட்டுத் தாம் காவேரிக்கு வந்து துலா ஸ்நானம் பண்ணினார்.

உடனே அவருக்கு வீரஹத்தி தோஷம் போய்விட்டது. அதற்கு visible proof-ஆக [பிரத்யக்ஷ நிரூபணமாக] ஹத்தி தோஷத்தால் மங்கியிருந்த அவருடைய தேஹ காந்தி இப்போது முன் மாதிரியே பளீரென்று ஜ்வலிக்கிற நல்ல நீலமாக மாறிற்று.

ஸகல தேவதைகளும் இந்த ஆச்சரியத்தைப் பார்த்து, ஈச்வரன், பெருமாள் இரண்டு பேரையும் ஒன்றாகத் தரிசிக்கிற பாக்யத்தைப் பெற்று, தாங்களும் காவேரி ஸ்நானம் செய்தார்கள்.

பூமாதேவி இந்த ஸந்தர்ப்பத்தில்தான் நரகாஸுரன் ஞாபகமாக கங்கா ஸ்நானம் முதலான வரங்களைக் கேட்டதாகக் காவேரி புராணத்தில் இருக்கிறது.

தீபாவளியில் காவேரி ஸ்நானம்

ஆகையால் தீபாவளிக்கு கங்கையோடு காவேரி ஸம்பந்தமும் இருக்கிறது. அன்றைக்கு ஒரு நாள் மட்டும் எல்லா வெந்நீரிலும் அருணோதயத்திலிருந்து ஸூர்யோதயம் வரை ஒரு முஹூர்த்தம் – அதாவது இரண்டு நாழிகை – கங்கை இருக்கிறாளென்றால், துலா மாஸம் முழுக்கவே அருணோதயத்தில் ஆரம்பித்து ப்ராதக்காலம் முடிகிறவரை, அதாவது ஸூர்யன் உதித்து

Koviloor Digital Library

ஆறு நாழிகை வரை காவேரியில் கங்கை உள்பட ஸகல தீர்த்தங்களும் இருக்கின்றன.

அதனால் தீபாவளியன்று முதலில் நாம் அருணோதயத்தில் எண்ணெய் தேய்த்துக் கொண்டு கங்கா ஸ்மரணத்தோடு வெந்நீர் ஸ்நானம் பண்ண வேண்டும். அப்புறம் ஸூர்யோதயமான பின், ஆனால் ஆறு நாழிகைக்குள், பச்சை ஜலத்தில் இன்னொரு ஸ்நானம் செய்ய வேண்டும். இந்த ஸ்நானத்தின்போது துலா காவேரியை ஸ்மரித்துக்கொண்டு பண்ணவேண்டும். முதல் ஸ்நானத்தில் நரகாஸுரன், பூமாதேவி, ஸத்யபாமா, கிருஷ்ணர் எல்லார் நினைவும் வரும். இரண்டாம் ஸ்நானத்தில் பரமேச்வரன் நினைவும் வந்துவிடும்.

இந்தப் புண்ய ஸ்மரணம்தான் பெரிய ஸ்நானம். உள் அழுக்கையெல்லாம் அகற்றி ஜீவனைக் குளிப்பாட்டிப் பரிசுத்தி பண்ணுவது அதுதான். **"கோவிந்தேதி ஸதா ஸ்நானம்"** என்பதுண்டு. இப்படிச் சொன்னதால் வெளியே இருக்கிற கங்கா, காவேரியெல்லாம் அவசியமில்லை, பிரயோஜனமில்லை என்று அர்த்தம் பண்ணிக்கொண்டு விடக் கூடாது. அந்த கோவிந்தனேதான் நம்மிடம் கருணையோடு நமக்கு கங்கா ஸ்நானத்தைக் கொடுத்து, தானே காவேரி ஸ்நானம் பண்ணிக் காட்டியிருக்கிறான். அவனுடைய ஸ்மரணத்தோடு இப்படி ஸ்நானம் பண்ணினால் அது உள்ளத்துக்கு ஸ்நானம் என்பது மட்டுமில்லை. உள்ளத்துக்குப் புது வஸ்திர அலங்காரம், மதுரமான பக்ஷணம் எல்லாமும் அதுவேதான்!

Koviloor Digital Library

ஸதாசிவம்

ஆதி குரு

ஸதாசிவ ஸமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம் |
அஸ்மத் ஆசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ||

– இது ஆதியிலிருந்து இன்று வரை வந்திருக்கிற குரு பரம்பரைக்கு நமஸ்காரம் தெரிவிக்கிற ச்லோகம். ஸ்ரீ சங்கரபகவத் பாதாளின் வழியை அநுஸரிக்கிற எல்லோரும் சொல்கிற — இதுவரை சொல்லாவிட்டாலும் இனிமேலாவது ப்ரதி தினமும் இரண்டு வேளையும் சொல்ல வேண்டிய — ச்லோகம். 'இன்றுவரை வந்திருக்கிற குரு' என்றால் இன்றைக்கான, அதாவது இந்த நூற்றாண்டில் இப்போது இருக்கிற, குரு என்று அர்த்தமில்லை. என்றென்றைக்கும் இந்த குரு பரம்பரையில் குருமார்கள் தொடர்ந்து வருவார்களாதலால் அன்றன்றைக்கும் அவர்களுக்கு சிஷ்யர்களாக இருக்கப் போகிறவர்கள் அவ்வப்போது நேரிலே ஸாக்ஷாத்தாகப் பார்த்து, பேசப் போகிற அந்த எதிர்கால குருவை 'இன்று வரை வந்திருக்கிற குரு' என்று சொல்லி நமஸ்கரிப்பதற்கான ச்லோகம் இது என்று புரிந்து கொள்ள வேண்டும். மூலத்தில் 'இன்றுவரை' என்று அர்த்தம் கொடுக்கிற வார்த்தை எதுவுமில்லை. 'அஸ்மத் ஆசார்ய' என்றே இருக்கிறது. அப்படியென்றால் 'நம்முடைய ஆசாரியர்' என்றுதான் அர்த்தம். ஸந்தர்பத்தைப் பொறுத்து அதை 'நம் காலத்தில் இப்போது நமக்கு உபதேசம் தந்துகொண்டு ஜீவ்யவந்தராக இருக்கிற ஆசார்யர்' என்று அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

ஆதி-மத்ய-அந்தம் என்பார்கள். தமிழில் முதல்-நடுவு-முடிவு. ஆனால் குருபரம்பரைக்கு முடிவு கிடையாது. அது அமரமானது. அதனால் இங்கே 'முதல்-நடுவு-இன்றைய காலமும், இனிமேல் எதிர்காலத்தில் ஒவ்வொரு தலைமுறைக் காலமும்' என்று வைத்துக் கொள்ள வேண்டும்.

அந்த முதல்குரு, ஆதிகுரு யார்? 'ஸதாசிவன்' என்று ச்லோகம் சொல்கிறது. நடுகுரு? அவர் பெயரில் வந்திருக்கிற ஸம்ப்ரதாயஸ்தர்கள்தான் இந்த ச்லோகத்தைச் சொல்லுகிறவர்கள், சொல்ல வேண்டியவர்கள் என்பதால் அவர்தான் இந்த குரு பரம்பரைக்கே நடு நாயகம் என்ற சிறப்பு ஸ்தானம் பெற்றவர் என்று தெரிகிறது. 'ஆசார்யாள்' என்ற மாத்திரத்தில் நினைக்கப்படுகிற சங்கர பகவத் பாதாசார்யாள்தான் அவர்.

அவர் யாரென்றால் ஆதிகுருவான ஸதாசிவனின் அவதாரமேதான்.

ஸாதாரணமாகச் சொல்லும்போது ஆசார்ய சிஷ்யர்களான நமக்கெல்லாம் — அதாவது ஸ்மார்த்தர்கள், அத்வைதிகள் என்று சொல்லப்படுகிறவர்களுக் கெல்லாம் — ஆதிகுரு தக்ஷிணாமூர்த்தி என்றே கேட்டிருக் கிறோம். பேசாமல், அசையாமல், எந்தக் கார்யமும் பண்ணாமல் உட்கார்ந்து கொண்டிருந்த அவரேதான் லோக ஜனங்களிடம் பரம கருணையினால் பரம தத்வத்தை விளக்கி விளக்கி நிறையப் பேசி உபதேசித்து, ஊர் ஊராகப் போய்ப் பிரசாரம் பண்ணி, மடங்கள் ஸ்தாபிப்பது முதலான அநேக கார்யங்களை ஸாதித்து ஸநாதன தர்மத்தை நன்றாக ஸ்திரப்படுத்தித் தருவதற்காக ஆசார்யாளாக அவதரித்தார் என்று கேட்டிருக்கிறோம்.

இங்கே, ச்லோகத்தில், தக்ஷிணாமூர்த்தி என்ற பேரைச் சொல்லியிருக்கவில்லை. ஸதாசிவன் என்றே

Koviloor Digital Library

இருக்கிறது. 'ஸதாசிவ ஸமாரம்பாம்' — 'ஸதாசிவனில் அழகாக ஆரம்பித்து' — என்றே ச்லோகம் ஆரம்பிக்கிறது.

ஏனென்றால், தக்ஷிணாமூர்த்தி என்றால் அவர் மட்டும் யார்? சிவன்தானே? சிவனுக்கு அநேக ரூபங்கள்...... நரஸிம்ஹ மூர்த்தி என்கிறோம். ராமசந்திரமூர்த்தி என்கிறோம், க்ருஷ்ணர், ஹயக்ரீவர் — இப்படிப் பல பேர் சொல்கிறோம். அவர்கள் எல்லாரும் மஹாவிஷ்ணுவின் ரூப பேதங்கள்தானே? அப்படியே தக்ஷிணாமூர்த்தி, நடராஜா, பிக்ஷாடனர், பைரவர் என்றெல்லாம் சொல்கிற பல ஸ்வாமிகளும் சிவனுடைய பலவிதமான ரூபங்கள் தான்.

அஷ்ட நாமங்கள்; மஹாதேவன்

'மஹாவிஷ்ணு' மாதிரி 'மஹாசிவன்' என்பதில்லை. 'மஹாசிவராத்ரி' என்பதில் முழு வார்த்தைக்குமே 'மஹா' என்பது அடைமொழி; 'சிவ' என்பதற்கு மட்டும் இல்லை. ப்ரதி மாஸமும் வருகிற தேய்பிறைச் சதுர்தசி இரவுக்கு 'சிவராத்ரி' என்று பெயர். 'மாஸ சிவராத்ரி' என்று சொல்வது, இப்படி வரும் பன்னிரண்டு சிவராத்ரிகளில் எது மஹிமை மிக்கதாக இருக்கிறதோ அந்த மாசி மாஸ சிவராத்ரிக்கு அதன் மஹிமையைக் காட்டி 'மஹா சிவராத்ரி' என்று பெயர் கொடுத்திருக்கிறது.

அப்படியானால் சிவனுக்கு மஹிமை கிடையாதோ, அவன் 'மஹா' பட்டத்துக்கு யோக்யன் [தகுதி பெற்றவன்] இல்லையோ என்று நினைத்துவிடக் கூடாது. 'மஹாசிவன்' என்று பேர் இல்லாவிட்டாலும் 'மஹான்' என்றே அவனுக்குத்தான் நாமா சொல்லியிருக்கிறது.

சிவ நாமாக்களில் ரொம்ப உசந்ததாக எட்டு உண்டு. அதிலே முடிவான நாமா 'மஹான்'தான். பவன், சர்வன், ஈசானன், பசுபதி, ருத்ரன், உக்ரன், பீமன், மஹான் என்று

Koviloor Digital Library

இப்படி அஷ்ட நாமா. ஸஹஸ்ரநாமம், த்ரிசதி, அஷ்டோத்தர [சத] அர்ச்சனை எல்லாம் பண்ணி முடித்து முடிவிலே இந்த எட்டுப் பெயர்களை 'பவாய தேவாய நம:', 'சர்வாய தேவாய நம:', 'ஈசானாய தேவாய நம:', 'பசுபதயே தேவாய நம:', 'ருத்ராய தேவாய நம:', 'உக்ராய தேவாய நம:', 'பீமாய தேவாய நம:', 'மஹதே தேவாய நம:', என்று இந்த ஆர்டரில் சொல்லி அர்ச்சித்து விட்டு, அப்புறமே தூப-தீப-நைவேத்யம் என்று போகிறதுதான் தொன்று தொட்டு வந்துள்ள பூஜாவிதி. முதல் வேற்றுமையில் 'மஹான்' என்பதாக இருக்கிற பெயர், நாலாம் வேற்றுமையில் 'மஹானுக்கு நமஸ்காரம்' என்று வரும்போது 'மஹதே நம:' என்று வருகிறது.

'மஹதே **தேவாய** நம:' என்று 'தேவ'சப்தம் சேர்த்துக் கொள்ள வேண்டும். எட்டுப் பேர்களில் ஒவ்வொன்றுக்கும் 'பவாய **தேவாய**', 'சர்வாய **தேவாய**' என்று தேவ சப்தம் சேர்த்துச் சொல்லிக் கொண்டே போய், கடைசியில் 'மஹதே தேவாய' என்று பூர்த்தி பண்ண வேண்டும்.

அந்த விசேஷத்தால்தான் 'மஹாதேவன்' என்றே சிவனுக்குப் பிரஸித்தமாக நாமா இருக்கிறது.

இந்த அஷ்ட நாமாக்களில் ஒரு விசேஷம்; வேடிக்கை. அம்பாளுக்கு லகுவாக [எளிதாக] அர்ச்சனை பண்ண வேண்டுமா? அதற்கும் இந்த நாமாக்களில் ஒவ்வொன்றை யும் சொல்லி, அந்த பெயர்க்காரருடைய பத்தினிக்கு நமஸ்காரம் என்று அர்ச்சித்து விட்டால் போதும்: 'பவஸ்ய தேவஸ்ய பத்ன்யை நம:', 'சர்வஸ்ய தேவஸ்ய பத்ன்யை நம:' என்று இப்படி சொல்லிக் கொண்டே போய், 'மஹதோ தேவஸ்ய பத்ன்யை நம:' என்று முடித்துவிட வேண்டும். 'மஹான்' என்ற முதல் வேற்றுமைப் பேர் 'மஹானுடைய பத்னி' என்று ஆறாம் வேற்றுமையில் வரும் போது 'மஹத:' என்று ஆகும். சேர்த்துச் சொல்கிறபோது 'மஹத:' என்பது

Koviloor Digital Library

'மஹதோ' என்றாகும். இப்படியே ஸுப்ரம்மண்யர்–விக்நேச்வரர்களுக்கும் இந்த அஷ்ட நாமாக்காரரின் பிள்ளை என்று சொல்லியே ஸம்க்ஷிப்தமாக [சுருக்கமாக] அர்ச்சனை பண்ணி விடலாம்: பவஸ்ய தேவஸ்ய புத்ராய நம:' என்று ஆரம்பித்து, 'மஹதோ தேவஸ்ய புத்ராய நம:' என்று முடிப்பது. 'புத்ராய' என்பதற்குப் பதில் 'ஸூநவே' என்றும் சொல்வதுண்டு. ஸூநு என்றாலும் புத்திரன்தான்.

வேடிக்கை என்று எதைச் சொன்னேன் என்றால், வள்ளி இருக்கிறாள், தேவஸேனை இருக்கிறாள். விக்நேச்வர பத்னிகளாக ஸித்தி–புத்திகள் இருக்கிறார்கள். வல்லபை என்று வேறு ஒருத்தி இருக்கிறாள். இவர்களுக்கும் அர்ச்சனை பண்ணணும் என்று ஆசை இருந்தால், அவர்களுக்கு வேறே பெயர் எதுவும் தெரியவில்லையே! லக்ஷக் கணக்கான மேஜர், மைனர் புராண க்ரந்தங்களைக் கிளறினால் அவர்களுக்கும் அஷ்டோத்தரம் அகப்படலாம். ஆனால் அதற்கெல்லாம் நமக்கு எங்கே பொழுது இருக்கிறது? இங்கேதான் அஷ்டோத்தர சதத்துக்குப் பதில் இந்த அஷ்ட நாமாக்களே—அஷ்டோத்தம [அஷ்ட உத்தம] — நாமாக்களே கைகொடுக்கின்றன! 'பவ தேவனுடைய பிள்ளையின் பத்னிக்கு நமஸ்காரம்', 'சர்வ தேவனுடைய பிள்ளையின் பத்னிக்கு நமஸ்காரம்' என்று அர்த்தம் கொடுக்கும்படியான 'பவஸ்ய தேவஸ்ய புத்ரஸ்ய பத்ன்யை நம:', என்று ஆரம்பித்து 'மஹதோ தேவஸ்ய புத்ரஸ்ய பத்ன்யை நம:!' என்று முடித்து நம்முடைய ஆசையைப் பூர்த்தி பண்ணிக் கொண்டு விடலாம்...

மஹாலிங்கம்; மஹேச்வரன்

ஆகக் கூடி சிவன் மஹாதேவனாகப் பூர்த்தி ஸ்தானத்தில் வருகிறான்.

Koviloor Digital Library

மஹாதேவன் என்கிற மாதிரியே மஹாலிங்கம் என்றும், மஹேச்வரன் என்றும் அவனைச் சொல்கிறோம். ஆனாலும் விஷ்ணு-மஹாவிஷ்ணு மாதிரி சிவன்-மஹாசிவன் இல்லை. ஏன் இப்படி?

தேவர்களிலெல்லாம் பெரியவனாதலால் மஹா தேவன். பெருமை, மஹிமை வாய்ந்த லிங்க ரூபமானதால் மஹாலிங்கம். லிங்கம் என்றால் அடையாளம், அறிகுறி என்று அர்த்தம். பரப்ரம்மத்துக்கு இருக்கப்பட்ட அடையாளங்கள்தான் அத்தனை தேவதா ரூபங்களுமே. அவற்றுக்குள்ளே முதல் ஸ்தானத்திலிருக்கிற மஹிமை 'லிங்கம்' என்றே சொல்லப்படுகிற மூர்த்திக்குத்தான்! எப்படி?

'மூர்த்தி' என்றேன். ஆனால் கண், மூக்கு, காது, சரீரம் என்றுள்ள மூர்த்தியாகவா இருக்கிறது, நாம் பார்க்கிற சிவலிங்கம்? அப்படிப் பார்த்தால் அமூர்த்திதான், அரூபந்தான்! ஆனாலும்! வெறும் வெட்டவெளியா, empty space-ஆ? அப்படியும் இல்லை. Cosmos என்கிற பிரபஞ்சம் மாதிரியே oval ஆக [நீள்வட்டமாக] ஸகல ஸ்ருஷ்டிக்கும் அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிற ஒரு பிம்பமாகவும் அது இருக்கிறது. விஷயஜ்ஞர்கள் ஸகுணம்-நிர்குணம் இரண்டும் சேர்ந்தது, ஸகளம்-நிஷ்களம் இரண்டும் சேர்ந்தது என்று அதற்குப் பெரிய மஹிமை சொல்வார்கள். அருவுருவம் என்று தமிழில் சொல்வது. இப்படி அருவ-உருவங்களாக ஒருத்தனே ஒருசேர இருப்பதில் அத்வைத-த்வைத தத்வங்கள் அத்தனையும் அடக்கம். அதாவது ஸகல தத்வமும், தத்வாதீதமும், [தத்வத்திற்கு அப்பாற்பட்டது] எல்லாமுமே அடக்கம். அதனால்தான் மஹத்தான அடாயாளம், மஹிமை வாய்ந்த அறிகுறி என்று போற்றி 'மஹாலிங்கம்' என்பது.

மஹேச்வரன் என்று ஏன் சொல்வது என்றால்; ஈச்வரன் என்ற பதத்துக்கு ஆட்சி செலுத்தும் சக்திமானான

Koviloor Digital Library

தலைவன் என்று அர்த்தம். 'ஈச்' என்ற தாதுவுக்கு ரூல் பண்ணுவது, உடைமை படைத்திருப்பது என்று அர்த்தம். இந்த ப்ரபஞ்சம் முழுதையும் தன் உடைமையாகக் கொண்டு அதன்மீது ஆதிக்க சக்தி காட்டி ஆள்கிற மஹத்தான கார்யத்தைப் பண்ணுகிறவனே ஈச்வரன். மஹத்தான கார்யம் பண்ணுவதால் மஹேச்வரன்.

ஐந்தொழில்

பஞ்ச க்ருத்யம்—தமிழில் 'ஐந்தொழில்'—என்று சொல்லுவார்கள். எல்லாருக்கும் தெரிந்த ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற முத்தொழில்; ப்ரம்ம ஸ்வரூபத்தை மாயையால் மறைத்து இந்த முத்தொழிலுக்கும் இடம் உண்டாக்குவதான 'திரோதானம்' என்று நாலாவது தொழில். 'திரோதானம்' என்றால் மறைப்பது. ப்ரம்ம ஸ்வரூபத்தை, அதாவது, நம்முடைய நிஜ ஸ்வரூபமேயான ஆத்ம ஸ்வரூபத்தை மறைத்து, ஜீவ-ஜகத்துக்களை உண்டாக்கி ஸ்ருஷ்டி-ஸ்திதி-லயத்துக்கு இடம் கொடுக்கிற ஜகத் வியாபாரமான மஹாகார்யத்தைச் செய்யும் மஹா மாயையே திரோதானம். ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் செய்யும் அதிகாரி தேவதைகளாக ப்ரம்ம, விஷ்ணு, ருத்ரர்கள் இருக்கிறதுபோல திரோதானத்துக்கு இருக்கும் அதிகாரிக்கே சைவ-சாக்த ஆகமங்களில் ஈச்வரன் என்று பெயர். மஹாமாயை என்றே சொல்லும்படியாக அகிலாண்டங்களையும் மாயையிலே கட்டிப் போட்டு ஆள்கிறதால் அந்த ஈச்வரனுக்கு 'மஹா' பட்டம் கொடுத்து மஹேச்வரன் என்பார்கள்.

சிவ ஸம்பந்தமில்லாத ப்ரம்ம-விஷ்ணுக்களுக்கு ஐந்தில் இரண்டு தொழில்கள். பாக்கி மூன்றும் சிவனில் ஆவிர்பவித்த மூன்று பேர்களின் வசத்தில் இருக்கிறது. ஸம்ஹாரத் தொழில் ருத்ரன் என்ற சைவ மூர்த்தியின் வசம். திரோதானத் தொழில் ஈச்வரன் என்ற சைவ மூர்த்தி வசம்.

Koviloor Digital Library

இன்னும் ஒன்று மிஞ்சுகிறது. ஐந்தாவதான அந்தத் தொழில்தான் உச்சமானது. அது என்ன என்றால் 'அநுக்ரஹம்' என்பது. தமிழிலே சொல்லும்போது. ஆக்கல்-காத்தல்-அழித்தல்-மறைத்தல்-அருளல் என்று முடிக்கிற அருளல்தான் அநுக்ரஹம்.

இரண்டு தினுஸான அநுக்ரஹம். அடிமட்டத்திலே, இந்த மாயா லோகத்திலே ஒரு ஜீவனைப் பிணைத்து வைத்திருக்கும்போது செய்வது ஒரு அநுக்ரஹம். அது என்ன என்றால் லோக வாழ்க்கை நடத்த அநுகூலமாக ஒரு உடம்பு, இந்திரியங்கள், லோகம் என்கிற அநுபோக ஸ்தானம், அதிலே பெறுகிற போகங்கள் என்ற நாலை அநுக்ரஹித்திருப்பதுதான். இந்த நாலை முறையே தநு-கரணம்-புவனம்-போகம் என்று சொல்வது. 'மாயா ப்ரபஞ்ச வாழ்க்கைக்கான நாலைத் தருவதா ஒரு அநுக்ரஹம்?' என்று கேட்பீர்களானால் என்ன பதில் சொல்வார்கள் என்றால்: 'கர்மா என்று ஒன்று எப்படியோ ஜீவனுக்கு ஸம்பவித்து விட்டது. அதற்கப்புறம் அதைக் கழித்தாகணுமே! இதை எப்படி ஸாதிப்பது! இந்த லோகத்திலேயே ஸத்கர்மா, ஸாதனை பண்ணித்தானே கழிக்க வேண்டும்? மாயா ப்ரபஞ்சத்திலிருந்து விடுபடுவதற்கும் ஸாதனை பண்ணுவதற்காக உடம்பு, இந்திரியம், ஜகத் என்ற ஒரு வாழுமிடம், ஸாதனை செய்வதற்காகவே உயிர் வாழும் பொருட்டு அவசியமான போகங்கள் ஆகியவை இருந்தால்தானே முடியும்? பிரக்ருத ஜீவிதத்திலே [நிகழ் பிறவியிலே] ஒரு ஜீவன் தன்னுடைய பூர்வகர்மாவைத் தீர்த்துக் கொள்வதற்காகத்தான் இந்த நாலைப் பரமாத்மா கொடுத்திருக்கிறானென்று புரிந்து கொள்ளு. புரிந்து கொண்டு இந்த நாலையே கர்ம நாசத்துக்கு உபாயமாக்கிக் கொண்டாயானால் இதுகளும் அநுக்ரஹத்தைச் சேர்ந்தவைதான் என்று தெரிந்து கொள்ளுவாய்'- என்றிப்படி பதில் சொல்வார்கள்.

Koviloor Digital Library

என்ன சொன்னாலும் இது அடிநிலை அநுக்ரஹந் தான். நம்மில் ரொம்பப் பேர் தநு-கரண-புவன-போகங்களை அநுக்ரஹ விஷயங்களாக எடுத்துக் கொண்டு ஸம்ஸாரத்திலிருந்து கடைத்தேற இதுகளை உபாயமாக்கிக் கொள்ளாமல், இதுகளைக் கொண்டே கர்மாவை இன்னும் ஜாஸ்தியாக்கிக் கொண்டு ஸம்ஸாரத்தில் மேலும் மேலும் புதைந்துதான் போகிறோமாதலால் இதைப் பூரணமாக 'அநுக்ரஹம்' என்று ஸர்டிஃபை பண்ண முடியவில்லை!

இந்த அடிநிலை அநுக்ரஹம் மாதிரி இல்லாமல் உச்ச நிலையாக ஒரு அநுக்ரஹம் உண்டு. அதுதான் ஒருத்தனை ஸம்ஸாரத்திலிருந்து கடைத்தேற்றி மோக்ஷத்தை அளிப்பது. அதற்கு மேலே ஒரு அநுக்ரஹம் கிடையாது. மீளவே முடியாத புதைச் சேற்றிலிருந்து பரமாத்மா நம்மைத் தூக்கிவிட்டு அமிருத நிலையில் சாச்வதமாக இருத்துகிற அந்த அநுக்ரஹத்தில்தான் அவனுடைய ப்ரேமையும் கருணையும் அதன் உச்சஸ்தானத்தைத் தொடுகிறது.

பஞ்சக்ருத்யத்தில் ஐந்தாவதான, உச்சமான... ஸங்கீதத்தில் ரொம்ப உச்ச ஸ்வரம் தாரஸ்தாயி பஞ்சமம் என்று பிடிப்பார்கள்; அப்படிப் பஞ்ச க்ருத்யத்தில் பஞ்சமமான [ஐந்தாவதான]......... மோக்ஷப்ரதானம் என்கிற அநுக்ரஹத்தைச் செய்யும் சைவ மூர்த்திக்கே 'ஸதாசிவன்' என்று பெயர்.

சிவனுக்கு மட்டுமே 'ஸதா' அடைமொழி

அந்த ஸதாசிவனைப் பற்றிச் சொல்லலாம் என்றுதான் ஆரம்பித்தேன். 'ஸதாசிவ ஸமாரம்பாம்' என்று குரு பரம்பரை ஆரம்பிப்பதைச் சொல்லி ஆரம்பித்தேன்...

மஹாவிஷ்ணு மாதிரி மஹாசிவன் இல்லை; ஸதா சிவன்தான்.

'மஹாசிவன்' இல்லை என்று குறைப்பட்டுக் கொள்ள வேண்டாம். ஏனென்றால் 'ஸதா'சிவனுக்கு அப்படிப்பட்ட

Koviloor Digital Library

ஒரு ஸ்பெஷாலிடி இருக்கிறது; uniqueness என்கிறார்களே, அப்படிப்பட்ட தனித் தன்மை! 'மஹா'வுக்கு இல்லாததாக, 'ஸதா'வுக்கு மட்டுமே உள்ள யுனீக்னெஸ்!

விஷ்ணுவுக்கு மாத்திரம் என்றில்லாமல் இன்னும் அநேக தெய்வங்களுக்கும் 'மஹா' அடைமொழி உண்டு. தாயார் லக்ஷ்மியையே மஹாலக்ஷ்மி, மஹாலக்ஷ்மி என்றுதானே சொல்கிறோம்? துர்கா தேவி, சண்டிகை என்றிருக்கிற அம்பாளுக்கும் ஒரு மஹாலக்ஷ்மி ஸ்வரூபம் உண்டு. மஹிஷாஸுர வதம் செய்தது அந்த மஹாலக்ஷ்மி துர்கைதான். மஹாகாளி, மஹாஸரஸ்வதி என்ற இன்னும் இரு 'மஹா' பட்டம் பெற்ற தேவிகளாகவும் அவளுக்கு ரூபமுண்டு. மஹாகணபதி இருக்கிறார். மஹா சாஸ்தா இருக்கிறார்; 'மாசாத்தான்' என்பார்கள். ஸுப்ரம்மண்ய ஸ்வாமிக்கும் மஹாஸேனன் என்று ஒரு 'மஹா' பெயர் இருக்கிறது. 'மஹாசிவன்' இல்லாவிட்டாலும் சிவமூர்த்திகள் ஸம்பந்தமாகவே மஹாதேவன், மஹாலிங்கம், மஹேச்வரன் இத்யாதி இருப்பதையும் சொன்னேன்.

ஆனால் 'ஸதா' மட்டும் 'யுனீக்'காக சிவநாமா ஒன்றோடுதான் சேர்ந்து 'ஸதாசிவன்' என்று இருக்கிறது. வேறே எந்த ஸ்வாமி பேருக்காவது ஸதா அடைமொழி இருக்கிறதா? 'ஸதாவிஷ்ணு' உண்டா? 'ஸதாராமன்'?

ராமன் பேர் இத்தனை அடைமொழிகளுடன்தான் சேர்கிறது என்று கணக்கு வழக்குச் சொல்ல முடியாமல் எத்தனையோ 'ராம'ப் பெயர்கள் இருக்கின்றன. கணபதிராமன், ராம ஸுப்ரம்மண்யன், சிவராமன், வேதராமன், கேவல்ராம், ஆனந்த்ராம், சாந்தாராம்,... ராமலக்ஷ்மி என்றேகூட... [சிரித்து] ஆயாராம்... கயாராம்*

*அரசியலில் ஒரு கட்சியிலிருந்து இன்னொன்றுக்கு வந்தவர் 'ஆயாராம்'; ஒரு கட்சியிலிருந்து இன்னொன்றுக்குப் போனவர் 'கயாராம்'.

Koviloor Digital Library

வரை ஏகப்பட்ட ஒட்டுப் போட்டுக் கொண்டு அந்த ராமசந்திரமூர்த்திக்குப் பெயர்கள் இருக்கின்றன. ஆனாலும் 'ஸதாராமன்' என்று பேர் காணோம்!

எந்தப் புருஷ தெய்வப் பேருடனோ, ஸத்ரீ தெய்வப் பேருடனோ 'ஸதா' ஒட்டுப் போட்டுக் கொள்ளவில்லை. சிவன் ஒரு பெயருக்கே அந்த அடைமொழி சேர்ந்து ஸதாசிவ நாமா உண்டாயிருக்கிறது...

சிவன், சிவன் என்று ஸ்வாமி பெயரைத் தனியாகச் சொல்லிக் கொண்டு போவது எனக்கே 'என்னவோ மாதிரி' இருக்கிறது! ஸாதாரணமாக அந்த நாமாவை அப்படிச் சொல்கிற வழக்கமில்லை: தமிழில் 'சிவபெருமான்' என்று 'பெருமான்' சேர்த்தே சொல்வார்கள். ஸம்ஸ்கிருதத்தில் எதனாலோ அந்த ஸ்வாமியைப் பரம உத்க்ருஷ்டமான [உயர்வு மிக்க] சிவ சப்தத்தால் சொல்லாமல் 'ஈச்வரன்' 'பரமேச்வரன்' என்றே அதிகம் குறிப்பிடுவதாக ஏற்பட்டிருக்கிறது. அப்படித்தான் நானும் சொல்வது. ஆனால் இன்றைக்கு ஸதாசிவனைச் சொல்ல நினைத்ததால் சிவ நாமாவாகவே லோகமங்களமான அந்த இரட்டை அக்ஷரத்தை நிறையச் சொல்லணுமென்று தோன்றி மெனக்கிட்டு அப்படிச் சொல்லிக் கொண்டு போகிறேன்...

ஆர்ய-திராவிட 'ஆராய்ச்சி'!

ஒரு வேடிக்கை என்னவென்றால், மஹாவிஷ்ணுவைத் தமிழ்நாட்டிலே விஷ்ணு சப்தமாகச் சொல்லாமல் 'பெருமாள்' என்று சொல்வதாகவே வைஷ்ணவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் என்ன வேடிக்கை என்றால்: நம்முடைய 'ரிஸர்ச்'கார 'மேதாவி'கள் சிவனை திராவிட ஸ்வாமி என்றும், விஷ்ணுவை ஆர்யஸ்வாமி என்றும் சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையைப் பார்த்தால் 'திராவிட ஸ்வாமி'யை ஈச்வரன் என்ற

Koviloor Digital Library

ஸம்ஸ்கிருதப் பெயரிலும், 'ஆர்ய ஸ்வாமி'யைப் பெருமாள் என்ற தமிழ்ப் பெயரிலும் சொல்வதாக இருக்கிறது! ரொம்பவும் பாமரமான ஜனங்கள் கூட 'ஈஸ்பரன் கோவிலு', 'பெருமா கோவிலு' என்றுதான் சொல்லக் கேட்கிறோம். இதைவிடக்கூட ரிஸர்ச்சின் 'மேதாவித்தன'த் தைக் காட்டுவதாக இன்னொன்று இருக்கிறது.

'ஆர்யர்கள் சிவப்பு நிறக்காரர்கள்; சிவப்புப் பிரியர்கள்; செக்கச் செவேல் என்ற அக்னியை உபாஸிக்கிறவர்கள். திராவிடர்கள் கறுப்புக் கலர்க் காரர்கள்; கறுப்புப் பிரியர்கள்; கரு நீலமாக திராவிட தேசத்தைச் சுற்றிச் சூழ்ந்திருந்த ஜலத்தில் பிரியம் வைத்திருப்பவர்கள்' என்றெல்லாம் ரிஸர்ச் பண்ணிச் சொல்கிறார்கள். இந்த நியாயப்படி பார்த்தால் திராவிட ஸ்வாமிதான் கறுப்பாக இருக்கணும்; ஆர்யஸ்வாமி சிவப்பாக இருக்கணும். ஆனால் வாஸ்தவத்தில் எப்படி இருக்கிறது? சிவன்தான் செக்கச் செவேல் என்று இருக்கிறார் **'பவளம் போல் மேனி', 'சிவனெனும் நாமம் தனக்கே யுடைய செம்மேனி யெம்மான்'** என்றெல்லாமே தேவாரத்தில் பார்க்கிறோம். **'செந்தழல் உருவர் போலும்'** என்று அந்த 'திராவிட ஸ்வாமி'யையே ஜ்யோதிஸ்வரூப மாகச் சொல்லியிருக்கிறது. 'ஆர்ய ஸ்வாமி'யானால் ஜலா சலத்திலேயே படுத்துக்கொண்டிருக்கிறார்! நீருண்ட மேகம் போல இருக்கிறார். **'ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்து'** என்று ஆண்டாள் சொல்கிறபடி இருக்கிறார். க்ருஷ்ணாவதாரம் பண்ணியிருக்கிறாரே, அந்த கிருஷ்ணன் என்ற பேருக்கே 'கறுப்பன்' என்றுதான் அர்த்தம். இந்தக் கறுப்பர்தான் பூர்வாவதாரத்தில் ராமராக இருந்தபோது 'கறுப்பண்ணா சாமி'! கறுப்பாகவும் அண்ணாவாகவும் இருந்த ஸ்வாமி! அவர் மூத்த பிள்ளை. அப்புறம் மூன்று பிள்ளைகள். அந்தத் தம்பிகளுக்கு இவர் அண்ணா-அண்ணா ஸ்வாமி. க்ருஷ்ணாவதாரத்தில் அவரே

Koviloor Digital Library

தம்பிஸ்வாமி. பூர்வாவதாரத்தில் அவரோடு இணை பிரியாமலிருந்த தம்பி லக்ஷ்மணரே இப்போது அண்ணா பலராமராக வந்தார். லக்ஷ்மணர், பலராமர் இரண்டு பேரும் சேஷாவதாரம். இரண்டு பேரும் நல்ல வெளுப்பு. கறுப்பு ராம-க்ருஷ்ணர்கள், வெளுப்பு லக்ஷ்மண-பலராமர்கள்.

ரிஸர்ச் என்று தடால் புடால் பண்ணி, அதுவரை ஒரு குடும்பமாக ஒட்டிக் கொண்டிருந்த ஜன ஸமூஹத்தில் பேத சிந்தனையை நன்றாக வேரோட விட்டிருக்கிறார்கள்!

சிவ நாமா பற்றியும் இதே மாதிரி மேதாவித்தன ரிஸர்ச்சும், அதையே அதாரிடியாக ரொம்பப் பேர் எடுத்துக் கொண்டிருக்கிற ஹீன நிலைமையையும் பார்க்கிறோம். தமிழ் சிவப்பிலிருந்துதான் சிவ நாமா வந்தது என்பதுதான் அந்த ரிஸர்ச். ஆனால் ரொம்பப் பழைய தமிழ் நூல்களிலிருந்து ஆரம்பித்து இன்றைக்கு வரை 'சிவ' என்கிறது அந்தப் பேருடைய ஸ்வாமி ஒருத்தரை மட்டுமே குறிக்கிற proper noun–ஆக, ஒரு தனி ஆஸாமியின் பெயராகத்தான் தமிழில் பிரயோகிக்கப்பட்டிருக்கிறதே தவிர, common noun என்கிற பொதுப் பெயராக வரவேயில்லை. ஆனால், லோகத்திலேயே ஆதி முதல் புஸ்தகம் என்று இந்த ரிஸர்ச்காரர்களே சொல்கிற ரிக்வேதத்திலிருந்து ஆரம்பித்து ஸம்ஸ்கிருத பாஷையிலே 'சிவம்' என்றால் மங்களம், ஸௌக்யம், நல்லது என்ற அர்த்தத்தில் common noun–ஆக நிறைய வழங்கப்பட்டு வந்திருக்கிறது. குணம், தன்மை என்று எதுவுமே சொல்ல முடியாத சாந்தமான அத்வைத ஸத்தியத்தையே 'சிவம்' என்று சொல்கிற அளவுக்கு அந்த வார்த்தைக்கு உள்ள உத்கர்ஷத்தை (ஏற்றத்தை) மாண்டூக்ய உபநிஷத்தில் பார்க்கிறோம்.

Koviloor Digital Library

ஸம்ஸ்கிருதத்திலுள்ள புகழ் பெற்ற அகராதியான 'அமர (கோச)த்தில் 'சிவ' என்கிற வார்த்தைக்கே synonymகளாக, அதாவது அதே அர்த்தமுள்ள இதர வார்த்தைகளாக, "பத்ரம் (bhadram), கல்யாணம், மங்களம், சுபம்'' என்கிறவைகளைக் கொடுத்திருக்கிறது. 'ச்வச்ரேயஸம்-சிவம்-பத்ரம்-கல்யாணம்-மங்களம்-சுபம் இந்த எல்லா வார்த்தைக்குமே அர்த்தம் மங்களமானது என்பதுதான். நல்லதாக, ஸந்தோஷம் தருவதாக, லக்ஷ்மீகரம் வாய்ந்ததாக இருக்கிற ஒன்றுதான் இந்த மங்களமான சிவம்.

ஆலோசித்துப் பார்த்தால் இத்தனை வார்த்தை களுக்கும், நல்லது - ஸந்தோஷம் - ஸௌக்யம் - லக்ஷ்மீகரம் என்கிற எல்லாவற்றுக்கும் தாத்பர்யம் **அன்பு**தான் என்று தெரியும். அன்புதான் நல்லதைச் செய்வது, ஸௌக்யமும் ஸந்தோஷமும் தருவது, லக்ஷ்மீகரம் என்று சொல்கிற ஒரு நிறைவான அழகைப் பரப்புவது. 'புனிதத்தன்மை' என்பதோடு இணைபிரியாமல் சேர்ந்தது அன்பு. ஆசையும் காமமும் புனிதமில்லை. அன்பு புனிதம்.

அதனால்தான் **'அன்பே சிவம்'** என்று சொல்வது.

ஆனாலும் மஹா அநுபவியான திருமூலர்தான் அப்படிச் சொன்னாரே தவிர, மற்றபடி தமிழில் அன்பாயிருப்பதை சிவமாயிருப்பது என்றோ—அதே மாதிரி, மங்களமாகவோ நல்லதாகவோ இன்பம் கொடுப்பதாகவோ இருப்பதை சிவத்தைக் கொடுப்பது என்றோ — சொல்கிற வழக்கமில்லை. எந்தத் தமிழ் நூலிலும் அப்படிச் சொல்லியிருக்கவில்லை. ஸம்ஸ்கிருதத்தில்தான் அப்படி அந்த வார்த்தையை ஆதிக்கும் ஆதிப் புஸ்தகம் என்று லோகம் பூராவுமே ஒப்புக்கொள்ளும் வேதத்தி லிருந்து ஆரம்பித்து ஸஹஜமாகவே சொல்கிறதாக இருக்கிறது. இருந்த போதிலும் திராவிட சிவனையே

Koviloor Digital Library

ஆர்யர்கள் கடன் வாங்கிக் கொண்டார்கள் என்று ரிஸர்ச் 'மேதை'கள் ஸாதிக்கிறார்கள்!

இது ஸம்பந்தமாக இன்னும் கொஞ்சம் சொல்லணும். 'உக்ரமாக, க்ரூரமான கார்யம் பண்ணிக் கொண்டு ருத்ரன் என்று ஒரு தெய்வம். அவனைத்தான் வேத மதத்தில் முதலில் ஸ்தோத்திரித்துக் கொண்டிருந்தார்கள். அப்புறம் ஸௌம்ய மூர்த்தியாக ஸௌக்யத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிற சிவன் என்ற தெய்வத்தைத் தெரிந்து கொண்டார்கள். அப்படியே காலக்ரமத்தில் இவனையும் அவனையும் ஒன்று சேர்த்து ஒருத்தனாகப் பண்ணி விட்டார்கள்' என்பது ரிஸர்ச்காரரர்களின் தீர்ப்பு. எதற்காக உக்ர தெய்வத்தையும் ஸௌம்ய தெய்வத்தையும் ஒன்றாக்கணுமோ, தெரியவில்லை!

சரி, பிரத்யக்ஷ proof — வேத வசனத்திலேயே பஹு [வெகு] ஸ்பஷ்டமாகக் கிடைக்கிற proof — என்ன காட்டுகிறது?

ருத்ரத்தில் ஸ்வாமியிடம், "உன் கோபத்துக்கு நமஸ்காரம்" என்றே அடி ஆரம்பத்தில் வேண்டிக் கொண்டு, "ஆனாலும் சிவமாக அதாவது, ஸௌக்யம் தருகிற மங்கள மூலமாக ஒரு ரூபம் இருக்கே, அந்த ரூபத்திலேயே எங்களை அநுக்ரஹி. உன் கை வில்லு, அம்பு, அம்பறாத்தூணி முதலானதுகளையும் சாந்தம் பண்ணி, ஜகத்தை ஹிம்ஸிக்காமல் காப்பாற்று. அஸுர – ராக்ஷஸர்கள், துஷ்ட ப்ராணிகள் முதலானதுகள் மேலேயே பாண ப்ரயோகம் பண்ணி உன் உக்ர ரூபத்தைக் காட்டு" என்று இந்த மாதிரி அந்த ஸ்தோத்ரம் சொல்லிக் கொண்டே போகிறதை வைத்துத்தான், 'இரண்டு ஸ்வாமி; ஒன்று உக்ரம், இன்னொன்று ஸௌம்யம்; ஒன்று வைதிகம் – ஆர்யர்கள் பூஜித்தது, இன்னொன்று அவைதிகம் – த்ராவிடர்கள் பூஜித்தது; அப்புறம்

Koviloor Digital Library

இரண்டையும் கூட்டிக் கலந்து ஒன்றான syncretic deity-யாகச் செய்து விட்டார்கள்' என்று ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பாகச் சொல்கிறார்கள்.

இப்போது நான் சொன்ன 'ருத்ரம்' யஜுர் வேதத்தில் வருவது. இந்த ருத்ரத்தில் இப்படி ஒரே ஸ்வாமிக்கு உக்ரமாகவும், ஸௌம்யமாகவும் இரண்டு aspect சொல்லி யிருந்தாலும், ஆராய்ச்சிக்காரர்களின் அபிப்ராயப்படி அதற்குப் பூர்வமான ரிக்வேத காலத்தில் உக்ரமாக மட்டுமுள்ள ஒரு ருத்ரனைத்தான் ஆர்யர்கள் வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். இப்படிச் சொல்லி, அதுவே முடிந்த முடிவு என்று வைத்திருக்கிறார்கள். அதையே நாமும் அலசி, ஆராய்ந்து, ஆலோசித்துப் பார்க்காமல் வேத வாக்காக எடுத்துக் கொண்டிருக்கிறோம். நிஜமான வேதவாக்கில் நமக்கு நம்பிக்கை, அபிமானம் இல்லை! 'கொஸ்ச்சின்' பண்ணுகிறோம்! ஆனால் இண்டாலஜிஸ்ட் என்ன சொன்னாலும் அதைக் கொஸ்ச்சின் பண்ணாமல், 'இதுதான் நமக்கு வேதவாக்கு' என்று எடுத்துக் கொள்கிறோம்!

அவர்கள் ரிக்வேத காலத்தில் உக்ர ருத்ரன் மட்டுமே தெரியும் என்கிறார்களே, அது அடியோடு தப்பபிப்ராயம். ரிக்வேதத்திலும் ருத்ரனைப் பற்றி ஐந்து ஸூக்தங்கள் உண்டு. அவற்றைப் 'பஞ்ச ருத்ரம்' என்று தொகுத்தி ருக்கிறது. அதற்கு நாம் கொஞ்சம் அர்த்தம் பார்த்து விட்டாலே தெரிந்துவிடும். ஜாஸ்தி சிரமப்படக் கூட வேண்டாம்; ஸுலபமாக அந்தத் 'தியரி'யை நிராகரணம் பண்ணி விடலாம் [நிராகரித்து விடலாம்]. அதில் முதல் ஸூக்தத்தின்* அர்த்தம் பார்த்தாலே போதும். அதன் ஆரம்ப ரிக்கே [ச்லோக மந்திரமே] கூடப் போதும்! அந்த

* ரிக்வேத முதல் மண்டலத்தின் 43-வது ஸூக்தம்.

Koviloor Digital Library

ஆரம்பத்திலேயே ருத்ரனை ஹ்ருதயவாஸியாகச் சொல்லியிருக்கிறது. ருத்ர ஸ்வரூபமும் சிவ ஸ்வரூபம் மாதிரியே அன்புதான், அதாவது பரம ஸௌக்யந்தான் என்பதற்கு எடுத்த எடுப்பில் அவனை ஹ்ருதயவாஸியாக 'ஹ்ருதே' என்று சொல்லியிருப்பதே நிரூபணம். அந்த ஆரம்ப மந்திரத்திலே அவனை 'ப்ரசேதஸ்' என்றும் சொல்லியிருக்கிறது. அப்படியென்றால், 'உசந்த ஞானமுள்ளவன்' என்று அர்த்தம். 'ருத்ரன்' என்று முதலில் பேரைச் சொல்லி, உடனேயே அவனுக்கு முதல் லக்ஷணமாக இந்த ஞானத்தை, ஞானமுடைமையைத்தான் சொல்லியிருக்கிறது. அடுத்த லக்ஷணமாக, 'வாரி வழங்குகிறவர்களில் அவன்தான் தலைமை ஸ்தானம்'; 'ஸூபர்லேடிவ்' என்கிறார்களே, அப்படி வள்ளல்களில் எல்லாரையும் மிஞ்சிய 'ஸூப்பர்லேடிவ்' வள்ளல் — 'மீடுஷ்டமன்' — அவன் என்று இருக்கிறது. அதுதான் இங்கே ருத்ரனுக்குக் கொடுத்திருக்கிற பெயர். அதற்கப்புறந்தான் அவனை பலிஷ்டன் [வலிமை பொருந்தியவன்] என்று மூன்றாவது லக்ஷணம் சொல்லியிருக்கிறது. 'தவ்யஸே' என்று இருப்பதற்கு அதுதான் அர்த்தம். இங்கே கூட 'பலம்' என்பதால் உக்ர பாவத்தைச் சொன்னதாக எடுத்துக் கொள்வதற்கில்லை. 'நல்ல பலசாலி' என்று ஒருத்தனைச் சொன்னால் 'முரட்டுச் சண்டைக்காரன்' என்றா அர்த்தம் பண்ணிக்கொள்வது? இப்படி, முதலில் ஞானியாக, அப்புறம் கருணை நிறைந்த வள்ளலாக, அதற்கப்புறம் பலிஷ்டனாக வர்ணிக்கப்பட்டவனை உக்ரதேவதை என்றால் கொஞ்சமாவது பொருத்தமாக இருக்கிறதா?

இப்படியேதான் அந்த ஸூக்தம் நெடுகப் பரம க்ருபாளுவாக ருத்ரன் பல தினுஸான அநுக்ரஹங்களைச் செய்வதை, வைத்யநாதனாக வியாதி தீர்ப்பதை, யஜ்ஞ

Koviloor Digital Library

ரக்ஷணை செய்வதை [வேள்வியைக் காத்துக் கொடுப்பதை]யெல்லாம் சொல்லியிருக்கிறதே தவிர, அவனை ஹிம்ஸிப்பவனாகச் சொல்லவில்லை.

ரிக்வேதத்திலேயே 'சங்கரர்'!

ஆசார்யாளை [ஆதிசங்கரரை]ச் சேர்ந்த நம் எல்லோருக்கும் ரொம்பப் பெருமை உண்டாக்குகிற ஒரு ஸமாசாரம் சொல்கிறேன். 'சம்' என்று ஸம்ஸ்கிருதத்தில் ஒரு வார்த்தை. 'சிவம்' என்றால் என்ன அர்த்தமோ அதுவேதான் 'சம்'முக்கும் கிட்டத்தட்ட அர்த்தம். நல்லது, ஸௌக்யம் அளிப்பது 'சம்'. லோகத்துக்கெல்லாம் நல்லதே செய்தவரானபடியால்தான் நம் ஆசார்யாளுக்கு சம்-கரர், சங்கரர் என்று பேர். அவருக்கு வைத்த இயற்பெயரே காரணப் பெயருமாக இருந்து விட்டது. இப்போது நான் சொன்ன அந்த முதல் ருத்ரஸூக்தத்திலேயே ருத்ரனை சங்கரனாகச் சொல்லியிருக்கிறது! 'அவன் நம் எல்லோருக்கும், ஸகல ஜனங்களுக்கும், ஸ்திரீ-புருஷாள் அவ்வளவு பேருக்கும், இன்னும் ஆடு, மாடு, குதிரை முதலான மிருக ஜாதிகளுக்கும் நல்லதை, ஸுகத்தைக் கொடுக்கட்டும்' என்று அதில் மந்திரம் வருகிறது.* 'அவன் நமக்கு நல்லதைச் செய்யட்டும்' என்பதற்கு மூலத்தில் நமக்கு 'சம்கரனாகட்டும்' என்றே, 'சம்' 'கர' வென்ற வார்த்தைகளைப் போட்டுச் சொல்லியிருக்கிறது! ஆனாலும் 'மறை' என்றே தமிழ் மரபு கொண்டாடுகிறபடி, எதையும் கொஞ்சமாவது ஒளித்து ரஹஸ்ய அழகோடு சொல்வதுதான் வேதத்தின் வழி. இங்கேயும் அந்த வழியில்தான் சொல்லியிருக்கிறது. 'அவன் எங்கள் பொருட்டு நல்லதைச் செய்பவனாக' என்கிற ஆர்டரில்

* ஆறாவது மந்திரம்.

Koviloor Digital Library

வார்த்தை போட்டிருந்தால் 'ந:+சம்+கர' என்று 'சங்கர' சப்தம் வெளிப்படவே சேர்ந்து வந்திருக்கும். ஆனால், மறைமுகம் பண்ண வேண்டுமென்றே, 'நல்லதை எங்கள் பொருட்டுச் செய்பவனாக' என்று ஆர்டரை மாற்றி 'சம் ந: கர' என்று மந்திரமாகக் கொடுத்திருக்கிறது. 'ந:'வுக்கு ஒரு பக்கம் 'சம்'மும், மறுபக்கம் 'கர'வுமாகப் பிரித்துக் கொடுத்திருக்கிறது. ஆனாலும் 'சம்கர' சப்தம் எப்படியோ வந்து விடுகிறது! வேதமாதா பரமேச்வரனுக்கு அர்ப்பணிக்கிற முதல் ஸூக்தத்திலேயே அவனை சங்கராசாரியாளாகத் தெரிவித்து விடுகிறாள்! மஹா அறிவு படைத்த 'ப்ரசேதஸ்' என்று முதலிலேயே சொன்னதும் அந்த ஸர்வக்ஞருக்குப் பொருந்திவிடுகிறது. அப்புறம் ஸௌபர்லேடிவ் வள்ளல் என்பதும் 'கருணாலயம்' என்றே வர்ணிக்கப்படுகிற ஆசார்யாளுக்கு* சரியாகத்தான் இருக்கிறது! முப்பத்திரண்டு வயசுக்குள் அவர் இத்தனை உபதேசம் பண்ணி, இத்தனை புஸ்தகம் எழுதி, வாதங்கள் நடத்தி, தேசம் பூராவும் மூன்று தரம் சுற்றி வந்தார் என்றால், மூன்றாவது லக்ஷணமாகச் சொன்னபடி அவர் நல்ல பலிஷ்டராகவுந்தான் இருந்திருக்கணும்!...

'சம்'மைச் செய்கிற ஸௌம்ய மூர்த்தியாகவும் ருத்ரனை ஆதி முதற்கொண்டே வழிபட்டிருக்கிறார்கள்; ஆதி முதலில் உக்ரனாகவும், அப்புறம் ஸௌம்ய மூர்த்தியையும் தன்னோடு அவியல் பண்ணிக் கொண்டவனாகவும் இல்லை — என்று காட்ட வந்தேன்.

நல்லதும் அவனே, கெட்டதும் அவனே

ஒரே பரமாத்மாதான் நல்லது - கெட்டது இரண்டாகவும் இருக்கிறது என்ற உத்தமமான தத்வத்தைக்

* ச்ருதி–ஸ்ம்ருதி–புராணானாம் ஆலயம் கருணாலயம் |
நமாமி பகவத்பாத சங்கரம் லோகசங்கரம் ||

Koviloor Digital Library

கொண்டது நம்முடைய மதம். வாஸ்தவத்தில் அது நல்லதும் இல்லை, கெட்டதும் இல்லை. என்னவென்றே வரையறுக்க முடியாத — நாம ரூபமில்லாத — பரம ஸத்யந்தான் பரமாத்மா. அந்த ஏக வஸ்துதான் மாயையினால் நல்லதாகவும் கெட்டதாகவும் உள்ள ஸகல ஜீவ ஜட ப்ரபஞ்ச வஸ்துக்களாகவும் தெரிகிறது. இதுதான் நம் மதம் சொல்வது. நல்லதை மட்டும் பண்ண ஒரு ஸ்வாமி, அவனுக்கு விரோதமாகக் கெட்டதைச் செய்ய ஸைத்தான் என்று நாம் சொல்லவில்லை. 'நாம் சொல்லவில்லை' என்றால் என்ன அர்த்தம்? அநுபவிகளான, ஸத்ய ஸாக்ஷாத்காரம் பெற்றவர்களான நம் பூர்விகர்கள், நல்லதற்கு மட்டும் ஈச்வர சக்தி, கெட்டதற்கு ஈச்வர சக்தி இல்லாத ஒன்று என்று தங்கள் பிரத்யக்ஷ அநுபவத்தில் காணவில்லை. ஒரே சாந்தந்தான் அடிப்படையான ஸத்வஸ்து — மெய்ப்பொருள்; பிரம்மம், பரமாத்மா என்பது. அது மாயையால் சக்தி விலாஸம் செய்கிற போது ஒரே ஈச்வரனாகத்தான் இருந்து கொண்டு நல்லது, கெட்டது இரண்டும் பண்ணுகிறது என்றே அவர்கள் கண்டுகொண்டு, நமக்குச் சொல்லி வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். நாமும் நல்லது-கெட்டதைக் கடந்து அதற்கு அப்பாற்பட்ட பிரம்மத்தில் ஐக்கியம் பெறுவதற்கு வழி சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரே ஈச்வரனிடமிருந்துதான் நல்லது, கெட்டது இரண்டும் என்ற இந்த 'கான்ஸெப்'டில் [கொள்கையில்] தான் அவர்கள் ஆதிக்கும் ஆதியிலிருந்து ஒரே ருத்ரனை 'ரௌத்ரம்' என்றாலே, மஹா கோபம் என்று இப்போதும் நாம் வைத்துக்கொண்டிருப்பதற்கேற்கப் பரம உக்ர மூர்த்தியாகவும், அப்படி மட்டுமில்லாமல், சிவமான பரம மங்கள ஸௌம்ய மூர்த்தியாகவும் வழிபட்டார்கள். இரண்டு வேறு ஸமாசாரங்களை ஒட்டுப் போட்டு அவியல் பண்ணவில்லை. ஒருத்தனுக்கேதான் இரண்டு ரூபம்,

Koviloor Digital Library

இரண்டு வேஷம். யுத்த பூமியில் உக்ரமாக அடித்து நொறுக்குகிற மஹாவீரனே அகத்தில் பத்தினி, புத்ரர், பந்து, மித்ரர்களிடம் பிரியமாக இருந்து கொண்டிருக்கிற மாதிரி.

‘ரேஸ் தியரி’ தவறானது

God, Satan என்று இரண்டாகப் பார்த்தே பழக்கப்பட்ட மதஸ்தர்கள், அந்தப் பார்வையிலேயே நம்முடைய வேத மத ருத்ரனைப் பார்த்ததில்தான் வேறு தினுஸாக அர்த்தம் பண்ணிவிட்டார்கள். Divide and rule — பிரித்து ஆளுவது — என்ற தங்கள் தந்திரமான கொள்கையையும் முடிகிற இடங்களிலெல்லாம் அவர்கள் நுழைத்து விடுவார்களாதலால் இதில் ஆர்ய-திராவிட வித்யாஸத்தையும் ஸாமர்த்தியமாக இழுத்து விட்டு விட்டார்கள்!

ஸர்வ சக்தனாக ஒரே ஈச்வரன்தான். அப்படி அவன் ஸர்வ சக்தனாக இல்லாவிட்டால் அவன் ஈச்வரன் என்று பெத்தப் பேர் வைத்துக் கொள்ளவே லாயக்கில்லாதவன். ‘ஸர்வ’ என்றால் அதில் நல்லது மாதிரியே கெட்டதெல்லா மும் அடக்கமாகத்தானே இருக்கணும்? பிரஸித்தமான ருத்ர ஸூக்தங்களில் அப்படித்தான் அவனை விவரமாக வர்ணித்திருக்கிறது. நல்ல சக்தியாக மட்டும் ஈச்வரன், அவனுக்கு ஆப்போஸிட்டாக, கெட்ட சக்தியாக Satan என்று ஒரு இரண்டாம் ஆஸாமி என்று இல்லை. அல்லது அந்த Satanக்கும் அசட்டு ஹிந்துக்கள் தெய்வமாக ஸ்தானம் தந்து உக்ர மூர்த்தி என்று பூஜை பண்ணினார்கள் என்பதும் இல்லை. இரண்டு வெவ்வேறான ஸ்வாமி இல்லை. ஒரே ருத்ர-சிவன்தான். இரண்டு வெவ்வேறான ரேஸ்களும் இல்லை. ஒரே வைதிக ஸமுதாயந்தான்; ஒரே பாரத கலாசாரந்தான்.

Koviloor Digital Library

நான் கர்நாடகமான வைதிகக் குடுக்கை; பத்தாம் பசலி. அதனால் நான் என்னமோ சரித்திர நிபுணர்களின் ஆராய்ச்சிக்கு மாறாக உளறுகிறேன் என்று தோன்றலாம். விவேகானந்தர் இருந்தார். இன்னும் ஸமீபத்தில் அரபிந்தோ [அரவிந்தர்] இருந்தார். அவர்கள் என் மாதிரி இல்லை. சரித்திர ஆராய்ச்சி உள்பட நவீனகால ஸமாசாரமெல்லாம் நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தவர்கள். அநேக விஷயங்களில் சீர்திருத்தம், புரட்சிக் கொள்கை என்று சொல்கிறவற்றை பலமாக ஆதரித்தவர்கள். பத்தாம்பசலி களைக் கண்டித்துக்கூட இருக்கிறவர்கள். அந்த இரண்டு பேரும் கூட இந்த Aryan–Dravidian என்ற இரட்டை race theory–ஐ ஒப்புக் கொள்ளவேயில்லை. உங்களில் பல பேர் ஆராய்ச்சி மனப்பான்மை, scientific outlook [அறிவியல் கண்ணோட்டம்] இல்லாவிட்டால் ப்ரயோஜனமில்லை என்று அபிப்ராயப்பட்டு, என்மாதிரி கட்டுப்பெட்டி ஸநாதனிகளைத் தள்ளுபடி செய்யக்கூடுமானதால்தான், [ஆராய்ச்சி மனப்பான்மை, அறிவியல் கண்ணோட்டம் என்ற] அந்த இரண்டு யோக்யதாம்சமும் நிறையப் பெற்றவர்களான இரண்டு பேரைச் சொன்னேன்.

எப்போதும் உக்ரனே எப்போதும் ஸௌம்யனும்

இந்த தேசத்தில் இரண்டு ரேஸ் இல்லை என்கிற மாதிரியேதான் இந்த தேசத்தை வடக்கே ஹிமாசல கேதார்நாத், அமர்நாத்திலிருந்து தெற்கே ராம்நாத் [ராமேச்வரம்]வரை கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் ஈச்வரனும் இரண்டு இல்லை. இரண்டு ரேஸ்கள் காலக்ரமத்தில் கலந்து, குழம்பி ஒன்று மாதிரி ஆகிவிட்டன என்று இன்டாலஜிஸ்ட் சொல்கிற மாதிரியே — அது எப்படித் தப்பானதோ, அதே மாதிரியே — இரண்டு

Koviloor Digital Library

ஸ்வாமிகளைக் குழப்பி ஒருத்தனாக்கியிருக்கிறது என்பதும் தப்பு.

[யஜுர்வேத] ருத்ரத்தில் இரண்டு இடங்களில், உக்ரபாவத்திலுள்ள ருத்ரனைக் கூப்பிட்டு, "அப்பா, ருத்ரா! உனக்கு எந்த சிவமான மங்களரூபம் உண்டோ – தே சிவாதநூ:" என்று ஸ்பஷ்டமாக வருகிறது*. ஸாக்ஷாத் ருத்ரனுக்கேதான் ஸௌம்ய ரூபமும் உண்டு என்பது இங்கே நிஸ்ஸந்தேஹமாக [ஐயமற]த் தெரிகிறது.

ஒரு ஸமயத்தில் உக்ரம், இன்னொரு ஸமயத்தில் ஸௌம்யம் என்று அவன் மாறி மாறி இருப்பானா என்றால் அப்படியும் இல்லை. வாஸ்தவத்தில் எதுவாகவும் இல்லாத அவன் எப்போதுமே உக்ர ருத்ரனாகவும் இருப்பான், எப்போதுமே ஸௌம்ய சிவனாகவும் இருப்பான். நம் அறிவையும், நம்முடைய லாஜிக்கையும் மீறிய பரமாத்மாவான அவனால் அப்படி இருக்க முடியும்.

அந்த மாதிரி **எப்போதுமே** சிவமாக அவன் இருப்பதை வைத்து அவனுக்கு ஏற்பட்டதுதான் **ஸதாசிவ** நாமா...

மஹாவீரன் ரணபூமியில் உக்ரனாயிருக்கிறான், க்ருஹத்தில் ஸௌம்யமாயிருக்கிறான் என்றேன். **ஸ்வாமிக்கோ** ப்ரபஞ்சமே ரண பூமியாகவும் இருக்கிறது; க்ருஹமாகவும் இருக்கிறது! ஒரு பக்கத்தில் ஸம்ஹார கர்த்தாவாக இருக்கிறான்! இன்னொரு பக்கத்தில் பரிபாலன கர்த்தாவாக இருக்கிறான்! **ஒரே ஸமயத்தில்** இந்த இரண்டு கார்யமும் நடக்கிறது. ஒரே ஸமயத்தில் ஒரு இடத்தில் பூகம்பம், எரிமலை வெடிப்பு உண்டாகி ஸம்ஹாரமும், இன்னொரு இடத்தில் நல்ல மழை பெய்து

* முதல் அநுவாகம் மூன்றாவது மந்திரமும், பத்தாம் அநுவாகம் இரண்டாவது மந்திரமும்.

Koviloor Digital Library

பரிபாலனமும் நடக்கிறது! ஒரே ஸமயத்தில் ஏதோ இரண்டு தேசங்கள் மோதிக் கொண்டு யுத்தம் செய்கின்றன; வேறே இரண்டு தேசங்கள் ஸமாதானம் செய்து கொண்டு உறவு கொண்டாடுகின்றன! நாம் இத்தனை கோடி பேர் இருக்கிறோம். நம் அத்தனை பேருக்குள்ளும் அந்த ஒருத்தனேதான் அந்தராத்மாவாக, அந்தர்யாமியாக இருந்து கொண்டு நடத்தி, ஆட்டி வைக்கிறான். நம்மில் பலர் நல்லதை நினைத்து, நல்லதைச் செய்து கொண்டு சாந்தமாயிருக்கிறோம்; வேறே பல பேர் கெட்டதை நினைத்து, கெட்டதைச் செய்கிறோம்; இந்த இரண்டு தினுஸான கார்யமும் ஒரே ஸமயத்தில் நடக்கிறது என்றால், அப்போது அந்த ஸர்வாந்தர்யாமி ஒரே ஸமயத்தில் ஸௌம்யம், உக்ரம் இரண்டுமாக இருக்கிறான் என்றுதானே ஆகிறது?

முன்னேயே சொன்னாற்போல அவன் அவனாக மட்டுமே நிஜ ஸ்வரூபத்திலிருக்கிறபோது இந்த இரண்டாகவுமில்லாமல், இரண்டையும் கடந்த ஸ்திதியில் இருக்கிறான். அவனை மாயையினால் நாமாகப் பிரதிபலிப்பதற்கு மூலச் சரக்கான ஈச்வரனாயிருக்கும் போது நல்லது-கெட்டது இரண்டுக்கும் மூலமாக ஒரே போதில் இருக்கிறான். மூலத்திலிருந்து வந்த தனி ஜீவர்களான நாமாகிற போது ஒவ்வொரு ஸமயத்தில் நல்லதாகவும், ஒவ்வொரு ஸமயத்தில் கெட்டதாகவும் இருக்கிறான்.

ருத்ரனும் உள்ளுக்குள்ளே சிவன்தான்!

அப்படியிருப்பதில் எப்போதுமே நல்லதாக இருக்கிறவனைத்தான் ஸதாசிவனாகச் சொல்லி ஸ்தோத்ரம், தியானம் பண்ணுவது.

Koviloor Digital Library

"ஏன் எப்போதுமே கோபமாக இருக்கிறவனை 'ஸதாருத்ரன்' என்றும் சொல்லி, அப்படி அவனைப் பூஜை பண்ணப்படாது?" என்றால் —

நமக்கு அவனிடமிருந்து வேண்டியது ஸௌம்ய பாவந்தானே? நமக்குள் புகுந்து நம்மையும் அவன் மாதிரி அன்புமயமாக்குவதற்கு அதுதானே ஸஹாயம் செய்யும்? அன்பாக இருந்தால்தான் நமக்கு ஆனந்தம். நமக்கு வேண்டியது ஆனந்தம்; ஆனபடியால் அன்பு. ஆகையினாலே அதைத் தருகிறவனை, அதுவே ஸ்வரூபம் என்று ஸதாசிவனாகத்தானே நாம் வழிபட வேண்டும்?

நெருப்பு கொளுத்தி பஸ்மீகரம் பண்ணி ரௌத்ரம் காட்டுகிறது; அதுவே சமைத்துப் பக்குவம் பண்ணி உடம்பை வளர்த்துக் கொள்ளவும், படித்து, பாராயணம் பண்ண வெளிச்சம் கொடுத்து நம் உயிரை வளர்த்துக் கொள்ளவும் சிவமாக ஸஹாயம் செய்கிறது. நாம் என்ன செய்கிறோம்? நம்மைக் கொளுத்தியா கொள்கிறோம்? அடுப்பும், தீபமுந்தானே ஏற்றிக் கொள்கிறோம்?

இன்னம் ஒரு படி மேலே போனால் ஸதாசிவ நாமத்திற்கு இன்னொரு இன்டர்ப்ரடேஷன் [விளக்கம்]: ஸதாருத்ரன் என்று சொல்லாமல் ஸதாசிவன் என்றே சொல்வதுதான் ஸரி என்று நியாயம் காட்டும் இன்டர்ப்ரடேஷன்: அதாவது, கெட்டது, உக்ரமானது, ரௌத்ரமானது என்பதுங்கூட அடிப்படையில் நல்லது தான், சிவத்தில் ஜனித்ததுதான் என்று புரிந்து கொள்வது.

அதெப்படி?

எப்படியென்றால், கெட்டது என்று எதைச் சொல்கிறோம்? எது நமக்குக் கஷ்டத்தைக் கொடுக்கிறதோ அதைத்தான். ஆனால் கஷ்டப்பட்டாலொழிய நம் கர்மா எப்படித் தீரும்? பூர்வத்தில் பண்ணின தப்பு, பாபம் போய்

Koviloor Digital Library

நாம் கர்ம பாசத்திலிருந்து விடுபட்டு, free ஆகணு மென்றால், பண்ணினதற்கெல்லாம் தண்டனையாகக் கஷ்டப்பட்டுத்தான் ஆகணும். ஆகவே, ஸ்வாமி ருத்ரனாகக் கெடுதி பண்ணி நமக்குக் கஷ்டம் கொடுக்கிறாரென்றால் அது நம்மைக் கர்மாவிலிருந்து விடுவிக்கத்தான்! அந்த அன்பான நோக்கத்தில்தான் அன்பே உருவான சிவன் ருத்ரனும் ஆயிருப்பது! ருத்ரனாயிருக்கும் போதும் மூல பாவம் அந்த சிவமான அன்புதான். அதாவது, ஸௌம்யமாக வெளிப்படத் தெரிகிற போதில் மாத்திர மில்லாமல் ருத்ரனாக இருக்கிறபோதும், அந்த இரண்டு போதும் என்பதால் எப்போதும், அதாவது **ஸதாவும் அவன் உள்ளுக்குள்ளே சிவனாகத்தான்** இருக்கிறான். அதனால் தான் 'ஸதாசிவன்' என்றே சொல்வது. ஸதாருத்ரன் இல்லை — ச்மசான ருத்ரனாகத் தெரிகிற போதில்கூட உள்ளுக்குள் அப்படியில்லாமல் 'சிவ'னாக இருக்கிறவன் எப்படி ஸதா'ருத்ர'னாக முடியும்?

இன்னமுங்கூடக் கொஞ்சம் நீட்டிக் கொண்டு போகலாம். கஷ்டம், கெடுதல் என்பது இல்லாவிட்டால் ஸம்ஸார வாழ்க்கை அலுத்தே போகாது. இது வேண்டாம் என்ற எண்ணம் ஏற்படவே ஏற்படாது. லோக வாழ்க்கை முழுக்க ஸௌக்யமாகவே இருந்துவிட்டால் இதை விட்டு விடுபட எப்படி நினைப்போம்? இந்திரிய ஸௌக்யங் களிலேயே திருப்தர்களாக இருந்து கொண்டு இதற்கு அனந்தம் பங்கு [மடங்கு] பெரிசான ஆத்மானந்தத்தைப் பற்றிச் சிந்தையே இல்லாமல், அதற்கு ப்ரயத்தனமே படாமல்தான் சிற்றின்ப ஜீவிகளாகவே குறுகிக் கொண்டு முடிந்து போவோம். கஷ்டம் இருக்கிறதோ, கொஞ்சத்தில் கொஞ்சமாவது வைராக்யம், ல்வலேசமாவது மோக்ஷாபி லாஷை நமக்கும் எப்போதாவது வாய்க்கிறது!

அவ்வளவு தூரத்துக்கு 'ஸம்ஸார நிவ்ருத்தி' என்று போகாவிட்டால் கூட, கஷ்டம் வந்தால் தான் அந்தக்

Koviloor Digital Library

கஷ்டம் நிவ்ருத்தியாகி, இந்த லோகத்தில் ஸௌக்யம் உண்டாவதற்கேயாவது பகவானை நினைத்து ப்ரார்த்தனை பண்ணுகிறோம். குந்திகூட கிருஷ்ண பரமாத்மாவிடம் வரம் கேட்டாள்: "எங்களுக்கு விபத்துகள் வந்து கொண்டே இருக்கட்டும். அப்போதான் ரக்ஷிப்பதற்காக உன்னைக் கூப்பிடுவோம். நீயும் வருவாய். உன்னைத் தரிசித்த அப்புறம் விபத்து நிவாரணத்துக்காக இல்லாமல், ஜன்மா நீக்கம்–ஸம்ஸார நிவ்ருத்திக்காகவே வேண்டிக் கொள்கிற புத்தியும் வரும்" என்று!

ஆகக்கூடி ருத்ரனாயிருக்கும் போதும் ஸாரபூதத்தில் அவன் அன்புமயமான சிவன்தான்.

இந்தப் பரம ஸத்யத்தை நாம் புரிந்து கொண்டு, எப்போதும் மறக்காமலிருக்க வேண்டுமென்றுதான் அவனுக்கு 'ஸதாசிவ' நாமா கொடுத்து வைத்திருப்பது.

வேதம் சொல்லும் 'ஸதாசிவோம்'

வேதத்திலேயே கொடுத்திருக்கிற பேர் அந்த ஸதாசிவ நாமா என்ற பெருமை படைத்தது. அதைவிடப் பெருமை அந்தப் பேரோடு ப்ரணவத்தைக் கூட்டி அதையே ஆதியோடந்தம் ஸகலத்துக்கும் ஆதாரமான பிரம்ம ஸ்வரூபமாக வேதம் கொடுத்திருப்பது.

முதலில் வேதம் ருத்ரனிடம், "உனக்கு ஒரு சிவமான ரூபம் இருக்கே!" என்றது. அப்புறம், "இப்படிச் சொன்னால் ரௌத்ரமாக ஒரு ரூபம், சிவமாக ஒரு ரூபம், ஒவ்வொண்ணும் எப்போதும் அப்படி இருப்பது" என்று தப்பர்த்தம் பண்ணிக் கொண்டு விடப் போகிறார்களே என்று பார்த்தது. அதனாலே முதலில் சொன்னதற்குக் கொஞ்சம் 'அமென்ட்மென்ட்' பண்ணி, தெளிவாக்கி விடுவோம் என்று, ருத்ரனாயிருக்கிறபோது உள்பட, எப்போதும் — ஸதா — அவன் சிவன்தான் என்று

Koviloor Digital Library

இன்னொரு மந்த்ரம் கொடுத்து விட்டது! எங்கே கொடுத்திருக்கிறது என்றால்:

சிவனுக்கு ஐந்து முகங்கள். நாலு திசைகளைப் பார்த்து நாலு முகம், மேலே ஆகாசம் பார்க்க ஐந்தாவது முகம். ஸத்யோஜாதம் என்பது மேற்குப் பார்த்த முகம். வாமதேவம் — வடக்குப் பார்த்தது. அகோரம் — தெற்கு. தத்புருஷம் — கிழக்கு. முடிவாக ஊர்த்வ முகம் என்று ஆகாசம் பார்க்க உள்ள முகத்துக்கு ஈசானம் என்று பெயர். இந்த ஐந்து முகங்களுக்கும் வேத மந்திரங்கள் இருக்கின்றன; 'நாராயணவல்லி'யில்* அவற்றைக் கொடுத்திருக்கிறது.

அதில் ஈசான முகத்துக்கான மந்த்ரந்தான் ஸதாசிவ நாமாவைச் சொல்லி, அதோடு ப்ரணவத்தைக் கூட்டி முடிகிறது. "அவன் ஸகல வித்யைகளுக்கும் ஈச்வரன். 'ப்ரம்ம' எனப்படுகிற வேதத்தின் நாயகன். நாலு முகத்தால் நாலு வேதம் சொல்லியே உயிர்களை ஸ்ருஷ்டிக்கும் ப்ரம்மாவுக்கும் அதிபதி. பரப்ரம்மமேயான அவன் எனக்கு மங்களம் செய்யும் சிவனாக இருக்கட்டும்!" என்று அந்த மந்திரம் சொல்லி, முத்தாய்ப்பு வைக்கிறாற்போல, ஸதாசிவ நாமத்தைச் சொல்லி, ப்ரணவாக்ஷரம் கூட்டி **'ஸதாசிவோம்'** என்று முடிக்கிறது.

ப்ரணவம் அதன் முடிகிற சப்தமான 'ம்' என்பதாகக் குறுகி 'ஸதாசிவ' என்பதோடு ஒட்டிக் கொண்டே 'ஸதாசிவம்' பிறந்திருக்கிறது.

இங்கே முதலில் மாயா லோக வியாபாரத்தில் கஷ்ட ஸுகங்கள் தரும் திரோதான மூர்த்தியான ஈச்வரனைச் சொல்லி, அப்புறம் அதிலிருந்து விடுவித்து மோக்ஷம் தரும் அநுக்ரஹ மூர்த்தியான ஸதாசிவனைச் சொல்லி, முடிவாக

*தைத்திரீய உபநிஷத்தின் ஒரு பகுதியாக 'நாராயணவல்லி' என்று கூறப்படும் இப்பாகம் 'மஹா நாராயண உபநிஷத்' எனவும் வழங்கும்.

Koviloor Digital Library

அந்த மோக்ஷ ஸ்வரூபமேயான ப்ரணவமும் அவன்தான் என்று காட்டியிருக்கிறது. மாண்டூக்ய உபநிஷத்தில் 'சாந்தம், அத்வைதம்' என்று சொன்ன சிவம்தான் அது. அந்த உபநிஷத்தே ப்ரணவ விளக்கந்தான்.

சிவனும் சிவமும்

சிவம்; சிவன் இல்லை. சிவன் – அநுக்ரஹம் என்கிற கார்யம் செய்கிறவன். சிவம் – ஸகல கார்யமும் நின்று போய் அந்த அநுக்ரஹம் அநுபவ மாத்திரமாகப் பிரகாசிக்கிற பரப்ரம்ம நிலை!

அநுக்ரஹ மூர்த்தி ஸதாசிவன். அநுபவத்தில் அமூர்த்தியாயிருக்கும் ப்ரம்மம் ஸதாசிவம்.

அந்த அமூர்த்த ஸதாசிவந்தான் அநுக்ரஹத்துக்கே மூர்த்தியான ஸதாசிவனில் முடிகிற பஞ்ச க்ருத்ய மூர்த்திகளாகவும் மாயையில் கூத்தடிப்பது!

'ஸத்'தோடு ஸம்பந்தப்பட்டதாக 'ஸதா' என்பதைச் சொல்லலாம். எப்போதும் மாறாமல், சாகாமல் இருக்கிறதே ஸத். 'ஸத்யம்' என்று நீட்டிச் சொல்கிற அடி ஆதாரமான மெய்ப்பொருள். 'எப்போதும்' என்றேனே, அதைக் காட்டுவதுதான் 'ஸதா'. ஸத் – Eternity; ஸதா – Eternal.

சாந்தமாக என்றும் உள்ள ஸத்ய வஸ்து ஸதாசிவம். அந்த சாந்தம் மாயையில் சலித்து [சலனமுற்று]த்தான் ஸ்ருஷ்டி – ஸ்திதி – லய [ஸம்ஹார] – திரோதான – அநுக்ரஹங்கள் நடப்பது. வெளியிலே இப்படி சலிக்கிற அப்போதும், எப்போதும் — ஸதா — உள்ளே சாந்தம் சாந்தமாகவே இருக்கிறது. ஸ்ருஷ்டிக்கு முந்தி, லயத்துக்குப் பிந்தி ஸதாவும் சாந்த சிவம் இருந்தபடி இருந்து கொண்டே இருக்கிறது. அதுதான் மாயா ஸ்ருஷ்டியின் Base.

Koviloor Digital Library

மாறிக்கொண்டேயிருந்து அப்புறம் அழிந்தே போகிற மாயா ஸ்ருஷ்டியின் மாறாத Base; அழிவேயில்லாத Base. மரத்துக்கு base ஆன மண் மாதிரி அது. மண்ணில் விதை முளைக்கிறது. மரமாகிறது; அப்புறம் கடைசியில் அந்த மரம் மட்கிப் போகிறது. இதில் எத்தனையோ மாறுதல்கள்; முடிவாக அழிவு. விதையைத் தாங்கி உயிர்கொடுத்த மண்ணோ மாறாமலே இருக்கிறது. மாறாத அதன் மேலேயே விதை செடியானது; மரமானது; மரம் முற்றி, அப்புறம் மட்கியும் போனது! மட்கின மரமும் அந்த மண்ணோடேயேதான் மண்ணாக ஆகி விடுகிறது! அப்படி, மாயை நடக்கும் பிரபஞ்சத்துக்கும், அந்த மாயையையே நடத்தும் மஹேச்வரனுக்கும் ஸதாசிவமே Base. அதுமட்டுமில்லை; மாயையிலிருந்து விடுவிப்பதான அநுக்ரஹத்தைச் செய்யும் மூர்த்தியாக ஸதாசிவன் என்று இருக்கிறானே, அவனுக்கும் ஸதாசிவம் base. ஸதாசிவம் அமூர்த்தி, தத்வமயம்.

மாயா ப்ரபஞ்சம் எத்தனையோ கோடி கோடி வருஷம் நடந்து விட்டு—இத்தனை கோடி என்று கணக்கே இருக்கிறது—அப்புறம் ப்ரம்மத்தோடு ஐக்கியமாகிவிடும். அந்தக் கோடி கோடி காலத்தை 'ஸதா' என்று உபசாரமாகச் சொல்லி, அந்த 'ஸதா'வும் உள்ள ஈச்வரனை ஸதாசிவன் என்பது. ஆனால் அது உபசாரந்தான். நிஜமான 'ஸதா' மாயைக்கு அப்பாற்பட்ட ப்ரம்மந்தான். அதுவே ஸதாசிவம்.

மாய ப்ரபஞ்சம் உள்ளவரை அதை ஸதாவும் நடத்துபவன், அதிலிருந்து கடத்துபவன் ஸதாசிவன். கடந்தபின், மாயமும் ப்ரபஞ்சமும் அடிபட்டுப் போனபின் ஏக ஆத்மாவாக நிற்கிற சாந்த அத்வைதமே ஸதாசிவம்.

Koviloor Digital Library

'ம்'மில் முடியும் பெயர்கள்

வடதேசத்தில் 'ஸதாசிவ்' என்று பேர் வைத்துக் கொள்வார்கள். அதை 'ஸதாசிவன்' என்றும் 'ஸதாசிவம்' என்றும் இரண்டு தினுசாகவும் அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம். இரண்டிலும் எது என்று தீர்மானமாகச் சொல்ல முடியாது. தமிழில் அப்படியில்லை. தமிழ்நாட்டில் 'ஸதாசிவன்' என்று அதிகம் வைத்துக் கொள்வதில்லை; 'ஸதாசிவம்'தான் ஜாஸ்தி! ராமன், கிருஷ்ணன், ஸுப்ரம்மண்யன், கணேசன் என்று 'ன்'னில் முடிகிற பெயர்களாகவே வைத்துக் கொள்கிற நம்முடைய சீமையில் இங்கே மட்டும் ஸதாசிவன் இல்லை; ஸதாசிவம்தான்! வேதத்திலே ஸதாசிவ் நாமாவை நிர்குணமான ப்ரணவத்தோடு சேர்த்து ப்ரம்மமாக நிறுத்திக் காட்டியிருப்பதற்கேற்ப இப்படி சிவனை சிவமாக்கிப் பெயர் வைத்துக் கொள்கிறோம்.

சிதம்பரம், ஸ்ரீரங்கம் மாதிரி சில ஊர்ப்பெயர்களை மநுஷ்யர்களுக்கு வைக்கிறோம். பஞ்சாக்ஷரம், நமசிவாயம் என்று சைவர்களும், பாஷ்யம், வேதாந்தம் என்று வைஷ்ணவர்களும் பெயர்கள் வைக்கிறார்கள். இவை தத்வப் பெயர்கள். இதெல்லாம் 'ம்'மில் முடிந்தாலும் இங்கே விசேஷித்துச் சொல்ல ஒன்றுமில்லை. ஏனென்றால் ஊர், தத்வம் முதலானவை நபும்ஸகலிங்கம் என்கிற ந்யூடர் ஜென்டரே. தமிழில் ஒன்றன்பால், பலவின்பால் என்பது. அது 'ம்'மில்தான் முடியும். ஏகாம்பரம் என்றும் இந்தக் காஞ்சீபுரம் வட்டத்தில் நிறைய மநுஷப் பெயராக வைக்கப்படுகிறது. 'ஏகாம்ரம்'தான் தப்பாக 'ஏகாம்பர'மாயிருக்கிறது. 'ஏக ஆம்ரம்: ஒற்றை மா — அதாவது ஏகாம்ரேச்வரர் கோவிலில் இருக்கிற, ஒரே ஒரு பழம் பழுக்கிற, மா மரம். 'அம்பரம்' என்றால் ஆகாசம், 'அம்பர'த்தின் திரிபு 'அம்பலம்'. 'பொன்னம்பலம்' என்று

Koviloor Digital Library

மநுஷ்யர்கள் பேர் வைத்துக் கொள்ளும் போது, அந்த வார்த்தை ந்யூடர் 'ம்'மில்தான் முடிகிறதாகையால் அதில் குறிப்பிட்டுச் சொல்ல ஒன்றுமில்லை. இதே மாதிரிதான் அசேதனமான [ஜடமான] கல்லு, மணிகளை வைத்து மாணிக்கம், ரத்தினம், ராஜமாணிக்கம், நாகரத்தினம் என்று பெயர்கள் வைக்கிறபோதும் — இன்னுமுள்ள அநேக 'ம்'மில் முடிகிற பெயர்களிலும் — பெயரைக் கொடுத்திருக்கிற வஸ்து அசேதனமானதால் மநுஷப் பெயரும் ந்யூடர் முடிவாக இருப்பதில் விசேஷமில்லை.

ராமப்ரம்மம், ராமாவதாரம் என்று அபூர்வமாக வைத்துக் கொள்கிற பேர்களிலும், முடிகிற 'பிரம்மம்', 'அவதாரம்' என்கிறவை அதே ரூபத்தில்தான் வழக்கிலிருக்கின்றன. ஸுதர்சனம் என்கிற மஹாவிஷ்ணுவின் சக்கரம், வேலாயுதம் என்கிற முருகனின் அஸ்திரம் ஆகியவற்றைப் பேராக வைக்கிற போதும் அஃறிணையான அந்த ஆயுதங்களின் பெயர் 'ம்' என்றே முடிவதால் மநுஷப் பேரும் அப்படியே இருக்கிறது.

ஆனால் இந்த மாதிரிக் காரணங்களுக்கெல்லாம் வித்தியாஸமாக 'ஸதாசிவம்' என்று 'ம்'மில் முடிப்பதற்கு மட்டும் தனிப்பெருமை — யுனீக் டிஸ்டிங்க்ஷன் — இருக்கிறது! ஸதாசிவன் என்றே ஒரு பெயர் உள்ளபோதிலும்; ஸம்ஸ்கிருதத்தில் 'ஸதாசிவ:' [ஸதாசிவஹ] என்று புருஷப் பெயராக உள்ள பெயர் தமிழில் 'ஸதாசிவன்' என்று வந்திருக்கிறபோதிலும், 'ஸதாசிவம்' என்றே அது ஜாஸ்தி வழங்குவதற்குத்தான் தனிச்சிறப்பு. ஸகுண மூர்த்தியாக த்வைத ப்ரபஞ்சத்துடன் ஸம்பந்தப்பட்டிருக்கும் ஸதாசிவனைவிட நிர்குண அத்வைத தத்வமாக உள்ள ஸதாசிவத்தைத்தான் இந்த நம்முடைய தமிழ் தேசத்து மரபுகளை, வழக்கங்களை உருவாக்கித் தந்திருக்கிற நம் பூர்வ காலப் பெரியவர்கள் லக்ஷ்யமாக நினைத்திருக்

Koviloor Digital Library

கிறார்கள் என்று இதிலிருந்து தெரிகிறது. இது நமக்கு ரொம்பப் பெருமை; சிறப்பு அளிக்கிற பெருமை.

ந்யூடர் ஜென்டர் என்றால் பொதுவாக அது அஃறிணை என்பதான அசேதன [ஜட] வஸ்துவாகத்தான் இருக்கும். ஆனால் சிவம், வேதாந்தம், அவதாரம், ஞானம், சிவஞானம் என்றெல்லாம் மநுஷ்யர்களுக்கு வைக்கிற பெயர்களிலோ ந்யூடரானது உயர்திணை என்கிற நம்மை விடவும் ரொம்ப ரொம்ப உயர்ந்த திணையாயிருக்கிறது! சிவமேதான் வேதத்தின் அந்தமான வேதாந்தம், அது உண்டாக்கும் ஞானம் எல்லாமும். ஒரு தினுஸிலே பார்த்தால் சராசர வஸ்துக்களான ஸகலமுமே அதனுடைய அவதாரங்கள்தான்! ப்ரம்மத்திலிருந்துதான் அத்தனைக்கும் பிறப்பு: **ஜன்மாத்யஸ்ய யத:***

சின்னதான இந்த ஜீவ பாவம் போய், அகண்டமான, ஏகமான ஆத்மாவாக நாம் இருக்கும் உச்சநிலைதான் சிவம். அது என்றும் அழியாமல் சாச்வத ஸத்யமாயிருப்பது என்று காட்டவே 'ஸதா' போட்டுக்கொண்டு பேர் வைத்துக் கொள்கிறோம். ஸாக்ஷாத் ப்ரம்ம வாசகமே 'ஸதாசிவம்'. ஸதாசிவ ப்ரம்மம் என்றே ப்ரம்மஞானியும் இருந்திருக் கிறார்! 'ப்ரம்மேந்த்ராள்' என்று சொல்லப்படுகிறவர்.

முருகன் பெயர்கள்

ஸதாசிவத்தோடேயே சேர்த்துச் சொல்ல வேண்டிய இன்னும் இரண்டு பெயர்கள் — இரண்டும் ஸுப்ரம்மண்ய ஸ்வாமியின் பெயர்களே! ஒன்று, ஸுப்ரம்மண்யம் என்கிறதே! 'ஸுப்ரம்மண்யன்' என்றும் பேர் வைத்துக் கொள்கிறோமானாலும், 'ஸுப்ரம்மண்யம்'தான் ஜாஸ்தி இருக்கும் என்று நினைக்கிறேன். அந்த ஸ்வாமியின் ஒரு

* ப்ரஹ்ம ஸூத்ரம் 1.1.2.

Koviloor Digital Library

பெயராக 'ஷண்முகம்' என்றும் வைத்துக் கொள்கிறோம். 'ஷண்முகன்' என்று வைத்துக் கொள்வதேயில்லை! அதையே தமிழில் 'ஆறுமுகம்' என்றும். 'ஆறுமுகன்' என்று இல்லவேயில்லை! எதனாலோ ஸம்ஸ்க்ருதமாக இருக்கிற 'ஷண்முக'ப் பெயர்கூட பிராம்மணர்கள் வைத்துக் கொள்ளக் காணோம்! 'குமரேச', குமாரஸ்வாமி'ப் பேர்களும் பிராம்மணர்களில் குறைச்சலாகவே வைத்துக் கொள்வதாகப் பார்க்கிறோம். 'குமார்' மட்டும் ஃபாஷனாகத் தொனிப்பதால் வீட்டுக்கு வீடு இருக்கிறது — அநேகமாக அது ஸுப்ரம்மண்ய நாமா என்பது தெரியாமலே! குமாரஸ்வாமியின் மஹாமந்த்ரமாக 'ஷடக்ஷரீ' என்ற ஆறெழுத்துக் கொண்ட 'சரவணபவ' நாமமிருக்கிறது. அப்படியிருந்தும், எதனாலோ அந்தப் பெயரும் ப்ராம்மணர்கள் ரொம்பவும் அபூர்வமாகவே வைத்துக் கொள்கிறார்கள்...

ஷண்முகன், சரவணன் முதலிய பேர்கள் எதனாலோ ப்ராம்மணர்கள் வைத்துக்கொள்ளாததைச் சொல்லிக் கொண்டிருந்தேன். குமாரஸ்வாமியின் பெயர்களில் 'ஸுப்ரம்மண்ய'த்துக்கு அடுத்தபடியாக 'ஸ்வாமிநாத'ப் பெயர்தான் ப்ராம்மணர்களிடம் நிறையப் பார்க்கிறோம். கார்த்திகேயன் 'கார்த்திக்' ஆகி, ஸமீப காலமாக அந்தப் பெயரும் நிறையப் பார்க்கிறோம். 'குஹன்' என்று கொஞ்சம் கொஞ்சம். தக்ஷிணாமூர்த்தியான அப்பாவுக்கும் உபதேசித்தவர் என்பதால் 'குருஸ்வாமி', 'குருமூர்த்தி' என்ற பெயர்களும் ஸுப்ரம்மண்ய நாமமாகவே [ப்ராம்மணர்கள்] வைக்கிறார்கள். 'சிவகுரு' என்றும் கொஞ்சம் கொஞ்சம். 'தேவஸேனாபதி' — நல்ல ஸம்ஸ்க்ருதப் பெயராக இருந்தாலும் ப்ராம்மணர்களில் எங்கேயோ தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கலாம். ஸ்கந்த நாமம் ஸுப்ரம்மண்யர் பேர்களில் முக்யமான ஒன்று. அவரைப்

Koviloor Digital Library

பற்றிய புராணத்துக்கே 'ஸ்காந்தம்', 'ஸ்கந்த புராணம்' என்றுதானே பெயர்? ஆனால் 'கந்தஸ்வாமி' என்ற பெயர் அப்ராம்மணர்கள் வைத்துக் கொள்கிற மாதிரி ப்ராம்மணர்களில் காணோம்; எங்கேயோ சில பேர்தான் அப்படி இருக்கிறார்கள்.... 'ஸதாசிவம்' [என்பதில் வரும்] 'ம்' ஸமாசாரம் எங்கேயோ இழுத்துக்கொண்டு போய்விட்டது. விஷயத்துக்கு வருகிறேன்.

'ம்'மில் முடியும் ஸுப்ரம்மண்யம், ஷண்முகம், ஆறுமுகம் எல்லாம் 'ஸதாசிவம்' ஸம்பந்தப்பட்ட தத்வ விசேஷமுள்ள பெயர்கள். இவை வேத மந்திரம் ஸதாசிவமாகச் சொல்லி ஸ்துதிக்கும் ஈச்வரனின் ஐந்தாவது முகத்தோடு ஆறாவது முகமாக இன்னொன்றையும் கூட்டிக்காட்டுகிற பெயர்கள்!

'உள்முகத் தெய்வமணி'

ஈச்வரனுக்குத் திசைக்கொன்றாக ஒரு முகம், அது போக மேலே பார்க்க ஒன்று, அதற்கு ஊர்த்வ முகம் என்று பேர் என்று சொன்னேனோல்லியோ? அதே மாதிரி இந்த ஆறாவது முகம் அதோமுகம். மேலே பார்ப்பதால் 'ஊர்த்வம்.' கீழே பார்ப்பதால் 'அதோ'. 'அதோ கதி' என்கிறோம். அப்படியென்றால் மேல்லோகம் என்கிற மோக்ஷத்திற்கு வழியாயில்லாமல், கீழ் லோகமான நரகத்திற்கு வழி. ஆனால் ஸ்வாமியின் 'அதோமுகம்' என்கிறபோது இப்படி கெட்டதான, தாழ்ச்சியான அர்த்தமில்லை! ரொம்பவும் உசந்த அர்த்தமே.

மேலேயுள்ள ஆகாசம் பரவெளி. 'பரம்' என்றால் உயர இருப்பது, உயர்வானது; உயர்ந்த தத்வத்துக்கு ஸ்தூலமான ரூபகமாக இருப்பது அது. அகண்ட ப்ரஹ்மத்துக்கு ஸ்தூல ரூபகமே வெளியிலே தெரிகிற

Koviloor Digital Library

அகண்ட ஆகாசம். அது பரம், பரம பதம். அதைப் பார்க்கிற ஈச்வரனின் ஐந்தாவது முகத்துக்கான மூர்த்தியான ஸதாசிவத்துக்கும் ப்ரஹ்மமாகச் சிறப்புச் சொன்னேன். ஸ்வாமி அப்படிப் பர தத்வமாக, பரம தத்வமாக இருப்பதாலேயே 'பரமசிவன்', பரமசிவம்' என்பது. எப்படி வேறு எந்த தெய்வத்துக்கும் 'ஸதா' prefix [முன்னடை] இல்லையோ, அப்படியே இந்த 'பரம'வும் சிவன் ஒருத்தனுக்குத்தான்! சின்னக் குழந்தைகள் கூடப் 'பரமசிவன் – பார்வதி' என்றே சொல்கின்றன...! சிவனுக்கே பொதுவில் அதிகம் வழங்குகிற பேரான 'ஈச்வர'னுக்கும் பரம சேர்த்துப் 'பரமேச்வரன்' என்கிறோம்......

அது இருக்கட்டும். மேலே பார்க்கும் முகம் 'பரமம்' என்கிறாற்போல, கீழே பார்ப்பது அதமமா என்றால், அதுதான் இல்லை. இது அதோ முகமே தவிர அதமமுகமில்லை! ஒரு தினுஸில் அதைப் பரமத்துக்கும் பரமம், பரத்துக்கும் பரமான பராத்பரம் என்றுகூடச் சொல்லலாம். ஏனென்றால், இங்கே கீழே பார்ப்பது என்பது கண் மட்டத்துக்குக் கீழே ஹ்ருதயத்துக்குள் பார்த்துக் கொள்வதுதான். ஆகையால் 'அதோமுகம்' என்பதற்குக் 'கீழ்முகம்' என்றில்லாமல் 'உள்முகம்' என்றே அர்த்தம் பண்ணுவதுதான் ஸரி. இந்த உள்முகமும் ஐந்து முகங்களோடு சேர்ந்தே ஆறுமுகனாக உண்டான ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியை ராமலிங்க ஸ்வாமிகள் **'உள்முகத் தெய்வமணி'** என்று நம்முடைய ஹ்ருதய அந்தரங்கத்தில் இருக்கிற தெய்வ ரத்தினமாகச் சொல்லியிருக்கிறார். அந்த உள்ளே இருப்பது என்ன? மேலே ஆத்ம ஸ்வரூபம் என்கிற ப்ரஹ்ம ஸ்வரூபமானது பரவெளியான அகண்ட ஆகாசமாக இருக்கிறதென்றால், ஹ்ருதயத்துக் குள்ளே அதே ஸத்வஸ்து உள்வெளியான, 'தப்ர ஆகாசம்' என்கிற சின்ன ஆகாசமாக, சிற்றம்பலமாக இருக்கிறது!

Koviloor Digital Library

அந்தச் சிற்றம்பலத்தில் சிவனே நடராஜாவாக நாட்டியம் பண்ணுகிறார். அந்த நாட்டியத்துக்குப் பெயர் பஞ்ச க்ருத்ய பரமானந்த தாண்டவம் என்பதே. ஐந்தொழில் சொன்னேனே, அதுவேதான் இங்கே இவருடைய டான்ஸாக அமர்க்களப்படுகிறது! ஐந்தாவதான ஊர்த்வ முகத்தோடு ஸம்பந்தப்படுத்திப் பார்த்தோமே, அந்த அநுக்ரஹ க்ருத்யத்தை இங்கே [நடராஜாவின்] தூக்கிய திருவடி என்ற இடது பாதம் செய்கிறது! அதனால் அந்தப் பாதமே ஸதாசிவ ஸ்வரூபந்தான். அதையே ஒரு தனி ஸ்வாமியாகக் 'குஞ்சித பாதம்' என்று வைத்திருக்கிறது. சிதம்பரத்தில் நடராஜ மூர்த்தியோடு கூடவே தனியாகக் குஞ்சிதபாதம் என்று இடது பாதத்தையும் ஒரு தனி மூர்த்தியாக வைத்திருக்கிறது. பிரதி ராத்திரியும் பள்ளியறைக்கு எழுந்தருளப் பண்ணுவது அந்தக் குஞ்சிதபாதத்தைத்தான்.

ஆனால் அப்படி அம்பாளுக்குப் பதியாயிருக்கிற அந்தக் குஞ்சிதபாதமே, ரொம்ப வேடிக்கையாக, அம்பாளாகத்தான் இருக்கிறது! எப்படியென்றால், அது இடது பாதந்தானே? ஸ்வாமியின் இடது பாகத்தில் இருப்பதுதானே? அந்த இடது பாகம் அம்பாள்தானே?

அதாவது சிவ-சக்திகள் என்ற அத்வைத-த்வைதங்கள் ஐக்கியமாகிவிட்ட பராத்பர தத்வமாகவே குஞ்சிதபாதம் இருக்கிறது. அதனால்தான் 'குஞ்சிதபாதம்' என்றும் 'ம்'மில் முடிகிற ஒரு பெயர் மநுஷ்யர்கள் வைத்துக் கொள்வதாக இந்தத் தமிழ் தேசத்தில் ஏற்பட்டிருக்கிறது.

அதோமுகம் என்ற ஆறாவது முகம் இப்படி சிவசக்தி தம்பதிகளையே காட்டுகிறது என்றாலும், குறிப்பாக அந்த அநுக்ரஹ க்ருத்யத்திற்கே ஸ்தானம் கொடுத்து, அதைச் செய்யும் அம்பாளுடைய முகமாகவே அதைச் சொல்லியிருக்கிறது. ஸ்வாமி பஞ்ச முகத்தாலும், அம்பாள்

Koviloor Digital Library

ஆறாவது முகத்தாலும் வெளிப்பட்டு, இருவரும் ஒன்றுசேர்ந்தே குமாரஸ்வாமி ஆனதாகச் சொல்லியிருக்கிறது.

'ஸத்'தும் 'சித்'தும் சேர்ந்த 'ஆனந்த'மே ஸுப்ரஹ்மண்யம்

ஷண்முகம் – ஆறுமுகம் ஸமாசாரத்துக்கு வருகிறேன். குஞ்சித 'பாதம்' மாதிரிதான் இங்கே 'முகம்' என்று 'ம்'மில் முடியும் ஒரு அவயவத்தையே ஸ்வாமியாய் வைத்து மநுஷப் பெயர் ஏற்பட்டதா என்றால் — இல்லை! தனியாக அந்தப் பாதத்தை வைத்துப் பூஜிக்கிற மாதிரி ஸுப்ரம்மண்ய ஸ்வாமியின் ஷண்முகங்களை மட்டும் வைத்துப் பூஜிக்கிற வழக்கம் இல்லையே! மாரியம்மனுக்குத்தான் மூஞ்சி மட்டும்!

ஷண்முக ஸமாசாரம் என்னவென்றால்: பரமேச்வரனின் முகங்களிலுள்ள லலாட நேத்ரங்களிலிருந்து [நெற்றிக் கண்களிலிருந்து] சிவ தேஜஸ் ஆறு பொறிகளாக வெளிப்பட்டு, அப்புறம் ஆறு குழந்தைகளாகி, அதற்கப்புறம் ஆறு குழந்தைகளும் ஒட்டிக்கொண்டு ஷண்முகங்களோடும், த்வாதச புஜங்களோடும் ஒரே ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியாயிற்று என்று நிறையக் கேட்டிருக்கிறோமல்லவா? ஐந்தே முகம் என்றால் ஐந்து லலாட நேத்ரந்தான் இருக்க முடியும். ஒவ்வொன்றிலிருந்தும் ஒரு பொறி என்றால் ஐந்து பொறி, அப்புறம் ஐந்து குழந்தைகள் என்றுதானே இருக்க முடியும்? ஆனால் ஆறு பொறி, ஆறு குழந்தைகள், ஒன்று சேர்ந்து ஆறுமுகஸ்வாமி என்பதால் ஐந்தோடு ஆறாவதான அந்தப் பராத்பர அதோமுகத்தின் பொறியும் சேர்ந்திருக்கிறது என்றுதானே ஆகிறது? அப்படித்தான் சாஸ்திரத்திலும், புராணத்திலும் சொல்லியிருக்கிறது. சிவதேஜஸால் மட்டுமில்லாமல்

Koviloor Digital Library

சிவ-சக்திகளின் தேஜஸால் மூர்த்திகரித்தவனே ஸுப்ரஹ்மண்யம் என்பதுதான் புராணமும் சாஸ்திரமும் சொல்வது. பஞ்சக்ருத்ய மூர்த்திகளில் ஒருவனான ஸதாசிவனையும் உள்ளடக்கிய அம்பாளின் தேஜஸ் ஆறாவதான அதோ முகத்தாலேயே வெளியாகி ஷண்முகனை உண்டுபண்ணினது. ஸச்சிதானந்தம் — ஸத்-சித்-ஆனந்தம் எனப்படும் பரப்ரஹ்மத்தில் 'ஸத்'தாக இருக்கிற சிவமும், 'சித்'தாக இருக்கிற சக்தியும் ஒன்று சேர்ந்து 'ஆனந்த'மான ஸுப்ரஹ்மண்ய மூர்த்தியை உண்டுபண்ணினார்கள். அர்த்தநாரீச்வர மூர்த்தத்தில் பேர்பாதி ஸ்வாமி, பேர்பாதி அம்பாள் என்ற நியாயப்படி, இந்த மூர்த்தியை ஆறுமுகங்கள் உண்டு பண்ணினாலும், ஸ்வாமியினுடையதான ஐந்து முகங்களுக்கும் அம்பாளுடையதான ஆறாவது முகம் ஒன்றே ஸம எடை!

அம்பாள் இங்கே தன்னுடைய முக்யமான க்ருத்யமான அநுக்ரஹத்தை ஸதாசிவன் என்ற அதிகாரி மூலம் செய்விக்கிறாள். அதுதான் நமக்கான பாயின்ட். 'போகம் தரும் அநுக்ரஹம் மோக்ஷம் தரும் அநுபவத்திலேயே சேர்க்கிறதைக் காட்டத்தான் ஸதாசிவ நாமாவோடு ப்ரணவம் சேர்த்தது; அந்த ப்ரணவமே குறுகி 'ம்'மாகி ஸதாசிவம் என்றாயிற்று' என்று பார்த்தோமல்லவா? அது காரணமாகவேதான் அதே ஸம்பந்தம் ரொம்ப நெருக்கமாகவுள்ள ஸுப்ரஹ்மண்ய நாமாவோடும் ப்ரணவம் சேர்த்து 'ஸுப்ரஹ்மண்யோம்' என்று முடிவதாக வேத மந்த்ரம் இருக்கிறது*. ஒரே ஒரு தரம் மாத்திரம் ஸதாசிவ நாமாவோடு ப்ரணவம் சேர்த்துச் சொல்லியிருக்கிறது என்றால், ஸுப்ரஹ்மண்ய நாமாவையோ மூன்று தரம் ஒவ்வொரு தடவையும் ப்ரணவம் சேர்த்துச்

*'நிக்ருஷ்வை ரஸமாயுதை:' எனத் தொடங்குவது. முருகனுக்குரிய வைதிக மந்திரமாக ஓதப்படுவது.

Koviloor Digital Library

சொல்லியிருக்கிறது! ஸத்ய ப்ரமாணம்கூட மூன்று தரம்தானே பண்ணுகிறோம்? வெள்ளைக்காரர்களும் thrice blessed என்றுதானே சொல்கிறார்கள்? 'ஸ்வாமி', 'அம்பாள்', இரண்டும் சேர்ந்த 'குழந்தை ஸ்வாமி' என்ற மூன்று பேருக்காகவும், ஸத்-சித்-ஆனந்தம் என்ற மூன்றுக்காகவும் மூன்று தரம் போலிருக்கிறது!

இப்படித்தான் 'ஸுப்ரம்மண்யம்' என்று பேர் வந்தது.

சிவ-சக்திகளுடைய ஆறுமுகங்கள் ஐக்கியமானதில் இருக்கிற பரம தத்வமான உயர் திணை ந்யூடர் ஜென்டரைக் காட்டவே ஷண்முக-ஆறுமுகப் பெயர்களும் 'ம்' போட்டுக் கொண்டு முடிவதாக வைத்திருக்கிறார்கள். **"ஆறுமுகம் ஆன பொருள் நீ அருளல் வேண்டும்"** என்கிற போது அருணகிரிநாதர் 'அருள்'லாகிய அநுக்ரஹத்தைச் சொல்லும்போது இந்த உயர்திணைத் தத்வ ந்யூடரை உறுதிப்படுத்தியிருக்கிறார் என்று தோன்றுகிறது!

ஸத்யம், சிவம், ஸுந்தரம்

ஆனால் இந்த ஸுப்ரஹ்மண்ய நாமாக்களுக்கும் parent என்ற பெருமை ஸதாசிவம் என்பதற்குத்தான்!

த்வைதலோகத்துக்கு அப்பாற்பட்ட பரமதத்வமாக மட்டும் அது இருந்து விட்டால் அஞ்ஞானிகளான நமக்கு அதனால் என்ன ப்ரயோஜனம்? நமக்கும் பரம ப்ரயோஜனமாக அந்த அத்வைத ஆத்ம ஸ்வரூபமே அன்பு உருவமாகவும் இருக்கிறது. அன்பு நிஜமானதாக இருந்தால் அந்த அன்பில் நம் ஹ்ருதயம் உருகி, நாம் என்கிற அஞ்ஞான ஜீவ பாவம் உருகி, நமக்குப் பெரிசான ஒரு ஸாதனையாகத் தெரியாமலே, ஞானம், கீனம், ப்ரஹ்ம வித்யை, அத்வைதம் என்றெல்லாம் தெரியாமலே, அந்த அன்பு ஸ்வாமியுடன் ஒன்றாகி விடுவோம். அந்த **அன்பே சிவம்.**

Koviloor Digital Library

பெரிசாகத் தெரியாததால், தெரிய வேண்டிய அவசியமும் இல்லாததால் அதற்கு 'மஹா' அடைமொழி இல்லை! பெரிய கார்யமாக இத்தனை லோகத்தையும் மாயையில் ஆட்டிக் கொண்டிருப்பவன் 'மஹா' போட்டுக்கொண்டு மஹேச்வரனாக இருந்தாலும், அநுக்ரஹத்தில் அன்பால் நம்மைத் தன்னில் கரைத்துக் கொண்டு சிவமாக இருக்கிறவன் 'மஹா' போட்டுக் கொள்ளவில்லை! ஆனாலும் அவனுக்குள்ளே நாம் கரைந்தது கரைந்ததுதான்; அதுதான் ஸதா காலத்துக்குமான ஸத்ய நிலை என்பதால் அவனுக்கு 'ஸதா' போட்டு 'ஸதாசிவ' என்கிறோம்.

மற்ற ஸ்வாமிப் பெயர்கள் எதுவும் இப்படி எளிசாயிருக்கிற அன்பாலே என்றுமுள்ள ஸத்ய ஸாக்ஷாத்காரம் கிடைப்பதைச் சொல்லாததாலேயே அவை எதற்கும் 'ஸதா' போடவில்லை. அவற்றின் பெருமையை வைத்து சிலதுக்கு [சிலவற்றுக்கு] 'மஹா' போடுகிறோம். நம்மில் நாமாகக் கனிந்து, தன்னில் தானாக நம்மைக் கரைத்துக் கொள்கிற ரொம்பவும் கிட்டின உறவுக்காரனுக்கு அந்த 'மஹா' தேவையில்லை! அவனுடைய 'யுனீக்' உறவால், உறவும் போய் என்றைக்கும் ஒன்றாகச் செய்து கொள்வதால் 'யுனீக்' அடைமொழியாக 'ஸதா'!

அது அன்பு ஆனாலும் 'அன்பு' என்றோ, 'ப்ரேமை,' 'ப்ரியம்' என்றோ பெயர் வைப்பதாகக் காணோம்! அன்பேதான் சிவமாச்சே! அதனால் 'ஸதாசிவம்' என்றே வைக்கிறோம்! அன்பிலே உண்டாவது ஆனந்தம். 'ஆனந்தம்' என்றும் தனியாகப் பெயர் வைக்காமல் அவனோடு சேர்த்தே 'சிவானந்தம்' என்று வைக்கிற வழக்கம் கொஞ்சம் கொஞ்சம் இருக்கிறது. தற்காலத்தில் 'ஆனந்த்' நடமாடினாலும், இதுதான் வழி வழியாய் வந்த வழக்கு. இதுவும் ரொம்ப ரொம்ப உயர்திணை ந்யூடர்.

Koviloor Digital Library

இன்னொன்று: சிவமான அந்த அன்புதான் அழகும்! அதனால் ஸுந்தரம் என்றும் பேர் வைக்கிறோம். எதனாலோ 'சிவ ஸுந்தரம்' என்று காணோம்! 'சிவ' என்கிறதே ஸுந்தரமாயிருக்க, சிவ ஸுந்தரம் என்பானேன்? என்று இருக்கலாம். சிவ ஸாம்யயமான குஞ்சிதபாதத்தை வைத்து 'சிவபாதஸுந்தரம்' என்று பெயர் வைப்பதைப் பார்க்கிறோம். அவனை அம்பாளோடு சேர்த்து 'மீனாக்ஷிஸுந்தரம்' என்று; அப்படிக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வந்த மாப்பிள்ளையாகக் 'கல்யாண ஸுந்தரம்' என்று; மாப்பிள்ளை பெரிய அலங்காரமாகச் சூட்டிக் கொண்ட சந்திரனை வைத்து 'ஸோமஸுந்தரம்' என்று — இப்படியெல்லாம் பேர் வைக்கிறோம். ராமன் பூராத [புகாத] இடமில்லையாதலால் 'ராமஸுந்தரம்' என்றும்! க்ருஷ்ண பரமாத்மா மட்டும் விட்டு வைப்பானா? அவன் பேராக 'மோஹன ஸுந்தரம்'; நம்முடைய மாயத்தைப் போக்கடிக்கிற மோஹம் அது! அதாவது, ஞானத்துக்கே மோஹமென்று இங்கே பெயர்! 'ஞானஸுந்தரம்' என்று கூடப் பெயர் இருக்கிறது. மறந்து விட்டேனே, சிவம் - ஷண்முகம் ஸம்பந்தம் பார்த்ததற்கேற்ப 'ஷண்முக ஸுந்தர'மும் இருக்கிறது! ஸ்திரீகளிலுங்கூட 'ஸௌந்தரம்' என்று பேர் இருக்கிறது.

அன்புதான் அழகு என்பதால் இத்தனைக்கும் அடிப்படை **அன்பே சிவம்**தான்! அதனால்தான் அந்தப் பரமாத்மாவின் பெயராகத் தமிழ் 'அன்பு', ஸம்ஸ்கிருத 'ஸுந்தரம்' இரண்டையும் சேர்த்து 'அழகு ஸுந்தரம்' என்றே கூடப் பேர் வைக்கிறோம்!

ஏதோ ஸமீப காலத்தில்தான் ப்ரம்ம ஸமாஜிகள் 'ஸத்யம்-சிவம்-ஸுந்தரம்' என்று 'ஸத்-சித்-ஆனந்தம்' மாதிரியே பரம தத்வத்தைச் சொல்லும் ஒரு phrase-ஐ [சொற்றொடரை]க் கொடுத்திருக்கிறார்கள் என்றில்லை.

Koviloor Digital Library

இந்தத் தமிழ் தேசத்து மரபில் மற்ற எந்தப் பெயருக்கும் இல்லாத சிறப்பான சப்த ரூபத்தில், ஸத்யத்தையும் சிவத்தையும் சேர்த்து 'ஸதாசிவம்' என்றும், அந்த சிவமான அன்பின் அழகை 'ஸுந்தரம்' என்றும் பெயர்களாக வைப்பதிலேயே அந்தக் 'கான்ஸெப்ட்' நம்மிடையிலே நமக்கே தெரியாமல் தன்னியற்கையாக நெடுங்காலமாகவே இருந்திருக்கிறதென்று தெரிகிறது.

ஸத்யமும் ஸுந்தரமுமான அந்த சிவம் — சிவமான அன்பு — லோகம் பூராவும் தழைக்கணும்! அதற்கு, அநுக்ரஹத்துக்கென்றே ஏற்பட்ட மூர்த்தியான ஸதாசிவ மூர்த்தி அநுக்ரஹிக்கணும்!

Koviloor Digital Library

நமஸ்காரத் தத்வம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

நமோ நம:*

தமக்கு இல்லாத பாக்யம்

என்னைப் பெரியவனாக நினைத்து எல்லாரும் நமஸ்காரம் பண்ணுகிறீர்களென்றால் எனக்கும் நிஜமாகவே பெரியவர்களாக இருக்கப்பட்டவர்களை நமஸ்காரம் பண்ணணுமென்று நிறைய இருக்கிறது. ஆனால் ஸ்தானம் — ஜகத்குரு, பீடாதிபதி, இன்னும் பகவத்பாதாள் பெயரே வந்து சேர்ந்து விட்டதால் — அதுவும் — சின்ன வயஸிலேயே, ஒரு யோக்யதையும் இல்லாதபோதே வந்து சேர்ந்து விட்டதால், 'பெரியவர்' என்று நேரே நடமாடிக் கொண்டிருக்கிற இன்னொருத்தருக்கு நமஸ்காரம் பண்ணும் பாக்யம் அன்னியிலிருந்தே [அன்றிலிருந்தே] எனக்கு இல்லாமல் போய் விட்டது. ஊர் நமஸ்காரத்தையெல்லாம் வாங்கிக் கொண்டு, நாம் ஒருத்தருக்கும் நமஸ்காரம் பண்ணாமல் இப்படியொரு ஜம்ப ஜன்மாவா என்று இருக்கிறது.

துறவி குறித்து ஆசார்யாளின் விதி

இத்தனையிலும் ஆசார்யாள் ஒரு பெரிய நல்லது பண்ணியிருக்கிறார். என்னவென்றால், 'ஸந்நியாஸிகள்

---

* இவ்விஷயமாக 'தெய்வத்தின் குரல்' முதற் பகுதியில் 'நமஸ்காரம்'; ஐந்தாம் பகுதியில் 'குருமூர்த்தியும் திரிமூர்த்திகளும்' என்ற உரையில் 'நமஸ்காரமே செல்வம் : ஆசார்யாள் உணர்த்துவிப்பது' என்பதிலிருந்து தொடரும் சில பகுதிகள்; நிகழ் (ஏழாம்) பகுதியிலேயே இதற்கு முந்தைய உரையான 'குரு–சிஷ்ய உறவு' என்ற உரை ஆகியவற்றிலும் பார்க்கலாம்.

Koviloor Digital Library

என்று இருக்கிற எங்களைப் பெரியவர்களாக வைத்து நீங்கள் நமஸ்காரம் பண்ணினாலும் வாஸ்தவத்தில் அந்த நமஸ்காரம் எங்களைச் சேர்ந்தது என்று நாங்கள் நினைத்து விடக்கூடாது. ஜகத் வ்யாபாரம் ஸகலத்தையும் நடத்திக் கொண்டிருக்கிற பரமாத்மாவும் பராசக்தியுமான ஒன்றுக்குத்தான் எவர், எங்கே செய்கிற நமஸ்காரமும் ஸொந்தம்' என்று அவர் ஞாபகப்படுத்தியிருக்கிறார். அதோடு நிற்காமல், நீங்கள் செய்கிற நமஸ்காரத்தை நாங்கள் எங்களுக்கேயாக்கும் என்று ஸ்வீகரித்துக் கொண்டுவிடாமல் அந்த ஒன்றிடம் சேர்த்து விடும்படியாக எங்களுக்கு ஒரு விதியும் பண்ணிக் கொடுத்திருக்கிறார். என்ன விதி என்றால், கேட்கிறதற்கு ரொம்ப ஈஸியாகத் தோன்றும், அப்படி ஒன்று.

ஆசார்யாளும் நாராயண நாமமும்

ஜகத் வியாபாரத்திற்குக் காரண சக்தி என்று சொன்னேனே, அதை ஆசார்யாள் தம்முடைய பாஷ்யப் புஸ்தகங்களில் 'நாராயண' என்ற பெயராலேயே குறிப்பிட்டிருப்பார். அதற்கு அநேக காரணம். இப்போது அந்த டிஸ்கஷனில் இறங்காமல் குறிப்பாக ஒன்றைச் சொல்லி நிறுத்திக் கொள்கிறேன்.

தத்வங்களை அலசி அலசி முடிவு கண்டு வேதாந்தம், மீமாம்ஸை, ஸாங்க்யம், ந்யாயம் என்றெல்லாம் சாஸ்திரங்களைப் படைத்த தேசம் நம்முடைய இந்த தேசம். முக்யமாக இந்த சாஸ்திரங்களில் ஈடுபட்டவர்களை உத்தேசித்துத்தான் ஆசார்யாள் பாஷ்யப் புஸ்தகங்கள் எழுதினது. ஆனாலுங் கூட.....

தத்வ ஆராய்ச்சிக்கு இந்த தேசம் பெயர் போனது என்றாலும் அதைவிட இதற்கு ஜாஸ்திப் பெயர் — நல்ல பெயர், அவப்பெயர் இரண்டுந்தான் — எதில் என்றால் dry

Koviloor Digital Library

தத்வமாக இல்லாமல், ஆனாலும் தத்வ ரூபமாகவே இருக்கிற ஜீவனுள்ள மூர்த்திகளாக ஏகப்பட்ட தெய்வங்களைக் காட்டியிருப்பதற்குத்தான். ஆகையினால் ஆசார்யாள் தம்முடைய பாஷ்யங்களில் ப்ரபஞ்சகாரண சக்தியான பரமாத்மாவை அப்படியொரு தத்வமாகவே முழுக்கச் சொல்லிக் கொண்டு போய்விடாமல், மூர்த்தியாக பாவித்து உறவு கொண்டாடிப் பழகிப் போன ஸமூஹத்திற்கு 'அப்பீ'லாகும்படியான ஒரு நாமத்திலேயும் அங்கங்கே குறிப்பிட வேண்டுமென்று நினைத்திருக்கிறார். அப்போது எந்த ஸ்வாமியின் நாமாவைப் போடுவது?

ஏகப்பட்ட ஸ்வாமிகள் இருந்தாலும் ஆதியிலிருந்து இன்றுவரை நம் ஜனங்களை சைவர்-வைஷ்ணவர் என்று இரண்டு broad divisionகளாகவே வைத்து விடலாம். இப்படி இரண்டு பேர் சிவன், விஷ்ணு என்று இருப்பதில் எதைப் போடுவது என்று ஆசார்யாள் பார்த்திருப்பார். ஆசார்யாள் யார்? சிவ அவதாரந்தானே? அதனால், 'தன் பெயரையே போட்டுக் கொள்ளவாவது?' என்று நினைத்திருப்பார். சிவனுக்கு ரொம்பவும் ஆப்தம் மஹாவிஷ்ணு; அப்படியே மஹாவிஷ்ணுவுக்கும் சிவன். ஆனபடியாலேதான் ஜகத்காரண சக்தி, ப்ரபஞ்ச மஹாசக்தி, ஸகுண ப்ரம்மம், ஈச்வரன் என்றெல்லாம் வேதாந்தத்திலே சொல்கிற பரமாத்மாவுக்கு ஒரு மூர்த்தி காட்டுகிற இடத்திலெல்லாம் அவர் 'நாராயணன்' என்றே பேர் போட்டு விட்டார்....

நடுவாந்தரத்தில் 'ஈச்வரன்' என்று ஒரு வார்த்தை சொன்னேன். ஈச்வரன் என்றாலே சிவன் என்று பொதுப்படை அபிப்ராயமாகியிருந்தாலும் வேதாந்த சாஸ்திரத்தில் ஸகுண ப்ரம்மத்துக்கே அந்தப் பேர். ராமாநுஜாசார்யார், மத்வாசார்யார் எல்லாருங்கூட அந்த அர்த்தத்தில் அதே பேரைத்தான் போட்டிருக்கிறார்கள்......

"ஆசார்யாள் 'சிவாநந்த லஹரி', இன்னும் அநேக சிவ ஸ்தோத்ரங்களெல்லாம் பண்ணியிருக்கிறாரே, அங்கே

Koviloor Digital Library

மட்டும் எப்படித் தன்னையே தான் ஸ்துதித்துக் கொண்டார்?” என்று கேட்டால், அதெல்லாம் பக்தி ஸ்துதிகள். பலவேறு ஸ்வாமிகளை இஷ்ட தெய்வமாகக் கொண்ட பலவேறு ஜன ஸமூஹங்களுக்கும் அவரவருடைய இஷ்ட தெய்வத்திடம் மனஸை நிறுத்துவதற்கு ஸஹாயமாக ஆசார்யாள் அத்தனை ஸ்வாமிகளையும் பற்றிப் பாட வேண்டியிருந்தது. அதிலே ப்ரதான தெய்வங்களில் ஒன்றான சிவனை எப்படி விட முடியும்? ஆகையினாலே சிவபரமான ஸ்துதிகளும் பண்ணினார்.

ஆசார்யாள் தமக்கென்று எந்த ‘ஐடென்டிடி’யும் இல்லாத ஆத்ம ஸ்வரூபமாக இருந்தவர். அதனாலேயே அவரால் எவரெவர் மனப்பான்மையுடனும் ‘ஐடென்டிஃபை’ பண்ணிக் கொண்ட மாதிரி இருந்து கொண்டு, அவரவரையும் மேலே உசத்திக் கொண்டு போக வழிபண்ண முடிந்தது. ஒரு கலரும் இல்லாத ஜலம் கரிசல் பூமியில் பாய்கிற போது கறுப்பு மாதிரி, செம்மண் பூமியில் பாய்கிற போது சிவப்பு மாதிரி எல்லாம் தெரிகிறதோல்லியோ? அப்படி! இப்படி இருந்ததில் பக்தி வழியில் போய் விருத்தியாகக் கூடியவர்களுக்காக அவர் எல்லா ஸ்வாமிகளின் மேலேயும் ஸ்தோத்ரங்கள் பண்ணும் போது அந்தந்த ஸ்வாமிக்கும் பக்தராக ஐடென்டிஃபை ஆன மாதிரி இருந்தார். அந்த ரீதியிலே ஈச்வரபரமாக, அதாவது சிவனைப் பற்றி ஸ்தோத்ரம் பண்ணும் போதும் அவர் சிவாவதாரமாக இல்லாமல் சிவ பக்தராகவே பாடிக் கொடுக்க முடிந்தது. அவதாரமாயிருந்தால்தானே தன்னையே தான் ஸ்தோத்ரம் பண்ணிக் கொண்டதாகும்? அப்படியில்லாமல் சிவ பக்தராக இருக்கும் போது தமக்கு பகவானான அந்த சிவனை எத்தனை வேண்டுமானாலும் ஸ்தோத்திரிக்கலாந்தானே?

“தம்முடைய மடங்களிலே அவர் சந்த்ரமௌளீச்வரர் என்று சிவனைத்தானே ப்ரதானமாக வைத்து மற்ற

Koviloor Digital Library

ஸ்வாமிகளைப் பரிவாரமாக வைத்திருக்கிறார்? எல்லா ஜனங்களுக்குமான மடத்தில் எல்லா ஸ்வாமிகளுக்கும் ஸம ப்ரதான்யம் கொடுக்காமல் ஏன் இப்படிப் பண்ணினார்?" என்றால், இது அவர் உத்தேசித்து ப்ளான் போட்டுப் பண்ணிய கார்யமே இல்லை. அந்தப் பரமேச்வரனேதான் தன்னுடைய இந்த அவதாரத்திடம் ஐந்து ஸ்படிக லிங்கங் களைக் கொடுத்து தேசத்தில் ஐந்து இடங்களில் ப்ரதிஷ்டித்து சாச்வதமாகப் பூஜை நடக்கப் பண்ணும் படியாக ஆக்ஞை செய்தார். அப்படியே நடத்தும் போது ஆசார்யாள் தம்முடைய மடங்கள் இரண்டிலும் அந்த லிங்கங்களில் இரண்டை ப்ரதிஷ்டை பண்ணினார் — இங்கே நம் [காஞ்சி] மடத்திலும், ச்ருங்கேரி மடத்திலும். பரமேச்வரனே கொடுத்து, பூஜிக்கும்படியாகவும் ஆக்ஞை பண்ணியதால் அந்த லிங்கங்களுக்கே ப்ரதான மூர்த்தியாக ஸ்தானம் கொடுத்து மற்ற ஸ்வாமிகளைப் பரிவாரமாக வைக்க வேண்டும் என்றாகி விட்டது. இப்படி இரண்டு மடங்களில் செய்ததால் தம்முடைய மற்ற மடங்களிலும் அதே போலச் செய்தால்தானே 'யூனிஃபார்மிடி' இருக்கும் என்று நினைத்து எல்லா மடங்களிலும் சிவபஞ்சாயதன மாகவே* பூஜையை ஆசார்யாள் வைக்கும்படி ஆயிற்று.

"எல்லாம் சரி. ஆனால் ஆத்ம சாஸ்த்ரமான பாஷ்யப் புஸ்தகங்கள் எழுதும்போது ஆசார்யாள் 'ஒரு ஐடென்டிடியும் இல்லாத ஆத்ம ஸ்வரூபம்' என்றீர்களே, அப்படித்தானே இருந்து கொண்டிருக்க வேண்டும்? அங்கே எதற்கு அவர் சிவ அவதார ஐடென்டிடியை வைத்துக் கொண்டு 'நாமே நம்மைச் சொல்லிக் கொள்ளவாவது? அதனால் 'நாராயண' என்று போடுவோம்' என்று நினைக்க வேண்டும்?" என்று கேட்டீர்களானால், பதில் வைத்திருக்

* சிவபெருமானை நடுநாயகமாகவும் அம்பிகை, திருமால், விநாயகர், ஸூர்யன் ஆகிய நால்வரைப் பரிவாரமாகவும் கொண்டதே சிவபஞ்சாயதனம்.

Koviloor Digital Library

கிறேன். [சிரித்து] 'கொஸ்ச்சின் பேப்பர்', 'ஆன்ஸர் பேப்பர்' எல்லாம் 'ப்ரிபேர்' பண்ணிக் கொண்டுதான் கதை அளக்க வந்திருக்கிறேன்!

என்ன ஆன்ஸர் என்றால், ஆத்ம ஸ்வரூபம் புஸ்தகமே எழுதாது! எதுவும் பண்ணாது! அது பாட்டுக்கு இருக்கிறபடி இருக்கும். இருக்கும்தானே ஒழியப் பண்ணாது! எப்போது புஸ்தகம் எழுத உட்கார்ந்தாரோ அப்போதே ஆத்ம ஸ்வரூபம் போய் அவதாரம் வந்தாச்சு என்று அர்த்தம்...... ஸரியாகச் சொன்னால், ஆத்ம ஸாக்ஷாத்கார ஸமாதி நிலை போன மாதிரியும், லோகத்திலே தர்மாபிவிருத்திக்காகக் கார்யம் பண்ண வேண்டிய 'ட்யூடி' உள்ள அவதாரமே தாம் என்று அவர் நினைத்த மாதிரியும் உள்ளபோதுதான், 'புஸ்தகம் எழுதறேண்டா' என்று அவர் உட்கார்ந்து கொண்டது. அந்த நிலையில், அவதாரம் என்றால் யாருடைய அவதாரம் என்றும் கேள்வி வரத்தானே செய்கிறது? சிவாவதாரம் என்று பதில் கிடைக்கிற போது அவதார சிவனே ஆதார சிவனைச் சொல்லிக் கொள்வது ஔசித்யமில்லை [உசிதக் குறைவானது] என்றும், விஷ்ணுவைச் சொல்வதுதான் அழகு, ஸமரஸம், கௌரவம் என்றும் ஆகிறதோல்லியோ?

ஆகக் கூடி, ஜகத்துக்குக் காரணப் பொருளாக இருக்கப்பட்ட மூலத்துக்கு ஆசார்யாள் நாராயணப் பேர் கொடுத்தே பாஷ்யப் புஸ்தகங்களில் எழுதியிருப்பது. அந்தப் புஸ்தகங்களின் பரம தாத்பர்யம் பரமாத்ம ஜீவாத்மாக்களின் அத்வைதம். அவற்றிலே சிவாவதாரமானவர் விஷ்ணுவின் பெயரைப் போட்டிருப்பதில் ஹரிஹராத்வைதமும் [திருமாலும் சிவ பெருமானும் ஒன்று என்பதும்] வந்து விடுகிறது!........

Koviloor Digital Library

மஹாவிஷ்ணுவுக்கு எத்தனையோ பேர், ஸஹஸ்ர நாமமே இருக்கும் போதிலும் ஏன் நாராயண நாமத்தைப் போட்டாரென்றால் அதுதான் மஹாவிஷ்ணுவுக்குப் பரம மந்த்ரமாக இருக்கிற அஷ்டாக்ஷரீயில் வருகிற பெயர்.

அயனம் என்றால் வழி, பாதை என்று ஒரு அர்த்தம். பாதை வழியாகப் போய்ச் சேருகிற இருப்பிடம் என்றும் அர்த்தம். நரர் என்கிற ஜீவாத்மாக்களுக்கு இரண்டு அர்த்தத்திலும் அயனமாக இருக்கிறவன் நாராயணன். கடைத்தேறும் வழியான ப்ரஹ்மவித்யா சாஸ்திரமாக இருப்பவன் அவனே. **"அத்யாத்ம வித்யா வித்யானாம்"** என்று அவனே கிருஷ்ண பரமாத்மாவாக வந்த போது சொல்லிக் கொண்டிருக்கிறான்[1]. அந்த வித்யையின் முடிவாக, பலனாக சென்று சேரும் இருப்பிடமான பரப்ரஹ்மமாக இருப்பவனும் அவனே. ஆகையினாலேதான் ப்ரஹ்ம வித்யா குரு பரம்பரையைச் சொல்லும் போது "நாராயணம்" என்றே ஆரம்பிக்கிறது.[2] ஆகையால் ப்ரஹ்ம வித்யா சாஸ்திரமான பாஷ்யப் புஸ்தகத்தில் நாராயண நாமத்தைச் சொல்லுவது ரொம்பவும் பொருத்தமானதே.

சங்கர நாமாவோடேயே நாராயண நாமாவைச் சேர்த்துத் தான் 'சங்கரநாராயணன்' என்றே பெயரும் இருக்கிறது. தென் பாண்டி நாட்டில் சிவ விஷ்ணு ஒற்றுமையை இரண்டு பேரும் ஒரே சரீரத்தில் ஒன்று சேர்ந்திருக்கிற மூர்த்தியால் எடுத்துக் காட்டிக் கொண்டு பெரிய க்ஷேத்ரம் இருக்கிறது. அந்த மூர்த்திக்கு சங்கரநாராயணன் என்றே பேர்.....

1. கீதை 10.32.
2. 'நாராயணம் பத்மபுவம்' என்ற ஸ்மார்த்தர்களுக்கான குரு பரம்பரை ச்லோகம். 2-ம் பகுதி, "நம்மை நாமாக்குபவர்" என்ற உரை பார்க்க.

Koviloor Digital Library

'ஸ்மார்த்த'*ரான போதிலும் 'வீரசைவர்' என்று சொல்கிற அளவுக்குப் பரமசிவன் மட்டுமே தெய்வம் என்று அபிப்ராயப்பட்ட ஒருத்தர் இருந்தார். அவர் நமஸ்காரம் பண்ணும்போது நான் 'நாராயண' சொல்வது அவருக்கு ஸங்கடமாக இருந்திருக்கிறது. நான் வாய்விட்டு அப்படி அதிகம் சொல்கிறதில்லைதான். ஆனாலும் மடத்து ஸம்ப்ரதாயம் அப்படித்தான் என்று அவருக்குத் தெரியும். அதனால் ஸங்கடப்பட்டிருக்கிறார். என்னிடமே ஒரு நாள் கேட்கவும் கேட்டுவிட்டார்.

அவரிடம் நான், "சிவபக்தர்கள், விஷ்ணு பக்தர்கள் முதலான அத்தனை ஹிந்து மத ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் உபநிஷத்துக்கள் பொதுதானே? அவற்றிலே சிவ குமாரனான ஸ்கந்தன் பேரில் 'ஸ்கந்தோபநிஷத்' என்று இருக்கப்பட்டதில் **விஷ்ணோச்ச ஹ்ருதயம் சிவ:** — 'விஷ்ணுவின் ஹ்ருதயத்தில் சிவன் இருக்கிறார்' — என்று இருக்கிறது. அதனால், நான் சொல்கிற நாராயண நாமத்துக்கும் உயிர் கொடுக்கிற ஹ்ருதயமாக சிவன்தானே இருக்க வேண்டும்?" என்று கேட்டேன்.

அவர், "ஆமாம், ஆமாம்" என்று ஒப்புக் கொண்டு த்ருப்தராகப் போனார்.

நான் கொஞ்சம் 'ஸாமர்த்யம்'தான் பண்ணி விட்டேன்! [ஏனென்றால்] நான் அவரிடம் சொன்னது half truth–தான்! இன்னொரு half என்னவென்றால்: **"விஷ்ணோச்ச ஹ்ருதயம் சிவ:"** என்பதற்கு முன் பாதமாக அதே மந்த்ரத்தில் **"சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு:"** — 'சிவனுடைய இதயத்தில் விஷ்ணு இருக்கிறார்' என்றும் இருக்கிறது.

* அனைத்துக் கடவுளரையும் ஏற்கும் ஸ்மிருதிகளைப் பின்பற்றும் ஸ்ரீ சங்கராசாரிய மரபுக் குடியினர்.

Koviloor Digital Library

அந்தத் தீவிர சிவபக்தரை ஸமாதானப்படுத்த ஸாதகமாக இருந்த ஒரு பாதியை மட்டும் சொல்லிச் சமாளித்து விட்டேன்!

[அந்த] இரண்டு வாக்யமுமே நிஜந்தான்; [சிரித்து] இரண்டுமே full truthதான். [எவ்வாறெனில்:] ஆடி, ஓடி நடக்கிற கார்ய சக்தி என்ற dynamic energy-க்கும் கார்யம் இல்லாமல், அசைவு இல்லாமல் சாந்தமாக இருக்கும் ஒரு nucleus — கருப்பொருள் — ஹ்ருதயம் என்று சொல்லக்கூடிய உள்பாகம் இருக்கவே செய்கிறது; அதே மாதிரி static என்று அசையாமல் stationary-யாக இருக்கப் பட்ட வஸ்துக்களுக்குள்ளும் ஹ்ருதய ஸ்தானத்தில் dynamic energy குமுறிக் கொண்டேதான் இருக்கிறது. Static Principle-ஐத்தான் சிவன் என்பது; Dynamic Principle-ஐயே விஷ்ணு என்பது.

கார்யலோகத்தில் நடக்கும் ஸகலத்திற்கும் விஷ்ணு தான் காரணம் என்று இதிலிருந்து ஏற்படுகிறதல்லவா? அப்போது ஸகல கார்யங்களையும் அவனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும் என்றும் ஏற்படுகிறதோ இல்லியோ?

ஆசார்யாள்தான் தம்முடைய காலத்தில் ஆரம்பித்து வைத்தார் என்றில்லாமல், அவருக்கும் எத்தனையோ காலத்திற்கு முன்னாலிருந்தே, காலமே கண்டுபிடிக்க முடியாத அத்தனை ஆதிகாலத்திலிருந்து இந்த தேசத்தில் சாஸ்த்ரங்கள் அப்படித்தான் சொல்லிக் கொடுத்திருக் கின்றன:

காயேந வாசா மநஸேந்த்ரியைர்–வா
புத்த்யாத்மநா வா ப்ருக்ருதே: ஸ்வபாவாத் |
கரோமி யத்–யத் ஸகலம் பரஸ்மை
நாராயணாயேதி ஸமர்ப்பயாமி ||

Koviloor Digital Library

காரியம் என்றால் உடம்பால் செய்கிறது மட்டுமில்லை. மனஸினால் நினைப்பது, புத்தியினால் ஆலோசிப்பது, ஜீவாத்மா என்று இருந்துகொண்டு ப்ரக்ருதி என்ற மாயையினால் ஏற்பட்ட இயற்கைக் குணத்தில் நாம் ஸ்வபாவமாகச் செய்கிறது எல்லாமே கார்யந்தான். த்யானம் என்று பண்ணுவதுகூட கார்யந்தான். ஸமாதி நிலை ஒன்று தவிர ஸகலமுமே கார்யந்தான். அப்படி, "இயற்கைக் குணத்தால் தூண்டப்பட்டு காயத்தால், வாக்கால், புத்தியால், கர்மேந்த்ரிய, ஞானேந்த்ரியங்களால், என்னென்ன செய்கிறேனோ அந்த ஸகலத்தையும் பரம்பொருளான நாராயணனுக்கே ஸமர்ப்பிக்கிறேன்" என்பதுதான் ச்லோகத்தின் அர்த்தம்........

Half–truth, full truth சொன்னேனே! அப்படி ஒவ்வொருவருமே Full Truth–ஆக இருக்கப்பட்ட சிவன், விஷ்ணு இரண்டு பேரும் ஒரே ரூபத்தில் half–half–ஆகச் சேர்ந்திருப்பதுதான் சங்கரநாராயண மூர்த்தம். அந்த மூர்த்தி உள்ள க்ஷேத்ரத்திற்கும் சங்கர நாராயணன் கோவில் என்று பெயர், அதைத்தான் 'சங்கர நயினார் கோவில்' என்று வழங்குவதாக ஆகியிருக்கிறது.

ஆசார்யாளே அந்தப் பெயரை ஒரு முக்யமான ஸந்தர்ப்பத்தில் போட்டிருக்கிறார். கேள்வி-பதில் ரூபத்தில் 'ப்ரச்நோத்தர ரத்நமாலிகா' என்று அவர் ஒன்று அருளியிருக்கிறார். அதை ஸமாப்தி பண்ணுவதற்கு முந்திய ச்லோகத்தில், "பகவான் என்றும் மஹேச்வரன் என்றும் சொல்கிறது எவரை?" என்று கேள்வி. பதிலாக சிவன், விஷ்ணு என்று எவரொருவரையும் நம்முடைய ஸமரஸ அத்வைத ஆசார்யாள் சொல்லாமல், 'சிவ விஷ்ணுக்களாகச் சேர்ந்துள்ள ஒரே ஆத்மாதான்' என்று சொல்லியிருக்கிறார். அப்படிச் சொல்லும் போது 'சிவ விஷ்ணு' என்றோ 'ஹரிஹரன்' என்றோ வார்த்தை போடாமல் 'சங்கரநாராயணன்' என்றே போட்டிருக்கிறார்:

Koviloor Digital Library

கச்ச பகவான் மஹேச: ?
சங்கரநாராயணாத்மைக:

ஆனபடியால் அந்த சங்கரரும் நாராயண நாமத்தை விசேஷித்துச் சொல்லியிருப்பது பொருத்தந்தான்.

மொத்தத்தில் விஷயம், ஜகத்காரண மஹாதத்வத்தை ஆசார்யாள் 'நாராயணன்' என்றே குறிப்பிடுவார். அப்படித்தான் எங்களுக்கு மற்றவர்கள் பண்ணுகிற நமஸ்காரத்தையும் காரணவஸ்துவுக்குச் சேர்த்துவிட வேண்டுமென்று சொல்லும் போது 'நாராயணனுக்குச் சேருங்கள்' என்று சொல்லி, அப்படி சேர்ப்பிப்பதற்கு ஈஸியாகத் தோன்றுகிற ஒரு விதி பண்ணிக் கொடுத்திருக் கிறார்.

நமஸ்காரம் யாவும் நாராயணனுக்கே!

ஸகலத்தையும் ஆக்கிப் படைத்து, அததற்கும் ஒரு சக்தியைக் கொடுத்திருக்கிற அந்த நாராயணனுக்குத்தான் அத்தனை நமஸ்காரத்தையும் வாங்கிக் கொள்கிற 'ரைட்' இருக்கிறது. எந்த தேவதைக்கு நமஸ்காரம் பண்ணினாலும் அது கேசவனைத்தான் சேர்கிறது **"ஸர்வதேவ நமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி"** என்றே ச்லோகம் சொல்கிறோம்.

அந்தக் கேசவன் யாரென்றால் நாராயணன்தான். எல்லாருக்கும் தெரிந்ததுதான், அது விஷ்ணுவின் பெயர், குறிப்பாக க்ருஷ்ண பரமாத்மாவை அப்படிச் சொல்வது என்று. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் அந்தப் பேர் வருகிறது[1]. அதற்கு ஆசார்யாள் பல விதமாக அர்த்தம் சொல்லியிருக் கிறார்[2]. அதிலே இங்கே நமக்கு விஷயமாவது: க, அ, ஈச, வ என்ற நாலு சப்தங்களும் சேர்ந்தே 'கேசவ' என்று

1. இரு இடங்களில் : 23, 648 நாமங்கள்.
2. அவரது விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில்

Koviloor Digital Library

ஆகிறது. 'க' என்று பிரம்மாவுக்குப் பேர்; 'அ' என்று விஷ்ணுவுக்குப் பேர்; 'ஈச' [என்பது] சிவன்பேர் என்று தெரிந்ததே. ஆகையினால் ப்ரம்ம–விஷ்ணு–ருத்ரர்கள் ஒன்று சேர்ந்த த்ரிமூர்த்தி க+அ+ஈச =கேச என்றாகிறது. ஸ்ருஷ்டி–ஸ்திதி–ஸம்ஹாரங்களுக்கு தெய்வங்களான இந்த மூன்று பேரையும், அதாவது 'கேச'–வை, அவர்களுக்கும் மேலே பரமாத்ம – பராசக்தி ஸ்வரூபமாக இருந்துகொண்டு எவன் தன்வசத்தில் வைத்துக் கொண்டிருக்கிறானோ அந்தக் 'கேசவசன்'தான் கேசவன்; அதாவது அவன் முத்தொழில்களில் ஒன்றைச் செய்கிற ஸ்வாமியாக மட்டுமில்லாமல் மூன்றுக்கும் மூல சக்தியாக உள்ள மூர்த்தியே. இதுவேதான் ஆசார்யாள் நாராயணன் என்று சொல்வதும். ஆனபடியால் 'எல்லா தேவர்களுக்குப் பண்ணும் நமஸ்காரமும் கேசவனுக்கே' என்றால் 'நாராயணனுக்கே' என்றுந்தான் ஆகும்.

அப்படி மற்ற தேவதைகளுக்குப் பண்ணும் நமஸ்காரங்களே அவனொருத்தனுக்குத்தான் போய்ச் சேருகிறது என்னும்போது மநுஷ்யர்களுக்குப் பண்ணும் நமஸ்காரம் அந்த மநுஷ்யர்களுக்கு ஸொந்தமாக முடியுமா? இந்த நமஸ்காரமெல்லாமும் நாராயணனிடந்தான் போய்ச் சேருகிறது.

இதைத்தான் எங்களுக்கு யார், எப்போது நமஸ்காரம் பண்ணினாலும் நாங்கள் நினைவு வைத்துக் கொண்டு, அவனுக்கே உரித்தான நமஸ்காரத்தை எங்களுக்கு 'மிஸப்ரோப்ரியேட்' பண்ணிக் கொண்டு விடாமல் அவனுக்கு 'ரிடைரக்ட்' செய்வதற்காக ஆசார்யாள் கருணையோடு ஒரு விதி — ஈஸியாகத் தோன்றும் விதி — போட்டுக் கொடுத்திருக்கிறார். என்னவென்றால், எங்களுக்கு ஒருத்தர் நமஸ்காரம் பண்ணும்போது நாங்கள், **"நாராயண, நாராயண"** என்று சொல்ல வேண்டும். அதுதான் விதி.

Koviloor Digital Library

அப்படிச் சொன்னால், பேரைச் சொன்னவுடன் ஆஸாமி ஞாபகம் வந்து விடுமோல்லியோ? இங்கே ஸ்வாமிதான் ஆஸாமி! அவன் ஞாபகம் வந்தவுடன், 'எல்லா நமஸ்காரத்திற்கும் உரியவன் அவன்தான். அவன் உரிமையை, உடைமையை நாம் அபஹரித்து விடக் கூடாது' என்றும் தோன்றி அவனுக்கே நமஸ்காரத்தை அனுப்பி விடுவோமோல்லியோ? அதற்காகத்தான் நாராயண ஸ்மரணத்தை விதித்தார். 'ஸ்மரணம்' என்கிறது முக்கியம்.

உண்மையான ஸ்மரணம்

வாயால் 'நாராயண' என்று சொன்னால் அது நாராயண 'வசனம்'தான்; 'ஸ்மரணம்' இல்லை. ஸ்மரணம் என்றால் மனஸால் நினைப்பது, நன்றாக நினைப்பது. வெறுமே வாயால் மட்டும் சொல்லி ப்ரயோஜனமில்லை. மனப்பூர்வமாக நினைத்துச் சொல்லணும். ஆனால் நடைமுறையில் என்ன ஆகிறதென்றால், ஒரு ஸ்தோத்ரம், மந்த்ரம் எதுவானாலும் ஸரி, அடிக்கடி ஒரு 'ரொடீனா'கச் சொல்கிற போது வார்த்தையை மாத்திரம் சொல்வதாகத்தான் ஆகி விடுகிறது; அந்த வார்த்தைக்கு என்ன அர்த்தமோ அதை மனஸ் நினைக்காமல், மனஸ் அது பாட்டுக்கு எதெதையோ யோஜிப்பதாகவும் வாய்மட்டும் மொண மொண பண்ணுவதாகவும் ஆகி விடுகிறது! அப்படி இங்கேயும் நாராயணனை ஸ்மரிக்காமல் பேரை மாத்திரம் சொன்னால் மஹா தோஷமாகி விடும். மநுஷ்யாளுக்கு மநுஷ்யாள் மிஸப்ரோப்ரியேட் பண்ணுவதே குற்றமென்றால் பகவானுக்கானதை அப்படிப் பண்ணுவது மஹா பெரிய குற்றந்தானே? ஸதா காலமும் ஸர்வ ஜாக்ரதையாக இருந்தாலொழிய, ஒரு ஸந்நியாஸிக்குப் பல பேர் தினந் தினமும் நமஸ்காரம் பண்ணுகிறபோது அவன் 'நாராயண' சொல்வது ஒரு ரொடீனாகி விடுவதில் அவன்

Koviloor Digital Library

இப்படிப்பட்ட அபராதத்திற்கு ஆளாகி விடக்கூடும். அதனால்தான் இந்த விதியை 'ஈஸி' என்று சொல்லாமல், 'ஈஸி மாதிரி இருக்கிற' என்று சொன்னேன்.

நிஜ ஸந்நியாஸியும் நமஸ்காரமும்

நிஜ ஸந்நியாஸி — நூறு பெர்ஸென்ட் ஸந்நியாஸி, என்றால் — அவனுக்கு ஒரு கடமையும் இல்லை. அவன் யாருக்கும் எந்த விதத்திலும் கடமைப்பட்டிருக்கவில்லை. ஆனபடியால் அவன் யாருடைய நல்லது பொல்லாததைப் பற்றியும் நினைக்க வேண்டியதில்லை. அப்படிப்பட்ட ஸ்திதியில் அவனுக்கு யாரோ நமஸ்காரம் பண்ணுகிறார் களென்றால் அதற்காக அவர்களுடைய நல்லதை அவன் நினைக்க வேண்டுமென்பதில்லை. அப்படி நினைக்க ஆரம்பித்து விட்டானென்றால் அப்புறம் அந்தப்படி அவர்களுக்கு நல்லது நடந்ததா என்றும் பார்ப்பதில் அவன் புத்தி போக ஆரம்பிக்கும். இப்படிப் பல பேர் விஷயமாக அவன் புத்தியைப் போக விட்டால் அப்புறம் அவனுடைய ஆச்ரம தர்மப்படி ஒரே சிந்தனையாக நினைக்க வேண்டிய ஆத்ம விசாரம் என்ன ஆவது? அவனுக்கான பரம தர்மம் ஸதா ஸர்வதா ஆத்மவிசாரம் பண்ணிக் கொண்டிருப்பது தான். பண்ணாவிட்டால் அவன் ஸந்நியாஸி இல்லை; ஸந்நியாஸியாயில்லாத அவனுக்கு யாரும் நமஸ்காரமும் பண்ண வேண்டியதில்லை என்று ஆகிவிடுகிறது! அதனால் ஒரு நிஜ ஸந்நியாஸி அவனுக்கு ஒருத்தன் நமஸ்காரம் பண்ணுகிற போது தன்னுடைய லக்ஷ்யமான ஆத்மாவையே த்வைத லோக நிர்வாஹகனான நாராயண ரூபத்தில் பாவித்து, அந்த நாராயணனிடம் நமஸ்காரம் பண்ணு கிறவனின் நல்லதோ, பொல்லாததோ எதுவானாலும் 'அது உன் [நாராயணனின்] பாடு' என்று போட்டு விட்டு அதோடு விஷயத்தைக் கத்திரித்து விடவேண்டும்.

Koviloor Digital Library

இது விஷயமாக வித்யாரண்யாள் 'ஜீவன் முக்தி விவேகம்' என்ற புஸ்தகத்தில் ரொம்பவும் 'க்ளிய'ராகச் சொல்லியிருக்கிறார்.

ப்ரஹ்மஞானி என்ற அர்த்தத்தில் 'ப்ராஹ்மணன்' என்ற வார்த்தையை உபயோகித்து, அதாவது ப்ரஹ்ம ஞானியாயுள்ள ஸந்நியாஸியை — நூறு பெர்ஸென்ட் ஸந்நியாஸியை—ஜீவன் முக்தனை[1] — ப்ராஹ்மணன் என்று சொல்லி அதில் ஒரு மஹாபாரத 'கொடேஷன்' கொடுத்திருக்கிறார். அதில் [மஹாபாரத ச்லோகத்தில்] அந்த நிஜ ஸந்நியாஸியை 'நமஸ்காரமும் இல்லாதவன்', 'ஆசீர்வாதமும் இல்லாதவன்' — **'நிர்நமஸ்காரம்', 'நிராசிஷம்'** ['நிர் ஆசிஷம்'] என்று சொல்லியிருக்கிறது[2].

நிஜ ஸந்நியாஸி என்றால் அவனுக்கு ஸகலமுமே ஆத்ம ஸ்வரூபந்தான். அப்போது தனக்கே தான் எப்படி நமஸ்காரம் பண்ணிக் கொள்வது, ஆசீர்வாதமுந்தான் பண்ணிக் கொள்வது?

ஸரி, இவனுக்குத்தான் நமஸ்காரம் பண்ணுகிறவர் களும் ஆத்ம ஸ்வரூபமாகத் தெரிகிறார்கள். அவர்களுக்கோ அப்படித் தெரியாமல், தாங்கள் சின்னவர்கள், ஸாமான்ய ஜீவர்கள், இவன் ரொம்பப் பெரியவன், மஹான் என்று தெரிவதால்தானே இவனுக்கு நமஸ்காரம் பண்ணு கிறார்கள்? அப்படிப் பண்ணினால் நமஸ்கரிக்கப்படும் மற்ற எல்லார் மாதிரியும் இவனும் ஆசீர்வாதம் பண்ணுவான், மற்றவர்கள் பண்ணும் ஆசீர்வாதத்தைவிட இவனுடைய ஆசீர்வாதத்திற்குச் சக்தி உண்டு என்றுதானே கூட்டங் கூட்டமாக வந்து விழுந்து விழுந்து நமஸ்காரம்

1. உடலில் உயிர் வாழும்போதே பிரம்மத்தை உணர்ந்துவிட்டதால் முக்தி நிலையில் உள்ளவர்.
2. 'நிராசிஷம் அநாரம்பம் நிர்நமஸ்காரம் அஸ்துதிம்'.

Koviloor Digital Library

பண்ணுகிறார்கள்? அப்படியிருக்கும்போது இவன் நிராசீர்வாதக்காரன், நிர்நமஸ்காரக்காரன் என்று உதாஸீனமாக, உம்மணாமூஞ்சியாட்டம் இருந்தால் அவர்கள் [சிரித்து] hurt-ஆகத்தானே ஆவார்கள்? அப்படி ஆகவிடலாமா? அந்த அஞ்ஞானிகளின் மனப் பான்மைக்கும் அந்த ஞானி தாக்ஷிண்யம் காட்டினால் தானே நன்றாக இருக்கும்?

இந்தக் கேள்வியை வித்யாரண்யாள் எழுப்பிக் கொண்டு, பதிலாக, 'இதற்காகத்தான் அவன் மற்றவர்கள் நமஸ்கரிக்கும்போது சும்மா இல்லாமல் 'நாராயண' என்று சொல்லும்படியாக வைத்திருக்கிறது. ஏனென்றால் அந்த நாராயண சப்தமே அத்தனை ஆசீர்வாதத்திற்கும் ப்ரதிநிதி — **நிகில ஆசீர்வாத ப்ரதிநிதித்வேன நாராயண சப்த ப்ரயோக'** — என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

நமஸ்கரிப்பவனுக்கு ஆசீர்வாதம் என்று வெளிப்படப் பண்ணாமலிருந்தாலும் அவன் படுகிற துக்கத்திற்குப் பரிஹாரமாகவே நாராயண வசனம். இந்தக் குட்டி துக்கம் மட்டுமில்லை; பெரிய துக்கமாக லோகவாஸனை என்று ஒன்று நமஸ்கரிக்கும் ஜன ஸமூஹத்துக்கு இருக்கிறதே, அதற்கும் பரிஹாரம் பண்ணிப் போக்கடிக்கவே 'நாராயண' சொல்லும்படி வைத்திருக்கிறது என்று அந்த நாம விசேஷத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

மடாதிபதி ஸந்நியாஸியும் நமஸ்காரமும்

இது நிஜ ஸந்நியாஸிக்கு, நூறு பெர்ஸென்ட் ஸந்நியாஸிக்குச் சொன்னது. ஆனால் எதிலும் good, bad, indifferent என்று பல தினுஸு இருக்கத்தானே செய்கிறது? அப்படி, முழுக்க நிஜ ஸந்நியாஸியாக இல்லாமல் எங்கள் மாதிரி அரை ஸந்நியாஸியாக இருக்கிறவர்கள் [நெடுநேரம்

Koviloor Digital Library

குமிழ்த்துக் குமிழ்த்துச் சிரிக்கிறார்]... 'அரை' என்கிறது கூட ஜாஸ்தியோ என்னவோ? அப்படிச் சொன்னால் ஐம்பது பெர்ஸென்டாகி விடுமே! அதனால் 'பாஸ் மார்க் ஸந்நியாஸி' என்று வேணுமானால் வைத்துக் கொள்ளலாம்!... இப்படிப்பட்ட எங்கள் மாதிரி 'பாஸ் மார்க் ஸந்நியாஸிகள்' தங்களுக்குப் பிறத்தியார் நமஸ்காரம் பண்ணும் போது அதில் தங்களுக்கு அடியோடு ஸம்பந்த மில்லை என்று நாராயணனிடம் தள்ளி விட்டு இருக்க முடியுமா?...

['எங்கள் மாதிரி பாஸ் மார்க் ஸந்நியாஸி' என்றதில்] 'எங்கள் மாதிரி' என்று யாரைச் சொல்கிறேனென்று புரியாதவர்கள் இருக்கலாம். அதனால் யார் என்று சொல்லிவிடுகிறேன். ஸந்நியாஸிக்குக் கடமையே கிடையாது என்று சொன்னேன். அவனுடைய ஒரே கடமை என்று சொல்லக் கூடியது ஆத்மவிசாரம்தான். பெண்டாட்டி, பிள்ளை-குட்டி என்ற கடமைகளை விட்டு விட்ட அவனுக்கு ஜன ஸமூஹத்தைப் பற்றிய கடமையும் கிடையாது. அதனால் அவன் நமஸ்காரத்தை நாராயணன்கிட்டே தள்ளி விட்டுச் சும்மா இருந்து விட வேண்டியதுதான்.

ஆனால் 'குரு பீடம்' என்று போட்டுக் கொண்டு, 'மடாதிபதி' என்று மிரட்டிக் கொண்டு சில ஸந்நியாஸிகள் உட்கார்ந்திருக்கிறோமே, அப்படிப்பட்டவர்களைத்தான் மற்ற ஸந்நியாஸிகளிடமிருந்து பிரித்துப் 'பாஸ் மார்க் ஸந்நியாஸிகள்' என்று சொன்னேன்! ஏனென்று கேட்டால் எப்போது குருபட்டம் கட்டிக் கொண்டோமோ அப்போதே கடமையையும் வாரிக் கட்டிக் கொண்டு விட்டோம் என்று அர்த்தம்! ஜன ஸமூஹத்தைக் குறித்த பெரிய கடமை, பாரமான கடமை, ஜன ஸமூஹம்

Koviloor Digital Library

பூராவையும் சிஷ்ய ஸமூஹமாக நினைத்து அதை நல்ல வழியில் கொண்டு போகிற பெரிய கடமை எங்களுக்கு இருக்கிறது. அதனால் நல்லதோ பொல்லாததோ யாருக்கு வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும் நடந்து விட்டுப் போகட்டும் என்று நாங்கள் தள்ளி விட்டு இருந்தால் அது கடமையில் தவறின குற்றமாகி விடும். சிஷ்ய வர்க்கம் நல்வழிப்படணும், அவர்களுக்கு நல்லது நடக்கணும் என்று நினைத்து, அதற்கானதைச் செய்ய வேண்டிய 'ட்யூடி' எங்களுக்கு இருக்கிறது. அப்படியிருக்கும் போது நாங்கள் நல்லது பண்ணுவோம் என்று நம்பிக்கொண்டு சிஷ்யர்கள், பக்தர்கள் நமஸ்காரம் பண்ணும் போது, "இவர்களுடைய நல்லது பொல்லாததுகளில் எங்களுக்கு ஸம்பந்தமில்லை. உன் பாடு! என்ன பண்ணிப்பியோ, பண்ணிக்கோ!" என்று நாராயணனிடம் தள்ளினால் அவன் ஒப்புக் கொள்வானா?...

"வேத ரக்ஷணம்; ஸப்ஸ்க்ரிப்ஷன் கொண்டு வா" என்கிறேன். "கோபுரம் கட்டணும்; டொனேஷன் கொண்டு வா" என்கிறேன். தினந்தினமும் பிக்ஷை என்று வாங்கிக் கொட்டிக் கொள்கிறேன். இதெல்லாம் த்ரவ்ய ரூபத்தில் பிடுங்கிக் கொள்கிறது. இன்னும் சரீர ப்ரயாஸையாகவும் பிழிந்து எடுக்கிறேன் "பிடி அரிசி கலெக்ட் பண்ணு", "ஆஸ்பத்ரி ஆஸ்பத்ரியாகப் போய் ப்ரஸாத விநியோகம் பண்ணு", "மாடு கன்றுக்காகக் குளம் வெட்டு" இப்படி தினமும் ஏதாவது! இந்த மாதிரியெல்லாம் பணத்தையும் பிடுங்கிக் கொண்டு, வேலையும் வாங்கிக் கொண்டு, நீங்கள் நமஸ்காரம் பண்ணுகிறபோது மட்டும் உங்களுக்கும் எனக்கும் ஒரு ஸம்பந்தமுமில்லை என்று கத்திரித்தேன் என்றால் அது எப்படி ந்யாயமாகும்?

Koviloor Digital Library

ஆசீர்வாத சக்தி

ஸரி, அதற்காக நான் உங்கள் நல்லதற்கு ஆசீர்வாதம் பண்ணுகிறேனென்றால் அந்த ஆசீர்வாதம் நிஜமாகவே நல்லது பண்ணிவிடுமா? அந்த சக்தி அதற்கு உண்டா? நிஜமாகத் தபோசக்தி பெற்றவர்களாக இருந்து கொண்டு பரமாத்மாவுடன் 'டச்'வைத்துக் கொண்டிருப்பவர்களுடைய ஆசீர்வசனத்திற்குத்தான் சக்தி இருக்கும். மற்றவர்கள் ஆசீர்வாதம் பண்ணுவதென்பது, எந்த சுபசிந்தனைக்கும் கொஞ்சம் நல்லது பண்ணும் சக்தி உண்டு என்ற அளவில் ஏதோ துளி, தாற்காலிகமாகப் பண்ணுவதோடு முடிந்து போய்த்தான் விடும்.

வேடிக்கை என்னவென்றால், எவன் ஸம்பந்தமே இல்லை என்று கத்திரித்திருக்கிறானோ அவனுக்குத்தான் ஆத்ம மார்க்கத்தில் இருக்கிற 'டெடிகேஷ'னாலும், அதிலே அவன் அடைந்திருக்கிற அநுபவங்களாலும் ஆசீர்வாத சக்தி — அருள், அநுக்ரஹம் என்கிறது — ஸ்வாபாவிகமாகவே [தன்னியல்பாகவே] உண்டாகி விடுகிறது! அவனுக்கே தெரியாமலும், அவன் உத்தேசம் பண்ணாமலுங்கூட அந்த ஆசீர்வாதம், அவனை நமஸ்காரம் பண்ணுகிறவனிடம் போய்ச் சேர்ந்து அவனுக்கு நல்லது பண்ணிவிடும் — பழுத்த பழம் தானாகவே வெடித்து, யார் அதற்குக் கீழே போய் வாயைத் திறந்தாலும் சாற்றைச் சொட்டுகிற மாதிரி!

அவன் மாதிரி ஸ்வாநுபூதி ஒன்றே குறி என்றில்லாமல் ஊர் பாடெல்லாம் கால் பாடு என்று இழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிற எங்கள் ஸமாசாரம் என்னவென்றால்: நாங்கள் இழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிற ஈடுபாடுகளே எங்களை இழுத்துக் கொண்டு — அநுபூதிக்கானதைப் பண்ணிக் கொள்ள முடியாமல் 'டிஸ்ட்ராக்ட்' பண்ணி

Koviloor Digital Library

இழுத்துக் கொண்டு — போய் விடுகிற ஆபத்து இருக்கிறது. பெரிய 'ரிஸ்க்'! அதிலிருந்து எந்த அளவுக்குத் தப்பித்து, ஆத்ம லக்ஷ்யத்திற்குக் குந்தகமில்லாமலே லோகத்திற்கான கார்யங்களை — குருவாகச் செய்ய வேண்டிய கடமைகளை — பாகுபடுத்திக் கொண்டு, இந்த இரண்டும் பரஸ்பரம் பாதகம் பண்ணிக் கொள்ளாமல், ஒன்றுக்கொன்று ஸாதகமாக, ஸாதனா பலத்தினால் குருவாகப் பண்ணும் லோக க்ஷேம கார்யம் புஷ்டி பெறுவதாகவும், இப்படி லோக க்ஷேமமாகத் தொண்டு பண்ணுவதே சித்த சுத்தியை விருத்தி பண்ணி அதன் மூலம் ஸாதனைக்கு இன்னும் பலம் தருவதாகவும் அழகாக முறைப்படுத்திக் கொண்டு வரம்பு தப்பாமல் போவதில் எந்த அளவுக்கு ஜயிக்கிறோமோ, அதைப் பொறுத்தே ஆசீர்வாத சக்தியும் உண்டாகும்.

ஆசிச் சக்தியின் மூலம் நாராயணனே!

அப்போதுங்கூட அந்த சக்திக்கு மூலம் நாராயணன் தான். அதை ஒருநாளும் மறந்து விடக் கூடாது. அவனன்றி அணுவும் அசையாது என்றால் ஆசீர்வாதமும் அவன் திருவுள்ளம் கொண்டால்தானே கார்ய ரூபத்தில் பலன் தரும்? ஆகையினால் ஒரு பக்கம் நாங்கள் நமஸ்காரத்தில் ஸம்பந்தமேயில்லை என்று தள்ளக் கூடாதானாலும், இன்னொரு பக்கம் எங்கள் ஆசீர்வாதத்துக்கே சக்தி இருப்பதாக நினைத்து ஆசீர்வதிக்கவும் கூடாது. பின்னே என்ன பண்ணுமென்றால், நீங்கள் எங்களுக்கு முன்னாலே சரீரத்தைப் போட்டு நமஸ்காரம் பண்ணும் போது நாங்கள் 'நாராயண' சொல்லி அதனால் அவனை நினைத்துக் கொண்டு மானஸிகமாக அவனுக்கு நமஸ்காரம் பண்ணி, "இந்தக் குழந்தைகளுக்கான நல்லது நடக்க ஆசீர்வாதம், அருள் செய்யப்பா!" என்று ப்ரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

அஞ்சலிக் கை, ஆசி அபிநயமாக

'ஸ்தானம்' படுத்துகிற பாடு, இப்படிப் பண்ணுகிற ப்ரார்த்தனையைக் கூட எங்கள் மாதிரி இருக்கிறவர்கள் கையினாலே அஞ்ஜலி பண்ணிச் செலுத்த முடிவதில்லை! நீங்கள் எங்களுக்கு நமஸ்கரிக்கிற போது நாங்களே ஆசீர்வாதம் பண்ணுவோம், பண்ண வேண்டும் என்று தான் எதிர்பார்க்கிறீர்கள். நாங்களும் இன்னொருத்தருக்கு நமஸ்காரம் பண்ணி அந்த ஆசீர்வாத source-ஐத்தான் tap பண்ணப் பார்க்கணும் என்றால் உங்களுக்கு ஏமாற்றமாயிருக்கும். பண்ணிய நமஸ்காரத்திற்கு, யாருக்குப் பண்ணினோமோ அவரிடமிருந்தே உடனே ஆசீர்வாதம் வந்தால்தானே ஆறுதலாயிருக்கும்?

நாராயணன் கண்ணுக்குத் தெரியாதவன், அவன் பண்ணும் ஆசீர்வாதம் காதுக்குக் கேட்பதில்லை என்பதால்தான் கண்ணுக்கும் காதுக்கும் தெரிகிறவரிடம் போய்ப் பார்த்து ஆசீர்வசனம் பெறணும் என்றே ஜனங்கள் பெரியவராக நினைக்கிற ஒருவரிடம் போவது.

ஆனால் பக்குவம் பெற்றவர்களாகவும் ஸம்ப்ரதாயம் தெரிந்தவர்களாகவும் பக்தர்கள் இருந்தால் அவர்களும் அந்த நாராயணனின் ப்ரதிநிதியே இவர், இவரை நமஸ்கரித்தால் அது அவனையே சேரும், அவனுடைய ஆசீர்வாதமே இவர் மூலமாய் வரும் என்ற எண்ணத்தோடு போய் "நமோ நாராயணாய" என்று சொல்லித்தான் அவரை நமஸ்கரிக்கணும். [அஷ்டாக்ஷரீ மந்த்ர] உபதேச மானவர்களாக இருந்தால் முதலில் ப்ரணவம் சேர்த்து "நமோ நாராயணாய" சொல்லி நமஸ்கரிக்கணும்.

எதனாலோ நடைமுறையில் அப்படிக் காணவே காணோம்! நல்ல வழக்கம். [அதற்குப்] புத்துயிர் கொடுத்தால் தேவலை. நமஸ்கரிக்கிறவன் இப்படி

Koviloor Digital Library

நாராயண நாமாவைச் சொன்னதாலாவது நமஸ்காரம் பெறுகிறவனுக்கும் அது நினைவு வந்து அந்த நாராயணன் ஸொத்துதான் நமஸ்காரம் என்ற ப்ரக்ஞையும் உண்டாகுமோல்லியோ?

அதெப்படியானாலும், ஒருத்தருக்கு நமஸ்காரம் பண்ணினால் அவரிடமிருந்து அநுக்ரஹத்தைக் காட்டுவதாக ஏதேனும் பதில் வந்தால்தான் நமஸ்கரிப்பவனுக்கு த்ருப்தியாயிருக்கும்.

ஆசீர்வசனம் என்று வாய் வார்த்தையில் நாங்கள் பண்ண முடியாமலிருந்தாலும், 'நாராயண'தான் சொல்லணுமென்றிருந்தாலும், அநுக்ரஹ ஸமிக்ஞயாக சைகையாவது பண்ணினால்தான் தேடி வந்து காலில் விழுகிறவர்களுக்கு த்ருப்தியாயிருக்கும். அதனால் நாங்கள் மனஸுக்குள்ளே உங்கள் நமஸ்காரத்தை நாராயணனுக்கு அனுப்பி வைத்தாலும், வெளியிலே உங்களுக்கு நாங்களே ஆசீர்வாதம் பண்ணுகிறமாதிரிதான் கை தூக்க வேண்டியிருக்கிறது. கூப்ப வேண்டிய கையைத் தூக்கி! அவனுக்கு அஞ்ஜலி பண்ண வேண்டிய கையை உங்களுக்கு ஆசீர்வாத அபிநயமாகத் தூக்க வேண்டியிருக்கிறது!

தம் பிரார்த்தனையும் அடியார் நம்பிக்கையும்

இத்தனை வருஷமாக நித்யமும் நீங்கள் கூட்டங் கூட்டமாக வந்து எனக்கு நமஸ்காரம் பண்ணிக்கொண்டு வந்திருப்பதில் நானும் உங்களுக்காக அவனை மனஸால் நமஸ்கரித்து, உங்கள் நல்லதற்காக ப்ரார்த்தித்துக் கொள்ளத்தான் முடிந்த மட்டும் முயற்சி பண்ணி வந்திருக்கிறேன். இருந்தாலுங்கூட நீங்கள் ப்ரார்த்திக்கிற விஷயங்கள் ஏதாவது பலித்திருக்கிறதென்றால் அதற்கு என் முயற்சியை விட உங்கள் நம்பிக்கைதான் முக்ய காரணம். நீங்கள் என்னிடம் எந்த அளவுக்கு நம்பிக்கை

Koviloor Digital Library

வைத்திருக்கிறீர்களோ அந்த அளவுக்கு 'ஸின்ஸிய'ராக உங்களுக்காக என்னால் ப்ரார்த்திக்க முடியுமா என்றே தோன்றுகிறது. அதனால்தான் சொன்னேன், என் ஆசீர்வாத பலன் என்று நினைப்பதுகூட அதைவிட உங்களுடைய நம்பிக்கையின் பலனேதான் என்று! முடிவாகப் பார்த்தால் நீங்கள் ப்ரார்த்திக்கும் காரியம் பூர்த்தியாவதற்கு முடிவான காரணம், என் வக்காலத்து இல்லாமல் அந்த நாராயணனுக்கே உங்களிடமுள்ள க்ருபா சித்தந்தான்.

பெத்தப் பேர் சூட்டி, நூறு, ஆயிரம் என்று ஜனங்கள் நமஸ்காரம் பண்ணி, அது போதாதென்று, "ஒங்க ஆசீர்வாதத்துலதான் இன்ன இன்ன நடந்தது: ஆச்சர்யமா நடந்தது" என்று வேறே சொல்லும் போது, ஆசீர்வாதம் பண்ண நமக்கே 'அதாரிடி' இருக்கிறது என்று ப்ரமைப்படாமல் ஜாக்ரதை செய்து கொள்வது ரொம்ப அவச்யமாகிறது. இதில் கொஞ்சம் தப்பினால் கூட ஸாக்ஷாத் நாராயணனின் உடமையை 'மிஸப்ரோப்ரியேட்' பண்ணிக் கொள்கிற பெரிய அபசாரமாகி விடும்.

உயர் ஸ்தானம்; ஆயின் கூலி வேலை!

வெளியிலே பீடம் போட்டுக் கொண்டு 'ஸ்தானம்' கொண்டாடிக் கொண்டாலும் வாஸ்தவத்திலே பாரத்தைத் தூக்கிக் கொண்டு கூலி வேலை செய்கிறதுதான்! கூலி வேலை செய்கிறவனையே இங்கிலீஷில் Cooly என்கிறார்கள்! அப்படித்தான் நாங்களும்! இன்னொருத்தனுக்காக அவன் பாரம் சுமக்கிற மாதிரிதான் நாங்களும்! அவன் உடம்பாலே பாரம் தூக்குகிற மாதிரி நாங்கள் உங்கள் நமஸ்காரத்தை மனஸாலே தூக்கி, உங்களுக்காக நாங்கள் செய்கிற ப்ரார்த்தனையின் 'வெய்ட்' டையும் அதோடு சேர்த்து நாராயணனிடம் கொண்டு இறக்க வேண்டும். ஆனால் ஒரு கூலித் தொழிலாளிக்குத்

Koviloor Digital Library

தெரிகிற ஸத்யம் எங்களுக்குத் தெரியுமா என்பதே கேள்வி! தான் தூக்குகிற ஸாமான் தன்னுடையதில்லை, இன்னொருத்தனுடையதைத்தான் தூக்குகிறோம்; அதை இறக்க வேண்டிய இடத்தில் இறக்க வேண்டியதே தன் தொழில் என்று அவனுக்குத் தெரிகிற அந்த ஸத்யத்தைத்தான் சொன்னேன்! நாங்கள் இந்த ஸாமானை—நமஸ்காரம் என்கிற ஸாமானை—இறக்க வேண்டிய அந்த நாராயண பதத்தில் இறக்காவிட்டால் அந்த அபசாரத்திற்கு அவன் 'கூலி கொடுத்து விடுவான்'! கூலிக்காரன் தூக்கும் ஸாமான் அவனுக்கு பாரமாயிருக்கிற மாதிரி நமஸ்காரத்தையும் எங்களுக்குப் பண்ணும் ஸம்மானமாக நினைக்காமல் பாரமாகத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

"ஸம்மாநாந் மரணாதிவ" என்று வித்யாரண்யாள் மஹாபாரத கொடேஷன் கொடுத்து ஸந்நியாஸிகளை எச்சரித்திருக்கிறார். அதாவது, நிஜ ஸந்நியாஸியென்றால் அவன் பாராட்டு, கௌரவம் முதலியவற்றால் ஸம்மானிக்கப்படுவதை மரணமாக நினைக்கவேண்டும். 'மரணாதிவ' என்பதற்கு 'நரகாதிவ' என்று ஒரு பாடபேதம் இருப்பதையும் சொல்லி, இன்னுங்கூட பலமாகவே பயமுறுத்தி அதை [ஸம்மானத்தை]த் தள்ளும்படிப் பண்ணு கிறார். 'மரணம்' ஒன்றும் தெரியாமல் ஆகிவிடும் ஸ்திதிதான்; நரகமோ சித்ரவதையே அல்லவா?

அது நிஜ ஸந்நியாஸிக்கு! அவன் ஸம்மானத்தை மரணமாக நினைக்க வேண்டும் என்று சொல்லி யிருப்பதற்கு முந்தி ஜன ஸமூஹத்தைப் பாம்பாக நினைத்து பயப்பட்டு ஒதுங்கி ஓடிப் போய் விடணும் என்று இருக்கிறது: **'அஹேரிவ கணாத்—பீத: ஸம்மாநாந் மரணாதிவ'!**

நாங்களோ ஜன ஸமூஹத்திற்கு நல்லது சொல்லி, அவர்களை நல்லது பண்ணும்படித் தூண்டிக் கொண்டிருக்கவே ஏற்பட்டவர்கள். ஆனபடியால்

Koviloor Digital Library

ஜனஸமூஹத்திலேயே நன்றாக உழன்று கொண்டிருக்க வேண்டியவர்கள். அப்படி இருக்கும்போது குரு, பீடாதிபதி, மடாதிபதி என்றெல்லாம் பெத்தப் பெயர் கொடுத்து உட்கார்த்தி வைத்திருக்கும் எங்களை ஜனஸமூஹம் ஸம்மானிக்கத்தானே செய்யும்? ஸ்தான கௌரவம், பீட கௌரவம் என்று சொல்லிக்கொண்டு, நாங்களே எங்களை எப்படியெல்லாம் ஸம்மானிக்க வேண்டும் என்று கன்டிஷன்கள் போட்டுக் கொடுத்துத்தான் எங்கேயாவது போகிறோம்! இருக்கிற இடத்திலேயும் எங்களுக்கு இப்படி யிப்படி மரியாதை பண்ணினால்தான், பார்க்க வரலாம் என்று வைத்துக் கொண்டிருக்கிறோம்!

இதைத் தவிர்க்க முடியாதுதான். சிஷ்யலோகம் என்பது குருபீடம் என்று உள்ள ஒன்றில் இருப்பவரிடம் பணிவு, பவ்யங்களுடன் இருந்தால்தான் குரு செய்யும் உபதேசமும் அவருடைய அருளும் சிஷ்யர்களுக்குள் நன்றாக இறங்கும். ஆகையால் அவர்கள் மரியாதை—அதாவது ஸம்மானம்—பண்ண வேண்டியதுந்தான்; நாங்கள் அதை நிராகரிக்காமல் ஏற்றுக் கொள்கிற மாதிரியும் இருக்க வேண்டியதுதான்!.....

ஸம்மானத்தை 'ஸன்மானம்' என்று தப்பாகச் சொல்லி வருகிறார்கள். இப்போது வடக்கத்திய ஸர்க்கார்கள் உள்படப் பல ஸ்தாபனங்கள் 'காளிதாஸ் ஸம்மான்' என்கிற மாதிரி மரியாதைகள் செய்வது நமக்கும் நன்றாகத் தெரிந்த பிற்பாடும் 'ஸன்மானம்' என்றே தப்பாக [தமிழ்நாட்டுப்] பத்திரிகைக்காரர்கள் எழுதி வருகிறார்கள். அதோடு, இந்த 'ஸம்மான்'களில் கௌரவிப்புதான் முக்யம், இரண்டாம் பக்ஷமாக த்ரவ்ய ஸம்மானமும் இருக்கிறது என்றே தெரிகிற போதிலும், இங்கே [தமிழ்நாட்டில்] த்ரவ்யமாகத் தருவதை மட்டுமே 'ஸன்மானம்' என்றும் சொல்லியும் எழுதியும் வருகிறார்கள்......

Koviloor Digital Library

வெறும்—அதாவது நிஜ—ஸந்நியாஸியாயில்லாமல், குருப்பட்டம் கட்டிக்கொண்டும் ஸந்நியாஸிகள் என்று இருக்கும் நாங்கள் நீங்கள் ஸம்மானம் செய்யக்கூடாது என்று தடுப்பதற்கில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தேன்.

என்ன செய்யணுமென்றால், நீங்கள் எங்களை ஸம்மானிக்கவும் நாங்கள் 'அலவ்' செய்ய வேண்டும். அதே ஸமயம் அந்த ஸம்மானத்தை நாங்கள் 'அக்ஸெப்ட்' செய்து கொள்ளவும். கூடாது!

"அதெப்படி முடியும்? பரஸ்பர விருத்தமாக [ஒன்றுக்கொன்று முரணாக] இருக்கே!" என்றால்—

கொஞ்சம் திரிசமன் பண்ணணும்! முன்னேயே சொன்னாற்போல் குருவுக்கு சிஷ்யாள் ஸம்மானம் பண்ண வேண்டியதே என்பதை மதித்தும், அதோடு, 'நாம் செய்யும் ஸம்மானத்தை ஸ்வாமியார் ஏற்றுக்கொண்டார்' என்று நீங்கள் நினைத்துத் திருப்திப்படும்படியாகவும் நாங்கள் அதை 'அக்ஸெப்ட்' பண்ணிக் கொண்டாற் போலவே காட்டிக் கொள்ள வேண்டும். அதாவது வெளியிலே காட்டுவது இப்படி; காட்டுவதுதான் இப்படி. உள்ளுக்குள்ளே எங்கள் பாவம் எப்படியிருக்கணுமென்றால், 'லோக வ்யவஸ்தைக்காகவே இப்படிப் பண்ணவேண்டியிருக்கிறது. வாஸ்தவத்தில் இந்த ஸம்மானம் நமக்கே சேருவதாக நாம் நினைத்தோமோ, அதோகதிதான். நாராயணன் பெயரில்—வாஸ்தவமாக அவன் பெயரைச் சொல்லிக் கொண்டு—அவனுக்கு ஸம்மானத்தை சேர்ப்பிக்கும் கூலிக்காரனாகவே இதை ஏற்றுக் கொண்டு சேர்ப்பித்துவிடவேண்டும்—ஸமர்ப்பணம் பண்ணிவிட வேண்டும்' என்றே இருக்க வேண்டும்.

எந்த விதத்தில் மரியாதை பண்ணினாலும் அது ஸம்மானந்தான் என்று சொன்னேன். நல்ல வேளையாக

Koviloor Digital Library

எங்களுக்குப் பட்டம், பிருது [விருது] கொடுத்து ஸம்மானம் பண்ணுவதற்கு இடமில்லாமல் வைத்திருக்கிறது — 'பகவானுக்கு நாம் பட்டம் கொடுப்பதா? அப்படித்தான் குருவுக்கும்' என்பதால். த்ரவ்ய ஸம்மானம் நிறையவே செய்யப்படுகிறது. இல்லாவிட்டால் மடம் எப்படி நடக்கும்? எங்கள் ஆதிகுருவான நாராயணனின் ஆஜ்ஞையிலேயே நடக்கிற மடம் என்பதால் — எந்த ஸ்தாபனமும், வீடும், நாடும் எல்லாமுமே அவன் நடத்தித் தானே நடக்கிறது? அதில் இது கொஞ்சம் கூடுதலாகவே, "of, for, by"* என்கிறார்களே, அப்படி அவனுடையதாக, அவனுக்காக, அவனால் நடத்தப்படுவதால் — அவன் பேரிலேயே அந்த த்ரவ்ய ஸம்மானத்தை அங்கீகரிக்கிறோம். நீங்களாகக் கொடுக்காவிட்டாலும் அதிகாரப் பிச்சையாகக் கேட்டே வாங்கிக் கொள்கிறோம்!

நாம் பார்த்துக் கொண்டிருக்கும் விஷயமான நமஸ்கார ஸம்மானத்தை, "இது நமக்குக் கொஞ்சங்கூட உரிமைப் பண்டமில்லை. நம் மூலமும் எதாவது நல்லது நடந்தால் அப்படி நடத்துவிக்கும் அந்த நாராயணனுக்கே உரிய ஸாமான் இது. அதை நாம் ஒரு கூலியாகத்தான் தாங்குகிறோம்" என்பது புரிந்து கொண்டு வாங்கிக் கொள்ள வேண்டும். பக்தர்களிடம் ப்ரியத்தினால் அந்த பாரத்தை ஸந்தோஷமாகவே தாங்கி — தாற்காலிகமாகத் தாங்கி — பகவானிடம் இறக்கவேண்டும். இறக்கத்தான் வேண்டுமென்றாலும் தாங்குகிற மட்டும் பாரம் பாரம்தான். அப்படி இறக்காமல் எங்களுக்கே என்று துரார்ஜிதம் பண்ணிக் கொண்டாலோ அது நிரந்தரமான பாப பாரமே ஆகி விடும்.

---

* ஜனநாயகம் மக்களுடையது, மக்களுக்கானது, மக்களாலேயே நடத்தப்படுவது என்று கூறுவதை நினைவு கூர்ந்து மொழிந்தது.

Koviloor Digital Library

நமஸ்காரம் பண்ணப்படுகிறவன் கதை இத்தனை 'ரிஸ்கி'யாக இருக்கிறது!

நமஸ்கரிப்பவனே பாக்யசாலி

மறுபக்கம், நமஸ்காரம் பண்ணுகிறானே, அவனைப் பார்த்தால் அவன்தான் பாக்யசாலி என்று தெரிகிறது. என்ன பாக்யம் என்றால் பாரத்தைத் தள்ளி விட்டு அக்கடா என்று கிடக்கிற பாக்யம்! பெரியவர் என்று அவன் நினைக்கிற ஒருவருக்கு முன்னாடி தன்னுடைய உடம்பைத் தள்ளி நமஸ்கரிக்கிற போதே அவன், 'இவர் நம்முடைய ஸமாசாரத்தைப் பார்த்துக் கொள்வார்' என்று பாரத்தையும் தள்ளி விடுகிறான். "ந மம", அதாவது "என்னுடையதல்ல" என்று தள்ளுவதே 'நம:' என்று ஆனதாகச் சொல்வதுண்டு. நிஜமான நமஸ்காரம் என்றால் அந்த பாவத்தில்தான் பண்ணியதாக இருக்கும்.

அநேகமாக, ரொம்பப் பேர் பண்ணும் நமஸ்காரம் அவ்வளவு நிஜமாக இல்லாமல், நூறு பெர்ஸென்ட்–பாஸ் மார்க் என்று முன்னே பிரித்துச் சொன்னேனே, அப்படி 'பாஸ் மார்க் நமஸ்கார'மாகத்தான் இருக்கும்! அப்படி இருக்கும் போதுகூட நமஸ்காரம் பண்ணும் அந்த ஸமயத்திலே மட்டுமாவது அவன் பாரத்தைத் தள்ளி விட்டு ஹாயாக இருப்பவனாகத்தான் இருப்பான். ப்ரத்யக்ஷத்தில் அப்படித்தான் தெரிகிறது.

இந்த மாதிரி பாரத்தைத் தள்ளி லேசாகி, எளிசாகி ஒருத்தருக்கு முன்னே நமஸ்கரித்துக் கிடக்கிற பாக்யம் எனக்கு பால்யத்திலேயே போய் விட்டது! பறிபோய் விட்டது! 'ஸ்தானம்' வந்து பாக்யத்தைப் பறித்துக் கொண்டு போய் விட்டது!

Koviloor Digital Library

துறவி நமஸ்கரிப்பது

நிஜ ஸந்நியாஸியாயிருந்தால் — ஜீவன்முக்தன் என்றேனே, அப்படிப்பட்டவனாயிருந்தால் — அவன் நமஸ்காரம் பண்ணுவதையும் பண்ணாததையும் பற்றிப் பொருட்டாகவே நினைக்கமாட்டான். இவனுக்குப் பிறத்தி யார் நமஸ்காரம் பண்ணுவது, இவன் தானே பிறத்தி யாருக்கு நமஸ்காரம் பண்ணுவது என்கிற இரண்டையுமே ஒரு விஷயமாக நினைக்க மாட்டான். ஏனென்றால் அவனுக்குத் தான் - பிறத்தியார் என்ற பேதமே தெரியாது. எல்லாம் ஒன்றேயான ப்ரஹ்மமாகவே இருக்கும். அப்படியிருக்கும்போது—

"ப்ரணமேத் கம் ?"

"யாரை நமஸ்காரம் பண்ணுவது?"

இப்படி ஆசார்யாள் கேட்கிறார்*:

நாமாதிப்ய: பரே பூம்நி ஸ்வராஜ்யே சேத்–ஸ்திதோ (அ)த்வயே |
ப்ரணமேத்–கம் ததாத்மஜ்ஞோ ந கார்யம் கர்மணா ததா ||

[ச்லோக தாத்பர்யம்:] இரண்டாவதாக ஒரு வஸ்து இல்லாத ஆத்மாவைத் தெரிந்துகொண்டு, பேர் ஊர் எல்லாம் கடந்த நிஜமான அந்த ஸ்வராஜ்யத்தில் நிலை கொண்டு விட்டவனுக்கு கர்மத்தால் ஆவதென்ன? கர்மா என்கிற எல்லாமே வெளி வஸ்து குறித்து ஆனதுதானே? இவனுக்கு வெளியிலே ஆஸாமியோ வேறே அசேதனமோ எதுவும் இல்லாதபோது கர்மாவால் இவனுக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை தானே? அங்கே யாருக்கு இவன் நமஸ்காரம் பண்ண?

* 'உபதேச ஸாஹஸ்ரீ', 17.64

Koviloor Digital Library

ஆனால் அப்படிப்பட்ட ஸெண்ட் பெர்ஸெண்ட் ஸந்நியாஸிகள் அபூர்வமாகத்தான் இருப்பார்கள். ஆத்மாநுபூதிக்காக முயற்சி பண்ணிக் கொண்டிருப்பவர் களாகவோ, இல்லாவிட்டால் அவ்வப்போது அந்த நிலை வந்து தொட்டுக்கொண்டிருப்பவர்களாகவோதான் பெரும்பாலான ஸந்நியாஸிகள் இருப்பார்கள். அதனால் இவர்கள் ஸ்வாமிக்கு, அநேக தேவதாமூர்த்திகளுக்கு, பூர்வாசார்யர்களுக்கு எல்லாம் நமஸ்காரம் பண்ணத் தடையில்லைதான்.

ஆனால் இங்கேயுங்கூட இரண்டொரு 'எக்ஸெப்ஷன்' தவிர சரீரத்தை பூமியிலே தள்ளி நமஸ்காரம் பண்ண எங்களுக்கான சாஸ்த்ரம் இடம் கொடுக்கவில்லை. 'தண்ட வந்தனம்' என்பதாக எங்களுடைய தண்டத்தை ஒரு மாதிரி அஞ்ஜலியில் சுற்றி அதனால் தொட்டே நமஸ்காரம் பண்ண வேண்டும்.

தண்டனிடுவதன் தத்வார்த்தம்

நீங்கள் செய்யும் நமஸ்காரத்தையும் 'தண்டாகார நமஸ்காரம்', 'தண்டனிடுவது' என்றுதான் சொல்வ தென்றாலும் அங்கே அர்த்தமே வேறே. தண்டம் என்பது அங்கேயும் கழிதான். ஆனால் அஸல் கழியை இல்லாமல், அதை உபமித்து [உவமித்து] 'தண்டனிடுவது' என்று வந்திருக்கிறது. கழியை நிறுத்திப் பிடித்தால் அது துளிக்கூட குழைவு இல்லாமல் அப்படியே நிற்கிறது. 'கழியாட்டம் விறைச்சுண்டு நிக்கறயே!' என்று பணிவு இல்லாதவர்களைக் கேட்கிறோம். அதே கழி பிடியை விட்டு விட்டால் ஒரே படிமானமாக பூமியோடு பூமி படிந்து அப்படியே கிடக்கிறது. ஜீவ மனஸ் பொதுவாகக் கழி மாதிரி விறைத்துக் கொண்டு நிற்பதுதான். அஹம்பாவப் பிடிப்பில் அது அப்படி இருக்கிறது—அஹம்பாவம் அதைப் பிடித்துக்

Koviloor Digital Library

கொண்டு உசத்தி கொண்டாடிக் கொண்டு நிறுத்தியிருப்பதில்! அந்த அஹம்பாவப் பிடிப்பை விட்டு விட்டால் மனஸ் தாழ்மையாகக் கிடக்கும். அப்படிக் கிடந்தே நிஜமாக உசந்ததில் உசந்த ஸௌக்யத்தைப் பெற்று விடும்! இந்த மாதிரி மனஸைக் கிடத்துவதற்கு அடையாளந் தான், பிடியை விட்ட தண்டம் விழுகிறாற்போல பூமியோடு பூமி நமஸ்கரித்துக் கிடப்பது. 'தண்டாகார நமஸ்காரம்' என்ற பெயர் இதனால்தான். இந்த தாத்பர்யத்தைப் புரிந்து கொள்ளாமல் நமஸ்கரித்தால் அந்த நமஸ்காரமே 'தண்டம்'தான்!

'தண்டம்' என்றால் ஒன்றுக்கும் உதவாதது என்ற அர்த்தத்தில் சொல்கிறோம். தாய் மரத்திலிருந்து பிரிந்து தனியாக வந்த பாகந்தானே தண்டம்? மரத்தில் அது பாகமாக இருக்கும்போதுதான் அதற்கு உயிர் இருந்தது. அப்போதுதான் அது ஜலத்தைக் குடித்து, ஸூர்ய வெளிச்சத்தைக் சாப்பிட்டு இலை, பூ, காய், பழம் எல்லாம் உற்பத்தி செய்தது. தனியாக வந்தவிட்டு உயிர் போன சவம் மாதிரிதான் காய், பூ, இலை எல்லாம் கொட்டிப் போய் விடுகிறது. அதனால்தான் ஒன்றுக்கும் உதவாததை தண்டம் என்பது.

'நாம், நாம்' என்று ஸதாவும் போற்றி, பேணி, தின்று, அலங்காரம் பண்ணிக்கொண்டு சரீரம் என்பதைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோமே, இதுவும் அவனருளால் இதற்குள் உயிர் என்று ஒன்று ஓடாவிட்டால் ஒன்றுக்கும் உதவாத தண்டந்தான். அந்த அபிப்ராயத்தில் தான் அதை அவனுக்கு முன்—அவனுடைய விபூதிகளில் [சக்திகளில்] எவற்றிலாவதொன்றிலோ பலவற்றிலோ, கொஞ்சமோ நிறையவோ உள்ள பெரியவர்களுக்கு முன்—கிடத்தி தண்ட நமஸ்காரம் என்று செய்வது.

பொதுவாக வைஷ்ணவர்கள் "நமஸ்கரிப்பது" என்று சொல்லாமல் "ஸேவிப்பது" என்றே சொல்வார்கள்.

Koviloor Digital Library

இன்னும் நயமாக, நைச்சியமாகச் சொல்பவர்களானால் "தண்டம் ஸமர்ப்பிப்பது" என்பார்கள். கடிதாசு எழுதினால் 'நமஸ்காரம்' என்று போடுவதற்குப் பதில் 'தண்டம் ஸமர்ப்பிக்கிறேன்' என்றே போடுவார்கள்.

போன தலைமுறை வரைக்கும் அப்ராம்மணக் குடிபடைகள்கூட, ஒன்று, "கும்பிடறேன்" என்பார்கள்; அல்லது, "ஸ்வாமீ, தண்டம்!" என்பார்கள்.

"தண்டம் பெட்டேதி" என்று தெலுங்கு ஜனங்களும் சொல்கிறார்கள்.

ராமருடைய வில்லுக்குக் கோதண்டம் என்றுதானே பேர் இருக்கிறது? அதை வைத்து அந்தக் கோதண்ட பாணிக்கு "தண்டமு பெட்டேதுரா" என்று த்யாகையர் கீர்த்தனங்கூடப் பாடியிருக்கிறார்.

சரீரம் தண்டம் என்றால் வாஸ்தவத்தில் அந்த சரீரத்துக்குள்ளேயிருந்து ஆட்டிப் படைக்கிற மனஸுதான் அப்படி தண்டமானது என்று அர்த்தம். சரீரம் கருவிதான். அது என்ன பண்ணும்? மனஸ்தான் அதை ஆட்டி வைக்கிறது. 'ஆட்டி வைக்கிற தன்னையும் பகவான்தான் ஆட்டி வைக்கிறான்; அதை நல்லபடியான ஆட்டமாக்க வேண்டியவனும் அவனே; எல்லா ஆட்டத்தை நிறுத்தி சாந்தி ஸௌக்யம் தரக்கூடியவனும் அவன்தான்' என்கிற நினைப்பில், தண்டமாக மனஸை அவனுக்கு முன் கிடத்துவதுதான் நமஸ்காரம். 'மனஸ்' என்று அவனை விட்டு வெளி விஷயங்களிலேயே ஓடிக் கொண்டிருப்பதை அவனிடம் திருப்பி, அதற்கு அடையாளமாக 'மந(ஸ்)' என்ற அக்ஷரங்களையும் 'நம(ஸ்)' என்று திருப்பிப் பண்ணுகிற க்ரியைதான் 'நமஸ்காரம்'. தன்னுடைய கருவியான சரீரத்தைக் கொண்டே இதை மனஸ் செய்கிறது. சரீரத்தைத் தப்பு வழிகளில் ஆட்டி வைத்ததற்கு ப்ராயச்சித்தமாக அந்த சரீரத்தையே அவன் முன்னே தண்டம் மாதிரி விழப்

Koviloor Digital Library

பண்ணி அதற்குப் புண்யம் சேர்த்துக் கொடுக்கிறது; தானும் புண்யம் ஸம்பாதித்துக் கொள்கிறது.

தண்டம் என்று மட்டம் தட்டினாலும், நடக்க முடியாதவர்களுக்கு ஊன்றுகோலாக இருப்பதும் தண்டம்தானே? ஆத்ம மார்க்கத்தில் நடப்பதற்கு ஊன்று கோல் இந்த தண்ட நமஸ்காரம் என்றும் வைத்துக் கொள்ளலாம். [சிரித்து] செய்கிற கார்யமோ கீழே விழுந்து அசையாமல் கிடப்பது; ஆனால் அதுவே ஆத்ம மார்க்கத்தில் நடப்பதற்குக் கைத்தடி 'தண்டம்'!

ஏதோ ஒரு தினுஸில் மனஸைத் 'தண்ட'மாக்கி அவனுக்கு ஸமர்ப்பிப்பதே தாத்பர்யம்.

ஜ்வரம் வந்து சரீரத்திலே சக்தி க்ஷீணமானால் நடக்க முடியாமல் விழுந்துவிடுகிறோமோ இல்லையோ? அந்த சக்தி எங்கேயிருந்து வந்தது? அந்த ஈச்வரனொருத்தன் போட்ட பிச்சைதானே? "இந்த 'என் சக்தி' என்கிறது வாஸ்தவத்தில் உன் சக்திதான்" என்று அவனிடமே சக்தியை ஸமர்ப்பித்து அதற்கடையாளமாக சரீரத்தையும் தள்ளுவதுதான் மொத்தத்தில் தாத்பர்யம்.

துறவியின் தண்டம்

எங்களுக்கு தண்டம் எதற்கென்றால் அதுவும் மனஸை வசப்படுத்தி அடக்கி வைத்திருப்பதற்குத்தான். அடித்து, அடக்குவதற்கு ஆயுதமாக தண்டத்தை [கழியை] உபயோகிக்கிறோமல்லவா? தண்டாயுதம், தண்டாயுத பாணி என்கிறோமே! 'தண்டனை' என்ற வார்த்தையே 'தண்ட'த்திலிருந்து வந்ததுதான். ஜனங்கள் தப்பு வழிகளில் போகாமலும், சத்ருக்கள் தலைதூக்காமலும் அடக்கி ஆளுவதே ராஜாங்கத்தின் முக்ய கார்யமாகையால் அரசியல் சாஸ்திரத்திற்கே 'தண்ட நீதி' என்றுதான் பெயர். அந்த ரீதியிலே எங்கள் மனஸை அடக்கி வைத்துக்

Koviloor Digital Library

கொள்வதற்கு 'ஸிம்ப'லாக, ரூபகமாக எங்களுக்கு தண்ட தாரணம் விதித்திருக்கிறது. 'ஸிம்பல்' மட்டுமில்லை; அபிமந்த்ரணம் பண்ணி [மந்திரத்தால் சக்தியூட்டி] ஒரு குரு அநுக்ரஹிக்கிற போது, மனோநிக்ரஹத்திற்கு ஸஹாயம் செய்கிற சக்தி தண்டத்திற்கு நிஜமாகவே உண்டாகிறது.

விஞ்ஞானத்தில் கண்டு பிடித்துள்ள யந்த்ரங்களுக்கு [இயந்திரங்களுக்கு] ஆச்சர்யமான சக்தி வெளி லோகத்தில் இருக்கிற மாதிரி மந்த்ரங்களுக்கு உள்லோகத்திலே உண்டு. கையால் தொட்டால் 'ஷாக்' அடிக்கிற மின்ஸாரக் கருவிகளைக் கழியால் தொடலாம்தானே? அந்த மாதிரி இந்த்ரிய ஷாக் அடிக்காமல் எங்களை ரக்ஷிக்க இந்த உபகரணம். ரேடியோ அலைகளை ஏரியல் பிடிக்கவில்லையா? Lightning rod இடியே தாக்காமல் மின்ஸாரத்தைப் பிடித்து, விட வில்லையா? அப்படித்தான் இதுவும். எங்கள் விஷயத்தில் மனஸுக்கு அடையாளம், கவசம் இரண்டுமாக தண்டமே இருப்பதால் மனஸை பகவானிடத்தில், பெரியோரிடத்தில் ஒப்புவிக்கிறதற்கு அடையாளமான நமஸ்காரத்தையும் இதைக் கொண்டே நாங்கள் செய்கிறோம். ஆனாலும், 'நிலம் தோய' என்பார்கள், அப்படி பூமியோடு பூமியாக, சரீரத்தைக் கிடத்திவிட்டுக் கிடப்பதில் ஸைகலாஜிகலாக உண்டாகிற விநய பாவம், அந்த 'ஹாய்' இதில் இல்லைதான்!

நேரில் தெரியும் நபருக்கு நமஸ்கரிப்பதிலேயே விநயத்தின் முழுமை

அதோடு இன்னொன்று. அதைத்தான் முக்யமாகச் சொல்ல வந்தேன். ஸ்வாமிக்கு நமஸ்காரம் பண்ணுவதை விடவும், பூர்வ காலத்து மஹா புருஷர்களுக்குப் பண்ணுவதைவிடவும் நம் கண் எதிரே நடமாடிக்

Koviloor Digital Library

கொண்டிருக்கும் ஒரு பெரியவருக்கு இப்படி விழுந்து நமஸ்காரம் பண்ணும் போதுதான் விநய பாவம் இன்னும் நன்றாக உண்டாகிறது.

ஸ்வாமி-தெய்வங்களெல்லாம் மஹாசக்தி படைத்தவை. பூர்வகாலத்து மஹா புருஷர்களைப் பற்றியும் அவர்கள் தெய்வாம்சமாக இருந்தவர்கள் என்பதை நாம் நம்புகிறோம்; தெய்வத்தன்மை என்ற லெவலைத் தவிர வேறெதிலும் நாம் அவர்களை வைத்துப் பார்க்க முடிவதில்லை. வாஸ்தவமாகவே அவர்கள் அப்படி இருந்ததன் மஹிமையால்தான் இப்படி என்கலாம். அப்பேர்ப்பட்ட மஹாசக்தர்களின் முன்னே நாம் அல்ப சக்தர்கள்தான் என்ற உணர்ச்சியோடு நம்முடைய சரீரத்தைக் கீழே தள்ளுவதில் விசேஷமாக ஒன்றுமில்லை.

ஸரி; இப்போது நாம் நேரே பார்க்கிற பெரியவர் களைப் பற்றி நம் அபிப்ராயம் எப்படி இருக்கிறது? என்ன தான் அவர்களை தெய்வமாகச் சொன்னாலும், அவர்கள் நாம் தெய்வத்தன்மை என்று ஏதோ ஒன்றை நினைத்துக் கொண்டிருக்கிறோமே, அந்த லெவலிலேயே எப்போதும் நடப்பதாகத் தெரியவில்லை. மாநுஷ்யமாகவே அவர்கள் அநேகம் செய்வதாகப் பார்க்கிறோம். 'மாயை; விளையாட்டு; ஸௌலப்யத்துக்காகச் செய்கிற மநுஷ்ய விளையாட்டு' என்றெல்லாம் இதுகளைச் சொன்னாலும் கூட, அஸல் தெய்வங்களைப் பற்றியும், பூர்வ காலப் புண்ய புருஷர்களைப் பற்றியும் கேள்வியே எழும்பாமல் நமக்கு இருக்கிற உசந்த மனோபாவம்...... நான் சொல்ல வேண்டியதில்லை! அதனால்தான் இவர்களை [நிகழ்காலப் பெரியோரை] நாம் இவர்களுக்காகவே—இவர்களாகவே—வைத்து ஸ்தோத்ரிக்காமல் ஏதாவது ஒரு ஸ்வாமி அல்லது பூர்வகால புண்யபுருஷரைச் சொல்லி அவருடைய

Koviloor Digital Library

அவதாரமேதான் இவர் என்று ஸ்தோத்ரிப்பதாக ஏற்பட்டிருக்கிறது! யதார்த்தம் எப்படி வேண்டுமானால் இருந்து விட்டுப் போகட்டும் — நம்முடைய பார்வையில் இப்படியொரு வித்யாஸம் தெரிந்தும், நாம் இந்தப் பெரியவர்களுக்கு முன்னாடியும் சரீரத்தைத் தள்ளுகிறோமென்றால் இங்கேதானே நம்முடைய விநயபாவம் சிறப்பாக வெளியாகிறது?

நேரேயுள்ள பெரியோரிடமே அதிக மரியாதை

இன்னொரு வித்யாஸங்கூட — இப்போது சொன்னேனே அந்த வித்யாஸத்துக்கே வித்யாஸம் மாதிரியாக! நான் சொன்ன வித்யாஸத்திலிருந்து, ப்ரத்யக்ஷத்தில் தெரிகிற பெரியவர்களிடம் நாம் காட்டும் மரியாதையைவிட ஜாஸ்தியாகப் பூர்விகப் பெரியவர் களிடமும் தேவதைகளிடமுந்தான் காட்ட வேண்டும் என்று தோன்றலாம். ஆனால் யதார்த்தத்தில் எப்படி இருக்கிறது? நீங்களே எப்படிப் பண்ணுகிறீர்களென்று கொஞ்சம் ஆலோசித்துப் பாருங்கள். தேவதா மூர்த்தி களிடம் பக்தி என்பது யதேஷ்டமாக இருப்பது வாஸ்தவம். ஆனால் அவர்களிடம் 'மரியாதை' என்று ஒரேயடியாகக் கைகட்டி வாய் புதைத்துக் கொண்டா போகிறோம்? மரியாதையும் இல்லாமலில்லை. ஆனாலும் அதுதான் முக்யமென்று இருக்கவில்லை. பக்தி என்பது இன்னவென்றே வரையறுத்து லக்ஷணம் சொல்ல முடியாமல் இருக்கிற ஒன்று. அது அன்பின் அநேக ரஸபாவங்கள் நிரம்பியதாக இருக்கிறது. பக்திக்குப் பாத்திரமாகிற தேவதையிடம் நம் 'அப்ரோச்'சையும் வரையறுத்து லக்ஷணம் சொல்ல முடியவில்லை. நாம் எப்படி 'அப்ரோச்' பண்ணுகிறோம் என்று நமக்கே புத்திபூர்வமாகத் தெரியாமல் உண்டாகிற ஏதோ ஒன்று

Koviloor Digital Library

என்றுதான் அதைச் சொல்லணும். அதிலே மரியாதையும் ஒரு அம்சமாக இருக்கும். ஏன், இல்லாமலும் இருக்கும்! ஒரே ஸ்வாதீனத்தில் மரியாதையே பார்க்காமல் நிந்தா ஸ்துதிகூடச் செய்கிறதுண்டாச்சே!

பூர்விக புண்ய புருஷர்களைப் பார்த்தால் அங்கே நாம் இத்தனை ஸ்வாதீனம் எடுத்துக் கொள்வதாக இல்லை. தேவதைகளிடம் காட்டியதைவிட இவர்களிடம் மரியாதை அம்சம் முன்னுக்கு வந்து தெரிகிறது. ஆனால் அதுதான் முக்யமென்று சொல்வதற்கில்லாமல் பக்தியின் மற்ற ரஸபாவங்களையும் அதற்கு ஸமமாகக் காட்டுகிறோம்.

நம் காலத்தில் நமக்கு முன்னே கண்ணுக்குத் தெரிகிற பெரியவர்களுக்கு வந்தால், இங்கேதான் மரியாதை என்ற அம்சம் ரொம்பவும் முக்ய ஸ்தானத்தில் இடம் பெறுகிறது. தெய்வசக்தி என்பதைப் பற்றிய நம் கணக்குப்படி — அது ஸரியா, தப்பா என்பது வேறு விஷயம்; ஆனால் அதுதானே நடை முறையில் இருக்கிறது? அந்தக் கணக்குப்படி — பார்த்தால் தெய்வங்கள், பூர்வகால மஹான்கள், நம் காலத்துப் பெரியவர்கள் ஆகிய மூன்று பேருக்கு எப்படி மார்க் போடுகிறோமோ அதற்கு 'இன்வர்ஸ் ப்ரபோர்ஷ'னிலேயே [எதிரிடை விகிதாசாரத்திலேயே] நாம் அவர்களிடம் காட்டுகிற மரியாதை இருக்கிறது! ப்ரியம், பந்துத்வம், ஸ்வாதீனம் என்றெல்லாம் இருக்கிற பக்தியம்சங்கள் ப்ரத்யக்ஷப் பெரியவர்களிடம் தூக்கலாக இல்லாமல், அதனாலேயேதானோ என்னவோ, மரியாதையம்சம் இங்கேதான் தலைதூக்கிக் கொண்டு முக்யமாக நிற்கிறது.

மதஸம்பந்தமாகப் பெரியவர்கள் என்றிருக்கிற ஸ்வாமியார்கள் மட்டுந்தான் என்றில்லை; அரசியல் ப்ரமுகர்கள், கட்சித் தலைவர்கள், அறிவாளிகளாக இருக்கப்பட்டவர்கள், கலைகளில் சிறப்புப் பெற்றவர்கள், பணபலம் படைத்தவர்கள் என்று யாரை எடுத்தாலும்,

Koviloor Digital Library

எந்தத் துறையிலும் பெரியவர்களாக உள்ளவர்களிடம் மரியாதைதான் நம் அப்ரோச்சில் முக்யமாயிருக்கிறது.

'மரியாதை' என்பதை விட 'ரெஸ்பெக்ட்' என்று சொன்னால் இந்த விஷயம் நன்றாகப் புரியும். தேவதைகளுக்கு 'ரெஸ்பெக்ட்' சொல்வதுண்டா? 'Respected' போடுவதுண்டா? பூர்வகாலப் பெரியவர்களுக்கும்—நம்முடைய ஆசார்யாள், வ்யாஸாசார்யாள் மாதிரியானவர்களுக்கும் 'respected' போடுவதில்லை; 'adored' என்றுதான் போடுகிறோம். Adoration என்பது பூஜிப்பது. அதில் ரெஸ்பெக்ட் ஒரு அம்சந்தான்; இன்னும் என்னென்னவோ அதற்குள் உண்டு. ப்ரத்யக்ஷத்திலே பார்க்கிற பெரியவர்கள் விஷயத்தில்தான் 'ரெஸ்பெக்ட்', 'ரெஸ்பெக்டெட்' எல்லாம் முதல் அம்சமாக வருகிறது.

தேவதைகள் எத்தனை உசத்தியாயிருந்தாலும் அந்த உசத்தி அவர்களுக்கு ஸ்வாபாவிகம் [தன்னியல்பாயிருப்பது] என்பதால் அதைப் பெரிசாக எடுத்துக் கொண்டு நாம் விசேஷமாக மரியாதை கொள்ளுவதில்லை. முற்கால மஹாபுருஷர்களையும், "தெய்வாம்சம் பெற்றவர்கள்; அதனால் உசந்தவர்களாக இருக்கிறார்கள்" என்று லேசாக எடுத்துக் கொண்டு போய்விடுகிறோம். நம் மாதிரி மநுஷ்யர்களாக நமக்கு மத்தியிலே இருந்து கொண்டே நம்மைவிட உசந்தவர்களாக ஆத்மாநுபவத்திலேயோ, அறிவிலேயோ, பணம்-பதவியிலேயோ இருக்கும் பெரியவர்களைப் பார்க்கும்போதுதான் நம்முடைய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் நமக்கில்லாத உயர்வை அடைந்திருக்கிறார்களே என்பதால் மரியாதை விசேஷமாக உண்டாகிறது. அதிலும் ஆத்மா, மதம், ஸ்வாமி என்று ஸம்பந்தப்பட்டவர்களிடம் நன்றாகப் பூரித்துக் கொண்டு உண்டாகிறது. அதனால் ஸ்வாமி, புராண புருஷர்கள், பூர்வகாலப் பெரியவர்கள் முதலியவர்களை

Koviloor Digital Library

விடவும் இவர்களுக்குச் செய்யும் நமஸ்காரத்தில்தான் 'நாம் சின்னவர்' என்ற எளிமை ஆழமாக ஏற்படுகிறது.

தமது துரதிருஷ்டம்

அப்படிப்பட்ட உணர்ச்சியைப் பெற்று லேசாகிற பாக்யம் எனக்குச் சிறு வயஸிலேயே பறிபோய் விட்டது! 'ஸ்தான' கௌரவம் ஒரே பளுவாக உள்ளே பூந்து அமுக்கும்போது லேசாவது எப்படி?

மற்ற ஸந்நியாஸிகளுக்கெல்லாம் இல்லாததாக இதில் எனக்கென்று ["எனக்கு...ன்னு" என்று அர்த்தபுஷ்டியுடன் இழைத்துக் கூறுகிறார்] இரண்டு 'அன்லக்கி ப்ரைஸ்'கள் [துரதிருஷ்டப் பரிசுகள்!] என்னவென்றால்: ஸந்நியாஸிகளும் தங்களைவிடப் பெரியவர்களான மற்ற ஸந்நியாஸிகளுக்கு நமஸ்காரம் செய்ய வேண்டும் என்று பொது விதி. இதில் ஒரு வித்யாஸமான அம்சம் என்னவென்றால், ஸந்நியாஸிகளில் யார் பெரியவர் என்று வயஸை வைத்துக் கணக்குப் பண்ணுவதில்லை. ஒருத்தர் எத்தனை வருஷம் வ்யாஸ பூஜை பண்ணியிருக்கிறார் என்பதை வைத்தே கணக்கு.

ஒவ்வொரு ஸந்நியாஸியும் ஆஷாட பூர்ணிமை*யில் வ்யாஸ பூஜை பண்ண வேண்டும். அந்த ரீதியில், இருபது வயஸில் [ஸந்நியாஸ] ஆச்ரமம் வாங்கிக் கொண்ட ஒருவர் முப்பது வயஸில் பத்து பூஜை பண்ணியிருப்பார். இவருக்கு 25 வயஸாகிற போது, ரிடையரான ஒரு 55 வயஸுக்காரர் ஆச்ரமம் வாங்கிக் கொள்கிறாரென்று வைத்துக் கொள்ளுங்கள். இவர் பத்து வ்யாஸ பூஜை முடிக்கும் போது அந்த வ்ருத்தர் ஐந்துதான் முடித்திருப்பார். அப்போது அந்த இரண்டு பேரும் ஸந்தித்தால் முப்பது

* நம்முடைய ஆனி மாத அமாவாசையை அடுத்து வரும் பௌர்ணமி.

Koviloor Digital Library

வயஸுக்காரர்தான் ஜாஸ்தி வ்யாஸ பூஜை முடித்தவரென்பதால் அவருக்கே அறுபது வயஸுக்கார வ்ருத்த ஸந்நியாஸி நமஸ்காரம் பண்ண வேண்டும்.

ஆனாலும் என் விஷயத்திலோ...... நான் ஸ்வாமிகளான அப்புறம் என்னைவிட ரொம்ப வருஷம் ஜாஸ்தி வ்யாஸ பூஜை பண்ணியுள்ள அநேக ஸந்நியாஸிகளை ஸந்தித்திருக்கிறேன். ஆனாலும் நான் அவர்களுக்கு நமஸ்கரிப்பது என்பது இல்லாமல் நேர்மாறாகவே நடந்திருக்கிறது. காரணம், 'ஜகத்குரு' டைட்டில்! 'ஜகத்தெல்லாம் நமக்கு குரு' என்றுதான் நான் அதை அர்த்தம் பண்ணிக் கொண்டிருந்தாலும், வெளி நடவடிக்கையிலே, 'ஜகத்குருவுக்கு ஜகத்து பூராவும் சிஷ்ய வர்க்கம்; சிஷ்யருக்கு நமஸ்காரம் என்பது மனஸாலேயும் நினைக்கப்படாதது' என்ற மடத்துச் சட்டத்தைத்தானே மதித்து நடக்கணும்? ஆகையினாலே யதிகளிலேயும் எனக்குப் பெரியவர்கள் என்று நான் யாருக்கும் நமஸ்காரம் பண்ண முடியாமலாயிற்று!

இதைவிட இன்னொரு துர்பாக்யம்—'எனக்கென்று' வாய்த்த துர்பாக்யம்: ஜகத்குரு பட்டம் கட்டிக் கொண்ட மற்ற ஸந்நியாஸிகளும் தங்களுக்குப் பட்டம் கட்டின குரு ஸ்வாமிகளுக்கு நமஸ்காரம் செய்திருப்பார்கள்—யதேஷ்டமாகவே செய்திருப்பார்கள். இங்கே [தம்மையே குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்] அதற்கும் கொடுத்து வைத்திருக்கவில்லை. கதை உங்களுக்கே தெரிந்திருந்தால் ஸரி*.

* ஸ்ரீ மஹாபெரியவர்களை அடுத்த பட்டமாக சங்கற்பித்த பூர்வாசாரியர் மஹா ஸமாதி அடைந்தபின்தான் இவர் அவரிருந்த இடத்திற்குச் சென்று பட்டமேற்க முடிந்தது. ஆகையினால் ஸ்ரீசரணர் துறவறம் மேற்கொண்ட நாளிலிருந்து அவருக்கு ஸ்தூலத்தில் குரு என்று ஒருவர் இருக்கவில்லை. ஆச்சரியமாக, ஏறக்குறைய ஸம காலத்தில் பட்டமேற்ற சிருங்கேரி ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகளின் விஷயத்திலும் இவ்வாறே நடந்தது.

Koviloor Digital Library

நமஸ்கார பாக்யத்தைப் பயன் செய்துகொள்க!

எனக்குக் கிட்டாத அந்த நமஸ்கார பாக்யம் உங்களுக்கெல்லாம் கிட்டியிருக்கிறது. நீங்கள் அதைப் பூராவாக ப்ரயோஜனம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். கோவிலுக்குப் போய் ஸ்வாமி நமஸ்காரம் பண்ணுவதோடு, கண்ணுக்கெதிரே நடமாடிக் கொண்டிருக்கும் பெரியவர்களையெல்லாம் தேடிப் போய் நமஸ்காரம் பண்ணுங்கள்.

பின்னாடி சொன்னதில்தான் குறிப்பாக மரியாதையுணர்ச்சி முக்யமாயிருக்கிறது என்கிறேன்.

பணிவுப் பண்பு வளர

"இருக்கட்டுமே, அதிலென்ன விசேஷம்?" என்றால் — ரொம்ப விசேஷம் இருக்கிறது. இந்த மரியாதை உணர்ச்சிதான் விநயம், பணிவு என்று சொல்கிற உசந்த பண்பை வரவழைத்துத் தருகிறது. 'அடி பணிந்து' என்றே நமஸ்காரத்தைச் சொல்கிறோம். இந்தப் பணிவு நன்றாக மலர்ச்சி பெற்று ப்ரகாசிப்பது, ஏனைய பக்தி பாவ பூஜை புரஸ்காரங்களை விடவும் மரியாதையுணர்ச்சியோடு பண்ணுகிற நமஸ்காரத்தில்தான். ஒரு பெரியவருக்கு முன்னாடி பூமியிலே சரீரத்தைத் தள்ளி நமஸ்கரிக்கும் போது இந்த விநயத்துக்கு நன்றாக ரூபகம் கொடுத்து அநுபவித்து ஸந்தோஷப்பட முடிகிறது. அந்த [விநய] மனோபாவத்திற்கு இந்த [நமஸ்கார] க்ரியை ரூபகமாக மட்டுமில்லாமல் இந்த க்ரியையே அந்த பாவம் மேலும் மேலும் வ்ருத்தியாவதற்குப் புஷ்டியும் தருகிறது.

எத்தனையோ காலமாக, யுகங்களாக இந்த மாதிரி நமஸ்கரிப்பது என்பதை நம்முடைய பூர்விகர்கள் செய்து

Koviloor Digital Library

வந்திருக்கிறார்களல்லவா? அதனால் அவர்களுடைய பணிவான எண்ணம் அந்த [நமஸ்கார] கார்யத்திற்குள் ஊறி ஊறி, கார்யத்திற்குள்ளேயே [பணிவு என்ற] பாவத்தை பலமாக ஊட்டியிருக்கும். அவர்கள் வழியிலே வந்த நாம் இந்தக் காரியத்தைச் செய்கிற போது பஹு கால பிதிரார்ஜிதமாக அந்த பாவமும் நாமறியாமலே நமக்குக் கொஞ்சமாவது ஏற்படும். Heredity [பாரம்பரியம்], race consciousness [ஓர் இனத்திற்கான பொது உணர்வு] என்றெல்லாம் நவீனப் படிப்பாளிகளும் ஒப்புக் கொள்கிறார்களே!

மனிதனின் அக-புற உயர்வு-வீழ்ச்சிகள்

'மற்ற ப்ராணி வர்க்கங்கள் அத்தனையும் குறுக்கே வளர்கிற 'திர்யக்' ஜந்துக்கள்; மநுஷ்யன் ஒருத்தன்தான் காலுக்கு மேலேயும் உடம்பு, சிரஸு என்று உயரவாட்டில் 'ஊர்த்வமுக'மாக வளர்கிறவன்; ஸ்ருஷ்டி வர்க்கங் களிலேயே இவன்தான் உசந்தவன் என்பதால் இப்படி இவனைப் படைத்திருப்பது' என்று பெருமை சொல்கிறதுண்டு. ஆனால் இந்த உசத்தி அஹம் பாவத்திலேயும் தற்பெருமையிலேயும் கொண்டு விட்டால் இவன் மிருக ஜாதிக்கும் கீழே போக வேண்டியதுதான்! நம்முடைய சிந்தனை, வாழ்க்கை முறை எல்லாம் மற்ற ப்ராணிகளுடையதைப் போல இந்த்ரிய ஸௌக்யங் களோடு முடிந்து போகாமல் உசந்ததாக இருக்க வேண்டு மென்பதற்காகத்தான் பகவான் நம்மை இப்படிப் படைத்திருப்பதாகப் புரிந்து கொண்டு அதற்கான ப்ரயாஸைகளைப் பண்ணி இன்னும் உசந்த ஸ்திதிக்குப் போகணுமே தவிர, தற்பெருமைப் பட்டுக் கொண்டு கீழே விழுந்துவிடக் கூடாது.

Koviloor Digital Library

தற்பெருமையை என்னவென்று சொல்கிறோம்?' 'தலைக் கனம்', 'மண்டைக் கனம்' என்கிறோம். குறுக்கு வாட்டில் வளருகிற ப்ராணியாயிருந்து அப்படி மண்டைக் கனம் ஏறினால் பரவாயில்லை; 'பாலன்ஸ்' கெட்டுப் போகாமல் சமாளித்துக் கொண்டு விடலாம். ஆனால் உயரவாட்டில் இப்போது நாம் இருக்கிற தினுஸில் மண்டைக் கனம் ஏறினால்... 'டாப்-ஹெவி' ஆனால் என்னவாகும்? 'ஈக்விலிப்ரியம்' என்கிற ஸமசீர் நிலையே கெட்டுப் போய், குலைந்து போய், தடாலென்று விழ வேண்டியதுதான்! பகவான் நாம் உயரவாட்டில் வளரும்படி வைத்து சிரஸை உச்சியில் வைத்திருக் கிறானென்றால் ஒருபோதும் தலைக்கனம் ஏறாமல், பணிவாயிருந்து நம்மை விழுவதிலிருந்து — வீழ்ச்சியிலிருந்து — காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். 'பதிதன்', 'பதிதை' என்று ரொம்பவும் நிஷித்தமாகச் சொல்கிறோமே, அதற்கு நேர் அர்த்தமே 'விழுந்து விட்டவர்' என்பதுதான்.

அப்படிக் கீழே விழாமலிருப்பதற்கு நமஸ்காரம் என்பதாக வினயத்தோடு கீழே விழுவதே ஸஹாயம் பண்ணும்! நிற்கிறவன் விழுந்து அடிபட்டுக் கொள்ளலாம். உட்கார்ந்திருக்கிறவன்கூட அப்படியே சாய்ந்து அடி, கிடி படலாம். பூமியோடு பூமியாக சரீரத்தைப் போட்டுக் கிடக்கிறவன் விழவோ, சாயவோ முடியுமா?

உயரம் ஜாஸ்தி ஆக ஆக, விழுந்தால் படுகிற அடியும் ஜாஸ்தி ஹானி உண்டாக்குவதாக இருக்கும். உசந்த ஸ்தானம் என்பதன் கதியும் அப்படித்தான். அங்கே இருக்கிறவன் தப்புப் பண்ணி இடறி விழுகிறபோதுதான் அப்புறம் எழுந்திருக்கவே முடியாமல் — அதாவது, அந்த உசத்தியை மறுபடி அடையவே முடியாதபடி — ஊர் உலகமெல்லாம் சிரித்து அவனை மட்டந்தட்டி வைத்து விடுகிறது.

Koviloor Digital Library

தலைக் கனம் குறையத் தலையால் வணங்குவது

உலகம் சிரிப்பது, ச்லாகிப்பது இருக்கட்டும். ஆத்மார்த்தமாக ஒருத்தனுக்கு எது நல்லது? எப்படி இருந்தால் அவனுக்கு உள்ளூர ஒரு நிறைவு, நிம்மதி ஏற்படுகிறது? பாரம் தூக்கினால் நிம்மதியா, அதை இறக்கிப் போட்டால் நிம்மதியா? பாரம் என்றால் இந்த ஸம்ஸார ஸாகரத்தில் ஏற்படுகிற கஷ்டங்களின் பாரம் மட்டுமில்லை. பெரிய பாரம் அஹம்பாவந்தான்; தற்பெருமைதான். அதை இறக்கினாலே நிரந்தர நிம்மதி. அப்படி இறக்குவதற்கு ஸஹாயம் செய்யும் க்ரியைதான், ஒரு மநுஷ்ய சரீரத்தில் பூமிக்கு ரொம்ப எட்டத்திலிருக்கிற சிரஸை ஒரே இறக்காக, மற்ற அவயவங்களுக்கு ஸமஸ்தானத்தில் இறக்கி பூமியோடு பூமியாகப் போட்டு நமஸ்கரிப்பது! "சிரஸே ப்ரதானம்" என்ற பெருமையை த்யாகம் பண்ணி, அதையும் எண்சாணில் ஒன்றாகவே எளிமைப்படுத்தும் க்ரியை! பிறத்தியார் இறக்கினால் அவமானம்; நாமே இப்படித் தலையை இறக்கினாலோ பஹுமானம் [வெகுமானம்]! விநய 'ஸம்பத்து' என்றே சொல்லும் வெகுமதி! தலைக் கனம், மூளைப் பெருமை போகவே தலையால் நமஸ்கரிப்பது! **"தலையே, நீ வணங்காய்!"** என்றுதான் அப்பர் ஸ்வாமிகள் பாடியதும்.

குப்புற விழுவது ஏன்?

ஒருமுகமாக இந்தக் கார்யத்தைப் பண்ண வேண்டும், அப்போது பராக்குப் பார்க்கப்படாது என்பதால்தான் வெளியிலே ஒன்றையும் பார்க்காமல் பூமிப் பக்கமாக தலையைக் குனிந்து கொண்டு குப்புறவாக்கில் நமஸ்கரிப்பது. மற்றவர்களால் தலைகுனிவு ஏற்படுவது அவமானம். நாமே குனிவது பஹுமானம்!

Koviloor Digital Library

பஹிர்முகமாக [வெளிமுகமாக] ஒரு ஜீவனை இழுக்கிற இந்த்ரியங்களெல்லாமே மல்லாக்குப் பக்கத்தில்தானே இருக்கின்றன? அவை எல்லாவற்றையும் லோகத்தின் திசையிலிருந்து திருப்பவே குப்புற நமஸ்கரிப்பது.

குப்புற விழுகிறது, முதுகு காட்டுகிறது—'புற முதுகு காட்டுவது' என்கிறது—இதெல்லாம் அவமானம். ஆனால் மானம் என்பது 'நான்' என்கிற அஹம்பாவம் இருக்கிறபோதுதானே முக்யம்? மநுஷ்ய வாழ்க்கையிலே 'நான்'–பாவமும் மானமும், அதோடேயே அவமானமும் — அபிமானமுந்தான்! —இந்த எல்லாமும் இல்லாமலிருக்க முடியாதுதான். [இவை] இல்லாமல் மட்டுமிருந்தால் நாமே ராஜாதான். என்ன ராஜா? ஆத்மாவை ஜயித்த ராஜா. ஜீவன் முக்தன் என்னும் ராஜா. அப்போது நமஸ்காரமே இல்லை. ஆனால் நம் மாதிரி நிலையிலே வாழ்க்கை நடத்துகிறதற்கு மானாவமானங்களை அவச்யமான இடங்களில் வைத்துக்கொண்டே இருப்போம். ரொம்பவும் அதைக் கொண்டாடிக் கொண்டில்லாமல் கொஞ்சம் அடக்கி வைத்துக் கொண்டிருப்போம். ஆனால் அதை வைத்துக் கொள்ளாமலே இருக்கிற இடங்களும் உண்டு என்று அறிவு பெற்று அங்கே மட்டும் தூக்கிப் போடுவோம். அந்த இடங்கள் என்ன? ஈச்வர ஸந்நிதானம், மஹான்கள், பெரியவர்களின் ஸந்நிதானம்தான். அங்கே மானமே வேண்டாம்! குப்புற விழுவோம்! புறமுதுகு காட்டுவோம்! ஆத்ம ஜயம் என்று சொன்னேனே, அந்த வெற்றிக்கு ஏற்றுகிற முதல் சின்னப் படியாக இங்கே இப்படிப் புறமுதுகு காட்டுவோம். பிற இடங்களிலும் ரொம்பவும் மானாவமானம் கொண்டாடிக் கொண்டில்லாமல் கொஞ்சமாவது அடங்குவதற்கு இதுவே ஸஹாயம் செய்யும்.

மரியாதை ஸ்தானத்திலிருப்பவர்களுக்கு முன்னால் நிற்கிறபோது முதுகு காட்டப்படாதுதான். விடை பெற்றுக்

Koviloor Digital Library

கொள்ளும்போதுகூட முதுகைக் காட்டாமல், முன்னால் பார்த்துக் கொண்டேதான் பின்னுக்குப் போகவேண்டும். செங்குத்தாக நிற்கிறபோது அப்படி. செங்குத்து அஹங்காரம் ஓங்கி நிற்பதற்கு அடையாளம் என்பதால் தானே தரையோடு விழுகிறோம்? இப்படி நேர்மாறாக தரையோடு கிடக்கிறபோது முதுகைத்தான் காட்டணும்.

த்யானம் என்றால் அப்போது செங்குத்துதான். கொஞ்சங் கூட தொய்யப்படாது. விறைப்பாய் உட்காரணும். தலையும் குனியவேபடாது. 'தலைகுனிவு' கூடாது. அது பெரிய விஷயம், பெருமை தருகிற விஷயம். அது ஆத்மாவுக்கு நல்லது செய்கிற பெருமை.

ஆனாலும் அதுவுங்கூட அபக்வ [பக்குவமற்ற] ஸ்திதியில் தப்பான அஹம்பாவப் பெருமைக்குக் கொண்டு விடலாம். அதற்கு சிறுமை மருந்து கொடுக்க வேண்டும். அந்த மருந்துதான் நமஸ்காரம். அப்போது பெருமை உசத்தி கொஞ்சங்கூட கொண்டாடிக் கொள்ளாமல் தலையைக் குனிந்து கொண்டு, முதுகைக் காட்டிக்கொண்டு தாழக் கிடக்க வேண்டும். கிடக்கிறபடி கிடந்துவிட்டால் அதுவே நல்ல நெய், பனங்கல்கண்டு போட்ட லேஹ்ய மருந்தாக ருசிக்கும்.

அருள்மழை சேரும் 'தாழ்நிலை'

உசத்தி ஒன்றும் வேண்டாம்; தாழவே இருக்க வேண்டும். உயர்மட்டத்தில் ஜலம் நிற்காமல் தாழ்மட்டத்திலேயே சேருகிற மாதிரி நாம் மனோபாவத்தில் தாழ இருந்தால்தான் க்ருபாவர்ஷம் — அருள்மழை — நம்மிடம் பாய்ந்து வந்து தேங்கி நிற்கும். அதற்கு அடையாளமாகத்தான் தலையோடு கால் சரீரத்தை நில மட்டத்தோடு தாழ்த்திக் கிடப்பது.

Koviloor Digital Library

ஸாஷ்டாங்க நமஸ்காரம்

இதற்கே ஸாஷ்டாங்க நமஸ்காரம் என்று பெயர்.

'ஸாஷ்டாங்க' என்றால் 'எட்டு அங்கங்களோடு கூடிய' என்று அர்த்தம். நம்முடைய எட்டு அங்கங்கள் பூமியில் படுகிற விதத்தில் நமஸ்கரிக்கிறதே 'ஸாஷ்டாங்க நமஸ்காரம்'.

பொதுவாக இந்த எட்டு அங்கங்கள் என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால்: முன்னந்தலை, தோள் இரண்டு, கை இரண்டு, வக்ஷமும் (மார்பும்) வயிறும் சேர்ந்த torso என்கிற கபந்த பாகம், கால் இரண்டு ஆகிய எட்டு அங்கங்கள் நிலத்தில் படுவதால், படிவதால் **'ஸ அஷ்ட அங்கம்—ஸாஷ்டாங்கம்'** என்று பெயர் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த அஷ்ட அங்கங்கள் என்னென்னவென்று வேறே எப்படியெல்லாம் பல தினுஸாகச் சொல்லியிருக்கிறது என்று ஒருத்தர் எழுதியிருக்கிறார். அதில் ஒரு தினுஸுப்படி தலை, மோவாய் [முகவாய்க்கட்டை], காது இரண்டு, கை இரண்டு, கால் இரண்டு என்று எட்டு கணக்குச் சொல்லியிருக்கிறது. தலை — அதாவது நெற்றியின் உச்சி பாகக் கபாலம் — பூமியில் படும்போது மோவாய்க் கட்டையும் படுவது என்றால் முடியாது. ஒரு ஸமயத்தில் இரண்டில் ஒன்றுதான் படமுடியும். அது மாத்திரமில்லை, தலையோடு கால் குப்புறக் கிடக்கும்போது காது எப்படி பூமியில் படமுடியும்? ஆகையினால் இங்கே ஒரு ஸமயத்தில் இல்லாமல், அடுத்தடுத்துச் செய்கிற பல கார்யங்களை ஒன்று சேர்த்து எட்டு அங்கம் பூமியில் படுவதே ஸாஷ்டாங்க நமஸ்காரம் என்ற க்ரியையாக அர்த்தம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

Koviloor Digital Library

அந்தப் பல கார்யங்களில் எல்லாருக்கும் தெரிவது—என்னென்னவென்றால்: தலையைப் பூமியில் படவிட்டுக் குப்புறவிழுவது! சரீர ஸமர்ப்பணமே நமஸ்காரமென்றால், சரீரம் என்கிறபோது குறிப்பாக மார்பும், வயிறும் சேர்ந்த கபந்த பாகத்தைத்தான் நினைக்கிறோம். ஹ்ருதயம், ச்வாஸகோசம், ஜீர்ண உறுப்புக்கள் எல்லாம், அதோடு முதுகெலும்பும் உள்ள ஜீவமூலமான பாகம் அதுதானே! மூளையை அஹம்பாவ மண்டை கனம் ஏறாமல் இறக்க சிரஸை இறக்குகிறோம் என்றால், ஜீவனுக்கு ஜீவன் தருகிற சரீரத்தை—கபந்தத்தையும்—கீழே போடத்தான் வேண்டும். அது முக்யம். ஆனால் இப்போது நான் சொன்ன கணக்கில் அதைச் சேர்க்கக் காணோம்!

இதே மாதிரி, கபந்த பாகத்தோடு இரண்டு காலையுங் கூட விட்டுவிட்டு இன்னொரு கணக்கும் கொடுத்திருக்கிறது. அதன்படி கை என்று ஒரே பாகமாக நான் சொன்னதை புஜம் (arm) என்றும் ஹஸ்தம் (hand)என்றும் காட்டியிருக்கிறது.

இன்னும் பல தினுஸாகவும் சொல்லியிருக்கிறது. படித்தால் ஒரே குழம்பலாக ஆகும். 'நமஸ்காரத்தில் இத்தனை தினுஸா? எதைப் பண்ணுவது?' என்று குழம்பிக் கொண்டு [சிரித்து] 'நமஸ்காரத்தின் திசைக்கு ஒரு நமஸ்காரம்!' என்று ஓடிப் போய்விடத் தோன்றலாம்!

ஆனபடியால் பேச்சு இழுத்துக்கொண்டு போனதில் இதுவரை நான் ஸாஷ்டாங்க விஷயமாகச் சொன்ன தினுஸுகளை மறந்து விடுங்கள். இப்போது, ஸம்ப்ரதாயமறிந்த பெரியோர்கள் எப்படிப் பூர்வ சாஸ்த்ர ஆதாரப்படி எட்டு அங்கங்களை வகுத்துக் கொடுத்திருக்கிறார்களோ அதைச் சொல்கிறேன். அதை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்.

Koviloor Digital Library

பூர்வ சாஸ்த்ரங்களில் இரண்டில் இந்த எட்டு அங்கங்களில் ஏழு அங்கங்களை ஒரே மாதிரி சொல்லியிருக்கிறது.

ஒன்று வ்யாஸ ஸ்ம்ருதி. அதில்

தோர்ப்யாம் – பத்ப்யாம் – ஜாநுப்யாம் – உரஸா – சிரஸா த்ருசா |
மனஸா – வசஸா சேதி ப்ரணாமோ(அ)ஷ்டாங்கமீரித: ||

என்று இருக்கிறது.

இன்னொன்று, பரமேச்வர ஆராதனையில் விசேஷமாக உள்ள 'மஹா ந்யாஸ'த்தில் உமா-மஹேச்வரர்களை எப்படி நமஸ்காரம் பண்ணுவது என்பதற்கு ஆபஸ்தம்ப மஹர்ஷியின் வாக்கில் சொல்லியிருப்பது:

உரஸா–சிரஸா–த்ருஷ்ட்யா–வசஸா–மனஸா ததா |
பத்ப்யாம்–கராப்யாம்–கர்ணாப்யாம் ப்ரணாமோ(அ)ஷ்டாங்க உச்யதே ||

முதலில் சொன்னதன்படி வரிசை க்ரமமாக 1) கை, 2) பாதம், 3) முழங்கால் முட்டி, 4) மார்பு, 5) தலை, 6) கண், 7) மனஸ், 8) வாக்கு என்பது எட்டு அங்கங்கள்.

இரண்டாவதாகச் சொன்னதில் முழங்கால் இல்லை. அதற்குப் பதில் காது இருக்கிறது. வரிசைப்படி அவற்றை ச்லோகத்தில் 1) மார்பு, 2) தலை, 3) கண், 4) வாக்கு, 5) மனஸ், 6) கால், 7) கை, 8) காது என்று சொல்லியிருக்கிறது.

இரண்டு ச்லோகங்களிலும் மனஸ், வாக்கு, கண் என்ற மூன்றைச் சொல்லியிருக்கிறது. இங்கே கேள்வி வருகிறது. 'உடம்பையே சேர்ந்த எட்டு அங்கங்களை பூமி படப் போடுவதுதான் ஸாஷ்டாங்க நமஸ்காரம் என்றே நினைத்துக் கொண்டிருக்கிறோம். அதில் மனஸும் வாக்கும் எப்படிச் சேரும்? கண் உடம்பைச் சேர்ந்த

Koviloor Digital Library

அங்கந்தான் என்றாலும் அதை எப்படி பூமியில் படும்படிப் பண்ணுவது?' இப்படிக் கேள்வி.

இதற்குப் பதில், இந்த மூன்றும் க்ரியையாய், கார்யமாக இல்லாமல் பாவமாக நம் எண்ணத்தில் இருக்க வேண்டியவை. மனஸை நாம் நமஸ்கரிக்கும் பெரியவரிடம் தாழக் கிடத்த வேண்டும். வாக்கையும் அப்படியே. கண்ணிலே அவர் ஸ்வரூபத்தை நிறுத்தி அதையும் அவருக்குப் பணியச் செய்ய வேண்டும்.

பாவனையான இந்த மூன்று அங்கங்களைத் தள்ளி விட்டால், பாக்கியுள்ள — வாஸ்தவத்திலேயே அங்கம் என்று ஸ்தூலமாக இருக்கப்பட்ட — ஐந்து மிஞ்சுகின்றன.

ஒரு கணக்கின்படி இந்த ஐந்து 1) கை, 2) பாதம், 3) முழங்கால், 4) மார்பு, 5) தலை. இன்னொன்றின்படி 1) மார்பு, 2) தலை, 3) கால், 4) கை, 5) காது.

இவற்றிலே ஒன்றில் முழங்காலையும், அதை மாற்றி இன்னொன்றிலே காதையும் சொல்லியிருக்கிறது.

இப்படி ஐந்து ஐந்தாக இரண்டு இருப்பதில் நமக்குத் தலையும், மார்பும் ஒவ்வொன்றுதான் இருக்கின்றன. முதல் கணக்கில் வரும் பாதம் என்பதை foot என்று மட்டும் அர்த்தம் பண்ணிக்கணும். அதாவது கணுக்காலுக்குக் கீழே விரல்களோடு உள்ள பாகம் என்று மாத்திரம். அந்தப் பாதம், முழங்கால், கை ஆகிய ஒவ்வொன்றும் இரண்டிரண்டு இருக்கின்றன. ஆக ஒரு தலை, ஒரு மார்பு, இரண்டு பாதங்கள், இரண்டு முழங்கால்கள், இரண்டு கைகள் என்று மொத்தம் கூட்டினால் நமஸ்காரத்தில் பிரயோஜனப்படுகிற எட்டு ஸ்தூலமான அங்கங்களே கிடைத்து விடுகின்றன!

இன்னொரு கணக்குப்படி முழங்காலை தள்ளி விட்டுக் காதை எடுத்துக்கொண்டோமானாலும் நமக்கு

Koviloor Digital Library

இரண்டு காதுகள் இருக்கின்றனவே! ஆகையினால் இங்கேயும் அஷ்டாங்கம் என்ற கணக்கு, நமஸ்கார க்ரியையில் நாம் ஸ்தூலமாகப் பயன்படுத்தக்கூடிய எட்டு சரீர உறுப்புக்களாக இருக்கின்றன.

இரண்டிலும் 'உரஸ்' என்று வருவது வக்ஷ [மார்பு] ப்ரதேசத்தை மட்டும் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. அதிலேயே வயிறும் சேர்ந்திருப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டும். வக்ஷம் பூமியில் படிய நமஸ்கரித்தால் வயிறும் பூமியிலே பட்டுத்தான் ஆக வேண்டும். அதைத் தனிப்படச் சொல்லவேண்டியதில்லை. அதனாலேயே, கபந்த பாகம், torso என்றேனே, அந்த முழு பாகத்தையுமே உரஸ் என்பதாக இந்த இரண்டு ச்லோகங்களிலும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த இரண்டு ச்லோகத்தையும் சிஷ்டர்கள் [மேலோர்] எடுத்துக் கொண்டாலும், இந்த இரண்டிலும் கூடப் பின்னால் சொன்னேனே, காதைச் சேர்ந்த ச்லோகம், அதைத்தான் விசேஷமாகப் போற்றி நடைமுறையிலும் செய்கிறார்கள்.

முதல் ச்லோகம், இரண்டாவது ச்லோகம் இரண்டிலுமே பாதங்களை 'பத்ப்யாம்' என்று சொல்லியிருக்கிறது. ஆனால் முதல் ச்லோகத்தில் அதை foot ஓடு முடித்திருக்கிறது. முழங்கால்களை 'ஜாநுப்யாம்' என்று சொல்லியிருக்கிறது. இரண்டாம் ச்லோகத்தில் அதே 'பத்ப்யாம்' என்ற வார்த்தையால் இடுப்புக்குக் கீழேயிருந்து கால் விரல்கள் வரை உள்ள leg என்ற முழு அவயவத்தையும் குறிப்பிட்டிருக்கிறது. இப்படி அந்த பாகம் முழுதையும் சொன்னதால்தான் இங்கே தனியாக முழங்காலை மறுபடிச் சொல்ல வேண்டியதில்லை என்பதால் அதைத் தள்ளி, குறைகிற அந்த அவயவத்துக்குப்

Koviloor Digital Library

பதிலாகக் காதைச் சேர்த்திருக்கிறது. இதைத்தான் சாஸ்த்ரஜ்ஞர்கள் விசேஷமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றேன்.

சாஸ்த்ர ரீதியில் காது ரொம்ப முக்யமான அங்கம். ஸகல சாஸ்த்ரத்துக்கும் மூலமான வேதமே 'ச்ருதி' என்பதாகக் காதால் கேட்டு அப்யாஸம் பண்ண வேண்டியதாகத்தானே இருக்கிறது? பஞ்ச பூதங்களின் உச்சியிலுள்ள ஆகாச தத்வத்துக்கே உரியதான சப்தம் என்ற தன்மாத்ரையை க்ரஹிப்பது காதுதான் என்ற பெருமை அதற்கு இருக்கிறது. காதில் கங்கை இருக்கிறாள் என்று ஐதிஹம். அதனால்தான் ப்ராணாயாமம் முடிகிற இடத்தில், மூக்கைப் பிடித்துக் கொண்டிருக்கிற கையில் வெளி ச்வாஸத்தில் அசுத்தம் பட்டுவிடுகிறது என்பதால் அதை சுத்தி செய்து கொள்ள கங்கை இருக்கிற அவயவமான காதை அந்தக் கை விரலால் தொட்டுக்கொள்வது.

"ஸரி, நமஸ்கார க்ரியையில் காது பூமியில் படும்படி எப்படிப் பண்ணுவது?"

அதைச் சொல்வதற்கு நமஸ்காரம் என்பதை ஆரம்பத்திலிருந்து எப்படிப் பண்ணவேண்டும் என்று procedure சொல்லவேண்டும். அதுவும் அவசியம் சொல்ல வேண்டியதுதானே? பெரியவர்கள் காது உள்பட அஷ்டாங்கங்களால் எப்படி நமஸ்கரிக்கிறது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதன்படி:

ஸாஷ்டாங்க நமஸ்காரமாக சரீரத்தைக் கிடத்தும் போது தலையில் நெற்றிக்கு மேல் பகுதியை பூமியில் பதியும்படி வைத்து, மார்பு-வயிற்றுப் பிரதேசங்களும் அப்படியே பதியுமாறு இருக்கவேண்டும். அப்போது தானாக கால் பாகம் முழுவதும் தரையில் படிந்து விடும். அப்புறம் வலது கையை முழு நீளமும் முன் பக்கமாக முகத்தின் வலது பக்கத்துக்கு parallel-ஆக [இணையாக]

Koviloor Digital Library

நீட்ட வேண்டும். இடது கை தோளிலிருந்து முழங்கை வரை ஒட்டியிருக்குமாறு பதித்து முழங்கைக்குக் கீழ்பாகத்தை மேற்புறமாக மடிக்க வேண்டும். இந்த நிலையில் உள்ளங்கைகள் இரண்டையும் விரித்து பூமியைத் தொட்டபடி இருக்கவேண்டும். அதற்கப்புறம் இதையே மாற்றி இடது கையை முகத்துக்கு இடப் பக்கமாக முன்னால் நீட்டி, வலது கையை உடம்போடு பின்னால் சேர்த்தாற்போலப் பின்னால் மடித்து நீட்ட வேண்டும். அப்புறம் இரண்டு புஜங்களும் நன்றாக பூமியில் படுகிற மாதிரி இரண்டு கைகளையும் பின் பக்கம் தொடை வரைக்கும் நீட்டி அந்தப் பகுதியோடு ஒட்டினாற்போல் வைத்திருக்க வேண்டும். அதாவது கையை முன் பக்கம் நீட்டுகிற போது உள்ளங்கை பூமியில் படுகிறபடியும், பின் பக்கம் நீட்டும்போது பூமியைத் தொடாமல் தொடைப் பகுதியை ஒட்டியிருக்கும்படியும் பண்ணவேண்டும்.

இதற்கப்புறம்தான் காது ஸமாசாரம் வருகிறது.

சிரஸ் மார்பு-வயிறு ப்ரதேசங்கள், இரண்டு கைகள், இரண்டு கால்கள் எல்லாம் இப்படி தண்டாகாரமாக [கழியைப் போல்] கிடக்கிறவர், இப்போது முகத்தை மாத்திரம் வலது பக்கமாக ஒருக்களித்து, அந்தப் பக்கத்துக் காதை பூமியில் பதிக்க வேண்டும். அப்புறம் அதே போல் முகத்தை இடது பக்கம் ஒருக்களித்து, இடது காதைப் பதிக்க வேண்டும்.

அதற்கப்புறம் இரண்டு கைகளையும் நன்றாக முன்னால் நீட்டி ஒன்று சேர்த்து அஞ்ஜலி பந்தம் செய்ய [குவித்துக் கும்பிட] வேண்டும். அதோடு நமஸ்கார க்ரியை பூர்த்தியாகிறது.

இந்த மாதிரிப் பல அம்சங்கள் சேர்த்து நமஸ்காரம் பண்ணுவது ஆத்மாபிவிருத்திக்கு உபயோகமான விதத்தில்

Koviloor Digital Library

சரீர அவயவங்களைப் பல தினுஸில் நீட்டி, மடக்கி, திருப்பி எல்லாம் பண்ணுகிறது. இவற்றால் இது ஒரு தேஹாப்யாஸமே ஆகி, யோக சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிற பல உத்தமமான நாடி சலனங்கள் ஏற்பட்டு ஆத்மாவுக்கு நல்லது பண்ணும். 'ஸூர்ய நமஸ்காரம்' என்று ஏகப்பட்டதாகப் பண்ணுவது சரீர ரீதியிலேயே எத்தனை பலம் கொடுக்கிறது?.......

டிஸ்க்ரிப்ஷனாக [வர்ணனையாக] நிறையச் சொல்லி விட்டேன். டெமான்ஸ்ட்ரேஷனாக [கண்காணப் பார்க்குமாறு செய்தல்]ப் பண்ணிக் காட்டினால்தான் புரியும். ஆனால் பண்ணுகிற பாக்யம்தான் எனக்கு இல்லையே! இங்கே யாருக்காவது பண்ணிக்காட்டத் தெரியுமா என்று பரீக்ஷை பார்த்து [சிரிக்கிறார்] அவமானப் படுத்துவதும் ஸபை மரியாதையில்லை! கார்யமாகப் பார்த்தால் 'ஈஸி'யாக இருக்கும்! வாயால் சொன்னால் பெரிய புராணமாய் இருக்கிறது!

மனஸிருந்துவிட்டால் போதும். எத்தனை டீடெய்ல் இருந்தாலும் கேட்டுத் தெரிந்துகொண்டு பத்ததிப்படிப் பண்ணி ச்ரேயஸ் அடையலாம்.

வித்யாஸமாயும் ஒரு அபிப்ராயம்.

என்னதான் மனஸிருந்தாலும், பெரிய கூட்டங்களில் கையை முன்பின் நீட்டி மடிப்பது, முகத்தைத் திருப்பித் திருப்பிக் காதுகளைத் தரையில் பட வைப்பது எல்லாம் சிரமமில்லையா? அப்போது முதலில் நான் சொன்னபடி—பொதுவாகவும் ஜனங்கள் நினைத்துக் கொண்டிருக்கிற படி—முன்னந்தலை, இரண்டு புஜங்கள் இரண்டு ஹஸ்தங்கள், torso, இரண்டு கால் என்றே ஸாஷ்டாங்கத்தை வைத்துக் கொண்டாலும் தப்பில்லை என்றே தோன்றுகிறது.

Koviloor Digital Library

நமக்கென்று ஒன்றுமே இல்லை என்று கொட்டிக் கவிழ்த்துக் காலி பண்ணிக் கொண்டு எளிமையுடன் சரணாகதியாக விழுகிறதிலேயே ரொம்ப டீடெய்ல் சேர்த்து காம்ப்ளிகேட் பண்ணாமலிருக்கலாமோ என்று தோன்றுகிறது.

நமஸ்காரத்தில் க்ஷமாபன ப்ரார்த்தனையும் [மன்னிப்பு வேண்டலும்] இருக்கத்தானே செய்கிறது? ஆன படியால் டீடெய்லில் ஏதாவது தப்பு இருந்தாலும் அதற்கும் பகவான் க்ஷமித்து விடுவான்.

பஞ்சாங்க நமஸ்காரம்: தாய்மையின் பெருமை

உங்களுக்கே தெரியும். ஸ்த்ரீகள் இப்படிப் பண்ணுவதில்லை என்று. அவர்கள் பண்ணுகிறதற்குப் 'பஞ்சாங்க நமஸ்காரம்' என்று பெயர். பஞ்சாங்கம் என்றால் ஜோஸ்யர் நாள், நக்ஷத்ரம் பார்க்கிற புஸ்தகமில்லை! புஸ்தகப் பஞ்சாங்கத்தில் திதி, வாரம், நக்ஷத்ரம், யோகம், கரணம் என்று ஐந்து அங்கங்கள். நமஸ்கார விஷயமாகப் பஞ்சாங்கம் என்றால் ஐந்து அவயவங்கள். உடம்பை வளைத்து ஸ்த்ரீகள் செய்யும் நமஸ்காரத்தில் அப்படி ஐந்து அவயவங்கள்தான் ப்ரயோஜனமாகின்றன.

உசத்தி மனப்பான்மையை உதறி எறிந்து விட்டு மட்டத்தில் மட்டமாக நிலமட்டத்தோடு கிடக்க வேண்டும் என்று நம் சாஸ்த்ரகாரகர்கள் விதி செய்தபோதுகூட ஸ்த்ரீகளிடம் அம்பாளம்சமாக உள்ள மாத்ருத்வத்தை ஒருகாலும் மட்டப்படுத்தப்படாது என்று நினைத்தார்கள். அதனால், ஒரு ஜீவப் பிண்டத்தை கர்ப்பமாக ரக்ஷித்து, அப்புறம் அது ஜனித்த பிற்பாடும் அதற்கு ஆஹாரத்தைப் படைத்து ஊட்டுகிற சரீர பாகம் மண்ணிலே படக்கூடாது என்று வைத்தார்கள். அதனாலேயே அஷ்டாங்கம் பஞ்சாங்கமாயிற்று.

Koviloor Digital Library

ஸ்த்ரீகள் வளைந்து கொடுக்கும் குணமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கும் அந்த நமஸ்காரமே ரூபகமாக இருக்கிறது.

ஸாஷ்டாங்கமாக இல்லாமல் இப்படி உடம்பை குறுக்கிக் கொண்டு பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணுவதிலேயே ஒரு அடக்கமும் பிரதிபலிப்பதையும் கவனிக்கணும்.

வணக்கம்

'வணக்குவது' என்றால்கூட 'வளைப்பது'தான். அப்படிப் பார்த்தால் 'வணக்கம்' என்பது வாஸ்தவத்திலே ஸ்த்ரீகள் பண்ணுவதுதான் என்று தோன்றுகிறது. புருஷர்கள் கை வணக்கம் மட்டும் பண்ணலாம்; இடுப்புக்கு மேலே உடம்பையும் சிரஸையும் கொஞ்சம் குனித்து வணங்கலாம். ஆனால் ஸத்ரீகள்தான் ஸர்வாங்க வணக்கம் செய்வது.

'வணக்கம்' என்பது மட்டுமில்லை. 'நமஸ்கார'த்தில் வரும் 'நம' என்பது 'நம்' என்ற வேர்ச் சொல்லிலிருந்து தான் தோன்றியிருக்கிறது. 'நம்' என்கிறதற்கு அர்த்தம் 'வளைப்பது'தான். 'நம்' என்பது வினைச் சொல் தாது; 'வளை' என்று அர்த்தம். அதுவே 'நமனம்' என்றாகும்போது 'வளைத்தல்' என்று அர்த்தம். அதுவே 'நமஸ்கார'மும். அப்படிப் பார்த்தால் கழி மாதிரி நேரே, வளையாமல் கிடக்கிற அஷ்டாங்கத்தை விடவும், 'நமஸ்காரம்', 'வணக்கம்' என்ற வார்த்தைகளுக்கு ஜாஸ்தி நிஜமாக இருப்பது பஞ்சாங்கம்தான்!

புருஷர்களும் பஞ்சாங்க நமஸ்காரம் செய்யலாம்

ஸ்த்ரீகள் பஞ்சாங்கமாகத்தான் நமஸ்கரிக்கணும்; அஷ்டாங்கம் கூடாது என்று வைத்திருக்கிறது. ஆனால் புருஷர்கள் பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணக்கூடாது என்று இல்லை. இரண்டு தினுஸாகவும் அவர்கள் பண்ணலாம்.

Koviloor Digital Library

வடக்கே அநேகமாகப் பஞ்சாங்கமாகத்தான் பண்ணு கிறார்கள்.

தர்ம சாஸ்திரங்களிலும் அஷ்டாங்கம், பஞ்சாங்கம் என்ற இரண்டு நமஸ்கார வகைகளையும் புருஷர்களுக் கானதாகவே கொடுத்திருக்கிறது. ஸுந்தர மூர்த்தி நாயனாரே அப்படி இரண்டு தினுஸாகவும் பண்ணினார், **"எட்டினொடு ஐந்துமாகும் உறுப்பினால் பணிந்து வணங்கினார்"** என்று சேக்கிழார் சொல்லியிருக்கிறார்*

எல்லா விதமான கர்மாக்களையும் விதிப்பதாகப் பல ரிஷிகள் எழுதியுள்ள கல்பங்கள் என்ற அநேக சாஸ்த்ர நூல்களில் ஒன்றில் தெய்வங்களையும், தெய்வ ஸமானமான குருமார்-பித்ருக்கள்-மஹான்கள் ஆகியோருக்கு மாத்திரமே ஸாஷ்டாங்க நமஸ்காரம் என்றும், மற்ற எல்லாப் பெரியவர்களுக்குமே பஞ்சாங்கம்தான் என்றுங்கூட இருக்கிறது. ஆனால் மற்ற கல்பங்களில் அப்படியில்லாத தால் அந்த மாதிரித்தான் பண்ணவேண்டுமென்றில்லை. இப்போது வழக்கத்தில் மிகவும் அதிகமாகவும் உள்ளபடியே பண்ணலாம். பஞ்சாங்கமாகப் பண்ணினாலும் தப்பில்லை என்பதற்காகச் சொன்னேன்.

ரொம்பக் குறுகலான இடத்தில் ஒரு மஹான் இருக்கிறார், ஒரு சந்நிதி அங்கே இருக்கிறது என்றால் அப்போது அங்கே உடம்பை முழுசாகக் கீழே போட்டு ஸாஷ்டாங்கம் பண்ணுவது ச்ரமந்தானே? அம்மாதிரி இருக்கும்போது பஞ்சாங்கமாகப் பண்ணலாம்.

வணக்கம், உடம்பை வளைத்துப் பண்ணுவது என்ற அடிப்படையில் தோன்றிய வார்த்தை. இப்போது

* . . . . எட்டினொடு
ஐந்தும் ஆகும் உறுப்பினால்
பீடு நீடு நிலத்தின் மேல் பெருகப்
பணிந்து வணங்கினார். (பெரியபுராணம், 3257)

Koviloor Digital Library

தமிழபிமானத்தில் அந்த வார்த்தையே 'அஃபீஷிய'லாகியிருக்கிறது; ஸர்வ வ்யாபகமாயிருக்கிறது. 'வணக்கம்' ரொம்பவும் அழகான வார்த்தைதான். ஆனால் இந்த வணக்க க்ரியை எதற்கு ரூபகமாக இருக்கிறதோ அந்த வளைந்து கொடுக்கும் ஹ்ருதய பாவத்துக்கு நேர் எதிரான பாஷா த்வேஷத்திலேயேதான் இப்போது இந்த வார்த்தையைக் கொண்டுவந்திருப்பது என்பதைப் பார்க்கும்போது வருத்தமாகத்தான் இருக்கிறது.

அகில தேசாபிமானமும் பிரதேசப் பித்தும்

தமிழ்நாடு தவிர நம்முடைய இந்தியா தேசம் முழுக்க எல்லாப் பகுதிகளிலும் 'நமஸ்தே'தான் சொல்கிறார்கள். 'நமஸ்காரம்' என்பதில் 'நம:' என்பதே வணக்கத்தைத் தெரிவிப்பது. 'நமஸ்காரம்' என்பது 'வணக்கம் புரிவது' என்ற செயலைக் குறிப்பதே. 'நமோ நம:' என்கிறதிலும், சிவ பஞ்சாக்ஷரீ, நாராயண அஷ்டாக்ஷரீ முதலானவற்றிலும் 'காரம்' சேர்க்காமல் 'நம:' மட்டும்தானே சொல்கிறோம்? அதே மாதிரி ஒருத்தரைப் பார்க்கும்போது 'உங்களுக்கு வணக்கம்' என்பதுதான் 'நமஸ்தே'. 'தே' என்றால் 'உங்களுக்கு'. இந்த நமஸ்தேயைத்தான் நம் தேசம் பூராவிலும், தமிழ்நாடு ஒன்று மட்டும் நீங்கலாக, மரியாதை greeting-ஆகச் சொல்கிறார்கள். த்ராவிட ராஜ்யங்களேயான ஆந்திர-கர்நாடக-கேரள ராஜ்யங்களிலும் 'நமஸ்தே'க்குத் தங்கள் தங்கள் தாய் பாஷையான தெலுங்கு-கன்னட-மலையாள பாஷைகளில் வார்த்தை சொல்லாமல் 'நமஸ்தே'-யைத்தான் 'அடாப்ட்' செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழில் 'வணக்கம்' இருக்கிற மாதிரித் தெலுங்கில் 'ம்ரொக்க' என்று வார்த்தை இருக்கிறது. என்றாலும் அவர்கள் ரொம்பவும் அபூர்வமாகத் தான் அந்த வார்த்தையை உபயோகிப்பது. பொதுவாகச்

Koviloor Digital Library

சொல்கிறது ஸம்ஸ்க்ருத 'நமஸ்தே'தான். அதையே 'நமஸ்காரமண்டி' என்று மரியாதையாய் சொல்வார்கள். தமிழ் தேசத்தில் மட்டும் பாஷாத்வேஷம் காரணமாகவே 'ஆல்-இன்டியா கரென்ஸி'யாக உள்ள 'நமஸ்தே', 'நமஸ்கார'ங்களைத் தள்ளிவிட்டு 'வணக்கம்' சொல்வதாக வழக்கம் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கேயும் முன்னேயெல்லாம் பொதுவாகப் பேசும்போதும் எழுதும்போதும் 'நமஸ்காரம்'தான் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தார்கள். நமஸ்காரம்-நமஸ்தே இரண்டுக்கும் ஒரே base தானே? அப்படித்தான் இங்கேயும் பழக்கம் இருந்தது. அப்புறந்தான் வேண்டுமென்று 'வணக்க'த்தைக் கொண்டு வந்திருப்பது. அது அழகான, அர்த்த புஷ்டியான வார்த்தைதான் என்றாலும் அதைக் கொண்டு வந்திருக்கும் உத்தேசம் நல்லதாக இல்லை. பிரதேசாபிமானம் இருக்க வேண்டியது தான். 'ரீஜனல் கல்ச்சர்' என்பதாக ஒவ்வொரு பிராந்தியத்திலும் விசேஷமாக இருக்கிற கலாசார மரபுகளையும் பேணிக் காப்பாற்றத்தான் வேண்டும். ஆனாலும் ஸர்வதேசியமாக இருந்துகொண்டிருக்கிற விஷயங்களிலும் வேண்டுமென்று தேசியத்தைத் தள்ளிப் பிரதேசத்தைக் கொண்டு வருவது முறை தவறான பிரதேசாபிமானமேயாகும். இதைப் பிரதேச அபிமானம் என்பதை விடப் பிரதேசப் பித்து, மிஞ்சிப் போகிறபோது பிரதேச வெறி என்றே சொல்லவேண்டும்.

ஆனாலும் பிரதேசாபிமானம் என்பதன் பேரில் ஒரு பிராந்தியத்தில் நடப்பதைத் தாங்களும் மதித்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டும்; வோட்டுப் பெட்டியை உத்தேசித்தும் எல்லாப் பிரதேச ஜனங்களையும் 'ப்ளீஸ்' பண்ணவேண்டும் என்பதால் மற்ற ராஜ்யத்துக்காரர்களும் வடக்கத்தித் தலைவர்களும்கூட இங்கே வந்து கூட்டங்களில் பேசுகிறபோது 'வணக்கம்' என்றே சொல்வதாகத் தெரிகிறது. 'வனக்கம்' என்று தப்பாகவாவது சொல்பவர்களும் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன்!

Koviloor Digital Library

வெளியிலே இப்படிச் சொன்னாலும் உள்ளுக்குள்ளே அவர்களுக்கெல்லாம் இதிலே ஒரு வருத்தம், நம்மைப் பற்றி ஒரு குறை இருக்கிறது. என்னிடமே ஒருத்தர் அதைத் தெரிவித்தார். தேசம் பூராவும் ஒரே ரீதியில் போய்க் கொண்டிருக்கும் விஷயங்களில், அந்த mainstream-ல் சேராமல், கொஞ்சம் துண்டித்துக்கொண்டு இந்த மாதிரிச் சின்ன அம்சங்களில் மாறுதலாகப் போவதுங்கூட ஒருமைப்பாட்டுக்குக் கொஞ்சம் ஊனம் செய்கிற மாதிரித்தான் என்று அவர் சொன்னார். 'வணக்கம்' விஷயமாகவும் அவர் உதாரணம் காட்டிச் சொன்னா ரென்றாலும் அவர் முக்யமாகச் சொன்னது தமிழ் அர்ச்சனை பற்றித்தான்.

தமிழ் அர்ச்சனை

அந்த 'டாபிக்'கைத் தொட்டு விட்டதால் சுருக்கமாக முழுக்கவும் சொல்லி முடித்தும் விடுகிறேன்.

அந்த வடக்கத்திக்காரர் என்னிடம் சொன்னது என்னவென்றால்: மற்ற த்ராவிட ராஜ்யங்கள் — மாநிலங்கள் என்று சொல்கிறவை — அவை உள்பட தேசம் பூராவிலும் உள்ள எவருமே தாய்மொழியில் அர்ச்சனை என்று கேட்கவில்லை. இன்றைக்கு இந்த தேசத்தில் எவருமே ஸம்ஸ்க்ருதத்தைத் தாய்மொழியாகக் கொண்டு பேசவில்லைதான். ஆனாலும் நம்முடைய மதத்துக்கு ஆதாரமான புஸ்தகங்கள் எல்லாம் ஸம்ஸ்க்ருதத்திலேயே இருப்பதால் அதையே மத விஷயத்தில் lingua franca என்ற பொது பாஷையாக எல்லோரும் ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள். பிரதேச ஜனங்களுக்கு மாத்திரமில்லாமல் அகில தேச ஜனங்களுக்குமேயான ஆலயங்களில் சாஸ்த்ரவத்தாக அந்த பாஷையிலேயே அர்ச்சனை உட்பட்ட எல்லா ஆராதனைகளும் செய்து வருகிறார்கள். பல

Koviloor Digital Library

பாஷைக்காரர்கள், பல மரபுக்காரர்கள் இருக்கிற நம் தேசத்தில் எல்லாரும் பொதுவான ஒரு குடும்பம் என்ற ஒருமைப்பாட்டு உணர்ச்சியைப் பெற இது பெரிய ஸஹாயம் செய்கிறது. அதனால் சாஸ்த்ரபூர்வம் என்பது ஒரு பக்கம் இருக்க, நடைமுறையில் தேசிய ஒற்றுமைக்கும் இது போன்ற விஷயங்களை இதுவரை உள்ளபடிக் காப்பாற்ற வேண்டியதாகிறது.

'யாத்ரிகர்கள் தேசம் பூராவிலிருந்துந்தான் ஒவ்வொரு பிரதேசக் கோயில்களுக்கும் வருகிறார்கள். உங்கள் ராமேச்வரத்தையே எடுத்துக்கொண்டால் அங்கே வருகிற ஸேவார்த்திகளில் பாதிப் பேர் வடக்கத்திக்காரர்களாகத் தான் இருப்பார்கள். இப்போதெல்லாம் ஜனங்களுக்கு ஸஞ்சாரத்தில் ஆசை, அதிலும் உல்லாஸ ஸ்தலங்கள் மாதிரியே புண்ய ஸ்தலங்களுக்குப் போவதிலும் ஆசை ஏற்பட்டிருக்கிறது. L.T.C மாதிரி வசதிகள் ஆபீஸிலும் செய்து தருகிறார்கள். க்ஷேத்ராடனம் நடத்தித்தரும் ட்ராவல் ஏஜென்ஸிக்களும் விருத்தியாகிக் கொண்டே யிருக்கின்றன. அதனால் ஜம்மு-காஷ்மீர் வைஷ்ணவி தேவியிலிருந்து தமிழ்நாட்டு கன்யாகுமாரி வரையில் எந்தப் பிரஸித்தமான கோவிலைப் பார்த்தாலும் அங்கே ஒரு குட்டி இந்தியாவே வந்த மாதிரி எல்லாப் பிரதேச ஜனங்களும் வருகிறார்கள். அப்படியிருக்கும்போது அந்தந்தப் பிரதேச பாஷையில் வழிபாடு என்றால், அது எப்படி?' என்று இந்த ரீதியில் அந்த வடக்கத்திக்காரர் அங்கே சொல்லிக்கொண்டு போனார்.

நானும் இந்தத் தமிழ் அர்ச்சனை விஷயத்தில் ரொம்ப நாளாக கவனம் காட்டி, வழிபாடு குறித்தேயான ஆகம சாஸ்த்ரம், பொதுவான தர்ம சாஸ்த்ரம் ஆகியவற்றில் நன்றாகப் பயிற்சி பெற்ற வித்வான்களுடன் கலந்தாலோசித்து ஒரு 'காம்ப்ரமைஸ்' முடிவுக்கு

Koviloor Digital Library

வந்திருப்பதால், அதை அவருக்குச் சொன்னேன். ‘பொதுவாக ஆராதனை வழிபாடு என்பது ஸம்ஸ்க்ருதத்தில் தான் இருக்கவேண்டும். வைதிகமாகவும், தாந்த்ரிகமாகவும் — அதாவது ஆகம தந்த்ர சாஸ்த்ரப்படியும் — கோயில்களில் நடக்கிற எல்லா சடங்குகளும் அப்படியேதான் நீடிக்க வேண்டும். உதாரணமாக, ஒரு ஆலயத்தில் ஜீர்ணோத்தாரண - கும்பாபிஷேகம் நடக்கிறதென்றால் அது சாஸ்த்ர ரீதியில் ஸம்ஸ்க்ருத பாஷையை உபயோகித்துச் செய்கிற சடங்குகளால்தான் பண்ணப்பட வேண்டும். இது பொது. ஆனால் வழிபாட்டில் உள்ள ஒவ்வொரு அம்சமாகப் பார்த்துக்கொண்டு போகும்போது சாஸ்த்ரங்களிலேயே ப்ரதேச மொழிக்கும் இடம் தருகிற அம்சங்கள் இருக்கின்றன. பஞ்சோபசாரம் என்று கந்த-புஷ்ப-தூப-தீப-நைவேத்யம் செய்வதில் ஆரம்பித்து, ஷோடசோபசாரம் என்று பதினாறு உபசாரம் செய்வது, சதுஷ்-ஷஷ்டி உபசாரம் என்று அறுபத்துநாலு உபசாரம் செய்கிற வரையில் பூஜையில் பலவித உபசாரங்கள் இருக்கின்றன அல்லவா? அவற்றில், பூஜையின் முடிவு கட்டத்தில் பிரதேச மொழியில் ஸ்தோத்திரங்கள் ஸமர்ப்பிக்கவும், பாட்டுக்கள் பாடவும் — அந்தப் பாட்டோடு நாட்டியங்கூட ஆடவும் — சாஸ்த்ரங்களில் நன்றாகவே, ஸ்பஷ்டமாகவே இடம் கொடுத்திருக்கிறது. நாங்கள் பல சாஸ்த்ரங்களை அலசிப் பார்த்ததிலிருந்து அர்ச்சனை என்ற அம்சத்தையும் இந்த ஸ்தோத்ர பாராயண அம்சத்தோடேயே சேர்த்துக் கொள்வதில் தப்பில்லை, சாஸ்த்ர அபசாரமில்லை என்று ஏற்பட்டது. அதனால், ஸம்ஸ்க்ருதத்தில் அர்ச்சனை பண்ணிவிட்டு, அதற்கப்புறம் பிரதேச பாஷையிலும் அர்ச்சனை பண்ணலாம் என்று ‘காம்ப்ரமைஸி’ங்காக முடிவு பண்ணினோம்.

Koviloor Digital Library

'தேசம் பூராவுக்குமாக இருக்கிற ஸம்ஸ்க்ருத அர்ச்சனையில் கை வைக்க வேண்டாம். வெளி ராஜ்யக்காரர்களுக்கும், அவர்கள் மட்டுமின்றி தமிழ் நாட்டிலேயே பெருவாரியாக உள்ள 'இதுவரை இருந்து வந்த நடைமுறையை மாற்றப்படாது' என்று நினைக்கிறவர்களுக்கும் மனோ பாதிப்பு ஏற்படும்படியாக எதுவும் பண்ண வேண்டாம். இப்போது இருப்பதை மாற்றாமல், இதோடு கூடுதலாகத் தமிழ் அர்ச்சனையையும் சேர்த்துக் கொள்ளலாம். இருப்பதில் change இல்லை; இருப்பதற்கு additionதான். ஸம்ஸ்க்ருத அர்ச்சனைக்குப் பதிலாகத் தமிழர்ச்சனை இல்லை; அதோடு கூடத்தான் தமிழர்ச்சனையும். Instead of இல்லை; in addition to தான்!

'இது கோவிலில் நடக்கிற பொது வழிபாடு குறித்து. தனிப்பட்ட ஸேவார்த்திகளுக்கு அவரவர் இஷ்டப்படி ஸம்ஸ்க்ருதத்திலோ, தமிழிலோ எந்த பாஷையில் வேண்டுமானாலும் செய்யலாம்.'

— இப்படி நான் அவருக்குச் சொன்னேன்.

அவர் ஒருமைப்பாடு, 'இன்டக்ரேஷன்' என்று சொன்னதற்கு இந்த ஏற்பாட்டில் ஹானி ஏற்படாததைப் புரிந்துகொண்டு நான் சொன்னதற்கு ஒப்புக்கொண்டு போனார்.

தமிழில் அர்ச்சனைக்காக நாமாவளிகள் — அஷ்டோத்தர [சத]ம் [108], ஸஹஸ்ரம் [1000] — வேண்டுமே! அப்படி இதுவரை மஹான்கள் செய்ததாக எதுவும் இல்லை. அதனால் புதுசாகத்தான் பண்ணியாக வேண்டும்.

ஆனால் கவனமாகக் கேட்டுக்கொண்டு பின்பற்ற வேண்டிய விஷயம் என்னவென்றால்: அர்ச்சனைக்கான தமிழ் நாமாவளிதான் புதிசாய் செய்யணுமேயன்றி, அதில்

Koviloor Digital Library

வருகிற நாமங்கள் பழையதாகத்தான் இருக்க வேண்டும். அதாவது தமிழ்நாட்டின் பழைய மஹான்களின் வாக்கில் வந்த நாமங்களாகவே அவை இருக்கவேண்டும். ஈச்வரானுபவம் பெற்ற அவர்கள் வாக்குக்கே தனியான 'அதாரிடி'யும், 'ஸாங்க்டிடி'யும் உண்டு. அப்படிப்பட்ட நாமாக்களையே பொறுக்கி எடுத்து நூற்றியெட்டு, ஆயிரம் என்று கோக்க வேண்டும். அதாவது புதிசாக செய்வது சொந்தமாகக் கவனம் செய்கிறதல்ல; compilation என்று பழையதையே ஒன்று சேர்த்துத் தொகுத்துத் தருவதாகவே அது இருக்க வேண்டும். அவற்றில் தெய்விக சக்தி, மந்த்ர சக்தி இருக்க வேண்டுமானால் இப்படித்தான் செய்யவேண்டும். அர்ச்சனை நாமங்கள் நமது பூர்வ காலத்திலிருந்த பரம பக்த சிரோமணிகளின் வாக்கிலிருந்து வந்தவையாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவற்றையே அஷ்டோத்தர நாமாவளியாகவும், ஸஹஸ்ரநாமாவளி யாகவும் தொகுக்க வேண்டும்.

சிவ நாமாக்கள் தேவார, திருவாசக, திருமுறை களிலிருந்து பொறுக்கி எடுக்கவேண்டும். விஷ்ணு நாமாக்கள் ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தத்திலிருந்து; அம்பிகை நாமங்கள் அபிராமி பட்டர், குமரகுருபரர் — அவர் மீனாக்ஷியம்மன் மேலே பாடியிருக்கிறார், ராமலிங்க ஸ்வாமிகள் — அவர் திருவொற்றியூர் திரிபுரஸுந்தரி மேல் பாடியிருக்கிறார் — இன்னும் இப்படிப்பட்ட பழுத்த பக்தர்களின் துதிகளிலிருந்து; ஸுப்ரஹ்மண்ய நாமாக்கள் திருப்புகழ், கந்தரநுபூதி போன்ற நூல்களிலிருந்து; விக்நேச்வர நாமாக்கள் ஔவையார், நம்பியாண்டார் நம்பி, கபில தேவ நாயனார், அதிராவடிகள் முதலியவர்களின் நூல்களிலிருந்து — இப்படியாக அநுபவ கனம் வாய்ந்த பெரியோர்களின் நூல்களிலிருந்தே நாமாவளிகள் தயாரிக்க வேண்டும்.

Koviloor Digital Library

ஸம்ஸ்க்ருதத்திலுள்ள அர்ச்சனை நாமாவளிகளில் மிகப் பெரும்பாலானவை அதே நாமாவையே அதே வரிசையில் கோத்துச் சொல்கிற மூலமான ஒரே ஸ்தோத்ர நூலிலிருந்து அப்படியப்படியே எடுத்துக் கொடுத்ததாக இருக்கும். உதாரணமாக விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தில் ஆயிரம் நாமாக்களைச் செய்யுளுருவத்தில் சொல்லியிருக்கிறது. அதிலிருந்து ஒவ்வொரு நாமாவாக அந்த வரிசைப்படியே எடுத்து, ஒவ்வொரு நாமாவுக்கு முன்னாடி ப்ரணவமும் பின்னாடி 'நம:'வும் சேர்த்துத்தான் அர்ச்சனை நாமாவளி என்பது இருக்கிறது. இப்படி மூல நூல் செய்யுளுருவிலான ஒரே ஸ்தோத்ரமாயிருப்பதால் பெரிய ஸௌகர்யம், அதை ஸுலபமாக மனப்பாடம் செய்து விடமுடியும். அப்படி மனப்பாடம் செய்து நன்றாகக் கரைத்துக் குடித்துவிட்டால், அப்புறம் அதிலிருந்து ஒவ்வொரு நாமாவாகப் பிரித்து, 'ஓம்' முதலிலும் 'நம:' முடிவிலும் சேர்த்துச் சொல்வதும் மனப் பாடமாக ஆரம்பித்துவிடும். மனப்பாடமானால், புஸ்தகத்தைப் பார்க்கவேண்டிய அவசியமில்லாமல், மனஸ் ஒருமுகப்பட்டு விருவிருவென்று அர்ச்சனை பண்ணிக் கொண்டு போகலாம்.

இப்போது தமிழில் நாமாவளி என்கிறபோது, ஒவ்வொரு நாமாவளியும் ஒரே துதியில் வருகிற தொடர் நாமங்களாக இருக்காது; பல துதிகளிலிருந்து பொறுக்கி யெடுத்துப் போட்டதாகவே இருக்கும். எனவே மூலமான ஒரே துதியை மனப்பாடம் செய்வதற்கும், அப்புறம் அதிலிருந்து முதலில் 'ஓம்', முடிவில் 'போற்றி' சேர்த்த அர்ச்சனை நாமாவளியையும் ஈஸியாக மனப்பாடம் செய்வதற்கும் இங்கே இடமில்லை. மனப்பாடம் செய்வதற்கு 'ஈஸி'யான செய்யுளுருவம் இல்லாத வெறும் நாமாவளியைக் கொஞ்சம் சிரமப்பட்டுத்தான் அப்படி

Koviloor Digital Library

[மனப்பாடம்] பண்ண முடியும். அதனால் பரவாயில்லை என்று வைத்துக்கொள்ள வேண்டியதுதான்...

செய்தவர் இன்னார் என்றே தெரியாமல், ஆனாலும் மனஸை உருக்குவதாகவும் அர்த்த புஷ்டி கொண்டதாகவும் பல துதிகள், உதிரிப் பாடல்கள் தமிழில் இருக்கின்றன. அவற்றிலிருந்தும் அர்ச்சனைக்கு நாமாக்கள் எடுத்துக் கொள்ளலாம். சங்க இலக்கியம், கம்பர்–வில்லிபுத்தூரார், கச்சியப்ப சிவாசார்யார் போன்ற பக்த கவிகளாக இருந்த பெரியவர்களின் நூல்கள் ஆகியவற்றிலிருந்தும் எடுத்துக் கொள்ளலாம். 'Time–tested' என்கிறார்களே, அப்படிப் பல காலமாக ஜீவனோடு இருந்து வருகிற நூல்களாக இருக்க வேண்டும் என்பது முக்கியம்.

ஏற்கெனவே இருக்கிற நூல்களிலிருந்து கிடைக்கும் நாமாக்கள் போதவில்லையென்றால் அப்போது மட்டுமே புதிதாகப் பண்ணிக் கொள்ள வேண்டும். அப்படிப் பண்ணுகிறவை ஸம்ஸ்க்ருத நாமாவளிகளின் மொழி பெயர்ப்பாக இருக்கவேண்டும். இதுவே நம்முடைய ப்ராசீன பத்ததிக்குக் காட்டுகிற மரியாதை.

நாமெல்லாம் ரொம்பச் சின்னவர்கள். நம்முடைய ஸ்வல்ப பக்தியில் நாமாகப் புதுசாய் பண்ணுகிற வாக்குக்கு என்ன ஜீவ சக்தி இருக்கமுடியும்? அதனாலும்தான் old is gold என்பதுபோல் பழைய பொன்மொழிகளின் ஆதாரத்தைக் காட்டச் சொன்னது.

மஹாலக்ஷ்மி, தக்ஷிணாமூர்த்தி, நவக்ரஹங்கள் உள்படப் பல முக்யமான தெய்வங்களுக்கு தமிழ் நூல்களி லிருந்து நாமாவளிகள் தொடுப்பது முடியாமலிருக்கலாம். இது மாதிரி இடங்களிலெல்லாம் ஸம்ஸ்க்ருத நாமாவளிகளை மொழி பெயர்ப்பது என்று வைத்துக் கொண்டு விடலாம்.

Koviloor Digital Library

ஒரு முக்யமான விஷயம். தமிழ் அர்ச்சனைக்கு பாஷை புரிய வேண்டுமென்பதைத்தான் முக்யமான காரணமாகச் சொல்கிறார்கள். பாஷைப் போட்டியிலேயே இந்தப் பிரச்னையைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள் என்றாலும், வெளியில் காரணம் என்று காட்டும்போது 'புரிகிற பாஷையாக இருக்கவேண்டும்' என்கிறதையே காட்டுகிறார்கள். வாஸ்தவத்தில் ஸம்ஸ்க்ருத நாமாவளி களில் பாதி நாமங்கள் எல்லாருக்கும் அர்த்தம் புரிவதாகத் தானிருக்கும். பழந்தமிழ் நூல்களிலிருந்து பொது ஜனப் பழக்கமும், அவர்களுடைய மனப்போக்கு, கிராஹ்ய சக்தி ஆகியவற்றை நன்றாக அறிந்து கொள்ளும் அநுதாபப் பார்வையும் இல்லாத வெறும் புலவர்கள் புது நாமாவளிகள் தயாரித்தால் அதில் பாதி, அல்லது அதற்கு மேலேயும், அந்தப் புலவர்களுக்கு மட்டுமேதான் புரிகிறவை யாக அமைந்து விடக் கூடும். பாஷைப் போட்டியை விட்டு, அர்த்தம் புரிவது என்பதை மட்டுமே கவனத்தில் கொண்டு பார்க்கிற பக்த ஜனங்கள், 'இதைவிட ஸம்ஸ்க்ருத அர்ச்சனையே தேவலை' என்று நினைக்கும்படி ஆகி விடலாம்!

ஆகவே ஜனங்களுடைய நிலைமையை உணர்ந்து அவர்களோடு ஒட்டிப் போகிற தன்மையுள்ள புலவர்களிடமே இந்தக் காரியத்தைக் கொடுக்கவேண்டும்.

மொழி பெயர்ப்புப் பணியை ஸம்ஸ்க்ருதம், தமிழ் இரண்டிலும் தேர்ச்சி பெற்றவர்களிடம் கொடுக்க வேண்டும்.

ஜீவ சக்தியுள்ள வாக்காகவும் இருக்கவேண்டும்; பொது மக்களுக்குப் புரிவதாகவும் இருக்கவேண்டும் — என்ற இந்த இரண்டு லக்ஷ்யங்களையும் ஸர்வ ஜாக்ரதை யுடன் கருத்தில் கொண்டு, குறுகிய மனப்போக்கை விட்டு, விசால நோக்குடன் செய்யவேண்டிய காரியம்.

Koviloor Digital Library

வழிபாடு என்பது மக்களுக்கு ப்ராணாதாரமான விஷயம். அதிலே வழிபாட்டுக்கு ஸம்பந்தமேயில்லாத பாஷா மோஹம், பாஷா த்வேஷம் முதலியவற்றால் தலையிட்டுப் புராதன பத்ததியையும் குலைத்து, புதுசாகவும் சரிவர ஒன்றை அமைத்துத் தர முடியாமல் கெடுத்தால் ஈச்வரன் க்ஷமிப்பானா? இந்த ஞாபகம் மறக்காமலே, செய்யவேண்டியவற்றைச் செய்யவேண்டும்.

ஸம்பந்தப்பட்டவர்களுக்கு அப்படிப்பட்ட நல்லறிவு பிறப்பதற்கு அந்த ஈச்வரனையே நாமும் பிரார்த்திக்க வேண்டும். நாம் செய்யக்கூடியது, செய்ய வேண்டுவது, அதுதான்......

[நமஸ்கார] 'டாபிக்'குக்குத் திரும்புகிறேன். ஸகல விதமான கோளாறுகள் நீங்குவதற்கும் நமக்கு ஏற்பட்ட ஒரே உபாயம், பலவிதமான கருத்துக்கள் கொண்ட நம் எல்லாருக்கும் பிதாவாக இருக்கப்பட்ட அந்த நாராயணனுக்கு நமஸ்காரம் பண்ணுவதுதான்.

வீரமும் வணக்கமும்

இப்போது எப்படி நடந்தாலும், 'நம்'மை வைத்து 'நமஸ்காரம்' என்றும் 'வணக்கு'வதை வைத்து 'வணக்கம்' என்றும் வார்த்தைகள் தோன்றியிருப்பது, நம்முடைய தேசத்தில் பூர்வகால ஸகல மக்களும் எப்படி வளைந்து கொடுத்து, எங்கே நல்லது தெரிந்தாலும் அதைப் போற்றி வழிபட்டார்கள் என்று காட்டுகிறது.

'Body language' என்று 'உடம்பின் பாஷை'யாக ஒன்று சொல்கிறார்கள். வாய் வார்த்தையால் ஒரு அபிப்ராயத்தைச் சொல்லாமல் உடம்பின் சைகையால் ரொம்பவும் இயற்கையாகத் தெரிவிப்பதே body language. அந்த மாதிரி மனஸிலே இருக்கிற எளிமையான விநய

Koviloor Digital Library

பாவத்தை, மரியாதை உணர்ச்சியைத் தெரிவிக்கவே ஏற்பட்டது இந்த நமஸ்கார க்ரியை. அந்த க்ரியையின் தாத்பர்யத்தை 'நமஸ்காரம்', 'வணக்கம்' என்ற வளைந்து கொடுக்கும் அர்த்தம் தரும் வார்த்தைகள் அழகாகத் தெரிவிக்கின்றன. ஒன்றுமில்லை என்ற அபிப்ராயத்தில் அதைக் கழி மாதிரி ஸாஷ்டாங்கமாகக் கிடத்தும்போதும் மனோபாவம் என்னவோ வளைந்து கொடுத்துப் படிமானமாக இருப்பதுதான்.

பஞ்சாங்கமாகப் பண்ணும்போது வளைந்து கொடுப்பது அழுத்தமாகவே body language-ஆகத் தெரிகிறது.

நமஸ்காரம், வணக்கம் என்ற வார்த்தைகளே நம் ஜனங்களின் பணிவுப் பண்பைக் காட்டுகிறது என்று சொல்லிக் கொண்டிருந்தேன்.

வீரம் - சூரம்—அது பாட்டுக்கு ஒரு பக்கம். காட்ட வேண்டிய இடத்தில் அதைக் காட்டினார்கள். அங்கே சத்ருவுக்கு, அக்ரமத்துக்குத் தலைவணங்கவேயில்லை. நேராக நிமிர்ந்து நின்றார்கள். ஆனால் நல்லது, உத்தமமானது என்றால் வணங்கி ஏற்றுக் கொண்டார்கள். **"தலையே! நீ வணங்காய்!"** என்றே அப்பர் ஸ்வாமிகள் பாடிக் கொடுத்திருக்கிறார்*!

வேடிக்கையாக ஒன்று தோன்றுகிறது: வீர-சூரர்களாக இருக்கும்போது நம்முடைய முன்னோர்கள் **வில்லை வளைத்தார்கள்.** விநயசாலிகளாக எங்கே நல்லது இருந்தாலும் அதை எடுத்துக் கொள்ளும்போது **வில்லாக வளைந்தார்கள்**—தாங்களே வில் மாதிரி வளைந்து பணிந்

* 'திரு அங்கமாலை' என்ற பதிகத்தின் தொடக்கம்.

Koviloor Digital Library

தார்கள்! ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்யும்போதும் முதலில் உடம்பை வளைக்கத்தானே வேண்டும்?

நமஸ்கரிப்பதை இங்கிலீஷில் Bowing என்று சொல்கிறார்கள். Bow என்றால் வில்; அது வளைந்து, அதாவது வளைக்கப்பட்டதாக, இருக்கிறது. விறைப்பாக இல்லாமல் நெகிழ்ந்து பணிவாக இருப்பதற்கு அடையாளமாகவே இப்படி உடம்பை வணக்கி மரியாதை பண்ணுவது.

சொல்லிக்கொண்டு போகிறபோதே உள்ளுக்குள்ளே விஷயங்கள் புதுசாகத் தெளிவாகிக் கொண்டு வருகிறதில் ஒன்று தெரிகிறது: 'நமஸ்காரம்' என்றால் நேர் அர்த்தம் 'நமனம்' பண்ணுவது என்றும் 'நமனம்' என்றாலும் வளைப்பதுதான் என்றும் சொன்னேன்.

'நமனம்' என்றால் 'வளைவது' என்பதை வைத்தே 'நமஸ்காரம்' என்ற வார்த்தை ஏற்பட்டதாக இலக்கணப் படிச் சொன்னாலும் தத்வார்த்தமாக இன்னோர் உசந்த அர்த்தமும் சொல்வதுண்டு. முன்னவே சொன்னேன்; மறுபடி சொல்கிறேன்: தனக்கில்லை என்று பகவானுக்கே ஸகலத்தையும் அர்ப்பணம் பண்ணும் சரணாகதியை ஸம்பந்தப்படுத்திச் சொல்கிற அர்த்தம். ஒரு கர்மாநுஷ்டா னத்தில் முடிந்த முடிவாக "ந மம" என்று சொல்வது வழக்கம்; விதி. அதற்கு, "என்னுடையதில்லை" என்று அர்த்தம். அதாவது, "இந்த அநுஷ்டான பலன் எனக்கில்லை; உனக்கே!" என்று ஈச்வரார்ப்பணம் பண்ணுவதாக அர்த்தம். இந்த மாதிரி, "சரீரம் என்னுடையதில்லை; உனக்கே ஸமர்ப்பித்தேன்" என்று விழுவதுதானே நமஸ்காரத்தின் பரம தாத்பர்யம்? அப்படி சரீரத்தை "ந மம" பண்ணுவதே 'நம:'; அதை ஒரு க்ரியையாக, கார்யமாகப் பண்ணுவது 'நமஸ்காரம்' என்று தத்வார்த்தம் சொல்வதுண்டு.

Koviloor Digital Library

நேர் அர்த்தம், இலக்கணப்படியான etymological derivation படி, நமஸ்காரம் என்றால் வளைவதுதான். 'பிறத்தியாருக்கு வளைஞ்சு குடுக்கணும், தழைஞ்சு குடுக்கணும்' என்று சொல்கிறதற்கு ஸ்தூல ரூபமாக வளைவதுதான். Bowing-ம் இதையேதான் தெரிவிக்கிறது. லோகம் பூரா ஜனஸமுதாயம் அத்தனைக்கும் ஒரே மாதிரி பாவம், கார்யம், வார்த்தைதான்! நாம் எத்தனைதான் வர்க்க பேதங்கள் கொண்டாடிக் கொண்டு பிரிந்து போனாலும் அடிப்படையில் ஒரே குடும்பந்தான்!

கிறிஸ்துவர்களும் துருக்கர்களும் மண்டி போட்டு மரியாதை செலுத்துகிறார்கள். அப்போது காலை வணக்கு கிறார்கள். Kneel பண்ணுவது என்று அதைச் சொல்வது. முழங்காலை மடிப்பது, வணக்குவது என்றே நேர்பட அர்த்தம் தருகிறதாக genuflexion என்று அதைச் சொல்கிறார்கள்.

இதிலே ஒரு வேடிக்கை. K–N–E–E என்று ஸ்பெல்லிங் பார்த்தால் 'க்னீ' என்று உச்சரிப்பு வரணும். அது 'கணு' என்கிற தமிழ் வார்த்தையுடன் ஸம்பந்தப்பட்டதாகத் தெரிகிறது. Genu என்பதிலோ 'ஜாநு' என்ற ஸம்ஸ்க்ருத வார்த்தை ஸம்பந்தம் நன்றாகவே தெரிகிறது. 'ஜாநு' என்றால் முழங்கால். 'ஆஜாநுபாஹு' என்றால் முழங்கால் வரைக்கும் கை நீண்டிருப்பவன் என்று அர்த்தம். பாஷா சாஸ்த்ரம் தெரிந்தவர்களுக்கு 'ஜ'காரம் 'க'[ka]கார மாவதுண்டு என்று தெரியும். 'ஜ'வும், 'ய'வும் ஒன்றுக்கொன்று மாறுவது ஜாஸ்தி. அபூர்வமாக 'ஜ'-'க' மாறுதலும் உண்டு. 'ka' சப்தம் வலுத்துத்தானே 'ga' ஆனது? அந்த 'ga'வைக் குறிக்கிற G(ஜி) என்கிற எழுத்தே 'ஜ'கர வரிசையைச் சேர்ந்ததாக இருக்கிறது! இதிலிருந்தே ja–ka ஒன்றுக்கொன்று மாறமுடியும் என்று தெரிகிறதோல்லியோ?

Koviloor Digital Library

இதைப் பார்க்கிறபோது 'ஜாநு'தான் 'கணு'ஆகி, ஆனால் அது முழங்காலைக் குறிக்காமல் 'குல்பம்'-anklet என்று சொல்லுகிற அவயவத்தைக் குறிப்பதாக ஆகிவிட்டதோ என்று தோன்றுகிறது. 'ஆஜாநுபாஹு'வின் கை முழம் போடுகிறது போல் ஜாநுவில் முடிவதால் அதற்கு 'முழங்கால்' என்று பெயர் வந்ததோ என்னவோ? அல்லது இடுப்பிலிருந்து பாதம் (foot) வரையில் இரண்டு முழ நீளம் இருப்பதில் நடுப்பாதியில் அந்த பாகம், இடுப்பிலிருந்தும் ஒரு முழம், பாதத்திலிருந்தும் ஒரு முழம் என்றிருப்பதாலும் அப்படிப் பேர் வந்திருக்கலாம். கரும்பு, மூங்கில் முதலானதில் கணு கணுவாக இருக்கிற மாதிரி காலில் இருப்பதே கணு என்று பொதுவில் சொல்வது. நான் சொல்வது ஸரியானால் கால் கணுவை வைத்துத்தான் கரும்பு முதலானதிலும் கணு என்று ஒன்றைச் சொல்வதாக ஆகும்.....

மண்டி போட்டு நமஸ்கரிப்பது இதர மதஸ்தர்கள் வழக்கம். நம்மிடையிலும் அந்த வழக்கமில்லாமலில்லை.

அதோடு துருக்கர்கள் 'ஸலாம்' என்றும் பண்ணு கிறார்கள். கிறிஸ்துவர்களும் கையால் 'ஸல்யூட்' அடிக்கிறார்கள்: ஸலாம், ஸல்யூட் இரண்டும் 'ஸல்' என்றே ஆரம்பிக்கின்றன. எங்கே பார்த்தாலும் இப்படி ஜனப் பிரிவு களுக்கிடையில் ஒற்றுமை இருப்பதைப் பார்த்தால் ஸந்தோஷமாயிருக்கிறது.

இன்னும் ஒற்றுமையைக் காட்டுவதாக நம் மடத்திலேயே 'தீவட்டி ஸலாம்' என்று ஒன்று நித்யம் நடக்கிறது. தீபம் வைக்கிற ஸமயத்தில் ஜகத்துக்கே ஞான தீபமாக வந்த ஆசார்யாளின் பாதுகைகளுக்கு நமஸ்காரம் பண்ணி, மடத்தின் கணக்கு வழக்குகளை அவருக்கு ஸமர்ப்பிப்பதாக வழக்கமிருந்து வருகிறது. அதற்கு 'தீபநமஸ்காரம்' என்பது யதோக்தமான பெயர்.

Koviloor Digital Library

நமஸ்காரத்திற்கு உள்ள விசேஷத்தை அது தெரிவிக்கிறது. அப்போது மடத்து யானை ஆசார்ய பாதுகைகளுக்கு சாமரம் போட்டுவிட்டுத் தும்பிக்கையைத் தூக்கிக் கும்பிட்டுவிட்டு, பிளிறியும் நமஸ்காரம் தெரிவித்துவிட்டுப் போகும். 'தீப நமஸ்காரம்' என்கிற அந்த அயிட்டத்திற்கு இங்கே பேச்சுவழக்கிலுள்ள பெயர் 'தீவட்டி ஸலாம்' என்பதே!

தேசாந்தரங்களில் ஒற்றைக்கை 'ஸல்யூட்' இருந்தாலும் நம்முடைய சாஸ்த்ரங்களில் அது கூடாது என்றே இருக்கிறது. **"ஏகஹஸ்த ப்ரணாமச்ச ஹந்தி புண்யம் புராதநம்"** அதாவது, 'ஒரு கையால் நமஸ்கரிப்பது ஏற்கெனவே பண்ணியிருந்த அத்தனை புண்யத்தையும் அழித்துவிடும்' என்றே இருக்கிறது. முறைப்படி நமஸ்கரித்தால் பாபிக்கும் புண்யம் சேரும் என்று சொல்லும் சாஸ்த்ரத்திலேயே முறைதவறிப் பண்ணுவதால். இப்படி ஆகும் என்றும் இருக்கிறது!

நம் தேசத்திலும் ஸல்யூட் போட்டுத்தானாக வேண்டும் என்று, கட்டாயமாகச் சில ஸமயங்களில் ஆகியிருக்கிறது. இதற்கு முறைத்துக் கொண்டாலும் முறைகேடாகத்தான் தோன்றுகிறது! 'இப்படிப் பண்ண மாட்டேன். வேறே மாதிரிதான் மரியாதை பண்ணுவேன்' என்றே ஒரு சண்டை ஆரம்பித்தால் அப்புறம் அங்கே மரியாதை எங்கே இருக்கும்? ஆனாலும் அப்படிப் பண்ணும்போது சாஸ்த்ர வசனம் வேறே மாதிரி இருப்பதை நினைத்து மனஸினால் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, பண்ணலாம்.

ராணுவம், போலீஸ் விஷயம் வேறே. அங்கே தேச பக்தியினால் உயிரையும் கொடுப்பது, தேசத்தில் ஒழுக்கமும், சட்டமும் இருப்பதற்காகப் பாடுபடுவது லக்ஷ்யம். லக்ஷ்யம் மனஸிலும் பாவமாக இருக்கும்தானென்

Koviloor Digital Library

றாலும், இங்கே வீர-தீர பாவத்துக்கே மனஸுக்குள்ளேயும், வெளியிலே தெரிகிற சரீர கார்யத்திலேயும் முடிந்த மட்டில் இடம் கொடுத்தால்தான் அந்த இலாகாக்களில் இருப்பவர்களுக்குத் தங்கள் லக்ஷ்யத்தில் டெடிகேஷனை வளர்த்துக் கொடுப்பதாகும். அதனால், அங்கேயெல்லாம் உடம்பை வளைக்காமல் நேராக — அஞ்சா நெஞ்சத்திற்கே உடம்பை நிமிர்த்தி நிற்பதுதானே body language-ஆக இருக்கிறது? அதற்கேற்க — விறைப்பாக நின்றுதான் Guard of Honour மாதிரியுள்ள மரியாதை அணிவகுப்பு முதலானவற்றையும் செய்யவேண்டியது. என்றாலும் நம் தேசத்து Guard of Honour-ல் ஒற்றைக்கை ஸல்யூட்டுக்குப் பதில் வேறெதாவது, வீரம்-மரியாதை இரண்டும் கலந்த ஸமிஜ்ஞையாகப் பண்ண வழியிருக்கிறதா என்று பார்த்து அப்படிச் செய்தாலும் தேவலைதான். நம்முடைய பழைய சரித்ரத்தில் ஆராய்ந்து பார்த்து வீரர்கள் எப்படிப் பண்ணினார்கள் என்று தெரிய வந்தால் அதை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் ஒன்று மறந்து விடக்கூடாது. அதாவது வீரபாவத்துக்கு விறைப்பு தேவைதான் படுகிறது; அந்த வீரமும் தேச க்ஷேமத்திற்கேயானதால் அதை அநுமதித்துத்தானாகணும்.

வெளி வேஷம்கூட இதற்கு உதவுவதால்தான் நம் மடத்து [காவலாட்களான] பாராகாரர்களுக்குக்கூடப் போலீஸ் ட்ரெஸ் கொடுத்திருப்பது. நம்முடைய ஸொந்தப் பழைய சரித்ரம், ஸ்வதேசியம் என்று சொல்லிக்கொண்டு இங்கே லக்ஷ்யத்திற்கு ஹானி செய்கிறாற்போல எதுவும் பண்ணிவிடக் கூடாது.

மதாந்தரஸ்தர்கள் [பிறமதத்தினர்] ஸல்யூட்டையும் வளைந்து கொடுக்கும் வணக்க மனப்பான்மைக்கு அடையாளமாகவே ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகத்தான் தோன்றுகிறது. ஸலாமானாலும், ஸல்யூட்டானாலும்

Koviloor Digital Library

ஒவ்வொரு தினுஸில் வலது கையை மட்டும் வளைத்து — வணக்கி — பண்ணுவதாகத்தானே இருக்கிறது?

துருக்கர்கள் ஸலாம் போடும்போது உடம்பு, சிரஸ் இரண்டையுங்கூட ஓரளவு வணக்குகிறார்கள். ஸல்யூட்டில் அந்த வணக்கம் இல்லை.

கர்த்தர், யேஸு, ரொம்பவும் மரியாதைப் பட்டவர்கள் ஆகியோருக்கே மண்டி போடுவது, ஸல்யூட் செய்யாமல் மண்டி மட்டும் போடுவது: அப்போது தலையையும் குனிப்பது - வணக்குவது என்றும் அதற்குக் கீழ் லெவல்காரர்களுக்கு ஸல்யூட் என்றும் கிறிஸ்துவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். [முன்பே] சொன்னாற் போல மிலிடரிக்காரன், போலீஸ்காரன் ஸல்யூட் போடும்போது உடம்பை வணக்காதது மட்டுமில்லை, ஒரே விறைப்பாக விறைத்துக் கொண்டு பண்ணுகிறான்! [குரலை மிகவும் கனமாகவும், அதிகாரி பாணியிலும் உயர்த்தி] 'அடென்ஷன்' என்று சப்தம் போட்டுக்கொண்டு, தப், தப்பென்று பூட்ஸ் ஓசையோடு இவர்கள் விருட்டென்று ஸல்யூட் அடிப்பதைப் பார்த்தால், "மரியாதையா? அதிகார அதட்டலா" என்றே இருக்கும்! மரியாதைதான். அதிலே ஸந்தேஹமில்லை. ஆனால் ப்ராணனையும் கொடுத்து தேசத்தையும் சட்டத்தையும் ரக்ஷிக்கவே இந்தத் துறைக் காவலர்கள் கொஞ்சங்கூட வீர்ய - சௌர்யங்களில் [வீர-சூரத்தனத்தில்] தளராமலிருக்கவேண்டுமென்பதால் பவ்யமாக மரியாதை செலுத்தும்போதுகூட வீர சூரத்தனமாகவே அதைப் பண்ண வேண்டும் என்று இப்படி வைத்தார்கள். மற்ற எல்லா இடங்களையும் விட மேலதிகாரிகளுக்கு ரொம்பவும் அடங்கிக் கட்டுப் பாட்டுக்கு வருகிறவர்கள் இவர்களேயானாலும் இங்கேயே பவ்ய நமஸ்காரம் தடாபுடாவாக இருக்கிறது. ஒருவேளை அதனாலேயே இப்படி என்றும் இருக்கலாம். அவர்களுக்கு

Koviloor Digital Library

'பவ்யம்' என்கிறதற்குக்கூட ஸ்வபாவிகமாக உள்ள தழைந்து குழைந்த அபிநயமான body language இருக்க வேண்டாம், அதற்கு விரோதமாகத்தான் பண்ணணும் என்று 'ரூல்'. அந்த 'ரூல்'படிப் பண்ணுகிறதுதான் நிஜமான அடக்க குணம் என்றே இப்படி வைத்திருக்கலாம்!

ஆனால் பொதுவிலே இப்படியில்லாமல் உள்பாவத்தை ப்ரதிபலிப்பதாகவே வெளி க்ரியை இருக்க வேண்டுமென்றால், பரஸ்பரம் அவை ஒன்றையொன்று போஷித்துக் கொள்ள வேண்டுமானால், தழைவு – குழைவான மனோபாவமென்றால் அதற்கான க்ரியையும் தழைந்து குழைந்து இருந்தால்தான் ஸரியாய் வரும்; பலன் தருவதாக இருக்கும். சரீரத்தை வளைப்பதில்தான் அந்த மனக்குழைவு ப்ரதிபலிக்கிறது. தலையைக் குனிவது, உடம்பை வில்லாய் வளைப்பது – வணக்குவது, காலை வணக்கி மண்டி போடுவது எல்லாம் உள்ளே குழைந்து தழைந்து இருப்பதற்குத்தான் வெளியடையாளம்.

தண்ட நமஸ்காரம், ஸாஷ்டாங்கம் என்று இத்தனை நாழி விசேஷித்துச் சொன்னேனே அதிலேயோ ஒரேயடியாக தழைந்து விழுந்து கிடந்தாலும் குழைவு என்று பார்த்தால் இல்லவே இல்லை!

ஏனிப்படி என்றால் அதற்கு இன்னொரு உசந்த தாத்பர்யமும் இப்போது தோன்றுகிறது: மனஸை நம்முடைய நமஸ்காரத்திற்குப் பாத்திரமாகிறவரிடம் திமிர்தண்டியாக நிறுத்தாமல் அவர் வளைக்கிறபடி வளைக்கக் கொடுப்பதற்கு அடையாளமாகவே வளைந்து வணங்குவது. அப்படிச் சொன்னால் நம்முடைய ஸொந்த மனஸ் என்று ஒன்று இருக்கிறது; அதை அவர் வளைக்கக் கொடுக்கிறோம் என்று ஆகிறது. மனஸென்றே ஒன்றில்லை என்று தள்ளுவதானால்?... மனஸையேதானே 'நாம் நாம்' என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்? ஆனதால்

Koviloor Digital Library

நாமென்றே ஒன்றில்லை என்று மனஸையே வீசி எறிகிற பாவம் என்றால், [சிரித்து] 'விட்டுக் கடாசு!' என்று மனஸையே கடாசுவது என்றால் அப்போது மனஸில்லாத மரக் கழி மாதிரிதானே உடம்பைத் தள்ளணும்? 'மரத்துப் போச்சு' என்றால் மனஸின் உணர்ச்சி அந்த பாகத்தில் ஓடவில்லை என்றுதானே அர்த்தம்? உடம்பை "இந்தக் கட்டை" என்கிறதும் இந்த பாவத்தில்தானே? அப்படி, மனமற்று உள்ள மரத் தடி மாதிரிதான் நீள நெடுக விழவேண்டும். ஆக, தண்ட நமஸ்கார க்ரியையும் உத்தமமான பவ்ய பாவத்துக்கு வெளியடையாளந்தான்.

மொத்தத்தில் எல்லாவிதமான நமஸ்காரச் செயல்களுக்குமே — அஷ்டாங்கமோ, பஞ்சாங்கமோ, ஸல்யூட்டோ, ஸலாமோ, எல்லாவற்றுக்குமே — அடிப்படை ஒரே உத்தமமான பாவந்தான்: — கீழ்ப்படிவது என்பதுதான். Obeisance என்று [அதைச்] சொல்கிறார்கள்; அதாவது obey பண்ணுவது, கீழ்ப்படிவதுதான்.

OBEDIENCE; சுச்ரூஷை

இங்கேயும் லோக ஜனங்களின் ஐகமத்யத்தை [ஒரேபோன்ற சிந்தனையை]க் காட்டுவதாக ஒன்று பார்க்கிறோம்.

Obey என்ற வார்த்தையிலிருந்தே obedience வந்திருப்பதாக எவரும் புரிந்து கொள்ள முடியும். லாடினிலிருந்து வந்த அந்த [ஒபீடியன்ஸ் என்ற] வார்த்தைக்கு 'கவனமாகக் கேட்டுக்கொள்வது' என்றே மூலத்தில் அர்த்தம் என்றும் சொல்கிறார்கள்.

'சுச்ரூஷை' என்று ஒன்று நாம் சொல்கிறோம். குரு சுச்ரூஷையையே சிஷ்யனுக்குத் தலையான கடமையாகச்

Koviloor Digital Library

சொல்கிறோம். அதற்கும் நேர் அர்த்தம் 'கேட்டுக் கொள்கிறது'தான்.

ஆக, கீழ்ப்படிதல் என்பதற்கு இங்கிலீஷ் வார்த்தையான ஒபீடியன்ஸ், பணிவிடை என்பதற்கு நம் தேசத்து வார்த்தையான சுச்ரூஷை ஆகிய இரண்டும் 'கேட்டுக் கொள்வது' என்ற ஒரே அர்த்தத்தின் அடியாகத்தான் இருக்கிறது. கீழ்ப்படிவதும் பணிவிடையும் ஒன்றையொன்று இட்டு நிரப்பிக் கொள்கிற விஷயங்கள். இரண்டிற்கும் இரண்டு வேறே பாஷைகளில் ஒரே அர்த்தம். ஏன் அப்படி இருக்கணுமென்றால்......

'கேட்டுக் கொள்வது' என்றால், என்ன கேட்டுக் கொள்கிறோமோ அந்தப்படியே செய்ய வேண்டும் என்பது தான் உள்ளர்த்தம். 'சொன்னதைக் கேளு!', 'சொன்னபடிக் கேக்கறதில்லே' என்றெல்லாம் சொல்லும்போது அது தானே அர்த்தம்? 'Hear'–கும் அந்த அர்த்தமுண்டு. பெரியவர்கள் சொன்னபடி நடப்பதுதான் நிஜமான சுச்ரூஷையும் ஒபீடியன்ஸூம். அதனால்தான் அப்படி வார்த்தைகள் ஏற்பட்டிருக்கின்றன.

ரொம்பப் பொருத்தமாக ஒன்று தோன்றுகிறது. ஒபீடியன்ஸைக் கீழ்ப்படிதல் என்று சொல்கிறோம். உடம்பு பூராவையும் வாஸ்தவமாகவே கீழே பூமியிலே படியவிட்டுக் கிடப்பதுதான் ஸாஷ்டாங்க நமஸ்காரமாக இருக்கிறது!

இப்படி [சிஷ்யன் குருவுக்கு] நமஸ்கரிப்பதை முதலில் சொல்லிவிட்டு, அப்புறமே கேட்டுக் கேட்டு உபதேசம் பெற்றுக் கொள்வது, சுச்ரூஷை என்று நாம் வழக்கில் சொல்கிற சரீர ரீதிப் பணிவிடையைப் பண்ணுவது என்று பகவான் வரிசை பண்ணிக் கொடுத்திருக்கிறார்:

தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா*

* கீதை 4.34

Koviloor Digital Library

ப்ரணிபாதம், ப்ரணாமம்

'ப்ரணிபாதம்'தான் நமஸ்காரம். 'பரிப்ரச்னம்' – உபதேசம் கேட்டுக்கொள்வது. 'ஸேவை' – பணிவிடை.

'ப்ரணிபாதம்' என்பது 'ப்ர-நி-பாதம்' என்று பிரியும். 'ர'வை அடுத்து வரும் 'ந'காரம் 'ண'காரமாகிவிடும். அதனால்தான் 'ப்ரநிபாதம்' [என்பது] 'ப்ரணிபாத'மாவது. பாதம்: **padam** இல்லை; **paatam,** அப்படியென்றால் 'விழுவது'. நி-பாதம்: ஒரே விழுகையாக விழுகிறது. விழுகிற காரியத்துக்கு அழுத்தம் கொடுக்கவே prefix (முன்னடை) 'நி' சேர்த்திருக்கிறார். 'பூந்து நிபாதம் பண்ணிப்பிட்டான்' என்கிறோம், ஒரேயடியாக வெட்டிச் சாய்த்து வீழ்த்திவிடுவதை! அந்த அழுத்தமும் போதாது, இன்னுங்கூட அழுத்திச் சொல்லணும் என்று இன்னொரு prefix–ம் 'ப்ர' என்று சேர்த்து 'ப்ர-நி-பாதம்—'ப்ரணிபாதம்' என்று பகவான் சொல்லியிருக்கிறார். 'நான்' என்ற எண்ணத்தை ஒரே வெட்டாக வெட்டிச் சாய்க்கிறதற்கு அடையாளமாக சரீரத்தைத் தடாலென்று கீழே தள்ளி நமஸ்காரம் பண்ணணும் என்று தெரிவிப்பதற்காகவே இப்படிப் பத ப்ரயோகம் பண்ணியிருக்கிறார். குருவைக் கண்டுகொண்ட சிஷ்யன் பண்ணவேண்டிய முதல் கார்யமாக இந்த ப்ரணிபாத நமஸ்காரத்தையே சொல்லியிருக்கிறார்.

'ப்ர-நிபாதம்' மாதிரியே 'ப்ர-நாமம்' என்றும் இருக்கிறது. அதுதான் 'ப்ரணாமம்' என்பது, வடக்கே நமஸ்காரத்தை அப்படிச் சொல்வதே அதிகம். இங்கேயும் ஹிந்தி வார்த்தைகள் ஒரு ஃபாஷனாக வந்து கொண்டிருப்பதில்..... ஒரு பக்கம் ஹிந்தி எதிர்ப்பு – எரிப்பு என்று இருந்தாலும் இன்னொரு பக்கம் மநுஷாள் பேர், வீட்டுப் பேர், ஸினிமாக் கொட்டாய்-ஹோட்டல் பேர்

Koviloor Digital Library

எல்லாம் ஹிந்தி ஃபாஷனில் வந்து கொண்டிருப்பதில் இங்கேயும் 'ப்ரணாம்' பரவிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

'ப்ர–நாமம்' என்பதில் 'நாமம்' என்பது 'நமனம்' என்பதன் திரிபுதான். 'நமனம்'தான் 'வணக்க'த்திற்கு நேரான பெயரென்று சொன்னேன்.

வேடிக்கையாக ஒன்று சொல்லத் தோன்றுகிறது:

நமஸ்கார க்ரியைக்கு ஸஹ அங்கமாக [உடன்சேர்ந்த அங்கமாக] ஒன்று உண்டு. அதற்கு 'அபிவாதனம்' என்று பேர். உபநயனமான குழந்தையை, "அபிவாதயே சொல்லு" என்பது அதைத் தான். 'அபிவாதயே' என்ற வார்த்தையில் ஆரம்பித்துத் தான் இன்னார் என்று தெரிவித்துக் கொள்வதாகச் சிலது சொல்லியே அந்த க்ரியையைப் பண்ண வேண்டுமென்பதால் இப்படிச் சொல்கிறோம். நமஸ்காரம் பண்ணினவுடன், தப்பாமல் அப்படிச் சில வார்த்தைகளைச் சொல்லித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டேயாகவேண்டும். அங்கே தன் பெயரை — நாமத்தை — கோத்ர, ஸூத்ராதிகளுடன் தெரிவிக்கணும்.

இப்போது நான் சொன்னதிலிருந்து முதலில் நமஸ்காரம் ஸமர்ப்பிப்பது. அப்புறமே தன்னுடைய நாமத்தைத் தெரிவித்துக் கொள்வது என்று தெரிகிறதல்லவா? இதை வைத்துத்தான் 'ப்ரணாம'த்திற்கு வேடிக்கையாக ஒரு அர்த்தம் செய்துகொண்டேன்.

'ப்ர' என்ற prefixக்குப் பல அர்த்தம். அது பின்னால் வரும் வார்த்தைக்கு அழுத்தம் கொடுக்கும், சிறப்புச் சேர்க்கும். 'முன்னால்', 'முற்கால' என்றெல்லாமும் அர்த்தம் கொடுக்கும். 'நாமம்' என்கிற நமனமாகிற நமஸ்காரத்திற்குச் சிறப்பு மொழியே 'ப்ர–நாமம்'. ஒரு பெரியவரின் முன்னால் செய்யப்படும் நமஸ்காரம் என்பதாலும் 'ப்ர–நாமம்'.

Koviloor Digital Library

இவைதான் ஸரியான அர்த்தம். ப்ரநாமம்தான் 'ப்ரணாமம்'!

எனக்குத் தோன்றிய வேடிக்கையர்த்தம் என்னவென்றால்: ஒருத்தன் தன்னுடைய பெயரை-நாமத்தைத் தெரிவித்துக் கொள்வதற்கு முன்னால் செய்வதுதானே நமஸ்காரம்? 'முன்னால்' என்பதற்கும் 'ப்ர' போடலாமோல்லியோ? அதனால் ஒருத்தனுடைய பெயருக்கு, 'நாம'த்துக்குப் 'ப்ர'வாக வரும் அந்தக் கார்யம், ப்ர-நாமம், 'ப்ரணாமம்' ஆகிறது!

அபிவாதனம்

நமஸ்காரம் பண்ணுபவன் நமஸ்கரிப்பவரைப் பார்த்துச் சொல்லும் வாசகமே 'அபிவாதனம்' என்பது. மொத்தத்தில் தான் யார், என்ன பெயர், எந்தப் பாரம்பர்யத்தில் வந்தவன் என்று தெரிவித்துக் கொள்வதே அபிவாதனம். 'தன்னைவிட வயஸில் பெரிய ஒருவர் வருகிறபோது ஒருத்தனுடைய பிராணன் மேலே கிளம்பி வெளியில் போகப் பார்க்கும். அப்போது அவன் எழுந்து அவரை மரியாதையாக வரவேற்று அபிவாதனம் பண்ணுவதால், கிளம்பின பிராணன் அவனிடமே மறுபடி புகுந்து நிலைப்படுகிறது' என்று மநு சொல்கிறார்:

ஊர்த்வம் ப்ராணாஹ்யுத்க்ராமந்தி யூந: ஸ்தவிர ஆயதி |
ப்ரத்யுத்தாநாபிவாதாப்யாம் புநஸ்தான்–ப்ரதிபத்யதே ||*

இங்கே வயஸில் சின்னவன் உட்கார்ந்து கொண்டோ படுத்துக் கொண்டோ இருக்கும் போது ஒரு பெரியவர் அந்தப் பக்கம் வருவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. ஒரு பெரியவரை எப்போது பார்த்தாலும் நமஸ்காரம் பண்ணி

* மநுஸ்ம்ருதி 2.120.

Koviloor Digital Library

அபிவாதனம் செய்வதையும் மநு உள்பட எல்லா தர்மசாஸ்த்ரகாரர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

முதலில் நமஸ்காரம். அப்புறம் எழுந்து, குனிந்து நின்றுகொண்டு இரண்டு காதையும் இரண்டு கையால் தொட்டுக் கொண்டு — வலது காதை வலது கையாலும், இடது காதை இடது கையாலும் தொட்டுக் கொண்டு — தான் இன்னார் என்று நமஸ்காரம் பண்ணப்படுகிறவருக்கு சாஸ்த்ரோக்தமாக அறிமுகம் செய்து கொள்வதான அபிவாதன வாசகத்தைச் சொல்லணும். காதை ஏன் தொட்டுக்கொள்ள வேண்டுமென்றால் அதுதான் பஞ்சபூதங்களில் உசந்த ஆகாசத்துக்குரியதான சப்தத்தை க்ரஹிப்பது.

அபிவாதனம் சொன்ன அப்புறம் இரண்டு கையையும் காதிலிருந்து எடுத்து, தன்னுடைய முழங்காலி லிருந்து பாதக் கட்டைவிரல் முடியத் தொட்டுக் கொள்ள வேண்டும்.

குனிந்து நிற்பது பணிவைக் காட்டுவது. விழுந்து நமஸ்கரித்தவன் எழுந்து நின்ற பின்னும் விறைப்பாக நிற்காமல் உடம்பை வளைத்துக் குனிவது அதே விநயத்தை 'அன்டர்லைன்' பண்ணி இன்னொரு விதத்தில் காட்டுகிறது தான். காதிலிருந்து கையை எடுத்து கால் முடியத் தொடுவது தன்னை அப்படியே முழுக்கவும் நமஸ்காரம் பண்ணப்படுகிறவருக்கு அர்ப்பணம் பண்ணிக் கொள்வதற்கு அடையாளம். காது சிரஸிலிருப்பதால் காதிலிருந்து பாதம் தொடுவதே தலையிலிருந்து கால் வரையில் அர்ப்பித்துக் கொள்கிற மாதிரிதான். ஏன் தலையைத் தொடாமல் காதைத் தொடணுமென்றால், காதின் முக்யத்வம் முன்னமேயே சொன்னேனே! அதுதான் ஆகாச பூதத்துக்கு உரித்தான சப்தத்தை க்ரஹிப்பது, என்றேனே? உபதேசம் கேட்டுக் கொள்வதும் காதுதான்.

Koviloor Digital Library

நமஸ்கரிக்கப்படுபவரின் ஆசீர்வாதத்தைக் கேட்டுக் கொள்ளப் போவதும் அதுதானே? அதனாலெல்லாம் காதிலிருந்து கால் வரையில்.

இந்தக் காரணங்களைத் தவிர, இந்த நமஸ்கார க்ரியையே ஒரு யோகாப்யாஸம், பலவிதமான நாடி சலனங்களால் நம் சித்தத்தை சுத்தம் செய்யும் தேஹப் பயிற்சி என்று புரிந்து கொள்ளவேண்டும். அதில் காதைத் தொடுவது, அப்புறம் முழங்காலிலிருந்து விரல் முடியத் தொடுகிறது எல்லாவற்றுக்குமே சித்த சுத்திக்கு ஸஹாயம் செய்வதான ப்ரயோஜனம் இருக்கிறது.

நமஸ்காரம் பண்ணப்படுகிறவருக்குத் தன்னை ஸர்வாங்கமும் அர்ப்பணம் செய்யும் தாத்பர்யத்தை உள்ளே அடக்கிக்கொண்டிருக்கிற யோகாப்யாஸமாக இதைச் சொல்லலாம்.

முடிவாக, நமஸ்காரம் பண்ணப்படுகிறவரின் பாதங்களைத் தொடவேண்டும்.

'எதற்காக இப்படிப் பாதத்தைத் தொடவேண்டும்?' என்று கேட்டால், 'லாஜிக்'லாக அதற்குப் பதில் சொல்ல முடியாது! பக்திக்கும் விநயத்துக்கும் 'நாச்சுரல் எக்ஸ்ப்ரெஷ'னாகவே பாதஸ்பர்சம் இருக்கிறது.

அந்த 'கெஸ்ச்ச'ரில் [சைகையில்] நமக்கு நமஸ்கரிக்கப்படுகிறவரிடமுள்ள பக்தி, அடக்கம் எல்லாம் பூர்ணமாக அடங்கி விடுகின்றன. நாம் சின்னவனாக இருந்துகொண்டு அவரை ரொம்பவும் பெரியவராக வைத்து — யாரை நமஸ்கரித்தாலும் அவரே ஈச்வரனின் ப்ரதிநிதி என்கிற மனோபாவத்தை வைத்து — அவருக்குள் பாய்கிற ஆசீர்வாத சிந்தையை அவரிடமிருந்து நமக்குள் பாய்ச்சிக் கொள்வதற்காகவே இப்படிப் பாதத்தைத் தொடுவது. இது ஒரு [சிரித்து] ஆத்ம ஸம்பந்தமான 'எலெக்ட்ரிகல் ஸர்க்யூட்'!

Koviloor Digital Library

'தொடுவது' என்று சொன்னாலும் நம்முடைய தக்ஷிண தேசத்தில் பெரும்பாலும் அது அசலே நேராகத் தொடுவதாயில்லாமல், நமஸ்காரத்துக்குப் பாத்திரமாகிற வரின் பாதத்தின் கிட்டே நமஸ்கரிக்கிறவன் தன் கைகளைக் கொண்டுபோய் தொடுகிற மாதிரி பாவனை பண்ணுவதாகத் தான் நடைமுறையில் இருக்கிறது.

அதற்குத் தகுந்த ந்யாயமும் இருக்கிறது. மடி போதாதவர், அதிலும் வயஸில் சின்னவர், மடியாயிருக்கிற வரைத் தொடுவது ஸரியில்லை. மடி-விழுப்பு ஸமாசாரம் ஒரு பக்கம் இருக்கட்டும். தேஹ ரீதியாகவும் நமக்கு உள்ள தோஷம் நாம் தொடுகிறவரை கொஞ்சமோ நஞ்சமோ பாதிக்க இடமுண்டு. மனோரீதியில் நமக்குள்ள குணதோஷங்களும் அதே மாதிரிப் பண்ணலாம். எலெக்ட்ரிக் கரென்ட் மாதிரி இவை ஒருத்தரிடமிருந்து இன்னொருத்தருக்குப் 'பாஸ்' ஆகக்கூடும் என்று இப்போது ஸயன்ஸுக்காரர்களே ஒத்துக் கொள்கிற மாதிரி பேசுகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலே கர்மா. நாம் யாரை நமஸ்கரிக்கிறோமோ அவர் கருணை மனஸ் படைத்த ஒரு உத்க்ருஷ்டமான [உயர்வு பொருந்திய] ஜீவனாக இருந்தால் நாம் அவர் பாதத்தைத் தொடுகிறபோது நம்முடைய கர்மா — தப்புக் கர்மா, பாப கர்மாதான், அது — அவருக்குள்ளேயும் 'பாஸ்' ஆகி நம்முடைய கர்மாவுக்காக நாம் படவேண்டிய கஷ்டத்தைக் கொஞ்சமோ நஞ்சமோ அவர் அநுபவிக்கும்படி செய்து விடும்.

பரம உத்க்ருஷ்டமாக இருந்தால் விஷயம் வேறே! அவருடைய ஞானாக்னி, தபோசக்தி, யோகசக்தி, பக்தியின் மஹிமை இப்படி ஏதோ ஒன்றின் 'பவ'ரில் பிறத்தியாரிட மிருந்து வந்து சேர்கிற கர்மா பஸ்மமாகிவிடும். ஆனால் அப்படி இருக்கக்கூடியவர்கள் ரொம்பவும் துர்லபம்தான்.

Koviloor Digital Library

நமக்கோ பிறத்தியார் எவருடைய உள்சக்தியைப் பற்றியும் திட்டமாகத் தெரியத்தானே தெரியாது? அப்படியிருக்கும்போது, யார் எப்படிப்பட்டவர் என்று முழுக்கவும் ஸரியாகத் தெரிந்துகொண்டு இன்னாரைத் தொடுகிறது, இன்னாரைத் தொடாமல் அப்படி பாவனை மாத்திரம் பண்ணுவது என்றெல்லாம் பாகுபாடு பண்ணிக் கொண்டிருக்க முடியுமா?

ஆகையினால் எல்லோரையுமே பாத ஸ்பர்சம் பண்ணுகிற மாதிரி பாவனையில் செய்தாலே போதும். அதுவே நடைமுறைக்கு ஸரியாக வரும்.

ஒரேயடியாக பக்தி பெருக்கிட்டு வந்து, அந்த ஆவேசத்தில் நமஸ்காரத்துக்குப் பாத்திரமாகிறவரின் பாதத்தை தொட்டால், இறுக்கிக் கட்டிக்கொண்டால் கூட, அதுவும் வேறே விஷயம்! அந்த பக்திப் பெருக்கே ஸமஸ்த தோஷங்களையும் நிவாரணம் பண்ணிவிடும்! ஆனால் அந்த மாதிரி நிஜ பக்தியின் ஆவேசம் நமக்கு வருவதும் ரொம்பவும் துர்லபந்தான். ஏதோ தத்காலத்துக்கு [தற்காலத்துக்கு] ஏற்படுகிற 'இமோஷ'னை நிஜபக்தியுடன் சேர்த்துவிடக் கூடாது. ஆனபடியால் நமஸ்கார பாத்திரரைத் தொடுவதில்லை என்று கட்டுப்படுத்திக் கொண்டு ஜாக்ரதையாயிருப்பதே நமக்கும் நல்லது, அவருக்கும் நல்லது.

ஒருத்தருடைய ஆசீர்வாதத்தினால் நமக்கு நல்லது நடக்கும், ச்ரேயஸ் கிடைக்கும் என்றுதான் அவரை நமஸ்கரிக்கிறது. அப்படி நமக்கு நல்லது செய்கிறவரிடம் நம்முடைய கெடுதலைக் கொண்டு சேர்க்கிறது தப்பு தானே? தெரியாத்தனத்தால் அப்படிப் பண்ணினால் பரவாயில்லை. ஆனால் இப்போது நான் தெரியப்படுத்தி விட்டேனே! தெரிந்துகொண்டும் தொடுகிறது என்று பண்ணினால் தப்புதானே? அது எப்படி நமக்கு நல்லதைத் தரமுடியும்?

Koviloor Digital Library

எவ்வளவு உத்க்ருஷ்டமாயிருந்து, பிறத்தியாருடைய கர்மாவைப் பொசுக்கக் கூடியவராயிருந்தாலுங்கூட சாஸ்த்ராசாரங்களைத் தானும் பின்பற்றி, லோகத்துக்கும் எடுத்துச் சொல்ல வேண்டியவர்களான தர்மபீடங்களை, மடாலயங்களைச் சேர்ந்த ஸ்வாமிமார்களுக்குப் பாதத்தைத் தொட்டு நமஸ்காரம் பண்ணுவது கூடாது. ஏனென்றால் அந்தப் பெரியவர்களை மடி+விழுப்பு முதலான எதுவும் தொடாது என்றாலும், பிறத்தியாருக்கு அவர்கள் எடுத்துச் சொல்கிற சாஸ்த்ரீய முறைகளில் வரும் இந்த மடி-விழுப்பு ஸமாசாரத்தை அவர்களே நடைமுறையில் பண்ணி லோகத்துக்கு உதாரணமாக வழி காட்டுவதற்கு இந்தப் பாதஸ்பர்சம் குந்தகம்தானே பண்ணிவிடும்?

ஆக மொத்தம், நமஸ்கரிக்கிறவன் நமஸ்கரிக்கப் படுகிறவரின் பாதத்தை ஸ்பர்சிக்கிற மாதிரி, அந்தப் பாதத்தின் பக்கமாகக் கையைக் கொண்டு போய் பாவனா ரூபத்தில் பண்ணுவதே யுக்தம்.

அப்படிப் பண்ணினாலே போதும், முன்னே நான் சொன்ன மாதிரி அவருடைய ஆசீர்வாத சித்தம் நமக்குள் பாய்ந்துவிடும்.

சுத்தமான பாவத்தோடு ஒன்றைப் பண்ணினால் அந்த பாவனைக்கே ஸாக்ஷாத்தாகச் செய்கிற கார்யத்தை விடவும் சக்தி ஜாஸ்தி. அதனால் தான் ஈச்வரனையே 'பாவ க்ராஹி'தான்; 'பாஹ்யக்ராஹி' இல்லை என்பது. 'பாஹ்யக்ராஹி' என்றால் வெளியிலே பண்ணுவதை ஏற்றுக் கொள்கிறவன். 'பாவ க்ராஹி' என்றால் மனோபாவத்தை ஏற்றுக்கொள்கிறவன்.

[சிரித்து] 'பாவனை' என்பதைப் 'பாசாங்கு' என்று அர்த்தம் கொடுக்கிற அளவுக்கு நாம் கொண்டு வந்து விட்டோம்! அப்படிப்பட்டதை நான் சொல்லவில்லை.

Koviloor Digital Library

'பாஹ்யத்தில் [வெளிப்பட] செய்ய முடியவில்லையே!' என்ற தாபமும் சேர்ந்து உள்ளேயுள்ள நிஜமான பக்தியையும், பணிவையும் வ்ருத்தி பண்ணி, அதற்கு அடையாளமாகப் பண்ணுவதையே 'பாவனையாகப் பண்ணுவது' என்று சொல்கிறேன்.

அப்படி மனோபாவத்தால், நமஸ்கரிக்கப்படுபவரின் பாதத்தை அதற்குச் சற்று தூரத்தில் நம் கையால் தொடுகிற மாதிரி பண்ணுவதையே அவரை நிஜமாகத் தொடுவதாக பாவித்து, அவருடைய ஆசீர்வாதத்தை நமக்குள் இறக்கிக் கொள்ள வேண்டும்.

அவர் ஆசீர்வாதம் என்று பண்ணினாலும் பண்ணா விட்டாலும் ஸரி, அப்படிப் பண்ணவேண்டும் என்று நினைக்காதவராகக் கூட இருந்தாலும் ஸரி, நம்முடைய நிஜமான, அந்தரங்க சுத்தமான பாவனா நமஸ்காரத்தினால் அவருக்குள் அந்தராத்மாவாக இருக்கப்பட்ட ஈச்வரன் — நாராயணன் — ஆசீர்வாதம் செய்துவிடுவான். அதிலே ஸந்தேஹமேயில்லை......

வலது காதை வலது கையாலும் இடது காதை இடது கையாலும் அபிவாதனத்தின்போது தொடுகிறாற்போலவே தான் எதிரே இருப்பவர் காலைத் தொடும்போதும், அதாவது பாவனையாக அப்படிப் பண்ணும்போதும் அவருடைய வலது காலை நம்முடைய வலது கையாலும் இடது காலை இடது கையாலுந்தான் தொடுகிற மாதிரிச் செய்யவேண்டும். அதாவது அவருடைய வலது காலுக்குக் கிட்டே நம்முடைய வலது கையும், இடது காலுக்குக் கிட்டே இடது கையும் இருக்கும்படி கைகளை மறித்துப் போட்டுக் கொள்ளவேண்டும். ஸாதாரணமாக இப்படிப் பண்ணுவதில்லை. அந்த இரண்டு கையாலும் அதததற்கு நேரே உள்ள காலைத்தான் தொடுகிறோம்; அல்லது தொடுகிற மாதிரிப் பண்ணுகிறோம். இப்படிப் பண்ணும்

Koviloor Digital Library

போது நம்முடைய வலது கை அவருடைய இடது காலையும், இடது கை வலது காலையும் தொடுவதாகவே இருக்கும். ஏனென்றால் அவர் நமக்கு எதிர்த் திசை பார்த்துக் கொண்டிருப்பதால் கண்ணாடி பிம்பம் மாதிரி வலது – இடது மாறிப் போகும். [சிரித்து] உல்டா! அதனால் கத்தரிக்கோல் மாதிரி நம்முடைய இடது கைக்கு மேல் வலது கையை மறித்து எதிரே இருப்பவரின் வலது – இடது கால்களை நம்முடைய அந்தந்தக் கையாலேயே தொடவேண்டும். அப்படித்தான் செய்யவேண்டுமென்று சாஸ்த்ரம்—ஸவ்யேந ஸவ்ய: ஸம்ப்ரஷ்டவ்யோ தக்ஷிணேந ச தக்ஷிண:*. ஒரு புஸ்தகத்தில் "கர்தரீமிவ" —'கத்திரி மாதிரி'—என்றே இருக்கிறது. 'கர்தரி'யிலிருந்து வந்ததே நம் 'கத்திரி! 'கர்தனம்' என்றால் நறுக்குவது.......

'அபிவாதனம்' என்று முதலில் சொன்னேனே. அதன் வாசகத்தைப் பற்றிக் கொஞ்சம் 'எக்ஸ்ப்ளெய்ன்' பண்ணுகிறேன்.

அபிவாதனம் சொல்வதில் முதலில் ஒருத்தன் என்ன கோத்ரமோ அதை ஆரம்பித்து வைத்தவர்களான மூலரிஷிகளின் பெயர்கள் வரும். இதற்கு 'ப்ரவரம்' என்று பெயர். 'ரிஷி' என்றால் வேதங்களில் அதுவரை லோகத்துக்கு வந்திருக்காத ஒரு புது மந்திரத்தை அகண்ட ஆகாசத்திலிருந்து கண்டுபிடித்து லோகத்துக்குக் கொடுத்தவர். இப்படி ஒவ்வொரு கோத்ரத்திலும் மூலவர்களாக ஒன்றிலிருந்து ஐந்து வரை ரிஷிகள் இருந்திருக்கிறார்கள். அந்த ரிஷிகளிலும் யார் ரொம்ப முக்யமானவரோ அவர் பெயரிலேயே கோத்ரம் இருக்கும். 'ஆங்கிரஸ கோத்ரம்' என்பது அந்த வம்ச ஆரம்பத்தில் வந்த முதல் ரிஷியான ஆங்கிரஸர் பெயரில் இருக்கிறது. 'கௌண்டின்ய கோத்ரம்' என்பது அந்த வம்ச ஆரம்பத்தில்

* மநுஸ்ம்ருதி 2.72.

Koviloor Digital Library

வந்த மூன்று ரிஷிகளில் மூன்றாமவரான கௌண்டின்யரின் பெயரில் இருக்கிறது. இதற்குச் சில விலக்கும் உண்டு. அந்த ஸமாசாரம் இப்போது வேண்டாம். அபிவாதனத்தின் முதலில் 'ப்ரவரம்' என்ற பெயரில் வம்ச மூலவர்களான ரிஷிகளின் பெயர் வரும்.

ப்ரவரத்தில் சொல்கிற ரிஷிகளில் — பெரும்பாலான கோத்ரங்களில் மூன்று ரிஷிகளின் பெயர் வரும்; அப்படிப் பட்ட ரிஷிகளில் — எவர் பெயரில் கோத்ரமிருந்தாலும் அந்த ரிஷிகளின் பரம்பரை க்ரமம், lineage, ஆதி முதலில் இருந்த ரிஷி, அப்புறம் அவருடைய பிள்ளை ரிஷி, அதற்கப்புறம் அந்தப் பிள்ளையின் பிள்ளை ரிஷி என்பதாகவே வரும். பித்ரு தர்ப்பணத்திலோ இதற்கு மாறாக நம் வம்சத்தில் முடிவாக நமக்கு முன்னால் வந்த மூன்று பேரைச் சொல்லி அவர்களுக்குத் தர்ப்பணம் கொடுப்பது. அதிலும் கடைசி கடைசியாய் வந்த அப்பாவில் ஆரம்பித்து, அப்புறம் அவருடைய அப்பா, அதற்கப்புறம் அவருக்கும் அப்பா என்று வரிசைப்படுத்திக் கொடுக்கிறது. கல்யாணங்களில் கன கோஷமாக ப்ரவரம் சொல்கிறது வழக்கம். வதூ-வரர் என்ற கல்யாணப் பெண்ணும் பிள்ளையும் ஸகோத்ரமாக இல்லாமல் வெவ்வேறு கோத்ரத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்பது முக்யமான விதியாதலால், அந்த விதியை அநுஸரித்தே ஒரு விவாஹம் நடக்கிறது என்று ஸபைக்கு ப்ரகடனம் செய்யும் உத்தேசத்துடன் இப்படி கனகோஷமாக ப்ரவரம் சொல்வது. அதன்போது அபிவாதனத்தில் சொல்வது, தர்ப்பணத்தில் சொல்வது ஆகிய இரண்டையும் சேர்த்துச் சொல்வார்கள். முதலில் அபிவாதனத்தில் சொல்லும் அதே வரிசைக் க்ரமத்தில் ஆதி முதல் ரிஷி, அவர் பிள்ளை, பேரர் என்று கோத்ரத்தைத் தெரிவிப்பார்கள். அப்புறம் பித்ருக்களின் வரிசை. ஆனால்

Koviloor Digital Library

தர்ப்பணத்தில் அப்பா-தாத்தா-கொள்ளுத்தாத்தா என்று சொல்கிற க்ரமத்தை இங்கு மாற்றிக் கொள்ளுத் தாத்தா-தாத்தா-அப்பா என்று சொல்வார்கள். தர்ப்பணத்தில் ஒவ்வொரு பெயரைச் சொல்லும்போதும் இன்ன கோத்ரத்தைச் சேர்ந்தவர் என்று ஆரம்பித்து அப்புறம்தான் பெயரைச் சொல்வது.

அபிவாதனத்தில் முதலில் மூலரிஷிகளின் பெயர் வரும் என்பதுதான் இங்கே விஷயம். அப்புறம் அந்த கோத்ரப் பெயரும், அப்புறம் கர்மாக்களை வகை தொகைப்படுத்திக் கொடுக்கும் ஸூத்ரங்களில் இவன் எதைச் சேர்ந்தவனோ அதன் பெயரும், அப்புறம் நாலு வேதங்களில் இவன் எதைச் சேர்ந்தவனோ அதன் பெயரும் வரும். அந்த வேத சாகையைத் தான் அத்யயனம் பண்ணுவதாக வரும். [சிரித்து] இந்தக் காலத்தில் 'பண்ண வேண்டியவன்' என்று வைத்துக் கொள்ளலாம். முடிவாகத் தன் பெயரைச் சொல்வதாக வரும். சொல்லி, "போ:" (Bhoh)—அதாவது 'பெரியவரே!', 'ஐயனே!'—என்று நமஸ்கரிக்கப்படுபவரைக் கூப்பிட்டு நமஸ்காரத்தை ஸமர்ப்பிக்க வேண்டும். "இன்ன ரிஷிகளைக் கொண்ட இன்ன கோத்ரக்காரன், இன்ன ஸூத்ரக்காரன், இன்ன வேத சாகையை அத்யயனம் பண்ணும் இன்ன பெயருள்ளவனாக இருக்கிறேன் ஐயா!" என்று மொத்தத்தில் அர்த்தம் கொடுக்கும்.

எப்பேர்ப்பட்ட உத்தமமான பரம்பரையில் நாம் வந்திருக்கிறோம்; லோகம் முழுதற்கும் பரம கல்யாணத்தைச் செய்யும் வேதங்களிலும், ஸூத்ரங்களிலும் நாம் எதைச் சேர்ந்தவராக இருக்கிறோம் என்று எவ்வளவுக் கெவ்வளவு ஞாபகப்படுத்திக்கொள்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நமக்கு ச்ரேயஸாகும். இப்பேர்ப்பட்ட பரம் பரையில் பிறந்தோம் என்பதற்கு ஏற்ற யோக்யதாம்சங்

Koviloor Digital Library

களோடு, அந்தப் பரம்பரைக்கு worthy descendants-ஆக நாம் இருக்கவேண்டும் என்பதற்கு இப்படி அபிவாதனம் சொல்வதே reminder ஆக, அதாவது ஞாபகமூட்டியாகவும், inspiration ஆகவும், அதாவது நமக்கு உள்ளே பூந்து ஊக்குகிற சக்தியாகவும் இருக்கும். அதனால்தான் நம் கோத்ர-ஸூத்ராதிகள் நன்றாகத் தெரிந்த நம்மகத்துப் பெரியவர்களுக்கும் — அப்பா, சித்தப்பா மாதிரியானவர்களுக்கே — ஒவ்வொரு தடவை நமஸ்காரம் பண்ணும் போதும் அபிவாதனம் சொல்லணும் என்று வைத்திருக்கிறார்கள். நம்முடைய வேதத்தின் ஞாபகம், வேத ரிஷிகளின் ஞாபகம், வம்ச மஹிமை — 'குடிப் பெருமை' என்பது — எப்போதும் நம் மனஸில் இருக்கவேண்டும் என்பதே இதன் அடிப்படை தாத்பர்யம்.

'இப்பேர்ப்பட்ட குடியின் வழித்தோன்றலாக இன்ன பெயர் கொண்ட நான் இருக்கிறேன்' என்பதாகக் குடியைச் சொன்னவிட்டுத் தன்னுடைய பெயரை ஒருத்தன் சொல்வதாக அபிவாதனத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

இத்தனைக்கும் ஆரம்பம் 'அபிவாதயே'— 'சரிவரச் சொல்கிறேன், அதாவது அறிமுகம் பண்ணிக் கொள்கிறேன்' என்று நேர் அர்த்தம். 'தங்களுடைய ஆசீர்வசனத்தை—ஆசீர்வாத ப்ரதிவசனத்தை [மறு மொழியை] வேண்டிச் சொல்கிறேன்' என்று நீட்டி அர்த்தம் சொல்வதுண்டு.

அந்த ப்ரதிவசனத்திற்கு 'ப்ரத்யபிவாதனம்' என்று பெயர். அது சொல்லத் தெரியாதவனுக்கு நமஸ்காரம் பண்ணப்படாது என்றுகூடச் சொல்லியிருக்கிறது. நமஸ்காரம் பண்ணினவன் தெரிவித்துக் கொண்டபடி அவன் சர்மாவை [பெயரை] 'இன்ன பெயருள்ள சர்மா'

Koviloor Digital Library

என்று கூப்பிட்டு "தீர்க்காயுஷ்மான் பவ ஸௌம்ய !" என்று சொல்வதே அந்த ப்ரத்யபிவாதனம்.

ப்ரத்யபிவாதனம் சொல்லத் தெரியாதவனுக்கு நமஸ்காரம் கூடாது என்கிற மாதிரியே வேறே சில பேருக்கும் [கூடாதென்று] சொல்லியிருக்கிறது. எல்லாம் தெரிந்தவரானாலும் ஒரு பெரியவர் படுத்துக் கொண்டிருக்கும்போதும், ஜபம்-பூஜை பண்ணும்போதும், ஹோமம் பண்ணும்போதும், தலையில் எண்ணெய் வைத்துக் கொண்டு ஊறிக் கொண்டிருக்கிறபோதும், கையில் தீர்த்த பாத்ரம், புஷ்ப—அக்ஷதை, தர்ப்பை - ஸமித், நெய் முதலியவை வைத்துக்கொண்டிருக்கும் போதும், ஆஹார வஸ்துக்கள் வைத்துக்கொண்டிருக்கும்போதும், ஆஹாரம் பண்ணும்போதும், இன்னும் சில ஸந்தர்பங்களிலும் நமஸ்காரம் பண்ணப்படாது.

சில பேருக்கு நமஸ்காரம் பண்ணினாலும் அபிவாதனம் சொல்லக்கூடாது என்றும் தர்ம சாஸ்த்ரத்தில் விதிமுறை இருக்கிறது. 'யதீன்', அதாவது எங்கள் மாதிரி ஸந்நியாஸிகளுக்கு, அபிவாதனம் சொல்லக்கூடாது. நமஸ்காரம் பண்ணுமே தவிர 'அபிவாதயே' சொல்லப் படாது. 'யதீன்' என்று சொல்லி முடிக்குமுன் இன்னும் நாலைந்து பேரையும் சொல்லியிருக்கிறது.

தேவான், நதீம், ஸபாம், வ்ருக்ஷாம், அக்னீனபி ததா யதீன் |
தண்டவத் ப்ரணமேத் பூமௌ நாபிவாதனம் ஆசரேத் ||

இங்கே சொல்லியிருக்கிறவர்களுக்கெல்லாம் கழி மாதிரி நிலம் தோய விழுந்து தண்டவத்தாக நமஸ்கரிக்கத் தான் வேண்டுமானாலும் அபிவாதனம் கூடாது. யாரார்? முதலில் தேவர்கள். அதனால்தான் கோவிலிலும் அகத்துப் பூஜையிலும் நமஸ்கரிக்கிறபோது 'அபிவாதயே' சொல்வதில்லை. அப்புறம் நதிகள். கங்கா பூஜை

Koviloor Digital Library

பண்ணுகிறோம். ராமேச்வரத்தில் ஸமுத்ர பூஜை செய்கிறோம். அங்கேயெல்லாம் அபிவாதனம் கூடாது. ஒரு ஸபை நடக்கிறது. அதிலே பல பெரியவர்களும் இருக்கிறார்கள். தனிப்படக் கண்டால் அந்த ஒவ்வொருத்தருக்கும் அபிவாதனத்தோடேயே நமஸ்காரம் செய்யணும். ஆனால் ஸபையாக அப்படிப் பல பேர் உள்பட ஜனங்கள் சேர்ந்திருக்கிறபோது, ஸபைக்கு நமஸ்காரம் உண்டாயினும், அபிவாதனம் சொல்லப் படாது. அச்வத்தம் மாதிரி வ்ருக்ஷங்களுக்கும் அபிவாதன மில்லாத நமஸ்காரம் மட்டுமே. அக்னிக்கும் அப்படியே தான்.

[சிரித்து] ஜாக்ரதையாக இப்போது ஒன்று சொல்கிறேன்: ஸ்த்ரீகளில் தாயார் தவிர மற்றவர்களுக்கு அபிவாதனம் இல்லாமலேதான் நமஸ்காரம். இதை முதலிலேயே சொல்லியிருந்தால் நவீன காலத்தில் ஸ்த்ரீ ஸமத்வம் சொல்கிறவர்களுக்குக் கோபம் வரும் என்பதால் தான் ஜாக்ரதைப்படுத்திக்கொண்டு, 'ஆனானப்பட்ட தேவர்கள், ஸந்நியாஸிகள், புண்ய தீர்த்தங்கள், வித்வத் ஸபைகள் ஆகியவற்றுக்குக் கூடத்தான் அபிவாதனம் இல்லை. அதனால் இங்கே உசத்தி-தாழ்த்தி காட்டிப் பாகுபடுத்தவில்லை. ஏதோ நமக்குத் தெரியாத, தெரிவிக்க முடியாத காரணத்துக்காகத்தான் இப்படி விதி இருக்கிறது' என்று காட்டுவதற்கு அநுகூலமாகச் சொல்லிக்கொண்டு போகிறேன்!

ஸ்த்ரீகளில் ஸ்தானத்தில் உயர்ந்த எல்லாருக்கும் நமஸ்காரம் பண்ணலாமானாலும் தாயாரொருத்திக்கே நமஸ்காரத்தோடு அபிவாதனமும் சொல்லுவது. சிஷ்டாசாரத்தில் இப்படித்தான் நடந்து வருகிறது. குருபத்னிக்கும், தாயார் காலமானபிறகு தமையன் பத்னிக்கும் தாயார் ஸ்தானமே கொடுப்பதும் சிஷ்ட ஸம்ப்ரதாயத்தில் வந்திருக்கிறது.

Koviloor Digital Library

தன்னைவிட உயரத்தில் இருப்பவருக்கோ, கீழ் மட்டத்தில் இருப்பவருக்கோ [நமஸ்காரம் செய்யக்] கூடாது என்றும் இருக்கிறது. குருவைத் தவிர மற்றவர்களுக்கு இந்த விதி என்றும் இருக்கிறது. குருப்பட்டம் கட்டிக் கொண்டால் மற்றவர்களைவிட நிறைய நமஸ்காரத்தை வாங்கிக் கொண்டு கஷ்டப்பட்டுத்தான் ஆகணும் என்று வைத்திருக்கிறது!

நமஸ்காரம் பண்ணுபவனும் இப்படியிப்படி இருக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறது. நமஸ்கரிக்கப் படுபவனுக்குச் சொன்ன அதே வஸ்துக்களை இவனும் கையில் வைத்துக் கொண்டு நமஸ்கரிக்கக் கூடாது. புருஷர்களானால் மேலே வஸ்திரம் கூடாது. அதை இடுப்பில் கட்டிக்கொண்டே பண்ணணும். திறந்த உடம்பாக என்பது முக்யம். ஒளிவு மறைவு இல்லாமல் தன்னை அப்படியே ஒழித்துத் தருவதற்கு ஹ்ருதய பாகத்தை மூடாமல் காலில் விழுவது அடையாளம். அதனால் சட்டை போட்டுக் கொண்டு [நமஸ்கரிப்பது] கூடாது.

நமஸ்காரம் பண்ணுபவன், வாங்கிக் கொள்பவன் இரண்டு பேரும் அசுத்தனாயிருக்கப்படாது. இந்தக் காலத்தில், ரொம்பவும் மடித் தப்பாக இருக்கப்படாது என்று 'லிபர'லாக அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம்.

வித்யை, அநுஷ்டானம், ஞானம் முதலிய ஏதோ ஒன்றில் தேர்ச்சியடைந்தவர்கள் ஸமவயஸானாலும், அல்லது வயஸில் சின்னவர்களானாலுங்கூட நமஸ்காரம். மற்றவர் விஷயத்தில் மூன்று வயஸாவது பெரியவனா யிருப்பவருக்கே நமஸ்கரிக்கணும் என்று ஒரு அபிப்ராயம் இருக்கிறது. அப்படிப் பார்க்காமல், பொதுவாக நம்மைவிட வயஸில் கொஞ்சம் பெரியவராயிருப்பவரிலிருந்து ஆரம்பித்து எல்லோர் முன்னாலுமே உடம்பைக் கீழே

Koviloor Digital Library

போடுவது நல்லது; எளிமைப் பண்புக்கு உதவுவது. ஆவணியவிட்டத்தன்று முஹூர்த்த காலமே பெரியவனுக்கும் நமஸ்கரிப்பதாக சிஷ்டாசாரம்; அன்றைக்குத் தேடித் தேடிப் போய் நமஸ்கரிப்பார்கள்....

தெய்வத்தின் நாமத்திற்கு முன்பும்!

நமஸ்காரம் பண்ணுகிறவனின் நாமத்தைச் சொல்வதற்கு முன்னே அவன் செய்கிறது 'ப்ரநாமம்' — ப்ரணாமம் — என்று வேடிக்கையாகச் சொன்னேன். ஸகலமான பேரும் நமஸ்காரம் பண்ணுகிற ஸாக்ஷாத் பரமேச்வரனுக்கும் மஹா விஷ்ணுவுக்குங்கூட அவர்களுடைய நாமத்துக்கு முன்னாடி நம்முடைய நமஸ்காரம் இருக்கிறது. எங்கே?

அவர்களுடைய மந்த்ரங்களான பஞ்சாக்ஷரீ, அஷ்டாக்ஷரீகளில்தான். [சிவ பஞ்சாக்ஷரீயில்] முதலில் "நம:", அப்புறமே ஈச்வர நாமாவைச் சொல்லும் "சிவாய". [நாராயண அஷ்டாக்ஷரீயில்] முதலில் "நமோ", அப்புறமே விஷ்ணு நாமாவைச் சொல்லும் "நாராயணாய".

நாங்கள் [துறவிகள்] நமஸ்காரத்தை நாராயணனுக்கே ஸமர்ப்பித்தாலும் பரமேச்வரனும் நமஸ்கார ப்ரியன்தான். 'அபிஷேகப்ரியன்' என்று பொதுவில் சிவனைச் சொல்வது. மஹா விஷ்ணுவை 'அலங்கார ப்ரியன்' என்பார்கள். [சிரித்து] சிவன் 'மடிப் பார்ப்பான்'! ஓயாமல் முழுகிக் கொண்டு! பெருமாள் ராஜாதிராஜனாக லோக பாலனம் பண்ணுவதால் கிரீட, குண்டல, வஸ்த்ர, பூஷணாதிகளால் ராஜ அலங்காரம் பண்ணிக் கொள்பவன்.... ஈச்வரன் நமஸ்கார ப்ரியனுந்தான் என்று சொல்லவந்தேன். 'ஸ்ரீருத்ரம்' என்று ப்ரஸித்தமாக வேதம் அவனை ஸ்துதிப்பதில் ஒரே 'நமோநம' மயமாகவே இருக்கும். அதற்கு 'நமகம்' என்றே ஒரு பெயர்....

Koviloor Digital Library

துறவிக்கு அபிவாதனம் கூடாது

அபிவாதன ஸமாசாரத்தில் இருந்தோம். அதை நான் சொன்னதற்குக் காரணம்—எங்களுக்கு அபிவாதனம் சொல்லித்தான் நமஸ்காரம் பண்ணணும் என்பதாகவே இருக்கும் என்று யாராவது நினைத்தால், அதுதான் இல்லை என்று காட்டவந்தேன். முன்னேயே காட்டியதைக் கொஞ்சம் 'ஆலாபனை' செய்கிறேன்: ஸந்நியாஸிக்கு நமஸ்காரம் பண்ணும்போது அபிவாதனம் சொல்லக் கூடாது என்று சாஸ்திரம் இருப்பதைச் சொன்னேன்.

அதற்கும் முன்னேயே சொன்னேன், ஸந்நியாஸி நிர்நமஸ்காரனும், நிராசீர்வாதக்காரனும் என்று. இவனுக்கு நமஸ்காரம் என்பதே ஜன ஸமுதாயத்தின் 'ஸென்டிமென்'டை 'ரெஸ்பெக்ட்' பண்ணிப் போனால் போகிறதென்றுதான் 'அலவ்' பண்ணியிருக்கிறது என்றும் சொன்னேன்.... சொன்னேனோ, சொல்லவில்லையோ? இப்போது சொல்கிறேன்.

தன்னை நமஸ்கரிக்கிறவன் யார், என்ன என்பதைப் பற்றி நினைக்காமல், ஒரே நினைப்பு ஆத்மாவைப் பற்றிய தாகத்தான் ஸந்நியாஸி இருக்க வேண்டும் என்பதாலேயே இப்படி வைத்தது. தன்னை வந்தனை பண்ணுபவன்—நிந்தனை பண்ணுபவனுந்தான்—எவனானால் என்ன என்று உதாஸீனமாகவே இருக்க வேண்டியவன் ஸந்நியாஸி.

குரு பீடத்தில் இருக்கிற எங்களுக்கும் ஸந்நியாஸ வேஷம் இருப்பதால் [நமஸ்கரிப்பவர் அபிவாதன வாசகம் சொல்லக்கூடாதென்ற] அந்த 'ரூல்' இங்கேயும் அமல் செய்யப்படுகிறது.

தெரியாத்தனத்தால் எனக்குச் சில பேர் நமஸ்காரம் பண்ணினவிட்டு "அபிவாதயே" என்று ஆரம்பிப்பார்கள். உடனே, கூட இருப்பவர்கள், "கூடாது, கூடாது!" என்று

Koviloor Digital Library

சத்தம் போட்டுக்கொண்டு தடுப்பார்கள். எனக்குச் சிரிப்பாக வரும். ஏனென்றால்: அந்த அபிவாதனத்தில் வருகிற நல்ல நல்ல விஷயங்கள் — ரிஷிகளின் பெயர், கோத்ரப் பெயர், ஸூத்ரப் பெயர், வேதப் பெயர் என்ற நல்ல விஷயங்களே — ஸந்நியாஸிக்கு அவச்யமில்லைதான் என்று சாஸ்திரத்தில் தடை போட்டிருக்கிறது. ரூலாக இருப்பதை infringe பண்ணினால் [மீறினால்] பாபம் என்று இங்கேயும் அமல்படுத்துகிறோம்... ஸரி! ஆனால், நான் என்ன பண்ணுகிறேன் என்றால், அந்த அபிவாதனத்தில் சொல்லப்படும் நல்ல விஷயங்களைத் தெரிந்து கொள்ளாமல் விட்டு விட்டு, நமஸ்காரம் பண்ணுபவர் களைப் பற்றிய ஊர் அக்கப் போர் அத்தனையும் விசாரித்துத் தெரிந்து கொள்கிறேன்! ரிஷி ப்ரவரம் வேண்டாம் என்று விட்டுவிட்டு, நமஸ்காரக்காரனின் மாமா யார், தாத்தா யார், அடுத்தாத்துக்காரன் யார், ஆஃபீஸர் யார், எப்பவோ அவன் பார்த்த வேலை என்ன, இருந்த ஊர் என்னென்ன என்று ஜாடா விசாரித்துத் தெரிந்துகொள்கிறேன்! அவர்கள் ரிஷி உறவு, வேத உறவு சொல்வதையெல்லாம் 'வேண்டாம்' என்று வைத்துவிட்டு, யாரையாவது ஒருத்தரைச் சொல்லி அவருக்கு எத்தனையோ சுற்றி வளைத்து இவனுக்கு உள்ள உறவை நானாகவே வேறே சொல்லி, அப்படித்தானா என்று நிச்சயப்படுத்திக் கொள்கிறேன். ஞான த்ருஷ்டி, அபார ஞாபக சக்தி, அது, இது என்று ஸ்தோத்ரமும் ஸம்பாதித்துக் கொள்கிறேன்!

Formal-ஆகக் கேட்டுக் கொள்ளாத, கோத்ர - ஸூத்ராதி அபிவாதன ஸமாசாரங்களையும் informal-ஆகக் கேட்டுத் தெரிந்து கொள்ளத்தான் செய்கிறேன்.

என்ன பண்ணலாம்? சிஷ்யர்கள் என்று மடத்தை அபிமானித்துக் கொண்டு அதனால் தாங்கள் பெற

Koviloor Digital Library

வேண்டிய தர்மரக்ஷையை ஜனங்கள் பெற்றுக் கொண்டு, தங்களால் அது பெறவேண்டிய த்ரவிய ரக்ஷையை அதற்கு தந்து, இப்படியாகப் பரஸ்பரம் மடமும் ஜனஸமூஹமும் போஷித்துக் கொண்டு வளர வேண்டுமானால் ஜனங்களுக்கு மடத்திடம் அந்த அபிமானத்தை, பற்றுதலை ஏற்படுத்தித் தருகிறதற்காக அங்கே ஸ்வாமிகள் என்று உட்கார்த்தி வைக்கப்பட்டிருப்பவர் அவர்களுடைய ஸமாசாரங்களில் இன்ட்ரஸ்ட் காட்டி, ப்ரியமாகப் பழகத்தான் வேண்டும். மடாதிபதி விட்டேற்றியாயிருந்தால் சிஷ்யர்களுக்கு மடத்திடம் எப்படி ஒட்டுதல் உண்டாகும்? அவர்களும் விட்டேற்றியாக, விட்டு விட்டுப் போய் விடுவார்கள்.

இப்படிச் சொன்னால், "கார்யார்த்தமாகத்தான் இந்த ப்ரியமான விசாரிப்பா?" என்று நினைத்துவிடக்கூடாது. மடாதிபதி என்று இருக்கிறவனுக்கு மடத்தின் லக்ஷ்யத்தில் — ஜனங்களுக்கு தர்மங்களை எடுத்துச் சொல்வது என்பது தானே லக்ஷ்யம்? அதில்—நிஜமான ஈடுபாடு இருந்தால் ஸ்வபாவமாக அவனுக்கு சிஷ்யலோகத்திடம் ஒரு அக்கறையும் பரிவும் ப்ரியபாவமும் உண்டாகத்தான் செய்யும். அதாவது கார்யார்த்தம், காரணார்த்தம் என்றெல்லாம் இல்லாமலே இயற்கையாகவே உண்டாகும் என்கிறேன்.....

அஞ்ஜலி (கும்பிடு), கைகுலுக்கல்

கழி மாதிரி அஷ்டாங்கம் பூமியில் பட விழுவது, கபந்தமும் முழங்கால் வரையிலும் வளையப் பஞ்சாங்கம் மட்டும் பூமியில் பட நமஸ்கரிப்பது, முழங்காலும் புறங்காலும் மட்டும் பட மண்டி போடுவது — அப்போது தலையையும் வணக்குவது, நின்றுகொண்டே ஸல்யூட் அடிப்பது — அதாவது ஒரு கையை மட்டும் வணக்குவது

Koviloor Digital Library

என்றிப்படிப் பலவித அபிநயங்களால் மரியாதையை வெளிப்படுத்துவதைச் சொன்னேன்.

இதுகளோடு முக்யமான இன்னொன்றைச் சொல்ல வேண்டும். அதுதான் இந்த இந்தியா தேசம் பூராவிலும் ஸகலமான பேரும் ஸகலமான பேருக்கும் பண்ணுவதாக இருக்கிறது. வெளிதேசத்தவர்கள்கூட இங்கே வந்தால் அப்படிச் செய்கிறார்கள். மரியாதை பண்ணுவதற்கு மட்டுமில்லாமல், அவ்வளவுக்கு ஸ்தானமில்லாதவர்களுக்கும் வாழ்த்தை, நல்லெண்ணத்தைத் தெரிவிக்கும் ஸங்கேதமாக அது ஆகியிருக்கிறது.

இரண்டு கையையும் சேர்த்துக் குவிப்பதைத்தான் சொல்கிறேன்.

'அஞ்ஜலி' என்பது அதைத்தான். 'அஞ்ஜலிஹஸ்த' மாக என்று புஸ்தகங்களில் நிறைய வரும்.

தமிழில் 'கும்பிடு'. "கும்பிடறேன் சாமீ!" என்றுதான் இங்கே பொது ஜனங்கள் சொல்கிறார்கள். "சாமி கும்பிடுடா" என்கிறார்கள். ஏதாவது கார்யம் நடக்கணுமென்று நைச்யமாக வேண்டிக் கொள்ளும் போது, "கையெடுத்துக் கும்பிடறேன்" என்கிறார்கள். "கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது" என்கிறோம். இப்படி உச்ச ஸ்தானத்துக்குச் செய்கிற அஞ்ஜலியே ஸகலருக்கும் நல்லெண்ணத்தைத் தெரிவிக்கும் ஸங்கேதமாகத் தற்போது ப்ரபலமாகி வருகிறது. இப்போதுங்கூட வயஸாலோ, ஸ்தானத்தாலோ தங்களைவிடக் கொஞ்சம் மேலே இருப்பவர்களைப் பார்த்தவுடன் ஒருவர் முதலில் அஞ்ஜலி பண்ணுகிறார். அப்புறமே அதற்கு 'ரிடர்'னாக மற்றவரும் அதையே பண்ணுகிறார். அதோடு வடக்கத்திக்காரர்கள் "நமஸ்தே" என்று வாயாலும் சொல்வது வழக்கம். இங்கே அவ்வளவு ஜாஸ்தி வழக்கத்திலில்லா விட்டாலும் "வணக்கம்" சொல்வதாகக் கேள்விப்படுகிறேன்.

Koviloor Digital Library

சிறு வயஸுக்காரர்கள், யுவாக்கள் ஒருத்தரை யொருத்தர் இப்படி greet செய்துகொள்வதாகத் தெரியவில்லை. இவர்கள் தங்களைவிடப் பெரியவர்களுக்கே அஞ்ஜலி செய்கிறார்கள். மத்திமப் பிராயத்தில் ஓரளவுக்கு மேலே போனவர்களிலிருந்து ஸமவயஸுக்காரர்களும் பரஸ்பரம் அஞ்ஜலி பண்ணிக் கொள்கிறார்கள்.

தன்னுடைய இரண்டு கையையும் சேர்த்துக் குவிக்கிற இந்த முறைக்கு வித்யாஸமாக வெள்ளைக்காரர்களிடம் இதைவிடவும் பரவலாகச் சின்னவர், பெரியவர் வித்யாஸமில்லாமல் ரொம்பப் பரவலாக உள்ள greeting–அபிநயம் தன்னுடைய வலது கையை மற்றவரின் வலது கையோடு சேர்த்துக் குலுக்குவதாக இருக்கிறது. Shaking hands–தான் ஒருத்தரையொருத்தர் ஸந்திக்கும் போது பண்ணும் goodwill gesture என்று [சிரித்து] common courtesy–ஆக இருக்கிறது. மரியாதை ஸ்தானத்திலுள்ளவர்களுக்கும் ஸல்யூட், மண்டி போடுவது முதலானதைப் பண்ணிவிட்டுக் கைகுலுக்குகிறார்கள். ஸமஸ்தான, கீழ்ஸ்தானக்காரர்களானால் முதலில் கை குலுக்கிவிட்டு அப்புறம் கட்டிக் கொள்வது, முத்தம் கொடுத்துக் கொள்வது என்றெல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நம் தேசத்தில் கைகுலுக்குவதும், முத்தம் கொடுப்பதும் வழக்கமில்லை. என்றாலும் கட்டிக் கொள்ளும் வழக்கம் வட தேசத்திலே இருக்கிறது. தெற்கே ஸதாசாரம் அவ்வளவுக்கு இடம் கொடுக்கமாட்டேன் என்கிறது. எல்லோருமே மடியாக இருந்த ஆதிகாலத்தில் தேசம் முழுக்க ஒவ்வொரு பாலாரும் அந்தந்தப் பாலாரைக் கட்டிக் கொண்டு ஆலிங்கனம் செய்துகொள்ளும் வழக்கம் இருந்திருப்பதைப் பழைய இலக்கியங்களிலிருந்து தெரிந்து கொள்ளமுடிகிறது. ஸஹோதரர்கள், ஸ்நேஹிதர்கள்

Koviloor Digital Library

ஆலிங்கனம் செய்து கொள்வதாக நிறையப் பார்க்கிறோம். இதிலே கொஞ்சம் மூத்தவர்கூட இளையவரை மடி மேலேயே உட்கார்த்தி வைத்துக் கொள்கிறது, உச்சி மோந்து பார்ப்பது என்றெல்லாமும் பார்க்கிறோம்.

முத்தம் கொடுக்கிற வழக்கம் நம்மிடம் என்றுமே யில்லை. எச்சல்-துப்பல் பார்க்கிற நம்முடைய உசந்த ஆசாரத்திலே, கலாசாரத்திலே அதற்கு இடம் கொடுக்க வில்லை.

கையைப் பிடித்துக் குலுக்கும் வழக்கமில்லா விட்டாலும் கையோடு கை சேர்த்துக் கொள்வதுண்டு. இரண்டு கையையும் நீட்டி, மற்றவர்களின் இரண்டு கையையும் பிடித்துக் கொண்டு 'வா' சொல்லி வரவேற்பது உண்டு. "கை நீட்டி வரவேற்றார்" என்கிறோம். "கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு போவது" என்கிறோம்.

ஸ்ரீராமசந்த்ர மூர்த்தி ஸுக்ரீவனோடு ஸக்யம் பண்ணிக் கொண்ட [நட்புப் பூண்ட] கதை ராமாயணத்தில் வருகிறதோல்லியோ? அங்கே முதலில் ஸ்வாமியை ஸுக்ரீவன் பார்த்தவுடன்,

"ரோசதே யதி வா ஸக்யம் பாஹுரேஷ ப்ஸாரித: |
க்ருஹ்யதாம் பாணினா பாணிர்–மர்யாதா பத்யதாம்
த்ருவா ||*

"என்னோடு ஸக்யம் பண்ணிக்கொள்ள இஷ்டப் பட்டீர்களானால், இதோ என்னுடைய நீட்டிய கை! அந்தக் கையை உங்கள் கையால் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் மர்யாதா கெட்டியாகக் கட்டுப் போட்டாற் போல ரக்ஷிக்கப்படட்டும்" என்று சொன்னதாக வருகிறது. 'மர்யாதா'வைத்தான் நாம் 'மரியாதை' என்கிறோம். ரெஸ்பெக்டைக் குறிப்பிட அந்த வார்த்தையைத்தான்

* ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், கிஷ்கிந்தா காண்டம் 5.12.

Koviloor Digital Library

நானும் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் நாம் [தமிழர்கள்]தான் இப்படி அர்த்தம் செய்கிறோம். மூலத்தில் [மர்யாதா என்ற] அந்த வார்த்தைக்கு அப்படி அர்த்தமே இல்லை. 'முறைப்படுத்திய எல்லை' என்றுதான் அர்த்தம். எல்லைப்படுத்தப்பட்ட, அதாவது வரையறை செய்த நெறிமுறை, விதி, நாகரிக நடவடிக்கையின் வரைமுறை என்றெல்லாமும் இரண்டாம் பக்ஷமாக அர்த்தமுண்டு. இதில் கடைசியில் சொன்னதைக் கொஞ்சம் உசத்தித்தான் நாம் மரியாதை என்றாலே ரெஸ்பெக்ட் என்று வைத்துக் கொண்டிருக்கிறோம் போலிருக்கிறது. இவற்றோடு இன்னொரு அர்த்தமும் ஸம்ஸ்க்ருதத்தில் உண்டு: ஒப்பந்தம், உடன்படிக்கை என்கிறோமே, அதுவும் 'மர்யாதா'தான். இங்கே, "கெட்டியான உடன்படிக்கை யாகவே நாம் நம்முடைய ஸக்யத்தை – நட்பை – கட்டுப்படுத்தி ரக்ஷிப்போம்" என்ற அர்த்தத்தில்தான் ஸுக்ரீவன் அந்த வார்த்தையைப் போட்டுப் பேசுவது. அதற்கேற்பவே அப்புறம் அக்னிஸாக்ஷியாகவே ப்ரமாண பூதமாக — அதாவது 'அதிகாரபூர்வமாக' என்கிறார்களே அப்படி — அவர்கள் ஸ்நேஹ உடன்படிக்கை செய்து கொள்கிறார்கள். அந்த விஷயங்கள் இருக்கட்டும். நமக்கு விஷயம், ஸுக்ரீவன் ராமரிடம் கையோடு கை பிடித்துக் கொள்ளும்படி கேட்கிறான் என்பது. அவரும் உடனே ஸந்தோஷமாக தம்முடைய கையால் அவன் கையைப் பிடித்துக் கொண்டார் — '[ஸம்ப்ரஹ்ருஷ்டமனா] ஹஸ்தம் பீடயாமாஸ பாணிநா'. உபன்யாஸகர்கள் இதைச் சொல்லி, "கையைப் பிடித்துக் கொள்கிறது வானர ஜாதி வழக்கமாகவே இதிலிருந்து தெரிகிறது. ஒராங்-உடானி லிருந்தே [மனிதக் குரங்கிலிருந்தே] மநுஷ்ய ஜாதி உண்டாயிற்று என்பவர்கள் தங்களுடைய அந்த மூதாதைகளின் வழக்கத்தைத்தான் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று பரிஹாஸம் செய்வதுண்டு. பரிஹாஸம் கூடாது. ஒவ்வொரு தேசாசாரம், அந்தந்த

Koviloor Digital Library

ஜனங்களின் பக்(கு)வ ஸ்திதி என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

கைதான் கார்யங்களைச் செய்வதில் ப்ரதானமான கருவி. ஆனபடியால் மற்றவனுக்கு ஆனதையெல்லாம் தான் செய்யத் தயார் என்று காட்டவும், மற்றவனுக்குத் தெரியாமல் தான் கையில் ஆயுதம் மாதிரி எதுவும் ஒளித்து வைத்துக் கொள்ளவில்லை என்று காட்டவுமே பரஸ்பரம் கைகளை இப்படிச் சேர்த்துக் கொள்வது என்பதாக பாவத்தையொட்டி ஒரு க்ரியை மேல்நாடு, கீழ்நாடு எல்லாவற்றிலும் ஏற்பட்டிருக்கிறது என்று அறிவாளிகள் சொல்கிறார்கள். **"காரியம் யாவினும் கை கொடுத்து"** என்று அடிக்கடி கேள்விப்படுகிறோமல்லவா? "அவருக்கு இவர் தான் right hand" என்று சொல்லும்போதும் இதே தாத்பர்யந்தான்.

பெரியவரானால் சின்னவரின் கையைப் பிடித்துக் கொண்டு, காப்பாக இருந்துகொண்டு நல்லவழியில் அழைத்துக் கொண்டு போகிறது. சின்னவரானால் பெரியவரின் பாதத்தைப் பிடித்துக் கொண்டு, "நீரே கதி" என்று கிடப்பது. அவர் நடக்கிறபோது, தள்ளாட்டமில்லா மலிருப்பதற்காகக் கையைப் பிடித்துக்கொண்டு போவதும் தான்!

மற்றவர் பாதத்தைத் தொட்டு நமஸ்காரம் பண்ணுவது — தொட்டே தீர்வது என்று பிடிவாதமாக அப்படிப் பண்ணுவது — வடதேசத்தில் இன்றைக்கும் இருக்கிற மாதிரி தெற்கே இல்லை என்றேன். அதே மாதிரி கட்டிக்கொள்கிற வழக்கமும் வடதேசத்தில் இப்போதும் வழங்குகிறாற்போல நம் பக்கத்தில் இல்லை.

காரணம்: போகப் போக, கலி வளர்ந்து கொண்டே போவதில் ஜனங்களின் மனஸ், வெளி லோகம்

Koviloor Digital Library

இரண்டிலுமே அசுத்தம் ஜாஸ்தியாகிக் கொண்டு வந்திருக்கிறது. அந்த மாதிரி ஆகும்போது ஒருத்தரோடு ஒருத்தர் சரீர ஸ்பர்சம் ஏற்பட்டால் அவர்களில் சுத்தி குறைந்தவரின் தோஷம் மற்றவரையும் கொஞ்சம் பாதித்து விடும். ரொம்பவும் நெருப்பாக உள்ள சுத்தாத்மாக்களின் விஷயத்தில் மட்டுந்தான் இவர்களுடைய பரிசுத்தம் மற்றவரின் அசுத்தியை அமுக்கிப்போட்டு சுத்தி செய்வது. மற்ற எல்லார் விஷயத்திலும் அசுத்தக்காரன்தான் மற்றவனை பாதிப்பது. ஒரு தொத்து வியாதிக்காரன் பல ஆரோக்யசாலிகளுக்கும் தன்னுடைய ரோகத்தை உண்டாக்குகிறானே தவிர, எத்தனை ஆரோக்யசாலிகளா லும் வியாதிக்காரனுக்குத் தங்களுடைய ஆரோக்யத்தை ஊட்ட முடியவில்லையே! ஒரு அழுகல் பழம் கூடைப் பழம் முழுதையும் அழுகப் பண்ணுகிற மாதிரி அந்தப் பழங்களால் அழுகலை ஸரிப்பண்ண முடியவில்லையே! அப்படித்தான் ஒருத்தனின் துராசார ஸ்பர்சந்தான் மற்ற ஸதாசார சீலரையும் விழுப்பாக்கிவிடுகிறது. இதைக் கண்டு கொண்ட தக்ஷிண தேசத்து ப்ராம்மணர்கள் personal purity-ஐ — இதுவும் ஒரு தினுஸான personal hygiene தான் அதை — ரக்ஷித்துக் கொள்ள வேண்டும் என்று தொட்டுக் கொள்வது, கட்டிக் கொள்வது முதலானவற்றை விலக்கி விட்டார்கள். சரீர ஸ்பர்சமில்லாமல் விலகியிருந்தாலும் ப்ரியத்திற்குக் குறைச்சலில்லை. ஸ்பர்சத்தைவிட ஸ்பர்சமில்லாமலே வெளியிடுகிற radiation-கே ஜாஸ்தி வால்யூ*. அதெப்படி என்றால், ஜலமே நெருப்பின் மேலே படுகிற மாதிரிக் கொட்டினால் நெருப்பு அணைந்து போய்விடுகிறது. அதுவே ஜலமும் அக்னியும் ஒன்றை

* ஸ்ரீசரணர்கள் தம்மைத் தீண்டாத் திருமேனியாகவே காத்துக் கொண்டதற்கே இங்கு விளக்கமளித்துக் கொண்டதாகக் கொள்ளலாம்.

Koviloor Digital Library

யொன்று தொட்டுக் கொள்ளாமல் அடுப்பின் மேல் பாத்ரம் வைத்து ஜலத்தை வைத்தால் அக்னியின் உஷ்ணம் ஜலத்துக்குள் போகிறதோல்லியோ?

எப்போதுமே ப்ராஹ்மண ஆசாரத்தைத்தான் ஏனைய ஸகல ஜனங்களும் மதித்து ஏற்றுக்கொண்டு, முடிந்தமட்டும் தாங்களும் அப்படிப் பண்ணிப் பார்ப்பதாக நடந்து வந்திருக்கிறபடியால், தக்ஷிணத்தில் பொதுவாகவே ஒருத்தருக்கொருத்தர் சரீர ஸ்பர்சம் என்பது வழக்கிலில்லா மலாகிவிட்டது.

ஏன் தக்ஷிண தேசத்து ப்ராஹ்மணர்கள் மாத்திரமே இந்த மாதிரிச் செய்யவேண்டும், வடக்கத்திக்காரர்கள் ஏன் செய்யவில்லையென்றால் — அலெக்ஸாண்டர் நாளிலிருந்து அங்கேதான் பல்வேறு அந்நிய தேசத்தார்கள் ஒருத்தர் மாற்றி ஒருத்தர் வந்து பலமாக மோதி, அங்கேயே ஸெட்டில் ஆனது. ஆனபடியால் நடை, உடை, பாவனை என்று எல்லாவற்றிலுமே அங்கே foreign influence ஜாஸ்தி ஏற்பட்டுவிட்டது. அந்த அந்நிய தேசஸ்தர் எல்லாருமே தொட்டுக் கொள்கிற, கட்டிக் கொள்கிற கலாசாரத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

அவர்கள் விஷயத்தில் அது கலாசாரமானாலும், மந்த்ர ரக்ஷணம் முதலான பொறுப்புள்ள நம்மவர்களுக்கு அநாசாரத்தோடுதான் சேரும். தப்பாக நினைக்கப்படாது: ஆஸ்பத்திரியிலிருந்து ஆஸ்ட்ரோனாட் வரை இன்றைக்கும் 'ஐஸொலேட்' செய்து வைக்கிற அதே ப்ரின்ஸிபிளை ஆத்ம ஸம்பந்தப்படுத்தியிருப்பதே இந்த ஆசார முறை.

ரொம்பவும் சக்திமான்கள் விஷயத்திலும், ரொம்பவும் அன்போ, அருளோ வெளிப்படும் போதும் விலக்கு உண்டு.

த்யான-யோகாதிகளில் கொஞ்சம் ஆழமாகப் போன மேல்நாட்டு அநுபவிகளும் சரீர ஸ்பர்சம் அவ்வளவு

Koviloor Digital Library

நல்லதல்ல, அவச்யமுமல்ல; கெட்டதை நல்லதாக்குவதை விட நல்லதைக் கெட்டதாக்குவதாகவேதான் அது ஆகிறது என்று சொல்கிறார்கள்.

ஸைகாலஜிஸ்ட்கள்கூட, கட்டிக் கொள்வது முதலானவை animal–impulse-ல் — மிருகவர்க்கங்களுக்கு உள்ள இயற்கையான வேகத்தில் — சேர்ந்தவைதான் என்கிறார்கள்.

இரு புனிதக் கைப்பிடித்தல்கள்

மிருக இயற்கையான பசுதர்மம் என்பதைக் கூட, ஸ்த்ரீ-புருஷ ஸம்பந்தத்தையேகூட ரொம்பவும் சக்தியுள்ள மந்த்ரங்களின் பலத்தினால் பரிசுத்தப்படுத்தி வைதிக ஸம்ஸ்காரங்களாகத் தந்திருக்கிற அஸாதாரணமான பெருமை நம்முடைய மதத்துக்கு உண்டு. அந்த ரீதியிலே கரஸ்பர்சத்தையும் — வெறும் ஸ்பர்சமில்லை; கெட்டியாகவே பிடித்துக் கொள்வதை — பரிசுத்தி செய்வதாக இரண்டு உசந்த ஸம்ஸ்காரங்களில் மட்டும் பார்க்கிறோம்.

ஒன்று பாணிக்ரஹணம் — விவாஹ ஸம்ஸ்காரத்தில் முக்ய ஸ்தானம் பெறுகிற கர்மா. மற்றது.....

[இப்பகுதிக்கு ஆதாரமான உரையாடலின்போது உடனிருந்தவர்கள் ஒவ்வொருவரையும் ‘தெரியுமா?’ என்ற கேள்விக் குறியுடன் பார்க்கிறார். அவர்களும் கேள்விக் குறியுடனேயே விடையை அவரிடமிருந்தே எதிர்பார்க்க, சிரித்தபடித் தொடர்கிறார்.]

உபநயனந்தான். அநேகமாக இங்கே உள்ள எல்லோருக்குமே உபநயனமாகியிருக்கிறது. அப்போது இந்த [சிரித்து] ‘பாணிக்ரஹண’மும் நடந்துதானிருக்கிறது. ஆனாலும் எதனாலோ விவாஹத்தில் பாணிக்ரஹணம்

Koviloor Digital Library

முக்யம் என்று தெரிந்திருப்பதுபோல் உபநயனத்திலும் இருக்கிறது என்று தெரியக் காணோம்! விவாஹத்தின் 'பர்பஸ்' தாம்பத்யம்தான் என்று நினைத்துக் கொண்டு — வாஸ்தவத்தில் வேதப்படி ஸ்வதர்ம-கர்மாநுஷ்டானம் பண்ணுவதற்கு ஒரு ஸகியைத் துணை சேர்த்துக் கொள்வது தான் பர்பஸ் என்பதை மறந்து தாம்பத்ய ஸௌகத்துக்காகத் தான் அது என்று நினைத்துக் கொண்டு — ஆகக்கூடி, ஏதோ ஒரு விதத்தில் விவாஹ ஸம்ஸ்காரம் ஆனபின் அதனுடைய உத்தேசத்தைத் தாங்கள் நிஜமாகவே பூர்த்தி செய்வதாக எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பதால்தான் அதில் நடக்கிற பாணிக்ரஹணத்தைக் கவனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. அதிலே ச்ருங்கார ரஸமும் இருப்பதாகத் தப்பாக நினைத்துக் கொண்டிருப்பது காரணமாயிருக்கலாம்.

உபநயன லக்ஷ்யமான ப்ரஹ்மசர்ய தர்மங்களையோ, அதாவது சுத்தனாக இந்த்ரிய நிக்ரஹத்துடன் இருந்து கொண்டு, ஆசார்யனுடனேயே வஸித்துக் கொண்டு, அவனுக்கு ஸேவை செய்துகொண்டு வைதிக வித்யையை அப்யஸிப்பது, பிக்ஷாசர்யம் செய்வது [பிக்ஷையெடுத்து உண்பது] ஆகிய தர்மங்களையோ செய்வதான அபிப்ராயம் தற்போது எவருக்கும் லவலேசங்கூட இல்லாததால் அதற்கான [உபநயன] ஸம்ஸ்காரத்திலுள்ள அங்கங்களைப் பற்றியும் கவனமில்லாமல் ஆகியிருக்கிறது. அதனால்தான் இதிலேயும் ஒரு பாணிக்ரஹணம் இருப்பது ஒரு விஷயமாகவே எவர் மனஸிலேயும் நிற்கவில்லை.

விவாஹத்தில் வரன் [மணமகன்] வதூவின் [மணமகளின்] கையைப் பிடிக்கிறாற்போலவே உபநயனத்திலும் ஆசார்யன் — அவன்தான் ஒரு பையனுக்கு உபநயனம் பண்ணுவித்து அப்புறம் அவனைத் தன் குருகுலத்தில் தன்னோடேயே வைத்துக்கொண்டு

Koviloor Digital Library

வேதாப்யாஸம் பண்ணப் போகிறவன்;' தற்காலத்தில் உப்புக்குச் சப்பாணியாக உபநயனம் என்று ஒரு 'ஷோ' பண்ணுவதில் காயத்ரி அநுஷ்டானமேயில்லாத அப்பாக்காரன்தான் அந்த ஆசார்யன். அப்படிப்பட்டவன் — வடு (vatu) என்கிற உபநயனப் பையனின் கையைப் பிடிக்கவேண்டும்.

உபநயனத்திலே அநேக தேவதைகளே தனக்குள்ளே இருந்துகொண்டு தன் கைப்பிடிப்பினால் வடுவின் கையைப் பிடித்துக்கொண்டு ரக்ஷிக்கிறார்கள் என்று ஆசார்யன் சொல்லி அவனை தேவதைகளிடம் ஒப்படைப்பதாக மந்த்ரம் சொல்கிறார். விவாஹத்தில் வதூவை அநேக தேவதைகளே தனக்குக் கொடுத்திருப்ப தாக வரன் சொல்லி தாங்களிருவரும் க்ருஹஸ்த தர்மத்தை நன்றாக அநுஷ்டிப்பதற்காக தேவதா ப்ரஸாதத்தை ப்ரார்த்திக்கிறான். இரண்டிலும் அடிப்படைக் கருத்தும் லக்ஷ்யமும் ஒன்றேதான். அதாவது: அந்தந்த ஆச்ரமத்திற்கான தர்மத்தைப் பரமேச்வரனே தேவதைகள் என்ற தன்னுடைய அதிகாரிகளின் மூலம் ஒரு ஜீவனுக்குக் கொடுத்திருக்கிறான். இவன் பக்தியுடன் உபாஸித்தால் அந்தந்த தர்மத்தை முறைப்படி ரக்ஷிப்பதற்கு அந்த தேவதைகள் கை கொடுத்து, அதன் மூலம் ஆத்ம லக்ஷ்யத்தில் அவன் முன்னேறுகிறதற்கு கையைப் பிடித்து அதாவது, பாணிக்ரஹணம் பண்ணிக் கொண்டு அழைத்துப் போகிறார்கள்; வழிநடத்திப் போகிறார்கள் என்பதே பொதுவான அடிப்படையும் லக்ஷ்யமும்.

'புருஷ ப்ரஜைக்கு உபநயனம் எப்படியோ அப்படியேதான் ஸ்த்ரீ ப்ரஜைக்கு விவாஹம்' என்பதற்கு இது போன்ற அம்சங்கள் நிரூபணம். ஒரு ஆண் குழந்தை குருவிடம் சரணாகதி செய்து அவன் கைப்பிடிப்பில் லக்ஷ்ய மார்க்கத்தில் போகிறதுபோலவே ஒரு பெண் குழந்தை பதி

Koviloor Digital Library

என்ற குருவின் மூலம் பண்ணவேண்டும் என்பதுதான் சாஸ்த்ர அபிப்ராயம்.

இந்த இரண்டிலுமே, shake–hand–ல் போல் பரஸ்பரம் இரண்டு பேருமே ஒருத்தர் கையை மற்றவர் பிடித்துக் கொண்டிருப்பதாக இல்லை. ஆசார்யன்தான் — உபநயனத்தில் ஆசார்யன் என்றே இருப்பவர்; விவாஹத்தில் வரன் என்ற பெயரில் உள்ள ஆசார்யன்; அவனொருத்தன் தான் — அந்த வடுவின் கையையும், வதூவின் கையையும் தன் கையால் அழுந்த மூடிக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருப்பவன். அங்கே [கை குலுக்கலில்] ஸமத்வம்; அதனால் பரஸ்பரம் ஒரே போலப் பண்ணுவது. இங்கேயோ [உபநயன, விவாஹங்களிலோ] சரணாகதி; சிஷ்யனாக உள்ள வடுவும், சிஷ்யையாக உள்ள வதூவும் விநயமாக் கீழ் ஸ்தானத்திலிருந்து கொண்டு சரணாகதி செய்து, தன் செயலே இல்லை என்று இருக்கிறவர்கள். தன் செயலே இல்லாததால் பதிலுக்குக் கையைப் பிடித்துக் குலுக்குகிற கார்யமும் இல்லை! மனோ-வாக்-காயங்களை குருவுக்கே அர்ப்பணிப்பதற்கு அடையாளமாகக் கார்யத்திற்கெல்லாம் கருவியாயுள்ள கையை, ஆசார்ய ஸ்தானத்திலிருக்கிறவரிடம் ஒப்புவித்துவிட்டு அதைச் சும்மாயிருக்க விடுகிறார்கள். சரணாகதனை ரக்ஷித்துப் பூர்ணமாக அங்கீகரித்துக் கையைப் பிடித்து வழி நடத்திப் போவதற்கு அடையாளமாக ஆசார்யனே, அவன் மட்டுமே, சிஷ்ய ஜீவனின் கையைப் பிடித்துக் கொள்கிறான்.

கைப்பிடியும் தண்டமும்; பெண்கள் விஷயம்

சிஷ்யனின் கையைப் பிடித்துக் கொண்டே ஆசார்யன் எப்பவும் இருப்பது என்றால் முடியுமா? அதனால் அவன் கைப்பிடிக்குத் தன் ஸ்தானத்திலேயே

Koviloor Digital Library

தண்டத்தைக் கொடுக்கிறான். மனஸடக்கம், பிரம்மசர்யாதி நியமத்திற்குத்தானே முக்யமாக ஆசார்யன்? அதற்குச் சின்னம்தான் தண்டம். அதோடு புத்தியில்-மனஸில் ஏற்றிக் கொண்ட வித்யையையும் மந்த்ரத்தையும் உள்ளே உறுதியாக ஸ்திரப்படுத்துகிற தாரணா சக்தியையும் அது தருகிறது. ப்ரஹ்மசாரிக்கு புரசைத் தண்டம், ஸந்நியாஸிக்குக் கல் மூங்கில் தண்டம் என்று வைத்தது அததற்கு முறையே ப்ரஹ்மசர்ய, ஸந்நியாஸ ஆச்ரமங்களுக்கு அவச்யமான விஷயங்களை ரக்ஷித்துக் கொடுப்பதில் இருக்கிற ஸூக்ஷ்ம சக்தியினால்தான்!

சிஷ்யை ஸ்தானத்திலுள்ள பத்னிக்குத் தண்டம் சொல்லவில்லையே என்றால், அங்கேதான் ஸ்த்ரீகளுடைய பாதிவ்ரத்ய பெருமை இருக்கிறது. பதியென்று ஒருத்தனைக் காட்டியவுடனே அவனிடத்திலே அப்படியே மனஸை ஒப்புக்கொடுத்து சரணாகதி பண்ணும் உத்தம குணம் ஒரு பெண்ணுக்கு ஸ்வாபாவிகமாகவே அதாவது 'நாச்சுர' லாகவே உண்டு. புருஷ ப்ரஜைகளுக்குள்ள பௌருஷம், ஆண்மை என்பதில் ஸ்வாபாவிகமாகவே ஒரு அடங்காமையும் கொஞ்ச நஞ்சமாவது இருக்கிற மாதிரி ஸ்த்ரீக்கு இல்லை. அதனால் வெளியிலே அவளுக்கு ஸ்தூலமாக எந்த சின்னமும் தரவேண்டியுமிருக்கவில்லை.

மரியாதை தெரிவிக்கும் வகைகளில் கையைப் பிடித்துக் கொள்கிற விஷயத்தில் இருந்தோம். ஸம ஸ்தானத்திலுள்ளவர்கள், நெருங்கிய பந்துக்கள், ஸ்நேஹிதர்கள் ஆகியவர்கள் நம் தேசத்திலும் கையைப் பிடித்துக் கொள்வதுண்டு என்றேன். அப்போது பரஸ்பரமே பிடித்துக் கொள்வார்கள்; கோத்துக் கொள்வார்கள். ஆனால், hand-shake என்பதிலுள்ள shake-குலுக்கல் நமக்குக் கிடையாது. மனஸில் ஒரு ஸந்தோஷம் துள்ளித் துள்ளி வருகிறதற்கு அடையாளமாக வெள்ளைக்காரர்கள்

Koviloor Digital Library

குலுக்குகிறார்கள் போலிருக்கிறது. அவர்கள் தேவலோக வாஸிகள் மாதிரி ஸந்தோஷ ப்ரியர்கள்; ஸந்தோஷமாக இருப்பார்கள்; குடித்துக் கொண்டு, குதித்து டான்ஸ் பண்ணிக் கொண்டிருப்பவர்கள். நமக்கோ எப்போதும் எதிலும் சாந்தமாக அடங்கும் லக்ஷ்யம் மறப்பதில்லை. அதனால், அன்பில் இமோஷனலாகவே கட்டிக் கொள்வது, கை கோத்துக் கொள்வது என்கிற மட்டும் போனாலும் அப்புறம் குலுக்கல், உலுக்கல் இல்லாமல் சாந்தமாக விட்டு விடுகிறோம்.

ஆண்-பெண் வித்யாஸப் பண்பாடு

இங்கே சொன்ன ஆலிங்கனம் முதலான எல்லாவித சரீர ஸ்பர்சமும் நம் தேசத்தில் ஆண் - பெண் பாலர்களில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பாலருக்கிடையிலே மாத்திரம் பண்ணிக்கொள்வதுதான். வேறே விதமாக நினைத்துப் பார்க்கவும் தெரியாத உத்தமமான கலாசாரம் நம்முடையது. விவாஹத்தில் மட்டுமே பிறர் பார்க்கும்படி இருந்தாலும், கொஞ்சமும் விகல்பத்திற்கு இடம் தராத பவித்ரமான சாஸ்த்ர கர்மாவாக பாணிக்ரஹணம் இருக்கிறது. வெள்ளைக்காரர்களில் அப்படியில்லை. அதிகம் விமர்சிக்க நான் ப்ரியப்படவில்லை. ஜகத்ஸ்ருஷ்டியிலே ஈச்வர ஸங்கல்பத்தில் அந்த பூப்ரதேசஸ்தர்கள் [நிலப்பகுதியினர்] முக்யமாக பௌதிகமாக இருந்துகொண்டு, அதிலேயே விசேஷமாக அபிவ்ருத்தி காணும்படியாகவும் இருக்கலாம். அதனால் அவர்கள் அதற்கேற்றாற்போல ஒரு மாதிரியாகச் செய்கிறார்கள். இந்த பரத கண்டவாஸிகளோ ஆத்ம ஸம்பந்தமான ஸத்யங்களைக் கண்டே அதிகம் அநுபவிக்க வேண்டியவர்களாக ஈச்வர ஸங்கல்பத்தில் ஸ்ருஷ்டிக்கப் பட்டிருக்கிறார்கள் என்றுதான் நம்முடைய ஆதிக்கும் ஆதி

Koviloor Digital Library

காலத்திலிருந்து ஆரம்பித்துப் பார்த்துக் கொண்டு வந்தால் தெரிகிறது. மற்றவர்களுக்கு பௌதிகம்தான் சாப்பாடு, ஆத்மிகம் ஊறுகாய் என்கிற மாதிரியும், நமக்கு ஆத்மிகமே சாப்பாடு, பௌதிகம் ஊறுகாய் மாதிரி என்றும் சொல்லலாம். ஸ்ருஷ்டி லீலையை விமர்சிக்க நமக்கு யோக்யதை இல்லையாகையால் அவர்களை ஒன்றும் நாம் குறை சொல்ல வேண்டாம்.

ஆனால் தற்போது நடக்கிறாற்போல நமக்கென்று ஏற்பட்டுள்ள நிறைவான நிறைவைக் குறைவாக நினைத்து, அவர்களுடைய வாழ்க்கை முறையை நாமும் நமக்கு நிறைவாக நினைத்து அதற்குப் பாயவும் வேண்டாம்.

ரொம்ப வருத்தப்பட வேண்டிய விஷயம்: [இப்போது] பார்த்துக் கொண்டு போன சரீர ஸ்பர்ச greeting முறைகளில் சிலவற்றைத் தற்போது நம்முடைய தேசத்திலும் ஸ்த்ரீ-புருஷ வ்யவஸ்தையை மீறி அவர்கள் மாதிரிப் பண்ணுவதாகத் தெரிகிறது. ரொம்பவும் தப்பான போக்கு.

இப்போது, நம் தேசத்தில் பெரிய ஸ்தானங்களுக்கு ஸ்த்ரீகளும் வருகிறார்கள். போலீஸ் அதிகாரிகளாகவும் ஸ்த்ரீகள் வருகிறார்கள். அப்போது வெளி தேசத்து முக்யஸ்தர் வருகிறாரென்றால் அவரோடு ஸஹஜமாகக் கை குலுக்குவது தேசாசாரத்தில் ஒரு ஜீவ நரம்பை முள்ளால் குத்துகிறமாதிரியாகும். மனஸிலே விகல்பமில்லாமலே இப்படிப் பண்ணுவதாக இருக்கலாம். 'ப்ரோடோகால்' என்றும் சொல்லலாம். என்ன சொன்னாலும் ஸரியான ஸமாதானமாகாது. 'பதி யொருத்தன் தவிரப் பிறர் கை பிடிக்கிற வழக்கம் எங்கள் தேசத்தில் இல்லை' என்று மரியாதையோடு தெரிவித்தால் எந்த தேசத்தாரானாலும், "அப்படியா?" என்று 'ரெஸ்பெக்'டே பண்ணுவார்கள்.

Koviloor Digital Library

கை குலுக்குகிற மாதிரியேதான், மாலை போடுவதும். புருஷர்களுக்குப் புருஷர்களும் ஸ்த்ரீகளுக்கு ஸ்த்ரீகளுந் தான் மாலை போடவேண்டும். மாறிப் பண்ணினால் அது நம்முடைய கலாசாரத்துக்குப் பெரிய களங்கம்.

இதே மாதிரி இன்னொன்று — இந்த அளவுக்கு விகாரமில்லாவிட்டாலும், சுபமில்லாததாக இன்னொன் றும் இந்நாளில் நடக்கிறது. ஸ்த்ரீகளுக்கும் பொன்னாடை, சால்வை மரியாதை என்று செய்யும்போது அவர்கள் கழுத்திலேயே அதைப் போடுவதைத்தான் சொல்கிறேன். அந்த மாதிரி புருஷர்களுக்குத்தான் போட்டுப் போர்த்தலாம். ஸ்த்ரீகளுக்குக் கையில்தான் கொடுக்க வேண்டும். தாம்பாளத்தில் தாம்பூலத்தோடு வைத்துக் கொடுக்கவேண்டும்.

அஞ்ஜலி வகைகள்

அஞ்ஜலியைப் பற்றிப் பேச்சு வந்ததில் ஒற்றைக் கை அஞ்ஜலி முறை வந்து சேர்ந்தது. தன் நெற்றியிலேயே கை வைத்துப் போடும் ஒற்றைக்கை ஸல்யூட், தன்னுடைய ஒரு கையால் மற்றவரின் ஒரு கையைப் பிடித்துக் குலுக்குகிற shake–hand என்றிப்படி மேல்நாட்டு வழக்கமிருக்க, நாம் இரண்டு கைகளையுமே சேர்த்துக் குவித்து அஞ்ஜலி, கும்பிடு போடுகிறோம். பிரிந்து பிரிந்து போகிற சித்தத்தை ஒன்றாகச் சேர்த்து ஸமர்ப்பணம் செய்வதற்கு அது அடையாளமாக, அபிநயமாக இருக்கிறது.

கூம்பின புஷ்பம், அதாவது தாமரை மொக்கு மாதிரியான அபிநயம் அது. 'கூம்புவது' என்பதிலிருந்து தான் 'கும்பிடுவது' வந்ததோ, என்னவோ? கை கூப்புவது என்றே சொல்வதையும் கவனிக்கணும்.

ஹ்ருதயமே ஒரு தாமரை மொக்கு மாதிரிதானே இருக்கிறது? ஹ்ருதய பூர்வமாக அன்பு தெரிவிப்பதற்கு

Koviloor Digital Library

'ஸிம்பாலிக்'காக இருக்கிறது இந்த அஞ்ஜலி. அழகான எண்ணத்தில் பிறந்த அழகான ஸைகை.

புஷ்பாஞ்ஜலி என்று கையில் புஷ்பத்தை எடுத்து அஞ்ஜலி முத்ரையோடு ஸ்வாமி மேல் போடுகிறோம். அஞ்ஜலி முத்ரையே கூம்பின புஷ்பந்தான்!

ராத்ரி வேளையில் தாமரைப் புஷ்பம் கூம்பிவிடும். 'அம்பாளின் பாத நகங்கள் வெள்ளை வெளேரென்று ராத்ரியில் வீசுகிற சந்திரிகை மாதிரி இருக்கிறது. அவளுடைய பாதங்களின் மேலே கூப்பின கையை வைத்துக் கொண்டு தேவஸ்த்ரீகள் நமஸ்கரித்துக் கிடக்கிறார்கள். அதைப் பார்த்தால் அவர்களுடைய கர கமலங்கள் அவளுடைய நக சந்திரிகையில் கூம்பினதாகத் தோன்றுகிறது' என்றிப்படி ஆசார்யாள் சொல்லி யிருக்கிறார்:

நகைர்–நாகஸ்த்ரீணாம் கரகமல–ஸங்கோச–சசிபி:*

இப்படிக் கை கூப்புகிறதிலேயே இன்னாருக்கு இன்னபடி என்று நாலைந்து க்ரமங்கள் சொல்லியிருக்கிறது. பொதுவாகப் பண்ணுவது, யாருக்கானாலும் தங்களுடைய மார்புக்கு நேரே கைகூப்புவது. ஹ்ருதயம் அங்கேதானே இருக்கிறது? ஆகையினாலே ஹ்ருதய கமலவாஸியான ஈச்வரனுக்கு நம்முடைய ஹ்ருதயத்தைக் குவித்து நமஸ்காரம் தெரிவிப்பது உள்பட எவருக்குமே இப்படிப் பண்ணுவதில் தப்பில்லைதான். இருந்தாலும் மரியாதை க்ரமத்தில் ஈச்வரனிலிருந்து நம் மாதிரியானவர்கள் வரையில் பல மட்டங்களில் வித்யாஸமாக இருப்பதால் ஒவ்வொருவருக்கும் என்றே ஒரு விதமாக அஞ்ஜலி செய்வதிலும் ஒரு அர்த்தம் தெரிவதால் அதையும் சொல்கிறேன்.

* 'ஸௌந்தர்ய லஹரி', ச்லோ. 89.

Koviloor Digital Library

ஸ்வாமிக்குக் கைகூப்பும்போது சிரஸுக்கு மேல் கைகளைத் தூக்கிச் செய்யவேண்டும் — "சென்னிமேற்கரம் தூக்கி" என்று பாட்டில்கூட வருகிற மாதிரி.*

இதிலேயே ஒரு பாகுபாடு, இஷ்ட தெய்வத்துக்கு சிரஸ் உச்சியில் படும்படிக் கைகூப்பாமல் அதற்கும் மேலே நன்றாக உயர்த்திக் கூப்பவேண்டும் என்றும், மற்ற தெய்வங்களுக்கு சிரஸுச்சியில் படும்படிக் கூப்பிய கையாகப் பண்ண வேண்டும் என்றும்.

குருவின் ஸ்தானம் ப்ருகுடியில் — அதாவது இரண்டு புருவத்திற்கும் மத்தியிலுள்ள இடத்தில் இருக்கும் ஆஜ்ஞா சக்ரத்தில் — என்று சொல்வதுண்டு. குருதானே ஆஜ்ஞை பண்ணுகிறவர்? குருவுக்கான அஞ்ஜலியை அப்படிப் புருவங்களுக்கு நடுவில் கை கூப்பி செய்யவேண்டும்.

பிதாவுக்கு வாய்க்கு நேராகச் செய்யவேண்டும். மாதாவுக்கு வயிற்றுக்கு நேராகச் செய்யவேண்டும்.

அப்பாதானே நாம் வாய்க்குப் போட்டுக் கொள்கிறதற்காக..... புரிகிறதோல்லியோ? வாய்வழியாக வயிற்றுக்குப் போட்டுக் கொள்வதற்காக ஸம்பாதித்துப் போடுகிறவர்? அதோடு நாமே வேலைக்குப்போய் நம் வாய்க்குப் போட்டுக்கொள்வதற்கு வழியாக, நாம் வாயால் பண்ணுகிற படிப்புக்கு வசதி பண்ணித் தருகிறவர்? தாமே குருவாயிருந்தோ, வேறே குருவிடம் அனுப்பியோ முக்யமாக வாய்க் கார்யமாயுள்ள கல்வி கற்க அவர்தானே உபகாரம் செய்கிறார்? அதனால் வாய்க்கு நேராகக் கைகூப்புவதாக இருக்கலாம்.

ப்ரஜைகளின் ஜீவனோபாயத்திற்கு முடிவாக ராஜாவே காரணம் என்பதால் போலிருக்கிறது,

* "காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே!" என்ற மாரிமுத்தாப் பிள்ளையின் பாடலில்.

Koviloor Digital Library

ராஜாவுக்கும் நம்முடைய வாய்க்கு நேராகப் பண்ணனும் என்று இருக்கிறது. 'டெமாக்ரஸி'யில் ராஜா என்பதற்குப் பதில் ஆட்சித் தலைவர் என்று வைத்துக்கொள்ளலாம்.

அம்மாவுக்கு ஏன் வயிற்றுக்கு நேரே என்று சொல்லவே வேண்டாம். 'பெற்ற வயிறு' என்னும்படியாக அவள்தானே பரமத் தியாகத்துடன் நம்மை உதரத்திலேயே தாங்கினவள்?

மற்ற எல்லாருக்கும் மார்புக்கு நேராக அஞ்ஜலி.

ஸ்வாமி உள்பட எல்லோருக்குமே அப்படிப் பண்ணலாம் என்றேன். [மார்புக்கு நேரே அஞ்ஜலி செய்கையில்] ஸ்வாமிக்கானால், கூப்பின விரல்களை மார்புப் பக்கம் திருப்பி, அதாவது மார்புக்குள்ளேயே ஹ்ருதயத்திலுள்ள ஸ்வாமிக்குப் போய்ச் சேருகிறது என்று காட்டுகிற பாவனையில் செய்யவேண்டும். மற்றவர்கள் இப்படி நமக்கு உள்ளே இல்லாமல் வெளியிலே இருப்பதால் விரல்கள் அவர்களைப் பார்க்க இருக்கும் படியாகவும் அஞ்ஜலி செய்யவேண்டும். ஸ்வாமிக்கு அந்தர்முக [உள்முக] அஞ்ஜலி; ஆஸாமிக்கு பஹிர்முக [வெளிமுக] அஞ்ஜலி.

நமஸ்காரம் என்று ஸஹஜமாகப் பண்ணும் சின்ன கார்யத்தில் இத்தனை துணுக்கங்களும், தாத்பர்யங்களும்!

"தலையே, நீ வணங்காய்!" பாட்டில் அப்பர் ஸ்வாமிகள் **"கைகாள், கூப்பித் தொழீர்!"** என்று அஞ்ஜலியையே கை படைத்ததன் பரம பாக்ய க்ரியையாகச் சொல்லியிருக்கிறார்.

தலையால் வணங்குவதையும் கையால் வணங்கு வதையும் சொல்லிவிட்டார். அந்தப் பதிகம் நம் சரீரத்தில் ஸர்வாங்கங்களையும் ஈச்வரபரமாக அர்ப்பிப்பதைச்

Koviloor Digital Library

சொல்லவே அவர் பாடியது; 'பாடி அருளியது' என்று சொல்லவேண்டும். 'திரு அங்க மாலை' என்று அதற்குப் பெயர். நம்முடைய அங்கம் ஒவ்வொன்றையுமே புஷ்பமாக்கி மாலையாகத் தொடுத்து அவனுக்கு ஸமர்ப்பிக்க வழி காட்டும் பதிகம். அப்போது இந்த நாற்ற உடலே திரு போட்டுக் கொண்டு **'திரு அங்க மாலை'** ஆகிறது!

அதில் **'ஆக்கையாற் பயன் என்?'** — 'இந்த உடம்பினாலே என்ன ப்ரயோஜனம்?' — என்று ஒரு அடி. 'ஸரி, இங்கே மொத்த சரீரத்தையும் சொல்லுவார். என்ன சொல்லுவார்? தலையோடு கால் சரீரம் பூராவும் பூமியில் கிடக்கப் பண்ணும் ஸாஷ்டாங்க நமஸ்காரத்தைத்தான் சொல்வார்' என்று நாம் எதிர்பார்த்தால், அவரோ அப்படிப் பண்ணவில்லை, பின்னே என்ன சொல்கிறார்?

பிரதக்ஷிணம்

அரன் கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி யென்னாத இவ்
ஆக்கையாற் பயன் என்?

"அரன்கோயில் வலம் வந்து".

'வலம் வந்து' என்றால் — 'ப்ரதக்ஷிணம் பண்ணி'. 'ஒனக்கு ப்ரதக்ஷிணம் நமஸ்காரம் பண்றேம்ப்பா, போய்ச் சேரு' என்று கோபத்தில்கூடச் சொல்கிறோமே, அப்படி நமஸ்காரத்துடனேயே அதன் அங்கமாகச் சேர்த்துச் சொல்கிற அந்த ப்ரதக்ஷிணம் என்பதைத்தான் 'வலம் வந்து' என்று இங்கே ஆக்கையின் கார்யமாக, இந்த சரீரம் ஏற்பட்டிருப்பதற்கே பயனாக, அப்பர் ஸ்வாமிகள் சொல்லியிருக்கிறார்.

ப்ரதக்ஷிணத்தோடு இன்னும் சிலதும் சேர்த்துச் சொல்லியிருக்கிறார். **'பூக்கையால் அட்டி'**: 'அட்டி' என்றால்

Koviloor Digital Library

'தொடர்ச்சியாகப் போடுவது', 'பொழிவது'. 'பூக்கையால் அட்டி' என்றால் 'பூவைக் கையால் தொடர்ச்சியாகப் போட்டு' ஈச்வரனுக்குப் புஷ்பார்ச்சனை பண்ணுவதைத் தான் சொல்கிறார்.

ஆண்டாள் 'திருப்பாவை'யில்

"தூமலர் தூவித் தொழுது
வாயினாற் பாடி மனத்தினால் சிந்திக்க"

என்று பாடியிருக்கிறாள்.

மனோ-வாக்-காயங்கள் என்ற த்ரிகரணங்களையும் பகவத்பரமாக்க வேண்டும் என்பதைத்தான் ஆர்டரை மாற்றி காயம்-வாக்-மனஸ் என்று இங்கே சொல்லியிருக்கிறாள். "வாயினால் பாடி", "மனத்தினால் சிந்திக்க" என்பதில் வாய், மனஸ் plain-ஆகவே தெரிகிறது. அப்படியானால் "தூமலர் தூவித் தொழுது" என்கிறது காயத்தை பகவதர்ப்பணமாக்குவதே என்றும் ஆகிறது. அப்பர் சொன்ன 'பூக் கையால் அட்டி'தான் 'தூமலர் தூவி'; 'தொழுது' என்பது நமஸ்காரம். விழுந்து பண்ணுவதாகவே இருக்கலாம். அல்லது புஷ்பாஞ்ஜலியாகத் தூமலர் தூவிய கையாலேயே கும்பிடுவதாகவும் இருக்கலாம். "கைகாள் கூப்பித் தொழீர்" என்று அப்பர் கைக்கே தொழும் க்ரியையைச் சொன்ன மாதிரியே ஆண்டாளும் சொன்னதா யிருக்கலாம்....

"ஆக்கையாற் பயனென்?" என்ற அப்பர் பாடலில் வரும் ப்ரதக்ஷிணம் ஆக்கையின் அடிப்பாகமாகவுள்ள பாதத்தால் பண்ணுவது. மத்ய பாகத்திலுள்ள கையால் அர்ச்சனை, புஷ்பத்தைப் போட்டு அர்ச்சனை, பண்ண வேண்டும்.

"போற்றி என்னாத" — ஆக்கையின் முடி பாகத்திலுள்ள வாயால் ஈச்வரனைப் போற்றி ஸ்தோத்ராதிகள் சொல்ல வேண்டும்.

Koviloor Digital Library

உச்சி ஸ்தானம் தலை—அதைச் சொல்லித்தான் பாட்டே ஆரம்பித்தார், "தலையே நீ வணங்காய்!" என்று!

"தலையாரக் கும்பிட்டு" என்று இன்னோரிடத்தில் பாடியிருக்கிறார்.

தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா
சய போற்றி போற்றி யென்றும்*

"ஜய ஜய சங்கர" என்று இன்றைக்கு நாமெல்லாரும் கோஷிக்கிறதைத்தான் அன்றைக்கே "சங்கரா சய போற்றி போற்றி" என்று சொல்லியிருக்கிறார். சொல்லிக்கொண்டே போனால் ஒரு ஆனந்த வெறியே பிறக்கிறதோல்லியோ, அதைத்தான் "கூத்துமாடி" என்கிறார். அவனும் கூத்தன், அவனுடைய பக்தியிலே நாமும் கூத்தர்கள்...

தலையால் வணங்குவதற்காகச் சொன்னேன்.

தலையால் வணக்கம், கையால் அர்ச்சனை, வாயால் ஸ்தோத்ரம் என்று இருந்தால் அதுவே ஆக்கையின் பயன் என்று இங்கே சொல்கிறார்.

இன்னொன்றும் பார்க்கிறோம்; தலை, கை, கால் மூன்றுமே நமஸ்கார உறுப்புக்களாக இருக்கின்றன. தலையைச் சாய்த்து நமஸ்காரம்; கையைக் கூப்பி நமஸ்காரம்; காலை மண்டி போட்டு நமஸ்காரம்.....

பாதம் என்பது காலின் முடிவில் இருப்பது; Leg-ன் முடிவிலுள்ள foot. ஹஸ்தம் என்பது புஜத்தின் முடிவில் இருப்பது; Arm-ன் முடிவிலுள்ள hand. ஒரு மநுஷ்ய சரீரத்திலே extremities என்று சொல்லும் சிறிய பாகங்கள் தான் இவை. வலம் வருவதும், பூ அட்டுவதும் இந்தச் சின்ன பாகங்கள்தான்.

* 'நிலை பெறுமாறெண்ணுதியேல்' என்ற பாடலில்.

Koviloor Digital Library

மநுஷ்ய சரீரத்தில் ப்ரதானமாக இருக்கப்பட்ட காலுடைய, புஜத்தினுடைய கார்யத்தையும், எல்லா வற்றையும்விட ப்ரதானமாக இருக்கப்பட்ட மார்பும் வயிறும் அடங்கிய 'டார்ஸோ'வின் கார்யத்தையும் சொன்னால்தானே ஆக்கையைச் சொன்னதாகும்? அப்பர் ஸ்வாமிகள் ஏன் சொல்லாமல் விட்டார்?

இந்த ஸர்வாங்கங்களும் சேர்ந்து ஈச்வரபரமாகச் செய்கிற கார்யம் ஸாஷ்டாங்க நமஸ்காரந்தானே? அதை ஏன் சொல்லாமல் விட்டார்?

எனக்கு என்ன தோன்றுகிறதென்றால், சொல்ல வேண்டிய அவச்யமே இல்லை; ஈச்வராராதனை — இறை வழிபாடு — என்றாலே நமஸ்காரந்தான் என்று ஸர்வத்ரர் களும் [எல்லோரும்] வைத்துக் கொண்டிருக்கும்போது அதைப் பற்றி சொல்ல அவச்யமே கிடையாது என்றுதான் விட்டுவிட்டார்!

பெரிசாக விருந்துக்கு ஏற்பாடு பண்ணுகிறோம். சமையற்காரரிடம் இன்னின்ன காய்கறியைப் போட்டு இன்னின்ன 'அய்ட்டம்' பண்ணு. இன்னின்ன பருப்பு போட்டு இன்னின்ன பக்ஷணம் பண்ணு என்று சொல்கிறோம். ஆனால், ப்ரதான 'அய்ட்டம்' சாதந்தான். ஆனாலும் 'அரிசியைப் போட்டுச் சாதம் பண்ணு' என்று சொல்கிறோமா? சாப்பிட்டுவிட்டு வந்தவர்களிடமும், 'என்ன சமையல்?' என்று கேட்டால் சாதம்தான் ப்ரதான மானாலும் அதை விட்டுவிட்டு பாக்கி அத்தனையையுந் தானே சொல்கிறார்கள்?

இறைவழிபாட்டில் நமஸ்காரந்தான் சாதம். [சிரித்து] ஈச்வர ப்ர-ஸாதத்தைப் பெற்றுத்தரும் **சாதம்!** நாம் சாப்பிடுவது ஈச்வர ப்ரஸாதந்தான் என்பதாலேயே சாதத்துக்கு அப்படிப் பேர் வந்ததோ என்னவோ? ஸத்வமான ஸாத்வன்னம் [ஸாது அன்னம்] என்பதே சாதம் ஆயிருக்கலாம் என்றும் அபிப்ராயம் உண்டு........

Koviloor Digital Library

இறைவழிபாடு என்று தனியாக ஒன்று பண்ண வேண்டுமென்றில்லாமல், ஸதா ஸர்வகாலமும் உள்ளூர அவன் ஸ்மரணமாகவே இருந்து, பேருக்காக, ஒப்புக்காக, அல்லது பூர்வ கர்மாவுக்காக அன்றாடக் கார்யங்களைப் பண்ணிக் கொண்டிருக்கும் ஒரு உசந்...த நிலை உண்டு. அப்போது அந்த ஸர்வ ஸாதாரணமான திசையில் கார்யம் எல்லாமே, ஒவ்வொரு கார்யமுமே பூஜாங்கங்களாக [பூஜையின் அங்கங்களாக]த்தான் அந்தராத்மாவுக்குத் தெரியும். அந்த நிலை லபிக்க வேண்டும் என்று ஆசார்யாள் ஈச்வரனிடமும், அம்பாளிடமும் வேண்டிக் கொண்டிருக் கிறார். என்னென்ன தினசரிக் கார்யம் என்னென்ன பூஜாங்கம் ஆகவேண்டுமென்று அந்த இரண்டு ச்லோகங்களில் சொல்லியிருக்கிறார்*. ஈச்வரனிடம் வேண்டிக்கொள்ளும்போது.

ஆத்மா த்வம், கிரிஜா மதி:, ஸஹசரா: ப்ராணா:, சரீரம் க்ருஹம் என்று முதலில் ஒரு ஜீவனுக்கு உள்ள முக்யமான நாலை—ஆத்மா, மனஸ், ப்ராணன், சரீரம் என்ற நாலைச் சொல்லி ஈச்வரனேதான் ஆத்மா, அம்பாள் மனஸ், ஈச்வரனுடைய பரிவார கணங்களே ஐந்து விதமான ப்ராணனும், அவனுடைய வாஸ ஸ்தானமே சரீரம் என்று சொல்லிவிட்டு, அப்புறம் கார்யங்களைச் சொல்லி, இன்ன கார்யம் இன்ன பூஜாங்கம் என்று சொல்லியிருக்கிறார்.

ஆத்மா த்வம், கிரிஜா மதி:, ஸஹசரா: ப்ராணா:, சரீரம்
க்ருஹம்
பூஜா தே விஷயோப-போக-ரசநா, நித்ரா ஸமாதி ஸ்திதி: |
ஸஞ்சார: பதயோ: ப்ரதக்ஷிணவிதி:

---

* அடுத்து வருவதைவிட விரிவாக இச் சுலோகங்களின் விளக்கம் ஆறாம் பகுதியில், 'ஸௌந்தர்ய லஹரி' என்ற பேருரையில் 'ஸர்வ ஸமர்ப்பணம்' என்ற பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளது.

Koviloor Digital Library

[ஸ்ரீசரணர் மீண்டும் கூறுகிறார்:]

ஸஞ்சார: பதயோ: ப்ரதக்ஷிணவிதி:, ஸ்தோத்ராணி ஸர்வா கிரோ,
யத்யத் கர்ம கரோமி தத்தத் அகிலம் சம்போ! தவாராதநம்.

இதில் நமக்கு விஷயம் ஸஞ்சார: பதயோ: **ப்ரதக்ஷிணவிதி:** என்கிறது. காலால் எங்கே ஸஞ்சாரம் பண்ணினாலும் அது ஸ்வாமிக்குச் செய்கிற ப்ரதக்ஷிண மாகவே இருக்கவேண்டும் என்கிறார். அதாவது, ப்ரதக்ஷிணம் என்பதை ஆசார்யாள் ஒரு முக்யமான பூஜாங்கமாகச் சொல்லியிருக்கிறார்.

அம்பாள் விஷயமாக இதேமாதிரி 'ஸௌந்தர்ய லஹரி'யில், தினசரிக் கார்யம் ஒவ்வொன்றுக்கும் ஒரு பூஜாங்கத்தைச் சொல்லும்போது

ஜபோ ஜல்ப:, சில்பம் ஸகலமபி முத்ரா விரசநா,
கதி: ப்ராதக்ஷிண்ய க்ரமணம்

[மீண்டும் கூறுகிறார்]

கதி: ப்ராதக்ஷிண்ய க்ரமணம், அசனாத்–யாஹுதி விதி: |
ப்ரணாம: ஸம்வேச:

[மீண்டும் கூறுகிறார்:]

ப்ரணாம ஸம்வேச: ஸுகமகில மாத்மார்பணத்ருசா
ஸபர்யா–பர்யாய: தவ பவது யந்–மே விலஸிதம்.

இங்கே ப்ரதக்ஷிணம், நமஸ்காரம் இரண்டையுமே சொல்லியிருக்கிறார். ஈச்வர ஸம்பந்தமாகச் சொன்னபோது நமஸ்கார ப்ரஸ்தாவம் இல்லை. இங்கே இரண்டையுமே சொல்லியிருக்கிறார்.

Koviloor Digital Library

அங்கே 'ஸஞ்சாரம்' என்றதையே இங்கே 'கதி' என்கிறார். நாம் நடக்கிற நடையெல்லாம் ஸ்வாமிக்குச் செய்யும் ப்ரதக்ஷிணமே என்ற ப்ரஜ்ஞை இருக்க வேண்டும்.

'ஸம்வேசம்' என்றால் தூங்குவது. தூங்குவதற்காகப் படுத்துக் கொண்டிருப்பது என்று இங்கே அர்த்தம். "அப்படிப் படுத்துக் கொண்டிருப்பது, அம்மா, உனக்கு நான் பண்ணும் நமஸ்காரமாக இருக்கட்டும்!" என்கிறார். இரண்டிலேயும் ஸர்வாங்கங்களையும் பூமியில் நீட்டிக் கொண்டு சும்மாதானே கிடக்கிறோம்?

ஆனால் அந்த 'சும்மா'விலேயே ரொம்ப வித்யாஸம். களைப்பின் பேரிலே ஒரு ப்ரக்ருதி தர்மமாக [இயற்கை விதியாக] நித்திரைக்குப் படுத்துக்கொள்கிறோம். நமஸ்காரம், நிஜமான நமஸ்காரம், மனஸை அப்படியே அவளிடம் சரணாகதி என்று ஒப்புக்கொடுப்பதால் ஏற்படுகிற 'சும்மா' நிலை. மனஸ் கார்யம் பண்ணாததால் எண்ணமே எழும்பாமல் சும்மாயிருக்கும் நிலை. [சிரித்து] நிஜமான நித்ரை எல்லாரும் செய்கிறோம்; நிஜமான நமஸ்காரம்?

அது வருவதற்கு ஆரம்பமாகத்தான் நமக்குத் தெரிந்த, நம்மால் முடிந்த நமஸ்கார க்ரியையைப் பண்ணுவது.

நித்ரை நமஸ்காரமென்றால், குப்புறப் படுத்துக் கொண்டு தூங்கவேண்டும் என்று சொல்கிறாரா என்று கேட்கக் கூடாது. தலையோடு கால் நீள நெடுகக் கிடப்பது என்ற அளவுக்குத்தான் இரண்டுக்கும் ஸாம்யம் [ஒற்றுமை]. மல்லாக்கவோ, ஒருக்களித்தோ—அதிலும் இடது பக்கமாக ஒருக்களித்தோ—தான் சயனிக்க வேண்டும். குப்புறப் படுத்தால் ஜ்யேஷ்டாதேவி [மூதேவி].

ஒன்றும் பண்ணாமல் கிடப்பது நமஸ்காரம்; நடப்பது ப்ரதக்ஷிணம். இரண்டும் வேறே யோஜனை ஒன்றும்

Koviloor Digital Library

பண்ணாமல் பகவத் சிந்தனை ஒன்றே பண்ணிக்கொண்டு செய்யவேண்டிய கார்யங்கள்.

காலால் பண்ணும் கார்யமாக உள்ள நடப்பதை முதலில் பண்ணி அப்புறம் கார்யமில்லாமல் கிடக்கணும். 'ப்ரதக்ஷிண – நமஸ்காரம்' என்கிறபடி முதலில் வலம் வந்து அந்த வலத்தை முடிக்கிற இடத்தில் வணங்க வேண்டும்.

'ப்ரதக்ஷிணம்' என்பதில் வரும் தக்ஷிணம் என்பதைத் தான் 'வலம்' என்பது காட்டும் வலது பக்கம் குறிப்பிடுகிறது.

ஒரு ஸ்வாமியையோ, திருவண்ணாமலை மாதிரி கிரியையோ, மஹானையோ நடுவாக வைத்து அந்த மூர்த்தியின் பக்கம் நம்முடைய வலது பக்கமே இருக்கிற மாதிரி சுற்றுவதுதான் ப்ரதக்ஷிணம். இதையே வேறு விதமாகச் சொன்னால், ப்ரதக்ஷிணம் செய்கிறபோது மூர்த்தி எப்போதும் நமக்கு வலது பக்கமாகவே இருக்கும்.

'வலம் வருவது' என்று தமிழில் சொல்வதில் ரொம்பவும் அர்த்த விசேஷம் இருப்பது தெரிகிறதல்லவா?

ஸம்ஸ்க்ருதத்தில் வலது பக்கத்தை 'தக்ஷிணபாகம்' என்று சொல்கிறது. கிழக்குமுகமாக ஒருவர் உட்கார்ந்து கொண்டால் இந்த சரீரமே ஈச்வரனுடைய கோயில் என்று சொல்வதில் இந்த ஜீவனுடைய ஹ்ருதயந்தான் ஈச்வரன் இருக்கிற மூல ஸ்தானம். ஹ்ருதய மத்திதான் ஸாக்ஷாத் அந்த ஈச்வரனே. அப்போது அவனுக்கு வலது பக்கத்தில் இந்த சரீரத்தின் வலது பக்கமாக இருப்பது எந்தத் திசையில் இருக்கிறது? தெற்குதானே? அதனால்தான் அதற்கே தக்ஷிணபாகம் என்று பெயர், என்று தோன்றுகிறது.

'ஸரி, எதற்காக ப்ரதக்ஷிணம் பண்ணணும்? ஸ்வாமியை ஏன் சுற்றணும்? 'ஊர் சுத்தாதே!' என்றே சொல்வது. இங்கே மட்டும் சுற்றச் சொல்லியிருக்கிறதே! ஏன்?'

Koviloor Digital Library

ஊருக்கு எதிராக இது இருப்பதால்தான்!

'அப்படியென்றால்?'

ஊர் என்றால் உலகம், லோகம். லோகத்தையே பார்த்துத் திரிந்து கொண்டிருந்தால், 'ஊர் சுத்தினால்', லௌகிகம் என்கிற லோகத்தின் அல்ப ஸௌக்யங்களைக் கொடுக்கும் விஷயாதிகளே நம்மை இழுத்துக்கொண்டு போய்ப் பரம ஸௌக்யத்தை அடையமுடியாமல் தடை பண்ணி விடும்.

இந்த லௌகிகத்துக்கு நேரெதிராக 'தெய்விகம்', 'ஆத்மிகம்' என்று சொல்கிற அந்தப் பரம ஸௌக்யமான ஸமாசாரம் ஸ்வாமி என்று இருக்கிறது. அப்போது, லௌகிகத்தில் சுற்றப்படாது என்பதற்கு நேரெதிராக அவரைச் சுற்ற வேண்டும், சுற்றி வலம் வரவேண்டும் என்றுதானே ஆகிறது?

அவன்தான் இந்த லோகத்துக்குள்ளேயும், லௌகிகம் என்கிறதற்கு உள்ளேயுங்கூட இருக்கிறான்; அவனன்றி எதுவுமில்லை என்ற ப்ரக்ஞையோடு அத்தனை திசைகளிலும் நிறைந்திருக்கிற அவனைச் சுற்ற வேண்டும். இப்படிச் சுற்றி வருவதில் திசைகள் மாறினாலும் மாறாத மத்ய ஸ்தானமாக அவனே இருக்கிறான் என்பதிலிருந்து ஸகலத்திற்கும் Centre of gravity [ஈர்ப்பு மையம்] அவன்தான் என்ற ஸத்யத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காகத்தான் ப்ரதக்ஷிண க்ரியையை வைத்திருப்பது.

அண்ட கோளங்கள் சுற்றி வருவதும் நாம் ப்ரதக்ஷிணம் செய்வதும்

ஏன் சுற்றணும் என்பதற்கு இன்னொரு காரணம். நாம் இத்தனைபேரும் வஸிக்கும் இந்த லோகம், பூகோளம் என்பதே ஸதாவும் சுற்றிக் கொண்டுதானே இருக்கிறது?

Koviloor Digital Library

இரண்டு தினுஸான சுற்றலை அது பண்ணிக்கொண்டே இருக்கிறது. தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறது; அது ஒன்று. இரண்டாவது, இப்படித் தன்னைத் தானே சுற்றிய படியே ஸூர்யனையும் சுற்றுகிறது.

பூமி மாத்ரமில்லை. க்ரஹங்கள் எல்லாமுந்தான். 'அஸ்ட்ராலஜி' என்கிற நம்முடைய ஜ்யோதிஷ சாஸ்திரப்படி பூமியைச் சேர்க்காமல் ஆனால் ஸூர்ய சந்திரர்களைச் சேர்த்து நவக்ரஹம் என்று ஒன்பது. 'அஸ்டரானமி' என்கிற வான சாஸ்த்ரப்படி பூமியையும் க்ரஹமாகச் சேர்த்து ஒன்பது. 'ப்ளானெட்' என்பது. ஸூர்ய, சந்திரர்களை அங்கே சேர்ப்பதில்லை. செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி அங்கேயும் உண்டு. அவை இரண்டுக்கும் பொது. ராஹு, கேது அங்கே இல்லை. அங்கே பிற்காலத்தில் கண்டுபிடித்த யுரேனஸ், நெப்ட்யூன், ப்ளூட்டோ நம் ஒன்பதில் இல்லை.

பூமியும் மற்ற க்ரஹங்களும் தன்னைத் தானே சுற்றிக் கொள்வதை rotation என்றும், இப்படிச் சுற்றிக்கொண்டே ஸூர்யனை அதுகள் ஒவ்வொன்றும் 'அயனம்', 'orbit' என்கிற ஒவ்வொரு பாதையில் சுற்றுவதை 'revolution' என்றும் சொல்வது.

பூமி கிழக்குப் பார்க்கத் தன்னைத் தானே சுற்றிக் கொள்கிறது. அப்படிச் சொன்னதிலிருந்து மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றுகிறது என்றே ஆகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். யோஜித்துப் பார்த்தால், [சிரித்து] அபிநயம் பண்ணிப் பார்த்துக் கொண்டீர்களானால் புரியும். The earth spins on its own axis from West to East" என்று சின்ன க்ளாஸில் படித்த விஷயம்'. அதனால்தான் இராப்-பகல் வித்யாஸம்; அந்த ராப்-பகல்களிலும் தேசத்திற்குத் தேசம் நேர . வித்யாஸம் என்றெல்லாம்

Koviloor Digital Library

படித்திருக்கிறோம். இன்னும், இப்படி பூமி மேற்கு-கிழக்காகச் சுற்றுகிறதால்தான் அதிலே இருந்து கொண்டு வெளியே பார்க்கிற நமக்கு ஆகாசத்தில் ஸூர்ய-சந்த்ராதிகள் கிழக்கிலிருந்து மேற்காகப் போவதாகத் தோன்றுகிறது; வேகமாக ஓடுகிற ஒரு வண்டிக்குள்ளிருந்து கொண்டு பார்த்தால் வெளியில் உள்ளவை எதிர்த்திசையில் ஓடுகிற மாதிரித் தோன்றுவதைப் போலத்தான் இது என்றும் அந்தப் பாடத்தில் படித்திருக்கிறோம். [சிரித்து] அநேகமாக மறந்தும் போயிருக்கிறோம்!

இப்படி பூமி முதலானவை மேற்கிலிருந்து கிழக்காகச் சுற்றிக் கொண்டிருப்பது அப்ரதக்ஷிணமாகத்தான்! அதாவது ப்ரதக்ஷிண க்ரமத்திற்கு நேர் எதிர்த் திசையில்தான். நாம் அந்த மாதிரிப் பண்ணவே கூடாது என்று சாஸ்திரங்களில் இருக்கிறது.

ப்ரதக்ஷிணத்தை clockwise என்றும் அப்ரதக்ஷிணத்தை anti–clockwise என்றும் சொல்கிறார்கள். கடிகார முள் எப்போதும் வலது பக்கமாகவே நகர்வது — அதாவது, வலம் வருவது — clockwise, இடது பக்கமாக நகர்வது அதற்கு anti. பூமி முதலான கோளங்கள் இப்படி இடது பக்கமாகத்தான் சுற்றிக்கொள்வது.

'சுற்றிக்கொள்வது', 'சுற்றுவது' இரண்டுமே இப்படி அப்ரதக்ஷிணமாகத்தான். நின்ற இடத்திலே அப்படியே சுழல்வதுதான் 'சுற்றிக் கொள்வது' — rotation. வெளியிலுள்ள வேறே ஒன்றைச் சுற்றுவதைத்தான் 'சுற்றுவது' என்றே சொல்வது — revolution என்று சொன்னது.

ஸூர்யனை க்ரஹங்கள் சுற்றுவதும் அப்ரதக்ஷிணந் தான், 'ஆன்டி-க்ளாக்வைஸ்!'

Koviloor Digital Library

சலனம் என்பது சக்தியின், அம்பாளின் கார்யம். மஹா பெரிய க்ரஹாதிகளும் மஹா வேகத்தில் ஸதாவும் சலித்துக் கொண்டிருப்பது அவளுடைய விசேஷமான சக்தி விலாஸத்தில்தான். அவளுடையது இடது பக்கம்தானே?* அதற்கேற்பவே இந்த சராசர கோளங்களின் சலனமும் இடமாக இருக்கிறது. கோளங்களெல்லாம் சுற்றுவதாகவும், அவற்றில் நமக்குத் தெரியும் ப்ரபஞ்சத்திலுள்ள க்ரஹங்களெல்லாம் தங்களுக்கு மத்யமாக ஸூர்யனை வைத்துக் கொண்டு அவனைச் சுற்றி வரும்படியாகவும் ஈச்வரன் நியமித்து அப்படியே கோடாநுகோடி காலமாக நடந்து வருகிறது. அந்த 'ஸோலார் ஸிஸ்ட'த்திலேயே இருக்கிற நமக்கும் அந்த தர்மம் உண்டுதானே? அதனால் தான் ஆத்ம ஜ்யோதியான ஈச்வரனை மத்யமாக வைத்து நாமும் ப்ரதக்ஷிணம் செய்யவேண்டுமென்று நம்முடைய பெரியவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் சுற்றிக் கொண்டேயிருப்பதிலிருந்து விடுபட்ட நிலையாகிற சாந்தமே நமக்கு லக்ஷ்யம் என்று நாம் முடிவாக வைத்துக் கொள்ள வேண்டுமானால், சுற்றி வந்தாலும் சாந்தத்தைக் காட்டும் ப்ரதக்ஷிண ரீதியில் வலமாகவே வர வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள்.

ஸூர்யனைச் சுற்றிவருவதோடுகூட, பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வது போலவும் நாம் பண்ண வேண்டும்; இருக்கிற இடத்திலேயே இருந்து கொண்டு நம்மை நாமே சுற்றிக் கொள்ளவும் வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள்.

நமக்கு வெளியிலே ஸ்வாமி என்று வைத்து அவரைச் சுற்றி நடந்து ப்ரதக்ஷிணம் பண்ணுவதோடுகூட, அந்த ஸ்வாமி நமக்குள்ளேயும் இருக்கிறார் என்பதை ஏதோ சில க்ஷணத்திற்கு ஒரு பாவனையாகவாவது புரிந்து கொண்டு,

* சிவன் – வலம்; அம்பாள் – இடம். அர்த்தநாரி ஸ்வரூபம்.

Koviloor Digital Library

'பாவிக்கப்படுகிற அவன் நம்முடைய ஹ்ருதய மத்தியிலேயே ஜீவமூலமாக இருக்கிறவன். பாவிக்கிறவன் என்று அவனுக்கு வேறாக நாம் உள்ள மட்டும் அந்த மத்தியைச் சுற்றிச் சுற்றி வந்தே வாழ்கிறோம்' என்ற நினைப்போடு உள்ளே அசலமாயிருக்கும் அந்த ஈச்வரனான மத்யப் புள்ளியை அந்தப் புள்ளி தவிரச் சலிதமாகவே யிருக்கும் இந்த ஜீவ சரீரத்தால் ப்ரதக்ஷிணம் பண்ண வேண்டும். இது நமக்குள்ளேயே உள்ள நம்முடைய நிஜ நானை பொய் நானான சரீரத்தால் சுற்றும் ஆத்ம ப்ரதக்ஷிணம். இதைத் 'தன்னைத் தானே சுற்றிக் கொள்வது' என்று சொல்வது. அப்படிச் சொல்லும்போது முதலில் சொன்னது நிஜமான 'தான்' (Self); அப்புறம் சொன்னது பொய்யான 'நான்' (ego). இரண்டையுமே ஸமஸ்க்ருதத்தில் ஆத்மா என்று சொல்லும் வழக்கமிருப்பதால் 'ஆத்ம ப்ரதக்ஷிணம்' என்று சுருக்கமாகச் சொல்வது.

கடிகார முள் கடிகாரத்தைவிட்டு வெளியிலே போய் அதைச் சுற்றிவரவில்லை. கடிகாரத்துக்குள்ளேயேதான் சுற்றுகிறது. அதன் ஒரு கோடி கடிகாரத்தின் மத்யப் புள்ளியுடனேயே ஐக்யப்பட்டிருக்கிறது. அந்தக் கோடி அசலம். அதுதவிர, முள்ளின் மற்ற பாகம் பூராவும் சலமாக அந்த மத்யத்தைத்தான் சுற்றி வருகிறது. அந்த மாதிரிதான் இதுவும் என்று வைத்துக் கொள்ளலாம்.

இப்படி இருந்த இடத்திலிருந்தே சுற்றிக் கொள்வது, இன்னொன்றை மத்யமாக வைத்து அதைச் சுற்றுவது என்ற 'ரொடேஷன்', 'ரெவல்யூஷன்' ஆகிய இரண்டிலுமே நமக்கும் பூமி முதலான க்ரஹங்களுக்கும் ஒரு பெரிய வித்யாஸம் சொன்னதை இன்னொரு தடவை வின்யாஸம் செய்கிறேன்: கோளங்கள் rotation, revolution ஆகிய இரண்டையுமே அப்ரதக்ஷிணமாகத்தான் பண்ணுகின்றன! தன்னைத்தானே சுற்றிக் கொள்வது, ஸூர்யனைச் சுற்றி

Koviloor Digital Library

வருவது என்ற இரண்டிலும் ப்ரபஞ்ச தர்மம் என்று நான் சொன்ன விதி அப்ரதக்ஷிணமாகத்தான் இருக்கிறது. 'வலம்' வருவது இல்லை: 'இடம்' வருவது!

ப்ரபஞ்ச தர்மத்தின் அம்சமாகவே மநுஷ்யனும் ஆத்ம ப்ரதக்ஷிணமும், வெளி சுவாமி ப்ரதக்ஷிணமும் பண்ணுவது என்று சொல்லிவிட்டு இப்படி இரண்டிற்கும் ஒரு பெரிய வித்யாஸமும் சொன்னால்?

ப்ரபஞ்ச தர்மத்தை ஒட்டியே மநுஷ்யன் போக வேண்டும் என்பது வாஸ்தவந்தான். ஆனால் அதோடு முடிந்து போய்விடக் கூடாது. அதோடு ஒட்டிப் போயே அதற்கு மேலே எழும்பி, உசந்து போகவேண்டும். தர்மம், அதர்மம் எல்லாவற்றையும் கடந்த பரம ஸத்ய நிலைக்குப் போக வேண்டும்.

ப்ரக்ருதி தர்மத்தை ஒட்டிப் போவது, அதைக் கடந்து போவது என்ற இரண்டையும் சேர்த்துத்தான் நமக்கு ப்ரதக்ஷிண விதியை ஏற்படுத்தித் தந்திருப்பதாக தெரிகிறது. ப்ரபஞ்ச தர்மத்தையே நாமும் அநுஸரித்துப் பண்ணுவதற் குத்தான் க்ரஹங்கள் மாதிரியே ஒரு மத்ய மூலத்தை, கேந்திர ஸ்தானத்தைச் சுற்றுவதும், தனக்குள்ளேயே உள்ள மத்ய மூலத்தை சுற்றிக்கொள்வதும். அவற்றின் தர்மத்தைக் கடக்கிறபோது மாறுதலாகக் காட்டினால்தானே 'அந்த தர்மம் போயாச்சு' என்று புரியும்? அதனால் அந்தச் சுற்றுதல்களை எதிர்த் திசையில் பண்ணுவது.

அசேதனமான கோளங்கள் பண்ணுவதற்கு வித்யாஸமாகத்தானே சேதனமான ஜீவன் பண்ணுவது இருக்க வேண்டும்? அப்படிச் சேதனன் பண்ணுவதுதான் ஏக சைதன்யத்திலேயே [ஒன்றேயான பேருணர்வும் பேரறிவுமானதிலேயே] கொண்டு சேர்க்கும். அதுதான் வலது பக்கத்தையே மூலவஸ்துவுக்கு எப்போதும் காட்டிப் பண்ணுகிற ப்ரதக்ஷிணம்.

Koviloor Digital Library

சக்தி விலாஸத்தைக் காட்ட அசேதன கோளங்கள் சக்திகரமாகச் சலித்துக் கொண்டே இருக்கலாம். ஆனால் சேதனனுக்கு சக்தி விலாஸத்தில் எத்தனையோ அற்புதங்கள், ஸௌந்தர்யங்கள் இருந்தாலும் சக்தி யெல்லாம் அடங்கிய சாந்தத்தில்தானே பூர்ணத்வம்? 'சாந்தம் சிவம் அத்வைதம்' என்று உபநிஷத்தே சொல்லியிருக்கிறது.* அந்த சாந்த சிவனுக்குரிய பக்கம் வலம். சாந்தத்தில் முடிய வேண்டிய நாம் அந்தப் பக்கமாகத் தானே சுற்றணும்? சக்தி விலாஸத்துக்காகச் சுற்றுவது, அதிலேயே சாந்த முடிவையும் முடிச்சுப் போட்டு வலமாகச் சுற்றுவது என்று ப்ரதக்ஷிண தத்வத்தை அர்த்தம் பண்ணிக் கொள்ளலாம்.

ப்ரபஞ்ச ரீதியிலேயே ஓடினால் ப்ரபஞ்ச அநுபவத்தோடேயே வாழ்க்கை முடிந்து போய்விடும். ஆத்மாநுபவத்திற்கு வழி ஏற்படாது. லோக வாழ்க்கையில் இருக்கிற மட்டும் அதற்கு அநுஸரணையாக இருந்து கொண்டு, கர்மாவைக் கழித்தே, அதைக் கடப்பதற்கான வழியைப் பண்ணிக்கொள்ளவேண்டும். அதுதான் ப்ரதக்ஷிண தத்வம். ஜட ப்ரபஞ்சத்துக்கும் சேதன ஜீவனுக்கும் உள்ள ஒற்றுமை-வேற்றுமைகளை இணைத்துக் காட்டிப் புரியவைக்கும் தத்வம்.

'ப்ரபஞ்ச ரீதியிலேயே ஓடுவது' என்றேன். ஓட்டப் பந்தயத்தில் பார்த்தீர்களானால் அப்ரதக்ஷிணமாகத்தான் ஓடுவார்கள். அங்கே முழுக்க பௌதிக சக்தியின் கார்யந்தானே? ஆத்ம ஸம்பந்தம் இல்லைதானே? அதனால் பூத ப்ரபஞ்சமான க்ரஹங்கள் பண்ணும் ரீதியிலேயே மநுஷ்யனும் பண்ணுவது. பௌதிகமான சரீரத்தின் ப்ரயாஸை நிறைய இருக்கிறபோது பூத ப்ரபஞ்ச தர்மந்தான். மாற்றிப் பண்ணினால் பௌதிகமாக இருக்கப்

* மாண்டூக்யோபநிஷத்து

Koviloor Digital Library

பட்ட நம்முடைய சரீரத்துக்குக் கெடுதி உண்டாகும். கோவில் கோபுரங்களுக்குள்ளேகூட சுற்றிச் சுற்றி ஏறிப் பார்ப்பதற்காகப் போட்டிருக்கும் படி வரிசைகள் இடது பக்கமாகவே திரும்பிப் போகிற மாதிரிதான் போட்டிருப்பார்கள். 'அந்த நாளிலேயே, இவர்களுக்கு எத்தனை ஸயன்ஸ் ஞானம்?' என்று அன்னிய தேசஸ்தர்கள் கூட ஆச்சர்யப்பட்டுச் சொல்கிறார்கள்.

ப்ரதக்ஷிணத்திற்குப் பின் செய்யும் நமஸ்காரம்

ப்ரதக்ஷிணம் முடித்தவுடன் கீழே விழுந்து நமஸ்காரம் பண்ணவேண்டும். 'ப்ரதக்ஷிண நமஸ்காரம்' என்றே சொல்வது. அந்த நமஸ்காரத்தை எந்தத் திசை பார்த்துச் செய்வது என்று விதி உண்டு.

கிழக்கும் மேற்கும் பார்த்த ஸ்வாமிகளுக்கு வடக்கு முகமாகவும், வடக்கும் தெற்கும் பார்த்த ஸ்வாமிகளுக்குக் கிழக்கு முகமாகவும் நமஸ்காரம் செய்யவேண்டும். அதாவது தெற்கு முகமாகவும், மேற்கு முகமாகவும் நமஸ்காரம் பண்ணப்படாது.

பொதுவாகவே மனிதர்களுக்குக்கூட ப்ரதக்ஷிணம் பண்ணாமலே நமஸ்கரிக்கிறபோது தெற்குப் பார்க்கவோ, மேற்குப் பார்க்கவோ பண்ணாமல், கிழக்கு அல்லது வடக்குப் பார்க்கவே பண்ணவேண்டும்.

ஒரு முக்யமான விஷயம்: ஒரு கோவில் என்றிருந்தால் அதிலிருக்கும் அநேக ஸந்நிதிகள், கோஷ்டங்கள் முதலியவற்றிலுள்ள எந்த மூர்த்திக்கும் அந்த இடத்திலேயே கீழே விழுந்து நமஸ்காரம் கூடாது. கைகூப்பித்தான் அஞ்ஜலி. ஏன் இப்படியென்றால், கோவிலில் அநேக மூர்த்திகள் ஒவ்வொரு திசை பார்த்துக் கொண்டிருப்பதால் ஒன்றுக்கு எதிரே விழுந்து நமஸ்காரம் பண்ணினால் இன்னொரு மூர்த்திக்கு எதிரே காலை நீட்டிய அபசாரம் ஸம்பவித்து விடும்.

Koviloor Digital Library

ஆகவே கொடிமரம் என்கிற த்வஜ ஸ்தம்பத்தைத் தாண்டி மூலவருக்குப் பக்க வாட்டமாக மட்டுமே விழுந்து நமஸ்காரம் செய்யவேண்டும். மூல மூர்த்திக்கு அப்படிப் பண்ணினால் அதுவே அவரது பரிவார மூர்த்தியாக இருக்கப்பட்ட மற்ற எல்லா மூர்த்திகளுக்கும் சேர்ந்துவிடும். 'மூலம்' என்கிற வேரில் விடுகிற ஜலம் எல்லாக் கிளைகளுக்கும் போய்ச் சேர்ந்து விடுகிற மாதிரி! ஆனால் கோவிலுக்குள்ளேயே தனியாக ஒரு கொடி மரத்துடன் ஒரு ஸந்நிதி இருந்தால் அங்கே அந்த மூர்த்திக்கு விழுந்து நமஸ்கரிக்கலாம்; தப்பேயில்லை. *பெரும்பாலும் அம்மன் ஸந்நிதிகள் 'அம்மன் கோயில்' என்றே சொல்லும்படியாக அப்படி இருக்கின்றன....*

இன்னொரு முக்யமான விஷயம்: ப்ரதக்ஷிணம் ரொம்ப ரொம்ப மெதுவாகப் பண்ண வேண்டும் என்று விதி. பூர்ணகர்ப்பிணியான ஒரு ஸ்த்ரீ விளிம்பு வரை எண்ணெய் உள்ள ஒரு கிண்ணம் வழியாமல் நடக்கணும் என்றால் எப்படிப் போவாளோ அப்படி அடி அடியாக மெதுவாக வைத்து, ப்ரதக்ஷிணம் பண்ணணும் என்பார்கள். அப்படிப் போனால்தான் பகவத்பரமாகவே சித்தத்தை ஒருமுகப்படுத்த முடியும். நடை வேகமானால், சித்தமும் விருவிருவென்று ஓடும்; நானாதிசையும் ஓடும். இது ஒரு காரணம்.

முக்யமான காரணம், முன்னேயே சொன்னதுதான். சக்தியின் சலனத்திலேயே சிவனுடைய சாந்தத்தை இழைத்துப் பூர்த்தி பண்ணுவது என்றேனே, அது. ப்ரதக்ஷிணம் என்று சலிக்கிறபோதே அதை மந்தகதியில் பண்ணுவதென்றால் அந்த மந்த கதி சாந்தந்தானே?

அசேதன க்ரஹங்களின் அப்ரதக்ஷிணத்துக்கு மாறாகத்தான் சேதன ஜீவன் பண்ண வேண்டுமென்பதா லேயே அவன் ப்ரதக்ஷிணமாகப் போவது என்றேன். அதே ந்யாயப்படி, க்ரஹங்கள் அஸுர வேகத்தில் சுற்றுவதாலும்

Koviloor Digital Library

நாம் மெதுவாகத்தான் பண்ணணும் என்றும் வைத்துக் கொள்ளலாம்.

அறிவு கடந்த சாஸ்திர விதி

இந்த எக்ஸ்ப்ளனேஷன்களெல்லாம் இரண்டாம் பக்ஷம்தான். நம்முடைய சாஸ்த்ரங்களைத் தந்திருக்கிற பெரியவர்கள், நம் அறிவுக்குப் புரியவே முடியாததும், ஸ்வய ப்ரயத்னத்தால் அநுபவத்திற்கு வரவே முடியாதது மான ஆத்ம லோக ஸத்யங்களைக் கண்டறிந்து அநுபவித்து அவற்றை நாமும் அடைய வேண்டும் என்ற பரம கிருபையிலேயே சாஸ்திர விதிகளைக் கொடுத்திருக் கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் "சுத்து, சுத்திக்கோ, அதுகளை வலமாப் பண்ணு, மெதுவாப் பண்ணு" என்று சொல்கிறார்களென்றால் அதெல்லாம் நம் க்ஷேமத்தை உத்தேசித்துத்தான். ஏதொன்று அவர்கள் சொன்னாலும் அர்த்தத்தோடு சொன்னதுதான். வேறே காரணம், எக்ஸ்ப்ளனேஷன் தேடவே வேண்டாம். புத்தி சும்மாயிருக்காமல் கேள்வி கேட்கிறதே என்றுதான் காரணத்தைத் தேடி எக்ஸ்ப்ளெய்ன் என்று பண்ணுவ தெல்லாம். அவர்கள் சொன்னது அர்த்தத்தோடுதான்; அது ஜீவர்களுடைய க்ஷேமத்திற்காகத்தான் என்பதற்கு proof வேண்டுமென்றால், பெரிய proof, அவர்கள் சொன்ன படியே பக்தி விச்வாஸத்தோடு பண்ணியதாலேயே அநாதி காலமாக, வேறே எந்த தேசத்திலும் இல்லாத அளவுக்கு, இங்கே தலைமுறைதோறும் எல்லா ஜனங்களுமே பொதுவாக சாந்தர்களாகவும் நல்லவர்களாகவும் இருந்து வந்திருப்பதும், அவர்களில் எத்தனையோ பேர் மஹான்களாகவே அநுக்ரஹம் பண்ணிக்கொண்டு இருந்ததும்தான். கேள்வி கேட்க ஆரம்பித்த நாளாக ஏற்பட்டிருக்கிற துர்த்தசையை ப்ரத்யக்ஷமாகவே பார்க்கிறோம்.

Koviloor Digital Library

இருந்த இடத்திலேயே விழுந்து கிடக்கிற நமஸ்காரத்திற்குப் பூர்வாங்கமாக இருக்கப்பட்ட ப்ரதக்ஷிண ஸப்ஜெக்டைப் பெரிசாகவே சுற்றி வளைத்து ப்ரதக்ஷிணம் பண்ணிவிட்டேன்!

சக்தியில் ஆரம்பித்து சாந்தத்தில் முடிகிறதற்குத்தான் இப்படி ப்ரதக்ஷிணமும், அதை முடித்து நமஸ்காரமும்.

மொத்தத்தில் விஷயம் என்னவென்றால்:

ஒரு மனோபாவத்தை வெளிப்படுத்துவதற்காகச் செய்கிற சரீர க்ரியையே தலைமுறை தலைமுறையாகப் பல பேர் அப்படிப் பண்ணுகிறபோது மரத்தில் வஜ்ரம் பாய்கிற மாதிரி ஒரு உள்பலத்தைப் பெற்றுவிடுகிறது. அப்புறம் இந்த க்ரியையே அந்த மனோபாவத்தை பலப்படுத்தி விருத்தி செய்து கொடுக்க ஆரம்பித்து விடுகிறது. அடிப்படையில் அந்த மனோபாவத்தை நாம் நினைத்து அந்த க்ரியையைச் செய்தால், க்ரியையே நினைப்பை ஆழப்படுத்தி பாவத்தை வளர்த்துக் கொடுக்கும். அப்படி இந்த ஸாஷ்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் விநய ஸம்பத்து என்ற உசந்த – [சிரித்து] தாழ்மையாலேயே உசரமான — பாவத்தை போஷித்துக் கொடுக்க உதவியாயிருக்கின்றன.

விநயத்தின் சிறப்பு

நம்முடைய புராதனமான 'ட்ரெடிஷ'னில் விநய குணத்திற்கு ரொம்பவும் சிறப்புக் கொடுத்திருக்கிறது. பதவி, பணம், அறிவு, அழகு என்று ஒவ்வொன்றை வைத்தும் அஹங்காரம், தலைக்கனம் ஏற இடமுண்டானாலும் அந்தத் தலைக்கனமும் ரொம்பத் தலைதூக்கி நிற்பது 'அறிவிலே நாம் பெரியவர்' என்று ஒருவர் நினைக்கிற போதுதான்! அப்படியிருப்பவர்கள் எதையும் துச்சமாக, தூக்கி எறிந்து, பரிஹஸித்து எல்லாம் பேசுவார்கள். ஆகையால் அப்படிப்பட்ட அறிவு விருத்தியை

Koviloor Digital Library

விநயத்தோடு சேர்த்து இறுக்கி முடிச்சுப் போட்டுக் கொடுத்து விட்டால் எல்லாவிதமான தலைக்கனங்களையும் அடக்கி இறக்கி விட்டதாக ஆகிவிடும். இதைத்தான் நம் சாஸ்திரங்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தியிருக்கின்றன—அதாவது வித்யையானது விநயத்தோடு சேர்ந்தே பயிலப்பட வேண்டும்; இல்லாவிட்டால் 'கற்றது அனைத்தும் வீண்' என்று சொல்லியிருக்கின்றன. பகவானும் கீதையில் **"வித்யா–விநய ஸம்பன்ன"** என்று சேர்த்துச் சொல்லியிருக்கிறார்*.

விநயம் இருக்கிற இடத்தில்தான் ஈச்வர க்ருபை சேருமாதலால் எல்லாரும் அதற்கு ஆசைப்பட்டு, அதற்கு உபாயமாக உள்ள நமஸ்காரத்தை நிறையப் பண்ண வேண்டும். பெரியவர்களைத் தேடித் தேடிப் போய் நமஸ்காரம் பண்ணணுமென்று அந்த நாளில் சொல்லிக் கொடுப்பார்கள்.

நமஸ்காரத்திற்கு உரியவர்கள்: வயது வரம்பு விஷயம்

அதில் ஒரு வயஸு வரம்பு சொல்வதுமுண்டு. மூன்று வயஸாவது பெரியவனாக இருப்பவனுக்குத்தான் பூமியில் விழுந்து நமஸ்காரம், மற்றவர்களுக்கு வேறே தினுஸில் 'விஷ்' பண்ணுவது என்பார்கள். முன்னேயே சொன்னாற்போல, விநயம் ரொம்பக் குறைந்து வருகிற இந்நாளில் நமஸ்காரப் பழக்கத்தை எவ்வளவு வ்ருத்தி செய்து கொடுத்தாலும் நல்லதுதான் என்பதால் குறைந்த பக்ஷம் மூன்று வயஸு ஜாஸ்தி இருக்கணும் என்பதைப் பார்க்காமல் நம்மை விடப் பெரியவர்களாக உள்ள எல்லாருக்குமே நமஸ்காரம் பண்ணிவிடலாமென்று தோன்றுகிறது.

* 5.18.

Koviloor Digital Library

கண்டிப்பான சாஸ்த்ர விதிப்படியேகூட நம்மைவிட வயஸில் சின்னவர்களாகவுள்ள சில பேருக்கும் நமஸ்காரம் பண்ண வேண்டுமென்று இருக்கிறது. உதாரணமாக, மன்னி வயஸில் சின்னவளாகவே இருந்தாலுங்கூட ஸ்தானத்தால் தாயார் மாதிரி என்பதால் நமஸ்காரம் பண்ணவேண்டும். அதே மாதிரிதான் குரு பத்னியும் ஒருவேளை நம்மைவிட வயஸுக் குறைவானாலும் நமஸ்கரிக்கணும். பொதுவாகவே கூட, நம்மைவிட வயஸில் பெரிய எவருடைய பத்னியும் அவரில் பாதி என்பதாலும், தம்பதி ஸமேதர்களாக நமஸ்கரிப்பது விசேஷம் என்பதாலும் அந்த ஸ்த்ரீகளுடைய வயஸைப் பார்க்காமல் விழுந்து நமஸ்கரிக்கணும். வித்யையில் பெரியவர், குணத்தில் பெரியவர், அநுபூதிமானாக இருப்பவர், பக்த ச்ரேஷ்டர்கள், ஞானிகள், ஸந்நியாஸிகள், ஆத்ம ஸம்பந்தமான, தர்ம ஸம்பந்தமான ஸ்தாபனங்களில் ஆசார்ய ஸ்தானத்திலுள்ளவர்கள் — அதாவது பணம், பதவி, அந்தஸ்துகளால் இல்லாமல் வேறே விதங்களில் பெரியவர்களாக உள்ள எல்லோருக்குமே இந்த மூன்று வருஷ வித்யாஸம் கிடையாது. நம்மைவிட வயஸில் சின்னவர்களானாலும் நமஸ்கரிக்கணும். குரு புத்ரனையும் லிஸ்டில் சேர்த்துக் கொள்ளணும்.

'தம்பதி ஸமேதராக' என்று நமஸ்கரிக்கப்படுபவர் விஷயமாகச் சொன்னேன். நமஸ்காரம் செய்பவர்களுக்கும் அது பொருந்தும். பத்னியோடு போய் ஒருவருக்கு நமஸ்காரம் பண்ணினால் இரண்டு பேரும் சேர்ந்தே நமஸ்கரிக்கணும். வயிற்றில் பிறந்ததுகளும் கூட இருந்தால் குடும்பம் மொத்தமுமே சேர்ந்து ஒன்றாக நமஸ்காரம் செய்யணும். குடும்ப ஐக்யத்தை இப்படியெல்லாம் வளர்த்துக் கொடுத்திருக்கிறார்கள்.

நிறையப் பேரின் காலில் போய் விழ விழ அஹங்காரம் குறைந்துகொண்டே வரும் என்பதுதான் பொதுக்கொள்கை.

Koviloor Digital Library

ஒற்றை 'நம:' இல்லை

நாம் தேடிப் போகிற அந்தப் பெரியவர்கள் அவர்களே ஆசீர்வாதம் செய்கிறவர்களாகவோ, நமக்காக நாராயணனின் ஆசீர்வாதத்தை ப்ரார்த்திக்கிறவர் களாகவோ, தனக்கு ஸம்பந்தமில்லையென்று அவனிடம் நமஸ்காரத்தைத் தூக்கிப் போடுபவர்களாகவோ, எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். நாம் அதைப் பற்றி யோஜிக்காமல் பெரியவராக இருக்கிற அந்த எல்லா தினுஸுக்காரர்களுக்கும் முன்னாடி **"நமோ நம:"** என்று பூமியில் சரீரத்தைத் தள்ளி விட்டோமானால் அந்த நாராயணனின் க்ருபை எப்படியோ ஒரு ரூபத்தில் நமக்குக் கிடைத்து விடும்.

ஒற்றை 'நம:' சொல்வதில்லை; **'நமோ நம:'** என்று பலவாகப் பெருக்கியே சொல்வது. பேச்சு வார்த்தையில் கூட "உனக்கு ஆயிரம் நமஸ்காரம்; கோடி நமஸ்காரம்" என்கிறோம்! "அனந்த கோடி நமஸ்காரம்" என்றே பெரியவர்களுக்குக் கடிதாசு முதலியதில் எழுதுவது[1].

"நமஸ்தஸ்யை, நமஸ்தஸ்யை, நமஸ்தஸ்யை, நமோ நம:" — என்றே அம்பாளுக்கு நமஸ்காரத்தை அடுக்கிக் கொண்டு போய் அநேக ச்லோகங்கள் 'ஸப்தசதீ'யில் இருக்கிறது[2].

---

1. "அனந்த நமஸ்காரம்" என்றே ஓர் அடியார் ஸ்ரீசரணருக்கு மடல் எழுதுவது. இதுபற்றி அவரிடம் குறிப்பிட்ட ஸ்ரீசரணர், "நீ ஏன் 'கோடி'யைத் தள்ளிவிட்டு எழுதுகிறாய் என்று முதலில் நினைத்தேன். உடனேயே புரிந்துவிட்டது. 'அனந்தம் என்று சொன்னதற்கு அப்புறம் அதற்குக் கோடி மடங்கு ஏது, மடங்கு என்பதே ஏது? அனந்த கோடி ஸரியில்லைதான்' என்று புரிந்துகொண்டேன்" என்றார். 'அனந்தம்' என்றால் 'முடிவில்லாதது', 'முடிவிட முடியாத எண்' என்று பொருள்.
2. துர்கா ஸப்தசதீ ('தேவீ மாஹாத்மியம்', 'சண்டீ' என்றும் வழங்குவது) அத். 5.

Koviloor Digital Library

ரொம்பவும் பெரியவர்களாக இருப்பவர்களுக்கு ஸாஷ்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணும்போது நாலு தடவை பண்ணவேண்டும் என்று சிஷ்ட ஸம்ப்ரதாயத்தில் [சான்றோர் மரபில்] இருந்து வருகிறது. வைஷ்ணவர்களில் ஒரு ஸம்ப்ரதாயத்தில் அந்தப் பெரியவர் போதுமென்று சொல்லும்வரை நமஸ்கரித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நமஸ்காரத்தை வளர்த்துக் கொடுத்திருக்கும் ட்ரெடிஷனில் வந்த நாம் இந்தப் பெரிய பிதுரார்ஜிதம் வீணாக விடப்படாது.

விநயத்தோடு, மேலும் மேலும் விநயத்திற்காக ஆசைப்பட்டு இந்த க்ரியையைப் பண்ண வேண்டுமென்பது ரொம்பவும் முக்யம். அந்த அடிப்படை எண்ணம் இல்லா விட்டால் நமஸ்காரம் என்பது தண்டால் மாதிரி ஒரு கஸரத்துத்தான். தண்டாகார நமஸ்காரத்தைத் தண்டால் நமஸ்காரமாக்கி ஒன்றுக்குமே உதவாத 'தண்ட'மாகப் பண்ணி அபசாரப்படக்கூடாது. கஸரத் பழகி உடம்பை புஷ்டி பண்ணிக் கொண்டு மட்டும் என்ன ப்ரயோஜனம்? உள்ளத்தை திவ்யாநுபவங்களால், ஆத்மாநுபவத்தால் புஷ்டி பண்ணிக் கொள்ள இந்த மநுஷ்ய ஸ்ருஷ்டி ஒன்றுக்கே பகவான் வழி போட்டுக் கொடுத்திருக்கிற போது, உடம்பளவில் மட்டும் மிருக பலத்தை விருத்தி செய்து கொண்டால் நாமும் திர்யக் ஜீவராசிதான். பகவான் கொடுத்திருக்கும் அந்த வழிகள் பலவிதமாக இருந்தாலும் முக்யமான லக்ஷ்யம், கொழுத்துக் கிடக்கிற அஹம்பாவ புஷ்டியை விநயத்தினால் மெல்லிசு பண்ணி இளைத்துத் தேய வைப்பதுதான். அதற்கு உபாயம் நராக்ருதியில் நமக்கு நேரே பெரியவர்களாக இருந்து கொண்டிருப்பவர்களின் காலடியில் **'நமோ நம:' 'நமோ நாராயணாய'** என்று விழுவதுதான்.

Koviloor Digital Library

ஜன்ம விமோசனமே அளிப்பது

"பரமாத்மாவையே நமஸ்காரம் என்று பாவித்து உபாஸியுங்கள்; அப்போது எல்லாக் காமங்களும் உங்களை நமஸ்கரிக்க ஆரம்பித்து விடும்'' என்று வேதம் சொல்லியிருக்கிறது*. என்ன அர்த்தம்? பலவிதமான காமங்களின்—அதாவது, விருப்பங்களின்—நிறைவேற்றத்தை வேண்டித்தான் பொதுவாக நாம் நமஸ்கரிப்பது. அதெல்லாம் நிறைவேறுவது ஸாத்யமா? நம் கர்மா அதற்கு விடுமா? அப்படியே நிறைவேறினாலும் அதனால் ஆத்மாவின் நிறைந்த நிறைவைப் பெற முடியுமா? **"ஆசைக்கோரளவில்லை"** என்றபடி இந்த விதமான ப்ரார்த்தனைக்கு முடிவேயில்லாமல் ஒன்று விட்டால் இன்னொன்று என்று பிடுங்கி எடுத்தபடிதான் போகும். ஆனபடியால் புத்திசாலித்தனமாக ப்ரார்த்திப்பதென்றால் எல்லாக் காமனைகளையும் [விருப்பங்களையும்] விட்டு விட்ட விடுதலை நிலைக்காகத்தான் வேண்டிக் கொள்ள வேண்டும். **"வேண்டாமை வேண்டி"** என்று இதை அழகாகச் சொல்வார்கள். அந்த விடுபட்ட நிலையைத்தான் 'காமங்கள் இவனை நமஸ்கரிக்கும் ஸ்திதி' என்று வேதத்தில் சொன்னது. இவன் ஒரு காமனைப் பூர்த்திக்காகவும் அடி பணியவில்லை; காமனைகள்தான், "எங்களை இப்படித் திரஸ்காரம் பண்ணி விட்டீர்களே! கொஞ்சம் கண்திறந்து பாருங்களேன்!" என்று இவனுக்கு அடிபணியுமாம்! ச்ருதி வாக்யம் இதைத்தான் கவிநயத்தோடு சொல்கிறது!

'வயதானவர்களை—அதாவது யோக்யாதம்சம் நிரம்பிய பெரியவர்களை—தினமும் அணுகிப் பணிவிடை பண்ணி நமஸ்கரிக்கும் ஒழுக்கமுள்ளவனுக்கு நாலு ச்ரேயஸ்கரமான விஷயங்கள் மேலும் மேலும்

* தைத்திரீய உபநிஷத், 3.10.4.

Koviloor Digital Library

வளர்கின்றன' என்று 'மநுஸ்ம்ருதி'யில் சொல்லி, அந்த நாலு ஆயுஸ், வித்யை, யசஸ் [புகழ்], பலம் என்று விளக்கி யிருக்கிறது.

அபிவாதநசீலஸ்ய நித்யம் வ்ருத்தோபஸேவிந: |
சத்வாரி தஸ்ய வர்தந்தே ஆயுர்–வித்யா–யசோ–பலம் ||[1]

'ஆயு: ப்ரஜ்ஞா' என்றும் பாடபேதம் இருக்கிறது. 'வித்யா'வுக்குப் பதில் 'ப்ரஜ்ஞா', 'ப்ரஜ்ஞா' என்றால் உசந்த அறிவு. 'வித்யா' என்பதற்கும் கல்வி என்பதோடுகூட இந்த அர்த்தமும் உண்டு.

'நிலத்திலே கழி மாதிரி தண்டனிட்டுக் கிடக்கிறவன் அடைகிற ச்ரேயஸை நூறு யாகம் பண்ணினவனும் அடைய முடியாது'; 'ஒரு நமஸ்காரம் பத்து அச்வமேதத் திற்கு ஸமம் என்பதுகூட ஸரியில்லை. ஏனென்றால் அந்தப் பத்து அச்வமேதக்காரனுக்குப் புனர்ஜன்மா உண்டு. நமஸ்காரமோ ஜன்ம விமோசனத்தையே தருகிறது' என்றெல்லாம் தர்ம சாஸ்த்ரங்களில் நமஸ்கார பலனைச் சொல்லியிருக்கிறது.

நமஸ்காரம் ஜன்ம விமோசனமே தருகிறது என்ற அபிப்ராயத்தை ஒரு பெரியவர் ரொம்பவும் கவி நயத்தோடு பரமேச்வரனிடம் ப்ரார்த்தனையாகத் தெரிவிக்கிறார்:

வபு: ப்ராதுர்பாவாத் அநுமிதமிதம் ஜன்மனி புரா
புராரே ந க்வாபி க்வசிதபி பவந்தம் ப்ரணதவான் |
நமந்முக்த: ஸம்ப்ரத்யஹமதநு: அக்ரேப்யநதிமான்
ஈதீச க்ஷந்தவ்யம் ததிதம் அபராத த்வயமபி ||[2]

"பரமேச்வரா! என்னுடைய இரண்டு அபராதங் களை நீ க்ஷமிக்கவேண்டும்" என்கிறார்.

1. 2. 121
2. ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர், 'குவலயாநந்தம்'.

Koviloor Digital Library

"என்ன அந்த இரண்டு?" என்றால், "ஒன்று, போன ஜன்மாவில் நான் உனக்கு நமஸ்காரம் பண்ணாதது. அது எப்படி எனக்குத் தெரிந்தது என்றால், இப்போது இந்த சரீரத்தில் ஜன்மா எடுத்திருக்கிறேனோல்லியோ, அதிலிருந்தே தெரிகிறது! அதெப்படி என்றால் நான் மட்டும் போன ஜன்மாவில் உன்னை நமஸ்கரித்தி ருந்தேனானால் இப்படியொரு புனர்ஜன்மாவே வந்திருக்காதே!"

"ஸரி, இன்னொரு அபராதம் என்ன?" என்றால் "அடுத்த ஜன்மாவில் நான் உனக்கு நமஸ்காரம் பண்ணப் போவதில்லை என்பதுதான்."

"ஏனப்படிப் பண்ணாமலிருக்கணும்" என்றால், "அதுதான் இந்த ஜன்மாவில் இந்த சரீரத்தை உன் முன்னே போட்டு விட்டேனே! அதனால் இந்த சரீரம் விழுந்த விட்டு இன்னொரு சரீரம் எடுக்க முடியாமல் ஜன்ம நிவிருத்தி பெற்றுக்கொண்டு விட்டேனே! மறு ஜன்மாவே இல்லை என்கிறபோது அதில் நமஸ்காரம் பண்ணுவது என்பதற்கு ஏது இடம்?" என்றிப்படி ரொம்பவும் சாதுர்யமாக நமஸ்கார மஹிமையைச் சொல்லியிருக்கிறார்.

பாகவதத்தின் முடிவிலே முடிந்த முடிவாக ச்லோகம் இருக்கிறது:

> **நாம ஸங்கீர்த்தநம் யஸ்ய ஸர்வபாப–ப்ரணாசநம் |**
> **ப்ரணாமோ து:கசமநஸ்–தம் நமாமி ஹரிம் பரம் ||**

'நாமம்' என்று முன்பாதி ஆரம்பம்; 'ப்ர–நாமம்' [ப்ரணாம] என்று பின்பாதி ஆரம்பம்; நடுவிலே 'ப்ர–நாசம்' [ப்ரணாசனம்]. 'நாமம்-ப்ரணாமம்-ப்ரணாசம்' அழகான சப்த ஜாலம்!

அது இருக்கட்டும். அர்த்த விசேஷம், குறிப்பாக நமஸ்கார விசேஷம், பார்க்கலாம்.

Koviloor Digital Library

பரவஸ்துவான ஹரியுடைய நாம ஸங்கீர்த்தனம் ஸகல பாபத்தையும் நன்றாக நசிப்பிக்கிறது என்று முன் பாதி சொல்கிறது. அதோடேயே க்ரந்தத்தைப் பூர்த்தி செய்திருக்கலாம். அதற்கு ஸகல ந்யாயமுமிருக்கிறது. ஆனால் அப்படி முடிக்காமல் நமஸ்கார மஹிமையைப் பின் பாதியாகச் சொல்லியே பூர்த்தி செய்திருக்கிறது.

ப்ரணாமோ து:க சமந:

'அவனுக்கு நமஸ்காரம் பண்ணுவது துக்கத்தை சமனம் செய்கிறது. ஸகல துக்கத்தையும் போக்குகிறது.'

தம் நமாமி ஹரிம் பரம்

'ஆகையினால் பரவஸ்துவான அந்த ஹரியை நமஸ்காரம் பண்ணுகிறேன்.'

'எந்தப் பரவஸ்துவான ஹரியின் நாம கீர்த்தனம் ஸகல பாபத்தையும் நசிப்பிக்குமோ, எவனை நமஸ்கரிப்பது துக்கத்தைப் போக்குமோ, அவனை நமஸ்கரிக்கிறேன்' என்று முழு ச்லோக அர்த்தம்.

பாபம் போனாலே துக்கமும் போகாதா என்றால் பாபம் போனால் ரொம்பவும் தார்மிகமாக, நேர்மையாக இருந்து கொண்டிருக்கலாம். ஆனால் அதுவே துக்க சமனம் இல்லை. என்ன துக்கம்? அவனோடு சேரவில்லையே என்ற துக்கந்தான். அவனோடு சேராத மட்டும், அவனிடமிருந்து பிரிந்து வந்த ஜீவனுக்கு அடிமனஸில் துக்கந்தான். தர்மமாக, righteous-ஆக, நல்லொழுக்க morality-யோடு வாழுவதால் மாத்திரம் நிறைவு கண்டுவிட முடியாது. நிறைவு இல்லை என்றால் குறைவுதான். குறை என்றால் துக்கந்தானே? அது அவனோடு கலந்தாலொழியத் தீராது. அதை அளிக்கவல்லது நமஸ்காரந்தான். இதையே ச்லோகம் சொல்கிறது.

Koviloor Digital Library

நாம கீர்த்தனம் என்று கார்யமாகப் பண்ணுவதெல்லாமும் ஓய்ந்து போய் ஒன்றும் பண்ணாமல் சரணாகதி என்று விழுவது நமஸ்காரத்தில்தான். அதனால் தான் அதற்கே அத்யுன்னத [அதிஉன்னத] ஸ்தானம் தந்து ஸ்ரீமத் பாகவதத்தை சுகாசார்யாள் பூர்த்தி செய்திருக்கிறார்.

பாபம் என்று கார்யமாகப் பண்ணியதைப் போக்கடிக்க நாம கீர்த்தனம் என்ற கார்யத்தைப் பண்ணியாக வேண்டும். அப்படிப் பாபத்தைப் போக்கிக் கொண்டால்தான் அவனைச் சேருகிற தாபம் நன்றாக மூண்டு, அப்புறம் 'நாமாகச் சேரமுடியாது. அவன்தான் சேர்த்துக் கொள்ளணும். அது அவன் கார்யந்தான். அவனுடைய கார்யம் மாத்ரமேதான். நாம் கார்யமே யில்லாமல் சரணாகதி என்று கிடந்தால்தான் அவன் அந்தக் கார்யத்தைப் பண்ணுவான்' என்ற ஞானம் பிறந்து, சரணாகதிக்கே க்ரியையாக — நம்முடைய கடைசிக் கார்யமாக — அவன் காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணி அப்படியே கிடப்போம்.

இது பாகவதத்தின் கடைசி ச்லோகம். கீதையின் கடைசி ச்லோகத்தில்* பாகவதத்தின் நாயகனாக உள்ள அந்த பகவானே அர்ஜுனனை — அதாவது ஸகல ஜீவ லோகத்தையும் — சரணாகதிதான் பண்ணச் சொல்கிறார். அப்படிப் பண்ணினால்,

"அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி"

"நான் உன்னை எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன்" என்கிறார். அதுதான் பாகவதத்தில் நாம் பார்த்த 'ஸர்வ பாப ப்ரணாசனம்.'

* 18.66 இதற்குப் பிறகும் சில ச்லோகங்கள் இருப்பினும் இதுவே பகவானுடைய உபதேசம் முடியும் ச்லோகம்.

Koviloor Digital Library

அப்புறம் பகவானின் முடிவான மங்களவாக்காக

"மா சுச:"

"துக்கப்படாதேப்பா!" என்கிறார். பாகவதத்தில் பார்த்த 'து:க சமனம்'.

சரணாகதி சாஸ்திரமாகவே பாகவதத்தையும் முடிக்க வேண்டும் என்று சுகாசார்யாள் பண்ணினபோது, அதைக் குறிப்பிட நமஸ்காரத்தையே சொல்லியிருக்கிறார்.

எதைவிட பெரிய பலன் இல்லையோ அந்த பகவத் ஐக்கியத்தையே நமஸ்காரம் — நிஜமான நமஸ்காரம் — கொடுத்துவிடுகிறது.

நமஸ்காரம் தனக்குத்தானே பயன்

நமஸ்காரம் பண்ணி அதன்மூலம் வேறேதோ காமனையின் நிறைவேற்றம் என்ற பலனைக் கேட்பதே ஒரு தினுஸில் அசட்டுத்தனந்தான். ஏனென்றால் அதுவேதான் 'ஆடோமாடிக்'காக விநயம் என்ற மஹா பலனைக் கொடுத்து விடுகிறதே! அதுவே பலன், பாக்யம், செல்வம் எல்லாம். ஆசார்யாள்கூட வேறே யாரோ தரித்ர தம்பதிக்காகக் கனகதாரை கேட்டு மஹா லக்ஷ்மியை ஸ்துதித்தாரே தவிர, அந்த ஸ்துதியில் தமக்கு இன்னது வேணும் என்கிற போது கனகம் முதலான பொருட்செல்வம் எதையும் கேட்காமல், அவளை நமஸ்கரிப்பது என்பதேதான் தாம் வேண்டும் செல்வம் என்று சொல்லியிருக்கிறார்: "த்வத் வந்தனானி மாமேவ மாதரநிசம் கலயந்து" என்று*.

* இதன் விரிவு : "தெய்வத்தின் குரல்" பகுதி 5, 'குருமூர்த்தியும் திரிமூர்த்திகளும்' என்ற உரையில். 'நமஸ்காரமே செல்வம்: ஆசார்யாள் உணர்த்துவது' என்ற பிரிவு.

Koviloor Digital Library

மனஸ்காரம்

ஆகையினால் [த்யாகையர்] "எந்தரோ மஹாநுபாவுலு அந்தரிகி வந்தநமு" என்றாற்போல எங்கே எவர் பெரியவர்களாகத் தெரிந்தாலும் அவர்களுக்கெல்லாம் அத்தனை பேருக்கும் — 'அந்தரிகி' - ஸாஷ்டாங்கமாக, ஸ்த்ரீகளானால் பஞ்சாங்கமாக நமஸ்காரம் பண்ணுங்கள்.

இப்படிச் சொல்கிறேனே என்பதற்காகக் கூட்டமாக நெரிகிற இடங்களில்கூட விழுந்து நமஸ்காரம் பண்ணணும் என்று பார்க்காதீர்கள்! அது மற்றவர்களுக்கும் ஹிம்ஸை; நீங்களும் மிதிபட்டுப் போவீர்கள்! அதனால் கால, தேச, வர்த்தமானங்களைப் பார்த்துதான் எதுவும் செய்யணும் என்பதை இந்த விஷயத்திற்கும் எடுத்துக் கொள்ளுங்கள். கூட்டத்திலே மனஸால் நமஸ்கரித்தால் போதும். உடம்பால் பண்ணாததற்கும் சேர்த்து மனஸால் deep ஆகப் பண்ணினால் போதும். நமஸ்காரத்தை மனஸ்காரமாக்கு கிறது! மற்ற இடங்களில் மனஸை ஸரிப்படுத்தவே சரீரத்தை பூமியில் போட்டு நமஸ்காரம் பண்ணுங்கள்.

தற்கால நிலைமையில் அவசியமானது; பொருளாதாரத்திற்கு அருளாதாரத்தால் வரம்பு

'நமஸ்கார மாஹாத்ம்யம்' ஸவிஸ்தாரமாகச் சொல்லி விட்டேன். இந்த 'டாபிக்' எதற்காக எடுத்துக் கொண்டேனென்றால், வர வர ஜனங்களிடம் விநய குணம், பணிவு, பவ்யம் என்பது குறைந்து கொண்டே வருகிறது. அப்படி ரொம்ப வருத்தப்படும்படியாக இன்றைக்கு ஒருத்தர் ஒன்று சொன்னார். அதைப் பற்றியும், அதற்கு மாற்று மருந்து பற்றியும் யோஜனை போயிற்று. அதைத்தான் தெரிவிக்க நினைத்துப் பேசினேன்.

Koviloor Digital Library

என்னவென்றால்: ஸமத்வம், ஸ்வதந்திரம், ஸ்வய மரியாதை என்றெல்லாம் ரொம்பவும் முழக்க ஆரம்பித்த நாளாகவே விநய ஸம்பத்துக்கு ஹானி ஏற்பட ஆரம்பித்து இப்போது ஒரே முரட்டுத்தனத்திலும் அடங்காமையிலும் கொண்டு விட்டிருக்கிறது. Right, right என்று கிளம்பியதில் ஒரே fight ஆகியிருக்கிறது! ஸமூஹ வாழ்க்கை, பொருளாதாரம் என்று பார்த்தால் இந்தப் புதுக் கொள்கைகளிலும் ஓரளவு ந்யாயம் இல்லாமலில்லை. இதை ஆக்ஷேபிக்காமல் ஒப்புக் கொள்கிறேன். ஆனாலும், எதற்கும் ஒரு அளவு, வரம்பு இல்லையா? அந்த அளவு மீறாமல் வரம்பு கட்டிப் புதுக் கொள்கைகளை அமல்படுத்தினால் எல்லாம் அதனதன் இடத்தில் சீராக இருந்து, இப்போதுள்ள ஓயாத வர்க்கப் போராட்டங்கள் ஓய்ந்து லோகத்தில் சாந்தியும் ஸௌஜன்யமும் ஐக்கியமும் ஏற்படும்.

எப்படி அளவுபடுத்துவது, வரம்பு கட்டுவது என்றால் ஸமூஹம் முழுவதிலும் மறுபடி விநயஸம்பத்தை விருத்தி பண்ணுவதால்தான். பொருளாதாரம் மட்டும் ஒரு வாழ்க்கைக்குப் பூர்ணத்வம் தந்து விடுமா என்ன? ஒரு நாளும் இல்லை. அருளாதாரத்தைப் பிடித்து அதனால் இதை அளவுபடுத்தினால்தான் பூர்ண வாழ்வின் நிறைவு ஏற்படும். அந்த அருளாதாரத்தைப் பிடிக்க வழி விநயந்தான். விநயத்தை வரவழைக்க வழி? அது வேண்டும் என்ற 'பேஸிக்' எண்ணத்தோடு பெரியவர்களாக இருக்கப் பட்டவர்களைத் தேடிப் போய் விழுந்து நமஸ்காரம் பண்ணுவதுதான். இந்த க்ரியையே 'பேஸிக்'காக, பேஸ்மென்டாக அடிமட்டத்தில் இருந்ததைப் பெரிய மாளிகையாக எழுப்பிக் கொடுத்து விடும்.

இந்த தேசத்தில் காலம் காலமாக வந்திருக்கிற மரபின் சக்தி விசேஷத்தால் எப்பேர்ப்பட்ட தன்மான சூரரானாலும் ஸரி, கொஞ்சம் மனஸு வைத்து விட்டால் தானாக அந்த 'பேஸிக்' மனோபாவம் ஏற்பட்டுவிடும்.

Koviloor Digital Library

இப்பவுங்கூட அந்த மனோபாவம் அஸ்தமித்தே போய்விடவில்லை. அடி தளத்தில் இருந்துகொண்டே தானிருக்கிறது. 'அவரவரும் அவரவர் இஷ்டப்படி; யாருக்கும் கீழ்ப்படியக்கூடாது' என்றிருக்கிற ஸ்வதந்திர யுகம் இது. ஆனாலும் யாரைப் பார்த்தாலும் ஏதோ ஒரு ஸ்வாமி, எவரோ ஒரு ஸ்வாமியார் என்று போய்க் காலில் விழுந்து கொண்டிருப்பதாகத்தான் தெரிகிறது. இல்லா விட்டால், தங்களுக்குப் பிடித்த தலைவர், [சிரித்து] ஸினிமா ஸ்டார், [மேலும் சிரித்து] கிரிக்கெட் ஸ்டார்—இப்படி எவரையாவது ஸ்வாமியாக ஆக்கி நமஸ்காரம் பண்ணுவதாகத் தெரிகிறது! நாஸ்திகர்கள், தன்மானக் காரர்கள் என்கிறவர்கள்தான் தலைவர்கள் என்கிறவர் களுக்கு ஏகமாக நமஸ்காரமாகப் பண்ணி, ஒரே புகழாரமாகப் பேச்சுத் திறமையில் சூட்டி, பாகவதம் சொன்னபடி 'ப்ரணாம'த்தோடு 'நாம ஸங்கீர்த்தன'மும் செய்கிறார்கள் என்று தெரிகிறது!

ஆகக்கூடி, இந்த மண்ணிலே பிறந்த வாசி எல்லாருக்கும் நமஸ்காரம் பண்ணுவதில் ருசி உள்ளுக்குள்ளே இருந்து கொண்டுதானிருக்கிறது. அதை ஸரியான பாத்திரங்களுக்குச் 'சானலைஸ்' பண்ணுவதுதான் செய்ய வேண்டியது.

அதற்கு அந்த நாராயணனே வழி திறந்து விட வேண்டும்.

விதி விலக்கு*

இப்படி இப்படி நமஸ்கரிக்கவேண்டும்; அதில் இத்தனை அர்த்தமிருக்கிறது; அது இவ்வளவு பலனைக்

* இவ்வறிவுரையைக் கேட்டோரில் உடற்பிணி காரணமாகக் குனிந்து நமஸ்காரம் செய்யவியலாத ஒருவரைக் கண்டதில் கருணா மூர்த்தியான ஸ்ரீசரணர் அருளியது இப் பகுதி.

Koviloor Digital Library

கொடுக்கிறது என்று நான் விஸ்தாரமாய் சொல்வதைக் கேட்டுவிட்டு சரீர உபாதி காரணமாக அப்படிப் பண்ண முடியாதவர்களும் தங்களை வருத்திக் கொண்டு அப்படிப் பண்ண வேண்டும் என்றில்லை. அவர்கள் மானஸிகமாக அப்படிப் பண்ணினாலே போதும். ஸ்தூலமாகப் பண்ண முடியாத அவர்களுக்குத்தான், 'பண்ண முடியலியே!' என்ற feeling நமஸ்காரம் பண்ணுகிறவர்களின் பக்தியையும்விட ஜாஸ்தியாக ஏற்படும். அந்தத் தாபத்தில் தாங்கள் பண்ணும் மானஸிக நமஸ்காரத்தை நன்றாக உணர்ந்து பண்ண முடியும். ஸ்தூலமாகப் பண்ணுபவர்களுக்கு 'மெகானிக்' லாகவும் போய் விடுகிறது போல் அவர்களுக்கு இருக்கவே இருக்காது. 'மெகானிகல்' என்றால் உடம்புதான் இந்தக் கார்யத்தில், மனஸ் வேறே எங்கேயோ என்றுதானே அர்த்தம்? நமஸ்காரமே மானஸிகம் என்கிறபோது மனஸ் அதிலேயே ஒருமைப்பட்டுத்தானே ஆக வேண்டும்?

ஆயிரம் பேர், பத்தாயிரம் பேர் என்று கூட்டம் சேர்ந்தால் ஒவ்வொருவரும் எப்படி விழுந்து நமஸ்காரம் பண்ணமுடியும்? இந்த மாதிரி ஸந்தர்ப்பங்களிலும் மானஸிகமாகப் பண்ணினாலே போதும்.

எந்த விதி இருந்தாலும், ந்யாயமான காரணங்களுக் காக அதற்கு விலக்கும் உண்டு என்பதற்காகச் சொன்னேன்.

அஹங்காரம் நீக்கும் நமஸ்காரம்

ஆத்மாபிவிருத்தியே முக்யமாக இருந்த தேசத்தில் லௌகிக முன்னேற்றமே எல்லாம் என்பதாக இழுத்து விட்டிருக்கிற அஹங்கார ரோகத்திற்கு எனக்குத் தெரிந்த நமஸ்கார மருந்தைச் சொல்லி, இந்தக் 'கார'த்தால் அந்தக் 'கார'த்தை நிவிருத்தி பண்ணச் சொல்லிப் பார்க்கலாமே என்றுதான் இத்தனை சொன்னதும். ஸம்ஸார

Koviloor Digital Library

அந்தகாரத்திலிருந்தே நிவிருத்தி பெற முதற்படியாக நமஸ்காரம் இருப்பதால் சொன்னேன்.

தாம் இவ்விஷயம் சொல்வதன் விசேஷம்

இதை வேறே யார் சொல்வதைவிடவும் நான் சொன்னால் அழுத்தமாகப் பதியும் என்று தோன்றியதால் விஸ்தாரம் பண்ணினேன். இப்படிச் சொல்கிறபோது நானே அஹங்காரம் கொண்டாடிக் கொள்கிறேனா என்ன? அதில்லை அர்த்தம். 'ஸ்தான'த்தை நினைத்துத்தானே இந்த ஸமத்வ – ஸ்வதந்திர – ஸ்வய மரியாதை கோஷமெல்லாம் கிளம்பி, கோஷம் யுத்தமாகவே ஆகி மரியாதைப் பண்பை, விநய குணத்தை விரட்டி வருகிறது? இந்த ஸந்தர்ப்பத்திலே, 'இதை விடவோ இதற்கு ஸமமாகவோ ஒரு ஸ்தானமில்லை' என்கிற உச்சிக்கு ஏதோ விதி வசத்தினால் தூக்கிப் போடப்பட்ட ஒருத்தன், 'தான் யாருக்கும் மரியாதை பண்ணத் தேவையில்லை' என்பதில் நிறைவு காணாமல் 'மரியாதை செலுத்தத் தனக்குச் சான்ஸே இல்லையே! இப்படியும் ஒரு ஜன்மாவா?' என்று ரொம்பவும் குறைந்துதான் கொள்கிறான் என்பது லோகத்திற்குத் தெரிந்தாலே அதற்கு விநயத்தின் அவச்யம் ஆழமாக மனஸில் தைக்கும் என்றுதான் சொன்னது.

எனக்குக் கிடைக்காத, கிடைப்பதற்கில்லாத நமஸ்கார பாக்யத்தை நீங்களெல்லாம் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு ச்ரேயஸ்களை அடைவதற்காக நானும் அந்த நாராயணனை 'நமோ நம:' என்று நமஸ்காரம் பண்ணுகிறேன்.

Koviloor Digital Library

மங்களாரத்தி

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஞானி ஹநுமாரும் அவரது ஞான குருவும்

அதுலித பலதாமம் ஸ்வர்ண சைலாபதேஹம்
தநுஜவன க்ருசாநும் ஞானினாமக்ரகண்யம் |
ஸகல குணநிதானம் வானராணாமதீசம்
ரகுபதிவரதூதம் வாதஜாதம் நமாமி ||

ஆஞ்ஜநேய ஸ்வாமியைப் பற்றிய ச்லோகம்.

துளஸீதாஸ் என்ற பரம பக்தர் 'ராம் சரித் மானஸ்' — 'ராமசரிதமானஸம்' — என்கிற தலைப்பில் எழுதியிருக்கிற ஹிந்தி ராமாயணம் வடக்கேயெல்லாம் ரொம்ப ப்ரஸித்தம். இங்கே நாம் கம்பராமாயணத்தைக் கொண்டாடுவதைவிட அங்கே அவர்கள் அந்த ராமாயணத்தை ரொம்பவும் பூஜிதையாகக் கொண்டாடிப் பாராயணம் பண்ணுவது வழக்கம். முந்நூறு—முந்நூற்றைம்பது வருஷத்துக்கு முன் எழுதிய புஸ்தகம்தான் அது. தமிழ் மாதிரிப் பழமை பெறாத ஹிந்தி பாஷைக்கு அந்த ராமாயணத்தால்தான் இலக்கிய ரீதியிலும் ஒரு ஏற்றம் கிடைத்திருக்கிறது. இலக்கியமாகச் சிறப்புப் பெற்றாலும், இலக்கணம் என்று பார்த்தால் அது புலவர் பாஷையில் எழுதினதில்லை. பாமர ஜனங்களும் ரஸித்துப் படிக்கிற மாதிரியான பாஷையிலேயே அதைத் துளஸீதாஸ் செய்திருக்கிறார். அதனால்தான் அது கம்ப ராமாயணத்தை விடவும் ஸர்வ ஜன ப்ரஸித்தமாக, பாமர-பண்டித ரஞ்ஜகம் என்னும்படியாக இருந்து வந்திருக்கிறது. பக்திக்கு பக்தி, கவிதாரஸத்துக்குக் கவிதா ரஸம் என்று இரண்டுமாக அது

Koviloor Digital Library

இருந்தாலும் அதனுடைய பக்தி சக்தியே பொது ஜனங்களை பலமாகத் தொட்டு வருகிறது.

துருக்கர்கள் ஆட்சியில் ஹிந்துக்களை மதம் மாற்றுவதற்காக பலவந்தம் நடந்து வந்த காலத்தில் எழுதிய புஸ்தகம் அது. அந்த பலவந்தத்தையும் மீறி ஜனங்கள் தாய் மதத்தில் ஒட்டிக் கொண்டிருந்ததற்கு 'ராம்சரித்மானஸ்' ஊட்டிய பக்தியும், மத உணர்ச்சியும் ஒரு முக்யமான காரணம். அதிலே வருகிற மஹாவீர பலவந்தரான ஆஞ்ஜநேயரின் ஸாஹஸங்கள் எந்த பலவந்தத்துக்கும் தலை பணியாத ஒரு மனோபாவத்தை ஜனங்களுக்கு ஊட்டியது. துளஸிதாஸே பரம பராக்ரமசாலியான ஆஞ்ஜநேயரின் காப்புக் கவசம் எந்த ஆபத்திலும் பக்தர்களுக்கு இருப்பதைக் காட்டி, ரொம்பவும் வீர சூரம் கொடுக்கும்படியாக 'ஹநுமான் சாலீஸா' என்று நாற்பது ஈரடிச் செய்யுள்கள் கொண்ட ஒரு தனி ஸ்தோத்ரமும் எழுதியிருக்கிறார். எவரானாலும் அதைப் படித்து, மனப்பாடம் செய்யும்படியாகப் பண்ணும் ஆகர்ஷணம் அந்த ஸ்தோத்ரத்துக்கு உண்டு. படித்தாலே மஹா கோழையான சோப்ளாங்கிகளுக்கும்கூட, ஆஞ்ஜநேய ஸ்வாமியின் பலத்தில் தானும் பயில்வானாகி விட்ட மாதிரியான உத்ஸாஹத்தை அது கொடுக்கும். அந்த ஸ்தோத்ரமும் அவர் நாளிலேயே ஜனங்களுக்கிடையே நன்றாக ப்ரஸித்தமாகி, மதமாற்றத்துக்குத் தடுப்பு வேலி போட்டது.

துளஸீதாஸ் ஏதோ கல்பனையில் எழுதினாரென்றில்லாமல் ப்ரத்யக்ஷத்திலேயே ஆஞ்ஜநேய ஸ்வாமியின் பரமாநுக்ரஹத்துக்குப் பாத்திரமானவர். அவருடைய ஜீவ்ய சரித்ரத்தைப் பார்த்தால் அதில் ஆஞ்ஜநேயரோடு அவர் நேர்முகமாகவே எவ்வளவு நெருக்கமாகப் பழகியிருக்கிறாரென்று தெரியும். அவரையே ஆஞ்ஜநேய அம்சமாகச் சொல்வதுண்டு. ஆஞ்ஜநேயர் மாதிரியே அவரும் மூல நக்ஷத்திரத்தில் பிறந்தவர்தான்.

Koviloor Digital Library

அப்படிப்பட்டவர் பண்ணின ஆஞ்ஜநேய ஸ்தோத்ரம்தான் நான் ஆரம்பத்தில் சொன்னது. அவருடைய ராம் சரித் மானஸில் ஆஞ்ஜநேய ப்ரபாவத்துக்கேயான ஸுந்தர காண்ட ஆரம்பத்தில் வரும் மங்கள ச்லோகங்களில் ஹநுமத்பரமாக வருகிற ச்லோகம்தான் அது. உள்ளே கதை ஹிந்தி பாஷையில் இருந்தாலும், 'ராம் சரித் மான'ஸில் வரும் மங்கள ச்லோகங்கள் எல்லாம் அழகான ஸம்ஸ்க்ருதத் திலேயே இருக்கும். அப்படி ஒன்றுதான் நான் சொன்னது.

அதுலித பலதாமம் ஸ்வர்ண சைலாபதேஹம்
தநுஜவன க்ருசாநும் ஞானினாமக்ரகண்யம் |
ஸகல குணநிதானம் வானராணாமதீசம்
ரகுபதிவரதூதம் வாதஜாதம் நமாமி ||

'வாதஜாதம் நமாமி' என்று நமஸ்காரம் பண்ணி முடிகிறது. 'வாதஜாதன்' என்பதுதான் இந்த ச்லோகத்தில் ஆஞ்ஜநேயரின் பெயராக வருவது. 'வாதஜாதன்' என்றால் 'வாயுகுமாரன்'. 'வாதம்'-வாயு; 'வாயுப் பிடிப்பு' என்பதை 'வாதம்' என்றும் சொல்கிறோமல்லவா? 'ஜாதன்' - குமாரன். 'வாதாத்மஜன்' என்றும் இதே அர்த்தத்தில் ஆஞ்ஜநேயருக்கு பெயர் உண்டு. 'வாத(da)ம்' இல்லை; 'வாத(ta)ம்' என்று சொல்ல வேண்டும். 'வாதம்' என்றால் பேசுவது; 'ஆர்க்யூ' பண்ணுவது.

இந்த ச்லோகத்தை நான் சொல்லக் காரணம், அதில் **'ஞானினாமக்ரகண்யம்'** – 'ஞானினாம் அக்ரகண்யம்' என்று வருவதுதான். அப்படி யென்றால் 'ஞானிகளுக்குள்ளே முதல்வராக எண்ணத் தக்கவர்'. ப்ரஹ்ம ஞானிகள், ஆத்ம ஞானிகள் என்று சொல்லப்படுகிறவர்களில் ஆஞ்ஜநேய ஸ்வாமிக்குத் தலைசிறந்த இடம் என்று ச்லோகம் சொல்கிறது.

பொதுவிலே ஆஞ்ஜநேயருடைய சிறப்புக்களாகச் சொல்லப்படுபவை அவருடைய பலம், அதாவது சரீர

Koviloor Digital Library

பலம், வீர பராக்ரமம், துணிச்சல், கார்ய ஸாமர்த்யம், அபாரமான புத்தி தீக்ஷண்யம், குறிப்பாக வ்யாகரணத்தில் படுத்வம் [இலக்கணத்தில் பேராற்றல்], அப்பழுக்குச் சொல்ல முடியாத ப்ரஹ்மசர்யம், தன்னுடைய இத்தனை சக்திகளையும் தனக்காக இல்லாமல் பகவத் ப்ரீதியாக தர்மத்துக்கே ப்ரயோஜனப்படுத்தியது, எல்லாவற்றுக்கும் மேலாக ராம பக்தியில் அப்படியே உருகி ராமருடைய அடியார்க்கடியாராக அடங்கிக் கிடந்த விநயம் ஆகியவைதான். சரீர பலம், கார்ய ஸாமர்த்யம், செய்கிற கார்யத்திலேயே ஆடாத, அசையாத ஈடுபாடு ஆகியவற்றால் அவரைப் பெரிய கர்ம யோகியாகவும், அசஞ்சலமான ராம பக்தியால் பக்த யோக சிகாமணியாகவும்தான் தெரிந்து கொண்டிருக்கிறோம். ஞான யோகியாக அவரை நம்மில் ரொம்பப் பேர் தெரிந்து கொள்ளவில்லை.

அவர் மஹா புத்திமான், '**புத்திமதாம் வரிஷ்டம்**' என்று சொல்கிறபடி* இருந்தவர் என்பதும் நமக்குத் தெரியுமானாலும், புத்தி வேறே, ஞானம் வேறேதானே? இன்றைக்கு லோகத்தில் பல துறைகளில் மஹா புத்திமான்களாகப் பல பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களையெல்லாம் ஞானி என்று சொல்ல முடியுமா? ப்ரஹ்மம் என்ற பரமாத்மாவே 'தான்' என்கிற ஜீவாத்மா என்ற அறிவை அநுபவமாகப் பெற்றவனைத்தான் ஞானி என்று சொல்கிறது — ப்ரஹ்மஞானி என்றும், ஆத்மஞானி என்றும் சொல்கிறது. அந்த அறிவைப் பெறவும் நிரம்ப தத்வ சாஸ்த்ரங்கள் படித்து அவற்றில் புத்தியைச் செலுத்தி அலசிப் பார்க்க வேண்டுமாதலால், இங்கேயும் புத்தி அவசியம்தான் என்றாலும், அந்த புத்தி ஆத்ம விஷயத்தில் மட்டுமே ப்ரவர்த்திப்பதாக இருக்கவேண்டும். புத்திமான்

---

* 'மநோஜவம் மாருத துல்ய வேகம்' எனத் தொடங்கும் ராமாயண பாராயண மங்கள ச்லோகத்தில்.

Koviloor Digital Library

களாக மட்டும் இருப்பவர்கள் அப்படி தத்வ சோதனம் செய்பவர்களாக இல்லாமல் வேறே ஸப்ஜெக்டுகளிலேயே புத்தியைப் ப்ரயோகிப்பவர்களாக இருப்பதுதான் ஜாஸ்தி. தத்வ ஆராய்ச்சியே அவர்கள் பண்ணினாலுங்கூட, அது பெரும்பாலும் வெறும் மூளையின் அலசலாகத்தான் இருக்கும்; பரமாத்ம-ஜீவாத்ம ஐக்யத்தை அநுபவித்தாக வேண்டும் என்ற ஹ்ருதய தாபம் கலக்காத மூளையலசலாக மட்டுமே இருக்கிற அது ப்ரயோஜனமில்லை. அது ஞானமுமில்லை. மஹா புத்திமானேயானாலும் அப்படிப் பட்டவர் ஞானிக்கு எங்கேயோ தள்ளி நிற்கிறவரே.

இங்கே 'புத்திமதாம் வரிஷ்ட'ரான ஆஞ்ஜநேயர் மற்ற புத்திமான்களுக்கெல்லாம் வித்யாஸமாக இருக்கிறார். அவர் வேதாந்தத்தின் பரம தாத்பர்யத்தை அறிந்தநுபவித் தவர். அது மட்டுமில்லை. அப்படி அறிந்தநுபவித்த வர்களிலேயும் முதலாமவராக நினைக்கத்தக்கவர், 'ஞானினாம் அக்ரகண்யர்' என்று அவரை நேருக்கு நேராக அறிந்திருந்த துளஸீதாஸ் சொல்கிறார்.

லோகமறிந்த ஆஞ்ஜநேயருடைய மற்றப் பெருமை களில் சிலதையும் அவர் இந்த ச்லோகத்தில் சொல்லி யிருப்பதால், அதிகப்படியாக அவர் சொல்லியிருக்கும் இதுவும், அதாவது ஆஞ்ஜநேயர் ஞானி ச்ரேஷ்டர் என்பதும் பரம ஸத்யமாகத்தான் இருக்கவேண்டும்.

அந்த மற்றப் பெருமைகள் என்ன? **'அதுலித பலதாமம்'** என்று ஆரம்பிப்பது ஆஞ்ஜநேயரின் சரீர பலத்தைச் சொல்வதுதான். 'அதுலித பலதாமர்' என்றால் 'தன்னிகரில்லாத பலத்தின் இருப்பிடமாக இருப்பவர்'. அப்புறம் **'ஸ்வர்ண சைலாப தேஹம்'** என்பதாக அவருடைய சரீரம் பொன்மலையான மேரு மாதிரிப் பெரிசாக, ப்ரகாசமாக இருப்பதைச் சொல்கிறார். அந்த ஸ்வர்ண வர்ணம் அவருடைய ப்ரஹ்மசர்ய தேஜஸால் ஏற்பட்டது. **'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி'** என்று மாணிக்க வாசகர் சொன்னார். ஆஞ்ஜநேய ஸ்வாமியிடமோ

Koviloor Digital Library

உள்ளொளி ஸ்வர்ண காந்தியாக ஊனிலும் ப்ரகாசித்தது; அந்த ஊனை உருக்காமல் அவர் மேரு பர்வதம் மாதிரியான சரீரியாக இருந்தார். ஏனென்றால், அவர் கர்ம யோகியாக அஸாத்யமான கார்யங்களைச் செய்ய வேண்டியிருந்ததே, அதனால்! அந்த அஸாத்யமான கார்யங்களில் ஒன்றைத்தான் அடுத்ததாக வரும் **'தநுஜ வன க்ருசானும்'** என்பது சொல்கிறது. அப்படியென்றால், காட்டுத் தீ என்று உண்டே, அப்படி அவர் ராக்ஷஸ குலம் என்கிற காட்டை பஸ்மம் பண்ணின அக்னியாயிருந்தவர் என்று அர்த்தம்.

இப்படி அவருடைய கார்ய லோக சதுரத்தைச் சொன்னவிட்டுத்தான் சட்டென்று ஞானி லோகத்துக்குத் துளஸீதாஸ் போய் அவரை 'ஞானினாம் அக்ரகண்ய'ராக ஸ்தோத்ரிக்கிறார்.

அதற்கப்புறம் அவருடைய மனோ விசேஷத்தைச் சொல்கிறார்: **'ஸகல குணநிதானம்'**. அத்தனை ஸத்குணங்களுக்கும் ஒரு தேக்கமாக, கஜானாவாக அவர் இருந்தாரென்று அர்த்தம். அந்த குணங்களில் ஒன்றாகவே அவருடைய புத்தி தீக்ஷண்யத்தையும் வைத்துக்கொண்டு விடலாம். அதற்கப்புறம், 'ராம**தாஸர்**' என்று ஸேவகராகப் பெயரெடுத்த அவரே ஸுலபத்தில் அடக்கி வைக்க முடியாத வானர ஜாதி முழுதையும் அடக்கித் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அதீச்வரனாக — Lord ஆக — இருந்தாரென்பதைச் சொல்கிறார்: **'வானராணாம் அதீசம்'**. அப்படிச் சொன்னதிலேயே figurative-ஆக, ஸுலபத்தில் அடங்காமல் பிய்த்துக் கொள்ளும் இந்த ஜீவாத்மாவின் இந்த்ரியங்களை, மனஸை — குரங்கு மனஸ், குரங்குப் புத்தி என்றே சொல்கிறதை — கட்டுப்படுத்தி வைத்திருந்த ஜிதேந்த்ரியரான ப்ரஹ்மசாரி அவர் என்றும் தெரிவித்துவிடுகிறார்.

முடிவாக, ஆஞ்ஜநேயர் என்ற மாத்ரத்தில் நாம் முதலில் நினைப்பதான அவருடைய ராம ஸம்பந்தத்தைச்

Koviloor Digital Library

சொல்கிறார்: **'ரகுபதி வரதூதம்'**. ராமசந்த்ர மூர்த்தியின் சிறப்பு வாய்ந்த தூதர் அவர்.

'வரதூதம்' என்பதற்குப் பதில் **'ப்ரிய பக்தம்'** என்றும் இன்னொரு பாடம். ரகுபதியான ஸ்வாமியின் பரம ப்ரியத்தைப் பெற்ற பக்தர், அவரிடம் பரம ப்ரியம் வைத்த பக்தர் என்ற இரண்டு விதத்திலும் இவர் அவருக்கு 'ப்ரிய பக்தர்'.

ஆஞ்ஜநேய ஸ்வாமியைப் பற்றிய இத்தனை விஷயங்களையும் முதலில் சொல்லி, முடிவாக இந்த விஷயங்களுக்கெல்லாம் பாத்ரமான நபர் யார் என்று பேர் சொல்லி அடையாளம் காட்டவேண்டிய இடத்தில் **'வாதஜாதம்'** என்று போட்டு அவருக்கு **'நமாமி'** — 'நமஸ்கரிக்கிறேன்' — என்று ச்லோகத்தைத் துளஸீதாஸ் முடித்திருக்கிறார்.

இத்தனையிலும் நமக்கு இப்போது விஷயம் **'ஞானினாம் அக்ரகண்யம்'** என்பதே. ஆஞ்ஜநேய ஸ்வாமி ப்ரஹ்மஞானிகளுக்குள்ளே ப்ரதம ஸ்தானம் கொடுத்து மதிக்கப்படவேண்டியவர் என்று அது தெரிவிக்கிறது. அவரோடு ப்ரத்யக்ஷமாகப் பழகி அறிந்த துளஸீதாஸ் நமக்குத் தெரிந்த அவருடைய சிறப்புக்களைச் சொல்லும்போது நடுவிலே, மத்யமணி மாதிரி இந்தச் சிறப்பையே சொல்லியிருக்கிறார்.

'அதுலித', அதாவது நிகரில்லாத, பலம்; ஸ்வர்ண பர்வதமாக மேரு இருக்கிறதே, அது மாதிரியான தேஹம்; ராக்ஷஸ குலம் என்கிற வனத்தை பஸ்மமாக்கும் அக்னியாக இருக்கும் வீர சூரம் என்றிப்படி முன்னால் மூன்று சிறப்புக்கள். ஸகல ஸத் குண நிலயமாக இருப்பது; வானரகணாதிபதியாக இருப்பது; ராமருக்குச் சிறப்பு வாய்ந்த தூதராக இருப்பது என்றிப்படி பின்னால் மூன்று சிறப்புக்கள். இந்த இரண்டு 'மூன்று'களுக்கும் நடுவிலே, நடுநாயகமாக அவர் ஞானிகளில் அக்ரகண்யராக இருப்பதைச் சொல்லியிருப்பதால், அது சிறப்புக்களிலும் சிறப்பிடம் பெற்றிருப்பதாக ஆகிறது.

Koviloor Digital Library

ஆஞ்ஜநேயர் ப்ரஹ்மஞானி என்றவுடனே நம்முடைய வைதிக ஸம்ப்ரதாயத்தில் அடுத்த கேள்வி ஒன்று வரும். அநுபவிகள் உருவாக்கியிருக்கிற நம்முடைய ஸம்ப்ரதாயக் கருத்துப்படி ஒருத்தருக்கு ப்ரஹ்மஞானம் கிடைத்திருக்கிறது என்றால், அதைத் தானாக அவர் ஸம்பாதித்திருக்க முடியாது. ப்ரஹ்ம வித்யா உபதேசகரான ஒரு குருவின் உபதேசத்தைக் கேட்டு, அந்த உபதேச பலத்தால், உபதேசிக்கிற குருவின் அநுக்ரஹ பலத்தால்தான் ஸம்பாதித்திருக்க வேண்டும். உபதேசம் பெறுகிற சிஷ்யரும் நிரம்ப ப்ரயாஸை, ப்ரயத்னத்தோடு ஸாதனை பண்ணத்தான் வேணுமென்றாலும் அவர் தாமே பண்ணும் மனன, நிதித்யாஸனாதிகளுக்கு முன்னால் 'ச்ரவணம்' என்பதாக அவர் குருவிடம் உபதேசம் பெறுவதுதான் வருகிறது. ச்ரவண-மனன-நிதித்யாஸனம் என்றே படி வரிசை. 'ச்ரவணம்' : குருவிடம் உபதேசம் கேட்டுக் கொள்வது; 'மனனம்' : அப்புறம் அதைச் சிஷ்யர் ஓயாமல் உருப்போடுவது; 'நிதித்யாஸனம்' : உருப்போட்டதில் அப்படியே தியானத்தில் ஆழ்ந்து போய் அதை அநுபவமாக்கிக் கொள்வது.

ஆகையினால் ஒருவர் ஞானம் பெற்றாரென்றால் அடுத்த கேள்வியாக வருவது, அவர் யாரிடம் ச்ரவணம் செய்தார். அதாவது அவருக்கு ஞானோபதேசம் செய்த குரு யார் என்பதுதான்.

ஞானி ஆஞ்ஜநேயருக்கு உபதேசம் செய்த ஞானாசார்யர் யார்?

அவருடைய பால ப்ராயத்தில் அவருக்கு ஸூர்ய பகவான் குருவாக இருந்து உபதேசித்தாரென்று கதை கேட்டிருக்கலாம். அவதரித்தவுடனேயே அவர் உதிக்கிற ஸூர்யனைப் பார்த்து அது ஒரு செம்பழம் என்று நினைத்து அதைப் பிடிப்பதற்காக ஸூர்ய மண்டலத்துக்கு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தவர். அதற்குச் சில வருஷம் அப்புறம் அந்த ஸூர்ய பகவானிடமே சிஷ்யராக இருந்து பாடம்

Koviloor Digital Library

கேட்டார். உதயகிரியிலிருந்து அஸ்தமன கிரி வரை குருவான ஸூர்யனுக்கு எதிர் முகமாக சிஷ்ய க்ரமத்தில் அவரோடு கூடவே ஸஞ்சாரம் செய்துகொண்டு பாடம் கேட்டார். ஆனால் அது ஞான போதனைப் பாடமில்லை. ஆத்மானுபவமாக இல்லாமல் மூளை அறிவினால் பெறக்கூடிய மற்ற எல்லாத் துறைகளிலும், மற்ற ஸகல சாஸ்த்ரங்களிலுமே ஸூர்ய பகவான் ஆஞ்ஜநேயருக்கு உபதேசம் செய்தார். முக்யமாக வ்யாகரண சாஸ்த்ரங்கள் ஒன்பதையும் உபதேசித்தார். அது அவருடைய பால ப்ராயத்தில். அவற்றிலெல்லாம் தேர்ச்சி பெற்றுத்தான் அவர் 'புத்திமதாம் வரிஷ்டம்' என்னும்படி அறிவாளிகளில் சிறப்பிடம் பெற்றது. ஆனாலும் அறிவாளி வேறே, ஞானி வேறேதானே? ஞானியாக அவர் ஆனது எப்போது? அப்போது அவரை அப்படி ஆக்கிய குரு யார்?

ஆத்ம சாஸ்த்ரத்துக்குத்தான் பரவித்யை என்று பெயர். அது தவிர்த்து மற்ற எல்லா சாஸ்த்ரங்களும் அபர வித்யைதான். 'பரம்': superior. 'அபரம்': inferior.

அபர வித்யையால் ஆஞ்ஜநேயருடைய புத்தியை சோபிக்க வைத்த குரு ஸூர்யன் என்கிறாற்போல பரவித்யையால் அவருடைய அந்தராத்மாவையே சோபிக்க வைத்த குரு யார்? அவர் இவருக்கு உபதேசித்த கதை எப்போது நடந்தது?

ஆஞ்ஜநேயர் எப்போது ஞானோபதேசம் பெற்றாரென்றால், ராமாயணக் கதை முக்காலே மூணு வீசம் முடிந்து, ராம பட்டாபிஷேகமும் ஆன அப்புறந்தான். அதாவது அவர் ஸூர்யனிடம் உபதேசம் பெற்றுக்கொண்ட பாலப் பிராயத்திலிருந்து எத்தனையோ வருஷம் பின் தள்ளித்தான்.

அவர் பெரியவராகி, 'ஆஞ்ஜநேய ப்ரபாவம்' என்று இப்போது நாம் கொண்டாடிக் கொண்டு சொல்கிற மஹத்தான லீலைகளை ராம ஸேவையாகப் பண்ணியாகி விட்டது. 'ஸமுத்ரம் தாண்டி தூது போனார். அந்த தூதுப்

Koviloor Digital Library

பணியை வெற்றிகரமாக ஆற்றினார். அசோக வனத்தை அழித்தார். லங்கையை தஹனம் பண்ணினார். அப்புறம் ராம-ராவண யுத்தம் வந்தது. அதன்போது ஸேது கட்டுவதிலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு கட்டத்திலும் அபாரமான ஸாஹஸ கார்யங்கள் பண்ணினார். ஒரு பக்கம் ராக்ஷஸ ஸைன்யத்தை அடித்து நொறுக்கி உயிரைப் போக்கியவரே இன்னொரு பக்கம் ராம-லக்ஷ்மணர்கள் உள்பட ஸ்வபக்ஷ ஸைன்யம் முழுதும் ப்ரஜ்ஞா பங்கமாகிச் சாய்ந்தபோது ஸஞ்ஜீவி பர்வதத்தைக் கொண்டுவந்து உயிர் ஊட்டவும் செய்தார்' — என்றிப்படியெல்லாம் சொல்கிற அவருடைய அத்தனை ப்ரபல லீலைகளையும் அவர் செய்தாகிவிட்டது. அதற்கப்புறம் ராவண வதமாகி, ஸ்வாமி அயோத்தியில் சக்ரவர்த்தியாக ஆண்டு கொண்டிருந்த போது அவருக்கே தம்மை அர்ப்பணம் செய்து கொண்டு ஆஞ்ஜநேயர் ஸேவகம் பண்ணிக் கொண்டிருந்த போதுதான் அவர் ஞானோபதேசம் பெற்றுக் கொண்டது.

'ராமருக்கே ஸேவகம் என்று ஆத்மார்ப்பணம் செய்து கொண்டவர் அதை விட்டுவிட்டு எங்கே போய், யாரிடம் உபதேசம் வாங்கிக் கொண்டிருக்க முடியும்?' — இப்படிக் கேள்வி எழும்புகிறது.

தம்முடைய உயிருக்குயிரான ராமரை விட்டு விட்டு அவர் எங்கேயும் போகவில்லை. வேறே எவரிடமோ உபதேசம் பெறவுமில்லை.

ஸ்ரீ ராம ஸந்நிதியிலேயே, அந்த ராமரிடமேதான் உபதேசம் பெற்றுக்கொண்டார்.

ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கு ப்ரஹ்ம வித்யை உபதேசம் செய்த குரு ராமரேதான்.

ப்ரபு-ஸேவகர் என்ற உறவிலும், பகவான்-பக்தர் என்ற உறவிலுந்தான் நாம் பொதுவாக ராம-ஆஞ்ஜநேயர்களைப் பார்ப்பது. இங்கேயோ வேறே ஒரு புதுமையான கோணத்தில் அவர்களை குரு-சிஷ்யர்களாகப் பார்க்கிறோம். ராமகுருவின் சிஷ்யராக ஆஞ்ஜநேயரைப்

Koviloor Digital Library

பார்க்கிறோம். இதிலே தனியான ஒரு விசேஷம் தெரிகிறதோல்லியோ? ஸத்குரு-ஸச்சிஷ்ய உறவைப்போல ஒன்று கிடையாதே! ஆஞ்ஜநேயர் பரம ஸத்புருஷர். ராமரோ 'ஸத்' என்றே சொல்லப்படுகிற மெய்ப் பொருளான பரமாத்மா. இரண்டு பேரும் குரு-சிஷ்யர்களாக இருந்ததை நினைத்தாலே புண்யம்.

'ராஜாராமன்' என்றே பெயர் கொண்ட சக்ரவர்த்தியாக ஸ்வாமி, இன்றைக்கும் 'ராம ராஜ்யம்' என்று சொல்லும்படியான முறையில் தர்ம பரிபாலனம் பண்ணிக் கொண்டிருந்தது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் அந்த ராஜாவே ஞானராஜாவாகவும் இருந்துகொண்டு ஆத்மோபதேசமும் பண்ணிக் கொண்டிருந்தார். அவருடைய மாமனார் ஜனகர் ராஜர்ஷி [ராஜரிஷி] என்பது ப்ரஸித்தம். மாப்பிள்ளையும் மாமனார் மாதிரிதான். ஒரு பக்கம் கார்ய வீரரான ராஜா; இன்னொரு பக்கம் ஞானச்ரேஷ்டரான ரிஷி; வேதாந்தத்தை வ்யாக்யானம் செய்தவர்.

அவர் ஹநுமாருக்கு உபதேசித்தது மாத்திரமில்லை. அன்றைக்கு லோகத்தில் இருந்த ரிஷிகணங்களுக் கெல்லாமும் அவர் உபதேசித்தார். அந்த ரிஷிகள், முனிவர்களுக்கெல்லாம் அவர் ஸாக்ஷாத் நாராயணாவ தாரம் என்று தெரியும். தங்களை ஹிம்ஸித்து வந்த ராவணாதி ராக்ஷஸர்களை நாசம் செய்யவே முக்யமாக அந்த அவதாரம் ஏற்பட்டது என்றும் தெரியும். அந்தக் காரியம் முடிந்து ராமர் ராஜாவாகி ஆட்சி செலுத்த ஆரம்பித்து விட்டார். அப்போது தம்முடைய தர்ம ஆட்சி மூலம் அவர் ஸாதாரண ஜனங்களெல்லாம் லக்ஷ்யமாகக் கொண்டு முன்னேற வேண்டிய தர்ம மார்க்கத்தை அவர்களுக்குக் காட்டிக்கொண்டிருந்தார். அதுவும் ஒரு அவதார கார்யந்தான். அதோடு மூன்றாவது கார்யமாக இன்னொன்றையும் அந்த ரிஷிகள் சேர்த்து விட்டார்கள். என்னவென்றால்:

Koviloor Digital Library

பூர்வாங்கம்-உத்தராங்கம் என்று இரண்டு. பூர்வாங்கம் முதலில் பண்ண வேண்டியது; உத்தராங்கம் பின்னால் பண்ண வேண்டியது. வைதிக ஸம்ப்ரதாயத்தில் இந்த இரண்டை வைத்தே, முதலில் நம்முடைய ஸாமான்ய தசையில் இஹ லோகத்தில் நல்லபடி வாழ்க்கை நடத்திப் பரலோகத்துக்கு ப்ரயத்னம் பண்ணும் பக்குவத்தைப் பெறுவதற்காக **தர்மம்** என்பதை அறிந்து அப்யஸிக்க வேண்டுமென்றும், அந்தப் பக்குவம் பெற்றவர்கள் அதற்கப்புறம் தர்மம்-அதர்மம் இரண்டுக்கும் அப்பாற்பட்ட **ப்ரஹ்மம்** என்பதை அறிந்து அநுபவிக்க வேண்டுமென்றும் வைத்தார்கள். ஷட்-தர்சனங்கள் என்று நமக்கு ஆறு சாஸ்த்ரங்கள் இருப்பதில், 'தர்ம ஜிஞ்ஜாஸா' என்று முதலில் தர்மத்தை அறிய ஆசைப்பட வேண்டிய நம்மை தர்மத்தில் ஈடுபடுத்துவதற்காகவே பூர்வ மீமாம்ஸை என்கிற தர்சனத்தையும், அதை அறிந்த பிற்பாடு 'ப்ரஹ்ம ஜிஞ்ஜாஸா' என்று ப்ரஹ்மத்தை அறிய ஆசைப் படுகிறபோது அந்த ப்ரஹ்மத்தில் ஈடுபடுத்துவதற்காகவே உத்தர மீமாம்ஸை என்ற தர்சனத்தையும் வகுத்துக் கொடுத்தார்கள். அப்புறம் அந்தப் பூர்வ மீமாம்ஸைக்கே மீமாம்ஸை என்ற பெயரும், உத்தர மீமாம்ஸைக்கு வேதாந்தம் என்ற பெயரும் வந்துவிட்டது. தர்ம மார்க்கமான மீமாம்ஸை கர்ம மயமானது. ப்ரஹ்ம மார்க்கமான வேதாந்தம் ஞானவிசார மயமானது.

ராக்ஷஸ வதம் என்ற முதலாவது அவதார கார்யம் ஆன பிற்பாடு ராமர் சக்ரவர்த்தியாகி ஸாதாரண நிலையிலேயுள்ள லோக ப்ரஜைகளுக்கெல்லாம் தம்முடைய நீதி பரிபாலனத்தாலும், தாம் செய்யும் யஜ்ஞாதி வைதிக கர்மாநுஷ்டானத்தாலும் தர்ம மார்க்கத்தைக் காட்டிக் கொண்டிருப்பதான இரண்டாவது அவதார கார்யத்தையும் பண்ணினார். இப்போதே அவர் ரிஷிகளான தங்களையெல்லாம் ஞான மார்க்கத்தில் நிலைப்படுத்துவதான மூன்றாவது கார்யத்தையும்

Koviloor Digital Library

பண்ணட்டும் என்று அந்தக் கால ரிஷிகள் எல்லாரும் நினைத்து அவரிடம் வந்து கூடினார்கள்.

எந்த அந்தரங்கத்தையும் துளைத்துக் காணக்கூடிய பார்வை பெற்ற அந்த ரிஷிகளுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், ராமர் உள்ளூர பரம ஞானி என்று. வெளியிலே அவர் மாநுஷமாகக் கூத்தடித்தார்; ஒரு ஸமயம் ரௌத்ர கோபம் கொண்டார்; இன்னொரு ஸமயம் அழு அழு என்று அழுதார் என்றாலும் இதெல்லாம் நடிப்புத்தான் என்று அவர்களுக்குத் தெரியும். உள்ளுக்குள்ளே ஸகுணமாகப் பார்த்தால் அவர் மஹாவிஷ்ணுவே, அதற்கும் உள்ளே நிர்குணமாகப் பார்த்தால் பரப்ரஹ்மமாகவே இருந்து கொண்டிருக்கிற ஞானி என்று அவர்களுக்குத் தெரியும். ஆகையினால், ஏற்கெனவே தாங்கள் உபதேசம் வாங்கிக் கொண்டு அநுபவம் பெற்றவர்கள்தானென்றாலும், பகவானாகவும் பரப்ரஹ்ம மாகவுமே இருக்கப்பட்ட ராமரின் வாயால் மறுபடி உபதேசம் கேட்டால் அப்போதுதான் தாங்கள் பெற்ற அநுபவம் நின்று நிலைத்துத் தங்களுக்கு ஜீவன் முக்தி ஸ்திதி கிட்டும் என்று அவர்கள் கண்டார்கள். அதனால் அவரிடம் கூட்டமாக வந்து வேதாந்தத்தை உபதேசிக்கும்படிக் கேட்டுக்கொண்டார்கள்.

உபதேசம் கொடுப்பதற்கு ராமருக்கும் இஷ்டந்தான். ஏன் இஷ்டம் என்றால், **'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'** என்று பழமொழி அல்லவா? அப்படி, ப்ரஹ்ம வித்யையைத் தான் கற்றுக்கொண்டு பேரின்பம் என்பதையே அடைந்தவர்களுக்கும் அதை மற்றவர்களோடு 'ஷேர்' பண்ணிக்கொள்ள வேண்டும் என்று இருக்கும். ராமர் ப்ரஹ்ம வித்யா ஸ்வரூபம்; ப்ரஹ்மானந்தத்தில் இயற்கையாகவே திளைத்துக் கொண்டிருப்பவர்; அவர் யாரிடமும் அதைக் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை தான். என்றாலும் அவதாரம் என்று நரலீலை பண்ணும் போது அவரும் ஜனங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக

Koviloor Digital Library

குருமுகமாகவே தாம் ப்ரஹ்ம வித்யை கற்றுக் கொண்டதாகத்தான் காட்டினார். நல்ல யௌவனப் பிராயத்திலேயே, ஒரு ராஜகுமாரன் பெறவேண்டிய தநுர்வேதம் உட்பட்ட ஸகல வித்யைகளையும் வஸிஷ்டரின் குருகுலத்தில் பெற்றுக்கொண்டபோதே வேதாந்தத்திலும் — அதுதான் ப்ரஹ்ம வித்யை என்பது; அதிலும் — அடிப்படையாகத் தெரிந்து கொள்ள வேண்டியதைத் தெரிந்து கொண்டார். ஆனால் அதோடு அவருடைய ஆர்வம் — ஞான தாஹம் என்பது — தணியவில்லை. அதனால் விஸ்தாரமாகவே வஸிஷ்டரிடமிருந்து ப்ரஹ்ம வித்யோபதேசம் கேட்டும் பெற்றுக்கொண்டார். அந்த உபதேசம் ஒரு பெரிய புஸ்தகமாக இருக்கிறது. அத்வைத வேதாந்தத்தில் ஒரு 'அதாரிடி' என்று சொல்லக்கூடிய 'க்ளாஸிக்'காக அது இருக்கிறது. அதற்கு 'யோக வாஸிஷ்டம்' என்று பெயர். தமிழிலும் அதற்குப் பழமை வாய்ந்த மொழி பெயர்ப்பு இருக்கிறது. அதை 'ஞான வாசிட்டம்' என்பார்கள். 'வாசிட்டம்' என்று மட்டுமேயும் சொல்வதுமுண்டு. யோகப் புஸ்தகமாக அதைச் சொல்வதைவிட ஞானப் புஸ்தகமாகவே சொல்வதுதான் அதிகப் பொருத்தம். ஸாதனா மார்க்கம் எல்லாவற்றையுமே யோகம் என்று சொல்வதுண்டு — கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் என்றிப்படி. ஆனாலும் 'யோகம்' என்று மட்டும் சொன்னால் பொதுவிலே பதஞ்ஜலியின் அஷ்டாங்க யோகம்தான். இது அதைச் சேர்ந்ததில்லை. அத்வைத ஞான ஸாதனைக்கேயான புஸ்தகந்தான் இது.

ஒருத்தன் கற்ற வித்தை அவனோடு போய் விடாமல், அதை அவன் நாலு பேருக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று விதி. விதி ஒரு பக்கம் இருக்க, அப்படி வித்தையைக் கற்றுக் கொண்டவனுக்கே அதை லோகத்திலும் தக்க பாத்ரங்களுக்குக் கொடுத்துத் தான் பெற்ற இன்பம் அவர்களும் பெறச் செய்ய வேண்டுமென்று இருக்கும்.

Koviloor Digital Library

ராமருக்கும் அப்படியிருந்தது. அவதாரத்தின் ப்ரதான லக்ஷ்யமான ராவண வதம் முடிகிற வரையில் அந்த ஆசையை அவர் அமுக்கி வைத்துக் கொண்டிருந்தார். அந்த லக்ஷ்யம் பூர்த்தியாகி, அவர் நிம்மதியாக ராஜ்ய பாரம் செய்ய ஆரம்பித்த பின் அந்த ஆசை அவருக்கு அமுக்க மாட்டாமல் தலை தூக்கி வந்தது. ஸமயம் பார்த்து ரிஷிகளும் அவரைத் தேடிக்கொண்டு வந்தார்கள்.

ஆனாலும் அவர் அடக்கத்தின் உருவானவர். அதனால் க்ஷத்ரியரான தாம் தம்மைவிட வயஸில் எவ்வளவோ பெரிய ப்ராம்மண ச்ரேஷ்டர்களான ரிஷிகளுக்கு உபதேசிப்பது அநுசிதம் என்றே நினைத்தார். அவர்கள் ஆசைப்படுகிறபடி அவர்களை ப்ரஹ்ம நிர்வாணத்தில் ஸ்திரப் படுத்தும்படி ப்ரஹ்ம வித்யையைத் தாம் எடுத்துச் சொல்லவும் வேண்டும், அதே ஸமயத்தில் நேராக அவர்களுக்கே உபதேசிப்பது என்று வைத்துக் கொள்ளவும் கூடாது என்று நினைத்தார்.

அப்போதுதான் அவருக்குச் சட்டென்று யோஜனை தோன்றிற்று. 'ஆஞ்ஜநேயன் இருக்கிறானே! பரிபூர்ணமாக இந்த்ரிய நிக்ரஹம் பண்ணினவன் அவன். தனக்கென்று ஸ்வய வாழ்க்கை ஒன்றில்லாமல், தான் பகவானாக நினைக்கிற நம்மிடமே பூர்ண சரணாகதனாக இருக்கிறவன். இப்பேர்ப்பட்டவன் ஞானம் என்று ஒன்று இருக்கிறதைத் தெரிந்து கொள்ளாவிட்டாலும் ஞான லக்ஷ்யமான மோக்ஷத்தை அடைந்துவிடுவான்தான். ஆனாலும் இவன் ஞானம், ஞானமார்க்கம், ஞானோபதேசம் என்கிறவற்றை யுந்தான் தெரிந்து கொள்ளட்டுமே! புத்தி சக்தி அதிகமில்லாதவர்கள் அப்படித் தெரிந்து கொள்வதற்காகப் பாடுபட வேண்டிய அவசியம் இல்லைதான். ஆனால் இவனோ மஹா புத்திமானாக இருப்பதால் தத்வ விசாரம் பண்ணியும் ஞானத்தை அடைய நன்றாகப் பக்வப் பட்டவன்தான். இவனைவிட ஸச்சிஷ்யன் நமக்குக் கிடைக்க முடியாது. ஆகையினால் இவனை முன்னால் வைத்துக்கொண்டு, இவனை முன்னிட்டு, இவனுக்கு

Koviloor Digital Library

உபதேசிப்பதாகவே நாம் வைத்துக் கொண்டுவிடலாம். அதையே கூடியிருக்கிற மற்ற ரிஷி கணங்களெல்லாமும் கேட்டுக் கொள்ளட்டும்' என்று ராமர் நினைத்தார்.

ஆஞ்ஜநேயரின் பால ப்ராயத்தில் அவருடைய அபர வித்யைக்கு ஆசார்யராக ஸூர்ய பகவான் வந்தா ரென்றால், வயஸேறிய காலத்தில் அவருடைய பர வித்யைக்கு ஆசார்யராக ஸூர்யகுல திலகரான ராமர் வந்தார். அந்த ராமர்தான் தன் மூலமான விஷ்ணு ரூபத்தில் ஸூர்யனுக்கும் பரவித்யை உபதேசித்திருக்கிறார். கீதையில் க்ருஷ்ண பரமாத்மா இந்த ஸங்கதி சொல்லியிருக்கிறார்*:

''இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவானஹம் அவ்யயம்."

"அர்ஜுனா, இன்றைக்கு உனக்கு நான் செய்கிற இந்த உபதேசத்தை ஆதியில் நான் விவஸ்வானுக்குச் செய்தேன்" என்கிறார். விவஸ்வான் என்றால் ஸூர்யன்.

ஆஞ்ஜநேயர் தனக்கு அபர வித்யை போதித்த முதல் குருவுக்கும் பர வித்யை உபதேசித்த மூல குருவிடமே அந்த முக்தி ஹேதுவான மஹாவித்யையில் உபதேசம் பெற்றார். முதல் குரு கற்றுக்கொடுத்த வித்யை அவரை 'புத்திமதாம் வரிஷ்ட'னாக்கியது. மூல குரு கற்றுக் கொடுத்ததோ 'ஞானினாம் அக்ரகண்ய'ராகவே ஆக்கியது.

ஒரு பசு இருந்தால் அது பல பேருக்குப் பால் கொடுக்கிறது. ஆனாலும் அத்தனை பேருக்கும் அது பால் சுரப்பதற்கு அதை ஊக்குவதாக அதனுடைய ஸொந்தக் கன்று ஒன்று அதன் மடியில் ஊட்டுப் பெறுவதாக இருக்கவேண்டியிருக்கிறது. அப்படித்தான் உபதேசம் என்கிற பால். அது தக்க யோக்யதாம்சம் பெற்ற எல்லோருக்குமானதாக இருந்தாலும் குறிப்பாக ஒரு சிஷ்யனை உத்தேசித்து குரு செய்வதாகவே இருக்கும். 'கீதை' த்யான ச்லோகத்தில் இப்படி உபமானம் கொடுத்திருக் கிறது.

* 4.1

Koviloor Digital Library

'மாட்டுக் கோனார் கிருஷ்ணர் இருந்தாரே, அவர் எல்லா உபநிஷத்துக்களையும் ஒரு பசுவாக்கினார். அந்தப் பசுவின் பாலையே தம்முடைய கீதோபதேசமாகக் கறந்து கொடுத்தார். அவருடைய கை பட்ட விசேஷம் அந்த ஸர்வோபநிஷத் ஸாரம் வெறும் பசும்பாலாக இல்லாமல் அமரத்வம் தருகிற அம்ருதமாகவே மாறிவிட்டது. அதைப் பானம் பண்ணுகிற தகுதி, நல்லறிவு பெற்ற எல்லாருக்கும் உண்டு. அவர்களுக்கெல்லாம் 'ரெப்ரஸென்டேடிவ்'-ஆக அவர் நேரே ஊட்டுப் பெற வைத்த கன்று அர்ஜுனன்' — இப்படி ச்லோகம்:

ஸர்வோபநிஷதோ காவோ, தோக்தா கோபாலநந்தன: |
பார்த்தோ வத்ஸ:, ஸுதீர் போக்தா, துக்தம்
கீதாம்ருதம் மஹத் ||

கிருஷ்ண பரமாத்மாவோடு இணைபிரியாத ஸகாவாக இருந்த அர்ஜுனன் அவர் ஞானாசார்யராக ரூபம் எடுத்துக் கொண்டபோது அவருடைய ப்ரதம சிஷ்யனானான். ராமருக்கோ அவருடைய தாஸ ச்ரேஷ்டர் அப்படி சிஷ்யரானார். அவர்தான் அப்புறம் அர்ஜுனனுடைய கொடியிலேயும் இடம் பெற்று, 'விஜயன்' என்கிற பெயர் அவனுக்குப் பொருந்தும்படி ஜயசாலி யாக்கினார். அது வெளியுத்தத்தில் ஜயம். ப்ரஹ்ம வித்யா உபதேசம் உள் யுத்தத்தில் ஜயம் பெறுவதற்கு. இந்த ஜயம்தான் சாச்வதமாக இருப்பது.

அதற்கான தகுதி வாய்ந்த ஸகலருக்குமான உபதேசத்தை, அர்ஜுனனை முன்னிட்டுக் கொண்டு க்ருஷ்ணர் உபதேசித்த மாதிரி, ஸனகாதி நால்வரை முன்னிட்டுக் கொண்டு தக்ஷிணாமூர்த்தி உபதேசித்த மாதிரி, ஆஞ்ஜநேயரை முன்னிட்டுக் கொண்டு ராமர் ஸகலருக்கும், அவர்களில் முக்யமாக அவரைத் தேடிக் கொண்டு வந்திருந்த முனிவர்களுக்கு உபதேசித்தார்.

தக்ஷிணாமூர்த்தி மாதிரியேதான் ராமரும் சின்முத்ரை காட்டுகிறவர். அவர் மாதிரியே இவரும் ஒரு காலை மடித்து

Koviloor Digital Library

வைத்துக்கொண்டும், இன்னொரு காலைத் தொங்க விட்டுக் கொண்டும் உட்கார்ந் திருப்பவர். அதற்கு வீராஸனம் என்று பெயர். ஞானவீரம்! முறைப்படி எழுதப்பட்ட பழங்காலச் சித்ரங்களில் அப்படித்தான் போட்டிருக்கும் — தஞ்சாவூர்ப் படம் மாதிரியானதுகளில்.

ஸ்ரீராம மந்த்ரம் ஜபிக்கிறபோது சொல்லும் த்யான ச்லோகம் ஒன்று உண்டு:

காலாம்போதர காந்தி காந்தம் அநிசம் வீராஸநாத்யாஸிநம்
முத்ராம் ஞான மயீம் ததாநம் அபரம் ஹஸ்தாம்புஜம் ஜாநுநி|

என்று அது ஆரம்பிக்கிறது. 'நீருண்ட மேகம் போல் ச்யாமள வர்ணமான ஸ்வாமி வீராஸனத்தில் உட்கார்ந்திருக்கிறார்; அவருடைய ஒரு கை 'முத்ராம் ஞான மயீம்' என்பதாகச் சின்முத்ரை காட்டுகிறது; இன்னொரு கை முழங்கால் மேல் படிந்திருக்கிறது' என்று அர்த்தம்.

இன்னொரு ச்லோகம் — க்ரமப்படி ராமாயண பாராயணம் பண்ணும்போது ஆரம்பத்தில் மங்கள ச்லோகங்களாகச் சொல்கிறவற்றில் ராம த்யான ச்லோகமாக வருவது. அதிலும் ஸ்வாமி வீராஸனத்தில் உட்கார்ந்திருப்பதைச் சொல்லியிருக்கிறது. அதில் சின்முத்ரையைப் பற்றி வரவில்லை. ஆனால் அந்த ச்லோகத்தில்தான் நான் சொல்லிக் கொண்டிருக்கிற தத்வோபதேச விஷயம் — ஆஞ்ஜநேயரை முன்னிட்டுக் கொண்டு ரிஷிகளுக்கெல்லாம் ராமர் ஞானோபதேசம் செய்தார் என்ற விஷயம் — பளிச்சென்று சொல்லி யிருக்கிறது. நான் சொன்னதே முக்யமாக அந்த ச்லோகத்தின் ஆதாரத்தில்தான். எல்லாருக்கும் தெரிந்திருக்க வேண்டிய ச்லோகம்:

வைதேஹீ ஸஹிதம் ஸுரத்ருமதலே ஹைமே மஹா மண்டபே
மத்யே புஷ்பகமாஸநே மணிமயே வீராஸநே ஸம்ஸ்திதம் |
அக்ரே வாசயதி ப்ரபஞ்ஜனஸுதே தத்–த்வம் முனிப்ய: பரம்
வ்யாக்யாந்தம் பரதாதிபி: பரிவ்ருதம் ராமம் பஜே ச்யாமளம் ||

Koviloor Digital Library

தக்ஷிணாமூர்த்தி மாதிரி வீராஸனத்தில் உட்கார்ந்து கொண்டு ராமர் வேதாந்தோபதேசம் கொடுத்தா ரென்றாலும் அவர் மாதிரி இவர் ஏகாங்கியில்லை. ராஜாவாகவும் ரிஷியாகவும் ஒரே ஸமயத்தில் இருந்து கொண்டு கர்ம யோகம், ஞானயோகம் இரண்டையும் பண்ணிக் கொண்டிருந்த இவர் ராணி ஸஹிதமாக ஸ்வர்ண மயமான மண்டபத்தில் மணிமயமான ஆஸனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தவர். அதைத்தான் ச்லோக ஆரம்பத்தில் **'வைதேஹீ ஸஹிதம்'** என்று சொல்லி யிருக்கிறது. விதேஹ ராஜ்யத்திலே பிறந்தவளாதலால் ஸீதைக்கு 'வைதேஹி' என்று பெயர். ராமர் ஞானாசார்யராக இருந்ததைச் சொல்கிற ச்லோகத்தில் அவளுடைய ஸீதை என்ற பெயரையோ, மற்ற ஜானகி, மைதிலி முதலான பெயர்களையோ சொல்லாமல் வைதேஹி என்று போட்டதில் ரொம்ப அர்த்தம் இருக்கிறது. வைதேஹி என்றால் தேஹத்தை விட்டு விட்டு இருப்பவள், அதாவது தேஹப்ரஜ்ஞையை விட்டு விட்டு ஆத்ம ஸ்வரூபமாகவே இருப்பவள் என்றும் அர்த்தம் பண்ணிக்கொள்ளலாம். அதாவது, அவர் உபதேசிக்கிற தத்வத்துக்கு அவள் 'பெர்ஸானிஃபிகேஷ'னாக இருக்கிறாள். அல்லது இதையே வேறே விதமாகச் சொன்னால், அவள் 'பெர்ஸானிஃபை' பண்ணும் தத்வத்தைத்தான் அவர் உபதேசிக்கிறார்.

ஸீதை ராமருக்குப் பக்கத்தில் இருக்கிறாள். அவரைச் சுற்றி பரத-லக்ஷ்மண-சத்ருக்னாதிகள் இருக்கிறார்கள். **'பரதாதிபி: பரிவ்ருதம்'** என்று ச்லோகத்தின் கடைசிப் பாதத்தில் அதைத்தான் சொல்லியிருக்கிறது.

அந்தத் தம்பிகளும் அவரும் பரஸ்பரம் ஒருவர் மேல் மற்றவர் உயிரையே வைத்திருந்தவர்கள். ஆனால் அவர் உபதேசம் செய்யும்போது அவர்களில் எவரையும் முன்னிட்டுக் கொண்டு செய்யவில்லை. தம்மிடம் ஞானோபதேசம் பெறும் நேர் சிஷ்யர் ஆஞ்ஜநேயராகத்

Koviloor Digital Library

தான் இருக்கவேண்டும் என்று அவர் நினைத்து அவருக்கே அந்த பாக்யத்தைக் கொடுத்தார். அதைத்தான் **அக்ரே வாசயதி ப்ரபஞ்ஜனஸுதே தத்வம்** என்று சொல்லியிருக்கிறது.

'ப்ரபஞ்ஜன ஸுதன்' என்பதுதான் ஆஞ்ஜநேயர். துளஸீதாஸ் சொன்ன 'வாதஜாதன்' மாதிரியே 'ப்ரபஞ்ஜன ஸுதன்' என்றாலும் வாயுவின் குமாரன் என்றுதான் அர்த்தம். 'ப்ரபஞ்ஜனன்' என்பது வாயுவின் பெயர்களில் ஒன்று.

'அக்ரே' என்றால் 'முன்னாடி'. ராமருக்கு முன்பக்கம் அடக்கவொடுக்கமாக உட்கார்ந்து கொண்டு அந்த ப்ரபஞ்ஜன ஸுதர் உபதேசம் கேட்டுக் கொள்கிறார்.

ஆனால் ராமர் குறிப்பாக அவரைப் பார்த்துக் கொண்டு உபதேசித்தாலும் அவருக்கு மட்டும் சொல்வது தான் ராமருடைய முழு உத்தேசமும் என்று நினைத்துவிடக் கூடாது. திரண்டு வந்திருந்த எல்லா முனிவர்களையும் உத்தேசித்தே இந்த ஒருவருக்கு அவர் சொன்னார்: **தத்–த்வம் முனிப்ய: பரம் வ்யாக்யாந்தம்.** பரவித்யை என்று சொல்லப்படும் 'பரம் தத்வ'த்தை முனிவர்களுக்கெல்லாம், ஆஞ்ஜநேயரை முன்னிட்டுக்கொண்டு, ராமர் வ்யாக்யானம் பண்ணினாரென்று அர்த்தம். தக்ஷிணாமூர்த்தி மாதிரி யில்லாமல் ராமர் பத்னி ஸஹிதமாக இருந்த மாதிரியே, அவர் மாதிரி மௌனோபதேசம் என்றும் இல்லாமல் நன்றாக வாயால் விளக்கியே வ்யாக்யானம் செய்தார்.

ராமர் மட்டுமில்லாமல் ஸீதையும் ஆஞ்ஜநேயருக்கு உபதேசித்ததாக ஒரு அபூர்வ ஸமாசாரம் 'ஸீதாராம ஆஞ்ஜநேயம்' என்ற உத்தமமான அத்வைத க்ரந்தத்தில் வருகிறது. அது தெலுங்கு பாஷையில் இருப்பது. அப்படியிருப்பதில் ஒரு விசேஷம்.

ஸாதாரணமாக, நம்முடைய பிரதேச பாஷைகளில் original work என்றே மூலநூலாக அத்வைதப் புஸ்தகங்கள் இருப்பதில்லை. மிகப் பெரும்பாலும் ஸம்ஸ்க்ருதத்திலுள்ள

Koviloor Digital Library

மூலப் புஸ்தகங்களின் மொழி பெயர்ப்பாகத்தான் அவை இருக்கும். இதற்கு அபூர்வமான விலக்காகத்தான் ப்ரதேச பாஷையிலேயே மூல அத்வைத க்ரந்தம் இருப்பது. தெலுங்கு பாஷையில் அப்படி இருக்கப்பட்ட புஸ்தகமே 'ஸீதாராம ஆஞ்ஜநேயம்'. 'ஸீதாராம ஆஞ்ஜநேய ஸம்வாதமு' என்று நீட்டிச் சொல்வார்கள்.

தேஹ ப்ரஜ்ஞை போன ஞானியான வைதேஹியும் ஆஞ்ஜநேயருக்கு உபதேசிப்பதாக வருவது அதில் ஒரு விசேஷம். முதலில் அவள்தான் உபதேசிக்கிறாள். ஸ்ரீராம தாரக மந்த்ரத்தை உபதேசிக்கிறாள். ராமருடைய ப்ராணனாகவே இருக்கப்பட்ட அவருடைய சக்தியிட மிருந்து ராம மந்த்ரம் பெறுகிறதென்றால் அது பரம பாக்யந்தானே?

அப்படி அவள் உபதேசித்த அப்புறம் ராமர் ஆஞ்ஜநேயருக்கு பரம அத்வைத பரமாக ஸாங்க்ய யோகம், அமனஸ்க யோகம் என்கிறவற்றை உபதேசிக்கிறார். அந்தப் புஸ்தகத்தில் அந்த உபதேசம் பெரிசாக, விரிவாகக் கொடுத்திருக்கிறது.

ஸீதா-ராமர்கள் வேலை கொடுப்பவர்கள், ஆஞ்ஜநேயர் அவர்கள் கொடுக்கிற வேலையைச் செய்கிறவர் என்கிற ப்ரபு-தாஸ உறவிலே அவர்கள் அவரிடம் எவ்வளவுதான் ஸந்தோஷித்து வாரி வாரிக் கொடுத்தாலும் தங்களுடைய ஸொத்து பூராவையும் அவருக்குக் கொடுப்பதற்கில்லை. மஹா விவேகியான ஆஞ்ஜநேயருக்கு எந்த ஸொத்தும் தேவைப்படவுமில்லை. ஸீதா-ராமர்களின் ஸேவையிலேயே, அவர்களிடம் பக்தி பண்ணுவதிலேயே அவர் பூர்ண த்ருப்தராக இருந்தார். ஆனால் அந்த தம்பதிக்குத்தான் த்ருப்தி ஏற்படவில்லை. அதனாலேயே எத்தனை கொடுத்தாலும், முழுசாகவே அள்ளிக் கொடுத்தாலும் செலவழியாத மூலதனமாக அப்படியே இருக்கும் தங்களுடைய ஞானச் சொத்தை அவருக்கு அப்படியே தந்துவிடுவது என்று தீர்மானித்து உபதேசம் பண்ணினார்கள்.

Koviloor Digital Library

அவர்கள் யார்? வேலை வாங்குகிற யஜமானர்கள் மட்டும்தானா? இல்லை. பரம அன்பான வாத்ஸல்யத்தைப் பொழிகிற ஸர்வலோக மாதா-பிதாக்களே அவர்கள். அவர்களுடைய அந்த வாத்ஸல்ய ஸொத்தைப் பெறுவதில் தலைக் குழந்தையாக இருந்த ஆஞ்ஜநேயருக்கே அவர்கள் மாதா-பிதாவாக இருந்ததோடு குருவாகவும் ஆனார்கள்! அவருக்கு அவர்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நாலுமாக இருந்தார்கள். அப்படி ஒரு அலாதி பாக்யம் அவருக்கு!

மற்றப் புஸ்தகங்களில் சொல்லியிருப்பதைவிட 'ச்ருதி சிரஸ்' — வேதத்தின் முடி — என்கப்படுகிற உபநிஷத்தில் ஒன்று சொல்லியிருந்தால் அதற்குத் தனி மதிப்பு. அந்த மாதிரி, 108 உபநிஷத்துக்கள் என்று ஒரு கணக்கு இருப்பதில் பார்த்தால், அதில் முடிவாக இருக்கிற 'முக்திகோபநிஷத்' என்பது ராமர் ஆஞ்ஜநேயருக்கு உபதேசித்த உபநிஷத்தாகத்தான் இருக்கிறது. வேத முடியிலும் முடிவான, முடிமணியான இடத்தில் ராமர் குருவாகவும், அவருக்கு சிஷ்யராக ஆஞ்ஜநேயரும் வருகிறார்கள்.

பேரே முக்திகோபநிஷத் என்றால் விஷயம் பரம அத்வைத ஸாரமாகத்தானே இருக்கவேண்டும்? அந்த உபநிஷத்தில் அப்படித்தான் ஸாக்ஷாத் ராமசந்த்ர மூர்த்தி உபதேசித்து பரம பக்த சிரோமணியான ஆஞ்ஜநேயரும் பரமஞானி சிஷ்யராகக் கேட்டுக் கொள்கிறார்.

அந்த உபநிஷத்தின் ஆரம்பத்திலும் ரிஷி கணங்கள், முனிகணங்கள் திரண்டு வந்திருந்த பெரிய வித்வத் ஸதஸிலேயே நேராக உபதேசம் வாங்கிக் கொள்ளும் பாக்யம் ஆஞ்ஜநேயருக்குத்தான் கிடைத்ததாக வருகிறது. தக்ஷிணாமூர்த்தியிடம் உபதேசம் பெற்ற ஸனகாதியர்கள் கூட அவர்களில் இருந்தார்கள் என்றும் வருகிறது.

ஆஞ்ஜநேயர் மேலே மேலே கேள்விகள் கேட்டு ராமரிடமிருந்து ஞானாம்ருதப் பாலை ஒட்டக் கறந்து கொள்வதாக உபநிஷத் போகிறது. "ஸச்சிதாநந்த

Koviloor Digital Library

விக்ரஹமான ராமா! முக்தி காங்க்ஷனாக [முக்தியை விரும்புபவனாக] உள்ள நான் உன்னுடைய தத்வ ஸ்வரூபத்தைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அதைச் சொல்லி என்னை முக்தனாக்கி அநுக்ரஹி!" என்று அழகாக, அர்த்த நயம்படக் கேட்டு அவர் ராமரை உபதேசிக்க வைக்கிறார்.

அந்த உபநிஷத்தில் தத்வோபதேசம் இருப்பது மட்டுமில்லை. அதன் ப்ரதம அத்யாயத்தில் ஆஞ்ஜநேயர் கேட்டுக் கொண்டபடி ராமர் 108 உபநிஷத்துக்கள் என்னென்ன என்று அவற்றின் பெயர்களைச் சொல்லி லிஸ்ட் கொடுக்கிறார். அதில் எந்த உபநிஷத் எந்த வேதத்தைச் சேர்ந்தது, அத்யயன க்ரமத்தில் அந்த ஒவ்வொரு உபநிஷத்துக்கும் என்ன சாந்தி மந்த்ரம் சொல்ல வேண்டும் என்கிற விவரமெல்லாமும் தெரிவிக்கிறார். இதற்கு ஆரம்பமாக, உபநிஷத்துக்களுக்கு அடிப்படையாக இருக்கப்பட்ட வேதங்கள் எத்தனை, அதில் ஒவ்வொரு வேதத்திலும் 'சாகை' என்று இருக்கிற கிளைகள் எத்தனை என்றும் கணக்குச் சொல்கிறார். 108 உபநிஷத்துகள் பற்றிய 'டிடெய்ல்ஸு'க்கு அந்த முடிவான உபநிஷத் ஒரு 'ரெடி ரெக்கனர்' மாதிரி இருக்கிறது!

நமக்கெல்லாம் இந்த உபகாரம் ஆஞ்ஜநேயர் கேட்டதாலேயே கிடைத்திருக்கிறது.

எப்படி வாழ வேண்டும் என்று நமக்கெல்லாம் 'ஐடியல்' காட்டுவது 'மர்யாதா புருஷர்' என்றே சொல்லப்படும் ராமர் மட்டுமில்லை; ஆஞ்ஜநேய ஸ்வாமியும்தான். அவரிடம் என்னவெல்லாம் இருந்ததோ — தேஹ பலம், புத்தி பலம், பக்தி பலம், கார்ய ஸாமர்த்யம், பயமின்மை, ஸேவா மனப்பான்மை, புலனடக்கம், கல்வி, விநயம் என்று என்னவெல்லாம் இருந்ததோ — அந்த எல்லாவற்றுக்கும் அவரையே குருவாக நினைத்து நாம்

Koviloor Digital Library

அவர் போன வழியில் போக வேண்டும். 'ஸகல குண நிதானம்' என்று துளஸீதாஸர் சொன்னபடி, இத்தனை சிறப்பு அம்சங்கள் அவரிடம் இருந்ததோடு, ஞானம்தான் இதெல்லாவற்றுக்கும் மேலான சிறப்பு, எல்லாச் சிறப்புக்களுக்கும் அதுவே பூர்த்திஸ்தானம் என்று அவர் அதில் ஸாக்ஷாத் தன்னுடைய ப்ரபுவான ராமரிடமிருந்து உபதேசம் பெற்று, அங்கேயும் நமக்கு ஒரு பாடம் புகட்டியிருக்கிறார். லோக வாழ்க்கையில் நாம் தர்மம் என்ற ஸ்ரீயை அடைந்து அதைக் காப்பாற்றி வைத்துக் கொள்ள வேண்டியதுதான் இப்போது நம்முடைய லக்ஷ்யமாக இருந்தாலும், முடிவாக நம் ஆத்மாவைக் கடைத்தேற்றிக் கொள்வதற்கு ஞானம் என்ற ஸ்ரீயைத்தான் பெற்றாக வேண்டும் என்ற எண்ணமாவது இப்போதே நமக்கு இருக்க வேண்டும் என்ற பாடம்.

இப்படிப் பல விதத்தில் நமக்கு குருவாக வழிகாட்டும் அவர் நாம் வாழ்நாள் பூராவும் சிஷ்யர்களாக இருந்து பாடங்கள் படித்துக்கொண்டே போகவேண்டும் என்றும் வழிகாட்டுவதற்காகத் தாமே சிஷ்யராக இருந்திருப்பதைத் தான் சொன்னேன். [சிரித்து] சிஷ்யராக எப்படி இருப்பது என்று வழி காட்டுவதற்கான குருவாக இருப்பதற்காகவே அவர் சிஷ்யராகியிருக்கிறார்!

சிஷ்யராக இருக்கும் ஆஞ்ஜநேய குரு; அவருக்கு குருவாக உபதேசிக்கும் ராமசந்த்ர மூர்த்தி — இந்த இரண்டு பேரின் ஸ்மரணம் நமக்கு இருந்தால் போதும், எப்போதும் நல்ல வழியிலேயே போய் நன்மையே அடையலாம்.

□ □ □

Koviloor Digital Library



Koviloor Digital Library